# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

*19th to 21st, 23rd and 24th* April 1979.

VOLUME CLXI (Nos. 1 to 5.)

©
GOVERNMENT OF TAMIL NADU
1980

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600009.*

PRICE *Rupee* : 1[illegible]

Y211,32 N79
N80.161

121987

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

*19th to 21st, 23rd and 24th April 1979.*

---

## TABLE OF CONTENTS.

---

### VOLUME CLXI (Nos. 1 to 5)

*Thursday, 19th April 1979.*

---


| | Pages |
|---|---|
| ersonnel of the Government of Tamil Nadu ... | i—v |
| 'rincipal Officers of the Tamil Nadu Legislative Council ... .. ... ... ... | vii |
| .ist of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... ... | ix—xii |
| 1. Dispensation with Question Hour ... ... | 1 |
| 2. Adjournment Motion *re*— | |
| Hunger strike by teachers of Tiruthuraipoondi Panchayat Union before the Revenue Divisional Officer's Office protesting against transfers ... | 1—6 |
| 3. Call Attention Notice— | |
| Non-filling up of the vacancies of Teachers in Higher Secondary Schools at Madras when the regular teachers go on leave ... ... ... | 7—8 |
| 4. Government Motion— | |
| Discussion on the Policy Note on Nationalised Road Transport and Shipping ... ... ... | 8—105 |
| 5. Papers laid on the table of the House ... | 105—106 |

*Friday, 20th April 1979.*

PAGES

1. Questions and Answers ... ... ... ... 109—124
2. Information re—
Leave of absence from the House ... ... 124
3. Adjournment Motion re—
Arrest of 200 persons around Vagaikulam village after Police firing ... ... ... ... 124—127
4. Call Attention Notices—
(1) Non-provision of regular employment to the Youth Service Corps Graduates even after their passing the Special Test conducted by the Tamil Nadu Public Service Commission ... ... 127—129
(2) Supension of Government servants in Dharmapuri district for not bringing people for Sterilisation during Family Planning Week Celebrations ... ... ... ... ... 129—130
5. Government Motions—
(1) Change in the order of Business ... ... 131
(2) Discussion on the Policy Note on Co-operation Department ... ... ... 131—192
(3) Discussion on the Policy Note on Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... 192—238
6. Papers laid on the table of the House ... ... 239

*Saturday, 21st April 1979*

1. Questions and Answers ... ... ... ... 281—310
2. Privilege issue .. ... ... ... 310
3. Adjournment Motion re—
Disturbances at Peraiyur in Ramanathapuram district ... ... ... ... ... 310—313
4. Call Attention Notices—
(1) Violent activities on persons instrumental for suspension of the Board of Tuticorin Harbour Co-operative Society by ex-President ... 313—314

*Saturday, 21st April 1979—cont.*

PAGES

(2) Restricted supply of Petroleum Products like cooking gas, kerosene and high speed diesel oil, etc., in March 1979 ... ... ... 315—317
5. Government Motion—
Discussion on the Policy Note on Food situation in Tamil Nadu ... ... ... ... 317—391
6. Papers laid on the table of the House ... ... 392

*Monday, 23rd April 1979.*

1. Questions and Answers ... ... ... ... 423—447
2. Announcements—
(1) Nomination of members to the House Committee ... ... ... ... ... 447—448
(2) Business of the House ... ... ... 448
3. Information re—
Adjournment Motions ... ... ... ... 448
4. Call Attention Notices—
(1) Implementation of the recommendations of the Tamil Nadu Third Pay Commission for the employees of Annamalai University ... ... 449—450
(2) Closure of Devagiri Estate in Kanyakumari district ... ... ... ... ... 450—451
5. Presentation of the Statement of Demands for Grants for Excess Expenditure for 1972-73 ... 451—452
6. Presentation of the Statement of Demands for Grants for Excess Expenditure for 1973-74 ... 452—453
7. Government Motions—
(1) Discussion on the Policy Note on Social Welfare ... ... ... ... ... 453—494
(2) Change in the order of Business ... ... 494
(3) Discussion on the Policy Note on Labour in Tamil Nadu ... ... ... 494—553
(4) Dispensation with Question Hour ... 553
8. Papers laid on the table of the House ... ... 554

*Tuesday, 24th*

1. Adjournment Motions *re*—

Arrest of Political party members in connection with the Farmers' Agitation, Police firing at Udumalpet and murder of a Sub-Inspector of Police at Panavadali Chatram in Tirunelveli district ... 677—691

2. Government Motion—

Discussion on the Policy Note on Industries ... 691—836

Index ... ... ... ... ... ...1085—1113

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

*Members of the Council of Ministers.*

1. The HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in-charge of Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large Scale Industries, Mines and Minerals.

2. The HONOURABLE THIRU K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning and Legislature, Public Works [Buildings], Establishment Works relating to Public Works Department.

3. The HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister in-charge of Co-operation and Registration.

5. The HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes and Excise.

6. The HONOURABLE THIRU G. R. EDMUND, Minister in-charge of Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections and Ex-Servicemen, Price Control.

7. The HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona.

8. The HONOURABLE THIRU K. NARAYANASWAMY, Minister in-charge of Law Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money lending, Legislation on Chits and Registration of Companies.

9. The HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) ழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், ா வட்ட வருவாய் அதிகாரிகள், மாவட் த் துணை ஆட்சியாளர் ம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், சுரங்கம்-கனிவளம்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள்).

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்சாரத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு, ஆவணப் பதிவுத்துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை.

6. மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் (உணவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைக் கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சின்கோனா உட்பட வனங்கள்.

8. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள், சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சிட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிற்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், பூமிதானம்-கிராமதானம்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக்காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், ஆக்ரோ பொறியியல் பிரிவு.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

திரு. ப. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்.
3. திரு. க. இராமமூர்த்தி.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்.சி., பி.எல்.

விவாதப் பதிவாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல், பி.எல்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், திரு. கே. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 2 அறிவழகன், திரு. க., எம்.ஏ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 3 ஆறுமுகம், திரு. கி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இரத்தின பாலகுருசாமி, திரு. | நியமனம். |
| 6 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7 இராமகிருஷ்ணத் தேவர், திரு. எஸ். | இராமநாதபுரம் உள்ளாட்சி, மன்றத் தொகுதி. |
| 8 இராசா முகமது, திரு. கா. (கிராமத் தொழில்துறை அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9 இராமமூர்த்தி, திரு. க. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 இளம்பரிதி, திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 எலமந்தா, திரு. பி., எம்.ஏ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 12 கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ., எம்.ஏ., பி.எல். (கூட்டுறவுத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சங்கரலிங்கம், திரு. ம. எம்.ஏ. | திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 14 சந்தோஷம், திரு. டி., எம்.ஏ.,பி.எல். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 15 சிவஞானம், திரு. ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 17 சுந்தரேசத் தேவர், திரு. என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 18 சுவாமிநாதன், திரு. ஜி., பி. பார்ம். (மாண்புமிகு துணைத் தலைவர்.) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19 டிமாண்டி, திரு. டி. வி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 20 தங்கப்பாண்டியன், திரு. வே., பி.ஏ., பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 21 தங்கவேலு, திரு. ஏ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22 தமிழரசி, திருமதி சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 தாமஸ், திரு. பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 24 தாமோதரன், திரு. ஏ.ஆர்., பி.எஸ்ஸி. (ஹானர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 25 வெற்றிடம் .. .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 26 திராவிடமணி, திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 நல்லசிவன், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28 நாராயணசுவாமி, திரு. கே. (சட்டத்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 நீலநாராயணன், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 30 பாலசுப்பிரமணியம், திரு. கு.மா. | நியமனம். |
| 31 பாலசுப்ரமணியம், திரு. ஆ. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 புலவர் புலமைப்பித்தன் | நியமனம். |
| 33 பெரியண்ணன், திரு. வி. ஆர். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 34 மணி, திரு. கோ. சி. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 35 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 36 மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 37 மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 38 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள். |
| 39 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 40 முருகேசன், திரு. எச். எல். | நியமனம். |
| 41 ராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள். |
| 43 வசந்த பை, திரு. ஜி. .. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 44 வில்வம், திரு. ஏ. கே. .. | நியமனம். |
| 45 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலைய அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 46 வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 47 ஹண்டே, டாக்டர் எச்.வி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 48 வெற்றிடம் .. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | | | தொகுதி (2) |
|---|---|---|---|
| 49 வெற்றிடம் | .. | .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 வெற்றிடம் | .. | .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 வெற்றிடம் | .. | .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 வெற்றிடம் | .. | .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53 வெற்றிடம் | .. | .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 வெற்றிடம் | .. | .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55 வெற்றிடம் | .. | .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 வெற்றிடம் | .. | .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெற்றிடம் | .. | .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெற்றிடம் | .. | .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெற்றிடம் | .. | .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெற்றிடம் | .. | .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் | .. | .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 வெற்றிடம் | .. | .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் | .. | .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

## பொருளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் 109—124
2. தகவல் கோரல்— 124
   அவைக்கு வராமைக்கு அவையின் அனுமதி கோரல் .. .. ..
3. ஒத்திவைப்புத் தீர்மானம்—
   வாகைக்குளத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகு, 200 பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து .. .. .. 124—127
4. கவன ஈர்ப்பு—
   (1) இளைஞர் அணியில் பணியாற்றிய பட்டதாரிகள் தேர்வாணைக் குழு சிறப்புத் தேர்வில் வெற்றி பெற்றும், பணியில் அமர்த்தப்படாதது குறித்து. .. .. .. 127—129
   (2) தர்மபுரி மாவட்டத்தில் நடைபெறும் குடும்ப நல இருவார விழாவை ஒட்டி, அறுவை சிகிச்சைக்கு ஆள் பிடித்து வர இயலாத அரசு ஊழியர்களை தற்காலிக பணி நீக்கம் செய்திருப்பது குறித்து .. 129—130
5. அரசின் தீர்மானங்கள்— 131
   (1) அலுவல் வரிசையில் மாறுதல்
   (2) கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் 131—192
   (3) தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். .. 192—238
6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள். 239

பொருளடக்கம்


பக்கங்கள்

1 வினாக்கள்—விடைகள் .. .. 281—310

2 உரிமைப் பிரச்சினை .. .. 310

3 ஒத்திவைப்புத் தீர்மானம்—
இராநாதபுரம் மாவட்டம் பேரையூரில் நடந்த கலவரம் குறித்து .. .. .. 310—313

5 கவன ஈர்ப்பு—
(1) புதிய தூத்துக்குடி துறைமுகக் கூட்டுறவு பண்டக சாலையின் போர்டு கலைக்கப் பட்டதால் பதவியிழந்த தலைவர் குற்றம் சாட்டியவர்களின்மீது தாக்குதல் நடத்துவதும், துன்புறுத்தல் செய்வதும் குறித்து .. .. .. 313—314

(2) 1979 மார்ச் திங்களில் சமையல் ஆவி, மண்ணெண்ணெய், மிகவேக டீசல் எண்ணெய் ஆகியவற்றை வழங்குவது கட்டுப்படுத்தப்பட்டதால் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்களுக்கு ஏற் பட்டுள்ள இடர்ப்பாடும், அப்பொருள் களைத் தேவையான அளவுக்கு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் பெறுவதும் குறித்து .. .. .. 3.5—316

5 அரசின் தீர்மானங்கள்—
தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு .. 317—391

6 அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 392


127—21—1

## பொருளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள் - விடைகள். .. .. 423—447

2. அறிவிப்புகள்—

(1) அவைக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் .. .. .. .. 447—448

(2) அவை அலுவல் .. .. .. .. 448

3. தகவல் கோரல்—

ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து ... 448

4. கவன ஈர்ப்பு—

(1) மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர்களுக்கு அமுல்படுத்துவது குறித்து .. .. .. .. 449—450

(2) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேவகிரி எஸ்டேட் மூடப்பட்டுள்ளது குறித்து .. .. .. .. 450—451

5. 1972-73 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையை அளித்தல் .. .. 451—452

6. 1973-74 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையை அளித்தல் .. .. 452—453

7. அரசின் தீர்மானங்கள்—

(1) சமூக நலம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் .. .. 453—494

(2) அலுவல் வரிசையில் மாற்றம் .. .. 494

(3) தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம் .. .. 494—553

(4) கேள்வி நேரம் கைவிடப்படல் .. 553

8. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் ... ... 554

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1979 ஏப்ரல் 19.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. கேள்வி நேரம் கைவிடப்படல்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவை விதி 22-ன் கீழ், இன்றைய கேள்வி நேரம் கைவிடப்படலாம்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்ற மேலவை விதி 22-ன் கீழ், இன்றைய கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

**திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் மாறுதல் ஆணை தொடர்பாக கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் முன்பு நடத்தப்படும் ஆசிரியர் போராட்டம் குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் க. மீனாட்சிசுந்தரம், வி. ஆர். பெரியண்ணன் ஆகிய இருவரும் திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் மாறுதல் தொடர்பாக

## திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் மாறுதல் ஆணை தொடர்பாக கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் முன்பு நடத்தப்படும் ஆசிரியர் போராட்டம் குறித்து

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்] [1979 ஏப்ரல் 19

மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்த நடவடிக்கையை எதிர்த்து அங்கே ஆசிரியர்கள் கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் முன்பு நடத்தும் போராட்டம் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் கீழ் வரும் என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களில் பிரச்சினைகள் ஏதும் உருவாகாமல் சுமுகமான சூழ்நிலை உருவாகத்தான் ஆங்காங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவரே ஒரு பிரச்சினையாக இருக்கிறார். அரசு ஆணையொன்றைப் பிறப்பித்திருந்தும் அதை அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அமுல்படுத்தாமல் இருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவரான அவர் மேற்கொண்ட நடவடிக்கையைத் தடை செய்து அமைச்சரிடமிருந்து சென்ற தடையுத்தரவை அவர் அமுல்படுத்த மறுக்கிறார். திருத்துறைப்பூண்டி நகராட்சியாக மாற இருக்கிறது. அதற்கு முன்னால் அங்கே இருக்கிற ஆசிரியர்களின் விருப்பத்திற்கு ஏற்ப, விதிமுறைகளுக்கு ஏற்ப, அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு ஏற்ப, திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஒரு 8 ஆசிரியர்களின் மாறுதலை—ஒரு நியாயமான மாறுதலை—உத்தரவிட்டார். ஆனால் வெளியார் ஒருவரின் தலையீட்டின் காரணமாக தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், திருத்துறைப் பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையரின் மாறுதல் உத்தரவுகள் அனைத்தையும் நிறுத்தி வைத்திருந்தார். அதை அவர் எப்படிச் செய்தார் என்றால், அது சம்பந்தமான கோப்புகளை வரவழைத்துக்கூட பார்க்காமல், உட்கார்ந்த இடத்திலிருந்தே தொலைபேசி மூலமாக மாறுதல் ஆணைகள் அனைத்தையும் 'கான்சல்' செய்யும்படி உத்தரவிட்டார். இதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் உணர்வை நான் மாண்புமிகு ஊராட்சி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களிடமும், உள்ளாட்சித் துறை செயலாளர் அவர்களிடமும் தெரிவித்த போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் உத்தரவை நிறுத்தி வைக்கும்படி தடை பிறப்பித்து ஓர் ஆணையிட்டார். அதாவது மாவட்ட ஆட்சியரின் உத்தரவை அமுல்படுத்தக் கூடாது என்று ஒரு 'ஸ்டே' வழங்கப்பட்டது. ஆனால் அந்த மாவட்ட ஆட்சித் தலைவரோ அந்தத் தடை உத்தரவை 'இம்ப்ளிமெண்ட்' செய்யாமல், ஏற்கெனவே தான் போட்டுவிட்ட ஆணையை அமுல்படுத்தியாகிவிட்டது, எனவே இதில் தலையிட முடியாது என்று 'அழிச்சாட்டியமாக'—'அடமெண்ட்டாக' ஆசிரியர்களைப் பழிவாங்க வேண்டுமென்று செயல்பட்டு வருகிறார்.



1979 ஏப்ரல் 19]

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். உறுப்பினர் அவர்கள் 'அழிச்சாட்டியமாக' மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்படுகிறார் என்று சொல்லலாமா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 'அழிச்சாட்டியம்' என்பதற்கு ஆங்கிலத்தில் 'அடமெண்ட்' என்று பொருள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் தம் பேச்சில் சொல்லியிருக்கிறார். எனவே அது அன்பார்லிமென்ட்டரி என்று கருத முடியாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் எனது உதவிக்கு வந்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கம் பிறப்பித்த தடையுத்தரவை அமுல்படுத்தவில்லை என்பது மட்டுமல்ல, அதற்கு மாறாக அவர் அங்கே ஒரு 'குட்டி ராஜாவைப்' போல் செயல்பட்டுக்கொண்டு வருகிறார். அமைச்சர் அவர்கள் போடுகிற உத்தரவையே அவர் அமுல்படுத்த மறுக்கிறார். அரசுத் துறைச் செயலாளர் போடுகிற உத்தரவையே அவர் அலட்சியம் செய்கிறார். ஆசிரியர்களின் பிரதிநிதிகள் சொல்வதையோ சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வதையோ கேட்பதற்கும் அவர் தயாராக இல்லை. இதன் காரணமாக இன்றைய தினம் ஆசிரியர்கள் இந்தப் போக்கை எதிர்த்து கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் முன்பு ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். பல நாட்களாக உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகிறது. 25 ஆம் தேதி முதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பாக மறியல் போராட்டம் நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள்.

இப்படி மாவட்டத்தில் ஒரு சுமுகமான சூழ்நிலையை நிலவச் செய்யாமல் செயல்படும் மாவட்ட ஆட்சித் தலைவரின் போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும், அரசாங்கத்திலிருந்து போடப்பட்ட உத்தரவை அமுல்படுத்த வேண்டுமென்றும் திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் செய்த 8 ஆசிரியர்களின் மாறுதல் உத்தரவை அமுல்படுத்த வேண்டுமென்றும், ஆசிரியர்கள் தொடங்கியுள்ள உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்றும் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். எனவே அரசு இதில் தலையிட்டு உடனடியாக உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், ஆசிரியர்களின் மாறுதல் ஆணையைச் செயல்படுத்த வேண்டுமென்றும் இதைச்

செய்ய முடியாவிட்டால், அங்கே இருக்கிற பிரச்சினைகள் தீர மாவட்ட ஆட்சித் தலைவரையாவது அங்கிருந்து மாற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, இவ்வளவு முக்கியமான பிரச்சினையை மிகவும் விரிவாகப் பேசி இதில் ஒரு நியாயமான முடிவைக் காண அவையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானத்தினுடைய முக்கியத்துவத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள். நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் இதில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியன் (ஒன்றிய) ஆணையர் ஆசிரியர்களின் மாறுதல் குறித்து உத்தரவிடுகிறார். அது விதிப் படி செய்யப்படுகிறது. ஆனால் அதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு ஆணையரின் உத்தரவை ரத்து செய்வது என்பது எந்த வகையில் நியாயம் என்று எனக்குப் புரியவில்லை. இந்தப் பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், துறைச் செயலாளரிடமும் எடுத்துச் சொல்லிய போது, மாண்புமிகு திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னது நியாயம் என்று அமைச்சருக்குத் தெரிந்த காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் போட்ட உத்தரவை நிறுத்தி வைக்கும்படி அரசாங்கத்திலிருந்து ஒரு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் சர்க்காரிலிருந்து ஒரு உத்தரவு போனால், மாவட்ட ஆட்சித் தலைவர் அதை அமுல்படுத்த மாட்டேன் என்று சொல்வார் என்றால், இவ்வளவு பெரிய சட்ட மன்றத்தில் நாம் உட்கார்ந்து பிரச்சினைகளைப் பேசுவதும், ஒவ்வொரு இலாக்காவுக்கும் இவ்வளவு தொகை ஒதுக்கிச் செலவு செய்வதும் எந்த அளவுக்குப் பயன்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே அந்த அளவுக்கு மிக முக்கிய மான பிரச்சினையாக இது இருப்பதால், இதனை விரிவாகப் பேச அவையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்களும், திரு. பெரியண்ணன் அவர்களும் தந்திருக்கிற ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குரிய விளக்கத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் இந்தப் பிரச்சினையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தந்திருக்கிற விளக்கத்



தையும் அவை முன் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன். ஒருவேளை அது கசப்பாக இருந்தாலும்கூட, தயவுசெய்து பொறுத்தருள வேண்டுமென்று முதலில் கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் இந்த மாறுதல்களை அநீதியாகவும், கெட்ட எண்ணத்தோடும் செய்திருப்பதாக தஞ்சை மாவட்ட ஆட்சியரிடம் மாறுதலில் சம்பந்தப்பட்ட ஆசிரியர் ஒருவர் 1979 மார்ச் 26 அன்று முறையிட்டார். இதன்மீது விசாரணை செய்ததில் ஊராட்சி ஒன்றிய ஆணையர் இந்த மாறுதல்களைச் செய்யும் பொருட்டு 1979 மார்ச் 22 அன்றே ஒரு கருத்துருவை பட்டுக்கோட்டை மாவட்டக் கல்வி அலுவலருக்கு அன்னாரின் ஒப்புதல் பெற அனுப்பியுள்ளார் என்று தெரிய வந்தது. இதை யறிந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தனது நேர்முக உதவியாளர் மூலம் இதைப் பொதுமாறுதல்போது செய்யலாம் என்றும் அதுவரை நிறுத்தி வைக்கலாமென்றும் கூறியுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார். இந்த மாறுதல்கள் மாணவர்களின் படிப்பினை பாதிப்பதோடு ஆசிரியர்களின் நலனையும் பாதிக்கும் என்று மாவட்ட ஆட்சியர் கருதினார். அதன்படி 1979 மார்ச் 30 அன்று மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு மாவட்ட ஆட்சியரின் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார். ஆனால் 1979 மார்ச் 31 அன்று சில ஆசிரியர்கள் திருத்துறைப் பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் செய்துள்ள தவறான மாறுதல்களைத் தன்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தனர் என்று மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார். மறுபடியும் இதுபற்றி விசாரித்ததில் 1979 மார்ச் 31 அன்று 11 ஆசிரியர்களை திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் மாற்றம் செய்துள்ளதாகவும் அப்படி மாற்றப்பட்ட ஆசிரியர்கள் 1979 மார்ச் 31 அன்றே மாற்றப்பட்ட இடங்களுக்குச் சென்று விட்டதாகவும் தெரிய வந்தது. மாவட்ட ஆட்சியரின் உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்றும், அதைத் தடை செய்ய வேண்டுமென்றும் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் என்னிடம் கொடுத்த ஒரு விண்ணப்பத்தின் அடிப்படையில் நான் பிறப்பித்த தடை உத்தரவு ஆணை மாவட்ட ஆட்சியருக்கு தாமதமாகக் கிடைத்திருக்கிறது. மாவட்ட ஆட்சியரின் உத்தரவு 1979 ஏப்ரல் 1 அன்றே பிறப்பிக்கப்பட்டு 1979 ஏப்ரல் 5 அன்று அது நிறைவேற்றப்பட்டுவிட்டதாக அவர் தெரிவித் துள்ளார். இந்நிலையில் 1979 ஏப்ரல் 6 அன்று அரசு அனுப்பிய தந்தி உத்தரவை அமுல்படுத்த முடியாத நிலையில் மாவட்ட ஆட்சியர் இருப்ப தாகவும் தெரிவித்துள்ளார். திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் பிறப்பித்த மாறுதல்கள் குறித்து கோட்ட வளர்ச்சி அலுவலரின் முன் அனுமதி பெறவில்லை என்றும் ஆணையர் பள்ளி ஆசிரியர்களை

## திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் மாறுதல் ஆணை தொடர்பாக கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் முன்பு நடத்தப்படும் ஆசிரியர் போராட்டம் குறித்து



மாறுதல் செய்ய இது தக்க தருணம் அல்ல என்றும் இதனால் மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படும் என்றும் இதனால் பெரும்பாலான ஆசிரியர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்றும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

தற்போது உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது. அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையர் செய்திருக்கிற மாறுதல்களை ரத்து செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியின் மாவட்ட செயலாளரிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டது. அதில் மாவட்ட ஆட்சியரின் உத்தரவை நிறைவேற்ற வேண்டும் என கோரப்பட்டுள்ளது. எனவே மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து இது குறித்து ஒரு விரிவான அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இதில் நான் தெரிவிக்க விரும்புவதெல்லாம் உண்ணாவிரதப் போராட்டத்தைச் சுமுகமாக நிறுத்திக் கொண்டு, அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ஆசிரியர்கள் மாறுதல் சம்பந்தமான அவருடைய அலுவலகக் கோப்புகளையும் அதைப் போலவே ஊராட்சி ஒன்றிய ஆணையர் அலுவலகத்தில் உள்ள ஆசிரியர் மாறுதல் சம்பந்தமான கோப்புகளையும் அரசுக்கு அனுப்பச் சொல்லிப் பெற்று, இரண்டு கோப்புகளையும் பரிசீலித்து, நிச்சயமாக, நியாயமான ஒரு முடிவை நாம் எடுக்க ஒத்துழைக்க வேண்டுமென்று உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களையும் திரு. பெரியண்ணன் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். தற்போது இந்தக் கோப்புகள் அனைத்தையும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டிருக்கிறது. எனவே அரசின் இந்த நல்லெண்ணத்தைப் புரிந்து கொண்டு, அதற்குத் தகுந்தாற்போல் ஒத்துழைப்புத் தர மாண்புமிகு உறுப்பினர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, ஆகவே இந்தப் பிரச்சினையை இன்னும் அதிகமாக விவாதிக்க அவையின் நடவடிக்கையை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து இந்தப் பொருள்குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.



(பிற்பகல் 4-10)

### 3. கவன ஈர்ப்பு.

**சென்னை நகர மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் விடுப்பில் செல்லும்போது, அவ்விடங்களில் புதிய ஆசிரியர்களை நியமிக்க விதியில்லாதது குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"சென்னை நகர மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களில் 20 சதவிதத்தினர் மேல் பட்டப்படிப்பு தேர்வு எழுதும் பொருட்டு மருத்துவ விடுப்பில் செல்லும்போது அந்த இடங்களில் தற்காலிகமாக புதிய ஆசிரியர்களை நியமனம் செய்ய விதிமுறைகளில் இடமில்லாததால் பள்ளிகளில் பல வகுப்புக்கள் ரத்து செய்யப்படுகின்றன. ஆண்டுத் தேர்வு நெருங்கும் வேளையில் ஆசிரியர்கள் இல்லாமல் மாணவர்கள் அவதிப்படும் நிலை குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கையை @ மேலவையின் முன் வைத்திருக்கிறேன்.

*** திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே புள்ளிவிவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். மூன்று வாரங்களுக்கு மேல் ஆசிரியர்கள் விடுப்பில் சென்றால், அவர்களுடைய பதவியில் பதிலி ஆசிரியர்களை நியமிக்க விதிமுறைகளிலே இடம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்டவர்களை வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகத்தான் நியமிக்க வேண்டுமென்ற ஆணை இருப்பதால், ஒருவர் விடுப்பு எடுக்கிறபோது, அதை வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குத் தெரிவித்து வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து உரிய ஆசிரியர்களை அனுப்பி பிறகு நேரமுகத் தேர்வு செய்து தேர்ந்தெடுத்து நியமிப்பதற்குள் 21 நாட்கள் கடந்து விடுகின்றன. ஆகவே விடுப்பு எடுக்கும் ஆசிரியர்களுக்குப் பதிலி நியமிப்பவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக இல்லாமல், நிர்வாகமே நேரிடையாக நியமித்துக் கொள்ள ஆணை பிறப்பித்தால், சௌகரியமாக இருக்கும். இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

---

@ 105 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

## சென்னை நகர மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் விடுப்பில் செல்லும்போது, அவ்விடங்களில் புதிய ஆசிரியர்களை நியமிக்க விதியில்லாதது குறித்து

[1979 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் விடுப்பு எடுக்கும் காலங்களில் பதிலியை நியமிப்பதில் இருக்கிற கிராமங்களை மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே அது குறித்து கல்வித் துறை பரிசீலிக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களின் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்தி வைக்கப் படுகிறது.

### 4. அரசின் தீர்மானம்.

நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. கே எஸ். அப்துல் வகாப் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கைக் குறிப்பின் பேரில் ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு கிடைத்ததற்காக நான் முதற்கண் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தமிழகத்திலே உள்ள போக்குவரத்தை அரசு தன்னுடைய சார்பில் ஏற்றுக்கொண்டு அதை விரிவுபடுத்தியிருப்பது வரவேற்கக் கூடிய நிலை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். முதன் முதலில் தமிழகத்தில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்குச் செல்லுகிற துரித வண்டி மட்டும் இருந்தது. அப்போது காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போக்குவரத்து அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள், "நான் அமெரிக்க நாட்டுக்குப் போயிருந்தேன். அங்கே எல்லா ஊர்களுக்கும் பஸ் போக்குவரத்தை அரசே நடத்துவதைப் பார்த்தேன். அதே மாதிரி தமிழகத்திலும் எல்லா ஊர்களுக்கும் போக்குவரத்தின் மூலம் தொடர்பு ஏற்படுத்தக் கூடிய நிலையை உருவாக்க வேண்டுமென்று கனவு காண்கிறேன். அந்தக் கனவை நடைமுறைப்படுத்தக் கூடிய நாள் வெகு தூரத்திலே இல்லையென்று உணர்கிறேன்" என்று பேசியது நினைவுக்கு வருகிறது. அவர் பேசி கிட்டத்தட்ட 15 வருடங்கள் ஆகியிருக்குமென்று





நினைக்கிறேன். அந்தக் கனவு இன்றைக்கு ஓரளவுக்குப் பூர்த்தியாகியிருக்கிறது என்று நான் உணர்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே துவக்கப்பட்டதை அதற்குப் பின் வந்த அரசு விஸ்தரித்தது. இந்த அரசும் அதை இன்றைக்கு விஸ்தரித்து வருகிறது. எல்லா அரசுகளும் இதைச் செய்து கொண்டு வருகின்றன.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, தன்னுடைய முதல் வேலை தமிழகத்திலுள்ள எல்லா பஸ்களையும் தேசியமயமாக்க வேண்டும் என்பதுதான் என்று பிரகடனப்படுத்தினார்கள். அந்தக் கருத்தை வெளிப்படையாகத் தெரிவித்து அதை நடைமுறைப்படுத்த வேண்டிய முயற்சிகளையும் எடுத்தார்கள். அவரைத் தொடர்ந்து வந்த டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலும் அந்தக் கொள்கையைப் பின்பற்றினார்கள். ஒவ்வொரு மாவட்டமாக எடுத்துக் கொண்டு போக்குவரத்தை தேசியமாக்குவோம் என்று அறிவிக்கப்பட்டு, முதலில் கன்னியாகுமரி மாவட்டம் மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டதாக அறிகிறேன். மற்ற மாவட்டங்களில் தேசிய உடைமையாக்கும் திட்டம் விஸ்தரிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. கோர்ட்டில் ஏதாவது தடையிருக்கிறதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கினால், நலமாக இருக்குமென்று கருதுகிறேன். முடிந்த வரைக்கும் மாநிலத்திலுள்ள அத்தனை மாவட்டங்களிலும் போக்குவரத்தைத் தேசிய உடைமையாக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு அமுல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். ஏனென்றால் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையைக் கடைப்பிடிக்கக் கூடிய இந்த அரசு போக்குவரத்தைப்பற்றி அண்ணா அவர்கள் கொண்டிருந்த கொள்கையையும் கடைப்பிடிக்க வேண்டும்.

இப்போது சிறு சிறு கிராமங்களுக்கும் போகக் கூடிய மினி பஸ்களை விடப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதை தனியார்களிடம் விடப் போவதாக அறிகிறேன். இதையும் அரசே ஏற்று நடத்துவதுதான் வரவேற்கத் தக்கதாக இருக்குமென்று வலியுறுத்த விரும்புகிறேன். தனியாருக்கு விடக் கூடாது என்றும் சொல்ல விரும்புகிறேன்.

ஆம்னி பஸ்கள் ஓடுவதைத் தடை செய்ய வேண்டுமென்ற கருத்தை அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சிறிது காலத்திற்கு முன்பு ஆம்னி பஸ்கள் ஓடுவது நிறுத்தி வைக்கப்பட்டதை நான் கண்டேன். பிறகு கோர்ட்டில் போய், மீண்டும் ஓட்டியதாகத் தெரிகிறது. ஆம்னி பஸ்களைத் தடை

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1979 ஏப்ரல் 19

செய்து அதற்குப் பதில் அரசாங்க பஸ்களை ஓட்டுவதால், நம்முடைய மாநில அரசுக்கு நிறைய இலாபம் கிடைக்கக்கூடிய வழி இருக்கிறது. ஆகவே அதைத் தடை செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு நான் பேசியபோது, எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலிருந்து தலைமைச் செயலகத்திற்கு, எல்லா நாட்களிலும் பஸ் விட வேண்டுமென்று கேட்டேன், சட்ட மன்றம் கூடுகிற நாட்களில் அங்கிருந்து பஸ்கள் விடப்படு கின்றன. ஆனால் ஏனைய நாட்களிலும் பஸ் விட்டால், உறுப்பினர்கள் வர, போக வசதியாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக இருக்கலாம். மற்றவர்களுக்கு கட்டணம் வசூலிக்கலாம். இப்படி விடுவதால் அதிகமான நஷ்டம் ஒன்றும் வராது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்போது உடனே ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் அப்படி பஸ்களை விட ஏற்பாடு செய்ததாகத் தெரியவில்லை. இனிமேலாவது அப்படி பஸ்களை விட வேண்டும். பஸ்கள் இல்லாவிட்டால், மினி பஸ்களை அதுவும் இல்லாவிட்டால், வேன்களை விட்டாலும் பரவாயில்லை. எப்படி யாவது உறுப்பினர்கள் வந்து போக வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டு நான் பேசியபோது, ஒரு டிரைவருடைய சாமர்த்தியத்தை எடுத்துச் சொல்லி, அவரைப் பாராட்டும் வகையிலே அவருக்குப் பரிசு கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்தேன். டிரைவருடைய பெயர், நெம்பர் போன்ற விவரங்களையும் அமைச்சர் அவர்களிடம் கொடுத்தேன். ஆனால் அவருக்குப் பரிசு கொடுக்கப்பட்டதா, இல்லையா என்ற தகவல் தெரியவில்லை. எனக்குத் தகவல் கொடுப்பதாக முன்பு சொன்னார்கள். ஆனால் இது வரையில் தகவல் இல்லை.

அடுத்து, பூம்புகார் நிறுவனத்தின் மூலமாக கப்பல் போக்குவரத்தை நம்முடைய அரசு நடத்துகிறது. அந்த நிறுவனத்தில் ஓராண்டுக்கு ஒரு கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் ஒரு நாள் இங்கே கூறினார்கள். இவ்வளவு பெரிய நஷ்டத்தில் நடக்கக் கூடிய அந்த நிறுவனத்தால் பொது மக்களுக்கு என்ன இலாபம் என்று கேட்டபோது, அந்தக் கப்பல்கள் கல்கத்தாவிலிருந்து நிலக்கரியைக் கொண்டு வருகின்றன என்று சொன்னார்கள்.



1979 ஏப்ரல் 19] (திரு. கே. எஸ். அப்துல்வகாப்)

(பிற்பகல் 4-20)

அதை வாடகைக் கப்பல்களிலே கொண்டு வந்தால் இவ்வளவு பெரிய நஷ்டம் வருவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே கோடி ரூபாய் அளவுக்கு ஒரு வருடத்திற்கு நஷ்டம் உண்டாக்குகின்ற பூம்புகார் கப்பல் துறையை நடத்துவதை விட, அதை அரசு மூடிவிடுவது நல்லது என்ற கருத்தைச் சொன்னேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். மூடிவிட வேண்டுமென்ற கருத்தைச் சொல்ல வேண்டாம், இன்னும் புதிதாகப் பெருக்க வேண்டும் என்று சொன்னால், வரவேற்கத் தக்கதாக இருக்கும் என்று சொன்னார்கள். மற்ற மாநிலங்களில் விமானங்கள் கூட வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் விமானம்கூட இல்லை என்று பேசினார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் விரைவாக முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஆகவே அங்கத்தினர் அவர்கள் மிக விரைவாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மற்ற மாநிலங்களில் அரசு விமானப் போக்குவரத்து இருக்கிறது. நமக்கு அப்படி இல்லை. விமானப் போக்குவரத்து நாம் தொடங்குவதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. விமானப் போக்குவரத்து அரசு சார்பிலே தொடங்கலாம். அது லாபகரமாக ஓடினாலும் ஓடலாம். இப்போது இருக்கின்ற பெரும் நஷ்டத்தைத் தவிர்க்க இந்த பூம்புகார் நிறுவனத்தை மூடிவிடுவது நல்லது என்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது போய்க்கொண் டிருக்கின்ற எக்ஸ்பிரஸ் பஸ்களிலே, ஏ.சி. பஸ்கள் இரண்டு ஓடிக்கொண்டிருக் கின்றன. இந்த ஏ.சி. பஸ்சிலே நான் திருச்சியிலிருந்து சிலசமயங்களில் பயணம் செய்வேன். அந்த ஏ.சி. பஸ்ஸில் பயணம் செய்யும்போது, அங்கத் தினர்களுக்குக் கொடுத்துள்ள பிரி பாஸ் காட்டிய பிறகும் ரூ. 15 வேறு தனியாகக் கட்டணம் என்று கேட்கிறார்கள். சாதாரணமாக பஸ்ஸில் போவதற்கு ரூ. 16 தான் கட்ட வேண்டும். நாமும் கிட்டத்தட்ட முழு கட்டணத்தையே கட்டுகின்ற மாதிரிதான் இருக்கிறது. பிரி பாஸில் போவதற்கு அல்லது கன்செஷன் ரேட்டில் போவதற்கு வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Can I take ten minutes, Sir ?

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member may please try to conclude in ten minutes.

* THIRU A. R. DAMODARAN : Sir, I rise to offer my remarks on the Policy Notes regarding Road Transport in Tamil Nadu and the Road Development Programme. I would like to reiterate my congratulations on the very good performance by the Road Transport Corporations during the year 1977-78 and also in 1978-79. The reasons for the improved performance have been explained by the Hon. Minister to a certain extent as better fleet-utilisation, improved fuel economy and improved maintenance of the vehicles with probably fewer breakdowns. But the most important reason is that he has embarked, and very rightly too, on a good programme of replacement of the aged fleet with new buses. In fact, I am struck with wonder that in the previous year 1,300 buses have been purchased newly which, I think, is a record for the Transport Corporations, if I am not mistaken. We have been urging in the past that the bad performance of our Transport Corporations, particularly the mofussil Corporations operating district services, was due to the old fleet that existed, higher fuel consumption, larger number of brackdowns, etc. Now, I think the marked improvement in performance is due to the replacement of the aged fleet and the purchase of the new buses. I congratulate the Road Transport Corporations also on the better technical control that is being maintained which has also contributed to their good performance. I would be failing in my duty if I do not refer to the signal service that has been done by the Transport Development Finance Corporation in seeing that adequate funds are provided to the Road Transport Corporations for replacement of the existing buses and for giving them working-capital loans which has been to a large extent responsible for the good performance of these Corporations. In fact, a few years ago, when we were discussing the question of financial arrangements when these buses were run on a departmental basis, we said that it was a great drain on the Government exchequer and that the reluctance of the Government to invest properly and in time in replacement of fleet and in replacement of equipment and machinery



in the Engineering Corporations was largely responsible for the poor performance. I think the better financial results are due to the very good financial management by the Transport Development Finance Corporation in regard to the working of these Corporations.

Yesterday my hon. Friend Thiru Lakshmikandhan referred to the fact the Transport Corporations should be headed by Technical personnel. To a certain extent, it is true in the sense that technical control of the department's actual operation, etc., should be in charge of technical officers; but in regard to other matters like financial management, etc., there could be little doubt that a certain amount of outside expertise in the form of officers of the I.A.S. is absolutely necessary in so far as financial scrutiny and management is concerned. We have very able officers in the Transport Department and we have given them proper encouragement and their performance has improved and will continue to improve in future. There are, of course, some factors which the Hon. Minister has left unsaid in his Note, perhaps deliberately so, that one of the reasons for the improved performance can be the fact that near monopoly condition exists for many of these Transport Corporations. I know for a fact that there has been gradual elimination of competition of private operators in many fields of activities; and since 1976, because of the condition that existed at that time when very many amendments to the Act could be brought in without being questioned in a Court of Law, notification of new routes had become a popular way by which Road Transport Corporations had been steadily expanding their activities.

The hon. Member Thiru Wahab referred to the fact that he wanted total nationalisation of road transport in our State. I would like to sound a note of caution in this regard. In spite of the improved financial performances of the Road Transport Corporations, in principle I have always held the view that total monopoly for any Government Undertaking is bad for the Undertaking, bad for the Government and bad for the country. From this point of view, I would like private enterprise to co-exist with the nationalised road transport sector and since we have already 53.2 per cent under the control of the State Corporations, I do not think any serious damage will be caused to the economy. If we allow the private sector to co-exist with the public sector in this regard. As

(Thiru A. R. Damodaran) [1979 ஏப்ரல் 19

the Hon. Minister has pointed out and very validly too, there are vast unexplored fields in our rural areas where bus transport has not reached the consumers. The route survey that he has promised to undertake will reveal the deficiency in this regard. While I do not say that the responsibility of providing the rural areas with transport is with the public sector undertakings, I am sure, with the little bit of co-operation from the private sector also, the routes could be formulated in such a way that profitable routes are mixed up with unprofitable routes in the rural areas and the private sector could also be given the responsibility of playing its part in maintaining proper bus transport facilities in the rural areas.

Sir, many important details have been mentioned about the number of amenities that have been increased for passengers as well as the staff working in these public sector Corporations and I think we must acknowledge that during the last year, very many new amenities have been provided to the staff of these Corporations which is a very welcome feature. I have always held the view that irrespective of the amount of money that you may invest in this sector, whatever may be the expertise that you may get in financial management and however well you may plan the routes and services, etc., one great feature on which the performance of these sectors will depend is the good industrial relations with the people who work in such Corporations. In fact, this was a glaring deficiency

[பிற்பகல் 4·30]

in the past and we have been pleading that next to the General Manager of these Corporations—or the Managing Directors or whatever you call them—we should have high-level personnel in the personnel departments attached to these Corporations. Each one of these Corporations is having 2,000 to 4,000 employees and some of them have even a higher number of employees and if there is one field which we have neglected, it is the field of industrial relations. A Managing Director or a Works Manager or a Technical Manager should never be bothered with the day-to-day details of labour disputes, etc., which are bound to arise in Corporations of this size and magnitude. In spite of the good performance of the Transport Corporations, they must try to maintain the co-operation of the staff concerned. For this purpose, I would



1979 ஏப்ரல் 19] (Thiru A. R. Damodaran)

request the Hon. Minister to take whatever steps that are necessary to strengthen industrial relations by having good managers in the industrial relations departments of these Corporations. I would request him, especially in view of the comfortable position of these Corporations to spend more money on this overhead, to see that this department of industrial relations is not neglected as it has been done in the past.

The hon. Member Thiru Lakshmikandhan yesterday referred to the fact that he would like channel-music, magazines, soft-drinks, cool refreshments, etc. in the buses. I do not know why he did not mention that he wanted charming bus-hostesses also as in the case of air-hostesses; probably as a teacher, he had some reservations. Nonetheless, we would like more amenities to be provided and in view of the limited time, I think you will pardon me if I make a very brief review. We would like the Transport Corporations to investigate the possibility of introducing tourist season tickets to travel in Tamil Nadu. This would be a tourist development enterprise. In the United States of America, the Greyhound Corporation issues a ticket for about 292 dollars for 60 days. I think that for 30 days also, the Corporation issue a ticket for 199 dollars or 179 dollars. Those season tickets are issued with a view to enabling people to travel throughout the United States. I would like the Hon. Minister, in consultation with the Hon. the Minister for Tourism, to find out whether such season tickets for 15 days and 30 days could not be issued so that the tourists may tour in Tamil Nadu.

I would also plead for better rooms and better canteen and restaurant facilities at important tourist centres to promote internal tourism. Such facilities could be provided at major bus-stops initially and could be extended to other places on a phased programme. As I have pleaded in the past also, the was-room facilities and toilet facilities in our bus depots are still in an abominable condition. The hon. Members Thiru Ramamoorthi and Thiru Lakshmikanthan who frequently tour in buses will vouch for the fact that it is so. I would plead that, as in other countries, we should also introduce, apart from the free toilets and bath-rooms, the 10 paise slot-system or some such paying system. Such facilities should be provided in all big bus depots and in places where the buses halt so that this essential passenger

amenity may be obtained. I would also plead for provision of air-conditioned rest-rooms at important bus terminals. I am not pleading for such rest-rooms at all terminals but at importtnt terminals like Madurai, Salem, Tiruchirappalli, Thanjavur, etc. Even in some taluk headquarters where travellers have to stay for 3 or 4 hours for a connecting bus, an air-conditioned rest-room would be an invaluable facility.

Overcrowding in the metropolitan areas should be strictly prohibited and there should be proper parking spaces for buses. I think the Hon. Minister referred some time back to the fact that there were a lot of driving accidents. I would like to tell him that traffic accidents arise not merely because of the fault of the drivers but also because of the peculiar conditions that exist on Indian roads where pedestrians and cattle cross at all points of the road and expect the car to stop whenever they cross the road. The metropolitan buses have a habit of swinging in and out of the traffic lanes. I request that, as has been done in some areas, the areas where the buses should park in the bus stops should be clearly demarcated. I would also like the Hon. Minister to investigate the possibility of maintaining a minimum distance between bus stops. I do not know what the distance is at present but I think that a minimum distance of 2 furlongs between each bus stop is absolutely essential. We are growing into a remarkably lathargic and lazy race and we want to get into a bus right in front of our houses. This is a bad habit from the point of view of health also. People should be encouraged to walk at least two furlongs to get into a bus. There is nothing wrong in it. We have walked miles in places like London, Paris and New York. I do not see why in India we try to avoid walking. The metropolitan service should stagger their stops and see that there is a minimum distance between the stops. This will save the wear and tear and also some of the deplorable losses in the metropolitan transport service.

I would also like the Research Cell to investigate the wasteful, uneconomic running during non-peak hours. I agree that it is a difficult problem ; but if there is some way, we must cut down our loss in the Metropolitan Sector, by introducing whatever improvements could be effected, by cutting down some trips during non-peak hours, by staggering of buses, etc. I would also



plead one thing in regard to these long chassi buses in our cities. We are now in 1979 and by 1990, the population of Madras City is going to run into some more millions of people. Our roads are already narrow and are so crowded that in roads near Flower Bazaar and China Bazaar, we are not able to walk. Our roads are so crowded that we must have a long-term plan by which we will have to ban these long chassi buses from entering into roads which are not having a specified width. As I come along Mambalam and T. Nagar, I find these huge monsters racing along the pavements with scant regard for the other vehicles and pedestrians and I shudder to think what will happen in 1990. I think it will not be immediately possible but we must chalk out a long-term plan for this.

Then, I would also mention that traffic planning control in Madras City is absolutely essential and we must get rid of all the slow moving vehicular traffic, after providing for alternative employment, if necessary, to those who will be affected. A Metropolitan Area will have only fast moving traffic and if Madras is to remain a Metropolitan Area, we cannot permit the cycle rickshaws, bullock carts, four-wheel bullock carts etc. etc. If they are allowed to run in a Metropolitan City, we cannot have any traffic control, we cannot have effective automatic signals and, therefore, a courageous decision will have to be taken. The sooner it is taken the better because by 1990 the number of these vehicles would have doubled and the Government will find it difficult to control them. I would request the Government to take immediate steps for banning the slow moving vehicles from the Metropolitan City in a phased manner.

I would like to suggest one more thing. In view of the high cost of diesel, I would request the Government to consider the running of point to point buses, either mini-buses or bigger buses. Even to-day the Hon. Minister was showing a model of bus that he wanted to operate as Limited Stop Service in the City. There are officers and members of the staff of the Secretariat, living in different parts of the City and they want to go to the Secretariat or George Town. I would suggest that such point to point buses from places like Anna Nagar to Secretariat and other places with a full load of passengers might be run. The Government need not fix the present fare that is charged in Public Transport but it may

(Thiru A. R. Damodaran) [1979 ஏப்ரல் 19

be doubled or it may be one and a half times the present ordinary fare and they will welcome such buses. To-day the pooling arrangement has come to stay because many of them can no longer afford to travel by car in view of the rising cost of petrol. Ministers and probably some M.L.As. or M.L.Cs. like myself—I include myself in that list—will be able to travel by car. It is not possible for those officers.

The Hon. Minister has exceedingly good reason to raise the taxes on the mofussil Corporation buses because of the adequacy of the profits. Why should he not bring an Act to remove the tax on buses in urban areas? He could have easily brought in an Act in view of the fact that he has increased the revenues of the mofussil Transport Corporations. Metropolitan Transport is losing so badly and it is not losing only for any particular reason but because of the inherent factors of Metropolitan Transport System, such as heavy wear and tear, more consumption of fuel, etc. I would suggest that even this Rs. 50 per seat per quarter or whatever charged on buses in Metropolitan areas can be conveniently abolished. What the Government should do is this : This abolition will apply only to those who have 250 buses and above. By this the Government can see that no private operator is benefited and it will apply only to the Government buses. This is only an accounting device which the Hon. the Minister for Transport could easily adopt.

[பிற்பகல் 4·40]

Sir, there is one more thing which I want to mention. There has been some talk of special tolls being levied for roads, bridges, etc. and also of octroi for Madras City, etc. I would say that these are very obnoxious proposals which should be shot down immediately. The Government are already getting Rs. 56 crores by way of motor vehicles taxes and they are getting Rs. 29 crores by way of M.S.M.S.M.T. taxes on petrol and diesel. Adding these two, they are getting Rs. 83 crores or Rs. 84 crores in the year 1979-80. Any suggestion made to improve upon this is a fallacy and an illusion. I hope Government will not endorse this proposal because this is a very unpopular form of payment for people using the roads and highways. It cannot be assumed that there is not enough revenue from roads because Government are getting enough revenue from road transport to finance their entire road



1979 ஏப்ரல் 19] (Thiru A. R. Damodaran)

development programme. I have got the figures for 1979-80 according to which they are spending less than Rs. 40 crores on their road development programme, construction of bridges, culverts, etc., as against a revenue of Rs. 84 crores that they anticipate from two items of taxes alone. I am referring only to the two direct taxes, namely, the Motor Vehicles Tax and the M.S.M.S.T. Tax, which have contributed to the revenue and I am not taking into account the other taxes. I would, therefore, request that these special levies, tolls, etc. may be eliminated. They are most unpopular and if Government introduce them, after introduction they will find representations and appeals being made and traffic being held up. In Karnataka, a decision has been taken in the matter of octroi. Let me hope that this proposal will not come through in our State.

The next point which I want to mention is that we do require the amendment of the Motor Vehicles Act. In fact, I think we have suggested this in 1976 also. It is a very old Act and there are a number of amendments. I hope that an expert committee will be appointed to go through the provisions of the Motor Vehicles Act to find out in what way the amendments could be made.

The proposal of the Government to have special training schools for drivers is a very laudable idea. But I hope the Government would not make such schools into a State monopoly for training drivers. We do not want a state monopoly for these training schools. Private schools should also be permitted because if this s made into a State monopoly, all the defects of a State monopoly vill creep in and Government would receive complaints about such-ınd-such a person having had to pay so much amount for obtaining ı Driving Licence, etc. But the Government must have such training schools. They are there in Maharashtra and Delhi.

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member may conclude ıs early as possible.

Thiru A. R. DAMODARAN: Yes, Sir. I would end by naking only one reference to roads and bridges. I think the Ion. Minister hails from Salem district. If he hails from Salem listrict, I think he must have also travelled between Krishnagiri

and Hosur. It is an amazing road development programme which has been going on for 2½ years. I believe that according to the Budget documents, a provision of Rs. 150 lakhs has been made for this. It is only an administrative sanction but I am not able to visualise whether it is going to cost Rs. 300 lakhs or Rs. 400 lakhs. For 2½ years, it is a torture to travel between Krishnagiri and Hosur. Hailing from that district and holding the portfolio of road development, I hope it will be possible for the Hon. Minister personally to visit that place, sit down with the Engineers and see that their difficulties are removed. I do not know what difficulties the Engineers are in. I am not able to visualise the formation of that road because they have completely relaid it into deep ravines cutting open rocks and mountains. It seems to be a big programme but the longer it takes the greater is the agony for motorists. I would request the Hon. Minister kindly to see that the work is completed early.

The other point which I want to make is that Government must be very strict about encroachments on National Highways. In Madurantakam, besides the National Highway a structure is being built. It started as a Vinayaka Temple and now they have the Navagrahams also. The people are merrily building these temples. I am a Hindu going to temples, worshipping my God, etc. and people cannot abuse me of being anti-religion. But I think it is disgraceful that we should allow our Gods to become pavement dwellers. I would much rather that the people of Madurantakam had purchased half an acre of land and constructed a decent temple. There seems to be no respect for authority in so far as constructions on National Highways are concerned. I am not speaking only of temples and let not the Hindus mistake me. I am speaking of all constructions. There is a rule that for 200 feet from the centre of a National Highway, there should be no construction without the permission of the Highways authorities. If these encroachments are permitted, by 2000 A.D., our National Highways would become something like rural roads and one will have to creep along the National Highways through densely populated area. Therefore, I would request that, whatever may be done in regard to the older encroachments, at least the fresh encroachments should be stopped. Once upon a time our roads were noted for their very superior quality. We still have the best



engineers in India but, unfortunately, the expenditure on maintenance of State Highways, National Highways, Panchayat Union roads, etc. has been reduced considerably. We are spending too much money on the formation of roads. In the case of electricity also, we embarked on a programme of rural electrification without devoting proper attention to generation of electricity. I do not want the same mistake to be committed in so far as our rural roads are concerned. The Government should not deploy all their resources for the construction of new roads in rural areas because that will require a lot of money. Sufficient money should be set apart for the maintenance of such roads. The State, National, District Roads where there is heavier traffic require better maintenance ; without reducing the allotment for these roads, the Government may have the rural roads also. In this also, we have an elaborate caste system in regard to maintenance of roads. Unfortunately, I do not have the time to refer to a number of problems. We have the Madras Urban Development Project under the World Bank Scheme, the Western Ghat Road Development, the Hill Area Development programme, Rural Roads, Rural Link Roads, etc. and it is very difficult to find out from the Policy Note what exactly is spent and where. This may be useful in so far as the Ministry is concerned because it will be easier to confuse the Members in regard to the actual amount that is spent. Do we require all these classifications and caste system in roads ? I would request the Hon. Minister to consider whether a better classification might not be attempted from the point of view of better maintenance and savings. I would also request him to devote more attention to the development of roads so that we may have a better transport system, helping the villagers to bring their produce to the commercial centres.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துணைத் தலைவரவர்களே, "ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிக்கேஷன்". நேற்றையதினம் நான் பேசும்போது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வேண்டாமென்று சொல்லவில்லை. தலைமைப் பொறியாளர்களாக இருப்பவர்கள் பிற மாநிலங்களில் இருப்பவர்களைப்போல், மத்திய அரசில் இருப்பவர்களைப் போல், எக்ஸ்-அபிஸியோ செக்கரட்டரியாக நம்முடைய மாநிலத்திலும் இருந்தால், தொழில் நுணுக்கம் சம்பந்தப்பட்ட திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்ற உதவுவார்கள் என்ற அடிப்படையில்தான் சொன்னேன். ஐ.ஏ.எஸ். பதவியை இந்தத் துறையிலுள்ள

சீனியர் பொறியாளருக்குக் கொடுப்பதற்கு இப்பொழுதுள்ள விதிகளில் கூட இடம் இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள தொழில் நுணுக்கம்பற்றித் தெரிந்தவர்களுடன் நான் கருத்துக்களைப் பரிமாறி, விவாதத்தின் அடிப்படையில் நல்ல கருத்துக்களை அவையில் சொன்னேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. அறிவழகன் :** துணைத் தலைவரவர்களே, தேசியமயமாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்துபற்றி ஒருசில நிமிடங்களில் ஒருசில கருத்துக்களை மட்டும் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் விரிவாகவும், விளக்கமாகவும் பல நல்ல கருத்துக் களையும், கொள்கைகளையும் சொன்னார்கள். அதிலே ஒன்று ஆக்ட்ராய் பற்றி, 'ஆக்ட்ராய் என்கிற முறையில் சாலைகளில் வரி வசூலிக்கிறார்கள். குறிப்பாக தஞ்சையையும் திருச்சியையும் இணைக்கின்ற கொள்ளிடம் பாலத்தில் கடந்த 30 ஆண்டுகளாக அங்கு செல்கின்ற அத்தனை பயணி களையும் நிறுத்தி கட்டணம் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு ஒரு சந்தேகம். நான் மாணவனாக இருந்தபோது, கொள்ளிடம் பாலத்தைக் கட்டினார்கள். இவ்வளவு ஆண்டுகளாக, கடந்த 30 ஆண்டுகளாக வரி வசூலித்த பிறகும் அப்படிச் செலவான பணம் வந்து சேரவில்லையா? எப்படி ஒரு நாகரிகமான முறையில் வரி வசூலிப்பதன் மூலம் போக்கு வரத்தை நடத்த முடியும்? அதுமட்டுமல்ல. மாநிலத்தின் பல்வேறு பகுதி களில் இதுமாதிரி சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இரவு 1 மணி, 2 மணி நேரத்தில் அந்த வழியாகச் சென்றாலும் கூட, வாகனங்களை நிறுத்தி பணத்தை வசூல் செய்கின்ற நிலை இருக்கிறது. வேறு மாவட்டங் களில், வேறு இடங்களில் அப்படிச் செய்வதில் ஒருவேளை நியாயம் இருந் தாலும், இந்தக் கொள்ளிடம் பாலத்தைப் பொறுத்தவரை, நியாயமே இல்லை, அதுவும் கான்ட்ராக்டர்களிடம் விட்டிருக்கிறார்கள். அது தான் பரிதாபத்திற் குரிய நிலை. கான்ட்ராக்டர்கள் எவ்வளவு அதிக இலாபம் சம்பாதிக்கிறார்கள் என்கிற கணக்கினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கொடுத்தால், நன்றாக இருக்கும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களுக்கு, நான் சென்ற ஆண்டு பேசும்போது, பல யோசனை களைத் தெரிவித்திருக்கிறேன். நடத்துநர்களும், ஓட்டுநர்களும், அதிகமாக ஆக்சிடென்ட் செய்யாமல் இருந்தால் பரிசுகள் அளிக்கப்படுமென்று மாண்பு மிகு அமைச்சரவர்கள் அப்போது சொன்னார்கள். நான் உடனே "யார் அதிகமாக மாணவர்களிடத்தில் மோதாமல் இருக்கிறார்களோ அவர்களுக்குப்





பரிசுகள் வழங்க வேண்டும்" என்று சொன்னேன். மாணவர்களுக்கு அதிக மான முறையில் தொல்லை கொடுக்கிற துறை போக்குவரத்துத் துறை. கல்லூரி இருக்கிற இடங்களில் ஓடுகின்ற பேருந்துகளில் எல்லாம், நடத்துநர்கள் ஆகட்டும் அல்லது ஓட்டுநர்களாகட்டும், 40 வயதுக்கு மேற்பட்டவர்களைப் போட வேண்டும். அப்படிச் செய்யாமல் இருப்பதால், இன்றையதினம் சிக்கல்களை ஏற்படுத்துகின்ற பால் உணர்ச்சி போன்ற விஷயங்களில் பேருந்துகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மாணவர் களுக்கு வயதானவர்களைப் போல் நியாயங்கள் உருவாக்க முயல்கின்ற போது, தகராறு ஆரம்பமாகிறது. இன்றையதினம் நாட்டிலுள்ள மடாதிபதி களைப் போல மாணவர்களுக்கு அவர்கள் உபதேசம் செய்ய முயற்சிக்கின்ற நேரத்தில், தகராறு ஆரம்பமாகிறது. இப்போதே தொழிலாளர்களுக்கு 24, 25 வயதுக்கு மேல் இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனாலும் 40 அல்லது 50 வயதுக்கு மேற்பட்டவர்களை அப்படிப்பட்ட கல்லூரிகள் இருக்கின்ற இடங்களில் ஓடுகின்ற பேருந்துகளில் நியமிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 4-50)

உலக குழந்தைகள் ஆண்டையொட்டி குழந்தைகள் இலவசமாக ரயிலில் பயணம் செய்யக் கூடிய வயது வரம்பை உயர்த்தியிருக்கிறார்கள். தம்முடைய பேருந்துகளில் அப்படி வயது வரம்பை உயர்த்தியிருக்கிறார்களா என்று தெரியவில்லை. குழந்தைகள் என்று கூட அல்ல, 12 வயதுவரை இலவச மாகப் பயணம் செய்யலாம் என்று ஏற்படுத்த வேண்டும். இப்படிச் செய்தால், ஏழைக் குழந்தைகள் தான் அதிகமாகப் பயனடைவார்கள். கிராமத்திலே இருக்கக்கூடிய குழந்தைகள் அதிகமாகப் பயனடைவார்கள். அப்படி குழந்தைகளுக்கு இலவசமாகப் பயணம் செய்வதற்கான வசதியை ஏற்படுத்த முடியவில்லை என்றால், 12 வயது வரை இலவசமாகப் பயணம் செய்யலாம் என்ற வசதியை ஏற்படுத்தவில்லையென்றால், உயரத்தையாவது 4 அடிவரை என்று வைக்க வேண்டும்.

சமீபத்திலே நான் வந்துகொண்டிருந்த பஸ் அண்ணா 'ஃப்ளை ஓவரிலே' வேகமாக வந்துகொண்டிருந்தபோது, அதனுடைய பிரேக் வேலை செய்ய வில்லை என்று சொல்லி, அந்த வண்டியை நிறுத்த முடியாமல் ஆனந் தியேட்டர்வரை சென்று அது நின்றது. எனக்குத் தெரியும். பஸ்சில் பிரேக் ஃபெய்லூர் ஆனால் முதல் கியர், இரண்டாவது கியர், மூன்றாவது கியர் என்று கியர் போட்டு நிறுத்தலாம். ஆனால் அந்த டிரைவருக்கு அதுகூடத்

தெரியவில்லை. அந்த பஸ் நீண்டதூரம் ஓடி நின்றது. பிரேக் ஃபெய்லூர் ஆனால், எப்படி பஸ்ஸை உடனடியாக நிறுத்துவது என்பதை நம்முடைய ஓட்டுநர்களுக்கு நிச்சயமாகச் சொல்லித்தரவேண்டும்.

என்னுடைய வாழ்க்கையில் நான் எம்.எல்.சி. ஆன பிறகுதான் கப்பலிலே போயிருக்கிறேன். ஆனால் முன்னரே ஆகாய விமானத்திலே போயிருக்கிறேன். கோவையில் இருந்து பம்பாய் வரையில் சென்றிருக்கிறேன். தமிழ் நாட்டிலே இருக்கிற மக்களில் பெரும்பாலோர் கப்பலிலே கூட பிரயாணம் செய்ததில்லை. ஆகவே, சுற்றுலா கப்பல் போல, சென்னை-நாகப்பட்டினம், சென்னை-தூத்துக்குடி, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களது ஊரான நாகர்கோவிலுக்கு—நாகர்கோவிலில் துறைமுகம் இல்லையென்றால்—சென்னை குளச்சலுக்கு செல்வதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி அதற்கான ஒரு கப்பலை நம்முடைய போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தினால், அதைவிட லாபகரமான தொழிலே வேறு இருக்க முடியாது. அந்தமானுக்கெல்லாம் கப்பலில் போய்வருகிற வசதி இருக்கிறது. ஆனால், நம்முடைய நாட்டுக்குள்ளே கப்பலில் போவதற்கான வசதிகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் பேசியதைப் போல கப்பலைக் கண்டு மிரளவேண்டிய தேவையில்லை. இம்மாதிரி ஒரு கப்பல் போக்குவரத்து ஆரம்பித்தால், நஷ்டம் வரும் என்ற கவலையே வேண்டாம். சுற்றுலா போகும் மாணவர்கள் கூட அதைப் பயன்படுத்துவார்கள். தமிழகத்திலே இருக்கும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையே 50 லட்சத்திற்கு மேல் இருக்கும்.

நம்முடைய பஸ்கள் சில ரோடுகளில் போகும்போது சாய்ந்த கோபுரங்கள் போல சாய்ந்துகொண்டும், ஆடிக்கொண்டும் போகின்றன. ஏறுகிறவர்களும் ஒரே பக்கத்தில் ஏறுகிறார்கள். இதுபற்றி முன்பு ஒருதடவை கூட இந்த அவையிலே பேசியிருக்கிறேன். இப்போது, சாய்ந்த அந்த கோபுரங்களில் சில நிமிர்ந்து இருக்கின்றன. ஆனால், இன்னும் முழுவதுமாக நிமிரவில்லை. ஆகவே, சாய்ந்துகொண்டிருக்கும் அந்த மீதியிருக்கும் கோபுரங்களையும் நிமிர்ந்த தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சாலைப் போக்குவரத்திலே, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையை இப்போது அகலப்படுத்துகிறார்கள். சாலையை அகலப்படுத்தும் போது, நடைபாதைக்கு என்று 3 அடி, 4 அடி பாதைதான் விட்டிருக்கிறார்கள்.



அது போதாது. ஆகவே, நடக்கின்றவர்களுக்கு, பெடஸ்டிரியன்களுக்கு வசதியாக இன்னும் கொஞ்சம் அகலமாக நடைபாதை போட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொல்யூஷன் என்ற வகையிலே, காற்றை அசுத்தப்படுத்தும் முறையில், புகையைக் கக்கிக்கொண்டு போகும் லாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்காலத்தைப் பற்றி அதிகமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசினார்கள். அவர் பேசியதில் மிகுந்த பொருத்தம் இருக்கிறது. அவர்களுக்கு பெட்ரோலின் நிலைமை தெரியும் டீசலைப் பற்றித் தெரியும். தமிழகத்தில் இருக்கும் மற்ற யாருக்கும் தெரிந்ததை விட அவர்களுக்குத் தெரியும். எனக்குத் தோன்றுவது எல்லாம் பூந்தமல்லி நெடுஞ்சாலை, அண்ணா சாலை போன்ற பகுதிகளில் எலெக்ட்ரிக் பஸ்கள் விடுவதற்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். [illegible] பற்றிக் கவலைப்பட்டுப் பயனில்லை. நாம் பெட்ரோலின் நிலைமையைப் பார்க்கும்போது, இப்படிச் செய்துதான் தீர வேண்டும். போக்குவரத்துத் துறைக்கு, அமைச்சரவையிலே சிறந்த அமைச்சராகப் பெயர் பெற்ற, எப்போதும் புன்முறுவல் முகத்தைக் கொண்ட திரு. பொன்னையன் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் துறை மேலும் சீரான முறையில், செம்மையாகப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

* திரு. ஆ. நல்லசிவன்: துணைத் தலைவர் அவர்களே, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து கொள்கை விளக்கக் குறிப்பின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முதன்முதலாக இந்தத் துறையின் பொறுப்பை ஏற்று வரும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்தத் துறையின்கீழ் வேலை செய்யும் பத்தாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் நான் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேசியமயமாக்கப்பட்டது எதுவும் உருப்படாது என்று நாட்டிலே ஒரு பிரச்சாரம் நடந்துகொண்டிருக்கும்போது, தேசியமயமாக்கப்பட்ட தொழிலையும் இந்த நாட்டிலே லாபகரமாக நடத்த முடியும் என்று நிரூபிக்கும் வகையில் இந்தத் துறையின் வளர்ச்சி அமைந்திருப்பது கண்டு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, இப்போது 53 சதவிகிதம் தான் தேசியமயமாக்கப்பட்டிருக்கிறது என்றும், 47 சதவிகிதம் தனியாரிடம் இருக்கிறது என்றும் இந்த நிலைமை இப்படியே நீடித்திருக்க வேண்டுமென்று அப்போதுதான் ஒரு காம்பெட்டிஷன் (போட்டி) இருக்கும் என்றும் குறிப்பிட்டார்கள். ஆனால் 53 சதவிகிதம் ரூட்களை தேசியமயமாக்கி

(திரு. ஆ. நல்லசிவன்) [1979 ஏப்ரல் 19

விருப்பதைப் பாராட்டியிருக்கிறார். 47 சதவிகிதத்தையும் அப்படியே விட்டு வையுங்கள், 53 சதவிகிதம் அரசிடம் இருந்தால் போதும் என்று கூறுகிறார்கள். நான் கூறுகிறேன். தேசியமயமாக்குவதில் எந்தவிதமான தயக்கமும் தேவையில்லை. குறிப்பாக தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்து லாபகரமாக ஓட முடியும் என்று நிரூபித்துக்காட்டிய பின்னாலே, லாபகரமாக நடத்துவதற்குத் தேவைப்படும் 'எக்ஸ்பர்ட்டைஸ்' (திறப்புத்திறமை) இந்த டிபார்ட்மென்டுக்கு இருக்கிறது, திறமை இந்த இலாக்காவுக்கு இருக்கிறது என்று நிரூபித்துக் காட்டிய பின்னாலே, ஏன் நாம் எல்லாவற்றையும் தேசியமயமாக்கக்கூடாது என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். 47 சதவிகிதத்தைக் கொண்ட தனியார் பயணிப் பேருந்துகள் 4,698-ம் அரசுத் துறையில் 5,316-ம் இருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறது. ஒரு பஸ் வைத்திருப்பவர்கள் 800 பேர்கள் இருக்கிறார்கள். இரண்டு பஸ் வைத்திருப்பவர்கள் 400 பேர் இருக்கிறார்கள். இவர்களை தற்போதைக்கு விட்டுவையுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, தனியார் பஸ்கள் 47 சதவிகிதத்தையும் எடுக்கக்கூடாது என்றும், அவர்களை அப்படியே வைத்திருந்து 'கோ-எக்ஸிஸ்டென்ஸ்' பண்ண வேண்டும் என்றும் சொன்னார்கள். நான் சொல்லுகிறேன், கிராமப்புறங்களிலே சோதனை செய்து பார்க்க வேண்டிய சாத்தியப்பாடுகள் நிறைய இருக்கின்றன. ஒரு பஸ், இரண்டு பஸ் வைத்திருப்பவர்களை அங்கே அனுப்பலாம். அவர்களிடம் நிறைய பணம் இருக்கின்றது. கிராமப்புறங்களிலே புதிதாக ஏற்படுத்தப்படும் ரூட்களில் அவர்களை விட்டால், அவர்களால் போக்குவரத்தை லாபகரமாக நடத்த முடியும். ஏற்கெனவே ஸ்திரப்படுத்தப்பட்டுவிட்ட ரூட்களிலே அவர்களை அனுமதிக்கக்கூடாது. அரசாங்கத்தின் கொள்கையைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். எந்தவிதமான தயக்கமும் காட்டக்கூடாது. ஏற்கெனவே, கொடுக்கப்பட்டிருக்கின்ற லைசென்ஸ்கள் முடிவடைந்த பிறகு இந்த அரசு என்ன செய்யப் போகிறது? அதைத் தெளிவாக்க வேண்டும். ஏனென்றால் அப்போது நிறைய நிர்ப்பந்தம் வரும். இல்லை, அதை நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் வரும். ஆகவே, அந்த நிலைக்கு இடம் கொடுக்காமல் அரசின் கொள்கை என்ன என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். அண்ணா அவர்களுடைய பெயரை மட்டும் சொன்னால் போதாது. தேசியமயமாக்கப்பட்ட பஸ்கள் எல்லாம் நன்றாக ஓடும், லாபம் சம்பாதிக்கும் என்ற நிலைமை வந்த பிறகு, ஏன் இந்த அரசுக்குத் தயக்கம்? ஆகவே, இந்தப் பிரச்சினையில் இந்த அரசின் கொள்கையைத் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1979 ஏப்ரல் 19] (திரு. ஆ. நல்லசிவன்)

அடுத்து, 'ஆம்னி பஸ்' பற்றிய பிரச்சினை. அந்த விவகாரம் கோர்ட்டிலே இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் தெரிவித்தார்கள். எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு போட்டிபோட்டுக்கொண்டு அவர்கள் சர்வீஸ் நடத்துகிறார்கள். அதை நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதிலே என்ன இடைஞ்சல் இருக்கிறது? அதைக் களைய என்ன முயற்சிகளை இந்த அரசு எடுத்திருக்கிறது? இப்போது மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கின்ற ஒரு பிரயாண ஆர்வத்தை இப்படி அவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, இந்த 'ஆம்னி பஸ்' விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஸ்களின் மாடல் அடிக்கடி மாற்றப்படுகிறது. முதலில் பென்ஸ் மாடல் இருந்தது, பிறகு லேலண்ட் வந்தது. இப்போது திரும்பவும் பென்ஸ்-க்கு மாற்றியிருக்கிறார்கள். மாடல் மாற்றுவதைப்பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. இந்த நவீன வளர்ச்சி வேகத்திலே பலவிதமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனால் அதிலே என்ன சிக்கல் ஏற்படுகின்றது என்றால், அதிக விலைக்கு புதிய ஸ்பேர் பார்ட்ஸ்களை தேவைக்கு அதிகமாக வாங்குவதும் புதிய மாடல் பஸ்கள் வரும்போது பழைய ஸ்பேர் பார்ட்ஸ்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பதுமான நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்தமாதிரி ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கும்போது மிகவும் எச்சரிக்கையாக, கவனமாக போதிய அளவு மட்டும் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-00)

இதுவரையில் பேசியவர்கள் எல்லோரும் இத்துறையில் உள்ள நல்லவற்றைப்பற்றியே பேசினார்கள். நான் போக்குவரத்துத் துறையில் தொழிலாளர்கள் சம்பந்தமாக உள்ள 'இருண்ட பகுதியைக் குறிப்பிட விரும்புகிறேன். எல்லாவற்றையும்பற்றியும் குறிப்பிடவில்லை என்றாலும், குறிப்பாக பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் போன்றவற்றில், சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பல்லவன் போக்குவரத்துக் கழகங்களிலிருந்து விலக்கி நிர்வாகத்தை 'ஜெனரல் பஸ்ஸ்'-க்கு மாற்றிக் கொண்டு வரும்போது, தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகள் அனைத்தையும் ஏற்பாடு செய்து விட்ட பிறகே கொண்டு வரவேண்டும் என்று அன்றே சொன்னேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 1975-76-க்கு போனஸ் சட்டப்படி பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 4 சதவிகித போனஸ் கூட தரப்படவில்லை. இந்தப் போக்குவரத்துக் கழகத்தைப் போன்று இன்னொரு பொதுத் துறையைச் சார்ந்த எலெக்ட்ரிசிட்டி போர்டில்கூட

ஆரம்பத்தில் 4 சதவித போனஸ் கொடுக்கப்படவில்லை. ஆனால் நெருக்கடி கால நிலைமையில் போனஸைக் குறைத்தது சரியில்லை என்று போராடிய போது, மின் வாரியத்தில் மட்டும் 4 சதவித போனஸைத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தார்கள். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், அங்கு தொழிலாளர்களுக்கு இந்த 4 சதவித போனஸ் கொடுக்கப்படவில்லை. இப்போது உயர் அதிகாரிகள் கொடுக்கலாம் என்று அபிப்பிராயம் தெரிவித்தபோதிலும், 'பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஓயாமல் தொந்தரவு கொடுக்கிறார்கள், எனவே அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது' என்று அமைச்சகத்தில் இருப்பவர்கள் சொல்லியிருப்பதாக நான் அறிகிறேன். மின் வாரியத்தில் கொடுக்கப்படும்போது, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் ஏன் கொடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். நிறைய லாபம் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார்கள் பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் என்று அறிக்கையிலே ஒப்புக் கொண்டீர்கள். ஆனால் அவர்களுக்கு போனஸ் தராமல் மறுக்கிறீர்களே, அது ஏன் என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பஞ்சப்படி பிரச்சினையைப் பற்றியும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 11—5—1978-ல் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதாவது 320 புள்ளிகளுக்கு மேல் போகும் ஒவ்வொரு விலைவாசி உயர்வுப் புள்ளிக்கும் பஞ்சப்படியில் 90 பைசா உயர்வு பஞ்சப்படியாகக் கொடுக்க வேண்டுமென்பது அந்த ஒப்பந்தம். 1—9—1977 முதல் அது அமுலுக்கு வரவேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. 31—12—1978 வரை 16 மாத காலத்திற்கு 320 புள்ளிகளுக்கு மேல் விலைவாசி உயர்வுப் புள்ளி போயிருக்கிறது. என்றபோதிலும் அதற்குரிய பஞ்சப்படி உயர்வு கொடுக்கப்படவில்லை. 16 மாதத்திற்கும் சுமார் ரூ. 24 வரை பஞ்சப்படி உயர்வு தரப்பட வேண்டும். அது இதுவரை தரப்படவில்லை என்பதோடு, இதைப்பற்றி மேல் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அந்த வழக்கு ஏப்ரல் 30 ஆம் தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. நான் என்ன கேட்கிறேன் என்றால், ஒப்பந்தப்படி பணத்தை ஏன் தர மறுக்கிறீர்கள் என்பதுதான். அது மாதாந்திரமாக, அல்லது குவார்ட்டர்லி அல்லது ஆண்டிற்கு என்ற அடிப்படையில் கூறப்படவில்லை என்றாலும், 320 புள்ளிக்கு மேல் கடந்த 16 மாதங்களுக்கு மேல் போயிருப்பதால், அதற்குரிய பஞ்சப்படி உயர்வைக் கொடுக்க வேண்டும். அரசாங்கமே தனது துறையில் ஒப்பந்தப்படி இதைக் கொடுக்கவில்லை என்றால் வேறு நிறுவனங்களைப் பார்த்து அரசாங்கம் ஒப்பந்தத்தை மதிக்க வேண்டும் என்று எப்படிச் சொல்ல முடியும்? 1979 ஜனவரி 1-ம் தேதியிலிருந்து 3 புள்ளி



களுக்கு ரூ. 2.70 காசு அதிகமாகக் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது என்ன அடிப்படையில் என்பது தெரியவில்லை. ஆனால் 16 மாதத்திற்குக் கொடுக்க வேண்டிய ஒப்பந்தப்படியான பஞ்சப்படி உயர்வைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, இப்படிக் கொடுக்காமலிருப்பதற்கு யார் காரணம் என்பதையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தினக்கூலிப் பிரச்சினை குறித்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ஏற்கெனவே ஒரு பழக்கம் இருந்து வந்தது. அதாவது தினக் கூலித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் 240 நாட்களுக்குத் தினக் கூலித் தொழிலாளர்களாக இருந்தால், பிறகு அவர்களை நிரந்தரத் தொழிலாளிகளாக எடுக்கும் முறை இருந்து வந்தது. தினக்கூலி அடிப்படையில் நாளொன்றுக்கு டிரைவருக்கு ரூ. 10-65 கூலியும் கண்டக்டருக்கு ரூ. 10-50 கூலியும் கொடுக்கப்பட்டது. 240 நாள் முடிந்த பிறகு, இவர்களுக்கு நிரந்தரமான டிரைவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் கொடுக்கப்படும் சம்பள விகிதம் கொடுக்கப்பட்டது. இப்போது புதிதாக 'கேஷுவல் லேபர் முறை' என்று ஒன்றை ஏற்படுத்தி அதனடிப்படையில் ஒவ்வொரு தொழிலாளியும் 6 மாத காலத்திற்கு கேஷுவல் தொழிலாளியாகப் பணியாற்ற வேண்டுமென்றும் அந்தக் காலத்திற்கு நாளொன்றுக்கு ரூ. 9 தான் கூலியாகக் கொடுக்கப்படும் என்றும் வைத்திருக்கிறார்கள். இப்படி 6 மாத காலத்திற்கு கேஷுவல் தொழிலாளியாக நாளொன்றுக்கு 9 ரூபாய் கூலி பெற்று வேலை செய்த பிறகு, 240 நாட்களுக்குத் தொடர்ந்து தினக்கூலியாக வேலை செய்தால்தான், நிரந்தரப்படுத்துவது என்ற புதிய முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த முறை மாற்றத்திற்கு என்ன காரணம்? குறைந்த கூலியில் மேலும் 6 மாதங்களுக்குக் காண்டிராக்டுதானே நோக்கம்? 11—5—1978-ல் ஒரு ஒப்பந்தம் அமலிலிருக்கும் நிலையில் ஒப்பந்தப்படி தொழிற்சங்கங்களைக் கலந்தாலோசிக்காமல் புதிதாக கேஷுவல் லேபர் முறையைக் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதையும் கொண்டுவந்து, இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள் 55 வயதில் ஓய்வுபெறுவது என்பதை மாற்றி 58 வரை பணியாற்றலாம் என்றும் ஓய்வு பெறும் வயதை 58 ஆக ஆக்கலாம் என்றும் வருடத்திற்கு 10 நாள் கேஷுவல் லீவு தொழிலாளிக்குக் கொடுக்க வேண்டுமென்றும் லேபர் கோர்ட் 'அவார்டு' செய்து இருக்கிறது. அதன் மீது இப்போது நிர்வாகம் ஹைகோர்ட்டிற்குப் போயிருப்பதாக நான் அறிகிறேன். நிர்வாகத்தின் சட்டத் திறமையை தொழிலாளர்களிடம்தான்

காட்ட வேண்டுமா? இதை ஏற்கெனவே லேபர் கமிஷனர் சர்டிபை செய்திருக்கிறார். அதை லேபர் கோர்ட்டும் சர்டிபை செய்திருக்கிறது. இதை எதிர்த்து உயர்நீதி மன்றத்திற்குப் போவதற்கு என்ன அவசியம்? ஐ.ஏ.எஸ். அதிகாரியின் சட்ட ஞானம் தொழிலாளர்களுக்கு எதிராகத்தான் பயன்படுத்தப்பட வேண்டுமா? அவர்களுடைய சட்ட ஞானம் தேவைப்படுகிற இடங்களில் அதைச் சரிவரப் பயன்படுத்தினால் நல்லது. அதை விட்டுவிட்டு தொழிலாளர்களுக்கு விரோதமாக அதைப் பயன்படுத்துவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தப் பிரச்சினை தற்போது உயர்நீதி மன்றத்தில் இருக்கிறது. உயர்நீதிமன்றத்தில் ரிட் போட்டதால், இந்தப் பிரச்சினையும் நிர்வாகத்தால் முடக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

விபத்தில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்மீது வழக்குத் தொடரப்பட்டு, வழக்கு மன்றத்தில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும், ஃபேட்டல் ஆக்சிடென்ட் ஆகிவிட்டது என்றால், அதற்காக நிர்வாகத்தில் தனியாக 'டொமெஸ்டிக் என்கொயரி' என்று ஒன்றை நடத்தி தொழிலாளியை வீட்டுக்கு அனுப்பும் முறையைக் கடைப்பிடித்து வருகிறார்கள். இது எப்படி சரி என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் இதையும் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே ஆக்சிடென்ட்டில் சம்பந்தப்பட்டு அதில் இறந்து போனவர்களின் வாரிசுகளுக்கு 'மோட்டார் ஆக்சிடென்ட் கிளைம்ஸ் டிரிப்யூனலில்' என்ன நஷ்டஈடு கொடுக்கிறார்களோ அதில் 10 சதவிதம் தொழிலாளியின் சம்பளத்திலிருந்து பிடிக்கப்படுகிறது. 'தேர்டு பார்ட்டி காம்பன்சேஷன்'-ல் தொழிலாளியின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்வது சரியோ எப்படி நியாயம் என்று தெரியவில்லை. ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டு கார்ப்பரேஷனில் 5 சதவிதமாக இருந்தது பி.டி.சி.-யில் 10 சதவிதமாக்கப்பட்டிருக்கிறது. இப்படித் தொழிலாளியின் சம்பளத்தில் பிடித்தம் செய்தால், அவர்களால் தாக்குப் பிடிக்க முடியுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். ஸ்டாண்டிங் ஆர்டரிலும் அப்படி விதி எதுவுமில்லை. எனவே இந்த நிலைமையையும் அமைச்சர் அவர்கள் பரிசீலித்துப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இறுதியாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு முக்கியமான ஒரு பிரச்சினையைக் கொண்டுவர விரும்புகிறேன். சென்னையில் நடைபெற்ற சி.ஐ.டி.யு. மாநாட்டிற்காக நாங்கள் பல மாவட்டங்களிலிருந்தும் தொழிலாளர்கள் வருவதற்கு உதவியாக இருக்கும்பொருட்டு, கார்ப்பரேஷன் பேருந்துகளை ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால் கடைசி நேரத்தில் மூன்று போக்குவரத்து நிறுவனங்கள், அதாவது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்குவரத்துக் கழகம் மற்றும் அண்ணா போக்குவரத்துக் கழகம் ஆகியவைகள் பஸ்களைக் கொடுப்பதற்கு மறுத்து விட்டார்கள். இதற்கு யார் பொறுப்பு? 'ஓவர்-ஜெலஸ் அபிசியல்ஸ்' இது போன்றவைகளுக்குக் காரணமாக இருக்கலாம். இப்படி சி.ஐ.டி.யு. மாநாட்டிற்கு மட்டும் பஸ்கள் கிடையாது என்று சொன்னதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும், சில அதிகாரிகள் "more loyal than the King" என்று இருக்கிறார்கள். இது அவர்கள் செய்த காரியமாக இருக்கலாம் என்றாலும், அமைச்சர் அவர்கள் இதை விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைச் சொல்லும்போது, எனக்கு இன்னொரு சந்தேகமும் ஏற்படுகிறது. இந்த மாநாட்டிற்கு தொழிலாளத் தோழர்களை ஏற்றிவந்த லாரிகள் சென்னையை அடுத்த ஆலந்தூருக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டு, அந்த லாரி டிரைவர்கள் காவல் துறையினரால் சார்ஜ்ஷீட் செய்யப்பட்டிருக்கிறார்கள். லாரிகளில் யாரையும் ஏற்றிச் செல்லக்கூடாது என்கிற சட்டம் அமுலில் இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் அந்தச் சட்டம் அமுலில் இருந்த போதே கடந்த பிப்ரவரி 3 ஆம் தேதி அண்ணாத்துரையின் பிறந்தநாள் விழா நடத்தப் பட்டபோதும், அதைப் போலவே பெரியார் அவர்களின் பிறந்த நாள் விழா நெல்லையில் நடத்தப்பட்டபோதும் ஆயிரக்கணக்கான அ.தி.மு.க. தொண்டர்கள் லாரிகளில் கொண்டு வரப்பட்டார்களே, அப்போது ஏன் அந்த லாரி டிரைவர்கள் 'சார்ஜ் ஷீட்' செய்யப்படவில்லை என்பதைத் நான் கேட்க விரும்புகிறேன். அப்படி அந்த இரண்டு நேரங்களில் மட்டும் எப்படி இது அனுமதிக்கப்பட்டது? எனவேதான் இவைகளெல்லாம் சி.ஐ.டி.யு. மாநாட்டிற்காக மட்டும்தான் செய்யப்படுகின்றனவோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. சட்டப்பேரவையின் உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள்கூட ஐ.ஜி. அவர்களிடம் கேட்டார். அதற்குப் பதில் சொன்ன ஐ.ஜி. அவர்கள் சட்டம் அமுலில் இருப்பதாகவும் அதை காவல் துறை கடைப்பிடிப்பதாகவும் குறிப்பிட்டார்கள். "அப்படியானால், பிப்ரவரி 3 ஆம் தேதி நீங்கள் சென்னையில்தானே இருந்தீர்கள். அப்போது மட்டும் இந்தச் சட்டம் அமுல்படுத்தாததற்கு என்ன காரணம்?" என்று திரு. கோவிந்தராஜன் கேட்டதற்கு, அவர் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், ஒரு சட்டத்தை அமுல் படுத்துவது என்றால், அதில் பாரபட்சம் காட்டுவது சரியல்ல. இப்படி பாரபட்சம் காட்டும் வகையில்தான் எங்கள் மாவட்டத்திற்கு பஸ்களைத் தருவதற்கு மறுத்திருப்பார்களோ என்ற சந்தேகம் எனக்கு வருகிறது. எனவே இதற்கு யார் பொறுப்பு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட விஷயங்களில் அரசாங்கம் பாரபட்சம் காட்டுவது சரியல்ல என்பதை மட்டும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

அடுத்து, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 300 பேர்கள்—டிரைவர்கள், கண்டக்டர்கள், டெக்னிசியன்கள்—தினமும் அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டரில் கையெழுத்து மட்டும் போட்டுவிட்டு எந்த வேலையும் செய்யாமல் எங்கெங்கோ சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களெல்லாம் ஆளுங்கட்சியைச் சார்ந்த தொழிற் சங்க உறுப்பினர்கள். இது அமைச்சர்களுக்குத் தெரிந்து நடக்கிறதோ தெரியாமல் நடக்கிறதோ எனக்குத் தெரியாது. இவர்களுக்கு என்ன வேலை என்றால், போட்டித் தொழிற் சங்கங்களை வளரவிடாமல் பார்த்துக்கொள்வதாகும். ஆளும் கட்சிக்குச் சாதகமாக, போராட்டமே உருவாகாமல் நிலைமைகள் இருக்க வேண்டுமென்பதற்காக இப்படிச் செய்யப்படுகிறதோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. இந்தக் குறிப்பிட்ட 300 பேருக்கும் எந்த வேலையும் கிடையாது. தொழிற் சங்க வேலையைத்தான் தினமும் செய்து கொண்டிருக்கிறார்கள். இல்லையென்றால், மற்ற தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இது தான் நடக்கிறது. அமைச்சர் அவர்கள் இதை நேரடியாக விசாரிப்பதனால், நான் லிஸ்ட் கொடுக்கவே தயாராக இருக்கிறேன். அந்த லிஸ்ட்டைப் பார்த்து, அவர்களெல்லாம் எங்கே வேலை செய்கிறார்கள் என்று விசாரித்துப் பாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-10.)

அப்படி நடக்கிறதென்று தி.மு.க. ஆட்சியிருந்தபோதே, நாங்கள் குற்றச்சாட்டைச் சொன்னோம். அப்போது எதிர்க்கட்சியாக இருந்த இன்றைய ஆளும் கட்சிக்காரர்களும் அதைப்பற்றி சட்டசபையிலே பேசியதுண்டு. ஆனால் இன்றைக்கு அவர்களே ஆரம்பிக்கிறார்கள் என்ற நிலை வரும்போது, அந்தக் குற்றச்சாட்டை நான் மீண்டும் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். இது சரிதானா என்று பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச அனுமதி தந்ததற்காக துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.



* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்தைப் பொறுத்த வரையிலே, நான் இங்கே மனம் திறந்து பாராட்டுகிற அளவிலே வந்திருக்கிறேன். இன்றைக்கு இந்தத் துறை பல்வேறு அனுபவங்களின் காரணமாக, புதிய நம்பிக்கையோடு சிறப்பாகச் செயல்படுகிற நிலை உருவாகியிருப்பதற்காக என் பாராட்டையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொதுவாகவுள்ள குற்றச்சாட்டு நாட்டுடைமையாக்கப்பட்ட எந்தத் தொழிலும் நஷ்டத்திலேதான் நடைபெறுகிறது என்பது. நாட்டுடைமையாக்கும் போது மிகச் சாதாரணமாக திறமையற்றதாக அமைந்துவிடுகிறது என்ற நிலைதான் எல்லாத் துறைகளிலும் இருக்கிறது. ஆனால் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளைப் பொறுத்த வரையிலே, இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, தமிழகத்திலே இது நல்ல முறையிலே செயல்படுகிறது என்பதைக் கொஞ்சம் பெருமிதத்தோடு சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. இதிலே பல போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்திலே நடைபெற்றுக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். சென்னை நகரத்தைப் பொறுத்த வரையிலே போக்குவரத்துக் கழகம் நஷ்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், அதையும் கூட மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகவே நான் கருதுகிறேன். காரணம் உலகெங்கிலும், எந்த நாட்டிலும் இப்படித்தான் நிலையிருக்கிறது. நாட்டுடைமையாக்கப்படுவதன் நோக்கமே நாட்டு மக்களுக்கு அதிக வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதுதான். இலாப நோக்கோடு, வியாபார ரீதியில் அணுகுவது முறையல்ல. அந்தத் துறையிலே நஷ்டம் வருகிறதென்றால், வேறு துறைகளிலே லாபமாகத் தருகிறது. ஆகவே இந்த நஷ்டம் குறைவாகவோ அல்லது நிரந்தரமாக இருந்தாலோ அதிலே தவறில்லை. இப்படி நஷ்டம் வருகிறதே என்ற காரணத்திற்காக அமைச்சர் அவர்கள் கட்டணத்தை உயர்த்த வேண்டியதில்லை. ஏற்பட்ட நஷ்டத்திற்குப் பதில் சொல்லியாக வேண்டுமே என்பதற்காக அந்த நிலையை மாற்றியமைக்க வேண்டிய முறையில் அமைச்சர் அவர்கள் அணுகத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

புதிய பேருந்துகள் பல வழித்தடங்களில் விடப்பட்டிருப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டினார்கள். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக சென்னை முழுவதற்கும் புதிய பஸ்களை விட்டிருப்பதும், மாநிலம் முழுவதற்கும் புதிய வழித்தடங்களில் பஸ்களை விடத் துவங்கியிருப்பதும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். சென்னையிலே நெரிசலைக் குறைக்க ஸ்பெஷல் பஸ் விடுகிற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தெரி

குறைக்க ஸ்பெஷல் பஸ்களை விடுகிற நேரத்தில் அதனுடைய கட்டணத்தை இரண்டரை மடங்கு உயர்த்த வேண்டிய அவசியம் இருப்பதையும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஏற்கெனவே இதுமாதிரி இரண்டு மடங்கு கட்டணம் வைத்து எப்படிச் செயல்படுகிறது என்று முயற்சி செய்து பார்த்தோம். இரண்டு மடங்கு கட்டணம் என்பது, சென்னை நகரத்திலே வாழ்கிற நடுத்தர வர்க்கத்தினருக்குத் தாங்க முடியாத பளுவாக அமைந்து விடுகிறது என்ற காரணத்தால், அது வெற்றி பெறவில்லை என்பதைச் சொல்லுகிறேன். ஆகவே இரண்டரை மடங்கு கட்டணத்திற்குப் பதிலாக ஒன்றரை மடங்கு கட்டணமே போதும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இரண்டு வகையான பஸ்களுக்கும் ஒரே கட்டணம் இருந்தால், மக்கள் முண்டியடித்துக் கொண்டு வருவார்கள். ஆகவே ஸ்பெஷல் பஸ்களுக்கு உயர்ந்த கட்டணம் இருப்பதுதான் சரியென்றாலும், அது ஒன்றரை மடங்குக்கு மேல் இருக்கத் தேவையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள், அவருக்கே உரிய முறையில் மேலும் பேருந்துகளை தேசியமயமாக்குவது தேவையற்றது என்பதை மிக அழகாக விளக்கிச் சொன்னார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், அவருடைய கருத்திலிருந்து மிகப் பெரிய அளவுக்கு மாறுபடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பேருந்துகளை தேசியமயமாக்குவதை முழுமையாகச் செய்ய வேண்டும். எவ்வளவு சீக்கிரம் தேசியமயமாக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு இந்த நாட்டுக்கும் நல்லது, மக்களுக்கும் நல்லது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நாட்டிலேயுள்ள பேருந்துகள் இத்தனை காலத்திற்குள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று ஒரு குறிப்பிட்ட காலத்தைக் குறித்திருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் குறித்த அந்தக் காலத்திற்குள் தமிழ் நாட்டில் முழுவதுமாகப் பேருந்துகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

பேருந்துகளைப் பொறுத்த வரையிலே, தனியார் துறையினர் தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளுக்குப் போட்டியாக அமைந்துவிடுகிற நிலையை இன்று பார்க்கிறோம். அதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. பல சட்டங்களை அமுல்படுத்தாமல் தனியார் செயல்படுகிறார்கள். அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். சென்னையில் உள்ள பல்லவன் விரைவுப் பேருந்துப் போக்குவரத்தில் ஓவர்லோட் இருப்பதாகச் சொல்ல



முடியாது. தனியார் துறையில் உள்ள பஸ்களில் எப்படி ஓவர்லோடை அதிகாரிகள் அனுமதிக்கிறார்கள் என்று தெரியவில்லை. அந்த அளவுக்கு அதிகாரிகள் கூட தங்களுடைய பணிகளை ஆற்ற முடியாத அளவுக்குத் தடைப்படுத்துகிற நிலை இந்தப் பேருந்துத் தொழிலின் மூலமாக பரவலாகிக் கொண்டிருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அதைத் திரும்பத் திரும்ப சொல்ல வேண்டிய அவசியமில்லை. பிரேக் இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் இன்றைக்கு எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை சட்ட மன்றப் பேரவையிலே பல முறை பல கட்சிக்காரர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எப்படி இந்த நிலை வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட பிறகு, அதை எந்த அளவுக்குக் கேவலப்படுத்துகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள் "ஆம்னி" பஸ்களை ஓட்டுபவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட சில நாட்களுக்கு முன்பு இங்கே சொல்லும்போது, அவர்கள் எப்படி சட்டத்தை மீறுகிறார்கள் என்பதைத் தெளிவாக்கினார்கள். அவர்கள் சட்டத்திற்குட்பட்டுச் செயல்படாத காரணத்தாலே, சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறார்கள் என்பதையும் அறிவித்தார்கள். இவ்வளவு அறிவிப்புகள் வந்ததற்குப் பிறகும், நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பிறகும், அவர்களுடைய போக்கு இன்னும் கொஞ்சம்கூட மாறவில்லை. ஒரு ஆட்சி இருப்பதாகவே கருதாத நிலையில் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தேசியமயமாக்குகிற கொள்கையைப் பொறுத்த வரையில், கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்த பிறகுதான், எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே இரண்டாவது பக்கத்தில், "போக்குவரத்து வழித் தடங்கள் முழுவதும் நாட்டுடைமையாக்கப்படும் வரையில் இன்னும் சிறிது காலத்திற்குத் தனியார் துறையும், அரசுத் துறையும், பேருந்துப் பணியினை நடத்துவதற்கான பகுதிகளை வரையறுத்து தேவையற்ற போட்டி மனப்பான்மையைத் தவிர்க்க வேண்டியது அவசியமாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் ஒன்றைப் புரிந்துகொள்ள முடிகிறது.

(பிற்பகல் 5-20)

தனியார் துறையினரை சில இடங்களிலே தடுக்க முடியவில்லை. அவர்களை அனுமதிக்க வேண்டியதாக இருக்கிறது என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த, வரையிலே, ஏற்கெனவே நாட்டுடைமையாக்கப்பட்ட வழித்தடங்களில் இன்றைக்கு சென்னையிலிருந்து பாண்டிச்

சேரிக்கு, சென்னையிலிருந்து கடலூருக்கு, சென்னையிலிருந்து திருச்சிக்கு, செங்கற்பட்டுக்கு அல்லது காஞ்சிபுரத்திற்கு என்ற வழியிலே எல்லாம் தனியார் துறை பேருந்துகள் நிரந்தரமாக ஓடிக்கொண்டிருப்பதற்கான அவசியமே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் துறைகளுக்கு இந்தப் பகுதிகளை ஒதுக்குவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. இந்தக் கொள்கையின் அடிப்படையில் அதற்கு அனுமதி வழங்குகின்ற நிலை வரும்போது, அதுவே தேசியமயமாக்கப்பட்டதிலேயே பெரும் முளையாக இருந்து தனியார் துறை பெரிதாக முளைத்துவிடுகின்ற நிலைக்கு வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைத் தொடர்ந்து, "எனவே போக்கு வரத்து வழித்தடங்களை ஒட்டு மொத்தமாக நாட்டுடைமையாக்குவது பற்றி நினைப்பதற்கு முன்பு தற்போதைய வழித் தடங்களைச் சீரமைப்பதும் திட்டமிட்டு புதிய வழித் தடங்களை ஏற்படுத்துவதும் முற்றிலும் அவசியம்" என்று சொல்லியிருக்கிறார்கள். புதிய வழித்தடங்கள் என்பது எவை? புதிய வழித்தடங்கள் என்பது ஏற்கெனவே தேசியமயமாக்கப்பட்ட பகுதிகளா அல்லது மற்ற பாதைகளா என்பது தெரியவில்லை. புதிதாக பஸ்களுக்கு பெர்மிட் கொடுக்கும்போது, புதிய வழித்தடங்களாக வருகின்ற பாதைகளா அல்லது ஏற்கெனவே நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் ஓடுகின்ற பாதைகளா அல்லது ஓடாத பாதைகளா என்று தெரியவில்லை. பஸ்களுக்கு பெர்மிட், உரிமம் வழங்குகின்றபோது அது புதிய வழித்தடம் என்று அறிவிக்கப்படுகிறதா? எது புதிய வழித்தடம் என்பதைப்பற்றி விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விளக்கக்குறிப்பின் மூலமாக இந்த அரசின் கொள்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பஸ் ரூட்களைப் பொறுத்த வரையில், புதிய வழித்தடங்கள் கொடுப்பதுபற்றி புதுப்பித்து இருக்கின்ற சட்ட முறையை அறிவித்திருக்கிறார்கள். இந்த பஸ் ரூட்டுகள் வழங்குவதிலே உள்ள பெரும் ஊழல்களைப் போல, பெரும் ஏமாற்றத்தைப் போல வேறு எதிலும் இருக்க முடியாது. நாம் இன்றைக்கு பாராட்டுகின்ற வழித் தடங்களுக்கு லைசென்ஸ் வழங்கும் முறையை சுலபமாக மாற்றியமைத்திருக்கிறார்கள். இன்றைக்கும் அது இருந்துகொண்டிருக்கிறது. சில அடிப்படையான தேவைகளுக்கு, அவசியம் என்பவைகளுக்குக்கூட மாற்று முறைகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டத்தின் மூலம் அது எப்படி மாற்றப்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. அதன்



மூலம் அந்தக் குறைகளை நீக்குவதற்கு இடமிருக்கிறதா? பேருந்து ரூட்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கு முன் மனுப் போடுகின்றவர்களிடம் "உங்களுக்கு அனுபவம் உண்டா?" என்று கேட்கிறார்கள். அவர்களிடம் என்ன கேட்க வேண்டும்? அவர்கள் அந்தத் தொழிலுக்கு வருகின்றபோது, அதை நடத்துவதற்கான வாய்ப்பு வசதிகள் இருக்கின்றனவா என்று கேட்பதுதான் நல்லது. அவர்கள் எத்தனை ஆண்டுக் காலமாக 'ஒர்க்ஷாப்' வைத்திருக்கிறார்கள் என்று கேட்பதில்லை. அவர்களுக்கு அந்தத் தொழிலை நடத்த வாய்ப்பு இருக்கிறதா, தகுதி இருக்கிறதா என்று கேட்க வேண்டும். அப்படி லைசென்ஸ் கொடுத்த பிறகும், அவர்கள் சரியாக அந்தத் தொழிலை நடத்தவில்லை என்றால், அதை 'கான்சல்' செய்ய அதிகாரம் இருக்கிறது. இதற்கு மாறாக, இதிலே லஞ்சம் இருக்கிறது, யார் யாருக்கு சிபாரிசு செய்வது என்ற நிலை இருக்கிறது. இந்தமாதிரி பல ஆண்டுகாலமாகவே இருந்துகொண்டிருக்கிறது. இந்த நடைமுறையை மாற்ற வேண்டும். இதற்கு எவ்வளவு ரூபாய் கட்ட வேண்டும் என்று தெரியாதவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அதற்கு எப்படி அப்ளிகேஷன் போடுவது என்பதுகூட தெரியாமல் பலர் இருக்கிறார்கள். இதிலே ஊறியிருப்பவர்களுக்குத்தான் இதைப்பற்றித் தெரியும் என்ற நிலை இருக்கிறது. ஒரு நூறு ரூபாய் கட்டினால்தான் அது வரும் என்ற நிலை இருக்கிறது. உரிமம் கொடுப்பதற்கு அந்த மீட்டிங் எப்படி நடக்கிறது? யாருக்காக அந்த மீட்டிங் நடக்கிறது? சில பேர்கள் அதற்கு அப்ளிகேஷன் போடவில்லை என்பதற்காக கூட்டம் ஒத்தி வைக்கப்படுகிறது, இப்படிப்பட்ட ஊழல்கள் எல்லாம் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக என்று ஆர்.டி.ஏ. மீட்டிங் நடக்கிறது. அதற்கு பேருந்துத் துறையிலிருந்து ஒருவரைப் போடுவது, இவர்கள் எல்லாம் அந்த மீட்டிங்கிலே உட்கார்ந்து கொண்டு பேசுவது, அதைப்பற்றிப் பரிசீலனை செய்வது, பிறகு லைசென்ஸ் கொடுப்பது என்றெல்லாம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் இந்தக் குறைகளை எல்லாம் நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அங்கத்தினர் அவர்கள் விரைவாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Thiru K. RAMAMOORTHI: I will co-operate. But you may also please understand my difficulty.

Mr. DEPUTY CHAIRMAN: I fully understand that. But there is another Policy Note. Unless hon. Members co-operate, that may have to be taken up only tomorrow.

திரு. க. இராமமூர்த்தி: This is a vital department in which we are all interested. பல்லவன் போக்குவரத்தைப் பொறுத்த வரையில், பல காலமாக ஒரு வாய்மொழி சொல்வார்கள். 'பல்லவா தள்ளவா' என்று இன்றைக்கு அப்படித் தள்ள வேண்டிய நிலையிலே பேருந்துகள் இல்லை என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அந்த அளவுக்கு இன்றைக்கு அந்த நிறுவனத்தை மாற்றியமைத்திருப்பதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விரைவுப் பேருந்துகளைப் பொறுத்த வரையிலே, வேைகளில் பிரயாணிகளுக்கு நன்மைகளை அதிகமாக வசதிகளைச் செய்ய அரசு உத்தேசித்திருக்கிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். எக்ஸ்பிரஸ் பஸ்ஸைப் பொறுத்தவரையில், அநேகமாக நெடுந்தூரம் பயணம் செய்பவர்கள் இருக்கிறார்கள். அதில் பிரயாணம் செய்பவர்கள் குறைந்த பட்சம் 100 மைல் தூரம் பயணம் செய்வார்கள் அல்லது ஒரு 75 மைல் தூரமாவது பயணம் செய்வார்கள். அதிகமாகப் போகின்றபோது, 150, 200, 300 மைல்கள்கூட பிரயாணம் செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வசதி செய்துகொடுப்பது மிகவும் அவசியம். அப்படிப் பிரயாணம் செய்பவர்கள் தங்கள் குடும்பத்தோடும், குழந்தைகளோடும் பயணம் செய்வார்கள். ஆதலால் இந்தப் பேருந்துகளில் அதிகமான வசதிகளைச் செய்துதான் ஆகவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எக்ஸ்பிரஸ் பஸ்களில் பிரயாணிகளுக்கு எந்த அளவுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு ஏற்படுத்திக் கொடுக்க அரசு அதிக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். சில பேருந்துகளிலே பார்க்கிறோம். ஏற்கெனவே இரண்டு இரண்டு ஆக நான்கு சீட்டுகள் என்று இருந்தது. இப்போது ஒரு பக்கம் 2 சீட்டுக்கள், இன்னொரு பக்கம் 3 சீட்டுக்கள் என்று ஐந்து சீட்டுக்கள் ஆக்கிவிட்டார்கள். என்னைவிட கொஞ்சம் கனமாக இருப்பவர்கள் உட்காருவதற்கு வசதியில்லை. அது மட்டுமல்ல. சில நேரங்களில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதன் மூலம் நமக்கு எவ்வளவு ரூபாய் வருமானம் வருகிறது என்பதை மட்டும் கவனத்தில் கொள்ளக்கூடாது. நெடுந்தூரம் விரைவுப் பேருந்துகளிலே பிரயாணம் செய்பவர்கள் தூங்காமல் போக முடியாது. ஆகவே அந்த அளவுக்கு நெருக்கமாக சீட்டுக்கள் இருக்கக்கூடாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதிலே அக்கறை செலுத்த வேண்டும். இதனை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, இன்றைக்கு சிறிய பேருந்துகள், மினி பஸ்கள் என்று புதிதாக விட்டிருக்கிறார்கள். 476 மினி பஸ்கள் 978 பஞ்சாயத்துக்களுக்கு உதவுகின்ற வகையில், 8 லட்சம் மக்களுக்கு உதவுகின்ற வகையில் இன்றைக்கு ஓடிக்கொண்டிருக்கின்றன என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள். பஸ் தடங்களை உருவாக்குவது, அறிவிப்பது, அதை நிறைவேற்றுவது என்பது ஒன்று. இன்னொன்று இந்த வழித்தடங்கள் கிராமப்புற ரோடுகளாக இருந்து, டிரங்க் ரோடாக இல்லை என்றால், அதற்கு மனுச் செய்பவர்கள் குறைவாக இருப்பார்கள். அந்த வழித்தடங்களில் பஸ் விடுவதற்கு யாராவது முன் வந்தால், அது யாராக இருந்தாலும், அந்த வழித்தடங்கள் அதிகாரிகள் மூலமாகத்தான் ஒதுக்கப்படும் என்ற நிலை வரும். அதை மாற்ற வேண்டும். அப்படி பேருந்து விடுவதற்கு பாதை வசதிகள் இருக்குமானால், அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். அந்த ரூட்டுகளை யாருக்காவது கொடுக்க வேண்டுமென்று முடிவுசெய்வதற்கு முன், பல விசாரணைகள் செய்ய வேண்டியதாக இருக்கும். அதற்குப் பல காலம் ஆகிவிடும். அந்தமாதிரி நிலைமைகளையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும். நல்ல முறையில் அந்த லைசென்ஸ்களைக் கொடுக்கும் நிலையை உண்டாக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

பேருந்துகள் தங்கும் இடங்களைப் பொறுத்த வரையில், பஸ் ஸ்டாண்டுகளைப் பொறுத்த வரையில் அதிலே இன்னும் அதிகமான வசதிகளை, நலன்களை பயணிகளுக்குச் செய்துகொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்ன இது சம்பந்தப்பட்ட கருத்துக்களை நான் ஆதரிக்கிறேன்.

சென்னை, விழுப்புரம், உளுந்தூர்பேட்டை இந்தப் பகுதிகளில் இருக்கின்ற பஸ் ஸ்டாண்டுகளெல்லாம் இன்னும் கொஞ்சம் மக்களுக்கு நலன் தருகின்ற அளவுக்கு மாற்றியமைக்க வேண்டும், விரிவுப்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். தற்போது சென்னையிலே செய்திருக்கின்ற மாற்றம் மிகப் பெரியது. பெரிய மாற்றம் என்பது மட்டுமல்ல. அந்த மாற்றம், வசதி இன்றைக்கு மக்களுக்குப் பெரும் அளவில் உதவிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய போக்குவரத்து வழித்தடங்கள் அதிகரித்திருப்பதால் பயணிகளின் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரித்திருக்கின்றது. பிற மாநிலங்களிலிருந்துகூட பேருந்துகள் வந்த வண்ணமும் போகின்ற வண்ணமும் இருந்துகொண்டிருக்கின்றன. இதன் காரணமாகவும் மேலும் அதிகமான அளவுக்கு பயணிகள்

போக்குவரத்து அதிகமாகியிருக்கின்றது. நானும் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை பஸ்களிலே வந்து போய்க் கொண்டிருக்கிறேன். நான் இதை அன்றாடம் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

எனவே சாலை வசதிகளை நன்கு செய்து கொடுக்க வேண்டும். உளுந்தூர்பேட்டையிலும், விழுப்புரத்திலும் நல்ல முறையிலே இதைச் செய்ய வேண்டும். அங்குள்ள நிலைமைகளை மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது இப்போது மிக மிகத் தேவையாக இருப்பதால், அதை சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் தலைமை)

(பிற்பகல் 5-30)

நான் உரிமையோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பஸ் ஸ்டான்டுகளைப் பொறுத்தவரையில், வெஜிடேரியன் உணவுதான் கிடைக்கிறதென்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. அப்படியிருந்தால்தான் சுத்தமாக இருக்குமென்ற உணர்வோடு வைத்திருப்பார்களென்று நினைக்கிறேன். இரவிலே பயணம் செய்யும்போது வெஜிடேரியன் உணவு சாப்பிடுகிறவர்கள் குறைவாக இருப்பார்கள். எனவே அசைவ (நான்-விஜிடேரியன்) உணவைச் சாப்பிடுகிறவர்களுக்கு வேண்டிய வசதிகளை, பஸ் ஸ்டாண்டுகளில் இருக்கும் கான்டீன்களில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பஸ்களை உணவுக்காக எங்கே நிறுத்துவது என்பது பற்றிய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பல இடங்களிலே சாலைகளின் ஓரங்களிலே, கட்டிடங்கள் இல்லாத இடங்களிலே, நிறுத்திவிடுகிறார்கள். பேருந்தை விட்டு இறங்கியவுடன், அந்த இடத்தைப் பல்வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துகின்ற நிலை இருக்கிறது. எனவே, அதன் காரணமாக பயணம் செய்யும் குழந்தைகளும், சிறு வயதுப் பெண்களும் தவித்துப் போகும் நிலை உருவாகிறது? இதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறை, சரக்குப் போக்குவரத்து நிறுவனத்தை அமைத்திருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன். இன்றைக்கு அது கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைந்துகொண்டு வருகிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் பல்வேறு துறைகள், அதன் மூலமாகத்தான் சரக்குகளை ஏற்றி அனுப்ப வேண்டுமென்ற உத்தரவு,



பாராட்டப்பட வேண்டிய ஒன்று. ஆனால், இந்த நேரத்தில் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாடு இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷனில், பிரிக் ஒர்க்ஸ்-க்காக 10 லட்சம் ரூபாய் கடன் வாங்கியதைக் கட்டாமல் விட்டுப்போய்விட்டது—அதாவது நெருக்கடிக் காலத்தில் எப்படியோ வாங்கியது கட்டாமல் விட்டுப் போய்விட்டதென்ற தகவலைத் தெரிவித்தேன். சென்னை நகர் முழுமைக்குமான சரக்குப் போக்குவரத்துக் கார்ப்பரேஷனுக்கான ஏஜன்சி அந்த நபருக்கே கிடைத்திருக்கிறது. அவர்தான் அதைச் செய்து கொண்டிருக்கிறார். இந்த ஆட்சியில் கொடுக்கப்படவில்லை என்றாலும், இந்த ஆட்சியிலும் அவரே நீடித்து இருந்துகொண்டிருக்கிறார் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுபோல், அவருக்கு ஏஜன்சி முன்னரே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டு அரசுக்கும் வந்திருக்கிறது. அதை எப்படிக் களைவது என்பதை ஆராய்ந்து வருகிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தனியார் துறை எந்த அளவிற்கு, அரசாங்கத் துறையைப் பயன்படுத்தி, ஏமாற்றுவதற்குத் துடித்துக் கொண்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரு ஆட்சி என்பதல்ல, எல்லா ஆட்சியிலும், சமயம் கிடைக்கும்போது, பாதுகாப்போடு பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க இருப்பதால், அவருக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'ஆக்சிடன்ட் ரிலீஃப்', முதல்வர் விபத்து நிவாரண நிதியிலிருந்து தருவது நல்ல ஏற்பாடு. தேவையான ஏற்பாடு. பேருந்துகளைப் பொறுத்தவரையில், பல காரணங்களால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. நம்முடைய தவறில்லாமல், எதிரே வருகிற லாரிகள், பஸ்களின் வெளிச்சம் காரணமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதற்கு நிவாரணமளிப்பது மிக மிகத் தேவை. அதைச் செயல்படுத்துகின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பதைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் தனியார் பஸ்களுக்கு விபத்துக்கள் ஏற்படும்போது, அதற்கான நிவாரண நிதியைத் தர வேண்டிய பொறுப்பை, அந்த பஸ்களை நடத்துபவர்கள்தான், அந்த பஸ்களின் முதலாளிகள்தான் ஏற்றாக வேண்டும். அதற்கும் அரசாங்கம் நிவாரணம் அளிப்பது முறையாக இராதென்று தெரிவித்துக்கொள்கிறேன். தனியார்கள் அந்தத் தொழிலில் லாபமடைகிறார்கள். அதன் மூலமாக ஏற்படும் விபத்துக்களுக்கு, சங்கடங்களுக்கு அவர்கள்தான் பொறுப்பேற்க

வேண்டும். இல்லையென்றால், பொறுப்பற்றவர்களாக அவர்கள் மாறிவிடு வார்கள். அந்தத் தொழிலினை பொறுப்பற்ற முறையில் நடத்தும் நிலைமை கள் வருமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில குறிப்பிட்ட இடங்களில் சாலை விபத்துக்கள் தொடர்ந்து நடக் கின்றன. குறிப்பாக சென்னை நகரில், மீனம்பாக்கம் விமான நிலையத்தின் அருகில் இருக்கும் பகுதியில் அவ்வப்போது விபத்துக்கள் ஏற்படுகின்றன. அது போன்ற இடங்களைக் கண்காணித்து, மாற்று ஏற்பாடுகள் செய்வதற்கு அல்லது வேறுபாதைகள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு அதிகமான எண்ணிக்கையில் பஸ்களை ஓட்டிக் கொண்டிருக் கிறோம். சில இடங்களில் பிரேக்-டவுன் காரணமாக பஸ்கள் நின்று விடுகின்றன. வேறு காரணங்களாலும் நின்று விடுகின்றன. அப்படி திடீரென்று 11 அல்லது 12 மணிக்கு பஸ் நின்றுவிடுகிறது. அப்படி நிற்கின்றபோது, ஸ்பேர் பஸ்களை அனுப்ப வேண்டும். ஒவ்வொரு பஸ் ஸ்டான்டிலும்—சென்னை, செங்கற்பட்டு, திண்டிவனம், விழுப்புரம், உளுந்தூர்பேட்டை போன்ற பேருந்து நிலையங்களில் அதற்கான வசதிகள் இருக்க வேண்டும். 'ஃபோன்' பண்ணினால், ஸ்பேர் பஸ் வந்து அழைத்துச் செல்லும் நிலை இருக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு இடத் திலே, கடை மற்ற வசதிகள் இல்லாத இடத்திலே, சில மணி நேரங்கள் இருக்க வேண்டிய நிலை பயணிகளுக்கு ஏற்படுகிறது. அவர்கள் அப்போது அவதிப்படுகிறார்கள். அந்த நிலைமைகளை மாற்றுவதற்காக, தேவை யான அளவிற்கு ஸ்பேர் (Spare) பஸ்கள் வேண்டும். பல இடங்களில் அப்படி ஏற்கெனவே இருந்தன. இன்றைக்கு குறைந்திருக்கிறது அல்லது இல்லை என்று நினைக்கிறேன். அவற்றை மீண்டும் கொண்டுவர வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சில பகுதிகளிலே பயணிகளுடைய எண்ணிக்கை மிக அதிகமாக இருந்து, அவர்களுக்குப் பேருந்துகளில் இடம் கிடைக்காத நிலை இருக்கும்போது, குறைந்தபட்ச எண்ணிக்கை அளவிற்கு பயணிகள் இருந்தால், அவர்களுக்காக ஸ்பேர் பஸ்ஸை உபயோகப்படுத்தும் முறை கடந்த காலத்தில் இருந்தது. இப்போது ஸ்பேர் பஸ்கள் இல்லாததால், அப்படிப் பயன்படுத்தும் நிலைமைகள் இல்லை. மீண்டும் அந்த நிலை மையை உருவாக்க, துறை முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.



ஓட்டுநர்களுக்கான பயிற்சிப் பள்ளியைப் பொறுத்தவரையில், அது பாராட்டுதற்குரிய முயற்சி. அது நல்லமுறையில் செயல்பட வேண்டு மென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். போக்குவரத்துத் துறை யிலுடைய நிர்வாகத்தை நான் பாராட்ட விரும்புகிறேன். பாராட்டுகின்ற அதே நேரத்தில், அவர்களுக்கெல்லாம் உற்சாகம் அளிப்பதுபோல, நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிறவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு களை—சேர்மென் போன்ற பதவிகள்—அளிப்பது நல்லதென்ற கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

சாலைப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில், பாராட்ட முடியாத நிலையில் நான் இருக்கிறேன். கப்பல் போக்குவரத்தைப் பொறுத்தவரை யில், மிக வேதனையோடு சொல்ல விரும்புகிறேன். இரண்டு கப்பல்கள் வாங்கி, அவை மூடி முழுகிக்கொண்டிருக்கின்றன. அதற்கு மேலும் கப்பல்களை வாங்க வேண்டுமென்பது அவசியம்தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முதலீடு செய்ய வேறு துறைகள் இருக்கின்றன. போதுமான நிலக்கரியை ஏற்றிக்கொண்டு வர, நிலக்கரி இல்லை. இருக்கின்ற நிலக் கரியை மாநிலத்திற்கு ஏற்றி வந்த பிறகு, கப்பல்கள் போதிய வேலை இல்லாமல் இருக்கின்றன என்று குறிப்புகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில், மேலும் கப்பல்கள் தேவைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பல கோடி ரூபாய் நஷ்டம் வரும் அந்தத் தொழில் நேரடியாக மக்களுக்கு நன்மை செய்யக்கூடியதா என்றால், இல்லை. இந்தக் கப்பல்கள் இல்லையென்றால், வேறு கப்பல்களை வாடகைக்கு வைத்துக்கொள்ள முடியும். பல கோடி ரூபாய்களை பேருந்துப் போக்குவரத்தில் முதலீடு செய்தால், எந்த அளவிற்கு லாபகரமாக அமையுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கப்பல் போக்குவரத்துக் கழகம் அதிகமான கப்பல்கள் வாங்குவதென்பது நாட்டிற்கு நன்மை பயப்பதாகாது. மேலும் பல கோடி ரூபாய் நஷ்டத்தை நாம் தெரிந்து வரவேற்றுக்கொண்டிருக்கிறோம். அது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துறைமுகத்தைப் பொறுத்தவரையில், சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 'கடலூர் துறைமுகத்தை வேலைகள் நடைபெறும் துறை முகமாக மாற்றும் முயற்சிகளைப் பாராட்ட விரும்புகிறேன். வெறும் உரம் வருவதால் மட்டும் கடலூர் துறைமுகம் விரிவடைந்து விட முடியாது. அது செயல்படுவதாக அமையாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-40)

இதை ஏற்கெனவே செய்து பார்த்தோம். செய்து பார்த்து, தோற்றுவிட்டோம். ஒரு கால கட்டத்தில் உரத்தை உடனடியாக எடுத்துக்கொள்வார்கள். அதற்குப் பிறகு உரம் வந்து தேங்கிப் போகும் நிலையும், அதை எடுத்துப் போய் விற்பதைவிட அங்கேயே விட்டுவிடுவது லாபம், நல்லதென்ற நிலைமையும் கடலூர் துறைமுகத்தில் ஏற்பட்டது. ஆகவே, அந்தத் துறைமுகம் நல்ல முறையில் உருவாக்கப்பட வேண்டுமானால், அதில் நல்ல முறையில் வேலை நடைபெற வேண்டுமென்றால், அங்கிருந்து ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். நெய்வேலிக்கு வேண்டியவற்றை அந்தத் துறைமுகத்தின் மூலம் தான் கொண்டு வர வேண்டும். அதுபோல் நெய்வேலியிலிருந்து ஏற்றுமதி செய்கின்றவைகளை அந்தத் துறைமுகத்தின் மூலம் ஏற்றுமதி செய்யலாம். இந்தியா சிமெண்டிலிருந்து அந்தத் துறைமுகத்தின் மூலம் ஏற்றுமதி செய்ய முடியும். அதேபோல தென்னாற்காடு மாவட்டத்தில் அதிகமான சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அந்த சர்க்கரையை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற நிலை வரும்போது, கடலூர் துறைமுகத்தின் மூலம் தான் அனுப்ப வேண்டும். இதுபோன்ற நடவடிக்கை எடுப்பதன் மூலம் அந்தத் துறைமுகத்துக்கு நாம் நல்ல முறையில் வாய்ப்பளித்து அதை வளர்ச்சி அடையச் செய்ய முடியும். வெறும் இறக்குமதிப் பொருள்களை வெளியிலிருந்து கொண்டு வருவதன் மூலம் மட்டும் அந்தத் துறைமுகம் வளர்ச்சி அடைந்து விடாது. அங்கே சர்க்கரை வைக்க ஷெட்டுகள் கட்ட 4½ இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு 3½ இலட்சம் ரூபாய்க்கு உடனடியாக வேலை நடைபெற வேண்டுமென்கின்ற ஒரு நல்ல வாய்ப்பினையும் தந்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். அதற்கு இன்னும் அதிகமான தொகை முதலீடு செய்ய வேண்டும். இன்னும் அதிகமான கோடவுன்களை (godown) அங்கே கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக நகரங்களைச் சார்ந்த இடங்களில் உள்ள நெடுஞ்சாலைகளில் எல்லாம் நிகழ்கின்ற விபத்துக்கள் அதிகம். சென்னை நகரைப் பொறுத்தவரை, விபத்துக்களைக் குறைக்க நல்ல முயற்சி எடுத்திருக்கிறார்கள். அந்த முயற்சியைப் பாராட்டுகிறேன். அதிக அளவில் சுரங்கப்பாதைகளை அமைத்திருக்கிறார்கள்; அமைத்துக்கொண்டும் இருக்கிறார்கள். நகரங்களைப்





பொறுத்தவரை, சுரங்கப்பாதைகள் வேண்டிய இடங்களில் எல்லாம் அமைக்கலாம் அல்லது இரயில்வேயில் இருப்பது போல, ஓவர்பிரிட்ஜ் ஏற்படுத்திக் கொடுக்கலாம். சில நகரங்களில் அப்படிப்பட்ட ஏற்பாட்டினைச் செய்யாததன் மூலம் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் சாலைப் போக்குவரத்து தடைபடுகின்ற நிலையும், விபத்துக்கள் பெருகுகின்ற நிலையும் இருக்கிறது. நான் சொன்ன இரண்டு ஏற்பாட்டில் ஏதாவது ஒன்றினைச் செய்தால், போக்குவரத்து தடைப்படுகின்ற நிலையையும், விபத்துக்கள் பெருகுகின்ற நிலையையும் தவிர்க்க முடியும். சென்னை நகரத்தைப் பொறுத்தவரை, போக்குவரத்து ஒழுங்குபடுத்துகின்ற முயற்சியில் வேகத்தைப் பார்க்கிறேன். டிராபிக் சிக்னலைப் பொறுத்தவரை, நல்ல மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள். டிராபிக் தடைப்படாமலிருப்பதற்கு நவீனமான முறையில் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இந்த விஷயத்தில் ஒரு நல்ல போக்கினை, வேகத்தை நாம் காண முடிகிறது.

நெடுஞ்சாலைத் துறையின் இன்னொரு பகுதியான ரூரல் ஒர்க்ஸைப் பொறுத்தவரை, பெரும் பகுதிப் பணிகள் மெத்தனமாக நடைபெறுகின்றன. திட்டமிட்டு அதை அழித்துக்கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. அந்தத் துறையில் லஞ்சம், ஊழல் தாண்டவமாடுகிறது. இதனை நான் வேதனையோடு சொல்ல வேண்டியிருக்கிறது. மற்றவை எல்லாம் வெளியிலே கண்ணுக்குத் தெரிகின்றன. லஞ்ச ஊழல் கண்ணிலே படாத காரணத்தால், திட்டமிட்ட முறையில் இந்த லஞ்ச ஊழல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வெளியே வரும் மற்றவர்கள் அதைப்பற்றித் தெரிவிப்பார்கள் என்ற நிலை இருந்தாலும் கூட, அதில் அவலங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்பதால் தெரிவிக்கிறேன். இந்தத் துறையை அவசியம் சீர்திருத்த வேண்டும். கிராமப்புறங்களில் நல்ல பாதைகளை அமைத்துத் தர வேண்டிய பொறுப்புடையது இந்தத் துறை. பல இடங்களில் அத்தகைய பாதைகளை அமைக்காமல், அமைத்ததாகவும் செலவிட்டதாகவும் கணக்கெழுதிக் கொள்கிறார்கள். யூனியன் எஞ்சினியர் தொடங்கி மாவட்டத்திலே இருக்கக்கூடிய உயர் பதவியில் இருக்கிறவர்கள் வரை அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். வேலை நடக்காத இடங்களில் வேலை நடந்ததாகக் கணக்கெழுதி அரசாங்கப் பணத்தை மோசடி செய்கின்ற நிலை இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கின்றபோது, இந்தத் துறையில் மாவட்டத்திலே பெரிய அதிகாரியாக இருக்கின்றவர்களுக்குக்கூட பாகம் போகுமோ என்ற சந்தேகம்

எனக்கு இருக்கிறது. தவறுகளைச் சுட்டிக்காட்டினால், தவறின் அடிப் படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதிலும் விழுப்புரத்தில் இந்தத் துறை மிகக் கேவலமாக நடந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி பல முறை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். ஒருவரை மட்டும் மாற்றியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் நிலைமைகள் பாராட்டுகின்ற முறையில் அமையவில்லை என்பதை மெத்த உரிமையோடு சொல்லிக்கொள்கிறேன். அரசியல் தலையீடுகள் இருக்கும் என்று நான் நம்பவில்லை. ஆனால் அரசியல் தலையீடுகள் வருவது மாதிரி பாவனை காட்டி அதிகாரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் விழுப்புரம் பகுதியிலும் அடுத்துள்ள சில பகுதி களிலும் குறைகள் இருப்பதை எடுத்துக்காட்டியதைத் தொடர்ந்து உடனடி யாக விசாரித்து நடவடிக்கை எடுத்து சில அதிகாரிகள் சஸ்பெண்டு கூட செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்ததற்காக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் துரித நடவடிக்கை எடுத்ததற்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மீண்டும் நான் ஊருக்குச் சென்று பகுதியைச் சுற்றிப் பார்த்து நிலைமைகள் திருந்தியிருக்குமானால், நிச்சய மாக அமைச்சருக்கும் அவைக்கும் தெரிவிப்பேன்.

அடுத்தபடியாக, நெடுஞ்சகலைத் துறைக்கு ஒரு ரிசர்ச் ஸ்டேஷன் (Research Station) என்கின்ற ஒரு துறையை உருவாக்கியிருக் கிறார்கள். 'ஸ்டேட் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன்' என்கிற அந்தத் துறையை பாதைகள் அமைக்கவும், பாலங்கள் அமைக்கவும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இரண்டு துறைகளை உருவாக்கியிருப்பதும் வரவேற்கத் தக்க பாராட்டத்தக்க அம்சம். இந்த இரண்டு துறைகளும் வேகமாக வேலைகள் நடைபெற உதவி புரிய வேண்டும். லஞ்ச ஊழல் தாண்டவமாடு கின்ற நிலையை வேகமாகப் போக்க முன்வர வேண்டும். இந்தத் துறை வேக மாக விரிவடைந்திருக்கி; நிலையில் (Rural Works) "ரூரல் ஒர்க்ஸ்"-ஐப் பொறுத்தவரை, அதற்காகத் தனியாக ஒரு சீப் எஞ்சினியரை நியமிக்கலாம், தனியாக ஒரு துறையை உருவாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். இப்போது மாநிலத்தில் 4 சீப் எஞ்சினியர்கள் இருக்கிறார்கள். அந்தத் துறையிலே ஒரு கோவார்டினேஷன் இருக்க



வேண்டுமென்பதற்காக காவல் துறையிலே ஐ.ஜி.-க்கு மேலே டைரக்டர் ஜெனரல் என்கின்ற ஒரு பதவியைப் போடுவதாகச் சொல்கிறார்களே, அது போல ஒரு டைரக்டர் ஜெனரல் பதவியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறையைப் பொறுத்தவரை, ஒரு டைரக்டர் ஜெனரல் பதவிக்கு அவசியமிருக்கிறது. காவல் துறையைப் பொறுத்தவரை, அதற்கு அவசியம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி அதற்கான மானியம் வரும்போது பேச முடியும். அப்படி டைரக்டர் ஜெனரல் என்ற ஒரு பதவியை ஏற்படுத்தினால், 4 அல்லது 5 சீப் எஞ்சினியர்களுக்கு அவர் தலைவராக இருப்பார். ஒருங்கிணைந்து காரியங்களை நல்ல முறையில் செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. இந்தத் துறைக்குச் செலவழிக்கின்ற பணம் பெரும்பாலும் நல்ல முறையில் செலவழிக்கப்படுகின்றது என்ற போதிலும், ஒரு சில குறைபாடுகளும் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளின் மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. இத்துடன் அவை முன் வைக்கப்பட்டுள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்க குறிப்புகளை வரவேற்றுப் பாராட்டி அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாற்றுத் தலைவரவர்களே, இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள நாட்டுடையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது எங்களுடைய கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதில் நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். சாலைப் போக்குவரத்தை தேசியமயமாக்கிய கட்சியைச் சார்ந்தவன் என்ற நிலையிலே பேசும்போது, சாலைப் போக்குவரத்துத் தொழில் நாட்டுடைமை ஆக்கப் பட்டபோது, ஆரம்ப கட்டத்தில் பலவீனமாக நஷ்டமாக இருந்தது. அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டாலும் கூட, ஒரு அமைப்பு உருவாகிறபோது, ஆரம்பச் செலவுகளும், மற்ற செலவுகளும் ஏற்படுவதன் காரணமாக ஆரம்ப காலத்தில் நஷ்டம் ஏற்படுவது உண்டு. ஆனால், ஆரம்ப காலத்தில் நஷ்டம் ஏற்பட்ட அதே தொழில் 5 அல்லது 6 ஆண்டுகள் கழித்து என்ன பலனை அளிக்க வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்த்தோமோ அந்தப் பலனை அது அளித்துக் கொண்டிருக்கிறது என்பது பெருமகிழ்ச்சிக்குரிய ஒன்று. நாங்கள் உண்மையில் எடுத்துக்கொண்டு, செயல்படுத்தி, நாட்டுடைமையாக்கிய கொள் கையின் விளைவாக இன்றைக்கு அந்தத் திட்டம் எவ்வளவு வெற்றி பெற்றிருக் கிறது என்பதை உணர்கிறோம். அந்த வெற்றியைக் காண அன்று முதல் இன்று வரை யார் யாரெல்லாம் காரணமாக இருக்கிறார்களோ அவர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் இங்கே நமக்குத் தரப்பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே இருக்கின்ற வாசகங்கள் அந்தக் கொள்கைக்குத் தொய்வை ஏற்படுத்தி விடுமோ என்று அஞ்சுகின்ற வகையில் இருக்கின்றன. கொள்கை விளக்கக் குறிப்பின் முதல் பக்கத்திலே ஒரு கருத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். "தேசிய நெடுஞ்சாலைகளிலும், மாநில நெடுஞ்சாலைகளிலும் நிலையான போக்குவரத்துப் பணிகளை நடத்தி வருகின்ற பேருந்து உரிமையாளர்களை வெளியேற்றிவிட்டு, பொதுமக்களின் நன்மையைக் கருதி, அந்த வழித் தடங்களில், போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பேருந்துகளை விடுவதனால், அதிக நன்மை ஏற்பட்டுவிடப்போவதில்லை" என்று கூறியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருப்பதன் மூலம் ஆளும் கட்சியினுடைய கொள்கை, திட்டம் என்ன என்பதை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அந்த வரிகளுக்கு மேலே "பேருந்து வழித் தடத்தை நாட்டுடைமையாக்குவதில் நமது அணுகு முறை ஆக்கப்பூர்வமானது" என்றும் கூறியிருக்கிறார்கள். நாட்டுடைமையாக்குகிற கொள்கை முடிவை முன்னால் இருந்த அரசு எடுத்தது. 25 சதவிகிதப் பேருந்துகளை நாட்டுடைமையாக்குகின்ற வகையில் பணியினைத் தொடங்கி முன்பு இருந்த அரசு 47.7 சதவிகிதத்திற்கு அதைக் கொண்டு வந்து, அதற்குப் பின்னால் இந்த அரசு குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஆக்கப்பட்டது உட்பட 53.2 சதவிகிதத்திற்கு ஆக்கிய நிலையில், எங்கள் கட்சியைத் தவிர மற்றவர்களால் 7 அல்லது 8 சதவிகிதம் உயர்த்தப்பட்ட பிறகு, நாங்கள் திட்டமிட்டு நாட்டுடைமையாக்கி அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி போக்குவரத்துக் கழகங்களாக மாற்றித் தந்து செயல்படுத்துகிற செயல்முறையை அமுலுக்குக் கொண்டு வந்த பிறகு, இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகள் அதைத் தொடர்ந்து நடத்திக் காட்டி இலாபத்தை ஈட்டிய பிறகும், நீங்கள் உரிமையாளர்களை வெளியேற்றிவிடுவதால் நன்மை ஏற்பட்டு விடப்போவதில்லை என்று சொல்லியிருப்பதன் மூலம் இந்த நாட்டுடைமையாக்குகின்ற கொள்கையிலே, தத்துவத்திலே உங்களுக்கு உறுதியான, பிடிப்பான, திட்டவட்டமான நம்பிக்கை இல்லை என்பதை நான் தெரிவித்தால், அதில் தவறு இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

(பிற்பகல் 5-50)

காரணம், நாட்டுடைமையாக்குகின்ற கொள்கையில் முன்னேற்றக் கருத்துடையவர்களுக்கு இரண்டு விதமான கருத்து இருக்க முடியாது. நாட்டுடைமையாக்குவதில் பலவிதமான தொல்லைகள் இருக்கின்றன.



கஷ்டங்கள் வருகின்றன. இவைகளையெல்லாம் வைத்துவிட்டு, நாட்டுடைமையாக்குகின்ற தேசியக் கொள்கை தேவையானது அல்ல, நல்லதல்ல என்று பல சந்தர்ப்பங்களிலே முதலாளிகள் பக்கத்திலேயிருந்தும், நாட்டுடைமையாக்கப்படும் கொள்கைக்கு எதிரான கொள்கையுடைய அரசியல்வாதிகளிடமிருந்தும் கருத்துக்கள் வருவது இயல்பு. இப்போது தேவையான உணவுப் பொருட்களை விநியோகம் செய்துகொண்டிருக்கிறோம். பப்ளிக் செக்டார் மூலமாகச் செய்துகொண்டிருக்கிறோம். எல்லா மக்களுக்கும், நல்ல பொருள்களை விலை அதிகமாக இல்லாமல் கொடுக்க வேண்டும் என்பது தான் கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான் பப்ளிக் டிஸ்ட்ரிபூஷன் சிஸ்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அவற்றிலே பல தவறுகள் ஏற்படுகின்றன, சிக்கல்கள் ஏற்படுகின்றன, உணவுப் பொருட்களைத் தேக்கிவைக்கும்போது அவைகள் கெட்டுவிடுகின்றன, ஆகவே, பார் பார் இந்தக் கொள்கை தவறானது என்று சொல்லி, அந்தக் கொள்கைக்கு விரோதமானவர்கள் தப்பித்துக்கொள்வார்கள். அதன் காரணமாக அரசும் அந்தக் கொள்கையைக் கைவிட்டுவிடுகிறது. அதன் விளைவாக இப்போது என்னென்ன நிலைமைகள் உருவாகியிருக்கின்றன என்று பார்த்தால், இப்போது திடீரென்று மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. நாடு முழுவதும் மக்கள் பெருந்தொல்லைக்குள்ளாகியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே பப்ளிக் டிஸ்ட்ரிபூஷன் முன்போல ஒழுங்காக நடந்திருந்தால், இன்று மண்ணெண்ணெய் தட்டுப்பாடு வந்தாலும் கூட, ஒழுங்காக கார்டு முறையிலாவது கொடுத்திருக்கலாம். இந்தியா முழுவதும் ஒரே ஒரு உணவு மண்டலம் என்று கொண்டு வந்த பின்பு கூட, கேரளாவிலே அங்கே இருக்கக்கூடிய அரசு அதைக் கொண்டு வரவில்லை. இந்தியா முழுவதும் உணவுக்கென்று ஒரே மண்டலமாகக் கொண்டு வந்திருக்கும்போது, நீங்களும் அந்த முறையைக் கொண்டு வந்து பொது விநியோக முறையை நிறுத்திவிடுங்கள் என்று சொன்னபோது, அவர்கள் மறுத்துவிட்டார்கள். "இப்போது உணவுப் பொருட்கள் கிடைக்கின்றன. இன்னும் மூன்றாண்டு அல்லது இரண்டாண்டு கழித்து பற்றாக்குறை ஏற்பட்டால், அல்லது மத்திய அரசின் கொள்கையிலே மாற்றம் ஏற்பட்டால், அப்போது உணவுப்பொருட்கள் தாராளமாகக் கிடைக்காத சூழ்நிலைகள் உருவாகி, இந்தப் பொது விநியோக முறையும், இதற்காக உள்ள இந்த இலாக்காவும் இல்லாமல் இருந்தால், முன்னர் இருந்த அதே தொல்லைக்கு ஆளாவோம்" என்று சொல்லி இன்றுவரையிலும் அந்தத் திட்டத்தை அவர்கள் தொடர்ந்து வருகிறார்கள். நம்முடைய அரசு பப்ளிக் டிஸ்ட்ரிபூஷன் சிஸ்டத்தின் கீழ், பொதுவிநியோக முறையின் கீழ், தட்டுப்பாடாக உள்ள, முக்கியமான, இன்றியமையாத பொருட்களை விநி

யோகிக்கும் முறையை நிறுத்தியதன் காரணமாக, இன்றைக்கு மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்படும் இந்த நேரத்தில் 1 லிட்டர் மண்ணெண்ணெய்க்கு ஒவ்வொருவரும் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள், எத்தனை மணி நேரம் வெயிலில் நின்று கஷ்டப்படுகிறார்கள், தொல்லைப்படுகிறார்கள் என்பதை இந்த நாடு அறியும். எனவே, நாட்டுடைமையாக்குகின்ற ஒரு திட்டத்திலே எங்கெங்கோ ஒருசில கோளாறுகள், தவறுகள் ஏற்பட்டாலும், அவைகளைக் கண்டுபிடித்து சீர்திருத்த வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு, இந்த நாட்டுடைமையாக்கும் கொள்கையில் இன்றையதினம் தொய்வு ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அந்தத் தொய்வு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கையிலே இந்த அரசு ஈடுபடுகிறதா என்றால் இல்லை. இன்றைக்கு பஸ் போக்குவரத்துத் துறை ஒரு தனி முதலாளி வர்க்கத்தையே உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலே நில்வுடமைக்கென்று எப்படி முன்பு ஒரு ஜமீந்தாரி சிஸ்டம் இருந்ததோ அதுபோலத்தான் போக்குவரத்து சிஸ்டமும் இப்போது இருக்கிறது. அந்தப் பெரிய ஜமின்தார்கள் போலத்தான் இந்த ‘ பிளீட் ஓனர்கள் ’ இருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள முடியும். 1947-க்குப் பிறகு 1967 வரை இந்த நாட்டிலே நடந்த தேர்தல்களையெல்லாம் யார் நடத்தினார்கள் ? இந்த பிளீட் ஓனர்கள்தான் நடத்தினார்கள். யாரெல்லாம் பஸ்களை வைத்துக் கொண்டு முதலாளிகளாக இருந்தார்களோ—எனக்குப் பெயரைக் கூடச் சொல்ல முடியும்—அவர்கள் தான் இந்த நாட்டிலே தேர்தல்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மதுரையிலே, கோயம்புத்தூரிலே, காஞ்சிபுரத்திலே எல்லாம் இருந்துகொண்டு, இந்த நாட்டில் இருந்த அரசியல் கட்சிகளுக்குப் பணத்தைக் கொடுத்து இயக்கிக்கொண்டிருந்தார்கள். அந்த நிலைமையை நன்குணர்ந்து, அலங்கோலப்படுத்திக்கொண்டிருந்த அந்த முறையைக் கண்டு, அரசியலை அடிமைப்படுத்திக்கொண்டிருந்த அந்த முறையைக் கண்டு அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப்பொறுப்பிற்கு வந்த பிறகு, நாட்டுடைமையாக்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, அதை எங்கள் ஆட்சி முடிக்கப்பட்டபோது ஒரு உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வந்து வைத்தார்கள். பின்பு குடியரசுத் தலைவர் ஆட்சியிலும், இப்போது இந்த ஆட்சியிலும் ஒரு 8 சதவீதம் உயர்வு கண்டிருந்தால் கூட, ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், அந்தக் கொள்கையில் இந்த அரசு தொய்வு கண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டுடைமையாக்குதல் என்ற தலைப்பிலே நின்று கொண்டு அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள்—தேசிய நெடுஞ்சாலைகளிலும், மாநில நெடுஞ்சாலைகளிலும் நிலையான போக்குவரத்துப் பணிகளை நடத்தி வருகின்ற பேருந்து உரிமையாளர்



களை வெளியேற்றிவிட்டு, பொதுமக்களின் நன்மையைக் கருதி, அந்த வழித்தடங்களிலே போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பேருந்துகளை விடுவதனால், அதிக நன்மை ஏற்பட்டுவிடப்போவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கொள்கை ஆக்கபூர்வமான கொள்கை என்று சொன்னால், இந்த அரசு புதிய பஸ் முதலாளிகளுடைய கூட்டத்தை உருவாக்கிக் கொண்டு, அவர்களுடைய பணத்திலே கட்சி அரசியலை நடத்துவதற்குத் தயாராகிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இந்த அரசின் மீது சுமத்த விரும்புகிறேன். அப்படி ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தினால் தவறில்லை என்று நான் கருதுகிறேன். ஒரு கொள்கை அளவிலே நான் இதைச் சொல்லி, எங்களுடைய கருத்துக்களை சஜெஷன்ஸ் என்ற அடிப்படையிலே எடுத்து வைத்து, ஆக்கபூர்வமான முறையில், இந்த இலாக்கா பொதுமக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் இதைச் சொல்கிறேன்.

போக்குவரத்துத் துறை மிகச் சிறப்பாக நடைபெறுகிறது என்று எல்லோரும் பாராட்டினார்கள். மிகச் சிறப்பாக நடைபெறுகிற பகுதிகளிலே நடைபெறுகிற போக்கை நானும் பாராட்டுகிறேன். பாராட்டுவதிலே யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. இன்றைய டீசல் விலை உயர்விலும், பஸ் சேசிஸ் விலை உயர்விலும், பஸ்களுக்கான உதிரிப் பாகங்களின் விலை உயர்விலும், டயர்களின் விலை உயர்விலும், பஸ் போக்குவரத்து நாட்டுடைமையாக்கப்பட்ட காரணத்தினால், இன்றைய தினம் சாதாரண மக்கள் தங்களுடைய வருவாய்கேற்ப குறைந்த கட்டணத்தைக் கொடுத்து தாங்கள் விரும்பும் இடங்களுக்குப் பயணம் செய்ய முடிகிறது. இவ்வளவு விலை உயர்வு இருந்தும் கூட, நாங்கள் கட்டணத்தைக் கூட்டப்போவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். ஆனால் இந்த 47 சதவீதம் முதலாளிகளும் கட்டணத்தை உயர்த்தி, அவர்கள் உயர்த்திவிட்டார்கள், விலைகளும் இவ்வாறு ஏறிவிட்டன என்று சொல்லி, இந்த அரசும் கட்டணத்தை உயர்த்தக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கக் கூடாது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்தில், குறிப்பாக கிராமப்புறப் பகுதிகளுக்கு அதிக அளவில் பஸ் வசதி செய்து கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி பஸ்வசதி செய்யப்படும் கிராமப்புறப் பகுதிகளிலும், நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ்களை அனுப்ப முடியும். நான் சார்ந்துள்ள கன்னியாகுமரி மாவட்டம், இந்த

மாநிலத்தோடு இணைவதற்கு முன்னாலேயே, அங்கு நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ்கள் தான் ஓடிக்கொண்டிருந்தன. 1956-லே தான் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ் நாட்டுடன் இணைந்தது. 1969-லே தான் தமிழ் நாட்டில் நாட்டுடைமையாக்கப்பட்ட திட்டம் வந்தது. கேரளாகவிலே திருவாங்கூர் சமஸ்தானத்திலே 1950-லே நாட்டுடைமையாக்கப்பட்ட தேசிய பஸ்கள் விடப்பட்டன. அப்போது கண்டக்டர்களாக நியமிக்கப்பட்டவர்கள் பி.ஏ. படித்தவர்கள். செக்கிங் இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கப்பட்டவர்கள் ஒரு ஆபிசர் கிரேடில் நியமிக்கப்பட்டவர்கள். இன்றையதினம், நாடு முழுவதும தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்து முறையை வைத்திருக்கிறார்கள் இந்த தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்து முறை இன்றையதினம் எந்த அளவுக்கு இந்த நாட்டிலே வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதையும் நாம் பார்க்கிறோம். ஆகவே, இந்தக் கொள்கை வளர்ச்சியடைந்திருக்கின்ற இந்தத் தருணத்திலே மீண்டும் ஏகாதிபத்திய உணர்வுக்கும், முதலாளித்துவ மனப்பான்மைக்கும் இந்த அரசு இடமளிக்கக்கூடாது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-00)

போக்குவரத்து சர்வீசைப் பொறுத்தவரையில், விபத்துக்கள் ஏற்படாத நிலையை உருவாக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். இப்போதும் அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது. அதற்காக நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியிருந்தும் பல இடங்களில் நாள்தோறும் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன என்ற செய்தியைப் பார்க்கிறோம். இன்று காலை செய்தித் தாளில்கூட ஒரு செய்தி வந்திருக்கிறது. வானொலியிலும் அந்தச் செய்தியைக் கேட்டிருக்க முடியும். திருநெல்வேலி மாவட்டத்தின் விவசாயிகள் சங்கத் தலைவரும் முன்னாள் மாவட்ட ஜனதா கட்சித் தலைவருமான திரு பால் பாண்டியன் அவர்கள் போக்குவரத்து பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதிக் கொண்டதன் காரணமாக இறந்துவிட்டார் என்று பத்திரிகையில் செய்தியைப் பார்த்தேன். பல்லாயிரக் கணக்கான போக்குவரத்துப் பெருந்துகள் தினந்தோறும் சென்று கொண்டிருக்கும் இந்த மாநிலத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாக பல்வேறு சம்பவங்கள் நடைபெறுகின்றன. இதற்கு என்ன காரணம் என்பதைப் பரிசீலித்து இந்த அவையில் அரசு ஒரு அறிக்கையை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துப் பெருந்துகளில் இந்த அளவுக்கு விபத்துக்கள் ஏற்படுவதற்கு என்ன காரணம்? அரசு போக்கு



வரத்துப் பெருந்துகள் சார்பில் எவ்வளவு தவறு? சாலை உணர்வற்ற வாகன ஓட்டிகளின் காரணமாக எவ்வளவு விபத்துக்கள் ஏற்பட்டன போன்ற புள்ளி விவரத்தை எடுத்து இனி அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் செய்வதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

பெருந்துப் போக்குவரத்தில் விபத்துக்கள் நிகழ்வதற்குக் காரணங்கள் பல இருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில், முக்கியமான காரணம், பஸ் ஓட்டுகிற டிரைவர்களுக்கு இருக்கிற வசதிக் குறைவுதான். தற்போது 200 மைல் பஸ் ஓட்டிய பிறகுதான் டிரைவருக்கு விடுப்பு கொடுக்கிறார்கள். நாகர்கோயிலிலிருந்து திருச்சிவரை ஒருவர் பஸ் ஓட்டி வருகிறார். அங்கிருந்து சென்னைக்கு இன்னொரு டிரைவர் ஓட்டி வருகிறார். இதற்கு முன்பு மதுரையில் டிரைவர்கள் மாற்றப்பட்டார்கள். இப்போது திருச்சியில்தான் மாற்றப்படுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு துறையிலும் 8 மணி வேலை, 10 மணி வேலை என்றிருந்தாலும், பஸ் ஓட்டுவதைப் பொறுத்தவரையில், 6 மணி நேர வேலை என்று நிர்ணயிக்க வேண்டும், ஒரே இடத்திலிருந்து கொண்டு 6 மணி நேரம் ஓட்டிய பிறகு அவருக்குக் கண்டிப்பாக ஓய்வு கொடுக்க வேண்டும். அதோடில்லாமல் வாரந்தோறும் அந்த ஓட்டுநர்கள் மருத்துவ மனையில் 'செக்-அப்' செய்து கொள்ளும்படி அரசாங்கம் வசதியைச் செய்து தர வேண்டும். ஒரு எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் ஒரு டிரைவர் ஏறுவதற்கு முன்னால் அது திருவனந்தபுரத்திலிருந்து புறப்படுகிற பஸ்ஸானாலும் சரி, டிரைவருக்கு மெடிக்கல் செக்-அப் இருக்க வேண்டும். அநேகமாக 3, 4 இடங்களிலிருந்துதான் பஸ்கள் பயணத்தைத் துவக்குகின்றன. இப்படி ஆங்காங்கே அவர்களுக்கு மெடிக்கல் செக்-அப்-புக்கு வசதி செய்து தர வேண்டும். டிரைவர்களைப் பொறுத்தவரையில், குறைவான சம்பளத்தில் அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்று கூடுதலான சம்பளம் தரப்படுவதாகச் சொல்லப்படலாம். ஆனால் இருக்கிற விலைவாசியை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அவர்களுடைய சம்பளமும் வருவாயும் மிகக் குறைவுதான் என்பதை எல்லோரும் அறிவோம். மாதம் ரூ. 1,500 சம்பளம் வாங்குகிற அதிகாரியேகூட 20 ஆம் தேதியானால் யாரிடம் கடன் கேட்கலாம் என்றுதான் இருக்கிறார். வெள்ளையாக சட்டை போட்டிருப்பார். இன்னும் சொல்லப்போனால், நல்ல டெரிலின் சட்டை போட்டிருப்பார். அவரைப் பார்த்தால், கடன் கேட்க வந்தவரைப் போலிருக்காது. ஆனால் கொஞ்சம் அன்பாகப் பேசினால் நம்மிடம் உடனே கடன் கேட்பார். என்னிடம் யாரும அப்படிக் கேட்டதில்லை. நான் இதைச் சொல்லும்போது, யாரையும் மனதில் வைத்துக் கொண்டு சொல்லவுமில்லை. நாட்டில் இன்றையதினம் இந்த நிலைமைதான் இருந்து கொண்

டிருக்கிறது என்பதற்காக இதைக் குறிப்பிடுகிறேன். இந்த நிலையில் மாதம் 300, 400, 500 ரூபாய் வாங்குகிற ஓட்டுநர்கள் அல்லது நடத்துநர்கள் எப்படி வசதியோடு வாழ முடியும்? அவர்களுக்கு சம்பளத்தை அதிகப் படுத்தாவிட்டாலும், வசதிகளையாவது அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பஸ் நிலையங்களிலே அவர்கள் தங்குவதற்கு அறைகள் கட்டித் தந்திருக்கிறார்கள். அங்கே பஸகள் விடிய விடிய வந்து கொண்டேயிருக் கின்றன. இந்த நிலையில் அவர்களால் எப்படி நிம்மதியாகத் தூங்க முடியும்? அவர்களுக்கு அமைதியான இடத்தில் தங்குவதற்கான அறை களைக் கட்டித் தர வேண்டும். படுத்தவுடனே சற்று நிம்மதியாகத் தூங்கு வதற்கு குஷன் படுக்கைகளைத் தந்தாலும் நல்லது. இன்றையதினம் ரூ. [illegible]க்குக் குறைவாக எங்கேயும் சாப்பிட முடியாது. அவர்களுக்கு நல்ல உணவு வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் சொன்ன நல்ல உணவைச் சாப்பிட வேண்டு மென்றால், ரூ. 15 வேண்டும். இப்படி அவர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமாக பஸ்களில் ஏற்படும் விபத்துக்களைக் குறைக் கலாம். அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதன் மூலம் நமது உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பைத் தேடிக்கொள்ள முடியும்.

அடுத்து, ஓட்டுநர்களுக்கும் நடத்துநர்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டும். பலமுறை நான் பஸ்ஸில் வரும்போது பார்த்திருக்கிறேன். ஏதாவது ஒரு டயர் பங்க்ச்சர் ஆகிவிட்டது என்று சொன்னால், அந்த டயரை மாற்றுவதற்குத் தேவையான இன்ஸ்ட்ருமெண்ட் ஒன்றுகூட பஸ்ஸில் இருப்பதில்லை. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருந்தாலும், அறிக்கையில் தான் அவைகள் இருக்கின்றனவே தவிர, பஸ்களில் இல்லை என்பதை நானே நேரில் பார்த்திருக்கிறேன். அப்படியே தேவையான உபகரணங்கள் பஸ்ஸில் இருந்தாலும் அந்த டிரைவருக்கோ கண்டக்டருக்கோ அதை மாற்றத் தெரிவதில்லை. பெரிய பணக்காரர் மோட்டார் கார் வைத்துக்கொண்டு ஓட்டும்போது, நிற்கிற இடத்திலேயே அதை நிறுத்திவிட்டு பிறகு மெக்கா னிக்கிற்குச் சொல்லி அனுப்புவதுபோல் நிலைமை இருக்கிறது. எனவே முழுச் சம்பளமும் அதற்கு மேலும் ரூபாய் 200 கொடுத்து பயிற்சி அளிப் பதைப்போல் இவர்களுக்கும் சம்பளம் கொடுத்துப் பயிற்சி அளிக்க வேண்டும். கல்லூரி ஆசிரியர்கள் பெறும் பயிற்சி நமக்கு அறிவை அதிகப்படுத்துகிறது



என்றால், இவர்கள் பெறும் பயிற்சி நமது உயிரையும் உடமையையும் பாது காக்கிறது என்பதை உணர்ந்து, அவர்களுக்கு மெக்கானிக்கல் பயிற்சி ஓரளவுக்காவது கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேருந்துகளால் விபத்துக்குள்ளாகிறவர்களுக்கு நல்ல முறையில் நஷ்ட ஈடு கொடுக்க அரசு முன்வர வேண்டும். எனக்குப் பல கடிதங்கள் இது தொடர்பாக வருகின்றன. நானும் அமைச்சர் அவர்களுக்கே பல கடிதங்கள் எழுதியிருக்கிறேன். நாகர்கோயிலுக்கு அருகில் ஏற்பட்ட பஸ் விபத்தில் படுகாயமுற்ற பையன் ஒருவன் அங்கே மருத்துவ மனையில் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். இப்போது அவனைத் திருநெல்வேலி மருத்துவ மனைக்கு மாற்றியிருப்பதாக அறிகிறேன். அவன் ஒருவேளை குணமடைந்து வந்தாலும் அவனால் ஒரு வேலையும் செய்ய முடியாது. அந்த அளவுக்கு அவனுடைய கால் போய்விட்டிருக்கிறது. எனவே அப்படிப்பட்டவர்களுக்கு போக்குவரத்து நிறுவனத்திலேயே ஏதாவது ஒரு வேலை தர முன்வர வேண்டும். டிக்கட் கொடுப்பது போன்ற சிறிய வேலைகள் ஏதாவது கொடுக்கப்படலாம். கட்டபொம்மன் போக்கு வரத்துத் துறை இயக்குநர் அவர்களுக்கு இது குறித்து எழுதியதற்கு உடனே வேலை கொடுக்க முடியாது என்று பதில் வந்து விட்டது. குறைந்த பட்சம் 'பார்க்கலாம்' என்றாவது பதில் சொல்லலாம். அதற்கு மாறாக 'கிடையாது' என்றே பதில் வந்து விட்டது. இப்படிப்பட்ட போக்கைக் கைக்கொள்ளாமல், விபத்தால் ஊனமுற்றவர்களுக்கு இத்துறை நல்லமுறை யில் உதவ முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவன் ஊன முற்றதற்கு நம்முடைய பேருந்தும் காரணமாக இருந்தது என்பதை மனதில் கொண்டு அவனுக்கு உதவ முன்வர வேண்டும்.

தென்காசியில் அப்பாசலி என்ற ஒருவர் பாண்டியன் ரோடுவேஸ் கார்ப்பரேஷன் பஸ் விபத்தில் சிக்கி, மருத்துவ மனையில் சேர்ந்து குண மடைந்து வருகிறார். அவர் பலமுறை பி.ஆர்.சி. போக்குவரத்து நிறுவனத் திற்குக் கடிதம் எழுதியிருக்கிறார். தன்னுடைய நிலையை விளக்கமாகச் சொல்லி, போக்குவரத்து நிறுவனத்திலிருந்து பண உதவியைக் கேட்டிருக் கிறார். கடைசியாக எழுதிய கடிதத்தில் அவர் என்ன கேட்டார் என்றால் ". . . தங்கள் பஸ் விபத்தால் பாதிக்கப்பட்ட எனக்கு மருத் துவச் செலவுக்கும் எனது குடும்பத்தைக் காப்பாற்றவும் நான் முழுமையாக குணமடைகிறவரை பொருளுதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். . . ." இப்படி உருக்கமாக அவர் எழுதியிருந்தும் இதுவரை அவருடைய கோரிக்கை கவனிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவரை

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 19

போக்குவரத்து நிறுவனத்தின் சார்பில் யாரும் போய்ப் பார்க்கவுமில்லை, கேட்கவுமில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் அதற்கு என்று ஒரு பிரிவு, 'விங்' ஏற்படுத்தினால்கூட நல்லது என்று நினைக்கிறேன். விபத்தில் சிக்கிக் கஷ்டப்படுகிறவர்களுக்கு போக்குவரத்து நிறுவனத்தின் மூலம் உதவுகிற நிலை ஏற்பட வேண்டும். நிவாரணப் பணிகளை நல்ல முறையில் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பேருந்துகள், அதிலும் குறிப்பாக, நெடுந்தூரப் பயணம் செய்யும் பேருந்துகள் குறித்த நேரத்தில் வந்தனவா என்பதைப் புள்ளிவிவரம் மூலமாக அரசு வெளியிட ஏற்பாடு செய்ய வேண்டும். போக்குவரத்துத் துறையில் இத்தனை பஸ் சர்விஸ்கள் நடத்தப்படுகின்றன, அதில் இத்தனை பஸ்கள் குறித்த நேரத்தில் வந்திருக்கின்றன என்ற விவரம் வெளியிடப்பட வேண்டும். தற்போது ரெயில்கள் எல்லாம் மிகவும் தாமதமாகத்தான் வந்து கொண்டிருக்கின்றன. அதைப் பார்த்து நாம் சமாதானம் அடையக் கூடாது. போக்குவரத்துத் துறையில் உள்ள பேருந்துகள் குறித்த காலத்தில் ஓரிடத்தைச் சென்றடைகின்றன என்ற நிலையை உருவாக்க வேண்டும். இன்றையதினம் போக்குவரத்துக் கழகங்களின் நிருவாகிகள் பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் போக்குவரத்து நிறுவனங்கள் எப்படிச் செயல்படுகின்றன என்று பார்த்து வருகிறார்கள். ஒரு மூன்று மாதங்களுக்கு முன்பாக நான் பத்திரிகையில் ஒரு செய்தி படித்தேன். ஜப்பான் நாட்டில் ஒரு எக்ஸ்பிரஸ் ரயில் 15 நிமிட நேரம் காலதாமதமாக அது போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்தது. போய்ச் சேர்ந்த அந்த இடத்தில் நிருவாகத்தின் சார்பில் ஒரு அறிவிப்பைச் செய்திருந்தார்கள். அதாவது "இந்த எக்ஸ்பிரஸ் ரயில் 15 நிமிட நேரம் காலதாமதமாக வந்ததற்காக நாங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அது மட்டுமல்லாமல், 15 நிமிட நேரம் காலதாமதமாக வந்ததால், இதை எக்ஸ்பிரஸ் சர்வீசாகக் கருதாமல், சாதாகரண பாசஞ்சர் சர்வீசாகக் கருதி, இரண்டிற்குமுள்ள கட்டண வித்தியாசத் தொகையை பயணிகள் பெற்றுக்கொள்ளலாம்" என்று அறிவிப்பு செய்திருந்தார்கள். அந்த நாட்டில் அந்த அளவுக்கு முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே அப்படி பஸ் சர்விஸ் கட்டணத்தைத் திருப்பித் தர வேண்டுமென்று நான் கேட்கவில்லை என்றாலும், பேருந்துகள் சரியான நேரத்திற்கு அவை சென்றடைய வேண்டிய இடங்களைச் சென்றடைகின்றன என்ற நிலைமையை மட்டுமாவது உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1979 ஏப்ரல் 19] (திரு. ம. சங்கரலிங்கம்)

நேற்றைய முன்தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவையில் இம் மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, பல்வேறு சலுகைகளைத் தொழிலாளர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இதில் என்னுடைய கருத்து என்னவென்றால், தொழிலாளர்களைக் கலந்து, தொழிலாளர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் என்னென்ன கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்து அதற்குப் பிறகு இப்படிப்பட்ட அறிவிப்புகளைச் செய்தால் நல்லதாக இருக்கும். இப்போது அவ்வாறு நடைபெற்றதாக எனக்குத் தெரியவில்லை. 1977 செப்டம்பரில் போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஐக்கியக் குழுவின் சார்பில் வேலை நிறுத்தம் செய்யப்பட்டு, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த தொழிலாளர்களில் மட்டும் 8000 பேர் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டு, அவர்கள் 15 நாட்களுக்குக் காவலில் இருந்தார்கள். அப்போது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பவானியிலிருந்து இடைக்கால நிவாரணமாக ரூ. 27 அறிவித்து மற்றவற்றை பேச்சுவார்த்தை மூலம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று அறிவித்தார்கள். அதன் காரணமாக அப்போது வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. பின்னர் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தொழிலாளர்களிடையே தங்களுடைய 35 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்த மீண்டும் போராட்டம் நடத்த வேண்டுமா வேண்டாமா என்று நிர்ணயிக்க வாக்கெடுப்பு நடத்தியபோது, அதில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த தொழிலாளர்களில் மட்டும் 12,000 பேர் வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று வாக்களித்தார்கள்.

(பிற்பகல் 6-10)

1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் தேதி அன்று பெரியார் திடலில் போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஒரு மாநாட்டை நடத்தினார்கள். அதிலே பல கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்துவது என்ற நிலை வந்தபோது, போக்குவரத்துத் துறையினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக் கூடாதென்று ஓர் அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது. பிறகு அவர்களுடைய சம்பளத்தில் 10 ரூபாயும், பஞ்சப்படியில் 30 ரூபாயும் உயர்த்தப்பட்டன. எஞ்சிய 33 கோரிக்கைகளை பேச்சுவார்த்தைகளின் மூலமாகத் தீர்க்கப்பட வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டது. ஆனால் இன்று அக்கோரிக்கைகளைத் தீர்க்க பேச்சுவார்த்தை நடைபெறவில்லை. சர் அவர்கள் அளித்த சலுகைகளில் இந்த 33 கோரிக்கைகளில் ஒன்று

கூட இடம்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கோரிக்கைகளை அறிவிப்பதற்கு முன்னால் தொழிலாளர் பிரதிநிதிகளை அழைத்து வைத்துப் பேசி, அவர்களிடம் அரசினுடைய கருத்தை எடுத்துச் சொல்லி, பிரதிநிதிகளுடைய கருத்தையும் அறிந்து அறிவித்திருந்தால், நலமாக இருந்திருக்கும். ஆகவே தொழிலாளர்களுடைய நலனைக் கருதி, நாட்டு மக்களினுடைய நலனைக் கருதி, அறிவிப்புகள் அமைகிற வகையில் நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் செய்த அறிவிப்புகளில் மிகக் கவர்ச்சிகரமான திட்டம், வீட்டுவசதித் திட்டம். அதைக் குறித்து இந்து பத்திரிகையிலே கூட கட்டம் கட்டி செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். மற்ற பத்திரிகைகளிலும் செய்தி போட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்தபோது, தொழிலாளராக இருந்தால் பரவாயில்லையே என்று நான் கூட நினைத்தேன். ஆனால் செய்தியின் உள்ளே படித்தால், தொழிலாளர்கள் முதலில் 500 ரூபாயைக் கட்ட வேண்டுமென்றும் அதற்குப் பிறகு 4,500 ரூபாயைக் கட்ட வேண்டுமென்றும், அப்படி கட்டினால்தான் 11,000 ரூபாய் மதிப்புள்ள வீடு கிடைக்குமென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** சென்னையிலே உள்ள வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அளிக்கப்படும் வீடுகளுக்கு மட்டும் அப்படிக் கட்ட வேண்டும். போக்குவரத்துக் கழகங்களெல்லாம் ஒன்று சேர்ந்து செய்கிற ஒரு மாற்றுத் திட்டம் இருக்கிறது. அத்திட்டம், தொழிலாளர்களுக்கு எத்தவித பண இழப்பும் ஏற்படாத வகையிலே நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக நடத்தப்படுகிற திட்டத்தைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கேரளாவிலே கூட்டுறவுத் துறையின் மூலமாக பல இடங்களிலே வீடுகளைக் கட்டித் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்குச் சமயம் கிடைத்தால், திருவனந்தபுரத்திற்குச் செல்லும்போது, அங்கிருக்கக்கூடிய உள்ளூர் மெடிக்கல் காலேஜ் ஹாஸ்டலில் நுழைந்து பார்த்தால், தெரியும். அங்கே கூட்டுறவு வார்ட் என்று தனியாகப் போட்டிருப்பார்கள்.. கூட்டுறவுத் துறையிலிருந்து பணம் செலவழித்துக் கட்டியிருக்கிறார்கள். என்.ஜி.ஓ.க்களும், நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துத் தொழிலாளர்களும் அதைப் பயன்படுத்திக்கொள்ளுக்கிறார்கள். அந்த வார்டில் அவர்களுக்கு 10



ரூபாய் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. அதே வார்டில் மற்றவர்கள் சென்றால், 25 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அதிலிருந்து எவ்வளவு ரூபாய் வாடகையாக ஈட்டப்படுகிறது என்று கூட்டுறவுத் துறையிலிருந்து ஆடிட் செய்து அதை அவர்கள் எடுத்துக் கொண்டு, 25 வருடங்களுக்குப் பிறகு அந்தக் கட்டிடத்தை மருத்துவ மனைக்கே சொந்தமாக்கிவிடுகிறார்கள். அதைப் போலவே தமிழ்நாட்டிலும், கூட்டுறவுத் துறையின் மூலமாகவும், உலக வங்கியின் மூலமாகவும், எல்.அய்.சி. யின் மூலமாகவும், எங்கெங்கு பணம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் பணத்தைப் பெற்று வீடுகளைக் கட்டிக் கொடுத்து மாதா மாதம் தொழிலாளர்களிடமிருந்து ஒரு தொகையைப் பெற்றுக்கொண்டு, பிறகு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அவர்களுக்கே அவைகளைச் சொந்தமாக்கிவிடலாம். அவர்கள் கட்ட வேண்டிய தொகை ஏதாவது எஞ்சியிருக்குமானால், அவர்கள் ரிடையர் ஆகும்போது கொடுக்கக் கூடிய பிராவிடென்ட் ஃபண்ட், கிராஜுவிட்டி போன்றவற்றிலிருந்து கழித்துக் கொள்ளலாம். இந்த மாதிரியான ஒரு திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை உட்பட எல்லாப் பகுதிகளுக்கும் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

8.33 சதவீதம் போனசைக் கொடுக்கவிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மிகச் சிறப்பாகவும், விரிவாகவும் எல்லோரும் பாராட்டத்தக்க வகையில், பிற மாநிலத்துப் போக்குவரத்துக் கழகங்களின் மேனேஜிங் டைரக்டர்கள் இங்கே வந்து பார்த்து எப்படி நம்முடைய போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்தில் ஓடுகின்றன என்று பார்க்கக்கூடிய வகையில் விளம்பரம் தேடி அதற்கேற்ற வகையில் இலாபத்தைக் காட்டியிருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்தைக் கொடுக்கிறபோது, இவர்கள் கொடுக்கிற போனஸ் 8.33 சதவீதம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு 1971ஆம் ஆண்டிலேயே 8.33 சதவீதம் போனசைக் கொடுத்திருக்கிறது. 1969 ஆம் ஆண்டில்தான் பேருந்துகள் தேசியமயமாக்கப்பட்டன. 1971-லே 8.33 சதவீதமும், 1972 ஆம் ஆண்டிலே 10.5 சதவீதமும், 1973ஆம் ஆண்டிலே 12.5 சதவீதமும், 1974ஆம் ஆண்டிலே 15 சதவீதமும் கொடுக்கப்பட்டன. 1975ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தாலும், அப்போது மிசா இருந்ததால் போனஸ் கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசு சட்டம் போட்டதால், 4.15 சதவீதம்தான் கொடுக்கப்பட்டது. 1976ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்லை. 1977ஆம் ஆண்டிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வந்ததற்குப் பிறகு, 8.33 சதவீதம் போனசை அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அப்போதிருந்த போனஸ் சட்டம் வேறு; தற்போதிருக்கிற போனஸ் சட்டம் வேறு. இப்போதிருக்கிற சட்டத்தின்படி தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக நஷ்டத்திலே இயங்குகின்ற போக்குவரத்துக் கழகங்களில் போனஸ் கொடுக்க வேண்டியதில்லை. தற்போதுள்ள சட்டத்தில் கொடுக்க வேண்டியதில்லை என்ற நிலை இருந்தாலும், நாங்கள் 8.33 சதவீதம் போனஸ் கொடுப்பது என்பது இந்த ஆட்சியின் தொழிலாளர் கொள்கையைக் காட்டுகிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, அப்போதிருந்த சட்டப்படியும் போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இருந்தால், போனஸ் கொடுக்க வேண்டியதில்லை. நஷ்டத்திலே இருந்தாலும், தொழிலாளர்களின் மீது கொண்ட அக்கறையின் காரணமாக போனஸ் கொடுக்கப்பட்டது. இந்த அரசும் அதே அளவுக்குத் தொழிலாளர்களின் மீது அக்கறை எடுத்துக் கொண்டு போனஸ் வழங்க வழிவகையைக் காண வேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

பல சிக்கன நடவடிக்கைகள் எடுத்திருப்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நாம் இலாபம் பெற வேண்டுமென்ற நிலையிலே பஸ் சர்வீஸ்களை நடத்தவில்லை. நாட்டுடைமையாக்கப்பட்ட தொழில்கள் அத்தனையும் இலாப நோக்கம் கொண்டவையல்ல. நாட்டினுடைய நலன் தான் அதன் முதல் நோக்கம். இலாபம் இல்லையென்றாலும், நட்டம் இல்லாமல் பார்த்துக்கொள்ளுவதுதான் நம்முடைய நோக்கம். 1,354 பேருந்துகள் இந்த ஆண்டில் வாங்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு இதே அவையில் நடைபெற்ற கூட்டத்திலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள், இந்த அரசு டாட்டா கம்பெனிகளிடம் 200 பென்ஸ் பஸ்களை வாங்கியிருக்கிறதென்றும், அதைவிட லேலண்ட் கம்பெனியிடத்திலே வாங்கினால் சிறப்பாக அமையுமென்றும் கூறி, அதற்கான பல காரணங்களையும் எடுத்துக் காட்டினார்கள். இரண்டு கம்பெனிகளும் நல்ல கம்பெனிகளாக இருந்தாலும்கூட, இரண்டு கம்பெனிகளுடைய சாதனங்களும் நல்லவைகளாக இருந்தாலும்கூட லேலண்ட் சேசிஸ்தான் மிகச் சிறந்ததாக, அதிகச் செலவு ஏற்படுத்தாததாக இருக்கிறது என்பது போக்குவரத்துத் துறையிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். பொதுவாக காரை வாங்குவதில் கூட பலர் சிக்கனத்தைக் கருதி, ஃபியட் வாங்குவதைவிட அம்பாசிடர் கார் வாங்குவதைத்தான் விரும்புவார்கள்.



ஏனென்றால் அம்பாசிடரில் எந்தவிதக் கோளாறும் வராது. ஆனால், ஃபியட்டில் கோளாறு வந்து ஒரு புஷ்ஷை மாற்றினால் கூட, 50 ரூபாய் செலவாகும்; இதற்கு அம்பாசிடரில் 22 ரூபாய்தான் செலவாகும். அதைப்போலவே லேலண்ட் சேசிஸ் வாங்கினால், அதனால் இரண்டாண்டு காலத்திற்கு எந்தச் செலவும் வராது. அப்படி வந்தாலும், பென்ஸ் சேசிஸ்க்கு செலவிட வேண்டிய அளவுக்கு வராது. இதைத்தான் சென்ற ஆண்டே நாங்கள் எடுத்துச் சொன்னோம். பென்ஸ் பஸ் வாங்கினால், நஷ்டத்திலே கொண்டு போய்விடுமென்று சொன்னோம். இப்போது உண்மையிலேயே நஷ்டத்திலே கொண்டு போயிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு உண்மையிலேயே ஒரு யோகமான அரசு. ஏனென்றால் தேருக்கு சறுக்கு வைத்து நடத்திச் செல்லுவதைப் போல, பின்னுக்கு வரப் போவதை முன்கூட்டியே நாங்கள் இந்த அரசுக்கு எடுத்துச் சொல்லி வழி நடத்திச் செல்கிறோம். இவ்வளவு நல்ல முறையில் எடுத்துச் சொல்லுகிற எதிர்க் கட்சியைப் பெற்றிருப்பதால், இது யோகமான அரசு என்று குறிப்பிட விரும்புகிறேன். (சிரிப்பு).

சென்னையிலே பல்லவன் போக்குவரத்துப் பணிக்காக டாட்டா கம்பெனியிலிருந்து சேசிஸ் வாங்க ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். அந்த வண்டியில் இப்போது இம்ப்ரூவ்ட் சேசிஸ் வந்திருக்கிறது. அதிலே மாடர்ன் டிவைஸ், நவீன இயந்திரங்களைப் பொருத்தியிருக்கிறார்கள். 1210-ஈ என்ற சேசிஸ்தான் மிகவும் நல்லது. ஆனால் இவர்களுக்கு இப்போது 1210-டி என்ற சேசிஸ்தான் தரப்பட்டிருக்கிறது. தரப்பட்ட சேசிஸ் எல்லாம்

(பிற்பகல் 6-20)

2, 3 மாதத்திற்குள்ளாகவே பழுதுக்குள்ளாகி, பல்வேறு நஷ்டத்திலே இந்தப் பேருந்துக் கழகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் என் குற்றச்சாட்டு. கேரண்டி பீரியட், உறுதி அளித்த பீரியட், இதற்குள்ளாகவே கிளச் அசெம்பிளி, கிளச் டிஸ்க், கிளச் ரிலீசிங், பேரிங் இவைகளையெல்லாம் பல தடவைகள் மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. ஒரு வருடத்திற்கு லேலண்ட் சேசிஸில் ரிப்பேர் வராது. ஆனால் பென்ஸ் சேசிஸில் ரிப்பேர் வந்திருக்கிறது. இந்தப் பொருள்களையெல்லாம் மாற்ற வேண்டுமானால், ரூ. 500 செலவாகும். கேரண்டி பீரியடிலேயே 3, 4 தடவைகள் வந்திருக்கின்றன. பிளீட் நெ. சி. 795 லே 7 முறை மாற்றப்பட்டிருக்கிறது. உ. நெ. 888-ல் பத்து முறைகள் மாற்றப்பட்டிருக்கிறது. ஒர்க்ஷாப்பிலே உள்ள ரெகார்டைப் பார்க்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். லேலண்டில் உள்ள

என்ஜினை எடுத்துக் கொண்டால், அதில் இரண்டு ஆண்டுகளுக்குப் பழுதே வராது. பென்சிலும் வராது. ஆனால் அரசு ஆர்டர் கொடுத்து வாங்கிய சேசிஸில் பழுது வந்திருக்கும். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், அரசுக்குத் தரப்பட்ட டி. 6. சேசிஸில் இந்த காரண்ட்டி காலத்திற்குள்ளாகவே இன்ஜின் பழுதுபட்டிருக்கிறது. ரிப்பேர் பண்ணுவதற்கும் இன்ஜினை மாற்றுவதற்கும் என்று பல என்ஜின்கள் கொண்டு வந்து நிறுத்தப் பட்டிருக்கின்றன என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதிலே உள்ள பிஸ்டன் போய்விட்டது. என்ஜின் பேரிங் போய்விட்டிருக்கிறது. என்ஜினையே மாற்ற வேண்டிய நிலைமையின் சி. நெ. 775, சி. நெ. 873, சி. நெ. 802, சி. நெ. 815, சி. நெ. 839 பேசில்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் அங்கே இருக்கின்றன. பி. டி. ஓர்க் ஷாப்பிலே விடப்பட்டிருக்கிறது. நான் சென்னையை மாத்திரம்தான் சொல்கிறேன். மற்ற தடங்களிலே எப்படி இருக்கிறது என்பதை குழுவைப் போட்டுத்தான் அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டும் என்று நான் சொல்கிறேன். நான் சொல்வதையே வைத்துக் கொண்டு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஈ சேசிஸ் வந்திருந்தால், இந்த ரிப்பேர்கள் எல்லாம் வராது. ஈ சேசிஸிற்கும் டீ சேசிஸிற்கும் வித்தியாசம் ரூ. 15,000. அப்படி 200 வண்டிகள் வாங்கியிருக்கிறார்கள். ஈ சேஸிஸுக்கான அதிக விலையைக் கொடுத்து டீ சேசிஸை வாங்கி விட்டார்கள் என்பதுதான் எனக்கு வந்திருக்கிற தகவல். அப்படி என்றால் ரூ. 30 லட்சம் நஷ்டத்திலே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். இதற்கு யார் பொறுப்பு என்று கண்டுபிடித்து பொறுப்பானவர்களைக் கண்டறிந்து அதற்குக் காரணம் என்ன என்பதை இந்த அவைக்கு அறிவிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வண்டிகளிலே சிக்கனமாகச் செலவு செய்கிறோம் என்று சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் வருகின்ற வண்டியிலிருந்து சென்னையில் சாதாரணமாக ஓடுகின்ற வண்டிகள் வரையில் பார்க்கிறோம். அந்த வண்டிகளிலே சன் மைக்கா போட்டிருக்கிறார்கள். பார்ப்பதற்கு வண்டிகள் அழகாக இருக்கின்றன. அப்படி வைத்திருப்பதில் நமக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் நான் சொல்வது சிக்கனமாக இருக்க வேண்டும் என்பதுதான். பேருந்துகளில் வைத்திருக்கக்கூடிய குஷனில் இருக்கக்கூடிய சீட்டுகளிலே சன் மைக்கா வைத்திருக்கிறார்கள். பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது. இப்போது பஸ்களில் இடம் கிடைக்காமல் தொங்கிக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறார்கள். அதிலே இப்போது இயங்குகின்ற கதவு பொருத்தி வைத்திருக்கிறார்கள். அவ்வளவு பேரும் உள்ளே நின்று



கொண்டு புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையில் மேலும் கீழும் பார்த்து அழகை அங்கே ரசிக்கவா முடியும்? அங்கே அது தேவையா? ஒரு சன் மைக்கா சீட் ஸ்கொயர் ஃபுட் ரூ. 10 ஆகிறது. சன் மைக்காவுக்கு சுமார் 200 சதுர அடி தேவைப்படும் என்றாலும் ரூ. 2,000 அதிகச் செலவு ஏற்படுகிறது. அது தேவையா? சாதாரண மக்கள் எல்லாம் சன் மைக்கா குஷனிலே போகக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஒரு வேளை சிக்கனத்தைவிட ஆடம்பரமாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

நேற்றுக்கூட வானொலியிலே ராஜாஜி அவர்களைப் பற்றி, திரு. ஏ. கே. செட்டியார் என்பவர் பேசியதைக் கேட்டேன். திரு. ராஜாஜி அவர்கள் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது, ஒரு பெரியவரிடம் சொன்னதாகச் சொன்னார்கள். "செலவைச் சுருக்க வேண்டும். ஆடம்பரச் செலவைக் குறைக்க வேண்டும். ஆண்டுக்காண்டு வருவாயைப் பெருக்க முடியாத நேரத்திலே, செலவு அதிகமாகச் செய்யக்கூடாது" என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபோல, நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளிலே நாம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்கிறேன். நாட்டு மக்கள் அதைத்தான் சொல்கின்றார்கள். அரசு சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் சொல்கின்ற அளவுக்கு சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவில்லை என்று நான் சொல்கிறேன், மக்கள் சொல்கிறார்கள். ஒரு வண்டிக்கு 200 சதுர அடி என்று கணக்கு எடுத்தாலும் ரூ. 2,000 அதற்குச் செலவு ஆகும். அப்படி 200 வண்டிகளுக்குப் பார்க்கும்போது, அதற்கு ரூ. 4 லட்சம் என்று வந்துவிடுகிறது. புதிய வண்டிகளைப் பார்த்தவுடனே, எல்லாவற்றிலும் குஷன் சீட்டுகள் வைக்க வேண்டுமென்று நாம் ஆசைப்பட்டிருக்கிறோம். முதலில் ஒரு நூறு காருக்கு சாதாரண பிளைவுட் போடப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு ஏதோ தவறு ஏற்பட்டிருக்கிறது. நூறு வண்டிக்கு சன் மைக்கா போட்டிருக்கிறார்கள். அதன் பிறகு மற்ற வண்டிகளுக்கும் போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வண்டியாகக் கொண்டு வந்து முன்னாலேயே செய்திருந்ததை மாற்றியிருக்கிறார்கள். கலெக்ஷனை நிறுத்திவிட்டு இதைச் செய்திருக்கிறார்கள். இது தேவையா என்று கேட்கிறேன். முதலிலே சிவப்புப் பெயின்ட் அடித்திருந்தது. திடீரென்று ஒரு நூறு காருக்கு சிவப்புப் பெயிண்ட் அடித்தார்கள். அங்கேயுள்ள டெப்போக்களில் கொண்டு போய் நிறுத்தினார்கள். பிறகு பச்சைப் பெயிண்ட்டாக இருக்க வேண்டும் என்று பச்சை பெயிண்ட் அடித்திருக்கிறார்கள். கலர் மேனியா என்றுகூடச் சொல்வார்கள். அதை ஒரு வியாதி என்றுகூடச் சொல்வார்கள்.

[திரு. ம. சங்கரலிங்கம்] 1979 ஏப்ரல் 19]

அதற்கு மேனியா என்று சொல்வார்கள். வண்ணம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் பணம் ரொம்பச் செலவாகிறது. இன்றைக்கு அப்படி சிவப்புக் கலர் வண்டிகளை பச்சை கலரில் மாற்றுவதற்கு ஒரு தடவைக்கு ஸ்ப்ரே பண்ணினால் ரூ. 700 ஆகும்.

நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அமைச்சராக இருந்தபோது ஸ்கூட்டர் வைத்திருப்பவர்கள், ஸ்கூட்டரில் போகும்போது விபத்துகள் காரணமாக உயிர் இழப்பதைத் தடுக்க வேண்டும் என்பதற்காக, அவர்களை அவர்கள் காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக, ஹெல்மெட் தலையில் அணிந்து கொண்டு போக வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி அவர் சொன்னவுடனே என்ன சொல்லப்பட்டது? அதற்கு ஒரு கமிஷன் போட வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு என்குயரி கமிஷன் போட வேண்டுமென்று சொல்லப்பட்டது. அப்படி நாங்கள் சொல்லவில்லை, நாட்டு மக்கள் சொல்கிறார்கள். நாங்கள் நம்புகிறோம் அதனால் இந்த விஷயத்தில் நாங்கள் உங்களுக்குச் சொல்கிறோம் என்பதை மாத்திரம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரி நடவடிக்கைகள் காரணமாக சுமார் ரூ. 60 லட்சம், ரூ. 70 லட்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 200 வண்டிகள் வாங்கியதிலும், அதற்கு ரிப்பேர் செய்ததிலும், அதிலே செய்த ஆடம்பரச் செலவுகள் காரணமாகவும் இவ்வளவு தொகை நஷ்டமாகியிருக்கிறது. அது உண்மைதானா? அதைப்பற்றி ஆராய்ந்து பார்த்து, இதற்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டறிய வேண்டும். அதிலே யார் யாருக்கு எந்த அளவுக்கு, என்ன பங்கிருக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு, இந்த அவையினுடைய குழு ஒன்றை அமைப்பதற்கு, மேலவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன், அந்தக் குழுவினுடைய அறிக்கையை அவையில் வைக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பி. ஆர். டி. ஒர்க் ஷாப்பிலே கூட தவறு நடந்திருக்கிறது. அங்கே ஒரு ஸ்டோர்-கீப்பர் தவறுகள் செய்திருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு மணி நேரம் பேச வேண்டுமென்று அவகாசம் கேட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1979 ஏப்ரல் 19]

**திரு. ம. சங்கரலிங்கம்:** அவர் இருக்கின்ற அந்த ஸ்டோர்ஸிலே இருந்து ஆர்டிக்கிள்ஸ் அனுப்புகிறார்கள். அவர்கள் கணக்கேடுகளில், ஏடுகளில் ஏன் 12 என்று இருந்தால், அதை 42 என்று திருத்தி விடுகிறார்கள். 12-ஐ 72 என்று திருத்திவிடுகிறார்கள். அப்படித் திருத்தி அதிகமான பொருள்களைப் பெற்று அவைகளைப் பயன்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். தொழிலாளர்கள் இதைக் கேட்டு கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவிக்கவில்லை. ஏன் இந்த அரசு அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். சுமார் 1½ லட்ச ரூபாய்க்குப் பொருள்கள் களவு போயிருப்பதாகச் சொல்கிறார்கள்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலே, 'குண்வட்டம்' என்ற பணிமனையிலே 17 லாட் ஸ்க்ராப் ஏலம் போட்டார்கள். அந்த ஸ்க்ராப்பை வெளியே கொண்டுபோகும்போது, அதற்குள் அலுமினியத் தகடுகளை வைத்துக் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்கிறார்கள். ரூ. 50,000 மதிப்புள்ள பொருள்கள் போய்விட்டிருக்கின்றன என்று அந்த வட்டாரத்திலே சொல்லப்படுகிறது என்பதை நம்பத்தகுந்தவர்கள் சொல்கின்றார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்)

(பிற்பகல் 6-30)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவரவர்களே, பொறுப்புமிக்க எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஒருவித ஆதாரத்தையும் அவையிலே தராமல், 'சொல்லப்படுகிறது', 'பேசப்படுகிறது' என்று கூறுவது அழகல்ல. ஆதாரம் ஏதேனும் தந்து, இப்படி நடந்திருக்கிறது; இப்படிப்பட்ட குற்றம் நடந்திருக்கிறது என்று சொல்ல வேண்டும் அல்லது எழுத்து மூலமாகத் தர வேண்டும். ஏதேனும் புழுதி வாரித் தூற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு, மிகவும் பண்புள்ள எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இப்படிப் பேசுகிறார்களே என்று எண்ணும்போது, மிகவும் வேதனையாக இருக்கிறது. ஆதாரத்தைத் தந்துவிட்டு, எதை வேண்டுமானாலும் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** உண்மையிலேயே புழுதி வாரித் தூற்ற வேண்டுமென்று நினைக்கிறவன் நானல்ல. புழுதியை வாரித் தூற்றினால் நம் தலையிலேயும் புழுதிதான் விழும். நாம் பன்னீரைத் தெளித்தால், நம் மீதும் பன்னீர் விழும். நாம் மாலை போட்டால், நமக்கும் மாலைதான் கிடைக்கும், நாம் கல் போட்டால் நமக்கும் கல்தான் கிடைக்கும். இந்த

நாட்டின் பொது நிதி இது. விசாரணை செய்து, சம்பந்தப்பட்ட தொழிலாளர்களிடமும், பொறுப்பாளர்களிடமும் தகவல் கேட்டு, அதன் மூலமாகக் கிடைத்த செய்தியைத்தான் சொல்லியிருக்கிறேன். நல்ல முறையில் அதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்றுதான், அவைக் குழுவையும் கேட்டேன். நான் நீதி விசாரணை கேட்கவில்லை. அமைச்சர் அவர்கள் நியமனம் செய்யும் மூன்று உறுப்பினர்கள் நான் சொல்லும் இடங்களுக்குச் சென்று, விசாரித்து, தவறில்லை என்று கூறினால், அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன். உண்மை என்றால், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களால் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட பேருந்து நாட்டுடைமை இயக்கம் பெரும் வெற்றி பெற வேண்டும், அழிந்து போகக் கூடாது என்ற உணர்வோடு எடுத்து வைக்கப்பட்ட நல்ல கருத்துக்கள், எங்கள் கருத்துக்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்குப் பழி சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் அல்ல. நல்ல எண்ணத்திலே சொல்லப்பட்ட கருத்துக்கள் என்று சொல்லி, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவரவர்களே, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் சாலைப் போக்குவரத்து பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் அரிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் நல்கினார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சில நல்ல ஆலோசனைகளைக் கூறி, ஆதாரமற்ற முறையிலே, புழுதி வாரித் தூற்றுவது போன்று, சில குற்றச்சாட்டுகளையும் கூறினார்கள். அனைத்திற்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசுக்கு ஆலோசனை நல்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள், அரசுப் பேருந்துகளுக்காக பென்ஸ் சேசிஸ் ஏன் வாங்கப்பட்டதென்றும், லேலண்ட் சேசிஸ் விட பென்ஸ் சேசிஸ் தரம் குறைந்தது என்றும் கூறி, அதனால் பல இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும் எடுத்துக் கூறினார்கள். அது பற்றிய உண்மையான நிலையை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு பென்ஸ் சேசிஸ்களை, உலக வங்கியினுடைய திட்டத்தின் கீழ் வாங்க வேண்டுமென்ற முடிவு இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு எடுத்த முடிவல்ல. இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னாலேயே அந்த முடிவு எடுக்கப்பட்டது. சென்னை மாநகரத்தைப்





பொறுத்தவரையில், உலக வங்கியினுடைய திட்டத்தின் கீழ் பல மேம்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று முடிவெடுத்தபோது, இந்தப் பேருந்துகளை வாங்கலாமென்ற முடிவை பல்லவன் போக்குவரத்துக் கழகம் எடுத்துவிடவில்லை என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மேம்பாட்டிற்காக உலக வங்கியின் மூலமாகக் கடன் பெற்று பஸ் சேசிஸ்களை வாங்குவதற்காக அவர்கள் குளோபல் டெண்டர் என்று உலக அளவில் ஒரு ஒப்பந்தப் புள்ளி கேட்டு, உலகின் பல பகுதிகளிலும் உள்ளவர்கள் போட்டியிட்டு, அந்த ஒப்பந்தப் புள்ளிகளை ஆய்வு செய்வதற்கு ஒரு டெக்னிகல் கமிட்டி அமைத்து, அவர்கள் எந்தப் பேருந்துகள் உலக வங்கியிடமிருந்து கடன் பெறக் கூடிய அளவிற்கு தகுதி உடையன என்பதை முடிவு செய்தார்கள். அந்த டெக்னிகல் கமிட்டி டெண்டர்களை ஆய்ந்தபோது, லேலண்ட் சேசிஸ், பென்ஸ் சேசிஸ் இரண்டுதான் ஒப்பந்தத்திற்கு வந்த ஏனைய சேசிஸ்களைவிட தரமானவை என்று முடிவெடுக்கப்பட்டது. அதில் எந்த சேசிஸை வாங்குவது என்பது பற்றி டெக்னிகல் கமிட்டி ஆராய்ந்து, ஒரு முடிவிற்கு வந்தது. லேலண்ட் சேசிஸைப் பொறுத்தவரையில், அவர்கள் 'வைகிங்' என்ற மாடலைத் தர முன்வந்தார்கள்; டெக்னிகல் கமிட்டி அது குறித்து ஆய்வு நடத்தியது. அதன் விலை அதிகமாக இருந்தது. தவிர 'வைகிங்' சேசிஸ்கள் தயாரித்து, அவற்றைத் தமிழகத்தில் மட்டுமல்லாமல், இந்தியாவிலேயே முதன்முறையாக இன்ட்ரடியூஸ் செய்தபோது, அதில் பல குறைபாடுகள் இருப்பதாக டெக்னிகல் கமிட்டி கூறியது. அதில் ஒன்று, வைகிங் சேசிஸ் டயர்கள் மிக எளிதில் தேய்மானம் அடைந்துவிடுகின்றன. காரணம் அதிலுள்ள இயந்திரக் கோளாறுதான் என்று டெக்னிகல் கமிட்டி கூறியது. அதோடு, அதற்கு டீசலும் அதிகமாகச் செலவாகிறது என்ற கணக்கையும் எடுத்து, அதன் காரணமாக 15 லட்சம் ரூபாய் அதிகமாகிறதென்றும், தொடர் நஷ்டம் ஏற்படுமென்றும் கூறியது. டயர் தேய்மானத்தைப் பொறுத்த வரையில், வைகிங் சேசிஸ்களை உபயோகப்படுத்தும்போது, தொடர் நஷ்டமென்ற முறையில் ஏற்படுமென்பதால், அது கூடாதென்ற முடிவிற்கு வந்தார்கள். மாறாக பென்ஸ் சேசிஸ்களைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறியதுபோல 'டி' சேசிஸ் வாங்கவில்லை, 'ஈ' சேசிஸ்தான் வாங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். யாரோ தவறான தகவல்களை எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். பென்ஸ் சேசிஸ்களைப் பொறுத்த வரைக்கும், டெக்னிகல் கமிட்டி நடத்திய ஆய்வின் அடிப்படையில், அதிலே

டீசல் மிக்க குறைவாகச் செல்வாகிறது என்றும், லைகிங் சேசிஸில் ஏற்படுகிற தேய்மானம் இதில் ஏற்படுவதில்லை என்றும் குழு முடிவு செய்து, அந்தப் பரிந்துரையை உலக வங்கி ஏற்று, உலக வங்கி பென்ஸ் சேசிஸ்களைத்தான் வாங்க வேண்டுமென்று கூறிய பிறகுதான், அவைகள் வாங்கப்பட்டன. ஆளுநர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடவடிக்கைகள் தொடரப்பட்டு, இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு அது முடிவுற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசுகின்றபோது, இன்னொன்றையும் கூறினார்கள். தமிழ் நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்களில் பென்ஸ் சேசிஸ்கள், இந்த ஆட்சி வந்த பிறகுதான், வாங்கப்பட்டதென்ற தவறான தகவலை யாரோ அவருக்குத் தர, அதை ஆய்ந்துகூடப் பார்க்காமல், விசாரித்துப் பார்க்காமல், நிதானத்திற்குப் பேர்போன எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஏன் அதைக் குறிப்பிட்டார் என்பது எனக்குப் புரியவில்லை. பேரவை எதிர்க் கட்சித் தலைவரான கலைஞர் அவர்கள் முன்பு போக்குவரத்துத் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தார்கள். அப்போதுகூட பென்ஸ் சேசிஸ்கள் வாங்கப்பட்டன. அது குறித்து சில ஆதாரங்களை உங்களுக்குக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலவை எதிர்க் கட்சித் தலைவரவர்களின் மாவட்டத்தில் இயங்கும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் அதிகப்படியாக பென்ஸ் சேசிஸ் பேருந்துகள்தான் இருக்கின்றன என்பதை எதிர்க் கட்சித் தலைவரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் அந்த சேசிஸ்கள் எல்லாம் வாங்கப்பட்டது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதுதான் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பல்லவன் போக்குவரத்துக் கழக மெட்ரோ பிரிவில் உள்ள 1,185 சேசிஸ்களில் 23.2 சதவிகிதம் பென்ஸ் சேசிஸ்களாக இருக்கின்றன. அவற்றில் பல சேசிஸ்கள் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களின் கட்சி ஆட்சியில் இருந்தபோது வாங்கப்பட்டவைதான். பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலுள்ள 520 சேசிஸ்களில் 17.6 சதவிகிதம் பென்ஸ் சேசிஸ்கள் இருக்கின்றன. அவற்றில் பல மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களின் கட்சி ஆட்சியில் இருந்தபோதுதான் வாங்கப்பட்டன. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் 73.8 சதவிகிதம் பென்ஸ் சேசிஸ்கள் இருக்கின்றன. அவையும் எதிர்க் கட்சித் தலைவரவர்களின் கட்சி ஆட்சியில் இருந்த நேரத்தில் பென்ஸ் கம்பெனியிலிருந்து வாங்கப்பட்டிருக்கின்றன. சேரனில் 52 சதவிகிதம் பென்ஸ் சேசிஸ்கள்



வாங்கப்பட்டிருக்கின்றன. கட்டபொம்மன், சேரன் போக்குவரத்துக் கழகங்கள், சேசிஸ்களில் சிறந்தது பென்ஸ் சேசிஸ்தான் என்ற முடிவெடுத்து, மற்ற போக்குவரத்துக் கழகங்களும் அந்த சேசிஸ்களைத்தான் வாங்க வேண்டுமென்று, நிர்வாகிகள் கூட்டத்தில் சொல்லி, அதை மற்ற போக்குவரத்துக் கழகங்களும் வாங்க வேண்டுமென்ற நடைமுறையைக் கொண்டு வந்தார்கள். சோழன் போக்குவரத்துக் கழகத்தில் 22.6 சதவிகிதம்; பல்லவன் புற நகர் பிரிவில் 12.8 சதவிகிதம்; அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் 20.4 சதவிகிதம்; பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் 30 சதவிகிதம் பென்ஸ் சேசிஸ்கள் இருக்கின்றன. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு அவற்றை வாங்கவில்லை. இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னரே அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் இயங்கி வந்தன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதையொட்டி

(பிற்பகல் 6-40)

தற்போது லேலண்ட் சேசிஸைப் பொறுத்தவரை, லைக்கிங் மாடல் சேசிஸில் இருந்த குறைபாடுகளை அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறைபாட்டைக் களைந்து, புதுப்பித்து அண்மையிலே தான் அதைச் சரி செய்திருக்கிறார்கள் என்பதையும் அதைப் பற்றிப் பத்திரிகையிலே கூட அவர்கள் விளம்பரம் செய்தார்கள் என்பதையும் நான் கூறிக்கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், அசோக் லேலண்ட் சேசிஸைத்தான் வாங்க வேண்டும் அல்லது பென்ஸ் சேசிஸைத்தான் வாங்க வேண்டுமென்ற நிலை இல்லை. சேசிஸைப் பொறுத்தவரை, இன்றைக்கு பாரதத்தில் இருக்கின்ற பலவிதமான சேசிஸ்களில் இரண்டு விதமான சேசிஸ்கள் தான் ஒப்பிட்டுப் பார்க்கும்படியாக இருக்கின்றன என்பதுதான் அதற்குக் காரணம் என்கின்ற உண்மையை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத் நான் கூறுகிறேன். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இந்திய ஜிமிக்குச் சொந்தமான டாடா சேசிஸை வாங்கக் கூடாது என்று சொன்னார்கள். அவர்கள் காலத்தில் அவர்கள் அப்படி வாங்கிவிட்டு இப்பொழுது எங்களைப் பார்த்து திருத்தச் சொல்வது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. மாறாக லேலண்ட் கம்பெனியைப் பொறுத்தவரை, அது இந்தியாவுக்குச் சொந்தமான கம்பெனி அல்ல. அது இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு ஆங்கிலேய கம்பெனிக்குச் சொந்தமானது. அதற்காக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஏன் வக்காலத்து வாங்குகிறார்கள் என்பது தான் எனக்குப் புரியவில்லை. அதில் மர்மம் இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இன்னொரு உண்மையும் நான் கூற விரும்புகிறேன். லேலண்ட் சேசிஸைப் பொறுத்தவரை, எங்களுக்குப் பலவித சேசிஸ்

தேவைப்படுகிறது. காரணம் கிராமப்புறங்களுக்கு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டதைப் போல பேருந்துகளை விட வேண்டியிருக்கிறது. இன்னும் பரவலாக விட வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய ஆவல். ஆனால் கடந்த பன்னெடுங்காலமாக சேசிஸ் வேண்டுமென்று லேலண்ட் கம்பெனி ஆகட்டும் அல்லது லேலண்ட் கம்பெனியாகட்டும், கேட்டால், கேட்கின்ற சேசிஸ் கிடைப்பதில்லை. இதுதான் உண்மை நிலை. எங்களுக்கு அவர்கள் கொடுப்பதாக ஒத்துக் கொண்ட சேசிஸைக் கூட அவர்கள் கொடுக்காத நிலை இருக்கிறது. உதாரணத்திற்கு 300 சேசிஸ் கொடுப்பதற்கு மாறாக 30 சேசிஸையும், 200 சேசிஸ் கொடுப்பதற்கு மாறாக 20 சேசிஸையும் கொடுக்கின்ற நிலை இருக்கிறது. அரசு கேட்கின்ற சேசிஸை அப்படியே கொடுக்காத நிலை இருக்கின்ற காரணத்தால், கஷ்டமாக இருக்கிறது. அதனால் அந்த இரண்டு கம்பெனிகள் குறித்தும் மத்திய அரசிடம் கேட்டு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றி அரசு சிந்தித்து வருகிறது. அதோடு மட்டுமல்லாமல், மத்திய போக்குவரத்து அமைச்சர் திரு. சாந்திரம் அவர்களிடம் கூட இதுபற்றி நாங்கள் தெளிவாகக் கூறியிருக்கின்றோம். இரண்டு முறை நான் கூட நேரில் கூறினேன். அரசுப் பேருந்துகளைப் பொறுத்தவரை, கழகப் பேருந்துகளைப் பொறுத்தவரை, முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கூறினேன். அவர்கள் சேசிஸ் தருவதில் கடைப்பிடிக்கின்ற தாமதத்தையும் தயக்கத்தையும் பற்றிச் சொல்லி அந்த நிலை மாற வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். தொடர்ந்து அவர்கள் சேசிஸ் தராத நிலையைக் கடைப்பிடிப்பார்களானால், அரசு பேருந்துகளை கிராமப்புறங்களில் விடுவதில் பல இடர்ப்பாடுகள் ஏற்படும் என்கின்ற காரணத்தால், மத்திய அரசு உடனடியாக இது குறித்துக் கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறியிருக்கின்றோம். இன்னொரு ஆலோசனையைக் கூட நாங்கள் கூறியிருக்கின்றோம். அந்த இரண்டு சேசிஸ் உற்பத்தி செய்கின்ற கம்பெனிகளைப் பொறுத்தவரைக்கும், சேசிஸ் விநியோகத்தை மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். மாநிலங்களுக்கு அவற்றைப் பகிர்ந்து அளிக்க வேண்டும்; அப்படி பகிர்ந்து அளிக்கும்போது, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு முன்னுரிமை தந்து, சேசிஸ்களை வழங்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டிருக்கிறோம். இதுதான் உண்மை நிலை என்பதை தான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.





மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் பல்வேறு அரிய ஆலோசனைகளை வழங்கினார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசுகின்றபோது, உண்மையிலேயே நான் சற்று அதிசயித்து விடக்கூடிய அளவுக்கு மிக ஆக்கபூர்வமான ஆலோசனைகளைக் கூறினார்கள். அதற்காக அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கூறிய பல ஆலோசனைகளில் ஒன்றாக நிர்வாக சீரமைப்பு பற்றி பல நல்ல ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். உதாரணமாக நெடுஞ்சாலைத் துறையிலே 4 வகைப் பிரிவுகள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. அவற்றோடு கிராம சாலைக்காக தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்துவது மிக நல்லது என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஏற்கெனவே அரசு "ரூரல் ரோட் அன்ட் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டி" என்கின்ற ஒரு அமைப்பினை நிறுவ நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய ஒரு முயற்சி நடைமுறைக்கு வருகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் கூறியது மாதிரி, தனியாக தலைமைப் பொறியாளர் ஒருவரைப் போடுகின்ற வாய்ப்பு ஏற்படும்.

தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களைத்தான் நெடுஞ்சாலைத் துறையில் உயர் பதவியில் நியமிக்க வேண்டுமென்ற ஆலோசனையையும் கூறியிருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறை போன்ற துறைகளில் உயர் பதவியில் பொறியியல் வல்லுநர் போன்றவர்கள் இருக்க வேண்டும் என்பது தான் அரசினுடைய கொள்கையும். அப்படி இருந்தால் தான் அரசு எடுக்கின்ற முடிவுகள், எண்ணுகின்ற எண்ணங்கள், திட்டங்கள் ஆகியவற்றையெல்லாம் நடைமுறையில் செம்மையாக அவர்கள் ஈடேறச் செய்ய முடியும். அப்படி இருந்தால் தான், அந்தத் துறையின் அடிமட்டத்தில் இருக்கின்றவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு காரியங்களை நல்ல முறையில் செய்ய முடியும். மேலும் அது 'ரெட் டேப்பிசம்' என்று சொல்லுவார்களே அதுபோல் இருக்கின்ற தடைகளை நீக்க உதவிகரமாக இருக்கும் என்ற முறையில் அதுபற்றி முடிவு எடுப்பதுபற்றி அரசு ஆராயும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

'ப்ளட் விங்' என்ற முறையில் வெள்ள நிவாரணப் பணிக்காக தனியாக ஒரு சீப் எஞ்சினியரை நிரந்தரமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கூறினார். தமிழகத்தில் வெள்ளப் பிரச்சினையை, வறட்சிப் பிரச்சினையைப் பொறுத்தவரை, அவ்வப்போது ஏற்படுகின்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரை, இதை நிரந்தரமாக நிறுவுவதன் மூலம் வெள்ளம் எந்தெந்தப் பகுதிகளில் வந்து நிரந்தர சேதத்தைத் தொடர்ந்து

பல்லாண்டுகாலமாக உண்டாக்கி வருகிறது என்பதைக் கண்டறிய வாய்ப்பாகவும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்பாகவும் இருக்கும். அந்த முறையில் தனியாக வெள்ள நிவாரணப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவது பலனுள்ளதாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய எண்ணத்தைத் தெரிவித்துள்ளார்கள். அவர் அவ்வாறு யோசனை தெரிவித்த பிறகு, நான் என்னுடைய செயலாளருடனும், பொறியாளருடனும் கலந்து பேசி இதுபற்றிக் குறிப்பிட்டபோது, அவர்களும் நல்ல யோசனை என்கின்ற கருத்தினைத் தெரிவித்தார்கள். "Decentralisation in anything will only be resulting tn. better action". என்கிற முறையிலே மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தினைத் தெரிவித்தார்கள். சூப்பரின்டென்டிங் எஞ்சினியர்களைப் பொறுத்த வரை, சென்னையிலே 8 அலுவலகங்கள் குவிந்து இருப்பதால், மாவட்டங்களிலே அடிக்கடி நேரடியாக கீழ் மட்டத்திலே பணியாற்றிக் கொண்டிருப்பவர்களோடு தொடர்பு கொண்டு, செம்மையாகப் பணியாற்ற வாய்ப்பில்லை என்றும் அந்தப் பணிகள் மாவட்டங்களில் பணி நடைபெறுகின்ற இடத்திற்குப் பக்கத்தில் இருந்தால், செம்மையாகப் பணிகள் நடைபெற வாய்ப்பு உண்டாகும் என்கின்ற கருத்தினையும் ஆலோசனையையும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். அந்த நல்ல ஆலோசனையை அரசு பரிசீலனைக்கு எடுத்து நடைமுறைக்குக் கொண்டு வருவதுபற்றி ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பல்வேறு நல்ல ஆலோசனைகளைக் கூறினார்கள். குறிப்பாக "டூரிஸ்ட் சீசன் டிக்கெட்ஸ்" வழங்க நடவடிக்கை மேற்கொண்டால், பலனுள்ளதாக இருக்கும் என்று கூறினார்கள். இதைப்பற்றி சுற்றுலா அமைச்சருடன் கலந்து ஆலோசித்தேன். அவர்களும் இந்தத் திட்டம் பலனுள்ள திட்டமாக இருக்கும் என்று கருதுகின்ற காரணத்தால், அதை நடைமுறைக்கு விரைவில் அரசு கொண்டுவர நடவடிக்கை எடுக்கும்.

அரசுப் பேருந்து நிலையங்களாக இருந்தாலும் சரி, கழகப் பேருந்து நிலையங்களாக இருந்தாலும் சரி அல்லது தமிழகத்தில் இருக்கின்ற வேறு எந்த ஒரு பேருந்து நிலையமாக இருந்தாலும் சரி, அங்கே இருக்கின்ற பஸ் ஸ்டாண்டுகளில் நல்ல வசதிகள், பாத்ரூம் பெசிலிட்டீஸ், டாயிலெட் பெசிலிட்டீஸ் போன்ற வசதிகள் இல்லையென்று கூறினார்கள். தமிழகத்தில்





இருக்கின்ற பெருவாரியான பேருந்து நிலையங்கள் அரசுப் பேருந்து நிலையங்களாக இல்லை என்பது இதற்கு முதற்காரணம். மாறாக அவை உள்ளாட்சித் துறையின் கீழ் இருக்கின்ற முனிசிபல் பேருந்து நிலையங்களாகும். முனிசிபாலிடிகளைச் செம்மையாக நிர்வகிக்க ஏற்கெனவே பணமற்ற நிலையில் அவை இருப்பதாலும், தனியாரிடம் அவர்கள் ஏலத்தில் விட்டு விடுவதாலும், அந்தத் தனியார்கள் அவற்றைச் செம்மையாகப் பராமரிக்காததாலும், தமிழகத்தில் இருக்கக் கூடிய பேருந்து நிலையங்கள் வேதனை தாக்கூடிய அளவுக்கு வசதியற்ற பேருந்து நிலையங்களாக இருந்து கொண்டிருக்கின்றன என்கின்ற உண்மையை நான் மறுக்கவில்லை. இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, அரசு இன்றைக்கு ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை பேருந்து நிலையங்களிலும், முனிசிபாலிட்டி பேருந்து நிலையங்களிலும் உரிய வசதிகளை ஏற்படுத்தி, குறைகளைக் களைகின்ற வகையில் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துக் கழகங்களைக் கொண்டு, அந்தப் பேருந்து நிலையங்களைப் பராமரிக்கின்ற பணியை மேற்கொண்டு நல்ல சுகாதார வசதி செய்வது, குடிநீர் வசதி செய்வது, கழிவறை வசதி செய்வது, பயணிகள் ஓய்வறை வசதி செய்வது போன்ற வசதிகளை தமிழகமெங்கும் படிப்படியாக நடைமுறைப்படுத்துவது பற்றியும் முதலில் முதற் கட்டமாக கிரேட் 1 முனிசிபாலிட்டிகளுக்கு நடைமுறைப்படுத்தி விட்டு, பிறகு மற்ற சாதாரண முனிசிபாலிட்டி பேருந்து நிலையங்களுக்கு இதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்கிற முடிவினையும் அரசு ஏற்கெனவே எடுத்திருக்கிறது.

அடுத்தபடியாக, சென்னை நகரத்திலே சிக்கன நடவடிக்கையாக அல்ல, ஆனால் 'ரேஷனலைசேஷன் ஆப் ரூட்ஸ்' என்ற வகையிலே பஸ் ஸ்டான்ட்கள், பேருந்து நிற்கும் இடங்கள் மிக மிக அருகாமையிலே இருக்கின்ற நிலையை மாற்றி, ஓரளவு பயணிகள் நடக்கிற மாதிரி இடங்களாக அமைக்க அரசு பரிசீலித்து நடைமுறைக்குக் கொண்டுவர முடிவு செய்யும்.

நடைபாதைக் கோயில்கள் இன்றைக்கு நெடுஞ்சாலைக்குப் பக்கத்திலே இருக்கிற காரணத்தால், போக்குவரத்துக்குத் தொல்லையாக இருக்கிறது என்கின்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கூறி, மதத்தில் நம்பிக்கை உடைய, கோயில்களுக்குச் செல்கின்ற நானே சொல்லுகின்றேன் என்றும் கூறினார்கள். நெடுஞ்சாலைகளுக்குப் பக்கத்திலே ஏற்படுத்தியிருக்கின்ற நடைபாதைக் கோயில்களை அகற்றுவதன் மூலம் பல நடைமுறைக் குறைபாடுகளைப் போக்க முடியும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

[திரு. சி. பொன்னையன்] [1979 ஏப்ரல் 19

(பிற்பகல் 6-50)

ஆதலால் நடைபாதைகளிலே இருக்கின்ற கோயில்களை அகற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நடைபாதைகளிலே இருக்கின்ற கோயில்களை அகற்றுவதில் அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகின்றபோது பல நல்ல அரிய யோசனைகளைக் கூறினார்கள். குறிப்பாக பஞ்சப்படி உயர்வு அதிகமாக கொடுக்கப்படும்போது, 16 மாதங்களாக தொழிலாளிகளுக்கு பஞ்சப்படி உயர்வு அக்ரிமென்ட்டில் உள்ளபடி தரப்படவில்லை என்று குற்றஞ்சாட்டினார்கள். அப்படி இருக்காது என்று நான் நம்புகிறேன். அப்படி இருந்தால் அக்ரிமென்ட்-ல் என்ன இருக்கிறதோ அதன் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி வழங்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

240 நாட்களுக்கு மேல் ஒரு தொழிலாளி பணியில் இருந்தால், அவருடைய பணி நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று தான் போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. 6 மாதமாக அவர்கள் தற்காலிகமாகப் பணியாற்றிய பின்னரும், நிரந்தரமற்ற முறையில் 240 நாட்களுக்கு மேல் அவர்கள் தொடர்ந்து பணியாற்றினாலும், அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். 240 நாட்களுக்கும் மேல் அவர்களைத் தற்காலிகமாக வைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையல்ல. அப்படி இருந்தால், அந்த நிலைமையைக் களைய நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

நீதிமன்றத்தின் மூலமாக குற்றவாளியல்ல என்று தீர்ப்பினைப் பெற்ற பிறகு, தொழிலாளி ஒருவருக்கு மீண்டும் பணி தரப்படவில்லை என்றும் அது தவறு என்றும் சொன்னார்கள். நானும் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அந்த நிலை இருக்காது. ஒரு பணியாளரைப் பொறுத்தமட்டில், நீதிமன்றம் அவர் குற்றவாளியில்லை என்று சொல்லிவிட்ட பிறகு, அவர் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

சி.ஐ.டி.யூ. கான்ஃபரன்ஸ்க்கு லாரிகளில் வந்தவர்களையெல்லாம் தடுத்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களின் விழாவிற்கு வந்த லாரிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் கூறினார்கள். அது தவறு. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே கூறியிருக்கிறார்கள். லாரிகளிலே ஆட்களை ஏற்றி வருவது தவறு என்று சொல்வதற்குக் காரணம் இதுபோன்ற



1979 ஏப்ரல் 19] [திரு. சி. பொன்னையன்]

நிகழ்ச்சிகளில் பல விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுகிறது. அதோடு, அந்த லாரிகள் பல வன்முறைச் சம்பவங்களுக்கும் பயன்படுத்தப்பட்டன. இம்மாதிரி காரணங்களையொட்டித்தான் லாரிகளில் ஆட்களை ஏற்றிவரக் கூடாது என்று உத்தரவு போட்டு, அது அமுல்படுத்தப்பட்டது. அந்த அடிப்படையில் தான் இந்த ஆணை இன்றைக்கும் நடைமுறையில் அமுல்படுத்தப்படுகிறது. யார் மீதும் எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல், தவறு செய்தவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, நாட்டுடைமையாக்கப்படும் கொள்கையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நாட்டுடைமையாக்கப்படும் கொள்கையிலே இந்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசால் காட்டப்பட்ட தீவிரத்தைக் காட்டவில்லை என்றும், அந்தக் கொள்கையில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது என்றும், கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்க்கின்றபோது அது தெரிகிறது என்றும் கூறினார்கள். அது தவறான கணிப்பு என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சியினுடைய கொள்கையைப் பொறுத்தவரையில், அவர்கள் ஏற்றுக்கொண்ட கொள்கையான நாட்டுடைமைக் கொள்கையைத்தான் இந்த அரசும் பின்பற்றி வருகிறது. தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பைப் படித்துவிட்டு, அதிலே சாதகமான ஒரு வரியைப் படித்துவிட்டு, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நாளைய தினம் அவர்களுடைய கட்சிப் பத்திரிகையிலே கூட தவறாக ஒரு செய்தி வரும் வாய்ப்பை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நாட்டுடைமைக் கொள்கையிலே முதலிலிருந்து கடைசி வரை படித்து அனைத்து வரிகளும் ஒட்டுமொத்தமாகத் தருகின்ற கருத்து என்ன என்று பார்க்க வேண்டுமே தவிர, தமிழாக்கம் செய்யப்பட்டபோது "தேசிய நெடுஞ்சாலைகளிலும், மாநில நெடுஞ்சாலைகளிலும் நிலையான போக்குவரத்துப் பணிகளை நடத்தி வருகின்ற பேருந்து உரிமையாளர்களை வெளியேற்றிவிட்டு பொதுமக்களின் நன்மையைக் கருதி அந்த வழித் தடங்களிலே, போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பேருந்துகளை விடுவதனால் அதிக நன்மை ஏற்பட்டுவிடப் போவதில்லை." என்று குறிப்பிட்டிருக்கின்ற ஒரு வரியை மட்டும் அவருக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு அதற்கு முன்னாலே இருக்கும் பல வரிகளை எடுக்காதது வருந்தப்பட வேண்டிய ஒன்று. 1969-லேயிருந்து, 1976 வரை 5.5 சதவீதத்திலிருந்து 47.7 சதவீதமாகத்தான் போக்குவரத்து வழித் தடங்களை நாட்டுடைமையாக்குவதில் இருந்த முன்னேற்றத்திற்குப் பதிலாக 979-ல் 53.2 சதவீதமாக அந்த முன்னேற்றம் அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் படித்த வரியைப் படித்துவிட்டு, இன்னொரு வரியையும் படித்தார்கள். அது எனக்கு சரியாக விளங்கவில்லை. முதலில் பொதுப் போக்குவரத்து, அரசின் உடைமையாக இருப்பதோடு அதனை அரசே நிர்வகிக்க வேண்டும் என்பது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை என்று சொல்லிவிட்டு, அடுத்த வரியில் 'அதனால் எந்தவிதமான நன்மையும் ஏற்பட்டுவிடப் போவதில்லை' என்று சொன்னால், இந்த அரசு இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்கிறதா, இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : முதல் பாராவில் சொல்லப் பட்டிருப்பது 'நேஷனலைசேஷன்' பற்றி. இரண்டாவது பாராவில் சொல்லப்பட்டிருப்பது 'ரேஷனலைசேஷன்' பற்றி. நாட்டுடைமையாக்குவதில் இந்த அரசின் கொள்கை ஆக்கபூர்வமானது. அதன் அடிப்படையில் தான். . . .

திரு. கோ. சி. மணி : எப்படி இருந்தாலும், நிலையான போக்குவரத்துப் பணிகளை நடத்தி வருகின்ற பேருந்து உரிமையாளர்களை வெளியேற்றிவிட்டு, பொதுமக்களின் நன்மையைக் கருதி அந்த வழித் தடங்களில், போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பேருந்துகளை விடுவதனால் அதிக நன்மை ஏற்பட்டுவிடப் போவதில்லை என்று குறிப்பிட்டிருப்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மன்னிக்க வேண்டும். நான் ஒத்துக்கொள்ளவில்லை. எந்தவிதமான பலனும் ஏற்படாது என்று குறிப்பிடவில்லை. அதிக நன்மை ஏற்பட்டுவிடப் போவதில்லை என்றாலே படிப்படியாக என்றும் பொருள் வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

திரு. கோ. சி. மணி : அந்தக் கொள்கையை நாம் புரிந்துகொண்டாலும், அந்தக் கொள்கையால் அதிக நன்மை ஏற்பட்டுவிடப் போவதில்லை, தேவையில்லை என்ற கருத்துத்தான் தொனிக்கிறது. அது அந்த பாராவில் இருக்க வேண்டியது அவசியமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அந்தப் பொருள் தொனிப்பதாக மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எண்ணக் கூடாது. அரசுக்கு அந்த எண்ணம் இல்லை. ஆங்கிலத்திலே இருக்கும் குறிப்பைப்



பார்த்தால் 'Our approach towards nationalisation is a positive one, mainly providing transport facilities to the teeming millions in the rural areas. In trying merely to displace the existing operators from established routes in the National Highways and State Highways and by substituting the same by the buses of transport corporations, obviously, the interests of the travelling public will not be considerably served.' இதனுடைய பொருள் என்னவென்பதைப் பார்க்க வேண்டும். (திரு. கோ. சி. மணி எழுந்தார்) தயவு செய்து மன்னிக்க வேண்டுகிறேன். அடுத்த புத்தகத்திலே ஆங்கிலத்திலே இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் கேட்பது நல்லது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் சொல்லிக்கொள்கிறேன், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் நாட்டுடைமைக் கொள்கையிலே தொய்வு ஏற்பட்டிருக்கிறதா என்ற அய்யம் வேண்டாம். அடுத்த பக்கத்திலே "Hence rationalisation of existing routes and planned formulation of new routes are absolutely essential before we think of any wholesale nationalisation." என்று சொலப்பட்டிருக்கிறது. முழு நாட்டுடைமையாக்குவதற்கு முன்னர் ரூட் பிளானிங் என்று சொல்லக்கூடிய அளவுக்கு Route planning Rationalisation of existing routes and planned formulation of new routes are absolutely essential என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறதேயொழிய, நாட்டுடைமையாக்கும் கொள்கையை விட்டுவிட்டோம் என்பது பொருளல்ல. அதை விட்டுவிட வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நாட்டுடைமைக் கொள்கையைப்பற்றிக் கூறுகிறபோது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வேறொன்றையும் கூறினார்கள். நாட்டுடைமைக் கொள்கையில் என் தொய்வு இருக்கிறது ? ஒருவேளை அந்த வழித் தடங்களில் பேருந்துகளை ஓட்டுகின்ற தனியார் பேருந்து உரிமையாளர்களுக்குச் சலுகை அளிக்க வேண்டும் என்று அவர்களுக்காக இந்தக் கொள்கையிலிருந்து நீங்கள் பின்வாங்குகிறீர்கள் என்று குற்றம் சாட்டினார்கள். அந்த அய்யப்பாடு அவர்களுக்கு வேண்டாம் என்று இந்த

சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். யாருக்கும், யாருடைய நன்மைக்காகவும், யாருடைய செல்வாக்குக்காகவும் இந்தக் கொள்கையிலிருந்து நாங்கள் பின்வாங்க மாட்டோம். மேலும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, அவர்களுடைய கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, இந்த நாட்டுடைமைக் கொள்கை கொண்டுவரப்பட்டு, அவர்கள் வேகமாக அந்தக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவந்தார்கள் என்றும், தற்போதுதான் அந்தக் கொள்கையில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது என்றும் கூறினார்கள். அது தவறு. எங்களுடைய ஆட்சிக் காலத்தில். . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் நேரம் மேலும் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையாக, முழு நாட்டுடைமைக் கொள்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அந்த முயற்சியை ஆரம்ப காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்தது, நான் மறுக்கவில்லை. ஆனால், நடைமுறைக்குக் கொண்டுவர முயன்றபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் என்ன தொய்வு ஏற்பட்டது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 7-00)

முதலாவதாக, தனியார்களுக்கு எந்தவிதமான சலுகையும் அளிக்கப்படக் கூடாது என்ற கருத்தில் அண்ணா அவர்கள் இருந்தபோது, முழுமையாக நாட்டுடைமைத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுதான் முதலில் சலுகைகள் அளிக்கப்பட்டன; பத்து பேருந்துகள் வரை தனியார் ஒருவர் வைத்துக் கொள்ளலாம் என்ற சலுகை முந்திய ஆட்சியின்போது கொடுக்கப்பட்டது. இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், தனியார்களுக்கு 10 பேருந்துகள் இருப்பது மிக அதிகமான சலுகையாகும் என்றுதான் அண்ணா அவர்களின் எண்ணத்தைக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே முழு நாட்டுடைமைக்கும் கொள்கையை அமுல்படுத்தினோம். இதை ஏன் மற்ற பகுதிகளுக்கு விஸ்தரிக்கவில்லை என்று கேட்டார்கள். முழுவதுமாக நாட்டுடைமையாக்கும் கொள்கை 1973 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது.





அதற்குப் பிறகு 1976 ஆம் ஆண்டு வரை திராவிட முன்னேற்றக் கழகம் தான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. அந்தக் காலத்திலே ஏன் மாநிலம் முழுவதும் இந்தக் கொள்கையை அமுல்படுத்தவில்லை என்று கேட்க விரும்புகிறேன். ஒருவேளை எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு பதிலைச் சொல்லலாம். அது சம்பந்தப்பட்ட சட்டம் உச்ச வழக்கு மன்றத்திற்குப் போய்விட்டது, அதன் காரணமாக அதை மாநிலம் முழுவதுமாக அமுல்படுத்த முடியவில்லை என்று சொல்லலாம்.

அந்தச் சட்டமே ஓட்டைகள் மிகுந்த சட்டமாக இருந்தது. அது பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கவில்லை. உண்மையாகவே முழு நாட்டுடைமையாக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதில் முன்னாலிருந்த ஆட்சிக்கு விருப்பமிருந்திருக்குமானால், என்ன செய்திருக்க வேண்டும்? தமிழகத்தில் அதிகப்படியாக பேருந்துகள் ஓடுகிற மாவட்டங்கள் எவையெவை என்று பார்த்து, அப்படிப்பட்ட பெரிய பெரிய மாவட்டங்களில் முதலில் நாட்டுடைமையாக்கும் கொள்கை முழுமையாகக் கொண்டுவரப்பட்டு, பிறகு அது படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு, தனியார்கள் பேருந்துகளை நடத்தாத, அல்லது நடத்தினாலும் மிகக் குறைவாக நடத்துகிற மாவட்டங்களுக்குக் கொண்டு வந்திருந்தால், அது அண்ணா அவர்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிற முறையாக அமைந்திருக்கும். ஆனால் முன்னாலே ஆட்சியில் இருந்தவர்கள் அப்படிச் செய்யவில்லை. தமிழகத்திலேயே மிகச் சிறிய மாவட்டம் எது, தமிழகத்திலேயே மிகக் குறைந்த தனியார் பேருந்துகள் ஓடுகிற மாவட்டம் எது, மிகக் குறைந்த அளவில் தனியார் பேருந்துகள் பாதிக்கப்படக்கூடிய மாவட்டம் எது, என்று கணக்குப் பார்த்து இந்தத் திட்டத்தை அமுல்படுத்த விரும்பியதால், பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணத்திற்கு மாறுபட்டுச் செயல்பட விரும்பிய காரணத்தால், தமிழகத்திலேயே நீலகிரி மாவட்டத்தையும் கன்னியாகுமரி மாவட்டத்தையும் தேர்ந்தெடுத்தார்கள். அப்படித் தேர்ந்தெடுத்துத்தான் நீலகிரி மாவட்டத்தில் இதை அமுல் செய்ய விரும்பினார்கள்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு இருக்கிற இந்த நல்லெண்ணம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, ஆட்சியாளர்களுக்கு மட்டும் இருந்திருக்குமானால், அண்ணாவின் எண்ணத்தை நடைமுறைப்படுத்துவதில் அது எங்களுக்கு இப்போது பேருதவியாக இருந்திருக்கும். ஆனால் அவர்கள் ஒரு தவறான

[திரு. சி. பொன்னையன்] [1979 ஏப்ரல் 19

சட்டத்தை, ஓட்டைகள் மிகுந்த சட்டத்தை அன்றைக்குக் கொண்டு வந்தார்கள். அதில் நிறைய ஓட்டைகள் இருக்கின்றன என்று உயர் நீதிமன்றம் தி.மு.க. ஆட்சியின்போதுதான் கருத்தைத் தெரிவித்தது. பிறகு அந்தச் சட்டம் பற்றிய வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குப் போய், அங்கே சுமார் 3 ஆண்டுகளுக்கு மேலாகக் கிடப்பில் போடப்பட்டிருந்தது. அந்த வழக்கையும் விரைவில் விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டும் என்ற முயற்சியைக் கூட இந்த அரசுதான் மேற்கொண்டது. அந்த வகையில் தீர்ப்பு வந்த பிறகு, தீர்ப்பையொட்டி கண்டிப்பாக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விரும்பும் வகையில் நாட்டுடைமையாக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையில் நம்பிக்கை உள்ளவர்கள். அந்த அடிப்படையில் அண்ணா அவர்களின் கொள்கையை நாங்கள் விரைவில் அமுல்படுத்துவோம் என்பதை மட்டும் இப்போது சொல்லிக்கொள்கிறேன்.

கொள்கைக் குறிப்பில் 'ரேஷனலைசேஷன் பாலிசியை'க் கடைப்பிடித்து நடைமுறைக்குச் சில கொள்கைகளை வகுக்க வேண்டுமென்று ஓரிரு வரிகளில் குறிப்பிட்டிருக்கிறேன். அதை விளக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். அதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆட்சி, பொறுப்புக்கு வந்த பிறகு, பல்வேறு ஆய்வுகளை நடத்தியது. குறிப்பாக பேருந்து வசதி என்பது நகர்ப்புற மக்களுக்கு மட்டுமே வசதிகளைச் செய்து கொடுப்பதாகாது. இந்த எண்ணத்தின் அடிப்படையில், நாட்டின் ஜனத்தொகையில் 70 சதவித மக்களுக்கு மேல் வாழ்கிற கிராமப்புறப் பகுதிகளுக்கு, அங்கே வாழ்கிற மக்களுக்குப் பேருந்து வசதிகளைச் செய்து தர வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது. கடந்த 31 ஆண்டுக் காலமாகவே இந்த நாட்டிலுள்ள கிராமப்புற மக்கள் தொடர்ந்து இந்தத் துறையில் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள் என்ற உண்மையை மறைக்க முடியாது. இதன் காரணமாகத்தான் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்வின் அடிப்படையில் தமிழகத்தில் பல்வேறு சாலைகள் நல்ல முறையில் இருந்தும்கூட, அங்கெல்லாம் பேருந்து வசதிகள் இல்லாத சூழ்நிலை இருப்பதை அறிய முடிந்தது. அதைப் போலவே பல இடங்களில் இருக்கிற சாலைகளுக்கு சிறு சிறு மேம்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலமாக அங்கெல்லாம் பேருந்துகளை விடமுடியுமென்பதையும் அறிய முடிந்தது.



1979 ஏப்ரல் 19] (திரு. சி. பொன்னையன்)

இந்த ஆட்சி, பொறுப்புக்கு வந்த பிறகுதான் நெடுஞ்சாலைத் துறையும், போக்குவரத்துத் துறையும் ஒருங்கிணைக்கப்பட்டன. போக்குவரத்துத் துறையின் மூலம் ஒரு கோரிக்கை விட வேண்டுமென்றால், அங்கே சரியான நெடுஞ்சாலையில்லாத சூழ்நிலை இருக்கும். அல்லது நல்ல சாலைகள் இருக்கிற பகுதிகளில் போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலை இருக்கும். இதற்குக் காரணம் ஒன்றுக்கொன்று இணைந்து செயல்படும் வகையில் போக்குவரத்துத் துறையும், நெடுஞ்சாலைத் துறையும் இருந்து வந்ததுதான். இந்தக் காரணத்தால்தான் பெரும்பாலான குறைபாடுகள் ஏற்பட்டிருந்தன என்பதை என்னாலே புள்ளிவிவரத்தோடு இங்கே குறிப்பிட முடியும். பல்வேறு நல்ல சாலைகளில் இத்தகைய ஒருங்கிணைப்பு இல்லாத காரணத்தால், பேருந்து வசதிகள் செய்து தர முடியாத நிலைமை இருந்து வந்தது.

தமிழகத்தில் இருக்கிற மொத்தச் சாலைகளின் நீளமே 1,48,002 கிலோ மீட்டராகும். இதில் பஞ்சாயத்துக்களின் பொறுப்பில் மட்டும் இருக்கிற சாலைகளின் மொத்த நீளம் 68,247 கிலோ மீட்டர் ஆகும். மாண்புமிகு போது நெடுஞ்சாலைத் துறை சாலைகள் அதிகமான அளவுக்குப் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன என்று குற்றஞ்சாட்டினார்கள். அப்படி தமிழகம் முழுவதும் நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பில் இருக்கிற சாலையின் மொத்த நீளம் 31,100 கிலோ மீட்டர்தான். ஆனால பஞ்சாயத்துகளின் பொறுப்பில் இருக்கும் சாலைகளின் மொத்த நீளம் 68,247 கிலோ மீட்டராகும். இதில், போக்குவரத்துத் துறையின் பொறுப்பில் பேருந்துகள் விடவேண்டிய நிலையில் இருக்கிற சாலைகள் நிறைய இருக்கின்றன. 68,247 கிலோ மீட்டர் சாலை பஞ்சாயத்து சாலையாகவோ ஒன்றியச் சாலையாகவோ இருந்தாலும், இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகுதான் இவைகளை கவனிக்காமல் விட்டுவிட்டதாக யாரும் கருதிவிடக் கூடாது. இந்தச் சாலைகளைப் பொறுத்தவரை, பல ஆண்டுகளாகவே அவை புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்றன. பஞ்சாயத்துச் சாலைகளின் பராமரிப்புக்காக அரசாங்கத்திலிருந்து நிதி தரப்படுவதில்லை. ஒன்றிய சாலைகளை எடுத்துக்கொண்டால், 30,640 கிலோ மீட்டர் சாலைகளைப் பராமரிக்க ஆண்டுக்கு மொத்தமாக ரூ. 3 கோடி தான் அரசாங்கத்திலிருந்து தரப்படுகிறது. ஆனால் விஞ்ஞான முறைப்படி, செம்மையாக இந்தச் சாலைகளைப் பராமரிக்க வேண்டுமென்றால், ஆண்டொன்றுக்கு இந்தச் சாலைகளுக்கு மட்டும் உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சென்ற தொடர்க் கூட்டத்தின்

20 முதல் 30 ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். ஆனால் நாம் அரசாங்கத்திலிருந்து தருவதோ ரூ. 3 கோடி மட்டும்தான். இந்த நிலைமையில்தான் பேருந்துகள் விடப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் வருகின்றன. அந்தக் கோரிக்கைகளை நாம் ஏற்கவில்லையென்றால், உடனே போராட்டம் என்ற குரல் வருகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளோடு தமிழகத்தில் இருக்கிற பல்வேறு பகுதிகளில் பேருந்துகள் விடப்பட்டு, சிறிது காலத்திற்குப் பிறகு விடப்பட்ட பேருந்துகள் நின்று விட்ட சூழ்நிலையையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

இதை நான் சுட்டிக்காட்டுகிறபோது, கடந்த காலத்தில் நாம் செய்யத் தவறிவிட்ட ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சாலைகளை மேம்பாடு செய்தல், பராமரித்தல், இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்றவைகள் பேருந்துத் துறையோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். இத்தகைய அணுகுமுறை, தமிழகத்தைப் பொறுத்த வரையில், கடந்த காலத்தில் இல்லாமல் போய்விட்டது. ஆனால் அண்டை மாநிலங்களில் அதைக் கடைப்பிடித்தார்கள். இதன் காரணமாக தமிழ் நாட்டை விட மற்ற மாநிலங்களில் பஞ்சாயத்துச் சாலைகளின் நீளம் ஆண்டுக்காண்டு குறைந்து நல்ல சாலைகளாக மாறின. சாதாரணமாக பஞ்சாயத்துச் சாலை, யூனியன் சாலை என்றாலே மட்டமான சாலை என்று பொருள். மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தில் இந்த மட்டமான சாலைகளின் நீளம் ஆண்டுக்காண்டு குறைந்து, தரமான சாலைகளின் நீளம் அதிகமாகிற நிலை இருந்து வந்திருக்கிறது.

ஒரே ஆண்டில் பல கோடி ரூபாயை இந்தப் பணிக்காக என்று ஒதுக்கி விடுவதால் மட்டுமே இந்தச் சாலைகளையெல்லாம் நல்ல தரமான சாலைகளாக அமைத்துவிட முடியாது. தமிழகத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலையின் மொத்த நீளம் 1,745 கிலோ மீட்டர். ஆனால் கருநாடக மாநிலத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலையின் நீளம் 6,090 கிலோ மீட்டர். அதைப்போலவே மராட்டியத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலையின் நீளம் 14,882 கிலோ மீட்டர். மத்தியப் பிரதேசத்தில் உள்ள சாலையின் நீளம் 10,635 கிலோ மீட்டர். அதைப்போலவே பீகாரில் உள்ள நெடுஞ்சாலையின் மொத்த நீளம் 14,418 கிலோ மீட்டர். ஆந்திரத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலையின் மொத்த நீளம் 5,098 கிலோ மீட்டர். அங்கெல்லாம் ஆண்டுக்காண்டு படிப்படியாக மாநில நெடுஞ்சாலையின் நீளம் அதிகரித்துக் கொண்டே வந்திருக்கிறது. அவர்கள் ஆண்டுதோறும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து,



பஞ்சாயத்துச் சாலைகளை யூனியன் சாலைகளாக உயர்த்தி, யூனியன் சாலைகளை இதர மாவட்டச் சாலைகளாக உயர்த்தி, இதர மாவட்டச் சாலைகளை மாவட்டச் சாலைகளாக உயர்த்தி, மாவட்டச் சாலைகளை மாநில நெடுஞ்சாலைகளாக உயர்த்தியிருக்கிறார்கள். இப்படித்தான் மற்ற மாநிலங்களில் சாலைகளின் மேம்பாட்டைச் செய்து வந்திருக்கிறார்கள்.

கிராமப்புறங்களில் உள்ள சாலைகளுடைய பராமரிப்புக்காக அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து அவைகளைச் சரிவரப் பராமரிக்காவிட்டால், கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சி தடைப்படும் என்பது நமக்கெல்லாம் தெரிந்த ஒன்றாகும். ஆனால் துரதிருஷ்ட வசமாக இன்று நேற்றல்ல, நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்தே தமிழகத்தில் சரியான சாலை மேம்பாட்டுக்கான ஆய்வு செய்யப்படவில்லை. சொல்லப் போனால் கடந்த 31 ஆண்டுகளாகவே தமிழகத்தில் செம்மையான சாலை மேம்பாட்டுக்கான ஆய்வைச் செய்யாத காரணத்தால், சாலைகளைப் பொறுத்தவரையில், நாம் பின்தங்கிய நிலையில் இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. 1951 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நாம் இந்த வகையில் செய்திருக்கும் செலவு ரூ. 84,58,00,000 தான். சாலை அமைப்புகளுக்காக நாம் செய்திருக்கிற மொத்தச் செலவுத் தொகையே இதுதான்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, கிராமப்புறச் சாலைகளைச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். தமிழகத்தில் இருக்கிற கிராமப்புறச் சாலைகளை நல்ல முறையில் அமைத்து அங்கெல்லாம் பேருந்துகளை விடவும், கிராமப்புற மக்கள் தங்களின் விளைபொருள்களை அண்மையில் உள்ள நகர்ப்புறங்களுக்குக் கொண்டு செல்லவும் ஏற்றதொரு வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்றால், தற்போது 600 கோடி ரூபாய் உடனடியாகத் தேவைப்படுகிறது. ஆனால் ஆண்டுக்கு நாம் ஒதுக்குவது ரூபாய் 3 கோடி மட்டும்தான். நேற்றையதினம் சட்டப் பேரவையில் பேசுகிறபோதும், இதைத்தான் நான் குறிப்பிட்டேன். இப்போது நாம் கடைப்பிடிக்கும் கொள்கையடிப்படையில் சாலைகளை மேம்படுத்துவது என்றால், இன்னும் 200 ஆண்டுகளாகும். அப்போதுதான் கிராமப்புற மக்களுக்கு நல்ல தரமான சாலைகள் அமைத்துத் தந்து அவைகளில் பேருந்துகளை விடும் வசதி செய்து தர முடியும்.

இப்போது தமிழகத்தில் இருக்கிற சாலைகளின் நிலைமையை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். எங்கே பார்த்தாலும், குண்டும் குழியுமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர்

பேசும்போது, சாலைகள் செம்மையாக இல்லாத காரணத்தால், பேருந்துகளின் பராமரிப்புச் செலவே கூட அதிகமாகிறது என்று குறிப்பிட்டார்கள். அது உண்மை. பேருந்துகள் பழுதடையாமல் பாதுகாக்க செம்மையான முறையில் சாலைகள் இருக்க வேண்டுமென்றால், உடனடியாக சாலைகளைச் செம்மைப்படுத்த நமக்கு ரூபாய் 76 கோடி தேவைப்படுகிறது என்று ஆய்வு ஒன்றின் மூலம் கணக்கிட்டிருக்கிறோம். இதற்கெல்லாம் நம்மிடத்தில் நிதி வசதியில்லை. தமிழக அரசால் ஓரிரு ஆண்டுகளில் இதைச் செய்ய முடியாது என்ற அளவில், குறைந்த பட்சம் என்ன செய்யலாம் என்பதுபற்றி ஓர் ஆய்வு நடத்தினோம்

(பிற்பகல் 7-10)

தமிழகத்திலே ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே விடப்பட்ட பல பேருந்துகள் நின்றுவிட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மறந்துவிட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதை அவர் மறுக்கவும் முடியாது. இதற்குக் காரணம், சாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் பாதியளவுக்குக் கூட அவற்றைப் பராமரிக்க ஒதுக்காததுதான். அதனால்தான் சாலைகளெல்லாம் குண்டும் குழியுமாக மாறிவிட்டன. இப்படி சாலைகள் மாறிவிட்டதன் காரணமாகத் தான் ஓடிக் கொண்டிருந்த பஸ்கள் கூட நின்றுவிட்டன. வெயில் காலத்திலே பஸ்கள் ஓடினாலும், மழைக் காலத்திலே நின்றுவிடுகின்றன. அப்படிப்பட்ட சாலைகள் 3,886 கிலோ மீட்டர் உள்ளன என்பதை அந்த ஆய்வில் கண்டோம். இப்படி ஏற்கெனவே பஸ்கள் விடப்பட்டு, சாலைகள் சரியாகப் பராமரிக்கப்படாததன் காரணமாக தற்போது நிறுத்தப்பட்டுள்ள இடங்களில் பேருந்துகளை விட வேண்டுமென்று இந்த அரசு விழைகிறது. இப்படிப்பட்ட சாலைகளை மேம்படுத்த 20 கோடி ரூபாய் தேவைப்படுகிறது.

மற்ற சாலைகளைப் பற்றியும் ஆய்வு நடத்தினோம். பல கிராமங்களில் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. அவர்கள் பொருளாதார வளர்ச்சி பெற வேண்டுமென்றால், தங்களுடைய விளைபொருள்களை, அதாவது நெல், கரும்பு போன்றவற்றை பக்கத்திலுள்ள நகரங்களுக்கு எடுத்துச் சென்று விற்க வேண்டும். அப்படி விற்பதற்கு அவர்கள் அருகிலுள்ள நகரங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால், பஸ்களை விடவேண்டும். அந்தந்த கிராமங்களில் ஏற்கெனவே நல்ல சாலைகள் இருக்கின்றன. ஆனால் ஆங்காங்கே சிற்சில மேம்பாடுகளைச் செய்து கிராமங்களை நகரங்களோடு இணைக்கக் கூடிய அளவுக்கு இணைப்புச் சாலைகளைப்



போட்டுவிட்டால், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் செம்மைப்படுத்தப்படும். இப்படிப்பட்ட 1,243 கிலோ மீட்டர் சாலைகளை உடனடியாக மேம்படுத்தினால், அங்கும் பேருந்துகளை விட முடியும் என்று ஆய்விலே கண்டோம்.

பேருந்துகளை விடுவதற்காக மூன்று முறையில் சாலைகளைச் சீர் செய்ய வேண்டியிருக்கிறது. முதல் முறை, ஏற்கெனவே விடப்பட்ட பஸ்கள் நின்றுவிட்ட இடங்களில் மறுபடியும் சீர் செய்து பஸ்களை விடுவது ; இரண்டாவது முறை சிற்சில மேம்பாடுகளைச் செய்து கிராமங்களை நகரங்களோடு இணைக்க இணைப்புச் சாலைகளைப் போட்டு பஸ்களை விடுவது ; மூன்றாவது முறை நல்ல சாலைகள் இருந்தும், பஸ் விடப்படாமல் இருக்கக்கூடிய இடங்களில் பஸ்களை விடுவது. அதாவது சில இடங்களில் நல்ல சாலைகள் இருக்கும், இணைப்புச் சாலைகளும் இருக்கும் ; ஆனால் சில இடங்களில் இரண்டு கிலோ மீட்டர் அளவுக்கு அல்லது நான்கு கிலோ மீட்டர் அளவுக்கு இணைப்புச் சாலை இல்லாமல் இருக்கும். இப்படிப்பட்ட இடங்களில் இணைப்புச் சாலைகளை ஏற்படுத்தினால், அது அங்குள்ள மக்களுக்குப் பயன் அளிக்கும். இப்படிப்பட்ட நிலையில் உள்ள இடங்களில் 1,925 கிலோ மீட்டர் இணைப்புச் சாலைகளை அமைக்க வேண்டும் என்பதையும் ஆய்வு நடத்திக் கண்டறிந்தோம்.

கடந்த காலத்திலே சாலைகளை அமைப்பதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என்பதாலும், சாலைகளைப் பராமரிக்கத் தேவையான நிதி ஒதுக்கப்படவில்லை என்பதாலும், பல இடங்களில் தனியாரும் பஸ்களை விட முன்வரவில்லை, அரசுப் பேருந்துகளையும் விட முடியாத நிலை ஏற்பட்டது. தற்போது மாநில அரசின் பொறுப்பிலே இருக்கிற நெடுஞ்சாலைகளைப் பராமரிக்க மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 26 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. நாம் ஒதுக்கியிருக்கக்கூடிய நிதி அதில் பாதியாகத்தான் இருக்கிறது. அந்த அளவுக்கு நிதித் தட்டுப்பாடு இருக்கிறது. கடந்த காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இதற்காக ஒதுக்கப்பட்ட கணக்கை வைத்திருக்கிறேன். அவர்கள் நாற்பது, முப்பது சதவீதம் என்ற அளவிலேதான் ஒதுக்கியிருக்கிறார்கள். சாலைகளை நல்ல முறையிலே பராமரிக்க 3,036 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆனால் ஒதுக்கியிருப்பது ரூபாய் 6 கோடி தான். நல்ல தார் சாலைகளை அமைத்து விட்டு, ஆண்டுக்காண்டு அவைகளைப் பராமரிக்க நிதி ஒதுக்காமல் விட்டுவிட்டால், இதனால் அந்தத் தார் சாலைகளெல்லாம் சாதாரண மண் சாலைகளாக மாறி விடுகின்றன.

1973 ஆம் ஆண்டிலே தமிழகத்திலே ஓடிய வாகனங்களின் எண்ணிக்கை 1,62,413 ஆக இருந்தது. இன்று 2,44,008 ஆக வாகனங்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. பலவித சரக்கு வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிற அதே நேரத்தில் சாலைகளை சரிவரப் பராமரிக்காததாலும், சாலைகளை மேம்பாடு செய்யாததாலும், இன்றைக்கு அந்தச் சாலைகள் குண்டும் குழியுமாக ஆகிவிட்டதால், ஏற்கெனவே ஓடிக் கொண்டிருந்த பேருந்துகள் கூட நின்று விடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது, பேருந்துகளின் பெர்மிட்டுகளை வழங்குவதில் ஒரு ஒழுங்குமுறை இந்த ஆட்சியிலும் இல்லை, எந்தக் காலத்திலும் இல்லையென்று கூறினார்கள். இது உண்மைதான், இதை நான் மறுக்கவில்லை. பஸ் பெர்மிட்டுகள் என்றால், அந்தந்த மாவட்டத்திலுள்ள செல்வாக்கு மிகுந்த அரசியல் வாதிகள் அல்லது பணம் படைத்த பஸ் முதலாளிகள் நினைத்தால், வாங்க முடியுமென்ற நிலை இருந்து வந்திருக்கிறது, இன்றைக்கும் இருந்து வருகிறது. இந்த நிலையை மாற்ற வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணமாகும்.

எந்தெந்தப் பகுதியில் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. சாலைகளைப் போட வேண்டிய அவசரத் தேவை இருக்கிறது. எந்தெந்த வழித்தடங்களில் முதலில் பேருந்துகளை விட வேண்டுமென்ற ஆய்வு நடத்தப்படவில்லை. ஒரு நகரத்திற்கும் மற்றொரு நகரத்திற்கும்தான் முன்பு பேருந்துகள் விடப்பட்டன. ஒரு கிராமத்திற்கும், ஒரு நகரத்திற்கும் இடையே பேருந்தை விட வேண்டுமென்ற எண்ணம் முன்பு இல்லை. அப்படிப்பட்ட ஒரு ஆய்வைக் கூட அவர்கள் நடத்தவில்லை. இந்தக் குறையைப் போக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும்தான் நாங்கள் ஆய்வை நடத்தினோம். அந்த ஆய்வின் அடிப்படையிலே தமிழகத்திலே எந்தெந்த வழித்தடங்களில் உடனடியாக பஸ்களை விட வேண்டும், எந்தெந்த இடங்களில் கிராமச் சாலைகளை நெடுஞ்சாலைகளோடு இணைக்க வேண்டும், அப்படி எங்கெங்கு தேவை இருக்கிறது, அப்படிப்பட்ட இடங்களில் பஸ்களை விடுவதன் மூலமாக கிராமப் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்ற உண்மைகளைக் கண்டறிந்து, எந்தெந்த ரூட்டுகளில் பஸ்களை விட வேண்டுமென்ற ரூட் பிளானை நாங்கள் தயாரித்திருக்கிறோம். முன்பெல்லாம் ரூட் பிளானே கிடையாது. அதே நேரத்தில் கிராம மக்களுக்கு நலன் கிட்ட வேண்டுமென்ற நோக்கத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஆய்வு நடத்தி,



எந்தப் பஞ்சாயத்திற்கு உடனடியாகப் பேருந்து விட வேண்டுமென்ற பஞ்சாயத்து வரைபடங்களையும் மாவட்ட வரைபடங்களையும் தயாரித்திருக்கிறோம். இந்த ஆய்வின் அடிப்படையிலே அரசு ஒரு உத்தரவையும் இட்டிருக்கிறது.

தமிழகத்திலே 17,86,248 மக்கள் வசிக்கிற, 1,656 கிராமங்களை உள்ளடக்கிய 658 பஞ்சாயத்துக்களில் ஏற்கெனவே நல்ல சாலைகள் இருக்கின்றன. இங்கே பேருந்துகளை விட முடியும். இப்படிப்பட்ட இடங்களில் முன்பு பேருந்துகள் விடவில்லை. மாவட்ட ஆட்சியாளர்கள் எங்கு தேவைப்படுகிறது என்பதை ஆராயாமல், ஒரு மேல் நோக்கோடு பேருந்துகளை விட்டிருக்கிறார்கள். இதையும் நாங்கள் செய்த ஆய்விலே கண்டறிந்தோம். 1,656 கிராமங்கள் பலனடையக்கூடிய வகையில் சாலைகள் இருந்தும் இந்தச் சாலைகளில் பஸ்களை விடவில்லை. அங்கு 476 வழித்தடங்கள் இருக்கின்றன. ஆகவே இந்தக் குறையை நீக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, இங்கே உடனடியாக பேருந்துகளை விடும் பணியை மேற்கொண்டு 30—6—1979-க்குள் பேருந்துகளை விட வேண்டுமென்றும், அல்லது இருக்கின்ற பேருந்துகளை நீட்டிக்க வேண்டுமென்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 67 வழித்தடங்களில் மினி பஸ்களை விட வேண்டுமென்றும், 118 வழித்தடங்களில் பெரிய பஸ்களை விட வேண்டுமென்றும் 291 வழித்தடங்களில் நீட்டிப்புச் செய்ய வேண்டுமென்றும் மற்ற வழித்தடங்களில் உரிமம் கொடுப்பதற்கு முன்னால் இதைக் கட்டாயம் செய்ய வேண்டுமென்றும் அரசு முடிவெடுத்து அதற்கேற்ற உத்தரவை மாவட்டங்களுக்கு அனுப்பியிருக்கிறது.

இரண்டாவது கட்டமாக 2,508 கிராமங்கள் உள்ளிட்ட, 21,73,959 மக்கள் வசிக்கிற 639 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய 426 வழித்தடங்களில் பேருந்துகள் விடப்பட வேண்டுமென்ற தேவை இருக்கிறது. அங்கே கோரிக்கையும் இருக்கிறது. அதற்காக போராட்டமும் நடத்துகிறார்கள் ஆனால் பேருந்துகள் விடப்படவில்லை. இதற்குக் காரணம், சிறு சிறு மேம்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதுதான். 12 கோடி ரூபாய் செலவு செய்தால், 426 வழித் தடங்களில் பேருந்துகளை விட முடியும். ஆகவே இதற்கு வேண்டிய நிதியை எப்படி சேகரிப்பது என்பதை ஆயவும் இதன் தொடர்பாக மற்ற பணிகளை மேற்கொள்ளவும் 'ரூரல் ரோட் அத்தாரிட்டி' என்ற கிராமப்புறச் சாலைக் கழகம் ஒன்றை நிறுவ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இசைவு தந்ததின் அடிப்படையிலே இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

(பிற்பகல் 7-20)

அத்தோடு இன்னொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ரூரல் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டியைப் பொறுத்தவரைக்கும், ஒன்று சொல்ல விரும்புகிறேன். இப்படிப் பேருந்துகளை விடுவதற்கு முன் உரிமை வழங்குவதில் சிறப்புப் பணியை இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் முதன் முறையாக நாம் மேற்கொண்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவே சட்ட மன்றப் பேரவையில் கூறியதுபோல, இங்கே கூட மாண்புமிகு அங்கத்தினர் திரு. முத்துசாமி அவர்கள் உள்ளிட்டு பல பேர்கள் கேட்டுக்கொண்டதுபோல, நகர்ப்புற மாணவர்களுக்கு மட்டும் தான் கட்டணச் சலுகை என்பதை நீக்கி அத்தோடு சேர்த்து கிராமப்புறங்களிலே உள்ள மாணவர்கள்கூட, மொபூசல் பஸ் என்று சொல்லப்படுகிற கிராமப் பேருந்துகளில் கட்டணம் கொஞ்சம் அதிகமாக இருந்தபோதிலும், தமிழகத்தில் உள்ள அனைத்து டவுன் பஸ்களிலும், மொபூசல் செல்கின்ற பஸ்களிலும், ஆக இரண்டுவிதமான பேருந்துகளிலும் இலவசமாகப் பயணம் செய்வதற்கு இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நாங்கள் பேருந்துக் கட்டணங்களிலும் மாறுதல் செய்யவில்லை. டீசல் விலை ஏறிய போதிலும், ஸ்பேர் பார்ட்ஸ் விலை ஏறிய போதிலும், பல்வேறு நிர்வாகச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்ததன் காரணமாக, இந்த அரசு தற்போது கட்டணத்தை உயர்த்தத் தேவையில்லை என்ற முடிவோடு, தற்போதுள்ள கட்டணத்தைக்கூட நான் மிகைப்படுத்தவில்லை.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது, நிர்வாகச் சீர்திருத்தம் வேண்டுமென்றும், செலவைக் குறைக்க வேண்டுமென்றும், குறிப்பாக நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் லாபத்தில் இயங்க வேண்டுமென்றும், அதற்கு வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் கூறினார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் அவருடைய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் கூறிய யோசனைகளை ஏற்று ஆய்வு நடத்துகிறோம். அதன் அடிப்படையில் சொல்கிறேன். பைனான்ஸ் மானேஜ்மெண்டாக இருந்தாலும் சரி,





மெட்டீரியல் மானேஜ்மெண்டாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு துறையிலும் எப்படி சிக்கனத்தை மேற்கொள்வது, புயூவல் எக்கானமி, அதாவது எரிபொருள்களை எப்படி சிக்கனமாகச் செலவு செய்வது, ஸ்பேர் பார்ட்களை 'ரீ கண்டிஷன்' செய்து எந்த அளவுக்குச் சிக்கனத்தை மேற்கொள்வது என்றெல்லாம் ஆராய்ந்து, சிக்கனத்தை மேற்கொள்வதற்கு என்று ஓட்டுநர்களுக்கும் சிறப்புப் பயிற்சியைத் தந்து, நல்ல முறையில் பேருந்துகளை ஓட்டுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. ஓட்டுநர்களுக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டுவிட்ட காரணத்தினாலும், ஓட்டுநர்களுக்கு இதில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்று தனிப் பயிற்சி கொடுத்திருக்கின்றதாலும், அதன் காரணமாக நல்ல சிக்கனத்தை மேற்கொண்டதன் மூலமாக, நிர்வாகத்தில் நல்ல சிக்கனத்தையும் சீர்திருத்தத்தையும் செய்ததன் காரணமாக, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதை தாண்டிவிட்ட நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் சிறப்பான முறையிலே இயங்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் மறுக்கவில்லை. சென்னையைப் பொறுத்தவரைக்கும், நான் ஒன்று சொல்லிக்கொள்கிறேன். நேற்று சட்டமன்றப் பேரவையிலே கூறியிருக்கிறேன். ரூ. 8,37,11,000 நஷ்டத்திலே சென்னை மெட்ரோபாலிட்டன் சர்வீஸ் 1975-76 லே நடந்தது. ஆனால், இந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, இந்த நஷ்ட நிலைக்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தோம். நிர்வாகச் சீர்திருத்தம் வேண்டுமென்றும், பல்வேறு கட்டங்களிலேயும் அது செய்யப்பட வேண்டும் என்றும் கருதினோம். பெரிய அளவில் வல்லுநர்களுக்கு ஆங்காங்கு உற்சாகம் தரப்பட வேண்டுமென்று கருதினோம். அத்தோடு தொழிலாளர் உடன்பிறப்புகளுக்கும் உற்சாகத்தைத் தந்து, அவர்களுடைய ஆலோசனைகளையும் பயன்படுத்தி அவர்களுடைய அனுபவத்தின் பேரில் சில முறைகளை மேற்கொண்டதன் காரணமாக நல்ல பலனைக் கண்டிருக்கிறோம். 1975-76-ல் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கட்சி ஆட்சியில் இருந்தபோது, போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 8,37,11,000 நஷ்டத்திலே நடந்தன. தற்போது ரூ. 7,50,58,000 லாப நிலையில் போக்குவரத்துக் கழகங்கள் நடந்துள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மெட்ரோபாலிட்டன் சர்வீஸ் நஷ்டத்திலேதான்

இயங்கும் என்று சொல்வார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது, மெட்ரோபாலிட்டன் சர்வீஸ் லாபத்தில் ஓடுகிறதா என்று கேட்டார்கள். நாம் மட்டுமல்ல, டெல்லி மெட்ரோபாலிட்டன் சர்வீஸ் கூட ரூ. 16,17,36,000 ஆண்டு ஒன்றுக்கு நஷ்ட நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோலவே சென்ற ஆண்டு பாம்பே பஸ் சொர்வீசில் கூட ரூ. 5,18,71,000 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்தின் நிலை எந்த அளவில் இருக்கிறது ? அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் லாப நிலைக்கு வந்திருக்கின்றன. சென்னையிலே இருக்கின்ற பல்லவன் போக்குவரத்துக் கழகம் இன்றைக்கு நஷ்ட நிலையைத் தாண்டியிருக்கிறது. மெட்ரோபாலிட்டன் பிரிவிலே நஷ்ட நிலையைத் தாண்டி உயர்நிலைக்கு வந்து, லாபத்தில் அடி எடுத்து வைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது.

பேருந்து தொழிலாளர்களுக்கு 8.33 சதம் போனஸ் தரப்பட்டது என்று சொல்லி, அது வேதனையாக இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்களும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதையே குறிப்பிட்டார்கள். தொழிலாளர்களைப் பொறுத்தவரைக்கும், பல்லவன், பாண்டியன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் என்ற வேறுபாடு அரசுக்கு இல்லை என்ற பதிலைச் சொல்வது நமது தொழிலாளர் உடன் பிறப்புகளுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். தொழிலாளர்கள் கமிட்டிகளும் போக்குவரத்துக் கழகங்கள் லாபத்தில் நடப்பதற்கு பெருத்த உதவியாக இருக்கும் என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போக்குவரத்துக் கழகங்கள் அரசின் பொறுப்பிலே இருக்கும்போது, அதிலே வருகின்ற லாபத்தில் ஒரு பங்கை தொழிலாளர்களுக்குத் தருவதில் அரசுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. உழைக்கின்ற தொழிலாளர்களுக்கு உற்சாகம் ஏற்படுகின்ற முகத்தான், பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் நாம் திட்டங்களைப் போட்டு, அவைகளை நாம் நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறோம்.

பேருந்தைப் பயன்படுத்துகின்ற, அதிலே சவுகரியங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய மக்களைப் புறக்கணிக்க முடியாது என்ற அடிப்படையில், அதற்காக நடவடிக்கைகளையும் உடனடியாக நாம் மேற்கொள்ளாமல் இருப்போமானால், அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றியும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பொது மக்களுக்கு வேண்டிய நன்மைகளை, பல்வேறு வசதிகளை, உடனடித் தேவைகளைச் செய்து கொடுக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய



நிலைமையிலே நாம் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையிலேதான் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை நாம் நடைமுறைக்குக் கொண்டு வருகிறோம்.

அடுத்து, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்த வரைக்கும், நாட்டுடைமையில் நம்பிக்கை வைத்திருக்கிறது. அதில் நாங்கள் ஆணித்தரமாக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இருக்கின்ற அத்தனை பேருந்துகளும் ஒருவேளை தனியாரிடத்திலே இருந்திருக்குமானால், இந்த அளவுக்குச் சலுகைகளை தொழிலாளர்கள் பெற்றிருப்பார்களா அல்லது அவர்களே தந்திருப்பார்களா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். போக்குவரத்துத் தொழிலாளர்களின் மனப்போக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டாக வேண்டும். இந்த ஆட்சி ஏழைகளுக்காகவே, ஏழைத் தொழிலாளர்களுக்காகவே உள்ள ஆட்சி என்பதை நான் பலமுறை இங்கே வலியுறுத்திக் கூறியிருக்கிறேன்.

தொழிலாளர்கள் பிரச்சினையில் அரசின் அணுகுமுறை சரியாக இல்லை என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த சங்கம், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த சங்கம், மாற்றுக் கழகத்தைச் சேர்ந்த சங்கம் என்று நாங்கள் பார்ப்பதில்லை. அதிலே அரசினர் காழ்ப்புணர்ச்சி காட்டுவதில்லை. இன்று தொழிலாளர்கள் உடன்பிறப்புகள் அனைவருடைய பிரச்சினைகளைக் குறித்தும் போக்குவரத்துத் துறையிலே நல்ல முறையில் அணுகி வருகிறோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, ஆளும் கட்சி சங்கம் கூறினால் மட்டும் சலுகை அளிக்கப்படுவது என்பது இல்லை. யார் கேட்டாலும், கேட்பது நியாயமாக இருக்குமானால், அது எந்தத் தொழிற் சங்கமாக இருந்தாலும், அது ஆளும் கட்சி யூனியனாக இருந்தாலும், கம்யூனிஸ்ட் யூனியனாக இருந்தாலும், நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, அய்.என்.டி.யூ.சி. காங்கிரஸ் கட்சிச் சங்கங்கள் எந்த அளவுக்கு அங்கீகாரம் செய்யப்பட்டன என்பதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்குத் தெரியும். நாங்கள் எந்த நல்ல அணுகுமுறையைக் கையாளவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள் ? தொழிற் சங்கங்களைப் பொறுத்த வரையில், தொழிலாளர் உடன்பிறப்புக்களாக இருப்பவர்களுடைய பிரச்சினைகளை, அரசியல் காழ்ப்புணர்ச்சி எதுவுமின்றி நாங்கள் அணுகியிருக்கிறோம்.

தொழிலாளர்களுக்குப் பிரச்சினைகள் இருந்தால், அவர்கள் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணியினை, கடமையினை நன்றாகச் செய்ய முடியாது என்ற உணர்வினாலும், அவர்கள் பிரச்சினையில் அரசியல் வாதிகள் குறுக்கிடுவதைத் தடுக்க வேண்டும் என்ற காரணத்தினாலும், அவர்களை நேரடியாகப் பிரச்சினைகளைக் கொண்டு வந்து சந்திக்க வழிவகுத்திருக்கிறோம். எந்த ஒரு தொழிலாளராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர்களுடைய குறையை எடுத்து வைக்கலாம் என்கிறோம். அப்படிச் செய்தால், உங்கள் குறைகளைப் போக்குவோம் என்று சொல்கிறோம். அந்த அணுகு முறையைத்தான் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அந்த முறையைக் கொண்டு வந்ததற்குக் காரணம், தொழிலாளர் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு இருந்தால்தான் போக்குவரத்துப் பணியை லாபத்தில் நடத்த முடியும் என்ற உண்மை நிலைதான் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். பல்லவன் தொழிலாளர்களைப் பொறுத்த வரைக்கும், அவர்கள் வேலை செய்யும்போது பிரச்சினைகள் வரலாம். ஒரு பேருந்திலே பயணி ஒருவர் பேருந்து ஓட்டுநரை வைதுவிட்டார். ஒரு வழித்தடத்திலே ஒரு பேருந்திலே இந்த மாதிரி ஒரு குறைபாடு நடந்துவிட்டால்,

(பிற்பகல் 7-30)

பேருந்துகளை நிறுத்திவிடுவது என்ற மனப்போக்கை மேற்கொள்ளக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். பேருந்திலே பயணம் செய்கின்ற பயணி, தொழிலாளியை அடித்துவிட்டால், அது மிகப் பெரிய தவறு. நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுத்து வருகிறோம். பேருந்து ஓட்டுநரை ஓரிடத்தில் மாணவரும், மற்றொரு இடத்தில் பொதுமக்கள் பிரதிநிதி ஒருவரும் அடித்துவிட்டார்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்து, மாணவர் மீதும், பொதுமக்கள் பிரதிநிதி மீதும் நடவடிக்கை எடுக்கச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறேன். பாதிக்கப்பட்டவர் திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினராக இருந்தால், அவர் தவறு செய்யாதபோதும், அவர்கள் தண்டிக்கப்படும் சூழ்நிலை ஏற்படுகிறதென்ற குற்றச்சாட்டு வருகிறது. யாராக இருந்தாலும், என்னிடம் கூறினால், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினரை, பச்சையப்பன் கல்லூரி மாணவர் அடித்துவிட்டார் என்றால், சென்னையிலே ஓடும் ஆயிரம் பேருந்துகளும்





நின்றாக வேண்டுமென்ற போக்கு தொழிலாளர்கள் மத்தியில் வளரக் கூடாது. மாணவனுக்குக் கிடைக்க வேண்டிய தண்டனை, சென்னையைச் சுற்றியிருக்கும் 35 லட்சம் மக்களுக்கும் கிடைக்க வேண்டும், பல தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டும், மருத்துவ மனைகளுக்குச் செல்லும் தாய்மார்களுக்கு ஏற்பட வேண்டும் என்ற போக்கை தொழிலாளர்கள் மத்தியில் வளர்க்கக் கூடாது. அப்படிப்பட்ட போக்கை வளர்க்கக்கூடாதென்பதற்கு, அரசியல் கட்சிகள் தங்கள் ஆதரவைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளியுடைய தனிப்பட்ட பிரச்சினை பற்றி திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போதும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசும்போதும் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். கொடுக்கப்பட்ட கோரிக்கைகளில் பல கோரிக்கைகள் ஒத்துக்கொள்ளப்படவில்லை என்று கூறினார்கள். அதுகூட உண்மையல்ல. 65 கோரிக்கைகள் பற்றி, நிர்வாகத்தோடு தொழிலாளர்கள் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்று முடிவு செய்து, நிர்வாகம் பல முறை அவர்களை அழைத்தும்கூட அவர்கள் வரவில்லை. திரு. காட்டூர் கோபால் அவர்கள் மறைந்து விட்டதால், அதற்கான காரணங்கள் ஒன்றையும் நான் கூற விரும்பவில்லை. தமிழகத்தில் இருக்கும் ஆட்சி எகாதிபத்திய ஆட்சியல்ல. தொழிலாளர்கள் பிரச்சினை எதுவாக இருந்தாலும், அவற்றில் தார்மீக உணர்வோடு நடக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அரசு செயல்படுவதால், போக்குவரத்துத் துறையிலே பணிபுரியும் தொழிலாளர்களுக்கு எந்தப் பிரச்சினை வந்தாலும், அது குறித்து நிர்வாகத்தோடு அவர்கள் பேசலாம். என்னிடம் எந்த நேரத்திலும் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. சிந்தன் அவர்களுக்குத் தெரியும். மறைந்த காட்டூர் கோபால் அவர்களுக்குத் தெரியும். இரவு 10, 11 மணிக்கு வந்து, அவர்கள் என்னைச் சந்தித்திருக்கிறார்கள். உடனடியாக நிவாரணம் தந்திருக்கிறேன். அமைச்சரிடம் சென்றால் பிரச்சினையைத் தீர்த்துவிடுவார்கள், அதனால் அரசியல் கட்சிக்கு ஆதாயம் கிடைக்காது என்பதால் பிரச்சினைகளை உடனே தீர்க்காமல் தவறிக்கூட யாரும் இருக்கக்கூடாதென்றும், பொது மக்கள் நலன் கருதி அரசியல் கட்சிகள் இருக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் வேண்டுகோளாக விடுக்கிறேன். ஒரு நாள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் வேலை நிறுத்தம் என்றால், 9 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. தொடர்ந்து ஒரு நாள், அரை நாள் என்று வேலை

திருத்தத்தில் ஈடுபட்டால், போக்குவரத்துத் துறைக்கு நஷ்டம் ஏற்படுகிறது. வேலை நிறுத்தத்தால் ஏற்படும் நஷ்டத்தைப் போக்கி, போக்குவரத்துத் துறையை லாபத்திற்குக் கொண்டுவர மீண்டும் பாடுபட்டு வருகிறோம்.

மூன்று தினங்களுக்கு முன்பு, பல்லவன் விரைவுப் பேருந்து—எக்ஸ்பிரஸ்—பஸ் ஸ்டான்டிலிருந்து ஒரு தகவல் வந்தது. அங்கே ஒழுங்கு குறைந்துவிட்டதென்றும், கழிவறைகள் ஒழுங்காக இல்லை என்றும் தகவல் வந்தது. அவைகள் வேதனை தரத்தக்க அளவிற்கு இருக்கின்றன. கரன்ட் புக்கிங், அட்வான்ஸ் புக்கிங் இரண்டும் ஒரே கவுன்டரில் இருப்பதால், பயணிகளுக்குத் தொல்லையாய் இருக்கிறது. அதை உடனடியாக மாற்ற வேண்டுமென்று சொன்னேன். அப்போது எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளிகூட அல்ல, அய்.என்.டி.யூ.சி. சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒரு தகவலைக் கூறினார். எக்சிபிஷனில் வைக்கப்பட்ட ஷோ கேஸ் இதுதான், 13 ஆயிரம் ரூபாய் இதற்கு செலவாகியிருப்பதாகவும் சொல்லுகிறார்கள், இதுதான் அந்த ஷோ கேஸ் என்று கூறினார். எனக்கு உடனே அய்யம் ஏற்பட்டது. உடனே பல்லவன் விரைவுப் பேருந்துக் கழகத்திற்குச் சென்று, கணக்குகளைச் சோதனையிட்டுப் பார்க்கின்றபோது, 8,000 ரூபாய் அளவிற்கு மோசடி நடந்ததற்கு ஆதாரம் கிடைத்தது. உடனடியாக சம்பந்தப்பட்டவரைப் பணி நீக்கம் செய்திருக்கிறேன். அவர்கள் ஒரு பொறியாளர். ஏன் இதைச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், எங்கெங்கே தவறுகள் நடக்கின்றன என்பதுபற்றித் தகவல் வரும்போது, அங்கே திடீரென்று சோதனைகள் செய்து, தவற்றைக் கண்டுபிடிக்கும்போதெல்லாம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கிறோம் எதிர்க் கட்சிகளாக இருந்தாலும், எதிர்க் கட்சித் தொழிற் சங்கங்களாக இருந்தாலும், எங்கெங்கு குறைபாடுகள், சீர்கேடுகள் இருக்கின்றன என்று படுகிறதோ, அவற்றை உடனடியாக அரசுக்குச் சொன்னால், கடுமையான நடவடிக்கை எடுத்து, அந்தக் குறைபாடுகளைக் களைந்து, நல்ல முறையிலே போக்குவரத்துக் கழகத்தை நடத்தி, எதிர்காலத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் அதிக லாபத்தை ஈட்டி, தொழிலாளர்களுக்குச் க்ஷேமநலத் திட்டங்களைக் கொண்டுவர வாய்ப்பாக இருக்குமென்றும், அதற்கு உங்களுடைய பூரண ஒத்துழைப்பு வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





ஏற்கெனவே பல்வேறு திட்டங்களையெல்லாம் அரசு அறிவித்து, அவையெல்லாம் பத்திரிகைகளில் வந்து, நீங்களும் படித்திருப்பீர்கள். போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் அரசுக்குச் சிறந்த ஆலோசனைகளைத் தர வேண்டும். பொறியியல் துறையில் உள்ளவர்கள், ஓட்டுனர்கள், நடத்துனர்கள், டெக்னிகல் ஸ்டாஃப், அட்மினிஸ்டிரேடிவ் யூனிட்டில் இருப்பவர்கள் எல்லோரும் அரசுக்கு நல்ல ஆலோசனைகளைத் தர வேண்டும். எந்த முறையில் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தலாம்; எந்த முறையில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கலாம்; எப்படிச் செய்தால் தொழிலாளர் நலன் காக்கப்படும்; எந்த முறையில் நடத்தினால் பொது மக்களுக்கும் பயணிகளுக்கும் நலன் தரும் என்பவை குறித்து ஆலோசனைகளைக் கூறினால், அவர்களுக்கு வெகுமதி தர வேண்டுமென்றும், சிறப்புப் பணி புரிபவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்றும் முடிவெடுத்து, ஆண்டுக்கு ஒரு முறை, அண்ணா அவர்கள் பிறந்த நாளன்று தங்கப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும் 500 ரூபாய், 250 ரூபாய், என்று வெகுமதியும் அளிக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. நல்ல திறமை மிக்கவர்களை, சிறப்புப் பணியாற்றுபவர்களை, கண்ணியம் மிக்கவர்களை, ஆலோசனை கூறுபவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு புதிய திட்டங்களை அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறதென்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆம்னி பஸ் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் மற்றவர்களும் குறிப்பிட்டார்கள். ஆம்னி பஸ்கள் தமிழகத்திலே இயங்கி வருவதால், விரைவுப் பேருந்துகளுக்கு அவை இடைஞ்சலாக இருக்கின்றன என்று ஏற்கெனவே கூறியிருக்கிறேன். சட்டத்திலே இருக்கின்ற கோளாறைப் பயன்படுத்திக் கொண்டு, நீதி மன்றத்திலே தடை உத்தரவு பெற்று, அவர்கள் ஆம்னி பஸ்ஸை ஓட்டி வருகிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 1974 லே உரிமம் பெற்ற 65 ஆம்னி பஸ்கள்தான் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இதில் மற்றொரு கொடுமை என்னவென்றால், மத்திய மோட்டார் வாகனச் சட்டத்திலே இருக்கும் கோளாறைப் பயன்படுத்திக் கொண்டு, அண்டை மாநிலங்களில், குறிப்பாக ஆந்திராவில் உரிமத்தைப் பெற்றுக் கொண்டு, தமிழகத்தில் டெம்பரரி பெர்மிட் வாங்கிக் கொண்டு, அந்த பஸ்களை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்றாலும், கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, இதுவரைக்கும் 391 சுற்றுலாப் பேருந்துகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

6 சுற்றுலாப் பேருந்துகளையும், மற்றும் 6 ஆம்னி பஸ்களையும் அரசு பறிமுதல்கூட செய்திருக்கிறது. அது குறித்தும் அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லுகிறார்கள். கடுமையான நடவடிக்கையை நாம் எடுத்து வருகிறோம். வெளி நாட்டிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அல்லது அண்டை மாநிலங்களிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உண்மையிலேயே சுற்றுலாப் பேருந்து வேண்டுமென்ற நேரத்தில், சுற்றுலாப் பேருந்து உரிமம் பெற்றவர்களிடம் சென்றால், அவர்களிடம் அந்தப் பேருந்துகள் இருப்பதில்லை. இரவு நேரங்களில் அவை ஸ்டேஜ் கேரேஜாக ஓட்டப்படுகின்றன. அவைகளைக் கண்டுபிடித்து, ரெய்ட் செய்து, நடவடிக்கை எடுக்க கடுமையான உத்தரவு பிறப்பித்து, கடந்த ஒரு மாதமாகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அண்டை மாநிலங்களைச் சேர்ந்த உந்துகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருவதாலே, விரைவுப் பேருந்துகளின் வருவாய் கூடும் சூழ்நிலை ஏற்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆம்னி பஸ்களுக்கு ஏன் இந்தச் சலுகை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு, ஒரு உரிமம்கூட வழங்கப்படவில்லை. எல்லா உரிமங்களும் 1974-ல் வழங்கப்பட்டவை. 1974-க்குப் பிறகு வழங்க வேண்டாமென்று முடிவெடுத்து, நடவடிக்கை எடுக்கத் தொடங்கினார்கள். ஆனால் நடைமுறைக்குக் கொண்டுவர முடியவில்லை. ஆம்னி பஸ்களை நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். உயர்நீதி மன்றத்தில் அந்தச் சட்டத்திற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. புதிய சட்டத்தைக் கொண்டு வந்து, அவைகளை நாட்டுடைமையாக்கலாமென்றாலும், தமிழகத்திலே உரிமம் பெற்று ஓடும் உந்துகளைத்தான் நாட்டுடைமையாக்கலாமே தவிர, அண்டை மாநிலங்களில் உரிமம் பெற்று, இங்கே ஓடும் உந்துகளைத் தடை செய்ய முடியாது. கர்நாடக மாநிலத்தில் ஆம்னி பஸ்களை நாட்டுடைமையாக்கியபோது, அங்கே உரிமம் பெற்று ஓடிய பஸ்கள் ஓடவில்லை. ஆனால் அண்டை மாநிலங்களான ஆந்திரம், மராட்டியம் போன்ற மாநிலங்களில் உரிமம் பெற்று, முன்பு இருந்ததைவிட அதிகமான அளவிற்கு ஓடிக்கொண்டிருக்கின்றன என்று கர்நாடக மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. குண்டுராவ் அவர்கள் கூறினார்கள். எனவே ஆம்னி பஸ்கள் மீற முடியாத அளவிற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி ஆய்வு செய்து வருகிறோம். விரைவில் தகுந்த நடவடிக்கைகளை எடுப்போமென்பதைக் கூறிக்கொள்ள விழைகிறேன்.



(பிற்பகல் 7-40)

இன்னும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளிலே சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவது போல் ஏர்-கன்டிஷன் பஸ்களிலும் அனுமதிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள். அதுபற்றி நான் ஏற்கெனவே அறிவித்து விட்டேன்.

ஏர்-கன்டிஷன் பேருந்துகளைப் பொறுத்தவரைக்கும், ரெயில்களில் அதிக டிக்கெட் கிடைக்காத காரணத்தால், அதிகப்படியாக ரிசர்வேசன் டிக்கெட்டுகள் ஒதுக்கப்படாத காரணத்தால், அவசரத் தேவைக்கு ஓர் இடத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், வசதியில்லாத சூழ்நிலை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அப்படி வருகின்ற வருவாய் கூட மத்திய அரசுக்குச் சென்று விடுகிறது. மத்திய அரசைப் பொறுத்தவரைக்கும், மாநிலத்திற்குப் பண அதிகாரம் அதிகமாகத் தராத சூழ்நிலை இருக்கிறது. மாநில வருவாயைக் கூட்டுகின்ற முகத்தான் டீலக்ஸ் பஸ்கள், சூப்பர் டீலக்ஸ் பஸ்கள், ஏர்- கன்டிஷன் பஸ்கள் போன்ற விரைவுப் பேருந்துகளையெல்லாம் அரசு அதிகமாக விட்டால், நல்ல இலாபத்தில் ஓடும், பயணிகளுக்கும் அது மிக நல்ல பயனுள்ளதாக இருக்கும் என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய ஆலோசனையின் அடிப்படையில், 8 வழித்தடங்களில் ஏர்-கன்டிஷன் விரைவுப் பேருந்துகளை விட ஏற்கெனவே முடிவு செய்து நடப்பாண்டிலேயே அவை ஓடத் துவங்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்கின்ற செய்தியினை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மணி நேரம் பேசியிருக்கிறார்கள் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஏர்-கன்டிஷன் பஸ்கள் மிக வசதியாக இருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல் மதுவிலக்கு, தீண்டாமை, குடும்பநல வளர்ச்சி போன்ற சமுதாய முன்னேற்றத் திட்டங்களை விளக்குகின்ற டாக்குமென்டரி படங்களும், நல்ல சமுதாய முன்னேற்றக் கருத்துக்களை எடுத்துக் காட்டுகின்ற 16 எம். எம். திரைப் படங்களும் அந்த ஏர்-கன்டிஷன் பஸ்களில் காட்டப்படும் என்று நான் நேற்றே அறிவித்திருக்கிறேன்.

(திரு. சி. பொன்னையன்) [1979 ஏப்ரல் 19

கப்பல் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை, ஏன் இன்னும் இரண்டு கப்பல்கள் வாங்க வேண்டும் என்று கேட்டார்கள். ஏற்கெனவே நஷ்ட நிலையில் கப்பல் போக்குவரத்து இருக்கும்போது, ஏன் மேலும் கப்பல்கள் வாங்க வேண்டுமென்று கேட்டார்கள். ஏற்கெனவே இருக்கின்ற கப்பல்கள் என்னூரிலுள்ள தெர்மல் பிளான்டுக்காக ஹால்டியாவிலிருந்து நிலக்கரி கொண்டு வருவதற்காக வாங்கப்பட்டன. ஹால்டியா துறைமுகத்திலிருந்து நிலக்கரியை கப்பல் மூலம் தான் கொண்டுவர முடியும். மத்திய அரசைப் பொறுத்தவரை, ஒரு நாளைக்கு ஒரு கொள்கை என்ற முறையில் இன்றைக்கு நிலக்கரியை சிங்கரேணியிலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்கிறார்கள். நாளைக்கு ஹால்டியாவிலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்கிறார்கள். சிங்கரேணியிலிருந்து ரெயில் மூலம் கொண்டு வரலாம். ஆனால் ஹால்டியாவிலிருந்து கப்பல் மூலம் தான் நிலக்கரியைக் கொண்டுவர முடியும். மத்திய அரசு அப்படி அறிவிக்கின்ற காரணத்தினால், என்னூர் தெர்மல் பிளான்டுக்குத் தேவையான நிலக்கரி கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டு, அது சரிவர இயங்காத சூழ்நிலை ஏற்பட்டு, மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டதால், முந்தைய அரசு அந்த இரண்டு கப்பல்களையும் வாங்க வேண்டுமென்ற ஒரு முடிவுக்கு வந்து, அந்தக் கப்பல்களை வாங்கியிருக்கிறார்கள். மத்திய அரசு, திடீரென்று ஹால்டியாவிலிருந்து உங்களுக்கு நிலக்கரி இல்லை, வேண்டுமானால் சிங்கரேணியிலிருந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லுமானால், சிங்கரேணியிலிருந்து கப்பலில் நிலக்கரியைக் கொண்டுவர முடியாது. சிங்கரேணிக்குக் கப்பல் போக முடியாது என்பதால், ரெயில் மூலம் தான் நிலக்கரியைக் கொண்டு வர முடியும். ரெயிலில் நிலக்கரியைக் கொண்டு வரும்போது, நாம் வாங்கிய கப்பல்கள் வீணாகத்தான் நிற்க வேண்டும். ஒரு கப்பல் ஓட்டப்படாமல் ஒரு நாள் வீணாக இருந்தாலே, பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவாகக் கூடிய சூழ்நிலை இருந்து வருகிற காரணத்தால் தான், அந்த இரண்டு கப்பல்களும் நஷ்டத்தில் இயங்குகின்றன. தற்போது அரசு இரண்டு கப்பல்களை வாங்குவதற்குக் காரணம் என்ன என்று கேட்டிருக்கிறார்கள். தூத்துக்குடி தெர்மல் பிளான்டைப் பொறுத்தவரை, அந்த மின் நிலையத்தைப் பூராவுமே நிலக்கரியின் மூலம் தான் இயக்க முடியும். தூத்துக்குடிக்குக் கப்பல் மூலம் தான் நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அங்கு நிலக்கரியை ரெயில் மூலம் கொண்டு வர முடியாது. அத்தகைய ஒரு சூழ்நிலை அங்கு இருக்கின்ற காரணத்தால், ஹால்டியா துறைமுகத்தின் மூலம் தான் தூத்துக்குடிக்கு நிலக்கரியைக் கொண்டுவர முடியும், அதை



1979 ஏப்ரல் 19] [திரு. சி. பொன்னையன்]

கப்பல் மூலம் தான் கொண்டுவர வேண்டியிருக்கிறது. நிலக்கரியை கப்பல் மூலம் கொண்டுவர பல வழிமுறைகள் இருக்கின்றன. ஒன்றில் மத்திய அரசு வைத்திருக்கின்ற 'ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா' கப்பல்களை நாம் பயன்படுத்தலாம் அல்லது நம்முடைய சொந்தக் கப்பல்களைப் பயன்படுத்தலாம் அல்லது தனியாருக்குச் சொந்தமான கப்பல்களைப் பயன்படுத்தலாம். ஆனால் மத்திய அரசுக்குச் சொந்தமான 'ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா' கப்பல்களை நாம் பயன்படுத்தினால், அவர்கள் அதற்கு மிக அதிகக் கட்டணத்தை வசூலிக்கிறார்கள். அப்படி நாம் மத்திய அரசினுடைய கப்பல்களைப் பயன்படுத்தி கட்டணம் அதிகமாகக் கொடுக்கின்ற நிலை வரும்போது, நாம் மக்களுக்குத் தருகிற மின்சாரத்தின் கட்டணத்தைக் கூட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே அதற்காகத் தான் நாமே சொந்தமாகக் கப்பல்களை வாங்கி, அந்தக் கப்பல்களின் மூலம் ஹால்டியா துறைமுகத்திலிருந்து தூத்துக்குடிக்கு நிலக்கரியைக் கொண்டு வந்தால், கட்டணம் அதிகமாக இல்லாத நிலையில், சிக்கனமாகப் பயன்படுத்துகின்றபோது, இறுதியாக மின்சார வாரியத்தைப் பொறுத்தவரை, குறைந்த செலவிலே மின்சாரம் உற்பத்தியாவதால் அவர்கள் மக்களுக்குக் குறைந்த கட்டணத்திற்குக் கொடுப்பார்கள் என்கிற எண்ணத்தின் அடிப்படையில்தான் இரண்டு கப்பல்கள் வாங்கப்பட வேண்டுமென்று முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரை, தமிழக அரசு சுற்றுலா வாரியம் ஏற்கெனவே நடத்திய ஆய்வின் அடிப்படையில் மத்திய அரசின் அனுமதியுடன் ஒரு திட்டத்தை மேற்கொள்ள இருக்கிறது. தமிழகத்தின் பல்வேறு மாநிலங்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்தவும், சில மாவட்டங்களை மாநிலத் தலைநகரோடு இணைக்கின்ற முகத்தானும், முக்கிய சுற்றுலா இடங்களையெல்லாம் வெளிநாட்டுப் பயணிகளும் அண்டை மாநிலப் பயணிகளும், நமது மாநிலப் பயணிகளும் விரைவிலே சென்று பார்க்க வாய்ப்பினைத் தருகின்ற முகத்தானும் மத்திய அரசினுடைய அனுமதியோடு மாநில அரசே இன்டர்-ஸ்டேட் ஏர் சர்வீசை நடத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன். அவைக்கு இதுவரை மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய நல்ல பல ஆலோசனைகளையெல்லாம் அரசு ஏற்று, அவற்றில் சிலவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர அரசு முயற்சி செய்யும் என்று கூறி, இந்தக் கொள்கை விளக்கத்தை அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ஆ. நல்லசிவன் : இன்றைக்கு நாட்டிலே இருக்கிற தொழிற்சாலைகளில் தொழிற் சங்கங்களை அங்கீகாரம் செய்ய 'வெரிபிகேஷன்' செய்ய வேண்டுமென்ற அகில இந்திய நடைமுறைப் பழக்கமும், மத்திய அரசினுடைய ஆலோசனையும் இருக்கிறது. அதன்படி தான் பல தொழிற் சங்கங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. நாங்கள் அதை இரகசிய ஓட்டு மூலம் தீர்மானிக்க வேண்டுமென்று கேட்கிறோம. இரகசிய ஓட்டு மூலம் தீர்மானிக்க வேண்டுமென்ற எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் எண்ணமும், அதன் அடிப்படையில் தொழிற் சங்கங்களை அங்கீகரிக்க வேண்டுமென்ற எண்ணமும் அரசாங்கத்துக்கும் இந்தப் போக்குவரத்துத் துறைக்கும் உண்டா என்று நான் அறிய விரும்புகிறேன். போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை, எந்தத் தொழிற் சங்கத்தையும் அங்கீகரிப்பதில்லை என்பது தான் அரசின் கொள்கையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தொழிற் சங்கங்களை அங்கீகரிக்க வேண்டுமென்ற கொள்கை அரசுக்கு இருக்கின்ற காரணத்தால் தான், ஏற்கெனவே அய்.என்.டி.யூ.சி., சி.அய்.டி.யூ.சி போன்ற தொழிற் சங்கங்கள் சில இடங்களில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு விளக்கம் என்ற வகையிலே நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, பென்ஸ் கம்பெனியிலிருந்து அதிகமான பஸ்களை வாங்கியதற்கு முந்தைய அரசு தான் காரணம் என்றும் 22 சதவிகிதம் என்றும் 50 சதவிகிதம் என்றும் ஒன்றே ஒன்றில் மாத்திரம் 75 சதவிகிதம் என்றும் மாவட்ட வாரியாக, போக்குவரத்துக் கழக வாரியாக ஏதோ கணக்குகளைக் கூடச் சொன்னார்கள். இரண்டு சேசிஸ் மாத்திரம் தரமானவை என்றும் அந்த இரண்டையும் 'கம்பேயர் பண்ணியதில் லேலென்ட் சேசிஸ் தான் நல்லது என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதையும் அவர்களுடைய பதிலிலிருந்து நான் அறிகிறேன். கடைசியாக வந்த 200 வண்டிகளில் 1210 ஈ சேசிஸ் தான் வாங்கப்பட்டது என்றும் டி சேசிஸ் வாங்கப்படவில்லை என்றும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த 200 வண்டிகளில் ஒன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்காக விடப்படுகிறது. அது இப்பொழுது கோட்டையில்



நிற்கிறது. அதனுடைய என் எம்.சி. 878. அதிலே 1210 டி சேசிஸ் என்று போடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்து மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. அந்த 200 வண்டிகளும் எந்த சேசிஸில் வாங்கப்பட்டது என்பது தான் இப்பொழுது பிரச்சினை. டி சேசிஸ்களையும் அரசு ஒன்றுமே வாங்காமல் இல்லை. வாங்கி வருகிறது. 200 சேசிஸ்களும் ஈ டைப் என்கிற தகவல் எனக்குத் தரப்பட்டது. மற்றும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, சன் மைக்கா போர்டுகள், ஸ்பிரே பெயின்ட் பண்ணுதல் இவைகளில் எல்லாம் என் செலவுகளை மேற்கொள்ள வேண்டும், ஏதோ நடந்திருக்கிறது, யாருக்கோ சலுகை தரப்பட்டிருக்கிறது என்று எல்லாம் கூறினார்கள். அது மிகத் தவறு என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சன் மைக்கா போடுவதைப் பொறுத்தவரை நிரந்தரமாக அது சிக்கனத்தைத் தருகின்ற காரணத்தால், ஆரம்பத்தில் செலவு அதிகமாக இருந்தாலும் தொடர்ந்து வருகின்றபோது மெயின்டெனன்ஸில் மிக சிக்கனத்தை ஏற்படுத்தி இலாபத்தைத் தருகின்ற காரணத்தால், அது நடைமுறைப்படுத்தப்பட்டது. பச்சை பெயின்டைப் பொறுத்தவரை, உலக வங்கியிடமிருந்து தரப்பட்ட உதவி கொண்டு வாங்கப்பட்ட பென்ஸ் டெல்கோ வண்டிகளைப் பராமரிக்கின்ற இடம் தனியாக அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், லேலன்ட் வண்டிக்கும் இதற்கும் ஒரு மாற்றம் தரவேண்டுமென்ற காரணத்தால், கலர் மாற்றம் தரப்பட்டது. கலரைப் பொறுத்தவரை, சிகப்பு கலர் ஒன்றே தான் இருக்க வேண்டுமென்ற கொள்கை அரசுக்கு இல்லை என்பதன் அடிப்படையில் தான் பச்சை கலர் கொண்டு வரப்பட்டது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** பச்சை கலர் கொண்டுவரப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே அதிலே ஒன்றும் அய்யப்பாடில்லை. அவர் சொல்லியதிலிருந்து உலக வங்கி தந்த பணத்திலிருந்து வாங்கப்பட்ட 300 வண்டிகளுக்கு பச்சை பெயின்ட் அடிக்கப்பட்டது உண்மைதான். மாண்புமிகு அமைச்சர் அவர்களே கோட்டைக்குள்ளே நிற்கின்ற அந்த வண்டியைப் பார்த்து விட்டுச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அப்படி அந்த வண்டி உலக வங்கியிடமிருந்து கிடைத்த உதவி மூலம் வாங்கப்பட்ட வண்டியாக இருக்குமானால், அதுபற்றிய குறிப்புகளை நான் அதிகாரிகளிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்கிறேன். இன்னும் ஒன்றை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரிகள் கொடுத்த குறிப்பினைத்தான் நான் அவைக்குப் படித்தேன். ஆனால் டி டைப் சேசிஸ் வண்டியாக இருந்தாலும் ஈ டைப் சேசிஸ் வண்டியாக இருந்தாலும் அந்த வாகனங்களை வாங்கிய காரணத்தாலேயே அதில் நஷ்டம், இழப்பு, செலவு என்றெல்லாம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறுவதற்கு ஒரு சிறிதும் ஆதாரமில்லை. அவர் சொல்லுவது ஆதாரமற்றது. மாறாக லேலண்ட் வண்டிகளை விட இந்த வாகனங்களுக்குத்தான் டீசல் குறைவாகச் செலவாகிறது. அத்துடன் டயர் தேய்மானமும் குறைவாக இருக்கிறது என்கின்ற அளவில் கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறையிலும் இருந்து வருகிறது. அந்த அடிப்படையில் அவை நன்றாக இயங்குகின்றன. சிக்கனமாகவும் இயங்குகின்றன. வருவாயுடன் ஓடுகின்றன. எவ்வித நஷ்டமும் இல்லை என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்காலிங்கம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் பஸ் ஸ்டாண்டுக்குப் போனதாகவும், ஒருவர், தகவல் கொடுத்ததை வைத்து விசாரணை செய்ததாகவும், விசாரணையில் 8 ஆயிரம் ரூபாய் தவறு செய்திருந்ததைக் கண்டுபிடித்ததாகவும் சொன்னார்கள். ஆகவே நான் சொன்னதற்கு உடனடியாக பதில் கூறுகிற எண்ணத்தில் அப்படிக் கூறியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட எண்ணத்தில் கூறியிருந்தால் கூட, நான் சொன்னவைகளை யெல்லாம் வைத்து விசாரணை செய்து அதில் உண்மை இருக்கிறதா என்பதைப் பற்றிப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்

(பிற்பகல் 7-50)

கொள்கிறேன். நாட்டுடைமையாக்கும் கொள்கையிலே, இதற்கு முந்திய அரசு தொய்வு நிலைக்கு வந்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் இந்த அரசு தொய்வு காட்டிவருகிறது என்று சொன்னதற்கு பதில் சொல்லும் நிலைமையில் அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்னார்கள். உண்மை நிலைமையைப் பார்த்தால், 1974 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி சட்டமன்றப் பேரவையிலே அன்றையதினம் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. இராமசந்திரன்



அவர்கள், பதிலளித்திருக்கிறார்கள். அவர் இன்றைக்கு மின்சாரத் துறை அமைச்சராக இந்த அமைச்சரவையில் இருப்பதால், அன்றைக்கு அவர் அளித்த பதில் மிகவும் பொருந்தும் என்று நான் கருதுகிறேன். அந்தப் பதிலில் அவர் சொல்கிறார், அந்தக் கணக்குப்படிப் பார்த்தால் "293 வழித் தடங்களிலும் இன்னும் 10, 15 ஆண்டுகள் ஆகிவிடுமோ என்ற நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் உணர்ந்து தான் அய்ந்தாண்டுகளுக்குள் பஸ்கள் அனைத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற உறுதியான, நல்ல தெளிவான, முழுமையான சட்டத்தை அகில இந்தியாவிலும் முதன் முதலாக இந்த மாநிலத்தில்தான் இந்த மன்றம் தான் நிறைவேற்றியது" என்று அவர் பேசியதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நான் பதிலாகச் சொல்லிக்கொள்கிறேன். சாலை பராமரிப்பைப் பொறுத்த வரையில், சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது சாலைகள் எல்லாம் பழுதுபட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்தில் தொய்வு ஏற்பட்டது என்றும், அப்போது சாலை பராமரிப்பதற்காக பணம் ஒதுக்கப்படவில்லை என்றும் சொன்னார்கள். இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் பலரும் பல குழுக்களிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள், பிற மாநிலங்களுக்குச் சென்றுவரும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். 1974-75-ம் ஆண்டுகளில் அவ்வாறு பிற மாநிலங்களுக்குச் சென்றபோது, தமிழகத்தைப் போல் சாலை பராமரிப்பில் சிறந்த மாநிலம் இல்லை என்று பிற மாநிலத்தில் உள்ளவர்கள் கருத்து தெரிவித்தார்கள். ஆனால், இப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். 1977-லே பெருமழை பெய்தது, 1978-லேயும் பெருமழை பெய்திருக்கிறது. ஒரு மழை பெய்த பிறகு சாலைகளைப் பராமரிக்காமல் போனால், சாலைகள் குண்டும், குழியுமாகப் போய்விடுகின்றன. சாலையே லாயக்கில்லாமல் போய்விடுகிறது. 1975 வரை சாலைகள் பராமரிக்கப்பட்டன, செப்பனிடப்பட்டன. அதற்குப் பிறகு குடியரசுத் தலைவர் ஆட்சியிலும், இந்த ஆட்சியிலும் சாலைகள் பராமரிக்கப்படவில்லை என்று நாட்டு மக்கள் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஒரு புள்ளி விவரத்தை மட்டும் கூறுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க கட்சித் தலைவர் அவர்கள் விளக்கம் கேட்பதும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதுமாக இருப்பதால், உறுப்பினர்கள் சாப்பாடுகூட இங்கேயே போட்டுவிடலாம் என்று கூறுகிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்கள் அதற்கும் ஏற்பாடு செய்யலாம். அந்தக் குறிப்புகள் எனக்குக் கிடைக்க வில்லை. நான் புள்ளிவிவரங்கள் வைத்திருக்கிறேன். சாலைகள் பராமரிப் பைப் பொறுத்தவரையில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இருந்த பராமரிப்புக் குறிப்பைத்தான் வைத்திருந்தேன். 1969-லேயிருந்து 1976 வரை பராமரிப்புக்காகச் செலவு செய்யப்பட்டிருக்கும் கணக்கைப் பார்த்தால், 18 கோடி ரூபாய் தேவையான இடத்தில் 8 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். 20 கோடி ரூபாய் தேவையான இடத்தில் 10 கோடி ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி தேவை இருந்ததில் பாதிப் பணத்தை ஒதுக்கிவிட்டு, எங்களுடைய ஆட்சிக் காலத்தில் சாலைகள் எல்லாம் செம்மையாக இருந்தன என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுவது சரியல்ல. தமிழகத்தில் இருக்கும் சாலைகளைப் பொறுத்த வரையில், நம்முடைய நெடுஞ்சாலைகளை நாம் பராமரிக்கும் முறையை மற்ற மாநிலங் கள் எல்லாம் பார்த்து, நம்முடைய முறையை அவர்களும் பின்பற்றும் அளவுக்கு, மத்திய அரசு பாராட்டும் அளவுக்கு பலவிதமான முன்னேற்றங் களை ஹைவேஸ் ரிசர்ச் ஸ்டேஷன் மூலமாக நாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். அண்மையில் கூட மத்திய அரசின் அமைச்சர் திரு. சாந்தாராம் அவர்கள் தமிழகத்தில் இருக்கும் சாலைகள், நெடுஞ்சாலை கள் தேசிய சாலைகள் செம்மையாக இருக்கின்றன என்று கூறியிருக்கின் றார்கள். நான் கூறியது எல்லாம் ஒழுங்காகப் பணம் ஒதுக்கி பராமரிக்கா மல், வாகனங்கள் எல்லாம் ஒழுங்காகப் போய்வரும் அளவுக்கு சாலைகளை 12 வருட காலமாகப் பராமரிக்காமல் விட்டுவிட்டு, அவை இரும்புச் சாலைக ளாக இருந்தாலும் கூட, அந்தச் சாலைகள் பராமரிக்கப்படுவதற்கு எந்த விதமான பண ஒதுக்குதலும் செய்யாமலே எங்களது ஆட்சிக்காலத்திலே சாலைகள் செம்மையான முறையில் இருந்தன என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறுவது தவறு. நான் கூறுவது எல்லாம் சாலைகளைப் பராமரிப்ப தற்காக ஆகின்ற செலவு என்ன, அதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் எவ்வளவு என்பதைப் பார்க்க வேண்டும். பேருந்துகளும், மற்ற வாகனங் களும் ஓட ஓட எந்தச் சாலைகளாக இருந்தாலும் அவைகள் ஒரு 3, 4, 5 ஆண்டுக்காலத்தில் குண்டும், குழியுமாக ஆகிவிடுகின்றன.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பும் கூட்டுறவு குறித்தக் கொள்கை விளக்கக் குறிப்பும் நாளை விவாதத் திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4.00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-55)

### 5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A.—Statutory Rules and Orders.*

137. Notification issued in G.O. Ms. No. 19, Industries, dated the 4th January 1979 in regard to amendments to the Tamil Nadu Khadi and Village Industries Board (Accounts and Audit) Rules, 1968. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959)].

138. Notification issued in G.O. Ms. No. 199, Commercial Taxes and Religious Endowments, dated the 23rd February 1979 in regard to the inclusion of the branches of the Pandyan Grama Bank, situated within the State of Tamil Nadu, as approved banks for the purposes of the Tamil Nadu Chit Funds Act, 1961. [Laid on the Table of the House under section 63(4) of the Tamil Nadu Chit Funds Act, 1961 (Tamil Nadu Act 24 of 1961)].

B.—*Reports, Notifications and Other Papers.*

* 138. Policy Note on the Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. (Tamil and English).

* 139. Policy Note on Co-operation Department for the year 1979-80. (Tamil and English).

* 140. Compendium on Co-operative Movement in Tamil Nadu. (English).

£ 141. A Review on Road Transport in Tamil Nadu, 1978-79. (Tamil and English).

£ 142. Policy Note on Motor Vehicles Acts—Administration, 1979-80. (Tamil and English).

* Circulated to all M.L.Cs. on 17th April 1979.

£ Laid on the Table of the House on 18th April 1979.



**இணைப்பு**

(7 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சென்னை நகரில், ஆங்கிலோ இந்திய மற்றும் மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் நீங்கலாக உள்ள மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 72. மேல்நிலைக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களின் (தொழிற்கல்வி ஆசிரியர்களையும் உள்ளிட்ட) எண்ணிக்கை 985 ஆகும். மேற்படி ஆசிரியர்களில், தற்போது மருத்துவ விடுப்பில் உள்ளோரின் எண்ணிக்கை 11 ஆகும். இவர்களில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிபவர் 3 பேர்கள். மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் 2 பேர்கள். தனியார் பள்ளியில் பணியாற்றுபவர்கள் 6 பேர்கள். இவர்களில் இருவர் முதுகலைப் பட்டதாரிகள் ஆவர். இருவர் மகப்பேறு விடுப்பில் சென்றுள்ளனர். மேல் பட்டப் படிப்புத் தேர்வு எழுதும்பொருட்டு எல்லா ஆசிரியர்களும் மருத்துவ விடுப்பில் சென்றுள்ளனர் என்ற கருத்துக்கு ஆதாரமில்லை. மேல்நிலைப் பள்ளிகளைக் கவனிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையில் ஒரு சதவீதமே மருத்துவ விடுப்பில் சென்றுள்ளனர். தனியார் நிர்வாகப் பள்ளிகளில் மருத்துவ விடுப்பில் சென்றுள்ள சில ஆசிரியர்களுக்குப் பதில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு பதிலி ஆசிரியர்கள் நியமிக்கப்படாத இடங்களிலும், இதர பள்ளிகளிலும், அப்பள்ளிகளில் உள்ள திறமை வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு மருத்துவ விடுப்பில் சென்றுள்ள ஆசிரியர்களின் பதிலியாக, பாடங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேல்நிலைக் கல்வி மாணவர்களுக்கு 1980-ல் தான் அரசாங்க பொதுத் தேர்வு நடத்தப்படும். முதலாண்டு முடிவில், மாவட்ட ரீதியாக பொது வினாத்தாள் அடிப்படையில் தேர்வு நடத்தப்படும். மாணவர்களின் தேர்ச்சி பள்ளிகளிலேயே முடிவு செய்யப்படும். எனவே மாணவர்கள் நலன் நன்கு பாதுகாக்கப்படுவது தெளிவாகும்.

விடுப்பில் சென்ற ஆசிரியர்களுக்குப் பதிலி நியமனம் செய்ய தற்போதுள்ள விதிமுறைகளில் இடமில்லை என்பது சரியல்ல. ஆசிரியர் விடுப்பு காலம் தொடர்ந்து 3 வாரங்களுக்குமேல் இருந்தால் பதிலி நியமனம் **செய்யலாம்.**

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

**வெள்ளிக்கிழமை, 1979 ஏப்ரல் 20.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

**1. வினாக்கள்—விடைகள்.**

**உடுக்குறியிட்ட வினாக்கள்.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** என் 311 முதல் 318 வரையான வினாக்கள் ஒத்திவைக்கப்படுகின்றன.

### *Tamil Nadu Slum Clearance Board.*

* 319 *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Labour be pleased to state the number of families evicted between 1st July 1977 and 10th October 1978, for unauthorised occupation and non-payment of rent from the Tamil Nadu Slum Clearance Board tenements in Madras City ?

**தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம்.**

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளிலிருந்து, அனுமதியின்றி குடியிருந்ததற்காகவும், வாடகையைச் செலுத்தாததற்காகவும், 1—7—1977, 10—10—1978 ஆகிய நாட்களுக்கிடையே வெளியேற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** சென்னை நகரில் குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளில் முறைப்படி ஒதுக்கீடு ஆணை பெறாமல் ஆக்கிரமிப்பு செய்து வசித்து வந்தமைக்காக 1—7—1977 முதல் 10—10—1978 வரையிலான காலத்தில் 499 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன. வாடகை பாக்கிக்காக மேலே குறித்த காலத்தில் யாரும் வெளியேற்றப்படவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தக் குறிப்பிட்ட காலத்தில் வாடகை தராத காரணத்திற்காக யாரும் வெளியேற்றப்படவில்லை என்றாலும், ஏற்கெனவே கொடுக்க வேண்டிய வாடகை பாக்கிக்காக யாரேனும் இக்குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்பட்டதுண்டா? என் மூலமாகவும் மற்றும் பல்வேறு

முறைகளிலும் வாடகை பாக்கிக்காக தாங்கள் வெளியேற்றப்படுவதாகச் சொல்லும் முறையீடுகள்—ரெப்ரசென்டேஷன்கள் வந்ததெல்லாம் உண்மைக்கு மாறானவையா அல்லது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** கேட்கப்பட்ட வினாவிற்கு மட்டும்தான் என்னிடத்தில் பதில் இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** கேட்கப்படும் வினாக்களுக்குத் தொடர்பாக துணை வினாக்களும் கேட்கப்படலாமென்று அதற்கான பதில்களுடன் வருவது என்பதுதான் சாதாரணமாக அமைச்சர்களுடைய வழக்கமாகும். என்னுடைய துணைக் கேள்வியும் மூலக் கேள்வியை ஒட்டியே அமைந்திருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இதில் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. இந்தக் குறிப்பிட்ட காலத்தில்—பீரியடில் வாடகை பாக்கிக்காக யாரும் வெளியேற்றப்படவில்லை என்று பதில் அளித்திருக்கிறேன். துணைக் கேள்வியாக என்ன காரணத்திற்காக வெளியேற்றப்பட்டார்கள், திரும்ப அவர்கள் எப்படி உள்ளே வந்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் விரும்புகிற வகையில் பதில் தர வேண்டுமென்றால், அதற்குத் தகுந்தாற்போல் வினாக்களைக் கேட்க வேண்டும். அப்போதுதான் அந்தத் தகவல்களோடு விடையைத் தயாரிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** சென்னை மயிலாப்பூர் பகுதியில் பல குடும்பங்கள் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளிலிருந்து ரூபாய் 200, 300 போன்ற வாடகை பாக்கித் தொகைகளுக்காக வெளியேற்ற நடவடிக்கையை எதிர் பார்த்து அந்தத் தொகைகளை தவணை முறையில் கொடுக்க முன்வந்து, வாரியமும் அதற்கு அனுமதி கொடுத்து, அப்படி தவணையைக் கட்டுவதிலும் கொஞ்சம் தவறிவிட்ட காரணத்தால் பலர் வெளியேற்றப்பட்டார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. அது உண்மையாக இருந்தால், அரசு அதை மறுபரிசிலனை செய்து, அவர்களை அங்கே குடியமர்த்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** எனக்குள்ள சங்கடத்தைச் சொல்லி விடுகிறேன். பொதுவாக குடிசை மாற்று வாரியத்தில் வாடகை பாக்கிக்காக யாராவது வெளியேற்றப்பட்டிருக்கிறார்களா என்று கேட்டிருந்தால் அந்தத் தகவலைத் தந்திருக்க முடியும். ஆனால் 1—7—1977 முதல் 10—10—1978-க்குள் என்று ஒரு காலத்தைக் குறிப்பிட்டு, இந்தக் காலத்தில் யாராவது வெளியேற்றப்பட்டிருக்கிறார்களா என்றால், எனக்குக் கிடைத்த தகவலை மட்டும்தான் கொடுக்க முடியும்.





*320. Q. THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) the number of slums that were in existence, (i) at the time of constitution of the Tamil Nadu Slum Clearance Board, (II) when the present Government assumed office and (iii) as on 31.12.1978 ; and

(b) the total population that lived in those slums during such periods ?

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ( i ) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்டபோதும் (ii ) தற்போதைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போதும், ( iii) 31—12—1978 ஆம் நாள் நிலவரப்படியும், இருந்த குடிசைக் குடியிருப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) மேற்சொன்ன கால அளவுகளில் இந்தக் குடிசைக் குடியிருப்புகளில் வாழ்ந்த மக்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) 1970-71 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சமூகப் பொருளாதார ஆய்வின்படி. இருந்த குடிசைகளின் எண்ணிக்கை 1,202. அதன் பின்னர் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படவில்லை.

(இ) அந்தக் குடிசைகளில் வாழும் மொத்த மக்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

( i ) குடிசைப்பகுதி மாற்று வாரியம் தொடக்கத்தின்போது—7,37,531 ;

( ii iii ) 1970-71-க்கு பின்னர் ஆய்வுப்பணி மேற்கொள்ளப் படாததால் 30—6—1977-லும் 31—12—1978-லும் இருந்த குடிசை வாழ் மக்களின் எண்ணிக்கை தெரியவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மேற்சொன்ன கால அளவில் இந்தக் குடிசைகளில் வாழ்ந்த மக்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, 7 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களின் தொகையைக் குறிப்பிட்டார்கள். அதற்குப் பின்னால் எவ்வளவு பேர்களை குடியமர்த்த திட்டமிடப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அதுபற்றிய புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. எங்கெங்கே வேலை ஆரம்பித்திருக்கிறோம், எத்தனை பேர் ஸ்லம் கிளியரன்ஸ் போர்டில் குடியிருப்பு கோரி பெற்றிருக்கிறார்கள் என்ற தகவல் இருக்கிறது.

| | குடிசைப் பகுதிகள், | குடும்பங்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| மாற்றப்பட்ட குடிசைப் பகுதிகளின் எண்ணிக்கை. | 73 | .. |
| உலக வங்கித் திட்டத்தின்கீழ் பயனடைந்த குடிசைகளின் எண்ணிக்கை. | 20 | 4,137 |
| விரிவுபடுத்தப்பட்ட/மேம்பாடு திட்டத்தின்கீழ் பயனடைந்த குடிசைகள் எண்ணிக்கை. | 185 | 18,425 |
| நடப்பிலுள்ள குடிசை மாற்றும் திட்டங்களின் எண்ணிக்கை. | 29 | 8,796 |
| உலக வங்கித் திட்டத்தின் நடப்பில் உள்ளவற்றின் எண்ணிக்கை. | 8 | 15,349 |
| குடிசை மாற்று திட்டத்தின் புதிய திட்டங்களின் எண்ணிக்கை. | 10 | 5,912 |
| உலக வங்கித் திட்டத்தில் உள்ள புதிய திட்டங்களின் எண்ணிக்கை. | 8 | 2,320 |
| மொத்தம் .. | 333 | 98,013 |

**திரு. க. இராமமூர்த்தி :** குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்டதன் நோக்கமே நகர்ப்புறங்களில் இருக்கிற ஸ்லம்களை ஒழித்து சுகாதார வாய்ப்போடு கூடிய குடியிருப்புகளை ஏழை மக்களுக்கு வழங்குவது என்பதாகும். அந்த வகையில் குடிசை மாற்று வாரியம் அமைந்த பிறகு, நகர்ப்புறங்களில் ஸ்லம்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறதா? எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது? குறைக்க முடியவில்லையென்றால் அல்லது ஸ்லம்களின் எண்ணிக்கை



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அது பற்றிய புள்ளி விவரம் நடவடிக்கை எடுக்க இருக்கிறது? ஒரு பக்கம் குடிசை மாற்று வாரியம் கட்டிடம் கட்டி அங்கிருந்தவர்களைக் குடியமர்த்தும்போதே புதிதாக ஸ்லம்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றனவே அதைத் தடுக்க அரசு என்ன முயற்சியை மேற்கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** குடிசை மாற்று வாரியம் என்பது 'டிக்ளேர்டு ஸ்லம்ஸ்' என்று சொல்லப்பட்ட இடங்களிலிருந்து குடிசைகளில் குடியிருப்பவர்களுடைய பெயர்களைப் பதிவு செய்து, அவர்களுக்கு கார்டு கொடுத்து—போட்டோ உட்பட கொடுத்து—அவர்களை 'டிரான்சிட் கேம்ப்' என்று பக்கத்தில் ஒரு காலி மனையில் குடியிருக்க வைத்து ரூபாய் 50 ஒவ்வொரு குடிசைக்காரருக்கும் கொடுத்து டெம்பாரி குடிசை போட ஏற்பாடு செய்துவிட்டு, யாரை வெளியேற்றினோமோ அவர்களுக்கு என்று வீடுகளைக் கட்டி அந்த வீட்டில் திரும்ப அவர்களைக் கொண்டு வருவது என்ற பணியைச் செய்வதாகும். அதைத்தான் இப்போது செய்து கொண்டிருக்கிறோம்.

கண்ட கண்ட இடங்களில் குடிசை போடும் செய்தி கிடைக்கிறது என்றாலும், அதைப்பற்றிய 'சென்சஸ்' எடுக்கவில்லை. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் சென்சஸ் எடுக்கும் முறை இருக்கிறது. மொத்தமாக குடிசைகள் வராமல் பார்த்துக்கொள்வது என்பது முடியாத காரியம். கிராமப்புறங்களில் இருக்கிற தொழிலாளர்கள் நகர்ப்புறத்தை நோக்கி வருகிறார்கள். அதை எப்படி தடுத்து நிறுத்துவது என்றுதான் கிராமப்புறங்களிலேயே வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவது என்ற திட்டத்தை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. கிராமங்களையெல்லாம் சிறு சிறு நகரங்களாக மாற்ற வேண்டுமென்று திட்டமிட்டு செயலாற்றி வருகிறோம்.

சென்னையை நோக்கி வந்துவிட்டவர்களையெல்லாம் விரட்டி அடிப்பது என்பது சாத்தியமல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** குடிசை மாற்று வாரிய அமைப்பின் முக்கிய நோக்கமே நகரில் இருக்கிற ஸ்லம்களைக் குறைப்பது என்பதுதான். ஆக வாரியத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கிறதா இல்லையா என்பது என்னுடைய கேள்வி. அதற்கு மட்டும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அந்த நோக்கத்தோடு தான் வாரியம் தனது வேலையைச் செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 21—3—1979 தேதிய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினாக்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : பொதுவாக தலைவர் அவர்கள் அனுமதியோடு பல கேள்விகள் தள்ளிப் போடப்படுகின்றன. ஆனாலும் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அறநிலையத் துறை அமைச்சர் பெயரில் கேள்வி இருக்கிறது, உள்ளாட்சித் துறை அமைச்சர் பெயரில் கேள்வி இருக்கிறது, கல்வியமைச்சர் பெயரில் கேள்வியிருக்கிறது. இப்படி பல அமைச்சர்கள் பெயரில் கேள்விகள் இருக்கும்போது, திடீரென்று ஒரு அமைச்சர் எழுந்து பதில் சொல்லுகிறார். தலைவர் அவர்களின் அனுமதியைப் பெற்றிருக்கலாம் என்றாலும், இப்படி கேள்வி நேரத்தில் பல அமைச்சர்கள் அவையைப் புறக்கணிப்பது நியாயம்தானா என்பதை மட்டும் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர்கள் வரமுடியாத நிலை முன்கூட்டியே தெரிந்துவிட்டால், மாண்புமிகு அவை முன்னவர் மூலமாகவோ அல்லது வேறு அமைச்சர்கள் மூலமாகவோ பதில் சொல்ல ஏற்பாடு செய்துவிடுகிறார்கள். அவசரமான நிலை காரணமாக சில நேரங்களில் இப்படி நேர்ந்து விடுகிறது. எனக்குத் தெரிந்து இவ்வளவு கேள்விகள் வழக்கமாகத் தள்ளிப் போடப்படுவதில்லை. என்றாலும் இது தற்செயலாக ஏற்பட்டுவிட்ட ஒன்று என்பதால், இதைப் பெரிது படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### *Protection from Floods.*

@* 233 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of persons who were removed from Saidapet and Kotturpuram areas in Madras at the end of December 1978 for being given protection from floods

@ 21—3—1979 நாளைய வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப் பட்டது.





### வெள்ளப் பாதுகாப்பு.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1978, டிசம்பர் மாத இறுதியில் வெள்ளப் பாதுகாப்பு காரணமாக சென்னை, சைதாப்பேட்டை, கோட்டூர்புரம் ஆகிய பகுதிகளிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 9,688 பேர்கள்.

(பிற்பகல் 4-10)

திரு. க. இராமமூர்த்தி : 9,688 பேருக்கும் தகுந்த அளவுக்கு அரிசி வழங்கப்பட்டிருக்கிறதா ? இந்த எண்ணிக்கைக்கு மேற்பட்டவர்களுக்கும் தரப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அத்தனை பேருக்கும் அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர சில பேருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுள் யார் யார் பாதுகாப்பான இடத்திற்கு வந்திருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தவிர பாதுகாப்பான இடத்திற்கு வராமலிருந்த சிலருக்கு, வருவாய்த் துறை அதிகாரிகள் சென்று அவர்களைப் பார்த்து அரிசியை வழங்கியிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : இதற்கு முன் வெள்ளம் வந்தபோது இந்தப் பகுதியிலேயிருந்து இதே எண்ணிக்கையுள்ளவர்கள் பாதுகாப்பான இடம் தேடி வந்தார்கள். அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்தப் பகுதியிலே அவர்கள் குடியிருக்கக் கூடாது என்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்படியிருந்தும்கூட அந்தப் பகுதியிலே மீண்டும் வெள்ளம் வந்தபோது, பத்தாயிரம் பேர் பாதிக்கப்பட்டு பாதுகாப்புத் தேடி வரக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. அரசு ஏன் அதைத் தடுக்கவில்லை? இனியாவது தடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சென்னையைப் பொறுத்த வரையில், பல இடங்கள் தாழ்வான பகுதியாகத்தான் இருக்கின்றன. ஒரு வருடத்திற்குப் பெய்ய வேண்டிய மழை எதிர்பாராத வகையில் மூன்று, நான்கு நாட்களிலேயே பெய்துவிட்டது. ஆகவே இவர்களை வெளியே அனுப்புவது என்பது முடியாத காரியம். அவர்கள் பாதிக்கப்படும்போது அரசு கட்டிடங்கள், பள்ளிகள், கல்லூரிகள் போன்ற பாதுகாப்பான இடங்களில்

அவர்கள் தங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட எல்லோரையும் வெளியே அனுப்ப வேண்டுமென்றால், மேடான பகுதியாகவுள்ள திண்டிவனம் போன்ற பகுதிக்குத்தான் அவர்களை அனுப்ப வேண்டும் (சிரிப்பு).

**திரு. சி. இராமலிங்கம் :** புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் பாதுகாப்பு இல்லங்கள் எத்தனை, எங்கெங்கே கட்டப்படவிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** சென்னையைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் தமிழ் நாடு பூராவிற்கும் கேட்கிறார். இதற்கு முன்பு இப்படிப்பட்ட பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்படவில்லை. மழை, வெள்ளத்தால் பாதிக்கப்படுபவர்களுக்காக பாதுகாப்பு இல்லங்களைக் கட்ட இந்த ஆண்டு இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதில் மூன்று இல்லங்கள் கட்டப்பட்டு விட்டன. 14 இல்லங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய 82 பாதுகாப்பு இல்லங்கள் இன்னும் கட்டப்படவிருக்கின்றன. இவைகள் எல்லாம் கடற்கரையோரங்களில் கட்டப்படுகின்றன. புயல், வெள்ளம் வராத காலங்களில் இவைகள் எல்லாம் முதியோர் கல்வி போன்ற பொதுப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். இந்த இல்லங்கள் ரவுண்டாகக் கட்டப்படுவதால், காற்றால் பாதிப்பு ஏற்படாது. ஒவ்வொரு இல்லத்திலும் 500 பேர்களைத் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்டவர்களில் தமிழ் நாடு பூராவும் எவ்வளவு பேருக்கு அரிசி வழங்கப்பட்டது ? பணமாக எவ்வளவு தொகை வழங்கப்பட்டது என்ற முழு விவரத்தையும் அமைச்சர் அவர்கள் தருவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தமிழ் நாடு பூராவும் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கை 1,41,231. அவர்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்ட தொகை ரூபாய் 89,43,416.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 9,688 பேர் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் அனைவரும் மீண்டும் தங்கள் இடங்களில் குடியமர்த்தப்பட்டுவிட்டார்களா? பழுதடைந்த அவர்களுடைய வீடுகளைச் சரி செய்ய என்ன உதவி அளிக்கப்பட்டது ?



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பழுதடைந்த வீடுகள் ஒவ்வொன்றுக்கும் 100 ரூபாய் கொடுக்கப்பட்டது. இதற்கு முன், சென்னையைப் பொறுத்தவரையில், வீடு இடிந்து விழுந்தபோது, அதன் நிலச் சொந்தக்காரர்கள்தான் இந்த உதவித் தொகையைப் பெற்று வந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு மட்டும் இந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு முன்பு அமைச்சர்கள் நேரிலே சென்று பார்த்து, அந்தக் குடிசையில் வாழ்பவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அரிசியும், வேட்டியும், சேலையும்கூட குடியிருந்தவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டன.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** ஆண்டு தோறும் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் தமிழ் நாட்டில் வெள்ளம், புயல் வருவது வழக்கமாக இருக்கிறது. இதனால் தாழ்வான பகுதியில் வசிப்பவர்களும், மீனவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமாக நிவாரணம் அளிக்கும் வகையில் மாநில அரசு மத்திய அரசுடன் கலந்து பேசி நிரந்தர பாதுகாப்புத் திட்டத்தை வகுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், நாங்களும் ஒன்றாக இருந்த 1947 முதல் 1977 வரையில் இப்படிப்பட்ட முயற்சிகளை யாரும் செய்யவில்லையே என்று மாண்புமிகு உறுப்பினருக்கு வருத்தம் இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவேதான் இந்த ஆண்டு 82 பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்காக உலகத்திலுள்ள பல நிறுவனங்கள் பணம் கொடுக்கின்றன. மத்திய அரசுடன் கலந்துகொண்டு முயற்சி எடுக்கப்படுகிறது.

மீனவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பினாலும், அவர்கள் மீண்டும் கடலோரப் பகுதிக்கே சென்றுவிடுகிறார்கள். அங்கேதான் வலையைக் காய வைக்க வசதியாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதைக் கவனித்து ஏற்பாடு செய்கிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 82 இடங்களில் புகலிடங்களைக் கட்டப் போவதாகச் சொன்னார்கள். இராமநாதபுரம் ஜில்லாவில், திருவாடானை தாலுக்காவிலே எத்தனை கட்டப்படவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இரண்டு இடத்தில்தான் கட்டப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்களில் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரத்தில், தொண்டி, உச்சிப்புளி, தேவிப்பட்டிணம்,

உப்பூர் என்ற நான்கு இடங்களில் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டும் விட்டுவிடப் போவதில்லை. இன்னும் அதிகமாகக் கட்ட ஏற்பாடுகளைச் செய்யப் போகிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அமைச்சர் அவர்கள், குடிசையை இழந்தவர்களுக்கு 100 ரூபாயைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். 100 ரூபாயில் அவர்கள் தங்கள் குடிசைகளைக் கட்டிக்கொள்ள முடியாது. ஆகவே மேலும் அதிகமான தொகையைக் கொடுக்க வேண்டும். வனத் துறையிலிருந்து கம்பு, கழி போன்றவற்றையும் அவர்களுக்குத் தர வேண்டும்.

கேரளாவிலே 500 ரூபாயும், வனத் துறையிலிருந்து கம்பு, கழிகளையும் கொடுக்கிறார்கள். அந்த முறையை இங்கும் கொண்டு வர பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இதற்கு முன்பு இருந்த அரசு 80 ரூபாயைத்தான் கொடுத்து வந்தது. இப்போதுதான் 100 ரூபாயைக் கொடுக்கிறோம். இதற்கே ஒன்றிரண்டு கோடி ரூபாய் ஆகிறது என்ற கணக்கைச் சொன்னேன். மேலும் 500 ரூபாய் என்று கொடுத்தால் எவ்வளவு தொகை ஆகும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஏழைகளுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்றுதான் இந்த அரசும் எண்ணம் கொண்டுள்ளது. அவர்களுக்கு எவ்வளவு செய்தாலும், மீண்டும் தாழ்வான இடங்களிலே குடிசைகளைப் போட்டுக்கொள்ளுகிறார்கள். ஒரு சிறு மழை பெய்தாலும் கூட அங்கே தண்ணீர் தேங்கிவிடுகிறது. அரிசி கொடுங்கள் என்று மறுநாளே வந்துவிடுகிறார்கள். அதையும் கவனிக்க வேண்டும். ஆகவே நிரந்தரமாக அவர்கள் மேடான பகுதிகளுக்குப் போகிற முயற்சியை மேற்கொள்ள வேண்டும். பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் அத்தனை பேரும் இந்த முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## *Agricultural Loans.*

@*234 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to waive agricultural loans given to agriculturists who were affected by drought during 1970, by cyclone during 1977, and by floods during 1978 in Thiruthuraipoondi-Nagapattinam taluks, Thanjavur district and

(*b*) if so, the details thereof ?





## விவசாயக் கடன்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் ...ர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி—நாகை வட்டங்களில் ...6-ல் வறட்சியாலும், 1977-ல் புயலாலும், 1978-ல் வெள்ளத்தாலும் பெரும் ...ிப்புக்கு ஆளான விவசாயிகளுக்கு, விவசாயக் கடன்களை ரத்து செய்யும் ...தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர் ...ா, 1976 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தின் பெரும் பகுதியில் வறட்சி நிலவி . வறட்சியின் காரணமாக உழவர்களின் பயிர்கள் பாதிக்கப்பட்டன. ...வடை மூலம் கிடைக்கும் தொகை 25 சதவீதம் அல்லது அதற்குக் குறை ... இருந்தபோது, 1385 ஆம் பசலிக்கான கூடுதல் நன்செய்த் தீர்வை உட் நிலவரி, தண்ணீர் வரி, உள்ளூர் வரி ஆகியவை தள்ளுபடி செய்யப்பட்டது ...பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக் ...ட்ட கிராமங்களில் 1387 ஆம் பசலி ஆண்டுக்கான அரசுக் கடன்கள் தள்ளி ...க்கப்பட்டன. இப்படி பாதிக்கப்பட்ட கிராமங்களில் 1387 ஆம் பசலி ...டுக்கான நிலவரியும் ரத்து செய்யப்பட்டது. 1978 ஆம் ஆண்டு ...பர்-டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட மழையினால் ஏற்பட்ட சேதத்தைக் ...ி, நிலவரித் தள்ளுபடி, கடன் வசூலிப்பு ஒத்திவைப்பு போன்ற நிவார ...ங்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

(பிற்பகல் 4-20)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசுக் கடன் சென்ற பசலிக்கு ஒத்திப் ...டப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போதுள்ள ...ங்கள் விவசாயிகளுக்கு எவ்வளவு இருக்கின்றன என்றால், கிட்டத்தட்ட ...ர்களிடத்திலே எந்த அளவுக்கு நிலம் இருக்கிறதோ அந்த அளவுக்குக் ...ன்கள் இருக்கின்றன. அந்த நிலத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கிறதோ ...த அளவுக்குக் கடனும் இருக்கின்றது. அதிலே நடப்பாண்டில் கொடுக்க ...ண்டிய கடனை திரும்பக் கொடுத்தால், முந்தைய கடன்களை ரத்து செய்வ

@ 21—3—1979 நாளைய வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப் பட்டது.

தாக அறிவித்தால், வசூல் செய்கின்ற செலவு, மற்றபடி ஜப்தி இவை இல்லா மலேயே நடப்பாண்டுக் கடன்களை விரைவில் வசூல் செய்யலாம். இந்த அரசு அந்த முறையில் செய்தால், விவசாயிகளுக்கு நலன் செய்ததாக இருக்கும். அவர்கள் நலன் கருதி அதை அரசு பரிசீலிக்குமா என்றும் அதற்கு ஆவன செய்யுமா என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் விவசாயியா இல்லையா என்பதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில், நான் ஒரு நடுத்தர விவசாயி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ரொம்ப நன்றாகக் கேட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** என்னைப் பொறுத்தவரையில், நான் ஒரு நடுத்தர விவசாயி. வங்கியிலே கடன் வாங்குகின்றபோது, எவ்வளவு கடன் ஏறுகிறது, எவ்வளவு வட்டி ஏறுகிறது, அதிலே எவ்வளவு வருவாய் வருகிறது, அதிலே எவ்வளவு சங்கடப்படுகிறோம் என்பதையெல்லாம் விவசாயி ஆகிய எனக்கு நன்றாகத் தெரியும். இதிலே என்னவோ லாட்டரி சீட்டு, குலுக்கல் சீட்டு போடுவது போல, நடப்பாண்டுக் கடனைக் கொடுத்தால் பழைய கடன்களைக் கட்ட வேண்டியதில்லை என்ற நிலைக்கு வருவது என்பது முடியாத காரியம். அரசாங்கம் ரிசர்வ் வங்கியிலேயிருந்து கடன் வாங்கிக் கடன் கொடுக்கிறது. அதனால் இதைத் தள்ளுபடி செய்ய முடியாது. ஆனால் இதைப்பற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. எப்படி விவசாயி களுக்கு நன்மை செய்ய வேண்டும், அதே நேரத்திலே வாங்கிய பணத்தை வங்கிக்கு எப்படித் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களும் விவசாயியாக இருந்தால், பதில் சொல்லலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** என்னுடைய பாம்பரையே விவசாயக் குடும்பம். நானும் விவசாயிதான். விவசாயத் தொழில்கள் அத்தனையும் எனக்குத் தெரியும். இன்றைக்கும் நிலத்திலே பாடுபட்டுக் கொண்டிருப்பவன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலமாக மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு ஆசிரியர்கள் பிரச்சினை மட்டும் தான் தெரியும் என்று கருதிவிடக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். இதை அரசு மீண்டும் ஆழ்ந்து பரிசீலிக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அரசு இதைப்பற்றி யோசித் துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயியா இல்லையா என்பதைப்பற்றி எனக்கு உறுப்பினர் அவர்களைப்பற்றித் தெரியா



மல்தான் கேட்டேன். விவசாயி இல்லை என்று நான் சொல்லவில்லை. அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டு மென்ற அக்கறை அவருக்கு இருப்பது போல, இன்றைக்கும் அரசுக்கு, இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெள்ளத்தால், புயலால், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய கடன்களை ரத்து செய்வது பற்றி யோசிப்பதாகச் சொன்னார்கள். கடன் நிவாரணச் சட்டம் பற்றி இந்த மேல் சபையிலே விவாதிக்கப்பட்டபோது, நம் சட்ட அமைச்சர் அவர்கள் 5 ஆண்டுகளாகத் திருப்பிச் செலுத்த முடியாத குறைந்த பட்சக் கடனாக வாங்கியிருக்கின்ற கடன்களை ரத்து செய்ய அரசு பரிசீலிக்கும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் கூட்டுறவுத் துறையிலே குறிப்பிட்ட விவசாயிகள் கடனை, 5 ஆண்டுக் காலமாக தொடர்ந்து கொடுக்க முடியாமல் இருந்தால், அப்படிப்பட்ட கடன்களை ரத்து செய்யும் முகத்தான் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக் குறுதியை நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்று வதற்கு தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அரசுக் கடனைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ஆனால் இது வங்கிக் கடன். அதைப்பற்றிச் சொல்வதென்றால், மாநில அரசு மத்திய வங்கி, ரிசர்வ் வங்கியிலிருந்து வாங்கிக்கொடுக்கின்ற ஏஜெண்டாகத்தான் இருந்து வருகிறது. இடையிலே உள்ள ஏஜெண்டாகத்தான் இருக்கிறது. அதில் நாம் ஒன்றும் செய்ய முடியாது. இதைப்பற்றி ஏதாவது செய்ய வேண்டுமானால் தமிழகத்திலே வாங்குகின்ற வரிப் பணத்தைத் தான் கொடுக்க வேண்டும். ஆனால் அதைப்பற்றியெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கிறது. அதையெல்லாம் இப்போது சொல்ல முடியாத நிலையிலே இருக்கிறோம் என்பதை உங்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** வங்கிகள் உட்பட எந்தத் துறையானாலும் வசூல் செய்யமுடியாத கடன்களை "ரைட் ஆப்" செய்யலாம். விவசாயத்தைப் பொறுத்த வரையில், 1976-ல் வறட்சி, 1977-ல் புயல், 1978-ல் வெள்ளம் என்று தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டிருப்பதால், இந்தக் கடன் களை வசூல் செய்ய முடியாத நிலையிருக்கிறது என்ற அளவில் அரசு கணக்குக் காட்டி அதை "ரைட் ஆப்' செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1979 எப்ரல் 20

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : "ரைட் ஆப்" செய்தால் அதை யார் கொடுப்பது என்பதுதான் பெரிய பிரச்சினை. "ரைட் ஆப்" செய்வது என்பதே முடியாது. நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கூட இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றுதான் நினைக்கிறது. வங்கிக் கடனைப் பற்றி எந்தவிதமான முடிவும் எடுக்க முடியாமல் இருக்கிறது. நான் சொல்வது தவறாக இருந்தால், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் திருத்திச் சொல்வார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு இருக்கிற கடனை 5, 6 ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும் என்ற யோசனை இருக்கிறது. அதைத்தான் இன்றைக்குச் செய்ய முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : விவசாயிகளுக்கு பல நன்மைகள் செய்திருக்கின்ற இந்த அரசு, குறுகிய காலக் கடன்களை, நீண்ட காலக் கடன்களாக மாற்றி, நீண்ட காலக் கடன்களை நீண்ட நீண்ட காலக் கடன்களாக மாற்றி, வட்டியைக் குறைத்து அல்லது ரத்து செய்து கொடுக்க ஆய்வு செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசு அதைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்கின்ற சூழ்நிலையில் யார் ரத்து செய்வது, யாருக்கு ரத்து செய்வது என்ற பிரச்சினை இருக்கிறதென்று சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சியில், வட ஆற்காடு மாவட்டத்தில், வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு வங்கிகளில் தலைவராக இருந்த திரு. பி. பி. நாயுடு அவர்கள் சுமார் 20 லட்சம் ரூபாய் அளவுக்கு, பல ஆண்டுகளாக விவசாயிகள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில், ரத்து செய்திருக்கிறார்கள். அப்படி சில வங்கிகளிலே ரத்து செய்திருக்கிறார்கள். எந்தெந்த வங்கிகள் லாபத்தில் இயங்குகின்றனவோ அவற்றிலாவது கடன்களை ரத்து செய்ய நமது அரசாங்கம் முயற்சி செய்தால் என்ன என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் புயல், வெள்ளம், வறட்சியிலிருந்து ஆரம்பித்து இப்போது வங்கி வரைக்கும் போயிருக்கிறார்கள். வங்கியைப்பற்றி இதைவிட அதிகமாக நான் சொல்ல முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1979 எப்ரல் 20]

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அமைச்சர் அவர்கள் "நான் ஒரு நடுத்தர விவசாயி" என்று முன்னால் சொன்னார்கள். அதற்கு மேற்கொண்டு அவரை நான் துன்புறுத்தத் தயாராக இல்லை. நமது உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதுபோல, ஆயிரம் ரூபாய்க்குக் கீழ் கடன் இருந்து 500 ரூபாய்; 600 ரூபாய் என்று கடன் வாங்கியவர்களுக்கெல்லாம் கடனை ரத்து செய்யுமா என்று கேட்டார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அந்தக் கேள்வியை நான் கேட்டேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : சரி. மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் கேட்டதாகச் சொல்கிறார்கள். எந்த வழியிலே கடன்காரர்களுக்குக் கொடுப்பது, அவர்களுக்கு என்ன சொல்வது என்பது தான் அமைச்சர் அவர்களுடைய பதில். அதையேதான் நான் திருப்பி அவர்களிடம் கேட்கிறேன். இந்தக் கடனையெல்லாம் விவசாயிகள் எந்த வழியிலே செலுத்துவது என்று அமைச்சர் அவர்கள் வழி சொல்ல வேண்டும். அவர்கள் அதற்குப் பதில் கொடுத்தால், நன்றாக இருக்கும். அவர்கள் எப்படி திருப்பிக் கொடுக்க முடியும் என்று சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வங்கிக் கடன் இப்போது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியும். அதை எப்படி வசூல் செய்வது, எப்படி ஏழை விவசாயிகளுக்கு நன்மைகள் செய்வது என்பது பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : குறுகிய கால வினா எண் 2 ஒத்தி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

அவைக்கு வராமைக்கு அவையின் அனுமதி கோரல்.

THIRU G. VASANTHA PAI : Sir, may I mention a matter ? I have given notice of a Motion for Leave of Absence from the House because I am going abroad on a tour for a period of three months because I am going abroad on a tour of the United States of America, Canada, South America and England. I will not be able to attend the meetings of the House till the 1st August and I may extend it for some more time. I have given notice of a Motion for Leave of Absence from the House, under rule 15 (1).

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் விஷயத்தைச் சொல்லலாம். அதுபற்றி நான் கருத்து சொல்கிறேன். உறுப்பினரவர்கள் மோஷனாகக் கொடுக்க முடியாது.

THIRU G. VASANTHA PAI : Sir, Rule 15 (1) says : "Leave of absence from the sittings if the House may be granted by the House to a member on a motion made by him or any other member in his behalf, stating the period of absence, and such motion shall be voted upon without amendment or debate." Therefore, I request your permission.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் படிக்கிற விதி, அவர்கள் போன பிறபாடு, எழுப்ப வேண்டிய பிரச்சினை பற்றிய விதி. அவர்கள் வெளியூர்களுக்குப் போவதற்கு முன்னாலே அப்படிப் பட்ட மோஷனை மூவ் பண்ணுவதில்லை. இந்த அவை, மாண்புமிகு உறுப்பினரவர்களிடம் நல்ல எண்ணம் வைத்துள்ளது. அவரும் நல்ல முறையில் செயல்படுகிறார். எனவே அப்படிப்பட்ட நிலை வரும்போது அதுபற்றிய முடிவை எடுத்துக்கொள்ளலாம்.

(பிற்பகல் 4-30)

3. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

**வாகைக்குளத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகு, 200 பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள் வாகைக்குளம் துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகு, பல கிராமங்களிலே 200 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அது எவ்வாறு விதியின்கீழ் வருகிறதென்பதைச் சுருக்கமாகக் கூறுமாறு கோருகிறேன்.



திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, சமீபத்திலே அருப்புக் கோட்டை தாலுக்காவில் உள்ள வாகைக்குளத்தில் நடந்த துப்பாக்கி சூட்டிற்குப் பின்னால், அரசாங்கத்தின் சார்பாக நீதி விசாரணை போடப்பட்டிருக்கிற நிலையில், அந்த விசாரணைக்குக் குந்தகம் ஏற்படும் வகையில் கருத்துக்களைச் சொல்லாமல், ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அரசாங்கம் சில நடவடிக்கைகள் எடுக்க சாதகமாக இருக்கும் என்பதாலும், சில தகவல்களைக் கொடுப்பதன் மூலம் காவல் துறை, ரெவின்யூ துறை ஆகியவற்றுக்கு உத்தரவு போட்டு, அந்தப் பகுதியில் அமைதியைக் காக்க வாய்ப்பாக இருக்குமென்பதாலும், ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். சமீபத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னால், பல பேர்களுக்கு அதன் காரணமாக காயமேற்பட்டு, மதுரை, அருப்புக்கோட்டை மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். சிகிச்சை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அருப்புக்கோட்டை மருத்துவ மனையில் இருக்கிற நோயாளிகளுக்குச் சரியான வசதிகளில்லை. அவர்களை மதுரைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்ற வேண்டுகோள் இருக்கிறது. இப்போது, துப்பாக்கிச் சூட்டிற்குப் பின்னாலே, பல பேர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டு, அதன் காரணமாக மருத்துவ மனையிலே இருக்கிற நோயாளிகள் போலீசார் கண்காணிப்பில் இன்றைய தினம் மருத்துவ சிகிச்சை பெறுகிறார்கள். ஏற்கெனவே வசதிகள் குறைவாக உள்ள மருத்துவ மனை அது. அங்கே அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் இப்போது பயப்பிராந்தியில் இருக்கிறார்கள். படுக்கையைச் சுற்றி போலீசார் இருக்கும் நிலையில், சிகிச்சை அளிக்கப்படுகிறது. மாண்புமிகு மேலவைத் தலைவரவர்கள் மூலமாக அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளாகி விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நியாயமான நீதி விசாரணைக்கு முன்னால், பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல வேண்டும், தங்களுடைய கருத்துக்களை பயமில்லாமல் சொல்ல வேண்டும் என்று தயாராக இருக்கும்போது, புதிதாக அவர்கள்மீது வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. இரண்டு தினங்களுக்கு முன்னால் 200 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே பலர் புற நோயாளிகளாக இருக்கிறார்கள். பலர் மருத்துவ மனைகளிலே வைத்திய சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தக் காவல் போடப்பட்டிருக்கிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே, அவர்களெல்லாம் மிகத் தெளிவாக, மனத்திலே பயமில்லாமல், நீதிபதிக்கு முன்னாலே வாக்குமூலம் கொடுக்க முடியுமா என்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. நீதி விசாரணை போட்டுவிட்டு, யாரெல்லாம் தொல்லை கொடுப்பார்களோ, யாரெல்லாம் அரசாங்கத்திற்கு விரோதமாக,

போலீசுக்கு விரோதமாக சாட்சி சொல்லுவார்களோ என்று முன்கூட்டியே 200 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கொஞ்சம் முன் ஜாக்கிரதை யோடு நான் சொல்லுகிறேன், நீதி விசாரணைக்குப் பாதகமான தகவலைத் தரவில்லை. கைது செய்யப்பட்டதால் அவர்களுக்குப் பயம் உருவாகிறது. எனவே அது வேண்டாத காரியம்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அங்கே துப்பாக்கிச் சூடு கடந்த நான்காம் தேதி நடந்தது. நீதி விசாரணைக்கு உத்தரவிட்ட பின், இன்றைக்கும் வாகைக்குளத்திற்கு இரண்டு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மிழக்குடிக்குப் பக்கத்திலே போலீஸ் முகாம் வைத்திருக்கிறார்கள். அவர்கள், வேறு மாவட்டங்களிலிருந்து கொண்டு வந்த போலீஸ்காரர்களாக இருக்கிறார் கள். அப்படிப்பட்ட நிலைமைகள் அங்கு இருக்கின்றன. அங்கே உள்ளூர் மக்களுக்குள்ளே சண்டை கிடையாது; இரண்டு ஊர்களுக்குள்ளோ, இரண்டு சமூகத்திற்குள்ளோ சண்டை கிடையாது. பிரச்சினைகள் முடிந்து, அந்தப் பகுதி இப்போது அமைதியாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் போலீஸ் முகாம் இருப்பதால், அவர்களுக்குப் பயமிருக்கிறது. எனவே அந்தப் போலீஸ் முகாம் அங்கு இருக்க வேண்டுமா என்பதைப் பற்றி விவாதிக்கவும், கைது செய்யப்பட்டதால், அங்குள்ளவர்களுக்குப் பயம் ஏற்பட்டு, நீதி விசாரணை பாதிக்கும் நிலை இருக்கிறதென்பதாலும், அதைப்பற்றி விவாதிக்க வும், அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவரவர்களே, 5—4—1979 அன்று பூலாங்கால் பேருந்து நிலையத்தில் சுமார் 20 நபர்கள் அவர்களுடன் பேருந்தில் சென்று கொண்டிருந்த பெருநாளி காவல் நிலையத்தைச் சேர்ந்த சிராமுத்து என்ற காவலரைத் தாக்கி, அவரிடமிருந்து துப்பாக்கியையும், கைப் பையையும் பறித்துச் சென்றனர். இது சம்பந்தமாக 6—4—1979 அன்று பகல் 12 மணிக்கு இருவர் கீழ்பரலச்சி குற்ற என் 13/79-ன்படி கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதைத் தவிர காயமடைந்து சிகிச்சைக்குப் பிறகு அருப்புக்கோட்டை அரசினர் மருத்துவ மனையி லிருந்து வெளியேற்றப்பட்ட நால்வரும் அந்த மருத்துவ மனையில் உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்று வந்த 8 பேரும் 12—4—1979 அன்று இரவு சுமார் 7-30 மணிக்கு கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டனர்.





இவர்கள் கமுதி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வாகைக்குளம் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு முன்னர் கலவரத்தில் ஈடுபட்டதாக கமுதி குற்ற என் 81/79-ன்படி கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

தமிழ் நாடு தனி போலீஸ் பிரிவு மிழக்குடி புறக்காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு ஏதேனும் ஏற்பட்டால், உடனடியாக பாதுகாப்பிற்காக என்று நிறுத்தப்பட்டுள்ளது. இவர்கள் இராமநாதபுரம் மாவட்ட செஷன்ஸ் நீதிபதியின் ஆணைக் குழு விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்னால் அவ்விடத்தி லிருந்து அகற்றப்படுவார்கள் என்று இந்தப் பிரச்சினை பேரவையில் எழுப்பப் பட்டபோதுகூட, மாண்புமிகு முதல்வரவர்களின் சார்பிலே உறுதி அளிக்கப் பட்டது. கைது செய்வதற்கான காரணங்களை, குறிப்பிலிருந்து சொல்லியிருக் கிறேன். 12—4—1979-க்குப் பிறகு யாரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை துவங்கிய உடனே அங்கே போலீசார் இருக்க மாட்டார்கள். அனைவரையும் திரும்பப் பெறுவோம் என்பதையும் சொல்லி, இது குறித்து விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பொருள் குறித்து விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதுவதால், அனுமதி மறுக்கிறேன்.

### 4. கவன ஈர்ப்பு.

**(1) இளைஞர் அணியில் பணியாற்றிய பட்டதாரிகள் தேர்வாணைக் குழு சிறப்புத் தேர்வில் வெற்றி பெற்றும், பணியில் அமர்த்தப்படாதது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு. ஆ. பாலசுப்ரமணியம், திரு. டி.வி. பி'பாண்டி அவர்களும் இது குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிறார்கள். அதையும் இதனுடன் இணைத்து எடுத்துக் கொள்ளலாம்.

## இளைஞர் அணியில் பணியாற்றிய பட்டதாரிகள் தேர்வாணைக் குழு சிறப்புத் தேர்வில் வெற்றிபெற்றும், பணியில் அமர்த்தப்படாதது குறித்து.

[1979 ஏப்ரல் 20

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

" தமிழகத்தில் நான்கு ஆண்டுகளாக இளைஞர் அணியில் பணியாற்றிய பட்டதாரிகளுக்கு வேலை இழப்பு ஏற்பட்டதால், 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பணியில் அமர்த்த தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டு, அதில் 1,200 பேர் வெற்றி பெற்றும் இதுவரை அவர்களை பணியில் அமர்த்தாததால் அவர்கள் பெரும் அவதிக்கும், இன்னலுக்கும் உள்ளாகி இருப்பது குறித்து ".

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) :** தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** அந்தத் தேர்வு நடந்து, 1978ஆம் ஆண்டிலேயே முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மதிப்பெண்கள் அடிப்படையிலே அவர்களை வேலையில் அமர்த்துவதா அல்லது தாற்காலிக பணி அடிப்படையிலே வேலையில் நியமிப்பதா என்பது பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். ஓராண்டாகியும் அது குறித்து முடிவெடுக்கப்படவில்லை. தீவிர பரிசீலனையில் இருக்கிறது, பரிசீலிக்கிறோம் என்பதை அரசு செப்டிப்பன்சாக வைத்துக்கொண்டிருக்கிறது. எனவே, இனிமேல் ஒரு வரம்பு வைத்து, இவ்வளவு நாட்களுக்குள்ளாக பணி கொடுக்கப்படுமென்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இளைஞர் அணியிலே பணியாற்றிய பட்டதாரிகள் தேர்வாணைக் குழுவால் நடத்தப்பட்ட தேர்விலே கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். இது இளைஞர் அணியில் பணியாற்றியவர்களுக்காக நடத்தப்பட்ட தேர்வல்ல. இதை அந்த அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறேன். தாற்காலிகமாகப் பணி புரிந்த இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்குத் தட்டச்சர்கள் ஆகியோரையும் பணியில் முறைப்படுத்த வேண்டுமென்றும் இந்தத் தேர்வு நடத்தப்பட்டது. மொத்தம் 5,480 பேர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதிலே 1,200 பேர்கள் இளைஞர்

---

@ 132 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



அணியில் பணியாற்றியவர்களாக இருக்கிறார்கள். எந்த வரிசைப்படி இவர்களுக்கு ஆணை பிறப்பிப்பது என்பதைத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் இது குறித்து முடிவெடுக்கப்படும்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** இப்போது தமிழ்நாடு தேர்வாணைக் குழு மதிப்பெண்கள் அடிப்படையிலேதான் வேலை தர வேண்டுமென்றும், ஆனால் அரசு தாற்காலிகப் பணி அடிப்படையிலே வேலை கொடுக்க வேண்டுமென்றும் சொல்வதால், இரண்டுக்கும் இடையிலே சிக்கல் இருப்பதால், நீட்டித்துக் கொண்டு போகிறது என்று சொல்கிறார்கள். அப்படி நீட்டித்துக்கொண்டு போகாமல், உடனடியாக அதைப் பரிசீலித்து, அவர்களை வேலையில் அமர்த்த அரசு முடிவெடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** விரைவில் முடிவெடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

### (2) தர்மபுரி மாவட்டத்தில் நடைபெறும் குடும்பநல இருவார விழாவை ஒட்டி, அறுவை சிகிச்சைக்கு ஆள் பிடித்து வர இயலாத அரசு ஊழியர்களை தற்காலிகப் பணி நீக்கம் செய்திருப்பது குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

" தர்மபுரி மாவட்டத்தில் நடைபெறும் குடும்பநல இருவார விழாவை ஒட்டி, அறுவை சிகிச்சைக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு ஆள் பிடித்து வர இயலாத அரசு ஊழியர்கள் நூற்றுக் கணக்கானவர்களை, மாவட்ட ஆட்சித் தலைவர் தற்காலிகப் பணி நீக்கம் செய்திருப்பதால் அரசு ஊழியர்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து ".

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

---

@ 132-134 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் நடைபெறும் குடும்ப நல இருவார விழாவை ஒட்டி, அறுவை சிகிச்சைக்கு ஆள் பிடித்து வர இயலாத அரசு ஊழியர்களை தற்காலிகப் பணி நீக்கம் செய்திருப்பது குறித்து

[1979 ஏப்ரல் 20

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அரசு குடும்ப நலத் திட்டத்திற்கு பணியாளர்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது என்று ஆணை பிறப்பித்திருப்பது உண்மை. அதுகுறித்து மறைமுகமாக வேறு காரணங்களைக் குறிப்பிட்டு, அதாவது குடும்ப நலத் திட்டத்திற்கு ஆள் பிடித்து வரவில்லை என்ற காரணத்தைக் காட்டாமல் வேண்டுமென்றே வேறு காரணத்தைக் கற்பித்து தண்டனை வழங்குதல், தற்காலிக வேலை நீக்கம் செய்தல் போன்ற நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். சாதாரண காலங்களில் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுபவர்களை விட குடும்பநல இருவார விழா கொண்டாடப்படுகின்ற காலங்களில் வேலை நீக்கம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்வு செய்து பார்த்தால் தெரியும். அந்த வகையில் அத்தகைய நிலையைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : தலைவரவர்களே, எந்தவிதமான கட்டாயப்படுத்தலோ, அச்சுறுத்தலோ ஆசிரியர்களைப் பொறுத்தவரை இருக்கக்கூடாது என்று தெளிவாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் குடும்ப நலத் துறையிலே அந்தப் பணிகளை ஆற்றுபவர்கள் தங்கள் பணிகளை செவ்வனே ஆற்ற வேண்டுமென்ற கண்டிப்பும் செலுத்தப்படுகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆசிரியர்களை இதிலே பயன்படுத்தவில்லை என்று சொன்னார்கள். ஏனைய அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் இதிலே பயன்படுத்தப்படக்கூடாது என்கின்ற ஆணை கண்டிப்பாகச் செயல்படுத்தப்படுமா ? நேற்று கூட பெயரைக் கேட்டார்கள். பெயரைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : தலைவரவர்களே, இன்ன தவறு நடந்திருக்கிறது என்கிற விவரத்தைச் சுட்டிக்காட்டி அரசுக்குத் தகவல் கொடுக்க முன்வருவார்களேயானால், நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரத்தில் இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக இருக்கின்றவர்கள், குறிப்பாக அரசாங்க அதிகாரிகள் இந்தத் திட்டம் நல்வாழ்வுத் துறையினுடைய திட்டம் மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக நாட்டு மக்கள் நல்வாழ்வு பெறுவதற்காக அரசினால் நிறைவேற்றப்படுகின்ற திட்டம் என்பதை உணர்ந்து, அனைத்து அரசு ஊழியர்களும் இதில் ஈடுபடுவதில் தவறில்லை.



1979 ஏப்ரல் 20]

## 5. அரசின் தீர்மானங்கள்.

### (1) அலுவல் வரிசையில் மாறுதல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவரவர்களே,

"மேலவை விதி 21 (3)ன்படி இன்றைய அலுவல் பட்டியலில் இடம் பெற்றுள்ள அரசின் தீர்மானங்களில் கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான தீர்மானத்தினை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21 (3)ன்படி இன்றைய அலுவல் பட்டியலில் இடம் பெற்றுள்ள அரசின் தீர்மானங்களில் கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான தீர்மானத்தினை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### (2) கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள 1979-80 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"
என்று முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள 1979-80 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, இந்த ஆண்டு கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதில் நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

---

@ 242–271 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 ஏப்ரல் 20

கூட்டுறவு இயக்கம் நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு மிக மிக இன்றியமையாத ஒரு இயக்கம் என்பதை நாம் நீண்ட நெடுங்காலமாக உணர்ந்திருக்கிறோம். குறிப்பாக வளர்ந்துகொண்டிருக்கிற இன்றைய சமுதாய அமைப்பிலே கூட்டுறவு இயக்கம் ஒரு முக்கியமான, இன்றியமையாத துறையாக பரிணமித்துக் கொண்டிருக்கிறது. பல்லாண்டு காலமாக, பன்னெடுங்காலமாக இந்தத் துறை சீர்திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. இன்றைக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் விவசாயிகளுக்கும் சரி, ஏழையெளிய நலிந்த மக்களுக்கும் சரி, ஏனைய பிரிவினருக்கும் சரி, நியாயமான முறையில் பொருள்கள் வழங்குகின்ற ஒரு முறை தவிர்க்க முடியாததாகிவிட்டது. கூட்டுறவு மையத்தின் மூலம் பொருள்களை சமூகத்திலுள்ள அனைத்துப் பிரிவினரும் வாங்குவது என்பது தவிர்க்க முடியாததாகி விட்டது என்பதை எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்திலே இருக்கிற ஏழையெளிய விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றைய தினம் நூற்றுக்கு 70 சதவிகிதம் பேர் கூட்டுறவுத் துறையை நம்பி வேளாண்மை செய்துகொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் விவசாயிகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளையும், தனிப்பட்டவர்களையும், கடன் பெறுவதற்காக நம்பியிருந்த நிலை மாறி, தங்களுடைய முழுத் தேவைக்கும் கூட்டுறவுத் துறையை நம்பியிருக்கின்ற நிலை இருக்கிறது. கூட்டுறவுத் துறை அளிக்கின்ற பல்வேறு உதவிகளையும், கடன் வசதிகளையும் பெற்று அதன் மூலம் விவசாயம் செய்து, விவசாயத்தை அபிவிருத்தி செய்து, தங்களுடைய வருவாயையும் பெருக்கி அதன் மூலம் நாட்டினுடைய உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற கூட்டுறவுத் துறை நல்ல முறையில் உதவி வருகிறது என்கின்ற உண்மையை அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு தனியார் கொடுக்கின்ற கடனைப் பொறுத்தவரை, அவர்களிடமிருந்து கடன் வாங்க முடியாத அளவுக்கு வட்டி சுமத்துகிறார்கள். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருக்கிற விதி முறைப்படி சாதாரண ஏழையெளிய மக்களுக்கெல்லாம் கடன் தொகை கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்கின்ற நிலை இருக்கிறது. அப்படி இருக்கும்போது, அவர்களுக்குக் கூட்டுறவுத் துறை ஒன்றைத் தவிர வேறு எந்தத் துறையின் மூலமும் நியாயமான வட்டிக்கு கடன் கிடைக்க வாய்ப்பு இல்லை. நியாயமான வட்டிக்குக் கடன் கிடைப்பது இந்தக் கூட்டுறவுத் துறை ஒன்றில்தான் என்பதை அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறை மூலம் கிடைக்கிறமாதிரி கடன் உதவி வேறு எங்கும் கிடைக்காது என்பதை அனைத்து விவசாயிகளும் உணர்ந்திருக்கிறார்கள். மேலும் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் கடந்த 10 அல்லது 15 ஆண்டுகளாக கூட்டுறவின் முக்கியத்துவத்தை உணர்ந்து வருகிறார்கள். இன்றைய தினம் கூட்டுறவு இயக்கம் தமிழ்நாடு பூராவும் பரவலாக



979 ஏப்ரல் 20] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

செழித்தோங்கி வளர்ந்து உயர்ந்திருக்கிறது என்பதை நாமெல்லாம் ஒப்புக் ொள்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்தில் நடைமுறை சாத்தியத்தில், னுபவபூர்வமாகப் பார்க்கின்ற நேரத்தில், வேறு எந்த வகையிலும் கிடைக்கப் பெறாத அளவு கடன் உதவி, குறைந்த வட்டிக்கு விவசாயிகளுக்குக் கடன் ூட்டுறவுத் துறை மூலம் கிடைக்கிறது. இதனைத் தெரிந்த பிறகு, அரசாங் ம் பல சந்தர்ப்பங்களில் பல சட்டங்களின் மூலம் நடவடிக்கைகளை பல்வேறு ட்டங்களில் எடுத்து விருத்தி செய்து அதை நீட்டித்திருக்கிறது.

கூட்டுறவு இயக்கத்திலே தொய்வு, முடக்கம் போன்ற நிலைமைகள் எல்லாம் ற்படாமல் காரியங்களை நல்ல முறையில் செய்ய வேண்டும். அதற்கான ாத்தியக்கூறுகள் இன்றைய தினம் எப்படி இருக்கின்றன என்பதை நான் தெரி ிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவு சங்கங்கள் அல்லது மத்திய ூட்டுறவு மையங்கள் அல்லது தமிழ்நாடு கூட்டுறவு மத்திய வங்கி இவைகளின் ிர்வாகம் எல்லாம் இன்றைக்கு ஆலோசனைக் குழு இல்லாமல் தனி அதிகாரி ளின் மூலம் நடைபெறுகின்றது. இந்த ஏற்பாடுகளினால் கூட்டுறவு இயக் த்திற்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்கின்ற ஐயம் ிருக்கிறது. இது ஒரு தவறான போக்கு. முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் ூட்டுறவு இயக்கத்தை அரசியல் ஆக்கிவிட்டார்கள். அதனால்தான் ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் ஆலோசனைக் குழுக்கள் எல்லாம் கலைக்கப்பட்டன என்றும் சொல்லுகிறார்கள். அதனால் தான் மாநில மத்திய வங்கி, மாவட்ட த்திய வங்கி, இன்னும் கீழ் மட்டத்திலே இருக்கின்ற கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் தனி அதிகாரிகளுடைய கண்காணிப்பின் கீழ் ஒப்படைக்கப்பட்டிருக் கின்றன என்று சொல்லுகிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் மீது நம்பிக்கை வைக்காமல் தனி அதிகாரிகள் மீது மட்டும் அரசாங்கம் நம்பிக்கை வைக்கின்ற ஒரு பரிதாப நிலையை நாம் காண முடிகிறது. இத்தகைய நிலை இருக்கக் கூடாது. கூட்டுறவுத் தத்துவம் என்றால் என்ன என்பது தெரியாததல்ல. தற்போதைய நிலை விரும்பத்தக்க நிலை அல்ல. எமர்ஜென்சி காலத்திலே, அவசர காலத்திலே செய்யப்பட்ட அந்த ஏற்பாடு ஏன் இன்னும் நீடித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. ஊராட்சி ஒன்றிய தனி அதிகாரிகள் தங்கள் இஷ்டத்திற்குச் செய்வது போல், இந்தத் துறை யிலுள்ள தனி அதிகாரிகளும், தங்களுடைய அதிகாரத்தை அலங்கோலம் பண்ணி, தாங்கள் விரும்புகிறபடி செய்கின்ற நிலையை அரசாங்கம் உணர்ந்து, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நான் பல முறை இதுபற்றி இந்த அவையில் பேசியிருக்கிறேன். குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர்கள் வருவதாக இருந்தால் கூட, நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 ஏப்ரல் 20

உதாரணத்திற்கு காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே நியமிக்கப்பட்டவர்கள் மனப்
பக்குவம் உள்ளவர்களாக இருந்தார்கள். மனப்பக்குவம் உள்ளவர்கள்தான்
தலைவர்களாக வர முடியும் என்ற நிலை இருந்தது. திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சிக் காலத்தில் தங்களுடைய செல்வாக்கின் காரணமாக அவர்கள்
கட்சியைச் சேர்ந்தவர்கள் பல பேர் மத்திய வங்கிகளிலும், சொசைட்டிகளிலும்
தலைவர்களாக வந்தார்கள் என்றும் அப்படி வந்தது பாவமான காரியம்
என்றும் கருதுகிறார்கள். ஆனால் உண்மை நிலை அது அல்ல. காங்கிரஸ்
கட்சியைச் சார்ந்த பல பேர் கூட்டுறவுச் சங்கங்களில் அந்த சந்தர்ப்பத்தில்
தலைவர்களாக இருந்தார்கள். அவர்களையெல்லாம் நினைத்த மாத்திரத்திலே
சங்கத்திலிருந்து நீக்கிவிட முடியாது. குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்
திலே கூட்டுறவு சங்கத் தேர்தலை வைக்காமல், இருந்த ஆலோசனைக் குழுக்
கள் எல்லாம் நீக்கப்பட்ட நிலையில், புதிதாக ஆலோசனைக் குழுக்கள் அமைக்
கப்படாத நிலையில், இன்றைக்கு அரசாங்கம் மீண்டும் ஒரு புதிய சட்டத்தைக்
கொண்டு வந்திருக்கிறது. 'காம்ப்ரிஹென்சிங் லா' என்கிற முறையில் சட்டம்
கொண்டு வருகிறோம், ஒட்டுமொத்தமாக அனைத்து ஷரத்துக்களையும் அடக்கி
புதிய சட்டம் கொண்டு வருகிறோம் என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி சட்டம் கொண்டுவரப்
பட்டதற்குப் பிறகு, தேர்தலை வைக்கலாம் என்று சொல்லுகிறார்கள். வளர்ந்து
வருகிற ஒரு சமுதாயத்தில் எல்லாக் குறைகளையும் போக்குகின்ற வகையில்,
அமையப்பெற்ற, முழுத் தன்மை பெற்ற, ஒரு சட்டத்தைக் கொண்டு
வருவதாகச் சொல்கிறார்கள். எப்படித்தான் சட்டம் கொண்டு வந்தாலும்,
காலத்திற்கேற்ப, ஆண்டுக்காண்டு, அதன் தன்மை மாறிக்கொண்டே தான்
இருக்கும். ஆகவே விரைவிலே தேர்தலைக் கொண்டுவர வேண்டும் என்பது
தான் எங்களுடைய ஆசையெல்லாம். ஆளும் கட்சிக்காரர்கள் மத்திய
வங்கியின் தலைவராக வருவதை யார் தடை செய்ய முடியும்? ஆகவே
தேர்தலை முதலில் வைக்க வேண்டுமென்கின்ற கருத்தினை இந்த அரசுக்கு
தான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை).

(பிற்பகல் 4-50)

தேர்தலை நடத்துவதற்குப் பதிலாக இப்படிப்பட்ட குறுக்கு வழிகளில்
ஈடுபடுகிறார்கள். இப்போது இருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்,
அன்றைய தினம் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்த திரு. ஆதித்தனார்
அவர்களைக் குறை சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி



1979 ஏப்ரல் 20] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

யிலே அவர்கள் தங்களது செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு குறுக்கு வழி
யில் தங்களுக்கு வேண்டியவர்களைப் போட்டார்கள் என்று சொன்னார்கள்.
ஆனால் இன்றைய தினம் அமைச்சர் அவர்களே ஆளும் கட்சியில் இருந்து
கொண்டு அன்றைக்கு எதையெதைத் தவறு என்று சொன்னார்களோ, அதைச்
செய்து கொண்டிருக்கிறார்கள். அதிகாரம் இல்லாத, அதிகாரப் பற்றற்ற ஒரு
ஆலோசனைக் குழு என்று போட்டு அதிலே வேண்டியவர்களை, ஆளுங்கட்சிக்
காரர்களை நுழைப்பது என்ற ஒரு சூழ்நிலையை இன்றைய தினம் உருவாக்கி
யிருக்கிறார்கள். அந்தக் குறுக்கு வழியை இன்றைக்கு சில இடங்களிலே,
சொசைட்டிகளில் பின்பற்றுகிறார்கள். எங்கெல்லாம் அதிக 'ஓவர்டியு'
இருக்கிறதோ, அந்த சொசைட்டிகளில் இருக்கும் தலைவர் பதவிகளை நீக்கி
விடவேண்டும் என்று சொல்லி நீக்குகிறார்கள். உதாரணமாக 200 சொசைட்டி
கள் இருந்தால், அதில் 100 சொசைட்டிகளை 'மேனேஜர் சொசைட்டிகள்'
ஆக்குவது மற்ற 100 சொசைட்டிகளில் தங்களுக்குச் சாதகமாக வாக்குகள்
கிடைக்கும் சூழ்நிலைகள் இருந்தால், அந்த சொசைட்டிகளைக் கலைக்காமல்
இருப்பது போன்ற சூழ்நிலை இருக்கிறது. இப்படி, என்னென்ன குற்றங்களை
என்னென்ன குறைகளை ஆளும் கட்சிக்காரர்கள் அன்றைய தினம் சொன்னார்
களோ, அவைகளை இன்றையதினம் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.
இந்த நிலைமைகள் எல்லாம் மாற்றப்பட்டு அங்கெல்லாம் ஒரு 'ஹெல்தி ட்ரெடி
ஷன்' ஏற்பட, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எற்கெனவே
மத்திய வங்கித் தலைவர் ஊழல் செய்து விட்டார், அந்த வங்கியிலே ஊழல்,
இந்த வங்கியிலே ஊழல், கார், டெலிபோன் போன்றவைகளைப் பயன்படுத்தி
னார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் அங்கே சுமுகமாக இருக்கிறார்கள்,
அவர்களது அறையைப் பாருங்கள், அவர்கள் வைத்திருக்கின்ற டெலிபோ
னைப் பாருங்கள். ஒவ்வொரு மாதமும் டெலிபோன் செலவு எவ்வளவு
ஆகிறது என்று பாருங்கள் என்றெல்லாம் பேசினார்கள். ஆனால் இன்றைய
தினம் எவ்வளவு செலவாகிறது என்பதைப் பார்க்க வேண்டும். உதாரணமாக
நான் சொல்கிறேன், முகவை மாவட்டத்திலே இருக்கும் மத்திய வங்கியிலே
டெலிபோன் செலவு என்ன ஆகிறது என்று பாருங்கள். 1975-76-லே எவ்வளவு
செலவு ஏற்பட்டது, 1976-77-லே எவ்வளவு செலவு ஏற்பட்டது, 1977-78-லே
எவ்வளவு செலவாகியிருக்கிறது என்று ஒரு புள்ளிவிவரம் எடுத்துப் பாருங்கள்.
நான் நிச்சயமாகச் சொல்ல முடியும், 1975-76-லே ஏற்பட்ட செலவைவிட
1977-78-லே எந்தவிதத்திலும் குறைந்ததாக இல்லை. அன்றைக்குத் தேர்ந்
தெடுக்கப்பட்ட மத்திய வங்கியின் தலைவர் காரிலே செல்கிறார் என்று குறை
சொன்னார்கள். இன்றைய தினம் என்ன நடக்கிறது? அங்கிருக்கும் ஸ்பெஷல்
ஆபீசர்கள் அந்தக் காரிலே செல்கிறார்கள். அவர்கள் இரண்டு, மூன்று

டெலிபோன்கள் வைத்துக்கொண்டு அதிகாரம் செய்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைவிட அதிகாரிகள் இப்போது அதிக வசதிகளை அனுபவிக்கிறார்கள். பாரதி கமிஷன் என்று ஒரு கமிஷன் போட்டோம். அந்த கமிஷனிலே பல பிரச்சினைகள் பற்றிப் பேசப்பட்டன. அது இன்றைய தினம் ரிப்போர்ட் தந்திருக்கிறது. அதை ஒரு பெரிய மூடுவித்தை போல வைத்திருக்கிறார்கள். யாரும் பார்க்கக்கூடாது என்று வைத்திருக்கிறார்கள். அதை இந்த அவையில் வைத்துவிட்டால் என்ன? அந்த அறிக்கையை வையுங்கள். அதிலே யார் மீது குற்றங்குறைகள் சொல்லப்பட்டிருக்கிறதோ அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். பாரதி கமிஷன் ரிப்போர்ட்டை மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால்தான், அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்ற குறைபாடுகளை அறிந்துகொண்டு எந்தெந்த மத்திய வங்கித் தலைவர்கள் தவறுகளைச் செய்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டு, அந்தத் தவறுகளைத் திருத்த வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விரைவிலே தேர்தல் வரவேண்டும். அந்தத் தேர்தல் நியாயமான முறையில் நடைபெற வேண்டும். இப்போது நம் தமிழ் நாட்டில் நிலவள வங்கிகள் ஏறத்தாழ 300 இருக்கின்றன. அவைகள் மூலமாக நாம் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்து வந்த கடன் உதவி, இன்றைய தினம் நிறுத்தப்பட்டிருக்கிறது. பலவிதமான நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, இன்றைக்கு உரிய முறையில் அந்த நிலவள வங்கிகள் இயங்கவில்லை. நம்முடைய மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். நல்ல முறையில் சரிவர இயங்காத—ஒரு வயபிலிட்டி இல்லாத நிலவள வங்கிகளை வயபிலாக மாற்றி, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு டிரான்சாக்ஷன் இல்லாத நிலவள வங்கிகள் அனைத்தையும் அதிகமாக டிரான்சாக்ஷன் உள்ள நிலவள வங்கிகளோடு சேர்த்து அவைகளைச் செயல்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். இந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன். ஆனால், நாம் அப்படிச் செய்கிறபோது, அங்கே பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் வேலைப் பாதுகாப்பிற்கும், அவர்களுக்கு மாவட்ட அளவிலே மாறுதல் அளிப்பதற்கும் வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது மத்திய வங்கிகளை நாம் எடுத்துக்கொண்டால், அங்கே பணிபுரியும் ஊழியர்கள் மாநிலத்தின் எந்தப் பகுதிக்கும் மாறுதல் பெறும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நிலவள வங்கிகளிலே பணிபுரியும் ஊழியர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. நிலவள வங்கிகளிலே பணிபுரியும் ஊழியர்கள் ஆண்டாண்டு தோறும் அங்கேயே பணியாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் அங்கேயே 'ரெக்ரூட்' செய்யப்படுகிறார்கள். அவர்களுடைய சர்வீஸ் அங்கேயே





கணக்கிடப்படுகிறது. அவர்களுக்கும் ஒட்டுமொத்தமாக அவர்கள் செய்யும் வேலைகளின் அடிப்படையில் மாநிலம் தழுவிய மாறுதல் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மாநிலம் முழுவதும் 17 ஆயிரம் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்திவிட்டோம் என்று சொன்னார்கள். அவைகளுக்கு வைகை என்று பெயர் வைக்கப்பட்டது. வைகையிலே ஆண்டுக்கு 6 மாதம் தண்ணீர் வரும், 6 மாதம் தண்ணீர் வராது. அதைப் போலவே இந்த நியாய விலைக் கடைகளிலேயும் சில மாதங்கள் ஏதாவது வருகின்றன, சில மாதங்களில் ஒன்றும் வருவதில்லை. இப்போது மண்ணெண்ணெய்க்கு மிக்கத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு டீசல் கிடைக்கவில்லை. இப்போது நியாய விலைக் கடைகள் மூலமாக கிராமப்புறங்களிலே மண்ணெண்ணெய், டீசல் வழங்கப்படுகின்றனவா என்றால் இல்லை. நகர்ப்புறங்களில் ஒருசிலவற்றில் வழங்குகிறார்கள். ஏனென்றால், இங்கே பத்திரிகைகள் இருக்கின்றன, சட்டமன்றம் இருக்கிறது. ஆகவே, இங்கே கொடுக்கப்படுகிறது. கிராமங்களில் இருப்பவர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் இவைகள் கிடைக்கவில்லை. ஏற்கெனவே இருந்த கூட்டுறவு சங்கங்கள் மூலமாக என்னென்ன பொருட்கள் கொடுக்கப்பட்டனவோ அவைகள்தான் இன்றைக்கு நியாயவிலைக் கடைகள் மூலமாக வழங்கப்படுகின்றன. ஏற்கெனவே, கூட்டுறவுச் சங்கங்களில் தேவையான அடிப்படைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு தனியாக விற்பனைக் கூடங்கள் இருந்தன. இன்றைக்கு அவைகள் தனியாகப் பிரிக்கப்பட்டு, அவைகள் தான் இந்த நியாயவிலைக் கடைகள் என்று கணக்கில் எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கூட்டுறவு சங்கங்கள் என்று வைத்து நாம் செய்த பணியையே அவர்கள் இப்போது நியாயவிலைக் கடைகள் மூலமாகச் செய்கிறார்கள். உதாரணமாக, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், அருப்புக்கோட்டைத் தொகுதியிலே ஆவியூர் என்ற இடத்திலே நியாயவிலைக் கடையைத் திறந்தார்கள். அவர் இப்போது மதுரைக்கு அடிக்கடி போகிறார். நம்முடைய மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் இப்போது 'சர்ப்ரைஸ் விசிட்' செய்வதைப் போல நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சர்ப்ரைஸ் விசிட் செய்து அங்கே சென்று பார்த்தால், அங்கே என்னென்ன பொருட்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அங்கே தேவையான பொருட்கள் விற்பனை செய்யப்படுவதில்லை. பக்கத்திலே வேறு நகர்ப்புறங்களும் இல்லை. கிராமப்புறங்களிலே கிடைக்கும் சாதாரணப் பொருட்கள் கூட அங்கே கிடைப்பதில்லை. அங்கே ஒரு சிப்பந்தி இருக்கிறார், அவர் காலையில் 9 மணிக்கு

வந்து மாலையில் 5 மணிக்குச் சென்று விடுகிறார். விவசாயிகள் காலையிலே வேலைக்குச் சென்றால் மாலையிலேதான் திரும்புகிறார்கள். அவர்களுக்கு இந்த நியாயவிலைக் கடை பயன்படவில்லை. காலையிலே 6 முதல் 9 மணி வரையும், மாலையிலே 5 முதல் இரவு 8 மணி வரையும்தான் விவசாயிகளுக்கு பொருட்கள் வாங்குவதற்கு நேரம் கிடைக்கிறது. ஆனால் அப்போது இந்தக் கடை மூடப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நியாயவிலைக் கடையில் வேலை நேரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது பெரும்பாலான நியாயவிலைக் கடைகளில் பர்னிச்சர், தளவாடங்கள் மற்றும் தட்டுமுட்டுச் சாமான்கள்தான் இருக்கின்றனவே தவிர, கிராமங்களுக்கு என் னென்ன தேவை என்று நாம் நினைக்கிறோமோ அந்தப் பொருட்கள் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து இந்த நிலைமைகள் விரைவில் மாற, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய பிரச்சினைகளை ஆராய மேல்மட்ட கமிட்டி இருக்கிறது. விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்கள் எல்லாம் தள்ளுபடி செய்யப்படும், ஜப்தி இருக்காது, கெடுபிடி இருக்காது என்றெல்லாம் வாக்குறுதி வழங்கப்பட்டது. இந்த வாக்குறுதியை மீறி, அமைச்சர் அவர்களின் வாக்குறுதியை மீறி, இன்றையதினம் அதிகாரிகள் ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதை மூடி மறைத்துவிட முடியாது. அரசாங்கத்தினுடைய கொள்கை ஜப்தி செய்யக்கூடாது, கெடுபிடிகள் இருக்கக்கூடாது என்று இருந்தாலும்கூட, அங்கே இருக்கி ரிஜிஸ்த்ரார் ஆஃப் கோஆப்பரேட்டிவ் சொசைட்டீஸ் அவர்கள் எப்படியாவது வசூல் செய்வது என்றும் இந்த ஆண்டு இவ்வளவு வந்தாக வேண்டும் என்றும், அரசாங்கம் என்றால் அரசியல்வாதிகள் தான், அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள் என்றும், எனக்கு எப்படியும் பணம் வந்தாக வேண்டும் என்றும் சொல்லி ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். பணம் இல்லாவிட்டால் எப்படி சொசைட்டியை நடத்துவது, எப்படி ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் தருவார்கள்? விவசாயிகள் ஒழுங்காகத் திரும்பிக் கட்டினால்தான், ரிசர்வ் வங்கி பணம் தருவார்கள் என்ற நிலை இருந்தாலும் கூட,—ஒரு தவிர்க்க முடியாத அசாதாரண சூழ்நிலையில் விவசாயிகள் அல்லல்படுகிறார்கள், ஒரு புயலால், வெள்ளத்தால் கஷ்டப்படு கிறார்கள், அவர்களால் பணம் கட்ட முடியவில்லை என்று இப்படி ஒரு சூழ் நிலை உருவாகும்போது அரசாங்கம்தான் அந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டு மத்திய அரசோடு, ரிசர்வ் வங்கியோடு பேசி அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் ஏன் இந்த அரசு அப்படிச் செய்யவில்லை?





இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், விவசாயிகளால் கடனைத் திருப்பிக்கட்ட இயலாத ஒரு சூழ்நிலையில், ஒரு குறிப்பிட்ட தொகையை வசூல் செய்ய முடியாத நேரத்தில், அதை எந்த அளவுக்கு ஈடுசெய்கிறோம் என்று அரசாங்கம் தலையிட்டு, ஒரு கோண்டீ கொடுக்க வேண்டும். ரிசர்வ் வங்கியிட மிருந்து 7, 9, 10 சதவீதத்திற்குப் பணத்தை வாங்கி விவசாயிகளுக்கு 16 சதவீத வட்டிக்கு கடன் கொடுக்கிறார்கள். இப்படி விவசாயிகளிடமிருந்து வாங்கிய பணத்தைக்கொண்டுதான் அங்கே கட்டடங்கள் கட்டுகிறோம், கார், டெலிபோன் போன்றவைகள் எல்லாம் வைக்கிறோம். விவசாயிகளுக்கு மட்டும்

(பிற்பகல் 5.00)

ஒன்றுமில்லாமல் கடனைக் கொடுப்பதில்லை. அவர்களின் நிலத்தை ஈடு பெற்றுக்கொண்டுதான் நாம் கடன் கொடுக்கிறோம். பயிர்க் கடன் கொடுப்பதி லிருந்து பல்வேறு கடன்களை நாம் விவசாயிகளுக்குக் கொடுத்து வருகிறோம். அப்படி கடன் வாங்குகிற விவசாயிகள் சில நேரங்களில் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படி மத்திய வங்கியில் கடன் வாங்கி கொடுக்க முடியாத நிலையில் இருப்பவர்கள் அதிகமாக இருக்கமாட்டார்கள். ஏதோ 20, 30 பேர்தான் இருப்பார்கள். அவர்கள் தங்கள் நிலத்தை விற்றுவிட முடியாது. அப்படிப்பட்ட உறுதி இருக்கும் போது, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை என்பது தேவையில்லை. ஒரு தொழிலதிபர் இன்சால்வென்சி கொடுத்துவிட்டுப் போய்விட்டால், நாம் ஒன்றுமே கேட்பதில்லை. ஆனால் விவசாயி விஷயத்தில்மட்டும் அதைப் பெரிதுபடுத்துகிறோம்.

விவசாயிக்குக் கடன் கொடுக்கிறபோது, தனியாரிடம் அதிகமான வட்டிக்கு அவன் கடன் வாங்கக்கூடாது என்ற கருத்தில்தான் குறைந்த வட்டிக்குக் கூட்டுறவுத் துறையில் கடன் கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட நிலையில் விவசாயிக்குக் கொடுக்கப்படும் கடன் மிகக் குறைந்த வட்டியில் கொடுக்கப்பட வேண்டும். வட்டிக்கு மேல் வட்டி போடுகிற கந்துவட்டியைப் போல் வசூலிப்பது, எந்த அரசாங்கமானாலும், தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடனைத் திருப்பிக் கட்டவில்லை என்றால் விவசாயிகள் சொத்தை ஜப்தி செய்யும் நிலை இருக்கிறது. நான் கேட்கிறேன், விவசாயிகள் ஆட்டையோ, பானையையோ, பாத்திரங்களையோ ஜப்தி செய்துவிட்டால் அது அவன் வாங்கியிருக்கிற ரூ. 5,000 அல்லது ரூ. 10,000க்கு ஈடாக அமைந்துவிடுமா? இந்த அணுகு முறையையே நாம் மாற்ற வேண்டும்.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 ஏப்ரல் 20

ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால், அந்தக் கிராமத்தில் பயிர் செய்கிற விவசாயிகளின் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். பயிர் செய்தும் கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலையில் இருக்கிற விவசாயிகளின் பட்டியலையும் தயாரிக்க வேண்டும். இதைச் செய்வதில்லை. அதிகாரிகள் இன்றையதினம் என்ன செய்கிறார்கள் என்றால் ஒட்டுமொத்தமாக ஒரு இடத்திற்குப் போகிறார்கள். அங்கே யாராவது ஒரு 4, 5 பேரை—அதிலும் ஏழைபாழை யாகப் பார்த்து, அப்பிராணி, சப்பிராணியைப் பார்த்து, யார் எதிர்த்துப் பேச மாட்டானோ அவனைப் பார்த்து—கடனைக் கட்டு என்கிறார்கள். அரசியல் செல்வாக்குள்ளவர்களிடம் போவதில்லை. இந்த நிலைமை மாற வேண்டும்.

எந்த விவசாயி பயிர் செய்திருக்கிறான், எவன் பயிர் செய்து கடன் கட்டக் கூடிய வருவாயைப் பெற்றிருக்கிறான் என்று தெரிந்து வசூலுக்குப் போக வேண்டும். அதுமட்டுமல்ல, அதிகாரிகள் கடனை வசூல் செய்வதற்கான காலத்தை உணர்ந்து போய் வசூலிக்க வேண்டும். விவசாயி எப்போது அறுவடை செய்கிறானோ அப்போது போய் வசூலிக்க வேண்டும். அப்போது போகவில்லையென்றால், அவன் கல்யாணக் கடன், அந்தக் கடன், இந்தக் கடன் என்று மற்ற கடன்களுக்குக் கொடுத்துவிடுவான். அறுவடையின்போது போய் வசூலித்தால்தான் விவசாயிக்கும் அது எளிது, வசூலிக்கிற அதிகாரிகளுக்கும் எளிது. அதைவிட்டு அதிகாரிகள் ஒரு குறிப்பிட்ட தேதியைக் கணக்கிட்டுக் கொண்டு போய், அவர்களிடத்தில் பணத்தைக் கட்டு என்றால், விவசாயிகளால் அப்போது பணம் கட்ட முடிவதில்லை. சூப்பர்வைசர்களும், செக்ரட்டரிகளும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அளவில் எந்தெந்தக் காலத்தில் அங்கே அறுவடை நடக்கும் என்று தெரிந்து அப்போது வசூலிப்பதை முடுக்கிவிட வேண்டும். அதற்கான கணக்கை ஒவ்வொரு சொசைடியும் ஒன்றிய அளவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையில் புதிய சட்டம் வருகிறது, அதன் மூலம் இந்த இயக்கம் நல்ல வலுவைப் பெறும் என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன் நான் நிலவள வங்கியின் தலைவர் என்ற முறையில் ஜப்பான் நாட்டுக்கும் தென் கொரியா போன்ற கிழக்காசிய நாடு களுக்கும் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கே நான் ஒரு முறையைப் பார்த்தேன். அங்கெல்லாம் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்துக் கடன்களையும் கூட்டுறவுத் துறையிலேயே கொடுக்கிறார்கள். ஜப்பான் நாட்டில் தனி மனிதனுக்குத் தேவையான அனைத்துக் கடன்களும் கூட்டுறவுத்



1979 ஏப்ரல் 20] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

துறையின் மூலம் கொடுக்கப்படுகின்றன. கல்விக்கு, கல்யாணத்திற்கு, தொழில் செய்வதற்கு என்று முழுக்க முழுக்க தனி மனிதனுக்குத் தேவைப்படும் அனைத்துக் கடன்களும் கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுக்கப்படுகின்றன. அவர்களும் அதை ஒழுங்காகத் திருப்பிக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நமது நாட்டில் கூட்டுறவு இயக்கம் சரியாக நடைபெறவில்லை என்றோ லாபமாக நடைபெறவில்லை என்றோ யாரும் சொல்லிவிட முடியாது. ஒவ்வொரு ஊரிலும் நாம் பார்க்கிற கூட்டுறவுத் துறைக் கட்டிடங்களே இதற்குச் சாட்சியாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. இன்றையதினம் கூட்டுறவுத் துறையில் பெருகி வளர்ந்திருக்கும் அதிகாரிகளின் எண்ணிக்கையும் இதற்குச் சான்றாக அமைந்திருக்கிறது. கூட்டுறவு இயக்கம் உண்மையில் நாள்தோறும் வளர்ந்து கொண்டிருக்கிறது. தனியார்களைக் காட்டிலும் கூட்டுறவுத் துறை அதிகமான நன்மைகளைச் செய்ய முடியும் என்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிக்கோளை நாம் ஓரளவு நிறை வேற்றிக் கொண்டிருக்கிறோம். கூட்டுறவுத் துறையில் இன்னும் சில மாற்றங்கள் தேவை. அவற்றைச் செய்து இதில் உயர்வைக் காண வேண்டும். ஆனால் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்த்தால், எனக்கு அடிக்கடி ஒரு எண்ணம் மேலோங்கி நிற்கிறது. திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களை அகற்றி விட்டு, அந்த இடங்களிலெல்லாம் அ.தி.மு.க. காரர்களை இடம் பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கமே மிகுந்து காணப்படுகிறது. கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், கட்சிக் கண்ணோட்டமே வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன். எந்தக் குறைபாட்டை மிக வேகமாக முன்னாள் அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்களைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தீர்களோ அந்தக் குறைபாடு உங்களுக்கும் வர வேண்டாம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அறிவழகன்:** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை என்பது ஆண்டவனைப் போல் எல்லா இடங்களிலும் பரவிக் கிடக்கிற ஒரு துறை யாகவும், ஆண்டவனைப்பற்றிச் சொல்லுகிற குறைபாடுகளைப்போல் நிவர்த்தி செய்ய முடியாத சில குறைபாடுகளையும் தாங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தத் துறையின் அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் இந்தத் துறையினை மிகச் சிறப்பான முறையில் வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்தும் வேகமாகவும், நியாய பூர்வ மாகவும் எடுத்து வருகிறார்கள் என்ற வகையில் நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. அறிவழகன்] [1979 ஏப்ரல் 20

கூட்டுறவுத் துறையின் பல்வேறு பணிகளில் மிக முக்கியமான பணி வசாயிகளுக்கு உறுதுணை பயப்பதாகும். அதிலும் விவசாயிகளின் ாருள்களைச் சேமித்து வைப்பதற்காகக் கட்டப்படுகிற கிடங்கு வசதிகள் கவும் முக்கியமானவையாகும். வெங்காயத்தைப்பற்றிய ஒரு உண்மை லையை இங்கே நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

விளைகிற நேரத்தில் மூட்டை ரூ. 10க்கு விற்கப்படுகிற வெங்காயம், 3 மாத ாலத்திற்குப் பிறகு அல்லது ஒரு 2 மாத காலத்திற்குப் பிறகு மூட்டை ரூ. 50 ல்லது ரூ. 60 வரை விற்பதைப் பார்க்கிறோம். அந்த அளவுக்கு 5, 6 டங்குக்கு மேல் லாபம் தருகிற நிலை வெங்காயத்தைப் பொறுத்தவரையில் ருப்பதை நாம் அறிவோம். இப்படி விவசாயப் பொருள்களை, விளைகிற நரத்தில், மிகக் குறைவான விலைக்கு வாங்கிக் குவித்துக்கொண்டு, அதன் லையை 5 முதல் 6 மடங்கு வரை அதிகப்படுத்தி விற்கிற வியாபாரிகள், ம்பாய் போன்ற பகுதிகளிலும் இங்கேயும் இருக்கிறார்கள். அதைப் போல வங்காயத்தை மிகக் குறைந்த விலைக்கு வாங்கி, அதை அதிகமான அளவுக்கு லையை உயர்த்தி விற்று லாபம் சம்பாதித்த நிகழ்ச்சி அண்மையில் நடை பற்றதை அறிவோம், இப்படி வெங்காயத்தை விவசாயம் செய்கிற வசாயிகள் மட்டும் கடந்த காலத்தில் பல கோடி ரூபாய்க்கு நஷ்டமடைந் ருக்கிறார்கள். அவர்களுக்கு வர வேண்டிய லாபம் அவர்களுக்கு வராமல் வறு யாருக்கோ, வாங்கி வைத்து விற்ற பெரு முதலாளிகளுக்குப் போய்ச் சர்ந்ததையும் நாம் அறிவோம்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், உற்பத்தியான உடனே பொருளை ிற்றால்தான், தங்கள் கடன் சுமையைப் போக்கிக் கொள்ள முடியும். அந்தப் ணத்தைக் கொண்டுதான் தங்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும். அந்த அளவுக்குக் கடனில் ஆழ்ந்திருக்கிற பெரும் சமுதாயமாக விவசாயச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு வெங்காயம் போன்ற பொருள்களை உற்பத்தி செய்யும்போது அதனை ஒன்றிரண்டு மாதங்களுக்கு சேமித்து வைத்துக் கொள்ளும் உதவியை நாம் செய்து தர வேண்டும். சேமித்து வைக்கும் பொருள்களைப் பாது காக்கும் முறையையும் சொல்லித்தர வேண்டும். அப்படிப் பாதுகாத்து, அந்தப் பொருளின் விலை உயரும்போது, அந்த உயர்வின் பெரும் பகுதியை விவசாயி பெறும் நிலையையும் அரசாங்கம் கூட்டுறவுத் துறையின் மூலம் உறுதி செய்ய வேண்டும். அதற்கான புதிய அணுகு முறையை அரசாங்கம் கூட்டுறவுத் துறையில் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையிலேயே விவசாயிகளுக்கு நன்மை செய்ய முடியும். அப்போதுதான்



1979 ஏப்ரல் 20] [திரு. க. அறிவழகன்]

விவசாயிகளும் தங்களின் கடன் பளுவைக் குறைத்துக்கொள்ள முடியும். நெல்லைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்சினையில்லை. கரும்பைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்சினையில்லை. பல்வேறு விவசாயப் பொருள்களுக்கு இந்தப் பிரச்சினையில்லை. எனவே வெங்காயம் போன்ற பொருள்களுக்குக் கிடங்கு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிடங்குகள் தற்போது மற்ற சாதாரண பொருள் களுக்குக் கட்டப்பட்டிருக்கின்றன. வெங்காயத்திற்கு என்று தனிக் கிடங்குகள் கட்டப்பட வேண்டும். அப்போதுதான் விவசாயி உற்பத்தியாகிற தனது பொருளை சரியான முறையில் பாதுகாத்து, லாபம் கிடைக்கும்போது விற்று, அந்த லாபத்தைப் பெற முடியும்.

அடுத்து, கூட்டுறவுத் துறை வேறு பல நாடுகளில் நடைபெறும் முறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் குறிப்பிட் டார்கள். ஜப்பான் நாட்டிலும், தென் கொரியாவிலும் நடைபெறும் முறைகளைச் சொன்னார்கள். வேறு பல நாடுகளில் நடைபெறுவதில் ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், கூட்டுறவுப் பண்ணை முறையைப்பற்றிச் சொல்ல வேண்டும். பிற நாடுகளில் கூட்டுறவுப் பண்ணை முறை

(பிற்பகல் 5.10)

வந்திருக்கின்றது. திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு முறை 1956-57 ஆம் ஆண்டில், கூட்டுறவுப் பண்ணை முறை வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு நம்முடைய மாநிலத்தில் அப்போதிருந்த பெருமதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் மறுப்புரைகளைத் தெரிவித்தார்கள். இதனால் இந்திய உபகண்டத்தில் கூட்டுறவுப் பண்ணை முறை வருவது நின்றுபோய்விட்டது. எதிர் காலத்திலாவது அரசு நிலங்களைக் கையகப்படுத்துகின்ற நேரத்தில், அந்த நிலங்களை ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்து, உரங்கள், விதைகள் மற்றும் வேண்டிய உபகரணங்களையும் கொடுத்து கூட்டுறவுப் பண்ணையை அமைத்து, ஏழை விவசாயிகள் நல்ல வருமானத்தைப் பெறக்கூடிய வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நாட்டில் கோயில் களின் வசம் உள்ள நிலங்களை ஏழையெளியவர்கள் குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களெல்லாம் மீண்டும் அரசுக்குக் கிடைக்கக் கூடிய வகையில் சட்டங்களைக் கொண்டு வரப்போவதாக அறிகிறேன். இல்லை, அந்தக் கோயில்களுக்கே திரும்பக் கிடைத்தாலும் அத்தகைய நிலங் களையெல்லாம் அரசே கையகப்படுத்தி, கூட்டுறவுப் பண்ணையை ஏற்படுத் தினால், கூட்டுறவுத் துறைக்குப் பெருத்த இலாபத்தைக் கொடுக்கக் கூடிய சூழ்நிலை உருவாகுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவுத் துறை நல்ல முறையில் வளர்ச்சியடைந்திருந்தாலும், கூட்டுறவுத் துறையில் உறுப்பினராக இருக்கிற விவசாயிகள் நல்ல வருமானத்தைப் பெற முடியாமல் அன்றாடங் காய்ச்சிகளாக இருக்கக் கூடிய நிலைமையை இன்று பார்க்கிறோம். அவர்கள் வாங்கிய கடனைக் கூட அடைக்க முடியாதவர்களாக உள்ள நிலைமையையும் பார்க்கிறோம். இந்த நிலைமையை அரசு மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவுத் துறையில் கடன் கொடுக்கிற முறையில் அதிகமான கடன்களை நகர்ப்புறங்களில் வழங்குகிறார்கள். மார்வாடிகள் மக்களிடமிருந்து நகைகளைப் பெற்றுக்கொண்டு கடன்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறை கூட்டுறவுத் துறையிலும் பரவலாக இருக்க வேண்டும். ஏழையெளியவர்கள் எந்தப் பொருளை அடகு வைத்தாலும், அவர்களுக்கு, மார்வாடிகள் கடன் கொடுப்பதைப் போல, கூட்டுறவுத் துறையிலும் கடன்களைக் கொடுக்க ஏற்பாடு செய்தால், அதனால் ஏழையெளியவர்களின் சிறிய பொருள்களைக் கூட நம்மால் காப்பாற்ற முடியுமென்று சொல்லி, இந்தக் கூட்டுறவுக் கொள்கை விளக்கக் குறிப்பைப் பாராட்டி அமைகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பின் மீது நடைபெறுகிற விவாதத்தில் பங்கேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். இந்திய நாட்டிலே மட்டுமல்லாது, தமிழகத்திலே கூட கிராம முன்னேற்றத்திலும், கிராம வளர்ச்சியிலும் பெருத்த பங்கு வகிக்கக் கூடியவை கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள். ஆகவேதான் அன்றைக்கே பாரதப் பிரதமராக இருந்த திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் கூட, கிராமங்கள் முழுவதுமாக மேம்பாடு அடைய வேண்டுமென்றால், கிராமங்களிலே கூட்டுறவு நாணயச் சங்கம், பஞ்சாயத்து, பள்ளிக்கூடம் ஆகியவை இருக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதேபோல இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்த வரையில், எந்தக் கிராமத்தில் நுழைந்தாலும் முதலிலே நம் கண்ணில் படுவது கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கத்தின் கட்டிடம், பஞ்சாயத்துக் கட்டிடம், பள்ளிக் கட்டிடம் ஆகியவைதான். கிராமத்திலே இருக்கக்கூடிய சாதாரண ஏழையெளிய விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியிலே கடன்களைக் கொடுத்து அவர்களுடைய வருவாயைப் பெருக்க கூட்டுறவுச் சங்கங்கள் வழிவகை செய்து கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிட முடியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் சொன்னதைப்போல, அரசு ஜப்தி நடவடிக்கைகளை எடுக்க வேண்டாமென்று சொல்லியிருந்தாலும், ஒரு சில பகுதிகளில் ஜப்தி நடவடிக்கைகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.





இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே, ஜப்தி நடவடிக்கை இருக்காது என்று சொன்னார்கள். அதிலே எனக்கு சந்தோஷம் இல்லை. ஏனென்றால், கடன் கொடுத்தால்தானே ஜப்தி நடவடிக்கையை எடுக்க முடியும்? அங்கே கடன் கொடுப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்பதை ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது பேசும்போது தெரிவித்தேன். அந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பதில் சொல்லுகிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே பல்வேறு கடன்கள் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற வகையிலே கடன்களைக் கொடுக்கிறார்கள். ஆனால் உண்மையாகவே அங்குள்ள பஞ்சாயத்து யூனியன்கள் அதை அமுல்படுத்துகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும்.

சேலம் மாவட்டத்திலே இருக்கக் கூடிய விவசாயிகள் கிணற்றுப் பாசனத்தையும் மழையையும் நம்பி வாழ்கிறவர்கள். அப்படியிருக்கக் கூடியவர்கள் ஒரு பயிரை வைக்கக் கடனைப் பெற்ற பிறகு, வேறு பயிரை இட்டிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே விவசாயிகள் கடனைப் பெற முடியவில்லை. கடன் நிவாரணச் சட்டம் போன்ற சட்டங்களைக் கொண்டு வந்துள்ள இன்றைய சூழ்நிலையில் வெளியாரிடத்திலேயிருந்து 500 ரூபாய்கூட கடன்களைப் பெற முடியவில்லை. ஆகவே விவசாயத் தொழிலைச் செய்ய இன்றைக்குக் கூட்டுறவு நாணயச் சங்கத்தைத்தான் விவசாயிகள் அணுக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கூட்டுறவு சங்கங்களும் கடன்களைக் கொடுக்காவிட்டால், விவசாயிகள் தங்களுடைய தொழிலை எப்படிச் செய்ய முடியும், எப்படி தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கான பல்வேறு காரணங்களைச் சொல்லுவதைவிட உடனடியாக மாநிலக் கூட்டுறவு வங்கியிலிருந்து சேலம் மாவட்டக் கூட்டுறவு வங்கிக்கு நிதியை ஒதுக்கி, அதன் வாயிலாக கூட்டுறவு நாணயச் சங்கங்களிலிருந்து விவசாயிகளுக்குக் கடன்களைக் கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பாரதி கமிஷனுடைய ரிப்போர்ட்டை மறைத்து வைத்திருப்பதன் மர்மம் என்னவென்று கேட்டார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், அந்த ரிப்போர்ட்டை இந்த மன்றத்தின் முன்னே வைத்திருக்க வேண்டும். ஏன் அதை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையாவது தெரிவிக்க வேண்டும். அந்த

ரிப்போர்ட்டை இந்த மன்றத்தில் வைக்க எந்தச் சக்தி தடுத்துக் கொண்டி
ருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். பாரதி கமிஷன் ரிப்போர்ட்டை
உடனடியாக இந்த மன்றத்திலே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

நியாய விலைக் கடைகளைப்பற்றி முன்னாலேயே சொன்னோம். ஏழை
யெளியவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பொருள்கள் முறையாகக் கிடைக்க
வில்லையென்றும், தனிப்பட்ட வியாபாரிகள் கொள்ளை இலாபம் அடிக்
கிறார்கள் என்றும் சொன்னோம். பிறகு அரசு பெரிய மனதுவைத்து ஒவ்வொரு
வருவாய் கிராமத்திலும் நியாய விலைக் கடைகளை இன்று கொண்டு வந்திருக்
கிறது. கடைகளை அமைத்து விட்டார்களேயொழிய, அக்கடைகள் எப்படி
நடக்கின்றன என்பதை கவனிக்கத் தவறிவிட்டார்கள் என்பதைக் குறிப்பிட்டுக்
காட்ட ஆசைப்படுகிறேன். அந்தக் கடைகள் சரிவர நடக்கவில்லை. திறந்தே
பல மாதங்கள் ஆகின்றன. சில இடங்களில், கோயில்களைத் திறந்து மூடு
வதைப் போல, கடைகளைத் திறந்து சில மணி நேரத்திற்குப் பிறகு பூட்டி
விட்டுப் போகிறார்கள். அங்கே வாங்கவும் ஆள் இல்லை; கடைகளில்
பொருள்களும் இல்லை. கிராம மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப்
பொருள்களான கடலை எண்ணெய், கடலை மாவு, பூண்டு, பொட்டுக் கடலை
அங்கேயில்லை. மேலும் வெளியே விற்கும் விலையைவிட பத்துக் காசு,
இருபது காசுகள் அதிகமான விலையில் நியாய விலைக் கடைகளில் பொருள்கள்,
விற்கப்படுகின்றன. கிராமத்திலுள்ள சாதாரண ஏழையெளியவர்கள் விலை
குறைவாகவுள்ள இடத்திலேதான் வாங்குவார்கள். நியாய விலைக் கடைக்
காரர்கள், பொருள்கள் வேண்டுமென்று சப்ளை அண்டு மார்க்கெட்டிங்
சொசைட்டிக்கு இன்டென்ட் போட்டால், உரிய காலத்திலே அவை வந்து
சேர்வதில்லை. மக்களுக்குத் தேவையான பொருள்கள் அங்கு இல்லாததால்,
அந்தக் கடைகளெல்லாம், இன்றைக்கு சிக் ஷாப்புகளைப் போல இருக்கின்றன.
எந்தெந்த நேரத்தில் எந்தெந்தப் பொருள்கள் அத்தியாவசியமாகத் தேவைப்
படுகின்றனவோ அந்தந்த நேரத்தில் அவைகளைக் கொடுத்தாக வேண்டும்.
தமிழகத்திலே சர்க்கரை கிலோ ரூ. 4.50 விற்றபோது, நியாயவிலைக் கடை
களில் ரூ. 2-10-க்கும், ரூ. 2.25 க்கும் கொடுத்தபோது, மக்கள் கூட்டம் கூட்ட
மாக வரிசையில் நின்று வாங்கியதைக் கண்டோம். அதைப்போல இன்றைக்கு
அத்தியாவசியப் பொருள்கள் அந்தக் கடைகளிலே கிடைப்பதில்லை. எனக்கு
முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூட மண்ணெண்ணெய், டீசல்
போன்ற பொருள்களுக்குத் தட்டுப்பாடு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள்.
இவைகளையெல்லாம் கூட அந்த நியாயவிலைக் கடைகளின் மூலம் விநியோகம்
செய்ய முடியும். அதை விட்டுவிட்டு எல்லா இடத்திலும் கிடைக்கக் கூடிய
பொருள்களை வைத்துக்கொண்டு, மேலும் பத்து காசுகள், இருபது காசுகள்





அதிகமாக விற்பதால், பயன் இல்லை. ஆகவே வாங்கவே ஆள் இல்லை.
இதனால் ஒரு நாளைக்கு திடீரென்று, வாங்கவே ஆள் இல்லை, அதனால்
நியாய விலைக் கடைகளை மூடப் போகிறோம் என்ற நிலை வந்தாலும்
வரலாம். அப்படிப்பட்ட நிலை வராமலிருக்க அரசு உஷாராக இருக்க
வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

(பிற்பகல் 5.20)

அடுத்ததாக, கூட்டுறவு சர்க்கரை ஆலை. கூட்டுறவுச் சர்க்கரை ஆலை
குறிப்பாக என் பகுதியிலே, சேலம் மாவட்டத்தில் மோகனூரில் இருக்கிறது.
அதன் நிர்வாகம் எப்படி நடக்கிறது என்று பார்க்க வேண்டும். அந்த
நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது என்றால், ஒரு நாளைக்கு ரூ. 60,000
முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது என்று
சொல்கின்றார்கள். இன்றைக்கு இருக்கின்ற நிலைமை இந்த சீசனிலே மட்டும்
ஒரு கோடி ரூபாய் நஷ்டம் இருக்கும் என்று சொல்கிறார்கள். இந்த நஷ்டம்
யாரிடத்திலே போய்ச் சேர்கின்றது? கூட்டுறவுத் துறையிலே அங்கம்
வகிக்கின்ற விவசாயிகள் தலையிலே போய் விழுகின்றது. இன்றைக்கு
விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்கு ரூ. 3.50 என்று இருந்த வரியை ரூ. 7.50க்கு
உயர்த்தியிருக்கிறார்கள். இவ்வளவு தொகை நஷ்டம் ஏற்படும்போது, புதிதாக
ஒரு பதவியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பீ.ஆர்.ஓ. போஸ்ட் ஒன்று அங்கே
அவசியமா? அவருக்கு அங்கே என்ன வேலை? அவருக்கு என்ன வேலை
என்று சொல்லியிருக்கிறார்களா? ஆட்டுக்கு தாடி எவ்வளவு முக்கியமோ
அதுபோலத்தான் மோகனூரில் இந்த போஸ்ட் போட்டிருப்பது. அவருக்குச்
சம்பளம் ரூ. 825 என்று போட்டிருக்கிறார்கள். இந்தப் பணத்தையெல்லாம்
யாரிடத்திலே வாங்குகிறார்கள்? ஏழை விவசாயிகளிடமிருந்து வாங்கு
கிறார்கள். அவர்கள் தலையில் விடிகின்றது. ஆனால் விவசாயிகளுக்குக்
கொடுப்பதற்கு அரசுக்கு வழியில்லை. அப்படி இருக்கும்போது, இஷ்டப்படி
ஏன் போஸ்ட் அனுமதிக்கிறார்கள்? எப்போது விரும்புகிறார்களோ அப்போது
போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே கேள்வி கேட்பதற்கு ஆளில்லை.
அங்கே 'எலக்டட் பாடி' ஏற்படுத்த வேண்டும். அங்கே தேர்தல்
வைப்பதில்லை. டைரக்டர் என்று போடுவானேன்? போட்டுவிட்டால் அதை
முறைப்படுத்த வேண்டும். நிர்வாகம் நல்லமுறையில் நடக்க வேண்டும்
என்பதற்காகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை விட்டுவிட்டு விம்ஸ்
அண்டு பான்சிஸ் என்று சொல்வார்களே அதற்குத் தக்கபடி நடக்கின்றது.
அரசு என்ன நினைக்கின்றதோ அது அங்கே நிறைவேற்றப்படுகிறது. அது
அங்கே இருக்கின்ற அதிகாரிகள் வாயிலாக நிறைவேற்றப்படுகிறது. இதை

ஏன் நான் சொல்கிறேன் என்றால், இதிலே கூட்டுறவுத் துறையிலே அரசியலைப் புகுத்தாதீர்கள். இதிலே அரசியலைப் புகுத்துவதால் கூட்டுறவுத் துறைக்கு மட்டும் கெட்ட பெயர் ஏற்படும் என்பதல்ல, அரசுக்கும் அதனால் கெட்ட பெயர் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தைக் குறைக்க வேண்டும். இந்த அரசு விவசாயிகள் வாழ்க்கையிலே மறுமலர்ச்சி வரவேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கின்ற அரசு. இந்த அரசு ஏற்றுக்கொண்ட கொள்கைதான். அந்த ஆலையிலே கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் என்று சொல்கிறார்கள். இந்த சீசனுக்கு ஒரு கோடி ரூபாய் நஷ்டம் வரும் என்றும் சொல்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்ததாக, டீசல் கிடைக்கவில்லை என்று சொல்கிறாகள். நம் மாநிலத்திலேதான் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இந்தத் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதன் காரணமாக வேன்கள் கிடைக்கவில்லை என்கிறார்கள். வெட்டப்பட்ட கரும்பு அப்படியே 8 நாட்கள், 10 நாட்கள் கிடக்கின்றது. கொண்டு போவதற்கு வண்டியில்லை, வண்டியில்லை என்கிறார்கள். இதனால் 8, 10 நாட்களுக்கு மேல் வெட்டிப் போட்ட கரும்பு காய்ந்து கொண்டிருக்கிறது. அப்படிக் காய்ந்து போனால், அதிலுள்ள சுகர் கன்டென்ட் குறைந்துவிடும். அதையொட்டி, அதன் விலையும் குறைந்துவிடும். இதனால் விவசாயிகளுக்குப் பெருத்த பாதிப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதை அரசினுடைய முழுமையான கவனத்திற்குக் கொண்டு வந்து, இதற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கூட்டுறவுத் துறையிலே அரசியலைப் புகுத்தாதீர்கள் என்று முன்பு நான் குறிப்பிட்டேன். இந்த மன்றத்திலே 27—2—1979-ல் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகப் பரிவோடு பதில் அளித்தார்கள். அதை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் என் கருத்து. சேலம் மாவட்டத்தில் பெரியபானாபுரத்திலே ஒரு கூட்டுறவு சேவா சங்கம் கட்டிடம் கட்டுவதற்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லியிருந்தேன். அவர்கள் அதைப் பார்த்து உரிய நேரத்திலே ஏற்பாடு செய்கிறோம் என்று கூறியிருந்தார்கள். அங்கே இருக்கிற தகராறு என்னவென்றால், அந்த கூட்டுறவுச் சங்கத்தாரால் வாங்கப்பட்ட நிலத்திலே கட்டிடம் கட்ட வேண்டுமா அல்லது அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகின்ற நிலத்திலே கட்டிடம் கட்ட வேண்டுமா என்பதுதான். ஆனால் அமைச்சர் அவர்கள் மிக அழகாக



பதில் சொன்னார்கள். கூட்டுறவு நாணய சங்கத் தலைவர் ரூ. 5,000 கிரயத்திற்கு வாங்கியிருக்கிறார்கள். இரண்டு இடங்களையும் பார்வையிட்டிருக்கிறீர்கள். அதை ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். நெம்பர் வேண்டுமென்றால் சொல்கிறேன். சர்வே எண் 118/3. ரூ. 5,000க்கு 1978-லே நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு ஒருவர் இலவசமாக நிலம் கொடுக்கிறார் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் கொடுக்கவில்லை. அதைப்பற்றி எந்தத் தாக்கீதும் வரவில்லை. இருந்தாலும்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இரண்டு இடங்களையும் பார்வையிட்ட சேலம் மண்டல இணைப் பதிவாளர் அவர்கள் அந்த இடம் ஊருக்கு அரை கிலோ மீட்டர் தொலைவிலே இருப்பதாகவும், இனாமாக வருகிற இடம் முக்கால் கிலோ மீட்டர் தொலைவிலே இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள். அன்றியும் இனாமாகத் தரப்படும் நிலம் சேலம் கூட்டுறவு வங்கியின் அடமானத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த நிலத்தை இனாமாகத் தருகிறேன் என்று சொல்கிறார்கள் அதுபற்றிய தாக்கீது சொசைட்டிக்கு வரவில்லை. அதுவும் அந்த நிலம் அடமானத்திலே இருக்கிறது. ஆனால் அந்த சொசைட்டியைப் பொறுத்தவரையிலே, கிரயத்திற்கு வாங்கிக் கொண்டுள்ள அந்த நிலத்திலே கட்டிடம் கட்ட அனுமதி கொடுக்காததன் காரணம், மர்மம் என்ன? அன்று கேட்டபோது அமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு மிக நல்ல முறையிலே பதில் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அவர் பதிலில் அதில் அரசியல் தலையீடு இருக்கிறது என்று கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போது சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அரசியல் தலையீடுபற்றி மறுக்க முடியவில்லை என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தயவு செய்து என்ன ஒத்துக் கொண்டேன் என்று சொல்ல வேண்டும்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** அரசியல் தலையீடு இருக்கிறது என்று கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போது சொல்லியிருக்கிறார்கள். அரசியல் தலையீடு இருப்பதை அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

[மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை இருக்கிறது. அந்தப் பிரச்சினையைப் பற்றி அனுதாபத்தோடு கவனிக்கிறோம் என்று சொல்லியிருப்பேன். அதிலே அரசியல் தலையீடு இருக்கிறது, விருப்பு வெறுப்பு இருக்கிறது என்று விவரமாகச் சொல்லியிருக்கிறேனே தவிர, வேறல்ல. அதைத் தயவுசெய்து அங்கத்தினர் அவர்கள் நினைவுகூர வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பதில் சொல்கின்றபோது, அந்தத் தொகுதி சட்டமன்ற அங்கத்தினர், பிற பிரமுகர்கள் சேலம் சரக துணைப் பதிவாளரையும் கேட்டு அந்த இடம் அளிக்கப்பட்டதாகவும், சங்கத் தலைவர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வில் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அந்தப் பிரச்சினையைப் பற்றி அவருக்குள்ள உரிமையின்படி சொல்லியிருக்கிறார்கள். அது எப்படி அரசியல் ஆகும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** அமைச்சர் அவர்கள் பதிலில் தலையீடு பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை விட்டு விட்டு அங்கத்தினர் அவர்கள் வேறு பிரச்சினைக்குப் போக வேண்டும்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** தலையீடு இருக்கிறது என்று அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலையீடு என்பது வேறு. விரைத்தை அவரிடமிருந்து இவர்களே கேட்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு தரப்பினரும் அவரை அந்த இடத்திற்கு அழைத்துப்போய் கட்டடம் கட்டுவதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே கூட்டுறவு சங்கம் வாங்கிய நிலத்தில் கட்டுவதா அல்லது இனாமாக வருகின்ற நிலத்தில் கட்டுவதா என்று ஒரு பிரச்சினை வந்தது. அங்கே இரண்டு உணர்வுகளும் இருக்கின்றன. அதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னேன். ஏதோ ஒரு அரசியல் கட்சிக்குச் சார்பாக இருக்கிறது என்று நான் நிச்சயமாகச் சொல்லவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** இதை நான் ஏன் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், இதை இந்த மன்றத்திலே கேட்டிருக்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** அந்தப் பொருள் பற்றிப் போதுமான விளக்கம் கொடுத்துவிட்டார்கள் என்று கருதுகிறேன். அடுத்த விஷயத்திற்குப் போகலாம்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் அந்த இரண்டு பாகங்களுக்கு முன் ஏற்பட்டது. இறுதியில் ஒன்றுமே இல்லாமல் இருக்கிறதே என்பதற்காகக் கேட்டேன். இன்னும் கிராமப்



புறத்திலே இன்றைக்கு கட்டடங்கள் கட்டமுடியாத நிலை இருக்கின்ற காரணத்தினாலே சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும். போகின்ற போக்கிலேயே விட்டுவிட்டால், வேகம் இருக்காது. இதை வேகப்படுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இன்றைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க வேண்டும்.

ஒருமுறை எங்கள் பக்கத்திலே சேந்தமங்கலம் பகுதியிலே இதுபோன்ற ஒரு கட்டட விவகாரத்திலே தகராறு வந்தது. இப்போது மாண்புமிகு உறுப்பினராக இருக்கின்ற திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் சேலம் மாவட்டக் கூட்டுறவுத் துறையிலே தலைவராக இருந்தார்கள். அப்போது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சில காரியங்கள் நடந்தன. அவர்கள் ஆளுகின்ற பொறுப்பிலே இருந்த கட்சியிலே இருந்தார்கள். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தார்கள். அவர்கள் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். "அவர்கள் காங்கிரஸ்காரர்கள். பிரசிடெண்ட்டாக இருப்பவர் காங்கிரஸ்காரர். நீங்கள் கொடுக்கவே கூடாது' என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்களும் அப்போது எடுத்துச் சொன்னோம். அந்த இடத்தை வந்து பாருங்கள். அந்த இடத்தைப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள். காங்கிரஸ்காரர்கள் என்று பார்த்துவிட்டுச் சொல்ல வேண்டாம். அன்றைக்கு அவர்கள் அதிகாரத்தில் இருந்தார்கள். அவரும் இருந்தார். அவருடைய கட்சியும் அதிகாரத்தில் இருந்தது. அப்போதுகூட அவர்கள் நியாயமாகச் செய்திருக்கிறார்கள். அதுபோல நியாயத்தின் அடிப்படையிலே இந்த விஷயத்தைப் பற்றி விரைவாக முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

அடுத்து, சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மீண்டும் அரசுக்கு நினைவுபடுத்த விரும்புவது, அங்கேயுள்ள விவசாயிகளின் பயிர்க் கடன் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்து மக்கள் கிணற்றை நம்பி, குளத்தை நம்பி, மழையை நம்பி விவசாயம் செய்கிறார்கள். காவிரிப் பாசனம் போன்று ஆற்றை நம்பி விவசாயம் செய்யவில்லை. அங்கே நீர் வளமில்லை. மழை பெய்து, அந்த நீரைத் தேக்கி வைத்து, விவசாயம் செய்கிறோம். அந்த நிலையில், பருத்தி போட்டார்கள். அதிகாரிகள் இன்ஸ்பெக்ஷன் செய்யும்போது, நிலத்தில் பருத்தியில்லை. நெல் இருக்கிறது, சோளம் இருக்கிறது என்று அதிகாரிகள் ரிப்போர்ட் தருவதால், அவர்

களுக்குக் கொடுக்கப்படும் கடன் நிறுத்தப்படுகிறது. அவர்கள் பருத்தி போட்டார்கள். ஆனால் நல்ல மழை பெய்ததனால், பருத்தி அழிந்து விட்டது. அந்தப் பருத்தியைக் கொண்டுவந்து வேறு இடத்தில் நட முடியுமா ? அதனால் அந்த நிலங்களிலே நெல்லைப் பயிரிடுகிறார்கள். பருத்தியைச் சாகுபடி செய்யாததாலே, எப்படிக் கடன் கொடுப்பதென்று அதிகாரிகள் கேட்கிறார்கள். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த நிலையே தேவையில்லை. விவசாயிகளுக்கு நிலம் இருக்கிறது. அந்தச் சொத்தின் அடிப்படையிலே மூன்றில் ஒரு பங்கு, அல்லது நான்கில் ஒரு பங்கு அளவிற்கும் கடன் கொடுங்கள். அந்த அடிப்படையிலே கடன் கொடுத்தால், விவசாயிகளுக்கும் நலமாக இருக்கும், கூட்டுறவு நாணய சங்கங்களுக்கும் வசதியாக இருக்குமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சேலம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கிருப்பவர்கள் மிகவும் கடுமையாக உழைக்கக்கூடிய மக்களாக இருக்கிறார்கள். முதலிலே சேலம் மாவட்டம், அடுத்து கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கடுமையாக உழைக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

**திரு. வே. தங்கபாண்டியன் :** தலைவரவர்களே, சேலம், கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் உழைப்பவர்கள் என்றும், மற்ற மாவட்டத்துக் காரர்கள் உழைப்பதில்லை என்பதுபோலவும் ஒரு மோசமான கருத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகிறார்கள். எல்லா மாவட்டக் காரர்களும் உழைக்கிறார்கள். எல்லோரையும்விட, முகவை மாவட்டக் காரர்கள் உழைப்பிலே சிறந்தவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதுபோன்று மாவட்டப் பெருமைகளைப் பற்றிப் பேசும்போது, சொந்த மாவட்டத்தோடு நிறுத்திக்கொள்வது நல்லது.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** நான் பிற மாவட்டங்களைப் பற்றிச் சொல்லவில்லை. எங்கள் மாவட்டத்தைப் பற்றியும், எங்களுக்குப் பக்கத்திலுள்ள மாவட்டத்தைப் பற்றியும்தான் சொல்லுகிறேன். ரிகார்ட் பூர்வமாக அது உண்மை. அங்கே 100 அடி, 120 அடி ஆழமுள்ள கிணறுகள் இருக்கின்றன. எனவேதான் கடுமையாக உழைக்கும் மக்கள் இருக்கிறார்களென்று சொல்லுகிறேன். இந்த நிலையில், அந்த மாவட்டத்திலுள்ள மக்களுக்கு அரசு நல்ல உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்றால், உடனடியாக சொத்தின் அடிப்படையிலே கடன் தொகையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு கொடுத்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.



* **திரு. சோ. ஆறுமுகம் :** தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறை, கழக ஆட்சிக் காலத்தில் வேகமாக, மக்களுடைய தேவைகளை, குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்ற ஓர் இயக்கமாகச் செயல்பட்டு வந்தது. கடந்த மூன்று ஆண்டுக்காலமாக இந்தத் துறையிலே பெரிய தொய்வு ஏற்பட்டு, எதிர்காலத்தில் இந்தத் துறை இருக்குமா அல்லது அழிந்து விடுமா என்று அச்சப்படக்கூடிய அளவிற்கு, மக்கள் மத்தியிலே ஓர் அச்சத்தை உண்டாக்கியிருக்கிறதென்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே தரப்பட்டிருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்புகளைப் பார்க்கின்றபோதும் அல்லது வேறு சில தகவல்களைப் பார்க்கின்றபோதும், மாநில வங்கி அளவிலே தவணை கடந்த கடன் கூடியிருப்பதும் அதுபோல மத்திய வங்கி மாநில வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் தவணை அதிகரிப்பதும், மத்திய வங்கிக்கு, சங்கங்கள் செலுத்த வேண்டிய கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தவணைகள் அதிகரிப்பதும், தவணை கடந்த காலக் கடன்கள் மிக அதிகரித்து உள்ளதும் தெரிய வரும். இந்த நிலை நீடிக்குமானால், கிராம அளவிலே உள்ள சங்கங்கள் விவசாயிகளுக்குத் தங்களுடைய கடமையைச் செய்ய முடியாத சூழ்நிலை உருவாகும். அதுபோல மத்திய வங்கிக்கு, மாநில வங்கி கடன் கொடுக்க முடியாத சூழ்நிலையும், மாநில வங்கிக்கு ரிசர்வ் வங்கி கடன் கொடுக்காத சூழ்நிலையும் ஏற்படுமென்பதை இங்கே எடுத்துக் கூறி, இதிலே அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, நில வள வங்கிகளை ஏற்படுத்திய பிறகு, மத்திய கால, நீண்ட காலக் கடன்கள் கொடுப்பதை அவைகள் ஏற்றன. கிராம அளவிலுள்ள நாணயச் சங்கங்கள், விவசாய உற்பத்திக்கு மட்டும் விவசாயிகளுக்கு, பயிர்களுக்காக தேவையான குறுகிய காலக் கடன்களை வழங்கும் பணியை மேற்கொண்டன. ஆனால், இன்றைக்கு நிலவள வங்கிகளில், 75, 80 சதவிகித அளவிற்கு, தவணை கடந்த வங்கிகளாக இருப்பதால், அந்தச் சங்கங்கள் விவசாயிகளுக்கு மத்திய காலக் கடன்களையும், நீண்ட காலக் கடன்களையும் கொடுக்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. நிலவள வங்கிகள் அந்த நிலைக்கு வந்துவிட்ட சூழ்நிலையில், விவசாயிகளுக்கு அதிகமான சலுகைகளை அளிக்கப் போகிறோம், விவசாயிகளுடைய தேவைகளைக் கவனத்தில் வைத்திருக்கிறோம் என்று சொல்லக்கூடிய அரசு, அந்தப் பணியைச் செய்ய உடனடியாக மத்திய வங்கிக்கு அனுமதி கொடுக்க வேண்டும். நீண்ட காலக் கடன்களைக் கொடுக்கும் ஸ்தாபனங்கள் செயலிழந்து நிற்கும் நேரத்தில்,

உடனடியாக அந்தப் பணியைச் செய்ய மத்திய வங்கிக்கு அரசு அனுமதி அளிக்க வேண்டும். ரிசர்வ் வங்கியோடு கலந்து பேசி, தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நில வள வங்கிகள் ஏற்படுவதற்கு முன்பு, கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் நீண்ட காலக் கடன்களையும், மத்திய காலக் கடன்களையும் கொடுத்து வந்தன. நிலவள வங்கிகள் சரியாகச் செயல் படாத நிலையில், மீண்டும் கிராமங்களில் அந்த முறையைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் கூட்டுறவுத் துறையை நம்பி விவசாயம் செய்துவரும் விவசாயப் பெருங்குடி மக்கள், தங்களுக்குத் தேவையான கடன் வசதிகளைப் பெற்று, உற்பத்தியைப் பெருக்கும் சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ள விவசாயிகள், பெரும் துன்பத்திற்கு ஆளாக நேரிடுமென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1976 டிசம்பர் 31 ஆம் தேதி கழக ஆட்சி கலைக்கப்பட்டதும், மாநிலத்திலேயுள்ள மாநிலக் கூட்டுறவு வங்கி, மாவட்ட அளவிலே உள்ள கூட்டுறவு வங்கிகள், சங்கங்கள், அத்தனையையும் கலைத்துவிட்டு, தனி அலுவலர்களைப் போட்டார்கள். தனி அலுவலர்கள், மூன்று ஆண்டு காலமாகத் தொடர்ந்து அந்தப் பணியினைக் கவனித்து வருகிறார்கள். மக்களுடைய பிரதிநிதிகள் இருந்தபோது தவறுகள் ஏற்பட்டன, அதாவும் குறிப்பாக கழகத்தைச் சேர்ந்தவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, மிகப் பெரிய தவறுகள் நடந்தன என்ற பூதாகரமான குற்றச்சாட்டு, கழக ஆட்சி கலைக்கப் பட்டதும் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டது. நான் இந்த நேரத்தில் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாநில வங்கி, மாவட்ட மத்திய வங்கி, நிலவள வங்கி இப்படி எங்கெங்கு தனி அலுவலர்கள் நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறார்களோ, அவை குறித்து ஒரு ஆய்வு நடத்த வேண்டும். அந்த அளவிற்கு அந்த நிர்வாகத்தில் மோசமான சூழ்நிலைகள் இன்றைக்கு உருவாகியிருக்கின்றன என்பதும், எந்த அளவிற்கு ஊழல்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதும், ஆய்வின் மூலம் ஆட்சியாளர்களுக்குத் தெரியும். மேலும், நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும் அது வாய்ப்பாக இருக்குமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நான் தலைவராக இருந்தபோது, என்மீது பல குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டன. நான் இந்த நேரத்தில் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஸ்தாபனத்தில்—கூட்டுறவுத் துறையானாலும் சரி, வேறு எந்தத் துறையானாலும் சரி—நிர்வாகம் சீர்கெட்டுவிட்டது அல்லது அந்த நிர்வாகத்திலே இருக்கிறவர்கள் தவறு புரிந்துவிட்டார்கள் அல்லது எந்த நோக்கத்திற்காக அந்த இயக்கம் இருக்கிறதோ அந்த நோக்கத்திற்கு மாறாக





நிர்வாகம் சென்றுவிட்டது என்று அரசாங்கம் கருதுமானால்தான், அந்த நிர்வாகத்தை அகற்றிவிட்டு, அந்த நிர்வாகத்தைச் சரி செய்ய, சீர் செய்ய தனி அலுவலர்களைப் போட வேண்டுமென்று, ஜனநாயகத்திலே முறையாக வைத்திருக்கிறோம். ஆனால் 1976 ஆம் ஆண்டில் என்ன நடந்தது?

(பிற்பகல் 5.40)

எடுத்த எடுப்பிலேயே அரசியல் கண்ணோட்டத்தோடு அனைத்தையும் கலைத்து விட்டு தனி அதிகாரிகளை அங்கே நியமித்தார்கள். அப்படிக் கலைத்துவிட்டு, தனி அதிகாரிகளை நியமித்த பிறகுதான், பொறுப்பிலே இருந்தவர்கள் யார் யார் என்ன தவறு செய்திருக்கிறார்கள் என்பதை ஆராய தனி நபர் குழுவை நியமித்தார்கள். அந்தத் தனி நபர் குழுவிற்கு பாரதி என்கின்ற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டு விசாரணை நடத்தினார்கள். இத்தகைய செயலை எப்படி ஜனநாயகத்தில் நாம் ஏற்றுக் கொள்ள முடியும்? இதை மாண்புமிகு அமைச்சர்களும் இந்த அரசும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த அமைப்புகளைக் கலைத்து விட்டு தனி அலுவலரை வங்கிகளுக்கு நியமித்த பிறகு, மக்கள் மத்தியில் எதற்காகக் கலைத்தோம் என்று வேண்டுமென்றே தவறான தகவல்களைச் சொல்லுவதற்காக, மக்கள் மத்தியில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பற்றிக் குற்றச்சாட்டைச் சொல்லுவதற்காகத்தான் அந்தக் குழு போட்டு விசாரணை நடத்தியதாக என்னால் மிக நன்றாக யூகிக்க முடிகிறது. அப்படி விசாரணை நடத்தி, அந்த அதிகாரி கொடுத்த அறிக்கையைப்பற்றி ஆளுநர் ஆட்சிக் காலத்தில் ஆளுநரைச் சந்தித்துப் பேச முடியாத நிலை இருந்தது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் பிறகு புதிய கட்சி ஆட்சிக்கு வந்த பிறகாவது இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியது போல், அந்தக் குழு கொடுத்த அறிக்கையை மேலவையில் வைத்து அதைப்பற்றி உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளும் வகையிலும் எதிர்காலத்தில் கூட்டுறவுத் துறையில் இருப்பவர்களும், புதியதாக வரக்கூடியவர்களும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கும், மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையிலும் அரசு செய்திருக்க வேண்டும். அரசு அந்த அறிக்கையை வைக்க ஏன் தயங்குகிறது? அந்த அறிக்கையை அவையில் வைத்தால் ஆட்சியாளர்களுக்கு அது பாதகமாக அமைந்து விடும் என்கின்ற குற்றச்சாட்டினை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அறிக்கையிலே, நான் தெரிந்துகொண்டவரை, ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பினாமியாகத் தலைவர்களைப் போட்டு பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டதாகவோ, கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான சொத்தைச் சாப்பிட்டு விட்டதாகவோ ஒன்றையும் நாம் காண முடியாது. சுற்றிச் சுற்றி

இறுதியில் பார்க்கும்போது, கழகத்தில் இருந்தவர்கள் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகுதான் மத்திய வங்கி அல்லது வேறு எந்த ஒரு வங்கியாக இருந்தாலும் வங்கியின் வருவாயைப் பெருக்கி, அதிகமான விவசாயிகளுக்கு அதிகமான பணத்தைக் கடன் கொடுத்து நல்ல காரியங்களைச் செய்திருக்கின்றதைப் பார்க்க முடியும். மேலும் "பி" கிரேட், அதற்குக் கீழே இருந்த வங்கிகளையெல்லாம் நல்ல முறையில் 'டர்ன்ஓவர்' செய்து "ஏ" கிரேடுக்கு, முதல் நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறதைத்தான் பார்க்க முடியும். அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி கொடுத்த அறிக்கையில் ஆரம்பம் முதல் இறுதி வரை குற்றச்சாட்டு ஒன்றையும் காண முடியவில்லை என்பதை ஆட்சியிலிருப்பவர்கள் கண்டுகொண்டார்கள். கடைசியில் அவர்கள் செய்திருக்கக் கூடிய செயல்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணத்திற்கு என்னை எடுத்துக் கொள்ளுங்கள். நான் 1971-76 வரை தலைவராக இருந்திருக்கிறேன். அதாவது 1976 ஆம் ஆண்டில் என்னை மிசாவின்படி கைது செய்யும் வரை நான் தலைவராக இருந்தேன். "1971 முதல் 1976 வரை நான் பதவியில் இருந்த நாள் வரை தொலைபேசியைப் பயன்படுத்திச் செலவு செய்யப்பட்ட முழுத் தொகையும் ஆட்சேபணைக்குரியது. அதேமாதிரி 1971 முதல் 1976 வரை காரை நான் உபயோகித்தது ஆட்சேபணைக்குரியது. அதே மாதிரி 1971 முதல் 1976 வரை நான் விளம்பரத்திற்காக கொடுத்த தொகை முழுவதும் ஆட்சேபணைக்குரியது." என்று அந்த காலக் கட்டத்தில் தொலைபேசிக்காக, விளம்பரத்திற்காக, காரை உபயோகப்படுத்தியதற்காக எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டதோ அதையெல்லாம் கணக்கிட்டு அதற்கு சர்சார்ஜ் புரசீடிங்ஸ் என்ற முறையில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இவ்வளவு காரியங்களும் விதி முறைகளுக்கு உட்பட்டு, பட்ஜெட் தொகைக்கு அதிகமாகாமல், நிர்வாகக் குழுவிலே, எக்சிகியூட்டிவ் குழுவிலே வைத்து அங்கீகரிக்கப்பட்டதை எப்படி ஆட்சேபிக்க முடியும்? தணிக்கை செய்தபோது ஆட்சேபணை இருந்து அந்தத் தவறைத் தொடர்ந்து செய்திருந்தால் தப்பு. இந்த முறையில் பார்த்திருந்தால் அது முறையாக இருந்திருக்கும். அதை விட்டுவிட்டு, ஒட்டு மொத்தமாக அந்த அதிகாரி கொடுத்த அறிக்கையை வைத்து, சர்சார்ஜ் என்கிற நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் நீதிமன்றத்திற்குச் செல்கிறோம். அந்த நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதிலே என்ன ஊழல் இருக்க முடியும்? உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாந்தத் தலைவர் அவர்கள் அருள்கூர்ந்து அனுமதி தர வேண்டும். ஏனென்று சொன்னால், இன்றைக்கு சர்சார்ஜ் நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பது போலவே சேலம் மத்திய வங்கி இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அங்கு சர்க்கார் அலுவலர்கள் 3 பேர் நாள்தோறும் ஆடிட்





செய்கிறார்கள். மாவட்டத்திலுள்ள ஒரு தனி அதிகாரி இன்ஸ்பெக்ஷன் பண்ணுகிறார். அவர் அரசாங்க அதிகாரி. அவரை வங்கி பார்த்து நியமிப்பதில்லை. அவர் 6 மாதத்திற்கு ஒரு முறை, வருஷத்திற்கு ஒரு முறை தணிக்கை செய்கிறார். இதற்கும் பிறகு மாநில கூட்டுறவுப் பதிவாளர் ஆய்வு நடத்துகிறார். அதுமட்டுமல்ல, கூட்டுறவுத் துறை அதிகாரிகள் அத்தனை பேரும் ஆய்வு நடத்துகிறார்கள். அதிகாரிகள் ஆய்வு, தணிக்கை செய்யக் கூடிய காலங்களில் அங்கு பொறுப்பில் இருப்பவர்கள், சங்கங்களில் இருப்பவர்கள் விதி முறைக்கு மாறாக தவறு செய்ததாகச் சுட்டிக் காட்டியிருந்தால். அப்படிப்பட்டவர்கள் சுட்டிக்காட்டப்பட்டதற்குப் பிறகு மீண்டும் அந்தத் தவறைத் தொடர்ந்து செய்திருந்தால் தான் அவர்கள் பேரில் குற்றம் வரும். இவ்வளவு பேர்கள் அங்கீகாரம் செய்த பிறகு, ஆய்வு செய்த பிறகு, தணிக்கை செய்த பிறகு, இப்பொழுது திடீரென்று ஐ.ஏ.எஸ். அதிகாரி கொடுத்த அறிக்கையை வைத்து ஒரு தவறையும் அதில் கண்டுபிடிக்க முடியாத நிலையில் அவர்கள் சுட்டிக்காட்டியவற்றை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுப்பது எப்படி முறையாகும்? எதிர்காலத்தில் இன்றைக்கு ஆளும் கட்சியில் இருப்பவர்கள் பொறுப்புக்கு வந்தால், இதுமாதிரியெல்லாம் நடப்பதற்கு வழிகாட்டுவதாகாதா? இதையே காரணமாக வைத்துக்கொண்டு திரும்பத் திரும்ப தவறு செய்துவிட்டார்கள் என்று அமைச்சர்களும் பேசுகிறார்கள், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் பேசுகிறார்கள். இது நல்லதுதானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

நேற்றையதினம் கூட பத்திரிகையில் ஒரு குறிப்பு வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் ராஜ்ய சபை உறுப்பினர் திரு. கமலநாதன் அவர்கள் 54 ஆயிரம் ரூபாய் டி.ஏ. அதிகமாக வாங்கிவிட்டார் என்பதற்காக வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். நீட்டோலை பத்திரிகைக்கு 400 ரூபாய்க்கு விளம்பரம் கொடுத்தார். விளம்பரம் கொடுக்க வேண்டுமென்று பணமும் கொடுத்த பிறகு, அவர்கள் விளம்பரம் செய்யவில்லை, அதற்கு எந்த மாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டும்? விளம்பரம் கேட்கிறார்கள். உடனே நாம் விளம்பரம் கொடுக்கிறோம். விளம்பரத்தைப் பெற்றவர் பணத்தைப் பெற்றுக்கொண்டு- உண்மையில் விளம்பரம் செய்யத் தவறிவிட்டால்,... பணம் வாங்கிவிட்டு விளம்பரம் செய்யாமல் இருந்த குற்றத்திற்காக மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாவிட்டாலும் கூட இந்த நேரத்தில் தனி அதிகாரியாக இருப்பவர் மோசடி செய்த அந்த விளம்பரத்தைப் பெற்றவர் மீது அல்லவா முறைப்படி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்? ஆனால் அப்படி அவர்கள் போட முன்வரவில்லை. 400 ரூபாய் விளம்பரத்திற்காகக் கொடுத்து, விளம்பரம் பெற்றவர்கள் அதைச் செய்யவில்லையென்ற காரணத்திற்காக அவர் மீது கிரிமினல் வழக்கு அல்லது வேறு எந்தவித வழக்கு வேண்டு

[திரு. சோ. ஆறுமுகம்] [1979 ஏப்ரல் 20

மானாலும் தொடர்வதுதான் நியாயம். அதை விட்டு விட்டு விளம்பரம் கொடுத்தார்கள், விளம்பரத்தைப் பெற்றவர் விளம்பரம் செய்யவில்லை, ஆகவே இரண்டு பேரும் பணத்தைப் பங்கிட்டுக்கொண்டார்கள் என்கிற முறையில் ஆட்சியில் இருப்பவர்களாகவே ஒரு தவறான கணக்கை வகுத்துக் கொண்டு வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். அன்றைக்கு நீட்டோலை எழுத்தாளர் எங்கள கட்சியில் இருந்தார். இன்றைக்கு ஆட்சியிலிருக்கின்ற கட்சிக்கு மிகப் பெரிய எழுத்தாளராக அவர் ஆகிவிட்ட நிலையில் அவர் எழுதுவதையெல்லாம் ஆளும் கட்சி அங்கீகரித்துக்கொண்டிருக்கிறது. ஆளும் கட்சியைச் சார்ந்த வராக அவர் இன்றையதினம் இருக்கின்ற காரணத்தினால், தவறு செய்த அவர் மீது நடவடிக்கை எடுக்காமல், எங்கள் கட்சியைச் சார்ந்த முன்னாள் ராஜ்ய சபை உறுப்பினர் திரு. கமலநாதன் அவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அது இப்பொழுது கோர்ட்டில் இருக்கிறதாகையால், விவரமாக நான் போக விரும்பவில்லை.

அடுத்தபடியாக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் வங்கிகள் அத்தனையும் மிக சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருந்தன. மக்களும் கூட்டுறவுத் துறையில் அதிகமாக நாட்டம் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு கடந்த 3 ஆண்டுக் காலமாக மக்கள் கூட்டுறவுத் துறையை மறந்து விட்டார்கள். கூட்டுறவுத் துறையே அழிந்துகொண்டு போகிற ஒரு சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. ஆட்சியாளர்கள் அந்த நிலைமைக்கு அதை ஆளாக்கியிருக்கிறார்கள். இப்பொழுது ஆட்சியில் இருப்பவர்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடு எதிர்க் கட்சிகளின் மீது நடவடிக்கை எடுக்கின்ற நிலைமையின் காரணமாக எதிர்காலத்தில் ஆட்சியில் இருப்பவர்கள் அந்தப் பொறுப்புகளுக்கு வந்தபின் பொறுப்பில் இருந்து இறங்கும்போது இதே நிலைமை வாராதா? ஐ.ஏ.எஸ். அதிகாரி கொடுத்தவைகளை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கும்போது, அவை கிரிமினல் குற்றத்தின் கீழ் வராவிட்டாலும் கூட, போலீஸ் அதிகாரிகளிடம் சொல்லி, கிரிமினல் குற்றத்தின் கீழ் கொண்டு வந்து, வழக்குப் பதிவு செய்ய ஆட்சியிலிருப்பவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். சர்சார்ஜ் கிரிமினல் குற்றத்தின் கீழ் வராவிட்டாலும் கூட, அரசியல் கண்ணோட்டத்துடன் அது கிரிமினல் குற்றம் ஆக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. இப்படி இருக்கக்கூடிய நிலைமையில் என்னைப் போன்ற பலர் இன்றைக்கு நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிடங்களுக்குப் போகும்போதெல்லாம் அங்கே போய் ஊழல் ஊழல் என்று பேசி வருகிறார்கள். என்ன ஊழல் என்று சொல்ல வேண்டாமா என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



9 ஏப்ரல் 20] [திரு. சோ. ஆறுமுகம்]

(பிற்பகல் 5.50)

கவே, "கூரையேறி கோழிபிடிக்காதவன், வானம் ஏறி வைகுண்டம் வானா" என்ற அளவில் முதலிலே உங்களை நீங்கள் கட்டுப்படுத்திக் ண்டு இந்த நிர்வாகத்தை நல்ல முறையில் செயல்படுத்தப் பாடுபட ண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒரேயொரு வார்த்தை மட்டும். பல கிரிமினல் வழக்குகளை ந்த அரசு போடுகிறது. அந்த வழக்குகளை நாங்கள் சந்திக்கத் தயாராக ருக்கிறோம். நாங்கள் வழக்கு மன்றங்களின் தீர்ப்புக்குக் கட்டுப்படு றோம். யார் யார் திராவிட முன்னேற்றக் கழகத்திலே தீவிரமாக ருக்கிறார்கள் என்று பார்த்து, அவர்கள் மீது பொய் வழக்குகள் ஜோடிப் திலேயும், நடவடிக்கை எடுப்பதிலேயும், அது கூட்டுறவுத் துறையானாலும் ல்லது மற்ற எந்தத் துறையானாலும், இந்த அரசு அக்கறை செலுத்துவது வ்வளவு நல்லதல்ல, முறையல்ல என்பதைத்தான், தலைவர் அவர்களே, ங்கள் மூலமாக இந்த அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் கூட ந்தக் கூட்டுறவுத் துறையிலேயும், வேறு சில துறைகளிலேயும் வேகமாகப் பசக்கூடியவன். நான் அதை எவ்வளவோ கட்டுப்படுத்தியிருக்கிறேன். ப்போது எனக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது, நான் ஊருக்குப் பானாலோ அல்லது வேறு எங்காவது இருந்தாலோ, சாராய பாட்டிலை வத்தாவது இந்த ஆறுமுகத்தை மீண்டும் கைது செய்ய வேண்டும் என்று போலீஸ் துறைக்குச் சொல்லப்பட்டிருக்கிறதென்று. ஆகவே, இப்படி யெல்லாம் . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** வேண்டுமென்றே, உண்மை நிலைமைகளை திசை திருப்பவேண்டும் என்று இப்படிச் சொல்லப்படுகிறது. அரசாங்கத்தினுடைய நல்லெண்ணத்தை, அல்லது அரசு தரப்பிலே இருப்பவர்களின் நல்லெண்ணத்தை திசை திருப்பக்கூடாது. அப்படிச் செய்தால், கடுமையான விவாதத்திற்கு உள்ளாக வேண்டி வரும்.

**திரு. சோ. ஆறுமுகம் :** அரசாங்கத்திற்கு நல்லெண்ணம் இருந்தால் வரவேற்கிறேன். நல்லெண்ணம் இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. கூட்டுறவுத் துறை இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருப்பவர்கள் மீது பொய்யாக பல நடவடிக்கைகளை எடுப்பதும், அவர்கள் மீது புழுதிவாரி தூற்றுவதும் . . .

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : முதல்வர் அவர்களுடைய தனியதிகாரியாக இருந்தவர் கூட தவறு செய்தார் என்பதற்காக உடனடியாக அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். மற்றவர்களுடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இன்னார், இனியார் என்று பாராமல் நடவடிக்கை எடுக்கின்ற நல்ல உள்ளம் படைத்தவர் இன்றையதினம் முதலமைச்சராக இருக்கிறார்கள். தன்னுடைய தனியதிகாரியாக இருந்தவர் தவறு செய்தார் என்பதற்காக அவர் உடனடியாக நீக்கப்பட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் மிகுந்த அனுபவம் உள்ளவர்கள். கூட்டுறவுத் துறையைப்பற்றி விமர்சனம் செய்யுங்கள். அதிலே நல்லவைகள் இருந்தால், நிச்சயமாக ஏற்றுக்கொள்கிறோம். அதே நேரத்தில் மாறுபட்ட உணர்வுகள் இருந்தால், அதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர எனக்கும் உரிமை இருக்கிறது. அவர்கள் சொல்லும் அந்தப் பிரச்சினையில் ஏதாவது ஆதாரங்கள், யாதாஸ்துக்கள் இருந்தால், அவைகளை வைத்துப் பேச வேண்டும். அப்படி வரும், இப்படி வரும் என்று பயமுறுத்துவது, அச்சுறுத்துவது என்பது ஒரு வகையான அரசியல் அச்சுறுத்தலாகும் என்பதை மட்டும் தான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலைத்தான் நான் தெரிவித்தேன். ஆகவே இன்றைக்கு சர்சார்ஜ் நடவடிக்கை எடுக்கின்றபோது, எக்ஸிக்யூட்டிவ் கமிட்டியில் தலைவர், மத்திய இயக்குநர்களும், சேர்ந்து தான் இந்த விளம்பரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தச் செலவுக்கு அங்கீகாரமும் தரப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவில் இணைப்பதிவாளர் அங்கத்தினர். அப்படி இருக்கும்போது, சர்சார்ஜ் நடவடிக்கை எடுக்கும்போது மட்டும், அவர்களை விட்டுவிட்டு பொது மக்களுடைய பிரதிநிதிகள் மீது மட்டும் நடவடிக்கை எடுப்பது எப்படி நியாயம்? இப்படி நடவடிக்கை எடுக்க சட்டம் எங்கே இடம் தருகிறது? ஒரு நிர்வாகக் குழுவிலே இருப்பவர்கள் ஒட்டுமொத்தமாகத் தீர்மானம் போட்டு இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள் என்றால், அதிலே ஜாயிண்ட் ரிஜிஸ்ட்ரார் அவர்களும் உட்படுகிறார்கள். அவர்மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? ஆகவே, கட்சிக் கண்ணோட்டத்தோடுதான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 1976-லே கூட்டுறவு அமைப்புகள் கலைக்கப்பட்டன. அதற்குப் பின் இன்றுவரை இந்தக் கூட்டுறவுத் துறை கட்சிக் கண்ணோட்டத்தோடுதான் செயல்பட்டு வருகிறது. கூட்டுறவுத் துறை செம்மையாகச் செயல்படுத்தப்பட வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சொல்லி இந்தக்





கூட்டுறவுத் துறையிலே நல்ல முன்னேற்றத்தைக் காண சிறப்பான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும், அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் துணையாக இருக்கும் என்றும் தெரிவித்து அமைகிறேன்.

@ THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI : Hon. Vice Chairman, I am indeed happy to speak on Co-operation. While going through the statistical report of this Department, I would like to congratulate the Co-operation Department on having kept up its third or fourth place all the time in all-India level. While going through the Report, I found that there were a number of Land Co-operative Societies and it struck me that these Co-operative Societies could follow the example of Maharashtra, because the name of Maharashtra State was mentioned a number of times in this Report. They could, as in the Maharashtra State, establish a multi-purpose building, a place where these farmers could meet and discuss. There are such big buildings built in Maharashtra in a cluster of villages, in the centre of a number of farms where all the farmers bring their produce for sale. There is a provision for keeping their cattle, buffaloes and their produce and also some place for their stay. At the same time, there are halls built on Parliament-type where the farmer constantly discuss their problems and those halls are used for adult education also. I feel that we can have such buildings built on Co-operative type, the rent that they would be getting could be paid back and there can be avoidance of Farmers' agitation if such buildings are built in a cluster of villages or in the centre of different farms. While I was reading the report, I found that there were 15 Women's Garments Co-operative Societies. I happen to be the President of one Society which is situate in Wellingt on Building in Mount Road. We have got 16 or 17 Primary Societies attached to this Society and there are 200 working women who are able to supplement their income. We have been able to give them bonus. But it so happens that for the last two years—I want to mention this because the Hon. the Labour Minister is here—I have made a number of appeals to him that the garment orders of the I.T.I. Staff may be given to us, so that the societies may be able to poay their workers their regular quantum of wages. Since the Handloom Department is having large scale production of cloth, the cloth can be given from the Handloom Department to these co-operatives because some of them are running at loss. If these I.T.I. orders are given to these societies, they would be of help to the working women who are trying to supplement the income of their families.

Thank you.

**திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றையதினம் ஒரு மகத்தான தலைப்பின்கீழ், ஒரு நல்ல துறையின் கீழ் தந்திருக்கின்ற கொள்கைக் குறிப்பையொட்டி விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. கொள்கையிலே இருக்கும் என்னென்ன குறைபாடுகளைப் பற்றி விவாதிக்கப்பட வேண்டும் என்பதைவிட, அதைப்பற்றி அறிவதைவிட, கொள்கைகளே ஒன்றும் புதிதாக இல்லை, புதிதாக இணைக்கப்படுவதும் இல்லை, ஆண்டு தோறும் சொல்லப்படுகின்ற கொள்கையையொட்டித்தான் இந்தக் கொள்கையும் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6.00)

இப்போது இந்தத் துறைக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடம், சிக்கல் என்னவென்றால், இந்தத் துறை தற்போது இறங்குமுகத்தை நோக்கி, அழிவுப் பாதையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. இந்தச் சங்கடமான சூழ்நிலையிலிருந்து இத்துறையைக் காப்பாற்றக்கூடிய பெரும் பொறுப்பு அனைத்துக் கட்சிகளிடமும், இந்த ஆட்சியிடமும்தான் இருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே மற்றவற்றைப்பற்றி அதிகம் விமர்சிக்காமல், மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே பேசிய கருத்துக்களையே திரும்பச் சொல்லிக் கொண்டிருக்காமல், அவர்கள் சொல்ல மறந்த கருத்துக்களையும், நேரம் இல்லாமல் சொல்லாமல் விட்ட கருத்துக்களையும் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாகவும் சிறப்பாகவும், கடந்த 10 ஆண்டுகளாக இக்கூட்டுறவுத் துறை நல்ல முறையில் சிறப்படையத் தொடங்கி, இடையில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டால், உள்ளபூர்வமாக அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, அதை அவரால் மறுக்க முடியாது. இந்தத் தொய்விற்கு முழுக்க முழுக்க அரசாங்கம்தான் காரணம் என்று நான் சொல்லுவதற்கும் தயாராக இல்லை. இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட விளைவுகள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இத்துறையை மிகப் பெருமளவுக்கு பாதித்துவிட்டது. தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் அதிகமாக இருக்கும் பகுதிகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தி, வேளாண்மைக் காரியங்களுக்குப் பெருமளவில் கடன் கொடுக்க ஆரம்பித்தோம். அது ஆண்டுக்காண்டு வளர்ச்சி பெற்று, கொடுப்பதும், கடனைத் திருப்பிப் பெறுவதும் சிறுகச் சிறுக நின்று, கடைசியில் கொடுத்தது நின்றுபோய் இன்றைக்கு கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவது எப்படி என்று அரசுத் துறையிலும், இலாகாத் துறையிலும், கடன் வாங்கி கொடுக்க முடியாத நிலையிலிருப்பவர்கள் மத்தியிலும் இது பெரும் பிரச்சினையை உருவாக்கியிருக்கிறது. இது இன்றைக்கு



ஏற்பட்ட பிரச்சினையல்ல. இந்தக் கட்சி என்றைக்கு ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டதோ அன்றைக்கே இந்தப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி கலைக்கப்படுவதற்கு ஓராண்டு காலத்திற்கு முன்பே, வறட்சி என்ற பெயரில் சில சங்கடங்கள் ஏற்பட்டு, அப்போது அவைகளுக்கு உடனடியான பரிகாரம் செய்யப்பட்டு, எது தேவையோ அது செய்யப்பட்டு, எதை மக்கள் விரும்பினார்களோ அதைச் செய்து இந்தப் பிரச்சினை உருப்பெறும் நிலை ஏற்பட்டுவிட்டது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், 1975-76 ஆம் ஆண்டில் வறட்சி ஏற்பட்டபோது, விவசாயிகள் வறட்சி காரணமாகத் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை என்று சொன்ன நேரத்தில், இந்தப் பிரச்சினை உடனடியாகப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தாலுக்கா அளவில் கூட்டுறவுத் துறை, ரெவின்யூ துறை அதிகாரிகள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, இறுதியாக தஞ்சை மாவட்டத் தலைமையிடத்தில் ரெவின்யூ அதிகாரிகளும் கூட்டுறவுத் துறை அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கிகளின் தலைவர்களும் உட்கார்ந்து, இதற்கு ஒரு முடிவெடுத்தார்கள். அதன் காரணமாக ஏறத்தாழ 3,86,00,000 ரூபாய் அளவுக்கு கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் எல்லையில் இருக்கின்ற 50,000 உறுப்பினர்களுக்கு, குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாக மாற்றி அமைத்தோம். இது சென்ற ஆண்டு இந்த அவையில் கொடுக்கப்பட்ட புள்ளி விவரத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையை அந்தக் கூட்டுறவு ஆண்டு முடிவதற்குள்—அந்தப் பசலியிலேயே—உண்டாக்கி, கடன் பெற்றவர்களுக்கும், கடன் கொடுத்தவர்களுக்குமிடையே சங்கடமில்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கினோம். இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது நடந்தது. அதில்தான் ஏதோ பெரிய பெரிய தவறுகளெல்லாம் செய்துவிட்டார்கள், இந்தக் கூட்டுறவுத் துறைக்கு வரக்கூடாதவர்களெல்லாம் வந்துவிட்டார்கள், அநியாயம் செய்து விட்டார்கள், அக்கிரமம் செய்துவிட்டார்கள், ஊழல் செய்து விட்டார்கள், உதாசீனப்படுத்தி விட்டார்கள், இந்தக் கூட்டுறவுத் துறையையே அழித்து விட்டார்கள் என்று பிரச்சாரம் செய்யப்பட்டது. நாள்தோறும் வானொலியிலும் பத்திரிகையிலும் இதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் குறிப்பில் போருகிறபோது, அதைத் தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள். ஏதோ இந்த ஆட்சியினர் பொறுப்பை மேற்கொண்ட பிறகு, நல்லவைகளைச் செய்ததைப் போலவும் இதற்கு முன்னாலே ஒன்றுமே செய்யப்படவில்லை என்றும் சொல்ல முடியவில்லை. இப்படி ஓராண்டு காலத்திற்கு குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன், நீண்ட காலக் கடன், வாணிபத்

[திரு. கோ. சி. மணி] [1979 ஏப்ரல் 20

துறைக்குக் கொடுத்த கடன் என்று இப்படி கடன்கள் நாளுக்குநாள் அதிகரித்தது போலவே வசூலிக்கும் திறமையும் அப்போது அதிகரித்து இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்படும்போது, அந்த ஆண்டில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் கணக்குப்படி கடன் வசூலிக்கப்பட்டது எவ்வளவு என்றால், 99.09 சதவீதம். வசூலிக்காதது .01 சதவீதம்தான். இதுதான் நிலுவையில் நின்றது. இதைச் சொன்னால், வேறு வகையில் திருப்பிச் சொல்லுவார்கள். நீங்கள் முதல் பரிசு பெறுவதற்காக, அக்கிரமம் செய்தீர்கள், அநியாயம் செய்தீர்கள் என்று சொல்வார்கள். ஆனால் அப்போது இந்த மன்றத்திலும் பேரவையிலும் அதைப்பற்றி யாரும் குறை சொல்லவில்லை. பொதுக்கூட்டங்களில் குறை சொல்லவில்லை. இப்போது மாநாடுகள், ஊர்வலங்கள் நடத்துவதைப்போல் எந்த விவசாயியும் நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, "நீங்கள் அப்படி, நீங்கள் இப்படி" என்று சத்தம் போடவில்லை. போடவில்லை என்பது மட்டுமல்ல, போட முடியவில்லை. போட முடியவில்லை என்பது மட்டுமல்ல, நாங்கள் அவ்வாறு அவர்கள் சத்தம் போடுவதற்கான நிலைமைகளைச் செய்யவில்லை. கடன் கொடுக்க வேண்டிய நேரத்தில் கொடுத்து, பெற வேண்டிய காலத்தில் கடனைத் திரும்பப் பெற்றோம். அப்படிப்பட்ட நிலைமையை தமிழ் நாடு முழுவதும் கூட்டுறவு வங்கிகளின் பொறுப்பில் இருந்தவர்கள் சிறப்பாகச் செய்து காட்டினார்கள். இதை ஆண்டறிக்கை வெளியிடும்போது ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, 1975-76 ஆம் ஆண்டுக்குப் பிறகு வங்கிகளின் கணக்கு எப்படி வந்திருக்கிறது என்பதை, மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தாங்களே நன்கு அறிவீர்கள். அரசாங்கத்திற்கும் மிக நன்றாகத் தெரியும். எனவே நான் அதை விளக்கிச் சொல்லத் தேவையில்லை.

நான் துவக்கத்தில் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டேன். இன்றைய தினம் கூட்டுறவுத் துறையில் ஏற்பட்டிருக்கிற சிக்கலுக்கு இயற்கையின் சீற்றம்தான் காரணம் என்று குறிப்பிட்டேன். இயற்கையின் சோதனையை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். ஆனால் இந்தக் கட்சியினர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும், மழை பெய்தபோது என்ன சொன்னார்கள் தெரியுமா? நல்லவர்கள் ஆட்சிக்கு வந்தோம், மழை பொழிகிறது என்றார்கள். அப்படியானால் அதைத் தொடர்ந்து மழையும் வெள்ளமும் புயலும் சேதமும் ஏற்பட்டபோது, யார் வந்தார்கள் இந்த நாட்டிற்கு, உங்களுக்குத் தெரியாமல்? [illegible] ? நாட்டிலே வெள்ளம் வந்தது, புயல் வந்தது, நஷ்டம் வந்தது. [illegible] ஒப்புக்கொண்டிருக்கிறது. 1977-78 ஆம் ஆண்டில் மட்டும் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்று துறைவாரியாகக் கணக்கிட்டுச்



1979 ஏப்ரல் 20] [திரு. கோ. சி. மணி]

சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயத் துறைக்கு இவ்வளவு நஷ்டம், பொதுப் பணித் துறைக்கு இவ்வளவு நஷ்டம், ஹைவேஸ் துறைக்கு இவ்வளவு நஷ்டம் என்று தனித் தனியாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் போலவே தனியார்களுக்கு எவ்வளவு நஷ்டம் என்பதையும் இந்த அவையிலேயே குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள்.

தனியார் துறையில் ஏற்பட்ட நஷ்டத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் குறிப்பிடுகிறபோது, விவசாயப் பயிர்களுக்கு மட்டும் 41,18,00,000 ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்தத் துறைக்குப் பொறுப்பில்லையென்றாலும் (அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் மட்டுமே அமைச்சர்களுக்கான இருக்கையில் இருந்தார்.) இது ஒரு கூட்டு மந்திரி சபை என்ற காரணத்தால், இதைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே வைக்கப்பட்ட வெள்ள நிவாரண அறிக்கையிலும், நிதிநிலை அறிக்கையிலும் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தற்போது இருப்பது கூட்டு மந்திரி சபையல்ல. ஒரு கட்சி அரசாட்சிதான் ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. கோ. சி. மணி:** கூட்டுப் பொறுப்பு வகிக்கிற அமைச்சரவை என்ற எண்ணத்தில் குறிப்பிட்டேன். மாண்புமிகு நிதியமைச்சர் இந்த வெள்ள நிவாரண அறிக்கையில் கொடுத்திருக்கும் இழப்பு பற்றிய புள்ளி விவரங்களை யாரும் மறுக்க முடியாது. அவர் மிக விளக்கமாகவே கொடுத்திருக்கிறார். முதலாவதாக விவசாயத் துறையில் விவசாயிகள் பயிரிட்ட பயிர்களுக்கு மட்டும் ஏற்பட்ட நஷ்டம் 41,18,00,000 ரூபாய். விவசாயிகளுடைய நிலங்கள் சுமார் 23,800 ஏக்கர் மண்மேடிட்டுவிட்டது. விவசாயிகளின் கிணறுகள் சுமார் 1,700 மண் மேடிட்டுவிட்டன. கோழிகள் 5,000 இறந்துவிட்டன. கால்நடைகள் விவசாயிகளுக்குச் சொந்தமானவை 23,000 மடிந்துவிட்டன. இவைகளை யெல்லாம் சேர்த்து சுமார் ரூ. 48,87,000 அளவுக்கு விவசாயச் சமுதாயத்திற்கு மட்டுமே 1977-78 ஆம் ஆண்டில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவையில் அரசாங்கப் புள்ளி விவரத்திலேயே இதைக் கொடுத்திருக்கிறார்கள்.

நான் கேட்கிறேன், ஓராண்டு காலத்தில் பயிர் மூலம் மட்டும் சுமார் 47 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டப்பட்ட விவசாயிகள் கூட்டுறவுத் துறையிலாகட்டும், வேறு துறையிலாகட்டும், தாங்கள் பெற்ற கடனை எப்படித் திருப்பிக் கொடுக்க முடியும்? இதைச் சொன்னால், 'வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காதே என்கிறார்கள்' என்று சொல்கிறீர்கள். இது நியாயமா?

[திரு. கோ. சி. மணி] [1979 ஏப்ரல் 20

வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காதே என்று யாரும் சொல்ல முன்வர வில்லை. விவசாயிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், வாங்கிய கடனை எங்களால் கொடுக்க முடியவில்லை என்று.

"கடனைத் திருப்பிக் கொடுக்காதீர்கள் என்று சொல்லுகிறீர்களே, நியாயமா?" என்று கேட்கிறீர்கள். "வரியைக் கட்டாதே என்று சொல்லு கிறீர்களே, இது நியாயமா?" என்று கேட்கிறீர்கள். நாங்கள் என்ன சொல்லு கிறோம்? "எங்களால் வரியைச் செலுத்த முடியவில்லை. எங்களால் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை" என்று சொல்லுகிறோம். எனவேதான் இப்போதாவது இந்த ஆட்சியினர் இதை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று கேட்கிறேன். பலர் அறிய இந்த அவையில் சொல்லுகிறேன், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை.

நான் ஒரு ஆண்டில் விவசாயிக்கு ஏற்பட்ட நஷ்டத்தை மட்டும்தான் சொன்னேன். அடுத்த ஆண்டும் மழை வெள்ளம் வந்தது. அதன் காரண மாகவும் நஷ்டம் வந்தது. இதையெல்லாம் தொகுத்துப் பார்த்தால், தொடர்ந்து ஒரு சமுதாயத்திற்கு 3 ஆண்டு காலத்திற்கு நஷ்டம் வந்திருக்கிறது. இதை யாரும் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது.

(பிற்பகல் 6.10)

பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்குரிய காரணங்களைச் சொல்லும்போது, "இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிற வெள்ளம், புயல் ஆகிய காரணத்தால் தொடர்ந்து ஏற்பட்ட நஷ்டத்தால் குத்தகையைச் செலுத்த முடியாமல் இருப்பதால், இந்த மசோதாவைக் கொண்டு வருகிறோம்" என்று கூறியிருக் கிறார்கள். ஆகவே தவணையை நீட்டித் தர வேண்டுமென்று கேட்டபோது, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட பதிலைச் சொன்னார்கள். பிறகு அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று அதையே மூன்று முறை சொன்னார்கள். எவ்வளவு நாள் பரிசீலிப்பது? தாமதமாகப் பரிசீலிப்பதிலே ஏற்பட்டிருக்கிற கொடுமைகளை உணர்ந்து பார்க்க வேண்டும். மார்ச் மாதம் 30 ஆம் தேதியோடு உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய கெடு முடிந்துவிட்டது. ஏப்ரல் 15 ஆம் தேதி கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய கூட்டுறவுச் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கெடு கடந்துவிட்டது. ஏப்ரல் 16 ஆம் தேதி மத்திய கூட்டுறவுச் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கடனுக்கான கெடு கடந்து விட்டதாக கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிவிடுகின்றன. இன்றைய தினம் கிராமங்கள் பூராவும் கூட்டுறவுக் கடனை வாங்கியவர்கள் மீது ஜப்தி செய்ய



1979 ஏப்ரல் 20] [திரு. கோ. சி. மணி]

விட்டாலும், டிக்ரி ஆக்கப்பட்டிருக்கிறது. டிக்ரி வாங்க தீர்மானம் போட்ட சங்கம், அந்தச் சங்கத்திலே இருக்கிற இயக்குநர்கள், அந்தச் சங்கத்திற்குத் தலைவராக இருப்பவர்கள், ஆகியவர்களுக்கு அந்த அதிகாரம் இன்று இல்லை. ஏனென்றால் அவர்களே பாக்கிதாரர்களாக, கெடு கடந்தவர்களாக இருக்கி றார்கள். ஆகவே டிக்ரி ஆக்கக் கூடிய தகுதியை இழந்தவர்களாக ஆகி விடுகிறார்கள். ஆகவே இப்போதிருக்கின்ற விதிகளின்படி தவறான நிலையில் டிக்ரி வாங்கப்பட்டிருக்கின்றது. இதில் ஏன் காலம் தாழ்த்த வேண்டும்? உயர் மட்டக் குழு என்ன செய்கிறது? உயர் மட்டக் குழு இங்கிருக்கிறதா? அல்லது இத்தாலியில் அல்லது இங்கிலாந்தில் இருக்கிறதா? உயர் மட்டக் குழுவினர் மாவட்டங்களுக்கு வருகிறார்கள் என்று இரண்டு நாளைக்குப் பத்திரிகையிலே செய்திகள் வந்தன. ஆனால் அவர்கள் வந்ததாகத் தெரிய வில்லை. அவர்கள் எல்லோரும் இருக்கிறார்களா? என்ன செய்கிறார்கள்? இது எவ்வளவு முக்கியமான விஷயம்? இதைப்பற்றிப் பேசி முடிவு எடுத்து அதற்கான ஒரு பரிகாரத்தைச் செய்திருக்கக் கூடாதா? இன்று வரை செய்ய வில்லையென்றால் எப்போது செய்வது? இன்று ஏப்ரல் மாதம் 20 ஆம் தேதி யாகிவிட்டது. ஏப்ரலுக்குப் பிறகு மே மாதத்தில் புதிய கடனைக் கொடுக்க வேண்டும். பழைய கடனையே செலுத்தாதவர்களுக்கு புதிய கடன் எப்படிக் கிடைக்கும்? விவசாயிகளைத்தான் இந்த அரசால் காப்பாற்ற முடியவில்லை யென்றால், அந்த நிறுவனங்களைக் கூட காப்பாற்ற முடியவில்லையா? இப்படியிருந்தால் கூட்டுறவுத் துறை எப்படி நல்ல நிலைக்கு வரும்? நான் பொறுப்பேற்றிருந்த நாள் முதல் இன்று வரையிலும் கூட்டுறவுத் துறையை மோசமான துறையென்று கருதவில்லை. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கூட்டுறவுத் துறையைத்தான் நம்பியிருக்கிறார்கள். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்று" பழமொழி இருந்தது. தஞ்சை மாவட்டத்திற்கு அந்தப் பழமொழி தேவையில்லை. "கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத ஊர்களில் குடியிருக்க முடியாது" என்று புதிய மொழியை ஏற்படுத்திக்கொள்ளலாம். இதற்குக் காரணம், தஞ்சை மாவட்டத்தில் உள்ள மக்களில் 90 சதவீதம் பேர் கூட்டுறவுத் துறையை நம்பித்தான் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல நிலைமை யிலே இருந்து கடன் கொடுக்கவில்லையென்றால், விவசாயம் பாதிக்கப்படும் என்பதைத் தெளிவாக இந்த அமைச்சரவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். யார் ஆட்சியில் இருந்தாலும், கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்தால், கிராமத்திலே விவசாயிகள் வாழ முடியாது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் நம் கண்ணுக்கு நேராக விவசாயிகள் அழிவதைப் பார்த்துக்கொண்டு நாம் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். இது நியாயம் தானா?

எல்லோருக்கும் நன்றாகத் தெரியும், உறுப்பினர்கள் கெடு கடந்துவிட்டார்கள். மத்திய கூட்டுறவு வங்கியும் கெடு கடந்துவிட்டது. ஆகவே மாநில கூட்டுறவு வங்கி தன்னுடைய நிலையை இழந்துவிடுகிறது. எனவே குறுகிய காலத்திலே கடன்களை வசூலிக்க வேண்டும். எப்படியாவது தன்னுடைய தகுதியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். ஆகவே கடன் பெறுகிற தகுதியை அந்த கூட்டுறவுச் சங்கங்கள் பெற வேண்டுமென்றால் அது முடிகிற காரியமா? இவ்வளவு முக்கியமான காரியத்திலே இவ்வளவு மெத்தனப் போக்கு இருக்கலாமா? இதனால் எதிர்காலம் எப்படிப்பட்ட நிலைக்குப் போகுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

கூட்டுறவுச் சங்கப் பொறுப்பிலேயிருந்து நாங்களெல்லாம் வந்துவிட்டோம். இன்றைக்கு அந்தப் பொறுப்பை ஏற்க புனிதமானவர்கள் வந்துவிட்டார்கள். நாங்களாக வரவில்லை; எங்களையெல்லாம் விரட்டிவிட்டார்கள். அதைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆகவே அதற்குமேல் நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஆனால் நான் கேட்க விரும்புவது, எங்கள் மீது வழக்குத் தொடர்வதில் எவ்வளவு அழுத்தந்திருத்தமாக வேலை செய்கிறார்களோ அதில் ஐம்பது சதவிதம் அளவுக்காவது இந்த கூட்டுறவு ஸ்தாபனங்களைக் காப்பாற்ற அக்கறை காட்டியிருக்கக் கூடாதா என்பதுதான். எங்களையெல்லாம் ஆளும் கட்சியினர் எப்படிச் சந்திக்கிறார்களோ அதே மாதிரி அவர்களை நாங்கள் சந்திக்கக் கூடிய காலம் நிச்சயமாக வரும். இப்போது அடி மட்டை அழுகிறது; குருத்து மட்டை சிரிக்கிறது. குருத்து மட்டையும் அடி மட்டையாக ஒரு நாளைக்கு ஆகத்தான் போகிறது. அந்தக் காலம் விரைவிலே வருமென்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே எங்கள் மீது எத்தனை வழக்குப் போட்டாலும், எவ்வளவு தொல்லைகளைக் கொடுத்தாலும், அத்தனையையும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். அதற்காகக் கவலைப்படவில்லை. ஆனால் எங்கள் மீது வழக்குகளைப் போட எடுத்துக் கொள்ளுகிற முயற்சியில் ஒரு ஐம்பது சதவித முயற்சியையாவது இந்த நாட்டிலே இருக்கிற கூட்டுறவுத் துறையைக் காப்பாற்றுகிற பணியில், ஏழையெளிய விவசாயிகளைக் காப்பாற்றுகிற வகையில் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்தக் கவலை மலையளவுக்கு இருக்கின்றன. அப்படிப்பட்ட கவலை இருந்திருந்தால், காலத்திலே செய்ய வேண்டுமென்ற உணர்வோடு நடவடிக்கையை எடுத்திருப்பார்கள். ரிசர்வ் வங்கி ஒத்துக்கொள்ளவில்லை, ஆகவே எங்களால் தள்ளிப்போட முடியாது என்று சொல்லமாட்டார்கள். கடன்களை ரத்து செய்யவே முடியாது என்பதைக் கொள்கையளவில்



என்னால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. வராக் கடன் நிதியென்று ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் நிதி இருக்கிறது. அந்த நிதி இருக்கிற அளவுக்கு தள்ளிக் கொடுக்க முடியாதா? இந்த நிதி போதாதுதான். ஆனால் அதையே சொல்லிக்கொண்டிருப்பது நியாயம்தானா? அதற்கு ஒரு வழியைக் கண்டு பிடிக்கவேண்டும். இன்றைக்கு அரசாங்கத்திலே என்னென்னவோ காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அரசவைக் கவிஞரை நியமிக்க வில்லையா? எந்த முன்மாதிரியைக் கொண்டு இவரை நியமித்தார்கள்? ஆட்சிக்கு வந்தார்கள், செய்ய வேண்டுமென்று விரும்பினார்கள், செய்தார்கள். அரசவைக் கவிஞருக்கு கார், அலவன்ஸ் இதற்கு முன் கொடுத்ததுண்டா? இதற்கு முன் நடன மாதுவை நியமனம் செய்ததுண்டா? இதையெல்லாம் எந்தச் சட்டத்தைப் பார்த்துச் செய்தார்கள்?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இதற்கு முன் நாமக்கல் கவிஞர் அவர்கள் அரசவைக் கவிஞராக இருந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு உறுப்பினருக்கு ரொம்ப நன்றி. நாமக்கல் கவிஞருக்கு, இப்போதுள்ளவருக்குக் கொடுத்ததைப் போல் கார், டெலிபோன், அலவன்ஸ் போன்ற வசதிகளைக் கொடுக்கவில்லையே. அரசவைக் கவிஞரை நியமிப்பதை முதலிலே செய்திருக்கிறார்கள். அரசவைக் கவிஞர் இல்லாவிட்டால், நாட்டிலே எந்தக் காரியமும் நடைபெறாதா? இதைவிட மிக முக்கியமாக உடனடியாகக் கவனிக்க வேண்டிய காரியம் விவசாயிகளுடைய பிரச்சினைகள். இதைக் குறுகிய காலத்திலே தீர்த்திருக்க வேண்டாமா? அரசவைக் கவிஞரை நியமித்தது தவறு என்று சொல்லவில்லை. அதற்குக் காட்டிய அவசரத்தை இந்தப் பிரச்சினையில் காட்டியிருக்கலாமே என்றுதான் சொல்லுகிறேன். இந்தப் பிரச்சினையை அவசரமானது என்று கருதாமல் போனதன் காரணம் என்ன?

எட்டிலே புள்ளிவிவரம் தருவது அத்தனையும் நாட்டுக்கு விரோதமாக இருக்கிறது. இங்கே உத்தரவிட்டால், அதை நிறைவேற்ற கீழே அதிகாரிகள் இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் உள்ள அதிகாரிகளில் ஒருவரைக் கூட விடவில்லை, எல்லா அதிகாரிகளின் மீதும் நடவடிக்கையை எடுக்கிறார்கள். யார் யார் இவர்களை முதலில் பாராட்டினார்களோ அவர்கள் மீதெல்லாம் கூட இன்றைக்கு நடவடிக்கையை எடுக்கிறார்கள். என்மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதற்காக நான் குறை சொல்லத் தயாராக இல்லை. எய்தவனை விட்டுவிட்டு அம்பை நோவதில் என்ன பயன்? அதிகாரிகள் எல்லாம் ஆளுபவர்களுக்குப் பயந்துகொண்டு தவறான வழக்குகளையெல்லாம்

எங்கள் மீது போடுகிறார்கள். பல சிறப்பான அதிகாரிகளைப் பெற்றிருக்கக் கூடியது கூட்டுறவுத் துறை. இப்பொறுப்பிலிருந்து இறங்கி வந்துவிட்டேன் என்பதற்காக புழுதி வாரித் தூற்ற வேண்டுமென்ற உணர்வோடு நான் சொல்லவில்லை. இந்த இலாக்கா புனிதமான இலாகா என்ற நம்பிக்கையை வைத்திருப்பவன் நான். இந்தத் துறையின் உதவியில்லாமல் தஞ்சை மாவட்டத்திலே எந்த விவசாயியும் வாழ முடியாது என்பதை, விவசாயியின் குடும்பத்தில் பிறந்தவன் என்ற முறையில் உணர்ந்து சொல்லுகிறேன். பொல்லாதவர்கள், உருப்படாதவர்கள் ஆகிய நாங்கள் பொறுப்பில் இருந்தபோது இருந்த நிலைமையைப்பற்றியும், அதற்குப் பிறகு பொறுப்பேற்றவர்களுடைய காலத்தில் உள்ள நிலையைப் பற்றியும் விவரம் சொல்லுகிறேன். நான் பொறுப்பேற்றிருந்த வங்கியைப் பற்றிய விவரங்களைச் சொல்லுகிறேன்.

1971-72 ஆம் ஆண்டில் உறுப்பினராகப் பொறுப்பேற்றேன். அன்றைய தினம் கொடுத்திருந்த மொத்தக் கணக்கு 360 இலட்சம் ரூபாய்.

(பிற்பகல் 6.20)

31—1—1976 வரை திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலே இருந்தது. அதற்குப் பிறகு 9—6—1978 வரை துணைத் தலைவர் அவர்கள் பொறுப்பிலே இருந்தார்கள். 10—6—1976 முதல் ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டு, அது அந்தத் தனி அதிகாரியினுடைய கைக்கு வந்தது. பிரிவாகப் பிரித்துச் சொன்னார்கள். ஏற்கெனவே 3.60 கோடி பயிர்க் கடனாக இருந்தது. மொத்தக் கடன் ரூ. 3,73,51,000. 1976-77 இறுதியில் பொறுப்பு முடிகின்ற தருவாயில் நெல் பயிருக்கு மட்டும் கொடுத்த கடன் ரூ. 11,50,71,000 மொத்தம் கொடுத்த கடன் 13,29,37,000 ரூபாய். இன்றையதினம் அவர்கள் கொடுத்திருக்கின்ற கணக்கில், பொறுப்புக்கு வந்த பிறகு தனி அதிகாரி வந்த பிறகு, அதிலே மேல் அதிகாரி இன்டரஸ்ட் எடுத்துக்கொண்ட வகையில் கொடுத்தது எவ்வளவு? ஏற்கெனவே எந்த அளவுக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்று குறியீடு இருக்கிறது? அதற்கென்று ஒரு குறியீடு நியமிப்பது வழக்கம். யார் பொறுப்பிலே இருந்தாலும், இந்த ஆண்டு எவ்வளவு கடன் கொடுக்கலாம் என்று நிர்ணயித்து கடன் வழங்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். அதன் பிறகு கடன் வழங்குவது தொடர்கிறது. அப்படித் தொடங்கியபோது, அந்த வருடம் அவர்கள் எதிர்பார்த்ததைவிட, ஏற்கெனவே கொடுத்ததைவிட கொஞ்சம் கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்று சில அதிகாரிகளைப் பணித்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் அப்படிப் பணிப்பது வழக்கம். அந்தத் துறையை ஊக்குவிப்பதற்கும், அந்தத் துறையை வளர்ப்பதற்கும் அப்படிப் பணிப்பார்கள். அப்படித்தான் பணிப்பது வழக்கம்.



திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் இறுதியாகப் போகின்றபோது நெல்லுக்கு மட்டும் கொடுத்தது, ரூ. 12 கோடியே 96 லட்சம். அடுத்த வருடம் கொடுத்தது ரூ. 11,50,71,000. மொத்தக் கடன் எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்று அறிவித்திருப்பது, அந்தப் பொறுப்பிலே இருந்து இறங்கியபோது அளித்த கடன் ரூ. 13,21,23,000. அதிலே 11 கோடியே 50 லட்சம் ரூபாய் குறைவாக இருக்கிறது என்ற கருத்துச் சொன்னார்கள். 9—2—1977-க்குப் பிறகு 31—3—1977 வரை இந்த நாற்பது நாளில் அந்த வங்கியில் கொடுத்திருக்கிற மொத்தக் கடன் 1½ கோடி ரூபாய். இந்த 1½ கோடி ரூபாய் கடனை நெல்லுக்குக் கொடுத்திருக்கிறதா என்றால், அதுவும் இல்லை. அது முடிந்துவிட்டது. அப்போது வங்கியில் நெல் பயிருக்குக் கடன் கொடுக்க முடியாத நிலை அவர்களுடைய சீசன் முடிந்துவிட்டது. அதற்குப் பிறகு நெல் கடன் கொடுக்க முடியாது. இதர தலைப்பில் கொடுக்கக்கூடிய நிலை இருந்தது. கரும்புக்குத்தான் கடன் கொடுக்க வேண்டுமென்று இருந்தது. அதற்கு முன்னாலே கரும்புக்குக் கொடுத்தது ரூ. 14,15,000 தான். ஆனால் அந்த 40 நாளில் கொடுத்த கடன் மட்டும் ரூ. 1½ கோடி. இது எல்லாம் உண்மையா என்று கேட்கலாம். அது கொடுத்ததுதானே. இதைச் சொன்னால் அங்கத்தினர் மணிக்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்பார்கள். நான் ஒன்றே ஒன்று சொல்கின்றேன். அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். நான் சென்ற ஆண்டு கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டுச் சொன்னேன். ஏதாவது ஒரு சங்கத்தைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாதா என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். ஒரு சங்கத்தின் பெயரைச் சொன்னேன். ஆள் பெயரையும் சொன்னேன். அது என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரியவில்லை. அதைப்பற்றியெல்லாம் எனக்கு சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆனால் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேண்டுமானால் கமிஷன் போடுங்கள். கமிஷன் போடச் சொல்லி ஆரம்பித்தது நீங்கள் தான். இதை நீங்கள்தான் ஆரம்பித்து வைத்தீர்கள். அதையே நாங்களும் இப்போது பின்பற்றுகிறோம், அவ்வளவுதான். நீங்கள் நீதிபதி என்று தனியாகப் போட வேண்டியதில்லை. கூட்டுறவுத் துறை தலைமை அதிகாரி அவர்களே ஒரு அதிகாரியைத் தேர்ந்தெடுத்து நியமிக்கலாம். அந்த அதிகாரி யாரை வேண்டுமானாலும் போட்டு விசாரித்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதும் சொல்கிறோம். அப்போது இருந்த சிறப்பு அதிகாரி திரு. மணிவண்ணன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டார்கள். 1½ கோடி ரூபாய் அந்த 40 நாட்களில் கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். அப்போது இருந்த துணைச் செயலாளர் அவர்கள் இன்சார்ஜாக இருந்தார்கள். செயலாளர் அவர்களே, விடுவிடாகச் சென்று தேடிப்

பிடித்து கடனைக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வளவு விரைவு படுத்தியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். எப்படி கடன் கொடுத்தார்கள் என்று கேட்டால், அவர் கரும்புக்கு என்று கடன் கொடுத்ததாகக் காட்டுகிறார்கள். இன்னொன்றையும் இதில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அவையிலேயே கூட நான் கேட்டிருக்கிறேன். மொத்தம் எந்தெந்தத் தேதியிலே, எந்தெந்த வருடத்திலே தஞ்சாவூரிலே 7 தாலுக்காக்களிலே கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டிருக்கிறேன். கும்பகோணம் சென்ட்ரல் பாங்கு அந்த 7 தாலுக்காக்களிலே எந்தெந்த தாலுக்காக்களில் மொத்தத்தில் ஒரு வருடத்திலே கட்டைப் பயிருக்கு, கரும்புப் பயிருக்குக் கடன் கொடுத்திருக்கிறது. சாகுபடி அங்கு எவ்வளவு செய்யப்பட்டது என்ற கேள்வியை இந்த அவையிலேயே கேட்டிருக்கிறேன். அதற்குப் பதில் சொன்னார்கள். திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம், நன்னிலம், மாயவரம், பாபநாசம், கும்பகோணம், சீர்காழி ஆகிய ஏழு தாலுக்காக்களில் கும்பகோணம் கூட்டுறவு வங்கி கடன் கொடுக்க ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்த ஏழு தாலுக்காக்களில் நஞ்சையில் போட்டிருப்பது, புஞ்சையில் போட்டிருப்பது, அந்த வருடம் என்னென்ன பயிர் போடப்பட்டது, கட்டைப் பயிர் போட்டது என்பதைப்பற்றிச் சொன்னார்கள். கட்டைப் பயிர் 11,555 ஏக்கர் 87 செண்ட் என்று சொன்னார்கள். அதாவது அந்த வருடம் கரும்பு போட்டது, 11,555 ஏக்கர் 87 செண்ட் என்று சொன்னார்கள். இதிலே முதல் பயிருக்கு ஒரு ஏக்கருக்குக் கொடுக்கப்பட்ட கடன் எவ்வளவு, இரண்டாவது பயிருக்கு, கட்டைப் பயிருக்குக் கொடுக்கப்பட்டது எவ்வளவு என்ற புள்ளிவிவரம் வைத்திருக்கிறார்கள். அதிலே குறிப்பிட்டுச் சொன்னார்கள். முதல் கரும்பு போட்டவர்களுக்கு கும்பகோணத்திலே ஒரு ஏக்கருக்குக் கொடுத்தது 300 ரூபாய். புதிய பயிர் போடாமல் கட்டைப் பயிர் பயிரிடுபவர்களுக்குக் கொடுத்தது ரூபாய் 580. தகவல் வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். முதல் பயிருக்குக் கொடுத்தது பற்றி விட்டுவிடுகிறேன். இரண்டாவது பயிருக்கு, கட்டைப் பயிருக்குக் கொடுத்ததைப் பற்றிச் சொல்கிறேன். ஒரு ஏக்கருக்கு கட்டைப் பயிருக்கு ரூபாய் 580 என்று கொடுத்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த ஒன்றரை கோடி ரூபாயில் எத்தனை ரூ. 580 இருக்கும்? 27,272,580 ரூபாய் இருக்கிறது3. ஒரு ஏக்கருக்கு ரூ. 5கு0 விதம் அவர்கள் கொடுத்திருப்பதானால், 27,272 ஏக்கருக்குக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் இந்தப் பயிர் உற்பத்திக்காக, இந்த ஏழு தாலுக்காக்களில் 11,588 ஏக்கர் நிலம் தான் இருக்கும். அதிலேயும் ஆரூரான் சுகர் பாக்டரிக்குக் கடன் கொடுத்தது, தஞ்சாவூரில் அண்ணா சுகர் பாக்டரிக்குக் கடன் கொடுத்ததுகூட இருக்கிறது. அந்தப் பயிர் உற்பத்திக்கு அருகே இருக்கின்ற கமர்சியல் பாங்கியில்கூட





கடன் வாங்காமல் பயிரிடுகின்ற நிலச்சுவான்தார்களும் இருக்கிறார்கள். இவ்வளவு பேர்களும் சேர்ந்து பயிரிட்ட கரும்புப் பயிருக்கு 11,588 ஏக்கர் நிலத்திற்கு கூட்டுறவுத் துறையிலே 40 நாட்களில் 1½ கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். உள்ளபடியே 27,272 ஏக்கருக்குக் கொடுத்திருக்க வேண்டும். கரும்புப் பயிருக்குக் கடன் கொடுத்தது 16 ஆயிரம் ஏக்கருக்கு என்றால், இது உண்மையான கணக்கா? இதைப்பற்றிய விவரம் அறிவிக்கப்படுமா? உங்கள் ஆணையாளரை அழைத்து என் போன்றவர்கள் கொடுக்கின்ற இந்த விவரங்கள் உண்மையா என்று பரிசீலிக்க வேண்டும். உண்மையாக இருந்தால் தவறு என்று ஒப்புக் கொள்ள வேண்டும். இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றம் என்ன தீர்ப்பு சொல்கின்றதோ அதை நான் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டும் அதேபோல ஒரு கொள்கையை வகுத்துக்கூட இந்தப் பிரச்சினைகளைப் பரிசீலிக்கலாம். இன்றைய பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு என்று ஒரு நிரந்தரமான திட்டத்தை வகுத்து அதை அமுலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, அதன் பிறகு முதலமைச்சர் அவர்கள் முடிவு பண்ணி, அதை ஏற்றுக்கொண்டு, அந்தக் காரியத்தைச் செய்யலாம். அப்படிச் செய்யப் புறப்பட்டால்தான் உண்மையில் காரியத்தைச் செய்ததாக ஆகும். இப்போது நாட்டிலே நடப்பது ஒன்று, ஏட்டிலே இருப்பது ஒன்று என்ற நிலைமைகள் தான் இருக்கின்றன. இதற்கு அரசு மட்டுமே முழுப்பொறுப்பு என்று நான் சொல்லவில்லை. ஏற்கெனவே இருந்ததே அந்த அளவுக்காவது செய்ய வேண்டும் என்றுதான் சொல்லுகிறோம். அப்போது அதிகாரி திரு. மணிவண்ணன் அவர்கள், உறுதுணையாக இருந்தார்கள். அதிகாரிகள் ஏனோ தானோ என்றில்லாமல், 15 நாட்களுக்குள் செய்யவேண்டும் என்று மற்ற அதிகாரிகளையும் வரவழைத்து 'டைம் லாக்' கொடுத்துச் செய்தார்கள். அந்த ஆண்டு எதைப்பற்றியும் நாங்கள் கேட்டுக்கொள்ளவில்லை.

விவசாயிகள் ஏ. சி. எல். அப்ளிகேஷன், கடன் மனு சென்ட்ரல் பாங்கியிலே போடுகிறார்கள். கடன் மனு என்று தனியாக விநியோகிக்கிறார்கள். டிராயல் அப்ளிகேஷன், கடன் விநியோக மனு என்று தனியாக இருக்கிறது. இது தனி, அது தனி, ஏ.சி.எல். மனு போட்ட பிறகுதான், டிராயல் அப்ளிகேஷன் கொடுக்கிறார்கள். முதலில் ஏ. சி. எல். அப்ளிகேஷன் கொடுக்கிறார்கள். அதிலுள்ள விவரங்கள் சரியாக இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்க்கிறார்கள். இதற்கு என்று ஒரு கமிட்டிகூட போட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டி பார்த்து கடன் அளிப்பது நியாயம் தான் என்று முடிவு செய்த பிறகு, கடன் அளிக்கலாம் என்று ஸ்டேட்மெண்ட் வந்த பிறகு, கடன் அளிப்

[திரு. கோ. சி. மணி] [1979 ஏப்ரல் 20

பதை ஒத்துக்கொண்டதன் பிறகுதான், டிராயல் அப்ளிகேஷனே வாங்குகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இரண்டு வருஷங்களாக

(பிற்பகல் 6-30)

என்ன ஆகியிருக்கிறது தெரியுமா? ஏ. சி. எல்.-கம்-டிராயல் என்ற நிலைமைகள் இருக்கின்றன. அப்படி சர்க்குலர் போட்டு, மனு கொடுத்த இரண்டாம் நாளில் கொடுத்திருக்கிறார்கள். கடன் மனுவைத் தந்த உடனே, கடனை வழங்கியிருக்கிறார்கள். எல்லாம் புக் அட்ஜஸ்ட்மெண்ட். நெல்லுக்குக் கடன் வாங்கியவர், கரும்புக்குக் கடன் வாங்கியிருக்கிறார். சென்ற வருஷம் ஒரு நிலத்திற்கு ஒருவன் கடன் வாங்கியிருக்கிறான் என்றால், இந்த ஆண்டு வாங்குகிறவன் வேறு ஒருவன். சென்ற ஆண்டு தகப்பன் வாங்கினான். அவன் கெடு தவறிவிட்டான். அதே நிலத்திற்கு, அவன் மகன் வாங்கியிருக்கிறான். மகன் கெடு தவறிவிட்டான். அதற்குப் பிறகு அந்த நிலத்திற்கு மகனின் தாயார் வாங்கியிருக்கிறார். இப்படி ஒரே சர்வே நம்பரில், மூன்று வருஷங்களில், மூன்று பேர்கள் கடன் பெற்றிருக்கிறார்கள். ஒரே ஆண்டில், ஒரே நிலத்தில் நெல்லும் பயிரிடுகிறார்கள், கரும்பும் பயிரிடுகிறார்கள். இதெல்லாம் நடக்குமா? என்ன அநியாயம்? புழுதி வாரித் தூற்றுகிறாரே மணி என்று சொல்ல வேண்டாம். இப்போது அப்படிச் சொல்ல வேண்டாம். புலன் விசாரணை நடத்தி, நான் சொல்வது தப்பென்றால், தண்டனையை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னேன். கரும்பும், நெல்லும் ஒரே வருஷத்தில் ஒரே பசலியில் ஒரே நிலத்தில் பயிரிட முடியுமா என்று கேட்பார்கள். முடியாதுதான். அதற்காகத்தான் சொல்கிறேன். பயிர்க் கடன் முடிந்ததற்குப் பிறகு கரும்புக்குக் கடன் கொடுக்கும் சீசன் வருகிறது. கரும்புக்குக் கடன் கொடுக்கும் சீசன் வரும்போது அவன் கடன் பெறும் தகுதியை இழக்கிறான். ஆனால் அவன் மகன் தகுதியோடு இருக்கிறான். ஏ. சி. எல்.-கம்-டிராயல் மனுவை எழுதிக் கொடுத்துவிட்டால் கடன் கொடுக்கிறார்கள். அதற்கு "எலிஜிபிலிடி" இருக்கிறது. ஆனால் கரும்புப் பயிர் போட்டானா என்றால் இல்லை. கரும்புப் பயிர் போட முடியுமா என்றால் போட முடியாது. ஏனென்றால் தஞ்சையிலே நெல் இருக்கிறது. அப்படி இருந்திருக்கிறது. இப்போது கூட நிரூபிக்க முடியும். எப்படி உண்மையான கணக்காக இது இருக்க முடியும்? நாங்கள்தான் பொறுப்புக்கு லாயக்கற்றவர்களாக இருந்தோம். புனிதமானவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். இதை கவனிக்கக்கூடாதா? ஆரம்பத்திலேயே சொன்னேன். அவர்கள் அதை ஈடுகட்டியிருக்கிறார்கள், சரி செய்துவிட்டார்கள் என்று. இன்னும்கூடச் சொல்கிறேன் இன்னும் ஏன் கவனிக்கவில்லை என்று சொல்லவில்லை. உங்கள் கீழ் அப்படி நடந்திருக்கிறது இதை ஏன் பார்க்கக்கூடாது, விசாரிக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.



1979 ஏப்ரல் 20] [திரு. கோ. சி. மணி]

ஆடுதுறையில் மத்திய வங்கியில் மாடல் பிரான்ச் ஒன்றை வைத்தோம். அதிலே வாடிக்கையாளர் வந்து தங்கும் அறைக்கு ஏர்-கண்டிஷன் வசதி செய்யப்பட்டது. மதுரை போன்ற ஊர்களிலே அப்படி வைத்திருக்கிறார். கும்பகோணம் சென்ட்ரல் பாங்க் எல்லைக்குள் மாடல் பிரான்ச் என்ற பெயரில் உள்ள வங்கியில் வாடிக்கைக்காரர்கள் வந்து, உட்காரும் இடத்தில் ஏ.சி. பாக்ஸ் வைத்தோம். அதைத் தப்பு என்று சொன்னார்கள். என் அறையிலே அதை வைத்துக்கொண்டதுபோல உலகத்திற்குச் சொன்னார்கள். என் வீட்டிலே வைத்துக்கொள்ளவில்லை. வங்கியில் உள்ள என் அறையிலே இருந்ததா? இல்லை. அதை வைத்த பிறகு நான் அந்த வங்கியின் எல்லைக்குள்ளேயே போகவில்லை. ஆனால் என்மீது குற்றம் சொன்னவர்கள் என்ன செய்தார்கள்? சிறையிலிருந்து நான் வெளியே வந்த 10 நாட்களுக்குப் பிறகு, என் கண்ணுக்கு எதிரேயே, அதைக் கழட்டிக்கொண்டு சென்றார்கள். இதைத் தவறு என்று சொல்லியிருக்கிறார்கள், ஏலம் போடப் போகிறார்களோ என்னவோ, தப்பு என்று சொல்வதால், அநியாயமாக இப்படிப் பண்ணியிருக்கிறார்கள் என்று சொல்லப் போகிறார்களென்று நினைத்தேன். அங்கே சிறப்பு அதிகாரியாக இருந்த திரு. மணிவண்ணன் அவர்கள் வாடகை வீட்டிலே குடியிருந்தார். அந்த வீட்டிலே அதை 25 நாட்கள் வைத்திருந்தார். நான் வைத்தது, வாடிக்கையாளர் உட்காரும் இடத்திலே. நம்முடைய ரெவின்யூ அமைச்சரவர்கள் உட்கார்ந்துகொண்டே சொல்லுகிறார்கள், பாதுகாப்பாக வைத்திருந்தார்கள் என்று. அதற்கு மின்சார இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பெட்டியை அங்கே வைத்த பிறகு, அதிகமான மின்சாரம் ஓடிய கணக்கு என்னிடம் இருக்கிறது. ஏனோதானோ என்று சொல்லவில்லை. ஆட்சியில் உள்ளவர்கள் ரொம்பவும் விவரம் தெரிந்தவர்கள் என்ற காரணத்தாலும், நான் படிக்காதவன் என்ற காரணத்தாலும், ரொம்பவும் கணக்குப் பார்த்துச் சொல்கிறேன். அதோடு நிற்கவில்லை. மற்ற அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் . . .

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** நான் எப்போதுமே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களை படிக்காதவர் என்றோ, விவரம் தெரியாதவர் என்றோ நினைக்கவில்லை.

**திரு. கோ. சி. மணி:** நான்தான் அப்படிச் சொல்லிக்கொள்கிறேன். இப்போதுள்ள அதிகாரி வந்த பிறகு என்று சொல்லவில்லை, அதை அந்த அதிகாரியே 25 நாட்கள் வைத்திருந்தார். அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதைப்பற்றிப் பேசினார்கள். அந்த வங்கியில் தலைவர் அறை இருக்கிறது. மணி அங்கே தலைவரான பிறகு கட்டிய அறையில்லை. முன்பே அந்த அறை இருக்கிறது. அந்த அறையிலே ஓட்டை போட்டு, ஏ.சி. பெட்டியை வைத்திருக்கிறார்கள். பெட்டியை எடுத்துவிடலாம்,

[திரு. கோ. சி. மணி] [1979 ஏப்ரல் 20

ஓட்டையை அடைத்துவிடலாம், ஆனால் அடைத்தது தெரியும். அந்த இரண்டு குளிர்சாதனப் பெட்டிகளும் இன்றுவரை இருக்கின்றன. அமைச்சாவர்கள்கூட அந்த அறையிலே தங்கியதாக நான் கேள்விப்பட்டேன், அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். நான் வாடிக்கையாளர்களுக்காக அதைப் பொருத்தியது தப்பு, ஆனால் வங்கியின் தனி அதிகாரி அதை அனுபவிப்பது நியாயம். அது தேவை. அதை இந்த அரசாங்கம் ஒத்துக்கொள்கிறது. இதுதான் நியாயமா? நான் பண்ணியது தப்பு என்று சொன்ன அரசு, மேலும் அந்தத் தப்பு நடக்காமல் பார்த்துக் கொண்டதா? பார்க்க முடியவில்லையா? என்ன காரணம்? நாங்கள்தான் இளிச்சவாயர்கள்; எங்கள் மீதுதான் புழுதி வாரித் தூற்ற முடியும். அதற்காகத்தான் குறிப்பிடுகிறேன், அவர் குளிரக் குளிர இருக்கட்டும். அவர் இருந்து விவசாயிகளுக்கு ஏதாவது செய்வார் என்ற நம்பிக்கையில் சொல்கிறேன். இருந்தாலும் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறுதான் பதம் என்று நினைவூட்டுகிறேன். இப்போது அந்த கடனுக்கு என்ன வழி செய்தார்கள். குடுகுடுப்பைக் காரன் தெருவில் நின்றுகொண்டு, நல்லகாலம் பிறக்கிறது, நல்லகாலம் பிறக்கிறது என்று நான்கு, ஐந்து தடவைகள் சொல்லுவான். ஒன்றும் போடவில்லை என்றால், 'அய்யோ, போகப் போகிறான்' என்று சொல்லுவான். இப்போது, "உங்களுக்கு நல்லது செய்யப் போகிறோம், சிந்தித்துக்கொண்டிருக்கிறோம், பரிசிலித்துக் கொண்டிருக்கிறோம், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்கிறார்கள். சங்கங்களின் கெடு கடக்கப் போகிறது, கூட்டுறவு மத்திய வங்கியின் கெடு கடக்கப் போகிறது. என்ன செய்யப் போகிறது அரசு? ஆரம்பத்திலேயே அனாவாரி சர்ட்டிபிகேட் வாங்கி, அவர்களுக்கு உதவி செய்திருக்கலாம். பல சிக்கல்கள் இருக்கின்றன. நான் இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். இது எப்படியிருந்தாலும், இடைத் தேர்தல்கள் வருகின்றன. நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன், உங்கள் நன்மைக்காகச் சொல்கிறேன். இந்தப் பிரச்சினை தீராவிடில், எதிர்காலத்திலே தஞ்சை மாவட்டம் நிச்சயமாக பாதிக்கப்படும். ரெவின்யூ அமைச்சாவர்களுக்குத் தெரியும். காரணம் அமைச்சராக வந்துவிட்டார்கள். அமைச்சராக வந்துவிட்டதால், செய்ய முடியாத தோஷம்தான் இப்படிப் பேசுகிறார்கள் என்று தெரிகிறது. எத்தனையோ செய்கிறார்கள். இதற்காக பட்ஜெட்டில் சிறப்பு நிதி ஒன்றை 'ப்ரோவைட்' பண்ணியிருக்கலாம். எதையாவது குறைத்திருக்கலாம். அப்படிச் செய்வார்கள் என்று எதிர்பார்த்தோம். செய்யவில்லை. இனிமேலாவது காலம் தாழ்த்தாமல், கூட்டுறவுக் கடனைப் பொறுத்தவரையில், ஏதாவது வழி செய்வார்களென்ற நம்பிக்கையில், அதைச் செய்தால்தான் விவசாயிகளைக் காப்பாற்ற முடியுமென்று சொல்லி, அமைகிறேன். வணக்கம்.



1979 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர்களே, கூட்டுறவுக் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது ஏறத்தாழ 7, 8 உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளை மிகத் தெளிவாகவும், பொறுப்புணர்ச்சியோடும், ஆக்கபூர்வமாகவும் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன அனைத்துக் கருத்துக்களையும் மனதிலே கொண்டு, கூட்டுறவுத் துறை மேலும் சிறப்புப்பெறவும், கூட்டுறவுத் துறையினுடைய வாயிலாக நலிந்த மக்களுடைய வாழ்வு மலருவதற்கான எல்லா வகையான வழிகளையும் எடுப்பதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-40)

குறிப்பாக. இறுதியில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் பேசுகின்றபோது மிகத் தெளிவாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தில் நூற்றுக்கு நூறு நானும் ஒன்றியிருக்கிறேன். நம்முடைய விவசாயம், விவசாயத் துறை, நிலையாக இருக்க வேண்டுமென்றால், வளர்ச்சி சீராக இருக்க வேண்டுமென்றால், கிராம கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு, அதற்கு மேலே இருக்கின்ற அமைப்புகள் எல்லாம் ஒரு கட்டுக்கோப்பாக இருக்க வேண்டுமென்பதில் யாருக்கும் இரண்டு வித கருத்துக்கள் இருக்க முடியாது. அவர்கள் பேச்சின் தொடக்கத்தில் "கொள்கை விளக்க அறிக்கையில் பேசுவது என்பதை விட, இன்றைக்கு நடைமுறையில் இருக்கின்ற சில சிக்கல்களைப் பற்றியும், கூட்டுறவுத் துறையினுடைய அமைப்பிலே இருக்கின்ற கோளாறுகள் பற்றியும், முறைகேடுகள் பற்றியும் மட்டும் மாமன்றத்திலே கருத்துக்களை வைக்கிறேன்" என்று சொன்னார்கள்.

முதல் முதலாக விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பல்வேறு நல்ல விளக்கங்களையெல்லாம் அளித்துப் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக அவர்கள் பேசுகின்றபோது, கூட்டுறவுத் துறையில் இன்றையதினம் தனி அதிகாரிகள் இருக்கிறார்கள் என்றும், அதனை என் நீட்டிக்கிறீர்கள் என்றும், உடனடியாக முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்றும் மிகுந்த பரிவோடும், மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும் எடுத்துக்காட்டினார்கள். மாற்றுத் தலைவர் அவர்கள் மூலமாக அவர்களுக்கு ஒரு விவரத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தனி அதிகாரிகள் நியமனம் என்பதும், அதனைத் தொடர்வது என்பதும் எதிர்க் கட்சியில் இருப்பவர்களைப் போலவே இந்த அரசுக்கும் உடன்பாடாத ஒரு நிலை என்றாலும் கூட, தவிர்க்க வேண்டிய சில சிறிய தீமைகளை பெரிய நன்மைகளுக்காக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்ற

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1979 ஏப்ரல் 20

கட்டாயத்தின் பேரில் அவைகளை இன்று அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகிற போது கூட, ஒரு கருத்தைச் சொன்னார்கள். "அன்றைக்கு பொறுப்பிலே இருந்த எங்கள் மீது சில நடவடிக்கைகளை இந்த அரசு, பொறுப்பிலே இன்றைக்கு இருக்கின்ற காரணத்தினால் எடுத்திருக்கிறது" என்று சொன்னார்கள். அதே போல அன்றைக்கு அதிகாரிகளாக இருந்தார்களே, அவர்களும் அன்றைய தினம் அந்தச் செயலுக்கு உடந்தையாகத் தானே இருந்திருப்பார்கள், அவர்கள் மீதும் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றும் அவர்கள் இங்கே கேட்டிருக்கிறார்கள். அது போல் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும், குறிப்பாக தொடர்ந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் 1976 ஆம் ஆண்டு ஜனாதிபதியினுடைய ஆட்சிக் காலத்தின் போது, 'பாரதி குழு' அமைக்கப்பட்டதைப் பற்றிச் சொல்லி அந்தக் குழு ஒரு அய்.ஏ.எஸ். அதிகாரியின் தலைமையின் கீழ் இருந்தது என்கிற விவரத்தையும், அவர்கள் அப்படிப்பட்ட நிறுவனங்களுக்குச் சென்று ஆதாரங்களைத் தேடி இன்றையதினம் அறிக்கையை அரசுக்குக் கொடுத்திருப்பதையும், அதன் அடிப்படையில் வழக்கு தொடர்ந்திருப்பதையும் சொல்லி, அந்த அறிக்கையை மன்றத்தில் ஏன் வைக்கக் கூடாது என்கிற ஒரு நியாயமான கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அனைத்து உறுப்பினர்களும் வேறுபாடு இல்லாமல் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை மிகப் பணிவன்போடு சொல்வேன். 'பாரதி குழு' அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்கள் கருதுவது போல் இந்த மன்றத்திலே வைத்து விவாதிக்கின்ற அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கை அல்ல என்று நான் கருதுகிறேன். அந்த அறிக்கையை அரசுத் தரப்பிற்கு சில விவரங்களைக் கொடுக்கிற அறிக்கையாகத் தான் கருதியிருக்கிறோமே தவிர, அவையில் வைத்து முடிவு எடுக்க வேண்டிய அறிக்கையாக அதை இந்த அரசு கருதவில்லை. இன்னும் சொல்லப் போனால், 'பாரதி குழு'வால் பரிந்துரை செய்துள்ள அனைத்து விஷயங்கள் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறோமா என்றால், அது தான் இல்லை. சட்டத் துறை ஆய்வு செய்து, கூட்டுறவுத் துறை ஆய்வு செய்து, அரசு வழக்குரைஞர் ஆய்வு செய்து, அதன் பிறகு தான், 'பாரதி குழு'வினுடைய பரிந்துரைகளிலே நியாயம் இருக்கிறதா, குழுவினுடைய பரிந்துரைகளில் ஏதாவது பின்னணி பொருள், அடிப்படை இருக்கிறதா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்த பிறகு தான், நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. நாங்கள் அறிக்கையை அவையில் வைத்தால், ஆளும் கட்சிக்கு ஆபத்து வந்து விடும், ஆகையால் தான் அறிக்கையை வைக்கவில்லை என்று மாண்புமிகு



1979 ஏப்ரல் 20] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

உறுப்பினர் குறிப்பிட்டார். இந்த அரசைப் பொறுத்தவரை, அதுமாதிரி எந்தவித பயமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் குழு பல விஷயங்களைப் பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால் சொன்ன அனைத்தையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. 18 வகையிலே 10 கோடி ரூபாய்க்கு மேலாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன என்று அந்தக் குழு சொல்லியிருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாற்றுத் தலைவரவர்களே, இவ்வளவுக்கும் எனக்கு 'பாரதி' குழுவைப் பற்றித் தெரியாது. மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து ஒரு விவரத்தை அறிய விரும்புகிறேன். முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் பற்றி இந்தக் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : என்னை விட மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்களுக்கு இதைப்பற்றி நன்றாகத் தெரியும். சர்க்காரியா கமிஷன் முன்பிருந்த குற்றச்சாட்டுகளிலே அது ஒரு குற்றச்சாட்டாக, அதாவது இறவைப் பாசனம் சம்பந்தமாக அவர் மீது வந்த குற்றச்சாட்டைப் பற்றி மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். சர்க்காரியா கமிஷனில் அது ஆராயப்பட்ட பிறகு அதைப்பற்றி இன்றைக்கு மிகத் தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாரதி கமிஷன் பல விவரங்களைச் சொல்லியிருக்கிறது. சொன்ன அனைத்து விவரங்களின் மீதும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. 10 கோடிக்கு மேற்பட்ட முறைகேடுகள் நடைபெற்றன என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி : 10 கோடிக்கு மேற்பட்ட முறைகேடுகளா? இல்லை, 10 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட முறைகேடுகளா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : 10 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு தலைப்பின் மீதும் நன்றாக ஆராய்ந்து எது சரி என்று பார்த்ததன் அடிப்படையில், இதுவரை ஏறத்தாழ 252 சார்ச்சார்ஜ் வழக்குகளை அரசு தொடர்ந்திருக்கிறது. சர்சார்ஜ் வழக்குகள் மொத்தம் 252 தான். அதிலே இன்றையதினம் 202 நடைமுறைக்கு வந்திருக்கின்றன. அந்த 202 வழக்குகளில் பல மாண்புமிகு உறுப்பினர்களும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொன்னது போல் அவர்கள் எல்லாம் வருகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் டிரிபியூனலுக்கு அப்பீல் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் மணி, ஆறுமுகம் எல்லாம் அந்தக் காலத்திலே தலைவர்களாக இருந்ததால், அவர்களுடைய பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டு வருகிற காரணத்தினால், அவர்கள் மீது சர்சார்ஜ் புரசிடிங்ஸ் தொடரப்பட்டது. இதன்பேரில் இன்றையதினம் அவர்கள் மதுரை நடுவண் நீதிமன்றத்திற்கு முறையீடு செய்திருக்கிறார்கள். 202 பேரைப் பொறுத்தவரை தான் இப்படிப்பட்ட பிரச்சினை. கிரிமினல் வழக்குகளைப் பொறுத்தவரை, 57 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. கிரிமினல் வழக்கு என்கிற முறையில் போடப்பட்ட அந்த வழக்குகளில் சில இன்றைக்கு ஆய்விலே இருக்கின்றன. சில வழக்குகள் முடிவடைந்திருக்கின்றன. அந்த வகையில் கிரிமினல் வழக்குகள் என்று இருப்பவை மொத்தம் 57. சர்சார்ஜ் புரசிடிங்ஸ் என்ற வகையில் இருப்பவை 252. ஆக, இந்த அரசு கொஞ்சம் கூட அவசரப்படாமல் நன்றாக ஆய்ந்து பார்த்துத்தான் நடவடிக்கை எடுக்க முன் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

**திரு. கோ. சி. மணி:** அறிக்கைபற்றிச் சொல்ல வேண்டுமென்று கேட்டது உண்மை. குழுவினுடைய அறிக்கையைப் பற்றிச் சொல்லாமல் வழக்குத் தொடர்ந்த விவரத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த விவரம் பத்திரிகைகளில் கூட வந்திருக்கிறது. அது எங்களுக்குத் தெரியும். குழுவால் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் யார் யார் அதில் சம்பந்தப்பட்டவர்கள் என்கிற விவரத்தைக் கொடுத்திருப்பார்கள், அந்த விவரத்தை அவையிலே வைக்காமலிருப்பதற்குக் காரணம் ஆளும் கட்சியினருக்கு வேண்டியவர்களின் பெயர்களை அதிலிருந்து நீக்கிவிட்டு எங்களைப் போன்ற எதிர்க் கட்சியிலிருப்பவர்களின் பெயர்களை மட்டும் அதில் வைத்திருக்கின்ற உண்மை தெரிந்துவிடும் என்கிற பயத்தின் காரணத்தால்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது உண்மைதானா ?

(பிற்பகல் 6-50)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இதிலே முழுமையாக நான் மறுதலிக்கக் காரணம், யார் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிந்தால், நிச்சயமாக சாட்சிகளைக் கலைக்கக்கூடும். சாட்சிகளைக் கலைப்பதிலே வல்லவர்கள், கெட்டிக்காரர்கள், பயிற்சி பெற்றவர்கள். அந்தக் காரணத்தினாலே, நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அது வெளியிடப்படவில்லை. ஆனால், உங்களுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படி முறையீடு செய்து





நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்களோ, அதுபோல செல்ல வாய்ப்பு இருக்கிறது. அங்கே மிகத் தெளிவாக, அறைகூவல் விட்டுக் கூட, 'எங்கள் கதை முடிந்துவிட்டது' என்று சொன்னார்கள். வழக்குக் கூட போடப்படும் என்று சொன்னார்கள். இன்றைக்கு இதைப்பற்றியெல்லாம் பேசக் கூடாது என்றுதான் கருதிக்கொண்டிருந்தேன். ஆனால் பேசாமல் இருக்க முடியவில்லை. ஆறாண்டு காலம் நாங்கள் சந்தித்த வழக்குகள் எத்தனை ? ஆடுதுறையிலே என் மீது வழக்குப் போடவில்லையா ? மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களுடைய தொகுதிக்கு நான் வருகின்ற நேரத்தில், என்னைத் தாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லையா ? இவைகளையெல்லாம், இந்த வரலாறுகளையெல்லாம் மறந்துவிடுவோம் என்று கருதுகிறீர்களா ? ஆறாண்டு காலத்தில் நீங்கள் செய்யாததா ? வழக்குகளைச் சந்திக்கிறோம் என்று சொன்னீர்கள். . .

**திரு. கோ. சி. மணி:** தலைவர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீது என்ன மாதிரியான வழக்கு, எந்த வழக்கு மன்றத்தில் போட்டேன், எந்த ஆண்டு போட்டேன், அந்த வழக்கின் நம்பர் என்ன என்பதெல்லாம் சொல்ல வேண்டாமா ? அவைகளைச் சொல்லாமல் . . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** ஆடுதுறையிலே நடைபெற்ற ஒரு சம்பவத்தைத் தென்னகம் பத்திரிகையில் வெளியிட்டதன் காரணமாக, 'இப்படி நீங்கள் செய்திகளை வெளியிட்டால், வழக்குமன்றத்திற்குச் செல்வீர்கள்' என்று அன்றையதினம் வழக்கறிஞர் மூலமாக நோட்டீஸ் வந்தது. நான் வழக்கு மன்றத்திற்குச் செல்லத் தயாராக இருந்த நேரத்தில் . . . . இதற்கு மேல் சொல்ல முடியவில்லை, அவர்களுடைய வாடிக்கை அது. மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்கு வாய்ப்புக் கொடுத்தால் நான் தெளிவாக விவரங்களைச் சொல்கிறேன். நான் தென்னகம் ஆசிரியராக இருந்ததால், என்மீது வழக்கு போடப்படும் என்று நோட்டீஸ் கொடுத்தார்கள் . . .

**திரு. கோ. சி. மணி:** நோட்டீஸ் கொடுத்தால் அது வழக்கு ஆகுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** அப்படிச் செய்தால் பயந்து விடுவார்கள் என்று நினைப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மரபு.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, விவாதம் வேறு எங்கோ போகிறது. அமைச்சர் அவர்கள் தருகின்ற தகவலிலே வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், உண்மையிலேயே வழக்கு போடப்பட்டிருக்க வேண்டும். வழக்கு போடாமல், முதலில் நோட்டீஸ் கொடுத்து, அதற்கு பதிலளித்து அந்தப் பதிலில் திருப்தியடையாமல் போனால் தான் வழக்கு போடும் நிலைமை இருக்கிறது. நோட்டீஸ் கொடுத்த பிறகு வழக்குத் தொடரவில்லை. நோட்டீஸ் கொடுத்த பிறகு வழக்குபோடவில்லையானால், அது வழக்கு ஆகாது.

அடுத்து, பாரதி கமிஷனுடைய அறிக்கையை இந்த அவையில் வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை, அது ஒரு கமிஷன் அல்ல என்று கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், 'பாரதி குழு' என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. அதில் பல குற்றச்சாட்டுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா அமைச்சர்களும் இந்த அவையிலேயும், பிற இடங்களிலேயும் கூட 'பாரதி கமிஷன்' குற்றச்சாட்டுகளைக் கொடுத்திருக்கின்றது என்றும், முன்னாள் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறது என்றும் அறிவிக்கின்றார்கள். ஆகவே இப்படியெல்லாம் அறிவித்த பிறகு, அந்தக் கமிஷனுடைய அறிக்கையை இந்த அவையும் தெரிந்துகொள்ளும் விதத்தில், இந்த அவையில் வைப்பது நியாயமான ஒன்று. அரசாங்கம் தெரிந்து கொள்ளும் அளவுக்கு அதிகாரிகளைப் போட்டு ஒரு விசாரணை அமைப்பதால், அதை பிரச்சாரம் செய்ய வேண்டியதில்லை. ஒரு கமிஷன் என்று சொல்லும் போது, அது பொதுத் தன்மை பெறுகிறது. ஒரு கமிஷன் விசாரித்தது என்று சொல்வதற்கும், அதிகாரிகளை வைத்து விசாரணை நடத்தப்பட்டது என்று சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒரு கமிஷன் மூலம் விசாரிக்கப் பட்டு அறிக்கை வந்தது, அதிலே பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன, முன்னாள் ஆட்சியாளர்கள் அந்தக் குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று தகவல் வரும்போது, அந்த அறிக்கை என்ன என்பதுபற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது நீதியின் அடிப்படையிலான ஒன்று, கமிஷன் அல்ல, ஒரு தகவலுக்காக நடத்தப்பட்ட விசாரணை என்ற அடிப்படையில் ஃபேக்ட் இன்வெஸ்ட்டிகேஷன் ரிப்போர்ட் ஆக ஒரு அதிகாரி மட்டத்தில் நடத்தப்படவில்லை. நான் தெளிவாக நிரூபிக்க முடியும், பல இடங்களில் இம்மாதிரி கமிஷன் போட்டு, அந்த கமிஷன்கள் பல அறிக்கைகளையும், புள்ளி விவரங்களையும் தருகிறது. அதை வெளியிடும்போது பலவிதமான சிக்கல்கள்





ஏற்படுகின்றன. ஆகவே, அப்படிக் கருதாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த அறிக்கையில் யார் யார் குற்றவாளிகள் என்று சொல்லப் பட்டிருக்கிறதோ அவர்கள் மீது வழக்குகள் போட்டுவிட்டு, அந்த அறிக்கையை இந்த அவையில் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : சங்கடமான ஒரு பிரச்சினை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களுடைய தொகுதிக்கு வந்தபோது அவரைத் தாக்க முயற்சி எடுக்கப்பட்டது, ஆடுதுறையிலே போடப்பட்டது, அவைகளையெல்லாம் மறந்துவிடுவோம் என்று கருதுகிறீர்களா" என்று கேட்டார்கள். அதிலிருந்து எனக்கு ஒரு தெளிவான விளக்கம் கிடைத்தது. "நீங்கள் எங்கள் மீது வழக்குகள் போட்டீர்கள், ஆதலால் நாங்களும் வழக்குகள் போடுகிறோம்" என்ற ஒரு விளக்கம் கிடைத்தது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'நான் வழக்கையெல்லாம் சந்தித்துவிட்டு வந்தவன்தான்' என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், அவர்களுக்கு எவ்வளவு மனத் திடம், தெளிவு, பற்று, தியாக உணர்ச்சி இருக்கிறதோ அப்படி நியாயத்திற்காக எந்தவிதமான கஷ்டங்களையும் ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம் என்ற பொருளிலே தான் நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பாணியை நாங்கள் பின்பற்றினால், எங்களுக்கு நிச்சயமாக இடப்பெயர்ச்சி வரும். அப்படி இடப்பெயர்ச்சி வரும் என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதாரணமாக இருக்கிறார்கள். இந்தக் கருத்துக்களை மிகத் தெளிவாக மனதில் வைத்துக்கொண்டு, மிகுந்த பொறுப் புணர்ச்சியோடு, புரட்சித் தலைவர் அவர்களின் அன்புத் தம்பிமார்களாகிய நாங்கள் கடமையைச் செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொய் வழக்குகள் அல்ல. உண்மையில் தவறுகள் நடந்திருக்கின்றன. அவைகளுக்காகத்தான் வழக்குகள் போடப்படுகின்றன. நாங்கள் ஒரு புனிதப் போராட்டத்தை அக்டோபர் 10, 1972-லே ஆரம்பித்து இந்த இடப்பெயர்ச்சி ஏற்படும்வரையில்—ஜனவரி 31, 1976 வரையில் என்னென்ன கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தோம்? தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை எண்ணிப்பார்க்க வேண்டும். எங்கள் மீது உண்மைக்கு மாறான வழக்குகள் போடவில்லையா? என் மீது எத்தனை

வழக்குகள், உண்மைக்கு மாறான வழக்குகள் போடப்பட்டன? மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் தொகுதிக்கு வந்தபோது என்னையும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும் தாக்குவதற்கு முயற்சிகள் செய்ய வில்லையா? இந்த விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விவரமாகச் சொல்ல முனைந்தேனே தவிர, உண்மைக்கு மாறான வழக்கு களிலே எங்களுக்கு நம்பிக்கை இல்லை. "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்ற தமிழ் மொழிக்கிணங்க, அறிஞர் அண்ணா அவர்கள் கற்றுத் தந்த அரசியல் பாரம்பரியத்திற்கேற்ப நாங்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சிலே இவைகளை நினைவுபடுத்தியதற்காகத் தான் இவைகளைச் சொன்னேன். நல்லபல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் தெளிவாக, அழகாக நல்ல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் பல ஆண்டுக் காலமாக கும்பகோணம் மத்திய வங்கியில் தலைவராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் பாராட்டத் தக்க கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவைகள் பற்றிய குறிப்பை வைத்திருக்கிறேன். ஆனால் ஒரு கருத்தில் நான் மாறுபடுகிறேன், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, "காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இருந்த திட்டங்களைத்தான் நிறைவேற்றினார்கள், புதிதாக திட்டம் வகுக்கவில்லை" என்று சொல்லப்பட்டது, அதுபோல வெள்ளைக்காரன் போட்ட ரயிலிலே தான் காங்கிரஸ்காரர்கள் ஏறினார்கள் என்றும் சொல்லப் பட்டது . . . . .

**திரு. சோ. ஆறுமுகம்:** அமைச்சர் அவர்கள் ஏதோ என்னுடைய வீரபாண்டித் தொகுதிக்கு வந்தபோது அவர் மீது தாக்குதல் நடத்த முயற்சி செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன், அவர்கள் சேலம் இரண்டாவது தொகுதிக்கு கட்சிப் பிரச்சாரத்திற்காக வந்தார்கள், அப்போது அங்கு கலவரங்கள் மூண்டது உண்மை. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கழகத் தோழர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். அந்தத் தொகுதி இப்போது மாநில அரசின் தனிப் பிரதிநிதியாக மத்திய அரசுக்கு நியமிக்கப்பட்டிருப்பவரின் தொகுதி என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.





**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** அவையின் அலுவல்கள் முடியும்வரை நேரம் நீட்டிக்கப்படுகிறது. அதோடு, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு மீது விவாதம் நடக்கவிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கள் ஒத்துழைத்தால்தான், அதை முடிக்க முடியும். ஆகவே, தயவு செய்து அங்கத்தினர்கள் அத்தனை பேரும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

(பிற்பகல் 7-00)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு உறுப்பினர், எனது அன்புச் சகோதரர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசும்போது, கிராமத்திற்கு ஒரு அங்காடி என்ற பிரச்சினையில் ஒரு விவரத்தைச் சொன்னார்கள். இந்தத் திட்டம் சரியானதுதான். ஆனால் அருப்புக் கோட்டைத் தொகுதியில் ஆவியூர் போன்ற பகுதிகளில் திறந்து வைக்கப்பட்ட கடைகளில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான பொருள்கள் கிடைப்பதில்லை, அவைகளையும் தர வேண்டுமென்று சொன்னார்கள். அதை கவனத்தில் வைத்துக்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள் வேன் என்ற உறுதியைச் சொல்லிக் கொள்கிறேன்.

அவர் பேசும்போது 'கிராமத்திற்கு ஒரு அங்காடித் திட்டம்' என்பது அந்தப் பகுதியில் தொய்வுற்று இருக்கிறது, சோர்வுற்று இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இதன் தொடர்பாக அவருக்கு ஒரு விவரத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1979-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை 330 லட்சம் ரூபாய் அளவிற்கு அப்படிப்பட்ட கடைகளில் வியாபாரம் நடை பெற்றிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற குறைபாடுகளை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றாலும், இது முதலாண்டாக இருப்பதால், பொருள் கள் அந்த அங்காடிகளுக்குச் சரியாகப் போய்ச் சேருவதில்லை, அங்காடி களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளில்லை, அதைப் போலவே அவை களுக்குத் தேவையான நிதி வசதியில்லை, அங்கே விற்பனையாளர்களாகப் பணியாற்றுகிற நபர்களுக்குப் போதிய பயிற்சியில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், தனியார் இத்தகைய முயற்சியைச் சீர்குலைக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு, எப்படி யாவது இந்த அங்காடிகளுக்கு அவப் பெயர் கொண்டு வர வேண்டுமென்ற எண்ணத்தோடு, தங்களின் பொருள்களை வேண்டுமென்றே மலிவான விலைக்குக் கொடுக்கிறார்கள், கடனாகக் கொடுக்கிறார்கள், இன்றைக்கே பணம் கொடுக்க வேண்டுமென்றில்லை, நாளைக்கு வேண்டுமானாலும்

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1979 ஏப்ரல் 20

கோடுங்கள் என்று வாடிக்கைதார்களைப் பிடிக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில்தான் இந்த அங்காடிகள் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

நேற்றையதினமும் இன்றையதினமும், உதகமண்டலத்தில் ஒரு மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

"First All India Conference on Distribution of Consumer Articles to Rural Areas through Co-operatives by National Co-operative Development Corporation."

மத்திய அரசின் நிறுவனமான தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் என்ற அமைப்பு அகில இந்திய மாநாட்டை உதகமண்டலத்தில் நடத்திக் கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களில் எப்படி கூட்டுறவுத் துறையின் வாயிலாக அத்தியாவசியப் பொருள்களை மக்களுக்கு விநியோகிப்பது என்று அந்த மாநாடு விவாதித்துக் கொண்டிருக்கிறது. அந்த அகில இந்திய மாநாட்டைத் திறந்து வைக்கிற நல்ல வாய்ப்பு, தமிழ் நாட்டின் கூட்டுறவுத் துறை அமைச்சர் என்ற முறையில் உங்கள் அன்புச் சகோதரனான எனக்குக் கிடைத்தது. நான் அந்த மாநாட்டை நேற்று காலை 11 மணிக்குத் திறந்து வைத்தேன். அதனுடைய மேனேஜிங் டைரக்டராக விளங்குபவர் திரு. வி. எல். மாத்தூர். அவர் தம்முடைய வரவேற்பு உரையில் ஒன்றைக் குறிப்பிட்டார். அகில இந்தியாவிலும் இக் கிராம நுகர்வோர் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று 1976 ஆம் ஆண்டு முதல் முனைந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறவர் அவர். 1979ஆம் ஆண்டு ஜுலை முதல் தேதியிலிருந்து அகில இந்தியாவிலும் எல்லாக் கிராமங்களிலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. மோகன் தாரியா போன்றவர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் கூடியிருந்த அந்த மாநாட்டில், பல்வேறு மாநிலங்களிலிருந்து கூட்டுறவு இயக்கத்தோடு தொடர்பு கொண்டவர்கள் கூடியிருந்த அந்த மாநாட்டில், கண்ணியம் மிக்க அந்தச் சபையில் திரு. மாத்தூர் அவர்கள் ஒரு விவரத்தைச் சொன்னார்கள்.

"The States of Tamil Nadu, Punjab and Rajasthan have welcomed the suggestion and drawn up District-wise programme to cover the entire State."

மத்திய அரசு ஒரு ஆணையிட்டிருந்தது. அனைத்து மாநிலங்களும் மிக விரைவில் கிராமங்கள்தோறும் அத்தியாவசியப் பொருள்களை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று 1976 ஆம் ஆண்டிலேயே மத்திய அரசு



1979 ஏப்ரல் 20] [திரு கே. ஏ. கிருஷ்ணசாமி]

ஆணையிட்டிருந்தது. எல்லா மாநிலங்களும் அந்தத் திட்டத்தைச் சரிவர நிறைவேற்றினார்களா என்றால், அது விவாதத்திற்குரிய பிரச்சினையாக மாறி விடும். நேற்றைய தினம் அந்த மாநாட்டில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கூட்டுறவுத் துறை ரிஜிஸ்ட்ரார்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் பொதுவாக நாகாலாந்து, திரிபுரா, பஞ்சாப் போன்ற பகுதிகளிலிருந்து வந்தவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

"Tamil Nadu has gone one step ahead. Their progress includes setting up of one village—one shop. It is hoped that the other States will follow suit in due course."

தமிழ் நாடு இன்றைய தினம் முன்னணி மாநிலமாக நின்று கிராமத்திற்கு ஒரு அங்காடி என்ற திட்டத்தை நிறைவேற்றுகிறது. தமிழ் நாட்டின் பாதையைப் பின்பற்றி மற்ற மாநிலங்களும் அத்தகைய அங்காடிகளை அமைக்க முயற்சி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் என்றால், இத்திட்டம் அவர்களை அந்த அளவுக்கு கவர்ந்திருக்கிறது என்றுதானே பொருள். அந்த மாநாட்டை முடித்துக்கொண்டு 10 நாட்களுக்கு மதுரை, முகவை மாவட்டங்களில் உள்ள கடைகளைப் பார்வையிட இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறத்திற்கு ஒரு அங்காடி என்கிற திட்டம் ஏதோ பொருள்களைக் கொடுப்பதற்காக மட்டும் அமைக்கப்பட்டதல்ல என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கே தெரியும். கிராமங்களுக்கும் நகரங்களுக்குமிடையே தற்போது மிகப் பெரிய வேறுபாடு, மிகப் பெரிய இடைவெளி, மிகப் பெரிய பள்ளம் இருக்கிறது. இந்த இடைவெளியை நிரப்பாத வரையில் நிச்சயமாக தற்போது இருக்கும் ஏற்றத் தாழ்வை நம்மாலே போக்க முடியாது, பொருளாதாரத்தில் ஒரு சமநிலையை உருவாக்க முடியாது. கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையே இருக்கும் பொருளாதார இம்பாலன்ஸ் என்று சொல்லப்படும் ஏற்றத் தாழ்வை அகற்றும்பொருட்டுத்தான் இத்தகைய முயற்சிகளை அரசு மேற்கொள்கிறது. ஆவியூரில் ஒரு அங்காடி திறக்கப்பட்டபோது, அங்கேயிருந்த ஒரு தாய் என்னிடத்தில் சொன்னார்கள். நேற்றுவரை ஒரு சோப்பு வாங்க வேண்டுமென்றால், சாதாரண சன்லைட் சோப்பு வாங்கவேண்டுமென்றால்கூட, இந்த கிராமத்திலிருந்து 6 மைல் தள்ளியிருக்கிற காரியாப்பட்டிக்குப் போக வேண்டும் என்ற நிலைமை இருந்தது. இந்த அங்காடியை இங்கே திறந்த பிறகு 6 மைல் சென்று சோப்பு வாங்கும் நிலைமை நீங்கியது; புரட்சித் தலைவரின் ஆட்சி வந்த பிறகு, இங்கேயே என்னால் வாங்கிக்கொள்ள முடிகிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த அளவுக்கு கிராமங்களில்

இன்றையதினம் வசதியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். அங்காடிகளில் தேவையான பொருட்கள் கிடைப்பதில் தற்போது நடைமுறைச் சிக்கல்கள் இருக்கலாம். ஆனாலும் இன்றையதினம் கிராம மக்களுக்கு வசதிகள்—இதுவரை இல்லாத புதிய வசதிகள்—செய்து தரப்படுகின்றன நிலைமைகள் சீரடைவதற்கு மத்திய அரசு அதிக அளவுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும். லாரிகள் வாங்க பணம் கொடுக்க வேண்டும். இன்றையதினம் கொடுக்கிற மான்யத்தைவிட அதிக அளவு மான்யம் கொடுக்க மத்திய அரசு முன்வர வேண்டும். மத்திய விற்பனைச் சங்கங்களுக்கு நிறைய நிதியாதாரம் தர வேண்டும். நிறைய பயிற்சி பெற்றவர்கள், இந்தத் துறையில் பக்குவம் பெற்றவர்கள் வேண்டும். இதற்கெல்லாம் மத்திய அரசின் உதவி தேவை என்று மாநாட்டில் வந்திருந்த உயர்ந்த அதிகாரிகளிடம் தமிழ் நாட்டு அரசின் உணர்வுகளை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

கிராமத்திற்கு ஒரு அங்காடி என்ற திட்டத்தை வெறும் பொருளாதார வளர்ச்சியடிப்படையில் மட்டும் நான் கொண்டுவந்துவிடவில்லை. நாமெல்லாம் கிராமங்களிலிருந்து வந்தவர்கள். நமக்குத் தெரியும் கிராமங்களில் இருக்கும் நிலைமை என்ன என்று. எந்தக் காலத்திலே கிராமங்களில் உள்ள கடைகளில் சாமான்களின் விலைப் பட்டியல் போட்டு விற்றிருக்கிறார்கள்? புளி விலை இவ்வளவு, அரிசி விலை இவ்வளவு, மிளகாய் விலை இவ்வளவு என்று பட்டியல் போட்டு இன்றையதினம் விற்கிறார்கள். இதுவரையில் கிராமங்களில் தனியார் கடைகளில் இதைச் செய்யவில்லை. இன்றையதினம் அதற்கு அவசியம் ஏற்பட்டுவிட்டது. சில குறைபாடுகளைச் சொல்லலாம். தனியார் கடைகளைவிட கூட்டுறவு அங்காடிகளில் விலை, சில பொருள்களைப் பொறுத்தவரையில், அதிகமாக இருக்கிறது என்று சொல்லலாம். அதில் ஒன்றை நாம் உணர வேண்டும். தனியார் கடைகளைப் பொறுத்தவரை, அவர்கள் இஷ்டப்படி பொருள்களின் விலையைக் குறைத்து விற்க முடியும். ஆனால் கூட்டுறவுத் துறையில் எல்லாப் பொருள்களின் விலையையும் நாம் நிர்ணயித்துவிடுகிறோம். அதன்படிதான் அங்கே பணியாற்றுகிற விற்பனையாளர்கள் விற்க வேண்டும். அதன் காரணமாக தனியார் கடையில் சில பொருள்கள் விலை குறைவாக விற்கப்படும்போது, கூட்டுறவுக் கடைகளில் அதிகமான விலையில் விற்கக்கூடும் என்றாலும் நான் புதிய அமைப்புகளை இன்றையதினம் தோற்றுவித்திருக்கிறோம். அவற்றின் மூலம் ஏழை எளிய மக்கள் பலன் பெறத் தொடங்கியிருக்கிறார்கள். ஓராண்டுக் காலத்தில் 11,000 கடைகளைத் திறந்திருக்கிறோம். 22 மாத காலத்தில் இந்தப் பணியைச் செய்திருக்கிறோம். எதிர்க் கட்சித் தரப்பிலிருந்து ஒரு கருத்துச்





சொல்லப்பட்டது. ஏற்கெனவே இருந்த கிராமச் சங்கங்களைத்தானே இன்றைக்குப் புதிய பெயரில் அழைக்கிறீர்கள என்று சொல்லப்பட்டது. நான் மறுக்கவில்லை. ஆனால் முன்னால் இருந்த கிராமச் சங்கங்கள் என்ன கொடுத்து வந்தன? அரிசி, சர்க்கரை ஆகிய இரண்டு பொருள்களை மட்டும் தானே இவைகள் கொடுத்து வந்தன. இன்று 48 பொருள்களை இந்த அங்காடிகள் மூலம் கொடுப்பதற்கு வழிவகை செய்திருக்கிறோம். அந்தந்த வட்டாரத்திற்கு, அந்தந்தப் பிராந்தியத்திற்குத் தேவைப்படுகிற பொருட்களை 'இன்டெண்ட்' செய்து விநியோகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். மாநாட்டிற்கு வந்திருந்த மற்ற மாநிலப் பிரதிநிதிகளைக் கேட்டேன். பஞ்சாபில் இப்படிப்பட்ட கூட்டுறவு அங்காடிகள் இருக்கின்றன. அங்கே ஏறத்தாழ 18 பொருள்களைத்தான் அவர்கள் வழங்குகிறார்கள். தமிழ் நாட்டில் மட்டும்தான் 48 பொருள்களை இந்த அங்காடிகளில் விற்பதற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

ஆவியூரில் இருக்கிற ஒருவர் சாதாரண 'டூத் பேஸ்ட்' வாங்க வேண்டுமென்றால், அவருக்கு அது அங்கே கிடைக்காது. மதுரையில் உள்ளவர்களுக்குக் கிடைக்கிற 'டூத் பேஸ்ட்' ஆவியூரில் இருப்பவருக்குக் கிடைக்காமல் இருந்தது. ஆனால் இன்றையதினம் கிராமத்தில் உள்ளவர்களும் நகரத்தில் உள்ளவர்களுக்குக் கிடைக்கும் அனைத்துப் பொருள்களையும் கிராமங்களிலேயே வாங்கிக் கொள்ளத் தக்க வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன கிராமங்களை நாம் எந்தக் காரணத்தைக் கொண்டும் தனிமைப்படுத்த விரும்பவில்லை. கிராமப்புறத்தில் இருப்பவர்கள் தாங்கள் விரும்பும் வசதியை கிராமங்களிலேயே பெறுவதற்கு வழிவகை கண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல குறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய குறைபாடுகளைப் போக்குவதற்கு நிச்சயமாக இந்த அரசு முயற்சியை மேற்கொள்ளும் என்பதை அவருக்கு நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 7-10)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. பாலசுப்ரமணியம் அவர்கள் சேலத்தைப் பற்றிச் சில விவரங்களைச் சொன்னார்கள்: ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே சேலம் மத்திய வங்கியைப் பொறுத்த வரையில், கடன்கள் கொடுப்பதில் சில முறைகேடுகள் எப்படி நடந்திருக்கின்றன என்பதை, ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளிக்கும் வகையில் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் பருத்தி, நிலக்கடலை போன்ற பயிர்களைப்

[திரு. கே. எ. கிருஷ்ணசாமி] [1979 ஏப்ரல் 20

பயிரிடப் போவதாகச் சொல்லி, கடன்களைப் பெற்று, பிறகு வேறு பயிர்களைப் பயிரிட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அடித்தளத்திலே இருக்கிற விவசாயிகளுக்கு மத்திய கூட்டுறவு வங்கியின் வாயிலாக நல்லதொரு உதவியைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அளவுக்கு உணர்கிறார்களோ அந்த அளவுக்கு நானும் உணர்கிறேன். இன்றைக்கு அதிகாரிகள் எனக்குச் சில தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களும் இதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக நான் இங்கே அதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பருத்தி, நிலக்கடலை போன்ற பயிர்களைப் பயிரிட வேண்டுமென்று ஏறத்தாழ 444 இலட்சம் ரூபாயை வாங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் குறிப்பிட்டது இதிலே சில விழுக்காடுகள் இருக்கலாம். அதிலே நியாயமாக பயிர்களை இழந்திருந்தால் அவர்களுக்குச் சலுகை கொடுக்கலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். அது அவர்களுக்கு ஆச்சரியமாகக் கூட இருக்கலாம். பருத்தியோ, நிலக்கடலையோ பயிரிடப் போகிறோம் என்று சொல்லி ராகி போன்ற வேறு பயிர்களைப் போட்டிருந்தாலும், அதை அனுமதிக்கலாம். ஆனால் எந்தப் பயிரையுமே பயிரிடாமல், 155 இலட்சம் ரூபாயை வாங்கியிருக்கிறார்கள் என்ற புள்ளி விவரங்களை எனக்குத் தந்திருக்கிறார்கள். இதை வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையை நான் அணுகவில்லை. இதை மனிதாபிமானப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, விவசாயிகளுக்கு உரிய முறையிலே துரிதமாக கடன் வசதிகளைச் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பல விவரங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக தனி அதிகாரிகளைப்பற்றி அவர் சொல்லியிருக்கிறார். நான் ஏற்கெனவே சொன்னது போல, சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் தனி அதிகாரிகளை மாற்றி, அவர்களுக்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு வருவதற்கு வேண்டிய எல்லாவிதமான ஆயத்தங்களையும் தமிழக அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



1979 ஏப்ரல் 20] [திரு. கே. எ. கிருஷ்ணசாமி]

பல உறுப்பினர்கள் பல நல்ல ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை மனதில் வைத்துக்கொண்டு ஜனநாயக ரீதியில், மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கிற வகையில் கூட்டுறவு இயக்கத்தை நலிந்தவர்களுடைய கேடயமாக ஆக்குவோம். "கூட்டுறவுத் துறையின் இரண்டு கண்களாக திறமை, நாணயம் ஆகியவை இருக்க வேண்டும்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல திறமையையும், நாணயத்தையும் கூட்டுறவுத் துறையிலே வளர்க்க வேண்டிய அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்

மாண்புமிகு உறுப்பினர்களைப் போலவே, நாங்களும் அண்ணாவின் பாரம்பரியத்திலே வந்தவர்கள். அவர்களுக்கு எந்த அளவிற்கு உணர்வு இருக்குமோ அந்த அளவுக்கு எங்களுக்கும் உணர்வுகள் இருக்கின்றன. ஆகவே சில நேரங்களில் உணர்ச்சியோடு சில கருத்துக்களைச் சொல்லியிருப்பேனென்றால், மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு கூறியிருப்பேன் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆறுமுகம், திரு. கோ. சி. மணி, திரு. வே. தங்கப்பாண்டியன், திரு. ஆ. பாலசுப்ரமணியம், திரு. க. அறிவழகன், திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்களும் மற்றும் பல உறுப்பினர்களும் பல ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் குற்றங் குறைகள் இருக்குமானால், அவற்றையெல்லாம் விவரமாக எழுதி எனக்கு அனுப்பி வைத்தால், அவற்றைக் களைய சேவகன் என்ற முறையில் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் அவருடைய ஊரில் உள்ள ஒரு பிரச்சினையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கேயுள்ள சங்கத்தில் மீண்டும் தகராறு ஏற்பட்டதன் காரணமாக, அவர்களுக்கிடையே கசப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. அந்த கசப்புணர்வு தணியட்டும் என்பதற்காகத்தான் நாங்கள் சற்று ஓய்வெடுக்கிறோம். ஆகவே நாங்கள் பிரச்சினையில் அக்கறையைக் காட்டவில்லையென்று கருத வேண்டாம். நிச்சயமாக இந்தப் பிரச்சினை அரசின் கவனத்தில் இருக்கிறது.

கூட்டுறவே நாட்டுறவு என்ற தத்துவத்தை வலியுறுத்தி அரசியல் கண்ணோட்டம் இல்லாமல், விருப்பு வெறுப்பு இல்லாமல், இன்னார், இனியார் என்று பார்க்காமல், காய்தல் உவத்தல் என்று இல்லாமல், கூட்டுறவுத் துறையை தேசியக் கொள்கையாக ஏற்று, மனிதாபிமான முறையில் விழிப்போடு செயலாற்ற வேண்டுமென்ற முறையில் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

[1979 எப்ரல் 20

**திரு. சோ. ஆறுமுகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் மக்கள் பிரதிநிதிகளை விரைவிலே இடம் பெறச் செய்வோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். பிரதிநிதிகள் இடம் பெறுவது தேர்தல் முறையிலா அல்லது நியமன முறையிலா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள சட்டத்தை நாங்கள் சொல்லுவதைப்போல திருத்தாத வரையில், தேர்தலை வைத்தால், பழைய தவறுகள் வந்துவிடும் என்பதில் அழுத்தந்திருத்தமான நம்பிக்கை எங்களுக்கிருக்கிறது. 1961 ஆம் ஆண்டுச் சட்டத்தைப் பொறுத்த வரையில், அதில் சில அப்நாக்ஷியஸ் பிராவிஷன்களும், ரேஸ்ட்ரிக்டிவ் புராவிஷன்களும் இருக்கின்றன. அவைகளையெல்லாம் கடந்த 14 மாதங்களாக ஆய்ந்து கொண்டிருக்கிறோம். இப்போது கனிந்த நிலையிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்கிற வகையில் நல்ல முடிவை தமிழக அரசு நிச்சயமாக விரைவிலே அறிவிக்கும். அதற்குப் பிறகு நிச்சயமாகத் தேர்தல் வரும். தேர்தல் வருகிற நேரத்தில் மக்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்கள் அங்கே கொலு வீற்றிருந்து அலங்கரிக்கும் நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 7-20)

**(3) தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றி கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.**

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** கூட்டுறவுத் துறை கொள்கைக் குறிப்பின் மீதான விவாதம் முடிவடைந்தது. அடுத்து செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

***மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்க குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 271–280 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1979 எப்ரல் 20]

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றியகொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

அடுத்து, இந்தக் கொள்கைக் குறிப்பின் மீதான விவாதம் இன்றைக்கே முடிவடைய வேண்டும். அங்கத்தினர்கள் ஒத்துழைப்பை வேண்டுகிறேன். ஒவ்வொருவரும் 5 நிமிடத்திற்கு அதிகமாகாமல் உரையை முடித்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறேன்.

***திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது பேசும்போது எடுத்துக்கொள்ள வேண்டிய நேரம் ஐந்து நிமிடம்தான் என்று சொல்லியிருக்கிறார்கள்.

முதலிலே இந்த அறநிலையத் துறையினுடைய பொறுப்பில் உள்ள கோயில்களிலே உள்ள நிலங்களிலே விவசாயம் செய்கின்ற, குத்தகைதாரர்களுடைய பாக்கியை, 4 ஆண்டுகளாகச் செலுத்த வேண்டிய பாக்கியை வசூல் செய்வதற்கு என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் கொள்கைக் குறிப்பிலே ஒரு ஸ்பெஷல் துணை ஆணையாளரைப் போட்டு, நீண்ட காலமாக நீதி விசாரணை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குத்தகைதாரர்களை அவ்வளவு தூரம் இழுத்துப் போக வேண்டாம். அவர்களைக் கோர்ட்டுக்கு இழுத்தடிக்க வேண்டாம். அந்தக் குத்தகைதாரர்கள் 4 வருட பாக்கியில் ஒரு வருட பாக்கியைக் கொடுத்தாலும், மற்ற குத்தகை பாக்கிகளைத் தள்ளுபடி செய்கிறோம் என்று குறிப்பிலேயே போட்டு, அவர்களுக்கு அந்த பாக்கித் தொல்லைகளிலிருந்து விடுதலை தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது, இந்தக் கோயில்களின் பொறுப்பிலே உள்ள ஆறு லட்சம் ஏக்கர் நிலத்தை எடுத்து விநியோகம் செய்ய வேண்டும். ஏற்கெனவே இந்த நிலத்திலே விவசாயம் செய்தவர்கள் என்ற முறையிலே, அந்தக் கோயில் நிலங்களை அதிலேயே பயிர் செய்துகொண்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். தலைக்கு ஒரு ஏக்கர் என்றாலும்கூட, 6 லட்சம் குடும்பங்களுக்கு அதை விநியோகம் செய்ததாக இருக்கும். தமிழகத்திலே இலட்சம் ஏக்கர் நிலத்தை முதன் முதலாக விநியோகம் செய்த பெருமை

இந்த அரசுக்கு வந்து சேரும். அந்த முறையில் நிலத்தை விநியோகம் செய்யும் கொள்கையை அரசு ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, விட்டு வாடகை, நில வாடகை, கடை வாடகை என்று சொல்கின்ற வகையிலே வருவாய்கள் இருக்கின்றன. அவைகளை வசூலிக்கின்ற பொறுப்பை ஏலம்விட்டு குத்தகைக்கு விடுகிறார்கள். அப்படி குத்தகைக்கு விடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி வசூலிக்கின்ற முறையில்லாமல், கோயில் நிர்வாகத்தின் மூலமாக அங்கேயே பணி செய்கின்றவர்கள் மூலமாக வசூல் செய்தால், அந்தக் குத்தகைதாரர்களுக்குக் கொடுக்கின்ற பணம் மிச்சமாகும். இதைப்பற்றி அரசு யோசித்துச் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இந்த அறநிலையத் துறையில் வேலை செய்கின்ற ஊழியர்கள் பிரச்சினைக்கு வருவதற்கு முன்பு ஒன்று சொல்ல விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டத்திலே திண்டிவனம் தாலுகாவிலே பொம்மிபாளையம் என்ற ஊரைச் சேர்ந்த தமிழ் நாடு தெய்வீக பேரவைத் தலைவர் மைலம் அருள்மிகு சுப்ரமணிசாமி ஆதின ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாரதி சுவாமிகள் அவர்கள் பற்றி அச்சடிக்கப்பட்டு கடிதம் வந்திருக்கிறது. அதன் காபி உங்கள் அலுவலகத்திற்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. 1861 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட மான்யம் அந்த ஆதினத்திற்கு இருக்கிறது. 33.35 ஏக்கர் நிலம் இருக்கிறது. அது ரூ. 6 லட்சம் பெறுமானமுள்ள நிலம். விசாரணை சம்பந்தப்பட்ட விஷயங்கள் எல்லாம் விசாரணை அதிகாரிக்கு வந்திருக்கின்றன. கடலூரில் உள்ள உதவி ஆணையாளர் அவர்கள் அலுவலகத்திற்கு விவரங்கள் எல்லாம் போய்ச் சேர்ந்திருக்கின்றன. அந்த விஷயம் வந்து 3 வருடங்கள் ஆகின்றன என்று சொல்கின்றார்கள். அரசு ஆணையாளர் அவர்கள் அலுவலகத்திலிருந்து 1978 ஆகஸ்ட் மாதத்திலே கடலூர் உதவி ஆணையாளருக்கு ஒரு சர்குலர் வந்திருக்கிறது. இதுவரையில் அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நான் இந்த ஆதினத்திலே வேலை செய்கின்ற பணியாளர்கள், சிப்பந்திகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அங்கே 57 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். இதிலே ஆயிரம் பேர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி நான் சென்ற ஆண்டுகூட எடுத்துச் சொல்லியிருக்கிறேன். திருச்செந்தூர் சுப்ரமணியசுவாமி தேவஸ்தானத்தில்





உள்ள ஊழியர்கள் பற்றியும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அங்கே ஒரு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே வித்தியா சாகர் ஆதித்தன் என்ற வக்கில் ஒருவர் இருக்கிறார். அந்தக் கோயில்களிலே வேலை செய்கின்ற ஊழியர்கள், அவர்களுக்கு இருக்கின்ற குறைகளை, அவர்களுக்கு உள்ள சிரமங்களையெல்லாம் அவரிடம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அங்கே நடந்த கொடுமைகள் காரணமாக அந்த ஊழியர்கள் இவரை வற்புறுத்தி தலைவராக்கி ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள். 1973 ஆம் ஆண்டு ஒரு அமைப்பை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழ் நாடு அறநிலைத் திருக்கோயில்கள் பணியாளர் சங்கம், திருச்செந்தூர் என்று அமைத்திருக்கிறார்கள். அதில் வித்தியா சாகர் ஆதித்தன் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். ஆண்டுக்கு ரூ. 5 லட்சத்துக்கு மேல் வருமானம் வரக்கூடிய, பத்து கோயில்களில் ஊழியராக இருக்கக்கூடிய 3,000 பேர்கள் தொழிலாளர்களாக இருப்பவர்கள் இந்தச் சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள். இந்த அமைப்பு கடந்த 5, 6 வருடங்களாக நிர்வாகத்தோடு பேசி வருகிறது. எங்களைப்போல அவர்கள் கிளர்ச்சிக்காரர்கள் அல்ல. திரு. ஆதித்தன் ஒரு புரொபஷனல் டிரேடு யூனியனிஸ்ட் அல்ல. அவர்கள் துறையில் ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதிலே சொல்லியிருக்கிறார்கள் "தமிழ் நாட்டில் உள்ள அறநிலைத் திருக்கோவில்களில் தனிப்பட்ட முறையிலோ அல்லது கட்டு அமைப்பு முயற்சியாலோ கோவில் சிப்பந்திகள் தங்கள் குறைகளையும், கோரிக்கைகளையும் ஆணையருக்கோ அல்லது அரசுக்கோ நியாயங்கள் வடிவில் எழுதி எந்தப் பலனும் ஏற்படாது என்ற நிலை அறநிலைய ஆட்சித்துறையால் ஏற்படுத்தப்பட்டது. கோவில் ஊழியர்களும் மற்ற ஸ்தாபனங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் போல் போராடினால்தான் பட்ட நியாயமான கோரிக்கைகள்கூட நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்படும் என்ற நிலை ஏற்பட்டது. அதன்பின் வேறு வழி இல்லாமல் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சிப்பந்திகள் 1978 நவம்பரில் நேரடி நடவடிக்கை நோட்டீஸ் கொடுத்தார்கள்" என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

கடைசியாக ஒரு வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள், அதிலே அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்?

"25—12—1978ல் ஆணையருக்கும், சிப்பந்திகள் சங்கப் பிரதிநிதிகளுக்கும் திருச்செந்தூரில் நடந்த பேச்சு வார்த்தையின் பயனாக எல்லா அறநிலைத் திருக்கோவில்களுக்கும் பார்வை ஒன்றில் கண்ட ஆணையர் சுற்றறிக்கைப்படி ஒரே மாதிரியான சம்பள விகிதம், ஆண்டுதோறும் ஒரு மாத சிறப்பூதியம், மற்றும் கோரிக்கைகள் பற்றி கூடிய விரைவில் நல்லெ[illegible] உத்தரவு போடுவதாக ஆணையாளரால் வாக்களிக்கப்பட்டது. அதன் பேரில்

சிப்பந்திகள் போராட்ட கோரிக்கைகள் நிறைவேறும்படியான ஆணையர்
உத்தரவை எதிர்பார்த்து தள்ளிவைக்கப்பட்டது. "இப்படி வாக்களிக்கப்பட்டு
3, 4 மாதங்கள் இன்றைக்கு ஆகிவிட்டது. அடுத்து, கடைசியாகச் சொல்லி
யிருக்கிறார்கள். "அதனால் கனம் ஆணையர் அவர்கள் கூடிய விரைவில்
சிப்பந்திகளின் 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்து முதுநிலைத்
திருக்கோவில்களில் மற்ற ஸ்தாபனங்களில் வேலை பார்க்கும் ஊழியர்கள்
போல் கோவில் சிப்பந்திகளும் போராட்டங்களை நடத்த இருப்பதை
தவிர்க்குமாறு வேண்டுகிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த
அறிக்கை அரசுக்கு ஜனவரி மாதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றே ஒன்று கூறிக்கொள்
கிறேன். இப்போது எனக்கு நேரம் அதிகமாக இல்லை. அந்த ஸ்தாபனத்தில்
3,000 பேர்கள் இருக்கிறார்கள். அந்த ஸ்தாபனம் 1971ல் ஆரம்பிக்கப்பட்டது.
அதுபோல் கன்னியாகுமரியில் ஆயிரம் பேர்கள் உள்ள ஒரு ஸ்தாபனம்
ஆரம்பிக்கப்பட்டது. இப்படியே வேறு பல மாவட்டங்களிலும் ஆரம்பித்
திருக்கிறார்கள். இந்த அரசு தொழிற் சங்கங்களைக் கண்டு கவலைப்
படுகிறது. தொழிற் சங்கங்களின் போராட்டத்தைக் கண்டு கவலைப்படுகின்ற
அரசு இப்போது இருக்கிறது. அந்தத் தொழிற் சங்கங்களை வளர்த்து
விடுகின்ற அளவுக்கு நீங்கள்தானே செய்கின்றீர்கள். 1973ல் ஒரு அரசு
உத்தரவு வந்திருக்கிறது. ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாயும் அதற்கு மேலும்
வருமானம் உள்ள கோயிலிலே எப்படி சம்பளம் கொடுப்பது என்று சம்பள
விகிதம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது அமுலுக்கு வரவேண்டும் என்று
ஒரு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவைத்தான் 'சரிவர
நிறைவேற்ற வேண்டும் என்றும், அதை இதுவரையில் அமுல்படுத்தவில்லை
என்றும்தான் அவர்கள் கோரிக்கை விட்டிருக்கிறார்கள். அந்தத் தலைவர்
அந்த 51 ஆயிரம் பேர்கள் பிரச்சினை பற்றிக்கூட இப்போது சொல்லவில்லை.
அவர் ரெப்ரசன்ட் பண்ணுவது எல்லாம், இந்த 3 ஆயிரம் ஊழியர்களுக்கு,
1973 ஆம் ஆண்டில் போட்ட உத்தரவுப்படி அமுல்படுத்த வேண்டும் என்று
தான் அவர்களுடைய கோரிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள்.

அந்த முறையிலேயே, தமிழ் நாடு கோயில் சிப்பந்திகள் எல்லாம் அதிருப்தி
அடைந்திருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் கோரிக்கை எழுப்பு
கிறார்கள். வசதியில்லை. ஆகவே கொடுப்பதற்கு இல்லை என்று சொல்வதில்
எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
கோயில்கள் எல்லாம் ஒரு இன்டஸ்ட்ரி என்று குருவாயூர் கோவில்
விஷயத்தில் ஒரு சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புக்கூட வந்திருக்கிறது என்று
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





கோயில்களிலே வேலை செய்பவர்கள் குறைந்த வருவாயில் குடும்பம்
நடத்துவது எப்படி சாத்தியம்? அதனால் கோயிலும் ஒரு இன்டஸ்ட்ரி
என்று தீர்ப்பு வந்திருக்கிறது. அங்கே அர்ச்சனைப் பணம் என்று வாங்கு
கிறார்கள், சர்க்கரைப் பொங்கல் போடுவதற்குப் பணம் வாங்குகிறார்கள்.
நைவேத்யம் பண்ணுவதற்குப் பணம் வாங்குகிறார்கள். ஆகவே அது கமர்ஷியல்
பிஸினசாக ஆகிவிட்டது என்ற அளவில், சுப்ரீம் கோர்ட்டும் தீர்ப்பு கொடுத்
திருக்கிறது. கோயில்கள் எல்லாம் இண்டஸ்ட்ரீஸ் என்று தீர்ப்பு வந்திருக்
கிறது. அதிலிருந்து யாரும் தப்ப முடியாது. இவர்களும் அந்த
இண்டஸ்ட்ரீசில் வேலை செய்கின்றவர்கள்தான். சிப்பந்திகள் என்ற
முறையிலே அவர்கள் வசூல் செய்து தருகிறார்கள். தமிழ் நாட்டுக் கோயில்
சிப்பந்திகளும் மற்ற ஸ்தாபனங்களில் நடப்பது போல போராட்டங்களில்
இறங்குவார்கள். நமது அமைச்சர் அவர்கள் அவர் காலத்திலாவது இந்தக்
கோரிக்கைகளை நிறைவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 7-30)

**திரு. இரத்தின பாலகுருசாமி :** தலைவரவர்களே, அறநிலையத் துறையின்
சார்பிலே இங்கே கொண்டு வந்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பின்மீது
சில கருத்துக்களைச் சொல்லி, என்னுடைய உரையை முடிக்கலாமென்று
எண்ணுகிறேன். தமிழகத்தில் ஆங்காங்கே விடுபட்டுக் கிடந்த நிலங்கள்
பூராவையும் ஒருவகைப்படுத்தி, கையகப்படுத்தி, இப்போது இவ்வளவு
நிலங்கள் இருக்கின்றன என்ற உண்மையான விவரத்தைத் தந்திருக்கிறார்கள்.
இந்த நேரத்தில் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். என்னுடைய
ஊரான சிதம்பரத்தில், நடராசர் ஆலயம் என்று இருக்கிறது. அந்த நடராசர்
ஆலயத்திற்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான ஏக்கர்
பட்டாக்களை, ஒருமுகப்படுத்த, தாசில்தாரை அமைத்து, அந்த நிலங்களை
அறநிலையத் துறை கையகப்படுத்தியிருக்கிறது. அப்படி கையகப்படுத்திய
நிலங்களையெல்லாம், அறநிலையத் துறையின்கீழ் கொண்டுவந்து, ஆணையரின்
அதிகாரத்திற்குட்பட்ட நிலங்களாக்க வேண்டுமென்ற யோசனையைச் சொல்ல
விரும்புகிறேன். அங்கே பெல்காம் அனந்தம்மாள் சத்திரம் என்று ஒன்று
இருக்கிறது. அதைச் சில பேர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்.
அங்கே தர்மங்கள் நடைபெற முடியாமல் இருக்கிறது. சில அரசியல் கட்சிக்
காரர்கள் அங்கே புகுந்து கொண்டு, அதை ஆட்சி புரிகிறார்கள். அதனுடைய
வருமானம் ஆண்டொன்றுக்கு 50,000 ரூபாய்க்கு மேல் இருக்கும். 25 ஏக்கர்
நிலமிருக்கிறது. அது டெபுடி கமிஷனர் வரையில் விவகாரத்திற்குச் சென்று,

[திரு. இரத்தின பாலகுருசாமி] [1979 ஏப்ரல் 20

அறநிலையத் துறை அதை எடுத்துக்கொள்ளலாமென்று தீர்ப்பு வந்திருக்கிறது. இன்றும் அதை தனியார்கள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் தமிழ் நாடு பூராவும் இருக்கின்றன. அவற்றையும், நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் காலத்திலே ஒழுங்குபடுத்தி, அரசே அவற்றை மேற்கொண்டு, அங்கே தர்மம் கெடாமல் நல்ல முறையில் நடத்துவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தர்மம் கெடாமல் நடைபெற வேண்டும், அதே நேரத்தில் கலையும் அழியக்கூடாதென்று நினைக்கும் பொறுப்பு மிகுந்த அறநிலையத் துறை அமைச்சரவர்கள், 100 தமிழ்ப் புலவர்களுக்கு ஆலயங்களிலே வேலையளித்திருக்கிறார்கள். அந்த ஆலயங்களிலே தேவாரம், திருவாசகம். இன்னும் மற்ற மற்ற பழைய நூல்களையெல்லாம் சொல்லிக்கொடுக்க வேண்டும், அவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையிலே இந்த அரசு அந்த முடிவை எடுத்திருக்கிறது. அப்படிப்பட்ட முடிவெடுத்திருப்பது சாலச் சிறந்தது. எல்லா மக்களுக்கும் பொதுவாக இருக்கின்ற இப்படிப்பட்ட ஆலயங்களின் சொத்துக்களை தனியார்கள் சாப்பிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் அவர்களுக்கும் துக்கம் வராமல், அவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, அவர்களையும் பிரதிநிதிகளாக்கி, அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் கொண்டுவருவது நல்லதென்று இந்த மன்றத்தின் மூலமாக, அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே அங்கே தாழ்த்தப்பட்ட குடிமக்கள் வாழ்கின்ற பகுதியிலே 82 ஏக்கர் நிலம் இருக்கிறது. சுவாமி சகஜானந்தா காலத்தில் விடப்பட்ட நிலங்கள் அவை. அதற்கு ஒரு டிரஸ்ட் போர்டு இருந்தது. அதை மாற்றி, சொசைட்டீஸ் ரெஜிஸ்டிரேஷன் ஆக்டின் கீழ் வைத்துக்கொண்டு, கோர்ட்டிலே தீர்ப்பாகியும்கூட, அதை அந்த அறநிலையமே கைப்பற்றி, நடத்திக்கொண்டு வந்தது. அதெல்லாம் விடுபட்டுள்ளதால், அதிலும் கவனம் செலுத்தி, தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் 10 ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்டு வருவாய் வரும் அறநிலையங்களில் உதவி ஆணையாளரையும், 10,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாய் வரை வருமானம் வரும் அறநிலையங்களில் துணை ஆணையாளரையும், அறங்காவலர்களாக நியமிக்கவும், 50,000 ரூபாயிலிருந்து 1 லட்சம் ரூபாய் வரை வருவாய் உள்ள இடங்களில் ஆணையாளரை நியமிக்கவும். ஒரு லட்சத்திற்கு மேலே வருமானம் வருகின்ற இடங்களை அரசே கவனிக்கும் அருமையான திட்டத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். வட்டாரக் குழு அமைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, பாராட்டத் தோன்றுகிறது.



1979 ஏப்ரல் 20] [திரு. இரத்தின பாலகுருசாமி]

தர்மமும் கெடாமல், கலைகளையும் காப்பாற்றுவதற்காகவும், பழைய கோவில்களைக் காப்பாற்றுவதற்காகவும் திருப்பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கோவில்களிலே புகுந்துகொண்டு, பலர் கோவில்களின் சொத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் உள்ளடக்கி, அறங்காவலர்களாக்கி, நிலைமைகளைச் சீராக்க வேண்டுமென்று கேட்டு, உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. ஆ. திராவிடமணி: தலைவரவர்களே, அறநிலையத் துறையின் சார்பாக இங்கே வைக்கப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு முன்வந்திருக்கிறேன். இந்தத் துறையிலே 24 ஆயிரம் சமய நிறுவனங்கள் இணைக்கப்பட்டு, ஏறத்தாழ 51,000 பேர்கள் பணியாற்றுகிறார்கள். பக்தி எண்ணம் கொண்டவர்கள்தான் இந்தத் துறையிலே பணி செய்ய முடியுமென்று பொதுமக்கள் கருதி வருகின்ற சூழ்நிலையில், திராவிட இயக்கத்தின் அடிப்படையிலே வரும் எந்த ஆட்சியாக இருந்தாலும், மக்களுடைய மனதைப் புண்படுத்தாமல் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்ப வேண்டுமென்ற ஐயா அவர்களின் பொன்மொழியைக் கேட்டு, அந்த அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகம் செயல்பட்டது யாருக்கும் எந்தவிதமான குறையும் வரக்கூடாது என்பதற்காக பல்வேறு ஆலயங்களில் திருப்பணிகளை மேற்கொண்டது. இப்போது சிறிய கோவில்களில் திருப்பணி செய்வதற்காக, 62,000 கோவில்களுக்கு 63,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோவிலுக்கு 1,000 ரூபாய் என்ற அளவிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக சாமிகளிலே பணக்கார சாமி, ஏழை சாமி என்று பார்க்காமல், எல்லா சாமிகளுக்கும் அதிகமான தொகையை ஒதுக்கி, நல்ல முறையிலே திருப்பணிகளைச் செய்தால் நல்லதென்று கருதுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, யுனெஸ்கோ நிறுவனத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு லட்சம் ரூபாய் பெற்று, அதன் மூலம் திருப்பணிகளை அரசு மேற்கொண்டது. அந்த அடிப்படையிலே, அந்த நிறுவனத்தைக் கடந்த மூன்று ஆண்டுகளாக அணுகவில்லை என்று தெரிகிறது. எனவே அதன் மூலமாக உதவி பெற்று, பல்வேறு ஆலயங்களின் திருப்பணிகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலய ஊழியர்கள், ஆலயத்தின வருவாய்க்குத் தகுந்தபடி சம்பளம் பெற வேண்டுமென்று, திராவிட முன்னேற்றக் கழக அரசு சட்டம் கொண்டு வந்தது. ஆனால் அந்தச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை. அதனால் ஆலய ஊழியர்கள் குறைந்தபட்ச ஊதியத்தையே வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். 6 காலப் பூஜைக்காக, காலையில் 4 மணிக்கே வீட்டை விட்டுக் கிளம்பி வந்துவிடு

[திரு. ஆ. திராவிடமணி] [1979 ஏப்ரல் 20

கிறார்கள். எவ்வளவு நேரமானாலும், விழாக் காலங்களில் கடமை உணர்ச்சியோடு பணியாற்றுகிறார்கள். ஆலயங்களுக்குப் பல்வேறு வகையில் வருவாய் வருகிறது. விழாக் காலங்களில் உண்டியல் நிரம்புகிறது. குறைந்த வருவாய் உள்ள ஆலயங்களுக்குக்கூட அதிகமான வருவாய் வருகிறது. எனவே அந்த அடிப்படையிலே அதிக ஊதியத்தை வழங்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கோட்டை வட்டத்திலே, பனையடியான் கோவில் என்ற காட்டுக்குள்ளே ஒரு கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்குப் போகும் பக்தர்கள் ஏழைகள். அங்கே ஒரு கிணறு இருக்கிறது. அந்தக் கிணற்றை சீர்படுத்தினால், தண்ணீர் கிடைக்கும். எனவே விழாக் காலங்களில் வரும் 10,000 மக்களுக்கு அது பயன்படும் அளவிற்கு, அந்தப் பணியை அமைச்சரவர்கள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குற்றாலத்திலே பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அது திருமலைக் குமரன் கோவில் பொறுப்பிலே நடைபெறும் பள்ளி, அதற்குப் பெயர் சிவகாமி பெண்கள் உயர்நிலைப் பள்ளி என்பதாகும். திருமலைக் குமரன் கோவிலைக் கட்டியது ஒரு அம்மையார். மத்தளம் மன்னர் பண உதவியோடு, அந்த அம்மையாரே முன்நின்று, அந்தக் கோவிலைக் கட்டினார்கள். அந்த வீர மறத்தி சிவகாமியின் நினைவாக அந்த உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியிலே ஏழை மாணவிகளுக்கு இலவசச் சாப்பாடும், வசதி உள்ளவர்களிடமிருந்து 32 ரூபாய் வாங்கிக்கொண்டு நடுத்தர மாணவிகளிடமிருந்து 16 ரூபாய் வாங்கிக்கொண்டு சாப்பாடு போடப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அதற்காக உதவித் தொகை கொடுத்து, அந்தப் பள்ளி விடுதியிலே தங்கிப் படிக்கின்ற மாணவிகளுக்கு சாப்பாடு வசதி செய்து, படிப்பையும் கொடுத்தோம். அவசர காலத்திலே அந்தச் சலுகை இல்லாமல் போய்விட்டது. எந்த மாணவியாக இருந்தாலும் 32 ரூபாய் கட்டினால்தான் உள்ளே வரலாமென்று உத்தரவு போட்டதால், ஏழை மாணவிகள் அங்கே படிக்க முடியவில்லை. அந்தச் சலுகை என் ரத்து செய்யப்பட்டது, ஏன் எடுக்கப்பட்டது என்பதை அறிந்து, அந்தப் பள்ளிக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொடுத்த சலுகையை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, ஏழை மாணவிகளுக்கு இலவசமாகவும், நடுத்தர மாணவிகளுக்கு 16 ரூபாய் வாங்கிக்கொண்டு சாப்பாடு போட்ட சலுகையையும் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1979 ஏப்ரல் 20] [திரு. ஆ. திராவிடமணி]

(பிற்பகல் 7-40)

நகை பரிசோதிக்கின்ற அதிகாரி, மாதம் ஒரு முறை எல்லாக் கோவில்களுக்கும் சென்று, நகைகள் சரியாக இருக்கின்றனதா என்று பார்க்க வேண்டும். அந்த போல ஆணை அதிகாரிகள் முன்பெல்லாம் சுறுசுறுப்பாக இயங்கினார்கள். இப்பொழுது எல்லாம் அவர்கள் சுறுசுறுப்பாகச் செயல்படவில்லை. அவர்கள் எதையும் கவனிக்காமல் இருக்கிறார்கள். மாதம் ஒரு முறை எல்லா ஆலயங்களுக்கும் சென்று அவர்கள் பார்க்கின்ற ஒரு முறை இப்பொழுது அவர்களால் சரியாகப் பின்பற்றப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். அரிசனங்கள் அர்ச்சகர்களாக வர வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக அரசு அன்றைக்கு சட்டம் போட்டது. பிறகு அது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில் தடை செய்யப்பட்டது. அரிசன வகுப்பைச் சார்ந்தவர்கள் அய்.ஏ.எஸ். போன்ற பெரிய அதிகாரிகளாக எல்லாம் ஆகின்ற போது, ஏன் அவர்கள் அர்ச்சகர்களாக வரக்கூடாது என்கின்ற ஒரு வினாவைக் கேட்டு, அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு போட்டது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறார்கள். ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பில் "வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள் 'முதலியவற்றில் நன்கு புலமையுள்ள வல்லுநர் குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது" என்று அறிவித்திருக்கிறார்கள். வேதங்களையும், ஆகமங்களையும், திருமுறைகளையும் பற்றித் தெரிந்தவர்கள், படித்திருப்பவர்கள் உயர்ந்த ஜாதிகளில்தான் இருக்கிறார்கள். அரிசனங்களுக்கு வேதங்களைப் பற்றியும், ஆகமங்களைப் பற்றியும், திருமுறைகளைப் பற்றியும் தெரியாது. அப்படி இருப்பதன் மூலம் அவற்றைத் தெரிந்தவர்களைத்தான் தேர்ந்தெடுக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. மற்றவர்களை அர்ச்சகர்களாக அவர்கள் நியமிக்க மாட்டார்கள். ஆக கூடாது. அதுபோல் சாம வேதம், ருக் வேதம், யஜுர் வேதம், அதர்வண வேதம் போன்ற வேதங்களைப் பற்றியெல்லாம் உயர்ந்த சாதியினருக்குத்தான் தெரியும். மற்றவர்களுக்குத் தெரியாது. ஆகமுறைப்படி நடைபெறுகிற விஷயங்கள் எல்லாம் உயர்ந்த சாதியினருக்குத்தான் தெரியும். மற்றவர்களுக்குத் தெரியாது. சாதாரணமானவர்கள், அரிசனங்கள் எல்லாம் அவற்றைப் பற்றித் தெரிந்திருக்க மாட்டார்கள். அவர்களுக்குத் தெரிந்திருக்கின்ற விதிமுறைகளை நாம் பயன்படுத்த வேண்டும். சிவனே போற்றி, எம்பெருமானே போற்றி என்று சொல்லக்கூடிய ஆற்றலுள்ள சொல் வளம் உள்ளவர்களை அர்ச்சகர் பதவிகளில் நியமிக்கலாமென்கின்ற ஒரு திருத்தத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவர வேண்டுமென்று, கேட்டுக்கொள்கிறேன். வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள் தெரிந்தவர்கள்தான் அர்ச்சகர்களாக

[திரு. ஆ. திராவிடமணி] [1979 ஏப்ரல் 20

நியமிக்கப்படுவார்கள் என்றால், அரிசனங்கள் அர்ச்சகர்களாக வர முடியாது என்பதைச் சொல்லி, அந்த விதியை மாண்புமிகு அமைச்சரவர்கள் அவசியம் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

* THIRUMATHI MANDAKINI KRISHNAMUTHI : Mr. Vice-Chairman, I will fin'sh my speech as quickly as possible.

I am happy to find from the Policy Note that regional committees are to be constituted for suggesting panels of names of suitable and qualified persons for appointment as non-hereditary trustees of temples. I am of the view the women are more devote and, therefore, I request the Hon. Minister kindly to see that at least 50 per cent of the non-hereditary trustees are women. I would like to suggest the same with regard to the State Level Advisory Committee also. Among the twelve non-official members on that committee, women may be given proper representation.

I am happy to learn that a law is going to be made prohibiting sacrifice of asimals and birds. I would like to suggest that, when that law comes through, a clause may be included in that about human sacrifice also. Many of us have read in papers in recent times also—due to blind belief in different parts of India to the effect that women who do to have children may get progeny if young children are sacrified. This is a very gruesome act committed in many parts of the country. It is also possible that such gruesome murders do not become known. Therefore, in this International Year of the Child, we should bring forth a law prohibiting sacrifice of human beings also besides satifice of animals and girds.

The Hindu Religious and Charitable Endowments Department is in charge of religious institutions and also aims at social welfare. There are many charitable organ'sations which have built up their institutions on the lands that were given long ago by trustees and other charity-minded persons. Some years back, these organisations were asked either to buy these lands at an exorbitant cost or to pay increased lease amounts. Dut to that, these institutions had suffered a great deal. Very recently, we heard the Hon. the Revenue Minister mentioning on the floor of this House that the value of the land where 'Abbotsbury' is located had increased not due to the efforts of the owner but due to the development efforts of the Government. Therefore, I am quite confident that under the leadership of the Hon. the Chief Minister and the Hon. the Minister for Religious Endowments, the institutions which I mentioned earlier would get some salvation.



1979 ஏப்ரல் 20] [Thiru Mandakini Kr'shnamurthy]

I am a devout Hindu though not a fanatic. One of my hobbies is to go round visiting temples. Therefore, I think I can make some suggestions. There are certain temples which are very popular.

We find those who are in charge of the temples—I am not referring to the higher officials—those who are in charge of regulating the pilgrims or devotees lack courtesy. As we have Courtesy Week in the Transport Department, it is very necessary that instructions on courteous behaviour should be given to these people. Sometimes when people who buy tickets are waiting for hours together, somebody known to those persons are sent by them ins'de very easily and they are quite rude sometimes to the devotees.

I feel that there is necessity for providing the minimum amenities in the temples which open their doors to the public. There is a temple at Mangadu and I had myself witnessed a very sad incident. It all ended well because of the timely intervention of other persons. This temple has a very narrow passage and on both sides of the passage, camphor is being burnt. A yound lady, who was probably married very recently, had come there in her beautiful saree and when she passed through this passage, her saree caught fire. I was there at that time. Some of the volunteers among the devotees were quick to act and they came forward to help and the fire was quenched. This is a very serious accident and people who go there to pray have to face such risks. I think that certain rules and regulations should be framed for the temples to provide proper amenities to the devotees.

I would also like to say that while we talk about the abolition of caste, creed etc., our castes, stars etc. are asked openly in temples. I would like to suggest that the practice that is followed in Raja Rajeswari Temple might be adopted in other temples also. In Raja Rajeswari Temple, when we pay for the special pooja and obtain the necessary ticket, there itself they enquire and write down the Gothram and Star. As you are aware, Gothram is there only among Brahmins. At the time of pooja, in the presence of others, if the priest asks for the Gothram and Nakshatram, our caste is known to others. I feel that it should be insisted upon in every temple that the poojari should not ask about this at the time of pooja but that such particulars should be entered in the ticket that is given to the devotees who want to have special pooja. If that is done, those particulars will not be asked for by the poojari and others will not know the caste to which a particular person belongs. With these words, I thank the Vice-Chairman for giving me an opportunity to speak on this very important subject.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாற்றுத் தலைவரவர்களே, அவைமுன் வைக்கப்பட்டுள்ள இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு விவாதத்தில் நானும் கலந்துகொண்டு சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கிடைத்ததற்காக உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்று சொல்லுகிறார்கள். பெரும்பாலான ஆலயங்களில் வசதி படைத்தவர்களுக்குத் தான் உரிமை இருக்கிறது. இது ஒரு கசப்பான ஆனால் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மை. வசதியுள்ளவர்களுக்கு உரிமை இருக்கிறது. வசதியற்றவர்களுக்கு உரிமை மறுக்கப்படுகிறது. இந்த நிலை மாற்றபபட்டாக வேண்டும், மாற வேண்டும். ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்ற தத்துவத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால், முதலில் அனைவரும் சமமாகக் கோயிலுக்கு செல்ல வேண்டிய வகையில் அனைவருக்கும் சம வாய்ப்பு கொடுக்க வேண்டும். அந்த வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நாடு காந்தி பிறந்த நாடு. "தெய்வம் பல பல சொல்லிப்—பகைத்—தீயை வளர்ப்பவர் மூடர்" என்று சொன்ன பாரதி பிறந்த நாடு. "பாருக்குள்ளே தெய்வமொன்று—இதில் பற்பல சண்டைகள் வேண்டாம்" என்று சொன்ன பாரதி பிறந்த நாடு. இந்த

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி திருஞானமூர்த்தி தலைமை).

(பிற்பகல் 7-50)

நாட்டிலே சமய சகிப்பின்மையை மேலும் மேலும் வளர விட்டால், சமயத்தின் பெயரால் அடி தடி, சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் எல்லாம் தோன்றுமானால், அது வரவேற்கக் கூடிய அம்சமில்லை. எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இந்த நாட்டிலே அவர்களிடத்தில் சமய சகிப்புத் தன்மையை வளர்க்க அறநிலையத் துறை ஒரு வழியைக் கண்டாக வேண்டும். இந்தக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், இராமகிருஷ்ணா மிஷனுடைய சேவை மிகவும் பாராட்டத் தகுந்த ஒன்று. இராமகிருஷ்ணா மிஷன் சமய சகிப்புத் தன்மையை வளர்க்க மிகச் சிறந்த முறையில், சாத்தியமாகக் கூடிய முறைகளைக் கையாளுகிறது. அந்த முறையை நாம் என் அற நிலையத் துறையின் மூலமாகப் பின்பற்றக் கூடாது என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

சில கோயில்களில் பிற மதத்தவர்கள் உள்ளே நுழையக் கூடாது என்று பலகைகளை வைத்திருக்கிறார்கள். அது சரியானதல்ல. என்னுடைய ஊரிலே சிதம்பரம் கோயிலில் இப்படி ஒரு பலகையை வைத்திருக்கிறார்கள். அப்படிச் செய்யும்போது, உண்மையில் நாம் எந்த அளவுக்கு ஒரு வெறுப் புணர்ச்சியை, பகையுணர்ச்சியை வளர்ப்பதற்குக் காரணமாக இருக்கிறோம்





ன்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, ஆலயங்களிலே 'பிற மதத்த
ர்கள் வரக்கூடாது' என்று பலகை இருக்கக் கூடாது. இதை நடைமுறைப்
டுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமயத் துறையிலே வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் அவர்கள் மிகப் பெரிய
ரட்சியைச் செய்திருக்கிறார்கள். அவர் வடநாட்டிலே எங்காவது ஒரு
ரநிலத்திலே பிறந்திருந்தால், இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்று பெரிய
ஞானாகப் புகழ் பெற்றிருப்பார். அவர்கள் செய்த பாவம், அவர் தமிழகத்
லே பிறந்துவிட்டார். அவர் புரட்சிகரமான கருத்துக்களைச் சொல்லியிருக்
றார். ஆனால், இப்போது அவருடைய கருத்துக்களின் முக்கியத்துவம்
டுபடாத நிலையில் இருக்கிறது. பலவிதமான மூட நம்பிக்கைகளை எதிர்ப்
பர்கள் கூட நாத்திகர்கள் கூட அவருடைய கொள்கைகளைப் பாராட்டு
றார்கள். அப்படிப்பட்ட வள்ளலார் அவர்களுடைய கருத்துக்களை இந்த
ட்டில் பரப்புவதற்கு நம்முடைய அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்க
ண்டும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வள்ளலார் அவர்
ரின் விழாவிலே கலந்து கொண்டு பேசிய பேச்சை நான் படித்தேன். அவர்
ர் சிறந்த முறையில் பாராட்டினார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்
அவர்களும் வள்ளலார் அவர்களுடைய கருத்திலே மரியாதை வைத்திருக்
றார். ஆகவே, வள்ளலார் அவர்களுடைய கருத்துக்களைப் பரப்ப தக்க
டவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது ஆலயங்களிலே புலவர்களை நியமித்திருக்கிறார்கள். இது
வேற்கத்தக்கது. அவர்களுக்குப் பற்பல பணிகள் ஒதுக்கப்பட்டிருக்
ன்றன. சமயக் கல்வியைப் பரப்பும் பணியையும் இந்தப் புலவர்களிடம்
டைக்க வேண்டும். இன்றைய தினம் நம்முடைய நாட்டிலே Mass
lucation, Social Education என்று சமூகக் கல்வி அளிக்கப்படும்
ட்டம் இருக்கிறது. அந்தக் கல்வியைச் சொல்லிக் கொடுக்க மிகச் சிறந்த
டம் ஆலயம். அங்கு மக்கள் தாமாகவே விரும்பிச் செல்கிறார்கள். அப்படி
கள் தாமாகவே விரும்பிச் செல்லும் இடங்களிலே அந்தச் சூழ்நிலைகளைப்
பன்படுத்திக்கொண்டு, அந்த சமூகக் கல்வியைப் பரப்ப ஏற்பாடு செய்ய
ண்டும். அதற்கு புலவர்களுடைய பணியைப் பயன்படுத்திக்கொள்ளலாம்
ன்ற கருத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி நியமிக்கப்
கின்ற புலவர்களுக்கு வேறு சில மொழிகளும் தெரிந்திருக்க வேண்டும்.
வர்கள் ஓரிரு மொழிகளைக் கற்றுக்கொள்ளும் விதத்தில் அவர்களுக்குப்
யிற்சி அளிக்க வேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் நம்முடைய கோயில்களுக்கு

வரும்போது, அந்தக் கோயில்களின் சிறப்பை அறிந்துகொள்ள முடியாமல் திண்டாடுகிறார்கள். ஆகவே, இந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

தமிழில் வழிபாடு என்று சொல்கிறோம். ஆனால், தமிழ் நாட்டில் இருக்கும் கோயில்களிலேயே இது செம்மையாக நிறைவேற்றப்படவில்லை. தமிழ் நாட்டிலே உள்ள கோயில்களிலே அனைத்துக் கோயில்களிலும் தமிழ் வழிபாட்டுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். தமிழிலே என்று சொல்வதால் மற்ற மொழிகளிலே வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், தாய்மொழி மூலமாக தேவாரம், திருவாசகம் போன்றவற்றின் கருத்துக்களை எடுத்துச் சொல்லி வழிபடத் தகுந்த சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். ஆலயங்களிலே, அவைகளுக்கென்று ஏராளமான காலியிடங்கள் இருக்கின்றன. அந்தக் காலியிடங்களிலே கடைகள் வைக்க இடம் ஒதுக்குகிறார்கள். அதே சமயத்தில், பல இடங்களிலே பள்ளிக்கூடங்கள் நடத்தப் போதிய இடம் இல்லாமல் இருக்கிறது. மாணவர்கள் தவிக்கிறார்கள். ஆலயங்களுக்கு இருக்கும் அந்தக் காலியிடங்களை ஏன் பள்ளிக்கூடங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது! ஆகவே; காலியாக இருக்கும் ஆலயங்களின் நிலத்தை பள்ளிக்கூடங்கள் நடத்த பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலயங்களில் இப்போது நூல் நிலையங்கள் இல்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு முறை மதுரைக்குச் சென்றபொழுது அங்கே நூல் நிலையங்களில் புத்தகங்கள் இல்லை என்றுகூடக் குறிப்பிட்டார்கள். அனைத்து ஆலயங்களிலேயும் நூல் நிலையங்கள் ஏற்படுத்தி, புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும். அந்தந்த சுற்றுப்புற பெருமை, உள்ளூர் பெருமை, அந்த மாவட்டத்தின் பெருமைகளை எடுத்து விளக்கும் விதத்தில் புத்தகங்கள் அங்கே வைக்கப்பட வேண்டும்.

பெரிய கோயில்களில் அரும்பொருட் காட்சியகங்களை ஏற்படுத்த வேண்டும். Light and Sound என்று சொல்லக்கூடிய ஒலி ஒளிக் காட்சியை அமைப்பதன் மூலம் ஆலயங்களின் வருமானத்தை பெருக்கலாம். அரசினுடைய வருமானத்தையும் பெருக்கலாம். அந்த வருமானத்தை ஆக்கப்பணிகளுக்குப் பயன்படுத்தலாம் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய ஆலயங்களை நாம் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு தமிழ் நாட்டிலே இருக்கும் ஆலயங்களிலே எத்தனை ஆலயங்கள் தூய்மையாக இருக்கின்றன; எத்தனை ஆலயங்களில் தூய்மை நிலை நிறுத்தப்



படுகின்றது என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்ற நிலைமை இல்லை. எந்த ஆலயங்கள் மிகச் சிறப்பாக, சுத்தமாக, தூய்மையாக இருக்கின்றனவோ அங்கே செல்கின்ற பக்தர்கள் தான் ஆண்டவனை உண்மையாக வழிபடுகின்ற நிலைமை வரும். பல கோயில்கள் அசுத்தமாக இருக்கின்றன. இந்த நிலைமையைப் போக்கி ஆலயங்கள் தூய்மையாக இருக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இரத்தின பால்குருசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல, சிதம்பரம் கோயிலுக்குக் கோடி ரூபாய்க்கு மேல் நகைகள் சேர்ந்து இருப்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அக்கோயிலுக்கு ஊர் மக்கள் லட்சக்கணக்கான நிதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இப்படி நிதி அளித்தவர்களுக்கும், நிலங்களை எழுதிக் கொடுத்தவர்களுக்கும் கோயில் நிர்வாகத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லை. மேலும், இப்போது கேட்பாரற்றுக் கிடக்கின்ற இடங்கள்; சத்திரங்கள் ஏராளம் இருக்கின்றன. அவைகளையெல்லாம், தமிழக அரசு சொந்தமாக்கிக் கொள்ளும் வகையிலே ஒரு சட்டத்தைக்கூட இயற்றலாம். எங்கள் ஊரிலே கிழவீதியிலே மிகப் பெரிய சத்திரம் ஒன்று இருக்கிறது. லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானம் உள்ள சத்திரம் அந்தச் சத்திரம். ஆனால் 15, 20 ஆண்டுகளாக யாராலும் கவனிக்கப்படாமல் அது இருக்கிறது. உள்ளே நுழைய முடியவில்லை. பாழடைந்து போயிருக்கிறது. உள்ளே போனால் பாம்பு, தேள் இருக்குமோ என்ற பயமும் இருக்கிறது. அந்தச் சத்திரத்தைச் சீர்படுத்தினால் அங்கே ஒரு மேல்நிலைப் பள்ளியை நடத்தலாம். இதுபோன்ற பல இடங்களிலே "Unclaimed Properties" என்ற முறையில் ஏராளமாக சொத்துக்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒரு சட்டம் இயற்றி அதன் மூலம் அரசு எடுத்துக்கொள்ளலாம் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சரின் நிர்வாகம் எவ்வளவு சிறப்பாக நடைபெறுகிறது என்பதற்கு ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். எங்களது மாவட்டத்திலே ஓர் உயர்நிலைப் பள்ளிக்கு கோயில் நிலத்தைத் தரவேண்டி நன்றுபடி செய்ய வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கை இருந்து வந்திருக்கிறது. நான் காலை 9½ மணிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்து இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னேன். அவர் 10 மணிக்கு அறநிலைய ஆணையாளரைச் சந்திக்கச் சொன்னார். நான் அவரைச் சென்று சந்தித்தேன். 11 மணிக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

[திரு. பி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 ஏப்ரல் 20

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்தத் துறையை எவ்வளவு சிறப்பாக நிர்வகிக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டத்தான். இந்தச் செய்கையால் திருவந்திபுரம் ஊர் மக்கள் பெரு மகிழ்ச்சியடைகிறார்கள். இவ்வளவு வேகமாகச் செயல்படும் நிர்வாகத்தைப் பாராட்டுகிறார்கள். மற்ற வர்களுக்கு எல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக இந்தத் துறை இருக்கிறது. நான் சொல்லிய இந்தக் கருத்துக்களை எல்லாம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய ஒரு வேண்டுகோள் இது. இந்து அற நிலையங்களிலே இருந்து ஆலயங் களுக்குச் சொந்தமான பணத்தை கருணை இல்லங்களுக்காக நாம் செலவிடு கிறோம். 1975-76 தொடங்கி 1978-79 முடிய தாராளமாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆலயங்களுடைய பங்குத் தொகையாக ரூ. 32,70,747-78 பைசா கொடுத்திருக்கிறார்கள். அரசு மானியமாக ரூ. 10,90,399 கொடுத் திருக்கிறார்கள். இந்தத் துறை இது போன்ற செயல்களிலே ஈடுபட்டாலும்— அரசு மானியம் வழங்குகின்றது, அது வேறு ஆனால்—இந்து சமய அறக் கட்டளை, ஆலயங்களுடைய நிதியிலேயிருந்து செய்யப்படுகின்ற இந்தச் செயல் அந்த ஆலயங்களுடைய பெயரிலே இல்லை. அந்தப் பணத்தை ஆலயங் களிடமிருந்து எடுக்கிறோம். ஆனால் இந்த ஆலயங்களுடைய பணம் கருணை இல்லங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்று கூடச் சொல்ல முடியாத அளவுக்கு அக்கறையில்லாத நிலைமை இருக்கிறது, அது நல்லதல்ல. இது சமுதாயத்தை அவமதிப்பதாகும். ஆகவே, இந்நிலை தவிர்க்கப்படுவதற்குத் தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டும். வேறு எந்தத் துறை யிலும் இதுபோன்ற நிலைமைகள் இல்லை. ஆனால், இந்து சமய அறநிலையத் துறையிலே தான் இம்மாதிரி நிலைமைகள் இருக்கின்றன. பல ஆண்டுகளாக இந்த நிலைமை இருக்கிறது. நான் இந்த ஆட்சியைக் குறை சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. இந்த நிலைமைகள் களையப்பட வேண்டும்.

(பிற்பகல் 8-00)

கடவுளின் பெயரால் அல்லது ஆலயங்களின் பெயரால் இந்த இல்லங்கள் இருப்பது அவசியம். அப்படியில்லாமல் இருப்பது தவறான முன்னுதாரண மாக அமைந்துவிடும் என்பதை மீண்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, ஒன்றைக் குறிப்பிடுகிறேன். அண்மையில் நடைபெற்ற சுற்றுலா வளர்ச்சிக் கண்காட்சியைக் காணும் சந்தர்ப்பம் எனக்கு நேரிட்டது. உள்ளே சென்று பார்க்கும்போது, புகழ்பெற்ற தென்னாட்டு ஆலயங்களிலிருந்து வழி



1979 ஏப்ரல் 20] [திரு. க. இராமமூர்த்தி]

பாட்டுக்குரிய உற்சவ மூர்த்திகளைக் கொண்டுவந்து, வழிபாட்டுக்குரிய செப்புப் படிமங்களைக் கொண்டு வந்து, அந்தந்தத் திருக்கோயில்களில் அவை எப்படி அலங்கரிக்கப்பட்டு வைக்கப்படுகின்றன, அந்தத் தெய்வங்களுக்கு எவ்வாறு அர்ச்சனை, பூசை போன்றவை நடைபெறுகின்றன என்பதைக் காட்டினார்கள். அதை நான் மிகவும் வேதனையோடு இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது. அந்தக் கண்காட்சியில் அறநிலையத் துறையின் சார்பாக தஞ்சைப் பெரிய கோபுரத்தைப் போல் ஒரு மாதிரி அமைத்திருந்தார்கள். ஆனால் உற்சவ மூர்த்திகளைப் பொறுத்தவரையில், ஆலயங்களிலிருந்து அவை களைக் கொண்டுவரச் செய்து இங்கே காட்சிப் பொருளாக வைத்திருந்தார் கள். அந்தப் படிமங்களெல்லாம் மிகுந்த பாதுகாப்போடு வைக்கப்பட வேண்டியவை என்பது மட்டுமல்ல, மிகுந்த புனிதமாகக் காக்கப்பட வேண்டிய விக்கிரகங்கள். எனவே இந்த நிலையில் அந்த விக்கிரகங்களைக் கொண்டு வந்து பொதுமக்களுக்கு ஆலயங்களில் எவ்வாறு வழிபாடு நடத்தப்படுகிறது என்பதைக் காட்ட வேண்டியது அவசியம்தானா என்றும், அதற்கு இந்தப் புனிதமான விக்கிரகங்களை கொண்டு வரப்பட்டிருக்க வேண்டுமா என்பதும் எண்ணிப் பார்க்கப்பட வேண்டியவைகளாகும். பொதுமக்களுக்கு இந்த வழிபாட்டு முறைகள் தெரிய வேண்டுமென்றால் அல்லது நம்முடைய பண் பாட்டையும், நாகரிகத்தையும், கலாச்சாரத்தையும் அங்கே வருகிற மற்றவர் கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்தால், எப்படி தஞ்சைப் பெரிய கோயிலுக்கு ஒரு மாதிரி சமைத்தார்களோ அதைப்போல இந்த விக்கிரகங் களுக்கு ஏன் மாதிரி அமைத்திருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். பொதுமக்களுக்குக் காட்ட வேண்டுமென்பதற்காக விலை மதிப்பற்ற அந்த விக்கிரகங்களை இங்கே கொண்டு வந்து, பாதுகாப்பான நிலையானாலும் புனிதமற்ற நிலையில் வைக்க வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே இனியாவது இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகைப் பரிசோதனைகளுக்காக ஒரு அமைப்பு இருப்பதையும், அந்தப் பிரிவு சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நகைகளையும் மற்ற விலையுயர்ந்த பொருட்களையும் ஆய்வு செய்து மதிப்பிடும் பணியைக் கவனித்து வருகின்றது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் உரிமையோடு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஒன்றைக் கேட்டறிய விரும்புகிறேன். இப்படிப் பட்ட நகைப் பரிசோதனைப் பிரிவு அமைப்பதற்கு முன்னால் திருத்தணிச் சம்பவம் நடைபெற்றதா அல்லது திருத்தணிச் சம்பவத்திற்குப் பிறகு இந்த

அமைப்பு ஏற்படுத்தப்பட்டதா? சம்பவத்திற்கு முன்னாலேயே இந்த அமைப்பு இருந்து வருகிறது என்றால், இந்தத் துறை சரிவர செயல்படத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டைச் சுமத்த விரும்புகிறேன். திருத்தணிச் சம்பவத்திற்குப் பிறகுதான் இத்தகைய அமைப்பு உருவாக்கப்பட்டது என்றால், இந்தத் துறையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இனி மேலாவது இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க இப்பிரிவு உதவியாக இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களிலிருந்து வருவாய் சரியான முறையில் வருவதில்லை. திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்களிலிருக்கும் கடைகளில் பல ஆண்டுகளாக மிகக் குறைந்த வாடகையில் பலர் இருந்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்தக் குறைந்த வாடகையையும் சரியாகக் கொடுக்காமல் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பாக்கி வைத்திருக்கிற நபர்களும் இருக்கிறார்கள். ஒன்று அவர்களை அந்த இடங்களிலிருந்து விரட்ட வேண்டும் அல்லது அந்தக் கடைகள், சொத்துக்களுக்கான வாடகையை நியாயமான முறையில் நிர்ணயித்து வசூலிக்க வேண்டும். இதில் அரசாங்கம் விரைவில் ஒரு முடிவு காண வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில், அரசாங்கம் ஏதாவது ஒரு முடிவுக்கு விரைவில் வர வேண்டும். அரசாங்கம் கோயில்களின் அனைத்து நிலங்களையும் எடுத்துக்கொண்டு, அந்த நிலங்களுக்கான பணத்தைக் கொடுத்துவிட்டால், அந்தப் பணத்தை வங்கிகளில் போட்டு அதற்கு வட்டியாகக் கிடைக்கும் பணத்திலிருந்தே கோயில் திருவாகத்தையும் மற்ற நிகழ்ச்சிகளையும் நடத்த முடியும். இதைச் செய்யாமல் குத்தகைதாரர் சட்டத்தையும் நிறைவேற்றி வைத்துக்கொண்டு கோயில்களுக்கு வர வேண்டிய வருவாயைப் பெறாமல் இருப்பதும் இதனால் யாரோ சிலர் பயன்படுவதும், எந்த வகையிலும் நியாயமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலுள்ள மைலம் தேவஸ்தானம் பற்றிப் பேசப்பட்டது. அங்கே குறைகள் இருந்தால், எந்த விதமான நடவடிக்கை மேற்கொள்வதையும் நான் எதிர்க்கவில்லை. அந்த தேவஸ்தானத்தைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதியிலிருக்கும் பல அரசியல் கட்சிக்காரர்களின் காழ்ப்புணர்ச்சி காரணமாக பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கும் ஆளாகி அவைகளனைத்தையும் தாண்டி, இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தேவஸ்தானமாகும். அந்தப் பகுதி மக்களுடைய நன் மதிப்பிற்கு ஆளாகி



யிருக்கிற அந்த தேவஸ்தானத்தின்மீது குற்றச்சாட்டின்மீது நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம்தான் என்றால், அதை வரவேற்கிறேன். ஆனால் யாரோ சொல்கிறார்கள் என்பதற்காக நடவடிக்கை எடுப்பது என்றால், நான் மிகுந்த எச்சரிக்கை உணர்வோடு சொல்கிறேன், இதை மிகவும் ஜாக்கிரதையாக, மிகவும் கண்காணிப்பாக அரசு அணுக வேண்டும். உண்மையிலேயே அந்த தேவஸ்தானத்தில் தவறுகள் செய்யப்படுமானால், நடவடிக்கை எடுப்பது நியாயம். ஆனால் யாரோ சிலர் ஏதற்காகவோ எழுதுகிற காரணத்தால் அவைகளையெல்லாம் குற்றச்சாட்டுகளாகக் கருதி அணுகுவது முறையல்ல, நல்லதல்ல. இப்படிப்பட்ட சோதனைகளுக்கு பலமுறை அந்த தேவஸ்தானம் ஆளாகியிருக்கிறது. கடந்த 8, 10 ஆண்டுகளில் இப்படிப்பட்ட சோதனைக்கு உள்ளானதையும், தவறுகளுக்காளாகாத நிலையில் செயல்படுவதையும் நான் கவனித்துக் கொண்டு வந்திருக்கிறேன்.

அடுத்து, எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் ஒன்றை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், அந்தத் தகவல் தவறாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். சென்னையை அடுத்துள்ள மாங்காடு எவ்வளவு வேகமாக இன்றைய தினம் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது நமக்கெல்லாம் நன்கு தெரியும். அங்கேயிருக்கிற திருக்கோயில் அந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது. அந்தத் திருக்கோயிலில் உள்ள உண்டியல் பணம் தினந்தோறும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் அந்த உண்டியலிருந்து பணம் எடுப்பதில் பல தவறுகள் நடைபெறுகின்றன என்பதாகும். அந்த உண்டியலிலிருந்து பணம் எடுப்பது சரியான முறையில் இல்லை என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் மறுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். தவறுகள் நடந்தால் அதைப்பற்றி உடனடியாக கவனம் செலுத்தி, தவறுகள் சீர்திருத்தப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, ஆலயங்களைப் பொறுத்தவரையில், ஒன்றை மட்டும் குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பெரிய சக்தியுள்ள தெய்வங்கள் இருக்கும் ஆலயங்கள் என்று கருதப்படுபவைகளில் பெரும்பாலானவை தூய்மையற்று இருக்கின்றன. அவற்றின் சுற்றுப்புறம் சுத்தமாக இல்லை. அதற்குக் காரணம் அங்கே பெரும்பாலும் வருகிற கிராமப்புற பொதுமக்கள் அந்த இடங்களை அசுத்தமாகவும் தவறாகவும் பயன்படுத்துவதாயிருக்கலாம். தவிர்க்க முடியாத நிலை தான் என்றாலும், ஆலயங்களின் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியம். இந்தத் துறையின் பணத்தை

அதிகமாகச் செலவிட்டாவது கோயில்களையும், கோயில்களைச் சார்ந்த இடங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். அப்படி கோயில்களின் உள்ளேயும் வெளியேயும் சுத்தமாக வைத்துக்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோரி, மற்றவற்றை இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசிக்கொள்ளலாம் என்று கருதி, இதோடு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அவையில் வைக்கப்பட்டிருக்கும் அறநிலையத் துறையின் கொள்கைக் குறிப்பின்மீது எனது சொந்தக் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நமது நாட்டில் தோன்றிய ஆலயங்களெல்லாம் இந்த நாட்டின் பண்பாட்டின் சின்னங்களாக, கலாச்சாரத்தின் சின்னங்களாக நின்று வளர்ந்து வருகின்றன. கி.பி. 5 ஆம் நூற்றாண்டிலிருந்து—பல்லவர்களின் ஆட்சிக் காலத்திலிருந்து தொடங்கி, சோழர்கள் ஆட்சிக் காலம் வரை இந்த நாட்டுச் சமுதாயம் எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு செயல்பட்டு வந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இன்று இந்தத் திருக்கோயில்கள் காட்சியளிக்கின்றன.

எவ்வளவோ கட்டுப்பாடுகளையும் தணிக்கை முறைகளையும் உருவாக்கி, அசெம்பிளி, கவுன்சில் என்ற அமைப்பு முறைகளை உருவாக்கி, அவற்றின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து அப்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி எப்படிச் செலவழிக்கப்படுகிறது என்று கண்காணிக்க என்று அதற்குமொரு அமைப்பு முறையை உருவாக்கி வைத்துச் செயல்படும் இந்தக் காலத்தில், பொறியியல் துறையில் பெரிய நிபுணர்கள் என்று பெயர் பெற்றவர்களைக் கொண்டு கட்டுகிற கட்டிடங்களெல்லாம் புயல்களின் காரணமாகவும் பெரு மழையின் காரணமாகவும் சேதமாகிப் பாழாகிற நிலையைக் காண்கிறோம். அல்லது 10, 15 ஆண்டுக் காலத்தில் கட்டப்படுகிற கட்டிடங்களில் விரிசல்களும் வெடிப்புகளும் ஏற்படுவதைக் காண்கிறோம்.

அண்மையில் 1966 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட சென்னையிலுள்ள தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி ரூபாய் 65 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. அதில் எத்தனை வெடிப்புகள் இருக்கின்றன என்பது நமக்கெல்லாம் தெரியும். 3-வது மாடியில் நாம உட்கார்ந்திருந்தால், 6-வது மாடியிலிருந்து நீர் சொட்டுகிறது. அந்த நிலைமை





தலைநகரில் இவ்வளவு கண்காணிப்புகள் உள்ளடங்கிய இடத்தில் உண்டாகிறது. ஆனால் 7 ஆம் நூற்றாண்டில் பெரும்பாலான ஆலயங்கள் கட்டப்பட்டன என்றாலும், அவைகள் இன்றும் நிமிர்ந்து நின்று காட்சி அளித்து வருகின்றன. அப்போது இதைப்போன்ற பொறியியல் வல்லுநர்களும் கட்டிட அமைப்பு முறையும் இல்லாமல் இருந்தது. ஆனாலும் அப்போது கட்டிய கட்டிடங்கள் ஆலயங்கள் இன்றும் எவ்வளவு வன்மையாக நிற்கின்றன என்பதைப் பார்க்கிறபோது, இந்தச் சமுதாயம் எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு இந்தத் திருக்கோயில்களையெல்லாம் கட்டியிருக்கிறது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

தஞ்சைப் பெரிய கோயிலில் உச்சியில் இருக்கிற கல்லை எப்படித்தான் கொண்டு போய்ச் சேர்த்தார்களோ என்ற வியப்பு நமக்கு ஏற்படுகிறது. அப்படிப்பட்ட அமைப்பு ஒன்றை இப்போது நம்மால் கட்ட முடியாது. அந்த அளவுக்கு திறமைமிக்க வகையில் ஆலயங்கள் கட்டப்பட வேண்டுமென்றால், அப்போது ஆட்சியும் மக்களும் எந்த அளவுக்கு இருந்திருப்பார்கள் என்பதை நம்மாலே எண்ணித்தான் பார்க்க முடிகிறது. அவைகள் நமக்குப் பாடம் கற்றுத் தருகிற வகையில் அந்த அறநிலையங்களெல்லாம் பாதுகாக்கப்பட்டு, அறநிலையத் துறை செயல்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

(பிற்பகல் 8-10)

அதிலே இரண்டு கருத்துகள் இருக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த உணர்வோடு செயல்படுகிறார் என்பதை அறிந்து நான் மகிழ்கிறேன். ஆனால் 'அறம்' என்ற சொல்லைத்தான் தாங்கியிருக்கிறதே தவிர, அந்தத் துறையில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதா என்பது ஐயப்பாட்டிற்கு உரியதாகத் தெரிகிறது சில இடங்களில். எப்போதும் ரொம்பப் பெரிய ஆளோடு இருப்பவர்கள் எந்தத் தவறையும் செய்யலாம் என்று நினைப்பதுண்டு. கருடனைப் பார்த்தாலே பயந்தோடும் பாம்பு கருடனைப் பார்த்து, கருடா சவுக்கியமா என்பதைப் போல, ஆண்டவனோடு இருக்கிற ஆட்கள் கெட்டுப் போகிற நிலையை இன்று சமுதாயத்திலே பார்க்கிறோம். கெட்டுப் போயிருக்கிற சமுதாயத்தைத் திருத்த வேண்டிய பொறுப்பு இந்தத் துறைக்கு இருக்கிறது. ஆகவே இந்தத் துறை மிகச் சிரிய முறையில் சீர்திருத்தத்தைச் செய்து வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

இந்தத் துறையைப்பற்றி வாழ்த்துகிற அதே நேரத்தில், ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். கொள்கை விளக்கக் குறிப்பிலே தணிக்கைக் குழுவைப்பற்றி முதலிலேயே சொல்லியிருக்கிறார்கள். தணிக்கைக் குழுவில், அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கக் கூடாது என்பது என்னுடைய கருத்து. அந்தத் துறையைத் தணிக்கை செய்யப் போகிறவர்களுக்கும் அந்தத் துறைக்கும் சம்பந்தமே இருக்கக் கூடாது. அக்கவுண்டன்ட்-ஜெனரல் ஆபீசில் இருக்கக் கூடியவர்களைக் கொண்டு தணிக்கை செய்ய வேண்டும். அவர்கள் விஞ்ஞான ரீதியில் செய்கிற தணிக்கையே முறையாக இருக்கிறதா என்று தெரியவில்லை. இப்போதெல்லாம் கள்ளக் கணக்கு எப்படி வைத்துக்கொள்ளுவது என்பதுதான் திறமையாகச் சொல்லித் தரப்படுகிறது. தணிக்கை செய்ய வந்தால் வவுச்சர் இருக்கிறதா, கணக்குகள் சரியாக இருக்கின்றனவா என்று மட்டும் பார்க்கிறார்கள். முறையாக டெண்டர்களை விட டெண்டர்களுக்கென்று தனியாக பாடியிருக்கிறதா என்று பார்ப்பதில்லை. சாமான்கள் வந்திருக்கின்றனவா என்றும் பார்ப்பதில்லை. பில் இருக்கிறதா, கணக்கு சரியாக இருக்கிறதா என்று மட்டும் பார்க்கிறார்கள். ஆகவே தணிக்கை முறையில் பெரிய சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்தத் துறை ஆணையாளருக்குப் பயந்து தணிக்கை செய்யக் கூடிய நிலைமை இல்லாமல் தணிக்கை செய்யக்கூடிய முறையைக் கொண்டுவர அரசு பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்குப் பிறகு கொள்கை விளக்கக் குறிப்பின் இரண்டாவது பக்கத்தில் நிலுவையில் இருக்கும் நீதி விசாரணைகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு துணை ஆணையாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. துணை ஆணையாளர் எந்த அளவுக்கு ஒழுங்காக நீதி விசாரணை செய்வார் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. துணை ஆணையாளராக இருந்தபோது, அவர் எப்படி நடந்திருப்பார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே நீதித் துறையிலிருந்து டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் ஒருவரை இதற்காக நியமிக்க வேண்டும். நீதித் துறையில் அவர் தன்னுடைய 'லீனை' வைத்துக்கொண்டு இங்கு வந்து பணியாற்றும்படி செய்தால், நன்றாக இருக்கும். தணிக்கைக் குழுவும், நீதி விசாரணைக் குழுவும் அறநிலையத் துறையைச் செம்மையாக்க அமைக்கப்பட்ட அமைப்புகள். ஆகவே அந்தத் துறைக்குச் சம்பந்தமில்லாதவர்களை அக்குழுக்களில் நியமித்தாலொழிய, அந்தத் துறையைச் செம்மைப்படுத்த முடியாது. ஆகவே இதை முதலிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



ஆலயங்களில் பல்வேறு நிலையிலே பணியாளர்கள் வேலை பார்க்கிறார்கள். மனிதாபிமானத்தோடு அவர்களுடைய பணியைச் சீர்படுத்த அரசு முன்வர வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேவஸ்வங்களில் பணி புரியும் ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஏற்று அறிவித்திருப்பதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கோயில்களில் பணிபுரியும் ஊழியர்கள், அந்தத் துறையின் ஆணையாளர் வருகிறார் என்றால் எக்சிகியூடிவ் ஆபீசர் வருகிறார் என்றால், அரை வேட்டியைக் கட்டிக்கொண்டு அவர்களுக்கு முன்னால் நிற்பதைப் பார்க்கலாம். அந்த ஊழியர்களுக்கு இவர்கள்தானே ஆண்டவர். அவர்களுடைய பணியை ஒழுங்குபடுத்தி. அவர்களுக்கும் சம்பள விகிதத்தில் ஊதியம் தர அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஆலயங்களில் பணி புரியக்கூடிய ஊழியர்களுக்கு ஆறு மாதம் முதல் இரண்டாண்டுகள் வரையில் சம்பளம் கிடைக்காமல் இருக்கிறது. இதற்குக் காரணம் கேட்டால், கோயிலுக்கு வர வேண்டிய வருமானம் வரவில்லையென்று சொல்லுகிறார்கள். கடன் நிவாரணச் சட்டம், குத்தகை நிவாரணச் சட்டம் என்று இருப்பதால், வருவாய் சரியாக வரவில்லையென்று சொல்லுகிறார்கள். ஆனால் ஆண்டவனுக்குப் பூசை மட்டும் அடிக்கடி நடப்பதைபோலத் தெரிகிறது. ஆகவே அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எந்த வகையில் அவர்களுக்கு உதவலாம் என்ற கருத்து எனக்கு இருக்கிறதென்றாலும், நேரம் இல்லாத காரணத்தால், அதைச் சொல்லவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்களும், அந்தத் துறை அதிகாரிகளும் விரிவாக ஆராய்ந்து எல்லா ஊழியர்களும் பட்டினியின்றி சாப்பிட்டு வாழ்கிற முறையை ஏற்படுத்த வேண்டும்.

மேலும் இந்தத் துறையில் மாநிலம் முழுவதும் பெரிய அளவிலே சீர்திருத்தம் செய்ய வேண்டும். ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் வரக்கூடிய கோயில்களில் தனித் தகுதியுள்ள அதிகாரிகளை நியமிக்கிறோம். அவர்களுக்கு அரசு ஊதிய விகிதத்தில் சம்பளத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். மேலும் முதுநிலைப் பட்டியல் தயார் செய்து அந்தப் பட்டியலில் உள்ளவர்களுக்கு வரிசைப்படி பதவி உயர்வு அளிக்க வேண்டும். கும்பிடு போடுபவர்களுக்கு மட்டும் கொடுத்துவிடக் கூடாது. யாராக இருந்தாலும், ஒழுங்கு முறையிலே பணி மூப்புப் படி பதவி உயர்வு வழங்கவேண்டும். ஆண்டவன் அதிகமாகக் கும்பிடுபவர்களுக்குத்தான் அருள் கொடுக்கிறார்

என்று சொல்லுவார்கள். அதுபோல் அதிகமாகக் கும்பிடுபவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பது சரியல்ல. மேல்நாட்டு ஆங்கிலக் கவிஞர் அபூபென் ஆடம் என்ற ஒரு கவிதையை எழுதியிருக்கிறார். தேவதூதன் விட்டிலே உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தார். அவர் என்ன எழுதுகிறார் என்று இவர் கேட்டார். அதற்கு அவர், "ஆண்டவனை அதிகமாக நேசிப்பவர்களுடைய பெயர்களை எழுதுகிறேன்" என்றார். அதில் என்னுடைய பெயர் இருக்கிறதா என்று இவர் கேட்டார். அதற்கு அவர் "இல்லை" என்று சொன்னார். இவர் ரொம்ப வருத்தத்தோடு சென்றுவிட்டார். அடுத்த நாள் அதே நேரத்தில் இவர் வந்தபோது அவர் எழுதிக்கொண்டிருந்தார். அப்போது அவர் என்ன எழுதுகிறார் என்று இவர் கேட்டபோது, "ஆண்டவன் ரொம்ப விரும்புகிற ஆட்களின் பெயர்களை எழுதிக் கொண்டிருக்கிறேன்" என்றார். உடனே இவர் அதிலே என்னுடைய பெயர் இருக்கிறா என்று கேட்டார். "ஆமாம், உன்னுடைய பெயர் முதலிலேயே இருக்கிறது" என்றார். அப்படிப்பட்ட சூழ்நிலை அறநிலையத் துறையில் உருவாக வேண்டும். பணி மூப்பின் அடிப்படையிலே அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டும். அதிகமாக சிபார்சு பெற்றுக்கொண்டு வருபவர்களின் பெயர்களை அகற்றி, முறையாகப் பதவி உயர்வு அளித்து ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆலயங்களை நிர்வகிப்பதற்காக பதிமூன்றே முக்கால் இலட்சம் ரூபாயை அரசு கொடுத்திருக்கிறது. முன்பு தன்னிச்சையாக இயங்கும் போர்டு இருந்து அந்த ஆலயங்களைப் பாதுகாத்து வந்தது. இப்போது அது ரத்து செய்யப்பட்டு, பிற மாவட்டங்களில் இருப்பதைப் போலவே, ஆலோசனைக் குழு ஒன்று போடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கக்கூடிய கோயில்களை அங்குள்ள ஊர்க்காரர்களே பாதுகாத்து வருகிறார்கள். இப்போது எல்லா நகரங்களிலும் காஸ்மோபாலிட்டன் சூழ்நிலை வந்துவிட்டது. கிராமத்திற்கு ஒரு சாதி, ஒரு சமுதாயம் இருக்கும். அவர்களுக்காக கோயில்கள் இருக்கும். அந்தக் கோயில்களின் நிர்வாகத்தை அந்த ஊர் மக்களே ஜனநாயக ரீதியில் மிக நல்ல முறையிலே நிர்வகித்து வருகிறார்கள். இதிலே அரசு தலையிட ஆரம்பித்த பிறகு, பல்வேறு குழப்பங்கள் வருகின்றன. கிராமங்களில் 49 வீடுகள் இருந்தால், 90 வரி இருக்கும். 3 வருடத்திற்கு ஒரு முறை அவர்கள் கூடி பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து நிர்வாகத்தை நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட கோயில்களுக்கு 200 ரூபாய் வருமானம் இருந்தால், 2 சதவீதம் வரி என்றும் ஆயிரம் ரூபாய் வருமானம் இருந்தால் இவ்வளவு சதவீதம் வரி என்றும் 7 சதவீதம் வரையில் வரி விதிப்பார்கள். பிறகு ஊரிலே தகராறு





ஏற்பட்டால், அரசுக்குத் தெரிவிக்கிறார்கள். பிறகு அரசே அவற்றை ஏற்றுக் கொள்ளுகிறது. அரசு ஏற்றுக்கொள்ளாத நேரத்தில் அவர்களே செம்மையாக நிர்வகித்து, அதிலிருந்து வரும் வருமானத்தில் அந்த ஊரில் பள்ளிக்கூடம் கட்டுவது போன்ற பொதுப் பணிகளைச் செய்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி வெள்ளி விழா கொண்டாடியிருக்கிறது. அங்கே 2,500 மாணவர்கள் இருக்கிறார்கள். முதுகலைப் பட்டப் படிப்பு அங்கே இருக்கிறது. ஆராய்ச்சி சென்டரையும் வைத்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரி அங்கே இருக்கக்கூடிய கிராம நிர்வாகத்தினரால் நடத்தப்படுகிற நிதியிலிருந்து

(பிற்பகல் 8-20)

நடத்தப்படுகிறது. ஒவ்வொரு ஊரிலும் 5 ஆயிரம் ரூபாய் ஷேர் கொடுத்து, அப்படி ரூபாய் 7 லட்சம் ஷேராக, 25 ஆண்டுகளுக்கு முன்னாலே பெற்று அந்தக் கல்லூரியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படி கன்னியாகுமரி மாவட்டத்திலே சுமார் 2 ஆயிரம் பேர்களுக்கு பலனளிக்கும் விதத்தில் இந்தப் பள்ளிகள் நடந்துகொண்டிருக்கின்றன. நெருக்கடி காலத்திலே, தமிழ் நாடு முழுவதும் இந்தக் கோயில்களிலே நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் எல்லாம் தி.மு.க.வால் நியமிக்கப்பட்டவர்கள், அதனாலே அவர்களையெல்லாம் மாற்ற வேண்டுமென்று, நெருக்கடி கால அரசு ஒரு கொள்கை முடிவு செய்து, அந்த நியமனங்களையெல்லாம் ரத்து செய்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதுமாதிரி நடப்பதில்லை. அங்கே இருக்கக்கூடிய அத்தனை அரசு கோயில்களுக்கும் ஒரு போர்டு வந்திருக்கிறது. அங்கு எலக்டெட் ரெப்பிரசன்டேடிவ்கள்தான் இருக்கிறார்கள். 3 வருடங்களாக அந்த முறைதான் இருக்கிறது. நல்ல கண்காணிப்பு இருந்துகொண்டிருக்கிறது. அந்த ஊரிலுள்ள எல்லா நிறுவனங்களையும் நடத்திக்கொண்டிருக்கிறது. அரசு செய்யவேண்டிய பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. அதை எடுத்துவிட்டார்கள். அந்த வேலையையெல்லாம், வில்லேஜ் ஆபீசர் ஒருவரிடம் விட்டிருக்கிறார்கள். அவர்கள் தான் அதற்கு 'ஃபிட் மேன்' என்று சொல்கிறார்கள். வில்லேஜ் ஆபிசர்கள் பட்டா போட்டுக் கொடுக்க பணம் வாங்குகிறார்களே, அதுபோல, இதிலேயும் செய்கிறார்கள். இதைத் தான் நான் அரசுக்கு முன்பு சொல்லியிருக்கிறேன். குறிப்பாக எனது ஊரிலே நடக்கக்கூடிய நிர்வாகம் பற்றி மாத்திரம் தனியாக எழுதி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூட அனுப்பியிருக்கிறேன். அது உண்மையா என்று பரிசீலனை செய்ய வேண்டும். உண்மையானால் அரசு நடவடிக்கை எடுத்தால் போதும் என்று சொல்லியிருக்கிறேன். எப்போதும் பரிசீலனை செய்யலாம். அதுமாதிரி பல கோயில்கள் இருக்கின்றன. தாங்களாகவே

சிறப்பாக இயங்கக்கூடிய அமைப்புகளிலே, முறைகளிலே அரசு தலையிட்டு அவற்றை மாற்ற வேண்டாம். அப்படி ஒழுங்காக நடக்கவில்லை என்றால், அரசு தலையிட்டு அதை ஒழுங்குபடுத்தலாம் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நம்முடைய ஆலயங்கள் இருக்கின்றன. அந்த ஆலயங்களிலே இருக்கக்கூடிய நகைகளைக் கண்காணிப்பதற்கு அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். முதலிலே நான் என் கருத்தைச் சொல்கிறேன். என்னுடைய கட்சிக் கருத்தாக நான் இதைச் சொல்லவில்லை. ஒரு சம்பவத்தை மாத்திரம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். திருவாங்கூர் சர்க்கார் என்று இருந்தது. இப்போது இல்லை. அதுவே இப்போது கேரள மாநிலமாக இருக்கிறது. திருவாங்கூர் மாநிலமாக இருந்தபோது, அந்த நாட்டினுடைய ஆட்சித் தலைவர் மதத் தலைவராகவும் இருப்பார்கள். இங்கிலாந்திலே கூட அந்த நாட்டின் மன்னராக இருப்பவர்தான் பொலிடிக்கல் ஹெட் ஆகவும் இருப்பார்கள், அவர்களே ரெலிஜியல் ஹெட் ஆகவும், எக்ளெஸியாஸ்டிகல் ஹெட் ஆகவும் இருப்பார்கள். அதுபோல திருவாங்கூர் நாட்டினுடைய மகாராஜா இந்து மதத் தலைவராகவும் இருப்பார். அவர் காலத்திலே அந்தத் திருவாங்கூர் கோயில்கள் எல்லாம் அவருடைய நேரடிப் பார்வையிலே இருந்தன. அவர் அங்கே போய் அந்த நகைகளை, விஞ்சிய நகைகளை எடுத்து வந்து அரசாங்கத்திலே வைத்திருப்பார்கள், பாதுகாப்பார்கள். ஆலயங்களுக்குத் தேவையான குறைந்த அளவு நகைகளை வைத்துக்கொண்டு, மீதமுள்ள நகைகளை எடுத்துவந்து ஆலயங்களுடைய நல்ல பணிகளுக்குப் பயன்படுத்துவார்கள். அங்கே எவ்வளவு களவு போய்க்கொண்டிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். அங்கே கண்காணிப்பாளர்கள் இருக்கிறார்கள். அவருடன் பாதுகாவலுக்கு இருப்பவரும் இருப்பார். அவரும் அவருக்குக் கூட்டாளியாகி விடுவார். இந்த விஷயம் எங்களுக்குத் தெரிய 2 வருடங்கள் ஆகும். அதற்குப் பிறகு அதை அரசுக்குச் சொல்லிய பிறகு, ஆக்ஷன் எடுக்க ஒரு வருடம் ஆகும். அந்த நேரத்தில் அந்த நகையே இருக்காது. அந்தச் சூழ்நிலையில் இவ்வளவு பெரிய நகைகளை அங்கே வைத்திருந்தால், ஒரு நாள் அவைகளையெல்லாம் போலி நகைகளாகக் கூட மாற்றிவிடுவார்கள். நகைகள் ஒரு சவரன் ரூ. 800-க்கு விற்கிறது. 10 கிராம் நகைகள் ஆயிரம் ரூபாய்கூட விற்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் யாருக்குத்தான் 'டெம்ப்டேஷன்' வராது. கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பதி சாரம் என்று 108 திருப்பதிகளிலே ஒன்றாக ஒரு திருப்பதி இருக்கிறது. அங்கே கோயிலில் ஆண்டவனுக்காகச் செய்த ஒரு வைரக் கிரீடம் இருந்தது. அதன் மதிப்பு கிட்டத்தட்ட 48



லட்சம் ரூபாய் என்று சொல்கிறார்கள். அங்கே இருந்த பூசாரியே அதை க்ளோஸ் பண்ணிவிட்டார். ஆகம விதிகளின்படி, அந்தக் கோயில்களில் நம்பூதிரி என்றவர்களைத்தான் பூசாரியாகப் போடவேண்டும் என்ற முறை இருக்கிறது. ஒரு நாள் அந்தக் கோயில் திறந்து கிடந்தது, ஆனால் அங்கே கிரீடம் இல்லை. பிறகு நம்முடைய போலீஸ் இலாகாவினர் அந்தக் களவு செய்தவரை கோழிக்கோட்டிலே போய் பிடித்துவிட்டார்கள். எனினும் அந்த நகையில் ஏதோ கொஞ்சம்தான் கிடைத்தது. இதைச் சொல்வதால் பக்தர்கள் மனம் புண்படக்கூடாது. இந்த முறையை மாற்றியமைக்க வேண்டும். இந்த மாதிரியெல்லாம் ஆண்டவனுடைய பொருள்கள் களவு போவதை அவர்களால் சகிக்க முடியாது. ஆக மொத்தத்தில் களவு போவதைவிட அதை நல்ல பணிகளுக்குப் பயன்படுத்தலாம். இதை நான் ஒரு அழுத்தமான கருத்தாகச் சொல்லவில்லை. ஆனால் இந்த நியாயத்தை நாட்டு மக்கள் மத்தியிலே உருவாக்க வேண்டுமென்பதற்காக, ஒரு வித்தாக இருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இந்தக் கோயில்கள் பணியை நல்ல முறையில் செய்ய வேண்டும், அந்த நகைகள் நல்ல முறையில் பயன்பட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள்கூட குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆலயங்களை நன்றாக நிர்வகிக்க வேண்டும். எனக்கு ...த்திலே பற்று இருக்கிறதோ இல்லையோ அல்லது அமைச்சர் அவர்களுக்கு ...ருக்கிறதோ இல்லையோ அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இறைவன் ...ருக்கக்கூடிய கோயில் சுற்று வட்டாரங்கள் சுத்தமாக இருக்க வேண்டும். ...து ஒரு 'சாங்க்டம் சாங்க்டோரம்' என்று சொல்கிறோம். அது புனிதமான ...டம். அங்குள்ள புனிதத்துவம் காப்பாற்றப்பட வேண்டும். அங்கு கடவுள் ...ம்பிக்கையுள்ளவர்கள்தான் போக வேண்டும் எல்லோருமே போய் அங்கே ...சுத்தப்படுத்த வேண்டாம். கேரளாவிலே சுத்தமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் கன்னியாகுமரி மாவட்டத்தில் அப்படித்தான் வைத்திருக்கிறார்கள். பக்தர்கள் கோயில்களுக்கு வரும்போது, குளித்துவிட்டு ...ட்டையைக் கழட்டிக்கொண்டுதான் கோயில் உள்ளே வருவார்கள். திரு...ாங்கூர் மகாராஜாவே கூட கோயிலுக்கு வரும்போது குளித்துவிட்டு ...ட்டையைக் கழற்றிவிட்டுத்தான் கோயிலுக்குள்ளே வருவார்கள். இன்றுகூட ...க்சலைட்டுகள்கூட அவரைக் கண்டு ஒதுங்கிப் போவார்கள். அப்படி அவர் ...விடம் மரியாதை காட்டுவார்கள். அவர் சாமிக்கு முன்னால் பாதத்திலே ...ழுந்து வணங்கிவிட்டுப் போவார்கள். அந்தப் பண்பாட்டைக் குலைக்காத ...ளவுக்கு அங்கே போகலாம். அந்தக் கோயிலின் தன்மை கெடாமல் பண்...ாட்டை மாற்றாமல், அதை வளர்க்க வேண்டும்.

(திரு. ம. சங்கரலிங்கம்) [1979 ஏப்ரல் 20

கருணை இல்லங்களைப்பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவைகளைப்பற்றி நாம் எல்லாம் அறிந்திருக்கிறோம். அங்கே இருக்கின்ற மாணவர்களுக்கு ரூ. 50 கொடுக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி வாழ்வார்கள்? மூன்று வேளைக்கும் சேர்த்து ஒன்றே முக்கால் ரூபாய் அவர்களுக்குக் கிடைக்கிறது. அதை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி வாழ முடியும்? மாவட்டத்திற்கு ஒரு கருணை இல்லம் என்று மாற்றி, பல இல்லங்களின் வருவாயைச் சேர்த்து, இந்தக் கருணை இல்லங்களை, குழந்தைகளை அழைத்து வந்து கற்பிக்கின்ற பள்ளிகளாக மாற்றி, அவர்களுக்கு தொழிற் கல்வியும் அளித்து உதவி செய்ய வேண்டும். அவர்களை சமய உணர்வைப் பெற்ற சிறந்த மனிதர்களாக மாற்றிவிட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கோயில்களில் அறங்காவலர்களாக எங்கள் கட்சிக்காரர்கள் இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலே போடவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அறங்காவலர்களை நியமிப்பதற்கு ஒரு தனிக்குழு போட்டிருக்கிறார்கள். சில வேளைகளில் அறங்காவலர் கட்சிக்காரராகக்கூட இருக்கலாம். தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளில் அப்படி வந்துவிடலாம். நான் சொல்வது 50 வயதிற்கு மேற்பட்டவர்களை, கட்சிக்காரர்களாக இல்லாதவர்களை முடியும் என்றால் போடுங்கள். அப்படிப் போட்டால், மிகவும் நல்லதாக இருக்கும். உங்களிடம் வந்து, "எங்களைப் போடுங்கள். நாங்கள் கட்சியை வளர்க்கிறோம்" என்று கேட்பார்கள். எங்களைப் பொறுத்து, அந்த மாதிரியெல்லாம் நாங்கள் கட்சியை வளர்க்க வேண்டிய நிலையில் இல்லை. நாங்கள் கூட்டுறவுத் துறையையோ, அறநிலைய அறங்காவலர்கள் பதவியை வைத்தோ கட்சியை வளர்க்க வேண்டிய நிலையில் இல்லை. அறங்காவலர்களைப் போடுவதில் பல சங்கடங்கள் இருக்கும், அதையெல்லாம் தவிர்க்க முடியுமா என்று பார்த்துச் செய்யுங்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நேரம் இல்லாத காரணத்தால், இந்த கருத்துக்களை மட்டும் சொல்லி, அமைகிறேன் வணக்கம்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்காக அரசின் சார்பிலே, அறநிலையத் துறையின் சார்பிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 20] [திரு. இராம. வீரப்பன்]

ஏற்கெனவே நேரமாகிவிட்டது. மாலை 4 மணியிலிருந்து மாண்புமிகு அங்கத்தினர்கள் உட்கார்ந்து பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் மீண்டும் உங்களுக்குப் பெரும் சுமையாக நான் நிற்கமாட்டேன், நீங்களும் அதை எதிர்பார்க்கமாட்டீர்கள் என்ற நம்பிக்கையோடு, இந்த அறநிலையத் துறையினுடைய நிர்வாகத்தைப்பற்றி ஓரளவுக்கு பல்வேறு உறுப்பினர்களும் நல்ல நம்பிக்கையைத் தெரிவித்து இருக்கின்றார்கள் என்ற அடிப்படையிலே, எனக்கும் நீண்ட விளக்கங்களைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்ற நிலையிலே சுருக்கமாக மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய சில கருத்துக்களுக்கு மட்டும் விளக்கங்களைக் கூறி நான் முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 8-30)

இன்றைக்கு அறநிலையங்கள்பற்றி ஒரு சிறிய புள்ளி விவரத்தை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பது பலனுள்ளதாக இருக்குமென்று கருதுகிறேன். அதை நான் சட்டமன்றப் பேரவையிலும் தெரிவித்தேன். அதை மேலவை உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழகத்திலே நாம் இதுவரை கணக்கெடுத்திருக்கிற, கணக்குக்கு வந்துள்ள கோவில்கள் சுமார் 51,883. இதிலே அறநிலையத் துறையினுடைய ஆட்சிக்கு உட்பட்ட கோவில்கள் 24,605. இவைகளிலே ஆண்டுக்கு மொத்த வருமானம் 15 கோடியே 20 லட்சம் ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தக் கோவில்களிலே 200 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை வருமானம் வரும் கோவில்கள் 1,632; 300 ரூபாயிலிருந்து 500 ரூபாய்வரை வருமானம் வரும் கோவில்கள் 4,971; 500 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய்வரை வருமானம் வரும் கோவில்கள் 6,846. ஆக சுமார் 1,000 ரூபாய்க்கும் உட்பட்டு வருமானம் வரும் கோவில்களின் எண்ணிக்கை 13,449. 1,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய்வரை வருவாய் வரும் கோவில்கள் 8,331; 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய்வரை வருவாய் வரும் கோவில்கள் 1,419; 10,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாய்வரை வருமானம் வரும் கோவில்கள் 712; 20,000 ரூபாய் முதல் 50,000 ரூபாய்வரை வருவாய் வரும் கோவில்கள் 417; 50,000 ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வரை வருமானம் வரும் கோவில்கள் 127; ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டு வருவாய் வரும் கோவில்கள் 130. இந்தக் கோவில்களுடைய மொத்த வருமானம் 15 கோடியே 20 லட்சம் ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

[திரு. இராம. வீரப்பன்] [1979 ஏப்ரல் 20

இந்த வருமானம் எப்படி வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். நிலங்களின் மூலம் 5½ கோடி ரூபாய் வருகிறது. பக்தர்கள் அளிக்கும் காணிக்கை, அர்ச்சனைக் கட்டணம், உண்டியல், அபிஷேகக் கட்டணம் என்ற பல்வேறு முறைகளிலே ஆண்டுதோறும் பெருகி வருகிற பக்தர்கள் தந்திருக்கின்ற தொகை 5½ கோடி ரூபாய். அறநிலையங்கள் கட்டிடங்களைக் கட்டி, அதன்மூலம் வருகிற வாடகை 1 கோடி ரூபாய். . அவ்வப்போது வருகிற வருமானத்தை வங்கிகளில் சேர்த்து வைத்து, அதன் மூலம் வருகிற வட்டித் தொகையும், அரசாங்கம் தரும் உதவித் தொகையும் சேர்த்து 2 கோடியே 40 லட்சம். இப்படி 14 அல்லது 15 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. இதிலே, ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 14,35,45,250 ரூபாய் செலவாகிறது. இதுதான் இன்றைக்கு தமிழகத்திலுள்ள அறக்கட்டளைகள், கோவில்கள் ஆகியவற்றின் வரவு செலவு நிலவரமாகும்.

இதிலே பணியாற்றுகிற தொழிலாளர்கள், ஆலய ஊழியர்கள் என்று நாம்
எடுத்துக்கொள்வோமானால், 51,000-க்கும் மேற்பட்டவர்கள் ஆலய ஊழியர்கள்
என்று வருகிறார்கள். சுமார் 30,000-க்கும் மேற்பட்டவர்கள் குருக்கள்களாக
இருக்கிறார்கள். அதை விட்டுவிட்டு நாம் பேசிக்கொண்டிருக்கிறோம்.
மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், அவர்களை விட்டுவிட்டார்.
கிட்டத்தட்ட 90,000 குடும்பங்கள் ஆலயங்களின் வருமானத்தை நம்பி
வாழ்ந்துகொண்டிருக்கின்றன. இதிலே 5 அல்லது 6 கோவில்கள்—5 லட்சத்
திற்குமேல் வருவாய் உடைய கோவில்களில் இருக்கும் ஊழியர்கள், அரசாங்
ஊழியர்களுக்குத் தருகிற சம்பளத்தைத் தாருங்கள் என்று கேட்டார்கள்.
கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசு நடவடிக்கை எடுத்
வருகிறது. ஆணையரிடத்தில் விவரம் கேட்டிருக்கிறோம். ஒரு கோவில்
னுடைய வருமானத்தில் 30 சதவிகிதம் ஊழியர்களுக்குச் சம்பளமாகக் கொடு
கலாமென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தாண்டிப் போகுமா என்
விவரத்தைக் கேட்டிருக்கிறோம். விரைவிலே அதுகுறித்து முடிவெடுக்
இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்
பினர் திரு. நல்லசிவன் அவர்கள், கட்சி உணர்வோடு, தாங்கள்தான் ப்ரொப
பஷனல் லேபர் லீடர்ஸ் என்று சொன்னார்கள். திருச்செந்தூரிலே சங்க
நடத்தும் வக்கீலும் ப்ரொபஷனலாக மாறிக்கொண்டிருக்கிறார். ப்ரொ
ஷனல் லேபர் லீடர்களாக வக்கீல்கள், டாக்டர்கள் எல்லோரும்தான் வ
வார்கள். அப்படி திருச்செந்தூரைச் சேர்ந்த வக்கீலும் வரலாம். நா
சொல்லுகிற 90,000 ஊழியர்களையும் அரசும், அறநிலையத் துறையு
கவனித்துக்கொண்டிருக்கிறது. திருச்செந்தூரில் இருக்கிறவர், 5 கோவில்களி



1979 ஏப்ரல் 20] [திரு. இராம. வீரப்பன்]

இருப்பவர்களைக் கவனியுங்களென்று சொல்லுகிறார். இது சரியா
என்பதை முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு திரு. திராவிடமணி
அவர்கள் திருப்பணி செய்வது பற்றிச் சொன்னார்கள். எதிர்க்கட்சித்
தலைவரவர்கள், சொந்தப் பொறுப்பிலே கருத்துக்களைச் சொல்கிறேன்
என்று மிக ஜாக்கிரதையாகச் சொன்னார்கள். ஆனால் அவர் சொல்ல
வில்லை, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு.
திராவிடமணி அவர்கள் ஆலயங்களுக்குத் திருப்பணி செய்ய வேண்டும்,
இன்னும் அதிகமாகச் செலவு செய்ய வேண்டுமென்று சொல்வதைப் பாராட்டு
கிறேன். எங்கேயிருந்து திருப்பணி செய்வது என்பதில்தான் பிரச்சினை
வருகிறது. 99,000 பேர்கள் அரை வயிறு, கால் வயிறு பட்டினியுடன் பணி
யாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதா?
2,000 ரூபாய் என்று அறிவித்திருப்பது கிராமத் தேவதைகளின் கோவில்
களுக்குத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற கோவில்
களுக்கு 30 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மாங்காடு கோவில்பற்றி
மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
சொன்னார்கள். அந்தக் கோவிலுக்கு 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்
கிறது. அது இப்போது மிகப் புகழ் பெற்றுவரும் கோவில். அதற்கு
மேலே அதில் நான் நுழைய விரும்பவில்லை. அதனால் பல்வேறு சிக்கல்கள்,
வசதிக் குறைவுகள் ஏற்படுவதாகச் சொல்லுகிறார்கள். அதையும் சொல்லி
விடுகிறேன். மக்கள் பெருவாரியாகக் கூடுகிற கோவில்கள் இருக்கும் கிரா
மங்களை டவுன்ஷிப்பாக்க வேண்டுமென்ற அரசின் கொள்கைக்கிணங்க,
திருவேற்காட்டை டவுன்ஷிப்பாக்கியிருக்கிறோம். கோவில்களின் உள்ளும்
புறமும் தூய்மையாக வைக்கவும், மற்ற வசதிகளைச் செய்யவும், பஞ்சாயத்
தால் முடியாது என்ற நிலையுள்ள கிராமங்களை அரசின் நேரடிப் பொறுப்
பிலே ஏற்று, வசதிகளைச் செய்ய வாய்ப்பு ஏற்படுமென்ற காரணத்தால்,
அந்த முடிவை எடுத்திருக்கிறோம். இன்றைக்கு 60,000 ரூபாய் என்று
கிராமக் கோவில்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களிலுள்ள,
குறிப்பாக தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்கள் உள்ள பகுதிகளிலுள்ள
கோவில் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என்று அறநிலையத் துறை தருகிறது.
அத்துடன், அவர்கள் தங்கள் உடலுழைப்பைத் தந்து உதவ வேண்டும்.
அதற்கு மேலும், நிதி தேவையானால், அரசு பரிசீலிக்குமென்பதையும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

சொத்துக்களைப் பொறுத்தவரையில், இரண்டு விதமான சொத்துக்கள்
இருக்கின்றன. நிலங்களிலிருந்து வரும் வருமானம்,நான் மிகப் பெரிய
வருமானம், அதன்மூலம் 5½ கோடி ரூபாய் வருகிறது. அப்படி அதன்

[திரு. இராம. வீரப்பன்] [1979 ஏப்ரல் 20

மூலம் 5½ கோடி ரூபாய் வந்தால், அதற்கு வருமானம் என்று பெயர்
இதுவரையில் 22 கோடி ரூபாய் வராமல், பாக்கியாக இருக்கிறது. இதற்கு
வருமானம் என்று பெயர் தருவதா என்பதைச் சொல்ல, வார்த்தையைப்
புதிதாகக் கண்டுபிடித்தாக வேண்டும். அடுத்த சொத்து, அறநிலையக்
கட்டிடங்கள். உள்ளபடியே இதைப்பற்றி மிகப் பெரிய மகிழ்ச்சி, நம்மு
டைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திண்டிவனம் இராமமூர்த்தி
அவர்கள், ஒரு ஆதரவான வார்த்தையைச் சொன்னார் என்பதுதான்.
வாடகைகளைத் தராமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள், தக்க நடவ
டிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். வழக்கமாக எல்
லோரும் அறநிலையத் துறையைப் பாராட்டிப் பேசுகிறபோது, ஒரு புறத்
திலே அறநிலையங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்லுவார்கள்.
இன்னொருபுறம், நிலத்தைப் பிரித்துக் கொடுத்து, தீர்த்துவிடுங்கள் என்று
சொல்லுகிறார்கள். 5 ரூபாய், 10 ரூபாய் வாடகையை உயர்த்தினால், உயர்த்
தாதே என்று சொல்லுகிறார்கள். இன்னொரு புறம், குத்தகை பாக்கி
இருக்கிறதே, கொடுக்கக்கூடாதா என்று கேட்டால், எப்படிக் கொடுப்பது
என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்லுகிறார்கள்.
இந்த வருஷம் வாங்கிக்கொண்டு, மற்றதைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று
சொல்கிறார்கள். 5 கோடி ரூபாயை வாங்கிக்கொண்டு, 15 கோடி ரூபாயைத்
தள்ளுபடி செய்வது என்றால், எப்படி அறநிலையங்களைப் பாதுகாக்க
முடியும்? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு உறுப்
பினர் திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும் சொன்னதுபோல, நம்
நாட்டின் பெருமையைச் சொல்லும் இந்தக் கலைச் செல்வங்கள் இல்லை
யென்றால், தமிழின் பெருமை, தமிழ் இலக்கியத்தின் பெருமை, தமிழி
னத்தின் பெருமை, என்றெல்லாம் சொல்வதற்கு வேறு சின்னங்களே
கிடையாது. 90,000 குடும்பங்கள் வாழ்ந்தாக வேண்டும். அரைப்
பட்டினி, கால் பட்டினி என்று செத்துக்கொண்டிருக்கிறார்களே, அவர்
களுக்குச் சம்பளத்தை உயர்த்துங்கள், அவர்களும் தொழிற் சங்கம் வைத்து,
போராடும் நிலைக்கு உள்ளாக்காதீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்
திரு. நல்லசிவன் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இப்போது அவையில்
அவர்கள் இல்லை. யார் தொழிற் சங்கம் வைத்தாலும், எந்தத் தொழிலா
ளர்கள் போராடினாலும், அதைக் கண்டு அரசு அச்சப்படுவதில்லை
நியாயமான கோரிக்கைகள், எப்போது, யார் மூலமாக வந்தாலும் பரிசீலிக்
கிறோம்.



1979 ஏப்ரல் 20] [திரு. இராம. வீரப்பன்]

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவஸ்வம் போர்டில் பணியாற்றிய ஊழி
யர்களுக்கு, அங்கே அரசாங்க ஊழியர்கள் என்று அங்கீகரிக்கப்பட்டவர்
களுக்கு, இதுவரை உரிமைகள் தரப்படாமல் இருந்து, இப்போதுதான் அந்த
131 ஊழியர்களை அரசாங்க ஊழியர்களாக எடுத்துக்கொள்கிறோமென்று
அரசு அறிவித்திருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட சூழ்
நிலையில், ஆலயச் சொத்துக்களைப் பாதுகாக்க, எந்தக் கட்சியைச் சார்ந்த
வர்களாக இருந்தாலும், அனைவரும் சேர்ந்து முயற்சி எடுத்துக்கொள்ள
வேண்டும். அதற்கான காரியங்களையும், நடவடிக்கைகளையும் எடுக்கும்
போது, குறுக்கே வந்து நிற்கக்கூடாது. ஆளுக்கு ஒரு ஏக்கராகக்
கொடுத்து விடுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன்
அவர்கள் சொன்னார்கள். 6 லட்சம் ஏக்கர்கள் இருக்கின்றன, அதை ஆறு
லட்சம் பேர்களுக்குக் கொடுத்துவிடுங்கள் என்று சொன்னார்கள். இப்போது
இருக்கிற நிலைமை என்னவென்றால், எடுத்திருக்கிற கணக்குப்படி 6,07,631
ஏக்கர்கள் இருக்கின்றன. அதில் நஞ்சை 2,27,617 ஏக்கர்கள், புஞ்சை
3,80,014 ஏக்கர்கள். ஆக மொத்தம் 6,07,631 ஏக்கர்கள். இப்போதே
குத்தகை எடுத்திருக்கிறவர்கள் எண்ணிக்கை 1,87,712 பேர்கள். இவற்றை
யெல்லாம் நாம் கண்டுபிடிக்க வேண்டும். குத்தகைக்கு எடுத்திருக்கிற
வர்கள் கணக்கைச் சொல்லும்போது, சட்டமன்றப் பேரவையில் நாடாளு
மன்ற உறுப்பினர் ஒருவர் கணக்கைச் சொன்னேன். இங்கே பெயரைச்
சொல்ல விரும்பவில்லை. இந்த மன்றத்திலே உறுப்பினராக இருக்கிறவரே,
அவருடைய பெயரால், மனைவியின் பெயரால், மகனின் பெயரால்,
தந்தையின் பெயரால், சித்தப்பாவின் பெயரால், சித்தப்பா மகன் பெயரால்,
சித்தப்பா மகள் பெயரால் நிலத்தை வைத்திருக்கிறார். அந்தக் குத்தகை
நிலத்தில் 20.66 ஏக்கர் நஞ்சை, 2.91 ஏக்கர் புஞ்சை. அவர்களிடத்தி
லிருந்து இந்த ஆலயத்திற்கு வரவேண்டிய குத்தகை பாக்கி ரூபாய் 23,675

(பிற்பகல் 8-40)

ஞ்சை நிலத்திலிருந்தும், ரூபாய் 235 புஞ்சை நிலத்திலிருந்தும், வைக்கோ
லுக்காக வரவேண்டிய கிரயம் ரூபாய் 1,632-ம் ஆகும். ஆகவே கிட்டத்தட்ட
5 ஆயிரம் ரூபாய்க்கு பாக்கி வைத்திருக்கிறார்கள். இவர்கள் நிலத்திலே
இறங்கி விவசாயம் செய்கிற தொழிலாளர்கள் அல்ல. அதை மாத்திரம்
ான் சொல்லிவிடுகிறேன். அதுமட்டுமல்ல. முன்னாள் அமைச்சர் ஒருவர்
ாஞ்சீபுரத்தைச் சார்ந்தவர், அவர் 16 ஏக்கர் சொச்சத்தை அனுபவித்துக்
காண்டிருக்கிறார். அவரை ஏழை விவசாயி என்று எடுத்துக்கொள்வதா
ல்லது நிலத்திலே பாடுபடுகிற விவசாயி என்று எடுத்துக்கொள்வதா,

அதுவும் தெரியாது. அவருக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற குத்தகைத்
தொகை 2 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவு. அதையும் மூன்று ஆண்டுக்கால
மாக அவர் கொடுக்காமல் இருக்கிறார். காஞ்சிபுரம் ஒன்றும் புயலாலும்,
வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதியல்ல. அது மாண்புமிகு உறுப்பினர்
களுக்குத் தெரியும். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் சிவன் சொத்து
குலநாசம் என்று சொல்லுவார்கள். அது எப்போது ஏற்படுமென்பதுபற்றி
யெல்லாம் எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களால் சிதம்
பரத்தைப்பற்றி எல்லாம் பேசப்பட்டது. சிதம்பரத்தினுடைய நிலைமை
எப்படி இருக்கிறதென்று பார்த்தால், இப்போதுதான் அதனுடைய சொத்
துக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது நமக்குக் கிடைத்
திருக்கிற கணக்குபடி சுமார் 146.56 ஏக்கர் நஞ்சையும், 149.37 ஏக்கர்
புஞ்சையும் கண்டுபிடிக்கப்பட்டு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. இதன்
மூலம் 30,400 ரூபாய் வர வேண்டும். அந்த வருமானம் வருகிறது என்று
சொல்ல மாட்டேன். வந்தால் தானே வருகிறது என்று சொல்லுவதற்கு.
அறக்கட்டளைகள் சாமி கோயில்களுக்கு எழுதப்பட்டு அவர்கள் வைத்துக்
கொண்டிருக்கிற நிலம் நஞ்சை 937.89 ஏக்கர், புஞ்சை 329.20 ஏக்கர்.
அவர்கள் தங்களை ஆண்டவனுக்குச் சமமாக வைத்துக் கொண்டிருக்கி
றார்கள். பச்சையப்பன் அறக்கட்டளையை உருவாக்கினாரே அவரே
சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கும் எழுதி வைத்திருக்கிறார். ஆனால் அவை
சிதம்பரம் நடராஜர் கோயிலுக்குச் சேர மாட்டேன் என்கிறது. இப்படி
கட்டளைகள் பெயரால் இருக்கிற நிலங்கள் 144.88 ஏக்கர் நஞ்சை, 127.01
ஏக்கர் புஞ்சை. அதைப்போல அறக்கட்டளை பெயரால் தனியார் வைத்துக்
கொண்டிருக்கிற நிலங்கள் நஞ்சை 1,364.99 ஏக்கர், புஞ்சை 289.60 ஏக்கர்.
இவைகள் எல்லாம் இப்பொழுது சிதம்பரம் கோயிலுக்கு இருப்பதாகக் கண்டு
பிடிக்கப்பட்டு, அவர்களிடத்திலிருந்து பெற முடியாமல் இன்றைக்கு அற
நிலையத் துறை போராடிக் கொண்டிருக்கிறது, அதற்கான முயற்சிகளில் ஈடு
பட்டுக்கொண்டிருக்கிறது. இப்படி சொத்துக்களை எல்லாம் யார் யாரோ
வைத்துக்கொண்டு கொடுக்காமலிருந்தால், எப்படி அறநிலையங்களைப் பாது
காப்பது, நாம் விரும்புகிற புதுமையை ஏற்படுத்துவது என்பதைப்பற்றி
மன்றத்திலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் எந்தக் கட்சியைச்
சார்ந்தவர்களாக இருந்தாலும், இந்த நாட்டிலே தெய்வ நம்பிக்கை இருக்
கிறதா இல்லையா என்பதற்கும் அற நிலையங்கள் பாதுகாக்கப்படுவதற்கும்
சம்பந்தமே இல்லை என்பதைப் புரிந்துகொண்டு, அதற்கான முயற்சியிலே
ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இராமலிங்க வள்ளலார் பாவம் செய்து தமிழகத்திலே பிறந்தார் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் தெரிவித்தார்கள் பாவம் செய்ததால் பிறக்கவில்லை. நம்முடைய புண்ணியத்தாலே இராமலிங்க அடிகள் தமிழகத்திலே பிறந்தார்கள். உலகத்துக்கே வள்ளுவனைத் தந்து வான் புகழ் கொண்ட நாட்டிலே பிறந்தார்கள். ஆகவே அதைப்பற்றி நாம் ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை. எத்தனை ஆண்டுகளானாலும், எப்படிப்பட்ட முயற்சிகள் செய்தாலும் இராமலிங்க அடிகளுடைய பெருமையை, கொள்கையை, இலட்சியங்களைக் குறைக்க முடியாது, அழிக்க முடியாது. அது வேறு பெயர்களிலே தமிழகத்திலே பாவிக்கொண்டிருக்கிறது என்பதை மாத்திரம் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட முயற்சிகள் நடைபெறுகிறபோது, இங்கே அர்ச்சகர்களைப்பற்றி ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் தெரிவித்தார்கள். அரிசனங்களை அர்ச்சகர்களாக ஆக்குவதற்கு அந்தக் குழு அமைக்கப்படவில்லை. உச்ச நீதிமன்றத்திலே, சட்டத்திலே ஒரு குறைபாடு இருப்பதாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். யார் வேண்டுமானாலும் அர்ச்சகராக வரலாம் என்பது வேறு. ஆனால் ஆண்டாண்டு காலமாக ஆகம முறைப்படி இருக்கிற அந்த அற நிலையங்களுக்கு ஆகம விதி முறைகளின்படி, வழிகளின்படி அதிலே பழகியவர்கள், தெரிந்தவர்கள் வர வேண்டும் என்று அதற்கு வழி வகுத்து சட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற ஒரு குற்றச்சாட்டை, ஒரு குறையைச் சொல்லித்தான் அந்தச் சட்டத்தைச் செல்லுபடியற்றதாக உச்ச நீதிமன்றம் ஆக்கியிருக்கிறது. ஆகவே ஆகமம் என்பதும், விதிகள் என்பதும், சட்டங்கள் என்பதும், வேதங்கள் என்பதும் எப்படி வருகின்றன, எப்படி அந்த முறையைப் பயன்படுத்தினால் அரிசனங்களும் அர்ச்சகர்கள் ஆகக்கூடிய அந்த உரிமையை, சட்டம் மூலம் நம்முடைய உரிமையை அடைய முடியும் என்பதற்காகத்தான் அந்தக் குழு போடப்பட்டிருக்கிறதே தவிர வேறு அல்ல. அரிசனங்கள் அர்ச்சகர்களாக ஆக துடித்துக் கொண்டிருக்கிறார்களா என்பது வேறு விஷயம். நான் சொன்ன 30 ஆயிரம் அர்ச்சகர்கள் ஏற்கெனவே அரை வயிற்றுக் கஞ்சிக்கு ஆலாய் பறந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே அர்ச்சகர்களாக அவர்கள் வருவதாலேயே அவர்களுடைய வாழ்வு வளர்ச்சி பெற்றுவிட முடியாது. ஆனால் அது அவர்களுடைய உரிமை. நம்முடைய நாட்டிலே பிறந்தவன் யாராக இருந்தாலும், அவன் அர்ச்சகன் ஆகலாம். எப்படி எல்லாத் துறைகளிலும், எல்லா உத்தியோகங்களிலும் உரிமை இருக்கிறதோ, அதற்கு அரசியல் சட்டம் வழி வகுத்துத் தந்திருக்கிறதோ அதுபோல் ஆண்டவன் சந்நிதியில் நிற்பதற்கும் உரிமை தரவேண்டு

மென்பது அந்த உரிமைக் குரலினுடைய பின்னணியே தவிர ஏதோ அரிசனங்
களைக் கோயில்களில் கொண்டு போய் அர்ச்சகர்களாக நியமித்து விட்டால்
அவர்கள் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பது அதன் பொருளல்ல.

தமிழைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். தமிழ்
நாட்டில், தமிழ் மொழியிலே ஆண்டவனை வணங்குகிற உரிமையை மறுப்ப
தற்கு யாருக்கும் உரிமை இல்லை. ஆனால் பணிவான வேண்டுகோள்
ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் அனைவரும் ஏதோ
அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாக பெரும்பாலும் இருக்கிறோம். பகுத்
தறிவு இயக்கத்திலே நாங்கள் எல்லாம் ஈடுபட்ட அந்தக் காலத்திலிருந்து,
நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எல்லாம் கலந்துகொண்ட
அந்தக் காலத்திலேயும் நாங்கள் எல்லாம் சுயமரியாதை இயக்கத்திலே நுழை
கிறபோது, அதைப் படித்துத் தேறி நன்றாகப் பக்குவம் பெற்றதற்குப் பிறகு
தான் சுயமரியாதைக்காரன் என்று எங்களையெல்லாம் சொல்லிக்கொள்
வோம். ஆனால் இன்றைக்கு அவைகளையெல்லாம் விட்டுவிட்டோம்.
காரணம் மக்களிடமிருந்து வாக்குகளை வாங்கி ஆட்சி நடத்துகிற அளவுக்கு
பொறுப்பு நமக்கு வந்த காரணத்தினாலே, அதற்குள்ளே அதற்கு மேல்
நுழைய விரும்பவில்லை, சிக்கல்கள் நிறைந்த இடம் என்று விட்டுவிட்டோம்.
அதற்காக தந்தை பெரியார் அவர்கள் மட்டுமே தனியாக இருந்து வாழ்
நாளெல்லாம் போராடினார்கள். அதற்குச் சட்ட வடிவம் தருகின்ற
பொறுப்பினை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால்
அப்படிப்பட்ட சூழ்நிலையிலே இன்றைக்கு கோயில்களுக்குப் போகின்ற
தமிழ் மக்கள், தமிழ் பேசுகிறவர்கள் தமிழிலே அர்ச்சனை செய் என்று அர்ச்ச
கர்களிடத்திலே சொன்னால், அவர்கள் செய்துதான் ஆகவேண்டும். அதற்குச்
சட்ட விதிகளில் இடம் தந்திருக்கிறோம். எத்தனை பேர் அவ்வாறு அர்ச்ச
கர்களைக் கேட்கிறோம்? அல்லது கேட்க வேண்டுமென்ற உணர்வை
எத்தனை பேருக்குப் பரப்பிக் கொண்டிருக்கிறோம்? அந்த முயற்சியை
நாம் அவசியம் மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு தெரி
வித்துக்கொள்கிறேன். சட்டமன்றத்திலே பேசி, அரசாங்கத்திலே தமிழிலே
தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று அதற்கான சட்டத்தைப் போட்ட
உடனேயே—வேற்று மொழிக்காரர்களும் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள்
என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது—அது எப்படி முடியும் என்று
கேட்டு அதற்கு ஒரு வாதத்தைக் கிளப்பி எதிரான ஒரு சூழ்நிலையை உரு
வாக்குவதற்குப் பதிலாக, ஆலயங்களுக்குச் செல்கின்ற தமிழ் மக்கள்
தமிழிலே அர்ச்சனை செய்யுங்கள் என்று அர்ச்சகர்களைக் கேட்கின்ற, ஒரு





உணர்வை வளர்க்கின்ற, கடமையை ஏற்படுத்துகின்ற பொறுப்பை நா
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே மாண்புமிகு உறுப்பின
களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது அறங்காவலர்களை நியமிக்கின்ற அந்த முயற்சியி
மீண்டும் கட்சியைப் புகுத்தி விடுவார்களோ என்கின்ற சந்தேகத்தை
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள். இல்லை
அதற்கு என்னிடம் பட்டியல் இருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சி
தலைவர் அவர்களுடைய ஊரிலே போட்டதிலே அப்படிப் போட்டிருப்பா
களோ என்னவோ, தெரியவில்லை. எல்லாக் குழுக்களிலும், ஒவ்வொ
குழுவிலும் வேறு வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள்
அவர்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். நான் அந்தப் பட்டியலை
படித்து நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. 3 பேரை அவர்கள் நியமி
கின்ற உரிமையைத் தந்து 2 பேரை அரசாங்கம் நியமிக்கின்ற உரிமை
வைத்திருப்பதற்குக் காரணம் இதுதான். மாண்புமிகு முதலமைச்சர் அவ
களின் விருப்பப்படி, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகின
கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்களே அவர்கள் விரும்புவதுபோல்
பெண்கள் முன்வந்தால், அல்லது எந்தக் கட்சியையும் சாராதவர்கள் முன்
வந்தால், இந்தக் கோயில்களுக்காக தன்னை ஒப்படைத்துக்கொண்டு
அத்தனை பணத்தையும், தன்னுடைய வாழ்வையும் அர்ப்பணித்து, அதற்
கான அறங்களையெல்லாம் செய்து கொண்டிருக்கிற பெரியவர்கள் யார் முன்
வந்தாலும், அவர்கள் விண்ணப்பம் போட்டு அதை அதிகாரிகள் போய்
பரிசீலனை செய்து "நீ தகுதி உள்ளவன் தானா?" என்று எல்லாம் கேட்கிற
வேலையை அவர்களுக்கு வைக்காமல், அப்படிப்பட்டவர்களை அந்த அறங்
காவலர் குழுவிலே இடம் பெறச் செய்ய வேண்டுமென்கின்ற நல்ல உணர்விலே
தான் அரசாங்கம் அந்த உரிமையைத் தன் கையில் வைத்திருக்கிறது
என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி
அவர்களுக்கும் மற்றுமுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தயவுசெய்து பெண்கள், சகோதரிகள்,
இதற்குத் தகுதியானவர்கள் யார் யார் எங்கு எங்கு கிடைக்கிறார்களோ,
யார் யார் முன்வருகிறார்களோ அவர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்
இந்த அரசுக்குத் தகவல் தந்தால், அவர்களும் இந்த அறங்காவல் குழுவில்
இடம் பெறுவார்கள் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.
இந்தத் துறையில் பல்வேறு சீர்திருத்தங்களை இன்னும் செய்ய வேண்டி
யிருக்கிறது. அரசு இதற்காக ஒரு "காம்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்"

[திரு. இராம. வீரப்பன்] [1979, ஏப்ரல் 20

கொண்டுவர இருக்கிறது. இது நீண்ட காலமாகப் பரிசீலிக்கப்பட்டதற்குப் பிறகு இதற்குள்ளே நுழைந்தவர்களுக்கு, ஒரு சோர்வு ஏற்பட்ட காரணத்தினால், ஓடினல் போதும் என்கிற அளவுக்கு இதை விட்டுவிட்டு அவர்கள் ஓடியதால்தான், இதிலே நல்ல பல சீர்திருத்தங்களை நாம் செய்ய முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 8-50.)

இங்கே நகைகளைப்பற்றிச் சொன்னார்கள். அதைச் சொன்னால் ஒரு வேளை பக்தர்கள் என்ன சொல்வார்களோ என்று பாதுகாப்போடு சொன்னார்கள். என்னுடைய நினைவு சரியாக இருந்தால் திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இப்படிப்பட்ட ஒரு முயற்சியை எடுத்து, அப்போது எதிர்ப்புகள் கிளம்பியதால் பிறகு மீண்டும் அதைத் தொடராமல் விட்டுவிட்டார்கள் என்ற செய்தி உண்மையா, சரியா தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் 'ஆம்', 'உண்மை' என்று சொல்கிறார்கள். ஆகவே, அப்பேர்ப்பட்ட முயற்சியிலே ஈடுபட வேண்டியது அரசுதான் என்று அரசாங்கத்தின் தலையில் பொறுப்பைக் கட்டாமல், இதிலே கட்சி பேதங்களை மறந்துவிட்டு, இந்த நாட்டினுடைய நாகரீகத்தை, செல்வத்தை, கலைவளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வோடு இதற்கான ஆலோசனைகளை வழங்கி நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாநில அளவில் இந்து சமயத் துறைக்காக ஒரு ஆலோசனைக் குழு போட இருக்கிறோம். அதிலே கட்சிக்காரர்கள் இடம் பெறுவார்கள் என்று யாரும் தயவுசெய்து எண்ண வேண்டாம். அதிலே, ஆத்தீகத்திலே நம்பிக்கையுடையவர்கள், பெரியவர்கள், பல்வேறு துறைகளிலே உள்ளவர்கள், இடம் பெறுவார்கள். ஆத்திகமே வேண்டாம் என்று சொல்கிற பகுத்தறிவாதிகள் கூட இடம் பெறுவார்கள். எல்லோரையும் வைத்து, முடிவெடுத்து இப்படிப்பட்ட அறநிலையங்களில், எப்படிப்பட்ட ஒழுங்கு முறைகளை வகுத்தாக வேண்டும், அவைகள் எப்படி நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று முடிவெடுத்து செயல்படுத்த வேண்டும். மற்ற துறைகளிலே எல்லாம் இப்போது நாகரீகம் வளர்ந்துகொண்டே வருகிறது, காலத்திற்கேற்றபடி நிலைமைகளை மாற்றுகிறார்கள். ஆனால் நாம் மாறுவதற்குத் தயாராக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது கூட குறிப்பிட்டார்கள். "கோயில்களில் மற்ற மதத்தவர்கள் உள்ளே நுழையக்கூடாது என்று போர்டுகள் இருக்கின்றன, அவைகள் 'இருக்கக் கூடாது" என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு உலகத்தினுடைய மிகப் பெருமை வாய்ந்த கட்டிடக் கலை என்று



1979, ஏப்ரல் 20] [திரு. இராம. வீரப்பன்]

புகழ்பெற்ற, விஞ்ஞான உலகத்திலே படித்து பட்டம் பெற்ற, பொறியியல் நிபுணர்கள் எல்லாம் ஆராய்ந்தும் எப்படிக் கட்டினார்கள் என்று கண்டறிய முடியாத அளவுக்கு இருக்கும் இராஜராஜசோழன் கட்டிய தஞ்சை பெரிய கோயில் இருக்கிறதே, அதை வெளிநாட்டவர் இன்றைக்கு உள்ளே போய்ப் பார்ப்பதற்கு அனுமதி கிடையாது. வெளிநாடுகளிலிருந்து நம்முடைய கோயில்களைப் பார்க்க வேண்டும், கட்டிடக் கலையைப் பார்க்க வேண்டும் என்று வருகிறார்கள். அவர்களுக்கு அந்தக் கோயிலைப் பார்ப்பதற்கு அனுமதி கிடையாது. அதற்கு உள்ளே போனால்தான், அந்தக் கட்டிடக் கலையின் அற்புதம் புரியும். மாண்புமிகு உறுப்பினர்களில் பலருக்குத் தெரியுமோ தெரியாதோ அந்தக் கோயிலின் அஸ்திவாரம் 4 அடிதான். தரைக்குக் கீழே இருப்பது நான்கு அடி அஸ்திவாரம்தான். அஸ்திவாரத்தை மேலே கொண்டு வந்திருக்கிறார்கள். அதனாலேதான் அந்தக் கோயிலின் அமைப்பு மேலே இருக்கிறது. உள்ளே கற்பக்கிரகம் இருக்கிறது. அதைச் சுற்றி ஒரு பிரகாரம் இருக்கிறது. அதற்கும் உள்ளே பார்த்தால் மிகவும் அருமையாக இருக்கிறது. அங்கே வர்ண சித்திரங்கள் இருக்கின்றன, எப்படி டிசைன் பண்ணியிருக்கிறார்கள் என்று அங்கே பார்த்தால்தான் தெரியும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே இப்படிக் கட்டியிருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் இராசராச சோழன் சிலையை தெருவிலே வைத்திருக்கிறார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னாலேயும் சிற்பக்கலையிலே தெளிவாகவும் நுட்பமாகவும், திறமையாகவும் தமிழன் சிறந்து விளங்கினான் என்று வருங்கால மக்கள் உணர்ந்து கொள்ளும் வகையில், அதற்காவது உபயோகப்படும் என்ற முறையில், தமிழ்நாட்டிலே இந்தச் சிற்பக் கலை சிறந்து விளங்கியது என்று ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னாலே வருகிறவர்கள் சொல்லட்டும், அப்படிப்பட்ட ஒரு மண்டபம் அமைக்கலாம், அதற்கு தோராயமாக எவ்வளவு செலவாகும் என்று கேட்டால், 30 அடி உயர்த்திற்குக் கட்ட வேண்டும் என்றால்கூட, 15 லட்சம் ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள். 30 அடி உயரத்திற்கு 15 லட்சம் ரூபாய் செலவாகுமானால், இராச இராச சோழன் கட்டிய தஞ்சை பெரிய கோயிலுக்கு எவ்வளவு செலவாகியிருக்கும் என்று கேட்டால், அதற்கு எவ்வளவு ஆகியிருக்கும் என்று கணக்கு போட்டுச் சொல்லக்கூட அவர்களுக்கு முடியவில்லை. அப்படிப்பட்ட ஒரு ஆலயத்திலே வெளிநாட்டிலேயிருந்து வருகிறவர்கள் உள்ளே சென்று பார்க்க முடியவில்லை. அவர்களைத் தடுத்து நிறுத்துகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றுவதற்கு அரசால் மட்டும் முடியாது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளைப் பரிசீலித்து, எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவெடுத்து, அதை அமுல்படுத்த பாடுபட வேண்டும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்ற போது, மாங்காட்டு கோயிலைப்பற்றிச் சொன்னார்கள். பல்வேறு பெரிய கோயில்களிலே 'டபிள் லாக் சிஸ்டம்' என்று வைத்து அங்குள்ள நிர்வாக அதிகாரியும், ரெவின்யூ அதிகாரியும் சேர்த்துதான் உண்டியலைத் திறக்கிறார்கள். ஆனால் மாங்காடு கோயிலில் இப்போது பரம்பரை அறங் காவலராக முனைவி இராமகிருஷ்ண முதலியார் அவர்கள் இருக்கிறார்கள். அந்தக் கோயில் அவருக்குப் பூர்விகச் சொந்தமானது என்று சொல்லப்படு கிறது. அந்தக் கோயிலின் மேலதிகாரம் நம்முடைய துறைக்கு இருக்கிறது. உண்டியலை அவர்கள்தான் திறக்கிறார்கள். அதிலே தவறு நடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், எனக்குக் கிடைத் திருக்கின்ற தகவலை வைத்து நான் அதை ஒப்புக்கொள்ள முடியாது. உண்டியலை, அங்கே இருக்கிற ஆலயச் செயல் அலுவலர் இலாக்கா ஆய்வாளர், சிப்பந்திகள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில்தான் திறக்கி றார்கள். உண்டியலைத் திறந்தவுடனே தொகை எண்ணப்பட்டு, அந்தத் தொகை வங்கியிலே செலுத்தப்படுகிறது. திருப்பணிக்காக தனி உண்டியல் வைத்திருக்கிறார்கள். அதற்குத் தலைவராக மதிப்பிற்குரிய திருமதி சௌந்தரம் கைலாசம் பொறுப்பு வகிக்கிறார்கள். அப்படிப்பட்ட மாங்காடு கோயில் இப்போது புகழ்பெற்று விளங்குகிறது. இப்போது மாங்காடு கோயில் திருவேற்காடு கோயிலைத் தாண்டிவிடுமோ என்ற நிலைமைகூட இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் தீர்த்தாக வேண்டும். அவர்கள் சொன்ன அனைத்துப் பிரச்சினைகளும் உடனடியாகக் கவனிக்கப்படும். இதைப்போல, மற்ற எல்லாக் கோயில்களும், மக்கள் கூடுகிற இடங்களில், அவை கிராமங்களாக இருந்தால் அவைகளை டவுன் ஷிப்பாக மாற்றி அரசினுடைய நேரடி நிர்வாகத்திற்குக் கொண்டுவர இருக்கி றோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது மிக முக்கிய மான பிரச்சினை. அது கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கும் தனிப் பிரச்சினை. நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். * * நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நான் அண்மையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றுவந்தபோது கூட, இதுபற்றி விசாரித்தேன். அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க தக

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன, நியாயமான தீர்வுகள் காணப்படும் என்று நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு உறுதியளிக் கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது தவறான தகவலாக வந்துவிடக்கூடாது. யு.என்.ஓ.-க்காரர்கள் தருகிற லட்சம் ரூபாயையும் இந்த அரசு வாங்கவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் லட்சம் ரூபாய் என்று ஆண்டுதோறும் தர வில்லை. அவர்கள் ஸ்ரீரங்கத்திற்கும், இராமேஸ்வரத்துக்கும் சில கருவி களைத் தந்தார்கள். சில கோவில்களுக்கு வர்ணம் அடிக்கிற பொருள் களையும், நகைகளை பத்திரமாக வைத்துப் பாதுகாக்க 'புல்லட் புரூஃப் பாக்ஸ்'ஐயும் தந்தார்கள். அந்த 'புல்லட் புரூஃப் பாக்ஸ்' கூட வெடித்து விட்டது. அப்படிப்பட்ட சாமான்களைத் தந்திருக்கிறார்களே தவிர, அவர்கள் ரூபாய் தரவில்லை. நிலைமை இப்படி இருக்க, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள், தவறான தகவலின் அடிப்படையில் இங்கே பேசி, இந்த அரசு ஏமாளி அரசு, இந்த அமைச்சர் ஏமாளி அமைச்சராக இருக்கிறார் என்ற எண்ணம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இதனை நான் தெரிவிக் கிறேன்.

தணிக்கைக் குழுபற்றிக் குறிப்பிட்டார்கள். தணிக்கைக்காகப் போடப் படும் அதிகாரிகள் அனைவருமே, ஏ.ஜி. அலுவலகத்தில் இருந்தும், லோக்கல் பண்ட் அலுவலகத்திலே இருந்தும்தான் போடப்படுகிறார்கள். அறநிலையத் துறை அவர்களை நியமிக்கவில்லை. அவர்கள் கணக்கு ஆய்வாளர்களாக வருகிறார்கள். அவர்கள் கணக்கைப் பரிசிலித்து ஆணையரிடம் ஒப்படைக் கிறார்கள். அவர்கள் இந்த அறநிலையத் துறையால் நியமிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தணியைப்பற்றி ஒரு செய்தி சொன்னார்கள். இன்றைய தினம் 'போர்ட் மெம்பர்'-ன் விசாரணையில் அது இருந்து கொண்டிருக்கிறது. இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் மிகப் பெரிய குற்றச்சாட்டைச் சொன்னார்கள், அங்கே வேல் போய்விட்டது, சூலம் போய் விட்டது என்றெல்லாம் சொன்னார்கள். நான் அப்பொழுதே பதில் சொன்னேன் குறைகள் ஏற்பட்டிருக்கின்றன, முறைகேடுகள் நடந்திருக்கின்றன, குற்றங் கள் நடந்திருக்கின்றன என்றால், இலாக்கா பூர்வமாக விசாரணை வைத்திருக் கிறோம், ஒரு முடிவு வரட்டும் என்று சொன்னேன். இல்லாவிட்டால் பேசி றவர்கள் எல்லாம் புழுதிவாரி தூற்றுவார்கள்.

[திரு. இராம. வீரப்பன்] [1979 ஏப்ரல் 20

மயிலத்தைப்பற்றி ஒரு புகார் வந்தது. சட்டமன்றப் பேரவையிலேகூட அதுசம்பந்தமாக அவசரக் கேள்வி ஒன்று வந்திருக்கிறது. உடனடியாக விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிலே குற்றங்கள் நிரூபிக்கப் பட்டால்தான், நடவடிக்கை எடுக்கப்படுமே தவிர, யாரோ சொல்கிறார்கள் என்பதற்காக இந்தத் துறை, இந்த அரசு நடவடிக்கை எடுக்காது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மைலம் விவகாரம் இப்போது மிக விரிவான பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது; அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே இப்போது ரெவின்யூ போர்ட் மெம்பரைப் போட்டு, திருத்தணி விஷயத்தையும் விசாரணைக்கு உட்படுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் பல்வேறு உணர்வுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் பிரச்சினைகளை இந்த மன்றத்திலே பேச வேண்டும் என்பது கூட இல்லை. மாண்புமிகு உறுப்பினர்களும், நம்முடைய மாற்றுத் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நேரம் இல்லையென்று குறைபட்டுக்கொண்டார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், தயவுசெய்து நேரத்திற்காகக் காத்துக்கொண்டிருக்க வேண்டாம். ஒரு கடுதாசியை எடுத்து எழுதி என்னிடத்திலே கொடுத்தால், அவைகள் உடனடியாகக் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தமாதிரி மானியக் கோரிக்கையில் பேசலாம் என்றோ, கொள்கை விளக்கக் குறிப்பில் பேசலாம் என்றோ அல்லது கேள்வி போட்டு அது வரும் வரையில் காத்திருக்க வேண்டும் என்ற நிலைமைகளோ வேண்டாம். நாம் எல்லோரும் சேர்ந்து எவ்வளவு சீக்கிரத்திலே சீர்திருத்தங்களைச் செய்ய முடியுமோ, அந்த அளவுக்குச் சீர்திருத்தங்களை வெகு சீக்கிரத்திலே செய்யப் பாடுபட வேண்டும். அதற்கான முயற்சிகளை நானும் மேற்கொள்வேன், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதிலே மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

பெண்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அதுபோன்ற பெண்களின் பட்டியலைத் தந்தால், அவர்கள் அரசியல் கட்சிகளிலே பணியாற்றுபவர்களாக இல்லாமல் இருந்தால், அவர்களில் பொதுப்பணியிலே தன்னை ஒப்படைத்துக்கொண்டு எத்தனை பேர் இருக்கிறார்களோ அத்தனை பேரையும் இந்த அரசு அறங்காவலர்களாக நியமிக்கும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.



979 ஏப்ரல் 20] [திரு. இராம. வீரப்பன்]

(பிற்பகல் 9-00)

கருணை இல்லங்களின் பெயர்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது பரி'லிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை ஒப்புக்கொள்கிறேன். மாண்புமிகு 'திர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போன்று இப்போது நாம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். ஏதோ காரணத்தால் கண்ட இடங்களிலெல்லாம் கருணை இல்லங்களை ஆரம்பித்து இன்றையதினம் அந்தக் கருணை இல்லங்களைப் பட்டினி போடக் கூடாது என்ற அடிப்படையில் டத்திக்கொண்டு வருகிறோம். நடக்கும் கருணை இல்லங்கள் அனைத்தையும் ஒழுங்காக நடத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். மாவட்டத்திற்கு ஒன்று என்று செய்துவிடலாமென்றார்கள். அறநிலையங்களின் பயரைப் போட்டு, இந்த ஆலயத்தின் நிதியிலிருந்து இந்தக் கருணை இல்லம் டத்தப்படுகிறது என்று மற்றவர்கள் உணரத் தக்க நிலையை உருவாக்க யற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, ற்றுலாப் பொருட்காட்சியின்போது, ஆலயங்களின் விக்கிரகங்களை எடுத்து த்து அலங்கரித்து வைத்து மக்களுக்குக் காட்சிப் பொருளாக வைத்ததைப் ற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி திருச்சியில் ஆலோசனைக் குழுவில் இருப்பவரும் ஆலயங்களோடு மிகுந்த தொடர்பு கொண்டவருமான திரு. . வி. ஆர். கிருஷ்ணசாமி செட்டியார் அவர்கள்கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். 'பாருட்காட்சியிலே கொண்டு வந்து வைக்கப்படுகிற விக்கிரகங்கள் என்பவை பூசைக்கு உபயோகப்படுத்தப்படாத நிலையில், தனியாகக் கோயில்களில் வைக்கப்பட்டிருந்த விக்கிரகங்களாகும். அங்கு கோயில்களில் உள்ள பூசைக்குரிய விக்கிரகங்களுக்கு எத்தகைய அலங்காரம் செய்யப்படுகிறதோ அதைப் 'பால இந்த விக்கிரகங்களுக்கும் அலங்காரம் செய்யப்பட்டு, பொதுமக்களுக்குப் பார்வைக்கு வைக்கப்பட்டனவே தவிர ஆஸ்திக மரபுகளுக்கோ, ஆகம நீதிகளுக்கோ முரணாக எதுவும் செய்யப்படவில்லை என்பதைச் சொல்லிக் 'காள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இன்றையதினம் பெருமையோடு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அறநிலையத் துறையின் ஆணையாளராக வந்திருப்பவர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்து அனுபவம் பெற்றவர். நல்ல திறமையோடு, இத்துறையில் இருக்கின்ற அத்தனை குறைபாடுகளையும் களைய வேண்டும் என்று மிகப் பெரிய முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடகிருஷ்ணன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல்,

நான் சொன்ன ஒரு மணி நேரத்திற்குள் ஆணையராலே உத்தரவு போட முடிந்தது. இன்றையதினம் அந்த அளவுக்குக் காரியங்கள் வேகமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அறக்கட்டளைகளின் சொத்துக்கள் எவ்வாறு அபகரிக்கப்பட்டு வருகின்றன என்பதைப் பொறுத்தவரையில், தஞ்சையைப் பற்றியும், காஞ்சியைப் பற்றியும் நான் குறிப்பிட்டேன். கோவையில் ஒரு சினிமாக் கொட்டகை ஆலய நிலத்திலே கட்டப்பட்டது. கட்டிவிட்ட பிறகு, இருபது ஆண்டுக் காலக் குத்தகைக்கு—லீசுக்கு—அது விடப்பட்டது. அந்தக் காலம் முடிவடைந்த பிறகு, அந்த சினிமாக் கொட்டகை ஆலயத்திடம் ஒப்படைக்கப் படாமல், மீண்டும் ஒரு 20 ஆண்டுக் காலத்திற்கு லீஸ் நீடிக்கப்பட்டது. அதற்குப் பிறகும் அதைக் கொடுக்காமல் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். அதற்கு வாடகை எவ்வளவு என்றால் ரூ. 750, அதில் ரூ. 250-ஐ கட்டிடத்திற்கு என்று எடுத்துக் கொள்கிறார்கள். இந்த நிலையில் இருக்கிறது. கோவை நகரில் அவிநாசி ரோடில் இருக்கிறது இந்த சினிமாக் கொட்டகை. கிரவுண்டு ஒன்றின் விலை ரூ. 50 முதல் ரூ. 75,000 வரை இருக்கும். இப்படிப்பட்ட கொடுமைகளையெல்லாம், அக்கிரமங்களையெல்லாம், * * * செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி அறநிலையங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிற கொடுமைக்காரர்களைத் தடுத்து நிறுத்தி, அறநிலையங்களின் சொத்துக்களை மீட்பதற்கு இந்த அரசு முக்கியமான எல்லா விதிகளும் அடங்கிய சட்டம் ஒன்றை விரைவில் கொண்டுவர இருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு, அப்படிப்பட்ட சூழ்நிலை வருகிற போது, உங்கள் அனைவருடைய ஆலோசனையையும் பெறும் முயற்சிகளை மேற்கொள்வேன் என்று உறுதி கூற விரும்புகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** அமைச்சர் அவர்கள் பேசும் போது * * * என்ற முறையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

* * * என்ற வாசகம் சரியாகப் படவில்லை. அதை விட்டு விடலாம்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நீதிமன்றத்திற்குப் போய் அங்கே ஸ்டே வாங்கிவிடுகிறார்கள் என்ற கருத்தில் சொன்னேன். நீதிமன்றத்தில் வழக்குகளை நடத்திக்கொண்டு ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் குறிப்பிட்டேன். வேறொன்றுமில்லை.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





சட்டப் பேரவையில்கூட நிகழ்ச்சி ஒன்றைப்பற்றிக் குறிப்பிட்டேன். ரூ. 40 லட்சம் பெருமானமுள்ள ஒரு சிலையை வைத்துக்கொண்டிருந்த பெரிய மனிதர் ஒருவர் வழக்கு மன்றத்திற்குப் போய், வழக்குத் தொடர்ந்து, போலீஸ்காரர்கள்மீது 'கன்டெம்ப்ட் ஆப் கோர்ட்டு' என்று வழக்குப் போட்டிருக்கிறார். கல்வித் துறையிலிருந்து துணைச் செயலாளர் ஒரு கடிதம் எழுதினவர் என்று அவர்மீதும் கோர்ட்டு அவமதிப்பு வழக்குத் தொடர்ந்திருக்கிறார். அப்படிப்பட்ட வகையில் வழக்கு நடத்தும் துணிவைப் பெற்றிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். 40 லட்சம் ரூபாய் பெருமானமுள்ள சிலையை வைத்துக்கொண்டு கேட்டால், திருச்சி மாவட்டத்தில் எனக்குப் புதையல் கிடைத்தது, இதைக் களவாடவில்லை, அதை எங்கேயும் கொண்டு போகலாம் என்று வாதாடிக் கொண்டிருக்கிறார். இனி இப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாத வண்ணம் பாதுகாக்க வேண்டும் என்று அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

சிதம்பரத்தைப்பற்றிச் சொன்னார்கள். அது நீதிமன்றத் தீர்ப்புக்குட்பட்டது. அதற்குள் நுழையக்கூடாது. நுழைந்த நந்தன் என்ன ஆனான் என்பது நமக்கெல்லாம் தெரியும். என்றாலும் தக்க நேரத்தில் தக்க துணையோடு தக்க அறிவுரைகளைப் பெற்று அந்தக் காரியம் நடைபெறும் என்று தெரிவித்துக்கொண்டு, இந்த அறநிலையத் துறைக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கிய உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறி அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அமைச்சர் அவர்கள் பேசும்போது * * * என்று குறிப்பிட்டார்கள். அது * * * நான் வாழும் ஊரின் பிரதிநிதி என்ற முறையில் அது என்மூலம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பில் இருக்க வேண்டும். ஏனென்றால் பின்னாலே ஒரு 10 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு அதைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாதே என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** குறிப்பிட்ட வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அடுத்து, ஆடிட் பற்றிக் குறிப்பிட்டார்கள். கொள்கைக் குறிப்பில் முதல் பக்கத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்கு ஒரு ஆணையரும் அவருக்குக் கீழ் 7 துணை ஆணையர்களும் 16 உதவி ஆணை

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

யர்களும் உள்ளனர் என்று குறிப்பிட்டுவிட்டு, "இந்த அலுவலர்களைத் தவிர அறநிலையத் துறையின் கீழ், ஒரு தலைமைத் தணிக்கை அதிகாரியும் அவருக்குத் தேவையான அலுவலர்கள், பணியாளருடன் ஒரு தணிக்கைப் பிரிவும் இருந்து வருகின்றது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் லோக்கல் பண்டு டிபார்ட்மெண்டிலிருந்தும் அக்கவுண்டண்ட் ஜெனரல் அலுவலகத்திலிருந்தும் வரவழைக்கப்பட்டவர்களாக இருந்து, அவர்களுக்கு அங்கே 'லீன்' இருந்து, அவர்களுடைய பொறுப்பில் இந்தத் தணிக்கைப் பிரிவு இருந்தால், அது பாராட்டத் தக்கது. நிலைமை அப்படியில்லையென்றால் இனியாவது அதை மாற்றிக்கொள்ள வேண்டும்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது * * * என்று சொன்ன வார்த்தைகளை பின்னாலே பேசும்போது மாற்றியிருக்கிறார்கள் என்றாலும், * * என்று உபயோகிக்கப்பட்ட வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** அமைச்சர் அவர்கள் பேசும்போது கோயிலில் ஒரு உறுப்பினருடைய . . . .

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** உறுப்பினர் இந்த விவாதத்தில் பங்கு கொள்ளவில்லை. எனவே அவர் விளக்கம் கேட்க முடியாது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 9.05)

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

* 139. Third Annual Report of the Tamil Nadu Civil Supplies Corporation Limited, Madras for the year 1974-75. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

* 140. Annual Financial Statement for the year 1979-80 and Supplementary Financial Statement for the year 1978-79 of the Tamil Nadu Electricity Board. [Laid on the table of the House under section 61 (3) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948)].

141. Notification issued in G.O. Ms. No. 165, Rural Development and Local Administration, dated the 31st January 1979 in regard to an amendment to the Tamil Nadu Municipal Councils (Conduct of Election of Chairmen and Councillors) Rules, 1978. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

### *B. Reports, Notifications and Other Papers.*

** 143. Policy Note on Food Situation in Tamil Nadu. (Tamil).

** 144. Policy Note on Fisheries, 1979-80. (Tamil and English).

** 145. Performance Budget on Fisheries, 1979-80. (English).

** 146. Booklet on the Special Programme of the Animal Husbandry Department, 1979. (Tamil).

** 147. Policy Note on Social Welfare, 1979-80. (Tamil and English).

** 148. Performance Budget on Social Welfare, 1979-80. (English).

---

* Laid on the Table of the House on 19th April 1979.
** Circulated to all M.L.Cs. on 19th April 1979.

## இணைப்பு I

[128 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

நீண்ட காலம் தற்காலிக பணிபுரிந்த இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகியோரை பணியில் முறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு மூலம் சிறப்பு தேர்வு ஒன்று 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் நடத்தப்பெற்றது. இத் தற்காலிக பணியாளர்களுடன் பணி வேண்டி நின்ற இளைஞர் அணியினரும் அவர்கள் நிரந்தர பணியில்லாததை கவனத்திற்கொண்டு இச்சிறப்புத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்டன. ஏறத்தாழ 5,480 பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இவ்வாறு வெற்றி பெற்றவர்களை தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் நியமிப்பதா

அல்லது

அரசு அலுவலர் சங்கங்களின் கோரிக்கைப்படி அவர்களின் மொத்த தற்காலிகப் பணி அடிப்படையில் நியமிப்பதா என்ற கேள்வி அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இதன் மீது ஒரு முடிவெடுத்தவுடன் தேர்வில் வெற்றி பெற்றுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

## இணைப்பு II

[129 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

நிதி ஆண்டு 1978-79-ல் இந்த மாநிலத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமுலாக்குவதில் 2.76 இலட்சம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று செயல் திறன்

(Levels, cf Performance)

நிர்ணயம் செய்துள்ளது. அந்த அளவை எட்டவில்லை என்றால் மாநிலத்திற்கு மத்திய அரசு வழங்கும் திட்ட உதவித் தொகையில் 8 சதவிகித அளவிற்கு குறைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

2. எனினும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கட்டாயமோ நிர்ப்பந்தமோ எதுவும் இல்லாமல் மக்கள் தாங்களாகவே முன்வந்து இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை சினிமா, நாடகம், வில்லுப்பாட்டு போன்ற பிரச்சாரத்தின் மூலம் தான் அடைய வேண்டும் என்பதை இந்த



அரசு குறிக்கோளாக கொண்டுள்ளது. அந்த அடிப்படையில்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 28—2—1979 வரை இந்த மாநிலத்தில் 1,68,537 பேருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அந்த மாவட்டத்தின் மக்கள் தொகையின் எண்ணிக்கையைப் பொறுத்து செயல் திறன் அளவு (Levels of Performance) நிர்ணயிக்கப்பட்டது. தர்மபுரி மாவட்டத்திற்கு 14,467 பேருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டுமென்று அளவு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தீவிர அறுவை சிகிச்சைப் பிரச்சாரம் அந்தந்த மாவட்டங்களின் வசதிக்கேற்ப 3 மாதங்களுக்கு மேற்படாமல் நடத்தலாம் என்று உத்திரவிடப்பட்டிருக்கிறது.

4. தர்மபுரி மாவட்டத்தில் 1—4—1978 முதல் 15—1—1979 வரை 2,738 பேருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 16—1—1979 முதல் 31—1—1979 வரை இரு வார விழா கொண்டாடப்பட்டது. 16—1—1979 முதல் 15—3—1979 வரை 3,830 பேருக்கு அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை மொத்தம் 6,568 பேருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகவும் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்துள்ளார். அறுவைச் சிகிச்சைக்கு ஆட்களைக் கட்டாயமாகக் கொண்டு வரவேண்டுமென எந்த அரசு ஊழியரையும் வற்புறுத்தவில்லை. அறுவைச் சிகிச்சைக்கு ஆட்களைக் கொண்டு வரவில்லை என்பதற்காக எந்த அலுவலரும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்படவில்லை. வேலை நீக்கம் செய்யப்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆணை எதுவும் பிறப்பிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

5. அரசு பிறப்பித்த ஆணையில் கூட இந்தத் திட்டத்தை அமுலாக்குவதில் எவ்வித கட்டாயமும், நிர்ப்பந்தமும் இருக்கக்கூடாது, ஆசிரியர்களை ஈடுபடுத்தக்கூடாது என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், 20—2—79 அன்று தர்மபுரி மாவட்ட பொதுச் சுகாதார அலுவலர் (District Health Officer) தன்கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அதில் தர்மபுரி மாவட்டத்தில் பொது சுகாதார வேலைகளைக் கவனிக்க துப்புரவு ஆய்வாளர், அம்மை குத்துவோர் போன்ற 300 பணியாளர்கள் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் இதுவரை 99 நபர்களை மட்டும் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள ஊக்குவித்து இருக்கிறார்கள். இது போற்றக்கூடிய பணியல்ல. ஆகவே, சுற்றறிக்கை கிடைத்த 4 நாட்களுக்குள் ஒரு நபரையாவது அறுவைச் சிகிச்சைக்கு ஊக்குவிக்க தவறும் அலுவலர்களை சம்பந்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய அதிகாரிகள், மாவட்ட

சுகாதார அலுவலரின் அங்கீகாரத்தை எதிர்பார்த்துத் தற்காலிக வேலை நீக்கம் செய்யலாம் என்று அறிவித்துள்ளார். ஆனால் இன்றுவரை அறுவை சிகிச்சைக்கு தகுதியானவர்களை ஊக்குவிக்கவில்லை ( Motivate ) என்று யாரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படவில்லை. மாவட்ட சுகாதார அலுவலரின் சுற்றறிக்கையில் கூட மக்களை ஊக்குவித்து குடும்பநலத் திட்டத்தை அவர்களாகவே ஏற்றுக்கொள்ள வேண்டிய பணியை திறம்பட செய்யவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறாரேயொழிய கட்டாயமாக அறுவைச் சிகிச்சைக்கு ஆள் கொண்டு வரவேண்டும், இல்லையென்றால் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்று குறிப்பிடவில்லை.

6. ஆகவே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தன்னுடைய தீர்மானத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## இணைப்பு III

ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### 1979-80 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கம்.

கூட்டுறவு இயக்கம் தமிழ்நாட்டில் மக்களின் பல்திறப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுகின்றது ; குறிப்பாக, விவசாயக் கடனுதவி, விவசாய இடுபொருட்கள் வழங்கல், விளைபொருட்களை விற்பதற்கு வசதி செய்தல், இன்றியமையா நுகர் பொருட்களை விநியோகித்தல் ஆகிய துறைகளில் கூட்டுறவு இயக்கம் பெருந்துணையாக நிற்கின்றது.

2. 1977-78-ல் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்த சுருக்க ஆய்வுரை.—1977-78-ல், குறுகிய கால, மத்தியகாலக் கடன்களாக 127.13 கோடி ரூபாயும் நீண்டகாலக் கடனாக 12.28 கோடி ரூபாயும் வழங்கப்பட்டன. அதற்கு முந்திய ஆண்டில் முறையே 125.12 கோடி ரூபாயும், 19.14 கோடி ரூபாயும் வழங்கப்பட்டன. 1977-78-ல் 54.84 கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாய விளை பொருட்கள் விற்கப்பட்டன. அதற்கு முந்திய ஆண்டில் 35.72 கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாய விளை பொருட்கள் விற்கப்பட்டன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1976-77 ஆம் ஆண்டில் 147.23 கோடி ரூபாய் மதிப்புள்ள பண்டங்களை விற்பனை செய்திருக்க, 1977-78-ல் 139.47 கோடி ரூபாய் மதிப்புள்ள பண்டங்களை விற்பனை செய்துள்ளது.



3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு—ஐந்தாவது திட்டக் காலத்தில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கான மொத்தச் செலவு, நடப்பாண்டிற்கான மதிப்பீடுகள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| திட்டங்களின் விவரங்கள். | செலவு 1 75 ஆம் ஆண்டில். | செலவு 1975-76 ஆம் ஆண்டில். | செலவு 1976-77 ஆம் ஆண்டில். | செலவு 1977-78 ஆம் ஆண்டில். | 1978-79 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு. | 1978-79 ஆம் ஆண்டில் எதிர் பார்க்கப் படும் செலவு. |
|---|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| அ. மாநிலத் திட்டப் பணிகள்— | | | | | | |
| 1. கடன் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 259·61 | 544·26 | 735·33 | 1095.40 | 432.79 | 459·94 |
| 2. விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 2.84 | 21·93 | 26·37 | 6.53 | 6.38 | 10.62 |
| 3. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 15.98 | 9.52 | 12·67 | 30·62 | 24·84 | 161·13 |
| 4. ஏனைய வகை கூட்டுறவுச் சங்கங்கள் .. | .. | 7·71 | 15·79 | 19·87 | 16·04 | 44.97 |
| 5. கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி .. | 0·32 | .. | .. | 10.86 | .. | 0.13 |
| மாநிலத் திட்டப்பணிகளின் மொத்தம் .. | 278.75 | 583·42 | 790·16 | 1,163·28 | 480·05 | 676.79 |
| ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய அரசுத்துறைத் திட்டங்கள், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நிதியுதவி அளிக்கும் திட்டங்கள். | 95·30 | 221·90 | 245·04 | 266·72 | 211·76 | 323·51 |
| பெருமொத்தம் .. | 374·05 | 905·32 | 1,035·20 | 1,430.00 | 691·81 | 1,000·30 |

## கூட்டுறவுக் கடனுதவி

### குறுகிய கால, மத்தியகாலக் கடன்கள்.

4. முகவுரை.—கிராம விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், இம் மாநிலத்தில் உள்ள கூட்டுறவு இயக்கத்தின் மைய அமைப்புகளாக உள்ளன. இம் மாநிலத்தில் 4,740 சங்கங்கள் குறுகிய கால, மத்திய காலக் கடன்களை அளிக்கின்றன. விவசாயம் குறித்த தேசிய ஆணைக்குழு, இம்மாநிலத்தில் குறுகிய கால, மத்திய காலக் கடன் தேவைகள் கிட்டத்தட்ட 310 கோடி ரூபாயாகுமென மதிப்பிட்டுள்ளது. அத்தொகையில் 40 சதவிகிதத்தை 1977-78-ல் கூட்டுறவு சங்கங்கள் வழங்கியுள்ளன. ஆறாவது திட்ட இறுதியில் இது 60 சதவிகிதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5. கடன் வழங்குதல்.—1973-74-ல் கொடுக்கப்பட்ட குறுகிய கால, மத்திய காலக்கடன்கள் 78.82 கோடி ரூபாயாகும்; அது, 1977-78-ல் 127.13 கோடி ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. ஆனால், நடப்பு ஆண்டில், இச்சீரான முன்னேற்றத்தை நிலை நிறுத்தவும், 145 கோடி ரூபாய் என்ற இலக்கை எய்தவும் இயலாது. 1978 டிசம்பர் இறுதிவரை 77.50 கோடி ரூபாய் மட்டுமே கடன்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைகளை திருப்பிக் கொடுக்காமலிருப்பதன் விளைவாக, மத்திய வங்கியிலும் தொடக்க சங்கங்களிலும் தவணை கடந்த கடன்கள் அதிகரித்து வருவதே கடன்கள் கொடுப்பதில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சிக்கான முக்கிய காரணம் ஆகும். ஆனால், வரும் மாதங்களில் தவணை கடந்த கடன்களை வசூலிப்பதில் முன்னேற்றம் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் 1979-80 ஆம் ஆண்டில் வழங்கப்படும் குறுகிய கால, மத்தியகாலக் கடன்களுக்கான இலக்கு 160 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

6. விவசாயிகளைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக ஆக்குதல்.—இம்மாநிலத்தில் சாகுபடியின் கீழ் உள்ள விவசாய நில உடைமைகள் 53.14 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதில், 40.32 இலட்சம் நில உடைமைகளை வைத்துள்ளவர்கள் (இது சுமார் 76 சதவிதமாகும்), 1978 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதி நிலவரப்படி விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்கள் ஆகி உள்ளனர். சிறு விவசாயிகளும் ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளும் சாகுபடி செய்யும் நில உடைமைகளின் எண்ணிக்கை, 42.05 இலட்சமாகும்; அதில் 30.64 இலட்சம் நில உடைமைகளை வைத்துள்ளவர்கள் (அது சுமார் 73 சதவிதமாகும்) டிசம்பர் 1978 இறுதி நிலவரப்படி விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாகியுள்ளனர்.



இந்த சதவிதங்கள், நடப்பாண்டின் இறுதிக்குள் முறையே 80 சதவிதமாகவும், 75 சதவிதமாகவும் உயருமென எதிர்பார்க்கப்படுகின்றன. சாகுபடியின் கீழ் உள்ள நில உடைமைகளை வைத்திருப்பவர்களை குறிப்பாக, சிறு விவசாயிகளையும், ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளையும் அதிக அளவில் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர்களாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

7. நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதல்.—தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்த பிரிவினரின் தேவைகளைக் குறித்து போதிய கவனம் செலுத்தி வருகின்றன. இந்திய ரிசர்வ் வங்கியின் வழிமுறையின்படி மொத்தக் கடன் தொகையில் 20 சதவிதம் நலிந்த பிரிவினருக்குக் கொடுக்கப்படவேண்டும்: ஆனால், சொந்தமாகவோ அல்லது குத்தகையின் அடிப்படையிலோ ஐந்து எக்கர் நிலத்திற்கும் குறைவாக சாகுபடி செய்கின்ற நலிந்த பிரிவினருக்கு, கூட்டுறவுச் சங்கங்கள் 61.91 கோடி ரூபாயை (அதாவது 49 சதவிதம்) கடனாக வழங்கியுள்ளன. இதை 1979-80 ஆம் ஆண்டு இறுதிக்குள் 54 சதவிதத்திற்கு உயர்த்தக் கருதப்பட்டுள்ளது.

8. இழப்பு நிதி (Risk Fund).—நலிந்த பிரிவினருக்கு அதிகமாகக் கடன்களை வழங்குவதில், விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்களையும் மத்திய கூட்டுறவு வங்கிகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு, அவைகளின் இழப்பு நிதிக்கு (Risk Fund) அரசு நிதி வழங்கி வருகிறது. நலிந்த பிரிவினருக்குக் கொடுக்கப்பட்ட கடன்களில் வாராத கடன்களையும், சந்தேகக் கடன்களையும் தள்ளுபடி செய்வதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படும். 30—6—1978-ல் விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் இழப்பு நிதிகளில் முறையே 312.10 இலட்ச ரூபாயும், 112.70 இலட்ச ரூபாயும் இருந்தன. 1979-80-ல் இந்நிதிகளுக்கு 27.08 இலட்ச ரூபாய் வழங்க அரசு கருதி உள்ளது.

9. உள்நிதி வசதிகள்.—மேன்மேலும் அதிக அளவில் கடன்கள் வழங்க ஏற்ற வகையில், விவசாயக் கடன் சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் நிதி வசதிகள் போதுமான அளவிற்கு வளர்க்கப்பட்டுள்ளன. 1977-78 ஆம் ஆண்டின் இறுதியில் 54.43 கோடி ரூபாயாக இருந்த அவற்றின் மொத்த பங்கு மூலதனம் (அரசு பங்கு மூலதனம் நீங்கலாக) நடப்பு ஆண்டின் இறுதிக்குள் 60 கோடி ரூபாயாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றின் மொத்த வைப்புத் தொகை 206.67 கோடி ரூபாயிலிருந்து சுமார் 230 கோடி ரூபாயாக உயரும் என எதிர்பார்க்கப்படு

றது. 1979-80 ஆம் ஆண்டு இறுதிக்குள், அவைகளது பங்கு மூலதனம் 69 கோடி ரூபாயாகவும், வைப்புத்தொகை 260 கோடி ரூபாயாகவும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

10. அரசு பங்கு மூலதனம்.—கடன் கூட்டுறவுச் சங்கங்கள் போதுமான அளவு கடன் வாங்குவதற்குத் தகுதியுடையதாக இருப்பதற்கு, இவைகளின் பங்கு மூலதனத்தை அரசு வலுப்படுத்தி வருகிறது. நிலவள வங்கிகள், நகர வங்கிகள் உட்பட கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசின் மொத்த முதலீடுகள் 31—3—1978 அன்று 19.42 கோடி ரூபாயாக இருந்தன.

11. நடப்பு ஆண்டில் 150 இலட்ச ரூபாய் முதலீடு செய்ய கருதப்பட்டுள்ளது. இதற்கான கடன் அனுமதி இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அரசு, இந்திய ரிசர்வ் வங்கியின் துணையுடன் 1979-80 ஆம் ஆண்டிலும் தொகை வழங்கும்.

### நீண்ட காலக் கடன்.

12. அமைப்பு.—மாநில நிலவள வங்கியுடன் இணைந்துள்ள 223 தொடக்க நிலவள வங்கிகள் மாநிலத்தில் உள்ள விவசாயிகளின் நீண்டகாலக்கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன. இதுவரை, சிறு பாசனத்திற்காகக் கடன்கள் அளிப்பதே இவ்வங்கிகளின் முக்கிய பணியாக இருந்தது. ஆனால் பின்னர், நிலத்தடி நீர் நிலைமை பெருமளவில் குறைந்து வருவதன் காரணமாக, வங்கிகள் தங்களுடைய கடன் கொடுக்கும் நடவடிக்கைகளை வேறு துறைகளுக்குத் திருப்பியுள்ளன.

13. கடன் கொடுத்தல்.—நிலவள வங்கிகள், 1976-77 ஆம் ஆண்டில் 19.14 கோடி ரூபாயும், 1977-78 ஆம் ஆண்டில் 12.38 கோடி ரூபாயும் கடனாக அளித்துள்ளன. தவணை கடந்த நிலுவைகளின் சதவிதம் அதிகமாயிருந்ததன் விளைவாக வங்கிகளால் அதிக கடன் வழங்க இயலவில்லை. எனவே 1978-79 ஆம் ஆண்டில் 16 கோடி ரூபாய் கடன்களாக கொடுக்கப்படவேண்டும் என்ற திட்டம் நிறைவேற வழியில்லை ஆயினும், கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய் கடன்களாக கொடுக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 7.33 கோடி ரூபாய் அளவிற்குத்தான் கடன் வழங்கப்பட்டுள்ளன. தவணை கடந்த நிலுவைகள் வசூலிக்கப்பட்டு அதன் விளைவாக நிலுவைகள் கணிசமான அளவிற்குக் குறைந்தால், 1979-80-ல் நீண்டகாலக் கடன்களாக 17 கோடி ரூபாய் (8.50 கோடி ரூபாய் இயல்பான திட்டங்களின் கீழும் எஞ்சியவை விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவிபெறும் திட்டங்களின் கீழும்) வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சிறு பாசனத் திட்டங்களுக்கு



கடன்கள் வழங்குவதற்கான வாய்ப்புகள் குறைந்து வருவதால், நிலவள வங்கிகள், வணிகப் பயிர்களான தென்னை, முந்திரி, காபி ஏனைய தோட்டப் பயிர்களின் சாகுபடி, பட்டுப்புழு வளர்த்தல், டிராக்டர், இயந்திரக் கலப்பைகள் வாங்குதல், பண்ணை வீடுகள், கால்நடைக் கொட்டகைகள் அமைத்தல், பாற்பண்ணைத் திட்டம் போன்ற இதர நோக்கங்களுக்குக் கடன்கள் வழங்கவும், மின்வாரியத்திற்கும், மீன் வளக் கழகம், தமிழ்நாடு உணவுப்பொருள்கள் வழங்கு கழகம் போன்ற ஏனைய அரசு நிறுவனங்களுக்கும் முன்பணம் கொடுக்கவும் முயற்சி செய்து வருகின்றன. நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் உபரி நிலம் ஒப்படைக்கப் பெற்றவர்கள், தங்கள் நிலங்களை மேம்படுத்தி பலன் அடைய ஏதுவாகும் பொருட்டு அத்தகைய நிலங்களின் பேரில் கடன்கள் வழங்குவதற்காக, அந்த நிலங்களை அடைமானம் வைக்க அரசு அனுமதித்துள்ளது. தவிர, உபரி நிலங்கள் ஒப்படை செய்யப்பட்ட நிலமில்லாதவர்கள் மேம்பாட்டுக் கடன்களைப் பெறுவதற்காக நிலம்ஒப்படை செய்யப்பட்டவர்களிடமிருந்து நிலங்களை அரசு திரும்ப எடுத்துக்கொள்ள நேரிட்டால், அக்கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கான உத்திரவாதத்தை அரசு தந்துள்ளது. உபரி நிலங்கள் ஒப்படைக்கப்பட்டவர்களுக்குக் கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுமார் 85,000 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப்பெற்றுள்ள சுமார் 50,000 சிறு விவசாயிகள் இதனால் பயனடைவர்.

14. விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத் திட்டங்கள்.—1968-69 ஆம் ஆண்டிலிருந்து விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் திட்டங்களை வகுப்பதன் மூலம், விவசாய வளர்ச்சிக்குக் கடன் வழங்குவதற்காகப் பகுதிவாரியான வளர்ச்சி பற்றி திட்டமிடப்பட்டுள்ளது. 38.32 கோடி ரூபாய் செலவிலான 51 சிறுபாசனத் திட்டங்களும், 12.43 கோடி ரூபாய் செலவிலான 36 சிறு பாசனமில்லாத பிற திட்டங்களும் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

15. 4,056 மின்சார விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக மாநில நிலவள வங்கி, தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 1976-77-லிருந்து இதுவரை 182.54 இலட்ச ரூபாய் கடன் வழங்கியுள்ளது.

16. கடனீட்டுப் பத்திரங்களுக்கு அரசு நிதி வழங்குதல்.—மாநில நிலவள வங்கி கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுவதன் வாயிலாக நிதி திரட்டுகிறது. மாநில, மத்திய அரசுகள், விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம், இன்னும் பிற நிறுவனங்கள் இப் பத்திரங்களை வாங்கி நிதி வழங்குகின்றன. இவ்வகைப்

பத்திரங்களின் பேரில் மாநில அரசு நிதி வழங்கி, 31—3—1978 அன்று நிலுவையாகவுள்ள தொகை 18.30 கோடி ரூபாயாகும். நடப்பு ஆண்டில் மாநில அரசு நிதி வழங்குவதற்காக 110 இலட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் 123 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

17. **புதிய கிணறு வெட்டுவதற்கான உதவித் தொகை.**—புதிய கிணறு வெட்டுவதற்காகும் செலவில் 25 சதவிதம் அல்லது 500 ரூபாய் இதில் எது குறைவானதோ அத்தொகையை உதவித் தொகையாக தொடக்க நிலவள வங்கிகள் மூலம் சிறு விவசாயிகளுக்கு அரசு வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் சுமார் 1,000 சிறு விவசாயிகள் இத்தகைய புதுக் கிணறு உதவித் தொகை பெறுவர். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 5 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், 1,000 சிறு விவசாயிகளுக்கு, ஒரு கிணற்றுக்கு 500 ரூபாய் விதம் உதவித் தொகை வழங்க, 1979-80 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலும் 5 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

18. **இயற்கைப் பேரிடர்களிலிருந்து நிவாரணம்.**—1977-78 ஆம் ஆண்டில் வெள்ளத்தாலும் புயலாலும் ஏற்பட்ட மிகப் பெரிய சேதம் காரணமாக, விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் 28.11 கோடி ரூபாய் அளவிற்கு குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டன. இதைத் தவிர, 1976-77 ஆம் ஆண்டில் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்ட கடன்களில் 19.25 கோடி ரூபாய் அளவிற்கு தவணைகள் மாற்றியமைக்கப்பட்டன. நிலவள வங்கிகளும் கடந்த நான்கு ஆண்டுகளில் 32.87 கோடி ரூபாய் அளவிற்கு, ஆண்டுத் தவணைகள் வசூலிப்பதைத் தள்ளிவைத்து அதற்கேற்ப கடன் தவணைகளை மாற்றியமைத்தன.

19. **விவசாயக் கடன் உறுதி (Stabilisation) நிதி.**—இயற்கையின் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட நிவாரணம், பல்வேறு மட்டங்களில் பராமரிக்கப்படும் விவசாயக் கடன் உறுதி நிதியிலிருந்து, கூட்டுறவுச் சங்கங்களால் சரிக்கட்டப்படுகிறது. குறுகிய காலக் கடன் வழங்கும் அமைப்பில், மத்திய அரசால் வழங்கப்படும் கடனிலிருந்தும், உதவித் தொகையிலிருந்தும் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கிகளின் நிகர இலாபத்திலிருந்து அளிக்கப்படும் தொகையினாலும் இந்த நிதி உருவாக்கப்படுகிறது. மத்திய அரசானது, இதுவரை, மாநிலக் கூட்டுறவு வங்கியின் விவசாயக் கடன் உறுதி நிதிக் கணக்கில் 475.75 இலட்ச ரூபாய் வழங்கியுள்ளது. குறுகிய காலக் கடன் அமைப்பில் கிடைப்பதுபோல, மாநில நிலவள வங்கியும், தொடக்க நிலவள வங்கிகளும் பராமரிக்கும் இந்நிதிக்கு மத்திய அரசிடமிருந்து உதவி கிடைப்பதில்லை. நீண்ட காலக் கடன் வழங்கும் வங்கிகளின் இந்த நிதி அவ்வங்கிகள் தங்களுடைய ஆண்டு நிகர இலாபத்திலிருந்து வழங்கும் தொகையினாலும், அவ்வப்போது மாநில அரசு வழங்கும் தொகையினாலும் சேர்க்கப்படுகிறது. மாநிலத்தில் சில பாகங்களில் 1974-75 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகள் நிலவிய கடுமையான வறட்சி காரணமாகவும் 1977-78 ஆம் ஆண்டில் புயலாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்ட சேதம் காரணமாகவும் நிலவள வங்கிகள், கடந்த நான்கு ஆண்டுகளில், 32.87 கோடி ரூபாய்க்கு ஆண்டுத் தவணைகள் வசூலிப்பதைத் தள்ளிவைத்து கடன் தவணைகளை மாற்றி அமைத்துள்ளன. குறுகிய காலக் கடன் அமைப்பில் கிடைப்பதுபோல இக்காரியத்திற்காக, இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து எந்தவித உதவியும் கிடைக்காததால், மாநில நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கிகள் ஆகியவைகளின் நிதிவசதிகள் கணிசமான அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, அரசு நிதி உதவியுடன் மாநில நிலவள வங்கியின் நிதியை வலுப்படுத்துவது அவசியமாகியுள்ளது. இதற்காக, மாநில அரசு நடப்பு ஆண்டில் 40 இலட்ச ரூபாயை இந்த நிதிக்கு வழங்கியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக 50 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

20. **விவசாயக் கடன் நிவாரண (Relief) நிதி.**—விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய காலக் கடன்களை வழங்குவதில் ஏற்படக்கூடிய எதிர்பாராத இழப்புகளைச் சரிகட்ட விவசாயக் கடன் நிவாரண நிதி அமைக்கப்பட்டுள்ளது. இந்நிதியில் 87.51 இலட்ச ரூபாய் உள்ளது. இந்நிதியை வலுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இதற்காக, அரசு 1979-80 ஆம் ஆண்டில் 10 இலட்ச ரூபாய் வழங்க உத்தேசித்துள்ளது.

21. **தவணை கடந்த நிலுவைகள் குறித்த பிரச்னை.**—கடந்த மூன்று ஆண்டுகளில் தவணை கடந்த நிலுவைகளின் சதவிதம் அதிக அளவில் பெருகி வந்துள்ளது. இது, கூட்டுறவுச் சங்கங்களின் கடன் வழங்கும் வசதியைப்

பெரிதும் பாதிந்துள்ளது. மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க நிலவள வங்கிகள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் தவணை கடந்த நிலுவைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| காலம். | கேட்பு. | வசூல். | நிலுவை. | கேட்புத் தொகையில் தவணை கடந்த நிலுவையின் சதவீதம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் கோடியில்) | | |
| மத்திய கூட்டுறவு வங்கிகள்— | | | | |
| 30—6—1974-ல் | 86·81 | 80·59 | 6·22 | 7 |
| 30—6—1975-ல் | 103·77 | 94·77 | 9·00 | 9 |
| 30—6—1976-ல் | 121·24 | 108·00 | 13·24 | 11 |
| 6—1977-ல் | 134·13 | 114·51 | 19·62 | 15 |
| 30—6—1978-ல் | 184·96 | 139·90 | 45·06 | 24 |
| தொடக்க நிலவள வங்கிகள்— | | | | |
| 30—6—1974-ல் | 22·63 | 18·56 | 4·07 | 17·9 |
| 30—6—1975-ல் | 14·94 | 9·00 | 5·94 | 39·6 |
| 30—6—1976-ல் | 26·15 | 16·59 | 9·56 | 36·3 |
| 30—6—1977-ல் | 28·90 | 14·59 | 14·31 | 49·5 |
| 30—6—1978-ல் | 48·25 | 15·87 | 32·38 | 67·1 |

கடன்கள் உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்தப்படாவிடில், வங்கிகளின் நிதி வசதிகள் கணிசமான அளவிற்கு பாதிக்கப்படும். அதனால், கடன் வழங்கு ஓடைகள் உலர்ந்துவிடும். உண்மையில், மொத்தமுள்ள 223 தொடக்க நிலவள வங்கிகளில் 120 வங்கிகள், 30—6—1978 ஆம் நாள் நிலவரப்படி தவணை கடந்த நிலுவைகள் மிகுதியாக இருந்ததால், புதிதாகக் கடன்களை வழங்கு வதற்குத் தகுதி உடையவை இல்லாமல் ஆகிவிட்டன. மாநில நிலவள வங்கி, விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத்துக்கும் மாநில அரசுக்கும் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகையை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ளது. மாநில நிலவள வங்கி தனது நிதி இடர்ப்பாட்டிலிருந்து விடுபடும் பொருட்டு 7 கோடி ரூபாயை முன்பணமாக மாநில அரசு வழங்கி



யுள்ளது. நாட்டிலேயே அதன் வகையில் முதன்மையான வங்கிகளில் ஒன்றாக இதுவரை கருதப்பட்டு வந்த இந்த வங்கியைப் புதுப்பித்து அமைக்க வழி வகைகளைக் கூறுமாறு பணிக்குழு ஒன்று அரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

22. **இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள்.**—சிறு விவசாயிகளுக்குப் பொதுவான பாசன வசதி அளிக்க 327 இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச் சங்கங்களில் 101 சங்கங்கள், 3.38 கோடி ரூபாய் முதலீட்டுச் செலவிலும், 13,200 ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையிலும், 872 யூனிட்கள் அடங்கிய சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன. இச் சங்கங்களுக்கு நிலவள வங்கிகள் நிதியுதவி செய்கின்றன. இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிர்வாக உதவித் தொகையை மாநில அரசு வழங்குகிறது.

23 **விவசாயிகள் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள்.**—விவசாயிகளுக்கு, குறிப்பாக சிறிய குறைந்த நிலமுள்ள விவசாயிகளுக்கு ஒரே அமைப்பின்கீழ், ஒருங்கிணைந்த கடன் வசதி-விவசாயப் பணிகளுக்கு வகை செய்வதற்காக, சிறு விவசாயிகள் மேம்பாட்டு நிறுவனம், மாநில அரசு ஆகியவற்றின் உதவியோடு, 1976-78-ல் விவசாயிகள் பணிக் கூட்டுறவு சங்கங்கள் 26 அமைக்கப்பட்டுள்ளன.

24. **நுகர்வுக் கடன்.**—கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதாலும், அதன் விளைவாக நிறுவன அமைப்பில்லாத தனியார்களிடமிருந்து கடன் கிடைப்பது குறைந்ததாலும் ஏற்பட்டுள்ள நிதி வசதிக் குறைவை முடிந்த அளவு தீர்ப்பதில் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. 839 விவசாயக் கடன் சங்கங்களும், மாநில-மத்திய கூட்டுறவு வங்கிகளின் 337 கிளைகளும், 128 கூட்டுறவு நகர வங்கிகளும் தற்போது நகைக்கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. இவ்வமைப்புகள், 1975-76-ல் 22 கோடி ரூபாயும் 1976-77-ல் 40.10 கோடி ரூபாயும் நகைக் கடனாக, வழங்கியிருக்க 1977-78-ல் 50.77 கோடி ரூபாய் வழங்கியுள்ளன. நடப்பு ஆண்டு முழுவதற்கும் உள்ள இலக்கு 60.00 கோடி ரூபாயாக இருக்க, டிசம்பர் 1978 முடிய 60.10 கோடி ரூபாய் அளவிற்கு நகைக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் வழங்கப்படவிருக்கும் நகைக் கடனுக்கான இலக்கு 70 கோடி ரூபாய் ஆகும். இத்துறையில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, இரும்புப் பெட்டகங்களை வாங்குவதற்காக கடன் வழங்குவதன் மூலம் இவற்றிற்கு, மாநில அரசு உதவி செய்து வருகிறது. பெட்டக அறைகளைக் கட்டுவதற்காக மத்திய வங்கிகளின் கிளைகளுக்கும்

உதவித் தொகையாகவும் கடனாகவும் அரசு நிதி உதவி செய்து வருகிறது. இவ்விரு காரியங்களுக்காக, 1978-79 ஆம் ஆண்டில் 17.50 இலட்ச ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் 17.38 இலட்ச ரூபாய் உதவியளிக்கப்படவிருக்கிறது.

25. நகர்ப்புறக் கடன்.—நகர்ப்புற மக்களுக்கும், ஓரளவு நகர்ப்புறத்தைச் சேர்ந்த மக்களுக்குக் கடன் வசதிகளையும் வங்கி வசதிகளையும்131 கூட்டுறவு நகர வங்கிகள் அளித்து வருகின்றன. அவை, 1977-78 ஆம் ஆண்டில் 48.38 கோடி ரூபாய் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்கியுள்ளன. 1976-77 ஆம் ஆண்டில் வழங்கிய கடன்களின் அளவு 37.38 கோடி ரூபாயாகும். குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டத்தின் கீழ் இவ்வங்கிகள் 1977-78 ஆம் ஆண்டில் 84.54 இலட்ச ரூபாய் கடனாக வழங்கியுள்ளன. 1976-77 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களின் அளவு 46.40 இலட்ச ரூபாயாகும். நடப்பு ஆண்டில், 1978 டிசம்பர் வரையில் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன் தொகை 74.93 இலட்ச ரூபாயாகும்.

### கூட்டுறவு விற்பனை, பதப்படுத்துதல் மற்றும் கிடங்கு வசதி.

26. அமைப்பு.—மாநிலத்தில் 116 தொடக்க நிலை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. இவை, மாநில அளவில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தோடு இணைந்துள்ளன. திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மாவட்ட அளவில் உள்ள ஒரே கூட்டுறவு விற்பனைச் சங்கமாகும். விற்பனைச் சங்கங்கள், தங்களது உறுப்பினர்களின் விவசாய விளைபொருட்களை விற்பனை செய்வதில் உதவிசெய்து, அதன் வாயிலாக நியாயமான விலையைப் பெறுவதற்கு அவர்களுக்குத் துணை புரிகின்றன.

27. விவசாய விளை பொருட்களை விற்பனை செய்தல்.—1976-77 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களின் மதிப்பு 35.72 கோடி ரூபாயாயிருக்க, 1977-78 ஆம் ஆண்டில் 54.84 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 1978 டிசம்பர் வரையில் விற்பனை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களின் மதிப்பு 43 கோடி ரூபாயாகும். 1979-80-ல் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள விளை பொருட்களை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



28. இரசாயன உரங்களின் விநியோகம்.—இரசாயன உரங்களை விநியோகிப்பது கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் முக்கிய நடவடிக்கையாக உள்ளது. குறிப்பாக, 1973 ஆம் ஆண்டில் இரசாயன உர மையக் களஞ்சியத்திலிருந்து உரங்களை விநியோகிப்பதை இத்துறையிடம் அரசு முழுதாக ஒப்படைத்ததிலிருந்து, இது இத்துறையின் பெரும்பணியாக அமைந்துள்ளது. தஞ்சாவூர், நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் தமிழ்நாடு விற்பனை இணையமும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும், நீலகிரி மாவட்டத்தில் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கமும் இரசாயன உர மையக் களஞ்சியத்திலிருந்து கிடைக்கும் இரசாயன உரங்களையும் வெளி அங்காடிகளில் கிடைக்கும் இரசாயன உரங்களையும் Pool and Non-Pool Fertilizers வாங்கி, சில்லரை விற்பனை நிலையங்களாகச் செயல்படும் 4,377 விவசாயக் கடன் சங்கங்கள் மூலமும் 106 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமும் வழங்கி வருகின்றன. விவசாயக் கடன் சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கொடுக்கும் பயிர்க் கடன்களில் ஒரு பகுதியாக இரசாயன உரங்களை வழங்குகின்றன. ரொக்க விற்பனை உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் அல்லாதவருக்கும், செய்யப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்ட இரசாயன உரங்கள் குறித்த விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. | வழங்கப்பட்ட இரசாயன உரங்கள். | | |
|---|---|---|---|
| | அளவு (இலட்சம் டன்களில்). | மதிப்பு (கோடி ரூபாயில்). | மாநிலத்தில் பயன்படுத்தப்பட்ட மொத்த இரசாயன உரத்தில் சதவிதம். |
| (1) | (2) | (3) | (4) |
| 1973-74 .. | 3.23 | 34·18 | 48 |
| 1974-75 .. | 2·83 | 54·08 | 58 |
| 1975-76 .. | 3.05 | 55·07 | 54 |
| 1976-77 .. | 3.03 | 49·20 | 51 |
| 1977-78 .. | 3.48 | 56·34 | 52 |

நடப்பாண்டில் 65 கோடி ரூபாய் மதிப்புள்ள சுமார் நான்கு இலட்சம் டன் உரங்களை வழங்குவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் திட்டமிட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில், 72 கோடி ரூபாய் மதிப்புள்ள 4.50 இலட்சம் டன் உரங்களை வழங்க கூட்டுறவுச் சங்கங்கள் திட்டமிட்டுள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையும் ஆகியவை

உரங்களைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்வதற்காக அவற்றுக்குத் தேவையான தொடக்க நிலைத்தொகை (Margin Money) அளிக்கும் பொருட்டு இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் அரசு, பங்கு மூலதனமாக 2.11 கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது.

29. **அரசுப்பங்கு மூலதனம்.**—கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை மேம்படுத்துவதற்காக 114 சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசு பங்கு கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1977-78 வரையில், 117.35 இலட்ச ரூபாயை அரசு முதலீடு செய்துள்ளது. நடப்பாண்டில் 2.25 இலட்ச ரூபாய் முதலீடு செய்யப்படும். 1979-80 ஆம் ஆண்டில் 0.26 இலட்ச ரூபாய் முதலீடு செய்ய வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

30. **விலை ஏற்ற இறக்கச் சிறப்பு நிதி.**—உறுப்பினர்களுடைய விவசாய விளை பொருட்களை நேரடியாக பெருமளவில் கொள்முதல் செய்வதற்காக கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், சங்கங்களின் விலை ஏற்ற இறக்கச் சிறப்பு நிதிக்கு அரசு உதவியளிக்கிறது. 1977-78 வரையில், 31 விற்பனைச் சங்கங்களின் விலை ஏற்ற இறக்கச் சிறப்பு நிதிக்கு 10.32 இலட்ச ரூபாய் அரசு வழங்கியுள்ளது. நடப்பாண்டில் 2 இலட்ச ரூபாய் வழங்கப்படும். 1979-80 ஆம் ஆண்டில் 2 இலட்ச ரூபாய் வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

### கூட்டுறவுத் துறையில் பதப்படுத்துதல்.

31. **பதப்படுத்தும் பிரிவுகள்.**—பங்கு மூலதனமாகவும் கடனாகவும் அரசு அளிக்கும் உதவியுடன் தோல் நீக்கும் ஆலைகள், நெல் அரைவை ஆலைகள், எண்ணெய் ஆலைகள், மரவள்ளிக் கிழங்கு, அன்னாசிப்பழம் ஆகியவற்றைப் பக்குவப்படுத்தும் பிரிவுகள் போன்ற பதப்படுத்தும் பிரிவுகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் இணை அமைப்புகளாக நிறுவியுள்ளன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குச் சொந்தமான வெவ்வேறு வகைப்பட்ட 85 பதப்படுத்தும் பிரிவுகள் உள்ளன .

32. **உரமணித் தொழிற்சாலை.**—மன்னார்குடிக்கு அருகிலுள்ள பாமணியில் 27.22 இலட்ச ரூபாய் செலவில் தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நிறுவியுள்ள உரமணித் தொழிற்சாலை மனநிறைவளிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. இது பல்வேறு தரங்களில் கலவை உரமணிகளைத் தயாரிக்கிறது. இவ்வாலை 1977-78 கூட்டுறவு ஆண்டில் 34,939 டன்கள் உரமணிகளையும், நடப்புக் கூட்டுறவு ஆண்டில் 1978 டிசம்பர் வரையில் 15,087 டன்கள் உரமணிகளையும் தயாரித்துள்ளது.



33. **பூச்சிக்கொல்லி மருந்துகள் உற்பத்தி.**—குடியலூர் கூட்டுறவு விவசாய பணிச் சங்கம் 1977-78 கூட்டுறவு ஆண்டில் 103.62 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பூச்சிக்கொல்லி மருந்துகளையும் நடப்புக்கூட்டுறவு ஆண்டில் 1978 டிசம்பர் வரையில் 48.54 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பூச்சிக்கொல்லி மருந்துகளையும் தயாரித்துள்ளது.

34. **சூரிய காந்தி விதை எண்ணெய் ஆலை.**—தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில், 61.06 இலட்ச ரூபாய் செலவில் சூரியகாந்தி விதை எண்ணெய் ஆலை ஒன்றை தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நிறுவியுள்ளது. போதுமான சூரியகாந்தி விதை கிடைக்காத காரணத்தால், கடலை எண்ணெய் உற்பத்தி செய்வதற்கான உரிமத்தை இவ்விணையம் பெற்றுள்ளது. 1977-78 கூட்டுறவு ஆண்டில் 667 டன் கடலை எண்ணெய்யை இவ்விணையம் உற்பத்தி செய்துள்ளது.

35. **கடலை எண்ணெய் ஆலை.**—வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருவண்ணாமலையில் 62 இலட்ச ரூபாய் செலவில் கடலை எண்ணெய் ஆலை ஒன்றைத் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நிறுவி வருகிறது. அங்கு இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் அவ்வாலை செயல்படத் தொடங்கும்.

36. **அரிசி ஆலைகளை நவீனப்படுத்தல்.**—1976 ஆம் ஆண்டின் அரிசி அரைவைத் தொழில் (முறைப்படுத்துதலும், உரிமம் வழங்கலும்) திருத்த விதிகளின்படி பழைய அரிசி ஆலைகளை நவீனப் படுத்தவேண்டும். ஆலைகளை நவீனப்படுத்துவதற்காக பங்கு மூலதனமாகவும் கடனாகவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. 1977-78 ஆம் ஆண்டில் 5 ஆலைகளை நவீனப்படுத்துவதற்காக 1.01 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ஒரு ஆலையை நவீனப்படுத்த நிதி உதவி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1979-80-ல், 10 ஆலைகளை நவீனப்படுத்துவதற்காகவும், 2 ஆலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையில் கொடுக்கப்பட வேண்டிய தொகைக்காகவும் 2.67 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

37. **விதை மேம்பாட்டுத் திட்டம்.**—கோயம்புத்தூர் மாவட்டத்தில், குடியலூர் கூட்டுறவு விவசாய பணிச் சங்கமும், 9 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் சேர்ந்து 170.50 இலட்ச ரூபாய் செலவில் நெல், பருத்தி, வேர்க்கடலை, தானியங்கள், பயிறுவகைகளின் தரமான விதைகளைப் பெருக்குவதற்காக விதை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகின்றன. 11 இடங்களில் 23,000 ஏக்கர் நிலத்தில் 25,000 டன் விதைகள் இத்திட்டத்தின்

மூலம் உற்பத்தி செய்யப்படும். குடியநூர் கூட்டுறவு விவசாயப் பணிச் சங்கமும் 5 விற்பனைச் சங்கங்களும் சேர்ந்து 93.50 இலட்ச ரூபாய் செலவில் இத்திட்டத்தின் முதற் கட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. 1976-77-இும் 1977-78-இும் அரசுப் பங்கு மூலதனமாக 9.35 இலட்ச ரூபாயும் கடனாக 32.73 இலட்ச ரூபாயும் வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டில் கடன் தொகையில் எஞ்சி யுள்ள 32.73 இலட்ச ரூபாயும் சங்கங்களுக்குக் கொடுக்கப்படும், 6 பிரிவுகளின் கிழும் கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டத்தின் முதற் கட்டம் 1979 ஜூனில் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1979-80-ல் கடனாகக் கொடுக்கப்பட 53.55 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கிடங்கு வசதி.

38. கிடங்குகளைக் கட்டுதல்.—விவசாய உற்பத்தி வளர்ந்து வருகின்ற சூழ்நிலையில், கிடங்கு வசதிகள் மிகவும் இன்றியமையாதனவாகும். விவசாயக் கடன் சங்கங்களுக்கும், விற்பனைச் சங்கங்களுக்கும், கிடங்குகள் கட்டு வதற்காக அரசு உதவித் தொகையாகவும் கடனாகவும் நிதி உதவி அளிக்கிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், செலவில் 60 சதவிதத்தை, மாநில அரசுக்குக் கடனாக வழங்குகிறது. மீதி உள்ள 40 சதவிதம் மாநில அரசால் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 1974-75 முதல் 1977-78 வரை ஒவ்வொன்றும் 150/120 டன்கள் கொள்திறனுடைய 750 கிராமக் கிடங்குகளும் ஒவ்வொன்றும் 1,000 டன்கள் கொள் திறனுடைய 23 விற்பனைக் கிடங்குகளும் கட்டுவதற்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. மேலும், 1977-78 ஆம் ஆண்டில், வறட்சிப் பகுதித் திட்டத்தின் கீழ், 30 கிராமக் கிடங்குகளுக்கு நிதி உதவி யளிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில், 200 கிராமக் கிடங்குகளும், 10 விற்பனைக் கிடங்குகளும், வறட்சிப் பகுதித் திட்டத்தின்கீழ் 32 கிராமக் கிடங்குகளும் கட்டுவதற்கு நிதி உதவி அளிக்கப்படும்.

39. இருநூறு கிராமக் கிடங்குகளையும் 5 விற்பனைக் கிடங்குகளையும் கட்டுவதற்காக 1979-80-ல் நிதி உதவி அளிக்கப்படவிருக்கிறது. இதனால் 1979-80 ஆம் ஆண்டு இறுதியில், நிதியுதவி அளிக்கப்பட கிராம கிடங்குகள், விற்பனைக் கிடங்குகள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை முறையே 3,496-ம் 253-ம் ஆக அதிகரித்து, கட்டி முடிக்கப்பட்ட கிடங்குகளின் மொத்தச் சேமிப்புக் கொள்ளளவு 5 இலட்சம் டன்னாக இருக்கும். 1979-80-ல் அரசு 95 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கும்; இதில், எஞ்சிய பணிகளை நிறைவேற்றுவதற்காகும் 50 இலட்ச ரூபாயும் அடங்கும்.



## நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

40. அமைப்பு.—நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது மூன்று வித நிலை களைக் கொண்டதாகும். அதாவது, மாநில அளவில், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் மாவட்டம் அல்லது அதன் ஒரு பகுதி அளவில் 12 மாவட்டக் கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கங்கள் உட்பட 29 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளும் கிராமம் அல்லது நகர அளவில் 1,764 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளும் உள்ளன. இந்தத் தொடக்கப் பண்டக சாலைகளில், மாணவர்களுக்குப் பாட புத்தகங்கள், குறிப்பேடுகள், மற்ற எழுது பொருட்கள் வழங்கும் 810 கல்லூரி/உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் கூட்டுறவு பண்டக சாலைகளும், மகளிருக்கு மட்டுமேயான 20 பண்டகசாலைகளும், தொழிற்சாலை, மலைத் தோட்டத் தொழிலாளர்களுக் கென்று 271 பண்டக சாலைகளும் உள்ளன. தொடக்கப் பண்டக சாலைகள் இல்லாத அல்லது தொடக்கப் பண்டக சாலைகள் செவ்வையாகச் செயல் படாத இடங்களில் மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் சில்லறை விற்பனைக்காக 628 கிளைகளைத் தொடங்கியுள்ளன. தொடக்கப் பண்டக சாலைகளும், நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் 379 கிளைகளைத் தொடங்கியுள்ளன நுகர்வோர் சங்கங்களின் திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் 20 சிறப்பங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வணிகத்தைப் பெருக்க சிறப்புச் சிற்றங்காடிகள் எனப்படும் 90 நவீன சிற்றங்காடிகளை கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், நன்கு செயல்படும் தொடக்கப் பண்டகசாலைகள் ஆகியவை திறந்துள்ளன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1977-78-ல் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு 139.47 கோடி ரூபாயாகும்.

41. மத்திய அரசிடமிருந்து நிதி உதவி.—வேலை வாய்ப்பு வசதிகளை அளிக்கக்கூடிய மற்றும் வளர்ச்சி வாய்ப்புள்ள நுகர்வோர் திட்டத்தின்கீழ் மத்திய அரசு 1971-72 முதல் நிதி உதவி அளித்து வருகிறது. திருப்பூரில் பனியன்கள் தயாரிக்கும் பிரிவு ஒன்றை அமைக்கும் பொருட்டு கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு—விநியோக விற்பனைச் சங்கத்திற்கும், மதுரையில் கிளை—விநியோக நிலையம் ஒன்று அமைப்பதற்காகத் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கும் 1971-72 முதல் 1977-78 ஆம் ஆண்டு காலத்தில், இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டது. கீழ்க்காணும் திட்டங் களுக்கும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது :—

(i) 6 சிறப்பங்காடிகள் அமைத்தல்.

(ii) சிறப்பங்காடி ஒன்றின் விரிவாக்கம்.

(iii) சிறப்பங்காடிகளின் 7 கிளைகளை நிறுவுதல்.

(iv) பெரிய அளவிலான 32 சில்லறை விற்பனை அங்காடிகளை அமைத்தல்.

(v) பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடி ஒன்றை விரிவு படுத்துதல்.

(vi) தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் விருத்தாசலத்தில் பிங்கான் பாண்ட பிரிவு ஒன்றை அமைத்தல்.

(vii) கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம், கோயம்புத்தூரில் மண்டல நுகர் பொருள் விநியோக நிலையம் ஒன்று அமைத்தல்.

(viii) பல்கலைக்கழக, கல்லூரி மாணவர்களுக்கென்று 36 பொதுச் சமையற் கூடங்கள் அமைத்தல்.

(ix) நலிந்த பிரிவினர், தொழிற்சாலைத் தொழிலாளர் முதலியோருக்கென்று 6 சிறு கிளைகள் அமைத்தல்.

(x) மாநகரங்களிலும், நகரங்களிலும் உள்ள குடிசைப் பகுதியில் வாழ்கின்ற நலிந்த பிரிவினர்களில் மிகவும் நலிந்தவருக்கென்று 34 மிகச் சிறு கிளைகளை ஏற்படுத்துதல்.

(xi) தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் சென்னையில் பாலிதின் பைகள் செய்யும் பிரிவு ஒன்று அமைத்தல்.

சென்னை திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம் திறக்க இருக்கும் பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடிகள் 20, பொது சமையற் கூடம் 9, பாலிதின் பைகள் செய்யும் பிரிவு ஒன்று ஆகியவைகள் தவிர, மேற் சொன்ன அனைத்து பிரிவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இப்பிரிவுகள் விரைவில் தொடங்கப்படும். மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் இந்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1977-78-ஆம் ஆண்டில் 47.31 இலட்ச ரூபாய் அளவிற்கு நிதி உதவி பெற்றன.

42. பல்பொருள் அங்காடிகள் (சிறப்பங்காடிகள்) மற்றும் பெரிய அளவிலான சில்லறை விற்பனைக் கடைகள் (சிறப்பு சிற்றங்காடிகள்)—பல் பொருள் அங்காடிகள், நவீன விற்பனை முறைகளையும், சிறப்பான வணிக நடை முறைகளையும் செயல்படுத்தி, ஒரே இடத்தில் பலதரப்பட்ட பொருட்களும், வசதிகளும் கிடைக்கச் செய்வதன் மூலமாக நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்திற்கு ஒரு புதிய வடிவமைப்பை அளித்தன. மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டவுடன் 1978-79 ஆம் ஆண்டில்





திருவண்ணாமலையிலுள்ள சிறப்புச் சிற்றங்காடியை சிறப்பங்காடியாக மாற்றவும், பொன்னமராவதி, ஜெயங்கொண்டான் ஆகிய இடங்களில், பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடிகளை புதிதாகத் திறக்கவும், குடியாத்தம், அறந்தாங்கி ஆகிய இடங்களில் தற்போதுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களின் கிளைகளை பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடிகளாக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.

43. மண்டல நுகர்பொருள் விநியோக நிலையங்கள்.—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கொள் முதல் திறனை ஒரு முகப்படுத்தவும், வணிக நிலையைத் திறம்படுத்தவும், கூட்டுறவுச் சங்கங்களின் சில்லறை விற்பனை அங்காடிகளுக்குத் தயாரிப்பாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்து சுமுகமாகவும், தொடர்ச்சியாகவும் பொருட்கள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யவும் இரண்டு மண்டல நுகர் பொருள் விநியோக நிலையங்கள் அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்தது. கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங் களிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளை நிறைவு செய்ய மத்திய அரசின் 22.32 இலட்ச ரூபாய் நிதி உதவியுடன் கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம், அண்மையில், கோயம் புத்தூரில் ஒரு மண்டல நுகர்பொருள் விநியோக நிலையத்தை ஏற்படுத்தி யுள்ளது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் 72.50 இலட்ச ரூபாய் செலவில் சென்னையில் மற்றொரு மண்டல நுகர் பொருள் விநியோக நிலையத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பயன் பெறுவதற்காக இந்நிலை யத்தை அமைப்பதற்கு நிதி உதவியின் முதல் தவணைத் தொகையாக 1978-79-ஆம் ஆண்டில் 25.00 இலட்ச ரூபாய் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த நிலையம் 1—1—1980-ல் நுகர் பொருள் விநியோகத் தைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

44. நலிந்த பிரிவினர்களுக்குக் கூட்டுறவுத் துறையின் உதவி சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்கள் பின்தங்கிய பகுதிகளிலுள்ளோர், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் முதலியவர்களின் தேவைகளை நிறைவு செய்ய சிறு கிளைகளை அமைக்கும் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை களுக்கும், வலுவான தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை மத்திய அரசு கொண்டுவந்தது. மாநகரங் களிலும், நகரங்களிலும் குடிசைப் பகுதிகளிலுள்ள நலிந்த பிரிவினரில் மிகவும் நலிந்த பிரிவினருக்குப் பணிபுரிய மிகச் சிறு கிளைகளைத் (இம் மாநிலத்தில் மக்கள் அங்காடிகள் என்றழைக்கப்படும் ஜனதா அங்காடிகள்) தொடங்கும் புதிய திட்டம் ஒன்றும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

6 சிறு கிளைகளையும், 34 மிகச் சிறு கிளைகளையும் தொடங்குவதற்காக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 6.26 இலட்ச ரூபாய் நிதி உதவி அளிக்க 1977-78 ஆம் ஆண்டில் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. மேற்சொன்ன அனைத்துப் பிரிவுகளும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 35 சிறுகிளைகளையும், 10 மிகச் சிறு கிளைகளையும் தொடங்குவதற்காக, 1978-79 ஆம் ஆண்டில் இதுவரை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய அரசு 10.15 இலட்ச ரூபாய் நிதி உதவி வழங்கியுள்ளது. இவற்றுள், 34 சிறு கிளைகளும், 10 மிகச் சிறு கிளைகளும் தொடங்கப்பட்டுள்ளன. 1978-79 ஆம் ஆண்டில் 22 சிறு கிளைகளையும், 48 மிகச் சிறு கிளைகளையும் மத்திய அரசின் நிதி உதவி கிடைத்தவுடன் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய கிளைகள் பலவற்றைத் திறப்பதன் மூலமாக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாயத்திலுள்ள நலிந்த பிரிவினருக்கு நற்பணியாற்ற இயலும் பொருட்டு, மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உயர் அளவு நிதி உதவியைப் பயன்படுத்த கருதப்பட்டுள்ளது.

45. மாநில அளவில் நுகர்வோர் கூட்டுறவு இணையத்தை வலுப்படுத்துதல்.—மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கும் நிதி உதவி கிடைத்தவுடன் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தலைமை அலுவலகத்திலும் மதுரையில் உள்ள கிளை மற்றும் விநியோக நிலையத்திலும் வணிகத்தை விரிவுபடுத்தவும், திருச்சியில் ஒரு புதிய கிளை மற்றும் விநியோக நிலையத்தை அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

46. நலிந்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிரளித்தல்.—நலிந்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிரளிப்பதற்காக புதிய திட்டம் ஒன்றை மத்திய அரசு கொண்டுவந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், தற்போதுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துவதற்கும் அவற்றிற்குப் புத்துயிரளிப்பதற்கும், குறிப்பாக இழப்பு ஏற்பட்டு ஆனால் மீட்பு அடைந்து மேம்பாடு அடைவதற்கு ஆதாரமான அடிப்படை வளத்தையும் வாய்ப்பையும் பெற்றுள்ள சங்கங்களுக்கு நிதி உதவி கிடைக்கிறது. சென்னை, திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதற்குப் புத்துயிரளிக்கும் காரியத்திற்காக மத்திய அரசு, 1978-79-ல் 30 இலட்ச ரூபாய் உதவி அளித்துள்ளது. இத்துடன் மாநில அரசின் நிதி உதவியாக 10 இலட்ச ரூபாயும் அளிக்கப்படும். விண்ணப்பிக்கப்பட்ட நிதியுதவித் தொகையை மத்திய அரசு அளித்தவுடன் நீலகிரி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, மதுரை மாவட்ட பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை ஆகியவற்றிற்கும் புத்துயிர் அளிப்பதென்று கருதப்பட்டுள்ளது.



47. மாநில அரசின் நிதி உதவி.—நிர்வாகப் பணியாளர் செலவு, மேசை நாற்காலிகள், போன்றவற்றிற்காக உதவித் தொகையும் நடைமுதல் மூலதனத்தைப் பெருக்குவதற்கும் டிரக்கு வண்டிகள் வாங்குவதற்காகவும், கிடங்குகள் கட்டுவதற்காகவும் பங்கு மூலதனம் மற்றும் கடன் மூலமும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அரசு நிதியுதவி அளித்து வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு மாநிலத் திட்டப் பணிகளின் கீழ் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட மொத்த நிதியுதவி வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1975-76 | .. | .. | 9·52 இலட்ச ரூபாய் |
| 1976-77 | .. | .. | 12·67 இலட்ச ரூபாய் |
| 1977-78 | .. | .. | 30.62 இலட்ச ரூபாய் |

48. நுகர் பொருள் தொழிற்சாலைகள்.—நுகர்பொருள் தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில திட்டப் பணிகளின்கீழ், கடன், பங்கு மூலதனம், உதவித் தொகை ஆகியவற்றின் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரையில் 79 நுகர் பொருள் தொழிற் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. 1976-78-ல் ஒண்டிப்புதூரில் 76.45 இலட்ச ரூபாய் செலவில் கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் நிறுவிய சூரியகாந்தி மற்றும் பருத்தி விதை எண்ணெய் தொழிற்சாலை—சுத்திகரிப்பு ஆலை இதில் ஒன்றாகும்.

49. சிறப்பங்காடிகளும், சிறப்புச் சிற்றங்காடிகளும்.—இம்மாநிலத்தில் ஏழு கிளை சிறப்பங்காடிகளுடன் 20 சிறப்பங்காடிகளும் 90 சிறப்புச் சிற்றங்காடிகளும் ஏற்கெனவே உள்ளன. 1978-79-ல் 10 சிறப்புச் சிற்றங்காடிகள் தொடங்க 6 இலட்ச ரூபாய் நிதி உதவி வழங்க இருக்கிறது. 1979-80-ல் இன்னும் 10 சிறப்புச் சிற்றங்காடிகளை ஏற்படுத்துவதற்காக 6 இலட்ச ரூபாய் வழங்கப்படும்.

50. இடவசதியை விரிவுபடுத்தல்.—கிராமப் பகுதிகளில் நுகர் பொருட்களை இருப்பு வைத்துக் கொள்வதற்கும், பகிர்ந்தளிப்பதற்கும் அங்காடிகள் கட்டுவதற்காக கிராமப்புற நுகர்வோர் திட்டத்தைச் செயல்படுத்தி வரும் 50 கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் 10,000 ரூபாய் வீதம் 5 இலட்ச ரூபாய் 1977-78-ல் அரசு வழங்கியது. நடப்பாண்டில் அத்தகைய 20 சங்கங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 10,000 ரூபாய் வீதம் நிதியுதவி அளிக்கப்பட இருக்கிறது.

51. தரச் சோதனை ஆய்வுக் கூடம் அமைத்தல்.—மாநகரிலும் அதற்கருகாமையிலும் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்பெறும் வகையில், விற்பனை செய்யப்படுகிற உணவுப் பொருட்கள் ஏனைய நுகர் பொருட்களின்

தரம் குறித்து முன் சோதனை செய்வதற்காக சென்னையில் தரச்சோதனை ஆய்வுக் கூடம் ஒன்றை அமைப்பதற்கு, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கு 0.75 இலட்ச ரூபாய் உதவித் தொகையாக நடப்பாண்டில் அரசு வழங்கியுள்ளது. அதன் மூலம் நுகர்வோர்களுக்குத் தரமான பொருட்களை வழங்குவதற்கு இயலும். மற்றொரு தரச் சோதனை ஆய்வுக் கூடத்தை அமைக்க 1979-80-ல் 0.75 இலட்ச ரூபாய் உதவித் தொகையாக ஒரு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு வழங்கப்படும்.

52. நுகர்பொருள் தொழிற்சாலைகளுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத் திட்டம்.—இத்திட்டத்தின்கீழ், மதுரையில் 0.28 இலட்ச ரூபாய் செலவில் காப்பிக்கொட்டை அரைவைப் பிரிவு ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 5—10—1978 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

53. கிராமப் புற நுகர்வோர் திட்டம்.—விவசாயக் கடன் சங்கங்கள், நுகர் பொருட்களைப் பகிர்ந்தளிப்பதற்கான திட்டம் ஒன்றை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் 1976 ஆம் ஆண்டில் கொண்டு வந்தது. தமிழ்நாடுதான் இத் திட்டத்தைச் செயல்படுத்த தொடங்கிய முதல் மாநிலமாகும். தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இதுவரை இத்திட்டத்தின்கீழ் 1,440 இணைப்புச் சங்கங்கள் சம்பந்தப்பட்ட 66 திட்டங்களுக்காக 88.72 இலட்ச ரூபாய்க்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | திட்டங்களின் எண்ணிக்கை. | இணைப்புச் சங்கங்களின் எண்ணிக்கை. | அனுமதிக்கப் பட்ட தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூ இலட்சத்தில்) |
| 1975-76 .. | 10 | 232 | 13·88 |
| 1976-77 .. | 15 | 325 | 21·45 |
| 1977-78 .. | 30 | 647 | 39·81 |
| 1978-79 .. | 11 | 236 | 13·58 |
| மொத்தம் .. | 66 | 1,440 | 88·72 |

1977-78 ஆம் ஆண்டு வரை நிதியுதவி அனுமதிக்கப்பட்ட 55 திட்டங்களின் கீழ் 20 முதன்மைச் சங்கங்கள் 1,204 கிராமச் சங்கங்களுக்கு பொருட்களை வழங்கின; அந்தச் சங்கங்கள் 1977-78-இல் 505.83 இலட்ச ரூபாய் அளவிற்கு விற்பனை செய்தன.





54. நடப்பு நிதி ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் இம்மாநிலம் முழுவதையும் இத்திட்டத்தின் கீழ் தனித்தியங்கக்கூடிய கிராமச் சங்கங்கள் அனைத்தையும் கொண்டுவரும் பொருட்டு, விரைவுத்திட்டம் ஒன்று வரையப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள 4,740 கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களில் 1,440 சங்கங்கள் ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. தனித்தியங்கக்கூடிய 2,998 கிராமச் சங்கங்கள் சம்பந்தப்படுகிற 131 திட்டங்கள் தயாரிக்கப்பட்டு 322.52 இலட்ச ரூபாய் நிதி உதவி அனுமதிக்காக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

55. இத்திட்டத்தின்கீழ் ஏற்கெனவே உதவி பெற்றுள்ள கிராமச் சங்கங்கள் அனைத்திற்கும், ஒவ்வொன்றுக்கும் 5,000 ரூபாய் விதத்தில் தொடக்க நிலைத் தொகை ( (Margin Money) ) வடிவில் நிதி உதவி தர தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் முன்வந்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் 1,430 விவசாயக் கடன் சங்கங்களுக்கு 71.50 இலட்ச ரூபாய் அனுமதி வழங்குவதற்காக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு செயற் குறிப்புகள் ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளன. இந்தத் தொகைக்கு விரைவில் அனுமதி வழங்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

56. ஒரு கிராமத்திற்கு ஒரு அங்காடி.—கிராமப் பகுதிகளில் அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள், சர்க்கரை, மிளகாய், புளி, கொத்தமல்லி, கடலெண்ணெய் முதலிய இன்றியமையாப் பொருட்கள் நியாய விலையில் எளிதாகக் கிடைப்பதற்கு உறுதியளிக்கும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாய விலை அங்காடி திறப்பதன் மூலம் மாநிலம் முழுவதிலும் மக்களுக்கு இன்றியமையாப் பொருட்களை விநியோகம் செய்ய மாநில அரசு தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பின்வரும் மாவட்டங்கள் கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன :—

1. செங்கல்பட்டு
2. வடஆற்காடு
3. சேலம்
4. கோயம்புத்தூர்
5. நீலகிரி
6. திருச்சிராப்பள்ளி
7. புதுக்கோட்டை
8. மதுரை
9. இராமநாதபுரம் மற்றும்
10. கன்னியாகுமரி

எல்லா மாவட்டங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கனவே நடத்தி வரும் 5,023 நியாய விலை அங்காடிகளை பல்பொருள் அங்காடிகளாக மாற்றியதுடன் மேற்கூறியவாறு ஒதுக்கப்பட்ட 10 மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் கூட்டுறவுத்துறையால் 6,025 அங்காடிகள் புதிதாக திறக்கப்பட்டுள்ளன. விரைவில் மேலும் 167 அங்காடிகள் திறக்கப்படுவதையும் சேர்த்து மாநிலத்தில் மொத்தமுள்ள 16,000 கிராமங்களில் கூட்டுறவுத் துறையில் 11,215 அங்காடிகள் இருக்கும். எஞ்சிய கிராமங்களில் உணவுப் பொருள் வழங்கும் கழகத்தினால் நடத்தப்படும் அங்காடிகள் இருக்கும்.

கிராமங்களில் புதிதாக ஒரு அங்காடி திறப்பதற்கு அரசு, மேசை நாற்காலி போன்ற மரச்சாமான்களுக்கும், தளவாடங்களுக்கும் 1,250 ரூபாய் தொடரா இன நிதியுதவியும், பணியாளர் செலவிற்காக ஆண்டொன்றுக்கு 2,400 ரூபாய் தொடரின உதவியும் அளித்துள்ளது.

57. பிற திட்டங்கள்.—(i) பொதுச் சமையற்கூடங்கள்.—1977-78-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனுமதிக்கப்பட்ட 36 கூடங்களில் 27 கூடங்கள் தொடங்கப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள கூடங்களையும் திறப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. கல்லூரி விடுதிகளில் தங்காத சுமார் 4,650 மாணவர்கள் இத்திட்டத்தால் பயனடைகின்றனர்.

(ii) பாடப்புத்தகங்களை வழங்குதல்.—நாட்டுடைமையாக்கப்பட்ட பாட நூல்களை வழங்கும் பணி 1976-77-ல் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டு அப்பணி தொடர்ந்து வருகின்றது. தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திடமிருந்து கூட்டுறவுச் சங்கங்கள் நடப்பாண்டில் 4.10 கோடி ரூபாய் மதிப்புள்ள 243 இலட்சம் பாட நூல்களை வழங்குவதற்காகப் பெற்றன. இப்புத்தகங்கள், 35,530 பள்ளிகளில் படிக்கும் சுமார் 77 இலட்சம் மாணவர்களுக்கு விற்கப்பட்டன. மேலும் பின் தங்கிய வகுப்பினர், அரிசனங்கள், பழங்குடியினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் மெட்ரிக் வகுப்பிற்கு முந்திய வகுப்பில் கற்பவர்களுமான மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட படிப்புதவித் தொகையை பாடநூல்களாகக் கொடுக்க வேண்டுமே தவிர பணமாகக் கொடுக்கக் கூடாது என்று அரசு நிர்மானித்துள்ளது. இந்தப் பணியையும் கூட்டுறவுச் சங்கங்களே கவனித்து வருகின்றன.

(iii) கட்டுப்பாட்டு விலைத் துணி.—தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மட்டுமே விற்கப்பட்டு வருகிற கட்டுப்பாட்டு விலைத் துணியை கிராமப்புற மக்கள் அதிகமாக விரும்பி வாங்குகின்றனர். கட்டுப்



பாட்டு விலைத் துணியில் 75 சதவீதம், கிராமப்புறப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினருக்காக ஒதுக்கப்படுகிறது. 1977-78 ஆம் கூட்டுறவு ஆண்டில், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் 15,843 பேல் துணிகளை விநியோகத்திற்காக எடுத்துக்கொண்டது. கட்டுப்பாட்டு விலைத் துணிகள் 4,930 சில்லறை விற்பனை அங்காடிகள் மூலம் விற்கப்படுகின்றன. இவற்றில் கிராமப் பகுதிகளில் 4,139 அங்காடிகளும், நகர்ப்புறப் பகுதிகளில் 791 அங்காடிகளும் உள்ளன.

(iv) சலுகை விலையில் தாள்களையும், குறிப்பேடுகளையும் வழங்குதல்.—1978 ஆம் ஆண்டில் சலுகை விலையில் 720 டன் தாள்கள் நுகர்வோர் இணையத்திற்கு ஒதுக்கப்பட்டன. அவ்விணையம் இந்த தாள்களைக் கொண்டு, பயிற்சிக் குறிப்பேடுகளைத் தயாரித்து, அரசு நிர்ணயித்துள்ள குறைந்த விலையில் மாணவர்களுக்கு வழங்கும். இந்தத் தாள்களைக் கொண்டு 5.93 இலட்சம் குறிப்பேடுகள் கூட்டுறவு அச்சகங்களால் தயாரிக்கப்பட்டு, மாணவர்களுக்கு இலவசமாகக் கொடுப்பதற்காக அரிசன நலத்துறைக்கு வழங்கப்பட்டன.

(v) சிமிட்டி வழங்குதல்.—அரசு அண்மையில் மேற்கொண்ட கொள்கையின்படி அரசு நிர்ணயம் செய்த விலையில் பொதுமக்களுக்கு சிமிட்டி வழங்கும் பணியைக் கூட்டுறவுச் சங்கங்கள் 1—1—1979 முதற்கொண்டு மேற்கொண்டுள்ளன.

58. கிராமப்புற மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள்.—புதுடில்லி, கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்று, இம்மாநிலத்தில் கிராமப்புற மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டினை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவை கிராமப்பகுதிகளில் மின்சாரத்தைப் பரவலாக வழங்குவதற்கும், மின் இணைப்புக் கொடுப்பதை விரைவுபடுத்தவும், ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் உதவும். தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்தில் அத்தகைய சங்கம் ஒன்று தொடங்கப்படும்.

நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவுச் சங்கங்கள்.

59. சங்கங்களின் வகைகள்.—தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள், பழங்குடி மக்கள் போன்ற சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் பயனுக்காகவே பல கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்பந்தப் பணிகளைப் பெறுவதன் மூலம் அவற்றின் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பளித்து வருகின்றன. பிற வகைச் சங்கங்கள் அவற்றின் உறுப்

பினர்களுக்கு பணி வசதிகளையோ அல்லது கடன் உதவியையோ அளிக் கின்றன. இச்சங்கங்களுக்குப் பங்கு மூலதனம், கடன், உதவித்தொகை, இலவசமாக துறைப் பணியாளர்கள் சேவை ஆகியவற்றை அரசு அளித்து வருகிறது.

60. **நிதி உதவி.**—சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள், தங்களுக்கென சொந்த வண்டிகளை வைத்துக்கொள்ள உதவும் பொருட்டு, சென்னையில் ஒன்றும், திண்டுக்கல்லில் ஒன்றுமாக சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1979-80 ஆம் ஆண்டில் மேலும் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி 30 உறுப்பினர் களுக்கு, 30 சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குவதற்காக 0.51 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

1979-80 ஆம் ஆண்டில் மூன்று தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங் களுக்கு, ஒவ்வொன்றிற்கும் 0.55 இலட்சம் ரூபாய் விதம் நிதியுதவி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கு நவீன முடிதிருத்தும் நிலையம் ஒன்றை அமைப்பதற்காக 0.21 இலட்சம் ரூபாய் வழங்கவும் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கு நவீன உலர் சலவைப் பிரிவினை அமைப்பதற்காக 0.33 இலட்சம் ரூபாய் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு உப்புக் கூட்டுறவுச் சங்கத் திற்கு லாரி வாங்குவதற்காக ஒரு இலட்சம் ரூபாய் வழங்க நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இயந்திரங்களை நவீனப்படுத்துவதற்கும், குறிப்பேடுகள் தயாரிக்கும் பிரிவை அமைப்பதற்கும் கூட்டுறவு அச்சகங்களுக்கு உதவி செய்வதற்காக 16.68 இலட்ச ரூபாய் நிதியொதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

61. பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS) —மலைச் சாதியினர் மிக அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஒரே இடத் தில் கடன், விற்பனை வசதிகளுக்கும், ஏனைய ஒருங்கிணைந்த பணிகளுக் கும் வகை செய்ய, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சேலம், தரும புரி, திருச்சிராப்பள்ளி, வடஆற்காடு மாவட்டங்களில் மலைச்சாதியின வசிக்கும் பகுதிகளில் பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்க ஒன்பது உள்ளன. தென் ஆற்காடு மாவட்டத்தில் கல்ராயன் குன்றுகளில் மலைச் சாதியினர் வசிக்கும் பகுதிகளில் மூன்று பல்நோக்கு கூட்டுறவு



சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மலைச்சாதியினரின் பொருளாதார நிலையினைக் கருத்தில் கொண்டு, இச்சங்கங்களுக்கு அரசு தாராளமாக நிதி யுதவி வழங்கியுள்ளது.

தமது கடன் வாங்கும் திறனைப் பெருக்கிக் கொள்வதற்காக. இப்பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் 50,000 ரூபாய் விதம் பங்கு மூலதன உதவி அளிக்கப்பட்டுள்ளது. கடன் வசதி களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, பங்குகள் வாங்குவதற்கு மலை சாதி யினர் ஒவ்வொருவருக்கும் 50 ரூபாய் விதம் பங்கு மூலதன உதவி அளிக்கப் பட்டு உள்ளது. இப்பெரிய பல்நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் தலைமையிடங் களிலும், கிளைகளிலும் கிடங்கு—அலுவலகம்—சில்லரை விற்பனை நிலை யம் கட்டுவதற்காக கடன் பாதி, உதவித் தொகை பாதி என்ற அடிப்படையில் அரசு நிதியுதவி அனுமதித்துள்ளது. சாதாரணமாக, சிறு விவசாயிகளுக்கு 10.5 சதவீதம் வட்டிக்கும், மற்றவர்களுக்கு 12 சதவீதம் வட்டிக்கும் கடன் கொடுக்கப்படுகிறது. இதற்கு மாறாக, மலை சாதியினருக்கு குறைந்த வட்டி விதத்தில் அதாவது 4 சதவீத வட்டிக்கு உற்பத்தி மற்றும் நுகர்வுக் கடன் களைப் பெரிய அளவிலான பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கு கின்றன. குறைந்த வட்டி விதத்திற்கும் இயல்பான வட்டி விதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அரசு ஈடு செய்கிறது. பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கு வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. நிர்வாக உதவித் தொகை, இழப்பு நிதி (Risk Fund) உதவித் தொகை, மேசை—நாற்காலி உதவித் தொகை, வண்டிகளின் பராமரிப்புக்கான உதவித் தொகை, விலை ஏற்ற இறக்க உதவித் தொகை போன்ற ஏனைய உதவித் தொகை களையும் அரசு அனுமதித்து உள்ளது. பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாக இயக்குநர்களாகப் பணியாற்றுவதற்கு, 9 கூட்டுறவு சார்ப் பதிவாளர் பதவிகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இவர்களுக்கான செலவை அரசே ஏற்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கல்ராயன் குன்றுகளில் உள்ள மூன்று பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இதைப்போன்ற உதவி அளிக்கப்பட்டுள்ளது. பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கல்ராயன் குன்றுகளில் உள்ள மூன்று பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசு 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளில் முறையே 12.15 இலட்சம் ரூபாய், 11.85 இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கியது. நான்கு பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் உதவியுடன் எட்டுக் கிளைகளைத் திறந்துள்ளன.

62. ஒன்பது பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும்
தென் ஆற்காடு மாவட்டம் கல்ராயன் குன்றுகளில் உள்ள மூன்று பல்நோக்குக்
கூட்டுறவுச் சங்கங்களும் இதுவரை 13,391 பழங்குடியினரை உறுப்பினர்
களாகச் சேர்த்துள்ளன. இச்சங்கங்கள் ஆற்றிய பணிகள் வருமாறு :—

| ஆண்டு. (1) | வழங்கப்பட்ட கடன். (2) | வாங்கப்பட்ட சிறு காடு படு பொருட்களின் மதிப்பு. (3) | விநியோகிக்கப்பட்ட விவசாயக் காரியங்களுக்குத் தேவையான பொருட்களின் மதிப்பு. (4) | விநியோகிக்கப்பட்ட நுகர் பொருட்களின் மதிப்பு. (5) |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1976-77 .. | 9·10 | 0·20 | 0·06 | 0·38 |
| 1977-78 .. | 34·23 | 8·52 | 1·23 | 7·70 |
| 1978-79 .. (1978 டிசம்பர் வரை.) | 22·32 | 6·58 | 0.63 | 10·70 |

63. தென் ஆற்காடு மாவட்டம், கல்ராயன் குன்றுகளில் உள்ள பல் நோக்
குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்றையும் மசினகுடியில் உள்ள மலைச் சாதி
யினர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தையும் "தொல் பழங்குடியினர்" திட்டத்
தின்கீழ் பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றி
யமைக்க கருதப்பட்டுள்ளது.

## கூட்டுறவுக் கல்வியும், பயிற்சியும்.

64. அமைப்பு.—இம்மாநிலத்தில் கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம்
ஆகியவற்றை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கவனித்து வருகிறது. சென்னை
யிலுள்ள மத்திய கூட்டுறவுப் பயிற்சி நிலையமும் மாவட்டங்களிலுள்ள ஏழு
கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களும் இளநிலைப் பணியாளர்களுக்குக் கூட்டுறவுப்
பயிற்சி அளிக்கின்றன. மாநில அரசு, மத்தியரசு மாநிலத்திலுள்ள கூட்டுறவுச்
சங்கங்கள் ஆகியவற்றின் உதவியுடன், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்காக
சென்னையில் 47 இலட்ச ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஒரு கட்டிடம் கட்டப்
பட்டு வருகிறது.



65. கொள்கை பரப்புதலும் விளம்பரமும்.—ஆங்கிலத்திலும் தமிழிலும்
மாத இதழ்கள் வெளியிட்டும் விளம்பரக் காரியங்களுக்காக, ஊர்திகளைப் பயன்
படுத்தியும், அகில இந்தியக் கூட்டுறவு வாரங்கள் கொண்டாடியும், நூலகங்கள்
நடத்தியும் கூட்டுறவு பற்றிய நூல்களையும் சிறு வெளியீடுகளையும் வெளி
யிட்டும், மாநாடுகள், கருத்தரங்குகள் முதலியன நடத்தியும் தமிழ்நாடு கூட்டு
றவு ஒன்றியம் தொடர்ந்து கூட்டுறவு இயக்கம் பற்றி விளம்பரம் செய்து வரு
கிறது. சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 1978 நவம்பரில் கொண்டாடப்
பட்ட அகில இந்தியக் கூட்டுறவு வாரத்தில், சிறந்த முறையில் நற்பணி
ஆற்றிய கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கேடயங்கள் வழங்கப்பட்டன.
கூட்டுறவுச் சங்கங்களின் தனிச் சிறப்பு வாய்ந்த உறுப்பினர்கள் சிறப்பிக்கப்
பட்டனர். மாவட்ட, வட்டத் தலைமையிடங்களிலும், பொதுக் கூட்டங்கள்
நடத்தி இந்த வார விழா கொண்டாடப்பட்டது.

66. கூட்டுறவு விளக்கத் திட்டம் :—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின்
உறுப்பினர்கள், நிர்வாக உறுப்பினர்கள், உறுப்பினர்களாகச் சேரக்கூடியவர்கள்
ஆகியோர்கள் கூட்டுறவுபற்றி அறிந்து கொள்வதற்கான ஒரு திட்டம் தமிழ்
நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

## பொது.

67. தேசிய கூட்டுறவுக் கொள்கைத் தீர்மானம் :—1977, டிசம்பரில் புது
டில்லியில் நடைபெற்ற அகில இந்திய மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களின்
மாநாட்டில், 12 அம்சங்கள் அடங்கிய தேசிய கூட்டுறவுக் கொள்கைத் தீர்மானம்
கள், ஓரளவு நிலம் வைத்துள்ள விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள்,
கள், ஓரளவு நிலம் வைத்துள்ள விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள்,
கிராமப்புறக் கலைஞர்கள், நடுத்தர, குறைந்த அளவு வருமானத் தொகுதி
யினரைச் சேர்ந்த எளிய மக்கள் ஆகியோருக்குப் பயன் படக்கூடிய தன்
னாட்சி உரிமையுடைய, தன் சார்புள்ள, அரசியல் ரீதியாக நடுநிலை வகிக்கக்
கூடிய, ஒரு இயக்கமாக மேம்படுத்துவதற்கான முக்கியமானதொரு சாதன
மாகும். இக்கொள்கைத் தீர்மானம், அலுவல்சாரா கூட்டுறவாளர்கள்,
அலுவல் சார்ந்த கூட்டுறவாளர்கள். மாநில அரசு, மற்றும் கூட்டுறவு நிறு
வனங்களுக்கு நல் வழி காட்டுகிறது. இம்மாநில அரசைப் பொறுத்த
வரையில் அநேகமாக கொள்கைத் தீர்மானத்தில் கண்டுள்ள அனைத்து அம்சங்
களும் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

68. தனி நடுவர் மன்றங்கள் அமைத்தல்.—தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு
கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 71-வது பிரிவின் கீழ் துறை அதிகாரிகளால்
பிறப்பிக்கப்பட்ட சர்சார்ஜ் நடவடிக்கைகளை எதிர்த்துத் தாக்கல் செய்யப்
பட்டு, பல்வேறு கூட்டுறவு நடுவர் மன்றங்களில் இதுநாள் வரை முடிவு

எடுக்கப்படாமல் இருந்த மேல்முறையீடுகள் குறித்து விரைவில் முடிவு செய்வதற்காக, அரசு 1978 மார்ச் திங்களில் சென்னையில் ஒன்றும், மதுரையில் மற்றொன்றுமாக இரண்டு தனி நடுவர் மன்றங்களை சர்சார்ஜ் நடவடிக்கைகளை எதிர்த்து தாக்கல் செய்யும் மேல் முறையீடுகளை மட்டும் கவனிப்பதற்காக அமைத்தது. 1978 டிசம்பர் முடிய, இந்த இரண்டு நடுவர் மன்றங்களும், 582 மேல்முறையீடுகள் குறித்து முடிவு எடுத்துள்ளன. 31—12—1978-ல் 278 மேல்முறையீடுகள் நடுவர் மன்றங்களில் முடிவடையாமல் இருந்தன.

69. சட்டம்—விதிகள் திருத்தம்.—கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தையும் விதிகளையும் விரிவான முறையில் திருத்துவது பற்றி மாநில அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. இது தொடர்பாக முன்னணி கூட்டுறவாளர்களின் கருத்துக்களை அறிவதற்காக 1979 சனவரியில் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

70. தனி விசாரணைக் குழுவின் அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை.—நமது மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற தவறுகள் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணை செய்வதற்காக 1976-ல் அரசு அமைத்த தனி விசாரணைக்குழு அளித்த அறிக்கையின்படி, 199 இனங்களில் சர்சார்ஜ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவற்றுள் 163 இனங்களில் இறுதி முடிவெடுக்கப்பட்டு விட்டன. எஞ்சிய 26 இனங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 95 இனங்களில் பாதிக்கப்பட்டவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் வழக்குகளுக்கான தனி நடுவர் மன்றங்களிடம் மேல்முறையீடு செய்துள்ளனர்.

நாற்பத்தொன்று இனங்களில் குற்ற வழக்குத் தொடர்வதற்காகக் காவல் துறையிடம் புகார்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில், 17 இனங்களில் காவல் துறையினர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து உள்ளனர். மூன்று இனங்களில் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது; ஒரு இனத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவரை விடுதலை செய்தது. எஞ்சிய இரண்டில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தண்டிக்கப்பட்டனர். 14 இனங்களின் மீது நீதி மன்றங்களில் விசாரணை நடைபெற்று வருகிறது.

71. தணிக்கை.—இம்மாநிலத்தில் 1977-78 ஆம் ஆண்டுக்குத் தணிக்கை செய்யப்பட வேண்டிய கூட்டுறவுச் சங்கங்கள் 19,392 ஆகும். 20—1—1979 வரையில், 11,883 கூட்டுறவுச் சங்கங்கள் தணிக்கை செய்யப்பட்டு விட்டன. எஞ்சிய சங்கங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன.



கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை நடுநிலைமையுடன் சுயேச்சையாக தணிக்கை செய்ய வகை செய்யும் பொருட்டு, மாநிலத்தில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகள் உட்பட எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளையும் தணிக்கை செய்ய கூட்டுறவுத் தணிக்கைத் துறை ஒன்றை தனியாக ஏற்படுத்துவதென அரசு முடிவு செய்துள்ளது.

72. முடிவுரை.—இவ்வாறாக, பொதுவாக மக்களுக்கு, குறிப்பாக நலிந்த பிரிவினருக்குக் கூட்டுறவுச் சங்களின் பணிகளை விரிவாக்க அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

## இணைப்பு IV

[192 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### மானியக் கோரிக்கை எண் 12.

### 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

#### முகவுரை.

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 22) 1960 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ் இந்து சமய அறநிலையத் துறைக்கு, ஒரு ஆணையரும், அவருக்குக் கீழ் 7 துணை ஆணையர்களும், 16 உதவி ஆணையர்களும் உள்ளனர். அவர்கள் இத்துறையின் நிர்வாகத்திற்குச் சட்டப்படி அமைந்த அதிகாரிகளாவர்.

இந்த அலுவலர்களைத் தவிர, அறநிலையத் துறையின்கீழ், ஒரு தலைமைத் தணிக்கை அதிகாரியும் அவருக்குத் தேவையான அலுவலர்கள், பணியாளருடன் ஒரு தணிக்கைப் பிரிவும் இருந்து வருகின்றது. அத்தணிக்கைப் பிரிவு சமய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்து வருகின்றது.

மேலும், ஒரு மேற்பார்வைப் பொறியாளரின் தலைமையின்கீழ் கோட்டப் பொறியாளர் ஒருவரும், தேவையான மேற்பார்வை அலுவலர்களும், பணியாளர்களும் மாவட்டங்கள் தோறும் இருந்து, சமய நிறுவனங்களின் திருப்பணி மதிப்பீடுகளையும் அவற்றின் மேற்பார்வைப் பணிகளையும், மற்ற கட்டிட வேலைகளையும் கவனித்து வருகின்றனர்.

ஒரு துணை ஆணையர், நீண்ட காலமாக நிலுவையிலிருக்கும் நீதி விசாரணைகளைச் செய்து முடிப்பதற்காகத் தனியாக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றார்.

இவர்களைத் தவிர, உதவி ஆணையர் பதவித் தரத்தில் அமைந்துள்ள சரி பார்க்கும் அலுவலர்கள் (Verification Officers) எண்மரும், அவர்களுக்குத் தேவையான துணைப் பணியாளர்களும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நகைகளையும், மற்ற விலையுயர்ந்த பொருட்களையும் ஆய்வு செய்து மதிப்பிடும் பணியைக் கவனித்து வருகின்றனர்.

இந்து சமய அறநிலைய நிர்வாகத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 24,605 சமய நிறுவனங்கள் உள்ளன.

### தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்திற்கும், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்கும் திருத்தம்.

இதுவரையில் இச்சட்டத்தைச் செயல்படுத்தியதில் கிடைத்த அனுபவத்தைக் கொண்டும், குறிப்பாக சிறப்பு விசாரணைப் பிரிவின் அறிக்கையால் வெளிக்கொணரப்பட்ட தகவல்களைக் கொண்டும், மூலச் சட்டத்திற்கு விரிவான திருத்தங்களைச் செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகின்றது.

இதற்கிடையில் உடனடியாகச் செய்யப்பட வேண்டியவை எனக் கருதப்பட்ட திருத்தங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்து சமய நிறுவனங்களுக்குப் பொறுப்பு வகிக்கின்ற தக்கார் என்ற பொறுப்புக்குப் பதிலாக, அறங்காவலர் குழுவை அரசு ஏற்படுத்த இயலும் வண்ணம், மூலச் சட்டத்திற்கு 42/1978 ஆம் சட்டத்தால் 1978 செப்டம்பரில் திருத்தம் செய்யப்பட்டது.

### இந்து சமய நிறுவனங்களில் அர்ச்சகர்கள் பரம்பரை முறையில் வருவதை நீக்குதலும் சாதி சமய உட்பிரிவு அல்லது இனம் ஆகியவற்றைச் கருதிப் பாராமல் அர்ச்சகர்களை நியமித்தலும்.

எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பது நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய நோக்கமாக உள்ளதால், அந்நெறியில் எடுக்கப்படும் சமூக சீர்திருத்த நடவடிக்கையாக இந்து சமயத்தைச்



சேர்ந்தோரில் தகுதி வாய்ந்தோரை சமய உட்பிரிவு அல்லது இனம் ஆகியவற்றைக் கருதிப்பாராமல்—இந்து சமய ஆலயங்களில் அர்ச்சகர்களாக, பூசாரிகளாக அல்லது ஏனைய உள்துறை வேலையாட்களாக நியமிக்க அரசு விழைகிறது. இந்து ஆலயங்களில் அர்ச்சகர்களை நியமிப்பது தொடர்பாக உச்சநீதி மன்றத்தின் குறிப்புரைகளைக் கருத்தில் கொண்டு, மேற்சொன்ன நோக்கத்தை அடைவதற்குரிய வழிவகைகளைக் கூறுவதற்கு, வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள் முதலியனவற்றில் நன்கு புலமையுள்ள வல்லுநர் குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

### இந்து சமய நிறுவனங்களில் பரம்பரை முறையில் வராத அறங்காவலர்களை நியமித்தல்.

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம், இந்தியக் குடியரசுத் தலைவரின் 24/1976 ஆம் எண்ணுள்ள சட்டத்தால் திருத்தப்பட்டது. இத்திருத்தம் 1976 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. பரம்பரை முறையில் வராத அறங்காவலர்கள் பதவி வகிப்பது அந்நாளிலிருந்து அற்றுப் போனது. அவர்களது இடங்களில் இந்து சமய நிறுவனங்களில் நிர்வாக அதிகாரிகளும், இந்து சமய அறநிலையத் துறையின் ஆய்வாளர்களும், அரசின் ஏனைய துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் தக்கார்களாக நியமிக்கப்பட்டனர்.

1978 செப்டம்பரில், தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தச்) சட்டத்தால் (சட்டம் எண் 42/1978) இந்து சமய நிறுவனங்கள் அவற்றின் ஆண்டு வருவாயையொட்டி (சகாயத்தொகை விதிப்பிற்குரிய) பின்வருமாறு புதிதாக வகைப்படுத்தப்பட்டன:—

(1) ஆண்டு வருவாய் ரூ. 10,000-க்குக் குறைவாகக் கொண்டுள்ள சமய நிறுவனங்கள்;

(2) ஆண்டு வருவாய் ரூ. 10,000-மும் அதற்கு மேலும், ஆனால் ரூ. 50,000-த்திற்குக் குறைவாகவும் கொண்டுள்ள சமய நிறுவனங்கள்;

(3) ஆண்டு வருவாய் ரூ. 50,000-மும் அதற்கு மேலும் ஆனால் ஒரு இலட்சம் ரூபாய்க்கு குறைவாகவும் கொண்டுள்ள சமய நிறுவனங்கள்.

(4) ஆண்டு வருவாய் ரூ. 1 இலட்சமும் அதற்கு மேலும் உடைய சமய நிறுவனங்கள்.

பரம்பரை முறையில் வராத அறங்காவலர்களை நியமிக்க பொருத்தமான, தகுதி வாய்ந்த நபர்களின் பெயர்ப் பட்டியல்களை தயாரித்து, சம்பந்தப் பட்ட தகுதி வாய்ந்த அதிகாரிகளுக்கு, அதாவது 1-வது வகையின் கீழ் வரும் சமய நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் உதவி ஆணையாளர், 2-வது வகையின் கீழ் வரும் சமய நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் துணை ஆணையாளர், 3-வது வகையின் கீழ் வரும் சமய நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் ஆணையாளர் அவர்களுக்கு, அனுப்புவதற்காக திருத்தப்பட்டவாறுள்ள இச்சட்டத்தின் 46 ஏ பிரிவின் கீழ் வட்டாரக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. தகுதி வாய்ந்த அதிகாரிகள், வட்டாரக் குழுக்கள் பரிந்துரை செய்துள்ள பெயர்ப் பட்டியல்களிலிருந்து அறங்காவலர்களை நியமிப்பதுடன், பொதுவாக மக்களின் நலன், சமய நிறுவனத்தின் வருமானம், சொத்துக்கள் மற்றும் வழிபடுபவர்களின் எண்ணிக்கை, யாத்திரை தலமாக அச்சமய நிறுவனத்திற்குள்ள முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அரசு அவசியமெனக் கருதினால், அத்தகைய சமய நிறுவனங்களுக்கு இரண்டு அறங்காவலர்களை நியமிக்க அரசு அதிகாரம் பெற்றுள்ளது. ஆண்டு வருவாய் ரூ. 1 இலட்சமும், அதற்கு மேலும் உடைய சமய நிறுவனங்களுக்கு, பரம்பரை முறையில் வராத அறங்காவலர்களை நியமிக்க, நியமன அதிகாரியாக உள்ள அரசு, அவசியமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சமய நிறுவனங்கள் அனைத்திற்கும் பரம்பரை முறையில் வராத அறங்காவலர்கள் வெகு விரைவில் நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### மாநில ஆலோசனைக் குழு.

குடியரசுத் தலைவரது (24/1976) சட்டத்தின் விதிகளுக்கிணங்க, இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையாளரை அலுவல்முறையில் தலைவராகவும், அவருக்கு கோயில் நிர்வாகத்தில் பல்வேறு கூறுகள் குறித்து ஆலோசனை நல்க அரசுச் சார்பற்ற 12 உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை புதிதாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



யாதொரு சமய வழிபாட்டுப் பொது இடத்தில் அல்லது இறை வணக்கத்திற்குரிய இடத்தில், விலங்குகள், பறவைகளை பலி கொடுப்பது, விற்பது அல்லது விலங்கினங்கள் அல்லது பறவைகளின் இறைச்சிகளை விற்பதற்காகப் பார்வையில் வைப்பது ஆகியவற்றைத் தடுப்பது.

தமிழ்நாடு 1950-ஆம் ஆண்டு விலங்குகள், பறவைகள் பலித்தடைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/1950). இந்து கோயில்கள் அல்லது அவற்றின் வளாகங்களில் மட்டும் விலங்குகள், பறவைகள் பலியிடப்படுவதைத் தடுக்க வகை செய்கிறது.

கோயில்களுக்கு வெளியேயுள்ள பொது இடங்களிலும், பொது வீதிகளிலும், விலங்குகள், பறவைகள் பலியிடப்படுவதைத் தடை செய்ய வேண்டுமென்றும், இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் தண்டனைகளை அதிகரிக்க வேண்டுமென்றும் கூறி வரப்பெற்ற பல்வேறு முறையீடுகளை கவனமாகப் பரிசிலனை செய்த பிறகு, எந்த ஒரு சமய வழிபாட்டுப் பொது இடம் அல்லது இறை வணக்கத்திற்குரிய இடம் மற்றும் அதைச் சுற்றியுள்ள வளாகங்கள், தனி நபருக்குச் சொந்தமாக இருந்து, மரபு வழி உரிமை அல்லது பயன் உரிமை காரணமாக பொதுமக்கள் சென்றுவர அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு தெரு அல்லது சந்து அல்லது ஏனைய பொது வழி உட்பட பொதுத் தெரு ஒன்றில் ஒரு சமய வழிபாடு தொடர்பாகக் கூடியுள்ள எந்த ஒரு வழிபாட்டுக் கூட்டத்திலும் அல்லது ஊர்வலத்திலும், விலங்குகள், பறவைகள் பலியிடப் படுவதைத் தடை செய்து இச்சட்டத்தைத் திருத்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும், அத்தகைய இடங்களில், விலங்குகள் அல்லது பறவைகளின் இறைச்சியை விற்பதை அல்லது விற்பதற்காக பார்வைக்கு வைப்பதைத் தடை செய்யவும், முடிவு செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் விதித் துறைகளை மீறினால் தண்டனைகளை அதிகரிக்கவும் இச்சட்டத்தின் கீழ்வரும் குற்றங்களை பிடியாணை வேண்டாக் குற்றங்களாகச் செய்யவும், முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன முடிவைச் செயலாக்குவதற்கான சட்ட முன்வடிவு விரைவில் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப் படாத தேவஸ்வம்களும் புதுக்கோட்டைக் கோயில்களும்.

1974 ஆம் ஆண்டின் 50-வது சட்டத்தின் மூலம் கன்னியாகுமரி தேவஸ்வம் குழு 1975ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் தேதியன்று நீக்கப்பட்டது. முன்னாள் திருவிதாங்கூர் மன்னர் நிர்வாகப் பொறுப்பின்கீழ் இருந்த தேவஸ்வம்கள், தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு 22-வது சட்டத்தின் வரம்புக்குள் கொண்டுவரப்பட்டன. அவை, திருநெல்வேலி துணை ஆணையாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்ற இந்து சமய அறநிலையத் துறையின் உதவி ஆணையாளர் தரத்தில் உள்ள ஒரு நிர்வாக அதிகாரியால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் பராமரிப்புக்காக அரசு, ஒவ்வோராண்டும் தொடர்ந்து ரூ. 13,70,000 மானியம் வழங்கி வருகிறது.

இந்த தேவஸ்வம்களில் பணிபுரியும் 131 பணியாளர்களை அரசுப் பணியாளர்களாகக் கருத வேண்டுமென்னும் வேண்டுகோள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

முன்னாள் புதுக்கோட்டை மன்னர் நிர்வாகத்தின் கீழ் இருந்த 136 பராமரிப்புக்காகவும் அரசு ஆண்டுதோறும் ரூபாய் 5 இலட்சம் வழங்கி வருகிறது.

## கோயில் பணியாளர்கள்.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள கோயில்களில் சுமார் 51,000 பணியாளர்கள் உள்ளனர். ஆண்டொன்றுக்கு ரூ. 1 இலட்சம் வருவாய் உள்ள கோயில்களின் பணியாளர்களுக்கு மட்டுமே அமுல் படுத்தி வந்த 'பங்களிப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம், ரூ. 10,000மும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் உள்ள கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உதவியுடன், கோயில் பணியாளர்களுக்கென பொருத்தமானதொரு குடும்ப நலத்திட்டம் தீட்டுவதை பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

## துறையின் வளர்ச்சியும் தொடரும் அதன் பணிகளும் கருணை இல்லம்.

கோயில்கள் அளிக்கும் உதவியைக் கொண்டு, 36 கருணை இல்லங்கள் நடத்தப்படுகின்றன. இவற்றில் 2,770 பேர் (2,000 சிறுவர்கள், 770 சிறுமிகள்) தங்கியுள்ளனர். இங்கு தங்கியுள்ள ஒவ்வொருவருக்கும் மாதம் ரூபாய் 50 செலவாகிறது. இந்த இல்லங்களை நடத்துவதற்காகும் தொடர்



செலவில் முக்கால் பாகத்தை சம்பந்தப்பட்ட கோயில்களே ஏற்றுக்கொள்கின்றன. கால் பாகத்தை அரசு ஏற்றுக்கொள்கிறது. இதுவரை ஆன செலவுபற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | அரசு மானியம் அதாவது 25% | கோயிலின் பங்கு அதாவது 75% |
|---|---|---|---|
| 1975-76 | ரூ 10,92,000-00 | 2,73,000-00 | 8,19,000-00 |
| 1976-77 | ரூ. 13,08,000-00 | 3,27,000-00 | 9,81.000-00 |
| 1977-78 | ரூ. 9,60,996-91 | 2,40,249-23 | 7,20,747-68 |
| 1978-79 (தோராயமாக) | ரூ. 10,00,000-00 | 2,50,000-00 | 7,50,000-00 |
| மொத்தம் | ரூ. 43,60,996-91 | 10,90,249-23 | 32,70,747-68 |

## தெய்வச் சிலைகளையும், ஏனைய விலை உயர்ந்த பொருட்களையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்.

கோயில்களில் உள்ள பழங்கால வெண்கலச் சிலைகள், தெய்வ உருவச் சிலைகள், ஏனைய விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கவும், கோயில்களின் திருப்பணிக்காகவும் 1978-79 ஆம் ஆண்டில் ரூபாய் 17 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1979-80ஆம் ஆண்டில் இதற்காக அதே அளவுக்குத் தொகை ஒதுக்க அரசு கருதியுள்ளது. விலையுயர்ந்த தெய்வச் சிலைகளும், பழங்கால வெண்கலச் சிலைகளும் உள்ள கோயில்களில் பாதுகாப்பான அறைகள், மடக்குக் கதவுகள் அமைக்கவும் இத்தொகை பயன்படுத்தப்படும். பாதுகாப்பு அறைகள் அமைக்கவோ, போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவோ சாத்தியமில்லாத இடங்களில், தெய்வச் சிலைகள் முதலியன போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டுள்ள அருகிலுள்ள ஆலயங்களில் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப்படுகின்றன. தெய்வச் சிலைகள், பிற விலையுயர்ந்த பொருட்களின் திருட்டு சம்பந்தப்பட்ட வழக்குகளில் காவல் துறையினர் முனைப்பாகத் தொடர் நடவடிக்கை எடுக்கின்றனர். புலனாய்வு குறித்த முன்னேற்றம் அரசால் கண்காணிக்கப்படுகிறது. 1972ஆம் ஆண்டு தொல்பொருள்கள் கலைச் செல்வங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் /1972) கீழ் மிகத் தொன்மையான மதிப்பு மிக்க பொருள்களையும், சிலைகள் அனைத்தையும் பதிவு செய்ய தீவிர முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றது.

### நியாய வாடகை நிர்ணயித்தல்.

கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பட்ட நியாய வாடகைக் குழு, இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளரின் வழிகாட்டுதலையொட்டி ஒவ்வொரு கட்டடத்திற்கும் நிர்ணயிக்கப்பட வேண்டிய வாடகையைக் கணக்கிட்டு வருகிறது. குடியிருப்போருக்கு இன்னல்கள் ஏற்படாத வகையிலும், அதே சமயத்தில் கோயில்களில் பூஜைகளும், பண்டிகைகளும் நடத்துவதற்கென்றே அறக்கொடையாக வழங்கப்பட்டுள்ள சொத்துக்களிலிருந்து கோயில்களுக்கு நியாயமான வருமானம் கிடைக்கின்ற வகையிலும், இந்த வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன.

### பழனியில் இரண்டாவது மின்சார இழுவைப் பொறி அமைத்தல்.

ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு இரண்டாவது மின்சார இழுவைப் பொறி அமைப்பது தொடர்பான பணி முடியும் தருவாயில் உள்ளது.

### 'திருக்கோயில்'

'திருக்கோயில்' என்னும் திங்கள் இதழ் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. தலை சிறந்த தமிழ் அறிஞர்கள் பலர் இப்பத்திரிகையில் கட்டுரைகள் எழுதி வருகின்றனர்.

### கோயில் திருப்பணி.

திருவரங்கத்திலுள்ள அருள்மிகு அரங்கநாதசுவாமி கோயில், சிதம்பரத்திலுள்ள அருள்மிகு சபாநாயகர் கோயில், திருவில்லிபுத்தூரில் உள்ள அருள்மிகு நாச்சியார் கோயில் போன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க பழமையான கோயில்களின் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதே சமயத்தில் பின்தங்கிய பகுதிகளிலும், அரிசனக் குடியிருப்புகளிலும் உள்ள கிராம தேவதைகளின் கோயில்களின் திருப்பணிக்காக ரூ. 1,000 முதல் ரூ. 2,000 வரை நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட 62 கோயில்களின் திருப்பணிக்காக இதுவரை ரூ. 63,000 நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

### தமிழ் புலவர்களை கோவில்களில் நியமித்தல்.

ஆலயங்களில், தமிழ் நெறி, தமிழ் இலக்கிய உணர்வை வளர்ப்பதற்காக வேலை வாய்ப்பற்ற தமிழ் புலவர்களை முதல் நடவடிக்கையாக கோயில் பணிகளில் நியமிக்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, தனித்தனியாக அல்லது ஒரு தொகுதியாக ஆண்டொன்றுக்கு



ரூ. 1 இலட்சத்திற்கு மேற்பட்டு வருவாய் உள்ள கோயில்களில் 100 தமிழ் புலவர்களை நியமிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கோயில்களில் இலக்கிய சொற்பொழிவுகள் நடத்துதல், தமிழ் நெறியைப் பரப்புதல், நூலகங்களை ஏற்படுத்துதல், கோயில்களின் தல வரலாறுகளை எழுதுதல் போன்ற பணிகளுக்கு அவர்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுவர்.

### தமிழிசையை மேம்படுத்துதல்.

தமிழிசை வளர்ச்சிக்காக ஊக்க உதவித் தொகையைக் கொடுக்கும் நோக்கத்துடனும், நாதஸ்வரத்திலும் தவிலிலும் மேல் பயிற்சியை அளிக்கும் நோக்கத்துடனும், அரசு, பயிற்சி உதவித் தொகைகள் வழங்குவதற்கான திட்டம் ஒன்றை 1978 முதல் கொண்டு வந்துள்ளது. நாதஸ்வரப் பள்ளிகளில் பயிற்சிக் காலத்தை முடித்துள்ள மூன்று நாதஸ்வர மாணவர்கள் மற்றும் மூன்று தவில் மாணவர்கள் புகழ் வாய்ந்த வித்துவான்களின்கீழ் நடத்தப்படும் மேல் பயிற்சிக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

### கோயில் வருமானம்.

வேளாண்மைக் கடன் நிவாரணச் சட்டங்கள், குத்தகைச் சட்டங்கள், பொது பொறுப்புக் கழகங்கள் சட்டம் ஆகியவை, கோயில்களுக்குச் சொந்தமான நில உடைமைகளிலிருந்து அவைகளுக்குக் கிடைக்கும் வருமானத்தை மிக மோசமாக பாதித்துள்ளன. கோயில்களுக்குச் சேர வேண்டிய குத்தகை நிலுவைகள் ரூ. 19.16 கோடி என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது.

கோயில்களுக்கு ஏற்பட்ட இடர்பாடுகளை எவ்வாறு சமாளிக்க முடியும் என்பது குறித்தும், தேவையான நிவாரணங்களை கோயில்களுக்கு எவ்வாறு அளிப்பது என்பது குறித்தும் அரசு ஆய்வு செய்து வருகிறது.

### உயர்நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும்.

மாநிலத்தில் 7 கல்லூரிகள், 22 உயர்நிலைப்பள்ளிகள், 11 இதரப் பள்ளிகள், 7 தேவாரப் பாடசாலைகள் ஆகியவைகள் சமய நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன

### சமுதாய நலப் பணிகள்.

சமய நிறுவனங்களின் உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சமுதாய நலப் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன. செவிடர், ஊமையர் பள்ளிகள் 2, அன்பு இல்லங்கள் 3, நூலகங்கள் 202, சித்த மருத்துவமனைகள் 25, ஆங்கில மருத்துவமனை 1, 36 கருணை இல்லங்கள் உட்பட பல அநாதை இல்லங்கள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

## நிர்வாகத்தை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள்.

துறையின் நிர்வாகத்தையும் சமய நிறுவனங்களின் நிர்வாகத்தையும் ஒழுங்குபடுத்தவும், மேம்படுத்தவும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. குறிப்பாக, வருவாயில் இழப்பு ஏற்படுவதைத் தடுக்கவும், சமய நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டிடங்களுக்குரிய நியாய வாடகை களைத் திருத்தி மறு நிர்ணயம் செய்வதன் மூலம் வருவாயினை அதிகரிக்கவும், தக்க நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆலயங் களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்ற சொத்துக்களை இனங்கண்டு அவற்றை ஆலயங்களின் வசம் கொணரவும், அவற்றை அனுபவித்து வருபவர்களை குத்தகைதாரர்களாக ஏற்கவும், அச்சொத்துக்களின் மூலம் வரக்கூடிய வருவாயினைப் பெறவும், தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திருத்தணி அருள்மிகு சுப்ரமணியசுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான விலையுயர்ந்த நவரத்தினக் கற்கள் மற்றும் முத்துக்கள் பதித்த பொன் ஆபரணங்கள் சிதைக்கப்பட்டதாக அரசின் கவனத்திற்கு வந்த ஒரு புகாரின் பேரில், இப்பொருளின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இது குறித்த விசாரணை வருவாய் வாரியத்தின் ஆணையாளர் ஒருவரால் நடத்தப்பட வேண்டும் என்று அரசு முடிவெடுத்து, வருவாய் வாரியத்தின் ஆணையாளர் திரு. ஆர். நடராஜன், ஐ.ஏ.எஸ்., அவர்களை விசாரணை நடத்த நியமித்துள்ளது. அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகின்றது.

நமது பண்டைய நாகரிகத்திற்கும், கலைகளுக்கும், பண்பாட்டிற்கும் கரு வூலங்களாக உள்ள ஆலயங்களைப் பேணி பாதுகாப்பதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வரும்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

சனிக்கிழமை, 1979 ஏப்ரல் 21.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

---

### *Villupuram Riots.*

*320-A Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of houses and huts which were burnt down during the riots which took place at Villupuram in July 1978 and

(*b*) the steps taken by the Government to reconstruct them?

### விழுப்புரம் கலவரம்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடைபெற்ற விழுப்புரம் கலவரத்தின்போது தீக்கிரையான வீடுகள் மற்றும் குடிசைகள் எத்தனை?

(இ) அவைகளை மீண்டும் நிர்மாணிப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): (அ) அரிசனங்களின் குடிசைகள் 89-ம் அரிசனங்களல்லாதவர்கள் குடிசைகள் 105-ம் ஆக மொத்தம் 194 குடிசைகள் சேதமடைந்தன.

(இ) பாதிக்கப்பட்ட 272 குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ. 400 வீதம் வழங்கப்பட்டது. மேலும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 கிலோ அரிசியும், ஒரு ஜோடி வேட்டியும், சேலையும், ரொக்கமாக ரூ. 25-ம் மேலும், 5 லிட்டர் கிரஸின் அல்லது அதற்கு ஈடான ரூ. 7-ம் வழங்கப்பட்டன. இதற்கும் மேலாக கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து இரண்டு லாரி தென்னங்கீற்றுகளும் வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து வன இலாகா மூலம் இரண்டு லாரி மூங்கில்களும் வரவழைக்கப்பட்டு அவைகளை குடிசைகளை வேய்வதற்கும், செப்பனிடுவதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு கொள்முதல் விலைக்கு விற்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் கீழ் வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா ? அந்தப் பகுதியில் அடிக்கடி குடிசைகள் தீக்கிரையாவதால் வேறு பாதுகாப்பான இடங்களுக்கு மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை அரசு பரிசீலனை செய்ததா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : குடிசை மாற்று வாரியத் திட்டம் அந்தப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்போது, நிச்சயமாக அரசு இதைக் கவனத்திலே எடுத்துக்கொள்ளும். பாதுகாப்பான இடத்திற்கு மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையையும் அரசு பரிசீலிக்கும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தமிழ் நாட்டின் தலைநகரமாகிய சென்னையில் இயங்கிக் கொண்டிருந்த அரிசன நல வீட்டு வசதி வாரியம் விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டிக் கொடுத்ததைப் போல, அரிசனங்களுக்காக அந்தப் பகுதியிலே வீடுகளைக் கட்டிக் கொடுக்கப் போகிறார்கள் என்று பிரச்சாரம் நடைபெறுகிறது. அது அரசுக்குத் தெரியுமா ? அரிசன நல வீட்டு வசதி வாரியம் விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிற சூழ்நிலையில் வீடு கட்டித்தரும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அதுபற்றி அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு மாடி வீடு கட்டித் தரலாமா என்ற யோசனை இப்போது இருந்துகொண்டிருக்கிறது.



திரு. ம. சங்கரலிங்கம் : விழுப்புரத்தில் கலவரத்தால் தீக்கிரையான குடிசைகளுக்குப் பதிலாக அரசாங்கம் கட்டித் தருகிறபோது, தீப்பிடிக்காத குடிசைகளாகக் கட்டித் தந்தால், இத்தகைய சூழ்நிலை மீண்டும் வாராமல் தடுக்க முடியும். ஆகவே அதைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தீக்கிரையாகாத குடிசைகள் என்றால், கூரைகளுக்கு ஆஸ்பெஸ்டாஸ் ஷீட், ஓடு போன்றவற்றைப் போட வேண்டும். அரிசனநலத் துறை கட்டுகிற வீடாக இருந்தாலும், குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டுகிற வீடாக இருந்தாலும், அவைகள் தீக்கிரையாகாத வீடுகளாகத்தான் இருக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : *

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இக்கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டதல்ல.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : விழுப்புரம் கலவரம் பற்றி வழக்கு இருப்பதால், டாக்டர் சனார்த்தனம் அவர்கள் கேட்ட கேள்வியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன்னவர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி, டாக்டர் சனார்த்தனம் அவர்களின் கேள்வி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

* 320-B. *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of persons who lost their lives in the riots that took place in Villupuram in July, 1978;

(*b*) the nature of assistance the Government extended to their families;

(*c*) the number of persons (i) injured and (ii) maimed; and

(*d*) the nature of assistance the Government extended to them?

---

* அவைத் தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1979 ஏப்ரல் 21

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் விழுப்புரத்தில் நடைபற்ற கலவரத்தில் உயிர் இழந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களுடைய குடும்பத்திற்கு அரசு என்ன வகையில் உதவி சய்தது ?

(உ) கலவரத்தின்போது (i) காயமுற்றவர்கள், (ii) உடல் ஊனமுற்றவர்கள் எத்தனை பேர் ?

(எ) அவர்களுக்கு என்னமுறையில் அரசு உதவியது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) :** (அ) இக்கலவரத்தில் 12 பேர்கள் உயிர் இழந்தனர்.

(இ) பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ. 1,000-மும், முதல் அமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000-மும் ஆக மொத்தம் ரூ. 6,000 வீதம் உயிர் இழந்தவர்களின் 12 குடும்பங்களுக்கு அரசு வழங்க ஆணையிட்டுள்ளது. இறந்தவர்களில் 9 பேர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ. 6,000 வீதம் வழங்கப்பட்டது. மூன்று பேர்களின் சடலம் அடையாளம் கண்டுபிடிக்கவில்லையாதலால் அவர்களின் வாரிசுதாரர்களாக பணத்தைப் பெற யாரும் முன்வரவில்லை.

(உ) (i) இக்கலவரத்தின்போது காவல் துறை அதிகாரிகள் மற்றும் தீயணைப்புப்படையின் அதிகாரிகள் 20 பேர் உட்பட மொத்தம் 50 பேர்கள் காயமடைந்தனர்.

(ii) ஊனமுற்றவர்கள் எவருமில்லை.

(எ) காயமடைந்த காவல்துறை மற்றும் தீயணைப்புப்படை அதிகாரிகள் 20 பேர்களும் மற்றும் காயமடைந்த 17 பொதுமக்களும் புற நோயாளிகளாகக் கருதி சிகிச்சையளிக்கப்பட்டது. மீதமுள்ள 13 பேர்கள் விழுப்புரம் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இறந்தவர்களில் 9 பேர்களுடைய வாரிசுதாரர்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிவாரணமாக அளிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அவர்களுடைய குடும்பத்தில் யாராவது வேலை பார்க்கத் தகுதியுடையவர்களாக இருந்தால், அவர்களுக்கு வேலையைக் கொடுத்து அவர்களுடைய குடும்பங்களைப் பராமரிக்கிற வசதியைச் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தனிக் கேள்வி போட்டால், விளக்கமாகப் பதில் சொல்லுகிறேன்.



1979 ஏப்ரல் 21]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** விழுப்புரம் சிறிய பகுதியாக இருந்தும்கூட, இறந்த 12 பேர்களில் 3 பேர்களுடைய சடலங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை, அவர்களுடைய வாரிசுதாரர்கள் யாரென்று தெரியவில்லையென்று சொன்னார்கள். அந்த 3 பேர்களுடைய வாரிசுதாரர்கள் நாங்கள் தான் என்று சிலர் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் அனுப்பி அங்கேயிருக்கிற தாசில்தாரிடமும், மற்ற அதிகாரிகளிடமும் முறையிட்டிருந்தும்கூட, அங்குள்ள அதிகாரிகள் அதுபற்றி சரியாக விசாரிக்காமல் காலதாமதம் செய்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அதை உடனடியாக 'டிஸ்போஸ்' செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** கலவரம் நடந்தபோது பாதிக்கப்பட்டவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. தலைநகர் என்ற அடிப்படையிலே பல்வேறு பகுதிகளிலிருந்து வந்தவர்களில் யாராவது பாதிக்கப்பட்டிருக்கலாம். சடலத்தை அடையாளம் கண்டுகொள்ள முடியாததால், ஆரம்பத்தில் இந்த உதவித் தொகை கொடுக்கப்படவில்லை. சில பேர் உரிமையுடன் கேட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட குறிப்புகள் இல்லை. அப்படியிருந்தால் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இத்தகைய கலவரங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகையாக 6 ஆயிரம் ரூபாயைக் கொடுக்கிறோம் என்றாலும், அதோடு அந்தக் குடும்பத்திலுள்ள தலைமகன் இறந்துவிட்டிருந்தால், அவர்களுடைய குடும்பத்தில் பணிபுரிகிற வயதுடையவர்கள் யாராவது இருந்தால், அவர்களுக்கு வேலையைக் கொடுக்கிற திட்டத்தை ஆராய்வதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன யோசனையை அரசு கவனிக்கும்.

**திரு. கி. சா. லெட்சுமிகாந்தன் :** இத்தகைய கலவரங்கள் மீண்டும் நடைபெறாமலிருக்க நிரந்தரமான அமைதி நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறதா ? இந்தக் கலவரத்தை ஆரம்பத்திலேயே தடுக்காமல் மெத்தனமாக இருந்த அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இந்தப் பிரச்சினை வழக்கிலே இருப்பதால், மேற்கொண்டு சொல்லுவதற்கில்லை. நிவாரணம் சம்பந்தப்பட்டவைகளுக்கு மட்டும் பதில் சொல்லுகிறேன்.

திரு. ஜே. எம். மியாகான் : விபத்து நடந்த பல நாட்களுக்குப் பின்னர் இப்போதுதான் உதவித் தொகை கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. இது போன்ற கலவரத்தில் உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டுமென்று நான் கவர்னர் உரையின் மீதான விவாதத்தின்போதே சொன்னேன். அரசாங்கம் அதிலே கவனம் செலுத்தியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும், பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்தும் நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று உடனடியாக அறிவிக்கப்படுகின்றது. ஆனால் இறந்தவர்களுடைய வாரிசுதாரர்கள் யாரென்று கண்டுபிடித்து, அவர்களிடம் ஒப்படைப்பதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டுவிடுகிறது. அதையும் விரைவு படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

(பிற்பகல் 4-10)

திரு. அ. இராமமூர்த்தி : இந்தக் கலவரத்தின்போது பெரும்பாலானவர்களுக்கு பெரிய அளவிலே பொருட்சேதம் ஏற்பட்டது. அதைப்பற்றிப் பரிசீலனை செய்யுமா? அரசு அவர்களுக்கு உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அரசு அதை கவனிக்கும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : முன்னவர் அவர்கள் தெரிவித்தபோது, தீ அணைப்புத் துறையிலே இருக்கின்ற சில ஊழியர்களும், காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் அதிலே காயமுற்றிருக்கிறார்கள், உடல் ஊனமுற்று இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பொதுவாக தமிழ் நாட்டில் பல இடங்களிலே இப்படி கலவரங்கள் நடைபெறுகின்றன. இதை முன்னோடியாக வைத்து புதிய இன்ஷூரன்ஸ் திட்டத்தின்படி அரசு ஊழியர்களுக்கு இப்படிப்பட்ட கலவரங்கள் ஏற்படுகின்ற நேரத்தில் ஊழியர்கள் ஊனமுற்றால் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கின்ற திட்டத்தை அமுல்படுத்துகின்ற காரணத்தால், இப்படி அத்தியாவசியத் துறையிலே இருக்கக்கூடிய ஊழியர்கள் கட்டாயமாக இன்ஷூரன்ஸ் செய்துகொள்வதற்கும் அதற்குரிய பணத்தை அரசாங்கம் கொடுப்பதற்கும் முயற்சிக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நாம் உட்பட எல்லோரும் பண்ணிக் கொள்ளவேண்டியது அவசியம்.





மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே தில் சொல்லிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் மட்டுமல்ல, ல்லோரும் இன்ஷூரன்ஸ் செய்துகொள்ள வேண்டும். கலவரங்கள் என்று ர்க்கின்றபோது, பலதரப்பட்டவர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதால், ல்லோருமே இன்ஷூரன்ஸ் செய்துகொள்வது நல்லது. ஆனால் இந்த டையிலே, ஊனமுற்றவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். ப்போது செய்திருக்கின்ற அரசினுடைய அறிவிப்பின்படி, அவர்களெல்லாம் ப்படி பாதிப்புக்குள்ளாவார்களானால், அவர்களுக்குப் பண உதவி சய்கிறோம். இன்ஷூரன்ஸ் செய்வது என்பது பாதி அளவிலே நல்ல யாசனை. இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கட்டாயப்படுத்த வேண்டும் என்ற ளவிலே கேட்டிருக்கிறார்கள். பணத்தை அரசாங்கம் கொடுப்பது ன்பதெல்லாம் நிதிநிலையைப் பொறுத்திருக்கிறது.

## New Treasury at Devakottai.

*321 Q.—THIRUMATHI C. TAMIZHARASI: Will the [H]on. the Minister for Finance be pleased to state—

(*a*) whether a site has been purchased for the construction of building for the new Treasury at Devakottai, Ramanathapuram [D]istrict; and

(*b*) if so, when the construction work will start?

தேவகோட்டையில் புதிய கருவூலம்.

திருமதி சி. தமிழரசி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பின்கண்ட னாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முகவை மாவட்டம், தேவகோட்டையில் புதிய கருவூலத்திற்கான ட்டிடம் எழுப்ப இடம் வாங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், எப்போது கட்டிட வேலை தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் ர்பில்) : (அ) இல்லை, ஒரு புறம்போக்கு இடம் தேர்ந்தெடுக்கப்பட் ள்ளது.

(இ) நிதி வசதிக்குட்பட்டு காலப்போக்கில் (in due course) க்கட்டிடம் எழுப்பப்படும்.

திருமதி சி. தமிழரசி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புறம்போக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகச் சொல்கின்றார்கள், நான் அது வாங்கப் பட்டதாக அறிகிறேன். ஒதுக்கப்பட்ட இடத்தின் பரப்பளவு எவ்வளவு? கட்டிடத்திற்கான மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தேவகோட்டையில் புதிய சார்நிலை கட்டிடம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. சில இடங்களைப் பொதுப் பணித் துறை தேர்ந்தெடுத்திருக்கிறது. அதிலே வார்டு 3 பிளாக் 1 என்று இருக்கிறது. தேவகோட்டையிலே, டவுன் பகுதியிலே உள்ள புறம்போக்கு நிலம் என்று அங்கத்தினர் சொல்வது அந்தக் குறிப்பிட்ட நிலம் வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலம். அதிலே மாற்றம் எதுவும் இல்லை. ஏற்கெனவே அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கு ரூ. 1,42,000 செலவிலே 1976-லேயே கட்டிடம் கட்ட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு, அதற்கான புதிய வடிவம் கொடுக்கப்பட்டு, அதற்கான வரைபடங்கள் தயாரிக்க தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. புதிய வரைவுகள் வந்த பிறகு மீண்டும் பரிசிலிக்கப்பட்டு அங்கே கட்டிடம் கட்டப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

## *Houses for Ministers and Judges.*

* 322 *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct new houses for Ministers and Judges in Adayaru area, Madras; and

(*b*) if so, the anticipated expenditure of the scheme?

## அமைச்சர்களுக்கும் நீதிபதிகளுக்கும் வீடுகள்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை அடையாறு பகுதியில் அமைச்சர்களுக்கும், நீதிபதி களுக்கும் புதிய வீடுகள் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவு ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?



மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்): (அ) ஆம். அமைச்சர்களுக்கு 10 குடியிருப்பு இல்லங்களும் நீதிபதி களுக்கு 10 குடியிருப்பு இல்லங்களும் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இத்திட்டத்திற்கு ரூ. 49.50 இலட்சம் செலவாகும் என எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இப்போது நீதிபதிகளுடைய எண்ணிக்கையும், அமைச்சர்களுடைய எண்ணிக்கையும் கூடிக்கொண்டே போகின்றது. எல்லா அமைச்சர்களுக்கும் ஒரு 'பில்டிங் காம்ப்ளெக்ஸ்' வேண்டும். பல இடங்களில் இருக்கிறார்கள். பாராளுமன்றத்திலே ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே வசதிகளுடைய கட்டிடங்கள் அமைக்கும் திட்டம் இருக்கிறது. அதுபோல எல்லா அமைச்சர்களும் ஒரே பகுதியில் இருப்பதற்கு ஏற்ப இந்தக் கட்டிடங்கள் உருவாக்கப்படுமா? அப்படிச் செய்தால், அமைச்சர் களுக்கும் அமைச்சர் பெருமக்களை மெம்பர்கள் வந்து பார்ப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும். அமைச்சர்கள் எல்லாம் ஒரே இடத்தில் இருப்பதற்கு ஏற்ப குறுகிய காலத்தில் கட்டிடங்கள் கட்ட அரசு திட்டம் வைத்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சேர்மன் உட்படத்தானே கேட்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவர் அவர்களே, அங்கே அமைச்சர்களுக்கும், மாண்புமிகு நீதிபதிகளுக்கும் கட்டக்கூடிய அந்தக் கட்டிடங்கள் கிட்டத்தட்ட ஒரே பகுதியிலேயேதான் வருகின்றன. இப்போது ஏற்கெனவே கட்டியிருக்கிற இடங்களிலேயே காலி இடங்களில் கட்டிடங்கள் கட்டலாம் என்று இருக்கிறோம். பொதிகை, தாமரை, பூம்பொழில், காஞ்சி என்று இருக்கின்ற இந்தக் கட்டிடங்களுக்கு இடைப்பட்ட இடத்திலே நாம் கட்டிடங்கள் கட்டலாம் என்று கருதுகிறோம். அப்படிக் கட்டும்போது கிட்டத்தட்ட ஒரே இடத்திலே அவர்கள் இருப்பதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு அமைச்சர்கள் இருக்கும் கட்டிடங்களில் சில, மாத வாடகையில் இருக்கிற கட்டிடங்களாக இருக்கின்றன. அவர்கள் அப்படி வாடகைக் கட்டிடத்தில் இருப்பதை நான் விரும்பவில்லை. அடையாறிலே ஒருவர், அண்ணா நகரிலே ஒருவர், மாம்பலத்திலே ஒருவர் என்று ஒவ்வொருவரும் இருக்க வேண்டாம் என்று கருதுகிறேன். அதுபோலவே, இன்றையதினம் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கக்கூடிய கட்டிடங்கள் வசதிகளுடன் இல்லை. அவர்களுக்குப்

தங்குவதற்கு புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டும். ஏற்கெனவே இருக்கின்ற ஓல்ட் ஹாஸ்டலில் போதிய வசதிகள் செய்துகொடுப்பதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா? அப்படி இல்லாவிட்டால், அரசு அதைப் பற்றிப் பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய யோசனையை அரசு ஏற்கெனவே பரிசீலித்து வருகிறது என்று நினைக்கிறேன். மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாததாக துணைக் கேள்வி இருக்கிறது. அதனால் குறிப்பு என்னிடம் இப்போது இல்லை. என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், அப்படிப்பட்ட குறிப்பு அரசு பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன நீதிபதிகள் என்பது உயர்நீதிமன்ற நீதிபதிகள் என்று நினைக்கிறேன். சென்னையிலே பல சார்பு நீதிபதிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஹவுஸிங் போர்டு மூலமாக ஏற்கெனவே கட்டப்படவிருக்கின்றன என்று தெரிகிறது. அந்த வீடுகள் எப்போது கட்டப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட இருப்பதாக, ஒரு திட்டம் இருப்பதாக பத்திரிகையிலே நான்கூட பார்த்தேன். அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குத் தனியாக கேள்வி போட்டால், அதற்கான விடையைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு அமைச்சர்களுக்கு வீடு கட்டும்போது, சட்டமன்ற விடுதியை அடுத்துக் கட்டினால் அடிக்கடி உறுப்பினர்கள் அமைச்சர்களைப் பார்த்துக்கொள்ள வசதியாக இருக்கும். அரசு அதைப்பற்றி கவனிக்குமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: அமைச்சர்களுக்கு வீடு கொஞ்ச தூரத்தில் இருந்தாலும், அவர்களுக்கு அமைதியான சூழ்நிலையிலே இருக்கின்ற அளவுக்கு இருக்கும் என்று நினைக்கிறேன். அமைச்சர்கள் பக்கத்திலே இருக்கிறார்கள் என்று சொல்லி, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் வந்துகொண்டிருப்பார்கள். எனவே அந்த யோசனை நல்ல யோசனையாக எனக்குப் படவில்லை



## *Transfer of Teachers and Headmasters.*

*323 *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Teachers and Headmasters of 'B' Wing Schools transferred from one District to another as a result of the introduction of Higher Secondary Education System;

(*b*) whether the Government have received any representation to transfer them back to the District where they worked previously; and

(*c*) if so, the action taken thereon?

### ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் மாற்றல்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்இடைநிலைக் கல்வி அமல் செய்யப்பட்டதன் காரணமாக, ஒரு மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டத்திற்கு மாற்றப்பட்ட 'பி' பிரிவு ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) மீண்டும் அவர்களை, ஏற்கனவே பணியாற்றிய மாவட்டத்திற்கு மாற்றவேண்டுமென அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) (1) மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள்—71.

(2) காலி ஏற்பட்ட பணியிடங்களை நிரப்ப மாற்றப்பட்ட உயர் நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள்—69.

(3) முதுநிலைப்பட்டதாரிகள்—106.

(இ) & (உ) வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்பட்ட தலைமையாசிரியர்கள் மற்றும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் ஒரு சிலரிடமிருந்து மீண்டும் சொந்த மாவட்டத்திற்கு மாற்றவேண்டும் என்ற கோரிக்கைகள் வந்தன. அவர்கள் கேட்கும் மாவட்டங்களில் பணியிடங்கள் காலி ஏற்படும்போது அக்கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. மனாடசுசுந்தரம்:** கோடை விடுமுறைக்குப் பின்னாலே ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிதாக சில இடங்கள் ஏற்படக்கூடும். ஓய்வு பெற்றவர்களுடைய இடங்கள் ஏற்படக்கூடும். இப்படிப்பட்ட இடங்களிலே எல்லாம் பிற மாவட்டங்களிலே இருப்பவர்களுக்கு முன்னுரிமை தந்து, இவர்களை மாற்றிவிட்டு, புதிதாக நியமிக்கின்றவர்களுக்கு அந்தந்தப் பகுதிகளிலேயே வேலை கொடுப்பதற்கு அரசு வழிவகை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்த நடவடிக்கை எடுக்கும் போது, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மேல்நிலை தலைமையாசிரியர்களும், ஆசிரியர்களும் வேறு இடங்களுக்கு மாற்றப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போது, அருகிலே இருக்கக்கூடிய மாவட்டங்களுக்கு மாற்றக்கூடிய வாய்ப்புகள் இருந்தபோதும்கூட, மிகத் தொலைவிற்கு அவர்கள் மாற்றப் பட்டதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவ்வப்போது காலியாகின்ற இடங்களுக்கு அவர்களை அனுப்பியிருக்கக்கூடும். வேண்டுமென்றே அது செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த அளவில், ஒரு பகுதியினர் அரசினரால் அனுமதிக்கப்பெற்று புரமோஷன் வாய்ப்பு இல்லாததால், வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் அதே மாவட்டங்களுக்கு மேற்கொண்டு பணியிடங்கள் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன. அப்படி அனுமதி அளிக்கும்போது, முன்னாலே வேறு மாவட்டங்களுக்கு புரமோஷன் மூலமாக அனுப்பப்பட்டவர்களை மீண்டும் இந்த ஜில்லாவுக்கு மாற்றம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகள் வருகின்றபோது, இப்படிப் பொது மாறுதல் வரும்போது அதைப்பற்றிப் பரிசீலித்து அந்தந்த மாவட்டங்களுக்கே மாற்ற, அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவற்றையெல்லாம் அரசு பரிசீலிக்கும்.





## *Free Education to Children of Teachers.*

*324 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government for providing free education at all levels to the children of Teachers; and

(*b*) if so, the action taken thereon?

### ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்களுடைய பிள்ளைகளுக்கு அனைத்து மட்டத்திலும் இலவசக் கல்வி வழங்கவேண்டும் என்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) அக்கோரிக்கை தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இந்தக் கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னதற்காக நான் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். ஆனால் அது வெறும் பரிசீலனையாக இல்லாமல், ஆசிரியர்கள் விரும்பக்கூடிய, ஒரு சாதகமான முடிவாக இருக்க வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அந்தந்தத் துறையில் பணியாற்றுகிறார்கள் என்ற காரணத்திற்காக சில சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. கல்வித் துறையிலே, தங்களையே அர்ப்பணித்துக்கொண்டிருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு இப்படிப்பட்ட உரிமைகளை, சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்ற நியாயத்தின் அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனையில் எடுத்துக்கொண்டு சிக்கிரமாக அடுத்த கல்வி ஆண்டுத் தொடக்கத்திலாவது இது குறித்து அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-20)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பரிசீலனைக்குப் பின்னர் முடிவு அறிவிக்கப்படும்.

**திரு. க. அறிவழகன் :** ஆசிரியர்களுடைய பிள்ளைகள் பி.எட்., செகண்டரி கிரேட் போன்ற பயிற்சி வகுப்புகளிலே சேருவதற்கு முன்னுரிமை வேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படி அளிக்கப்படுமா? அல்லது பொதுவாக இலவசக் கல்வி வழங்குவது மாத்திரம்தான் கவனிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மூலக் கேள்விக்குச் சொல்லப் பட்டிருக்கிற பதில், இலவசக் கல்வி பற்றித்தான்.

**திரு. செ. முத்துசாமி :** மத்திய அரசுத் துறையான ரயில்வே துறையில் பணியாற்றும் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு, அந்தத் துறையிலே வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. அதுபோலவே போஸ்டல் துறையிலும் முன்னுரிமை வழங்கப்படுகிறது. கல்வித் துறையில் ஆசிரியர்கள் மற்றும் மற்ற பதவிகளுக்குக் காலியிடங்கள் இருக்கும்போது, ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு முழுமையாக இல்லாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட சத விகிதத்தை ஒதுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நாம் எடுத்துக் கொண்டிருக்கிற பிரச்சினையே, பிற்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் முன்னுரிமை தந்து, அவர்களை மேலே கொண்டுவர வேண்டுமென்பதுதான். அந்த அடிப்படையிலே நாம் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே இது போன்ற பிரச்சினைகளைக் கவனிக்க முடியாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிப்பது பற்றிய திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்தாலும், ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு எல்லாப் பயிற்சிப் பள்ளிகளிலும்—இன் ஆல் டிரெயினிங் இன்ஸ்டிடியூட்ஸ்—எல்லா மட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு சீட்டுகளை இந்த ஆண்டே ஒதுக்கும் முன்னோடித் திட்டத்தை அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படி இடம் ஒதுக்குகின்ற நிலையில் அரசு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள். பிற்பட்ட வகுப்பினருக்கு 31 சதவிகிதம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம், ஆக 49 சதவிகிதம் ஒதுக்கப்பட்டுள்ளதால், அதற்கு மேற்கொண்டு யாருக்கும் ஒதுக்கீடு செய்ய முடியாது என்று நீதிமன்ற தீர்ப்பு இருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையிலே ஒதுக்கீடு என்பது 49 சதவிகிதம் தான்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நம்முடைய மாநில அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால், அவர்களுடைய வாரிசுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற அரசு ஆணை



நடைமுறையில் இருக்கிறது. ஆனால் கல்வித் துறையில் பணியாற்றுபவர்களுக்கு அந்த ஆணையின் பலன் கிடைக்கவில்லை. எனவே நம்முடைய மாநில அரசின் அந்த ஆணையின் பலன் கல்வித் துறைக்கும் விரிவுபடுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் 325, 326 ஆகிய இரண்டையும் சேர்த்து எடுத்துக்கொள்கிறேன்.

## *Scholarship for Students*

* 325 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that talented children selected from rural areas were given scholarship up to Eleventh Standard, till last year; and

(*b*) if so, whether this benefit will be extended to the students in plus two stage?

### மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த ஆண்டுவரையில், கிராமப் பகுதிகளிலிருந்து தெரிந்தெடுக்கப்படும் திறமைவாய்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித்தொகை பதினோராம் வகுப்பு வரையில் கொடுக்கப்பட்டது என்பது உண்மையா

(இ) ஆமெனில், இச்சலுகை பிளஸ் 2 நிலை மாணவர்களுக்கும் நீட்டிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) 1978-79 ஆம் கல்வி ஆண்டிலிருந்து அந்த உதவித் தொகையை மேல்நிலைக் கல்வி வகுப்புக்களில் பயிலும் மாணவர்களுக்கு அளிக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 21

* 326 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that children of teachers have been deprived of merit Scholarships, if the income of the teachers exceeds Rs. 6,000; and

(b) if so, the action proposed to be taken by the Government thereon?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்களின் வருமானம் ரூ. 6,000-க்கும் அதிகமாக இருக்குமானால், அவர்களின் குழந்தைகளுக்குத் தகுதி அடிப்படையிலான படிப்புதவித் தொகை அளிக்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதுகுறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) பள்ளி-ஆசிரியர் பிள்ளைகளுக்கான தேசிய படிப்புதவித் தொகை திட்டவிதிகளின்படி ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கு மேல் உள்ள ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு தகுதிப் படிப்பு உதவித் தொகை வழங்குவதற்கில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் பெயர்கள் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு மத்திய அரசின் தகுதிச் சான்றிதழும், சன்மானத் தொகை ரூ. 100-ம் வழங்கப்படுகின்றன.

(இ) இத் திட்டம் மத்திய அரசு திட்டமாகையால் வருமான வரம்பின்றி வழங்குவது பற்றி அவ்வரசுதான் முடிவெடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டுக்கும் சேர்த்து உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** 325-வது வினா கிராமப்புற மாணவர்களைப் பற்றியது. ஓர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இரண்டு மாணவர்களுக்கு அவ்வாறு வழங்கப்படுகின்றது என்று நினைக்கிறேன். இந்தத் திட்டம் மிகச்



சிறந்த திட்டமாக இருக்கிறது. இதன் மூலம் கிராமப்புறங்களிலுள்ள மாணவர்கள் முன்னேறுவதற்கு வழி இருப்பதால், பஞ்சாயத்திற்கு ஒரு மாணவர் என்ற அளவில் இந்தப் பலனைக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதுவரை அளிக்கப்படுகிற இரண்டு உதவித் தொகைகளுடன், மேலும் இரண்டு உதவித் தொகைகள், ஒவ்வொரு வட்டார வளர்ச்சிப் பகுதிக்கும், அதாவது அந்தப் பகுதியில் வாழும் மாணவர்களுக்கு 1978-79 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படுகின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நான் அதைத்தான் கேட்டேன். அந்த உதவித் தொகையை, ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு மாணவர் என்ற முறையில் அளித்தால், கிராமப்புறங்களிலுள்ள மாணவர்கள் முன்னேற வாய்ப்பாக இருக்கும். அப்படி அரசு விரிவுபடுத்துமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டாக இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலேதான், பஞ்சாயத்திற்கு ஒன்று என்று உதவித்தொகை அளிக்க முடியவில்லை என்றாலும், இரண்டை, நான்காக ஆக்கியிருக்கிறோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கிராமப் பகுதிகளிலே இருக்கிற மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை தருவதுபோல, விளையாட்டு உதவித் தொகை வழங்கி, அவர்களை நல்ல விளையாட்டு வீரர்களாக உருவாக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கிராமப்புறங்களிலே இருக்கின்ற மாணவர்கள் விளையாட்டிலே சிறந்தவர்களாக விளங்குவதற்கான சிறப்பான திட்டங்களை அமுல்படுத்த வேண்டுமென்ற ஆசை அரசுக்கு இருக்கிறது. அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** உதவித் தொகை பெறும் மாணவர்கள் குறிப்பிட்ட சில பள்ளிகளிலேதான் படிக்கலாமென்று பட்டியல் வெளியிடப்பட்டது. மேல்நிலைப் பள்ளிகள் துவங்கப்பட்ட பிறகு, சூழ்நிலைகள் மாறியுள்ளதால், அந்தப் பட்டியலை மாற்ற வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். புதிதாகப் பட்டியலை வெளியிட வேண்டும். ஆதலால் ஜூன் மாதத்திற்குள்ளாக புதிய பட்டியலை வெளியிட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

(திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏற்கெனவே நான்கு கேள்விகள் கேட்டுவிட்டார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 325-வது வினா பற்றித்தான் கேட்டேன். 326-வது வினாவிலே இப்போது கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டையும் சேர்த்துக் கேட்கலா மென்று ஏற்கெனவே சொன்னேன், கேளுங்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட பிறகு, அடிப்படை ஊதியமும், அகவிலைப் படியும் ஒன்றாக இணைக்கப்பட்டதால், அடிப்படை ஊதியம் அதிகமாகி, ஆண்டு ஊதியம் கணக்கிடப்படும்போது, அதன் காரணமாக பல ஆசிரியர்கள் 100-க்கு 90 சதவிகிதம் உதவித் தொகை பெற முடியாமல் இருப்பதால், இதைக் கருத்தில் கொண்டு, இதை மாற்றியமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இங்கே சொல்லப்படுகின்ற அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசின் நிதி உதவிகள் வருகின்ற கல்வி ஆண்டு முதல், 1979-80 முதல் நிறுத்தப்படுமென்று சொல்லி, மத்திய அரசு அறிவித்துள்ளது. எனவே இந்தத் திட்டத்தை தமிழக அரசே ஏற்று நடத்துவதுபற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்தும் அப்போது பரிசீலிக்கப்படும்

திரு. செ. முத்துசாமி : தற்போது சைனிக் பள்ளியில் பல ஆசிரியர்கள் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்கிறார்கள். வருமான வரம்பு உயர்த்தப் படாத காரணத்தால், பல பேர்கள் தங்கள் குழந்தைகளை அந்தப் பள்ளிகளிலே படிக்க வைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறதென்பதை கல்வி அமைச்சரவர்கள் அறிவார்கள். எனவே வருமான வரம்பை உயர்த்தக்கூடிய செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

### *Teachers of Harijan Welfare Schools*

*327 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the excess contribution to the Family Benefit Fund Scheme by the Teachers of Harijan Welfare Schools of North Arcot District has not yet been credited to their Teachers Provident Fund Accounts, though the Government have issued orders in this regard in May, 1975;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action taken to credit the amounts in the Teachers Provident Fund Accounts?





### அரிசன நலப் பள்ளிகளின் ஆசிரியர்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்ட,அரிசன நலப் பள்ளிகளின் ஆசிரியர்கள், குடும்ப நல நிதி திட்டத்திற்களித்த மிகையான தொகை, 1975 ஆம் ஆண்டு, மே மாதத்தில் இது தொடர்பாக அரசு ஆணைகள் வெளியிட்டிருந்த போதிலும், இன்னும் அவர்களுடைய ஆசிரியர்கள் வருங்கால வைப்பு நிதி கணக்குகளில் வரவு வைக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அத்தொகைகளை ஆசிரியர்கள் வருங்கால வைப்பு நிதியில் வரவு வைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) ஆம்.

(இ) வட ஆற்காடு மாவட்ட அரிசன நலத்துறையில் பணியாற்றும் நிருவாக அலுவலர்கள் மிகக் குறைவாக இருப்பதால் குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை அந்தந்த ஆசிரியர்களின் சேமநிதிக்கணக்கில் சேர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

(உ) கூடுதல் பிடிப்புத் தொகையினை அந்தந்த ஆசிரியர்களின் சேம நல நிதிக்கணக்கில் சேர்ப்பதற்கு தக்க பட்டியல்கள் தயார் செய்து சம்பந்தப்பட்ட கருவூலங்களில் தனிவட்டாட்சியர்கள் மூலம் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : 1975-லே அரசு ஆணை பிறப்பித்தும், 1979 வரை சேர்க்கப்படாமல் இருப்பதால், வைப்பு நிதியிலிருந்து கடன் பெறும் வசதியை ஆசிரியர்கள் இழக்கிறார்கள். மேலும் அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலும் இழப்பு ஏற்படுகிறது. எனவே, அரசு இதில் ஏதேனும் ஈடு செய்யுமா ?

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இப்பொழுது இருக்கிற பணி யாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிற காரணதால், இத்தகைய தாமதம் ஏற்பட்டிருக்கிறது. விதி முறை இடம் தருமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்தினை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இப்பொழுது இருக்கிற பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிற காரணத்தால், தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி என்றால் பணியாளர்களின் எண்ணிக்கையைக் கூட்ட அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? குறைவாக இருக்கிற இடங்களில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்களா?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** அரிசனநலத் துறைக்கு இதுவரை ரெவின்யூ துறையிலிருந்து பணியாளர்கள் வந்து பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இந்த ஆண்டிலிருந்து இந்தத் துறைக்கு என்று நிரந்தரப் பணியாளர்களை நியமிக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கிறது. நிரந்தரப் பணியாளர்கள் நியமிக்கப்படும்பொழுது எங்கெங்கு அதிகமாகப் பணியாளர்கள் தேவையோ அதற்கேற்ப பணியாளர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, பொதுவாக எல்லா இடங்களிலும், எல்லா மாவட்டங்களிலும் அரிசன நலத் துறையில் பணியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள். தொடக்கக் காலத்தில் இருந்த பணியாளர்கள் தான் இப்பொழுதும் இருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை அப்படியே இருக்கிறது. 1975 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரை இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் சீர்திருத்தப்படாமல் இருப்பதற்கு பணியாளர்களின் எண்ணிக்கை குறைவு தான் காரணம் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். எவ்வளவு மிக விரைவில் முடியுமோ அவ்வளவு மிக விரைவில் அதற்குரிய பணியாளர்களை எல்லா இடங்களிலும், எல்லா மாவட்டங்களிலும் நியமிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இந்தத் துறைக்கென்று நிரந்தரமாகப் பணியாளர்களை நியமிக்கின்றபோது, எல்லா மாவட்டங்களிலும் நிரந்தரப் பணியாளர்களை அதிக அளவில் நியமிக்கலாம். அந்த சமயத்தில் எல்லா மாவட்டங்களிலும் இந்தப் பிரச்சினை தீருகின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

## *Bonded Labourers*

*328 *Q.*—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—





(*a*) the number of Bonded Labourers who were released from 1st July 1977 to 18th October 1978; and

(*b*) the number of such Bonded Labourers to whom the Government have assigned cultivable lands prior to 1st July 1977 and who are cultivating such lands as on 18th October 1978?

### கொத்தடிமைகள்

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—7—1977-க்குப் பிறகு 18—10—1978 வரை விடுவிக்கப் பட்டுள்ள கொத்தடிமைகளின் எண்ணிக்கை எத்தனை?

(இ) 1—7—1977-க்கு முன்னர் கொத்தடிமைகளுக்கு அரசினால் அடமானம் செய்து கொடுக்கப்பட்ட விவசாய நிலங்களில் எத்தனை பேர் 18—10—1978 நாளளவில் விவசாயம் செய்து வருகின்றனர்?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** (அ) 1—7—1977-க்குப் பிறகு 18—10—1978 வரை கொத்தடிமை முறையிலிருந்து எவரும் விடுவிக்கப் படவில்லை.

(இ) விவரங்கள் மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி | | |
| 2. தருமபுரி | 49 | நபர்கள் |
| 3. மதுரை | 10 | ,, |
| 4. புதுக்கோட்டை | 67 | ,, |
| 5. தென்னாற்காடு | 52 | ,, |
| 6. சேலம் | 200 | ,, |
| 7. நீலகிரி | 26 | ,, |
| 8. கோயம்புத்தூர் | 29 | ,, |
| 9. திருநெல்வேலி | 137 | ,, |
| | —— | ,, |
| | 570 | நபர்கள் |

**திரு. க. இராமமூர்த்தி:** கொத்தடிமைகள் தமிழகத்தில் இருக்கிறார்கள் என்பதும், அவர்களை விடுவிக்க வேண்டும் என்பதும் நெருக்கடி காலத்திலிருந்தே அனைத்து இந்திய அண்ணா திராவிட [illegible]

[1979 ஏப்ரல் 21

ஏற்றுக்கொண்ட கொள்கை. அந்த அடிப்படையில் ஏன் இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு புதியதாகக் கொத்தடிமைகள் கண்டுபிடிக்கப்படவில்லை? கொத்தடிமைகள் விடுவிக்கப்பட வேண்டும், விடுதலை செய்யப்பட வேண்டும், அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், அவர்கள் இருப்பதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதில் அரசுக்குத் தயக்கம் இருக்கிறதா? கொத்தடிமைகள் நெருக்கடி காலத்தில் முன்னர் அரசினரால் அடமானம் செய்து கொடுக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களிலிருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். சில நிலங்கள் விலை உயர்ந்த நிலங்கள் என்பதன் காரணமாக அவர்கள் விவசாயம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. இந்தக் குறைபாடுகளைத் தவிர்க்க அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறது? அப்படி இதுவரை நடவடிக்கை எடுக்காவிட்டால், இனி அதனைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** எந்தெந்த மாவட்டங்களில் கொத்தடிமைகள் இருக்கிறார்கள் என்கின்ற விவரம்பற்றி அரசுக்குத் தகவல் தெரிந்த பிறகு, உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து கொத்தடிமைகளை விடுவித்து அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் அளித்திருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரையிலும், கொத்தடிமை முறை ஒழிக்கப்பட வேண்டுமென்பதில் உறுதியான கொள்கையோடு இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, எங்கேயாவது கொத்தடிமைகள் இருக்கிறார்கள் என்கிற தகவல் இதுவரை அரசுக்கு வரவில்லை. அப்படி எங்காவது கொத்தடிமைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்து, அந்தத் தகவலை அவர் அரசுக்குத் தந்தால், அரசு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கும். இரண்டாவது இன்னொரு கேள்வியையும் எழுப்பினார்கள். அரசாங்கம் கொடுத்த நிலத்தில் அவரவர்கள் பயிர்செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். அந்த நிலங்களி லிருந்து அவர்களை அப்புறப்படுத்தியிருப்பதாக அரசுக்குத் தகவல் வந்தால், அப்படிச் செய்தவர்கள் மீதும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** கொத்தடிமைகள் என்றால் யார்? எப்படிப்பட்டவர்கள் கொத்தடிமைகள் என்று குறிப்பிடப்படுகிறார்கள்?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** கொத்தடிமைகள் யார் என்றால் கொத்தடிமைகள் தான். ஒருவரிடம் கடன்பட்டு அல்லது 24 மணி நேரமும் அடிமையாக இருந்து வாங்கிய கடன் முழுவதையும் செலுத்தும் வரை அடிமைத் தொழில் செய்வதற்குக் கொத்தடிமை என்று பெயர். அதுதான் டெபினிசன்.



1979 ஏப்ரல் 21]

**திரு. க. இராமமூர்த்தி:** தென் ஆற்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டத்தில் சாத்தனூர் கால்வாய் போகின்ற பகுதியில் அவர்களுக்குத் தேவைப்படுகின்ற நிலங்கள் ஒதுக்கப்பட்டு அவர்கள் விவசாயம் செய்தார்கள். அவர்கள் இன்றையதினம் அந்த நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக் கிறார்களா? அவர்கள் வெளியேற்றப்படக்கூடிய நிலையில் பாதுகாப்பற்ற நிலையில் இருந்துகொண்டிருந்தார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இப்பொழுது அவர்களுடைய நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "அந்த நிலத்திலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டிருக் கிறார்களா" என்கின்ற வினாவை எழுப்பியிருக்கிறார்கள். அவருடைய கேள்வியிலிருந்தே அவர்கள் வெளியேற்றப்படவில்லை என்று தான் எண்ணத் தோன்றுகிறது. அப்படி அவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தால், அரசுக்குத் தகவல் வந்திருக்கும். இதுவரை அந்தமாதிரி எந்தவிதத் தகவலும் அரசுக்கு வரவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** அந்தப் பகுதிகளில் சமூகக் கட்டுப்பாட்டின் விளைவாக அந்த நிலத்திற்குப் பக்கத்தில் கூட யாரும் போக முடியாத நிலையில் அன்றைக்கிருந்த அரசாங்கத்தின் ஆதரவு காரணமாக அவர் களுக்குப் பாதுகாப்பு இருந்தது. அதனால் அன்றைக்கு அவர்கள் அரசினரால் அடமானம் செய்து கொடுக்கப்பட்ட விவசாய நிலங்களில் பயிரிட முடிந்தது. அதற்குப் பிறகு அவர்களால் பயிரிட முடியவில்லை என்கின்ற தகவல் எனக்குக் கிடைத்தது. அவர்கள் வெளியேற்றப்படக் கூடிய ஒரு நிலையில் இருந்ததன் காரணத்தால் தான், வெளியேற்றப்பட்டு விட்டார்களா இல்லையா என்று நான் மாண்புமிகு அமைச்சரவர்களிடம் கேட்டேன். அதுபற்றி அரசுக்குத் தகவல் வரவில்லையென்றாலும், மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால், அதுபற்றிப் பரிசீலனை செய்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஆ. திராவிடமணி:** கொத்தடிமைகள் பிரச்சினை என்று வருகின்ற போது, புதுக்கோட்டை மாவட்டத்தில் அன்னவாசலில் கொத்தடிமைகள் இருக்கிறார்கள். செயற்கை முறை வைரத் தொழில் செய்து கொத்தடிமை களாக இருந்து வந்தார்கள். கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிப்பது

என்கின்ற வகையில் அவர்களில் 43 பேரை அரசு ஏற்றுக்கொண்டது. அவர்களுக்குக் கூட்டுறவு முயற்சியில் தனியாகத் தொழில் வாய்ப்பு அளிப்பதாகவும், அதற்குரிய ஏற்பாடுகள் செய்வதாகவும் சொன்னார்கள். அவர்களுக்கு திட்டமிட்டு மறுவாழ்வு கொடுக்கப்பட்டு விட்டதா என்று மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : புதுக்கோட்டை மாவட்டம் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி கேட்டால், அதுபற்றிய விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : என் தொகுதியான நீலகிரி மாவட்டத்தில் எருமாடு பகுதியிலிருந்து கொத்தடிமைகளைக் கொத்துக் கொத்தாகப் பிடித்து வந்தார்களே, அவர்கள் எல்லாம் விடுவிக்கப்பட்டு விட்டார்களா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினரின் தொகுதிக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ? (சிரிப்பு)

டாக்டர் இரா. சனார்த்தனம் : இரண்டாவதாக தமிழ்நாடு பூராவும் எவ்வளவு கொத்தடிமைகளை இதுவரை அரசு தேடிப் பிடித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழ்நாடு முழுவதுமுள்ள கொத்தடிமைகளின் எண்ணிக்கை 2,883 பேர். அவர்களைத் தேடிப் பிடிக்கவில்லை. விவரம் வந்த பிறகு, தேடி விடுவிக்கப்பட்டார்கள். நீலகிரி மாவட்டத்திலுள்ள எருமாடு என்ற இடத்தில் 70 கொத்தடிமைகள் இருந்தார்கள். அவர்கள் விடுவிக்கப்பட்டு, அவர்களுக்கு 105 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு மறுவாழ்வுக்காக 4 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய் அரசாங்கம் செலவிட்டு வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி : கொத்தடிமை முறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் அவசர காலத்தில் தீவிர நடவடிக்கை எடுத்த போது, தமிழகத்தில் பல பகுதிகளில் கொத்தடிமை முறை இருந்தது கண்டு பிடிக்கப்பட்டு, அவர்கள் அந்தக் கொடுமையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். அந்த வகையில் தென்னாற்காடு மாவட்டத்தில் அவர்களைக் கொத்தடிமைகளாகப் பதிவு செய்த பதிவுப் பத்திரம் கூட வெளியே கொண்டுவரப்பட்டது. ஆனால் அதன் பிறகு புதிதாகக் கண்டுபிடிக்கப்படவில்லை அல்லது எங்கே இருக்கிறார்கள் என்கிற தகவலை யாரும் அரசுக்குத் தரவில்லை என்கிற





நிலையில் இன்னும் கொத்தடிமைகள் நாட்டிலே இருக்கிறார்கள், அரசு இதே துடிப்பாக இருக்கிறது என்கிற அடிப்படையில் அதுபற்றிய விவரம் கொடுத்தால், நடவடிக்கை எடுக்கும் என்று அறிவிப்பு தருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை கல்ராயன் மலைப் பகுதியில் கொத்தடிமைகள் அதிகமாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருக்கோயிலூர் பகுதியிலுள்ள கொத்தடிமைகளைப்பற்றிய விவரங்களைச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுடைய பட்டியலும் நான் சொன்ன பட்டியலில் அடங்கும். இந்த அரசைப் பொறுத்தவரை மறு ஆய்வு செய்வதில் எந்தவித தயக்கமோ, சங்கடமோ இல்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்துகின்றேன். ஆய்வு செய்து எங்காவது அதுமாதிரி கொத்தடிமைகள் இருந்தால், அவர்கள் விடுவிக்கப்பட தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : கல்ராயன் பகுதியிலுள்ள மக்கள் கொத்தடிமைகள் பட்டியலில் இன்னும் வரவில்லை. புதிதாக அவர்கள் விடுவிக்கப்படவும் இல்லை. தென்னாற்காடு மாவட்டத்தில் கொத்தடிமைகள் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்கள். இருந்தபோதிலும், எய்திய குறிக்கோளினை இன்னும் எட்டவில்லை. குறிக்கோள் வெற்றி பெறும் வகையில், கொத்தடிமை முறை தமிழ்நாட்டிலிருந்து முழுமையாக ஒழிக்கப் படுகின்ற வகையில் விளம்பரம் கொடுத்து, கொத்தடிமை முறையை அரசு முழுமையாக ஒழிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இப்பொழுது கூட ஆங்காங்கு இருக்கக் கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வட்ட ஆட்சித் தலைவர்கள் போன்றவர்கள் எங்கேயாவது கொத்தடிமை முறை இருப்பதாக அவர்களுடைய கவனத்திற்குத் தகவல் வந்தால், உடனடியாக அவர்கள் அந்த விவரத்தை அரசுக்குத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி கொத்தடிமைகள் இருப்பதாகத் தகவல் வந்தால், அவர்கள் உடனடியாக விடுவிக்கப்படுவதுடன் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில் அரசு உதவியும் செய்ய முன்வரும்.

## Cholera.

*329 Q.—Thiru K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Health be pleased to state the total number of cases of Cholera reported in Tamil Nadu during the years 1977 and 1978?

காலரா.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்நாட்டில் 1977 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் காலரா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : 1977 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் காலராவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| ஆண்டு. | பாதிக்கப்பட்டவர்கள். |
|---|---|
| 1977 | 2,276 |
| 1978 | 2,933 |

(பிற்பகல் 4-40)

திரு. க. இராமமூர்த்தி : இந்த எண்ணிக்கையின் வேகம் அதிகமாக இருக்கிறது. மீண்டும் தமிழகத்தில் காலரா நோய் பரவும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதைத் தவிர்க்க எத்தகைய நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது ? தமிழ் நாட்டில் எந்தப் பகுதிகளில் இந்நோய் அதிகமாக இருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : இந்நோய் அதிகமாகத் தண்ணீர் தேங்குகின்ற பகுதிகளிலேயும், அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தும் பகுதிகளிலேயும் பரவுகின்றது. 1977 ஆம் ஆண்டும், 1978 ஆம் ஆண்டும் நிறைய வெள்ளம் வந்த காரணத்தினால், இத்தகைய வியாதி வேகமாகப் பரவியது. காலரா என்று சந்தேகிக்கப்படுவதற்கான வயிற்றுப்போக்கு நோய் ஏற்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளிலே மக்களுக்குத் தடுப்பு ஊசி போடுதல், விநியோகிக்கின்ற நீரில் குளோரின் மருந்து கலத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ம. சங்கரலிங்கம் : 1977-ல் 2 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களும், 1978-லே 2 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களும் பாதிக்கப்பட்டனர் என்று சொல்லப்பட்டது. அவர்களில் இறந்தவர்கள் எத்தனை பேர், குணமடைந்தவர்கள் எத்தனை பேர் ?



மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : 1977-லே பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 2,276. அதிலே இறந்தவர்களின் எண்ணிக்கை 58, 1978-ல் பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 2,933. அதிலே இறந்தவர்களின் எண்ணிக்கை 68.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : 1977-78 ஆம் ஆண்டில் சென்னை நகரில் காலரா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ? அதிலே இறந்தவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : சென்னை மாநகரில் 1977-ல் காலரா நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,261. அதிலே இறந்தவர்களின் எண்ணிக்கை 26. 1978 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,207, அதிலே இறந்தவர்களின் எண்ணிக்கை 43.

## Malaria.

*330 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) the number of cases of Malaria registered in the City of Madras in the year 1978; and

(b) the percentage of the same in comparison with the incidence of Malaria in the other parts of the State?

மலேரியா.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரத்தில், 1978 ஆம் ஆண்டில் மலேரியா நோய் கண்டதாகப் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) மாநிலத்தின் பிறபகுதிகளில் மலேரியாவால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அந்த எண்ணிக்கை எத்தனை சதவீதம் ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : (அ) 1978 ஆம் ஆண்டில் சென்னை நகரத்தில் மொத்தம் 29,953 மலேரியா நோயாளிகள் பதிவு செய்யப்பட்டனர்.

(இ) சென்னை நகரில் பதிவு செய்யப்பட்ட மலேரியா நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையில் 40.7 சதவீதமாகும்.

[1979 ஏப்ரல் 21

திரு. க. இராமமூர்த்தி: சென்னை நகரத்தினுடைய சுகாதார நிலை போதுமான அளவுக்குத் திருப்திகரமாக இல்லை. காலராவானாலும், மலேரியாவானாலும் மற்ற நோய்களானாலும் தண்ணீர் சரியாகப் பாதுகாக்கப் படாததால் அதிகமாகப் பரவும் நிலை இருக்கிறது. நல்ல சூழ்நிலைகளில் வாழ்ந்தவர்கள் கூட குடிதண்ணீர் காரணமாக இம்மாதிரி நோய்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த நிலைமைகளைத் தீர்ப்பதற்கு, குடிதண்ணீரைப் பொறுத்தவரையில், எந்தவிதமான நடவடிக்கைகளை சுகாதாரத் துறை எடுத்து இந்த வியாதிகள் மேலும் பரவாமல் பார்த்துக்கொள்ளப்போகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: இத்தகைய நோய்கள் பரவாமலிருப்பதற்காக கொசு உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை களுடன் மலேரியா நோயாளிகளைக் கண்டறியும் கண்காணிப்பு நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படுகின்றன. 1978 ஆம் ஆண்டில் சுமார் 3 லட்சம் காய்ச்சல் நோயாளிகளின் இரத்தத் தடவல் எடுக்கப்பட்டு கண்காணிப்புப் பணியாளர்கள் மூலம் அவர்களுக்கு அடிப்படைச் சிகிச்சை அளிக்கப்பட்டது. நகரத்தில் பத்து இடங்களில் மலேரியா சிகிச்சை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு இரத்தம் எடுத்தல், மலேரியா நோய்க் கிருமிக்காக பரிசோதித்தல், மலேரியா என்றறிந்தால் அதே நாளில் சிகிச்சையைத் தொடங்குதல் முதலிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பாதிப்புக்களுக்குக் காரணம் குடிதண்ணீர் தான். தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ம. சங்கரலிங்கம்: 1973-லிருந்து 1978 வரை மலேரியா நோயால் தமிழ்நாடு முழுவதும் இறந்தவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: மலேரியா நோயால் இறந்தவர்கள் அதிகமாக இல்லை. 1973 ஆம் ஆண்டிலிருந்து மாநிலம் முழுவதும் பதிவாகி யிருக்கின்ற நோயாளிகளின் எண்ணிக்கை வருமாறு:—

| | |
|---|---|
| 1973 | 4,581 |
| 1974 | 19,687 |
| 1975 | 74,579 |
| 1976 | 1,03,921 |
| 1977 | 83,300 |
| 1978 | 74,918 |



979 ஏப்ரல் 21]

திரு. க. இராமமூர்த்தி: சென்னை நகரத்தில் தமிழகத்தினுடைய மொத்த நாயாளிகளில் 40 சதவிகிதத்தினர் இருக்கிறார்கள் என்பதால், சுகாதாரத் றை என்ன தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது? சென்னை கரில் இந்த வியாதி அதிகமாக இருப்பதால், விசேஷமாகத் தடுப்பு டவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: இவ்வாண்டுத் தொடக்கத்தில் சன்னை நகருக்கு வருகை தந்த உலக சுகாதார நிறுவன அறிஞர்கள் சன்னை நகரில் மலேரியாவைக் கட்டுப்படுத்துவதற்கு மாலதியன் அல்லது ற பூச்சிக்கொல்லி மருந்துகளுடன் டீ.எல்.வி. அல்லது 'தெர்மோ ஃபோக்' யன்படுத்துவது நல்லது என்று எடுத்துக்கூறினர். காரணம், ஏற்கெனவே தளித்த மருந்துகள் அடிக்கடி தெளிக்கப்பட்டு, இந்த நோய்க்கிருமிகள் ந்த மருந்துகளைத் தாங்கிக்கொள்ளும் ஒரு சக்தியைப் பெற்றிருக்கின்றன. கவே, மருந்தை மாற்றுவதன் மூலமாக, இந்தக் கொசு உற்பத்தியைத் டுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன தேவையான ருந்துகள் தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ம. சங்கரலிங்கம்: உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து இந்தத் ட்டத்திற்கு நிதியுதவி கிடைக்கிறதா? இதற்கு முன்னால் மலேரியா ழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தியபோது, அத்திட்டத்திற்கென்று அய்க்கிய நாட்டு ஸ்தாபனம் உதவி அளித்தது. அதற்காக நியமிக்கப்பட்ட ஊழியர்கள் ஒவ்வொரு வீடு வீடாக வந்து, 'மலேரியா இருக்கிறதா' என்று கேட்டு எழுதிக்கொண்டு போனார்கள். கடைசியாக மலேரியா ஒழிக்கப் பட்டது என்று சொல்லப்பட்டது. இப்போது, மீண்டும் அது தலைதூக்கி வளர்ந்திருப்பதால், மீண்டும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவி கோரப் படுமா? மலேரியாவை ஒழிக்க புதிதாகத் திட்டம் வகுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: மத்திய அரசின் நகர்ப்புற மலேரியா ஒழிப்புத் திட்டம் இப்போது நிறைவேற்றப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தையும் பரிசீலித்து, அய்க்கிய நாட்டு ஸ்தாபனத்திடம் உதவி கோரலாம். 'ஹிஸ்ட்டரி ரிப்பீட்ஸ்' என்று சொல்வதைப் போல சில நேரங்களில் மறைந்த வியாதிகள் மீண்டும் தோன்றுகின்றன.

திரு. க. அறிவழகன்: மலேரியா நோய் முழுவதும் ஒழிக்கப்பட்டது என்று ஒரு முறை சொல்லப்பட்டது. ஆனால் மறுபடியும் இப்போது தோன்றி யிருக்கிறது. இம்முறை, மொத்தமாக ஒழிப்பதற்கு எத்தனை ஆண்டுத்

[1979 ஏப்ரல் 21

திட்டம் போடப்பட்டிருக்கிறது? இதுவரை ஒழிக்கப்பட்ட கொசு ஒழிப்பு மருந்துகள் மூலம் எத்தனை சதவீதம் ஒழிக்கப்பட்டிருக்கும், ஒழிக்கப்பட வேண்டிய சதவீதம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொசுக்களின் எண்ணிக்கையோடு விட்டுவிட்டார்கள். கொசுக்களின் பற்கள் எத்தனை என்று கேட்காமல் விட்டவரையில் தப்பித்தேன். எண்ணிக்கையைச் சொல்ல முடியாது. பட்டியலைப் பார்த்தால், மாநிலத்தில் பதிவான மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 1976-ல் 1,03,921 ஆக இருந்தது 1977-ல் 83,300 ஆகவும், 1978-ல் 74,918 ஆகவும் குறைந்திருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள், 17—4—1979-ல் மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது திரு. கோ. சி. மணி பற்றிக் கூறிய சில வார்த்தைகள் மேலவைத் தலைவரால் ஆணையிடப்பட்டு நீக்கப்பட்ட சில பகுதிகள் 'நீதியின் குரல்' என்ற பத்திரிகையில் 18—4—1979 சென்னைப் பதிப்பில் வெளிவந்துள்ளதாக ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்துள்ளார்கள். இதுகுறித்து உரிய பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதம் எழுதி, அவருடைய பதிலைப் பெற்ற பிறகு, ஆய்ந்து என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### இராமநாதபுரம் மாவட்டம் பேரையூரில் நடந்த கலவரம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள் கமுதி அருகே பேரையூரில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மான விதிகளுக்கு உட்பட்டதாகும் என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1979 ஏப்ரல் 21]

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, 18 ஆம் தேதி முதுகுளத்தூர் தாலுக்காவில் உள்ள பேரையூரில் நடைபெற்ற ஒரு அரசியல் கூட்டத்தில் பகிரங்கமான தாக்குதல் நடைபெற்று, அந்தத் தாக்குதலில் பலர் படுகாயமடைந்திருக்கிறார்கள். பலர் கல்லெறிக்கு ஆளாக்கப்பட்டு, அவர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியதாகியிருக்கிறது. இன்றைய தினம் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே கூட Mudugulathur—Town is in Tension என்று செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு நிலைமை அங்கே மோசமாக இருக்கிறது. இந்த அவையில் இந்தப் பிரச்சினையை நான் கொண்டு வருவதற்கு முக்கிய காரணம், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னாலே இதே பேரையூருக்குப் பக்கத்தில் நடைபெற்ற ஒரு நாடக நிகழ்ச்சிக்கு வந்து, அந்த நிகழ்ச்சியில் பல கசப்பான, விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்ந்தன. அங்கே ஒரு அரசியல் கூட்டம் நடைபெற்றது. சொற்பொழிவாளர்கள் பேசி முடித்து விட்டார்கள். அதற்குப் பிறகு கலை நிகழ்ச்சி. அதிலே குறிப்பாக அறிஞர் அண்ணா மீதும், டாக்டர் கலைஞர் மீதும் பாடியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 4-50)

அப்போது அங்கே கூடியிருந்த பொதுமக்கள் யாரும் எந்தக் கலவரத்திலும் ஈடுபடவில்லை. தலைவர் தேவர் அவர்களின்மீது கலைக்குழு பாடுகிறபோது, அவரைப்பற்றிப் பாடாதே என்று கூட்டத்திலிருந்து ஒருசிலர் குரல் கொடுத்திருக்கிறார்கள். நான் மிகுந்த பெருமையோடு இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், இன்றையதினம் அமைந்திருக்கிற அரசாங்கம் தேவர் அவர்களின் பெயரை நிரந்தரமாக நிலவச் செய்ய வேண்டுமென்று புதிய, புதிய முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. மறைந்த தேவர் அவர்கள் ஒரு தேசியத் தலைவர், ஆன்மீகத் துறையிலும் அரசியல் துறையிலும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிற தலைவர் என்ற வகையில் அவரைப்பற்றிப் பாடுகிறபோது பாடக்கூடாது என்ற கூக்குரல் எழும்பியிருக்கிறது. அங்கேயிருந்த முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்—கடலாடி தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினராக இருந்தவர் மேடையிலேறி இந்தப் பாட்டு மட்டும் பாடி முடித்து விடுவோம், அதுவரை சற்று அமைதியாக இருங்கள் என்று கலவரம் செய்தவர்களை சமாதானப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் திட்டமிட்ட வகையில், மிகக் கொடுமையான வகையில் அங்கே குழுமியிருந்தவர்களைக் கலவரக்காரர்கள் தாக்கியிருக்கிறார்கள். அதன் காரணமாக கூட்டத்தில் இருந்த சாதாரண மக்கள், பார்வையாளர்களாக இருந்த பொதுமக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு போலீசாரும் படுகாய

மடைந்திருக்கிறார்கள். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அரசாங்கம் முன்னெச்சரிக்கையுடன் நடவடிக்கை எடுத்திருந்தால், காட்டுத் தீ போல இதுபோன்ற சம்பவங்கள் பரவாது. அதன் காரணமாக வேண்டாத நிகழ்ச்சிகளும், விரும்பத் தகாத நிகழ்ச்சிகளும் உண்டாகிவிடக் கூடாது என்பதற்காக நான் இதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்தப் பகுதியைப் பற்றிய நேரடியான அனுபவம். மிகுந்தவன் என்ற அடிப்படையில் சொல்லுகிறேன். அந்தப் பகுதியில் நடைபெறுகிற சம்பவங்கள் காட்டுத் தீயைப் போல பரவிவிடுகின்றன. அது இறுதியில் ஜாதிச் சண்டையில் போய் முடிந்துவிடும் என்ற பயம் எனக்கிருக்கிறது. எனவே அரசாங்கம் எச்சரிக்கையுடன் காவல் துறையினரின் துணையோடு குற்றம் செய்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்கிறது என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதைப் போலவே காயம் அடைந்தவர்களுக்கு உடனடியாக மருத்துவ வசதியை வழங்குகிறோம் என்ற நிலைமையையும் உருவாக்க வேண்டும். அதே சமயத்தில் அங்கே இருக்கிற அரசியல் கட்சிக்காரர்களையும், அங்கே இருக்கிற சமூகத் தலைவர்களையும் அழைத்து ஒரு 'சமாதானக் குழு' என்று ஒன்றை அரசாங்கம் போட்டால்தான், சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாது. அந்தப் பகுதிகள் எவ்வளவு 'வல்னரபிள்' பகுதிகள் என்பது எனக்குத் தெரியும். முதுகுளத்தூர், பேரையூர், கமுதி போன்ற பகுதிகளில் சிறு சிறு பிரச்சினைகளுக்குக்கூட அர்த்தம் கற்பித்து தவறான நோக்கத்துடன் வன்முறையில் ஈடுபடுவோர் இருக்கிறார்கள். எனவே தவறு செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதோடு காயமடைந்தவர்களுக்கு வைத்திய வசதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அங்கே எழுந்துள்ள நிலையைக் குறித்து விரிவான வகையில் விவாதிக்க அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகிலுள்ள பேரையூரில் 18—4—1979 அன்று மாலை 7 மணி முதல் 9-15 வரை திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் சுமார் 500 பேர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முடிவில் தஞ்சாவூர் மூர்த்தி என்பவரது குழுவினரால் கலை நிகழ்ச்சியும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. கலை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தபோது, கூட்டத்திலிருந்து ஒருவர் சீட்டு எழுதிக் கொடுத்து தேவர் மீது பாடல் பாடும்படி கலைக் குழுவினருக்குக் கொடுத்தார். அவரது வேண்டுகோளுக்கிணங்க கலைக் குழுவும் இசைந்தது. தேவர் பாடலைப் பாடியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில்



பேரையூரைச் சார்ந்த ஒரு சிலர் கல் எறிந்ததாகத் தெரிகிறது. இதன் விளைவாக நான்கு பேருக்குக் காயம் ஏற்பட்டது. இதில் 3 காவல்துறை கான்ஸ்டேபிள்களும் காயமடைந்தனர். டியூப் லைட், சேர்கள் ஆகியவை சேதம் அடைந்ததாகத் தெரிகிறது. காவல் துறையினர் தலையிட்டு நிலைமையை அமைதிப்படுத்தினர். துரை பாண்டியன் என்ற திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் கொடுத்த புகாரின்மீது பேரையூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 39/1979-ல் 147, 148, 236, 336, 324, 332 மற்றும் 427, இ.பி.கோ.-படி வழக்கு ஒன்று பாண்டியன் மற்றும் 35 பேர் மீதி பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

குற்றவாளிகளில் 26 பேர் 14—4—1979 அன்று கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். தகுந்த போலீஸ் பந்தோபஸ்து அங்கே போடப்பட்டிருக்கிறது. நிலைமை அங்கே இப்போது அமைதியாக இருக்கிற காரணத்தால் இதைக் குறித்து விவாதிக்க அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதை மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து விவாதிப்பதற்கு அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி, இதற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

**(1) புதிய தூத்துக்குடி துறைமுகக் கூட்டுறவு பண்டகசாலையின் போர்டு கலைக்கப்பட்டதால் பதவியிழந்த தலைவர் குற்றம் சாட்டியவர்களின் மீது தாக்குதல் நடத்துவதும், துன்புறுத்தல் செய்வதும் குறித்து.**

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"புதிய தூத்துக்குடி துறைமுக கூட்டுறவு பண்டகசாலையில் ஏற்பட்ட தவறுகளைக் கண்டுபிடித்து, போர்டு கலைக்கப்பட்டு ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்கப்பட்டதால் பதவியிழந்த முன்னாள் தலைவர், குற்றம் சாட்டியவர்களின்மீது தாக்குதல் நடத்துவதும், பொய்ப் புகார்கள் கொடுத்து துன்புறுத்துவதும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

## புதிய தூத்துக்குடி கூட்டுறவு பண்டகசாலையின போர்டு கலைக்கப்பட்டதால் பதவியிழந்த தலைவர் குற்றம் சாட்டியவர்களின் மீது தாக்குதல் நடத்துவதும், துன்புறுத்துதல் செய்வதும் குறித்து



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, புதிய தூத்துக்குடி துறைமுக கூட்டுறவு பண்டகசாலை 1968 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகளில் உள்ள சில ஷரத்துக்களை இச்சங்கம் மீறியதற்காக 28—8—1978 முதல் இந்தப் பண்டகசாலையின் குழு கலைக்கப்பட்டது. கூட்டுறவு சங்கங்களின் முதிய ஆய்வாளர் அந்தஸ்தில் உள்ள ஒரு தனி அதிகாரி இந்த பண்டகசாலையின் அலுவல்களை தற்போது கவனித்து வருகிறார். இந்த அங்காடி நடைமுறையில் கண்டுபிடிக்கப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய அவர் நடவடிக்கை எடுத்து வருகிறார். இந்தப் பண்டகசாலையின் முன்னாள் தலைவரிடமிருந்து எந்தவிதமான மிரட்டல் புகார்களும் தூத்துக்குடியில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளருக்குக் கிடைக்கப் பெறவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்ததெல்லாம், குற்றச்சாட்டுக்களைச் சொன்னதன் மூலமாக தூத்துக்குடி துறைமுகக் கூட்டுறவுப் பண்டகசாலை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த நடவடிக்கை காரணமாகத் தலைவர் பதவியை இழந்தவர்மீது யார் குற்றஞ்சாட்டினார்களோ அவர்கள்மீது அதன் முன்னாள் தலைவர் தாக்குதல் நடத்துகிறார், அவர்களுக்குத் தொல்லை கொடுக்கிறார் என்பதாகும். எனவே அது 'சட்டம் ஒழுங்கு' சம்பந்தப்பட்டு இலாக்காவால், அத்துறையின் அமைச்சரால் பதிலளிக்கப்பட்டிருக்க வேண்டும். இது ஒரு சட்டம் ஒழுங்கு குறித்த பிரச்சினையாகும். அமைச்சர் அவர்கள் தம் பதிலில் கூட்டுறவுத் துணைப் பதிவாளருக்கு இத்தகைய புகார் பற்றிய தகவல் இல்லை என்று சொன்னார்கள். என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் தெளிவாக முன்னாள் சங்கத் தலைவர் புகார் கொடுத்தவர்களை மிரட்டுகிறார், துன்புறுத்துகிறார் என்று தெரிவிக்கிறது. இந்த நிலையில் இக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குத் தக்க துறையினர் அதாவது இத்துறைக்குப் பொறுப்புள்ள அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்க வேண்டும். தற்போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்ட பதில் சரியான பதிலல்ல என்று தங்கள் மூலம் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



(2) 1979 மார்ச் திங்களில் சமையல் ஆவி, மண்ணெண்ணெய், மிகவேக டீசல் எண்ணெய் ஆகியவற்றை வழங்குவது கட்டுப்படுத்தப்பட்டதால் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடும் அப்பொருள்களைத் தேவையான அளவுக்கு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் பெறுவதும் குறித்து.

THIRU A. R. DAMODARAN: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Food to a matter of urgent public importance, namely, the difficulties caused to the general public both in the urban and rural areas due to restricted supplies of certain petroleum products like cooking gas, kerosene and High Speed Diesel in the month of March and the need for ensuring that Tamil Nadu gets adequate allocation of the above products in April, May and June when demand is likely to increase for some of the above products due to agricultural operations and possible restriction in the power supply.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கிராமப் புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் மண்ணெண்ணெய், சமையல் வாயு டீசல் எண்ணெய் ஆகியவை கிடைக்காததால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இன்று உணவுக் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம் அவையில் நடைபெற இருக்கிறது.

மண்ணெண்ணெயைப் பொறுத்தவரை ஏற்கெனவே இப்படிப்பட்ட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இந்த அவையில் கொண்டு வரப்பட்டு அதற்கு நான் விளக்கமளிக்கும்போது விரிவாகவே பதில் சொல்லியிருக்கிறேன். இன்றும் விவாதம் நடக்கும்போது மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டைப்பற்றி உறுப்பினர் அவர்கள் நிச்சயமாகச் சொல்வார் என்று எதிர்பார்க்கிறேன். அப்போது அதற்குப் பதில் சொல்ல இருக்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் மண்ணெண்ணெய் தவிர்த்த சமையல் வாயு, டீசல் ஆகியவற்றிற்கான விளக்கத்தை மட்டும் கொடுக்க அனுமதி தர வேண்டுமென்று கோருகிறேன்.

### 1979 மார்ச் திங்களில் சமையல் ஆவி, மண்ணெண்ணெய், மிகவேக டீசல் எண்ணெய் ஆகியவற்றை வழங்குவது கட்டுப்படுத்தப் பட்டதால் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடும் அப்பொருள்களைத் தேவையான அளவுக்கு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் பெறுவதும் குறித்து



திரு. ஏ. ஆர். தாமோதரன் : அவைமுன் விவர அறிக்கை வைக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னாலே போதும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள், அவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலே போதுமென்று சொல்லுகிறாரே.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : அவையின் முன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

THIRU A. R. DAMODARAN: As far as High Speed Diesel is concerned, since we may not be discussing this subject while we take up the Policy Note on Food, may I make a request to the Hon. Minister? Generally, during April, May and June, a portion of the supplies of High Speed Diesel is diverted to the north-west portion of India because of the khariff season in the Punjab-Haryana region. The demand for High Speed Diesel in that region goes up and invariably a sizable allocation of High Speed Diesel is diverted from other centres to the north-western region. This has been the historical practice in the past. I wish the Hon. Minister to take note of the fact that because of the power cut in Tamil Nadu there is an increase in demand. For these two reasons, I would request him kindly to make a special request to the Ministry of Petroleum. While we know the position regarding kerosene, petrol and other commodities, if we have a shortage of High Speed Diesel, it will result in very acute problems in our State. I would, therefore, make a request that in the alloctaion of High Speed Diesel, in view of the power cut, the Government may make a request to the Ministry of Petroleum that at least till the power cut is removed the allocation may be increased by 15 per cent to 20 per cent because of the generator demand that exists in our State.

---

398–398 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.





(பிற்பகல் 5-00)

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை உள்துறையின் கவனத்திற்கு எடுத்து வைத்து, அதைப் பரிசீலிப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதைப்பற்றி ஆராய்வதற்கு நான் உள்துறையைக் கேட்டுக் கொள்வேன்.

### 5. அரசின் தீர்மானம்.

**தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.**

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, it gives me great pleasure to participate in the debate on this particular Policy Note, especially in view of the fact that a very detailed Note has been presented by the Hon. Minister about the food situation in our State, the comfortable position that exists and about the other commodities with which his Department is concerned.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

May I first thank the Hon. Minister for presenting before this House the Annual Report of the Tamil Nadu Civil Supplies Corporation Limited for the year 1974–75? In 1978, we made a request that the Annual Reports of this Corporation should be presented before the Legilsature and although this is a belated

---

@ 3...... ஆம் பக்கங்களில் இணைப்பு ... ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[Thiru A. R. Damodaran] [1979 ஏப்ரல் 21

presentation, nonetheless, we are happy that this Report has been presented. Although today the discussion on this Report may be largely academic and possibly a post-mortem analysis of the results of the Civil Supplies Corporation, I am glad that, at least in the opening remarks which have been printed, a review has been made of some of the developments since 1975–76 which would give us a better insight into the working of the Tamil Nadu Civil Supplies Corporation. Generally, the Annual Reports of such Corporations, according to the Company Law, have to be placed within six months of the end of the accounting period. I mention this particularly because our State is now having over 50 or 60 Corporations and it has become the habit of these Corporations to present Reports three or four years late. This is not a good habit and this will result in the Legislature not being able to maintain a proper check over the working of the Corporations and since the shareholders are the general public, the Government, it would be inadvisable to delay such reports. I hope that at least before next year the other Reports of the Civil Supplies Corporation will be placed before the House. There is only one doubt that I have. While the result have been exce lent in the year 1974–75, I am somewhat puzzled to find that for a profit of Rs. 73 lakhs or Rs. 74 lakhs on the share capital plus a loan of Rs. 30 lakhs which also has to be converted into share capital, the income-tax liability of Rs. 54 lakhs seems to be unusually large for the Civil Supplies Corporation. I was under the impression that generally the rate of tax is only 55 per cent and I would like the Hon. Minister to clarify. Although I find from a latter part of the Report that there is some appeal pending, I do not know why there is such a large liability in respect of income-tax on a profit of only Rs. 74 lakhs or Rs. 75 lakhs.

Sir, as far as the food distribution in our State is concerned, the Hon. Minister has given a very detailed Note and I am thankful to him because this explains the genesis of a continuing struggle that Tamil Nadu has waged in getting a better purchase price for paddy for purchases made from farmers. I do not know how this problem is going to be solved. From the Note it appears that the consumers want lower prices and that the farmers want a better price for paddy and that this demand has been investigated by the present Government, that they have found that the cultivation cost of paddy has increased enormously and that the



1979 ஏப்ரல் 21] [Thiru A. R. Damodaran]

Government have put up a strong note to the Government of India, to the Agricultural Prices Commission for revision in paddy price and in spite of all these, there is only a counsel of despair that while the procurement price of wheat should be fixed at Rs. 115 per quintal, the procurement price of paddy still remains at the very low level at Rs. 85 per quintal. May I point out to the Hon. Minister that if this situation is allowed to continue, it may very well result—this is a possibility which I hope will not materialise—in paddy cultivation being affected in Tamil Nadu, because farmers today are an organised group and would decide to cut down paddy cultivation and switch over to commercial crops. This is not by any means a threat that has been issued but in view of the very low profitability of paddy cultivation, which even the Government have accepted, it will not be possible for paddy cultivation to be continued at the present level. No doubt, some good measures have been adopted—levy system from millers has been abolished and free movement of paddy has been permitted. This, to a certain extent, should have compensated the farmers but, unfortunately, because of the glut that exists in the paddy market, the benefit of increase in price which should have rightly gone to the farmers has not materialised. Today the price of paddy is ranging from Rs. 70 to Rs. 75 per bag of 75 kilos, which is higher than the purchase price, because there is no procurement price as such. Even this price does not satisfy the farmer. I do not know what problems the Government will have to face in this critical situation. I think this Government will not find it possible to achieve success in this field because I have a very real fear that paddy growers are being discriminated against and the lobby for wheat is much stronger than the lobby for paddy. The paddy growing areas are predominantly on the East Coast and the Southern States and, unfortunately, our voice has not been heard by the Agricultural Prices Commission or by the Government of India. I do not know whether we will be able to get a subsidy for paddy, because already the subsidy on wheat is of the order of Rs. 300 crores, the subsidy on fertilisers is about Rs. 350 crores and there is a deficit of Rs. 600 crores. Irrespective of such financial matters, I would make a strong plea to the Government of Tamil Nadu that they must take a strong attitude in this matter failing which it would be very difficult for them to retain the confidence of the farming community in the State.

(பிற்பகல் 5-10)

May I next refer to an important decision that has been taken egarding the distribution of cement in our State? For a long ime, for the past six months, we have been having a shortage and here were complaints that cement was being sold in the black narket by anti-social elements. There is a peculiar phenomenon n regard to cement. Although we are in deficit in cement ccording to indications of market demands, the Government of ndia have permitted the export of cement to foreign countries to arn what is known as the valuable foreign exchange. Only today here was a radio announcement that the Government of India nave come to another amazing decision—after having exported cement last year, they have come to the amazing decision—that hey should import two million tons of cement this year. This is he policy of the Government of India in regard to cement production, export and import; and when they have such strange policies, is there any wonder that cement distribution should also be in grave distress? However, from 1st January, the Government of Tamil Nadu have issued an order stating that cement distribution will be totally controlled by the Government and licences have been issued to cement stockists. I do not know the exact number but all those who were trading in cement prior to September 1978 have been granted licences. But the unfortunate part of it is that during the first quarter of 1979, out of a quantity of 1,15,000 tonnes or 1,20,000 tonnes that was allotted to the Tamil Nadu Government for distribution by the cement producers, only less than 15 per cent or 20 per cent has been allotted to the stockists for distribution in our State. Of course, this is one way of killing the cement distribution industry. Their licences need not be cancelled but they can be allowed to wither away and be destroyed; But I do not think that this is a very fair method of ensuring proper distribution of cement. The Government are having price control and permit control and there is no need for the Civil Supplies Corporation or the co-operatives to take over the retail distribution of cement which was formerly being done by the stockists. If the Civil Supplies Corporation does not have enough employment at present, it does not mean that Government should invade every territory of private enterprise and try to take over distribution of commodities that may be temporarily in short supply





just to keep the Government Corporation going. In a matter like this, Government should take into consideration the distress that would be caused to over 3,000 cement stockists in Tamil Nadu. Government are now having price control, distribution control and permit control. Unless a permit is given by the Tahsildar or the Block Development Officer, no cement stockist can deliver cement to any person in the State. When Government have these controlling powers, where was the necessary for a public distribution system to be enforced in cement to the total displacement of private trade? I can tell the Hon. Minister that only very small allocations have been made to cement stockists. Only 10 tonnes to 18 tonnes per quarter was the allotment made in South Arcot district as against a quarterly sale of approximately 150 tonnes to 200 tonnes. The Hon. Minister can have distribution-control but I would request him to consider whether it is necessary to strangle the private trade totally because the Government want to take over the distribution and bring it under the Civil Supplies Corporation.

There are other problems connected with cement distribution which have not received the attention of Government. One of the principal factors is that while Government have fixed the price of cement, they have not been able to determine the transport charges from the factory to the stockist's depot. In the selling price, they have permitted only the railway freight to be deducted by the cement companies whereas actually they are collecting the cost of lorry transport which is more than Rs. 80 to Rs. 100 per lorry load. It means that the cement stockist who would normally get about 90 paise per bag is today getting only something between 25 paise and 30 paise per bag. The private trade cannot be blamed if it black-markets under such extraordinary conditions of price fixation. There must be fairness in price fixation. In fact, this has been stressed even by Thiru Mohan Dharia when he referred to the public distribution system and said that a fair price must be fixed to the man who is dealing in such commodities. Cement sells at Rs. 24 a bag and how can any dealer be expected to sell at a profit of only 25 paise per bag? The Civil Supplies Corporation may be able to do it because it has got enormous resources. Whether there is a loss of Rs. 8 crores or Rs. 10 crores, it is a matter which can depend upon the elastic revenues of Government a[illegible] it may be

[Thiru A. R. Damodaran] [1979 ஏப்ரல் 21

possible for the Government to subsidise the Civil Supplies Corporation. Therefore, I want to make an urgent plea, although a Government Order revising the transport charges has been issued very recently on 28th March, that when Government wish the trade to deal fairly, they must also ensure that a fair margin of profit is fixed for the trade. I would also plead that the quotas that have been given for the cement stockists should be increased. Where people are found to be black-marketing and where people are found to be adulterating the cement, Government must, by all means, take strong action and I would be the last person to say that Government should not take strong action. The reason why the Government are not able to take strong action is a matter which they should investigate in their own Department. Who are the people who are involved in protecting the people who are black-marketing, hoarding, etc. and indulging in various anti-social activities? I am glad to say that I was myself able to bring to the notice of the Vigilance Cell attached to the Civil Supplies Department certain malpractices that were taking place in the petroleum trade. Very prompt action was taken to see that this was stopped within 15 days and a big racket was burst up in Madras. But, mine was an individual, isolated complaint. This is going on throughout the State and there is no person to whom we can complain with confidence. We have to complain in the highest quarters. The amount of money that is involved and the amount of racketeering that is involved in such matters has brought the entire private trade a bad name. Even today, when there are complaints made of black-marketing, hoarding, etc. the elements who are doing these are not the responsible members of the trade but possibly a small minority who are bringing a black name to the trade and against whom the Government themselves have not been able to take action. I cannot understand why they should not take action. Probably the system itself has certain in-built deficiencies and we are unable to progress in such matters.

Sir, the other matter I would certainly like to refer to is the problem that has been engaging the Hon. Minister's attention right from March 7th onwards, the problem of kerosene distribution in Madras City particularly, because in the mofussil excepting for some isolated places, this situation has not occurred.



1979 ஏப்ரல் 21]

What exactly went wrong with kerosene distribution in March? This question has been asked by many persons, Members of the House, the general public, the Government, and the Oil Companies. I would like to say . .

* திரு. சோ. ஆறுமுகம் : On a point of order மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே உறுப்பினர்கள் அவையிலே தூங்கலாமா ? திரு. ரத்தின பாலகுருசுவாமி அவர்கள் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். நீண்ட நேரமாக அப்படியே தூங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையிலே உறுப்பினர்கள் தூங்கக்கூடாது. ஆனால் கண்களை மூடிக்கொண்டு கவனித்துக் கொண்டிருப்பதிலே தவறில்லை.

THIRU A. R. DAMODARAN: I think I must hold myself partly responsible for the member going into deep **slumber,** because the subject must have been dry.

MR. DEPUTY CHAIRMAN: Perhaps the hon. Members was, with closed eyes, appreciating the speech which was in a sweet language.

THIRU A. R. DAMODARAN: Anyhow, what really went wrong with kerosene distribution? We are facing a national crisis in so far as the supply of petroleum products is concerned. I think everybody is aware of the fact—the Hon. Minister has admitted, we have been able to gather various views, and we have collected information from rural areas—that the Iranian crisis has affected the supply of crude to our refineries and we are running very low in so far as our stock position of petroleum products is concerned. But there is one thing which I would like to highlight and it is this. In January itself we were aware of the fact that there was going to be a cut in supply. We could anticipate that, because questions were being asked in Parliament and newspapers. I think a grievous error has been committed by the Oil Companies in not informing the Tamil Nadu Government that in the months of March and April, a cut in the supply of kerosene was bound to come. In January we received 41,000 kilo litres of kerosene—I am rounding it off to the nearest thousand—In February it was 35,000 kilo litres, in March it was 36,000 kilo litres and in April, it has been reduced to 32,000

kilo litres. In 1971 when we had the Indo-Pak conflict and subsequently in 1974-75 when we had a crisis in petroleum distribution due to certain shortage of products in the refineries, within the course of one week, a system was introduced, whereby distribution through family cards was enforced not only in the urban areas but also in the rural areas. At that time, family cards were in use, I agree, because we had food shortage and sugar shortage, the family cards were in use and people were able to get kerosene both in the rural areas and urban areas by producing their family cards. For the past three years 1976, 1977 and 1978, we had no problem regarding food, regarding sugar and regarding kerosene and these family cards were either lost, misplaced, or mortgaged to other people who got it as a stand-by in case they wanted to buy sugar at lower price.

(பிற்பகல் 5-20)

What really went wrong was not the distribution policy of the oil company, was not the distribution policy of the wholesalers and was not even the distribution effeted by the retail dealers excepting for certain stray discrepancy that was caused by the shortage which came about after some time, to which I shall refer later. I am, therefore, unable to understand why the Government should have adopted this extreme attitude of announcing a whosale take-over of the kerosene trade by the Civil Supplies Corporation, without realising that 25,000 retail dealers and over 500 wholesalers who have been in the business for decades possibly would be thrown out of business, just because the Civil Supplies Corporation cannot keep its employees well today or just because it does not have enough products to distribute. This, I believe, is a very grave charge. I can understand the officers of the Department pleading for the case of their employees; but I cannot understand how an elected Minister, a Government, can fail to take into account the feelings of private trade in this regard. My whole regret is that discussions have been taking place only between the Civil Supplies Commissariat and the Indian Oil Company, as if these two people only know about retail distribution. Neither of these two people knows anything about retail distribution of kerosene. Let me put it very frankly and honestly. If there is a Government department that understands anything of the retail trade,



I have yet to come across such a department. The proof of this lies—I hope the Hon. Minister will take it in the spirit in which I am saying—in the fact that when we had an enormous shortage of foodgrains, there was a turnover of seven lakhs tonnes in the Civil Supplies Corporation whereas when we had a glut in the market in 1977-78-79, the off-take from the shops of the Civil Supplies Corporation was less than one lakh tonnes. I have also gone through shortages and gluts and surpluses in my business but people have not stopped buying when there was a surplus product in my shop. What is the reason for this? The reason is simple: Government and retail trade do not mix together. It is a mistake for us to think that because of recurring shortages, etc., the problem will be solved by Government-take-over of the retail trade. We have taken over the coal-mines and our thermal factories have come to a grinding halt because coal is not available anywhere in India. We are making the same experiment in the iron and steel industry and steel is deficit to the extent of two million tonnes. Of course, these are policies of the Government of India. I only wish to caution the Hon. the Minister for Civil Supplies that while we welcome price control and distribution control, a radical measure such as take-over of trade will have disastrous consequences on the employment potential in the State. The Hon. Minister has himself expressed great sympathy for the hand-cart vendors. He has given them 100 litres of kerosene everyday to market according to conditions which they would like. I admire his sympathy for the hand-cart vendors. But where was his sympathy for the 20,000 retail dealers, the Palasarakku-kadai's in the villages and Panchayat areas? Does not the Hon. Minister know how kerosene and other grocery articles are sold in the villages? He comes from a rural part as much as I come from a rural part. When we go to villages, we find one or two shops in every village. Those shop-keepers keep 15 different grocery aticles and along with those articles they keep a couple of tins of kerosene to sell. They go long distances to the wholesaler's shop are transport the kerosene by bullok-cart. Once or twice a month, they go to the shandy, buy articles like dhall, tamarind etc., bring them to their, villages and sell them. What particular grievance has the Hon. Minister against these poor village grocers that he should want the Civil Supplies Corporation and its highly

[Thiru A. R. Damodaran] [1979 ஏப்ரல் 21

paid efficient employees to take over this trade in kerosene? Over 30 years, the kerosene and petroleum trade has gone through various vicissitudes of surplus-shortages-surplus-shortages. In our country, is there any product that has not been in short supply at some period of time or other ? No year in the calendar, after Independence, has been free from shortages. That is directly attributable to the hope-lessly wrong policies formed in the area of industrial production. Why should we have a shortage in cement? Even to-day, the Hon. Minister would have read in the papers that the cement factories are going to be divided—clinker would be made in one place and manufancture would be done in another place. Glorious policies are adumbrated and the consumer has to suffer and this Government are held responsible for shortages. Naturally, when the Hon. Minister is pilloried by Members of the Legislature, attributing a shortage of kerosene directly to Thiru Edmund as if he is responsible; he has reacted in the way in which a Minister is bound to react and he said, "I will take over everthing under Government and cure your problems". I may assure the Hon. Minister that, far from seeking a cure to the problem, he would be creating an incurable disaster for himself for which he will never get a cure. In fact, the cure would not only infect the department but it may infect the entire Government. I have a word of caution. In 1966 when the food distribution failed in Madras City—I think the hon. Member Thiru Ramamoorthi will be well aware of the problem—we had a veritable shock in the political field in Tamil Nadu because of the failure of distribution of one single articale. It is an extremely risky business to depend on Government agencies for distribution of any product. The Government may have control points and may have distribution controls and the Government may have effective control. If in spite of these something goes wrong, it is because the whole system and the whole apparatus has gone wrong somewhere and we should soon remedy the situation. The supply is inadequate and there is no doubt about it, because even calculating at the rate of three litres in rural areas and at the rate of six litres in urban areas, the quantity required will be 33 to 34 thousand kilo litres per month. Naturally there is scarcity. In South Arcot district, in Kallakurichi and Tindivanam taluks, there are a number of kerosene pumpsets which are using kerosene. How are we going to supply their requirements? Unfortunately, the Government will not be able to supply the requirements of



1979 ஏப்ரல் 21] [Thiru A. R. Damodaran]

the industrial consumers who are in a large number. The Government will have to adopt a very strong policy because kerosene is in short supply and it will have to be limited only for lighting purposes. For this purpose, the distribution should be only through family cards. I would like to suggest one thing for the solution of the problem. We have just completed enumeration in all the panchayats and Municipalities and Corporations in our State and we are poised for the elections in June–July 1979. Every household has been enumerated and the Government have assured that this has been done perfectly so that there is no room for any complaint regarding bogus registration in the electoral rolls. The Government have a perfect record and it will not be possible for the Government to introduce a separate card for kerosene in the rural areas and in the urban areas. I would go a step further to suggest something about the present arrangement for distribution of kerosene through retail dealers. They are a very vulnerable community and I would request him to see that 500 to 1000 family cards are attached to each of the existing retailers both in the City as well as in the districts and ensure that they follow whatever instructions are given by the Government. If the Government want them to give two litres or three litres per month, the Government can ask them to note down the family card number and distribute kerosene. The only word I would like to say in this connection is that the present margin of profit for the retailer is hopelessly inadequate. Because the Civil Supplies Corporation has been trying to sell kerosene in Madras City, I would request the Hon. Minister to ask them to furnish to him the information about the expenses which are incurred for transport, handling, etc., at their shops and the Hon. Minister will get a more accurate picture of the expenditure that is incurred by a retailer in the sale of kerosene. The kerosene shops of the Civil Supplies Corporation work between 8 a.m. and 11 a.m. and 3 p.m. and 7 p.m. and there are also holidays. If the wholesaler wants to deliver kerosene after 11 a.m., the whole shop is closed or the person refuses to receive the stock.

(பிற்பகல் 5-30)

There are a number of difficulties. Even in regard to the past 18 months, may I request the Hon. Minister to point out one single case of any wholesaler having been found to charge a higher price

[Thiru A. R. Damodaran] [1979 ஏப்ரல் 21

or having indulged in backmarketing? If there be any such case, the Government can take action and cancel the licence and I will not object. But the whole distribution system of the Government has gone wrong because out of the 1,800 retail dealers who have been licensed in Madras City, approximately 800 of them are hand-cart vendors. The hand-cart vendors can only operate during a period of surplus distribution and it will be difficult for Government to find them a place during a period of deficit distribution because hand-carts cannot be attached to vendors in the City. Therefore, I would request that, out of the 800 retail distribution shops that exist in Madras City at present, the grocery shop people who have been handling kerosene for decades may be authorised to deal on the basis of family cards. Thousand family cards may be allotted to each retailer to make it profitable for him to operate a shop. Government should also go into the question whether the present margin given to the retail dealer could be increased. I am not asking for an increase for the wholesaler; I am asking for it for the retail dealer. The present margin of five paise is inadequate and is an illusory figure. He is bound to black-market to the extent of three paise or four paise because otherwise, he may not exist. As an alternative, he will under-measure. Either of these two things will result. I am giving the actual picture of the trade after having studied it for a number of years. I have pleaded for an increase in the past also. While Government are giving a margin of five paise per litre to the moving hand-cart vendor and trying to control his activities, they are actually giving the shops only 2 paise or 3 paise because they want the retail dealers to bill each litre of kerosene that is sold and each bill costs one paise. Apart from that, if the shop-keeper is to make an entry of the family card number, etc. in his register, he will require adequate clerical assistance. I think that very soon the Hon. Minister will be receiving demands from the officers of the Civil Supplies Corporation that they are not able to cope with the queues and they will want two or three additional hands for each shop. Therefore, I would request him to consider an increase in the margin, purely from the angle of the existence of the shop-keepers and from the point of view of lack of consumer acceptance. If he asks the consumers, he will be able to find out that they are not happy with the system. Even today, they have a lot of trouble in getting kerosene.



1979 ஏப்ரல் 21] [Thiru A. R. Damodaran]

The Hon. Minister has mentioned about the public distribution system announced by Thiru Mohan Dharia and the details have been published in the Tamil Nadu Journal of Co-operation. I had to get the details of the public distribution system from the Tamil Nadu Journal of Co-operation and I am grateful to the Hon. the Minister for Co-operation. I am surprised that the Hon. the Minister for Civil Supplies has not mentioned more than a very brief paragraph about what the public distribution system is going to be. He wants to take over safety matches in the public distribution system and the 'petti-kadai' chaps will be displaced from employment. He wants to take over soaps and washing soaps also. This is a very essential commodity according to Thiru Mohan Dharia and all the State Governments have accepted it; I cannot understand this philosophy of assuming that these Central Ministers know everything about retail trade. Let me say that they know very little about retail trade. I have dealt with nine Ministers of Petroleum and I have found all of them to be a great disappointment in so far as an understanding of the retail trade is concerned. They do not understand. They are dogmatic and adamant in their attitude. They say, "This is what I say; you will follow it or else . . . .". In fact the Hon. the Union Minister for Petroleum, when some dealers of Calcutta met him in Calcutta and pleaded with him for some reform in Petrol commission, made a statement astounding for a Minister. I think I should tell the Hon. Ministers here because I hope they will not make the same statement. He said, "Dealership is a matter of choice and if the dealership is not profitable, they are welcome to leave it". So, I hope the same answer will be given by the Union Finance Minister to the employees of the Reserve Bank, if they go on strike. He may say, "Employment is a matter of choice; if you do not like this job of Rs. 1,800 a month, why don't you leave it and get out?". Probably, the Hon. the Minister for Labour here, if a worker drawing Rs. 800 a month and a bonus of Rs. 300 comes and pleads for an additional bonus of 5 per cent, may tell him, "Employment in an industry or factory is a matter of choice; if you do not like it, you can leave the employment".

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவரவர்களே, பிரச்சினையை அந்த முறையில் நான் அணுக மாட்டேன். இந்த அரசினுடைய கொள்கையும் அதுவல்ல. அதிகமாக ஊதியம் கொடுப்பதைப் பொறுத்தவரை, it depends upon the paying capacity of the establishment in which the worker is employed என்கின்ற முறையில் அந்தக் கொடுக்கும் சக்தி அதிகமாக இருக்கிறவர்களிடமிருந்து வாங்கிக் கொடுக்க முயற்சி செய்வோம். சக்தி இல்லாதவர்களிடமிருந்து எங்கிருந்து வாங்கிக் கொடுப்பது ?

Therefore, let not the hon. Member come to the conclusion that this Government will also say the same thing about which he is now complaining.

THIRU A. R. DAMODARAN : I am sure this Government and its Ministers will never say like that. If I had any doubt about it, I would never have brought that information to the notice of this Government.

MR. DEPUTY CHAIRMAN: I think the hon. Member made that statement, only to get such a reply from the Hon. Minister.

THIRU A. R. DAMODARAN : When I was in Kerala, the Hon. Minister for Civil Supplies of that State, Thiru Mani, who was attending a Conference, was good enough to say that this was not the policy of the Kerala Government and that they would accept only that which they considered reasonable. I am only placing this matter here to show that in adopting the public distribution system, in accordance with the 12-point guide-line, the Hon. Minister should not burden himself with the responsibility of distribution of bicycle parts, tea, coffee, washing and toilet soaps, yarn and spices—spices, of all the things; and do not the Government of India have other business except to deal in spices and washing soaps, when it is having tremendous crises in other respects ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: துணைத் தலைவரவர்களே, மத்திய சர்க்காரைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். அதற்கு பதில் அளிக்க ஜனதா கட்சி உறுப்பினர்கள் யாரும் இப்பொழுது அவையில் இல்லை. ஜனதா கட்சி உறுப்பினர்கள் யாருமே அவையில் இல்லாத நிலையைப் பரிதாபத்தோடு உணர்ந்துபார்த்து



மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் அதிகமாகச் சொல்லிக் கொண்டிருக்கின்ற குற்றச்சாட்டைக் குறைத்துக்கொள்ளலாமென்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

* திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அவருடைய கட்சியுடன் ஜனதா கட்சி தோழமை கொண்டிருப்பது போல் வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்களே உண்மையிலேயே அது அவர்களது கொள்கையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: துணைத் தலைவரவர்களே, மனிதாபிமான அடிப்படையில் தான் நான் அப்படிச் சொன்னேன். இராமாயணத்தில் கூட இன்று போய் நாளை வா என்று தான் இருக்கிறது. அந்த அடிப்படையில் தான் ஜனதா கட்சி உறுப்பினர்கள் யாரும் அவையில் இல்லாமலிருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமாகக் குற்றச்சாட்டுகளைச் சொல்லிக் கொண்டே போகிறார்களே, சொன்ன குற்றச்சாட்டுக்கள் போதும் என்று தான் சொன்னேன்.

THIRU A. R. DAMODARAN: The only reason why I was referring to this matter is this. If, from what the Hon. Minister said, I can assume that they have not endorsed the 12-point programme of public distribution of Thiru Mohan Dharia, I am prepared to drop the matter. The danger is there in that they have accepted this public distribution system. All the State Governments which are supposed to have attended a meeting in Delhi, have accepted this plan of distributing tea, mates, coffee, etc., and whatever they have mentioned in the 12-point Distribution Programme. My only plea is the programme is highly theoretical and in accepting this measure, a degree of flexibility and pragmatism is required on the part of the local Government to ensure that wherever it is necessary, they should step in as a controlling authority or factor and where it is not necessary, they should allow the normal distribution channels to play their part. In South Arcot district, 2,000 shops are to be opened by the Civil Supplies Corporation in the course of the next two months. I would like to make a suggestion to the Hon. Minister regarding the manning of these shops. I would request him to consider whether in leasing out the shops, he could not introduce the system of choosing a local resident from the village and entrusting the establishment to him on a commission basis. I would like to suggest that for a turn-over of Rs. 10,000 the man may be paid anywhere between Rs. 150 to Rs. 200 which would be a reason-

[Thiru A. R. Damodaran] [1979 ஏப்ரல் 21

able commission for him to earn and when the turnover is above Rs. 10,000 he may be paid the commission which, the Government think, is reasonable. If we have the people from the Civil Supplies Corporation to man those shops, it will result in a cry being made that the same scales of salary as are payable to a Government employee should be adopted and it will make your distribuion apparatus extremely expensive. I am mentioning this because this will be in his own interest and also in the interests of the consumers who want the essential commodities at lower prices. The Government can have the shops at places where there are no shops altogether. In such places as tribal areas, Hill areas, and Kalrayan Hills in South Arcot district, shops could be opened. I do not say that it is a bad scheme. It is a very good scheme and the inaccessible areas in our State are very many and they require so much assistance that we can welcome Government intervention in the matter.

(பிற்பகல் 5-40)

I would only plead that some amount of caution should be exercised in viewing these matters of temporary shortages and evolving policies urging a complete take-over of any private trade. In fact, this public distribution system has not yet attracted public notice. I have invited the attention of all Chambers of Commerce and Merchants Associations to this serious displacement of private trade that is likely to result from a compulsory measure of this kind. I hope the Government will proceed with caution and will utilise their apparatus to the extent that is necessary as they were doing in the case of foodgrains. They did not think of displacing 30,000 foodgrain dealers although it would have been very desirable because they knew the difficulties of a Government distribution system. With these words, I plead for a better understanding of the situation.

I will not speak on High Speed Diesel because the Hon. Minister has cleverly excluded himself stating that High Speed Diesel is a subject handled by the Home Department. I do not know why High Speed Diesel should be dealt with by the Home Department. It is a mystery to me. Perhaps, it should be dealt with by the Transport Department which is more responsible. I will deal with it when we take up the relevant Policy Note. As



1979 ஏப்ரல் 21] [Thiru A. R. Damodaran]

far as the Civil Supplies Corporation is concerned, I would plead for a better understanding. As far as the wholesalers in Madras are concerned, they are co-operating in every way. I would only request the Hon. Minister to ensure that payment is made promptly to these people. They cannot afford to give credit of Rs. 15,000 or Rs. 20,000 for two or three days. Also the wholesaler should not be insisted upon to transport kerosene to the retail shops of the Civil Supplies Corporation. It is a grave responsibility for a wholesaler to take. I hope that the Civil Supplies Corporation will make its own arrangements to transport kerosene. The wholesalers cannot be held responsible for loss *en route*. The hand-cart vendors are not a lot very amenable to discipline, I would plead that if the Government wish to do business, they may do it in a business like way. Let them build up the facilities, do the costing that is required and by all means carry on the business. But, in the meantime, no blame should be attached to the wholesalers or to the oil companies for a situation for which neither of them are responsible.

**Thank you.**

* **திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. எட்மண்ட் அவர்கள் தமிழகத்தின் உணவு நிலைமைபற்றி அறிக்கை தந்திருக்கிறார்கள். அதிலே கிராமங்கள் தோறும் நியாய விலைக் கடைகளைத் திறந்து, பொது மக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகிக்கும் திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட, ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே, 16 ஆயிரம் கிராமங்களிலே நியாய விலைக் கடைகளைத் திறந்து, பொதுமக்களுக்கு நல்ல பொருட்களை நியாயமான விலைகளிலே வழங்குவோம் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையிலே இந்தக் கடைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் 1,435 கடைகள் திறக்கப்பட வேண்டிய நேரத்தில் 1,343 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் திறக்கப்பட வேண்டிய கடைகள் 92. இந்த நியாய விலைக் கடைகளில் நல்ல பொருட்களை விற்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தாலும் தேவையான அனைத்துப் பொருட்களும் அந்த நியாய விலைக் கடைகளிலே கிடைக்கவில்லை. இந்நிலையைப் படிப்படியாகப் போக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மண்ணெண்ணெய் பற்றி நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், எங்களுடைய கிராமங்களிலே

[திரு. சி. இராமலிங்கம்] [1979 ஏப்ரல் 21

இன்றைக்கு மண்ணெண்ணெயை யாரும் எதிர்பார்க்கவில்லை. மசாலை வாங்கி வைத்து அதனுடன் கற்பூரத்தையும், உப்பையும் போட்டு விளக்கு எரிக்கிறார்கள், அடுப்பு எரிக்கிறார்கள். மண்ணெண்ணெய்க்கு உரிய மாற்று முறையை பொதுமக்களாகவே பார்த்துக் கண்டுபிடித்துவிட்டார்கள். கற்பூரம் என்றால், துணிகளுக்குப் போடும் பச்சைக் கற்பூரத்தைப் போட்டு எரிக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் சொல்வேன், தமிழ் நாட்டில் மண்ணெண்ணெய் பஞ்சம் வராது.

அடுத்தபடியாக, இந்தக் குறிப்பில் விலைவாசிகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் இருக்கின்றன. ஏன் விலைகள் ஏறுகின்றன என்று பார்க்கிறபோது, நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1965-66 ஆம் ஆண்டுகளில் விலைவாசிகள் ஏறி, அதன் காரணமாக உணவுப் பண்டங்கள் கிடைக்காமல், ரேஷன் கடைகள் ஆரம்பிக்கப்பட்டு, மக்கள் பெரிய 'க்யூ'-வாக நின்று வாங்கும் நிலைமைகள் ஏற்பட்டன. அந்த உணவுப் பஞ்சத்தால் அப்போது இருந்த காங்கிரஸ் அரசாங்கம் வீழ்த்தப்பட்டது. அதன் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைக்கப்பட்டது. இந்த ரேஷன் கடைகள் தேவை தானா என்று பார்க்கும் போது அவைகள் தேவை தான். ஆனால் அவைகள் உரிய முறையில் கட்டுப் படுத்தி நடத்தப்பட வேண்டும். நான் என்னுடைய சைதாப்பேட்டை தாலுகா விவசாயக் கூட்டுறவு வங்கியின் அனுபவத்தைச் சொல்கிறேன். நெல்லைக் கொள்முதல் செய்வார்கள், அதிலே நஷ்டம் வரும். புளி வாங்கினால் அதிலே நஷ்டம். அங்கெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் அதிகாரிகளை மாற்று கிறார்கள். ஒரு அதிகாரி புளியைக் கொள்முதல் செய்து, அதிலே உப்பையும் தண்ணீரையும் சேர்த்து அதிக எடையுள்ளதாகக் காட்டி ஒரு கணக்கு வைத்திருப்பார். அந்த அதிகாரி மாற்றப்பட்டு, இன்னொரு அதிகாரி பொறுப்புக்கு வந்த பின்பு, முன்னால் இருந்த அதிகாரி வாங்கிய பொருட்களை விற்கும்போது நஷ்டம் வருகிறது. இந்தத் துறையை சரிவரக் கண்காணிக்க வேண்டுமானால், எந்த அதிகாரி கொள்முதல் செய்தாரோ, அந்த அதிகாரியே அந்தப் பொருட்களை விற்பனை செய்யும் பொறுப்பை ஏற்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை உணவு இலாக்கா கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பெல்லாம் அரிசி வாங்கச் சென்றால், நாற்றம் அடிக்கும். 'டெக்னிக் கலர்' என்று சொல்வார்களே அந்த மாதிரி அரிசி இருக்கும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அப்படி இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அப்படி இருந்தது. ஆனால் இன்றையதினம் அரிசி தூய்மையாகக் கிடைக்கிறது. ஆனால், இந்த ரேஷன் கடைகளிலே இன்னும் பொறுப்பான



1979 ஏப்ரல் 21] [திரு. சி. இராமலிங்கம்]

அதிகாரிகளைப் போட்டு அந்தப் பொருட்களை விநியோகம் செய்ய வேண்டும். அங்கு இருக்கும் அதிகாரிகள் காலையிலே 8 மணிக்கு வந்து கடையைத் திறக்கிறார்கள். அல்லது 9 மணிக்கு வந்து திறக்கிறார்கள். ஆனால் 11 மணிக்கு மூடிவிட்டுப் போய்விடுகிறார்கள். மாலையில் 1 மணிக்கு வந்து திறந்துவிட்டு, 4 மணிக்குப் போய்விடுகிறார்கள். இதனால் பொது மக்கள் மிகவும் சங்கடப்படுகிறார்கள். ஆகவே, பொறுப்பான அதிகாரிகளைப் போட்டு, சிறந்த முறையில் கண்காணித்து இந்தக் கடைகளை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விலைகள் ஏறுகின்றன. காய்கறிகளின் விலை, இறைச்சியின் விலை ஏறுகிறது. ஏன் இப்படி விலைகள் ஏறுகின்றன என்று பார்த்தால், கொத்தவால்சாவடியிலே போனால், அங்கே காய்கறியின் விலைகளும், இறைச்சியின் விலையும் அதிகமாக இருக்கின்றன. அங்கே ஹோட்டல் முதலாளிகள் வந்து மூட்டை மூட்டையாக வாங்குகிறார்கள். எதை யெடுத்தாலும் அவர்கள் தான் வாங்குகிறார்கள். எங்கே பார்த்தாலும் மச்சுண்டைக் கடை, ஓமப்பொடி கடை, நெல்லை ஸ்வீட் ஸ்டால், பாம்பே ஸ்வீட் ஸ்டால், என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். ஒரு கிலோ காரம் 16 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஒரு கிலோ இனிப்பு என்ன விலை என்று சொன்னால் 18 ரூபாய். சாதாரணமாக, அரிசியின் விலை என்ன என்று பார்த்தால், கிலோ 2¾ ரூபாய். ஆனால், ஒரு தோசை 50 காசுக்கு விற்கிறார்கள். அதுவும் சாதா தோசை. ஒரு கிலோ அரிசியில் இந்த மாதிரி தோசை 50 சுடலாம். அந்தக் கணக்குப்படி பார்த்தால், ஒரு கிலோ அரிசியில் 25 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். இரண்டு இட்டிலி 30 காசுகள். என்ன நியாயம் இது? ஒரு கிலோ அரிசியில் எத்தனை இட்டிலிகள் சுடலாம்? எவ்வளவு லாபம்? ஹோட்டல் முதலாளிகளை யாரும் கண்டிக்கக்கூடாதா? அவர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள்? எந்த ஹோட்டலுக்கு நான் போனாலும் சண்டை போடுவேன். ஒரு சாதாரண ஹோட்டல் முதலாளி 3 பங்களா வைத்திருக்கிறார். வருமான வரி கட்டுவதில்லை. சேல்ஸ் டாக்ஸ் கட்டுவதில்லை. இங்கே சைனா பஜாரில் திரு. ஜெயராமய்யர் என்பவர், இராமகிருஷ்ணா லஞ்ச் ஹோம் என்று வைத்திருக்கிறார்கள். அங்கே போய்ப் பார்த்தால் தெரியும். ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில், எங்கே பார்த்தாலும் கண்ணாடி போட்டு பிரமாதமாக கடை வைத்திருக்கிறார். அங்கே போனால் ஒரு சம்சா 50 காசு. ஒரு பால் 1½ ரூபாய் . . .

திரு. க. இராமமூர்த்தி : அப்பேர்ப்பட்ட கடைகளுக்குப் போக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போது பழகிக்கொண்டார்கள்?

திரு. சி. இராமலிங்கம் : நான் போகவில்லை. அங்கே சாப்பிட்டுவிட்டு வந்து சொல்கிறார்கள். இந்த மாதிரி ஹோட்டல்களால் தான் விலைவாசி ஏறுகிறது. கத்தரிக்காய் விலை என்ன என்று கேட்டால், 2 ரூபாய் என்று சொல்கிறான். நாம் கட்டாது என்று விட்டுவிடுகிறோம். உடனே அந்த ஹோட்டல்காரன் பக்கத்திலே நின்றுகொண்டு 'போடு ஒரு 4 முட்டை' என்று சொல்கிறான். ஹோட்டல்களிலே சாப்பாடு, 3 ரூபாய், 4 ரூபாய். அரிசியின் விலை 2¾ ரூபாய்தான். நான் சின்னப் பையனாக இருந்தபோது, அன்றைய நினைவுகள் என்னுடைய நினைவுக்கு வருகின்றன. உளுத்தம் பருப்பு என்ன விலைக்கு விற்றதோ அந்த விலையை அனுசரித்துத்தான் உளுத்தம்பருப்பில் செய்யும் பொருட்களை விற்றார்கள். அரிசியின் விலை என்ன விற்கிறதோ அதை அனுசரித்துத்தான் அரிசியால் செய்த பொருட்கள் விற்கப்பட்டன. இன்றையதினம் விலையேறிப்போய் ஜனங்கள் வாங்கிச் சாப்பிட முடியாமல் திண்டாடுகிறார்கள். எங்களைப் போல குடும்பம் நடத்துகிறவர்கள் ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். ஹோட்டல்களில் சுத்தம் இல்லை. அங்கே சாப்பிடுவதால்தான் நோய் வருகிறது. ஹோட்டல்களில் சாப்பிடுவதால் வயிற்று வலி, வயிற்றுக் கடுப்பு ஏற்படுகிறது. ஹோட்டல்களில் சாம்பார் வைக்கிறார்கள். அதில் உளுத்தம் பருப்பே போடுவதில்லை. கூட்டு வைக்கிறார்கள். எதையெதையோ போட்டு வைக்கிறார்கள், இவைகளைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான வழி காட்டிக்கொண்டிருக்கிறார்கள். உளுத்தம்பருப்பு சாம்பார் வைத்து நான் கேள்விப்பட்டதேயில்லை. சாம்பாருக்கு துவரம் பருப்பு தான் உபயோகப் படுத்துவார்கள்.

திரு. சி. இராமலிங்கம் : உளுத்தம் பருப்பு போட்டு சாம்பா வைக்கிறார்கள். உளுத்தம் பருப்பு போட்டு வைத்தால் தான், சாம்பா கொழ கொழவென்று இருக்கும். நானே உள்ளே சென்று பார்த்திருக்கிறேன் கிறேன்.

புலவர் புலமைப்பித்தன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'உளுத்தம் பருப்பு' என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 5-50)

திரு. சி. இராமலிங்கம் : நுகர்பொருள் வாணிபக் கழகம் எங்கே பார்த்தாலும் நெல்லையும் மற்ற உணவுப் பொருள்களையும் கொள்முத செய்து விற்பனையும் செய்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறது என்பது



மைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்மையில் புளி லை, மிளகாய் விலையெல்லாம் உயர்ந்திருந்தன. அதற்காக சர்க்காரும் திகாரிகளும் என்ன ஆராய்ச்சி செய்தார்களோ, எனக்குத் தெரியாது. ருந்தாலும் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், சாலை யாரங்களில் நாம் மரங்களை . அதிகமாக வைக்க வேண்டும். குறிப்பாக மரம், நெல்லி மரம், புளிய மரம் இவைகளை வைக்க வேண்டும். அப்படிச் சய்தால், புளி விலை அதிகமாக உயராது. இன்றைக்கு புளி விலை சிறிது றைந்திருக்கிறது என்று பார்த்தாலும், மற்ற பொருள்களை வாங்க டியாத அளவுக்கு ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். உணவுப் பொருள்களைப் பாறுத்தவரையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பாறுப்பேற்ற பிறகு, எங்கே பார்த்தாலும், ஓரளவுக்கு நல்ல சூழ்நிலையே ருக்கிறது. அரிசி குறைந்த விலையில் தாராளமாகக் கிடைக்கிறது. அரிசி ாராளமாகக் குறைந்த விலையில் கிடைப்பதால், மக்கள் மற்ற பாருள்களைப்பற்றி அதிகமாகக் கவலைப்படாமல் இருக்கிறார்கள். விறகு ரு குண்டு 10 ரூபாய் என்று விற்கிறது. இதையெல்லாம் அரசாங்கம் லையிட்டுக் கட்டுப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான், நாட்டில் ல்ல நிலைமையை உருவாக்க முடியும்.

செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவு வர்த்தக சங்கத்தைப்பற்றிச் சில விரங்களைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். கடந்த காலத்தில் சங்கற்பட்டு கூட்டுறவு வர்த்தக சங்கத்தில் நிறைய நஷ்டம் ற்பட்டிருக்கிறது. சங்கத்திற்குப் பொறுப்பானவர்கள் அப்போது சரியாக வனிக்காத காரணத்தால், அதில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு ந்தச் சங்கத்தில் லாபம் வந்ததாகச் சொல்லுகிறார்கள். இப்படி லாபம் ரும்படியும் இனிமேல் நஷ்டம் ஏற்படாதபடியும் அதைச் சரியாகக் ண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளில் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பாருள்களையும் வைத்து விற்கும்படி செய்ய வேண்டும். எண்ணெய் வாங்க ரு இடத்திற்குப் போக வேண்டும். புளி வாங்க ஒரு இடத்திற்குப் போக வண்டும். பருப்பு வாங்க ஒரு இடத்திற்குப் போக வேண்டுமென்ற நிலை ற்போது இருக்கிறது. அதை மாற்றி ஒரே நியாய விலைக் கடையில் பாருள்கள் அனைத்தையும் விற்றால்தான் லாபமும் கிடைக்கும், பொது க்களுக்கும் உதவியாக இருக்கும். உணவுப் பொருள்களைப் பொறுத்த ரையில், எந்த வகையிலும் தட்டுப்பாடு வராதபடி பார்த்துக் கொள்ள வண்டும். அப்படிப்பட்ட முறையில் சிறப்பான வகையில் இந்த ஆட்சியை

[திரு. சி. இராமலிங்கம்] [1979 ஏப்ரல் 21

நாம் நடத்திச் செல்லும்போது, எதிர்பாராதவிதமாக மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு வந்துவிட்டது. அதற்கும் மக்களே பார்த்து ஒரு மாற்றுவழி கண்டுபிடித்துவிட்டார்கள்.

தற்போது சிமிண்ட் கிடைப்பதில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. சிமிண்ட் கிடைக்கவேயில்லை. காரணம் கேட்டால், தேவையில்லாதவர்களெல்லாம்கூட 5 மூட்டைக்குப் பர்மிட் வாங்கி வந்து, சிமிண்ட்டை தேவையில்லாமல் ஸ்டாக் செய்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வீடுகட்டுகிறார்களோ இல்லையோ சிமிண்ட்டை மட்டும் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அலுவலகத்தில் சர்ட்டிபிகேட் வாங்கி வந்தால், சிமிண்ட் கொடுக்கப்படும் என்ற முறை இருக்கிறது. எனவே அந்த வகையில் சிமிண்ட்டை வாங்கி சேமித்து வைத்துக்கொள்கிறார்கள். தேவைப்படுகிறவர்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே இனிமேல் சிமிண்ட் தேவை என்றால், அவர்கள் கட்டிடம் கட்டுவதாக கார்ப்பரேஷனிலோ முனிசிபாலிடியிலோ, சாங்ஷன் வாங்கியிருந்தால்தான், பர்மிட் தரப்படும் என்ற முறையைக் கொண்டு வரலாம். தற்போது சும்மா இருப்பவர்களெல்லாம் சிமிண்ட் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் கலப்படம் வேறு நடக்கிறது. கலப்படச் சிமிண்ட்தான் அதிகமாகக் கிடைக்கிறது. கலப்படம் செய்வதில் கை தேர்ந்த ஒரு சமுதாயத்தினர் இந்த நாட்டில் இருக்கிறார்கள். என்னதான் சொன்னாலும், அவர்கள் கலப்படம் செய்வதைக் கைவிடுவதில்லை. அவர்களையும் அரசாங்கம் கண்காணிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவுத் துறையிலிருக்கிற அதிகாரிகள் தயவுசெய்து ஓட்டல்களில் உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தி, அவைகளை நியாயமான விலைக்கு விற்கும்படி செய்ய வேண்டும். இந்த உணவுத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் புரட்சித் தலைவர் அவர்கள் நல்ல பல திட்டங்களை அமுல்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதன் காரணமாகத் தான் நாட்டு மக்களும் இந்த ஆட்சியை ஆதரித்து, அரசாங்கத்தோடு ஒத்துழைக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் இன்றைக்கு அவரைப் பாராட்டுகிறார்கள். அநேகமாக எல்லாப் பொருள்களின் விலையும் குறைந்திருக்கிறது. எண்ணெய் விலை குறைந்திருக்கிறது. பருப்பு விலை குறைந்திருக்கிறது. இப்படி எல்லாப் பொருள்களின் விலையும் குறைந்திருப்பதாலும், ஓட்டல் பண்டங்களின் விலை மட்டும் அதிகமாக இருக்கிறது. அவைகளையும் அரசாங்கம் குறைத்துவிட்டால், மிக நல்ல பெயர் இந்த ஆட்சிக்குக் கிடைக்கும் என்று கூறி, இந்த வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றிகூறி விடை பெறுகிறேன். வணக்கம்.



[1979 ஏப்ரல் 21

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய அமைச்சரவையிலேயே தற்போது அதிகமான பிரச்சினைகள் இல்லாமல் மகிழ்ச்சியோடு இருக்கிற அமைச்சராக மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் விளங்குகிறார்கள். அவருடைய துறையைப் பொறுத்தவரையில், இரண்டு பிரச்சினைகள் உண்டு. அதாவது உணவுப் பிரச்சினை, மற்றது பற்றாக்குறை. அவை இரண்டுமே இன்றைக்கு நாட்டில் இல்லை என்ற அளவில் ஓரளவுக்கு நாம் மகிழ்ச்சியாக இருக்கிறோம். அதோடு கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்கள்கூட மகிழ்ச்சியைத் தரத் தக்க வகையில் அமைந்திருக்கின்றன.

அதே நேரத்தில் இதன் விளைவாக வேறு பல பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன என்பது மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. இராமலிங்கம் அவர்களும் அவருக்கு முன்னே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும் பல பிரச்சினைகளைக் கோடிட்டுக் காட்டினார்கள்.

உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் ஆட்சியின்போது ஏற்பட்ட நிலைமைகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தைப்பற்றி இப்போது நான் விமர்சிக்க விரும்பவில்லை—காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 1952-லிருந்து உணவுப் பொருள்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு இருந்து வந்தது. அப்போது கிடைத்த பல வண்ண அரிசியைப்பற்றிக்கூட இங்கே குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு மீண்டும் 1965-66-ல் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆனால் அந்தக் கசப்பான அனுபவம் மிகப் பெரிய அளவில் நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு முன்னுதாரணமாக அமைந்தும்கூட, இன்றைய தினம்வரை முறையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டோம் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தட்டுப்பாடு வருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே தொடர்ந்து தமிழகத்தில் வறட்சி நிலவுகிற நிலை ஏற்பட்டது. மழையில்லாமல் வறட்சி ஏற்படுகிற நிலை இருந்தது. இப்படிப்பட்ட நிலை பல ஆண்டுகளுக்கு ஒருமுறை தொடர்ந்து 'சைக்கிள் சக்கரம்' சுழல்வதுபோல் தமிழகத்தில் ஏற்பட்டு வருகிறது. காங்கிரஸ் ஆட்சியின் 25 ஆண்டுக் கால சரித்திரத்தில் நாம் இரண்டு முறை இப்படிப்பட்ட வறட்சி நிலையையும், அதன் காரணமாக உணவுப் பொருள் தட்டுப்பாட்டையும் சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

[திரு. க. இராமமூர்த்தி] [1979 ஏப்ரல் 21

தமிழகத்தில் பருவ மழை சீராக இருந்ததில்லை. அதைப்பற்றிய ஆய்வு செய்தபோது தொடர்ந்து 5, 6 ஆண்டுக்குப் பிறகு கண்டிப்பாக வறட்சி ஏற்படுவது என்பது தவிர்க்கமுடியாத நிலையாக இருந்து வருவதை நாம் உணர முடியும். எனவே, தற்போது ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் கடந்த 1½ ஆண்டுக்காலத்தில் நாட்டில் வறட்சியற்ற சூழ்நிலை இருக்கிறது, உணவுப் பொருள்களில் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கிறது என்று மகிழ்ச்சியடைந்துவிட முடியாது. தொடர்ந்து பல காலத்திற்கு ஆட்சியிலிருக்க வேண்டுமென்று விரும்பினால், முன்னெச்சரிக்கையாக சில நடவடிக்கைகளை அரசு எடுக்க முன்வர வேண்டும்.

1967 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேறு ஒரு முறையைக் கையாண்டார்கள். 1966 ஆம் ஆண்டுக்கு முன்பு உணவுப் பொருள்களின் விலை உயர்ந்து மக்கள் அரிசி வாங்க முடியாத நிலையில் இருந்தார்கள் என்பதை உணர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர், தாங்கள் பதவிக்கு வருவதற்கு முன்பே படியரிசித் திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தை அறிவித்தபோது, அதிலிருக்கிற வேறு விளைவுகளைவிட உணவுப் பொருள் மிகக் குறைவான விலையில் கிடைக்கும் என்று மக்கள் நம்பினார்கள். ஆனால் அரசாங்கத்தால் உயர்ந்துவிட்ட விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே மக்கள் அரிசி வாங்க முடியாது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபோது, அதில் அரசியல் லாபம் பெற வேண்டும் என்ற அடிப்படையில் அன்றையதினம் படியரிசித் திட்டம் அறிவிக்கப்பட்டது என்பது நமக்குத் தெரியும்.

ஆட்சிப் பொறுப்புக்குத் திடீரென்று வந்துவிட்ட நிலையில் படியரிசித் திட்டத்தை செயல்படுத்துகிற கட்டாயமும், அவசியமும் ஏற்பட்டபோது, படியரிசித் திட்டத்தை சில நகரங்களில் மட்டும் அமுல்படுத்தினார்கள். அதற்காக 'சப்சிடி' (உதவித்தொகை) கொடுப்பது என்ற முறையில் அரசாங்கப் பணம் பயன்படுத்தப்பட்டது என்பதும், அதன் விளைவாக தமிழ் நாட்டில் மிக அத்தியாவசியமாக நடைபெறவேண்டிய பல்வேறு முற்போக்கான திட்டங்களைச் செயல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது என்பதும் நமக்குத் தெரியும். அந்த அளவுக்கு அரசாங்கப் பணம் அந்தத் திட்டத்தின் பேரால் வீணாக்கப்பட்டது. இதனை நான் நினைவுபடுத்துவதற்குக் காரணம், அந்த நிலைமையைப்பற்றி எங்களுடைய பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்கள் உயிரோடு இருக்கும்போது, குறிப்பாக 1967, 1968-ல் இதைப்பற்றிப் பேசினோம். அப்போது அவர் ஒன்றைக் குறிப்பிட்டார். 1956-லேயே நாம் இந்தப் பிரச்சினையைச் சரியான முறையில் அணுகத்



1979 ஏப்ரல் 21] [திரு. க. இராமமூர்த்தி]

தவறிவிட்டோம். 1956-க்கு முன்னர் இந்தச் சங்கடம் ஏற்பட்டபோது, அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டோம். ஆனால் துரதிருஷ்டவசமாக அந்தச் சங்கட நிலைமை நீக்கப்பட்ட உடனே அப்போது ஆரம்பித்த நியாய விலைக் கடைகளை—ரேஷன் கடைகளை—ரத்து செய்துவிட்டோம். அதையே நாம் நிரந்தரமாக வைத்திருந்தால், மற்ற உணவுப் பொருள்கள் கிடைக்காதபோது, இந்த நியாய விலைக் கடைகள் மூலமாக அவைகளைச் சரியான விலைக்கு விநியோகம் செய்திருக்கலாம். அப்படிச் செய்யாமல், தேவை முடிந்தவுடனே அந்த நியாய விலைக் கடைகளையெல்லாம் மூடிவிட்ட காரணத்தால், அதன் பலனை நாம் இப்போது அனுபவிக்கிறோம் என்றார்கள். மக்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் எந்தவகையான உணவுப் பொருள்களையும் நியாய விலைக் கடைகளில் சென்று வாங்க முடியும் என்ற அளவுக்கு நிரந்தரமான ஒரு அமைப்பை துவக்கத்திலிருந்தே கொண்டு வந்திருந்தால், மிகச் சுலபமாக இந்தப் பிரச்சினையைத் தற்போது தீர்த்திருக்க முடியும் என்றார்கள். இப்படி பற்றாக்குறை, தட்டுப்பாடு ஏற்படுகிறபோது, பிரச்சினையைத் தாற்காலிகமாகத் தீர்க்க நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டோமேயொழிய, நிரந்தரமாக அந்தப் பிரச்சினையைத் தடுக்க தேவையான முயற்சிகளை மேற்கொள்வதில்லை. தட்டுப்பாடு முடிந்தவுடனே பிரச்சினையை நாம் மறந்துவிடுகிறோம். இதன் காரணமாகத் தேவைப்படும்போது ஒரு அனுபவம் மிகுந்த (மெஷினரி) அமைப்பு இல்லாமல் போய்விடுகிறது.

இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இவர்களுக்குச் சம்பளம் எவ்வளவு கொடுப்பது, அதிகாரிகளால் இதைச் செய்ய முடியுமா என்றெல்லாம் கேட்டார்கள். கடந்த 30 ஆண்டுகளில் நாம் இதைச் செய்யத் தவறிவிட்டோம். செய்ய வேண்டிய அவசியமிருந்தும், நாம் அதைச் செய்யத் தவறிவிட்டோம் என்பதுதான் உண்மை.

(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் தலைமை)

(பிற்பகல் 6-00)

ஆனால் இன்றைக்குக் கொஞ்சம் தேவைக்கு அதிகமாக (சர்ப்ளஸாக) இருக்கிற நேரத்தில் அரசாங்கம் கண்டிப்பாக அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நியாய விலைக் கடைகளை நிரந்தரப் படுத்துவதற்கான ஒரு நல்ல சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்,

கொள்கை விளக்கக் குறிப்பிலே, நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறதென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நெல்லுக்குக் குறைந்த விலையைக் கொடுப்பதற்கான நியாயம் இருக்கிறதா என்றால், இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். நெல்லை உற்பத்தி செய்வதற்கு அதிகமான செலவுகள் ஆகின்றன என்றும், உலகச் சந்தையிலே அரிசியின் விலை மிக அதிகமாக இருக்கிறதென்பதையும் கொள்கை விளக்கக் குறிப்பின் நான்காவது பக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அரிசியை அதிகமான அளவிலே உற்பத்தி செய்கிறோம். இங்கே உபரியாக இருந்து கொண்டிருக்கிறது. உள்நாட்டிலே அரிசிக்கு வேண்டிய விலை கிடைக்கவில்லையென்றால், ஏன் ஏற்றுமதி செய்யாமல் இருக்கிறார்கள்? நல்ல விலை கிடைக்கவில்லையென்று சொல்லும்போது, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு ஏன் தயங்குகிறது? இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி, நெல்லின் கொள்முதல் விலையை மிகக் கணிசமாக உயர்த்த வேண்டுமென்றும், உடனடியாக இது சாத்தியமில்லையென்றால், கோதுமையின் கொள்முதல் விலைக்கு ஒத்த அளவிலாவது நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்றும் தமிழக அரசு வலியுறுத்தியிருக்கிறது. அரசே இந்த நியாயத்தை உணர்ந்திருக்கிறது. வெளி நாடுகளில் அரிசியின் விலை உயர்ந்திருக்கிற நேரத்தில் இங்கேயிருக்கிற விவசாயி மட்டும் நெல்லைக் குறைந்த விலையில் விற்றுவிட்டு நஷ்டப்பட்டு அவதிப்படுவது எப்படி நியாயமாக இருக்குமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

"உற்பத்தியாளருக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்பதில் அரசுக்கு நாட்டம் ஒருபுறமிருக்க, நுகர்வோருக்கு நியாயமான விலையில் அரிசியைப் பொது விநியோக முறையின் கீழ் வழங்குவதும் அரசின் தலையாய பொறுப்புகளில் ஒன்றாகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்குதான் குழப்பமே உருவாகிறது. ஒரு புறம் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டியது அவசியமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கிற ஆட்சி, அதே நேரத்தில் நுகர்வோருக்கும் பொது விநியோகத்தின்கீழ் நியாயமான விலையில் அரிசியை வழங்குவது தலையாய பொறுப்புகளில் ஒன்றாகுமென்றும் சொல்லுகிறார்கள். பொது விநியோக முறையின்கீழ் அரிசியை வழங்குவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. அது முக்கியமான தேவை. அதை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். 'நியாயமான விலை' என்று சொல்லுகிறபோது, விவசாயிகள் கேட்பது 'அநியாயமான' விலை என்று அரசு தீர்மானிக்கிறதா?



மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தப் பொருளிலே எழுதப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது. உற்பத்தி செய்பவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். அதே நேரத்தில் வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கும் பாதகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உற்பத்திச் செலவு கூடுதலாக ஆகியிருப்பதால், விவசாயிகள் கூடுதலான விலையைக் கேட்கிறார்கள். இதை இந்த அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நெல் உற்பத்தி செய்வதற்காக 117 ரூபாய் ஆகிறதென்பதால், நெல்லுக்கு விலை 130 ரூபாய் என்று கொடுக்க வேண்டுமென்று டில்லியிலே நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள்கூட எடுத்துப் பேசியிருக்கிறார்கள். அதைப் போலவே தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி, அதிலே தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். நெல்லுக்கு அதிகமான விலை கொடுக்கிற நிலை ஏற்பட்டால், அதே நேரத்தில் நுகர்வோருக்கும் விலை ஏறிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத் தொடர்ந்து படித்திருந்தால் புரிந்திருக்கும். கூடுதல் விலை கொடுத்து வாங்குவதால் எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்பதையும், அதற்காக எவ்வளவு மானியம் தேவைப்படுகிறது என்பதையும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறோம். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், உற்பத்தி செய்கிறவர்கள் அநியாய விலைக்குக் கொடுக்கிறார்கள் என்று நாங்கள் சொல்லவில்லையென்பது தெரியும். அப்படிச் சொல்லவும் மாட்டோம். ஏனென்றால் நாங்களும் அவர்களோடு சேர்ந்து 130 ரூபாயைக் கொடுக்க வேண்டுமென்று இன்னும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அதைப்பற்றி நேற்று சட்டமன்றத்திலே கூட பேசியிருக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதிலேதான் குழப்பம் இருக்கிறது. நியாயமான விலை நெல்லுக்குத் தேவையென்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளுகிறது. அதை அமைச்சர் அவர்களும் அதிகமாக வலியுறுத்துகிறார்கள். வலியுறுத்துவது மட்டும் நியாயத்தைக் கொடுக்கவில்லையே. அறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, நெல்லின் விலையைக் குறைக்கவில்லை. அதற்குப் பதிலாக, தன்னுடைய வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டுமென்று, சப்சிடி (மான்யம்) கொடுத்து வாங்கி அரிசியை விநியோகித்தார்கள். அதுதான் படியரிசித் திட்டம். ஆனால் இன்றைக்கு வாங்கிச் சாப்பிடுபவர்களுக்குச் சங்கடங்கள் இல்லை. விலை அதிகமாக இருக்கிறது என்று எதிர்ப்பு அவர்களிடமிருந்து வரவில்லை. நெல்லை

விற்பவர்கள் நியாயமான விலைக்கு விற்க முடியவில்லையென்று மிகப் பெரிய கூக்குரலை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நியாயத்தை அரசும் உணர்ந்து மத்திய அரசிடம் போராடிக் கொண்டிருக்கிறது. வாங்குபவர் களுக்கு நியாயம் செய்ததைப் போல இன்றைக்கு உற்பத்தி செய்பவர்களுக்கு ஏன் உதவி செய்யவில்லையென்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு சிறு தொழில்களுக்கு (இன்செண்டிவ்) ஊக்கத்தொகை கொடுக்கவில்லையா? கரும்பு உற்பத்தியாகிய இடங்களில் ஆரம்ப காலங்களில் கரும்பு உற்பத்தி செய்யப்படுவதற்கு இன்செண்டிவ் கொடுக்கப்படவில்லையா? அதைப் போலவே நெல் உற்பத்தி செய்பவர்களுக்கும் இன்செண்டிவ் கொடுங்கள் என்று இந்த அரசுக்குச் சொல்லிக்கொள்ளுகிறேன். ஏக்கருக்கு 20 ரூபாய் என்று இன்செண்டிவ் கொடுத்தால், அதில் என்ன தவறு? ஆகவே இதற்காகக் கொஞ்சம் அதிகமான தொகையை ஒதுக்கி, விவசாயிகளின் நஷ்டத்தை ஈடு செய்ய அரசு முன்வர வேண்டும். இன்றைக்கு அரசு நல்ல நிலையிலே இருக்கிறது. அரசிடம் நிறைய நெல் கையிருப்பு இருக்கிறது. நிறைய பணமும் இருக்கிறது. மத்திய அரசிலிருந்து பல்வேறு திட்டங்களுக்காக நிறைய நிதியும் வந்து கொண்டிருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வாங்கிச் சாப்பிடுபவர்களுக்குச் சலுகை அளித்துக் காப்பாற்ற வேண்டிய நிலை வந்ததைப் போல, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உற்பத்தி செய்பவர்களுக்கு உதவ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு இன்றைக்கு உற்பத்தி செய்பவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்காக சில கோடி ரூபாய்களை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதனால் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்புகிற சில பிரச்சினைகளுக்கு அப்போதைக் கப்போது பதில் அளித்துவிட்டால், பிறகு என்னுடைய பதில் அளிப்பது சுலபமாக இருக்குமென்பதற்காகச் சொல்லுகிறேன். குறுக்கீடு செய்ய வேண்டு மென்ற நோக்கத்தில் அல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் படியரிசித் திட்டத்தைக் கொண்டு வந்த நேரத்தில் வாங்கிச் சாப்பிடுபவர்களுக்காக அரசாங்கப் பணத்திலே ஒரு பகுதியை ஒதுக்கினார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியுமென்று நம்புகிறேன். அன்றைய தினம் படியரிசித் திட்டம் தமிழ் நாடு முழுவதும் அமுல்படுத்தப்படவில்லை. சென்னை, கோவை போன்ற நகரங்களில் மட்டும் அமுல்படுத்தப்பட்டது. அதற்கு அன்றைய தினம் ஏற்பட்ட செலவு ஏறக்குறைய 8 கோடி ரூபாய் என்று நினைக்கிறேன். சரியான புள்ளிவிவரம் என்னிடத்தில் இல்லை.



மாண்புமிகு உறுப்பினர் உற்பத்தி செய்கிறவர்களுக்கு இன்செண்டிவ் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எவ்வளவு இன்செண்டிவ் என்று அவர்கள் சொல்லவில்லையென்று நினைக்கிறேன். இப்பொழுது 85 ரூபாய்க்குக் கொள்முதல் செய்து சில்லறையில் ரூ. 1.60 விற்கும்போதே நஷ்டம் ஏற்படுகிறது. இதைவிட அதிகமான தொகைக்கு, சுமார் 115 ரூபாய்க்குக் கொள்முதல் செய்ய அரசு முடிவெடுத்து கொள்முதல் செய்தால், அதிக நஷ்டம் ஏற்படும். ஒரு இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்து விற்பதில் நமக்கு ஏற்படக்கூடிய இழப்பு 7 கோடி ரூபாய். பொது விநியோக முறையில் வழங்க ஆண்டொன்றுக்கு நமக்குத் தேவைப்படுகிற அரிசியின் அளவு, 6 இலட்சம் டன்கள். ஒரு இலட்சம் டன்னுக்கு இழப்பு 7 கோடி என்றால், 6 இலட்சம் டன்களுக்கு 42 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது ஆண்டுதோறும். ஆகவே இது முடியுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

மத்திய அரசிலே இந்திரா காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது, நெல்லுக்கு 74 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு மேலும் போனசாக 15 ரூபாயைக் கொடுத்து 89 ரூபாய்க்கு வாங்கினார்கள். 74 ரூபாய் என்று நிர்ணயித்திருந்தும், திராவிட முன்னேற்றக் கழகம் 89 ரூபாய்க்கு வாங்கிய நேரத்தில், அப்படி வாங்கக்கூடாதென்று மத்திய அரசு எந்தவிதமான தடையுத்தரவையும் மாநில அரசுக்கு விதிக்கவில்லை. ஆனால் இன்றையதினம் ரூ. 85 என்று நிர்ணயம்

(பிற்பகல் 6-10)

செய்திருக்கிறார்கள். முன்னாலே ரூ. 77 என்று நிர்ணயம் செய்திருந்தார்கள். அப்போதும்கூட ரூபாய் 77-க்குக் கூடுதலாக ரூபாய் 85-க்குக் கொடுத்து வாங்கினாலும்கூட மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது. மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. பரவாயில்லை, மாநில அரசே செய்தால் என்ன என்று சொன்னாலும்கூட, நம்மிடம் 42 கோடி ரூபாய் இல்லை. நான் சட்டமன்றப் பேரவையிலே கூட சொன்னேன். இந்தக் கொள்முதல் செய்வதற்கு, ரூ. 60 கோடி முதல் ரூ. 100 கோடி வரை தேவைப்படுகிறது அதையும் ரிசர்வ் வங்கிதான் தருகிறது. இதில் ரூ. 85-க்குப் பதிலாக ரூ. 85.01-க்கு நெல்லை எடுக்கலாம் என்று முடிவு செய்து நாம் வாங்கினாலும் கூட, ரிசர்வ் வங்கி தருகின்ற கடனை உடனே நிறுத்திவிடும். அப்படி நிறுத்தும்போது, ரூ. 100 கோடிக்கு நாம் எங்கே போவது? அந்த நிலைமை ஏற்படும்போது, நாம் கொள்முதலே செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிடும். அப்போது தேவையான கையிருப்பை நம்மாலே வைத்துக்கொள்ள முடியாது.

**திரு. க. இராமமூர்த்தி:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு

பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற நிலையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உரையிலிருந்து நான் புரிந்து கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, சில இடங்களிலே படியரிசித் திட்டத்தை தொடக்கத்திலே கொண்டுவந்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றைக்கு துணை சபாநாயகராக இருந்தார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இது படிப்படியாக மாநிலம் முழுவதும் விஸ்தரிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அது மட்டுமல்ல, நஷ்டம் வருகிறது என்று பலமுறை சுட்டிக் காட்டியபோதுகூட, அவர்கள் "நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைகளுக்கு அதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்' என்று அறிவித்தார்கள். ஆண்டுக்கு ஏறத்தாழ ரூபாய் 8 கோடிக்கு நஷ்டம் வந்தது. இன்றைக்கு நான் சொல்ல விரும்புவது, அவர்கள் படிப்படியாக மாநிலம் முழுவதும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு முன்னதாகவே தீர்வு கண்டாகிவிட்டது. இந்தப் பிரச்சினையில் தீர்வு இயற்கையாகவே ஏற்பட்டு, இன்றைக்கு நிரந்தரமாக விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற அந்த நஷ்டத்தை ஈடு செய்யப்போவதில்லை என்ற நிலை இருக்கிறது. இன்றைக்கு இரண்டு ஆண்டுக்காலமாக, அந்தப் பிரச்சினை தொடர்ந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து ஏற்பட்ட நஷ்டங்கள் காரணத்தினாலே, புயல், வெள்ளம், வறட்சி போன்ற சங்கடங்களின் காரணத்தினாலே அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டுவிட்டது. அந்த சங்கடத்திலே அவர்கள் இருப்பதால் தான் உங்களிடம் வருகிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு தலைவர் அவர்களே குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்வது போல, இது விவசாயிகளுக்கு 2, 3 ஆண்டுகாலம் மாத்திரம் இருக்கப்போகிற பிரச்சினை அல்ல. இன்றைக்கு நெல்லுக்கும் குறைந்த விலை கொடுக்கின்ற காரணம் புயல், வெள்ளம் வந்த காரணத்தினாலே அல்ல. உற்பத்திச் செலவு விவசாயிகளுக்கு அதிகமாக ஆகிக்கொண்டிருக்கிறது. இந்த உற்பத்திச் செலவு எப்போதும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கும். தொடர்ந்து இன்னும் 2 ஆண்டுகாலத்திற்குத் தான் இந்த உற்பத்திச் செலவும் இருக்கும், இந்த 2 ஆண்டுகாலத்திற்கு, செலவழித்தால் போதும் என்ற நிலைமையும் அரசுக்கு இல்லை. உற்பத்திச் செலவு கூடாமல் இருந்தால்கூட ரூ. 117 தான் உற்பத்திச் செலவுக்கு ஒரு குவிண்டாலுக்கு என்று நிர்ணயித்துக் கொடுத்திருக்கும். அதுவும் இது எத்தனை ஆண்டுகாலம் இருக்கும் என்று சொல்ல முடியாது.





**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அங்கேயேதான் வருகிறார்கள். எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்று சொல்ல முடியாது என்றும், சில ஆண்டுகள் அதிகமாக இருக்கலாம், அல்லது சில ஆண்டுகள் குறைவாக இருக்கலாம் என்றும் சொல்கிறார்கள். உணவுப் பொருள்களின் விலைவாசியைப் பொறுத்தவரையில், நிரந்தரமாக இப்போதிருக்கும் நிலையிலேயே நிற்கும் என்பதல்ல. ஒருவேளை வரும். நெல் விலை சொச்சமாக விற்கும். விலை பொருள்கள் விலை அதிகமாக விற்கும். அப்போது விவசாயிக்கு மிச்சமாகலாம். உணவுப் பொருள்களின் விலை அதிகரித்திருக்கின்றபோதுதான் விவசாயி மிச்சமாக்க முடியுமே தவிர, குறைந்த விலையிலே விற்கும்போது விவசாயி மிச்சமாக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** உணவுப் பொருள்களின் விற்பனை விலை கூடும் என்கின்ற நிலை ஏற்பட்டால், மாண்புமிகு அங்கத்தினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன், வாங்கிச் சாப்பிடுகின்றவர்களுக்கும் விலை கூடும்.

**திரு. க. இராமமூர்த்தி :** நம்முடைய எகானமியிலேயே (Economy) வாங்குபவர்களை வைத்துக்கொண்டு திட்டமிடுகின்ற காரணத்தினாலே வருகின்ற கோளாறு இது. எங்களுடைய மறைந்த தலைவர், ஏற்கெனவே சட்டமன்றத்திலே எங்களுடைய (எதிர்க்) கட்சித் தலைவராக இருந்த திரு. கருத்திருமன் அவர்கள் அடிக்கடி அதைப்பற்றிச் சொல்வார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேகூட, திராவிட முன்னேற்றக் கழகத்திடம் வலியுறுத்தினார்கள். இன்றைக்கும் நான் சொல்ல விரும்புவது, பல திட்டங்களை நிறைவேற்றும்போது சில கோடி ரூபாயை நாம் தெரிந்தே இழந்துகொண்டிருக்கிறோம். இந்த ஆட்சி கப்பல் வாங்கியது. எத்தனையோ கோடி ரூபாய் நஷ்டம் என்று தெரியும். ஆண்டுக்காண்டு நஷ்டம் அடைந்து கொண்டிருக்கிறோம். மீண்டும் கப்பல் வாங்கப்போகிறோம். தெரிந்தே வாங்கப்போகிறோம். நஷ்டம் மீண்டும் வரும் என்று தெரிந்தே வாங்கிக் கொண்டிருக்கிறோம். இப்படிப் பல தொழில்களிலே பல கோடி ரூபாய் நஷ்டம் என்று தெரிந்தேகூட வாங்கிக்கொண்டிருக்கிறோம். தெரிந்தே சிலவற்றிலே மான்யம் கொடுக்கிறோம். பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் 50 கிலோ அரிசி என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களே இந்த மன்றத்திலே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். யார் யாருக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டுமோ அதைவிட பல மடங்கு யார் யாருக்குக் கொடுக்கத் தேவையில்லையோ அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று அறிவித்தார்களே. அந்த அடிப்படையிலே செயல்பட வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டன. அதைக்கூட இந்த அரசு தாங்கிக்கொண்டது.

அதுபோல சிலகாலமாவது பல கோடி ரூபாய் விவசாயிகளுக்காக நஷ்டப் வந்தாலும், அதை இந்த அரசு ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் எனக்கு ஒன்றைப் புரிந்துகொள்ள முடிகிறது. அமைச்சர் அவர்கள் சொல்கின்ற ஒரு பிரச்சினை அரசாக முன்வந்து கூடுதல் விலையாக ஒரு ரூபாய்கூட கொடுக்க முடியாது என்பது. நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த காலத்திலே சட்டமன்றப் பேரவையிலே எதிர் கட்சித் தலைவராக திரு. கருத்திருமன் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் அடிக்கடி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மட்டுமல்ல, மத்தியத்திலே இருந்த எங்களுடைய சொந்த காங்கிரஸ் ஆட்சியோடுகூட சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். விவசாயிகளுக்கு இந்த விலை கட்டுப்படியாகாது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருப்பதாலே, விவசாயிகளுக்கு இந்த விலை போதும் என்று சொல்ல நாங்கள் தயாராக இல்லை, இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று அன்றும் சட்டமன்றத்திலே நாங்கள் சொல்லிக்கொண்டிருந்தோம். நெருக்கடி காலத்தில் எங்களுடைய கட்சி ஆட்சி மத்தியில் நடக்கிறது என்பதால், எதிராகப் பேசலாமா என்றுகூட பல பேர்கள் தயக்கம் காட்டினார்கள். அப்போதுகூட அந்த நெல்லுக்கு இந்த மாநிலத்திலே அதிக விலை கொடுக்க வேண்டும் என்று கடைசிவரை வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருந்தோம். மாற்றுக்கட்சிக்காரர்கள் அதற்குக் குரல் கொடுத்தபோது அதற்குத் துணையாக நின்றோம். எங்கள் கட்சி ஆட்சி மத்தியிலே நடந்து கொண்டிருக்கிறது, அது எந்தக் கொள்கையை வகுக்கின்றதோ அதையே நாங்கள் சொல்வது, அவர்கள் சொல்வதுதான் நியாயம் என்றெல்லாம் கூறி நாங்கள் குறுக்கே நிற்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் நெல்லுக்கு ஒரு பைசா கூட உங்களாலே அதிகமாகக் கொடுக்க முடியவில்லை என்றால், விவசாயம் செய்ய உற்சாகம் கொடுப்பதற்கு, அதற்காக மான்யம் கொடுங்கள், விவசாயிகளை ஊக்கப்படுத்துங்கள். அப்படிச் செய்து இந்த நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்தப் பிரச்சினையிலே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையிலே, அதனுடைய இயங்குகின்ற முறையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளினாலே இந்த மாநிலத்திலே ஒரு நேரத்திலே எண்ணெய் விலையை மிகப் பெரிய அளவிலே கட்டுப்படுத்த முடிந்தது. அவர்கள் எடுத்த முயற்சியினாலே நெய் விலையைக் கட்டுப்படுத்த முடிந்தது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், அது தனியாக இயங்குகின்ற மெஷினரி. அது முறையாக மீண்டும் வலிமையோடு இயங்குவதற்கான வாய்ப்புக்களைத் தந்தாக வேண்டும். (பேர் பிரைஸ் ஷாப்ஸ்) நியாய விலைக் கடைகள் நடத்துகின்ற வாய்ப்புகள்



இருக்கின்றன. அவைகளை நடத்துவதற்கு வசதிவாய்ப்புகளைச் செய்து தந்தாக வேண்டும். எஸ்ஸென்சியல் கம்மோடிட்டீஸ் இருக்கின்றன. பல நேரங்களில் இவற்றின் விலை கூடுகிறது. கிடைப்பதும் இல்லை. விலை கூடுகின்ற நேரத்திலே. அதை ரேஷன் ஷாப்புகள் மூலமாக, நியாய விலைக் கடைகள் மூலமாக, கூட்டுறவுத் துறைக் கடைகள் மூலமாக விற்க வேண்டும். என்று வலியுறுத்துகிறேன். அந்தக் கடைகளைப்பற்றி நினைப்பது பொது மக்கள் மத்தியிலே அப்போதுதான் இருக்கிறது. பொறுப்பிலே இருக்கின்ற நாமும் அப்போதுதான் கவனம் செலுத்துகிறோம். அந்த நிலைமைகள்தான் இருக்கின்றன. நம்முடைய மாநிலம் தொடர்ந்து பருவ நிலைகளால் ஒவ்வொரு ஆண்டும் பாதிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அதனால் நாம் அவதிக்கு ஆளாகின்றோம். அதற்கு நிரந்தரமான, பெர்மனன்ட் நிவாரணம் இருந்தாக வேண்டும். பர்மனென்ட் (டிஸ்டிரிபியூஷன்) பங்கீட்டு முறை இருக்க வேண்டும். இதைச் செய்வதற்கான சூழ்நிலை இப்போது உருவாகியிருக்கிறது. இந்த நிலையை உபயோகித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைச் செய்வதற்கு அரசு முன்வர வேண்டும்.

சர்க்கரை கையிருப்பு பலமாக இருக்கிறது. விலையும் ரூ. 2.10, ரூ. 2.30 என்ற நிலைதான் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இது எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்று தெரியவில்லை. ஆனால் இந்த டிஸ்ட்ரிபியூசனை இன்றைக்கே அரசுத் துறையிலே கொண்டுவந்துவிட வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். நியாய விலைக் கடைகளைப் பொறுத்த வரையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கக் குறிப்பிலே பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அவருக்கு என்ன கோபம் என்று எனக்குத் தெரிய வில்லை. தென் ஆற்காடு மாவட்டத்தில் அங்கே திறக்கப்படவேண்டிய கடைகள் 1,993. திறக்கப்பட்ட கடைகள் அந்த மாவட்டத்திலேயே தான் 'ஜீரோ'. அதாவது ஒன்றுகூட இல்லை.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, ரெவின்யூ கிராமம் வாரியாகத் திறக்கப்படவேண்டிய கடைகள் அந்தக் கணக்கிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே கோதுமை, சர்க்கரை, அரிசி போன்ற பண்டங்களை மாத்திரம் விநியோகம் செய்வதற்காக இயங்குகின்ற அவை நியாய விலைக் கடைகளாக இருந்தாலும் சரி, கூட்டுறவுத் துறைக் கடைகளாக இருந்தாலும் சரி, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனாக இருந்தாலும் சரி, இன்றைக்கு அவைகளை பலவகைப் பொருள்கள் விநியோகம் செய்கின்ற கடைகளாக மாற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. கூடுதலாக ஒவ்வொரு

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1979 ஏப்ரல் 21

கிராமத்திற்கும் ஒரு கடை என்கின்ற அடிப்படையிலேதான் இன்னும் அவைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-20)

திரு. க. இராமமூர்த்தி : என்னால் உணவுத் துறை அமைச்சரவர்கள்மீது கோபப்பட முடியவில்லை. அவர்மீது குற்றம் சாட்ட முடியவில்லை. எங்கள் மாவட்டத்திலுள்ள கவர்ன்மெண்ட் மெஷினரி உலகத்திற்கே அடுக்காது. அமைச்சரவர்கள், ரெவின்யூ கிராமங்களுக்கு நியாய விலைக் கடைகள் என்று தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்திலே கூட்டுறவுத் துறைக் கடைகள், ரெவின்யூ கிராமங்கள் அடிப்படையில் அமையவில்லை. 'வையபிள் யூனிட்ஸ்' என்ற அளவிற்குத்தான் அமைந்து, நடந்துகொண்டிருக்கின்றன. வடஆலப்பாக்கம் என்ற ஊரில் ஒரு சொசைட்டி இருந்துகொண்டிருக்கிறது. அதிலே எனக்கு நேரடித் தொடர்பு உண்டு. அந்த சொசைட்டி, 7, 8 கிராமங் களுக்குச் சேர்ந்திருக்கிறது. தென் ஆற்காடு முழுவதும் அப்படித்தான் இருக்கிறது. உணவு அமைச்சரவர்கள் கடைகளைத் திறப்பதற்கான முயற்சிகளைச் செய்யலாம். ஆனால் செய்ய வேண்டியது மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பு. என்னுடைய மாவட்டத்தில், ஒவ்வொரு துறையிலும், மாற்றுத் தலைவரவர்கள் பார்த்திருப்பார்களென்று கருதுகிறேன். தலைமையிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறவர்கள் செய்யும் அநியாயங் களுக்கு அளவே கிடையாது. மருத்துவத் துறையானாலும், கல்வித் துறை யானாலும், எந்தத் துறையானாலும், காவல் துறையானாலும் அப்படித்தான் இருக்கிறது. இந்தத் துறையைப் பொறுத்தவரையில், ரெவின்யூ துறை பொறுப்பாகிவிடுகிறது. இந்த நிலையிலே, முடிந்த அளவிற்கு அங்குள்ள கிராமங்களுக்கும் வாய்ப்புகள், வசதிகள் கிடைப்பதற்கு அமைச்சரவர்கள் துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து ரெவின்யூ புள்ளி விவரத்தை நம்ப வேண்டாம். அந்த அடிப்படையிலேதான் அணுக வேண்டுமென்றாலும், குறைகள் சொல்லும்போது, அதன் அடிப்படையிலே மீண்டும் விவரங்களைக் கேளுங்கள். அவர்கள் மேலும் நல்ல முறையில் செயல்பட வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சரவர்களின் பாதிப் பதில் இதில் வந்து விட்டது. அடுத்தபடியாக, சேமிப்புக் கிடங்குகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனை நிரந்தர இயந்திரமாக



1979 ஏப்ரல் 21] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

யாற்றிவிட்டோம். பற்றாக்குறை அல்லது கிடைக்காத நேரங்களில் கட்டாயப் படுத்தியும், சட்டத்தின் மூலமாகவும் நெல்லை வாங்குகிறோம். மற்ற காலங்களில் நிரந்தரமாக வாங்கும் முறையை வைத்திருக்கிறோம். அதற்கான சேமிப்புக் கிடங்குகளை சொந்தமாகக் கட்டியாக வேண்டும். வாடகை சேமிப்புக் கிடங்குகளுக்குப் போக வேண்டிய அவசியமில்லை. கடந்த காலத்தில், பல இடங்களில், மைதானத்தில் அடுக்கி வைத்திருந்தோம். அதிலே கொஞ்சம் வீணாகிவிட்டாலும் பரவாயில்லை. அதற்காகும் செலவு, மற்றவை வேறு இருக்கிறது. நிரந்தரமாகக் கட்டிடங்கள் கட்ட வாய்ப்பு இருக்கும் போது, அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், விநியோக முறையை நேரடியாகச் செயல் படுத்தும் துறையாகும். எனவே எப்போதும் அந்தத் துறை நிரந்தரமாக, தயாராக இருக்க வேண்டும். எனவே நிரந்தரமான கிடங்குகளைக் கட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். அப்படிச் செய்வதன் மூலமாக வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் சலுகைகளைச் செய்ய முடியும், அவர்களுக்கு ஆதரவாக இருக்க முடியுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே, சிமெண்ட்டைப் பொறுத்தவரையிலும், ஆளுங் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் சொன்னதைவிட, என்னால் அதிகமாகச் சொல்ல முடியாது. எவ்வளவு கோளாறுகள் அந்த விநியோகத்தில் இருக்கின்றன என்பதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. மின்சாரத்திற்காக நாம் மேலும் சிமெண்ட்டை மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கப் போகிறோம். நமக்கு மின்சாரம் தேவை, அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கப் போகிறோம். அதற்கு ஈடாக சிமெண்ட் கொடுக்கப் போகிறோம். இப்போதே ரேஷன், கள்ள மார்க்கெட், தவறான அதிகார துஷ்பிரயோகம் எல்லாம் இருக்கின்றன என்று ஆளுங்கட்சித் தரப்பிலிருந்தே சொல்லப்படுகிறது. இவ்வளவிற்கும் பிறகு, நம்முடைய 'கோட்டா' குறையும்போது, அது எங்கே போய் முடியுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே இது குறித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்திலும், பல நகரங்களிலும் மண்ணெண்ணெய்க்கு மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்ததைப்பற்றிச் சொன்னார்கள். கண்டிப்பாக முடிவிற்குக் கொண்டுவர அக்கறை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த நிலைகள் இன்னும்

வரவில்லை. இப்போது, மண்ணெண்ணெய் பற்றாக்குறையோடு, கேஸ் (Gas) பற்றாக்குறையும் சேர்ந்திருக்கிறது. 21 நாட்களுக்கு ஒரு முறை கேஸ் (Gas) கொடுப்பதாகச் சொன்னார்கள். இப்போது 30 நாட்களுக்கு ஒரு முறைதான் கொடுப்பதென்று மாற்றியிருக்கிறார்கள். இன்னும் இந்த இடைவெளியை அதிகரிக்கும் நிலை இருக்கிறது. இதனால் நடுத்தர வர்க்கம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அலுவலகங்களுக்குச் சென்று சம்பாதிக்கக் கூடியவர்கள் வெகுவாக அவதிப்படுகிறார்கள். எனவே மண்ணெண்ணெய் விநியோக முறையிலே விரைவிலே மாற்றத்தைக் கொண்டு வந்தாக வேண்டும். கேஸ் (Gas) -ஐப் பொறுத்தவரையில், அது சுலபமாகக் கிடைக்க, நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லி, அமைச்சரவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகளைப் பாராட்டி, ஆதரித்து, அமைகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, உணவு நிலை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பைப் பொறுத்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்குக் கொடுத்த வாய்ப்பிற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் . . .

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். ஆளுங் கட்சியில், அமைச்சர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். உறுப்பினர்கள் ஒருவர்கூட இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சர்களை, ஆளுங் கட்சி உறுப்பினர்கள் நிராதரவாக விடக்கூடாதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : உறுப்பினர்கள் துணையோடு அமைச்சர்கள் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. எந்த நேரத்திலும் எதையும் சமாளிக்கத் தயாராக இருக்கிறோம். அந்தத் தைரியம் உறுப்பினர்களுக்கு இருப்பதால்தான், அவர்கள் வெளியே சென்றிருக்கிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : அப்படி என்ன சமாளிக்க வேண்டிய நிலை வரப்போகிறது ?

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தமிழகத்தில் உணவு நிலையில் திருப்தியான நிலை இருக்கிறதென்பதை ஒப்புக்கொள்ள முடியாமல் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கொடுக்கப்பட்ட குறிப்பிலே 32 பக்கங்கள் இருக்கின்றன. அதிலே 14, 15 பக்கங்கள், நெல்லுக்கான கொள்முதல் விலையை மத்திய அரசு உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்ற கருத்தை, எப்படி எப்படியெல்லாம் மாநில அரசு வற்புறுத்தியிருக்கிறது என்பதை விளக்க எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி பல துறைகளிலே, பல கோணங்களிலே வற்புறுத்தியும், அவர்கள் அசைந்து





கொடுத்ததாகத் தெரியவில்லை. அவர்கள், தங்களுடைய நிலையை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. குறைந்தபட்சம் கோதுமைக்குள்ள விலையை நெல்லுக்குக் கொடுங்கள் என்று முடிவாகக் கூறினார்கள். தென் மாநிலங்களைச் சேர்ந்த நான்கு முதலமைச்சர்களும் ஒன்றுகூடி, தீர்மானம் போட்டு அனுப்பியும்கூட, அதற்குக்கூட ஒப்புக்கொள்ளாமல், கோதுமைக்கு 112.50-ம், நெல்லுக்கு 85 ரூபாய் என்றும் மாறுபட்ட, பாகுபட்ட விலையை அவர்கள் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். நெல்லுக்கு விலையை மாற்ற மாட்டோமென்று அவர்கள் பிடிவாதமாகச் சொல்லுவது, உண்மையிலேயே கண்டிக்கப்பட வேண்டிய போக்கு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசைக் கண்டித்து, நம்முடைய மாநில சட்ட சபையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அதன்மூலம் மத்திய அரசுக்கு நம்முடைய எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பில் எனக்கு வியப்பு அளிக்கக்கூடிய ஒரு வாசகம் என்னவென்றால், " அனைத்திந்திய அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் விலைகளுக்குக் கூடுதலாக மாநில அரசுகள் கொள்முதல் விலைகளை வழங்கக் கூடாதென்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது " என்பதுதான். மாநில அரசு நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, தன்னுடைய கையிலேயிருந்து கொடுக்கக் கூடாது என்று சொல்லுவது மிகவும் தவறுதலான போக்கு. இங்கே படி அரிசித் திட்டம் பற்றிச் சொன்னார்கள். அந்த சமயத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் ஒரு கருத்தைச் சொன்னேன். படி அரிசித் திட்டத்தை நீங்கள் அமுல்படுத்துங்கள், கேரளாவிலே அதற்கு 18 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கிறார்கள் என்ற கருத்தை நான் அவர்களிடத்திலே படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்பு சொன்னேன். அவர்கள் அந்தக் காலத்தில் 18 கோடி ரூபாய் அளவிற்கு விலைவாசியைக் குறைத்து— அதை மத்திய அரசு கொடுத்ததோ அல்லது மாநில அரசு கொடுத்ததோ— தள்ளுபடி செய்து, குறைந்த விலையிலே நெல்லையும், அரிசியையும் விநியோகித்துக் கொண்டிருந்தார்கள். அதை அண்ணா அவர்களிடம் சொன்னேன். அதை அடிப்படையாக வைத்துத்தான் படி அரிசித் திட்டத்தை இரண்டு நகரங்களில் அமுல்படுத்தினார்களென்பது எனக்குத் தெரியும். முன்பு ஒரு முறை அதைப்பற்றித் தெரிவித்தேன். அதில் விளக்கமாகப் போக

(பிற்பகல் 6-30)

விரும்பவில்லை. ஆக நாம் சப்சிடைஸ் செய்து நம்முடைய மாநில நிதியிலிருந்து நஷ்ட ஈடு கொடுப்போம் என்றாலும் கூட கொடுக்கக்கூடாது என்று அவர்கள் சொல்வது ரொம்பவும் கண்டிக்கப்பட வேண்டிய போக்கு

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1979 ஏப்ரல் 21

என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு பலதரப்பட்ட விலைவாசிகள் எல்லாம் வெகுவாகக் குறைந்திருக்கின்றன என்று சொல்லப் பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு இருந்ததை விட அரிசியை பொறுத்தவரை, விலை உயரவில்லை. சென்ற வருஷம் இருந்த அளவுக்குத்தான் இந்த ஆண்டும் இருக்கிறது. அப்படி அலசி அலசிப் பார்க்கின்ற நேரத்தில் எந்தப் பொருளின் விலை குறைந்திருக்கிறது என்றால், தெள்ளத் தெளிவாக சர்க்கரையின் விலை மட்டும் குறைந்திருக்கிறது என்பதை நாம் காண முடிகிறது. லெவி சர்க்கரை கிலோ ரூபாய் 2.30-க்கு விற்கப்படுகிறது. வெளியே சர்க்கரை சென்ற ஆண்டு 4 ரூபாய்க்கு மேல் கிலோவுக்கு விற்கப் பட்டது. இந்த ஆண்டு வெளியே சர்க்கரை லெவியை எடுத்த பிறகு, கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2.30, ரூ. 2.20, இன்னும் சில இடங்களில் ரூ. 2.10-க்குக் கூட கிடைக்கிறது. நிச்சயமாக சர்க்கரையின் விலை குறைந்திருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

எண்ணெயின் விலையைப் பொறுத்தவரை, 50 காசு உயர்ந்தும் மறுபடியும் குறைந்தும் கிட்டத்தட்ட சென்ற ஆண்டு விலையை ஒத்துத் தான் இருக்கிறது. மொத்தத்தில் பார்க்கப்போனால், விலைகள் உயர்ந்து தான் இருக்கின்றன.

அடுத்தபடியாக, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஓட்டல்களில் உள்ள உணவுப் பண்டங்களின் விலைகளைப் பற்றிச் சொன்னார்கள். ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலை அதிகமாக ஏறியிருக்கிறது. இப்பொழுது எல்லாம் பூரிக் கிழங்கு 35 காசுக்குக் கிடையாது. எந்தக் கடையிலும் 35 காசுக்கு பூரிக் கிழக்கு கொடுப்பதில்லை. 50 காசு, 60 காசு என்று அதனுடைய விலையை கடைகளில் எல்லாம் உயர்த்தி விட்டார்கள். விலைவாசியைக் குறைப்பதற்கு என்று கொண்டு வரப்பட்ட கட்டுப்பாடு ஏன் விலக்கப்பட்டது? அரசாங்கம் அந்தக் கட்டுப்பாட்டை விலக்கியதா? இல்லை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மீறி ஓட்டல்காரர்கள் அவர்களாக விலைகளை உயர்த்தியிருக்கிறார்களா? குறிப்பாக நான் ஒன்றை இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஆட்டுக்கறி, கோழிக்கறி இவையெல்லாம் சென்ற ஆண்டு இருந்த விலையை விட இரட்டிப்பு மடங்காக ஆகியிருக்கிறது. கிலோ 10 ரூபாய், 12 ரூபாய் என்று இருந்த ஆட்டுக் கறி இன்றைக்கு கிலோ 18 ரூபாய், 20 ரூபாய் என்று உயர்ந்திருக்கிறது. ஓட்டல்களில் எந்த அளவுக்கு விலைகள் உயர்ந்திருக்கின்றன என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல ஆசைப்படுகிறேன். புகாரி ஓட்டலுக்கு ஒரு நாள் காலை நாஸ்தாவுக்குப் போனேன். இரண்டு பரோட்டாவும், ஒரு குருமாவும், 1 டீயும் சாப்பிட்டேன்.



1979 ஏப்ரல் 21]

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** நாஸ்தா என்றால் என்ன என்று எனக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கமளிப் பார்களா?

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** நாஸ்தா என்றால் 'பிரேக்பாஸ்ட்', காலை சிற்றுண்டி என்று பொருள்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** மாண்புமிகு உறுப்பினர் காலையிலேயே கறி சாப்பிடுவாரா?

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** தினமும் காலையில் கறி சாப்பிடுகிற பழக்கம் என்னிடம் இல்லை. எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் இருக்கும்போது கூட ஒவ்வொரு நாளும் அசைவ உணவை வரவழைத்துச் சாப்பிடுவது தான் என் வழக்கம். ஒரு நாள் அந்த வழி போனேன். போன இடத்தில் புகாரி ஓட்டலுக்குப் போய் 2 பரோட்டா, ஸ்டேஸ் மற்றும் ஒரு டீயும் சாப்பிட்டேன். சாப்பிட்ட பிறகு ரூபாய் 9.30-க்கு பில் போட்டார்கள். நான் உடனே ஆச்சரியப்பட்டேன். ஐந்து அல்லது ஆறு ரூபாய் ஆகும் என்று தான் நான் நினைத்தேன். நான் அவர்களைக் காரணம் கேட்டேன். உடனே அவர்கள் இப்பொழுதெல்லாம் கறி விலை ஏறிவிட்டது, பாய், அதனால் விலையை உயர்த்தி விட்டோம் என்று சொன்னார்கள். உணவுப் பண்டங் களுக்கு விலையைப் பொறுத்தவரை, ஒரு கட்டுப்பாடு இருந்தது. அந்த நிலை இப்பொழுது ஏன் எடுக்கப்பட்டு விட்டது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆக கறி விலை இன்றையதினம் சென்ற ஆண்டு இருந்ததை விட 2 மடங்கு உயர்ந்து விட்டது. மீண்டும் இந்த விலைக் கட்டுப்பாட்டைக் கொண்டு வருவது அவசியம் என என் மனதிலே படுவதால், அரசாங்கம் இதைக் கொண்டு வருவதுபற்றிச் சிந்திக்க வேண்டு மென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மண்ணெண்ணெயின் விலை மத்திய அரசு போட்ட வரியின் காரணமாக 10 காசு லிட்டர் ஒன்றுக்கு உயர்ந்து விட்டது. ஆனாலும் வினியோகத்தில் சில குறைகள் இருப்பதாக நான் அறிகிறேன். இருந்தாலும் ஒரு விஷயத்தில் நான் தமிழக அரசைப் பாராட்டுகிறேன். முன்பெல்லாம் மண்ணெண்ணெய் விநியோகத்தின் பொறுப்பை மத்திய அரசு ஏஜென்சிகளுக்குக் கொடுத்து வந்தது. அந்த நிலையைப் போக்கி மாநில அரசு தன் கையில் இந்த மண்ணெண்ணெய் விநியோகிக்கின்ற பொறுப்பினைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சில நாட்களுக்கு முன்பு அறிவித்தார்கள் என்று நான் நினைக்கிறேன். அதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். சிமின்டையும் மண்ணெண்ணெயையும்

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1979 ஏப்ரல் 21

பொறுத்தவரை, அவற்றை விநியோகிக்கின்ற பொறுப்பினை ஏஜென்சிகளிடம் விடுவதை விட அரசாங்கம் தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டால், மிகவும் நல்லது. காரணம் இந்த இரண்டு பொருள்களும் அடிக்கடி தட்டுப்பாடு ஏற்படக் கூடிய பொருள்கள். அடிக்கடி பற்றாக்குறை, டிமான்ட் ஏற்படக் கூடிய நிலை இவைகளுக்கு இருக்கின்ற காரணத்தால், அரசாங்கம் தன் பொறுப்பில் இவற்றை ஏற்று விநியோகித்து தட்டுப்பாடற்ற நிலையை உண்டாக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்தியா பூராவும் எல்லா கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட வேண்டுமென்கின்ற கொள்கை, திட்டம் மத்திய அரசால் கொண்டு வரப்பட்டது. அது மத்திய அரசு சொல்லியிருக்கக் கூடிய கருத்து. நம்முடைய மாநிலத்தில் சுமார் 16 ஆயிரம் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் இன்னும் 10 ஆயிரம் இடங்களில் திறக்கப்பட இருப்பதாகவும் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். இதில் வியப்பு என்னவென்றால் மது விலக்குக் கொள்கையை மத்திய அரசு அமுல் படுத்துங்கள் என்று சொல்லிய பிறகு, அமுல்படுத்திய மாநிலங்களுக்கு அதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு நஷ்ட ஈடு கொடுக்கிறார்கள். ஆனால், அவர்கள் சொல்லியதற்கு முன்பே அமுல்படுத்திக்கொண்டிருக்கக்கூடிய மாநிலங்களுக்கு அந்த நஷ்ட ஈட்டைக் கொடுக்க மறுக்கிறார்கள். நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரை, ஒவ்வொரு கிராமத்திலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட வேண்டுமென்கிற கருத்து மத்திய அரசால் சொல்லப்பட்டிருக்கக் கூடிய கருத்து. அதன் அடிப்படையில் தமிழகத்தில் 16 ஆயிரம் கடைகள் திறக்கப்பட இருக்கின்றன. மது விலக்குக் கொள்கையை அமுல்படுத்துகின்ற மாநிலங்களுக்கு எப்படி அவர்கள் சொல்லிய பிறகு அமுல்படுத்தியதன் காரணமாக நஷ்ட ஈடு வழங்கப்படுகிறதோ அதே போல நியாய விலைக் கடைகளை அமுல்படுத்துகிறபோது, மத்திய அரசு சொல்லிய கருத்து என்ற வகையில் மத்திய அரசு நமக்கு நஷ்ட ஈடு கொடுப்பது தான் நியாயம். அவர்கள் கொடுக்க முடியாது என்று சொல்வது நியாயமற்ற போக்கு. அந்தப் போக்கை மாநில சட்டமன்றத்தின் மூலம் கண்டித்து தீர்மானம் நிறைவேற்ற இந்த அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : பல உறுப்பினர்கள் இன்னும் பேச இருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1979 ஏப்ரல் 21]

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** நியாய விலைக் கடைகளில் கோதுமை, அரிசி, பருப்பு போன்ற தானிய வகைகள் விற்கப்படுகின்றன. நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படுகின்ற அரிசியின் விலை வெளியில் இருக்கின்ற அரிசியின் விலையை விட கம்மி. அதேபோல கோதுமையைப் பொறுத்த வரையிலும், வெளியில் விற்கப்படுகின்ற விலையை விட கம்மி. ஆனாலும், நியாய விலைக் கடைகளுக்கு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு முன்னால் விநியோகிக்கப்பட்ட அரிசி, கோதுமை எல்லாம் விற்கப்படாமல் தேங்கியிருக்கின்றன என்பதை நான் அறிவேன். வெளியில் விலை கூடுதலாக இருந்தாலும் கூட, நியாய விலைக் கடைகளில் பொருள்கள் நகரமாட்டேன் என்கிறது. அரிசி, கோதுமை எல்லாம் தேங்கி நியாய விலைக் கடைகளில் கிடக்கின்றன. தள்ளப்பட்ட சரக்கை, சாப்பிட முடியாத சரக்கை நியாய விலைக் கடைகளில் வைத்திருக்கிறார்கள். நியாயமுள்ள சரக்காயிருந்தால், அது அநியாயமாகப் போகாது. நியாய விலைக் கடைகளில் தரமான அரிசி, கோதுமை போன்றவை வருவதில்லை. வெறுப்பு கொள்ளக்கூடிய சரக்கு தான் விற்பனைக்கு வருகிறது. அந்தமாதிரி உள்ள நிலைகளையெல்லாம் தவிர்த்து, அரசு பரிசிலித்து, நல்ல சரக்குகளாக நியாயமான போக்கிலே விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கடைசியாக, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் நமக்கு எவ்வளவு பருப்பு வகைகள் தேவைப்படுகிறதோ அதில் பத்தில் ஒரு பங்கு தான் உற்பத்தி செய்யப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால், அதில் ஒரு பங்கு கூட வராது. ஆக நமக்குத் தேவைப்படுகின்ற பத்தில் 9 பகுதி பருப்பை நாம் வேறு மாநிலங்களிலிருந்துதான் இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம். இந்த நிலை மாறுகின்ற வகையில் நம் மாநிலத்தில் பருப்பு வகைகள் உற்பத்தியில் வேகத்தைக் காட்ட வேண்டும். பருப்பு வகைகளின் விளைச்சலை கூடுதலாக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடைசியாக, விறகின் விலை எக்கச்சக்கமாக ஏறியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். நான் சொன்ன அனைத்துக் கருத்துக் களையும் அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று சொல்லி, விறகு விலையையும் குறைக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாற்றுத் தலைவரவர்களே, இந்த அவையிலே தரப்பட்டிருக்கின்றதாகிய தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பிலே என்னுடைய கட்சியின் சார்பில் எனது ஒருசில கருத்துக்களை நான் எடுத்து வைப்பதிலே மகிழ்ச்சியடைகின்றேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 21

நமது மாநிலத்தில் உணவு நிலைமை எந்த நிலையில் இருக்கிறது என்பதை இந்தக் கொள்கைக் குறிப்பிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரிசி விலை மிகப் பெருமளவுக்குக் குறைந்திருக்கிறது, சாதாரண விலையிலேயே அரிசி கிடைக்கிறது என்பதை அவர்கள் குறிப்பின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது உண்மை. ஆனால் இப்பொழுது நாடு முழுவதும் உள்ள மக்கள் வெறும் அரிசி உணவை மட்டும் சாப்பிடக் கூடாது என்று மருத்துவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வெறும் அரிசி உணவை மட்டும் சாப்பிடுவதால் தான், சக்தியின்மை ஏற்படுகிறது என்பதால், 'மிக்ஸட் டையட்' சாப்பிட வேண்டுமென்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். அரிசி உணவுடன் காய்கறி போன்ற மற்ற உணவுப் பொருள்கள் அதிகமாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர்களாக இருந்தாலும் சரி அல்லது மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அவர்களும் அரிசி உணவுடன் மற்ற உணவுப் பொருள்களையும் அதிகமாகச் சேர்த்துக்கொண்டு சாப்பிட வேண்டுமென்று தான் பிரச்சாரம் செய்கிறோம். ஆனால் காய்கறி போன்ற மற்ற உணவுப் பொருள்கள் சாப்பிட வேண்டுமென்று சொல்கின்ற அதே நேரத்தில் அவற்றின் உற்பத்தி எந்த அளவு இருக்கிறது, அவற்றின் விலைவாசி எப்படி இருக்கிறது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். அரிசி உணவு என்று சொன்னால், முன்னால் 80 அல்லது 90 சதவிகிதம் வெறும் அரிசி உணவைச் சாப்பிட்டு வந்தார்கள். இப்பொழுது 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் 40 சதவிகிதம் அரிசி உணவையும், 60 சதவிகிதம் மற்ற உணவுப் பொருள்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதேபோல 35 வயதுக்கு உட்பட்டவர்கள் 60 சதவிகிதம் அரிசி உணவையும் 40 சதவிகிதம் காய்கறி போன்ற மற்ற உணவுப் பொருள்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதே போல மற்றவர்கள் 50 சதவிகிதம் அரிசி உணவையும், 50 சதவிகிதம் அரிசி அல்லாத உணவுப் பொருள்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அரிசி உணவுடன் காய்கறி, பருப்பு போன்ற சத்துள்ள உணவுப் பொருள்களையும் சேர்த்துக்கொண்டால் தான், சக்தியின்மையைப் போக்க முடியும், சிறந்தது என்று மருத்துவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-40)

ஆகவே, உணவு நிலைமை நன்றாக இருக்கிறது என்று சொன்னால், மொத்தமாக கட்டுப்படியான விலைக்கு, குறைந்த விலைக்கு தாராளமாகக் கிடைத்தால்தான் உணவு நிலைமை திருப்தியாக இருக்கிறது என்று சொல்ல முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கும் கொள்கைக்



1979 ஏப்ரல் 21] [திரு. ம. சங்கரலிங்கம்]

குறிப்பில் அரிசி விலைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அரிசியின் விலை குறைந்திருக்கிறது. ஒப்புக்கொள்கிறோம். ஆனால், அரிசியை, நெல்லை உற்பத்தி செய்கின்றவர்களுடைய நிலை எந்த அளவுக்கு பரிதாபகரமான நிலைக்கு உள்ளாகியிருக்கிறது என்று பார்க்க வேண்டும். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக 5 ஏக்கர் நெல் விவசாயம் செய்யும் ஒரு விவசாயி ஆண்டு ஒன்றுக்கு குறைந்த அளவு 5 ஆயிரம் ரூபாய் நஷ்டப்படுகிறார். இதே நிலை நீடித்தால், அவன் ஓட்டாண்டியாகி, பிச்சைக்காரனாகும் சூழ்நிலை தான் ஏற்படும் என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நாங்கள் எல்லாம் இந்தப் பிரச்சினையின் காரண-காரியங்களை விளக்கி உற்பத்திச் செலவு இவ்வளவு ஆகிறது, மாடு வாங்க வேண்டும் என்று சொன்னால் அதனுடைய விலை இவ்வளவு இருக்கிறது, உழவு மாட்டைப் பராமரிக்க வேண்டும் என்று சொன்னால், அவற்றுக்கான தீவன பொருட்களின் விலை இவ்வளவு, உழவுக்குத் தேவைப்படும் பொருட்களின் விலை இவ்வளவு, ஆகவே, உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது, ஆனால் நெல்லுக்குக் கொடுக்கும் விலை குறைவு என்று சொல்கிறோம். ஆனால், நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம், உற்பத்திச் செலவு மிஞ்சிவிட்டது, உற்பத்திக்கேற்ற விலை நெல்லுக்கு இல்லை, விலையை உயர்த்திக் கொடுப்பதற்கு இந்த அரசு விழைகிறது என்று சொல்வதோடு இந்த அரசு அமைதி காண்கிறது. இதிலே வருந்தத்தக்க நிலைமை என்னவென்று சொன்னால், இப்படி உண்மை நிலைமையை உணர்ந்த பிறகு—அரசு உணராமல் இருந்தால் உணர்த்துவது எங்களது கடமை—உணர்ந்த பிறகு எங்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை என்று சொல்வது மிகத் தவறு. இந்தப் பிரச்சினை இன்று நேற்று அல்ல, கடந்த 10 ஆண்டுகளாக இருந்து கொண்டே இருக்கிறது. நெல்லுக்கு நியாயமான விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்யவில்லை, நிர்ணயம் செய்ய மத்திய அரசு தவறியிருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதற்கு முன்னால் எங்கள் அரசு இருந்தபோது, மத்திய அரசு நெல்லுக்கான விலையை நிர்ணயம் செய்யத் தவறியபோது, இந்த மாநிலத்தில் எங்களுடைய அரசு நெல் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு அவர்கள் தருகின்ற நெல்லை வாங்குவதற்கு தனியாக ஒரு அமைப்பு முறையை வைத்து அறுவடை காலங்களில், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் குறுவை அறுவடை காலங்களில், நெல் கொள்முதல் செய்வதற்கான அமைப்பு முறையை ஏற்படுத்தி நெல்லைக் கொள்முதல் செய்தோம். அப்படி கொள்முதல் செய்கிறபோது, ஒரு குவிண்டால் நெல்லுக்கு 10 ரூபாய் போனஸ், 5 ரூபாய் வண்டிக்கு வாடகை என்று வைத்து 15 ரூபாய் ஒரு குவிண்டாலுக்குக்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 21

(பிற்பகல் 6-50)

கூட்டிக்கொடுத்தோம். நெல்லுக்கு நியாயமான விலை இல்லை என்பதைத் தெரிந்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு பதில் சொல்லும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இருக்கிற மத்திய அரசு விலையைக் கூட்டிக்கொடுக்கவில்லை என்று சொல்கிறார். அதையும் மீறி நாங்கள் கூடுதல் விலை கொடுத்தால், மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருக்கக்கூடிய ரிசர்வ் வங்கியிலேயிருந்து பணம் பெற முடியாது; முன்பு 15 ரூபாய் கூட்டிக் கொடுத்தபோது, அப்போது இருந்த மத்திய அரசு அதைத் தடுக்கவில்லை என்றும், இப்போது இருக்கிற மத்திய அரசு அப்படி கொடுக்கக்கூடாது என்று சொல்கிறது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாம் அப்படி கூட்டிக்கொடுத்தால், மத்திய அரசின் உதவி நிறுத்தப்பட வேண்டிய சூழ்நிலை வந்துவிடும் என்றும் சொன்னார்கள். இப்போது இருக்கும் மத்திய அரசு குறிப்பாக விவசாயிகளைப் பெரும் இன்னலுக்கு ஆளாக்கியிருக்கிறது என்று குற்றம் சாட்டி இந்த மாநில அரசு தெளிவாகச் சொல்லவில்லை. இதற்கான ஒரு போராட்டத்தையே இந்த அமைச்சரவை தொடங்க வேண்டும். அந்தப் போராட்டத்திலே கலந்து கொள்ள எங்களை அழைத்தால், நாங்களும் வருகிறோம். அல்லது இந்த அமைச்சரவையே போராடி வெற்றிபெற்றால், நாங்கள் உங்களைப் பாராட்டுகிறோம். அப்படி போராடிப் பெறுவதற்குத் தயாராக வேண்டுமே தவிர, இந்த அறிக்கை தருவதன் மூலம், இந்த அரசு இந்தப் பிரச்சினையில் அமைதி காண்பது இந்த நாட்டின் அமைதியைக் குலைப்பதாகும் என்று நான் குற்றம்சாட்டுகிறேன். விவசாயிகளிடத்தில் ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு பரிதாப நிலை ஏற்பட்டிருக்கிறது. 'டெஸ்பரேட் ஸ்டேஜ்' என்று சொல்லும் நிலைக்கு அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். யாரும் அதை மறுக்க முடியாது. விவசாயிகளுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். எங்கள் ஊரில் ஒரு கோட்டை நெல் 75 ரூபாய்க்கு விற்கிறது. நான் கூட 25 கோட்டை நெல் கொடுக்கலாம் என்று சொல்லி காத்து இருந்து, போன் பண்ணி கேட்டால், ரைஸ் மில் வைத்திருக்கிறாரே அவர் என்ன சொல்கிறார் என்றால், 'இப்போது வேண்டாம், சரிப்பட்டு வராது, உங்களுக்கு பணத்திற்கு அவசரமாகத் தேவை இருந்தால் வாருங்கள், ஏதாவது தருகிறேன்' என்று சொல்லும் அவல நிலைதான் இருக்கிறது. களஞ்சியத்திலே நெல்லை வைத்துக் கொண்டு, பையனுக்கு பீஸ் கட்ட முடியாமல், விவசாயத்திற்கு மாடு வாங்க முடியாமல், அடுத்த போக விவசாயத்திற்கு வேண்டிய வேலைகளைக் கவனிக்க முடியாமல் இருக்கும் ஒரு நிலைக்கு விவசாயிகள் தள்ளப்



1979 ஏப்ரல் 21] [திரு. ம. சங்கரலிங்கம்]

பட்டிருக்கும்போது, வேறொருவரிடத்தில் இந்தப் பிரச்சினையைச் சொல்லி யிருக்கிறோம் என்று சொல்லி இந்த அரசு அமைதி காண முடியாது. அப்படி அமைதி காண்பது தவறு என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் எச்சரிக்கை செய்கிறேன். இந்த அரசு அமைதி கண்டுகொண்டிருக்கிறது. இந்த அரசு இப்படியே அமைதி கண்டுகொண்டு இருந்தால், இந்த நாட்டில் விவசாயிகள் மத்தியிலே ஒரு பெரிய பூகம்பம் ஏற்படும் என்று நான் எச்சரிக்கிறேன். இப்போது கேரளாவிலே 120 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால், அங்கே கொடுக்கவில்லை என்று நம்முடைய மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நான் அறிந்த அளவிலே சொல்கிறேன். எனக்கு 'ஆதன்டிக்'-ஆகத் தெரியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தான் அதிகாரபூர்வமாகச் சொல்ல வேண்டும். நான் அறிந்த அளவிலே சொல்கிறேன், அவர்கள் கொடுக்கிறார்கள். என்ன முறையில் அப்படி 120 ரூபாய் கொடுக்கிறார்கள் என்று தெரியாது. விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த நெருக்கடியிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும். விவசாயிகளைக் காப்பாற்றினால்தான் தொடர்ந்து உணவுப் பொருட்கள் நமக்கு வந்துகொண்டிருக்கும். இப்போது—நான் நினைக் கிறேன்—சித்திரை மாதம் 15 ஆம் நாள் விதைக்க வேண்டும். 'பொடி'-ப் பருவம் என்று சொல்வார்கள். இந்தப் பருவத்திலே தான் உழ ஆரம்பிக்க வேண்டும். ஆனால் விதைக்க வேண்டாம் என்று நான் வீட்டில் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன், 5 ஏக்கர், 10 ஏக்கர் வைத்திருந்தால், அதை சும்மா வைத்திருந்தால் கூட நஷ்டம் வராது. ஐந்து ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் போட்டு விவசாயம் செய்து, 5 ஆயிரம் ரூபாய் நஷ்டம் அடைவதை விட, அந்த ரூபாயை 'ஃபிக்சட் டெப்பாசிட்டில்' போட்டால் கூட, வட்டியாவது வரும். ஆகவே, விவசாயிகளைத் தொல்லைகளுக்கு ஆளாக்க வேண்டாம். இப்போது நிலங்கள் எல்லாம் தரிசாகக் கிடக்கின்றன. தமிழ் நாடு பூராவும் இதே நிலை நீடிக்குமானால், நெல் உற்பத்தி செய்யப்படுகின்ற நிலங்கள் எல்லாம் இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள்—விவசாயிகளுக்கிடையே இப்போது ஏற்பட்டு வருகின்ற உணர்வின் காரணமாக, பரிதாப நிலைமை காரணமாக—மற்ற எந்தவிதமான பயிர்களும் கூட போடப்படாமல் தரிசாகப் போடப்படும் நிலை வரத்தான் போகிறது. அந்த நிலை வரக் கூடாது. இப்போது 85 ரூபாய்க்குக் கொள்முதல் என்று நிர்ணயித்திருக் கிறார்கள். இந்த விலைக்காவது, ஒழுங்காக நெல்லை இந்த அரசு வாங்குகிறதா? அப்படி வாங்குவதற்கு ஏதாவது ஒரு அமைப்பு முறை இருக்கிறதா? இப்போது அரிசி தாராளமாகக் கிடைக்கிறது. இந்த அரசுக்கு இருக்கும் அமைதி என்னவென்றால் வாங்கிச் சாப்பிடுபவர்கள் இப்போது

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 21

சும்மா இருக்கிறார்கள். வாங்கிச் சாப்பிடுபவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். ஆனால் உற்பத்தி செய்கின்றவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். சுடுகாட்டு வைராக்கியம் என்று சொல்வார்களே அது போல விவசாயிகள் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். பிரசவ வைராக்கியம் என்று சொல்வார்களே, அதுபோல விவசாயிகள் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். நெல்லுக்கு நல்ல விலை இல்லை. மத்திய அரசானாலும், மாநில அரசானாலும் யாரும் இதற்கான முயற்சி எடுக்கவில்லை. விவசாயிகள் ரொம்ப தொல்லைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்நிலை இப்படியே போனால், இதற்குக் காரணம் யார் என்று கூட பார்க்கமாட்டார்கள், விவசாயிகள் இப்போது நல்லமுறையில் ஒரு அமைப்பு முறைக்கு வந்து, சங்கம் அமைத்து தங்களுடைய கோரிக்கைகளைச் சொல்லும் நிலை வந்த பிறகு, அவர்களுடைய கோரிக்கையை அலட்சியப்படுத்தினால் பெரிய ஆபத்தில் கொண்டுபோய்விடும் என்பதைத்தான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-50)

இதற்கு மாற்று வழி என்னவென்று அமைச்சர் அவர்களேகூட கேட்கலாம். மத்திய அரசு என்ன சொன்னாலும் ஒரு குவிண்ட்டால் நெல்லுக்கு ரூ. 15 நமது மாநில அரசு கூடுதலாகக் கொடுத்து அதன் விலையை ரூ. 100 என்று நிர்ணயித்து, கொள்முதல் செய்ய வேண்டும். இதற்கு அரசாங்கம் எந்தப் பெயரை வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும். போனஸ் என்று சொல்லட்டும் அல்லது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதைப்போல் இதை 'இன்சென்டிவ்' போனஸ் என்று சொல்லட்டும். இவைகள் சரியில்லை என்றால், இந்த அதிகப்படியான தொகையை உரத்திற்கு அளிக்கிற போனஸ் அல்லது பூச்சி மருந்துக்குக் கொடுக்கிற போனஸ் என்றாவது வைத்துக் கொள்ளலாம். அப்படி ரூ. 100 என்ற அளவிற்கு ஒரு குவிண்ட்டால் நெல்லின் விலையை நிர்ணயம் செய்து அதை எல்லைப் பகுதிகளில் வாங்குகிற அமைப்பு முறையை உடனடியாக அரசு ஏற்படுத்தாவிட்டால், இந்த அரசுக்கு ஒரு ஆபத்தான கட்டம் வந்து கொண்டிருக்கிறது என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன். அதனுடைய நியாயத்தை நான் இதற்கு மேலும் விளக்க வேண்டிய அவசியமில்லை என்பதால் இதோடு விட்டுவிடுகிறேன்.

அடுத்து, தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு மிக அதிகமாக இருக்கிறது. கடந்த மார்ச் 11 ஆம் தேதியிலிருந்து இந்த மாநிலம் முழுவதும் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு இருக்கிறது. ஏதோ சென்னை நகரத்தில் மட்டும்தான் இந்தத் தட்டுப்பாடு என்பதில்லை. மாநிலம் முழுவதும் பெருமளவுக்கு மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு



1979 ஏப்ரல் 21] [திரு. ம. சங்கரலிங்கம்]

இருக்கிறது. இதைப்பற்றி நான் அவையில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நாட்டில் ஒன்று கட்டுப்பாடான பொருளாதாரம் இருக்க வேண்டும் அல்லது 'ஃபிரி எகானமி' என்று சொல்லப்படுகிற அந்த முறையாவது இருக்க வேண்டும். நமது நாட்டைப் பொறுத்தவரையில், 'ஃபிரி எகானமி' முடியாது என்று வந்துவிட்ட பிறகு 'பப்ளிக் டிஸ்ட்ரிபியூஷன் சிஸ்டம்' தான் இருக்க வேண்டும். அதைத் தவிர வேறு வழியே இல்லை. எனவே இப்படிப் பட்ட நிலையில் இந்த சிஸ்டத்தை இடையிடையே தளர்த்துவது அல்லது விட்டுவிடுவது என்பது சரியல்ல. இதை நான் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இப்போது பெரும்பாலான குடும்பங்களில் ரேஷன் கார்டே கிடையாது. காரணம் அவர்களுக்குத் தேவையான அரிசி முழுவதும் வெளியே கிடைக்கிறது. அரசாங்கத்தில் கொடுக்கிற அரிசியைவிட தரமான அரிசி மலிவான விலையில் வெளியில் கிடைப்பதால் யாரும் ரேஷன் கடைக்குப் போய் தங்களுக்குத் தேவையான அரிசியை வாங்குவதில்லை. அதனால் ரேஷன் கார்டே இல்லாமல் போய்விட்டது. இந்த நிலைமைக்குப் பதில் அரசாங்கம் வேறு ஒரு முறையைக் கைக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாதமும் கார்டுகளைக் கொண்டு வந்து விட்டிலிருப்பவர்கள் எத்தனை பேர் என்று குடும்பத்தைச் சேர்ந்தவர் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று வைக்க வேண்டும். குடும்பத்தில் எத்தனை யூனிட் என்று சொல்லிப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று இருக்க வேண்டும். அப்படிச் செய்து, எந்த மாதத்தில் எந்தப் பொருள் பற்றாக்குறை ஏற்பட்டாலும், அந்தப் பொருளை பொது விநியோக முறையில் அரசாங்கம் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இப்படி ரேஷன் கார்டு முறையை நிரந்தரமாக வைத்திருக்க வேண்டும்.

அப்படிச் செய்யும்போதும், அரசாங்கமே அந்த ரேஷன் கடைகளை நடத்துவதைவிட கூட்டுறவுத் துறையை பெருமளவுக்கு இதில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசாங்கமே அதை நடத்துகிறபோது, அது அதிகார அமைப்பின்கீழ் வருகிறது. கடையில் இருக்கிற விற்பனை அதிகாரி ஒரு தவறு செய்தால், அவருக்கு மேலதிகாரியாக இருப்பவரும் உடந்தையாக இருந்தால், அவர் செய்கிற தவறைக் கண்டுபிடிக்க முடியாது. அதைப் போலவே அவருக்கு மேலே இருக்கிறவரும் உடந்தையாக இருந்தால், எந்தக் காலத்திலும் தவறுகளைக் கண்டுபிடிப்பது என்பது முடியாத காரியமாகி விடும். கூட்டுறவுத் துறையில் இப்படிச் செய்ய முடியாது. அங்கே தவறுகளே நடக்காது என்று நான் சொல்ல முன்வரவில்லை. ஆனால் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருப்பதால், இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுவது குறைவாக இருக்கும். அங்கே இருக்கிற அதிகாரிகளும்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 21

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் சேர்ந்து தவறு செய்யலாம். ஆனால் 10 பேர் சேர்ந்து தவறு செய்யும்போது, அது மிக விரைவாக வெளியே வந்துவிடும். ஒரே ஆள் செய்யும்போது, தவறு வெளிவருவது கொஞ்சம் சிரமம். பலர் சேர்ந்து தவறு செய்தால், ஒருவரைப்பற்றி ஒருவர் ஏதாவது ஒரு சண்டை வரும்போது சொல்லிவிடுவார். எனவே இப்படி பொது விநியோக முறைதான் நமக்கிருக்கிற ஒரே ஒரு வழி என்பதை நாம் உணர்ந்து அதையும் கூட்டுறவுத் துறையில் பெருமளவுக்குக் கொண்டுவர வேண்டும். இந்த வகையில் ஒரே அமைச்சர் உணவுத் துறையையும் கூட்டுறவுத் துறையையும் சேர்த்துப் பார்த்தால்கூட நல்லது என்றுதான் நான் நினைக்கிறேன்.

கேரளத்தில் இந்த முறை மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இந்தியா முழுவதுமாக ஒரே உணவு மண்டலமாக வந்தபோது, அரிசி போன்ற பொருள்கள் தாராளமாகக் கிடைக்க ஆரம்பித்தது. அதன் காரணமாக அதிகாரிகள் இனி கார்டு மூலம் விநியோகம் செய்வது தேவையில்லை என்று சொன்னார்கள். ஆனால் அப்போது பதவியிலிருந்த முதலமைச்சர் தெளிவாக ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "இப்போது அரிசி தாராளமாகக் கிடைக்கிறது என்ற காரணத்திற்காக கார்டு முறை தேவையில்லை என்று சொல்கிறீர்கள். அடுத்த ஆண்டும் இதே நிலைமைதான் இருக்கும் என்பது என்ன நிச்சயம்? ஒருவேளை நிலைமைகள் மாறுமானால், இந்த அமைப்பு முறையை அப்போது நாம் புதிதாக உருவாக்க முடியாது. எனவே தற்போது இருக்கும் அமைப்பு முறையைக் கலைக்கத் தேவையில்லை. அரிசி தாராளமாகக் கிடைத்தால் அரசாங்கத்திலும் தாராளமாக வாங்கி விநியோகம் செய்வோம். தாராளமாகக் கிடைக்கிறது என்ற காரணத்திற்காக தற்போதைய விநியோக முறை பாதிக்கப்படக் கூடாது" என்று குறிப்பிட்டார்கள். எனவே அதன் காரணமாகத்தான் பொது விநியோக முறை மிகச் சிறப்பாக இன்றைக்கு கேரளத்தில் அமுல்நடத்தப்படுகிறது. இன்றைக்கும் கேரளத்திற்குப் போய் திருவனந்தபுரம் செகரட்டேரியட்டில் ஒரு செயலாளரைப் பார்க்க வேண்டுமென்று போனால், 4 மணிக்குப் பிறகு அலுவலகத்தில் போய்க் கேட்டால் அவருடைய கிளார்க்கோ பியூனோ என்ன பதில் சொல்வார் என்றால், அதோ பாருங்கள் கியூவில் நின்று கொண்டிருக்கிறார் என்று. எனவே அப்படிப்பட்ட பொது விநியோக முறை அமைப்பை நிரந்தரமாக நமது மாநிலத்திலும் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1979 ஏப்ரல் 21] [திரு. ம. சங்கரலிங்கம்]

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு அந்த வகையில் மாநிலம் முழுவதுமாக இருக்கிறது. கிராமங்களிலும் கிடைக்கவில்லை. நகரங்களிலும் கிடைக்க வில்லை. விறகு கிடைக்காத காரணத்தால், பெரும் பகுதி மக்கள் மண்ணெண்ணெய்தான் சமையலுக்கு உபயோகிக்கிறார்கள். இப்போது மண்ணெண்ணெயும் கிடைக்கவில்லை. இனிமேல் மக்களுக்கு அரிசி கொடுத்தாலும், அதை பச்சையாகவே அரைத்து மாவாகச் சாப்பிடுகிற நிலைதான் ஏற்படும். எதையும் வேக வைத்துச் சாப்பிட முடியாது. குண்டு விறகு ரூ. 6 விற்றது இப்போது 16 ரூபாய் விற்கிறது. வாங்க முடியாத அளவுக்கு விறகு விலை ஏறிவிட்டது. ஏக தேசம், சந்தனக் கட்டை வாங்கி எரிப்பது போலாகிவிட்டது. அதன் காரணமாக மக்கள் மண்ணெண்ணெய்க்கு மாறினார்கள். இப்போது அதற்கும் தட்டுப்பாடு வந்துவிட்டது. நேற்று நான் சென்னையின் ஒரு பகுதிக்குச் சென்றிருந்தேன். மத்தியானம் 12½ மணி இருக்கும் 102 டிகிரி வெயில் காய்ந்து கொண்டிருந்தது. அப்போது பல இடங்களில் தாய்மார்களும், குழந்தைகளும் வயோதிகர்களும் கூட்டமாகக் கூடி நின்றிருந்தார்கள். அவர்கள் அத்தனை பேரும் மண்ணெண்ணெய்க்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள்தான் வேலைக்குப் போகாத ஆட்கள். அதனால் அவர்கள் மண்ணெண்ணெய்க்காக வரிசையாக நிற்கிற காட்சியைப் பார்க்க முடிந்தது. வெளியில் கிடைக்கிறது என்று சொல்லலாம். ஆனால் வெளியில் கொடுப்பவர்கள் 1 லிட்டர் என்று சொல்லி ¾ லிட்டர்தான் கொடுக்கிறார்களாம். இதெல்லாம் பொதுவிநியோக முறையில் பதிவான நோய்கள். டாக்டர்களுக்கு ஒரு நோய்க்கான சிம்ப்டங்கள், அறிகுறிகள் தெரியும். எனவே இதை அமுல்படுத்துகிற அதிகாரிகள் நல்ல முறையில் பொது விநியோகத்தைப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

விறகைப் பொறுத்தவரையில், பொதுமக்களுக்குக் கட்டுப்படியாகிற விலையில் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், அரசாங்கம்தான் விலையை ஏற்றுகிறது என்ற கருத்தைக் கொண்டவன். இதை என்னுடைய குற்றச்சாட்டாகவே பலமுறை இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். காட்டிலிருந்துதான் விறகு வருகிறது. இங்குமட்டும்தான் தனிப்பட்டவர்கள் 'சவுக்கு' மரத்தை வெட்டிக் கொண்டு வந்து விறகாக அதை விற்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில் வனத் துறையிலிருந்துதான் விறகு சப்ளையாகிறது. வனத் துறையில் ஏலம் போடுகிறார்கள். அதில் என்ன முறையைக் கையாளு கிறார்கள் என்றால், கடந்த 3 ஏலத்திற்கு கூப்பு என்ன விலைக்குப் போனது

என்று எடுத்து அதில் சராசரி என்னவென்று பார்த்து, அதற்கு மேல் 50 சதவிதம் உயர்த்தி ஏலம் விடுவது என்று வைத்திருக்கிறார்கள். இதற்குப் பதில் ஒரு டன் 100 ரூபாய் என்று வியாபாரிகளுக்குக் கொடுத்து அதை வெளியில் பொதுமக்களுக்கு ரூ. 110 என்ற அளவில் விற்கச் சொல்ல வேண்டும். அப்படிக் கொடுக்காதவர்களை வழக்குப் போட்டு சிறையில் தள்ள வேண்டும். அதைச் செய்யாமல் அரசாங்கம் ஒரு டன் விறகை ரூ. 220-க்கு விற்று வியாபாரிகளைப் பார்த்து 160 ரூபாய்க்கு விற்க வேண்டுமென்றால், யாரும் விற்கமாட்டார்கள்.

அடுத்து, டீசல் என்ணெய்க்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கஷ்டம் வேறு எல்லாவற்றையும்விட அதிகமான கஷ்டம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசும்போது, டீசல் எண்ணெயிலிருந்து விளக்கெரிக்க வேறு ஒரு எண்ணெய் தயாரித்திருப்பதாகச் சொன்னார்கள். அந்த பேக்டரியைப் போய்ப் பார்க்க வேண்டும். எங்கள் பகுதியில் இப்போது மழை பொழியும் என்று எதிர்பார்க்கிறோம். மே மாதத்திற்கு முன்னால் விதைப்பாகிவிடும். ஏப்ரல் கடைசியில் மழை வரும். எனவே நிலத்தை உழுது தயாராக வைக்கலாம் என்று டிராக்டருக்குச் சொல்லிவிட்டு வரலாம் என்று போயிருந்தேன். அந்த டிராக்டர்காரர் என்ன சொன்னார் என்றால் 'டீசல் வாங்கி வீட்டில் கொடுத்துவிட்டுப் போய் விடுங்கள், நான் வந்து உழுது விடுகிறேன்' என்றார். ஆனால் எங்கே போனாலும் டீசலும் கிடையாது, பெட்ரோலும் கிடையாது. டீசல் விலை உயர்வு காரணமாக லாரிகளில் கல் வருவதில்லை, கட்டிட வேலை பாதிக்கப் பட்டிருக்கிறது. இதன் தொடர்ச்சியாக தமிழ் நாட்டில் எவ்வளவோ வேலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமைகளை மாற்றி பஞ்சமில்லாமல் டீசல் என்ணெய் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகள் எவ்வளவு திறக்கப்பட்டிருக்கின்றன என்றும் இனிமேல் எவ்வளவு திறக்கப்பட இருக்கின்றன என்றும் புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் நடவடிக்கை 7 மணிக்கு மேலும் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 7-00)

**திரு. ம. சங்கரலிங்கம் :** எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அந்த நியாய விலைக் கடைகளை பொது விநியோகக் கடைகள்



என்று நிரந்தரமாக வைத்துக்கொள்ளலாம். அங்கு வெளிச் சந்தையில் உள்ளதைவிட குறைந்தவிலையில் பொருள்கள் கிடைக்க வேண்டும். விநியோக முறையில் இருக்கக் கூடிய தவறுகளின் காரணமாகவும், அந்தக் கடைகளை நிரந்தரமாக ஆக்காததாலும்தான் பொது விநியோக முறை வெற்றி பெறவில்லை. தட்டுப்பாடு இருக்கும்போது கடைகளை வைத்துக் கொண்டு, தட்டுப்பாடுகள் தீர்ந்து தாராளமாகப் பொருள்கள் கிடைக்கும் போது, இடையிடையே தளர்த்துவது என்ற முறையில் செயல்படக் கூடாது. நியாய விலைக் கடைகளில், தட்டுப்பாடுள்ள பொருள்களை விநியோகம் செய்ய வேண்டும். இப்போது அங்கு அரிசியை வழங்குகிறார்கள். அது தேவையில்லை, ஏனென்றால் அரிசி தாராளமாகக் கிடைக்கிறது. அங்கு சர்க்கரையை வழங்குகிறார்கள், அதுவும் தேவையில்லை, அது வெளிச் சந்தையில் தாராளமாகக் கிடைக்கிறது. ஆகவே மக்களுடைய தேவையை அறிந்து அதற்கேற்ப நியாய விலைக் கடைகளில் பொருள்களை விநியோகிக்க வேண்டும்.

பொருள்களுடைய விலை நல்ல முறையிலே குறைந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது சரியல்ல. சில பொருள்களின் விலை ஏறாமல் இருக்கிறது என்று சொன்னால் ஒத்துக்கொள்ளலாம். பல பொருள்களின் விலை ஏறியிருக்கிறது. பல பொருள்களின் விலை அளவு கடந்து ஏறியிருக்கிறது. இரண்டு மடங்குகூட ஏறியிருக்கிறது. புரோட்டீன் அதிகமாக உள்ள சத்துணவான மாமிசத்தின் விலை முன்பு கிலோ ஒன்றுக்கு 10 ரூபாயாக இருந்தது இப்போது 18 ரூபாயாக ஏறியிருக்கிறது. கொழுப்புச் சத்து மிகுந்த நெய்யின் விலை கிலோ ஒன்றுக்கு 22 ரூபாயிலிருந்து 28 ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. காய்கறிகளின் விலை கூட இரண்டு மடங்கு கூடியிருக்கிறது. சில காய்கறிகள் கிடைப்பதே இல்லை. பருப்புகளின் விலையும் அதே மாதிரிதான். 1977 ஆம் ஆண்டிலே பச்சைப் பருப்பின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 3.50 ஆக இருந்தது. இப்போது ரூ. 4.50-க்கு விற்கிறது. பருப்புகளிலே பல வகைகள் இருக்கின்றன. நான் சொல்லுவது ஒரே வகையான பருப்பு சென்ற ஆண்டு இருந்ததைவிட இந்த ஆண்டு அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது என்பதுதான். துவரம்பருப்பு கிலோ ஒன்றுக்கு ரூ. 4.20-ஆக இருந்து இன்றைக்கு ரூ. 5.20-க்கு விற்கப்படுகிறது. உளுந்து 3.50 ரூபாய்க்கு விற்கப்பட்டது இன்றைக்கு ரூ. 4.20-க்கு விற்கப் படுகிறது. என்னுடைய வீட்டுக்கு வாங்குகிற சாமான் பட்டியலில் இருந்து இவைகளைக் குறித்துக்கொண்டு வந்திருக்கிறேன். இந்த மாதிரி இன்றியமையாத பொருள்களின் விலை, சத்துணவின் விலை, புரோட்டீன்கள் நிறைந்த பொருள்களின் விலையெல்லாம் உயர்ந்திருக்கின்றன. ஆனால்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 21

சத்தில்லாத அரிசி உணவின் விலை மாத்திரம்தான் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அரிசி உற்பத்தியாளர்களும், தங்களுக்கு நல்ல விலை கிடைக்கவில்லையென்று அதையும் நிறுத்தப் போகிறோம் என்று சவால் விடுகிற நிலையையும் இன்றைக்குப் பார்க்கிறோம். இன்றைக்கு உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறதென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த அமைச்சரவையும் நினைக்குமானால், உண்மையிலேயே அவர்கள் தப்பாகக் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் சொல்லுகிறேன். உணவு நிலைமை திருப்திகரமாக இல்லையென்று அவர்கள் உணர்வார்களானால், அவர்கள் சரியான பாதைக்கு வந்துவிட்டார்கள் என்று கருதி, அதை மாற்ற அவர்கள் முயற்சி எடுக்கிறார்கள் என்று சொல்லலாம். இதுதான் என்னுடைய கருத்து.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மூன்றாவது சம்பளக் கமிஷன் பரிந்துரையின்படி சம்பள விகிதங்கள் அளிக்கப்படவில்லை. இதற்குக் காரணம், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடனில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இது உண்மைதான். அதிலே சந்தேகமில்லை. அரசாங்கமே கடனில்தானே நடத்துகிறது. பற்றாக்குறை பட்ஜெட்தானே போட்டிருக்கிறார்கள். கல்வித் துறைக்காக 220 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதுவும் கடன்தான். போலீஸ் துறைக்காக 38 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அது திரும்ப வரப்போவதில்லை. மின்சாரத் துறைக்கு 40 கோடி ரூபாய் மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் கடன்தான். ஆகவே பொது விநியோக முறையில் உள்ள சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கும் அரசாங்கம் நஷ்டஈடாகக் கொடுக்க வேண்டும். பொது விநியோக முறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் சரியாகச் சம்பளம் தரவில்லையென்றால், அவர்கள் களவுப் பணியில் இறங்கிவிடுவார்கள். ஆகவே அவர்களுக்கும் மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி சம்பள விகிதங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கொடுப்பதாக அரசு இருக்கிறது என்று நினைக்கிறேன். அதற்காக அரசை பாராட்டுகிறேன்.

இறுதியாக, நம் நாட்டில் உணவு நிலைமை நாம் எதிர்பார்க்கிற அளவுக்குத் திருப்தியாக இல்லையென்றும், உணவு உற்பத்தியாளர்களுக்கு நம்முடைய நாட்டிலே பாதுகாப்பு இல்லையென்றும், உணவு உற்பத்தி தடைபடுகிற நிலை இருக்கிறதென்றும், பொது விநியோக முறை பழுதடைந்திருக்கிறதென்றும், இன்றியமையாப் பொருள்களின் விலை ஏறியிருக்கிறதென்றும், கட்டுப்பாடின்றி கிடைக்கவில்லை என்றும் சொல்லிக்கொண்டு அமைகிறேன்.



1979 ஏப்ரல் 21]

டாக்டர் இரா. சனார்த்தனம்: துணைத் தலைவர் அவர்களே, போதுமான கையிருப்பைக் கருதி, விவசாயிகளின் நலன் காக்கிற இந்த அரசு, முப்பதாயிரம் டன் அரிசியை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு மத்திய அரசிடம் அனுமதி பெற்றிருப்பதாக அறிகிறேன். இந்தச் செய்தி உண்மையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் குறிப்பிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டிருக்கிற உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய பல்வேறு அரிய கருத்துக்களைச் சொன்னதற்காக முதலில் அவர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பேசிய உறுப்பினர்கள் எல்லோரும் அநேகமாக கொள்கை விளக்கக் குறிப்பின் மீது குற்றச்சாட்டுகளைச் சொல்லவில்லையென்று நான் கருதுகிறேன்.

நிர்வாகத்திலே சில தவறுகள் இருக்கின்றன, நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை, மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்ற சில குற்றச்சாட்டுக்களை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு மாத்திரம் நான் விளக்கம் அளித்துவிட்டால், என்னுடைய கடமையை போதுமான அளவிற்குச் சரியாகச் செய்ததாக மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையுண்டு.

இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறதென்பதை கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருப்பதை இந்த அவையில் மீண்டும் வலியுறுத்துகிறேன். எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிற காரணத்தாலோ என்னவோ, எதை எதிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறதென்று சொல்வார்களேயானால் தவறான பாதைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லி, அதற்கான ஒரு சில காரணங்களையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். "விறகு விலை ஏறியிருக்கிறது, மாமிச விலை ஏறியிருக்கிறது, நெய்யின் விலை ஏறியிருக்கிறது, பருப்புகளில் விலை ஏறியிருக்கிறது, மற்றும் அத்தியாவசியமான பொருள்களின் விலை ஏறியிருக்கிறது, ஆகவே உணவு நிலைமை திருப்திகரமாக இல்லை" என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய வாதத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலே உற்பத்தியாகின்ற அத்தியாவசியப் பண்டங்களின் விலை ஏறியிருக்கிறதா என்பதை அவர் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று பணிவன்போடு வேண்டிக்கொள்ளுகிறேன். தமிழகத்திலே

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1979 ஏப்ரல் 21

உற்பத்தியாகின்ற அரிசி, மிளகாய், மல்லி போன்ற பண்டங்களின் விலை ஏறியிருக்கிறதா என்றால், இல்லை, குறைந்திருக்கிறது. மிகவும் குறைந்திருக்கிறதென்று நாம் எல்லாம் மனம் திறந்து சொல்லக் கூடிய அளவுக்குக் குறைந்திருப்பதாக நான் சொல்லத் தயாராக இல்லை. அதற்கான முயற்சிகளை இந்தத் துறை எடுத்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லலாமே தவிர, அவற்றின் விலை ஏறியிருக்கிறதென்று யாராவது சொன்னால், நான் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவற்றின் விலை குறையவில்லை, இன்னும் அதைக் குறைக்கலாம் என்று சொன்னால், அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டுமென்று சொன்னால், அதையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

பருப்பு விலை ஏறியிருக்கிறது, கடுகு விலை ஏறியிருக்கிறது, சீரகம் விலை ஏறியிருக்கிறதென்று விவரம் தெரிந்த எதிர்க் கட்சித் தலைவர் போன்றவர்களே சொல்லுவார்களேயானால், அதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தமிழ் நாட்டின் தேவைக்கேற்ப இப்பொருள்கள் தமிழ் நாட்டிலேயே உற்பத்தியாகிறதா என்பதை எண்ணிப் பார்த்தால் தெரியும். நமக்குத் தேவையான பருப்பின் அளவு 6 இலட்சம் டன்கள். ஆனால் இங்கே மிகவும் குறைவாக பருப்பு உற்பத்தியாகிறது என்பதை நான் எடுத்துச் சொல்லும்போது, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளுவார் என்று நம்புகிறேன். முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் திரு. அப்துல் வகாப் அவர்கள், பருப்பின் விலை ஏறியிருப்பதால், அதை இங்கேயே பயிரிட முயற்சி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அந்த முயற்சிகளை நாம் எடுத்திருக்கிறோம் என்றாலும், நமக்குத் தேவையான அளவுக்கு அதை இங்கே உற்பத்தி செய்ய முடியுமா என்றால், நிச்சயமாக முடியாத அளவுக்குத்தான் நம் நாட்டினுடைய சீதோஷ்ண நிலையும், மண் வளமும் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட பொருள் அத்தியாவசியப் பண்டங்களின் பட்டியலில் இருந்தாலும், இவற்றை நாம் வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்கிற காரணத்தாலே, அங்கேயிருக்கிற விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து இங்கே விற்க வேண்டிய நிலையிருக்கிறது என்பதை மாத்திரம் சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

(பிற்பகல் 7-10)

விறகு விலை ஏறியிருக்கிறது, காய்கறிகள் விலை ஏறியிருக்கின்றது. இல்லை என்று நான் சொல்லவில்லை. இன்றையதினம் காய்கறிகள் விலை ஏறியிருக்கின்றது என்றால், போக்குவரத்துச் செலவுகள் அதற்கு எவ்வளவு கூடியிருக்கின்றன என்று நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இப்போது டீசல் என்ன விலைக்கு விற்கிறது? அதைக் கொண்டுவருவதற்கான லாரி வாடகை இப்போது எப்படி இருக்கிறது? வாகனங்கள் கிடைப்பதில்லை என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறினார்கள். அப்பேர்ப்பட்ட பல்வேறு சிக்கல்கள் இருப்பதால்தான், இன்றையதினம் விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அவற்றிலெல்லாம் இந்தத் துறை முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதை மாத்திரம் இந்த அவைக்கு இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும்.



1979 ஏப்ரல் 21] [திரு. க. உரொ. எட்மண்ட்]

நெல்லுக்கு நியாயமான விலை கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த அவையில் பேசிய எல்லா உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்பட சில உறுப்பினர்கள் "ரூ. 15 அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டோம், அதையாவது அரசு கொடுத்தால் என்ன?" என்று கேட்டார்கள். "மத்திய அரசு உங்கள் கைகளைக் கட்டிப்போட்டிருந்தால், சங்கிலி போட்டுக் கட்டியிருந்தாலும், அந்தச் சங்கிலியைத் தெறித்துவிட்டு வாருங்கள், அதற்காக நாங்களும் போராடத் தயாராக இருக்கிறோம்" என்று சொன்னார்கள். உண்மையிலேயே போராடுவதாக இருந்தாலும், நல்ல காரியத்திற்காகத்தான் போராடுவோம். உங்களை வெளியே வைத்துவிட்டு நாங்கள் மட்டும் போராடுவோம் என்று எண்ண வேண்டாம். நாங்கள் நியாயமான காரியத்திற்குப் போராடுவதற்கு உங்களை அழைப்போம். போராட்டம் நடத்துவதனாலேயே என்ன பயன்? அதைப்பற்றி நாமும் எண்ணிப்பார்க்க வேண்டும். மத்திய அரசினுடைய உத்தரவை மீறி ரூ. 85-க்கு வாங்குவதை ரூ. 100-க்கு வாங்குவது என்பது முடியாத காரியமல்ல. செய்துவிடலாம். ரூ. 15 குவிண்டாலுக்கு அரசு கொடுக்க வேண்டுமென்ற முறையைப் பின்பற்றினால் வரும் விளைவுகளையும் நாம் பார்க்க வேண்டும். அப்படிச் செய்தால், மத்திய அரசு ரிசர்வ் வங்கி மூலமாகப் பணம் கொடுப்பதை நிறுத்திவிடும். மாண்புமிகு திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். மீண்டும் அதைப்பற்றிச் சொல்ல வேண்டிய நிலையிலே இருக்கிறேன். அதற்கு நான் கட்டாயப்படுத்தப் பட்டிருக்கிறேன். ரூ. 85-க்குக் கூடுதலாக, ரூ. 100-க்கு அல்ல, ரூ. 85-க்கு ஒரு ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்கினாலும்கூட, மத்திய அரசு தமிழ் நாடு நுகர்பொருள் கொள்முதல் கழகத்திற்கு மத்திய அரசு கடன் கொடுக்கக் கூடாது என்று சொல்லிவிட்டால், எப்படியாகும்? இன்றைக்குள்ள நிலையிலே ரூ. 100 கொடுத்து கொள்முதல் பண்ணுவதாக இருந்தாலும், ரூ. 100 கோடி வேண்டும். அதுவே இன்னும் ரூ. 115, ரூ. 120 கோடி அளவுக்குக்கூட உயரலாம். அப்பேர்ப்பட்ட கோரிக்கையை நாம் இன்றைய

தினம் வைத்தால், அந்தத் தொகையை மாநில அரசு எப்படிப் பெற முடியும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதற்கான நிதிநிலை நம்மிடம் இருக்கிறதா ? எத்தனை பண்டங்களுக்கு நம்மால் சப்சிடி என்று கொடுக்க முடியும் ? நியாய விலைக்கு அரசாங்கமே மான்யம் கொடுக்கலாம், அதற்காக மான்யம் என்று பலகோடி ஒதுக்கலாம் என்றெல்லாம் சொன்னார்கள். மின்சாரத்திற்குக் கொடுக்கவில்லையா, அதற்குக் கொடுக்கவில்லையா, இதற்குக் கொடுக்கவில்லையா என்றார்கள். மக்கள் கொடுக்கின்ற வரிப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறோம் என்றாலும், அதற்குப் பண வசதி, நிதி வசதி நமக்கு வேண்டாமா ? அப்படி வேண்டுமென்றால், அதை மக்களிடமிருந்துதான் பெறவேண்டியதாக இருக்கும் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய சூழ்நிலையிலே இருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து அதையே வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. திராவிடமணி :** திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, ரூ. 10, ரூ. 5 என்று கொடுத்தது. அப்போது அந்த அடிப்படையிலே ரிசர்வ் வங்கி தடுக்கவில்லை. விவசாயிகளுக்கு நன்மை செய்கிறோம் என்றால், இழப்புக்குள்ளாகும் விவசாய மக்களுக்கு, மக்களுக்கு உணவு வழங்கக்கூடிய அவர்கள் நன்கு வாழ்வதற்கு அரசு அவர்கள் கைப்பணத்தைக் கொடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விளக்கம் கேட்க விரும்பும் உறுப்பினர்கள், அமைச்சர் அவர்கள் , பேசி முடிந்த பிறகு விளக்கம் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** அதுபற்றி நான் ஏற்கெனவே விளக்கம் சொல்லியிருக்கிறேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் அவையிலே இல்லையென்று நினைக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம், ரூ. 10, ரூ. 5 என்று கொடுக்க முடிந்ததற்குக் காரணம் அப்போது இந்திரா காங்கிரஸ் கட்சி மத்தியிலே இருந்தது. ரூ. 74 தான் கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். மாநில அரசு கொடுக்க வேண்டுமென்று நினைத்தால், அதனுடைய சொந்த நிதியிலிருந்து கொடுத்துக் கொள்ள ஒப்புக்கொண்டது. அதற்கு சுதந்திரமாக இருக்க வாய்ப்புக் கொடுத்தார்கள். அதனாலேதான் இன்றையதினம் இருக்கின்ற மத்தியத்திலே இருக்கின்ற அரசு ரூ. 85-க்கு நிர்ணயம் செய்திருக்கிறது. கடந்த ஆண்டு டெல்லியிலே இதுபற்றி மகாநாடு நடந்தது. மாண்புமிகு முதலமைச்சர்



அவர்கள் கலந்துகொண்ட அந்த மகாநாட்டிற்கு நானும் முதலமைச்சரோடு போயிருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே கேட்டார்கள். "என்ன விலைக்கு நீங்கள் வாங்கச் சொல்கின்றீர்களோ அந்த விலைக்குக் கூடுதலாக வாங்குவதற்கு அதிகாரத்தைத் தரவேண்டும்" என்று கேட்டார்கள். அன்றைக்கு உங்களைச் சுதந்திரமாக விட்டுவிட்டது அன்றைக்கு இருந்த அரசு. ஆனால் இன்றைக்கு மத்தியிலே இருக்கின்ற அரசு ரூ. 85-க்குத் தான் வாங்க வேண்டுமென்றும் கூடுதலாக எந்தக் காரணம் கொண்டும் வாங்கக்கூடாது என்றும் கண்டிப்பாக அறிவித்திருக்கிறது. ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் செய்ததுபோல் செய்யவில்லை. இந்த அமைச்சருக்கு ஈவு இரக்கம் இல்லை என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அப்போது அண்ணா படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கு ஏற்கெனவே விளக்கம் கொடுத்துவிட்டேன். மேலும் திரும்பச் சொல்கிறேன். அன்றைக்கு கோவைக்கும், சென்னைக்கும் இருந்தது அந்தத் திட்டம். அதற்கு ரூ. 8 கோடி நஷ்டம் ஏற்பட்டது. அவரும் அண்ணா பள்ளிக் கூடத்திலே படித்தவர்கள்தான். ஆகவே அண்ணாவை அவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அரசியல் நோக்கத்தோடு அரிசி கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். அது அப்படியல்ல. அன்றைக்குப் படி அரிசி மூன்றேமுக்கால் ரூபாய்க்கு விற்றது. ஏழைமக்கள் நடுத்தர மக்கள் வாங்கிச் சாப்பிட முடியாது என்ற நிலையிலேதான் அரசு கொண்டுவந்திருக்க வேண்டும். கோயம்புத்தூர், சென்னை நகர்ப்பகுதிகளிலே படி அரிசித் திட்டத்தைக் கொண்டுவந்தால், அங்கே விற்கின்ற அரிசியினுடைய மற்ற பொருள்களுடைய விலைகள் வெளிச்சந்தையிலே குறையும் என்று கருதினார்கள். அதைக் கருத்தில் கொண்டு கொண்டுவந்த திட்டம் தான், அண்ணாவின் படி அரிசித் திட்டம். ஒன்றேகால் ரூபாய்க்கு அரிசி விற்றது அரசியல் நோக்கத்தோடு அல்ல. தேர்தலுக்கு தி.மு.க. நின்ற நேரத்தில், 1967-லே 139 இடங்களைப் பிடித்தது. 1971-லே 183 இடங்களை நிச்சயமாகப் பிடித்திருக்க முடியாது அப்படிப்பட்ட திட்டத்தை கொண்டுவராமல் இருந்தால் என்று கருதுகிறேன். அன்று அந்த இடங்களைப் பிடித்தது. இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், அது அரசியல் நோக்கத்தோடு செய்தது அல்ல என்பதற்காகத்தான் சொல்கிறேன். இப்படிச் செய்தால் அரிசி விலையைக் குறைக்கலாம் என்று அண்ணா நினைத்தார்கள். அதன்படி படி அரிசித் திட்டத்தை அறிவித்தார்கள். இன்றைக்கு வாங்கிச் சாப்பிடுகின்றவர்

களுக்கு இந்த அரசு எவ்வளவோ செய்து கொண்டிருக்கிறது. உற்பத்தி செய்கின்றவர்களுக்குக் கூட கொடுக்க வேண்டுமென்று எண்ணமிருந்தாலும், அவர்களுக்குக் கொடுக்க மத்திய அரசு விடுவதில்லை என்பதைத்தான் இந்த நேரத்தில் இந்த அவையிலே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கேரள மாநிலத்திலே 120 ரூபாய்க்கு ஒரு குவின்டால் வாங்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் எவ்வளவு வாங்கியிருக்கிறார்கள் என்றால், வெறும் 3 ஆயிரம் டன் தான் அவர்கள் வாங்கியிருக்கிறார்கள். இந்த மூவாயிரம் டன் நெல்லை, 120 ரூபாய்க்கு வாங்கிய நெல்லைக்கூட பொது விற்பனையில் ஏலத்திலே விற்றுவிட்டார்கள். எதனாலே இழப்பு ஏற்பட்டது? லாபம் கிடைத்தது என்பதல்ல பிரச்சினை. குவிண்டால் 120 ரூபாய்க்கு வாங்கிய 3 ஆயிரம் டன் நெல்லை பொது விநியோக முறையிலே, நஷ்டத்திலே விற்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. பொது ஏலத்திலேதான் அவர்கள் விற்றுவிட்டார்கள். அங்கே 3,000 டன் தான் வாங்கியிருக்கிறார்கள். நாம் வாங்கவேண்டுமென்றால், 6 லட்சம் டன் அரிசி தேவை. நெல் தேவை என்றால், அதற்குச் சமமாக 9 லட்சம் டன் நெல் தேவைப்படுகிறது. ஒன்பது லட்சம் டன் நெல் வாங்க வேண்டுமென்றால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் கேட்டதுபோல, 100 கோடி ரூபாய்க்கு வாங்க வேண்டுமென்றால், எவ்வளவு பெரிய சிக்கல் அரசுக்கு ஏற்படும்? ஆகவே தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய கொள்முதல் திட்டத்தைப்பற்றிக் கேரள அரசோடு ஒப்பிடுவது பொருத்தமாக இருக்காது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த அடிப்படையிலே இன்றையதினம் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. நாளை மறுநாள் மீண்டும் அக்ரிகல்சுரல் பிரைசஸ் கமிஷன் டெல்லியிலே கூடுகிறது. அதிகாரிகள் அங்கு போக இருக்கிறார்கள். அதிகாரிகளுக்கும் சொல்லியிருக்கிறோம். "130 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேளுங்கள். அதற்காகச் சண்டை போடுங்கள்" என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் மீண்டும் போவார்கள். அந்தக் கருத்தை வற்புறுத்துவார்கள்.

ஓர் உறுப்பினர் ஒரு தீர்மானத்தைப் போடலாமே என்றுகூட சொன்னார்கள். அந்தத் தீர்மானத்தைப் போடுவதா வேண்டாமா என்பது பற்றித் தமிழக முதல்வர் அவர்களைக் கலந்து பேசலாம். தேவைப்படுமானால் நிச்சயமாக இந்த அரசு அந்தத் தீர்மானத்திற்கு அனுமதி அளித்தால், அந்தத் தீர்மானத்தை இங்கே நிறைவேற்றுவதற்குத் தயக்கம் தேவைப்படாது





என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதிலே எந்தவிதமான தயக்கமும் நிச்சயமாக இருக்க முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 7-20)

அடுத்தாற்போல், நியாய விலைக் கடைகளைப் பற்றி நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். நியாய விலைக் கடைகள் என்ற பெயரையே எடுத்துவிடலாமென்று சொன்னார்கள். அவர்கள் அதையும் சொல்லிவிட்டு, அடுத்தாற்போல நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மூன்றாவது சம்பளக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்களை அமுல்படுத்த வேண்டுமென்ற கருத்தையும் சொன்னார்கள். எந்த வகையில் இந்தக் கருத்துக்கள் பொருத்தமானவை என்பது புரியவில்லை. அவர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதே எண்ணத்தின் அடிப்படையிலேயே நானும் கேட்க விரும்புகிறேன். தனிப்பட்டவர்களும் கடைகள் நடத்துகிறார்கள். அவர்கள் கடையில் விற்பனை செய்யும் பொருள்களைவிட, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் கடைகளில் விலை அதிகமாக இருக்கிறதென்பதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. பல இடங்களில் சோதனையிட்டிருக்கிறோம். தனியார் கடைகளில் விற்பனை செய்யும் பொருள்களைவிட நியாய விலைக் கடைகளில், பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன. தனியார் கடைகளில் போய் 500 கிராம் கொத்தமல்லி வாங்கி, வீட்டிலே அதைச் சுத்தப்படுத்தும்போது 100 அல்லது 200 கிராம் அளவிற்கு தூசி, கல், மண் இருக்கும். நம்முடைய நியாய விலைக் கடைகளிலே பொருள்கள் சுத்தப்படுத்தப்பட்டு, எடை குறையாமல் இன்றைக்கு விற்கப்படுகின்றன. அதே நேரத்தில் விலையும் குறைவாக இருக்கிறது. தனியார் கடைகளில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு 50 ரூபாய்தான் சம்பளம் கொடுப்பார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு நன்றாகத் தெரியும், நாகர்கோவிலில் பலசரக்குக் கடைகளில் பொட்டலம் கட்டுபவர்கள் இருப்பார்கள். அங்கே பில் கிளார்க் என்று யாரும் இருக்க மாட்டார்கள். ஒவ்வொரு கடையிலும் ஒரு பையன் அல்லது இரண்டு பையன்கள் இருப்பார்கள். மிஞ்சிப்போனால் அவர்களுக்கு 75 ரூபாய் சம்பளம் கொடுப்பார்கள். சென்னையிலே உள்ள கடைகளில் 100 ரூபாய் அல்லது 125 ரூபாய் கொடுப்பார்கள். காலையிலே 7 மணிக்கெல்லாம் வந்து, அவர்கள் கடையைத் திறந்து வைத்திருப்பார்கள். மத்தியானம் அரை மணி நேரம் கூட சாப்பாட்டிற்காகக் கொடுக்க மாட்டார்கள். முதலாளி கல்லாப்பெட்டியில் உட்கார்ந்திருப்பார். இரவு 10½ மணிக்கு, கடைக் கணக்குப் பார்த்து

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1979 ஏப்ரல் 21

முடிக்கும்வரை, அவர்கள் பணியாற்ற வேண்டும். காலை 7½ மணிக்குப்போய், இரவு 10½ மணிக்குத்தான் வீடு திரும்புவார்கள். ஏறக்குறைய 13 மணி நேரம் வேலை பார்த்தால், அதற்குக் கொடுக்கப்படும் சம்பளம் 100 ரூபாய். அதே நேரத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நியாய விலைக் கடைகளில் என்ன நிலைமை இருக்கிறது என்பதை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு அவர்களுக்கு 305 ரூபாய் சம்பளம் கொடுக்கிறோம். அண்மையிலே அவர்கள் ஒரு போராட்டம் நடத்தினார்கள். மூன்றாவது சம்பளக் கமிஷன் ஊதிய விகிதங்களை அமுல்படுத்த வேண்டுமென்றும், 7½ மணி நேரம்தான் வேலை செய்வோம், 8 மணி நேரம் வேலை செய்யமாட்டோமென்று சொல்லி, போராட்டம் நடத்தினார்கள். இன்று நியாய விலைக் கடைகளில் விலை குறைவாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிற எதிர்க் கட்சித் தலைவரவர்கள், அன்றைக்கு அந்த ஊழியர்கள் போராட்டம் நடத்திய நேரத்தில், தங்கள் கட்சித் தோழர்களைப் பார்த்து, அந்தப் போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை. நுகர்பொருள் வாணிபக் கழகம் மக்களுக்குச் சேவை செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட நிறுவனம்; அதிலே இவ்வளவு தான் செய்ய முடியும்; 350 ரூபாய் சம்பளம் கொடுப்பது என்றால், பொருள்களின் விலை மேலும் உயரும்; தனியார் நிறுவனங்களில் கொடுக்கப்படுகிற சம்பளம் 50 அல்லது 75 ரூபாய்தான்; 4 மடங்குச் சம்பளம் கூடுதலாகக் கொடுக்கப்படுகிறது; இதற்கு மேலும் கொடுத்தால் விற்பனை விலை கூடும், நீங்கள் கேட்பது நியாயமல்ல என்று எதிர்க் கட்சித் தலைவரவர்களால் அப்போது அறிவுரை சொல்ல முடிந்ததா என்றால், சொல்ல முடியவில்லை. அதற்கு மாறாக, அவர்களுடைய போராட்டத்தைத் தூண்டிவிடுவது போல அவருடைய கட்சியைச் சேர்ந்த பத்திரிகையில் எழுதி வந்ததையும் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், நியாய விலைக் கடைகளை ஒரு பொது நிறுவனம் நடத்துகிறது. அதுபற்றி இங்கே மாறுபட்ட கருத்துக்கள் சொல்லப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது, 'இது என்ன, சர்க்காருக்கு இதே வேலையா சைக்கிள் பார்ட்ஸ்கூட சர்க்கார் தான் விற்க வேண்டுமா, சிமெண்ட்டை சர்க்கார்தான் விற்க வேண்டுமா, மண்ணெண்ணெயில் கை வைக்க வேண்டுமா என்றெல்லாம் மாநில அரசைக் குற்றம் சாட்டுவதுபோலச் சொல்லி, மத்திய அரசின்மீது குற்றம் சாட்டிப் பேசினார்கள். இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்கள், நியாய விலைக் கடைகளை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். மாண்புமிகு



1979 ஏப்ரல் 21] [திரு. க. உரொ. எட்மண்ட்]

உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களைத் தவிர, இங்கே பேசிய அத்தனை உறுப்பினர்களும் அத்தியாவசியப் பண்டங்களை நியாய விலைக் கடைகள் மூலமாகத்தான் கொடுக்க வேண்டும், பப்ளிக் டிஸ்டிரிபியூஷன் சிஸ்டம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று சொன்னதற்காக நான் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் சிமெண்ட்டைப் பற்றிச் சொன்னார்கள், மண்ணெண்ணெய் பற்றிச் சொன்னார்கள். அரசுக்கு இதுதான் வேலையா என்றால், நிச்சயமாக இல்லை. அந்த வேலையைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இல்லை. சில நேரங்களில் வியாபாரிகள் தவறு செய்வதால், அவற்றின் காரணமாக மக்கள் அரசின்மீது பாய்கிறார்கள். அதனால் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன்னாலே எங்களுடைய வீட்டிற்குத் தேவையான மசாலா சாமான்களை தனியார் கடையிலே வாங்கினேன். முதலிலே மஞ்சள் என்று எழுதுவார்கள். எனவே மஞ்சளையும் வாங்கிவிட்டேன். அப்போது வெளிச் சந்தையில் மஞ்சளின் விலை கிலோ 10 ரூபாய். ஐம்பது கிராம் வாங்கினால் அதன் விலை 50 காசுகள் அடக்கமாகிறது. அதற்கு 5 பைசா லாபம் வைத்து விற்றாலும், கிலோவிற்கு 2 ரூபாய் லாபம் கிடைக்கிறது. ஆனால் 50 காசுகள் அடக்கமாகும் மஞ்சளை 85 காசுக்கு விற்றார்கள். ஐம்பது காசுக்கு 35 காசுகள் லாபம் வைத்து விற்றிருக்கிறார்கள். நூறு காசுக்கு 70 காசுகள் லாபம். எனவே ஒரு கிலோவிற்கு 7 ரூபாய் கிடைக்கும். பத்து ரூபாய் மூலதனம் செய்தால், லாபம் 7 ரூபாய் கிடைக்கிறது. அதேபோன்று சிமெண்ட்டை எடுத்துக்கொண்டால், 21 ரூபாய் மூட்டை என்று நிர்ணயித்தோம். அந்த நேரத்தில் மூட்டை 35 ரூபாய் என்று விற்கப்பட்டது. அதை யாரும் மறுக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள், அதற்கு ஆதாரம் உண்டா, யாரையாவது பிடித்தார்களா, நடவடிக்கை எடுத்தார்களா என்று கேட்டார்கள். சில நேரங்களில் மக்கள் மத்தியிலிருந்து குறிப்பிட்ட குற்றச்சாட்டு வருகிறது. விசாரித்தால் அது உண்மை என்று தெரிகிறது. அவர்களைக் கையும், மெய்யுமாகப் பிடிப்பது முடியாத காரியமாக இருக்கிறது. பிடிக்கவில்லை என்பதால், இந்தத் தவறு நடக்கவில்லை என்று சொல்லலாமா என்றால், சொல்ல முடியாது. 21 ரூபாய்க்கு விற்கவேண்டிய சிமெண்ட்டை 35 ரூபாய்க்கு விற்ற வியாபாரிகள் உண்டு. வியாபாரிகள் நியாயமான

அளவிற்கு லாபம் வைத்து விற்க, அரசாங்கம் அனுமதி கொடுக்கிறது. இருந்தாலும் அதை 35 ரூபாய்க்கு விற்க வேண்டுமென்று எண்ணி, விற்கும் போது, அதைப் பொது விநியோகத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மண்ணெண்ணெய் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். இப்போது பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த 1977 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் வெள்ளம், புயல் வந்த நேரத்திலே, திருச்சியை வெள்ளம் சூழ்ந்த நேரத்திலே, ஒரு லிட்டர் மண்ணெண்ணெயை 5 ரூபாய்க்கு விற்றவர்கள் உண்டு. அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அன்றையதினம், நுகர்பொருள் வாணிபக் கழகம், தன்னுடைய வண்டியிலே ஒலிப்பெருக்கியைப் பொருத்தி, எங்களுடைய கடைகளில் நியாயமான விலைக்கு விற்கிறோம் என்று அறிவித்து, அத்தனை செலவுகளையும் ஏற்றுக்கொண்டது. அன்று மண்ணெண்ணெய் விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றன. எல்லா அத்தியாவசியப் பண்டங் களையும் விநியோகிக்கும் பொறுப்பை அரசு எடுத்துக் கொள்வதற்குக் காரணம், வியாபாரிகள் செய்யும் தவறுகள்தான் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்காக அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று சொல்லும் போது, ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசு எடுக்கும்போதாவது அவர்கள் திருந்த மாட்டார்கள என்ற அடிப்படையிலேதான் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கிறதென்பதை இந்த நேரத்தில் சொல்வது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

சிமெண்ட்டைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதற்கு விலை நிர்ணயம் செய்வது, இன்னும் அதற்கான மார்ஜின் ஆஃப் பிராபிட்டை நிர்ணயிப்பது போன்ற அதிகாரங்களெல்லாம் நுகர்பொருள் வாணிப கழகத்திடம் இல்லை. அந்த அதிகாரம் தொழில் துறையில் இருக்கிறது அறுபது சதவிகிதத்தை தனியார்கள் மூலமாகவும், 40 சதவிகிதத்தை நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத் துறை மூலமாகவு இன்றைக்கு விற்பனை செய்து வருகிறோம். ஆகவே ஒட்டுமொத்தமா சிமெண்ட் விநியோகத்தை எடுத்துவிட்டார்கள் என்று சொல்வதற்கில்லை,



THIRU A. R. DAMODARAN : Sir, I do not know whether the Hon. Minister is referring to the State figures because in each district it seems to be different. If the Government have a uniform policy, let them apply it uniformly in each and every district. Why should a particular district be discriminated against?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாநிலம் முழுமையாக இன்றைய தினம் சிமெண்ட் விநியோக முறை, 60 சதவிகிதம் தனியார் மூலமாகவும், 40 சதவிகிதம் நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவு அங்காடிகள் மூலமாகவும் நடைபெறுகிறது. எல்லா மாவட்டங்களிலும், அதாவது மாவட்ட ரீதியாக, 60 சதவிகிதம், 40 சதவிகிதம் என்ற முறை பின்பற்றப்படுகிறதா என்பது பற்றிய தகவல் என்னிடம் இல்லை. வேண்டுமானால் அதைச் சேகரித்துத் தரத் தயாராக இருக்கிறேன். என்றாலும் முழுமையாக

(பிற்பகல் 7-30)

இன்றையதினம் சிமெண்ட் விநியோக முறையை இந்தத் துறையோ, கூட்டுறவுத் துறையோ எடுத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மண்ணெண்ணெய் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இன்றையதினம் எவ்வளவு அதற்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் மிக நல்ல முறையில் அதைப்பற்றித் தெரிந்து வைத்திருக்கிறார். இன்றைக்கு மண்ணெண்ணெய் பற்றாக்குறை எந்த அளவுக்கு மோசமாக இருக்கிறது என்பதைப் பற்றியும், பற்றாக்குறை காரணமாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு எவ்வளவு தூரம் குறைந்திருக்கிறது என்பதைப் பற்றியும் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். என்றாலும் இன்றையதினம் இந்தத் துறையைப் பொறுத்தவரை எவ்வளவு திறமையாக இந்தப் பிரச்சினையைச் சமாளித்திருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். அதற்காக இந்தத் துறையை நிச்சயமாக நாம் எல்லோரும் பாராட்ட வேண்டும்.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு தெருக்களிலே, கடைகளிலே வெயிலில் தாய்மார்கள் மண்ணெண்ணெய்க்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள் என்கின்ற நிலைமைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். முன்னால் அந்தமாதிரி நிலை இருந்தது உண்மை தான். ஆனால் இப்பொழுது அப்படிப்பட்ட நிலைமை குறைந் திருக்கிறது என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும், ஒருசில

நாட்களுக்கு முன்பு மண்ணெண்ணெய் கிடைக்காதவர்கள் சென்னை நகரிலே நிறைய பேர் உண்டு என்ற நிலைமை இருந்தது. இன்றைக்கு எல்லோருக்கும் மண்ணெண்ணெய் கிடைக்கிற நிலைமையை அரசு உருவாக்கியிருக்கிறது. அந்த அளவில் இந்தத் துறை நல்ல ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் மண்ணெண்ணெய் விற்கின்றவர்களுக்குக் கொடுக்கின்ற இலாபம் போதவில்லை என்று சொன்னார்கள். 200 லிட்டருக்கு 10 ரூபாய் இலாபம் கொடுக்கிறோம். 200 லிட்டருக்கு 10 ரூபாய் இலாபம் போதவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை எப்படி அரசு ஏற்றுக்கொள்ள முடியும்?

THIRU A. R. DAMODARAN: Sir, I would like the Hon. Minister to understand that there is difference between the hand-cart vendor and the village grocer. The village grocer has to take a barrel from the main depot, has to traverse a distance of about 10 miles, has to pay a freight of 1-1/2 or 2 paise per litre, and has to bear the loss due to leakage and therefore, the net profit that is available to him is only 2 paise per litre, while 5 paise is the gross profit allowed. The Hon. Minister will know when he takes over the distribution in villages what the expenditure is. I will wait for him to understand it and one year later, he will tell me **what it is.**

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** நான் அதைத் தான் சொல்ல வந்தேன். அதற்குள் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் முந்திக் கொண்டார்கள். கை வண்டிக்காரர்களுக்கு இன்றையதினம் மண்ணெண்ணெய் கொடுக்கப்படுகிறது. சென்னை நகரைப் பொறுத்தமட்டில், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் மண்ணெண்ணெய் விநியோகிக்கின்ற பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அப்படி ஏற்றுக்கொண்டாலும், கை வண்டிக்காரர்களுக்கு வேலையில்லாமல், ஊதியம் எதுவும் இல்லாமல், சங்கடப்படக் கூடாது, அவர்களுக்கு வருமானம் கொடுக்க வேண்டும், பிழைப்பைக் கெடுக்கக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் மண்ணெண்ணெய் கொடுக்கப்படுகிறது. தவிரவும் அதைத் தவிர அவர்களுக்கு வேறு வருமானத்திற்கும் வழியில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பலசரக்கு வியாபாரம் செய்கின்றவர்களுக்கு மண்ணெண்ணெய் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள், அவர்கள் அப்படிக் கேட்டதில் என்ன நியாயம்



இருக்கிறது? அவர்கள் இந்த மண்ணெண்ணெய் வியாபாரத்தை நம்பித்தான் இருக்கிறார்கள் என்பதல்ல. அவர்கள் கடைகளில் பலசரக்குகளை விற்கிறார்கள். அந்தச் சரக்குகளை விற்பதால் அவர்களுக்கு ஏற்கெனவே இலாபம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. நாட்டிலே தவிர்க்க முடியாத ஒரு சிக்கலான பிரச்சினை ஏற்படுகின்ற நேரத்தில் பலசரக்கு வியாபாரிகள் அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டு மக்களுடைய அந்தக் கஷ்டத்திலே பங்கு கொள்ள வேண்டும். எதற்காக பலசரக்கு வியாபாரிகளுக்குக் கொடுக்காமல் கைவண்டிக்காரர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் எண்ணிப் பார்ப்பார்களேயானால், எவ்வளவு நல்ல பெருந்தன்மையோடு, மனிதாபிமான உணர்வோடு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். சென்னையிலே ஓரளவு நிலைமையைச் சீர்படுத்திக்கொண்டு வந்திருக்கிறோம். படிப்படியாக கிராமப்புற, நகர்ப்புற மக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகத்தை நல்ல முறையில் செய்வதற்கான முயற்சியில் இந்தத் துறை ஈடுபாடுகொண்டிருக்கிறது. அந்த வகையில் இந்தப் பிரச்சினைக்கு விரைவிலே ஒரு முடிவு காண முடியும் என்கிற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது. இதற்கு மேலே மண்ணெண்ணெய் பிரச்சினையைப் பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

ஓட்டல்களைப்பற்றி எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் பேசினார்கள் அதிலும் குறிப்பாக ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. இராமலிங்கம் அவர்கள் உணவு விடுதிகளில் உணவுப் பண்டங்களின் விலை ஏறியிருக்கின்றது என்று சொன்னார்கள். அது உண்மை. இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால் சட்டத்தின் மூலம் மட்டும் இதைச் செயல்படுத்த முடியுமா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி உடனே ஒன்றைக் கேட்பார்கள். "அவசர காலத்தில் விலை கட்டுப்பாட்டுச் சட்டத்தைப் போட்டு அன்றைக்கு ஓட்டல்களில் மற்றும் விடுதிகளில் உள்ள உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்கவில்லையா? இட்டிலி 50 கிராம் இருக்க வேண்டுமென்றும் 10 காசுக்குத் தான் விற்க வேண்டுமென்றும், இவ்வளவு சட்டினி, இவ்வளவு சாம்பார் என்றெல்லாம் நிர்ணயிக்கவில்லையா?" என்றெல்லாம் அவர்கள் கேட்கலாம். அப்படி அவர்கள் கேட்பார்களேயானால், அன்றைக்கு இருந்த நிலை வேறு, இன்றைக்கு உள்ள நிலை வேறு என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அன்றைக்கு அவசர

காலச் சட்டத்தின் மூலம் அதைக் கொண்டு வந்தார்கள், அமுல்படுத்தினார்கள். அன்றைக்கு மத்தியில் ஆளும் பொறுப்பிலிருந்த மத்திய அரசு இந்தச் சட்டத்தை கொண்டு வந்தபோது, யாரும் கோர்ட்டுக்குப் போகவில்லை. அதோடு மாத்திரமல்லாமல் கோர்ட்டுக்குப் போக யாருக்கும் உரிமையும் கிடையாது, தைரியமும் கிடையாது. அன்றைக்கு அந்தச் சட்டத்தை எதிர்த்துப் பேசவே பயமிருந்தது என்கின்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களே ஒத்துக்கொண்டார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** அந்த நிலைமைகளையெல்லாம் நாம் ஒத்துக் கொண்டாலும், நியாயம் அன்றைக்கும் இருந்தது, இன்றைக்கும் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒத்துக்கொண்டதற்கு மகிழ்ச்சி.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** நான் கூட இல்லை என்று சொல்லவில்லை. கிலோ அரிசி 6 ரூபாய் என்று இருந்தபோது இட்டிலி விற்கப்பட்ட விலையை விட கிலோ அரிசி 2 ரூபாய் என்று இருக்கும்போது இட்டிலி விற்கப்படும் விலை அதிகமாக இருக்கிறது. இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, ஓட்டல் உரிமையாளர்களுடன் பேசி பிரச்சினைக்கு முடிவு காணத்தான் இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். சட்டத்தின் மூலம் முன்பு இருந்தது போல் ஓட்டல்களிலும், விடுதிகளிலும் இட்டிலி, சாம்பார், சட்டினி, தோசை, பூரிக் கிழங்கு இவற்றையெல்லாம் குறைந்த விலைக்குக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். சட்டத்தின் மூலம் ஓட்டல்களிலும், விடுதிகளிலும் இவ்வளவு விலைக்கு விற்க வேண்டுமென்று சொல்லி உணவுப்பொருள்களின் அளவு, எடை, விலை போன்றவற்றை எளிதில் சொல்லி விடலாம். பூரி செட்டுக்கு இவ்வளவு கிழங்கு இருக்க வேண்டும், இவ்வளவு வெங்காயம் இருக்க வேண்டும், இஞ்சி மிளகாய் இவ்வளவு இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிவிடலாம். ஆனால் அவற்றின் தரம், குவாலிட்டி இப்படித் தான் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்க முடியுமா? விலையைக் கட்டுப்படுத்துகின்ற சட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து ஏற்கெனவே இந்த அரசு ஒப்புதலைப் பெற்றிருக்கிறது. இட்டிலி, தோசை, காபி, பூரிக் கிழங்கு, ஜனதா சாப்பாடு இப்படிப்பட்ட உணவுகளுக்கெல்லாம் ஒரு விலை நிர்ணயம் செய்து இந்த அரசு வைத்திருக்கிறது. இன்ன எடை இருக்க வேண்டுமென்றும், இன்ன விலை இருக்க வேண்டுமென்றும் இந்த அரசு மத்திய அரசோடு சண்டை போட்டு அனுமதி வாங்கி வைத்திருக்கிறது. அந்தச் சட்டத்தை இன்றையதினம் தமிழக அரசு வெளியிடவில்லை. அதற்குக் காரணம் உடனே ஓட்டல் உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல



காத்துக் கொண்டிருக்கிறார்கள். முன்னால் அவசர காலத்திலே இருந்தது போல் இந்த அரசு உத்தரவு போட்டால், யாரும் அதை எதிர்த்து நீதி மன்றத்திற்குப் போக முடியாது என்கின்ற நிலை இன்றையதினம் இல்லை. அவர்கள் நீதிமன்றத்திற்குப் போவார்கள். அவர்கள் போகிறார்களோ இல்லையோ, பூரிக் கிழங்கு இவ்வளவு எடை இருக்க வேண்டும், இன்ன அளவு இருக்க வேண்டும், இன்ன விலைக்கு விற்க வேண்டும் என்று எளிதில் நிர்ணயிக்கலாம். இன்ன தரம், இன்ன குவாலிட்டி இருக்க வேண்டும் என்பதை யாரும் நிச்சயமாக வரையறுக்க முடியாது. இன்னும் ஓட்டல் உரிமையாளர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறோம். எவ்வளவோ எதிர்க் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலும், சட்டமன்றப் பேரவையிலும் இருக்கிறார்கள். எதிர்க் கட்சி உறுப்பினர்களை எல்லாம் கொண்ட ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவிடம் விலையைக் கட்டுப்படுத்துவது எப்படி, என்னென்ன உணவுப் பண்டங்களுக்கு என்னென்ன விலையை நிர்ணயிப்பது போன்றவற்றை முடிவு செய்கின்ற அதிகாரத்தை அந்தக் குழுவிடமே விடுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

THIRU A. R. DAMODARAN: I have a better suggestion. The Civil Supplies Corporation can start restaurants. Why advise the hotel-keepers? If he feels that he is capable, why cannot he start hotels?

MR. DEPUTY CHAIRMAN: I think they have already started.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** ஓட்டல்கள் நடத்தப்படவில்லை என்பதல்ல. சில இடங்களில் நடத்தப்படுகின்றன. இவற்றில் கூட ஓரளவு இலாபம் கிடைக்கும் என்பதை நிரூபிக்க இந்த அரசு காத்துக்கொண்டிருக்கிறது. ஓட்டல்களை ஆரம்பிப்பது என்பது அரசு இன்னும் பல்வேறு தொல்லைகளை ஏற்றுக்கொள்வது போல் ஆகும். முடிகின்ற காரியம் தான் என்றாலும், அதிலே பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. சமையல் செய்கின்ற போது அடுப்பருகே உட்கார்ந்து தோசைக்கு இவ்வளவு மாவு, இட்டிலிக்கு இவ்வளவு மாவு என்பதையெல்லாம் கண்காணித்துக்கொள்வது என்பது முடியாத காரியம்.

THIRU A. R. DAMODARAN: Sir, in Delhi in Hotel Janpath which is a Government-run hotel, they are preparing and giving good food. There, the price if a cup of coff is Rs. 3.25. It is only in Tamil Nadu that we keep on meddling in such matters

and it happens in no other State. If the Government want the prices of foodstuffs to be reduced, let them start hotels and show the way to hotel-keepers as they are now doing in other forms of trade. There is no difficulty.

MR. DEPUTY CHAIRMAN: The proof of the pudding is only in the eating.

(பிற்பகல் 7-40)

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஊருக்கு ஊர் உணவு விடுதி நடத்துவது முடியாதது. நாம் உணவுப் பொருட்களை வாங்கி விற்பதற்கு ஒரு நடைமுறையை வகுக்க முடியும். ஆனால், உணவு விடுதி அமைத்து உணவுப் பண்டங்களைத் தயாரித்து, அதை விற்பனை செய்வது என்பது முடியாத காரியம். ஆகவே, தான் இன்றைக்கு உணவு விடுதி உரிமையாளர்களை அழைத்துப் பேசுகிறோம். அவர்களும் அதுபற்றி யோசிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். வேண்டுமென்றால், சட்டமன்றத்திலே இருக்கின்ற அனைத்துக் கட்சிகளுடைய உறுப்பினர்களையும் நாம் சேர்த்து ஒரு குழு அமைத்து எல்லா இடங்களுக்கும் சுற்றுப் பயணம் செய்து உணவு விடுதிகளில் எந்தெந்தப் பண்டங்களுக்கு விலைகளைக் குறைக்கலாம், என்ன விலை நிர்ணயிக்கலாம், என்னவென்று வைப்பது, எப்படி நிர்ணயிப்பது என்பதைப்பற்றி அந்தக் குழு பரிசீலித்து நம்முடைய அரசின் ஆலோசனைக்குத் தந்தால், அதை நிச்சயமாகச் செயல்படுத்த நாங்கள் தயங்கமாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். "வெளிநாடுகளுக்கு தமிழ் நாட்டிலேயிருந்து 30 ஆயிரம் டன் அரிசி ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசிடமிருந்து இந்த அரசு அனுமதி வாங்கியிருக்கிறதா?" என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 30 ஆயிரம் டன் அரிசியை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான அனுமதியை மத்திய அரசு தந்திருக்கிறது. இலங்கைக்குக் கூட நம்முடைய மாநிலத்திலிருந்து அரிசி அனுப்புவதற்கான சாத்தியக்கூறுகளைப் பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். மற்றொரு மாண்புமிகு உறுப்பினர் மத்திய அரசும் வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறது என்று சொன்னார். அதைப்பற்றிக் கூட மத்திய அரசோடு வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்தின் மத்திய அரசு ரஷ்ய நாட்டுக்கு இங்கேயிருந்து அரிசியை





அனுப்புகின்ற நோக்கிலே, தமிழ் நாட்டிலிருந்து ஒருபகுதி அரிசியை வாங்கி அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும், அதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தியிருக்கிறோம். இப்பேர்ப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றபோது, இன்றைக்கு விவசாயிகளுக்கு ஓரளவிற்கு நியாயமான விலை கிடைப்பதற்கான ஏற்பாடுகளை நம்மால் செய்ய முடியுமா என்பதைப் பரிசீலித்து அதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்து, நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பதிலே எதிர்க் கட்சியைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களும் நல்ல அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசு விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று எடுக்கின்ற அனைத்து முயற்சிகளுக்கும் உறுப்பினர்கள் தங்களுடைய ஒத்துழைப்பை அளிப்போம் என்று அறிவித்ததற்காகவும் நன்றியைத் தெரிவித்து இந்த அவையிலே எழுப்பப்பட்டிருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் நான் இயன்றவரை விளக்கம் அளித்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்து, இந்தக் கொள்கைக் குறிப்பை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறபோது கேரளாவிலே 3 ஆயிரம் டன், 120 ரூபாய் கொடுத்து வாங்கியதாகத் தெரிவித்தார்கள். ஆனால் நாம் 85 ரூபாய்க்கு மேல் கொடுத்தால் மத்திய அரசு நமக்குப் பலவிதமான சிக்கல்களைத் தந்துவிடும் என்று சொன்னார்கள். கேரள மாநிலத்தில் 120 ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள், அவர்களுக்கு அப்படி என்ன சிக்கல்கள் வந்தன? கேரளாவிலே நெல் உற்பத்தி மிகக் குறைவு. வயல்களும் குறைவு. நம் மாநிலத்தில் ஒரு எக்கருக்கு 2 குவிண்டால் விளையும் இடங்களிலிருந்தாவது 120 ரூபாய்க்கு வாங்க இந்த அரசு முயற்சி எடுக்குமா? கேரள மாநிலத்தில், அவர்கள் உணவுப் பொருட்களை, குறிப்பாக அரிசியை வெளிநாடுகளுக்கு அனுப்ப முயற்சி எடுக்கின்றபோது, நம்முடைய மாநில அரசு கேரள மாநிலத்திற்கு அரிசி அனுப்புவதில் இருக்கும் தடையையாவது நீக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் விறகு விலையைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனும், உணவு இலாக்காவும் எடுத்ததாகச் சொல்லவில்லை. ஆகவே, வனத்துறையோடு தொடர்பு கொண்டு விறகு விலையைக் குறைக்க ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், கேரளாவிலே 120 ரூபாய்க்கு வாங்கினார்கள். அவர்களுக்குத் தடங்கல் ஏதேனும் ஏற்பட்டதா என்று கேட்டார்கள். மத்திய அரசு அவர்களுக்கு எந்தவிதமான இடையூறும் செய்ய முடியாது. ஏனென்றால் அவர்களுடைய நிலைமை அப்படி இருக்கிறது. நம்முடைய நிலைமை அப்படியல்ல. அவர்களுக்குத் தேவையான அரிசியை இந்திய உணவுக் கழகமே கொடுக்கிறது. 'ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா' மாதந்தோறும் 1½ லட்சம் டன் அரிசி கொடுக்கிறது. அங்கே விவசாயிகளிடமிருந்து வாங்குவதற்கு 120 ரூபாய் என்று அறிவித்தார்கள். கடந்த ஆண்டு முதலமைச்சர்களுடைய மாநாடு டெல்லியிலே நடந்தபோது, தென்னிந்தியாவிலேயிருந்து சென்ற முதலமைச்சர்கள் அனைவரும் நெல்லுக்கு 130 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர், மற்றும் கர்நாடக, ஆந்திரா மாநில முதல்வர்கள் 130 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். மாநாட்டிற்குக் கேரளாவிலேயிருந்து உணவு அமைச்சர் வந்திருந்தார். அப்போது அங்கே இருந்த மத்திய உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. பர்னாலே அவர்கள் கேரள உணவு அமைச்சர் அவர்களைப் பார்த்து, "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டபோது, அன்றைக்கு அவர்களுக்கு 'இன்ன விலை நிர்ணயிக்க வேண்டும்' என்று சொல்லும் தைரியம் இல்லை. அங்கே வாங்கிச் சாப்பிடும் மக்கள் தான் அதிகம். ஆகவே தான் அவர்கள் துணிந்து 120 ரூபாய்க்கு வாங்கினார்கள். விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக, விவசாயிகளைச் சமாதானப்படுத்த வாங்கினார்களே தவிர வேறில்லை. உடனே மத்திய அரசு "உங்களுக்குக் கொள்முதல் செய்வதற்கு தேவையான பணத்தை ரிசர்வ் வங்கியிலே இருந்து தரமாட்டோம்" என்று சொல்லும் நிலை அங்கே வரவில்லை. கேரளாவிலே கொள்முதல் இல்லை. மத்திய அரசால் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு அவர்களை ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னார்கள். நான் சொல்லிக் கொள்கிறேன், மத்திய அரசால் நம்மையும் ஒன்றும் செய்ய முடியாது. கேரளாவுக்கு மத்திய அரசு தான் உணவைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இப்படி அவர்கள் செய்தால், அவர்கள் இப்படிச் செய்தது மத்திய அரசின் கொள்கைக்கு முரண்பாடானது என்று சொல்லி, கொடுக்கின்ற உணவிலே ஒரு பகுதியைக் குறைக்கிறோம் என்று எச்சரிக்கும் வாய்ப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. ஆனால் அப்படிச் செய்யவில்லை. கேரளாவிலே உற்பத்தி



செய்பவர்கள் மிகக் குறைவு. அங்கே உற்பத்தி செய்கின்ற விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமது மாநிலத்தில் உற்பத்தி செய்பவர்கள் பெரும்பகுதியாக இருக்கிறார்கள், அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நல்ல முறையில் வாதாடுகிறார்கள், அவர்கள் வழக்கறிஞர் இல்லை என்றாலும், ஒரு கல்லூரி முதல்வராக இருந்தாலும், திறமையாக வாதாடுகிறார்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வாதாடும் திறமை இருப்பதால்தான், அவர் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறார்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** அங்கே மத்திய அரசு கொடுக்கும் அரிசியை நிறுத்திவிட்டாலும், விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள். நாம் 85 ரூபாய்க்குக் கூடுதலாக வாங்க ஆரம்பித்தால், ரிசர்வ் வங்கி தரும் உதவியை நிறுத்திவிட்டால், இங்கே கொள்முதலும் செய்ய முடியாது, வட்டிக்கு ஆபத்து என்பது மட்டுமல்ல, முதலுக்குமே ஆபத்து. கேரள மாநிலத்திற்கு நெல், அரிசியைக் கொண்டுபோக இருக்கும் தடையை நாம் ஏன் தளர்த்திவிடக் கூடாது என்று கேட்டார்கள். இப்போது தஞ்சை மாவட்டத்திலேயிருந்து எவ்வளவு வேண்டுமானாலும், கேரள மாநிலத்திற்குக் கொண்டு போகலாம் என்ற நிலைமை இருக்கிறது. இப்போது போகிறது. 7—10—1978க்கு முன்னர் தமிழ் நாட்டிலிருந்து கேரளாவிற்கு அரிசியோ நெல்லோ கொண்டு போகவேண்டுமென்றால், 50 சதவித லெவி கொடுக்க வேண்டிய நிலை இருந்தது. இன்றைக்கு 20 சதவிதம் லெவி கொடுத்தால் போதும் என்ற சலுகையை நாம் அளித்திருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் கட்சி ஆட்சியில் இருந்தபோது இப்படிச் செய்யவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அப்போது இந்தியா முழுவதும் ஒரு Zone அல்ல. இப்போது நிலைமை மாறியிருக்கிறது. இப்போதைய நிலைமையில் 20 சதவிதம் வைத்திருப்பதே முறையல்ல.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** இந்தியா முழுவதும் ஒரு Zone-ஆக இருந்ததா இல்லையா என்பதல்ல பிரச்சினை. அன்றைக்கு ஒரு மாநிலத்தை விட்டு இன்னொரு மாநிலத்திற்கு உணவுப் பண்டங்கள் போகக் கூடாது என்று இருந்தது. அப்படியென்றால், அன்றைக்கு 50 சதவிகிதம் லெவி என்று வைத்திருக்கக்கூடாது. இன்றைக்கு ஒரே

மண்டலம் என்று அறிவித்தபோது, 20 சதவிகிதம் என்று வைத்திருக்கிறோம். இந்த 20 சதவிகிதம் லெவி கூட கொடுக்காமல் கேரள மாநிலத்திற்குப் போகும் நிலை ஏற்பட்டால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும், இங்கு கிடைக்கின்ற நெல்லிலே அதிகமான அளவு கேரளாவிற்குப் போகும். இங்கே வெளிச் சந்தையிலே நெல்லுக்கும், அரிசிக்கும் தட்டுப்பாடு ஏற்படும். அப்போது விலை கூடும். அரசின் கடமை கொள்முதலையும் பலப்படுத்த வேண்டும், கையிருப்பையும் பலப்படுத்த வேண்டும். வாங்கிச் சாப்பிடுபவர்கள் நியாயமான விலைக்குப் பொருட்களை வாங்குவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். இத்தனையும் 'அட் எ டைமில்' கண்காணிக்கும் பொறுப்பு ஒரு அரசுக்கு இருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 7-50)

**திரு. ம. சங்கரலிங்கம்:** அடிக்கடி குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். பிரச்சினை மிக முக்கியமானது. அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, வாங்கிச் சாப்பிடுகிறவர்களைக் காப்பாற்ற வேண்டும். அதைப்போலவே உற்பத்தி செய்கிறவர்களையும் காப்பாற்ற வேண்டும் என்றார்கள். இரண்டு பிரிவினருக்கும் இடையில் விலையோ ரூ. 85 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ரூபாய் 130 வரை இருக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே அது ஓரளவு உயர்ந்து ரூ. 100 வரை உயரும்போது, அப்போது கொள்முதலில் 50 சதவிகிதம் என்பதற்குப் பதில் 70 சதவிகிதம் என்று உயர்த்தக்கூடிய அதிகாரம் நமக்கு இருக்கிறது என்பதை மனதில் கொண்டு, நியாய உணர்வோடு இந்தப் பிரச்சினையைச் சீர்தூக்கிப் பார்த்து—இப்போதைக்குப் பதில் சொல்லா விட்டாலும் பரவாயில்லை, காரணம் இப்போது பதில் சொல்ல முடியாது; இது ஒரு பாலிசி மேட்டர்—இதை கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** கொள்கை அடிப்படையில் என்றால், எப்போது பதில் சொல்வதானாலும் இதைத்தான் சொல்ல முடியும். குவிண்டாலுக்கு விவசாயிக்கு ரூ. 100 கிடைக்கிறவரை இங்கிருக்கிற நெல்லை கேரளத்திற்குப் போக அனுமதித்தல் என்பது பொருத்தமில்லாதது என்பது மட்டுமல்ல, ஆபத்தானதும்கூட என்றுதான் சொல்ல விரும்புகிறேன். குவிண்டால் நெல் ரூ. 100-க்கு உயரும்போது, எவ்வளவு அரிசி கேரளத்திற்குப் போய்விட்டது என்று நம்மால் கணக்கிட முடியாது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. க. இராமமூர்த்தி:** ஒரு விளக்கம்மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

படியரிசித் திட்டத்தைப் பொறுத்தவரை, அது அரசியல் ரீதியான திட்டம் என்று அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே அன்றைக்கே நான் சொன்னேன். இன்றைக்குப் புதிதாக நான் சொல்லவில்லை. அந்தக் கோணத்தில் என்னுடைய அணுகுமுறை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். அது அவருடைய உரிமை.

என்னுடைய இந்த அணுகுமுறை காரணமாக அண்ணா அவர்களைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டதாகக் கருதக்கூடாது. இன்னொன்றையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்வது சரியாக இருக்குமென்று நம்புகிறேன். நான் அறிஞர் அண்ணா அவர்களின் பள்ளியில் சேர்ந்து படிக்கவில்லை, ஆனால் அவரோடு மிகுந்த நெருக்கமாகப் பழகுகிற வாய்ப்பும், தொடர்பு கொண்டிருக்கிற வாய்ப்பும் பெற்றிருந்தேன். நெருக்கமாக அவரோடு பழகுகிறவர்களை அண்ணா அவர்கள் 'தம்பி' என்று உரிமையோடு அழைப்பார்கள். சட்டமன்றப் பேரவையில் அவர் முதலமைச்சராக இருந்த போது, அவருடைய கட்சிக்காரர்களில் பலரை மாண்புமிகு உறுப்பினர் என்று சொல்லும்போது என்னை மட்டும் எப்போதும் 'தம்பி' என்றுதான் அழைப்பார். ஒருமுறை கூட என்னை மாண்புமிகு உறுப்பினர் என்று அழைத்ததில்லை. அந்த நல்லவரிடம் எனக்கிருந்த மரியாதை வேறு. ஆனால் அவருடைய கொள்கையிலிருந்து வேறுபாடு கொண்டு, கொள்கையிலிருந்த குறைபாட்டை நான் அன்றைக்கே சொன்னேன். இந்தப் படியரிசித் திட்டம் அவர் பதவிக்கு வந்த உடனேகூட அமுலுக்கு வந்துவிடவில்லை. ஓராண்டு காலத்திற்குப் பிறகுதான் இத்திட்டம் அமுலுக்கு வந்தது.

அடுத்து, மீன்பிடிக்கப்போய் திமிங்கலம் கிடைத்த கதை என்று சொல்லுவார்கள். அதைப்போலவே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு வாதத்தைத் துவக்க, அது வேறு ஒன்றை வெளிப்படுத்தி விட்டது.

நெல் விலையைப் பொறுத்தவரையில், கேரளத்திற்கு நெல் சென்றால், அதன் விலை இங்கே உயர்ந்துவிடும். ஆகவே அது கூடாது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதுதான் இந்த அரசின் கொள்கையாக இருக்குமானால் . . .

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள் என்று நினைக்கிறேன். கேரளத்திற்கு நம் நெல் போவதால் நெல் விலை உயர்ந்து விடும் என்று சொல்லவில்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, இங்கே ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 100 என்ற அளவுக்கு விலை வரும்வரை நெல்லை வெளி மாநிலங்களுக்கு, கேரளத்திற்கு அனுமதிக்கலாமே என்றார்கள். அதற்கு பதில் சொல்லும்போது, எப்போது ரூ. 100 கிடைக்கும் என்று யாருக்கும் திட்டவட்டமாகத் தெரியாது என்பதால், இதை அனுமதிக்க முடியாது என்றுதான் குறிப்பிட்டேன். வெளி மாநிலங்களுக்கு நெல் போவதால், உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு விலை அதிகமாகக் கிடைக்கும் என்பது வேறு பிரச்சினை. வெளி மாநிலத்திற்கு நெல் போவதற்கு வழி ஏற்படுத்திவிட்டு இங்கே பற்றாக்குறை ஏற்பட விடக்கூடாது என்றுதான் சொன்னேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** இப்போது பற்றாக்குறை வராது. காரணம் தேவையான அளவுக்குக் கையிருப்பு இருக்கிறது. ஒருவேளை அடுத்த ஆண்டு வரலாம். ஆகவே விலையை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி பெற்றிருப்பதாகச் சொன்னார்கள். இன்றையதினம் இருக்கிற நிலைமை விவசாயி குறைந்த விலைக்கு தனது நெல்லை விற்றுவிட்டு, அதனால் தயாரிக்கப்படும் பொருட்களை ஓட்டலில் சென்று அதிகமான பணம் கொடுத்துச் சாப்பிட வேண்டியிருக்கிறது. இடையிலுள்ளவர்கள் கொள்ளை லாபம் அடிக்கிற நிலை இருக்கிறது. அதேபோல் விவசாயிகளுக்குக் கொள்முதல் விலையை உயர்த்தாமல் ஏற்றுமதி செய்வது என்பது முறையாக இருக்காது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக இதைச் செய்யும்போது, லாபம்கூட வரலாம். ஆனால் விவசாயியிடம் குறைந்த விலைக்கு நெல்லை வாங்கி அதில் பல ஆயிரம் டன்னை அதிக விலைக்கு ஏற்றுமதி செய்தால், அது விவசாயிக்கு எப்படி லாபமானதாக இருக்கும்? எனவே நேரடியாக விவசாயிகளே நெல்லை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உத்தரவு வாங்கிக் கொடுக்க வேண்டும் அல்லது எந்த அளவுக்கு ஏற்றுமதி செய்கிறீர்களோ அந்த அளவுக்கு கிடைக்கிற முழு லாபமும் விவசாயிக்குச் சேரும்படி செய்ய அரசு முன்வர வேண்டும். அதாவது அந்த லாபம் முழுவதும் விவசாயிக்கு போனசாகவோ, இன்சென்டிவ்வாகவோ கொடுக்க அமைச்சர் உறுதிமொழி அளிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 30,000 டன் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஒப்புதலை மத்திய அரசு தந்திருக்கிற இந்த நேரத்தில் நம் அரசு அதைப் பற்றி மிகவும் கவனமாக யோசித்து வருகிறது. தனியார் வியாபாரிகளுக்கு விட்டு அவர்கள் ஏற்றுமதி செய்வது என்றால் அவர்கள் கொள்ளை லாபம் அடித்துவிடுவார்கள். இதனால் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வாய்ப்பில்லை. எனவேதான் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் போன்ற பொதுத் துறை நிறுவனம் மூலம் வாங்கி ஏற்றுமதி செய்யலாமா என்று யோசித்து வருகிறோம். இதற்கெல்லாம் மேலாக, வாங்குகிறவர்கள் என்ன விலை கொடுக்கப் போகிறார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** அரிசி கையிருப்பு அதிகமாக இருக்கிற இந்த நேரத்தில் அரிசியை வெளிநாடுகளுக்கு அனுப்புவது என்பது உண்மையில் ஒரு புரட்சிகரமான திட்டமாகும். அவ்வாறு எந்தெந்த வெளி நாடுகளுக்கு தமிழக அரசு அரிசியை ஏற்றுமதி செய்ய இருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** எந்தெந்த நாடுகளுக்கு என்று முடிவு செய்யவில்லை. இலங்கைக்கு அனுப்பலாமா என்று அதற்குரிய பேச்சுவார்த்தை நடத்துவதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். வெளிநாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி செய்யலாம் என்ற அளவில்தான் மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்களை விளக்கம் கேட்க அனுமதித்திருக்கலாமா என்ற வினா எழுந்திருக்கிறது. முதலிலேயே அவர் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார். மிகக் குறைவான நேரமே பேசினார். அதை வினாவாகக் கொள்வதா விவாதமாகக் கொள்வதா என்று தெரியவில்லை. இருந்தாலும் அதைக் குறைந்த அளவு விவாதமாகக் கொண்டு, இப்போது விளக்கம் கேட்க அனுமதித்தேன்.

சமூக நலம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 23—4—1979 அன்று எடுத்துக் கொள்ளப்படும்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 23—4—1979 திங்கட்கிழமையன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-55)

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

142 Notification issued in G.O. Ms. No. 120, Home (Cinemas), dated the 11th January 1979 in regard to an amendment to Form 'C' appended to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

143. Notification issued in G.O. Ms. No. 2134, Home (Cinemas), dated the 31st August 1978 in regard to an amendment to Rule 37 of the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

144. Notification issued in G.O. Ms. No. 1180, Home (Cinemas), dated the 27th May 1978 in regard to an amendment to rule 98 (ii) of the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

B. *Reports, Notifications and other Papers.*

* 149. Capital Outlay on Public Health, Sanitation and water Supply, 1979-80. (Tamil and English).

* 150. Policy Note on Labour in Tamil Nadu. (Tamil and English).

---

* Circulated to all M.L.Cs. on 20th April 1979.



**இணைப்பு.**

[316 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

ஒவ்வொரு மாதமும் மண்ணெண்ணெயை மத்திய அரசு மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. 1979-ம் ஆண்டைப்பொறுத்தவரையில் சனவரி மாதத்தில் நமக்கு செய்யப்பட்ட ஒதுக்கீட்டை விட, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் ஒதுக்கீடு குறைவாகவும், ஏப்ரல் மாத ஒதுக்கீடு மார்ச்சு மாத ஒதுக்கீட்டை விட மேலும் குறைவாகவும் இருந்துள்ளன. சென்ற வாரம் 6—4—1979 அன்று மத்திய அரசு பெட்ரோலியம் அமைச்சரை சந்தித்த போது இது அவரிடம் எடுத்துக்காட்டப்பட்டது.

1978-ம் ஆண்டு ஒதுக்கீடுகளுடன் ஒப்பிட்டால் கூட, 1978 மார்ச்சில் ஒதுக்கீடு, 27,754 மெட்ரிக் டன்கள், 1979 மார்ச்சில் 26,838 மெட்ரிக் டன்கள், அதுபோலவே, 1978 ஏப்ரலில் ஒதுக்கீடு, 25,339 மெட்ரிக் டன்கள், 1979 ஏப்ரலில் 24,733 மெட்ரிக் டன்கள். சென்ற ஆண்டு அதே மாதத்தில் எவ்வளவு தமிழகத்தில் செலவாயிற்றோ, அதற்குக் குறையாமல் இந்த ஆண்டு அதே மாதத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றதா என்று பார்த்தாலும், 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாத ஒதுக்கீடு 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் செலவான எண்ணெய்யை விட குறைவாகவே இருக்கிறது என்றும் மத்திய அரசிடம் எடுத்துக்காட்டப்பட்டது.

ஆகவே, தமிழகத்திற்கு 1979-ம் ஆண்டில் மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் மண்ணெண்ணெய் ஒதுக்கீடுகள் குறைவாகவே உள்ளன என்பதை ஆதார பூர்வமாக எடுத்துக்காட்டி, இந்த ஒதுக்கீட்டை உடனடியாக உயர்த்த வேண்டுமென்று மத்திய அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டது. சர்வதேச நிலைமைகளையொட்டி, நம் நாட்டிற்கு மொத்தமாகக் கிடைத்து வரும் மண்ணெண்ணெய் அளவு பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், நம் கோரிக்கையைக்கருத்தில் கொள்வதாக மத்திய அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இப்போதைய ஒதுக்கீடு, நம் தேவைக்குப் பெரிதும் குறைவாக உள்ளது என்பதை நாம் உணர்ந்து, கிடைக்கும் மண்ணெண்ணெய்யை சீராக விநியோகிக்கத் திட்டம் வகுப்பது அவசியமாகிறது. மேலும், சமையல் வாயு வழங்குவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதால், சென்னை நகரத்தில் அதையே நம்பியிருந்த ஏறக்குறைய 1.25 இலட்சம் குடும்பங்கள் சமையல் வாயு கிடைக்காத காரணத்தினால் மண்ணெண்ணெய் வாங்க முற்பட்டுள்ளதும், அண்மையில் மத்திய அரசு மண்ணெண்ணெய் மீது கலால் வரியை

உயர்த்தியதைத் தொடர்ந்து விற்பனையில் ஏற்பட்ட விளைவுக்கும் மண்ணெண்ணெய் நெருக்கடி வலுப்பதற்கு ஏதுவாக இருந்தன. இப்பொழுது தமிழகத்தில் ஏற்பட்ட மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு நீண்டகால நோக்குடன் நிரந்தரமான தீர்வுகள் காண்பது அவசியம் எனக் கருதி, குடும்பக் கார்டின் அடிப்படையில் மண்ணெண்ணெய்யை வழங்குவது என்று கொள்கை முடிவு செய்து, முதற்கட்டமாக சென்னை நகரைப் பொறுத்தவரையில் இம்மாதம் முதற்கொண்டு, மாதத்திற்கு இருமுறை 3 லிட்டராக—மொத்தம் மாதத்திற்கு 6 லிட்டர்கள்—மண்ணெண்ணெய்யை குடும்ப அட்டைகளின் பேரில் வழங்க திட்டம் வகுக்கப்பட்டு முதற்கட்டமாக, சென்னையில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றான ஜார்ஜ் டவுன் பகுதியில் இம்மாதம் 5-ம் தேதி முதற்கொண்டு தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக்கழகமும் கூட்டுறவுச் சங்கங்களும் நடத்தி வருகின்ற ரேஷன் கடைகளில் குடும்ப அட்டைகளின் பேரில் மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் செயல்படுத்தத் தொடங்கிவிட்டோம். இத்திட்டத்திற்கு மக்களிடையே போதாதவும் வரவேற்பும் கிட்டியுள்ளது. இன்னும் இரண்டு வார காலத்திற்குள் இத்திட்டம் சென்னை நகரின் மற்ற பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும். அதற்கிடையில் சென்னை நகரின் மற்ற பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் நடத்தும் ரேஷன் கடைகளின் கண்காணிப்பில் அக்கடைகளுக்கு முன்பாகவே கைவண்டிக்காரர்கள், மூலமாக குடும்ப அட்டைகளின் அடிப்படையிலேயே மண்ணெண்ணெய் விநியோகம், இம்மாதம் 7-ம் தேதி முதற்கொண்டு நடந்து வருகிறது. இவற்றின் காரணமாக, விநியோகத்தில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

குடும்பக் கார்டின் அடிப்படையில் மண்ணெண்ணெய் விநியோகத்தை சீராக நடத்த வேண்டுமென்றால், மண்ணெண்ணெய் விநியோகப்பொறுப்பு முழுமையாக மாநில அரசைச் சார்ந்த நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டியது அவசியம். இதுவரை உள்ள முறைப்படி மண்ணெண்ணெய் விநியோக மொத்த வியாபாரிகள், 'இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்' போன்ற ஆயில் கம்பெனிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுகின்றனர். அவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் மாநில அரசிடமிருந்து உரிமம் பெற்றுக் கொள்கிறார்களேயொழிய, அவர்களைத் தேர்ந்தெடுப்பதிலோ, நியமிப்பதிலோ, மாநில அரசுக்குப் பங்கும், பொறுப்பும் கிடையாது. நெருக்கடி ஏற்படுகின்ற நேரங்களில், மட்டும் மாநில அரசு, விநியோகத்தில் ஏற்படுகின்ற சிக்கல்களைத் தீர்த்து நிலைமையைச் சீர் செய்யத் தலையிட வேண்டுமென்று எதிர்பார்ப்பது சீரான விநியோகத்திற்கு உகந்ததல்ல, ஆகவே



மண்ணெண்ணெய் தட்டுப்பாடு இனி எப்போதும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும், விநியோக முறை முறிந்து விடாமல் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகளை எடுக்கவும், பொது விநியோக முறையின் கீழ் மண்ணெண்ணெய் வழங்குவது ஒன்றுதான் நிரந்தரமான தீர்வு ஆகும். இதைச் செயல்படுத்த வேண்டுமென்றால் மண்ணெண்ணெய் மொத்த வியாபாரத்தில் அரசுச் சார்பு நிறுவனங்களுக்கு இப்பொழுது பங்கு எதுவுமே இல்லாத நிலை மாறி, படிப்படியாக அவர்களிடம் பங்கும், பொறுப்பும் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று மத்திய அமைச்சரிடம் வலியுறுத்தப் பட்டது. இக்கருத்தை அவர்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டு இனிமேல் தனியார் வியாபாரி எவரையும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனும், மற்ற கம்பெனிகளும் மண்ணெண்ணெய் மொத்த வியாபாரிகளாக நியமிக்க மாட்டார்கள். என்றும், அரசு சார்புடைய நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் உடனடியாக மொத்த வியாபாரிகளில் ஒருவராக நியமிக்கப்படும் என்றும், மொத்த வியாபாரிகளுக்குச் செய்யப்படும் ஒதுக்கீட்டு முறையை மறு ஆய்வு செய்ய மத்திய அரசு இப்போது தனியாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையொட்டி அரசுச் சார்புடைய நிறுவனங்களுக்கு மொத்த ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்ற உறுதியளித்துள்ளார்கள்.

இந்தக் கொள்கை முடிவுகள் மத்திய அரசால் செயல்படுத்தப் படும் பொழுது நாளடைவில் அரசுச் சார்பு நிறுவனங்களுக்கு மண்ணெண்ணெய் மொத்த விநியோகத்தில் பெருவாரியான பங்கு கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இந்தப் பின்னணியில் தான் நாம் குடும்பக்கார்டுகளின் பேரில் மண்ணெண்ணெய்யை விநியோகிக்க முடிவு எடுத்துள்ளோம். அது வெற்றிகரமாக செயல்படுவதற்கான சூழ்நிலைகளும் வெகு விரைவில் உருவாகும் என நம்புகின்றோம். முதற்கட்டமாக சென்னை நகரில் செயல் படுத்தப்படும் இத்திட்டம், படிப்படியாக மாநிலம் முழுவதும் விரிவாக்கப் பட்டு தமிழக அரசின் புதிய திட்டத்தின் கீழ் கிராமந்தோறும் திறக்கப் பட்டுள்ள நியாய விலைக்கடைகளின் மூலமாக மண்ணெண்ணெய் விநியோகம் நாளடைவில் முழுமையாக மேற்கொள்ளப்படும். சர்வதேச நிலைமைகளின் காரணமாக நம் நாட்டுக்கு மொத்தமாகக் கிடைக்கும் மண்ணெண்ணெய் அளவைப் பற்றி பல கேள்விக் குறிகள் எழுந்துள்ள இந்நேரத்தில் கிடைப்பதைச் சீராக விநியோகிப்பதற்கு இம்முறை ஒன்று தான் சிறந்த வழி என்று இந்த அரசு நம்புகிறது. இந்த முறையைச் செயல்படுத்துவதற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கித் தரவும், மொத்த மண்ணெண்ணெய் வியாபாரத்தில் அரசு சார்புடைய நிறுவனங்களுக்கு முக்கிய பங்கும், பொறுப்பும் அளிக்கவும் திரு. பகுகுணா அவர்கள் ஒத்துக்கொண்டது நமக்குப் பேருதவியாய் அமைந்துள்ளது.

சென்ற மாத நடுவில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் சென்னை நகரிலுள்ள கைவண்டி வியாபாரிகள் ஒரு சிலரும், நிலைமையை தவறாகப் பயன்படுத்திக்கொண்டு, பதுக்கல், முடக்குதல், அதிக விலைக்கு விற்பது போன்ற சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதே யாகும். குடும்பக்கார்டு விநியோக முறை செயல்படும் நேரத்தில் இந்த தவறு களுக்கு இடம் இருக்காது. அதே சமயத்தில் கைவண்டிக்காரர்களுக்கு இயன்ற அளவு நிவாரணம் அளிக்கும் வகையில் தமிழக அரசு, கிடைக்கும் மண்ணெண்ணெய்யில் குடும்பக்கார்டுகளின் அடிப்படையில் விநியோகம் செய்யத் தேவையானதை ஒதுக்கி வைத்துக் கொண்டு, எஞ்சிய மண்ணெண்ணெய்யை கைவண்டிக்காரர்களின் மூலம் உரிய பாதுகாப்பு களுடன் விநியோகம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை களின் காரணமாக, சென்ற சில வாரங்களாக ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு நிலைமைகள் நீங்கி, மண்ணெண்ணெய் விநியோகம் சீராக இயங்கும் என்று அரசு நம்புகிறது.

தென்மாநிலங்களிலுள்ள சமையல் வாயு இணைப்புகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு :—

தமிழ்நாடு—2,01,141 (சென்னை நகர்—1,19,233)

(மற்ற மாவட்டங்கள்—81,808)

ஆந்திரம்—53,665.

கர்நாடகம்—60,722.

கேரளம்—53,739.

பாண்டிச்சேரி—4,169.

தமிழ்நாட்டில் சமையல் வாயு விநியோகிக்கும் விற்பனையாளர்களின் சிலிண்டர் ஓரிரு நாட்களுக்குள்ளாகவே கிடைப்பது வழக்கம். ஆனால் எண்ணிக்கை 74, சாதாரணமாக சமையல் வாயு தீர்ந்தவுடன் அடுத்த வழங்கப்படும் மொத்த சமையல் வாயு அளவில் குறைவு ஏற்பட்டாலோ அல்லது சுத்திகரிப்பு ஆலைகளில் உற்பத்தி குறைந்தாலோ அடுத்த சமையல் வாயு சிலிண்டர் கிடைப்பதில் 10 நாட்கள் வரை கூட தாமதம் ஏற்பட்டதுண்டு. ஆனால் தற்சமயம் சர்வதேசச்சந்தையில் க்ரூடு எண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள கிராக்கி காரணமாக சமையல் வாயு கிடைப்பதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. மத்திய அமைச்சர் அவர்கள் சமையல் வாயு பற்றியும் ஒரு ஆய்வு செய்வதாக உறுதியளித்துள்ள நிலையில் வரும் மாதங்களில் நிலைமை சீர்திருந்தும் என்று நம்பப்படுகிறது.





அதிவேக டீசல் எண்ணெய் தட்டுப்பாட்டைப்பற்றி இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் சில்லறை வியாபாரிகளுக்கு கீழ்க்கண்ட கண்டிப்பான கட்டளைகள் பிறப்பித்துள்ளார்கள்.

வெளி மாநிலங்களிலிருந்து வரும் வாகனங்களில், பொருத்தியுள்ள தொட்டிகளில் (Tanks) மட்டுமே டீசல் எண்ணெய் நிரப்ப வேண்டும் என்றும், பீப்பாய்களிலோ மற்றபடி சேமித்து வைக்கவோ டீசல் எண்ணெய் சப்ளை செய்யக்கூடாது என்றும் மற்றும், ஏனைய எல்லா எண்ணெய் வியாபாரிகளுக்கும், விவசாயிகளைத் தவிர, மற்றவர்களுக்கு வாகனங்களில் பொருத்தியுள்ள தொட்டிகளில் மட்டுமே டீசல் எண்ணெய் நிரப்ப வேண்டும் என்றும், தேவைக்கு மிகுதியாக பீப்பாய்களில் நிரப்பக் கூடாதென்றும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் பெட்ரோல் சப்ளை எப்பொழுதும் போல் உள்ளதென்றும், பெட்ரோல் பற்றாக்குறை இல்லை என்றும், விவசாயத்திற்கும், தொழில் துறைகளுக்கும் ஏற்படும் அத்துப்படியான தேவைகளை சமாளிப்பதற்காக அதிக அளவிலான டீசல் எண்ணெய் தமிழ் நாட்டிற்கு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது என்றும் கூறியுள்ளார்கள்.

1978 ஏப்ரல், மே, ஜூன், மற்றும் ஜூலை மாதங்களுக்கான அதிவேக டீசல் எண்ணெய் விற்பனை பற்றிய விவர அறிக்கையும், 1979 ஏப்ரல் மாதத்திற்கான அதிவேக டீசல் எண்ணெய் விநியோகம் பற்றிய விவர அறிக்கையும் இந்த விவர அறிக்கையினுடன் இணைக்கப்பட்டுள்ளது.

1978 ஏப்ரல் மாதம் விநியோகிக்கப்பட்ட டீசல் எண்ணெய்யின் அளவு 75,114 கிலோ லிட்டராக இருந்தது. தற்போது 1979 ஏப்ரல் மாதத்தில் விநியோகத்திற்கு திட்டமிடப்பட்டுள்ள அளவு 86,830 கிலோ லிட்டர் ஆகும்.

**இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனால் விநியோகிக்கப்பட்ட அளவுகள்.**

ஏப்ரல், 1978—75,114 கிலோ லிட்டர்.

மே, 1978—77,915 கிலோ லிட்டர்.

ஜூன், 1978—79,747 கிலோ லிட்டர்.

ஜூலை, 1978—78,556 கிலோ லிட்டர்.

1979 ஏப்ரல் மாதம் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ள அளவு.

| | | |
|---|---|---|
| 1. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் | 45,287 | கிலோ லிட்டர். |
| 2. பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் | 20,351 | ,, |
| 3. இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் | 12,825 | ,, |
| 4. விசாக் மார்க்கெட்டிங் யூனிட் | 6,413 | ,, |
| 5. இந்தோ பர்மா பெட்ரோல் கம்பெனி | 1,954 | ,, |
| மொத்தம் | 86,830 | ,, |

## இணைப்பு II

(317 ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழகத்தில் உணவு நிலைமை.

### கொள்முதல், விநியோகம்.

தமிழக மக்களின் தலையாய உணவுப் பொருளான அரிசி, தாராளமாகவும், நயமான விலைகளிலும், இப்போது கிடைக்கின்றது. அரசிடமும் கணிசமான அளவில் கையிருப்பு உள்ளது. அரிசி கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த நிலையும், அரிசியின் விலைகள் பயங்கரமாக ஏறிவிட்டிருந்த நிலையும், பழங்கால நிகழ்வுகளாக மாறி, இப்போது உணவு நிலைமையைப் பொறுத்த வரை பிரச்சினையே இல்லாத அளவுக்கு, நிலைமை சுமுகமாக இருப்பது நமக்கு மிகுந்த மன நிறைவு அளிக்கக் கூடியதாகும். தமிழகத்தில் உணவு நிலைமை வசதியாகவும், சுமுகமாகவும் இன்று இருப்பதைப்போல், சென்ற பத்துப் பதினைந்து ஆண்டுகளில் என்றுமே இருந்ததில்லை என்று நாம் துணிந்து கூறலாம். உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயப் பெருமக்கள் எடுத்துக் கொண்டுள்ள பெரு முயற்சியின் காரணமாகவும், அரசின் விழிப்பான நடவடிக்கைகளின் காரணமாகவும், இந்த நிலைமை தமிழகத்தில் உருவாகியுள்ளது, நம் அனைவருக்கும் பெருமை அளிக்கும் ஒரு சாதனையாகும்.

2. 1977-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளிலிருந்து, நாடு முழுவதும், அரிசியைப் பொறுத்தவரையில், ஒரே உணவு மண்டலமாக அமையும் என்று மத்திய அரசு, மாநில அரசுகளைக் கலக்காமலேயே, அறிவிப்பு செய்தது. அதன் விளைவுகளை அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில், அதனால் தமிழகத்தின் நலன்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற கவலையில், நிலைமையைச் சமாளிக்கத் தமிழக அரசு முன்னெச்சரிக்கையாகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. அந்த முன்னேற்பாடுகளின் பலனாக இன்று நிலைமை சீராகவுள்ளது என்பது, தமிழக அரசின் துணிவான நடவடிக்கைகளுக்கும் தெளிவான கொள்கைகளுக்கும் சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

3. 1978-79-ம் ஆண்டில் தமிழகத்தில் நெல் விளைச்சல் 60 இலட்சம் அரிசி டன்கள் அளவில் அமைந்து இருந்தது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆதரவான பல நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டதின் பயனாகவும், தங்கள் உழைப்பை வித்தாக இட்டு, தங்கள் உறுதியை உரமாகப் பயன்படுத்தி, வேளாளப் பெருமக்கள் பாடுபட்டதின் பயனாகவும், தன்னுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் அளவுக்குத் தமிழகம் இன்று நெல்லை உற்பத்தி செய்து வருகிறது. விவசாயிகளின் உற்சாகம் குறையாமல் இருக்க வேண்டுமானால், நெல்லுக்கு நியாயமான விலை அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதில், இந்த அரசு மிகுந்த நாட்டம் கொண்டுள்ளது.

### நெல்லின் கொள்முதல் விலைகள்.

4. நெல்லின் கொள்முதல் விலைகள் நாடு முழுவதற்கும், ஆண்டுதோறும், மத்திய அரசால், விவசாய விளைபொருள்கள் விலைவாசிகள் ஆணைக் குழுவின் பரிந்துரையின் பேரில், நிர்ணயிக்கப்படுகின்றன. 1978-79-ம் ஆண்டுக்கு மோட்டா ரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ. 85 என்ற விலை மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கோதுமைக்கு, சாகுபடிச் செலவை அடிப்படையாகக் கொண்டு, குவிண்டாலுக்கு ரூ. 112.50 என்று விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டி, கோதுமையின் சாகுபடிச் செலவைவிட நெல்லின் சாகுபடிச் செலவு எந்த வகையிலும் குறைந்ததாக இருக்க முடியாது, மாறாகக் கூடுதலாகத்தான் இருக்கின்றது என்பதையும் ஆதாரபூர்வமாக நிலை நாட்டி, நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்தியது. வேளாண்மை விளைபொருள்கள் விலைவாசிகள் ஆணைக் குழுவிடமும் இக்கருத்து பலமாக வலியுறுத்தப்பட்டது. முதலமைச்சர்கள் மாநாட்டிலும் இக்கருத்தைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் வன்மையாக வற்புறுத்தினார்கள். இது குறித்துத் தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமருக்கும் ஒரு கடிதம் எழுதினார்கள். ஆயினும், சென்ற ஆண்டு மோட்டா ரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ. 77 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்ததை எட்டு ரூபாய்

அளவில் மட்டுமே உயர்த்தி, நெல் விலையை ரூ. 85 என்று மத்திய அரசு நிர்ணயித்தது, தமிழக அரசுக்கு மட்டுமல்ல, தென் மாநில விவசாயப் பெருமக்களுக்கும் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

5. 1978-79-ம் ஆண்டில் கோதுமையின் கொள்முதல் விலையைக் குவிண்டாலுக்கு ரூ. 110 என்று நிர்ணயிக்க வேண்டுமென்று வேளாண்மை விளைபொருள்கள் விலைவாசிகள் ஆணைக்குழு பரிந்துரைத்தது. கோதுமையின் சாகுபடிச் செலவு குவிண்டாலுக்கு ரூ. 101 ஆகும் என்ற அடிப்படையில் இந்த விலையை ஆணைக்குழு பரிந்துரைத்தது. மத்திய அரசோ, ஆணைக்குழு பரிந்துரைத்த விலையை விடக் குவிண்டாலுக்கு ரூ. 2.50 கூடுதலாக அளித்து, கோதுமையின் கொள்முதல் விலையை ரூ. 112.50 ஆக நிர்ணயித்தது. 1979-80-ம் ஆண்டுக்குக் கோதுமையின் கொள்முதல் விலையைக் குவிண்டாலுக்கு ரூ. 115 ஆக நிர்ணயிக்க வேண்டுமென்று ஆணைக் குழு பரிந்துரைத்துள்ளது. சாகுபடிச் செலவை அடிப்படையாகக் கொண்டு கோதுமையின் கொள்முதல் விலை நிர்ணயிக்கப் படுகின்ற நேரத்தில், சாகுபடிச் செலவைக் கருத்தில் கொண்டு, அதே அடிப்படையில்தான், நெல்லின் கொள்முதல் விலையும் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பது தமிழக அரசு, மத்திய அரசின் முன், தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ள கருத்து, நெல்லின் சாகுபடிச் செலவு குவிண்டாலுக்கு ரூ. 120 வாக்கில் அமையும் என்பதற்கான புள்ளி விவரங்களை, வேளாண்மைத் துறையிடமிருந்து மட்டுமல்ல, கோவை வேளாண்மைப் பல்கலைக் கழக நிபுணர்களிடமிருந்தும், விவசாயிகளின் பிரதிநிதிகளிடமிருந்தும் சேகரித்துத் தமிழக அரசு, மத்திய அரசின் முன், வைத்துள்ளது.

6. கோதுமையைக் கோதுமையாகவே பயன்படுத்தலாமென்றும், ஆனால் நெல்லை அரிசி ஆக்கித்தான் பயன்படுத்த முடியுமென்றும் எடுத்துக் காட்டி, அரிசியின் விலை மிகைப்படாமலிருக்க, நெல்லுக்குக் கொள்முதல் விலையை அளவோடு நிர்ணயிக்கவேண்டுமென்று சிலரால் வாதிடப்படுகிறது. சாகுபடிச் செலவை அடிப்படையாகக் கொண்டுதான் ஒரு தானியத்தின் கொள்முதல் விலையை நிர்ணயிப்பது பொருத்தமாக இருக்கும். நெல்லை அரிசியாக்கும் செலவையும் மனதிற்கொண்டு, அதற்காக நெல்லின் கொள்முதல் விலையைக் குறைக்க வேண்டுமென்ற அணுகுமுறையை நாம் பின்பற்றினால், நெல் உற்பத்தியாளருக்கு உற்சாகம் குறைந்து, நெல்லின் உற்பத்தி பாதிக்கப்படக் கூடும். மேலும் நாட்டின் பொதுவான உணவுக் கொள்கையைக் கருத்தில் கொண்டு பார்த்தால்கூட, நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்பது உணவு நிலைமையை நிதானப்படுத்துவதற்கு உரிய வழியாகும். தட்டுப்பாடுகள் ஏற்படும் நேரத்தில், உணவு தானியங்களை இறக்குமதி செய்வது அவசியமாகும் சூழ்நிலையில் கூட, சர்வதேச சந்தை



யிலிருந்து கோதுமையை எளிதாக இறக்குமதி செய்யலாம். ஆனால், உலகச் சந்தையிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்புகள் அவ்வளவு அதிகம் கிடையாது. உலகச் சந்தையிலே அரிசியின் விலைகளும் மிக அதிகமாக இருக்கின்றன. ஆகவே அரிசியைப் பொறுத்தவரையில், நம் நாடு, தன் தேவைகளைத் தானே நிறைவு செய்துகொள்ளக்கூடிய வகையில், நெல்லின் உற்பத்தியைப் பெருக்குவது, இந்திய உணவுப் பொருளாதாரம் சீராக இயங்குவதற்கு இன்றியமையாததாகும். இந்த நிலையை உறுதிப்படுத்த வேண்டுமென்றால், நெல்லுக்கு நியாயமான விலை வழங்கப்பட வேண்டும்.

7. இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி, நெல்லின் கொள்முதல் விலையை மிகக் கணிசமாக உயர்த்த வேண்டுமென்றும், உடனடியாக இது சாத்தியமில்லை யென்றால், கோதுமையின் கொள்முதல் விலைக்கு ஒத்த அளவிலாவது நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்றும், தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது. இக்கருத்து தென்மாநில முதலமைச்சர்கள் அனைவருக்கும் உடன்பாடான கருத்து என்பது, தமிழக முதலமைச்சர் அவர்களின் முயற்சியின் பேரில், சென்ற ஆண்டு கூட்டப்பட்ட தென் மாநில முதலமைச்சர்களின் மாநாட்டில் செய்யப்பட்டுள்ள பரிந்துரையிலிருந்து தெளிவாகிறது.

8. கோதுமையின் கொள்முதல் விலையையும், நெல்லின் கொள்முதல் விலையையும் மத்திய அரசு நிர்ணயித்து வருவதில் பல ஆண்டுகளாக ஏற்றத் தாழ்வு தொடர்ந்து காணப்பட்டு வருகிறது. 1967-68-ம் ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 43 ஆக நிர்ணயிக்க பட்டிருந்த நேரத்தில், கோதுமையின் கொள்முதல் விலை ரூ. 70 முதல் ரூ. 76 ஆக மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்டது. 1969-70-ம் ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை ரூ. 45 ஆக இருந்தது ; கோதுமையின் கொள்முதல் விலை ரூ. 76 ஆக இருந்தது. 1970-71-ம் ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை ரூ. 46 ஆக நிர்ணயிக்கப்பட்டது. 1971-72-ம் ஆண்டில் அதே விலைதான் தொடர்ந்தது. 1972-73-ம் ஆண்டில் நெல்லுக்கு விலை ரூ. 47 ஆக நிர்ணயிக்கப்பட்டது. 1973-74-ம் ஆண்டில் குவிண்டாலுக்கு ரூ. 19 உயர்வு அளிக்கப்பட்டு நெல்லின் விலை ரூ. 66 ஆக நிர்ணயிக்கப்பட்டது. 1974-75-ம் ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை ரூ. 74 ஆக உயர்த்தப்பட்ட நேரத்தில், கோதுமையின் கொள்முதல் விலை ரூ. 76-லிருந்து ரூ. 105 ஆக உயர்த்தப்பட்டது. 1975-76-ம் ஆண்டில் நெல்லுக்கும் கோதுமைக்கும் அதே விலைகள் தான் தொடர்ந்தன. 1976-77-ம் ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை தொடர்ந்து ரூ. 74 ஆக இருந்த நேரத்தில், கோதுமையின் கொள்முதல் விலை மட்டும் ரூ. 110 ஆக உயர்த்தப்பட்டது. 1977-78-ம் ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை

[1979 ஏப்ரல் 21

ரூ. 77 ஆக உயர்த்தப்பட்டது. 1978-79-ம் ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை ரூ. 85 ஆகவும், கோதுமையின் கொள்முதல் விலை ரூ. 112.50 ஆகவும் உயர்த்தப்பட்டது.

9. இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, நெல்லின் கொள்முதல் விலை சென்ற பத்து ஆண்டுகளில் எந்த ஆண்டிலும் நியாயமாக நிர்ணயிக்கப்படவில்லை என்பதையும், கோதுமைக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட நெல்லின் விலை மிகக் குறைவாகத் தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்டு வந்துள்ளது என்பதையும், நாம் காணலாம். இந்த விலை நிர்ணயம் நெல் விவசாயிகளுக்குப் பெரிய அநீதி அளித்துள்ளது என்ற உணர்வு நெல் உற்பத்தியாளரிடை பரவ இது இடம் தந்துள்ளது. இத்தகைய உணர்வு பரவுவது நாட்டின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு உகந்ததாய் இராது என்பதையும் நாம் உணரவேண்டும். மறுக்கமுடியாத இந்த நியாயங்களை எடுத்துரைத்து, நெல்லின் கொள்முதல் விலையை உடனடியாகக் கோதுமையின் கொள்முதல் விலைக்கு ஒத்த அளவிலாவது நிர்ணயிக்க வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசிடம் இதுவரை வன்மையாக வலியுறுத்தி வந்துள்ளதுபோலவே, இனியும் தொடர்ந்து வலியுறுத்தி வரும்.

10. மத்திய அரசு நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்தாவிடினும், தமிழக அரசு தானாக நெல்லுக்கு உயர்வான விலையை அளிக்கலாமே என்று சில சமயங்களில் வாதிடப்படுகிறது. அனைத்திந்திய அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் விலைகளுக்குக் கூடுதலாக மாநில அரசுகள் கொள்முதல் விலைகளை வழங்கக்கூடாதென்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. முன்பு, ஒருசில ஆண்டுகளில் இவ்வாறு கூடுதலாக வழங்கப்பட்டதின் காரணமாகப் பல சிக்கல்கள் எழுந்துள்ளன. மேலும், தமிழக அரசு தன்னுடைய கொள்முதல் நடவடிக்கைகளுக்காக ரிசர்வ் வங்கியிலிருந்து 11 விழுக்காடு வட்டியிலே முன்பணம் பெறுகின்றது. தமிழகத்தில் கொள்முதலை நடத்துவதற்கு ரூ. 60 முதல் ரூ. 100 கோடி வரை ரிசர்வ் வங்கியிலிருந்து முன்பணம் பெற வேண்டிய கட்டாயம் இருந்தது 'என்பதைச் சென்ற சில ஆண்டுகளின் அனுபவம் உணர்த்துகிறது. இவ்வளவு கணிசமான முதலீடு செய்யும் பொறுப்பை, மாநில அரசு தன்னுடைய குறுகிய நிதி வசதிகளைக் கொண்டு ஏற்றுக்கொள்ள இயலாது. ஆகவே, ரிசர்வ் வங்கியிலிருந்து முன்பணம் பெறுவது அவசியமாகிறது. மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைகளுக்குக் கூடுதலான விலைகளில் மாநில அரசு நெல்லை வாங்க முற்பட்டால் அதற்கு ரிசர்வ் வங்கியிலிருந்து முன்பணம் கிடைக்காது என்று தெளிவாக்கப்பட்டுள்ளது.



1979 ஏப்ரல் 21]

11. இதில் மற்றொரு முக்கிய அம்சத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். உற்பத்தியாளருக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பதில் அரசுக்கு நாட்டம் ஒருபுறமிருக்க, நுகர்வோருக்கு நயமான விலையில் அரிசியைப் பொது விநியோக முறையின்கீழ் வழங்குவதும் அரசின் தலையாய பொறுப்புகளில் ஒன்றாகிறது. தமிழகத்தில் பொது விநியோக முறையின் கீழ், மோட்டா ரக அரிசியும், நடுத்தர ரக அரிசியும், கிலோ ரூ. 1.60 என்ற விலைக்கு இப்போது விற்கப்படுகின்றன. மோட்டா ரக நெல்லை ரூ. 85 என்ற விலையிலும், நடுத்தர ரக நெல்லை ரூ. 89 என்ற விலையிலும் வாங்கும்போதே, கொள்முதல் செலவுகள், போக்குவரத்துச் செலவுகள், அரைவை, சேமிப்பு, வட்டி ஆகிய செலவுகள் அனைவற்றையும் சேர்த்துக் கணக்கிடும்போது, இப்போது பொது விநியோக முறையின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைகளில் அரிசியை விற்பதிலேயே மாநில அரசுக்கு நட்டம் ஏற்படுகின்றது. கோதுமைக்கு ஒத்த அளவில் நெல்லின் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று நாம் வாதிடுவதற்கேற்ப, நெல்லின் கொள்முதல் விலையை ரூ. 115 அளவில் நிர்ணயித்தால், அரிசியின் விநியோக விலை குவிண்டாலுக்கு ரூ. 230, அதாவது, கிலோ ரூ. 2.30 ஆக அமையும் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும். உற்பத்தியாளருக்கு நியாயமான விலை நிர்ணயிக்கப்படுவது, நுகர்வோருக்கு நயமான விலைகளில் அரிசி கிடைக்கச் செய்வது, ஆகிய இரண்டும் தேசிய உணவுக் கொள்கையின் அடிப்படை அம்சங்கள் ஆவதால், அரிசியின் அடக்க விலைக்கும் விநியோக விலைக்கும் உள்ள இடைவெளியை மத்திய அரசு மானியமாகத் தந்து சரிக்கட்டினால்தான் இந்நிலைமையைச் சமாளிக்க முடியும். உற்பத்தியாளருக்கு நியாயமான கொள்முதல் விலை வழங்கும் நேரத்தில், நுகர்வோருக்குப் பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையை உயர்த்தாமலிருப்பது அவசியமாகும். அவ்வாறு செய்வதற்கு மானியம் தரவேண்டுமென்றால், ஒரு கிலோவுக்கு 70 பைசா மானியம் என்ற அடிப்படையில், ஒரு இலட்சம் டன்கள் விநியோகத்திற்கு 7 கோடி ரூபாய் மானியச் செலவு ஏற்படும். தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு ஆறு இலட்சம் டன்கள் அரிசி விநியோகமானால், 42 கோடி ரூபாய் மானியச் செலவு ஏற்படும். இந்த மானியச் செலவை மாநில அரசு ஏற்றுக் கொள்ள இயலாது. ஆகவேதான், சென்ற சில ஆண்டுகளில் கோதுமையின் விநியோகத்திற்கு மத்திய அரசு ஆண்டுக்கு ஏறக்குறைய 300 கோடி ரூபாய் அளவில் மானியம் அளித்து வந்துள்ளதுபோல், அரிசியின் விநியோகத்திற்கும் மத்திய அரசு மானியம் அளிக்க முன்வரவேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்தி வருகின்றது. இந்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டால்தான், உற்பத்தி

யாளருக்கு நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்க வகை செய்யும் அதே நேரத்தில், நுகர்வோருக்கு அரிசியின் விலையை உயர்த்தாமல், இப்போதுள்ள விலையிலேயே கிடைக்க வகை செய்ய முடியும். இச்சூழ்நிலையில் மத்திய அரசு நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்தினாலன்றி, இப்பிரச்சினைக்கு மாநில அரசு தன்னுடைய சொந்தப் பொறுப்பிலேயே தீர்வு காண இயலாது என்பது தெளிவாகும். கோதுமைக்கு ஒத்த அளவிலாவது நெல்லுக்குக் கொள்முதல் விலையை நிர்ணயிக்கவும், அரிசியின் விநியோக விலையை உயர்த்தாமலிருக்க வழி செய்யும் வகையில், கோதுமைக்கு இதுவரை தந்து வந்த அளவில், அரிசிக்கும் மானியம் தரவும், மத்திய அரசு முன்வரவேண்டு மென்று மாநில அரசு வலியுறுத்தி வருவதற்கு, இம்மாமன்ற உறுப்பினர்கள் முழுமனதான ஆதரவை நல்குவார்களென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

### விவசாயிகள் இலாபகரமான விலை பெறுவதற்கான சூழ்நிலை.

12. நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசிடம் தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகின்ற நிலையில், வெளிச் சந்தையில் விவசாயிகள் நெல்லை இலாபகரமாக விற்றுக் கொள்ள வசதியான சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கித் தந்துள்ளது. 1975-ம் ஆண்டு சம்பாப் பட்டம் வரை கட்டாயக் கொள்முதல் நடத்தப்பட்டு வந்ததை இம்மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இப்பொழுது கட்டாயக் கொள்முதல் இல்லை. மாவட்டங்களை விட்டு நெல்லையும் அரிசியையும் எடுத்துச் செல்லக்கூடா தென்று ஒரு கட்டத்தில் தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. இப்போது அந்தத் தடைகளும் நீக்கப்பட்டு விட்டன. 1977-ம் ஆண்டு குறுவைப் பட்டத்தில் உபரி மாவட்டங்களிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட நெல்லுக்குப் 10 விழுக்காடும், அரிசிக்கு 20 விழுக்காடும், வர்த்தக லெவி விதிக்கப்பட்டிருந்தது. ஆலைகள் லெவியும் விதிக்கப்பட்டிருந்தது. 11—5—1978 முதல் தமிழகத்திற்குள் வர்த்தக லெவி, ஆலை லெவி அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன. ஆகவே, இப்போதுள்ள நிலைமைப்படி, தமிழகத்திற்குள் அரிசி, நெல் நடமாட்டத்திற்கு எந்தவிதத் தடையும் இல்லை. இதனால் பற்றாக்குறை மாவட்டங்களிலிருந்து வர்த்தகர்கள் உபரி மாவட்டங் களுக்குச் சென்று, விவசாயிகளிடமிருந்து நெல்லை நேரடியாக வாங்குவதற்கு வசதி ஏற்பட்டுள்ளது. தமிழகத்திற்குள்ளாக எந்தவித நடமாட்டக் கட்டுப்பாடோ, தடையோ, லெவி நிபந்தனையோ இல்லாமல் உணவு வர்த்தகம் சுமுகமாகவும் சுதந்திரமாகவும் இயங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.





13. வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசியில், மட்டுமே லெவி வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த லெவியும், முன்பிருந்த 50 சதவீதத்திலிருந்து, 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7 ஆம் நாள் முதற்கொண்டு, 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டுக் குறுவையின் போது, தஞ்சைக் குறுவை வெளி மாநிலங்களுக்கு எந்தவித லெவியும் செலுத்தாமல் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது வெளிச் சந்தையில் விவசாயிகள் இலாபகரமான விலைக்கு நெல்லை விற்றுக்கொள்ள வசதி செய்யும் பொருட்டே, இந்த அரசு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது. தமிழகத்தின் உணவு நிலைமையைப் பாதுகாப்பதற்கும், நுகர்வோர் நலனை முன்னிட்டும், அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு, அதே சமயத்தில் நெல், அரிசி வர்த்தகம் சுதந்திரமாகவும் தடைகளின்றியும் இயங்குவதற்கு எல்லா வசதிகளையும் செய்து தருவதும், விவசாயிகள் இலாபகரமான விலையிலே நெல்லை விற்க வாய்ப்புகள் அளிப்பதுமே, அரசின் கொள்கையாக இருந்து வருகிறது.

14. இந்த அடிப்படையில்தான் அரிசி அரவை ஆலையாளர்கள், நெல் அரிசி மொத்த வியாபாரிகள் ஆகியோர், ஒரே சமயத்தில் வியாபாரத்திற்காக வைத்துக்கொள்ளக்கூடிய நெல் அரிசி உச்சவரம்பும் அக்டோபர் 1978-க்குப் பின்பு, மிகக் கணிசமாக, உயர்த்தப்பட்டுள்ளது. அரிசி அரவை ஆலையுள்ள மொத்த வியாபாரிகள் ஒரே சமயத்தில் 2,400 குவிண்டால் நெல்லும், மற்ற மொத்த வியாபாரிகள் 750 குவிண்டால் நெல்லும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கும் நிலையை உறுதிப்படுத்துவதற்காகவே, இந்த நடவடிக்கையும் எடுக்கப் பட்டுள்ளது.

### பொது விநியோகம்.

15. பொது விநியோக முறையின் கீழ், அரிசி வழங்குவதும் தொடர்ந்து நடந்து வருகிறது. வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகவும்; நயமான விலை களிலும் கிடைத்து வருவதால், பொது விநியோக முறையின் கீழ் அரிசி விற்பனை சென்ற ஆண்டில் மிகக் கணிசமாகக் குறைந்தது. 1976 ஆம் ஆண்டில் 6 இலட்சம் டன்கள் விநியோகிக்கப்பட்டதற்கு எதிராக, 1978 ஆம் ஆண்டில் 1 இலட்சம் டன்கள் அரிசிதான் விநியோகமாயிற்று. இவ்வாறு பொது விநியோக முறையில் விற்பனை குறைந்துள்ளது, வெளிச்சந்தையில் தாராளமாக அரிசி கிடைத்து வருவதால்தான். அதே சமயத்தில், விலைகள் ஏறிவிடாமல் தடுப்பதற்குப் பாதுகாப்பு நடவடிக்கையாகப் பொது விநியோக முறையும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

16. நெல்லின் கொள்முதல் விலை ரூ. 74 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த நேரத்தில், பொது விநியோக முறையின் கீழ், மோட்டா ரக அரிசியின் விலை ரூ. 1.60 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது இப்போது கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 85 ஆக உயர்ந்த பின்பும், பொது விநியோக முறையின் கீழ்; மோட்டா ரக அரிசியின் விலையையும், நடுத்தர ரக அரிசியின் விலையையும் உயர்த்தாமல் கிலோவுக்கு ரூ. 1.60 ஆகவே, தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு நட்டம் ஏற்படுகின்றபோதிலும், நுகர்வோரின் நலனைக் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோதுமை.

17. தமிழ்நாட்டில் அரிசி நிலைமை மிகவும் திருப்திகரமாக இருப்பதாலும், சோளம், கம்பு, கேப்பை போன்ற சிறு தானியங்களும் தாராளமாகக் கிடைப்பதாலும், பொது விநியோக முறையின் கீழ் கோதுமையின் விற்பனை பெரிதும் குறைந்து விட்டது. 1975 ஆம் ஆண்டில் மாதம் 50,000 டன்கள் கோதுமை விற்பனையாகி வந்ததற்கு மாறாக, இப்போது கோதுமையின் விற்பனை மாதம் 3,000 டன்கள் அளவில்தான் உள்ளது. அரிசி தட்டுப்பாடு ஏற்படும் நேரத்திலோ, அரிசியின் விலை ஏறிவிடுகின்ற போதிலோ மட்டுமே, கோதுமையைப் பயன்படுத்தும் பழக்கத்தை மாற்றிக் கொண்டு, சத்துணவின் தேவையை நிறைவு செய்ய, அரிசியோடு கோதுமையையும் அன்றாடம் பயன் படுத்துவது நல்லது என்பதைக் கருதி, தமிழக மக்கள் கோதுமையைப் பயன்படுத்துவதை அதிகரித்துக்கொள்வது நல்லது. அண்மையில் மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்படும் கோதுமையின் விலையை மத்திய அரசு குவிண்டாலுக்கு ரூ. 125-லிருந்து ரூ. 130 ஆக உயர்த்திய பின்னரும், தமிழக அரசு கோதுமையின் சில்லறை விற்பனை விலையை உயர்த்தாமல், கிலோ ரூ. 1.40 அளவிலே தொடர்ந்து விற்று வருகிறது. அரிசியின் விலையைவிடக் கோதுமையின் விலை குறைவு என்பதையும், கோதுமையையும் பயன் படுத்துவது உடல் நலத்திற்கு உகந்தது என்பதையும், தமிழக மக்கள் ஏற்றுக் கொண்டு கோதுமையைப் பெருமளவில் பயன்படுத்த முன்வரவேண்டும்

18. தமிழ்நாட்டில் இயங்கிவரும் 31 கோதுமை அரைவை ஆலைகள் தங்கள் அரைவைத் திறன் முழுவதையும் பயன்படுத்தும் அளவிற்குத் தேவையான கோதுமை இப்போது தாராளமாக வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு மேலாகவும் அரைக்க விரும்பும் ஆலைகளுக்கு, அவற்றின் அரைவைத் திறனில் 50 விழுக்காடு கூடுதல் ஒதுக்கீடு செய்யவும் இப்போது வசதி செய்யப் பட்டுள்ளது. ஆலைகளுக்குக் கோதுமை தாராளமாக வழங்கப்படுவதின் பயனாக, மைதா, ரவை போன்ற கோதுமைப் பொருட்களின் விலைகள் வெளிச்சந்தையில் நிதானமாகவே உள்ளன. கோதுமை, கோதுமைப் பொருட்களின் மீது, எந்தவிதக் கட்டுப்பாடும் இப்போது கிடையாது.



சர்க்கரை.

19. 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் வரை சர்க்கரைக் கட்டுப்பாட்டுக் கொள்கையை மத்திய அரசு பின்பற்றி வந்தது. அதன்படி நாட்டிலே உற்பத்தியான சர்க்கரையில் 65 விழுக்காடு லெவி முறையின்கீழ் விநியோகத் திற்கும், 35 விழுக்காடு சர்க்கரை, வெளிச் சந்தை விற்பனைக்காகவும் ஒதுக்கப்பட்டு வந்தது. அத்திட்டத்தின் கீழ், சுமார் 19,000 டன்கள் லெவி சர்க்கரை ஒவ்வொரு மாதமும் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டு வந்தது. லெவி சர்க்கரையின் விலை கிலோ ரூ. 2.30 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சர்க்கரை விநியோகக் கொள்கையில் மத்திய அரசு மாற்றம் செய்து, லெவி முறையை நீக்கிவிட்டது. இதையொட்டி, சர்க்கரை ஆலைகளுக்குப் பெரும் பிரச்சினைகள் எழுந்துள்ள போதிலும், விவசாயிகள் கரும்புக்குப் பெற்று வந்த விலை குறைந்து விட்டபோதிலும், நுகர்வோரைப் பொறுத்த வரையில் வெளிச் சந்தையில் சர்க்கரை கிலோ ரூ. 2.10 முதல் ரூ. 2.30 அளவில் தாராளமாகக் கிடைத்து வருகிறது. சர்க்கரையின் விலை ஏறிவிட்டால் விலையைக் கட்டுப்படுத்துவதற்காகத் தமிழக அரசிடம் சர்க்கரை கையிருப்பும் கணிசமாக உள்ளது.

மண்ணெண்ணெய்.

20. தமிழகத்திற்கு மத்திய அரசு ஒவ்வொரு மாதமும் ஏறக்குறைய 33,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து வருகிறது. மத்திய அரசு, அண்மையில் மண்ணெண்ணெய் மீது கலால் வரியை உயர்த்தியதின் விளைவாக, மண்ணெண்ணெயின் சில்லரை விற்பனை விலையில் லிட்டர் ஒன்றுக்கு 10 பைசா விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் விநியோகத்தில், தட்டுப்பாடோ, நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைகளுக்கு மேலாக விற்பனை செய்யப்படும் நிலைமையோ, ஏற்படாத வண்ணம் தடுக்க, விழிப்பான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. கிராமங்களிலும் மண்ணெண்ணெய் விநியோகத்தை விரிவுபடுத்த, கிராம நியாய விலைக் கடைகள் மூலமாகவும் மண்ணெண்ணெயை வழங்குவதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து, மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

## II கிராமந்தோறும் நியாயவிலைக் கடைகள்.

21. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடை திறக்கப்படு மென்று இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அறிவிப்பு செய்தது. இவ்வாறு கிராமங்கள் அனைவற்றிலும் பல்லாயிரக்கணக்கான கடைகளைத் திறந்து

இயக்குவதில் செலவு ஏராளமாக ஆகும் என்று உணர்ந்திருந்தபோதிலும், கிராம மக்களுக்கு இந்த வசதி கிடைக்கவேண்டுமென்ற கவலையில் அரசு இக்கொள்கை முடிவைச் செய்தது. கிராமங்களில் பொது விநியோக முறையை விரிவாக்கவேண்டுமென்று அனைத்திந்திய அடிப்படையில் இப்போது முடிவு எடுக்கப்பட்டு, அதை இன்னும் ஆறுமாத காலத்தில் செயல்படுத்த வேண்டுமென்று, மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அறிவுரை கூறியுள்ளது. இதற்கு முன்னதாகவே தமிழகத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதும், இத்திட்டத்தில் நாடு முழுவதற்கும் முன்னோடியாகத் தமிழகம் விளங்குகிறது என்பதும், நமக்கு மன நிறைவு அளிக்கக்கூடியது. இத்திட்டத்தை வகுத்துள்ள மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு இதனால் ஏற்படும் பெரும் நட்டத்தில் பாதியையாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்ற போதிலும், இதுவரை மத்திய அரசு மானியச் செலவில் பங்கு எதையும் ஏற்றுக்கொள்ள முன்வராதது நமக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. இந்த அரசும், பல்வேறு மாநில அரசுகளும், எழுப்பியுள்ள இந்த நியாயமான கோரிக்கைக்கு மத்திய அரசு விரைவில் இணங்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

22. தமிழ்நாட்டில் 16,660 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. இவற்றில் குடியிருப்புகள் இல்லாத கிராமங்கள் 925. அவை நீங்கலாக, 15,735, குடியிருப்புகள் உள்ள வருவாய்க் கிராமங்கள். இவற்றில் ஏற்கெனவே ஏறக்குறைய 5,800 கடைகள் இயங்கி வந்தன. இக்கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு இன்றியமையாத மற்ற பொருள்களையும் இக்கடைகளில் விற்பதற்கு ஏற்பாடு செய்து, அவற்றைப் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றும் நடவடிக்கையை அரசு மேற்கொண்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் இரண்டு அணுகு முறைகளை அரசு பின்பற்றியது. ஏற்கனவே இயங்கிவந்த உணவு பங்கீட்டுக் கடைகளைப் பல்பொருள் நியாய விலைக்கடைகளாக மாற்றுவது ஓர் அம்சம்; கடைகள் இல்லாத கிராமங்களில் புதிதாகக் கடைகளைத் திறப்பது மற்றோர் அம்சம். இந்த இரண்டு அம்சங்களையும் ஒருங்கிணைத்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு, தஞ்சை, தென் ஆர்க்காடு, திருநெல்வேலி, தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமும், எஞ்சிய மாவட்டங்களில் கூட்டுறவு அமைப்புகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.





23. இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே இயங்கி வந்த ஏறக்குறைய ,800 கடைகளில், 5,600-க்கு மேற்பட்ட உணவுப் பங்கீட்டுக் கடைகள், ல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றப்பட்டுவிட்டன. புதிதாகக் டைகள் திறக்கப்பட வேண்டிய சுமார் 10,000 கிராமங்களில் 8,000 ராமங்களில் கடைகள் இப்போது திறக்கப்பட்டுவிட்டன. மாவட்டவாரியாகப் திதாகத் திறக்கப்பட்டுள்ள கடைகளின் விவரமும், திறக்கப்பட வேண்டிய டைகளின் விவரமும், கீழே உள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். | மாவட்டம். | திறக்கப்பட வேண்டிய கடைகள். | திறக்கப் பட்ட கடைகள். | மேலும் திறக்கப்பட வேண்டிய கடைகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | செங்கற்பட்டு .. | 1,435 | 1,343 | 92 |
| 2 | வட ஆற்க்காடு .. | 1,539 | 1,478 | 61 |
| 3 | திருச்சிராப்பள்ளி | 571 | 571 | .. |
| 4 | புதுக்கோட்டை | 558 | 558 | .. |
| 5 | மதுரை | 447 | 447 | .. |
| 6 | இராமநாதபுரம் | 599 | 599 | .. |
| 7 | கோவை | 867 | 367 | .. |
| 8 | நீலகிரி | 3 | 3 | .. |
| 9 | சேலம் .. | 604 | 604 | .. |
| 10 | குமரி .. .. | எல்லா கிராமங்களிலும் கடைகள் உள்ளன. | | |
| 11 | நெல்லை .. | 442 | 442 | .. |
| 12 | தஞ்சை .. | 1,040 | 1,040 | .. |
| 13 | தர்மபுரி .. | 613 | 613 | .. |
| 14 | தென் ஆற்க்காடு | 1,993 | .. | 1,993 |
| | மொத்தம் .. | 10,211 | 8,065 | 2,146 |

ஆகவே, இத்திட்டத்தின் கீழ் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றப்பட வேண்டிய கடைகள் இன்னும் ஏறக்குறைய இருநூறு கடைகள். புதிதாக திறக்கப்பட வேண்டியவை, 2,146 கடைகள். இப்பணியும் இன்னும் ஓரிரு மாதங்களில் நிறைவுபெற்று விடும்.

24. அறுவடைக் காலத்தில், உற்பத்தியாகும் பொருட்களை உற்பத்தி செய்யும் இடங்களிலேயே வாங்கி, தரமான பொருள்களை நயமான விலைகளில் விற்க, இத்திட்டத்தின் கீழ், கூட்டுறவு அமைப்புகளும், நுகர் பொருள் வாணிபக் கழகமும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. குறிப்பாகத் தமிழகத்தில் பற்றாக்குறையாக உள்ள பயறு வகைகள் போன்றவற்றை, உபரியாக உற்பத்தியாகும் வெளிமாநிலங்களிலிருந்து வாங்கி, நம் மாநிலத்தில் விற்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பொருள்களின் விலைகள் அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு, ஒத்ததரமுள்ள பொருள்களின் வெளிச்சந்தை விலைகளுக்குக் குறைவாகவே நிர்ணயிக்கப் படுகின்றன.

25. அதிக மக்கள் தொகை இல்லாத கிராமங்களில், வாரத்தில் மூன்று நாட்கள் கடைகளைத் திறந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு கிராமத்தில் மூன்று நாட்கள் கடைகளைக் கவனித்துக்கொள்ளும் அதே பணியாளர்கள், பக்கத்துக் கிராமத்தில் அடுத்த மூன்று நாட்கள் கடைகளைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்கள். இதன்மூலம் நிர்வாகச் செலவை சிக்கனப்படுத்துவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. இந்த இரட்டைக் கடை முறையின் கீழ், வாரத்தில் மூன்று நாட்கள் இயங்கும் கடைகளின் எண்ணிக்கை 1,457.

26. இதுவரை கிராம வாசிகள் நகரங்களுக்குச் சென்று வாங்கி வர வேண்டியிருந்த பல பொருள்களையும் இப்பொழுது கிராமங்களிலேயே வாங்கிக் கொள்ள இத்திட்டம் வசதி செய்துள்ளது. விலையேற்றத்தைத் தடுப்பதற்குப் பாதுகாப்பு நடவடிக்கையாகவும் இத்திட்டம் பயன்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் மாநில அரசுக்கு ஏறக்குறைய 4 கோடி ரூபாய் மானியச் செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராம மக்கள் நலனைக் கருதி, இந்த மானியச் செலவையும் பொருட்படுத்தாமல், தமிழக அரசு செயல்படுத்தி வரும் இத்திட்டம் அண்மையில்தான் செயல்படத் தொடங்கியது. தொடக்க கட்டத்தில் சில சிக்கல்களும் இடைஞ்சல்களும் ஏற்படக்கூடும். இவற்றிற்கு வெகு விரைவிலே தீர்வு காணப்பட்ட பின் இத்திட்டம் நிலைபெற்று, கிராம மக்களுக்கு சிறந்த தொண்டாற்றும் என்று உறுதியாக நம்பலாம்.



## III. விலைவாசிகள் நிலைமை.

27. தற்போதைய விலைவாசிகள் நிலைமையைச் சென்ற சில ஆண்டுகளில் நிலவி வந்த விலைவாசிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அன்றாடம் பயன்படுத்தும் பல இன்றியமையாப் பொருட்களின் விலைகள் தற்பொழுது குறைந்த அளவிலேயே உள்ளன என்பதைப் புள்ளி விவரங்கள் புலப்படுத்துகின்றன. இப்போக்கு மிகக் குறிப்பாகக் காணப்படுவது அரிசியைப் பொறுத்த வரையிலே. பெரும்பாலான மக்கள் பயன்படுத்தும் நடுத்தரப் புழுங்கல் அரிசியின் விலை, 1975 ஆம் ஆண்டில் கிலோ ரூ. 2.40 முதல் ரூ. 3.30 வரை இருந்ததற்கு மாறாக, இப்பொழுது கிலோ ரூ. 1.40 முதல் ரூ. 1.90 வரை உள்ளது. சன்ன ரகப் புழுங்கல் அரிசியின் விலையும் இப்போது ரூ. 1.50 முதல் ரூ. 1.90 வரை உள்ளது. சென்ற நான்கு ஆண்டுகளின் விலைகளுடன் ஒப்பிடும்போது, தற்போதைய விலை மிகக் குறைவானது. அரிசியின் பிற வகைகளிலும் இத்தகைய விலை இறக்கப் போக்கே காணப்படுகிறது.

28. கேப்பை, கம்பு, சோளம் முதலிய சிறு தானியங்களின் விலைகளும் கிலோ ரூ. 0.80 முதல் கிலோ ரூ. 1.20 வரை அமைந்துள்ளன. சென்ற ஐந்து ஆண்டு காலத்தில் நிலவிய விலைகளைவிட தற்போதைய விலை குறைவானதே.

29. சர்க்கரையின் விலைகளைப் பொறுத்தவரை, இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வெளிச்சந்தையில் சர்க்கரையின் விலை கிலோ ரூ. 4.00-க்கும் மேற்பட்டதாக இருந்த நிலைமைக்கு மாறாக, இப்போது வெளிச்சந்தையில் கிலோ ரூ. 2.10 முதல் ரூ. 2.30 வரை உள்ளது. லெவி முறை இருந்தபொழுது லெவி சர்க்கரைக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த விலையை விட, இப்போது வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலை குறைவாக அமைந்துள்ளது.

30. பருப்பு வகைகளைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு பற்றாக்குறை மாநிலமாகும். தமிழ்நாட்டில் துவரம் பருப்பிற்கான தேவை 2 இலட்சம் டன்களுக்கும் அதிகம்; தமிழ்நாட்டில் அதன் உற்பத்தியோ 35,000 டன்கள் தான். கடலைப் பருப்பின் தேவையும் 2 இலட்சம் டன்களுக்கும் அதிகம். அதன் உற்பத்தியோ இங்கு 5,000 டன்கள்தான். பாசிப்பருப்பின் தேவை 50,000 டன்களுக்கும் மேற்பட்டது; தமிழ்நாட்டில் அதன் உற்பத்தியோ 22,000 டன்கள்தான். உளுத்தம் பருப்பின் தேவை ஒன்றரை இலட்சம் டன்களுக்கும் அதிகம்; இங்கு அதன் உற்பத்தியோ 32,000 டன்கள்தான். மொத்தத்தில் பருப்பு வகைகளின் தேவை தமிழ்நாட்டில் ஆறு இலட்சம் டன்கள் என்று மதிப்பிட்டால், இங்கு அவற்றின் உற்பத்தி ஒரு இலட்சம் டன்களுக்கும் குறைவாகவே உள்ளது. ஏறக்குறைய ஐந்து இலட்சம்

டன்கள் பற்றாக்குறையை ஈடு செய்ய, பஞ்சாப், ஹரியானா, உத்திரப் பிரதேசம், மஹாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், ஆந்திரம் முதலிய மாநிலங்களிலிருந்து பருப்பு தமிழகத்திற்கு வரவேண்டியுள்ளது. துவரம் பருப்பின் விலை ஓராண்டுக்கு முன்பு கிலோ ரூபாய் 4.20 முதல் ரூபாய் 5.20 வரை இருந்ததற்கு மாறாக, இப்போது கிலோ ரூபாய் 3.65 முதல் ரூபாய் 5.00 வரை உள்ளது. கடலைப் பருப்பின் விலை சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 2.70 முதல் ரூபாய் 3.10 வரை விற்றது. இப்பருப்பின் விலையில் இந்த ஆண்டு சற்று ஏற்றம் காணப்பட்டு, கிலோ ரூபாய் 2.80 முதல் ரூபாய் 3.20 வரை உள்ளது. பருப்பு வகைகளின் விலைகளைச் சீர்படுத்தும் நோக்கத்துடன், கூட்டுறவு அமைப்புகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், இவை உற்பத்தியாகும் உபரி மாநிலங்களிலிருந்து விளைச்சல் காலத்தில் அதிக அளவில் வாங்கி, இங்கு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

31. கடலை எண்ணெயைப் பொறுத்தவரையில், கிலோ ரூபாய் 11.10 முதல் ரூபாய் 11.65 வரை 1977 ஆம் ஆண்டில் விற்று வந்ததற்கு மாறாக, இப்போது கிலோவிற்கு ரூபாய் 6.60 முதல் ரூபாய் 7.60 வரை விலை குறைந்துள்ளது. இந்த விலையில் தாராளமாகக் கடலை எண்ணெய் கிடைத்து வருகிறது. அயல்நாடுகளிலிருந்து எண்ணெய்களைத் தாராளமாக இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு வசதி செய்துள்ள காரணத்தால், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயின் விலைகளும் இப்போது நிதானமாகவே உள்ளன. நல்லெண்ணெய் சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 9.00 முதல் ரூபாய் 10.40-க்கு விற்று வந்ததற்கு மாறாக, இப்போது கிலோ ரூபாய் 7.15 முதல் ரூபாய் 8.80 வரை விற்கப்படுகிறது. தேங்காய் எண்ணெயின் புழக்கம் தமிழ்நாட்டில் குறைவாய் உள்ளது. மாநிலத்தின் தேவைகளுக்கான தேங்காய் எண்ணெயைக் கேரளத்திலிருந்தே பெரும் அளவிற்கு நாம் பெற்று வருகின்றோம். சென்ற ஆண்டிலிருந்த விலைகளைவிட இந்த ஆண்டில் விலை ஏற்றம் காணப்படவில்லை.

32. மிளகாய் வற்றல் சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 8 முதல் ரூபாய் 11 வரை விற்கப்பட்டு வந்ததற்கு மாறாக, இப்போது ரூபாய் 7 முதல் ரூபாய் 10 அளவில் விற்கப்பட்டு வருகிறது. புளியின் விலையில் சென்ற ஆண்டு விலையை விட ஏற்றம் காணப்படுகிறது. சென்ற ஆண்டு கிலோ ரூ. 2.80 முதல் ரூ. 4.50 வரை விற்கப்பட்டு வந்த புளி, இந்த ஆண்டு ரூ. 3.50 முதல் ரூ. 5.50 வரை விற்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் புளியைப் பொறுத்தவரையிலும் பற்றாக்குறை உண்டு. நமது தேவையில் பெருமளவு, கர்நாடகம், ஆந்திரம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்படுகிறது. மற்ற



மாநிலங்களிலிருந்தும் புளியை வரவழைத்து, பொது விநியோக அமைப்பில் குறைந்த விலையில் விற்பதற்கான நடவடிக்கைகளில், கூட்டுறவு அமைப்புகளும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகமும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. தனியாரின் தற்போதைய விலை கிலோ ரூபாய் 2.40 முதல் ரூபாய் 3.50 வரை உள்ளது. இந்த விலை சென்ற ஐந்து ஆண்டுகளில் காணப்பட்ட விலைகளை விட மிகக் குறைவானதாகும்.

33. காய்கறி, இறைச்சி, விறகு ஆகியவற்றின் விலைகளும் உயர்ந்துள்ளது, அரசுக்குக் கவலை அளிப்பதாய் உள்ளது. காய்கறிகளின் விலைகளைப் பொறுத்தவரை, மொத்த விலைகளுக்கும், சில்லறை விலைகளுக்குமிடையே பெருத்த வேறுபாடு காணப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு, காய்கறி வியாபாரிகளின் சங்கத்தினருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக, இச்சங்கத்தினரே முன்வந்து, நியாய விலைக் காய்கறிக் கடைகளைச் சென்னை நகரில் நடத்தினர், இப்போதும் குறுகிய அளவில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. சென்னை நகரில் இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இது தவிர, நியாய விலைகளில் காய்கறிகளை விற்கக் கூட்டுறவு சிறப்பு அங்காடிகளும் முயற்சி எடுத்து வருகின்றன. இறைச்சியைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலிருந்து ஆடு, மாடுகள் மற்ற மாநிலங்களுக்குச் சென்றுவிடுவதும், விலை உயர்வுக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. அதைத் தடுப்பது குறித்துப் பரிசீலிக்கப்பட்ட நேரத்தில், அத்தகைய தடை விதிப்பது அனைத்திந்தியக் கொள்கைக்கு உகந்ததாயிராது என்று மத்திய அரசு அறிவுரை கூறியது. இறைச்சி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள சில்லறை வியாபாரிகளைக் கூட்டுறவு அமைப்பில் கொண்டு வந்து, அவர்களே நேரடியாக மொத்த வியாபாரமும் செய்வதற்கு வசதி செய்து, விலைகள் குறைவதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விறகைப் பொறுத்தவரை, வனத் துறையினருடன் தொடர்பு கொண்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சில விறகுக் கடைகளைச் சென்னை நகரில் திறந்து நடத்தி வந்தது. நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருந்த கட்டத்தில், அதைச் சமாளிப்பதற்காகக் குறுகிய காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டு, நெருக்கடி தீர்ந்த பின் நிறுத்தப்பட்ட இந்தத் தற்காலிக நடவடிக்கையை மீண்டும் தொடர்ந்து நடத்த முடியுமா என்பதும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விலைவாசிகளைக் குறைக்க அரசு விழிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்கிற அதே நேரத்தில், வர்த்தகர்களிடையே சுயகட்டுப்பாடும், பொதுநல உணர்வும், நுகர்வோரிடையே விலையேற்றத்திற்குக் கட்டுப்பாடான எதிர்ப்பு உணர்வும் பரவினால்தான், இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண முடியும் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

## வர்த்தக பண்டக் குழுக்கள்.

34. கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது, உணவுத் துறையின் கொள்கை விளக்க உரையில், மேல் நாடுகளில் உள்ளதைப் போன்று, இன்றியமையாப் பண்டங்களைப் பொறுத்த வரையில், வர்த்தகர்கள் தாங்களாகவே சுயக்கட்டுப்பாடு செய்து கொள்ளும் வகையில் வர்த்தக பண்டக் குழுக்கள் அமைத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடப்பட்டது. இந்த ஆலோசனையைச் செயல்படுத்துவதில் சில வர்த்தகச் சங்கங்கள் ஆர்வமும் அக்கறையும் காட்டியுள்ளன. கோவை மாவட்டத்தில் உள்ள இந்திய வர்த்தகச் சங்கம் இக் குழுக்களை அமைப்பதற்கு முன் வந்துள்ளது. இதே போன்று, திருச்சி மாவட்டத்திலும், வர்த்தகச் சங்கங்கள் பண்டக் குழுக்கள் அமைப்பதற்கு முடிவு செய்து நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. இவற்றை முன்மாதிரியாகக் கொண்டு, மற்ற வர்த்தகச் சங்கங்களும் இத்தகைய வர்த்தகப் பண்டக் குழுக்களை அமைத்து செயல் பட்டால், அது வர்த்தகச் சமுதாயத்தின் நலனுக்கும், நுகர்வோரின் நலனுக்கும் உகந்ததாக இருப்பதோடு, இரு சாராருக்குமிடையே நல்லுணர்வும் நெருங்கிய ஒத்துழைப்பும் உருவாக்க வழி ஏற்படும்.

## வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள்.

35. மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான இன்றியமையாப் பண்டங்களின் வணிகத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன், வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள், 1955 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நெல், அரிசி, சிறு தானியங்கள், கோதுமை, கோதுமைப் பொருள்கள், கடலை எண்ணெய், வனஸ்பதி, சர்க்கரை போன்ற பண்டங்களின் வர்த்தகத்தை ஒழுங்கு படுத்துவதற்கு தற்போது நடைமுறையில் உள்ள ஆணைகளில் முக்கியமானவை :—

(1) தமிழ்நாடு நெல் அரிசி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

(2) தமிழ்நாடு கோதுமை, கோதுமைப் பொருள்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

(3) தமிழ்நாடு உணவு தானிய வர்த்தகர்கள் (உரிமம் வழங்கும்) ஆணை, 1968.

(4) தமிழ்நாடு நிலக்கடலை, நிலக்கடலைப் பொருள்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.



(5) தமிழ்நாடு வனஸ்பதி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

(6) தமிழ்நாடு சர்க்கரை, வர்த்தகர்கள் உரிமம் வழங்கும் ஆணை, 1962.

(7) தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1973.

இக்கட்டுப்பாடு ஆணைகளின் கீழ், மொத்த வணிகர்களுக்கு உரிமங்களும், சில்லறை வணிகர்களுக்கு பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. மேலும், பொது நலனுக்குக் குந்தகம் ஏற்படாதவண்ணம் வர்த்தகர்கள் செயல்படத் தேவையான ஆணைகள் பிறப்பிப்பதற்கும் இக்கட்டுப்பாடு ஆணைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்தக் கட்டுப்பாடு ஆணைகளின்படி வர்த்தகர்கள், தங்களின் கொள்முதல், விற்பனை, கையிருப்பு ஆகியவற்றின் விவரங்களை உரிமம் வழங்கும் அலுவலருக்கு மாதம் இருமுறை தெரிவிக்க வேண்டும். மேலும், வணிகர்கள் ஒரே சமயத்தில் வைத்துக்கொள்ளக் கூடியவற்றிற்கு உச்ச வரம்பும் இக்கட்டுப்பாடு ஆணைகளில் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

36. தமிழகம் பருப்பு உற்பத்தியில் பற்றாக்குறை மாநிலமாக இருப்பதால், வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதியை நம்பி இருக்கிறது. இறக்குமதி செய்யப்படுகின்ற பருப்பைச் சரியான முறையில் வர்த்தகர்கள் விற்பனை செய்வதைக் கண்காணிக்கும் வகையில், பருப்பு வர்த்தகத்தை ஒழுங்கு படுத்துவதற்கென, தனியாக ஒரு பருப்பு வர்த்தகக் கட்டுப்பாடு ஆணையை அரசு பிறப்பித்துள்ளது. அதன்படி உளுத்தம் பருப்பு, பச்சைப் பயிறு, கடலை, பட்டாணிக் கடலை போன்ற பருப்பு வகைகளை வியாபாரம் செய்வதற்கு வணிகர்கள் உரிமம் பெற வேண்டும்.

## விருந்தினர் கட்டுப்பாடு ஆணை.

37. திருமணங்கள், இறுதிச் சடங்குகள், சாதாரண விருந்துகள் போன்ற வைபவங்களில் ஆடம்பரமான வகையில் உணவுப் பண்டங்களைச் செலவழிப்பதைத் தடுத்து அதன்மூலம் உணவுப் பொருட்களைச் சேமிக்க, தமிழக அரசு 25—3—1976 ஆம் நாள் விருந்தினர் கட்டுப்பாடு ஆணையைப் பிறப்பித்தது. தமிழகத்தில் உணவு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருப்பதால், விருந்தினர் கட்டுப்பாடு தேவையில்லை என அரசு முடிவு செய்து, இந்த ஆணையை 13—7—1978-ல் ரத்து செய்தது. இருந்த போதிலும், படாடோபச் செலவுகளைத் தவிர்ப்பது நாட்டின் பொது நலனுக்கு

மட்டுமல்ல, தங்கள் சொந்த நலனுக்கும் உகந்தது என்பதை பொதுமக்கள் உணர்ந்து, விருந்துகள் போன்றவற்றில் சுய கட்டுப்பாடுகளைத் தாங்களே உவந்து பின்பற்றுவது நலம்.

### இன்றியமையாப் பொருட்கள் குற்றப் புலனாய்வுத் துறை.

58. தமிழகத்திற்குள்ளாக, அரிசி நெல் நடமாட்டத் தடைகளும் லெவி நிபந்தனைகளும் அடியோடு நீக்கப்பட்டுவிட்ட சூழ்நிலையில், உணவுப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை, பதுக்கலைத் தடுப்பதிலும், இப்போது அமலிலுள்ள வர்த்தகக் கண்காணிப்புச் சட்டங்கள் சீராகப் பின்பற்றப் படுவதை உறுதிப்படுத்துவதிலும், முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக, 1977 ஆம் ஆண்டு, தமிழ்நாடு இன்றியமையாப் பண்டங்கள் (இருப்பு விலைப் பட்டியல், மற்றும் கணக்குப் பராமரித்தல்) சட்டத்தை வர்த்தகர்கள் மீறாமல் கண்காணித்துக்கொள்ள, இப்புலனாய்வுத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. 1978 ஆம் ஆண்டில் 1,511 வழக்குகளைப் பதிவு செய்தது. நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட 501 வழக்குகளில் 393 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. 12 வழக்குகள் தான் தள்ளுபடி செய்யப்பட்டன. எஞ்சியவை விசாரணையில் உள்ளன. சிமென்ட் விநியோகத்தில் தவறுகள் நேரிடாமல் கண்காணிக்கும் பொறுப்பும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மொத்த வியாபாரிகள், சட்டத்தின்படி நிர்ணயிக்கப் பட்டுள்ள சரக்கு உச்சவரம்புகளை மீறாமல் கண்காணிக்க ஆய்வுகளை நடத்தியும், மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுத்தும், இன்றியமையாப் பொருட்களில் தட்டுப்பாடு ஏற்படாத வண்ணம் இப்பிரிவு நடவடிக்கை எடுத்து வருகின்றது. கலப்படப் பொருட்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதிலும் இத்துறை தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

### IV அரிசி அரவை ஆலைகளை நவீனமயமாக்குதல்.

59. தமிழ்நாட்டில் மொத்தம் 16,000-க்கு மேற்பட்ட அரிசி அரவை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 6,000 ஆலைகள் பெரிய ஆலைகள்; மற்றவை, கூலி அரவை செய்யும் சிறிய ஆலைகள். அரவை செய்யும் அரிசியின் தரத்தை உயர்த்தவும், நெல்லிலிருந்து கிடைக்கும் அரிசியின் அளவை அதிகப்படுத்தவும், அரிசி ஆலைகளில் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசு, அரிசி ஆலைக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ், 1970 ஆம் ஆண்டிலேயே ஆணைகள் பிறப்பித்துள்ளது. 1975 ஆம் ஆண்டுக்குள் இந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் ஆலைகளை நவீனமயமாக்குவதற்கு





மேலும் இரண்டு ஆண்டு காலம் அவகாசம் அளிக்கப்பட்டது. நவீன இயந்திரங்கள் கிடைப்பதிலும், அதற்காகும் மூலதனச் செலவுக்காக வங்கி களிலிருந்து உதவி பெறுவதிலும், சில சிக்கல்கள் இருந்தன என்று முறையீடுகள் வந்த காரணத்தால், மேலும் அவகாசம் தரப்படவேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தியதன் பயனாக, மேலும் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பொழுதுள்ள நிலைமையின்படி, 1975 ஆம் ஆண்டு எப்ரல் 30 ஆம் தேதிக்கு முன்னால் உரிமம் பெற்ற ஆலைகள், 1980 ஆம் ஆண்டு எப்ரல் 30 ஆம் தேதிக்குள் நவீனமயமாக்கிக்கொள்ளவேண்டும். 30—4—1977-க்குப் பின்பு, நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்ட ஆலைகளுக்குத் தான் உரிமம் வழங்கப்படுகிறது. இந்த நிபந்தனைகள் ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர் அல்லது ஷெல்லர் பொருத்தியுள்ள ஆலைகளுக்குப் பொருந்தும்.

40. ஒரு ஹல்லர் பொருத்தப்பட்ட ஆலைகளைப் பொறுத்தவரை, ஏற்கனவே இயங்கி வந்த ஆலைகள் நவீனமயமாக்கிக்கொள்ள 6—9—1981 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. புதிய ஆலைகளைப் பொறுத்த வரையில், கிராமப் பகுதியில் அமைந்து, 15 குதிரை சக்திக்கு மேற்படாத இயந்திரங்கள் பொருத்தப்பட்டு, கூலி அரவை மட்டுமே செய்கின்ற ஆலைகள் உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 5 ஆண்டு காலத்திற்குள் நவீனமயமாக்கிக்கொள்ளவேண்டும்.

41. நவீனமயமாக்குவதற்காகும் மூலதனச் செலவிற்கு நிதி உதவி செய்யுமாறு வங்கிகளுக்கும் மத்திய அரசு அறிவுரை கூறியுள்ளது. இத்திட்டத்தின் தன்மைகளை விளக்கவும், செய்முறை விளக்கங்களுக்கு ஏற்பாடு செய்யவும், ஆலை அதிபர்களுக்குத் தொழில் ரீதியாக ஏற்படக் கூடிய ஐயப்பாடுகளைத் தீர்க்கவும், திருவாரூரில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையமும், தென்னார்க்காடு மாவட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் மத்திய அரசு நிதியுள்ள ஆராய்ச்சி நிலையமும், உதவி செய்ய முன்வந்துள்ளன. இந்தத் திட்டத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்யவும், திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஆலை அதிபர்களுக்கு ஏற்படக் கூடிய நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கும், ஆலை அதிபர்கள் வங்கிகளிலிருந்து நிதி உதவி பெறுவதற்கு ஆலோசனை கூறவும், உணவு வழங்குபொருள் ஆணையாளர் அலுவலகத்தில், இணை ஆணையாளரைத் தலைவராகக் கொண்ட ஒரு தொழில் நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் தொழில் நுட்ப நிபுணர்களுடன் ஆலை உரிமையாளரின் பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர். இந்த நடவடிக்கைகள், நாட்டின் உணவுப் பொருளாதாரப் பொது நலனுக்கு உகந்ததாய் உள்ளதோடு, ஆலை

அதிபர்களின் தொழில் நலன்களுக்கும் ஏற்றதாக இருக்கின்றன என்ற அடிப்படையில் உரிய காலத்திற்குள் ஆலைகளை நவீனமயமாக்கிக் கொள்ள ஆலை அதிபர்கள் முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

## V. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

42. தமிழகத்தில் உணவு நெருக்கடி கடுமையாக இருந்த கட்டத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நிறுவப்பட்டு, கொள்முதல் செய்யும் பொறுப்பும், நெல்லை அரிசியாக்கிச் சேமித்து வைத்துப் பொது விநியோகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் பொறுப்பும், அக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இப்போது உணவு நிலைமை மிகவும் வசதியாக இருப்பதால் கட்டாயக் கொள்முதல் செய்யவேண்டிய அவசியமில்லை. பொது விநியோக முறையின் கீழ் விற்பனையாகும் அரிசியின் அளவு வெகுவாகக் குறைந்து விட்டபோதிலும், எதிர்பாராத எந்த நிலைமையையும் சமாளிப்பதற்குப் போதிய கையிருப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் உள்ளது. நாடு முழுவதையும் அரிசியைப் பொறுத்தவரை, ஒரே உணவு மண்டலமாக மத்திய அரசு அறிவித்த நேரத்தில், எந்த விளைவுகளையும் சந்திப்பதற்கு ஆயத்தமாக இருக்கும் பொருட்டு கணிசமான கையிருப்பை உருவாக்கிக்கொள்ள வெளிச்சந்தையிலிருந்தும் மற்ற மாநிலங்களிலிருந்தும் அரிசியை வாங்கும் பொறுப்பும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பொறுப்பை இக்கழகம் மிகத் திறமையாக நிறைவேற்றியது. இன்று நம் மாநிலத்தில் உணவு நிலைமை சீராக உள்ளதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாகும்.

43. சேமிப்பு முறையிருப்பில் உள்ள அரிசியைத் தரம் கெடாமல் பாதுகாத்துப் பொது விநியோகத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு வசதியாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து 1,25 இலட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியுள்ளது. மேலும், 50,000 டன்கள் கொள்ளளவு கொண்ட 26 கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. அரிசி மட்டுமல்லாமல், கோதுமை, சர்க்கரை, கடலை எண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருள்களையும் இக்கழகம் சேமித்து வைத்து, விலையேற்றங்கள் எழும் நேரத்திலோ, பொருள்களின் தட்டுப்பாடு ஏற்படும் கட்டத்திலோ, நியாய விலையில் விநியோகத்தை மேற்கொள்கிறது. கடலை எண்ணெயில் கடுமையான நெருக்கடி ஏற்பட்ட கட்டத்தில், நியாயமான விலையில் கடலை எண்ணெயையும், சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெயையும் விற்க இக்கழகம் மேற்கொண்ட முயற்சிகள், விலைகளை நிதானப்படுத்துவதற்குப் பெரிதும் உதவின.



44. பொது விநியோக முறையைச் செயல்படுத்த இக்கழகம் 703 கடைகளை நடத்திவருகின்றது. இவற்றில் 174 கடைகள் சென்னை நகரத்திலுள்ளன. அக்கடைகளைத் தவிர, நுகர்வோருக்கு அன்றாடம் பயன்படக்கூடிய பல்வேறு பொருள்களையும் நியாயமான விலையில் விற்பதற்கு 33 அமுதம் சிறப்பு அங்காடிகளை சென்னையிலும் மற்ற மாவட்டங்களிலும் இக்கழகம் நடத்தி வருகின்றது. கிராமத்தில் நியாயவிலைக் கடைகள் திறக்கும் திட்டத்தில் நான்கு மாவட்டங்களில் கடைகளைத் திறக்கும் பொறுப்பு, இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தஞ்சை, தர்மபுரி, நெல்லை மாவட்டங்களில் இக்கழகம் 2,095 கடைகளை நடத்தி வருகிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடைகளை இன்னும் இரு மாதங்களில் இக்கழகம் தொடங்கும்.

45. பதின்மூன்று நவீனமயமான அரிசி ஆலைகளை இக்கழகம் நடத்தி வருகின்றது. 1978-79 ஆம் ஆண்டில் ஏறக்குறைய ஒரு இலட்சம் டன்களுக்கும் மேலான நெல் இந்த ஆலைகளில் அரவை செய்யப்பட்டது. இந்த ஆலைகளின் அரவைத் திறன் 91 விழுக்காடு அளவுக்கு சென்ற ஆண்டு, பயன்படுத்தப்பட்டது. இந்த ஆலைகள் இலாபகரமாகவே இயங்கி வருகின்றன.

46. கட்டாயக் கொள்முதல் இப்பொழுது நடக்காத சூழ்நிலையிலும், மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைகளுக்கும் கீழாக விலைகள் சரிந்துவிட்டால், விலைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ்; கொள்முதல் விலையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்குவதற்கு இக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. விவசாயப் பிரதிநிதிகள் பலர் கூறிய ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, மாவட்டங்களில் நடக்கும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலமாகவும் நெல்லை வாங்குவதற்கு இக்கழகம் முன் வந்தது. பரிட்சார்த்தமாக வட ஆர்க்காடு, தஞ்சை மாவட்டங்களிலே இத்திட்டத்தைச் செயல்படுத்தியது.

47. அண்மையில் சிமெண்டின் விலைகள் உயர்ந்து, சிமெண்ட் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலைமையைத் தவிர்க்க, சிமெண்ட் விநியோக முறையில் அரசு சில மாறுதல்களைச் செய்துள்ளது. இப்புதிய கொள்கையின்படி, கூட்டுறவு அமைப்புகளுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும், சிமெண்ட் விநியோகத்தில் பங்கு அளிக்கப்பட்டுள்ளது. 1—1—1979 முதல் அமுலுக்கு வந்த இப்புதிய திட்டத்தின்கீழ், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பல்வேறு மாவட்டங்களிலும் 131 விநியோக உரிமங்களைப் பெற்று, சென்ற இரண்டு மாதங்களில் சுமார் 25,000 டன்கள் சிமெண்டை விநியோகம் செய்துள்ளது. சிமெண்ட் விநியோகத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்

கழகமும் பங்கேற்றுக் கொண்டதின் மூலம், அரசு நிர்ணயித்த விலைகளில் தடையின்றி, கிராம மக்களுக்கும், நகர் வாழ் மக்களுக்கும் சிமென்ட் கிடைக்க வசதியான சூழ்நிலை உருவாகியுள்ளது.

48. அண்மையில் சென்னை நகரம் மழையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நேரத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50 கிலோ அரிசியைத் தமிழக அரசு இலவசமாக வழங்கியது. இத்திட்டத்தின்கீழ் சென்னை நகரத்தில் மட்டும் ஏறக்குறைய 1½ இலட்சம் குடும்பங்களுக்கு அரிசி வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மற்ற பகுதிகளில் 68,000 குடும்பங்களுக்கு அரிசி வழங்கப்பட்டது. சென்னை நகரத்தில் 50 கிலோ கொண்ட அரிசி மூட்டைகளைத் தயார் செய்து, மிக விரைவான அளவில் இந்த விநியோகத்தைத் திறம்பட நடத்துவதற்குக் குறுகிய காலத்தில் மிகத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்ட கழகத்தின் பணி அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

49. கட்டாயக் கொள்முதல் நீக்கப்பட்டுவிட்ட சூழ்நிலையில் இக்கழகத்தின் வர்த்தக நடவடிக்கைகள் குறைந்துள்ளன. மேலும் கோதுமையின் விற்பனை பெரிதும் குறைந்து விட்டதாலும், சர்க்கரை கட்டுப்பாடு நீக்கத்திற்குப் பின்பு லெவி சர்க்கரை விநியோகம் நின்றுவிட்டதாலும், இதுவரை இலாபகரமாக இயங்கிவந்த இக்கழகம், இப்போது நெருக்கடியான நிதி நிலைமையைச் சந்திக்க வேண்டியுள்ளது. உணவு நிலைமையில் எழும் மாற்றங்களுக்கு ஏற்ப, அரசின் உணவுக் கொள்கையைத் திறம்பட நடத்தும் முக்கியப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள இக்கழகம், புதிய சூழ்நிலையின் அறைகூவல்களையும், பொருளாதார நெருக்கடியையும், தன் வாணிபத் திறமையாலும், சிக்கன நடவடிக்கைகளாலும், சமாளித்து, பொது மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்யத் தன்னை ஆயத்தம் செய்து வருகிறது.

## VI தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

50. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தமிழ்நாடு அரசால் 1958 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் புதிய சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியும், சொந்தக் கட்டிடங்கள் இல்லாத இடங்களில் வாடகைக்கு இடங்களை அமர்த்தியும், உணவு தானியங்கள், உரங்கள் மற்றும் ஏனைய பொருள்களை விஞ்ஞான ரீதியில் பாதுகாக்க உதவுவதில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

51. இந்நிறுவனம், தமிழக அரசினால், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தினரின் நிதியுதவியையும் பெற்று, நடத்தப்படுகிறது. 31—3—1978 ஆம் ஆண்டு முடிய இந்நிறுவனத்தின் மூலதனம் ரூ. 201 இலட்சமாகும். 1979-80 ஆம் ஆண்டிற்குள் இந்நிறுவனத்தின் மூலதனத்தை ரூ. 291 இலட்சத்திற்கு உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



52. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் ரூ. 380 இலட்சம் செலவில் 1,62,000 மெட்ரிக் டன்கள் கொள்ளளவுள்ள கிடங்குகளைக் கட்ட, இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. முதலாவது ஆண்டில், அதாவது 1978-79 ஆம் ஆண்டில், 13,500 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு உள்ள கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 15,508 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு உள்ள கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டு விடும். இதன்படி, 1978-79 ஆம் ஆண்டின் முடிவில் 1,51,327 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு உள்ள கிடங்குகள் கைவசம் இருக்கும். 1979-80 ஆம் ஆண்டில் 54,000 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு கொண்ட கிடங்குகளை 118.16 இலட்ச ரூபாய் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

53. 1979-80 ஆம் ஆண்டில் தூத்துக்குடி துறைமுகத்திற்குள் ரூ. 41.16 இலட்சத்தில் ஆறு புதிய கிடங்குகளைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 1980-81-ல் அங்கு மேலும் ஐந்து கிடங்குகள் கட்டப்படும். தூத்துக்குடி துறைமுக அதிகாரிகள் பத்து ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தை ஆண்டு வாடகை ரூ. 15,285-க்கு நீண்டகாலத்திற்கு தமிழ்நாடு கிடங்கு நிறுவனத்திற்குக் கொடுக்க இசைந்துள்ளார்கள்.

54. கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் இலாபத்தில் இயங்கியுள்ளது, கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து தெரியவரும் :—

| ஆண்டு. | | நிகர இலாபம். (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1974—75 | .. | 9.96 (தணிக்கை செய்யப்பட்டது). |
| 1975—76 | .. | 28.85 ஷை |
| 1976—77 | .. | 18.52 ஷை |
| 1977—78 | .. | 40.59 (உத்தேச மதிப்பு). |
| 1978—79 | .. | 40.76 ஷை |

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

திங்கட்கிழமை, 1979 ஏப்ரல் 23.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இன்று நிறைய அலுவல்கள் இருக்கின்றன. ஆகவே வினா நேரத்தை விரைவிலே முடிக்க வேண்டும். துணை வினாக்களைக் குறைத்துக் கொண்டு உதவிபுரியுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

### *Selection Grade Scale of Pay for More Posts.*

*331 *Q.*—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether there is any proposal to grant Selection Grade Scale of Pay for posts for which there are no promotional opportunities and which are not covered by G.O. Ms. No. 1050, Finance (Pay Commission), dated the 5th October 1978; and

(*b*) if not, the reasons therefor?

### மேலும் பதவிகளுக்குத் தேர்வுநிலை சம்பள விதம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பதவி உயர்வு வாய்ப்புகள் இல்லாதவையும், நிதித் துறையின் (ஊதியக் குழு) 5—10—1978 ஆம் நாளிட்ட 1050 ஆம் எண் அரசாணையின் கீழ் வராதவையுமான பதவிகளுக்கு தேர்வுநிலை சம்பளவிதம் அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் என்ன?

[1979 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** (மாண்புமிகு நிதியமைச்சர் சார்பில்): (அ) & (இ) தேர்வு நிலைப்பதவிகள், சிறப்பு நிலைப்பதவிகள், பத்தாண்டுப் பணி முடிப்பதன் மேல் உயர் பதவிகளுக்குச் செல்லும் வசதி ஆகியவை பல வகையிலுமுள்ள ஏராளமான பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. கீழ் நிலையிலும் இடைப்பட்ட நிலையிலுமுள்ள பணியாளர்களில் பெரும்பாலோர் இந்தத் திட்டத்தினால் பயனடைகின்றனர். எனினும், இதனை ஒரு சில வகைப் பணியாளர்களுக்கு நீட்டிக்க இயலவில்லை. இந்த வகைப் பணியாளர்களின் எண்ணிக்கை மேற்சொன்ன திட்டத்தினால் பயனடையும் பணியாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவானதே. இப்பணியாளர்களைப் பொறுத்தமட்டில் குறிப்பிட்ட பணிக்கால அளவைப் பொறுத்து உயர் பதவிகளுக்கு அல்லது உயர் சம்பள விகிதங்களுக்கு உயர்வு பெறுவது, அவர்களின் சம்பள விகிதங்களுக்கும், அவர்களது பணியை மேற்பார்வையிடும் உயர் நிலையில் உள்ள பணியாளர்களின் சம்பள விகிதங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் குறைக்கும் அல்லது கீழ் நிலையில் உள்ள பணியாளர்கள் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மேற்பார்வைப் பணியாளர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும். இந்த நிலைமை உருவாயின், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் செவ்விய முறையில் செயல்படுவதற்குக் குந்தகமாக இருக்கும். பணிக்கால அளவின் அடிப்படையில் பணி முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் நியாயமான அடிப்படையில் ஏராளமான பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. பத்தாண்டு காலம் மன நிறைவு தரும் வகையில் பணியாற்றியதன் மேல், கீழ் நிலையில் உள்ள பணியாளர்கள் உயர் பதவிகளுக்கு, தேர்வு நிலைப் பதவிகளுக்கு அல்லது சிறப்பு நிலை பதவிகளுக்கு செல்லும் 'நெகிழ்வுத் திட்டத்தை' மேலும் சில வகையினருக்கு நீட்டிப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்திலே பணியாற்றக் கூடிய சிலர் பதவி உயர்வுக்கான வாய்ப்புகளே இல்லாத நிலையில் பணியாற்றுகிறார்கள். அப்படி இருக்கக் கூடியவர்களுக்காகத்தான் இந்தக் கேள்வியே கேட்கப்பட்டிருக்கிறது. அப்படி இருப்பவர்களைக் கருத்திலே கொண்டு, இது வரை இல்லாவிட்டாலும்கூட இனியாவது பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அவர்கள் அடுத்த பதவி உயர்வு பெறுவதற்கான வாய்ப்பு இல்லையென்றாலும் அதே நேரத்தில் அவர்களுக்கு அந்தப் பணியில் பதவி உயர்வு பெற்றால் என்ன ஊதியம் கிடைக்க வேண்டுமோ



1979 ஏப்ரல் 23] (திரு. கா. இராசா முகமது)

அந்த நிலைக்கு ஆதரவான சம்பள விகிதங்களை அவர்கள் 10 ஆண்டுகளில் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே அதைக் கவனத்திலே கொள்ள வேண்டியதில்லையென்றும், 'நெகிழ்வுத் திட்டம்' சில வகையினருக்குத் தேவையில்லையென்றும் அறிவித்திருக்கிறார்கள். பொதுவாக பதவி உயர்வு இல்லாவிட்டாலும்கூட, பணியின் நிறைவுக்கேற்ப சம்பள விகிதம் உயர வேண்டுமென்ற நோக்கம் இருக்கிறது. மேல்நிலையில் உள்ளவர்களின் சம்பள விகிதத்தை ஒத்துவரவில்லையென்று சொல்லும்போது, அரசு தனியாகக் கவனிக்கும்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** இரு கூறாக்கப்பட்ட பாடத் திட்டத்திலே பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்றக்கூடிய, பொறியியல் மற்றும் செயலகத் துறை ஆசிரியர்களுக்கு சிறப்புத் தேர்வு நிலை வழங்காததற்கான காரணம் என்ன? அவர்களுக்கும் சிறப்புத் தேர்வு நிலையை வழங்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல, சில பதவிகளில் பணியாற்றக் கூடியவர்களுக்கு பத்தாண்டுக் காலம் பணி நிறைவுக்குப் பிறகும் சிறப்புத் தேர்வு நிலை பெற முடியாத நிலை இருக்கிறது. அதே நேரத்தில் சிறப்புத் தேர்வு நிலை பெறுகின்றவர்களுடைய சம்பளத்தை இவர்கள் பெறுகிறார்களா இல்லையா என்று பார்க்க வேண்டும். அதிலே மிகப் பெரிய வேறுபாடு இருந்தால் அரசு கவனிக்கும். இப்பொழுது அப்படிப்பட்ட நிலை இல்லை என்று அரசு கருதுகிறது.

## *Part-time Employees.*

* 332 *Q.*—THIRU C. RAMALINGAM (on behalf of THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether any fixation of pay scale to the part-time employees working in Government Offices finds place in the recommendations of the Third Tamil Nadu Pay Commission; and

(*b*) if not, whether the Government will take steps for the fixation of the pay scale?

[1979 ஏப்ரல் 23

### பகுதிநேர ஊழியர்கள்.

**திரு. சி. இராமலிங்கம் (திரு. க. அறிவழகன் சார்பில்):** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மூன்றாவது தமிழ்நாடு ஊதியக்குழுவின் பரிந்துரைகளில், அரசு அலுவலகங்களில் பணியாற்றுகிற பகுதிநேர ஊழியர்களுக்கு ஊதிய விகிதம் ஏதும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா?

(இ) இல்லை எனில், ஊதிய விகிதத்தை நிர்ணயம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** (மாண்புமிகு நிதியமைச்சர் சார்பில்) : (அ) ஆம்.

(இ) எழவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** பகுதி நேர ஊழியர்கள் என்பதோடு, கிராஃப்ட் டீச்சர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற அந்த ஊதிய விகிதங்கள் பிரி-வொக்கேஷனல் இன்ஸ்ட்ரக்டர்களுக்குப் பொருந்தாது என்று சொல்லுகிறார்கள். கைத்தொழில் ஆசிரியர்களுக்குப் பொருந்துகிற நேரத்தில் அதே பணியையாற்றுகிற பி.வி.ஐ. ஆசிரியர்களுக்குப் பொருந்தவில்லை. இருவரும் ஒரே பணியைத்தான் ஆற்றுகிறார்கள். ஆகவே இவர்களுக்குள்ள அதே சலுகை அவர்களுக்கும் பொருந்துமென்று அரசு ஆணையைப் பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், கைத்தொழில் ஆசிரியர், வணிக ஆசிரியர், இசை ஆசிரியர் என்பவர்களுக்கு இப்போது மாற்றப்பட்ட ஊதியத்தை அறிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்தப் பணியில் இருக்கக்கூடியவர்களுக்கு அந்த ஊதியம் கிடைக்கவில்லையென்று சொன்னால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி:** இவ்வளவு காலத்திலிருந்துப் பின்னாலும் நடுநிலைப் பள்ளியிலே தொழிலாசிரியர்களாகப் பணியாற்றக்கூடியவர்களைப் பகுதி நேர ஊழியர்களாக வைத்திருக்கிறார்கள். விவசாயத் துறை என்றாலும், நெசவுத் துறை என்றாலும், டெய்லரிங் துறை என்றாலும், பகுதி நேர ஆசிரியர்களாக வைத்திருக்கிறார்கள். இப்படி இருக்கக் கூடிய முழுக் கல்வித் தகுதி பெற்றவர்கள் அத்தனை பேரையும்—கொஞ்சம் பேர்கள்தான் இருக்கிறார்கள்—முழு நேர ஊழியர்களாகச் செய்வதற்கு நிதித் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1979 ஏப்ரல் 23]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மூன்றாவது தமிழ்நாடு ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் அரசு அலுவலகங்களில் பணியாற்றுகிற பகுதிநேர ஊழியர்களுக்கு ஊதிய விகிதம் ஏதும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா என்பது கேள்வி. செய்யப்பட்டிருக்கிறது. சில ஊழியர்களுக்கு விடுபட்டுப் போயிருந்தால், அரசு கவனிக்குமா என்பது அடுத்த கேள்வி. அரசு கவனிக்கும். அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். முழு நேரப் பணியில் அமர்த்துவது என்பது கல்வியமைச்சர் மூலமாக நிதித் துறைக்கு வந்தால், அரசு அதைக் கவனிக்கும்.

### *Reservation of Posts for Backward Classes.*

* 333 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. V. D'MONTE): will the Hon. the Minister for Food be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to increase the percentage of reservation of posts in Government Services for Backward Classes; and

**(*b*) if so, the stage at which the matter now stands?**

### பிற்பட்ட வகுப்பினர்களுக்கு பதவி ஒதுக்கீடு.

**திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. வி. டி'மாண்டி சார்பில்) :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அரசுப் பணிகளில் உள்ள பதவிகளில் பிற்பட்ட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்படும் சதவிதத்தை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், இது தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** (அ) பின் தங்கிய வகுப்பினருக்காக அரசுப் பணிகளில் உள்ள பதவிகளுக்குண்டான ஒதுக்கீடு விழுக்காட்டை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** பின்தங்கிய வகுப்பினர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெற்றிருந்த இனங்களின் எண்ணிக்கை படிப்படியாக சேர்த்தப்பட்டு, இன்றைக்கு ஏறத்தாழ 80 சதவிதத்தினருக்கு மேலாக அந்தப்

(திரு. க. இராமமூர்த்தி) 

பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள். அதற்கேற்ற முறையிலே அரசுப் பணிகளில் உள்ள பதவிகளில் பிற்பட்ட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள விழுக்காட்டைத் திருத்தியமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** ஆரம்பத்திலே 25 விழுக்காடு ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது 31 விழுக்காடு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதைப் போல, 31 விழுக்காட்டிற்கும் மேல் அதிகப்படுத்த வேண்டுமானால், தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 18 விழுக்காட்டில் குறைப்பதா அல்லது முற்பட்ட சமுதாயத்தினருக்காக உள்ள 51 சதவிதத்தைக் குறைப்பதா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதனால் சில பிரச்சினைகள் எழும். இருந்தாலும் அரசு அதைப்பற்றி யோசிக்கும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அரசுப் பணிகளில் உள்ள பதவிகளில் பிற்பட்ட வகுப்பினருக்காக ஒரு குறிப்பிட்ட விழுக்காடு ஒதுக்கப்படுகின்றது. தனியார் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், நிறுவனங்களிலும் இந்த முறை பின்பற்றப்படுவதில்லை. அவர்களும் இதைப் பின்பற்ற வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** தனியார் துறை நிறுவனங்களும் இந்த முறையைப் பின்பற்ற அரசு ஆணையிடுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதைக் கல்வித் துறைதான் முடிவு செய்ய வேண்டும்.

(பிற்பகல் 4-10)

**திரு. பி. ஆர். தாமஸ் :** பிற்பட்ட வகுப்பினர் பட்டியலிலே ஜாதியினுடைய பெயர்களில் பல்வேறு தவறுகள் ஏற்பட்டு, அதுவே நிரந்தரமானதாக ஆகியிருக்கின்றது. உண்மையிலேயே தகுதியுள்ள மாணவர்களுக்கு இதனால் சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த ஜாதியினருடைய பட்டியலில் உண்மையானவர்கள் பெயரை வரையறுப்பதற்கு மீண்டும் அரசு பரிசீலனை செய்ய வேண்டும். அந்தப் பகுதியிலே உள்ள பல்வேறு தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலையும் சரி செய்து, அவரவர்கள் திட்டவட்டமாகச் சலுகைகள் பெற அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** திட்டவட்டமாக முடிவு செய்து தான் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், பின் தங்கியவர்கள் பட்டியலிலே சேர்க்கப்படவேண்டியவர்கள்தான் அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் இதிலே உள்ள பிரச்சினை என்னவென்றால், பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், தங்களை பிற்பட்டோர் பட்டியலிலே சேர்க்கவேண்டும் என்று விண்ணப்பம் அனுப்புகிறார்கள். பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தங்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இத்தனை ஆண்டுக் காலமாக இந்தத் துறை பணியாற்றிக் கொண்டிருக்கிறது. யாராவது நாங்கள் முன்னேறிவிட்டோம், எங்களை முன்னேறியவர்கள் பட்டியலிலே போடுங்கள் என்று விண்ணப்பம் போட்டிருக்கிறார்களா? அப்படி இதுவரை யாரும் வரவில்லை.



**திரு. சோ. ஆறுமுகம் :** பிற்பட்டவர்களின் நிலையைப் பற்றி ஆராய திரு. ஏ. என். சட்டநாதன் குழுவைப் போட்டார்கள். அதில் பிற்பட்டவர்கள் பட்டியலை இரண்டாகப் பிரித்து, பிற்பட்டவர்கள், மிகப் பிற்பட்டவர்கள் என்ற முறையில் 15, 16 சதவிகிதம் என்று பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பிற்பட்டவர்கள் பட்டியலில் முக்குலத்தோர் சேர்க்கப்பட்டிருந்தார்கள், அந்த முக்குலத்தோர் சமுதாயத்தினரை, மிகப் பிற்பட்டவர்கள் பட்டியலிலே சேர்க்கவேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறது. இதை இந்த அரசு நடைமுறைக்குக் கொண்டுவர உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** இந்த மாதிரி திரு. சட்டநாதனையாளர் குழு சிபாரிசு செய்தது 1974 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்போது இருந்த அரசு அந்தச் சிபாரிசுகளை அமுல்படுத்தவில்லை. இப்போதுள்ள இந்த அரசு ஏன் நிறைவேற்றக்கூடாது என்று கேட்பது அநியாயமில்லை. இருந்தாலும் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. க. இராமமூர்த்தி :** பிற்பட்டவர்களுக்கான சலுகைகள் பல நேரங்களில் நகரங்களிலே, முன்னேறிய பகுதிகளிலே இருப்பவர்களைப் போய் அடைகின்ற நிலை இருக்கிறது. அதை ஒவ்வொரு மாவட்டத்திற்கு இத்தனை சதவிகிதம் என்று அமைக்கலாம். உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு எதிராக இருந்தாலும், நடைமுறைப்படுத்தும்போது இந்தக் குறைகளைத் தீர்க்க அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** உயர்நீதி மன்றத் தீர்ப்பு இதற்கு எதிராக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிறகும் உயர் நீதி மன்றத்தினுடைய தீர்ப்பை அரசு எப்படி மீற முடியும். வேண்டுமென்றால் சட்டத்தை மாற்ற முயற்சிக்கலாம். அதற்கான சுத்திரத்தைப் போட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இத்தனை சதவிகிதம் ஒதுக்குவது, ஒட்டு மொத்தமாக மாநிலத்திற்கு என்று இல்லாமல் மாவட்டங்களுக்கு இத்தனை இடங்கள் என்று ஒதுக்கப்பட்டால், பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயத்தினருக்கு எத்தனை இடங்கள் என்று ஒதுக்குவது எளிதாக இருக்கும். ஆனால் இடங்கள் ஒதுக்குவது என்பது இப்போது மாநில ரீதியில்தான் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** அரசியல் சட்டத்திலே இடம் ஒதுக்குவதற்கு விதி உள்ளது. தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்டவர்கள், முன்னேறியவர்கள் என்ற மூன்று தரத்தினருக்கும் பதவி ஒதுக்கீடுகள் அரசுத் துறையில் மட்டுமே வழங்க முடிகிறது. ஆனால் இந்த அரசாங்கத்தினுடைய உதவிகளைப் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய தனியார் நிறுவனங்களில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த அமைச்சர் அவர்கள் அத்தகைய சட்டத்தை உருவாக்கி அதன் மூலம் தனியார் நிறுவனங்களில் வேலை அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** அரசியல் சட்டத்திலேயே இப்படி மூன்று சமுதாயமாகப் பிரித்திருக்கின்றனர், முன்னேறிய சமுதாயம், பிற்பட்டோர் சமுதாயம், தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயம் என்று பிரித்து அதற்காக இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். தனியார் துறைகளிலும் இதைப் பின்பற்ற வேண்டுமென்று இந்த அரசு வலியுறுத்துமா என்று கேட்கிறார்கள். அரசியல் சட்டத்தில் உள்ள இதை மத்திய அரசே பின்பற்றவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சட்டநாதன் குழு அளித்த அறிக்கையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சட்டநாதன் குழுவினுடைய அறிக்கை 1974-லே அளிக்கப்பட்டிருந்தாலும், மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல, கழக ஆட்சியிலே வன்னியர், மீனவர், முக்குலத்தோர் மிகப் பிற்பட்டவர்கள் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையிலே சலுகைகள் அளிப்பதற்கான ஒரு பரிந்துரை செய்திருக்கிறது. அப்படி பரிந்துரை செய்திருப்பது அரசுக்குத் தெரியுமா? இதைப் பின்பற்றி, அவர்களுக்குக் குறைந்தபட்சம் 15 அல்லது 16 சதவிகிதம் இடம் ஒதுக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** பரிந்துரை செய்திருப்பது என்பது வேறு. அரசு ஆணையிடுவது என்பது வேறு. சட்டநாதன் குழு சொல்லியதை, அன்று ஆட்சிப்பொறுப்பிலே இருந்த காலத்திலே அவருடைய அறிக்கையைப் பெற்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு பரிந்துரைதான் செய்தது என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த அரசு எந்தவிதமான ஆணையையும் பிறப்பிக்கவில்லை.



*Remuneration for Collection of Statistics for Ration Cards.*

* 334 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that the teachers, who were engaged in the work of collecting statistics for issue of Ration Cards in Kanyakumari District, were not paid any remuneration;

(*b*) if so, the reason therefor;

(*c*) the period during which these statistics were collected; and

(*d*) whether action will be taken to pay the remuneration early ?

**உணவுப் பங்கீடு அட்டைகளுக்கான புள்ளி விவரம் சேகரிப்பதற்கு ஊதியம்.**

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், உணவுப் பங்கீடு அட்டை வழங்குவதற்காக புள்ளி விவரம் சேகரித்துத் தந்த ஆசிரியர்களுக்கு, அதற்கு உரிய ஊதியம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது ?

(உ) மேற்படி புள்ளிவிவரம் எடுக்கப்பட்ட காலம் யாது ?

(எ) மேற்படி ஊதியத்தை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** (அ)—(எ) 1976-78 ஆண்டுகளுக்கான உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்குவதற்காக குமரி மாவட்டத்தில் குடும்ப புள்ளி விவரங்கள் கணக்கெடுக்கப்பட்டன. இப்பணியில் 2,019 ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டு 1976-ம் ஆண்டு சனவரி-பிப்ரவரி திங்கள்களில் மேற்கூறிய பணி தொடங்கி முடிக்கப்பட்டு விட்டது. இதுவரை 2,000 நபர்களுக்கு ஊதியத் தொகை வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 19 நபர்கள் ஊதியம் பெற வாராததினால் ஊதியத் தொகை வழங்க இயலவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 1976 ஜனவரியில் இந்தப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. நான் கேள்வி கேட்டது 1978-ல். 1978 வரை அதற்கான ஊதியம் கொடுக்கப்படவில்லை. அதற்குப் பிறகு கொடுத்தார்கள். இப்படி கிட்டத்தட்ட இரண்டு வருட காலம் தாமதமானதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** இது 1976-78 ஆம் ஆண்டுக்கான பங்கீட்டு புள்ளி விவரம் சேகரித்த ஊழியர்கள் ஊதியம் பற்றியது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி கேட்கின்ற நேரத்திலே தரப்படவில்லை. அவர்கள் கேள்வி கேட்கப்பட்டு முடிந்த பின்னாலே இது கொடுக்கப்பட்டிருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** பங்கீட்டு அட்டைகள் வழங்குகிறபோது, மண்ணெண்ணெய்க்காக என்று தனியாக அட்டை வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** இந்த மண்ணெண்ணெய் குடும்ப கார்டுகளிலேயே வழங்கப்பட வேண்டுமென்ற முடிவை அரசு எடுத்திருக்கிறது. அவசியம் ஏற்படுமானால், இந்த மண்ணெண்ணெய் பங்கீடு செய்வதற்காக குடும்பக் கார்டுகள் தனியாக வழங்குவது பற்றி அரசு யோசிக்கும்.

## *State Transport Corporations.*

* 335 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU C. R. LAKSHMIKANDHAN): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the number of bus routes in Tamil Nadu, in which each State Transport Corporation buses are operated, as on 1st September 1978; and

(*b*) the number of buses operated by each Corporation?

## அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்.

**திரு. பி. ஆர். தாமஸ் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1-9-1978 நிலவரப்படி அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஒவ்வொரு கழகத்திலும் எத்தனை வழித்தடங்களில் பேருந்துகள் இயங்குகின்றன ?

(இ) ஒவ்வொரு கழகத்திலும் எத்தனை பேருந்துகள் செயல்படுகின்றன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1-9-1978 நிலவரப்படி பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) பிரிவில் 233 வழித்தடங்களில் 1,523 பேருந்துகளும், (புறநகர்) பிரிவில் 187 வழித்தடங்களில் 411 பேருந்துகளும், (சிறப்பு) பிரிவில் 84 வழித்தடங்களில் 292 பேருந்துகளும், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் 406 வழித்தடங்களில் 744 பேருந்துகளும், சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 433 வழித்தடங்களில் 694 பேருந்துகளும், சோழன் போக்குவரத்துக் கழகத்தில் 325 வழித்தடங்களில் 559 பேருந்துகளும், அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் 155 வழித் தடங்களில் 282 பேருந்துகளும், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் 351 வழித்தடங்களில் 528 பேருந்துகளும், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் 148 வழித்தடங்களில் 279 பேருந்துகளும் ஆக மொத்தம் 2,322 வழித்தடங்களில் 5,312 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. க. இராமமூர்த்தி :** வழித்தடங்களில் நிரந்தரமாக ஜன நெருக்கம் குறையாமல் இருக்கக்கூடிய இடங்கள் என்று சில வழித்தடங்கள் இருக்கின்றன. சிலவற்றில் திருமணக் காலங்களிலே ஜன நெருக்கம் உண்டாகின்ற சூழ்நிலையில் இருக்கின்ற வழித்தடங்கள் இருக்கின்றன. இந்த மாதிரி வழித்தடங்களில் ஏற்படும் நெரிசலைக் குறைப்பதற்கு, இந்தக் குறையை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஏற்கனவே ஜாயிண்ட் டிரான்ஸ்போர்ட்டு சர்வே கமிட்டி என்று ஒரு ஆய்வுக்குழுவைப் போட்டு, எந்தெந்தப் பகுதிகளில் பேருந்துகளில் நெருக்கம் அறவே இல்லாமல் இருக்கிறது, எந்தெந்தப் பகுதிகளில் நெருக்கம் குறைவாக இருக்கிறது, எந்தெந்தப் பகுதிகளில் நெருக்கம் அதிகமாக இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ரூட்டு ரேஷனலைசேஷன் செய்வதற்கு என்று தனியாக அந்தக் குழுவைப் போட்டிருக்கிறோம். அதன் அறிக்கை வந்ததும் அதன் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 30—6—1979-க்குள் நடைமுறைக்குக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** பொதுவாக இத்தகைய வழித்தடங்களிலே எத்தனை மைல் தூரத்திற்கு சீசன் டிக்கெட்டு வழங்கப்படுகிறது ? மதுரையை எடுத்துக்கொண்டால், மதுரையிலிருந்து திண்டுக்கல், மதுரையிலிருந்து விருதுநகர் வரையிலே அன்றாடம் 400, 500 பயணிகள் சீசன் டிக்கட்டிலே ரெயில் மூலமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இந்த வசதியைப் பேருந்துகளிலே வழங்கலாமா ? அதுபற்றி அமைச்சர் அவர்கள் என்ன கருத்து வழங்குகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-20)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** நகரப் பேருந்துகளில் சீசன் டிக்கட்டுகள் வழங்கப்படுகின்றன. மொபசில் பேருந்துகளில், குறிப்பிட்ட வழித் தடங்களில் தொடர்ந்து பயணிகள் செல்வார்களென்றால் அதுபற்றி ஆய்வு நடத்தி, அங்கேயும் நடைமுறைக்குக் கொண்டுவர அரசு ஆலோசிக்கும்.

[1979 ஏப்ரல் 23

**திரு. க. அறிவழகன் :** சென்னை நகரத்தில் 233 வழித் தடங்களில் 1,523 பேருந்துகள் ஓடுகின்றன என்று அமைச்சரவர்கள் கணக்குத் தந்தார்கள். அதிலே எத்தனை பேருந்துகள் 'சிக்' ஆகி, ஓடாமல் இருக்கின்றன; எத்தனை பேருந்துகள் வழியில் தடை ஏற்பட்டு ஓடாமல் நிற்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** 'சிக்' ஆகாமல் நல்ல முறையில் ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகளின் எண்ணிக்கையையும், அவை ஓடிக் கொண்டிருக்கிற வழித் தடங்களின் எண்ணிக்கையையும்தான் கூறினேன்.

## *Ban on Strike by Taxis and Auto-rickshaws.*

* 336 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether the Government have any proposal to ban the strike by Taxis and Auto-rickshaws; and

(*b*) if so, the stage at which the matter now stands?

*டாக்சிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் வேலை நிறுத்தத்திற்குத் தடை.*

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) டாக்சிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் வேலை நிறுத்தம் செய்வதைத் தடைசெய்யும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) முன்னறிவிப்பு இன்றியும், தக்க காரணமின்றியும் திடீரென வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது மற்றும் சாலைகளிலிருந்து விலக்கிக்கொள்வது போன்றவற்றிற்காக உரிமதாரர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படியாக தமிழ் நாடு மோட்டார் வாகன விதிகள் 1940, விதி 160-ஐ மாற்றியமைக்கும் வரைவுத் திருத்தம் அரசு வெளியிட்டுள்ளது. இவ் வரைவுத் திருத்தம் ஊர்ஜிதம் செய்வது அரசின் பரிசீலனையில் உள்ளது.



1979 ஏப்ரல் 23]

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** சில நியாயமான கோரிக்கைகளுக்காக ஆட்டோ அல்லது டாக்சி ஓட்டுநர்கள் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க அடையாள வேலை நிறுத்தம் செய்வதால், அதைத் தடை செய்ய வேண்டு மென்று செயற் குறிப்பு கொண்டுவருவதை அரசு கைவிட முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** நான் ஏற்கெனவே சொன்னேன். 'தக்க காரணமின்றி, முன்னறிவிப்பு இன்றி' என்று கூறினேன். அதிலிருந்து நியாயமான வேலைநிறுத்தத்திற்கு அரசு தடை எதுவும் விதிக்காது என்பது பொருள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** பாரிமுனையிலிருந்து அடையாறுக்குச் சென்றால், ஆட்டோக்களில் 8 ரூபாயும், டாக்சிகளில் 15 ரூபாயும் வாங்க, பல வண்டிகளில் மீட்டர்களைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அதைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யப்படுகிறதா ? கோவையில் ஓடும் வண்டிகளில் மீட்டர் இருந்தாலும், அதை உபயோகிப்பதில்லை. அது குறித்து என்ன செய்யப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** கோவை நகரத்தைப் பொறுத்த வரைக்கும், கண்டிப்பாக மீட்டர்களை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டு மென்ற உத்தரவிடப்பட்டு, அதன் அடிப்படையிலே நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. அடுத்து, டாக்சிகளிலும், ஆட்டோக்களிலும் பாரி முனையிலிருந்து அடையாறுக்கு அதிகமான கட்டணம் கேட்பதாகக் கூறி னார்கள். கட்டணத்தை அதிகமாகக் கேட்பதில்லை. மாறாக மீட்டர்களைத் தவறாகப் பொருத்தியிருக்கிற காரணத்தால், அதிகக் கட்டணத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி கடுமையான அறிவுரைகள் கொடுக்கப்பட்டு பலர் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. புதிதாக கடுமையான சட்டத் திருத்தம் ஒன்றை அரசு கொண்டுவர இருக்கிறது. உதாரணமாக, மீட்டர்களை டெஸ்ட் பண்ண, 'ஆட்டோமெடிக் மெஷின்' ஒன்றைக் கொண்டு வந்து, திடீரென்று மீட்டர்கள் சோதனை செய்யப்படும். தற்போது நடை முறையில் இருப்பது, 4 முதல் 6 கிலோ மீட்டர்கள் டாக்சியை ஓட்டி, மீட்டர் களைச் சோதனை செய்கிறோம். அந்த நடைமுறையில்லாமல், ஆட்டோக் களையும், டாக்சிகளையும் திடீரென்று சோதனை செய்வதற்காக புதிய இயந் திரத்தைச் சென்னை மாநகரில் கொண்டுவர அரசு முடிவு செய்திருக்கிறது. தவறான மீட்டர்களைப் பொருத்தியிருந்தால், 10 தினங்களுக்கு அவர்களுடைய

உரிமம் ரத்து செய்யப்படும். அவர்களுக்குத் தண்டனையாக நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் விதம் 1,000 ரூபாய் என்றும், அதிகபட்சமாக 30 தினங்களுக்கு தண்டனை வழங்கலாமென்றிருக்கிறது. இரண்டாம் முறை தவறான முறையில் மீட்டர் பொருத்தப்பட்டிருக்கிறது என்பது கண்டு பிடிக்கப்பட்டால், அவர்களுடைய உரிமம் நிரந்தரமாக ரத்து செய்யப்பட வேண்டுமென்றும்; குறிப்பிட்ட இடங்களுக்கு ஆட்டோ அல்லது டாக்சி வர மறுத்தால், முதல் கட்டமாக ஓட்டுனர்களுக்கு 100 ரூபாய் தண்டனை விதிக்கவும், தொடர்ந்து இரண்டாம் முறை அந்தத் தவறைச் செய்தால், ஓட்டுநருடைய உரிமத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் புதிதாகச் சட்டத் திருத்தம் வர இருக்கிறது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** அநேக நகரங்களில் மீட்டர் வசதியில்லை. இதற்கு அரசின் யோசனை என்ன ? எப்போது இதை அரசு அமுல்படுத்தப் போகிறது ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** சென்னையை அடுத்து, கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய நான்கு மாவட்டத் தலைநகரங்களிலும் டாக்சிகளுக்கு மீட்டர்களைக் கட்டாயம் பொருத்தவேண்டுமென்று உத்தரவிட்டு, அப்படிப் பொருத்தப்படுவது நடைமுறையில் உள்ளது. அதைக் கண்டிப்பாக நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு சட்டத் திருத்தங்கள், தவறு செய்பவர்களுக்கு கடுமையான நடவடிக்கை எடுக்க விதிகளில் மாற்றங்கள் செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்து உள்ளது. நடைமுறையில் இல்லாத நகரத்தைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்போது அதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

## *Swimming Pools.*

* 337 *Q.*—THIRU K. ARIVAZHAGAN: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(*a*) the number of Swimming Pools constructed by the Government;

(*b*) of them, the number meant for Children to learn swimming ; and

(*c*) the salary paid to the trainers working in them?



## நீச்சல் குளங்கள்.

**திரு. க. அறிவழகன் :** மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு கட்டியுள்ள நீச்சல் குளங்கள் எத்தனை ?

(இ) அவைகளில் குழந்தைகள் நீச்சல் கற்றுக் கொள்வதற்கு என்றே அமைந்தவை எத்தனை ?

(உ) அவற்றில் பணியாற்றும் நீச்சல் பயிற்றுவிப்பாளர்களுக்குத் தரப் படும் ஊதியம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) & (இ) கூவம் ஆற்றின் வலது கரையிலும் சென்னை பல்கலைக்கழகத்தின் எதிரேயும், அரசு பொதுப்பணித் துறையினரால் ஒரு நீச்சல் குளம் கட்டப்பட்டுள்ளது. இதில் குழந்தைகள் நீச்சல் கற்றுக் கொள்வதற்கென ஒரு பகுதி இருக்கிறது.

(உ) நீச்சல் பயிற்றுவிப்பாளர் யாருமில்லை. ஆனால் குழந்தைகளை நீச்சல் குளத்தில் அனுமதிப்பதற்கு சில விதிமுறைகள் உள்ளன. அதன்படி, 12 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர், தங்கள் பெற்றோர் அல்லது வயது வந்தவர்கள் உடன் வந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவர். பள்ளி மாண வர்கள், அவர்களுடைய உடற் பயிற்சி ஆசிரியர் அல்லது பள்ளியைச் சேர்ந்த பொறுப்பான ஒருவர் உடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

**திரு. க. அறிவழகன் :** அரசு கட்டியுள்ள நீச்சல் குளங்களைப் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கே குழந்தைகள் நீச்சல் கற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு, பெற்றோர்கள் அல்லது உடற்பயிற்சி ஆசிரியர்கள் வந்தாலும், கற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு, குழந்தைகளின் உயரத்தைவிட, தண்ணீர் மட்டம் அதிகமாக இருக்கிறது. எனவே தண்ணீர் மட்டத்தை 2 அடி குறைப்பதற்கு அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இப்போது இருக்கின்ற நிலைமை யில், 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு நீச்சல் கற்றுக்கொடுப்பதற்காகத்தான், அங்கே ஒரு நீச்சல் குளம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதுபோல, தண்ணீர் அதிகமாக இருந்தால், அதைக் குறைக்க ஏற்பாடு செய்யப்படும்.

[1979 ஏப்ரல் 23

**திரு. செ. முத்துசாமி :** சென்னையிலே இரண்டு நீச்சல் குளங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதுபோல மற்ற மாவட்டத் தலைநகரங்களில் நீச்சல் குளங்களைக் கட்ட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அது போன்ற திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** நீச்சல் குளத்தில் தனியாக நீந்தினால் எவ்வளவு கட்டணம் ; குடும்பமாக நீந்தினால் எவ்வளவு கட்டணம் ; எதிர் நீச்சலுக்கு எவ்வளவு கட்டணம் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தனியாக நீந்தினால் ரூபாய் 1.50, குழந்தையாக இருந்து, 12 வயதுக்குட்பட்டிருந்தால், 1 ரூபாய் மட்டுமே வசூலிக்கப்படும். ஆனால் குடும்பமாக நீந்தினால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுபோல், மாதத்திற்கு என்று கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. குடும்பமாக இருக்கிறவர்கள், ஒரு கணவன், ஒரு மனைவி, இரண்டு குழந்தைகள்—இவர்கள் எல்லோரும் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம்தான் நீந்த முடியும். அதுதான் விதிமுறை. அவர்கள் ஒரு மாதம் நீந்தினால், 25 ரூபாய் கட்ட வேண்டும்.

**திரு. க. அறிவழகன் :** நீச்சல் குளத்தில் மகளிர்க்கு என்று ஒரு நாள் ஒதுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மகளிர்க்கு என்று தனியாக நாள் ஒதுக்கப்படவில்லை. அவர்கள் வருகின்ற நேரத்திலேயே நீந்தலாம். அவர்களுக்கென்று தனி ஆடைகள் இருக்கின்றன. அதை அணிந்துகொண்டு வந்தால், அவர்களும் நீச்சல் கற்றுக்கொள்ளலாம்.

## *Buckingham Canal*

* 338 *Q.*—THIRU C. RAMALINGAM (on behalf of THIRU E. S. VENKATESAN): Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state whether there is any proposal to undertake silt removal operation in the Buckingham Canal and make it useful for the public by operating ferry service ?



1979 ஏப்ரல் 23]

### பக்கிங்ஹாம் கால்வாய்.

**திரு. சி. இராமலிங்கம் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன் சார்பில்) :** மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பக்கிங்ஹாம் கால்வாயிலுள்ள வண்டலை அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு படகுப் போக்குவரத்துக்கு வசதி செய்வதன் மூலம் அதைப் பொது மக்களுக்குப் பயனுள்ளதாகச் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** வடக்கு பக்கிங்ஹாம் கால்வாயினைச் சீரமைக்கும் திட்டம் ஒன்று ரூபாய் 310 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் உதவித் திட்டமாகச் செயல்படுத்த அவ்வரசின் ஒப்புதலுக்கு அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் இது குறித்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. சி. இராமலிங்கம் :** நமது நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, பக்கிங்காம் கால்வாயில் வண்டல் எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி வண்டல் எடுத்திருந்தால், எவ்வளவு செலவு செய்யப்பட்டது ? எந்த ஆண்டு அந்தப் பணி நடைபெற்றது ? யார் எடுத்திருந்தால், அந்தக் கால்வாயில் படகு விடுவதற்கான சாத்தியக்கூறு இருக்கிறதா ? எவ்வளவு டன் எடையுள்ள பொருள்களை ஏற்றிக்கொண்டு செல்லலாம் என்பதற்கு விதிமுறை இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** 1973ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்களில் பக்கிங்காம் கால்வாயின் சீரமைப்புத் திட்டம் ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அதன் காரணமாக, வடக்கு பக்கிங்காம் கால்வாய்த் திட்டத்திற்கு இதுவரையிலும் ஏறத்தாழ 97 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் புதிதாக ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்து, நாம் மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அதன் மூலமாக வடக்கு, தெற்கு பக்கிங்காம் கால்வாய் முழுவதும் சீரமைப்பதற்கு 560 லட்சம் ரூபாய் வேண்டுமென்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், இந்தத் திட்டத்தின் மூலமாக 100 டன் எடையுள்ள இயந்திரப் படகுகளை விடுவதற்கு வழி செய்யும் திட்டமும் இதில் அடங்கியிருக்கிறது.

(பிற்பகல் 4-30)

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் 97 இலட்சம் ரூபாய் செலவு செய்ததாகச் சொன்னார்கள். எந்த ஆண்டு, எப்போது செலவு செய்யப்பட்டது என்பதுபற்றி எனக்குத் தெரியாது. இதுவரை நான் பார்த்ததும் இல்லை. அதைப்பற்றி மறுபடியும் மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலிப்பார்களா? அப்படி வேலை செய்தது உண்மைதானா என்பது பற்றி ஒரு விசாரணைக் குழு அமைக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** வடக்கு பக்கிங்ஹாம் கால்வாயில் பூஜ்யம் மைலிலிருந்து 10/1 வரை, இதுவரை 97 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டதாக இங்கே கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அதுபற்றித் தெரியாது என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே கூவம் மணக்கும் என்கின்ற ஒரு திட்டம் இருப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கின்றேன்.

## *Quarters for Ceylon Repatriates.*

* 339 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

(*a*) whether permanent quarters have been built for Ceylon repatriates, who are employed in Ayyanar Mills in Aruppukkottai Taluk, Ramanathapuram District;

(*b*) if so, the number of quarters constructed; and

(*c*) the expenditure thereon?

### இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு குடியிருப்புகள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகாவில் உள்ள அய்யனார் மில்லில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள இலங்கை அகதிகளுக்கு நிரந்தரக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றனவா?

(இ) ஆம் எனில், எத்தனை குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

(உ) அதற்கான செலவு எவ்வளவு?



**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, மல்லாங்கிணறு கிராமத்தில் இருக்கும் அய்யனார் நூற்பு ஆலையில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 100 பேர்கட்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் 94 பேர்கள் அரசினிடம் வீட்டுக் கடன் உதவி பெற்று நிரந்தரமாக குடியிருப்பு வீடுகள் கட்ட மல்லாங்கிணறு கிராமத்தில் சர்வே எண் 263/2பி, 258/3பி, 258-பி ஆகிய இடங்களில் 4.20 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள நிலத்தை விலைக்கு வாங்கி, வீடுகள் கட்டிக் கொண்டு வருகின்றனர். வீடுகளை கட்டுவதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு, அவை விரைவில் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

(உ) நபர் ஒன்றுக்கு ரூ. 6,000 வீதம் வீட்டுக் கடன் கொடுக்கும் திட்டத்தின் கீழ் மொத்தமாக ரூ. 5,64,000 அய்யனார் நூற்பு ஆலையில் பணி புரியும் 94 இலங்கை தமிழர்களுக்கு வீட்டுக் கடன் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில், இதுவரை ரூ. 4,11,300 மேற்கண்ட 94 நபர்களுக்கும் பட்டுவாடா செய்யப்பட்டு இருக்கிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி வருகின்ற அகதிகளுக்கு புதிதாகக் கட்டப்படுகின்ற குடியிருப்புகளில் விளக்கு வசதி, குடி நீர் வசதி போன்ற வசதிகள் செய்வதற்கான வழிவகைகள் திட்டத்திலே இணைக்கப்படவில்லை. அதற்காக அரசாங்கம் தனியாக நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்று குறை சொல்லுகிறார்கள். அவர்களால் சொல்லப்பட்டிருக்கின்ற அந்த வேண்டுகோளை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** எனக்குக் கொடுத்துள்ள தகவலைச் சொல்ல விரும்புகிறேன். அடுத்த மே மாதம் முதல் அந்தக் குடியிருப்பு தயாராகிவிடும் என்கிற தகவல்தான் எனக்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Poultry Eggs.*

* 340 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to subsidies the Poultry Eggs produced in the State, to stand the competition arising from the Poultry Eggs flowing into the State from Andhra Pradesh and Kerala; and

(b) if so, the stage at which the matter now stands?

[1979 ஏப்ரல் 23

## கோழி முட்டைகள்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆந்திரப் பிரதேசம், கேரளம் ஆகிய மாநிலங்களிலிருந்து கோழி முட்டைகள் வந்து குவிவதால் ஏற்படும் போட்டியினை சமாளிக்க இந்த மாநிலத்தில் உற்பத்தியாகும் கோழி முட்டைகளுக்கு உதவித் தொகை அளிப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** (அ) இல்லை :

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆந்திரப் பிரதேசம், கேரளம் ஆகிய மாநிலங்களிலிருந்து வருகிற கோழி முட்டைகள் நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியாகின்ற முட்டைகளை விடக் குறைவான விலைக்குக் கிடைக்கின்றன. இதன் காரணமாக நம்முடைய மாநிலத்தில் கோழிப் பண்ணைகளை வைத்து நடத்த சிரமப்படுகிறார்கள், கஷ்டப்படுகிறார்கள். அரசு கோழிப் பண்ணைகளை வைத்து நடத்துகின்ற திட்டங்களை ஊக்குவிக்கின்ற நிலையில் ஆந்திரப் பிரதேசம், கேரளம் ஆகிய மாநிலங்களிலிருந்து கோழி முட்டைகள் வந்து குவிவதால் ஏற்படும் போட்டியினைச் சமாளிக்க நம் மாநிலத்தில் உற்பத்தியாகும் கோழி முட்டைகளுக்கு உதவித் தொகை அளிப்பதற்கான செயற்குறிப்பு பற்றி மீண்டும் அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** இதுபற்றிப் பரிசீலிக்க இயலாத நிலையில் நிதி நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** குறைந்தபட்சம் கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து நம் மாநிலத்திற்கு கோழி முட்டைகள் வருவதைத் தடுத்து, தடை செய்து இங்கே இருக்கின்ற கோழிப் பண்ணைகளைக் காப்பாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** ஏற்கெனவே தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் அமைந்திருக்கின்ற நிலையில் இன்றையதினம் கோழி முட்டைகளின் உற்பத்தி அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 63 கோடி கோழி முட்டைகள் உற்பத்தியாகின்றன. கேரளாவிலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் வருகின்ற முட்டைகளின் எண்ணிக்கை மிகக் குறைவு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1979 ஏப்ரல் 23]

**திரு. ம. சங்கரலிங்கம் :** இன்றையதினம் நமது மாநிலத்தில் உற்பத்தியாகின்ற கோழி முட்டைகளுக்கு நூற்றுக்கு என்ன விலை ? கேரளாவிலிருந்தும் ஆந்திராவிலிருந்தும் வருகின்ற கோழி முட்டைகளுக்கு நூற்றுக்கு என்ன விலை ? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆந்திரப் பிரதேசத்திலிருந்தும் கேரளாவிலிருந்தும் கோழி முட்டைகள் நம் மாநிலத்திற்கு வந்து குவிவதால் தமிழ் நாட்டிலுள்ள கோழிப் பண்ணைகள் பாதிக்கப்படுகின்றன என்று சொல்லுகிறார்கள். அது உண்மையா ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் தனிக் கேள்வி போடவும்.

**திரு. செ. முத்துசாமி :** கோழி முட்டை உற்பத்தியைப் பொறுத்தவரை, தமிழ் நாட்டிலேயே நாமக்கல்லில் தான் மிக அதிகமாக உற்பத்தியாகிறது. அங்கு நாள் ஒன்றுக்கு 8 இலட்சத்திற்கு மேல் கோழி முட்டைகள் உற்பத்தியாகின்றன. பல சந்தர்ப்பங்களில் ஆந்திரப் பிரதேசம், கேரளம் ஆகிய மாநிலங்களிலிருந்து கோழி முட்டைகள் தமிழ் நாட்டிற்கு விற்பனைக்காக வருகின்ற காரணத்தினாலும், அவற்றின் விலை குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், திடீர் திடீரென்று தமிழ் நாட்டில் உற்பத்தியாகின்ற கோழி முட்டைகளின் விலை சரிகிறது. இதனால் தமிழ் நாட்டிலுள்ள முட்டை உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், நிலைமையைச் சமாளிக்கத் தடுமாறுகிறார்கள். ஆகவே கோழிகளுக்கு வழங்குகின்ற தீவனத்தைப் பொறுத்தவரையிலாவது, சப்சிடி என்ற முறையில் ஏதாவது அதன் விலையில் சலுகை வழங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** ஏற்கெனவே தீவனத்தின் விலையில் 20 பைசா தள்ளுபடி செய்து விவசாயிகளுக்குக் கொடுக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், கிலோ ஒன்றுக்கு 1.30 ரூபாய்க்கு கொடுக்க வேண்டிய கோழித் தீவனத்தை கிலோ ஒன்றுக்கு 1.10 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். அதற்கு மேல் உதவி செய்ய இயலாத நிலையில் அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஆந்திரப் பிரதேசத்திலிருந்து எவ்வளவு முட்டைகள் வாங்கப்படுகின்றன ? கேரளாவிலிருந்து எவ்வளவு முட்டைகள் வாங்கப்படுகின்றன ? தமிழ் நாட்டில் முட்டை உற்பத்தியை அதிகப்படுத்த அரசிடம் ஏதாவது திட்டங்கள் இருக்கின்றனவா ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, தமிழ் நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு 63 கோடி கோழி முட்டைகள் உற்பத்தியாகின்றன. கேரளாவிலிருந்து 1.8 கோடி முட்டைகளும் ஆந்திராவிலிருந்து

7.3 கோடி முட்டைகளும் தமிழ் நாட்டுக்கு வருகின்றன. தமிழகத்தில் வளர்ந்து வரும் தேவையைக் கருத்தில் கொண்டு கோழி முட்டை உற்பத்தியில் இம்மாநிலம் தன்னிறைவு அடையும் வகையில் உலக வங்கியிலிருந்து உதவி பெற்று ஒரு பெரிய திட்டத்தை அரசு நிறைவேற்ற இருக்கிறது. அந்தத் திட்டத்தின் மதிப்பு சுமார் 51.15 கோடி ரூபாய். இந்தத் திட்டம் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 20—1—1979 அன்று ஒத்திப்போடப் பட்ட குறுகிய கால வினா இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.

### குறுகிய கால வினா.

### *Hindi Codes and Numbers in Number Plates of Motor Vehicles.*

@ * 2 S. N. Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether the Government are aware that it has been permitted to display Hindi Codes and numbers in the number plates of the Motor Vehicles in New Delhi, the Capital of India, changing the condition that English Codes and Arabic numerals alone can be displayed for this purpose;

(*b*) if so, whether the Government of Tamil Nadu have opined on it to the Central Government, reflecting the feelings of the people of Tamil Nadu in this regard; and

(*c*) if so, the details thereof ?

### மோட்டார் வாகன எண் தகடுகளில் இந்தி குறியீடுகள், எண்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்திய நாட்டின் தலைநகரமான டெல்லி மாநகரில் மோட்டார் வாகனங்களின் நம்பர் பிளேட்டுகளில் ஆங்கில குறியீடுகள் மற்றும் அரேபிய எண்கள்தான் இருக்கவேண்டும் என்பதை மாற்றி, இந்தி குறியீடுகள் மற்றும் எண்களை வெளியிடலாம் என்று அனுமதிக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இந்த விஷயத்தில் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு கருத்து தெரிவித்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

---

@ 20—1—1979 ஆம் நாள் வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) & (இ) ஆம்.

(உ) இது குறித்து 9—3—1979 அன்று சட்டப் பேரவையில் நடந்த விவாதத்தில் பேரவை உறுப்பினர்கள் வெளியிட்ட உணர்ச்சிகளை இந்தியப் பிரதமருக்குத் தெரிவிக்கும் வகையில் டெல்லி மாநகரில் ஓடும் வாகனங்களின் நம்பர் பிளேட்டுகளில் ஆங்கில குறியீடுகளையும், அரேபிய எண்களையும் பயன் படுத்துமாறு கோரி 19—3—1979 அன்று முதல்வர் அவர்கள் ஒரு நேர் முகக் கடிதம் வரைந்துள்ளார்கள். அதற்கு இந்தியப் பிரதமர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக பதில் அனுப்பியுள்ளார்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** வாகனங்களின் நம்பர் பிளேட்டுகளைப் பொறுத்த வரை, ஆங்கிலக் குறியீடுகளையும், அரேபிய எண்களையும்தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலே இருக்கும் போது டில்லி போன்ற இந்திய நாட்டின் தலைநகரிலும் மற்றும் பம்பாய், கல்கத்தா போன்ற மாநிலத் தலைநகர்களிலும் ஓடுகின்ற வாகனங்களில் இந்திக் குறியீடுகள் மற்றும் எண்கள் கொண்ட பிளேட்டுகள் பொருத்தப்பட்டு வாகனங்கள் ஓடுகின்றன. இந்த நிலையில் டில்லி போன்ற நாட்டின் தலைநகராக இருக்கிற இடத்தில், எல்லா மாநில மக்களும் அதிகமாக வருகின்ற காரணத்தால், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலே இருக்கிறபடி-தான் இருக்க வேண்டுமென்றும், அந்தந்த மாநில மொழிகள் வாகனங்களில் இருக்கக் கூடாது என்கிற முறையிலும் மத்திய அரசோடு இந்த அரசு தொடர்பு கொண்டு, மறுபடியும் இந்திய நாட்டின் தலைநகரமான டெல்லி மாநகரில் மோட்டார் வாகனங்களின் நம்பர் பிளேட்டுகளில் ஆங்கிலக் குறியீடுகளும் அரேபிய எண்களும்தான் இருக்க வேண்டுமென்கின்ற கருத்தினை வலியுறுத்தி நடவடிக்கை எடுக்கப்படுமா ? முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்திற்கு அனுகூலமான பதிலை இந்தியப் பிரதமர் அளித்ததாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்களே அது நடைமுறைக்கு வந்து விட்டதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அரசியல் அமைப்புச் சட்டத்தில் வாகனங்களின் நம்பர் பிளேட்டுகளில் ஆங்கிலக் குறியீடுகளும், அரேபிய, எண்களும் தான் இருக்க வேண்டுமென்று இல்லை. பொதுவாக மோட்டார் வாகன மத்திய சட்டம் 1939-ல் ஆங்கிலக் குறியீடுகளும், அரேபிய எண்களும் நம்பர் பிளேட்டுகளில் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. மாநிலங்களைப் பொறுத்தவரை, மாநிலங்கள் விரும்பினால், மாநில மொழிகளை நம்பர் பிளேட்டுகளில் பயன்படுத்தலாம். ஆனால் டில்லியைப் பொறுத்த வரை, அது அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான தலைநகராக இருப்பதால், டில்லி மாநில மொழியை வாகனங்களில் உள்ள நம்பர் பிளேட்டுகளில் பயன்படுத்தக் கூடாது என்றும் பாரதத்துக்கு பொதுவாக உள்ள ஆங்கிலக்

[1979 ஏப்ரல் 23

குறியீடுகளையும், அரேபிய எண்களையும்தான் அவர்கள் பயன்படுத்த வேண்டு மென்றும் மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தியிருக்கிறது. அதற்கு பாரதப் பிரதமர் பதில் எழுதியிருக்கிறார். பாரதத் தலைநகரில் ஓடுகின்ற வாகனங்களின் நம்பர் பிளேட்டுகளில் ஆங்கில குறியீடுகள் மற்றும் அரேபிய எண்களுக்குப் பதிலாக மற்ற மொழியில் நம்பர் பிளேட்டுகளை மாற்றியிருப் பதற்குச் சரியான காரணம் இல்லை என்றும் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் பாரதப் பிரதமர் எழுதியிருக்கிறார்.

**திரு. க. இராமமூர்த்தி :** சில நேரங்களில் வடக்கேயிருந்து தமிழ் நாட்டுக்கு வருகின்ற மோட்டார் வாகனங்களின் நம்பர் பிளேட்டுகள் வேறு மொழிகளில் இருக்கின்றன. நம்பர் பிளேட்டுகளில் ஆங்கிலக் குறியீடுகளும் அரேபிய எண்களும் இல்லை. அதனுடைய நம்பரை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த வகையில் அந்த மாதிரியுள்ள வாகனங்களின் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மோட்டார் வாகனச் சட்ட விதி களின் அடிப்படையில் நடவடிக்கை ஒன்றும் தற்போது எடுக்க முடியாது. எனவே, மோட்டார் வாகன மையச் சட்டத்திலே அனைத்து மாநிலங்களிலும் —பாரதம் முழுவதுமே—ஆங்கில குறியீடுகள் அரேபிய எண்கள், தான் இருக்க வேண்டும் என்று திருத்தப்பட்டுள்ளது. இந்தி குறியீடுகளையும், எண்களையும் போடுவது இந்தித் திணிப்புக்குச் சமம் என்று தெரிவித்து, அவைகளை மாற்ற நம்முடைய அரசு வலியுறுத்தி வருகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மோட்டார் வாகனச் சட்டத்தின்படி, மாநில அளவிலே, அந்தந்த மாநில மொழிகளிலே கூட எழுதலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வடக்கே உள்ளவர் களுக்கு நம்முடைய உணர்வுகளை உணர்த்தும் வகையில் நம்முடைய தமிழக அரசும் அரசுக்குச் சொந்தமான கார்களிலும், பஸ்களிலும் எண்களையும், குறியீடுகளையும் தமிழில் அமைக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய நல்ல உணர்வுகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதால் மட்டும் மத்தியிலே இருப்பவர்களை உணர வைத்துவிட முடியும் என்ற நம்பிக்கை நமக்கு இல்லை. மாறாக, பாரதம் தழுவிய அளவிலே ஆங்கிலம் மற்றும் அரேபிய குறியீடுகளும், எண்களும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி, தேவையானால் சரியான நடவடிக்கைகள் எடுக்க முயற்சிப்பது தான் நல்லது.



1979 ஏப்ரல் 23]

**திரு. செ. முத்துசாமி :** நாம் இன்றைக்கு ஏக இந்தியாவைப் பற்றிப் பேசுகிறோம். இந்திய நாடு முழுவதற்கும் அரேபிய எண்களும், ஆங்கிலக் குறியீடுகளும்தான் இருக்க வேண்டும் என்று ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப் பட்டது. திடீரென்று வடக்கேயிருந்து இந்தியிலே எண் போட்ட கார் வருகிறது, அதிலே கடத்தல் பொருட்களைக் கடத்துகிறார்கள். இங்கே செக்-போஸ்ட்-ல். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதே விஷயத்தைத் தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** அந்தக் காரில் எண்களும், குறியீடுகளும் இந்தி யிலே இருப்பதால், தெளிவாகத் தெரிந்து கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால், இந்தியா முழுவதும் ஒரே மொழியில் எண்களைக் கொண்டுவர, ஆங்கிலத்தில் கொண்டுவர, இந்த அரசு நடவடிக்கை எடுக் குமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இந்தி பேசுகின்ற மாநிலங்களைச் சேர்ந்த வாகனங்களுக்குச் சொந்தக்காரர்கள் இந்தியில் குறியீடுகளையும், எண்களையும் போட்டு இந்தி பேசாத மாநிலங்களுக்குச் சென்று கடத்தல், மற்றும் மோட்டார் வாகனச் சட்ட விதிகளை மீறும் குற்றத்தைச் செய்தால், அவர்கள் தப்பித்துக்கொள்ள வாய்ப்பு இதனால் இருக்கிறது என்று மத்திய அரசுக்கு விளக்கி, நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

## 2. அறிவிப்புகள்.

### (1) அவைக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 1979-80 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆறு உறுப்பினர் பதவி களுக்கு, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள் ளார்கள்.

1. திரு. எல். இராமகிருஷ்ண தேவர்
2. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.
3. திரு. செ. முத்துசாமி.
4. திரு. ந. மீனாட்சிசுந்தரம்.
5. புலவர் புலமைப்பித்தன்.
6. திருமதி சி. தமிழரசி.

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கையானது அதாவது ஆறு, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஆறு உறுப்பினர்களும், அவைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன். அத்துடன் மேலவை விதி 173 (1)ன் படி கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமிக்கிறேன் :

1. டாக்டர் இரா. சனார்த்தனம்.

2. திரு. ஆ. நல்லசிவன்.

மேலவைத் துணைத் தலைவர், அலுவல் முறையில், குழுவின் தலைவ ராவார்.

## 2. அவை அலுவல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தொழில் துறை குறித்த கொள்கைக் குறிப்பு நாளை காலை 9.30 மணிக்கு மேலவையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். கேள்வி நேரம் அன்று கைவிடப்படும்.

இன்று சமூக நலம் குறித்த கொள்கை விளக்கமும், தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 3. தகவல் கோரல்.

### ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதுபற்றிய விவரம் அரசால் சேகரிக்கப் பட்டு வருகிறது.



## 4. கவன ஈர்ப்பு.

(1) மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர்களுக்கு அமல்படுத்துவது குறித்து.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, "அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர்களுக்கு மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை 1—4—1979 முதல் அமல்படுத்த பல்கலைக் கழக நிர்வாகம் மறுப்பதால் அவ்வூழியர்கள் வேலை நிறுத்தம்"

குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அவையின் முன் அறிக்கை ஒன்று* வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ் : அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர்களுக்கு மூன்றாவது ஊதியக் குழுவினுடைய அடிப்படையிலே ஊதியம் வழங்குவதற்கு மாநில அரசு நிதியுதவி செய்வதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணாமலை நகர் ஒரு நகரிய நிலை பெற்றிருக்கிறது. அங்கு பணியாற்றக் கூடிய பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் ஏனைய ஊழியர் களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்கப்படவில்லை. எனவே, அவர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்கும் நிலையில் நிதியுதவி செய்து ஊக்குவிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அங்கே பணியாற்றுகின்றவர் களுக்குச் சம்பளம் தரவேண்டிய பொறுப்பு சுயாட்சியாகச் செயல்படும் ஸ்தாபனமாகிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்தது, அவர்கள் மானியம் கேட்கும்போது, பல்வேறு பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு அரசு ஆராய்ந்து முடிவெடுக்கும்.

திரு. பி. ஆர். தாமஸ் : மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை அமல்படுத்துவதிலும் கூட 50 விழுக்காடு மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த பணியாற்றும் ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்கப்பட, கொடுக்கப்படும் தொகைக்கு ஈடாக ஒரு தொகையை மானியமாக வழங்க அரசு முன்வருமா ?

---

* 555-556 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பல்கலைக்கழகம் என்ன காரியங்களைச் செய்ய வேண்டும், எப்படி பல்கலைக் கழகத்தை ஊக்குவிக்க வேண்டும் என்ற முறையிலே, இந்த அரசைப் பொறுத்தவரையில், ஒன்றும் செய்வதற்கில்லை. அவர்கள் செலவு செய்கின்றபோது, அதற்கு மானியம் வேண்டும் என்று கேட்கின்றபோது, அந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து மானியம் கொடுக்கிறது.

## (2) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேவகிரி எஸ்டேட் மூடப்பட்டுள்ளது குறித்து.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேவகிரி எஸ்டேட்டைச் சென்ற நவம்பர் மாதம் மூடியதால் தோட்டத்தைத் திறக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாத அரசின் போக்கை ஆட்சேபித்து 19—3—1979 முதல் சி.ஐ.டி.யூ. மாநிலச் செயலாளர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்னால் உண்ணாவிரதம் இருந்தது குறித்து"

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, நாகர்கோவில், தடிக்காரன்கோணத்திலுள்ள தேவகிரி எஸ்டேட்டில் ஒப்பந்தத் தொழிலாளர் மற்றும் தற்காலிக தொழிலாளர் உட்பட சுமார் 72 தொழிலாளர்கள் வேலை செய்துவருவதாகத் தெரிகிறது. . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அறிக்கை விரிவாக இருந்ததால் "அவையின் முன் விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது" என்று சொல்லி விடலாமே.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இல்லை, படித்து முடித்துவிடுகிறேன். குத்தகைக் கால ஒப்பந்தம் முடிவடைந்தவுடன் நிர்வாகத்தினர் எஸ்டேட்டை 10—11—1978 முதல் மூடிவிட்டனர். எஸ்டேட்டை நடத்துவதில் நஷ்டம் ஏற்பட்டதால் எஸ்டேட் மூடப்பட்டது என நிர்வாகத்தினர் தெரிவித்தனர். எஸ்டேட் மூடப்பட்டது குறித்து நாகர்கோவில் தொழிலாளர் துறை அலுவலர் முன்பு தொழிலாளர்கள் ஒரு தொழில் தகராறு எழுப்பினார்கள். இந்தத் தொழில் தகராறில் சமரச உடன்பாடு ஏதும்



ஏற்படாததினால் நாகர்கோவில், தொழிலாளர் துறை அலுவலர் சமரச முறிவறிக்கையை அனுப்பியிருக்கிறார். இந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

தொழிற்சங்கத் தலைவர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் 19—3—1979 முதல் மேற்கொண்ட உண்ணாவிரதம் 24—3—1979 முதல் கைவிடப்பட்டது. தோட்டத் தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுவது குறித்தும் எஸ்டேட் மூடப்பட்டதினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு பயிர் செய்வதற்காக புறம்போக்கு நிலங்களை வழங்குவது குறித்தும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்த எஸ்டேட் குத்தகைக்காலம் முடிவடைந்தது என்று சொல்லி நிறுத்தியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தொழிலாளர்கள் சங்கத்தில் சேர்ந்த காரணத்தினால்தான் மூடப்பட்டது, அதனால்தான் உண்ணாவிரதம். இதுதான் உண்மை நிலைமை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அதுபற்றிய தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டனவா? பிரிந்துவிடப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு புறம்போக்கு நிலங்கள் பிரித்தளிக்கப்பட்டனவா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இவற்றைக் குறித்து நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். தொழிற் சங்கத் தலைவர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் 19—3—1979 முதல் மேற்கொண்ட உண்ணாவிரதம் 24—3—1979 முதல் கைவிடப்பட்டது. தோட்டத் தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப்பெறுவது குறித்தும், எஸ்டேட் மூடப்பட்டதினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு பயிர் செய்வதற்காக புறம்போக்கு நிலங்களை வழங்குவது குறித்தும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

## 5. 1972-73-ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையை அளித்தல்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, 1972-73ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்கள் குறித்த மானியக் கோரிக்கையை இம் மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

[திரு. கி. மனோகரன்] [1979 ஏப்ரல் 23

2. 1975-76ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1972-73 ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகியிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளைச் சட்டப் பேரவை முன் வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்கு ஆய்வுக் குழு பரிந்துரை செய்தது. அவ்வண்ணமே, 1972-73ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம்மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 9.26 கோடி ரூபாயாக இருக்கிறது. "மருத்துவம்" என்பதன்கீழ் அதிகச் செலவு, வரப் பெற்ற வைப்புத் தொகைகளைவிட பிற துறைப் பணிக்கான உதவித் தொகை முன்னிட்ட மிகைச் செலவு, இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட் நிறுவனத்தார் 1973 ஜனவரி, பிப்ரவரித் திங்களில் வெளியிட்ட உருக்கு அளவில் ஏற்பட்ட விலை அதிகரிப்பு, மேலும் பலருக்கு ஓய்வூதியம் அனுமதித்தது, இந்திய அரசு வழங்கிய இரசாயன உரங்களுக்குரிய செலவைச் சரிக்கட்டியதனால் ஆண்டு இறுதியில் எதிர்பாராது ஏற்பட்ட ஒரு சில செலவினங்கள் ஆகியவை இவ்வகையில் ஏற்பட்ட முக்கிய செலவினங்களாகும். ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

3. 1972-73ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

## 6. 1973-74ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையை அளித்தல்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1973-74ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்கள் குறித்த மானியக் கோரிக்கையை இம் மன்றத்தின் வைக்க முன் வந்துள்ளேன்.



1979 ஏப்ரல் 23] [திரு. கி. மனோகரன்]

2. 1977-79ஆம் ஆண்டுக்களுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1973-74ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளை சட்டப் பேரவை முன் வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக்கணக்கு ஆய்வுக் குழு பரிந்துரை செய்தது. அவ்வண்ணமே, 1973-74ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 6.97 கோடி ரூபாயாக இருக்கிறது. முக்கியமாக "மருத்துவம்", "தொழில்கள்" என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது. கூவம் ஆற்றுப் பராமரிப்பு, முக்கியமான சிறப்புப் பழுதுபார்த்தல் பணிகள், மேலும் பலருக்கு ஓய்வூதியம் அனுமதித்தது ஆகியவை குறித்து மேற்கொண்ட செலவும், முந்தைய ஆண்டுகளில் தவறான கணக்கு வகைப்பாடுகளைத் திருத்தியதில் தொகை ஈடு செய்ததன் காரணமாக ஏற்பட்ட செலவும், 1973-74 ஆம் ஆண்டு மிகைச் செலவு ஏற்பட்ட முக்கிய இனங்களாகும். ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

3. 1973-74 ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

## 7. அரசின் தீர்மானங்கள்.

### (1) சமூக நலம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள சமூக நலம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 557-577 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள சமூக நலம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்டுள்ள சமூக நலம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி யடைகிறேன்.

இத்துறை இந்த ஆண்டு ஆற்ற இருக்கிற சாதனைகளை எடுத்துச் சொல்லி, கடந்த இரண்டாண்டுகளில் அரசாங்கத்தின் சார்பாக இந்தத் துறையில் என்னென்ன திட்டங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், அதிகமான புள்ளிவிவரங்களுக்குள் சென்று இன்னின்ன இனங்களுக்குப் பணம் ஒதுக்கீடு செய்திருக்கிறது என்று பேசுவதைவிட என்னென்ன திட்டங்களை இந்த அரசு வகுத்திருக்கிறது என்றும், வகுக்கப்பட்ட திட்டங்களில் என்னென்ன காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்றும் மேலெழுந்தவாரியாகக் கருத்துக்களைச் சொல்வது நல்லதாக இருக்குமென்று கருதுகிறேன்.

இந்தத் துறையில் பல புதிய அறிவிப்புகளைக் கொள்கை விளக்கக் குறிப்பிலும், மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தகவல் என்ற தலைப்பிலும் பல விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் துறைக்காக அரசு ஒதுக்கியிருக்கிற மொத்தத் தொகை சுமார் ரூபாய் ஏழு கோடியாகும். அதாவது ரூபாய் 6.94 கோடி என்ற அளவுக்குத்தான் இத்துறைக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேசும்போது, சமூக நலத்திற்கான முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லி, இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டு என்று எடுத்துச் சொல்லி அவர்களின்மீது இந்த அரசாங்கம் நாட்டம் செலுத்தும் என்று சொல்லி, தாய்க்குலத்தின்பால் இந்த அரசுக்குப் பரிவும் கவனிப்பும் இருக்கும் என்று சொல்லி, ரூபாய் 850 கோடிக்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்தத் துறைக்காக மட்டும் ஒதுக்கியிருக்கிற மொத்தத் தொகை ரூபாய் ஏழு கோடிதான். இது யானைப் பசிக்குச் சோளப் பொரி என்பதைப்போல் இருக்கிறது. இந்த ரூபாய் ஏழு கோடிக்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏராளமான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்! இவ்வளவு





ஏராளமான திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த ஏழு கோடி ரூபாய் போதுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

நான் இந்தத் துறையின் சாதனைகளை எடுத்துச் சொல்வதற்கு முன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆர்வத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாகத் தாய்க்குலத்தைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் மிக நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் வாழும் ஆதரவற்ற அனாதைப் பெண்களுக்கும் இளங்குழந்தைகளுக்கும் மறு வாழ்வு தருவதில் இந்த அரசு கவனம் செலுத்துகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களுடைய கொள்கைக் குறிப்பில் ஒன்றை எதிர்பார்த்தேன். சமூக நலத் துறையைப் பொறுத்தவரை, 1974 ஆம் ஆண்டு ஒரு புதிய திருப்பத்தை உருவாக்கிய ஆண்டாகும். அதாவது ஒரு 'டர்னிங் பாயின்ட்' என்று ஒரு திருப்பு முனையை அந்த ஆண்டு ஏற்படுத்தியது. அப்போதுதான் பல்வேறு புதிய திட்டங்கள் சமூக நலத் துறையின் சார்பாக மேற்கொள்ளப்பட்டன என்று சொல்லியிருக்கலாம். ஆனால் கடந்த இரண்டாண்டுக்கால சாதனைகளை மட்டுமே அமைச்சர் அவர்கள் கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது கண்ணொளி வழங்குத் திட்டத்தையும், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தையும் மற்றும் அதைப் போன்ற திட்டங்களையும் மேற்கொண்டதை எடுத்துச் சொல்லி, அதற்குப் பிறகு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மேற்கொள்ளப்பட்ட திட்டங்களைப்பற்றிய விவரங்களைக் கொடுத்திருக்கலாம். ஆனால் அவர் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாக அவரது கைகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று நான் கருதுகிறேன். அதனால்தான் அவைகளைப் பற்றிக் குறிப்பிடாமல் விட்டுவிட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

நான் இந்தத் துறைக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். கல்வித் துறையைப் போலவோ, வருவாய்த் துறையைப் போலவோ, காவல் துறையைப் போலவோ அல்ல இந்தத் துறை. அங்கெல்லாம் சட்டத்தைக் கடுமையாக நிறைவேற்ற வேண்டும், கண்காணிக்க வேண்டும் என்ற அடிப்படையில் செயல்படுகிற துறைகள் அவை. ஆனால் சமூக நலத் துறையைப் பொறுத்தவரையில், வாழ்க்கையில் கசப்பும் வெறுப்பும் நிறைந்த பகுதியினரின்

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 ஏப்ரல் 23

குறைகளை, வாழ்க்கையின் விளிம்பில் நின்று தத்தளித்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு மறு வாழ்வு காண வேண்டும் என்று செயல்பட வேண்டிய துறை இது. மிகுந்த மனிதாபிமான உணர்வு இந்தத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அலுவலர்கள்தான் இந்தத் துறையில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை ஒன்றைக் குறிப்பிட்டார்கள். எந்தத் துறையானாலும் அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற அதிகாரிகள் தொண்டுள்ளத்தோடு பணியாற்ற வேண்டும். அதுமட்டுமல்ல; அவர்களுக்குத் தொண்டுள்ளத்தோடு தாயுள்ளமும் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். தாயுள்ளம் என்பது எப்படி இருக்கும் என்பதற்கு அப்போது ஒரு அழகான கதையைச் சொன்னார்கள்.

தன்னுடைய கணவன் தன்னிடத்தில் மிகுந்த அன்பைக் காட்டுகிறானா என்பதைச் சோதிக்க விரும்பிய மனைவி கணவனைப் பார்த்து 'உங்களுக்கு உங்கள் தாயின்மீது இருக்கிற அன்பைவிட என்மீது இருக்கிற அன்பு அதிகமா' என்று கேட்டாள். 'ஆம்' என்று கணவன் பதில் அளித்தான். 'அதில் உனக்குச் சந்தேகம் உண்டா?' என்று அவன் கேட்டான். 'உன்மீது எனக்கு அதிகமான அன்பிருக்கிறது என்பதைக் காட்ட எதை வேண்டுமானாலும் பரிசாகக் கேள், நான் கொடுக்கிறேன்' என்று சொன்னான். உடனே மனைவி அவனைப் பார்த்து 'அப்படியானால் உன்னுடைய தாயின் இதயத்தை எனக்குக் கொண்டு வந்து கொடுக்க வேண்டும்' என்று கேட்டாள். மனைவியின் பெருவிருப்பத்தை நிறைவேற்ற ஆவல் கொண்ட கணவன் நேராகப் போய் கையிலே கட்டாரி ஏந்தி, தாயை அடைந்து தாயைக் கொன்று அவருடைய இதயத்தைக் கையில் ஏந்திக்கொண்டு வேகமாக மனைவியை நோக்கி நடைபோட்டான். விரைவில் சென்று மனைவியின் கையில் கொடுக்க வேண்டுமென்று விரைந்துவந்த கணவன் ஒரு கல்தடுக்கி கீழே விழுந்துவிட்டான். அப்போது கையிலே இருந்த அவனுடைய தாயின் இதயம் அவனைப் பார்த்து "மகனே, கொஞ்சம் பார்த்துப் போகக் கூடாதா? இப்படி வேகமாக வந்தது கால் தடுக்கிவிட்டதே! அதனால் காயம் ஏற்பட்டுவிட்டதா? பார்" என்று கேட்டதாம். அப்படிப்பட்ட தாயுள்ளம்தான் இந்தத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன்.



1979 ஏப்ரல் 23] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

(பிற்பகல் 5-00)

அதிகாரிகள் மட்டத்திலே இருப்பவர்கள் இவ்வளவு ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வரவு செலவுக் கணக்குகளைச் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறார்களே தவிர, அந்த இல்லங்களில் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றனவா, நன்மைகளைப் பெற்றிருக்கிறார்களா என்பதைப் பார்ப்பதில்லை. அவற்றையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று இந்தத் துறையிலுள்ள அதிகாரிகளை முடுக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம் மற்றெல்லாத் துறைகளிலும் பொறுப்பு வகிப்பவர்கள் தங்களுக்கென சங்கங்களை வைத்துக்கொண்டு, அமைச்சர்களைச் சந்தித்து, அதிகாரிகளைச் சந்தித்து கோரிக்கைகளை வைக்கிறார்கள். ஆனால் இந்தத் துறையில் உள்ளவர்கள் ஆமைகளாக, ஊமைகளாக, பேசச் சக்தியற்றவர்களாக, தலைமைச் செயலகத்திலே உள்ள அதிகாரிகளையும், அமைச்சர்களையும் சந்திக்க முடியாதவர்களாக இருப்பதால்தான் நல்ல காரியங்கள் நடைபெறுவதில்லை. நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற உணர்வு அமைச்சருக்கு இருக்கிற காரணத்தால், அந்தக் காரியங்களைச் செய்வதற்கு அதிகாரிகளையும் முடுக்கி விடவேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன்.

இந்த மாநிலத்தில், தாம்பரம், தஞ்சாவூர், கடலூர், நெல்லை, சேலம் போன்ற ஐந்து இடங்களில் சேவா சங்கங்கள் இருக்கின்றன. அந்த சேவா சங்கங்களில், 18 முதல் 40 வயது வரையில் உள்ள பாதுகாப்பற்ற, ஏழை, அனாதைகளுக்கு ஆதரவு அளிக்கப்படுகிறது. அந்த சங்கங்கள் அவர்களுக்குப் புகலிடங்களாக மட்டும் இல்லாமல் அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்துவதாகவும் இருக்கின்றன. அவர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படுகிறது, தொழில் கல்விக்கான பயிற்சி அளிக்கப்படுகிறது, தையற் கல்வி கற்பிக்கப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். இந்த ஐந்து சேவா சங்கங்களுக்குப் பணம் ஒதுக்கீடு செய்வதற்கு முன்னால், இந்தத் துறை சில புள்ளி விவரங்களைத் தயாரித்தாக வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள பெண்களின் தொகை எவ்வளவு, அதில் விதவைகள், அனாதைகள், ஆதரவற்றவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தைத் தயார் செய்ய வேண்டும். அதிலே எவ்வளவு பேர் கிராமப் பகுதிகளில் இருக்கிறார்கள் என்று அறிந்து அதற்கேற்ப சேவா சங்கங்களை அந்தந்தப் பகுதியில் ஏற்படுத்த திட்டங்களைத் தயாரித்து நிறைவேற்றினால் நலமாக இருக்கும். பெரு நகரங்களில் மட்டும் இந்த சேவா சங்கங்களை வைத்துவிட்டால் போதுமா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆகவே இதைப் பரவலாக்க வேண்டும். மாநிலத்தில் இருக்கிற ஒவ்வொரு தலைமையிடத்திலும் சேவா சங்கங்களை உருவாக்கி அப்படிப்பட்ட சங்கங்களில் 18 வயது முதல் 40 வயது வரையில் உள்ள ஆதரவற்றவர்கள், விதவை

கள், அனாதைகள் ஆகியவர்களுக்குப் புகலிடம் அளித்து அவர்கள் தங்களுடைய சொந்தக் காலிலேயே நிற்கக் கூடிய அளவுக்கு ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். அதுதான் இந்தச் சமுதாயத்திற்கு நாம் செய்யும் நல்ல காரியமாக இருக்கும்.

அடுத்து இன்னொன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பெரு நகரங்களில் வேலை பார்க்கிற பெண்களுக்காக, வேலை பார்க்கிற இடங்களில் பாதுகாப்பு இல்லாத காரணத்தால், ஒர்க்கிங் விமென்ஸ் ஆஸ்டல்களை நடத்தி வருகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். இந்தத் துறையால் ஒரே ஒரு விடுதிதான் நடத்தப்படுகிறது. அதுவும் சென்னையிலே மட்டும் நடத்தப்படுகிறது. அந்த விடுதியில் அனுமதிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கை 25 பேர். அடுத்து, வேலை தேடி கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வரும் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதென்றும், அவர்களுக்குத் தேவையான வசதியையும், பாதுகாப்பையும், தங்குவதற்கு வேண்டிய வசதியையும் கொடுக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநில அரசு ஒரே ஒரு விடுதியை மட்டும்தான் நடத்துகிறது. அதிலே 25 பேர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கம் ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறது. 17 நிறுவனங்களுக்கு மானியம் தந்திருக்கிறது. நிறுவனங்கள் கட்டிடம் கட்டுவதற்காக ஆகும் செலவில் 75 சதவிகிதத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. ஆனால் மாநில அரசு ஒரு முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தனியார் நிறுவனங்கள், வேலை பார்க்கும் பெண்களுக்கான விடுதிகளைக் கட்டினால், அதிலே 15 சதவிகிதத்தை மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் 35,000 ரூபாய்க்கு மேற்படாமல் இருக்க வேண்டுமென்று குறிப்பு கொடுத்திருக்கிறார்கள்; மாநில அரசு 15 சதவிகிதத்தைத்தான் தருகிறது. அதுவும் 11 நிறுவனங்களுக்கு மட்டுமே. ஆனால் மத்திய அரசாங்கம் 75 சதவிகிதத்தை ஏற்றுக்கொள்ளுகிறது. ஆகவே மத்திய அரசு தருகிற மானியத்தைப் பயன்படுத்தி நகர்ப்புறங்களில் ஏராளமான பெண்களுக்கான விடுதிகளைக் கட்டித் தர ஒரு திட்டத்தை உருவாக்கினால், பல்வேறு சங்கடங்களுக்கு ஆளாகிற பெண்களுக்குப் பாதுகாப்பு ஏற்பட வாய்ப்பாக இருக்குமென்று தெரிவித்து மாநில அரசு புதிய திட்டத்தை உருவாக்கி வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக எல்லா மாவட்டத் தலைமையிடங்களிலும் ஒர்க்கிங் விமென்ஸ் ஆஸ்டல்களைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் ஆதரவற்ற பெண்களுக்கு உதவியும் கிடைக்கும், நாளாவட்டத்தில் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கிற வாய்ப்பும் பெருகுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.





இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டு என்பதால், அவர்களுடைய வளர்ச்சிக்காக, வெல்ஃபேர் ஸ்டேட் என்னென்ன நல்ல திட்டங்களை உருவாக்க முடியுமோ அந்தத் திட்டங்களையெல்லாம் செய்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறதென்று சொல்லி அதற்கான புள்ளி விவரங்களையும் சொல்லியிருக்கிறார்கள். கிராமங்களிலெல்லாம் பாலர் பள்ளிகளை ஆரம்பித்து அதன் மூலமாகப் பிள்ளைகளை பள்ளிக்கு இழுக்கிற முறையையும், ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தையும், அதற்காக 'கேர்' நிறுவனத்திலிருந்து பெறக்கூடிய தொகையையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை வரவேற்கிற நேரத்தில் இந்த அரசாங்கத்திற்கு ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்குக் கிடைத்திருக்கிற ஒரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தகவல் சரியாக இருந்தால், அதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 'இன்டகிரேடெட் சைல்ட் டெவலப்மென்ட் சர்வீஸ் ஸ்கிம்' என்ற ஒரு திட்டத்தை மத்திய அரசு இந்தியா முழுமைக்கும் உருவாக்கியிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தின் கீழ் நான்கு புராஜெக்டுகளை கிராமப் பகுதிகளிலும், மலைவாழ் மக்களின் பகுதிகளிலும், குடிசைப் பகுதிகளிலும் உருவாக்க வேண்டும். ஒவ்வொரு புராஜெக்டின் கீழும் 100 கிராமங்களை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக்கொண்டால், அந்த கிராமங்களுக்குத் தேவையான எல்லா மருத்துவ வசதிகளுக்கான முழுத் தொகையையும் மத்திய அரசு கொடுக்கிறது. இத்திட்டத்தை நிறைவேற்றினால், நூற்றுக் கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். ஒவ்வொரு புராஜெக்டின் கீழும் 100 அங்காடிகளை ஏற்படுத்தலாம். அந்த புராஜெக்ட் ஆபிசருக்கு 175 ரூபாய் சம்பளம், மேலும் டைபிஸ்ட், வான் டிரைவர், போன்ற வசதிகளையும் தருகிறார்கள். ஒரு பிராஜெக்டை அமுல்படுத்த மத்திய அரசு அனுமதித்துள்ள தொகை ரூபாய் 4,66,000 ஆகும். இது போன்ற நான்கு பிராஜெக்டுகளை நம் நாட்டில் செய்ய வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வேண்டிய எல்லாவிதமான வசதிகளையும், நிரந்தரமான முறையில் தருகிறது. இத்திட்டத்தை நம் மாநிலத்தில் நிறைவேற்றுவதாகக் குறிப்பிலே எந்த இடத்திலும் குறிப்பிடக் காணோம். இங்கே இதை நிறைவேற்றவில்லை. இத்திட்டத்தை அமுல்படுத்த மத்திய அரசாங்கத்திலே ஒரு சிறு நிபந்தனையை விதித்திருக்கிறார்கள். இத்திட்டத்தின்கீழ் உதவி பெறுகிற குழந்தைகளுக்கு வேண்டிய உணவை, 'கேர்' நிறுவனத்திலுள்ள உணவைப் பயன்படுத்தாமல், மாநில அரசே வழங்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 5.10.)

இந்தப் பிள்ளைகளுக்கு அதிகமாகக் கொடுக்கின்றதாக இருந்தால் செலவுகள் கூடுதலாகிவிடும் என்று பயந்து ஏற்றுக்கொள்ளவில்லை. நிதி அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டாலும், பரிசுச் சீட்டு நடத்தி, ஏராளமான பணம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். யார் யாருக்கோ கொடுக்கிறோம். தலைசிறந்த படங்களுக்குப் பரிசு கொடுக்கிறோம், தலை சிறந்த வீணை வித்வான்களுக்கும் சங்கீத வித்வான்களுக்கும் நாட்டியக் கலைஞர்களுக்கும் கொடுக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சமூக நலத் துறை குறிப்பின் மீது ஆறு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். தொழிலாளர் நலத் துறையிலே ஆறு பேர்கள், அமைச்சர்கள் இருவர் பேச வேண்டும். ஆகவே நேரம் அதிகமாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** பிற்பட்டோர் நலத் துறையிலும் பணம் ஒதுக்குகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத்தான் சொல்லிக் கொள்கிறேன். மனமிருந்தால் கொடுக்கலாம். இந்தத் திட்டத்திற்கு இந்த அரசுக்கு ஒரு வரைமுறையிருக்கிறது. பல லட்சக்கணக்கான ரூபாய் தேவைப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு காலையிலே தினத்தந்தியைப் பார்த்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதில் செலவுகள் எல்லாம் போக பரிசுச் சீட்டுத் திட்டத்தில் குழந்தைகளுக்காக என்று ரூபாய் 36 லட்சம் வரையில் கிடைக்கும் என்று இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மகிழ்ச்சி. அதைத்தான் நான் வரவேற்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், அந்தப் பிள்ளைகளுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும். அதற்கு மத்திய அரசு திட்டங்களைக் கொடுக்கின்றபோது, அவற்றையெல்லாம் அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டும். அதனால் ஆகின்ற செலவுகளைப் பொறுத்து அந்தத் துறையிலே அந்தந்த வருடம் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, ஆடிட் செய்வதெல்லாம் இருக்கிறது. விதவைகள் எல்லாம் வாழ வகையற்றவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் எதிர்காலத்திலே நம்பிக்கையோடு வாழ வேண்டும். அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டும். அதற்கு வேண்டிய உதவிகளை நாம் செய்துகொண்டிருக்கிறோம்.





பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுபற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் வகுத்ததாகும். இந்த சமுதாயத்தில் இவர்கள் புரையோடியவர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்வில் வளம் பெற வேண்டுமென்பதற்காகத்தான் மறுவாழ்வுத் திட்டம் என்று ஒன்று கொண்டு வந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் பற்றிய விவரங்களையும் இதில் கொடுத்திருக்கிறார்கள். எவ்வளவோ அற்புதமான காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய மனமில்லாமல் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். சாதாரணமாக பிச்சைக்காரர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள். அவர்களுக்கும் நாம் மறுவாழ்வு அளிக்க வேண்டும். அவர்களுக்கெல்லாம் பண உதவி செய்ய வேண்டும். மேல்பாக்கத்திலே அவர்களுக்கு என்று ஒரு பாதுகாப்பு முகாம்கூட போட்டிருக்கிறார்கள். சில நேரங்களில் அங்கேயிருப்பவர்கள் எல்லாம் தப்பித்துக் கொண்டு வெளியே வருவதற்கு முயல்கின்றார்கள். அங்கே அவர்கள் சரிவர நடத்தப்படவில்லை என்பதால், அப்படி வருகிறார்கள். இந்த மேல்பாக்கத்திலே பிச்சைக்காரர்களுக்கு முழு அளவுக்குச் சுதந்திரம் இல்லை. எனக்கு ஞாபகம் சரியாக இருக்குமானால், அங்கு 1,280 பேர்கள் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அங்கு ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்கள் தங்கி வாழ்வதற்கு வசதியிருந்தபோதிலும், அவர்கள் நாட்டிலே பஸ் ஸ்டாண்டுகளிலும் பொது இடங்களிலும் இருந்துகொண்டிருக்கிறார்கள். இதைப் பார்க்கும் போது, இந்தத் திட்டத்தை அரசு சரியாகச் செயல்படுத்தவில்லை என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

அடுத்து, இன்னொன்றைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். விதவைகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் குடும்பத்தில் ஏற்படுகின்ற மனக்கசப்பின் காரணமாக வீட்டைவிட்டு வெளியேறிவிடுகிறார்கள். அவர்களுக்கும் இந்த அரசு சில நல்ல காரியங்கள் செய்திருக்கிறது. அவர்கள் மகிழ்ச்சி தருகின்ற குடும்ப வாழ்க்கையை இழந்து, பதியை இழந்து, வாழ்க்கையிலே நம்பிக்கையை இழந்து, ஒரு கசப்பான வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இளமையிலேயே இனிமையை இழந்துவிட்டிருக்கின்றவர்களுக்கு மறுவாழ்வு தருவதிலே அரசாங்கம் பல காரியங்கள் செய்திருக்கிறது. நாம் அவர்களுக்கு மறுவாழ்வு தரும்போது, அவர்களுக்கு தையல் மெஷின்களைக் கொடுத்து உதவலாம். அவர்களுடைய வேலை வாய்ப்புக்கு வழி செய்யலாம். இப்போதுகூட அவர்களுக்குப் பாய்முடைதல், தையல் வேலை, தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை என்று வழிவகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கெட்டிக்காரத்

தனமாகச் செய்து தந்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். சிவகாசியில், இராமநாதபுரம் பகுதியில் எல்லாம் அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சமூகநல இலாகாவில் இப்போதுதான் முதன்முதலாக ரூபாய் 25 லட்சம் செலவில் ஒரு திட்டமிட்டிருக்கிறோம். அங்கு பல பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்தலாம். திருமங்கலத்தில்கூட செய்ய இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருமங்கலம் வந்திருக்கிறார்கள். கல்லுப்பட்டிக்கும் வந்திருந்தால், ரொம்ப நன்றாக இருந்திருக்கும்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** திருமங்கலம் மிகவும் பிற்பட்ட தொகுதி என்று எனக்குத் தெரியும். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கும் தெரியும். அவர்களுக்கு உதவுவதில் தவறில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** கல்லுப்பட்டியும் பின்தங்கிய தொகுதிதான். இப்படி விதவைகளுக்கு ....

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த இரண்டு பேர்களுடைய தொகுதிகள் விஷயம் எனக்கு இப்போதுதான் தெரியவருகிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இந்த விதவைகள் மறுவாழ்வில் நாம் தைரியமாகக் காரியங்களைச் செய்ய வேண்டும். அரசாங்கத்தில் அவர்களுக்கு சட்டபூர்வமான பாதுகாப்புக்கள் கொடுக்க வேண்டும். இன்றைக்கு பெண்கள் துணிந்து தாங்களாகவே படித்து முன்னேறி சம்பளம் பெற்று வாழ்கிறார்கள். அவர்கள் அரசாங்க அலுவலகத்திலோ, தனியார் அலுவலகங்களிலோ பணி செய்து தங்களை நிலைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முன்னேறுவதற்கு தக்க 'கைட்லைன்ஸ்' தர வேண்டும். அவர்கள் நலிந்து போயிருக்கின்றார்கள். நகர்ப்புறங்களிலே அவர்களுக்கு ஓரளவுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு எந்த ஒரு வாய்ப்பும் நம்பிக்கையும் இல்லாமலிருக்கிறது. நாம் அதைச் செய்ய வேண்டும். வாய்ப்புக்களை அங்கேயும் ஏற்படுத்தித் தர வேண்டும். அவர்களுக்கு தையல் மெஷின்கள் வாங்கிக்கொடுக்கின்றார்கள். சில சமூக நல நிறுவனங்கள் நல்ல பல காரியங்களை அவர்களுக்குச் செய்து கொடுக்கிறார்கள். விதவைகளைத் துணிந்து திருமணம் செய்துகொள்கின்றவர்களுக்கு, படித்த வாலிபர்களுக்கு அரசுத் துறையிலோ, பெரிய தனியார்



துறை அலுவலகங்களிலோ அரசாங்கம் வேலை வாய்ப்பு வாங்கித்தரத் தயாராக இருக்குமானால், விதவையைத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும். அவர்கள் சமூகத்திலே தனித்து விடப்படாமல், புறக்கணிக்கப்படாமல் இருக்கின்ற நிலைமைகள் ஏற்படும். அதைச் செய்ய இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே வேரில் பழுத்த பலா என்பது போல இனியும் விதவைகள் கவனிப்பாரற்றுக் கிடந்தால் சமுதாயத்தில் அவர்களுக்கு வாழ வழியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கத்திய நாடுகளிலே அந்த நிலைமைகள் இல்லை. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலேகூட ஒரு கட்டுரை வெளி வந்திருந்தது. மேற்கத்திய நாடுகளிலிருந்து குடும்பத்தை விட்டே பிரிந்து வந்து விடுகிறார்கள். தாங்களாகவே வாழ்கின்றார்கள். அவர்கள் சுதந்திரமாக வாழ விரும்புகிறார்கள். அங்கு அதற்கு அவர்களுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதுபோலவே தனித்து வாழ்கின்ற பெண்களுக்கு, குறிப்பாக பெண்கள் புதிய வாழ்வு பெறுவதற்காக அரசாங்கம் நல்ல புதிய திட்டங்களை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் விஷயத்தில் இந்தத் துறை அக்கறைகாட்டி கவனித்து அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நான் ஏற்கெனவே சொல்லியிருப்பதுபோல, இந்த விளக்கக் குறிப்பிலே ஆறு பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. அடுத்து வருகின்ற விளக்கக் குறிப்பிலேயும் ஆறு பேர்கள் பேச வேண்டியதாக இருக்கிறது. பிறகு இரண்டு அமைச்சர்கள் பேச வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்களுக்கு மேல் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அறிவழகன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பு நீண்டகாலமாக சமுதாயத்தில் செய்யப்பட வேண்டிய பல காரியங்களை மிகச் சிறப்பாகச் செய்திருப்பதை எடுத்துக்காட்டியிருக்கிறது. அவர்கள் இன்னும் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன என்பதை நான் அறிவேன். இதிலே உலகக் குழந்தைகள் ஆண்டுபற்றிக் குறிப்பிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். குழந்தைகள் நிறைய வைத்துக்கொண்டிருக்கிற கல்வித் துறை அதைப்பற்றிக் குறிப்பிடாவிட்டாலும், குழந்தைகள் கொஞ்சமாக வைத்துக்கொண்டிருக்கின்ற துறை குழந்தைகளைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பது குழந்தைகள் நலத்திலே சமூக நலத் துறை எடுத்துக்கொண்டிருக்கும் அக்கறையைத்தான் காட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-20)

ஐக்கிய நாடுகள் சபையின் குறிப்பின்படி, 1978 ஆம் ஆண்டிலே வளர்கின்ற நாடுகளிலே பிறந்த 12 கோடி குழந்தைகளிலே, ஒரு கோடி குழந்தைகள் 1979 ஆம் ஆண்டுக்குள் இறந்துவிடும். அந்தக் கணக்குதான் நம்முடைய நாட்டிற்கும் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். வளர்ந்து வருகின்ற நம்முடைய நாட்டைப் பற்றிச் சொன்ன கருத்தாகும் அது. எனவே, வளர்கின்ற குழந்தைகளுக்கு எந்தவிதமான தன்மைகளைச் செய்ய வேண்டுமென்பதைப்பற்றி மக்களுடைய உள்ளத்திலே பரப்புவதற்கான முயற்சிகளை சமூக நலத் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிதித் துறை அமைச்சரவர்கள் இந்தத் தடவை லாட்டரி டிக்கட்டு மூலம் வரும் முழுத் தொகையும் குழந்தைகள் நலத்திற்காக உபயோகிக்கப்படுமென்று தெரிவித்தார்கள். அந்தத் தொகை எந்த அளவிற்குப் போதுமென்றால், குழந்தைகளுடைய நலனைப்பற்றி நம்முடைய நாட்டு மக்களுடைய உள்ளத்திலே ஏற்படுத்த வேண்டிய உணர்ச்சிகளுக்குப் போதுமானதாக இருக்கும். மேலும் நம்முடைய சமூக நலத் துறை அமைச்சரவர்கள், குழந்தைகளுக்குச் செய்யப்பட வேண்டிய பல வேலைகளை நம்முடைய எல்லாத் துறையினரும், அமைச்சரவையிலே இருக்கும் எல்லா அமைச்சர்களும் மேற்கொள்ள எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம்கூட, தலைவரவர்களே, நான் நீச்சல் குளத்தைப்பற்றிய கேள்வியைப் போட்டு, நம்முடைய நாட்டிலே உள்ள 12 வயதிற்குட்பட்ட குழந்தைகள், ஆபத்தற்ற முறையில் நீச்சல் கற்றுக்கொள்ள குளங்கள் இல்லை என்றும், இருக்கின்ற குளங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென்றும், அதிலே நீர் குறைவாக விட வேண்டுமென்றும் சொன்னேன். குழந்தைகள் என்று எடுத்துக் கொண்டால், நம்முடைய நாட்டிலே அவர்களுக்கென்று மேசை, நாற்காலிகூட செய்யப்படுவதில்லை. பன்னிரண்டு வயதிற்குட்பட்ட குழந்தை வீட்டிற்கு டெலிபோன் செய்ய வேண்டுமென்று இரயில்வே நிலையத்தில் முயற்சி செய்தால், அதற்கான வசதிகள் இல்லை. தன்னை யாரோ ஒரு திருடன் பிடித்துச் செல்லும் நேரத்தில், தப்பித்து இந்த இடத்திலே நிற்கிறேன் என்ற செய்தியை வீட்டிற்குச் சொல்ல, டெலிபோன் பண்ணவேண்டுமென்றால், அமைத்து வைக்க உயரத்தில் தொலைபேசி இருக்கிறது. எனவே அங்கொன்றும், இங்கொன்றுமாக குழந்தைகளுக்குப் பயன்படும் பல காரியங்களைச் செய்தாக வேண்டும்.





1976 ஆம் ஆண்டிலே, டெல்லியிலே நடைபெற்ற உலக மருத்துவர்கள் மாநாட்டில், குழந்தைகள் உபயோகிக்கின்ற எந்தெந்தப் பொருள்கள் விஷமுடையனவாக இருக்கின்றன என்பதைப்பற்றிச் சொன்னார்கள். பள்ளிக்கூடங்களிலே மாணவர்கள் பயன்படுத்தும் பென்சில் லெட்டைச் சாப்பிட்டால், அது உடலிலே சென்று, ரத்தத்தில் கலந்து விடுகிறது என்றும், அதை நீக்க மருந்து இல்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகைகளை குழந்தைகள் கடித்தால், அதன் மூலம் அவர்களுடைய உடலிலே கொஞ்சம் கொஞ்சம் விஷம் செல்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, எந்த விதமான உணவுப் பொருள்களை கடைகளிலிருந்து வாங்க வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்ல வேண்டும். மோசமான உணவு என்று தெரியாமல் அவர்கள் உட்கொள்ளும் முறையை மாற்றியமைக்க, பெரியதொரு முயற்சியை சமூக நலத் துறை அமைச்சரவர்கள் மிக வேகமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இருக்கிற குழந்தைகள், நாம் இருப்பதற்கு மேலாகப் பல ஆண்டுகள் வாழ்வார்கள். கி.பி. 2000-க்கும் மேலாக வாழ்வார்கள். சமூக நலத் துறை அமைச்சரவர்களும் கி.பி. 2000-க்கும் மேல் வாழ வேண்டுமென்று விரும்புகிறேன். கி.பி. 2000 ஆண்டுக்குமேல் அந்தக் குழந்தைகள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். கி.பி. 2000-ல் எப்படி வாழ்வாய் என்பதைப்பற்றி உலகத்திலுள்ள குழந்தைகள் அனைவரும் ஓவியமாக வரைய வேண்டுமென்று 'யுனஸ்கோ' நிறுவனம் சொல்லியிருக்கிறது. 'கி.பி. 2000' பற்றி டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் புத்தகம் எழுதியிருக்கிறார்கள். எதிர்கால சமுதாயத்தை, குழந்தைகளை இன்றைய தினம் நாம் தயார் செய்கிறோமென்ற முறையில், அவர்கள் நல்வாழ்விற்கான பெரு முயற்சிகளை சமூக நலத் துறை நிச்சயமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நான் இந்தச் சபையிலே ஒரு கேள்வி கேட்டேன். அது என்னவென்றால், உடல் ஊனமுற்றவர்களுக்கு, ஸ்கூட்டர் அல்லது கார் வைத்திருந்தால், அதற்கான பெட்ரோல் செலவில் பாதியை மத்திய அரசு தருகிறது என்றும், அப்படிப்பட்டவர்கள் மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டர் வாங்க வேண்டுமென்றால், அதில் பாதி விலையை மாநில அரசு தருமா என்பதுதான். தலைவரவர்களே, நீங்கள் நன்றாக அறிவீர்கள், ஆசிரியர்களிலே பலர் உடல் ஊனமுற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை. உடற்பயிற்சி ஆசிரியர்கள் பலர் ஊனமுற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மிக வேகமாகத் தாண்டியதால் அப்படி இருக்கலாம். அடுத்து, உடல் ஊனமுற்றவர்களுக்கும், மன நோய் உற்றவர்களுக்கும் அங்கொன்றும், இங்கொன்றுமாக சில பள்ளிகள்

இருக்கின்றன. மென்டலி ரிடார்டட் குழந்தைகளுக்கு பல பள்ளிகளை ஏற்படுத்த வேண்டும். அந்தப் பள்ளிகளுடைய ஆசிரியர்களுக்கு நல்ல சம்பளத்தைத் தர வேண்டும். இந்தச் சபையிலே இருக்கிற உறுப்பினர்கள் எல்லோரும் அறிவார்கள். மன நோய் உள்ள குழந்தைகள் எவ்வளவு சிரமத்திற்கு ஆளாவார்கள் என்பதையும், அவர்கள் பெற்றோர்கள் அவர்களை வைத்துக்கொள்ள முடியாத நிலைமையிலே, இப்படிப்பட்ட விடுதிகளிலே ஒப்படைக்கிறார்கள் என்பதையும் உறுப்பினர்கள் எல்லோரும் அறிவார்கள். எனவே, அங்கேயுள்ள ஆசிரியர்கள் அந்தக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் சூழ்நிலையில் இருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு வேண்டிய அருமையான பணிகளை ஆசிரியர்கள் செய்ய வேண்டும். எனவே, அந்த ஆசிரியர்களுக்கு நல்ல சம்பளத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சமூக நலத் துறையைச் சேர்ந்த கேந்திரங்களிலிருந்து தையல் இயந்திரங்கள் கேட்டால், அப்படிக் கேட்கப்படுவதற்கும், அவை கொடுக்கப் படுவதற்கும் இடையிலே பல மாதங்கள், வருடங்கள் ஆகிவிடுகின்றன. ஆகவே, தலைமைச் செயலகம், அங்கிருந்து வரும் கோரிக்கைகளை விரைந்து ஏற்க வேண்டும். அவர்கள் ஏற்கெனவே ஊனமுற்றவர்களாக இருக்கிறார்கள், விதவைகளாக இருக்கிறார்கள். வாழ்க்கையிலே பல்வேறு இன்பங்களை இழந்திருக்கிறார்கள். அவர்கள் கேட்கும் சிறு உதவிகளைச் செய்வதற்குக் கூட ஆண்டுக்கணக்கில் நாட்கள் எடுத்துக்கொள்ளாமல், உடனடியாகச் செய்யவும், அவர்கள் சொல்லும் யோசனைகளை விரைந்து ஏற்கவும், முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். உடல் ஊனமுற்றோருக்கான பள்ளிகளிலும், மற்றுமுள்ள ஸ்பெஷல் பள்ளிகளிலும் தரப்படுகிற உணவு, நல்ல சத்துள்ளதாகவும், சுவையுள்ளதாகவும் இருக்க, உரிய உதவிகள் அதிகமாக்கப்பட வேண்டும். தனியார் நிறுவனங்களானாலும், அரசு நிறுவனங்களானாலும், அவர்களுக்குத் தரப்படும் உதவிகள் அதிகமாக்கப்பட வேண்டுமென்று சொல்லி, சமூக நலத் துறையைப் பாராட்டி, அமைகிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சமூக நலத் துறையின் கொள்கைக் குறிப்பின்மீது சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்தின்போதாவது, வேறு பிரச்சினைகளைப்பற்றிச் சொல்லாமென்று கருதினாலும், ஆசிரியர்களை தனியார் துறை, ஊராட்சி ஒன்றியங்கள், அரசுத் துறை, அரிசன நலத் துறை, சமூக





நலத் துறை என்று இப்படி பல்வேறு துறைகளிலே பிரித்துப் பிரித்து, வைத்திருக்கின்ற நிலை இருக்கிற காரணத்தாலே, இந்தத் துறையைப்பற்றிப் பேசும் போதுகூட ஆசிரியர்களைப்பற்றித்தான் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறேன்.

சமூக நலத் துறையிலே சீர்திருத்தப் பள்ளிகள் என்று இருக்கின்றன. அப்படிப்பட்ட சீர்திருத்தப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியப் பெருமக்கள், எப்படி இளங் குற்றவாளிகளைக் கொண்டுபோய் சிறைக்குள்ளே அடைத்து வைப்பதுபோல் அடைத்து, கல்வி போதிக்கிறார்களோ, அதே போன்று அங்கே பணியாற்றும் ஆசிரியர்களும் சிறை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வெளியே வர முடியாது. மற்ற ஆசிரியர்களைப்போல நினைத்த இடங்களுக்குச் செல்ல முடியாது, விடுப்பு எடுக்க முடியாது. அவர்களுக்கு அதிகக் கடமைகள் இருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய மாணவர்கள் தப்பி ஓடிவிட்டால், அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டிய காவலர்கள் இவர்கள்தான். அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, அங்கே கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டியது அவர்களுடைய கடமை. இல்லையென்றால் அதற்குரிய தண்டனை, அபராதம் அந்த ஆசிரியர்களுக்கு உண்டு. இப்படி பல்வேறு பொறுப்புகள் அவர்களுக்குச் சுமத்தப்பட்டிருக்கிற காரணத்தால், அந்தக் காலத்திலே, அந்தப் பள்ளிகள் தொடங்கப்பட்ட காலத்திலே, அங்கே பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு ஐந்து ரூபாய், 10 ரூபாய் என்று சிறப்பு ஊதியம் வழங்கினார்கள். நமக்கெல்லாம் தெரியாத நேரத்திலே தந்த சிறப்பு ஊதியம்தான் இன்றைய தினமும் வழங்கப்படுகிறது. சீர்திருத்தப் பள்ளிகளிலே உள்ள ஆசிரியர்களுக்கு சிறப்பு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு 25 ரூபாயும், செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 50 ரூபாயும் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக்கிறோம். என்றாலும் அந்தச் சிறப்பு ஊதியம் அந்த அளவிற்கு உயர்த்தப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்களுடைய அவல நிலையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்ற ஆசிரியர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றனவோ அத்தனை சலுகைகளும், சீர்திருத்தப் பள்ளிகளிலே இருக்கும் ஆசிரியர்களுக்கும் பொருந்துமென்று ஆணையிடப்படுகிறது என்றாலும், அவ்வாணைகள் காலத்தே அமுல்படுத்தப்படுவதில்லை. தேர்வு நிலை அங்கேயுள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமலே இருக்கிறது. எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இப்போது வழங்கியிருக்கிறார்களோ

என்னவோ தெரியாது. அண்மைக் காலம் வரையிலும், அதற்காக நாங்கள் முயற்சி எடுத்து வந்தோம். கல்வித் துறையிலே பிறப்பிக்கப்படுகின்ற ஆணைகள், அங்கே இருக்கக்கூடிய ஆசிரியப் பெருமக்களுக்கும் அவ்வப்போது பொருந்துகிற வகையிலே, நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்

(பிற்பகல் 5-30.)

கொள்கிறேன். அங்கே துணைக் கண்காணிப்பாளர், தலைமையாசிரியர் இப்படிப்பட்ட பதவிகள் இருக்கின்றன. துணைக் கண்காணிப்பாளர் பதவிக் குரிய தேர்வுகள் எல்லாம்கூட ஆசிரியர் பெருமக்களில் சிலர் தேறியிருந்தும் கூட, ஏற்கெனவே அந்தப் பதவிகள் சிலருக்கு வழங்கப்பட்டிருந்தாலும்கூட, இப்போது அமைச்சுப் பணியாளர்களுக்குத்தான் அவற்றை வழங்க வேண்டு மென்று உத்தரவிட்டிருப்பதன் காரணமாக, தேர்வுகளில் பாஸ் செய்திருக்கக் கூடிய ஆசிரியப் பெருமக்களுக்கு அந்தப் பதவிகள் கிடைக்கவில்லை. ஆசிரி யர்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு பதவி உயர்வு வாய்ப்பு அது ஒன்றுதான். அதை அமைச்சுப் பணியாளர்களுக்கு மாற்றக் கூடாது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கின்றேன்.

தொழில் ஆசிரியர்களுக்கும் இல்லத்து ஆசிரியர்களுக்கும் சிறப்பூதியத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கிராமங்களில் இருக்கக்கூடிய நிலைமைகளைப்பற்றிச் சொன்னார்கள். இன்றையதினம் நாம் எல்லோரும் குழந்தைகள் ஆண்டைப்பற்றிச் சிறப்பாகச் சொல்லி வருகிறோம். அவர்களுக்கு சத்துணவு ஊட்டுவது பற்றியும், நல்ல கல்வியை அவர்களுக்குப் போதிப்பது பற்றியும், நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவது பற்றியும் வழிவகைகளை வகுத்திருக்கிறோம். நகரங்களிலும் கிராமங்களிலும் குழந்தைகள் அவர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதற்குப் பதிலாக குழந்தைகள் காப்பகங்களை அமைத்து அவர்களை ஆசிரியைகளிடம் ஒப்படைத்திருக்கக் கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். பால்வாடி என்ற இடத்தில் அங்கே இருக்கக்கூடிய குழந்தைகளைப் பராமரிக்கின்ற ஆசிரியர் களுக்கு அதாவது பாலசேவிகாக்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 75, ரூபாய் 100, ரூபாய் 125 என்று ஊதியம் வழங்கப்படுகிறது. பேரூராட்சியில் பணி யாற்றுகிற ஒரு கடைநிலை ஊழியருக்குரிய ஊதியத்தை விட இது குறைவு. கடைநிலை ஊழியர்கள்கூட இன்றையதினம் ரூபாய் 250-க்கு மேல் ஊதியம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் ஒரு ஸ்கேவெஞ்சர் வாங்குகின்ற சம்பளத்தைவிட இவர்களுக்குக் குறைவாக





ஊதியம் வழங்கப்படுகிறது. பாலசேவிகாக்களுக்கு அதிகபட்ச சம்பளம் ரூபாய் 125 தான். பாலசேவிகாக்களுக்கு ரூபாய் 75 என்றும், ரூபாய் 100 என்றும், ரூபாய் 125 என்றும் வழங்கிக் கொண்டிருப்பது நியாயமில்லை. பால சேவிகாக்களை நாம் ஆசிரியர்களாகத்தான் கருதுகிறோம். கல்வித் தகுதி யில் அவர்களில் பல பேர் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் இருக்கிறார்கள். அதைத் தவிர மூன்று மாத காலம் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு ரூபாய் 75, ரூபாய் 100, ரூபாய் 125 என்று ஊதியம் குறைவாகத் தருவதால்தான் அவர்கள் பல தவறுகளைச் செய்ய நாமே காரணமாயிருக் கிறோம். கிராமங்களில் அசம்பாவிதங்கள் விரும்பத்தகாத தவறுகள் உருவாவதற்கான ஒரு வாய்ப்பினை நாம் அவர்களுக்கு இந்தக் குறைந்த சம்பளம் கொடுப்பதன் மூலம் உருவாக்கியிருக்கிறோம். அவர்களுடைய ஊதியத்தை மாற்றியமைத்து கண்டிப்பாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாலசேவிகா என்று அவர்களுக்குப் பெயர் வைத்திருக்கிறோம். அவர்கள் தமிழ்நாட்டில் பிறந்தவர்கள். தமிழ் மொழியைப் படித்தவர்கள். தமிழில் பேசுகிறவர்கள். தமிழ்நாட்டில் பணியாற்றுகிறவர்கள். தமிழுக்கு ஆக்கம் தருகின்ற வகையில் தமிழுக்காகப் பாடுபடுகின்ற அரசிடம் அவர்கள் ஒரு வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். எங்களை "குழந்தைகள் நல அமைப்பாளர்கள்" என்று அழையுங்கள் என்று வேண்டுகோள் வைத்திருக் கிறார்கள். குழந்தைகளை நல்லமுறையில் பராமரிக்கின்ற அவர்களுக்கு "குழந்தைகள் நல அமைப்பாளர்" என்ற வகையிலே பெயர் வைக்க வேண்டு மென்கின்ற என்னுடைய வேண்டுகோளை இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளவனாவேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்தச் சந்தர்ப்பத்தில் உறுப் பினர் அவர்கள் விரைவில் பேச்சினை முடிக்கின்ற ஒரு வாய்ப்பினை எனக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்கின்ற என்னுடைய வேண்டுகோளையும் உபயோகப்படுத்திக் கொள்கின்றேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அவர்களுடைய ஊதியத்தை மாற்றியமைக்க வேண்டும். அதேபோல் அவர்களுடைய பெயரையும் மாற்றியமைக்க வேண்டும். விரைவில் என்னுடைய பேச்சை முடித்து விடுகிறேன்.

பூவிருந்தவல்லியில் குழந்தைகள் ஒருங்கிணைந்த திட்டம் என்கிற திட்டத்தை 1963 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். அந்த இல்லங்களுக்காக 50 நல்ல கட்டிடங்கள் இருக்கின்றன. 53 பாலசேவி

காக்கள் அங்கு பணியாற்றுகிறார்கள். ஓர் ஆண்டு பயிற்சி பெற்று அவர்கள் 17—4—1963 முதல் பணியாற்றுகிறார்கள். கடந்த 16 ஆண்டுகளாக அவர்கள் அங்கு பணியாற்றுகிறார்கள். எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் அவர்களைப் பணியில் நிரந்தரம் செய்தார்கள். அவர்களுக்குப் பாதகமான ஒரு அரசாணையை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு போட்டார்கள். ரூபாய் 100 பெற்றுக்கொண்டு பாலசேவிகாக்களாகப் பணியாற்ற விருப்பமுள்ளவர்கள் பணியாற்றுங்கள். இல்லையென்றால் கிராம சேவிகாக்களாகப் பணியாற்றச் சொல்லுங்கள் என்கின்ற வகையில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒரு உத்தரவு வந்தது என்று சொல்கிறார்கள். அவர்கள் ரூபாய் 100 பெற்றுக்கொண்டு தான் பணியாற்ற வேண்டுமா? கிராம சேவிகாக்களாகப் பணியாற்ற அவர்கள் விருப்பவில்லை. பாலசேவிகாக்களாகவே உரிய ஊதியம் பெற்றுப் பணியாற்றவே விரும்புகிறார்கள். ஆனால் இப்புதிய ஆணையால் அவர்கள் அஞ்சி அஞ்சித்தான் இன்றைக்கும் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக் கிறார்கள். "அஞ்சி அஞ்சிச் சாவார் அவர் அஞ்சாத பொருளில்லை உல கினிலே" என்று சொல்லுவார்களே, அது போல அவர்கள் அஞ்சி அஞ்சி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலைகளைப் போக்குகின்ற வகை யிலே தொடர்ந்து பாலசேவிகாக்களாக அவர்கள் பணியாற்றும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும். இரண்டு மாதம், மூன்று மாதம் பயிற்சி பெற்று பாலசேவிகாக்களாகப் பணியாற்றுபவர்களுக்கும், 16 ஆண்டுகளுக்கு முன்னாலேயே நியமிக்கப்பட்டு ஓராண்டு காலம் பயிற்சி பெற்ற பாலசேவிகாக்களாகப் பணியாற்றுபவர்களுக்கும் ஒரே விதமான ஊதியம் கொடுப்பது சரியில்லை. அதை அவசியம் மாற்றியமைக்க வேண்டும் என் கின்ற என்னுடைய வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள் கிறேன். பொதுவாக பாலசேவிகாக்களின் ஊதியத்தை கடைநிலை ஊழியர் களின் ஊதியத்திற்காவது உயர்த்த வேண்டும் என்கின்ற கருத்தினை நான் அழுத்தந்திருத்தமாகக் கூறிக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றே ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். பஞ்சாப் அசோசி யேஷன்ஸ்பற்றி கேள்வி நேரத்தில் அமைச்சர் சில தகவல் தந்தார்கள். அங்கே என்ன நடைபெறுகிறது என்பது பற்றி நான் இங்கு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். நம்முடைய அரசு நிதி உதவி அளிக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். மத்திய அரசும் நிதி உதவி அளிக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்படி நிதி உதவி பெறுகின்ற அந்த நிறுவனம் எப்படிச் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் திடீர் சோதனை செய்து கண்டுபிடிக்க வேண்டும். இதில் எந்த அளவுக்கு நமக்கு உரிமை இருக்கிறது என்பது பற்றி



எனக்குத் தெரியாது. பஞ்சாப் அசோசியேஷன் என்று பெயர் வைத்திருப்பதற்கு, அந்த நிறுவனத்திற்கு நம்முடைய அரசு நிதி உதவி அளிக்கத்தான் வேண்டுமா? புதிதாக அங்கே பயிற்சியாளர்களாக, அநாதைகளையும், விதவைகளையும், மிக ஏழ்மை நிலையிலேயே உள்ளவர்களையும் சேர்க்கிறார்கள். இன்னும் பல்வேறு பிரிவினரை அங்கே அவர்கள் சேர்த்துக்கொள்கிறார்கள். பயிற்சியாளர் அனைவரும் பெண்களே. சிறையிலே எப்படி கைதிகளைக் கொடுமைப்படுத்து கிறார்களோ அதைவிட மோசமாக அவர்களை அங்கே கொடுமைப்படுத்து கிறார்கள். அங்கே அவர்கள் பயிற்சியாளர்களாக நடத்தப்படுவதில்லை. சிறைகளில் இருக்கக்கூடிய கைதிகளைவிட மோசமாக அவர்கள் நடத்தப்படு கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அமைச்சரவர்கள் திடீர் சோதனை செய்ய வேண்டுமென்று சொல்வதை தனியாகச் சொல்லி விடுவது நல்லது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** பஞ்சாப் அசோசியேஷனில் என்ன நடக்கிறது என்றால் பயிற்சியாளர்கள் அங்கே சேர்ந்த உடன் ஆறு மாதப் பயிற்சி, பயிற்சி முடிவடைந்த பிறகு ரூபாய் 500 தருவோம் அல்லது இயந்திர வசதி செய்து தொழில் செய்ய வாய்ப்பு செய்து தருவோம் என்று சொல்லி சேர்க்கிறார்கள். இப்போது பயிற்சி முடிந்த நிலையில் மேலும் ஆறு மாதங்களுக்குப் பயிற்சி தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். பயிற்சிக்குப்பின் அவர்களிடமே ரூபாய் 130 சம்பளத்தில் வேலை பார்க்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் திடீர் சோதனை செய்து பார்த்தால், நிறைய தவறுகளைக் கண்டுபிடிக்க முடியும். அந்தப் பெண்கள் பயிற்சியில் சேர்ந்த போது, எவ்வளவு எடை இருந்தார்கள், இப்பொழுது எவ்வளவு எடை இருக் கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தயவுசெய்து சோதித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் இப்பொழுது ரொம்ப இளைத்துப் போயிருக் கிறார்கள். அவர்களுக்கு உணவு சரியாக அளிப்பதில்லை. கால் வயிற்றுக் குத்தான் உணவு அளிக்கிறார்கள். அரசு உதவி செய்தும்கூட சிறையைவிட மோசமாக பயிற்சியாளர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். பஞ்சாப் அசோசியேஷன் என்று சொல்லக்கூடிய அந்த சமூக நல அமைப்பை, அந்த சிறைச்சாலையை, சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றும் அதற்குரிய உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றும் நான் மாண்புமிகு அமைச் சரவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளவனாவேன்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முடிந்தவரை உதவி செய்ய முன்வர வேண்டும். உடல் ஊனமுற்றவர்கள் கல்வித் தகுதியைப் பொறுத்தவரை எந்தக் கல்வித் தகுதியைப் பெற்றிருக்கிறார்களோ அந்தத் தகுதிக்குரிய வேலையில் அவர்கள் சேர்ந்து பணியாற்ற முன்னுரிமை தர வேண்டும். அரசு ஆணை அது சம்பந்தமாக வெளியிட வேண்டும். அப்படிச் செய்தால், அவர்களைக் கொண்டு வந்து சமூக சேவை நிலையங்களில் வைத்து காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்காது; நிறைய நிலையங்களை மேலும் மேலும் திறந்துகொண்டே போக வேண்டிய அவசியமும் இருக்காது. அப்படிப்பட்ட ஒரு பரிந்துரையைச் செய்து அவர்களுக்காகப் புதிதாக அப்படிப்பட்ட அமைப்புகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அவர்களுக்கு தகுதிக்கேற்றவாறு உள்ள பதவிகளில் முன்னுரிமை தந்து நியமிக்க வேண்டுமென்ற வகையில் அரசாணை போட்டால் மிக நல்லது. இப்போது அவர்களை ஒதுக்கிவிட்டார்கள். அவர்களுக்கு முன்னுரிமை தந்து வேலை வாய்ப்பளிக்கின்ற வகையில் அரசாணை வெளியிடப்பட வேண்டுமென்கின்ற கருத்தினை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டுள்ளவனாவேன். 10 நிமிடங்களுக்கு முன்னாலேயே என்னுடைய உரையை முடித்துவிட்டேன் என்று சொல்லி அமைகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 5-40)

* THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Mr. Deputy Chairman, Sir, I am indeed happy to take part in the discussion on the Policy Note on Social Welfare. I find from the Policy Note that much has been done by Government for the physically handicapped. But I would like to say that there is much to be done for the destitute and widowed women who are helpless.

The scheme for encouraging widow-remarriages is a very commendable one. But sometimes it so happens that the man who marries a widow does so because he is in search of some money. Recently, I got a letter from a man who has married a widow. In that letter, he has stated that he was not aware of the rule that he would be eligible to get the money awarded by Government only if he married a widow between the age of 16 and 30, that the lady married by him was aged more than 30 and that he would like me to put in a word to the authorities concerned to disburse to him, as a special case, the money given by Government



for widow-remarriages. While we implement a welfare scheme, we should see that such schedules do not get inti disrepute. Now, there is a possibility of the man and the widow facing another problem in the form of divorce, if they had got married without knowing the rules relating to Government assistance for widow-remarriages. Therefore, it is necessary that Government should give publicity to the fact that only widow-remarriages of widows between the age of 16 and 30 would be eligible for cash awards by Government. In the Policy Note given to us last year, there was a specific mention about this age limit but I do not find any such mention in the Policy Note which we are now discussing. I hope that the age limit which has been stipulated would be made clear to the general public so that those who marry the widows would not do so only with a view to getting some money from Government.

Now, many women suffer a lot because they are not aware of the laws that are in existence to safeguard them. I would like the Social Welfare Department to publish small booklets in the regional language so that the women would know where they could seek relief and redress for their hardships.

I would also like to suggest that there should be reception homes for destitute women and also for women in need. Every now and then, some woman or other comes to me with her children saying that she came out of her home due to incompatibility and mental torture by husbanl, that she tried to commit suicide and that she would again resort to committing suicide along with her children if she and her children were not given a place to stay. Cases like that are very pathetic. This does not happen only in the case of destitute women. Sometimes even officers' wives approach me with such requests and I have to give them some temporary relief. The organisation with which I am associated is a voluntary organisation and our funds are limited. Therefore, I feel that Government alone could give some relief to such women. I hope that a number of reception homes would be opened in important cities. Such homes could serve as short-stay homes where these women could get some relief. After they arrive at some conciliation with their husbands, they may leave these homes and join their families. Those who choose to stay on may be transferred to other social welfare institutions.

[Thirumathi Mandakini Krishnamurthi] [1979 ஏப்ரல் 23

Regarding the Working Women's Hostels, I would like to state that there are seven working women's hostels in Madras City which are run by voluntary organisations. There are 300 women who are inmates of these working women's hostels. There is also one hostel run by Government. But such hostels do not exist in district towns. Many voluntary organisations do not come forward to open such hostels in district towns. It would do well if Government could take statistics about the number of working women in different places. Wherever the number is found to be large, these working women's hostels should be opened.

I would also like to bring to the notice of the Hon. Minister that since we have an integrated system, the State Social Welfare Board is part of the State Government. Many institutions who apply for some funds for the first time do not get any reply for a considerable time and they become very much frustrated. At times their applications are not considered even after a year has elapsed. I feel there should be a time-bound programme and no application should be allowed to be kept pending for more than 3 months in the State Social Welfare Board. The institution must be informed in time whether the grant could be given or whether the institution is not eligible for such a grant. Otherwise, they will go on applying year after year not knowing that their application is defective. It was mentioned that the Board had been re-constituted so that fresh blood and new stream of activity were brought into it and I am sure that these young women will be in a position to take care of the situation and the applications will receive prompt and due consideration at their hands.

While concluding, I would like to appeal again to the Government, since about 36 lakhs of rupees will be collected through the lottery—special lottery for children's welfare, not to forget the poor orphans who get a mere grant of Rs. 14 per month, at the time of distribution of funds. I would like to congratulate the Social Welfare Department which has been doing its work wonderfully well and I am sure they will continue to do so in future. Thank you.

THIRU P. YELLAMANDA: Hon. Deputy Chairman, Sir, I am very glad that I have been given an opportunity to participate in the discussion on the Policy Note on Social Welfare which is a very important and vital department dealing with the problems of disabled persons in the society. In this context, I would like to quote the sayings of two very important, prominent political



1979 ஏப்ரல் 23] [Thiru P. Yellamanda]

philosophers. Aristotle, the great philosopher, said "Man is a social animal". Rousseau, the exponent of Social Contract theory, said "Man is born free; but everywhere he is in chains". Before explaining the significance and importance of these two sentences, expounded by these great social philosophers, I would like to draw the attention of the Hon. Minister who is young and energetic to deal with human problems to the fact that there are two types of disabled persons in society. Category one comes under natural curse, namely, the blind, the deaf, the lame, lepers, etc. The fate of these physically handicapped persons has been sealed for ever though they are also human beings. We can see but not the blind; we can hear but not the deaf; we can walk but not the lame; we can go anywhere in society; but not the lepers. That is the fate of these physically disabled persons and they are living in such deplorable conditions. These people have become the burden of the society and we have to examine the necessity of their existence in society. The D.M.K. Government, under the dynamic leadership of Kalaignar, had gone to their rescue with many social welfare schemes which benefited them. After a careful study and examination of the pitiable condition of these handicapped persons, Kalaignar allocated funds for the welfare of these sections of

(பிற்பகல் 5-50)

society. Thus, he has become the beacon-light of the poorest among the poor. To-day, the handicapped persons are no longer handicapped and they have become useful to society by virtue of their services.

Many hon. Members have given their valuable views about the welfare of physically handicapped persons and other disabled persons. The hon. Member Thiru Thangapandian said that the funds allocated by this Government for various social welfare measures were very meagre and not at all sufficient to meet the grievances of the physically handicapped persons. The hon. Member Thiru Arivazhagan pointed out the importance of children's welfare particularly in the International Year of the Child and he pleaded for allocation of more funds for children's welfare. The hon. Member Thiru Meenakshisundaram pleaded for the welfare of teachers. The hon. Member Thirumathi Mandakini Krishnamurthi spelt out the problems of widows and destitute children. Anyway, I want to say one thing. In the Budget, allocations are made to various Departments dealing with different subjects like Education, Irrigation, Industries, etc. Of course, they are Departments

[Thiru P. Yellamanda] [1979 ஏப்ரல் 23

which give benefits to a major section of the society. But, when substantial amounts have been allocated to those Departments, why have very small amounts been allocated to the Harijan Welfare Department and Backward Classes Welfare Department? When we want to do something concrete for the development, growth and prosperity of these people who are socially disabled, only very small amounts have been allocated for their welfare. It seems as though the allocations of Rs. 6 crores or Rs. 7 crores have been done as a matter of mercy. In my view, the Harijan Welfare Department and the Backward Classes Welfare Department have become Departments functioning at the mercy of the Government, particularly the A.I.A.D.M.K. Government, because the amounts allotted for these Departments are not at all sufficient to meet the demands of these classes of people. In fact, out of an outlay of Rs. 849 crores, an allocation of Rs. 6 crores only has been made for Harijan Welfare which is not at all sufficient.

The D.M.K. Government gave prominence in the matter of allocation of funds, to various social welfare measures and particularly to those aimed at the welfare of the physically handicapped persons. But when I see the figures for the allotments made by this Government for various social welfare measures, I find them to be only in thousands, like Rs. 4,000 and Rs. 41,000 and the figures do not run into crores. But in the matter of allocation of funds to other Departments, even for small items, allocations are made in crores of rupees. The Social Welfare Department has been allocated only a very small amount. The Hon. the Minister for Social Welfare is young and energetic and is capable of delivering the goods. She is very much interested in social welfare and she is visiting the destitute-homes, slums, etc. But her hands are tied up. It is a pity and it is a paradox. But, what to do? Such is the fate of the Social Welfare Department. If I compare and contrast the provision made for the welfare of the physically handicapped persons and that made for the salary, expenditure on petrol etc. of our Aasthaana Kavignar, I find that both are not at all comparable because no item could be equalled to that relating to the salary, expenditure on petrol, etc., of the Aasthaana Kavignar.



1979 ஏப்ரல் 23] [Thiru P. Yellamanda]

This is what is going on outside. So it is high time for the A.I.A.D.M.K. Government to find out the difficulties and resort to remedies for the solution of the problems of the millions of poor, down-trodden people and it is not sufficient to allocate only some lakhs of rupees. The handicapped should not be considered as a burden on society. I pity, I wonder what is the use of these poor allocations, when the handicapped are suffering.

Mr. DEPUTY CHAIRMAN: I think it has nothing to do with the Policy Note on Social Welfare.

Thiru P. YELLAMANDA: What I say is that the allocation is very limited. Anyway I am urging the Hon. Minister to allocate more and more funds to do something for these physically disabled persons to their utmost satisfaction. I hope the Hon. Minister will fight and get some more funds to deliver the goods for these physically disabled persons.

Sir, coming to the second category, they are the socially disabled persons. Funds are allotted only for the welfare of the physically handicapped persons. I want to give information about the socially disabled persons who are living in our society. I would like to quote Rousseau, the exponent of the social contract theory, who said that 'man is born free but everywhere he is in chains'. It must be seen how this sentence is related to the modern world. Man is born free—that is correct. Everywhere he is in chains and this is the significance of the sentence. The artificial, unnecessary restrictions imposed by certain sections of the society and the prosperity and development of some people made them socially disabled persons. Now the ways and means of the A.I.A.D.M.K. Government to remove the social disabilities and to bring them on a par with the other people in the society should be examined very carefully. There is a report of the Working Group on Scheduled Castes and Tribes which has been sent to our State Government. In Chapter VI of that report, it is clearly stated that the scavenger who is doing the most essential service has been considered as doing an unclean occupation. There is the social stigma and social disability attached to them and this report has suggested ways and means to overthrow such disabilities. Scavenging is an occupation which is in the lowest rung of the ladder; particularly dry latrine scavenging is the most detestable work. This should be removed. The Committee has submitted its valuable report to the effect that this work should be de-linked

[Thiru P. Yellamanda] 

from caste. The scavenger should be given higher emoluments and he should be treated as Class III—L.D.C. staff. The children of the scavengers should be compulsorily given appointment in other occupations, without observing the normal rules and regulations and restrictions, for the purpose of avoiding them from entering into the same scavenging occupation. If the scavenger boys, after getting P.U.C., B.A. degree or passing S.S.L.C., do not get any appointment but wander in the streets, their parents are asking them to do the scavenging work, since those parents do

(பிற்பகல் 6-00)

not know the value of education. Mere education is not solving their problem. That is why they are forced to do this work. Now, even some S.S.L.C. failed persons are doing scavenging work. Such a thing is happening in a democratic set-up of society and in an egalitarian society. When we talk of fraternity, equality and liberty and when we are talking of a sovereign, democratic, socialistic Republic of India, here is a peculiar community which for centuries together has been doing this work which other communities do not come forward to do. If this social disability is to be removed, among all other children, it is the child belonging to the scavenger community who deserves the topmost encouragement from the Social Welfare Department. I request our Hon. Minister to go round the slums. . . .

THE HON. SELVI P. T. SARASWATHI : Mr. Deputy Chairman, Sir, I am afraid the hon. Member is addressing his requests to me thinking that I am the Harijan Welfare Minister. Actually, it is the Hon. the Minister for Harijan Welfare who has to answer the points raised by the hon. Member.

THIRU P. YELLAMANDA : Though it may come under Harijan Welfare, what I mentioned just now is also a kind of social disability.

MR. DEPUTY CHAIRMAN : The Hon. Minister says that it does not concern the Social Welfare Department. So, if the hon. Member refers to matters relating to Harijan Welfare, the Hon. the Minister for Social Welfare may not be able to reply. I think the hon. Member may have to take some other occasion for mentioning those matters.





THIRU P. YELLAMANDA : The Hon. the Social Welfare Minister is here and we are discussing the Policy Note of the Social Welfare Department. The Social Welfare Department should be well-versed with all the disabilities suffered by different persons. That is what I mean. Because she is the Hon. the Minister for Social Welfare, it does not mean that she should deal with only handicapped persons. The collective responsibility of the Cabinet is there. The Hon. Minister may take the information relating to her Department and pass on the information relating to Harijan Welfare Department to the Hon. the Minister for Harijan Welfare because he is not here. The Policy Note on Harijan Welfare is not also coming up for discussion here. Then, how am I to focus and ventilate the grievances of the socially disabled Harijans ?

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member may mention such points while speaking on the Budget or on the Supplementary Budget so that it could attract the collective responsibility of the other Hon. Ministers also. Now, this is a Policy Note only on the Department of Social Welfare and the Hon. Minister says that she is not concerned with matters relating to Harijan Welfare. Anyway, the hon. Member is requested to finish his speech as early as possible.

THIRU P. YELLAMANDA : Before concluding, I would like to make a suggestion. This kind of social disability which I mentioned just now is going on in the society. Tackling the problems of the physically handicapped persons alone is not the be-all and end-all of solving the problems of the weaker sections of society. The Policy Note itself says that this Government are going to do something for the downtrodden masses. The Harijans and other weaker sections of people combined together are called the downtrodden masses. Now, the atrocities on the socially disabled persons are going on more and more. I request the Hon. the Social Welfare Minister to tell the Hon. the Chief Minister about the atrocities that are going on against the socially disabled persons, namely, the Harijans. Incidents like the murder of Thiru Murugaiyan and the death of a Harijan girl are giving a bad image to the State. Previously, such atrocities were less but now they have become more in number. The Hon. the Social Welfare Minister should take steps to avert such things and to create a good Social Welfare State. From the information given by me, she may take the information relating to her Department and the other information may be handed over to the Hon. the

Harijan Welfare Minister so that he could do something for the downtrodden masses. With these words, I am concluding my speech.

Thank you.

*திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுகிறபோது இந்தத் துறை அமைச்சர் அவர்களை வெகுவாகப் பாராட்டுகிற அளவிலே சில விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஏற்கெனவே அக்கறை கொண்டிருந்ததால், மேலும் அதை இந்தத் துறையின் மூலம் விரிவுபடுத்தி அதனுடைய முழுப் பலனும் கிடைப்பதற்கான திட்டங்களை இங்கே வகுத்துத் தந்திருக்கிறார்கள் என்பதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே ஒரு சிலவற்றை மட்டும் அவர்களுடைய கவனத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன். பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் பல ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் சென்னை போன்ற பெருநகரங்களில் அதிகமாகச் செயல்பட வேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். தனியார் துறையிலே இருந்தாலும்கூட சில சமூக நலத் தொண்டு நிறுவனங்கள் இத்தகைய விடுதிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவைகளெல்லாம் இன்னும் சிறப்பாகவும், வசதியாகவும் நடைபெறுவதற்கு மேலும் கூடுதல் மானியத்தை வழங்க வேண்டும். பெண்களுக்கான பயிற்சி நிலையங்கள்கூட நல்ல பலனைத் தந்து வருகின்றன. பயிற்சி நிலையங்களின் மூலம் பயிற்சி பெற்று பெண்கள் தங்கள் குடும்பங்களை நடத்த முடியுமென்ற நம்பிக்கையோடு செயல்படுவதை நாம் காண்கிறோம். ஆனால் இந்த நடவடிக்கைகளுக்காக ஒதுக்கியிருக்கிற நிதி போதாதென்று நினைக்கிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிதியமைச்சர் அவர்களிடமிருந்து அதிகமான நிதியைப் பெற்று இந்த நிலையங்களை உற்சாகப்படுத்துகிற அளவில் காரியங்கள் நடக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பணிபுரியும் பெண்களுக்கு இருப்பதைப் போலவே, 'ஹோம் பார் ஏஜெட்' முதியோர் விடுதிகள் இருக்க வேண்டும். அதாவது நிராதரவான நிலையில் உள்ள வயதானவர்களுக்கு உதவக் கூடிய வகையிலே விடுதிகள் ஆரம்பித்தால், அவர்கள் தங்களுடைய இறுதிக் காலத்தை அங்கே கழிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட விடுதிகள் நிறைய இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட விடுதிகள்





அயல் நாடுகளில் இருக்கின்றன. வளர்ந்து வருகிற சமுதாயத்தில் வயதானவர்களுக்கான விடுதிகளும் மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். அது பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் இந்தத் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது.

விபச்சாரக் குற்றங்களுக்கு ஆளாகிய பல பெண்கள் நீதிமன்றங்களுக்கு வருகிறபோது அவர்களை இடையிலே ஜாமீனில் வெளியே கொண்டு வந்து மீண்டும் சமுதாயத்திலே விரும்பத்தகாத முறையில் அவர்களை வைத்துத் தொழில் நடத்துகிற நிலையையும் பார்க்கிறோம். நீதி மன்றத்திலே பணியாற்றியவன் என்ற முறையிலே இதை நேரிடையாகக் காண்கிற அனுபவம் எனக்கேற்பட்டது. இது போன்ற குற்றங்களுக்கு ஆளாகி வருகிற பெண்களைப் பொறுத்த வரையிலே, விசாரணை முடிந்து தீர்ப்பு அளிக்கப்படும் வரையில் அவர்களைப் பாதுகாத்தாக வேண்டும். குற்றவாளி என்று அவர்களைத் தீர்மானித்தால், அதற்கான விடுதிகளில் சேர்ப்பது என்பது வேறு. சில நேரங்களில் போதுமான சாட்சியங்கள் இல்லாத நேரத்தில், நீதியினுடைய வரம்பிற்குள் வராமல் போகின்ற நிலையில் அவர்களை விட்டுவிட வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட பெண்களுக்கு இதற்கிடையில் பாதுகாப்பு இல்லாமல் போனால், மீண்டும் இந்த மாதிரியான குற்றங்களில் ஈடுபடுகிற கட்டாயத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னுமொரு குறையைச் சொல்ல விரும்புகிறேன். சில நேரங்களில் சில கோரிக்கைகள் வருகிறபோது, அவைகளை உடனடியாகப் பரிசீலனை செய்வதில்லையோ என்ற சந்தேகம் வருகிறது. உதாரணத்திற்கு பல இடங்களிலேயிருந்து தையல் மிஷின் வேண்டுமென்று தாய்மார்களிடமிருந்து கோரிக்கைகள் வருகின்றன. அதைப் பரிசீலிக்க பல காலம் ஆகின்றது. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். பணம் இல்லாத நிலைகூட இருக்கலாம். இது அவர்களுக்குக் கட்டாயம் தேவையென்ற நிலையில் அவர்கள் அரசை அணுகுகிறபோது, அவர்களுக்கு உடனடியாக முடிவு தெரிவிக்கிற வகையிலே முறைகளை மாற்றியாக வேண்டும். அதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே விதவைகள் மறுவாழ்வுக்காக அய்ந்தாயிரம், ஆறாயிரம் ரூபாய் என்ற அளவிலே உதவித் தொகையாக அளிக்க வேண்டுமென்ற திட்டம் நல்ல திட்டம். அதை நான் வரவேற்கிறேன். இது ஊக்கப்படுத்த வேண்டிய திட்டம். இது குறித்து இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்படி மணம் செய்தவர்களை முன்பு வெளிப்படையாக 'சோஷியல் பாய்காட்' செய்தார்கள். இன்றைக்கு மறைமுகமாக

'சோஷியல் பாய்காட்' செய்யக் கூடிய நிலை இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் பல கட்டங்களில் அவதிக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள், சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் இனிமேல்

(பிற்பகல் 6-10)

திருமணம் செய்துகொள்கின்ற விதவைகளுக்கு, மறுவாழ்வு பெறுகின்ற விதவைகளுக்கு உதவி செய்யும்போது, இப்படிப்பட்டவர்களுக்கும் உதவிகளைச் செய்ய வேண்டும். ஏற்கெனவே மணமாகி இதுபோன்ற திருமணத்தின் மூலமாக வாழ்க்கையிலே மறுமலர்ச்சி அடைய வேண்டுமென்று எண்ணி, உண்மையிலே மறுவாழ்வு நடத்துகின்ற நிலையிலே இருப்பவர்களுக்கு, மறுமலர்ச்சிக்கான வாய்ப்பு வசதிகள் பெறாமல் இருக்கக்கூடியவர்களுக்கு அரசாங்கத்தினுடைய துணையைத் தேடித் தந்தால்தான், நல்லதாக இருக்கும். அதைப்பற்றி நாம் முழுமையாக விசாரித்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய, தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரைப் பொறுத்தவரையில், சமூகத் தொண்டிலே ஈடுபட்டிருக்கின்ற பலர் இந்தமாதிரி திருமணங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். காமராஜர் அவர்கள் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்த பால மந்திர் என்ற சமூக சேவா நிறுவனம், சமுதாயத்திலே கொஞ்சம்கூட வெளியே தெரியாமல் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கிறது. இது நடக்கின்ற முறையை நாம் எல்லாம் பாராட்டாமலிருக்க முடியாது. அந்த மாதிரி நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற அளவிலே இன்னும் கொஞ்சம் மானியங்கள் அளித்து உதவிகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைப் பொறுத்தவரையில், நான் உண்மையிலேயே குறிப்பிட விரும்புகிறேன், என்ன காரணத்தினாலோ தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள், விடுதியிலிருந்து வெளியேறி விடுவதிலேயே அக்கறையாக இருக்கிறார்கள். அப்படிப் போவதிலேயே நாட்டம் காட்டுகிறார்கள். அதிலே இன்னமும் குறைகள் இருக்கும் என்றால், அதையெல்லாம் மாற்றியமைத்து, தொழுநோய்க்காரர்கள் விடுதியைத் தேடி வந்து கொண்டிருக்கின்ற நிலைமைகளை உண்டாக்க வேண்டும். ஒரு பக்கம் இந்த நிர்வாகத்திற்காக செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னொரு புறம் இவர்கள் விடுதியிலிருந்து வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற முறைகளை மாற்றியமைக்கின்ற வகையிலே இந்தத் திட்டத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இலங்கை மற்றும் வேறு நாடுகளிலேயிருந்து வருகின்ற அகதிகளைப் பொறுத்தவரையில், இந்தத் துறையினுடைய பல்வேறு திட்டங்களை நான் பாராட்டுகின்றேன். அதே நேரத்திலே சிற்சில குறைகளும் இருக்கின்றன. அவைகள் நிவர்த்திக்கக்கூடிய குறைகள்தான். அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். சமூக நலத் துறையில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் அரசாங்கத்தில் உள்ளவர்களால் நாமினேஷன் பெற்று செயல்படுகின்றார்கள். பல பெண்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொருவர் என்று போடப்பட்டு, அவர்கள் தலைமையில் கமிட்டிகளும் அமைந்திருக்கின்றன. அதைப்பற்றி நான் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கமிட்டிகளிலே இடம் பெற்றிருப்பவர்கள் யார் என்றே தெரியவில்லை. பல பேர்கள் அறிமுகம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பெயரைப் பார்த்தவுடனே அவர்களிடம் போவதற்கே சங்கடப்படக்கூடிய நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்த நிலை இன்னும் மாறியதாகத் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்த வேண்டும். இதை அரசு தன்னுடைய மனத்திலே கொள்ளவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு போட்டி போட்டுக்கொண்டு சமூகநலத் தொண்டர்களாக இருக்கிறார்கள். அவ்வப்போது நிகழ்ச்சிகள் நடக்கும்போது, அவர்கள் அதிகாரத்தைக் காட்டுவதும், நான் யார் தெரியுமா என்று சொல்வதுமாக இருக்கிறார்கள். இந்தத் துறையிலே அக்கறை கொண்டிருக்கின்றவர்களைப் போட்டு அந்தப் பணி செய்கின்றவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்தும் தொடுத்தும் கூறியிருக்கிறார்கள். எனக்கு மெத்த மகிழ்ச்சி ஏற்பட்டது. சட்டப் பேரவையிலே பணம் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்கின்ற அதே நேரத்தில் மேலவையில் பணம் போதாது போதாது என்று சொல்கின்றார்கள். முதலிலே சட்ட மன்ற மேலவையிலே இந்தக் கோரிக்கையைச் சொல்லியிருக்கலாமே என்று எனக்குத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு இங்கே ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். என்னைப் பாராட்டிய அத்தனை பேருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு கருத்துக்களை, ஆலோசனைகளைச் சொன்னார்கள். அதே நேரத்தில் குறைபாடுகளையும் எடுத்துச் சொன்னார்கள்.

[செல்வி பி. டி. சரஸ்வதி] [1979 ஏப்ரல் 23

அரசைப் பொறுத்தவரையில் நல்லவைகளை ஏற்றுக்கொள்ளவும் அல்லவைகளைத் தள்ளவும், இனிமேல் செய்யாமல் இருப்பதும்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கற்றுக் கொடுத்தது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் நிதி போதுமா என்று கேட்டார்கள். அதே நேரத்திலே இன்னொன்றும் சொன்னார்கள். தாயுள்ளத்தோடு செயல்பட வேண்டும் என்று சொன்னார்கள். அந்த உள்ளத்தோடுதான் இங்கே அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதைப்பற்றிய தகவல்களைச் சொல்கிறேன். இதை அவர்கள் கேட்டால், மகிழ்ச்சி அடைவார்கள். குழந்தைகள் நலத்தைப் பொறுத்தவரையில், பெண்கள் நலத்தைப் பொறுத்தவரையில், உடல் ஊனமுற்றவர்கள் நலத்தைப் பொறுத்தவரையில், இந்த சமூக நலத் துறையில் இப்போது 9,384 பெண் அதிகாரிகள் செயலாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆயாக்கள் 4,110, பாலசேவிகாக்கள் 4,110, மாவட்ட அதிகாரிகள் 15, கிராம சேவிகாக்கள் 296, முக்கிய சேவிகாக்கள் 671, சைல்ட் டெவலப்மெண்ட் புராஜெக்ட் ஆபீசர்கள் 3, சேவை இல்லங்களில் பணியாற்றுபவர்கள் 50 பேர்கள், சமூக நல அலுவலகத்திலேயே பணியாற்றுகின்றவர்கள் 100 பேர்கள் ஆக மொத்தம் 9,384 பேர்கள் தாயுள்ளத்தோடு உள்ள சகோதரிகள் இந்தத் துறையிலிருந்துகொண்டு சேவை செய்துகொண்டிருக்கிறார்கள். இங்கே சேவை இல்லங்கள்பற்றிக் குறிப்பிடும்போது, ஐந்து இல்லங்கள் இருக்கின்றன. அங்கு கல்வி, தொழில் கல்வி, தையல்கலைக் கல்வி போன்றவைகளைக் கற்றுக்கொடுப்பது என்று செயலாற்றி வருகின்றன. இப்படிப்பட்ட வேலைவாய்ப்புக்கள் அலுவலகங்கள், சேவை இல்லங்கள் தமிழ் நாடு பூராவும் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அளவிலே மாவட்டங்கள் தோறும் இருக்கின்றன என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர்கள் திரு. தங்கப்பாண்டியன் அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும் பணியாற்றும் பெண்கள் தங்கும் விடுதிகள் அமைப்பதுபற்றிக் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு 75 சதம் மட்டும் அதற்காகத் தருகிறார்கள். 15 சதம் அல்லது 35 ஆயிரம் மாநில அரசு தருகிறது. இது தவிர தொண்டுள்ளம் கொண்ட சேவை இல்லங்கள் அதைச் செய்ய முன் வந்தால், 10 சதம் கொடுக்க வேண்டும் என்று வரைமுறை வைத்திருக்கிறார்கள். அண்மையிலே சென்னைக்கு விஜயம் செய்த மாண்புமிகு அமைச்சர், மத்திய அமைச்சர் டாக்டர் பி. சி. சந்தர் அவர்கள் அடையாறில்



1979 ஏப்ரல் 23] [செல்வி பி. டி. சரஸ்வதி]

அப்படிப்பட்ட இல்லத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்றபோது சொன்னதைக் கூறுகிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்த நேரத்தில் அப்போதிருந்த மத்திய அரசு சட்டத்தின்படி குறிப்பாக பெரிய நகரங்களில் உள்ள வாலண்டரி ஆர்கனைசேஷன்ஸ் என்று சொல்லக்கூடிய தனியார் இல்லங்களுக்கு மத்திய அரசு 75 சதவிகிதமும், மாநில அரசு 15 சதம் அல்லது 35 ஆயிரம் என்றும் நிதி அளிக்கும் என்று இருந்தது. அவர்கள் மற்றும் பெற வேண்டிய சலுகைகளைப் பெற உரிமை பெற்றிருக்கிறார்கள். இன்னமும் பல நகரங்களில் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இருந்தால்தான், அந்த நகரங்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற விதி இருந்தது. என்னைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டு சமூக நலத் துறை அமைச்சர்கள் மகாநாட்டில் பேசும்போது, இதைப்பற்றி இரண்டு முறைகள் எடுத்துக் கூறினேன். அந்த வசதிகளை தனியார் சமூக நல சேவை இல்லங்களுக்கு மட்டுமல்லாமல், மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் அப்படிப்பட்ட பொறுப்புக்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன், வாதாடியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் டாக்டர் பி. சி. சந்தர் அவர்கள் அதுபற்றி எனக்குத் தெரிவித்தார்கள். அந்த விதியைத் தளர்த்தியதன் காரணமாக அந்தச் சலுகையைப் பெற்றிருக்கிறோம். அதைப்பற்றிப் பத்திரிகைகளில்கூட போட்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை மாநகராட்சிக்கு அந்த வாய்ப்பினைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். அந்த வாய்ப்பைப் பெற்றிருப்பதற்காக நமது உறுப்பினர்கள் அனைவரும் பெருமைப்படுவார்கள் என்று கருதுகிறேன். இன்னும் மதுரை மாநகராட்சியிலும், வேலூர் நகராட்சியிலும் இப்போது முன் வந்திருக்கிறார்கள். சட்டசபை தொடர் கூட்டம் முடிவு பெற்றபின் இந்த நிகழ்ச்சிகளும் நடைபெறத் தயாராக இருக்கின்றன.

நம்முடைய மாநிலத்தில் ஏறத்தாழ அப்படிப்பட்ட 15 விடுதிகளாவது இருக்க வேண்டும். பணியாற்றும் சகோதரிகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் பணியாற்றிவிட்டு வரும்போது, தங்குவதற்கு வசதியான இடங்கள் வேண்டுமென்று சொன்னார்கள். அந்த விடுதி நல்ல வசதியான இடமாக இருக்க வேண்டும் என்பதிலே இந்த இலாகா கவனம் செலுத்தி செயல்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசின் திட்டங்களை செயலாற்றுவதிலே நாங்கள் அதிகமாக வேகம் காட்டவில்லை என்று அங்கத்தினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கவலை தெரிவித்தார்கள். நான் தெரிவித்துக்கொள்கிறேன், அமைச்சர்கள் மகாநாட்டில், மத்திய அமைச்சர் திருமதி ரேணுகா தேவி அவர்கள் மற்ற மாநிலங்களைவிட தமிழகம் நன்கு பணியாற்றுகிறது என்று பாராட்டியிருக்கிறார்கள். தமிழகம் சமூக நலத் துறையில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அதற்கு நமக்கு

பாராட்டுக்களைத் தெரிவித்தார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மத்திய அரசு திட்டங்களை இங்கேயிருக்கின்ற அதிகாரிகள் மிகக் கவனத்தோடு பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். கூடிய விரைவிலே அவைகளைச் செயல்படுத்த முயற்சிப்பார்கள் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-20)

பிச்சைக்காரர்களைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். பிச்சைக்காரர்களைப் பிடித்து வரவேண்டுமென்றால், காவல் துறை அதிகாரிகள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதற்குத் தேவையான ஊர்திகள், வாகனங்கள் இல்லை. அதைப்பற்றி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்களுக்குத் தெரிவித்தோம். அவர்கள், அதற்கென்று ஒரு வாகனம் இருந்தால், நன்றாக இருக்குமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். எனவே ஆங்காங்கே உள்ள லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப், ஜேசிஸ் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்தவர்களையெல்லாம் அழைத்து, அவர்களிடம் இதுபற்றிச் சொல்லியிருக்கிறோம். கூடிய விரைவில் தகவல் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே ஊர்திகள் கிடைக்குமென்ற நம்பிக்கை இருக்கிறது. காவல் துறை, அதிகாரிகளை அனுப்பத் தயாராக இருக்கிறது. எனவே, பிச்சைக்காரர்களை அழைத்துச் சென்று, இல்லங்களில் சேர்க்க வாகனங்கள் இல்லை என்ற தடை நீங்கிவிடுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேல்பாக்கத்திலுள்ள பிச்சைக்காரர்கள் இல்லம் பற்றிச் சொன்னார்கள். தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் குணமடைந்த பிறகு, மறுவாழ்வு இல்லங்கள் 10 இடங்களில் செயல்படுகின்றன. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கின்ற இல்லம் என்பதால் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம். அங்கே சென்று பார்த்தால், அங்கேயுள்ளவர்கள் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். அங்கே நெசவு வேலை, தச்சு வேலை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு மறுவாழ்வு நல்லபடியாக அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நேரத்தில், அவர்களை மணந்து கொள்ளும் சகோதரர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அது நல்ல யோசனை. அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் பேசுகின்றபோது, குழந்தைகள் ஆண்டுக்கு நிதி போதாதென்று சொன்னார்கள். இந்த ஆண்டிலே ஒரு கோடி ரூபாயைத் திரட்ட வேண்டும், அனாதைக் குழந்தைகளுக்காக ஒரு இல்லத்தை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும் என்பது மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவரவர்களுடைய எண்ணம் என்று கூறினால் மிகையாகாது. அதனால்தான் தமிழக அரசுப் பரிசுச் சீட்டின் ஒரு மாத வருவாய் குழந்தைகள் நிதிக்காகத் திரட்டப்பட்டிருக்கிறது. அதன் மூலம் எங்களுக்குக் கிடைத்திருக்கிற நிதி 35,46,889 ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர சினிமாத் தியேட்டர் உரிமையாளர்களும், ரேஸ் கிளப்பும் ஒரு நாள் வசூலைக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்கள் கேட்க இருக்கிறார்கள். அதற்கான அறிக்கை பின்னால் வரும். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், குழந்தைகள் நிதிக்காக நிதி சேர்க்கப்படுகிற நேரத்தில், எல்லாக் குழந்தைகளுக்கும், குறிப்பாக அனாதைக் குழந்தைகள், ஆதரவற்ற குழந்தைகள், ஏழைக் குழந்தைகள் அனைவருக்கும் அதன்மூலம் உதவிகளைச் செய்ய அரசு முற்படும்.

மன நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இதுவரைக்கும் பல்வேறு சேவா சங்கங்களை தனியார் நிறுவனங்கள் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இல்லங்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்துகொண்டிருந்தது. முதன் முதலாக சமூக நல இலாக்கா அப்படிப்பட்ட இல்லத்தைத் திறக்க இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் உடல் ஊனமுற்றவர்களைப் பற்றி, பல்வேறு உறுப்பினர்கள் மெத்தக் கவலையோடு சொன்னார்கள். இன்றைக்கு உடல் ஊனமுற்றவர்களுக்கு இருக்கின்ற சிரமங்களைப் பார்த்து, அவர்களுக்கு வேறு வேலை கொடுக்க முடியாதென்பதால், 1,000 பெட்டிக் கடைகள் அமைத்துக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகக் கடன் வசதி செய்து தரப்படும். ஒவ்வொரு பெட்டிக் கடையும் ஏறத்தாழ ரூபாய் 4,000 இருக்கும். அந்தப் பெட்டிக் கடைகள், அரசாங்கத்தின் சார்பிலே, உடல் ஊனமுற்றவர்களுக்கு என்று முத்துக்காட்டிலே இயங்கிக்கொண்டிருக்கிற தொழிற்சாலையில் செய்யப்படுகின்றன. ஒரு பெட்டிக் கடையின் விலை ரூபாய் 2,500 ஆகிறது. மற்ற பொருள்களையும் சேர்த்து ரூபாய் 4,000 என்ற அளவிற்கு வங்கிகள் மூலமாகக் கடன் பெற்றுத் தருகிறோம். அதில் 500 ரூபாயை அரசு மானியமாகக் கொடுக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மன நோயால் பாதிக்கப்பட்டவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, அவர்களையெல்லாம் நல்ல முறையில் ஊக்குவிக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் சொன்னார்கள். சென்னையிலே இருக்கும் பால மந்திர் என்ற நிறுவனம்

அவர்களுக்காக கீழ்ப்பாக்கத்தில் ஓர் இல்லத்தை வைத்திருக்கிறார்கள். அங்கே உள்ள குழந்தைகளுக்காக, அந்த இல்லத்தை மிகத் திறமையாகவும், பெருமையோடும் நடத்தி வருகிறார்கள். அங்கே இருக்கின்ற ஒரு பையன், அட்டைப் பெட்டி செய்வதிலே, அகில இந்திய ரீதியில் முதல் பரிசைத் தட்டிக்கொண்டு வந்திருக்கிறான். எனவே, எந்த அளவிற்கு அங்குள்ள ஆசிரியர்களும், நிர்வாகிகளும் செயல்படுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட நிர்வாகிகளுக்கு, நிலையங்களுக்கு மத்திய அரசும், மாநில அரசும் உதவி அளித்துக்கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஆசிரியர் என்ற காரணத்தால், சீர்திருத்தப் பள்ளி ஆசிரியர்கள்பற்றிக் கவலை அதிகமாகப் பட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அந்த ஆசிரியப் பெருமக்கள் பிரச்சினை இயக்குநர் அவர்களின் கவனத்தில் இருக்கிறது. அதைப்பற்றி அவர்கள் பரிசீலித்து வருகிறார்களென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் இன்னொன்றையும்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டார்கள். பஞ்சாபி அசோசியேஷனுக்குப் பணம் கொடுக்கிறோம், அந்தப் பெயரிலேயே பஞ்சாப் என்று இருக்கிறதென்று சொன்னார்கள். அப்படிப் பார்த்தால் என்னுடைய இலாகாவில் செயலாளராக இருக்கின்ற திரு. அலுவாலியா அவர்கள் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். என்னுடைய துறையின் இயக்குநராக இருக்கின்ற திருமதி கரியாலி அவர்கள் காஷ்மீர நாட்டைச் சேர்ந்தவர்கள். எனவே, தேசிய ஒருமைப்பாடு என்னுடைய இலாகாவிலே அதிகமாக இருக்கிறதென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களும் அந்த மனப் பக்குவத்தோடு செயல்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் பஞ்சாபி அசோசியேஷனைப்பற்றிச் சொன்னார்கள். வாணியஞ்சாவடியில் அவர்களுடைய மினி ஹெல்த் சென்டர் ஒன்றைத் திறக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மத்திய அரசும், மாநில அரசும் அவர்களுக்கு உதவி செய்கின்றன. அண்மையிலே சென்னைக்கு வந்திருந்த மத்திய சமூக நல அமைச்சர் மாண்புமிகு திரு. பி. சி. சந்தர் அவர்கள், பஞ்சாபி அசோசியேஷன் சோளிங்கநல்லூரில் ஆறு லட்சம் ரூபாய் செலவில் கட்டிய குழந்தைகள் ஆஸ்பத்திரியைத் திறந்து வைக்கிற பெரிய வாய்ப்பைப் பெற்றார்கள். அப்படிப் பார்க்கும்போது, பஞ்சாப் நாட்டைச் சேர்ந்தவர்களுக்காக அந்த மருத்துவமனைகள் கட்டப்பெறவில்லை. சோளிங்கநல்லூர், வாணியஞ்சாவடி போன்ற ஊர்களில் நம்முடைய உடன்பிறப்புக்கள்தான் இருக்கிறார்கள். அவர்கள் வித்தியாசம் பாராட்டாமல்தான் செயல்படுகிறார்களென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உடல் ஊனமுற்றவர்களுக்கு அதிகச் சலுகைகள் அளித்திருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விதவைகளுக்கு அதிகமாக உதவிகள் செய்ய வேண்டுமென்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். மறுமணம் செய்துகொள்ளும் 18 முதல் 30 வயதுக்குட்பட்ட விதவைகளுக்கு மட்டும்தான் அந்தச் சலுகைகளைக் காட்ட முடியும். அவர்கள் திருமணம் செய்துகொண்டவுடன், பணத்தைப் பெற்றுக்கொண்டு போய் விடுவார்களே என்று சொன்னார்கள். அப்படி நேரக்கூடாது என்பதற்காகத்தான், தமிழக அரசு, அவர்களுக்கு ஏழு ஆண்டுச் சேமிப்புப் பத்திரமாகக் கொடுக்கிறது. கணவனுக்கும், மனைவிக்கும் சேர்த்து அதைக் கொடுக்கிறோம். ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் அந்தப் பணத்தை அவர்கள் பெற முடியாது. அந்த அளவிற்கு அரசு அக்கறையோடு செயல்படுகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அன்றொரு நாள் பேசும்போது, சில குறைபாடுகளைச் சொன்னார்கள். அனாதை இல்லங்களுக்குக் கொடுக்கும் தொகையை அதிகப்படுத்தவில்லை என்று சொன்னார்கள். மாநிலத்தில் சென்னையிலே இரண்டும், பாளையங்கோட்டையில் இரண்டும், மானாமதுரையில் ஒன்றும், ஆக ஐந்து பள்ளிகள் விழி இழந்தவர்களுக்கும், காது கேளாதவர்களுக்கும் பள்ளிகள் இருக்கின்றன. இதற்கு முன்னால், சென்னையைப் பொறுத்தவரையில், ஒரு குழந்தைக்கு 14 ரூபாயும், பாளையங்கோட்டையைப் பொறுத்தவரையில், ஒரு குழந்தைக்கு 13 ரூபாயும், மானாமதுரையைப் பொறுத்தவரையில் ஒரு குழந்தைக்கு 12 ரூபாய் என்றும் அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் 1—10—1977 அன்று பிறப்பித்த ஆணையின்படி எல்லாக் குழந்தைகளுக்கும்—ஐந்து இல்லங்களிலும் உள்ள குழந்தைகளுக்கும்—மாதமொன்றுக்கு ஒரு குழந்தைக்கு 30 ரூபாய் என்று உதவித் தொகை உயர்த்தப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொன்றாக எங்களால் இயன்ற அளவிற்கு நல்ல காரியங்களைச் செய்து வருகிறோமென்று சொல்லும்போது, அவர்கள் அதைப் பாராட்டுவார்களென்று கருதுகிறேன்.

தாய்மார்களுக்கு அதிகமான சேவை இல்லங்கள் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே இல்லங்கள் இருக்கின்றன. இன்னமும் ஏற்படுத்த அரசு தயாராக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சற்று பின்னோக்கிப் பார்க்க வேண்டும். 1959 ஆம் ஆண்டு அவர்கள் அவ்வை இல்லத்தை ஆரம்பித்த நேரத்தில், அந்த இடத்தை வாங்கப் பணமில்லாமல் இருந்த நிலையில்,

அதற்குப் பணம் கொடுத்தது யார் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இருக்கும் மாண்புமிகு முதல்வரவர்கள்தான், அன்றைக்கு எந்தப் பொறுப்பும் இல்லாத நேரத்தில், சொந்தப் பணத்தை அதற்காகக் கொடுத்தார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். பொறுப்பு இல்லாத நேரத்திலேயே பணத்தை வாரிக் கொடுத்த அவர், பொறுப்புக்கு வந்த பிறகு இன்னும் அதிகமான முறையில் உதவிகளைச் செய்வார் என்பதற்கேற்ற முறையில்தான் சமூக நலத் துறை இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்லமந்தா அவர்கள் பணம் போதவில்லை என்று மெத்த வருத்தப்பட்டுக்கொண்டார்கள். அதே நேரத்தில் இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். இதற்கு முன்னால் இருந்த அரசு, இந்த அரசை விட அதிகமான பணத்தை இந்தத் துறைக்குச் செலவிட்டிருக்கிறார்களென்று

(பிற்பகல் 6-30)

சொன்னார்கள். கணக்குப் போட்டுப் பார்த்தால் 1975-76 ஆம் ஆண்டில் சமூக நலத்திற்காக செலவிடப்பட்ட தொகை 159.27 இலட்சம் ரூபாய். 1976-77 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை 226.11 இலட்சம் ரூபாய். 1977-78 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை 301.59 இலட்சம் ரூபாய். 1978-79 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 334.35 இலட்சம் ரூபாய். 1979-80 ஆம் ஆண்டில் 392.79 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகின்றபோது, எங்களுடைய அரசு சற்று அதிகமாகச் செய்திருக்கிறது என்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் இதைப் பாராட்டுவார்கள், மகிழ்ச்சிகொள்வார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது, இந்த இலாகாவிற்கு இன்னும் அதிகமாகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அவர்கள் குறிப்பிடுகிறபோது, வயதானவர்களுக்கு இல்லம் அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். தமிழகத்தில் இன்றைய தினம் இதுவரை எட்டு இல்லங்கள் மத்திய அரசின் உதவியைப் பெற்று, சமூக நல வாரியத்தின் உதவியைப் பெற்று இயங்கிக்கொண்டிருக்கின்றன. இன்னமும் அதிகமான இல்லங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றால், அதற்கும் மத்திய அரசும் மாநில அரசும் உதவி செய்யத் தயாராக இருக்கின்றன. அண்மையில் அடையாறில் ஆறு இலட்சம் ரூபாய் செலவில் எந்த அரசின் உதவியும் இல்லாமல் சி.எஸ்.ஐ. சர்ச் நிர்வாகத்தினர், ஓய்வு பெற்றவர்கள், வயதானவர்கள் தங்குகின்ற ஒரு அருமையான இல்லத்தினை ஏற்படுத்தினார்கள். முன்னாள் பேராயர் அவர்கள் தலைமையில் நான் அதனைத் திறந்து வைத்தபோது மகிழ்ச்சியடைந்தேன். அப்படி அவர்கள் ஏற்படுத்தியதன் மூலம் அரசாங்கத்தின் வேலைப் பளுவை எவ்வளவு குறைத்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தேன். இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு அரசு செலவு செய்யத் தயாராக இருக்கிறது. அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்காமல் இப்படிப்பட்ட இல்லங்களை நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.





மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு சீனியர் வறிக்கறிஞர் என்கிற வகையில் ஒரு கருத்தினைச் சொன்னார்கள். அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர் என்கிற முறையில் விபச்சாரத்தில் ஈடுபட்டிருக்கின்ற பெண்களைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாகப் பார்த்திருக்க முடியும். நானும் வழக்கறிஞராக இருந்தபோது பார்த்திருக்கிறேன். அவர்களுடைய மனப்பக்குவம் எப்படி எப்படி எல்லாம் இருக்கிறது என்பதைப் பார்த்திருக்கிறேன். சில சகோதரிகள் தெரிந்து தவறு செய்கிறார்கள். இன்னும் சில சகோதரிகள் சந்தர்ப்பவசத்தால் அதற்கு ஆளாக்கப்பட்டு விடுகிறார்கள். அவர்களைத் திருத்த முடியும். இன்னும் சில சகோதரிகள் தவறே செய்யாமல் அந்த நிலைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இந்த மாதிரித் தவறுகளை நிச்சயமாகத் தடுப்பதற்கு உதவி அளிக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குக் காரணமாக இருக்கிற ஆண்களுக்கும் தண்டனை தர வேண்டுமென்கின்ற கருத்தினை மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். சென்னையிலே இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு பாதுகாப்பு இல்லம் வைத்திருக்கிறோம். அந்த இல்லத்தில் தையல் வேலை, தச்சு வேலை, கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆகியவற்றைக் கற்றுத் தருகிறோம். அந்தச் சகோதரிகளில் பலர் இப்பொழுது மனம் திருந்தி நல்ல வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களில் சிலர் தங்கள் வசம் இருக்கின்ற குழந்தைகளைக் கூடவே வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளை வேற்று நாட்டவர்கள் தத்து எடுக்க முன்வந்தால், அதற்கும் ஆவன செய்திருக்கிறோம். அண்மையில் இதுமாதிரி ஒரு குழந்தையை வேற்று நாட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். அந்த சகோதரிகள் மறுமணம் செய்ய விரும்பினால், அவர்களைப்பற்றிய முழு விவரங்களையும் சொல்லி, அதன் பிறகு திருமணம் செய்து கொடுக்கிறோம். திருமணத்திற்கு ஆகின்ற செலவை 500 ரூபாய் வரை ஏற்று, செலவு செய்கிறோம். அப்படிப்பட்ட பாதுகாப்பு இல்லம் சென்னையில் மைலாப்பூரில் இருக்கிறது.

சகோதரிகளுக்கு தையல் இயந்திரம் கொடுக்கின்றபோது, இன்னும் அதிகம் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டு ஆயிரம் இயந்திரங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். போன ஆண்டு 500 இயந்திரங்கள் கொடுத்தோம். ஆயிரம்கூட போதாது என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் இன்னும் அதிகமான தையல் இயந்திரங்களை வாங்கித் தருகின்றோம். மேலும் அவர்கள் தையற் பயிற்சி பெற வேண்டுமென்பதற்காக மகளிர் மன்றத்தின் மூலம் பயிற்சியளித்தும் வருகின்றோம். சமூக நல வாரியம் அவர்களுக்குக் கடன் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்துகொண்டிருக்கிறது.

இன்னும் பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். செய்கின்ற காரியங்களை விளம்பரப்படுத்த வேண்டுமென்கின்ற கருத்தினைச் சொன்னார்கள். அதிகாரிகளிடம் நான் ஒன்றைக் கூறுவதுண்டு. வழிகாட்டி அமைப்புகள், நிலையங்கள் நான்கு மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இதுபற்றி பலருக்குத் தெரியாது. இதுமாதிரி திட்டங்கள் தொடங்கப்படும்போது அவற்றை சினிமாவின் மூலம் அல்லது பத்திரிகையின் மூலம் அல்லது மகளிர் கூட்டம் நடைபெறுகின்றபோது அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவதன் மூலம் விளம்பரப்படுத்த வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த முறையில் இந்த இலாக்கா மிக நல்ல முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த இலாக்காவைப் பொறுத்தவரை, என்னைப் பொறுத்தவரை, அதிகாரிகள் மிக நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் : இன்னமும் செயல்படுவார்கள். சமூக நலத் துறையைப் பொறுத்தவரை, இது இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்கின்ற ஒரு நல்ல இலாக்கா என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, பொறுப்புக்கள் சற்று அதிகமாக இருக்கின்றன. இன்றைய தினம் ஆதரவற்ற சகோதரிகள் வருகிறார்கள். ஆதரவற்ற இளம் சிறார்கள் வருகிறார்கள். இன்னும் சில நேரங்களில் ஆஸ்பத்திரியிலிருக்கின்ற அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பும் நமக்கு இருக்கிறது. அதனால்தான் குழந்தைகள் ஆண்டையொட்டி அரசாங்கமே நடத்துகின்ற அனாதை இல்லம் ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதை ஆயிரம் குழந்தைகள் கொண்ட இல்லமாக சென்னையில் தொடங்க வேண்டுமா, இல்லை 500 குழந்தைகள் கொண்ட ஒரு இல்லத்தை சென்னையிலே அமைத்து, 250 குழந்தைகள் கொண்ட இரு இல்லங்களை இரண்டு மாவட்டங்களில் அமைக்க வேண்டுமா என்பதுபற்றி அதிகாரிகள் பரிசீலித்துச் சொல்லுவார்கள். அவர்களுக்குக் கல்வி தந்து, சத்துணவு தந்து பராமரிக்க வேண்டிய பெரிய பொறுப்பு சமூக நலத் துறைக்கு இருக்கிறது.



உடல் ஊனமுற்றவர்களுக்கு வேண்டிய அளவு கடன் தருகிறோம். வேலை வாய்ப்பில் மற்றவர்களைவிட உடல் ஊனமுற்றவர்களுக்கு 10 வருடம் வரை அதிகமாகச் சலுகை அளிக்கப்படுகிறது. அவர்களுக்காக சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மாநிலத்தில் நான்கு மாவட்டங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக முத்துக்காட்டில் உடல் ஊனமுற்றோர் 51 பேர் ஏற்கெனவே பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வேலையிலும் அமர்த்தப்பட்டுள்ளார்கள். இப்பொழுது மேலும் 20 பேர் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த எண்ணிக்கை இரண்டு மடங்கு ஆக்கப்படும். நான் முன்பே குறிப்பிட்டபடி, ஆயிரம் பெட்டிக்கடைகள் அமைக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். தமிழ்நாட்டில் இரண்டு மாவட்டங்களில் இதுபோல் மேலும் பயிற்சி நிலையங்களை அமைக்க இருக்கிறோம். எந்த அரசாங்கமும் எல்லாவற்றையும் முழுமையாகச் செய்ய முடியாது என்ற வகையில் ஆங்காங்கு இருக்கின்ற தனியார் நிறுவனங்களின் மூலம் மத்திய அரசின் உதவியுடனும் மாநில அரசின் உதவியுடனும் பல்வேறு உதவிகளை அளித்து, நல்ல வகையில் சமுதாயத்திற்கு வாழ்வளித்துக்கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லி இன்னமும் அளிப்போம் என்று கூறி நல்ல பல கருத்துக்களைக் கூறிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தனியார் நிறுவனங்களைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆந்திர மகிள சபை, அவ்வை இல்லம், பத்மாபி அசோசியேஷன் இவைகளின் மூலம் பாதுகாப்பு இல்லங்கள் நடத்தப்படுகின்றன. அதுபோல் கிறிஸ்தவர்களாலும், இந்து சபைகளாலும் இதுமாதிரி நிலையங்கள் நடத்தப்படுவதனால், தமிழ்நாட்டிலே அரசாங்கத்தின் வேலைப் பளுவை அவை வெகுவாகக் குறைத்து வருகின்றன. தனியார் நிறுவனங்களுக்கு மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் இப்பொழுது கொடுத்து வருகின்ற உதவித் தொகையைக் கூடுதலாக்க வேண்டும் என்பது எங்களுடைய வேண்டுகோள். பூந்தமல்லியில் "நேஷனல் பிளைண்ட் பேடரேஷன் சென்டர்" இருப்பதாகவும் அங்கு கண்ணொளி இழந்தவர்கள் இருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். உடல் ஊனமுற்றோர்களுக்கு எந்த அளவு சலுகை வழங்கப்படுகிறதோ அதே அளவு சலுகைதான் கண்ணொளி இழந்தவர்களுக்கும் வழங்கப்படுகிறது. கண்ணொளி இழந்தவர்களுக்கு மற்றவர்களைவிட முன்னுரிமை அளிக்க வேண்டும். ஹேண்டிகாப்ட் என்றால்கூட வேலைவாய்ப்பு இருக்கிறது. கண்ணொளி இழந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. அவர்களுக்கும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும். அதுபோல் பஸ்ஸில் செல்ல சலுகை கொடுத்திருக்கிறார்கள், அந்தச் சலுகையையும் ஒருசில நிபந்தனைகட்கு-

உட்பட்டு கொடுக்கிறார்கள். கண்ணொளி இழந்தவர்களைப் பொறுத்த மட்டில், இப்பொழுது கடைப்பிடிக்கப்படுகின்ற அந்த நிபந்தனைகளை யெல்லாம் மாற்றி உதவியை அளிக்கவேண்டும். நான் கூறிய கருத்துக்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய கருத்துக்களுக்கு நானும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் பேசியதற்குப் பிறகு உறுப்பினர் கேள்வி கேட்டு அமைச்சரிடமிருந்து விளக்கம் பெறுவது தான் முறை. பொதுவாக அமைச்சர் கருத்துக்களுக்கு நன்றி கூறுவதில்லை. உறுப்பினர் அவர்கள் அமைச்சரிடமிருந்து என்ன விளக்கம் கேட்டிருக்கிறார்கள் ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** பூந்தமல்லி விழி இழந்தோர் இல்லம் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய யோசனைபற்றி அரசுக்குக் குறிப்புகள் தந்தால், அதை பற்றி அதிகாரிகள் ஆலோசனை செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, I did not participate in the discussion. I only want to make a suggestion to the Hon. Minister.

THIRU K. ARIVAZHAGAN : Sir, the other day you observed that only those hon. Members who participated in a discussion could seek clarifications after the Minister's reply.

THIRU A. R. DAMODARAN : Sir, I am only making a suggestion from the public angle. If advertisements, etc., will be too expensive, may I request the Hon. Minister to consider bringing out an attractive booklet outlining all the schemes of her Department because this is being done in other States? It would be more impressive and would give immediately an idea not only to the Members of the House but also to the general public, if it is distributed to the public also.

THE HON. SELVI P. T. SARASWATHI : This is a welcome suggestion and the Social Welfare Department will consider it.



(பிற்பகல் 6-10)

(2) அலுவல் வரிசையில் மாற்றம்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** "மேலவை விதி 21 (3)-ன்படி இன்றைய அலுவல் பட்டியலில் இனம் 6 'அரசின் தீர்மானங்கள்' கீழ் இடம் பெற்றுள்ள உள்ளினம் 2 'தமிழ்நாட்டில் தொழிலாளர் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு' மீதான விவாதத்தை முதலிலே எடுத்துக் கொள்ளலாம்"

என முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைமுன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21 (3)-ன்படி இன்றைய அலுவல் பட்டியலில் இனம் 6 'அரசின் தீர்மானங்கள்' கீழ் இடம் பெற்றுள்ள உள்ளினம் 2 'தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு' மீதான விவாதத்தை முதலிலே எடுத்துக்கொள்ளலாம்".

**தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.**

(3) 'தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்' மீது விவாதம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு * பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்",

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்ற மேலவையின்முன் வைக்கப்பட்டுள்ள 'தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு' பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பல உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச வேண்டும். ஆகவே, ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்கு மேற்படாமல் பேசி முடித்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் இரவு 9 மணிக்கு மேலாகிவிடும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்புமீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே ஆளுநர் அவர்கள் உரையின்மீது பேசும்போது, மாநில அரசினுடைய கொள்கை தொழிலாளர் போராட்டத்திற்கு எதிரானது, தொழிலாளர் போராட்டங்களுக்குப் பாதகமானது, இந்த அரசு தொழிலாளர் நலன்களைப் புறக்கணிக்கிறது என்று நான் ஏற்கெனவே கூறினேன். அதை மேலும் விளக்குகின்ற முறையிலே மேலும் சில விஷயங்களைச் சொல்கிறேன். இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசும்போது, இது பொதுவாக இந்த சபையிலே எனக்கும் அமைச்சர் அவர்களுக்கும் உள்ள பிரச்சினை என்று பல பேர் நினைக்கிறார்கள். தொழிற் கொள்கை என்றால், இது அரசினுடைய கூட்டுப்பொறுப்பிலே அமைந்த கொள்கை. அப்படி அரசின் கூட்டுப்பொறுப்பிலே அமைந்த கொள்கை இந்தக் கொள்கை என்ற முறையிலேதான், அதை அமல்படுத்தும் போக்கிலேதான் நான் பேசுகின்றேனே தவிர, தனிப்பட்ட முறையிலே மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களின் கொள்கைதான் இந்தத் தொழிற் கொள்கை என்று நான் கருதவில்லை. அரசின் கொள்கை என்ற முறையிலேதான் இந்தக் கொள்கையை நான் விமர்சிக்க விரும்புகிறேன்.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

இந்தக் கொள்கை அறிக்கையிலே, முதற் பக்கத்திலே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. 'வேலை நிறுத்தங்கள் நீடித்துக்கொண்டே போகும்போது அவற்றிற்கு முடிவு காண வேண்டி, தொழில் தகராறுகளில் தலையிட்டு, செவ்விய முறையில் இணக்கம் செய்வதன் மூலமும், சுமுகமாக அவற்றிற்குத் தீர்வுகாண்பதன் மூலமும் உரிய காலத்தில் அவற்றைத் தீர்த்துவைப்பதென்னும் நடைமுறையை அரசு மேற்கொண்டது'. நான் சொல்லிக்கொள்கிறேன், இந்தமாதிரி உரிமையோடு பேசுவதற்கு, தொழில் தகராறுகளில் அரசு தலையிட்டு சுமுகமாக அவற்றைத் தீர்த்து வைத்திருக்கிறது என்று சொல்வதற்கு இந்த அரசுக்குத் தகுதியில்லை. அப்படிச் சொல்ல முடியாது என்பதுதான்

---

*578–678 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.





என்னுடைய கருத்து. இந்த நாட்டிலே நடக்கும் எல்லாப் போராட்டங்களிலும், தொழிலாளர்கள் நடத்தும் போராட்டங்களை நீடிக்கச் செய்து, தொழிலாளர்களைப் பலவிதமான தொல்லைகளுக்கும், கஷ்டங்களுக்கும் உள்ளாக்கி அவர்களைத் தோல்வியடையச் செய்வதுதான் இந்த அரசின் கொள்கை என்பதை நான் சொல்ல முடியும். இந்த அரசு பொறுப்புக்கு வந்த பின்பு நடந்த போராட்டங்களை நாம் பார்க்க வேண்டும். கோயம்புத்தூர் லெட்சுமி மில் தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் 5½ மாதங்களுக்கு மேல் நடைபெற்றது. ஆரம்ப காலத்தில் அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்குப் புதிது, ஆகையால் இந்தப் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படவில்லை என்று வேண்டுமானால் ஒப்புக்கொள்ளலாம். ஆனால், சமீபத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, அரசாங்கத்தின் கொள்கையே இதுதான் என்பதற்குப் பல ஆதாரங்களைக் காட்ட முடியும். சமீபத்திலே 130 நாட்கள் சிம்கோ தொழிற்சாலை மூடப்பட்டது. தொழிற்சாலையைத் திறப்பதற்கு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாமல் போராட்டத்தை நீடித்து நடத்த வழிசெய்துவிட்டு, இதுதான் தொழிற் கொள்கை என்று அரசு சொல்கிறது. இன்னும் பல உதாரணங்களை நான் சொல்ல முடியும். டி.வி.எஸ்., டி.அய். சைக்கிள் கம்பெனி, கரூர் எல்.ஜி.பி. ஆட்டோமொபைல் போராட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவகிரி தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம் போன்று இன்னும் பல போராட்டங்களையும் நான் சொல்ல முடியும். இவைகளிலேயெல்லாம் இந்த அரசு, காலாகாலத்திலே தலையிட்டு நடவடிக்கை எடுத்திருந்திருக்கலாம். ஆனால், தலையிடாமல் இருக்கிறது. நான் இன்னும் சொல்வேன், இந்த டிஸ்பியூட்களிலே லேபர் டிபார்ட்மென்ட் தலையிடவில்லை. ஆனால், போலீஸ் டிபார்ட்மென்ட் தலையிட்டது. எனக்கு நேரம் இல்லாததால் நான் எல்லாவற்றையும் சொல்லவில்லை. எல்.ஜி.பி. ஆட்டோமொபைல் போராட்டத்தில் ஒரு டி.ஐ.ஜி தலைமையில் தோழர்கள் தாக்கப்பட்டார்கள். இந்த எல்.ஜி.பி.-ல் 20 நாட்களுக்கு மேல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வேலை நிறுத்தங்களைக் காலாகாலத்திலே கைவிட வேண்டும் என்பது மட்டுமல்ல, இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்களிலே இந்த அரசு அவைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்கிறதா என்று பார்த்தால், இல்லை. கொடுக்கப்பட்டிருக்கும் இந்தப் புத்தகத்திலே 3-ம் பக்கத்தில் விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. 1977 ஆம் ஆண்டில் புனராய்வு செய்யப்பட்ட புகார்கள் 7,174. புனராய்வு செய்யப்பட்டது போக சர்க்கார் தலையிட்டு தீர்த்து வைத்தது மற்றும் கோர்ட்டுக்குப் போனவை 2,202 புகார்கள். அம்போ என்று தீர்க்கதியாக விடப்பட்ட வழக்குகள் 4,425. 1978-ல் புனராய்வு செய்யப்பட்டவை 8,741. ஆனால், நடுவர் தீர்ப்புக்கு விட்ட வழக்குகள் 2,737. நிர்க்கதியாக விடப்பட்ட வழக்குகள் 5,204. இப்படி இந்தக் கணக்குப்படி பார்த்தால், மொத்தம் டிஸ்ப்யூட்டில் 2/3 பங்கு

டிஸ்ப்யூட்—2/3 பங்குக்கு மேல் டிஸ்ப்யூட்கள் சர்க்கார் இயந்திரத்தினால் தீர்த்து வைக்கப்படவில்லை என்பது தெரியும். இங்கு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரங்களிலிருந்துதான் எடுத்துக்காட்டுகிறேன். இப்படி, 1977 ஆம் ஆண்டிலே 4,425 வழக்குகளும், 1978-ம் ஆண்டிலே 5,204 வழக்குகளும் அப்போ என்று விடப்பட்டிருக்கின்றன. பப்ளிக் செக்டர்களில், டிஸ்ப்யூட்களை கோர்ட்டுக்கு விடவில்லை. அங்கேயே ஸ்கிரீனிங் கமிட்டி என்று போட்டிருக்கிறார்கள். இது சட்டத்திற்கு மிகவும் புறம்பானது. இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டிலே லேபர் செகரட்டரி தான் சொல்ல வேண்டும், கோர்ட்டுக்கு விட வேண்டும் என்று சொல்ல வேண்டும். இப்போது டிரான்ஸ்போர்ட்-லே தகராறு ஏற்பட்டால் கூட, அந்த இலாக்காவிலே இருப்பவர்கள் லேபர் டிபார்ட்மென்ட் செகரட்டரியோடு சேர்ந்து 'இந்த வழக்கு கோர்ட்டுக்கு விடுவதற்குத் தகுந்தது' என்று அபிப்பிராயம் சொல்லி தீர்க்கப்படுகிறது. ஆனால் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு நடந்த ஒரு பிரச்சினையை மட்டும் நான் சொல்கிறேன். மதுரை—இராமநாதபுரம் மின்சார திட்டத்திலே மட்டும் 1977-78 ஆம் ஆண்டில் 13 டிஸ்ப்யூட்கள் கோர்ட்டுக்கு விட முடியாது என்று மறுக்கப்பட்டிருக்கின்றன. 1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 298, ஆனால் 1978-ல் நடைபெற்றவைகளின் எண்ணிக்கை 378. இப்படியாக, ஆயிரக்கணக்கான டிஸ்ப்யூட்கள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. இராமநாதபுரம் திட்டத்திலே மட்டும் 2 ஆண்டுகளில் 13 டிஸ்ப்யூட்கள் கோர்ட்டுக்கு விடவில்லை. டி.வி. எஸ்., தொழிற்சாலையில் 12 தொழிலாளர்கள் டிஸ்மிஸ். அவர்களைக் கோர்ட்டுக்கு விடவில்லை. மேனேஜ்மென்ட் 200-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையிலேயே ஒரு அக்ரிமென்ட்-ல் கையெழுத்துப் போட்டுவிட்டு, கையெழுத்துப் போட்ட அந்த 'மை' உலருவதற்கு முன்னாலேயே அது மாறியது. இப்போது அரசாங்கம் அந்த 'மேனேஜ்மென்ட்' ஒத்துழைக்காததற்கு நாங்கள் என்ன செய்வது என்று சொல்கிறது. இன்றைக்கு 12 பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்-லே 11 (ஏ)-ல் ஒரு குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் கூட, அந்தக் குற்றத்திற்கு டிஸ்மிசல் என்ற அளவுக்கு தண்டனை அளிக்கப்பட வேண்டுமா, அந்தத் தண்டனையைக் குறைக்கலாமா என்று கூடச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கக்கூடாதா? கோர்ட்டுக்குப் போயிருந்தால், இன்றைக்கு அவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருப்பார்களா? அவர்களை டிஸ்மிஸ் பண்ணிய பிறகாவது இந்த அரசுக்கு ஒரு மாரல் ரெஸ்பான்சிபிலிட்டி இல்லையா?





இன்றையதினம் 'சீப் மினிஸ்டர்' முன்னிலையில் ஒத்துக்கொண்ட பிரச்சினைகளையே முதலாளிகள் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே, இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் பிரகாரம் 11(ஏ)-ன்படி 'குவான்டம் ஆஃப் பனிஷ்மென்ட்' என்பது பற்றி 'ட்ரிபூனலுக்கு' விட்டு முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-50)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எந்த செட்டில்மென்ட் பற்றிச் சொல்லுகிறார்கள் என்று புரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் முன்னால் பேசியது என்று சொல்லுகிறார்கள். அது எந்த செட்டில்மென்ட் என்று விளக்கமாகச் சொல்லினால் நான் பதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** எனக்கிருக்கிற நேரம் 5 நிமிஷம். இந்த 5 நிமிஷ நேரத்தில் இந்தப் பிரச்சினையை விளக்கிக் கொண்டிருக்க முடியாது. டி.வி.எஸ். நிறுவனத்தில் ஒரு தொழிற் தகராறு ஏற்பட்டபோது, டி.வி.எஸ். நிறுவனத்தின் முதலாளி, ஒரு உடன்பாட்டிற்கு வந்தார். அதாவது தொழிற் தகராறு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுடைய இறுதியான தீர்ப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நிர்ணயிக்க வேண்டும். அந்தப் பொறுப்பை முதலமைச்சருக்கே விட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அப்படி ஒப்புக்கொண்டு போன முதலாளி பின்னாலே ஒப்பந்தத்திற்கு விரோதமாக, 12 தொழிலாளர்களையும் டிஸ்மிஸ் செய்துவிட்டார். அந்தப் பிரச்சினை அரசாங்கத்தின் முன்னால் வந்தது. அப்போது அந்தப் பிரச்சினையைத் தொழிற் கோர்ட்டிற்கு விடுவதற்கான அதிகாரம் அரசாங்கத்திற்கு இருந்தது. 'குவான்டம் ஆப் பனிஷ்மென்ட்' நியாயமா என்று பார்ப்பதற்காக அதைத் தொழிற் கோர்ட்டுக்கு விடுகிற அதிகாரம் இருந்தும் அந்தத் தார்மீகப் பொறுப்பைக்கூட இந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லை. முதலாளி பழி வாங்கியதை இந்த அரசு ஊர்ஜிதம் செய்தது என்பதுதான் டி.வி.எஸ். பிரச்சினை. இந்த வகையில்தான் அ.தி.மு.க. அரசு தொழிற் தகராறில் தலையிட்டிருக்கிறது. எனவே, கொள்கைக் குறிப்பின் முதல் பக்கத்தில் சொல்லியிருப்பதைப்போல் 'தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதே அரசின் தலையாய கொள்கையாக' இருந்தது என்று சொல்வதற்குத் தகுதியில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 23

அடுத்து, "தமிழ்நாட்டில் பெரும்பான்மையோராக உள்ள, தொழிற்சங்க அமைப்பின்கீழ் வராத தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குக் குறைந்தளவு ஊதியமும், நல்ல வாழ்க்கைத் தரமும் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு சட்ட வழிபெற்ற அறிவிப்பின் மூலமும் சிறப்பு நடவடிக்கைகள் மூலமும் ஏற்பாடுகள் செய்வதில் இந்த அரசு சிறப்பு நாட்டம் செலுத்தியது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, அன்-ஆர்கனைஸ்டு ஒர்க்கர்களுக்கு நிறைய சலுகைகளைச் செய்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது, "தொழிலாளர்களில் நலிந்த பிரிவினருக்கு உதவிகள் செய்யப்பட்டு அவர்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி இந்த அரசு உரிமை கொண்டாடுவதற்குத் தகுதியும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதிலுமே, அன்-ஆர்கனைஸ்டு ஒர்க்கர்ஸ் அல்லது வீக்கர் செக்ஷன் என்று சொல்லப்படுகிற தொழிலாளர்கள் 'காண்ட்ராக்ட் லேபரில்'தான் அதிகமாக இருக்கிறார்கள். காண்ட்ராக்ட் லேபரில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் கருணையற்ற முறையில் அந்த முதலாளிகளால் இன்றையதினம் சுரண்டப்படுகிறார்கள். அவர்களைச் சுரண்டுவதற்கே கண்டுபிடிக்கப்பட்ட முறைதான் 'காண்ட்ராக்ட் லேபர்' முறை. அவர்களுக்குச் சரியான மஸ்டர் ரோல் கிடையாது. சம்பளம் அவர்களுக்கு ஒழுங்காகக் கொடுப்பது கிடையாது. அவர்களுக்கு பிராவிடெண்ட் பண்ட் வசதி கிடையாது. லீவு வசதி அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடையாது. பிரின்சிபல் தொழிலாளர் யார், காண்ட்ராக்ட் லேபர் தொழிலாளர் யார் என்று வாழ்நாள் முழுவதும் போராடினாலும் கண்டுபிடிக்க முடியாதபடி உரிமையற்ற முறையில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள்தான் காண்ட்ராக்ட் லேபர் தொழிலாளர்கள்.

அந்தத் தொழிலாளர்களின் நீண்ட நாள் போராட்டத்திற்குப் பிறகு 1970 ஆம் ஆண்டு மத்திய அரசு காண்ட்ராக்ட் லேபர் தொழிலாளர்களுக்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக அந்தச் சட்டத்தை 4 ஆண்டுக் காலத்திற்கு மேலாக தமிழ் நாட்டில் ஆட்சியிலிருந்த அன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமுல்படுத்தாமலேயே விட்டு வைத்தது. அவர்கள் தமிழ் நாட்டுத் தொழிலாளர்கள்பற்றிப் பேசும்போது இதற்கு பதில் சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. தி.மு.க. ஆட்சி அந்தச் சட்டத்தை தமிழகத்தில் 4 ஆண்டுகளுக்கு அமுல்படுத்தவில்லை. கடைசியில் ஆட்சியிலிருந்து போகிற சமயத்தில்தான் 'டிராப்ட் ரூல்ஸ்' போட்டார்கள். பிறகு 1976 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆட்சியின்போது அந்த ரூல்ஸ் 'பைனலைஸ்' செய்யப்பட்டது.



1979 ஏப்ரல் 23] [திரு. ஆ. நல்லசிவன்]

அந்தச் சட்டத்தில் 35 செக்ஷன்கள் இருந்தாலும், அதில் ஒரே ஒரு செக்ஷன்தான் காண்ட்ராக்ட் லேபர் அபாலிஷன்பற்றிப் பேசுகிறது. மீதமிருக்கிற 34 செக்ஷன்களும் காண்ட்ராக்ட் லேபரை எப்படி ரெகுலேட் செய்வது என்பதைப்பற்றி இருக்கின்றன. இந்திரா காந்தி அவர்கள் கொண்டு வந்த சட்டம் அது. முதலாளிகள் காண்ட்ராக்ட் லேபரை ஏகபோகமாகச் சுரண்டுவதற்கு வழி வகை செய்வதற்காகத்தான் இந்த 34 செக்ஷன்களும் இருந்தன. மானோபலிஸ்ட், மற்றும் பெரிய பூர்ஷ்வாக்கள் தொழிலாளர்களைச் சுரண்டுவதற்கு அதிகாரம் கொடுக்கிற சட்டமாக இது கொண்டு வரப்பட்டது. இப்படிக் கொண்டுவரப்பட்ட சட்டத்தில் இருந்த 35 செக்ஷன்களில் ஒரே ஒரு செக்ஷன்—செக்ஷன் 10 மட்டுமே—காண்ட்ராக்ட் லேபரை அபாலிஷ் செய்வதுபற்றிக் குறிப்பிடுகிறது. இந்தச் சட்டத்திற்கு சென்ட்ரல் ரூல்ஸ் கூட போடப்படவில்லை. ஒரு ஆக்டை அமுல்படுத்துவது என்றால், அதற்காக ரூல்ஸ் போடுவார்கள். ஆனால் இந்த விஷயத்தில் அதைக்கூட வேண்டா வெறுப்புடன்தான் போட்டார்கள். இன்றைக்குத் தமிழ் நாட்டில் இருக்கிற அரசாங்கமாவது அதை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்றால் இல்லை. இந்த ஆட்சி நாங்கள் வீக்கர் செக்ஷன் பக்கம் நிற்கிறோம் என்று உரிமை கொண்டாடுவது உண்மையானால், நலிந்தோர் பக்கம் நிற்பதாகச் சொல்வது உண்மையானால், அன்-ஆர்கனைஸ்டு காண்ட்ராக்ட் லேபர் பக்கம் நிற்கிறோம் என்று சொல்வது உண்மையானால், காண்ட்ராக்ட் லேபர் ஆக்டை அமுல்படுத்தியிருக்க வேண்டும். அதைக்கூட இந்த அரசு செய்யவில்லை என்று குற்றம் சாட்டுகிறேன். அதற்கு மாறான ஒரு கொள்கையை இந்த அரசாங்கம் சொல்லியிருக்கிறது. அதைத் தமிழில் சொன்னால் புரியாது. ஆங்கிலத்தில் சொல்லுகிறேன். கொள்கை விளக்கக் குறிப்பிலே இருப்பதை நான் இங்கே படிக்க விரும்புகிறேன்.

"The Government have now decided that instead of abolishing Contract Labour system, steps will be taken to effectively enforce the regulation provision" முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் விட்டுப் போனார்களே அதையே இந்த அரசாங்கமும் செய்து வருகிறது. காண்ட்ராக்ட் லேபரை ரெகுலேட் செய்யலாம் என்று எந்த அரங்கத்தைச் சொல்லி விட்டுப் போனார்களோ அதைத்தான் இந்த ஆட்சி செய்கிறது. காண்ட்ராக்ட் லேபரை நன்கு எக்ஸ்பிளாய்ட் செய்வதற்கான நடவடிக்கைகளைத்தான் எடுத்திருக்கிறது இந்த அரசு. செக்ஷன் 10-ன்படி காண்ட்ராக்ட் லேபர் அபாலிஷ் செய்யப்படலாம் என்றிருந்தாலும், அதை அமுல்படுத்த மறுக்கிறது இந்த அரசு. காண்ட்ராக்ட் லேபரை அபாலிஷ் செய்யாமல், அதை ரெகுலேட் செய்ய விரும்புகிறோம் என்கிறார்கள். எதற்காக இந்த அரசு அதை அபாலிஷ் செய்ய விரும்பவில்லை? இந்த நிலையில் இந்த அரசு எப்படி

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 23

விக்கர் செக்ஷன் பற்றியோ, அன்-ஆர்கனைஸ்டு லேபர் பற்றியோ பேசுவதற்கு உரிமை பெறுகிறது என்று எனக்குப் புரியவில்லை. விக்கர் செக்ஷனுக்காகவும் அன்-ஆர்கனைஸ்டு செக்ஷனுக்காகவும் பாடுபடுவதாகச் சொல்லிக் கொண்டு, அந்தச் சட்டத்தின் 10-வது செக்ஷனை அமுல்படுத்த மறுக்கிறார்கள். மறுப்பது மட்டுமல்ல, அதை தைரியமாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லுகிறார்கள் என்றால், அந்த தைரியத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகர்ப்புறத்தில் இருக்கிற ஆர்கனைஸ்டு தொழிலாளர்கள் போராடுகிற போது, கிராமப்புறத்தைச் சுட்டிக் காட்டி, அங்கேயிருக்கிற அன்-ஆர்கனைஸ்டு தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 3/4 ரூபாய் ஊதியம்கூட பெற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லி, ஆர்கனைஸ்டு லேபருக்கு எதிராக அன்-ஆர்கனைஸ்டு லேபரைக் காட்டிவிட்டு காண்ட்ராக்ட் லேபரை அபாலிஷ் செய்ய ஆக்டில் ஒரு செக்ஷன் இருக்கும்போது, அதை இந்த அரசாங்கம் அமுல்படுத்த மாட்டேன் என்று பச்சையாகச் சொல்வது எப்படி நியாயம் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

காண்ட்ராக்ட் லேபர் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், எப்படி இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். சிம்கோ மீட்டர் தொழிற்சாலையின் முதலாளி திரு. விஸ்வநாதன் ஒரு பேப்பர் மில்லும் வைத்திருக்கிறார். அந்த முதலாளிக்குச் சாதகமாக இந்த ஆட்சி நடந்து கொள்கிறது என்று தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனை பேரும் எண்ணும்படி இந்த ஆட்சியின் சலுகையைப் பெற்ற முதலாளி திரு. விஸ்வநாதன் அவர்கள். அவருடைய பேப்பர் மில் பேக்டரி இருக்கிறதே அதிலுள்ள காண்ட்ராக்ட் லேபர் பற்றி ஆராய தமிழ் நாடு ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு ஒரு சப் கமிட்டி போட்டது. அதில் சி.ஐ.டி.யு. இடம் பெறவில்லை. ஐ.என்.டி.யு.சி. போன்றவர்கள் இடம் பெற்றிருந்தார்கள். அவர்களெல்லாம் அந்தப் பேப்பர் மில்லைப் போய்ப் பார்த்து ஒரு அறிக்கை கொடுத்தார்கள். அந்த அறிக்கையில்

"The condition of contract labour in the paper industry is horrible because of the exploitation in all respects, such as very low actual wages paid compared to very high expenditure shown in accounts, non-maintenance of records, non-availability of medical facilities. The Committee finds more or less equal number of contract labourers are being employed along with the permanent workers. Most of the operations are only within the factory and the contract workers are working parallelly with the permanent workers."



1979 ஏப்ரல் 23]

VICE-CHAIRMAN (Thirumathi Mandakini Krishnamurthi) : There is an announcement. The Proceedings of the House will go on beyond 7 p.m., till the discussion on the Policy Note on Labour is finished.

**திரு. ஆ. நல்லசிவன் :** அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் 4,000 தொழிலாளர்களில் 2,000 பேர் பாதிக்குப் பாதி காண்ட்ராக்ட் லேபர் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். எந்த பேக்டரியில் என்றால் சிம்கோ மீட்டர் முதலாளியான திரு. விஸ்வநாதனின் பேக்டரியில், இப்படிப்பட்ட நிலையை அனுமதிக்கிற அரசு எப்படி நலிந்த பிரிவினருக்காக நாங்கள் தேவையானதைச் செய்கிறோம் என்று சொல்ல முடியும் என்றுதான் கேட்கிறேன்.

புலியூரில் 78 பெண்கள் 10 ஆண்டுக் காலமாக லோடிங் அண்டு அன்லோடிங் வேலை செய்து வந்தார்கள். காண்ட்ராக்ட் லேபரை ரெகுலேட் செய்வதாகச் சொல்லி அந்த 78 பேரையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். அந்தப் பெண்களின் பெயர்ப் பட்டியலை எங்கள் தலைவர் திரு. உமாநாத் அவர்கள் அமைச்சரிடத்திலேயே கொடுத்தார்கள். அதன்மீது இன்றுவரை ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

அடுத்து, சங்கர் சிமிண்ட் தொழிற்சாலையில் (Gunny bag) லோடிங் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று கேட்ட போது, அந்தத் தொழிற்சாலையின் முதலாளி அதை அங்கேயிருந்து மாற்றி சங்ககிரியில் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் அதை உண்டாக்கி அது தனிப்பட்ட ஒரு முதலாளியின்கீழ் செயல்படுவதாகச் சொன்னார்கள். ஒரு அதிகாரியைவிட்டு அதைப் போய் 'செக்' பண்ணிக் கொண்டு வரச் சொன்னார்கள் அது ஒரு போலிக் கம்பனி என்று அந்த அதிகாரி ரிப்போர்ட் கொடுத்தார்.

(பிற்பகல் 7-00)

அது மட்டுமல்ல, பெல் நிறுவனம் ஒரு பிராஸ்பரஸ் இண்டஸ்ட்ரி. அதற்கு வேண்டிய ஆன்சிலெரி ஒர்க்கர்ஸ் நாலாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பூராவும் காண்ட்ராக்ட் லேபராகத்தான் இருக்கிறார்கள். இந்த நாலாயிரம் பேர்களை பெர்மனென்ட் ஆக்க வேண்டுமென்று சி.ஐ.டி.யு.வைச் சேர்ந்தவர்கள் வற்புறுத்துவதால், அவர்களுக்குப் பதிலாக அண்ணா தி.மு.க. தொழிற் சங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். காண்ட்ராக்ட் லேபர் பிரச்சினையைத் தீர்க்க ஒரு கமிட்டி போட வேண்டுமென்று சொன்னதை நிறைவேற்றாமல் காலம் கடத்தி அதற்குள் அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்களுடைய தொழிற் சங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 23

காண்ட்ராக்ட் லேபர் அபாலிஷன் ரெகுலேஷன் ஆக்ட் பற்றி சுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு. கிருஷ்ண அய்யர் அவர்கள், "காண்ட்ராக்ட் லேபரை வைத்துக் கொள்ளுங்கள்; ஆனால் பெர்மனென்ட் ஊழியர்களுக்கு உள்ள அனைத்துச் சலுகைகளையும் அவர்களுக்கும் தர வேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள். எல்லாச் சலுகைகளையும் கொடுப்பதாக இருந்தால், காண்ட்ராக்ட் லேபரை வைத்துக்கொள்ளுவதில் என்ன பிரயோசனம்? திரு. வி. ஆர். கிருஷ்ண அய்யர் அவர்கள் வகுத்த கொள்கையை இன்றைக்கு அமுல் நடத்துகிறார்களா என்றால், இல்லை. காண்ட்ராக்ட் லேபரை அமுல்படுத்துவதைப் பொறுத்த வரையில் இந்த கவர்ன்மெண்ட் மற்ற கவர்ன்மென்ட் கொள்கையிலிருந்து மாறுபடவில்லை. ஜனதா அரசின் கொள்கையிலிருந்தும் மாறுபடவில்லை. தி.மு.க.வை விட சற்று வித்தியாசமான கொள்கையை வைத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னாலும், இந்த விஷயத்தில் அவர்களுடைய கொள்கையிலிருந்தும் மாறுபடவில்லை. ஏன் மாறுபடவில்லை? அண்ணா தி.மு.க.வினர் ஆட்சிக்கு வருகிற வரையிலும் தொழிலாளர்கள் கட்சி என்றார்கள். ஆட்சிக்கு வந்த பிறகு அவர்கள் முதலாளிகளுக்குத் துணை நிற்கிறார்கள். முதலாளிகளுக்கு நம்பிக்கையூட்டுகிறோம் என்று சொல்லுகிறார்கள். எப்படி நம்பிக்கையூட்ட விரும்புகிறார்கள் என்றால், முதலாளிகளைத் திருப்திப் படுத்த தொழிலாளர்களின் உரிமைகளை மறுக்கிறார்கள். தொழிலாளர்களின் உரிமைகளை மறுக்க வேண்டியிருப்பதால், ஒன்றுபட்டிருக்கக் கூடிய தொழிலாளர்களிடையே ஒற்றுமையைக் குலைக்க முயற்சிக்கிறார்கள். தொழிலாளர்களிடையே ஒன்றுமையைக் குலைப்பதற்காக போட்டிச் சங்கங்களை ஏற்படுத்தி அதை 'பேட்ரனைஸ்' பண்ண வேண்டியிருக்கிறது.

சிம்கோ மீட்டரில் ஐ.என்.டி.யு.சி. சங்கம் ஒரு அக்ரிமெண்டில் கையெழுத்துப் போட்டது. அதற்குப் பிறகு 120 நாள் ஆன பிறகு திடீரென்று அண்ணா தொழிற்சங்கம் உதயமாகிறது. சாதாரணமாக ஒரு சங்கத்தை ரிஜிஸ்டர் பண்ண வேண்டுமென்றால், சில நாட்களோ சில மாதங்களோ ஆகும். ஆனால் இந்தச் சங்கம் ஏற்படுத்திய இரண்டே மணி நேரத்தில் ரிஜிஸ்டர் பண்ணப்பட்டது. அதற்காக இங்குள்ள மினிஸ்டர் திருச்சியிலுள்ள டி.சி.எல்.லுக்குப் போன் பண்ணுகிறார்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அமைச்சர் அவ்வளவு பைத்தியகாரத்தனமான அமைச்சர் என்று கருத வேண்டாம். செய்ய வேண்டுமென்றால், எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. தொலைபேசியில் சொல்லி மாட்டிக்கொள்ளக் கூடிய அளவுக்கு விஷயம் தெரியாதவன் அல்ல.



1979 ஏப்ரல் 23]

**திரு. ஆ. நல்லசிவன்:** அல்லது வேறு முறையிலே செய்திருப்பார்கள். அப்ளிகேஷன் போட்ட சில மணி நேரத்திற்குள் ரிஜிஸ்டர் பண்ணப்பட்டிருக்கிறது. கடைசியில் ஆரம்பித்த இந்தச் சங்கம் நாலரை ரூபாய் என்றிருந்ததை 6 ரூபாய் என்று சொன்ன பிறகு, முதலமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். ஏற்கெனவே அங்கிருந்த ஐ.என்.டி.யு.சி. சங்கம் காலாவதியாகிவிட்டது. அங்குள்ள சி.ஐ.டி.யு.சி. பலம் வாய்ந்ததாக ஆகிறது என்று கருதி அதற்குள் அண்ணா தி.மு.க. தொழிற்சங்கத்தை ஏற்படுத்தி சீப் மினிஸ்டர் அளவிலே அந்த 6 ரூபாயை ஏற்றுக்கொண்டதாக முடிவு செய்யப்பட்டது. இதை அங்கு நடந்த கூட்டத்திலே பெருமாள் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார். சீப் மினிஸ்டர் கூட பெருமாள் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எப்படியெல்லாம் போட்டிச் சங்கங்களை ஆளும் கட்சியினர் 'பேட்ரனைஸ்' பண்ணுகிறார்கள் என்பதற்கு உதாரணமாக இதைச் சொல்லுகிறேன்.

இந்த உதாரணம் கூட சரியில்லையென்றால், இன்னுமொரு உதாரணத்தைச் சொல்லுகிறேன். அதை அவர்கள் மறுக்க முடியாது. 'வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி' என்பதைப் போல அவர்கள் வாயாலே வந்ததுதான். கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் அண்ணா தி. மு. க. தொழிற்சங்கம் 15—2—1979 அன்றுதான் துவங்கப்பட்டது. போனஸ், விரிவாக்கப்பட்ட அலவன்ஸ், மற்ற தொழிலாளர்கள் பிரச்சினை ஆகிய கோரிக்கைகளை வைத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களைச் சந்தித்து பிப்ரவரி 17 ஆம் தேதியன்று முறையிடுகிறார்கள். அமைச்சர் அவர்களும் பரிந்துரை செய்வதாகச் சொல்லி பேச்சுவார்த்தையை 20—2—1979 அன்று சென்னையில் நடத்துவதாகக் கட்டளையிட்டார்கள். 20—2—1979 அன்று சென்னையிலுள்ள தலைமைச் செயலகத்தில் அண்ணா தொழிற்சங்கப் பிரதிநிதிகள், டைரக்டர் ஆஃப் ஷுகர் ஆகியவர்கள் மட்டும் அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆலையிலே ஏற்கெனவே ஒரு சி.ஐ.டி.யூ. சங்கம் இருக்கிறது. அது ரொம்ப வருடங்களாக இருக்கிறது. அவர்கள் 1978 மார்ச் மாதத்திலேயே ஒரு அக்ரிமென்டைப் போட்டிருக்கிறார்கள். அதிலே விரிவாக்கப்பட்ட அலவென்ஸ், போனஸ் ஆகியவைகளைப் பேசி முடிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களைக் கூப்பிடாமலே 1979 ஜனவரி மாதத்தில் மேனேஜ்மென்டாரே ஒரு சங்கத்தை உருவாக்கி அந்தச் சங்கத்தோடு ஒரு அக்ரிமென்ட் ஜனவரி 15 ஆம் தேதியன்று போடுகிறார்கள். நம்முடைய ஆளும் கட்சிக்கு ஒரு சந்தேகம் வருகிறது. ஜனவரி மாதம் ஏற்படுத்திய அந்தச் சங்கத்தில் தி.மு.க. காரர்கள் இருக்கிறார்களோ என்ற சந்தேகம் வந்து,

தி.மு.க. கூட இல்லாத கலப்படமற்ற அண்ணா தி.மு.க. சங்கம் வேண்டுமென்று 15—2—1979 அன்று ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார்கள். ஜனவரி மாதத்திலே ஒரு சங்கம், பிப்ரவரி மாதத்திலே ஒரு சங்கம் என்று ஏற்படுத்தினார்கள். அதற்கு முன்னாலே பரம்பரையாக சி.ஐ.டி.யு. சங்கம் ஒன்று இருக்கிறது. ஆனால் 17—2—1979 அன்று ஆரம்பித்த அண்ணா தி.மு.க. தொழிற்சங்கத்தை வைத்து அமைச்சர் அவர்களைப் பார்த்துப் பேசி ஷுகர் டைரக்டரை வைத்து முடிவு எடுக்கிறார்கள் என்று சொன்னால், அரசு அதிகார துஷ்பிரயோகம் செய்கிறது என்று சொல்கிறேன். இப்படி போட்டிச் சங்கங்களை 'பேட்ரனைஸ்' செய்வதன் மூலம் ஆளும் கட்சியினர் அதிகார துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக, சதர்ன் ஸ்டீரக்சுரல்ஸ் என்ற கம்பெனியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கம்பெனி ஒரு வருஷமாக மூடிக் கிடந்தது. ஸ்டேட் கவர்ன்மென்ட் கியாரண்டி கொடுத்தால் ஸ்டேட் பேங்க் கடன் கொடுக்கத் தயாராக இருந்தது. ஆனால் ஸ்டேட் கவர்ன்மென்ட் கியாரண்டி கொடுக்க முன்வரவில்லை. ஆகவே பழைய பங்குதாரர் திரு. டி. எ. பை அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கியாரண்டி கொடுத்ததால், கம்பெனி திறக்கப்பட்டு ஒரு அக்ரிமெண்டைப் போட்டார்கள். அக்ரிமெண்ட் போட்ட தொழிற்சங்கத்தின் தலைவராக இருப்பவர் திரு. வி. பி. சிந்தன். அந்த அக்ரிமென்டிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் கையெழுத்துப் போட வேண்டுமென்று லேபர் கமிஷனர் வற்புறுத்துகிறார். அங்கே அண்ணா தி.மு.க. தொழிற்சங்கமே கிடையாதே, எப்படி அவர்கள் கையெழுத்துப் போட முடியுமென்று லேபர் கமிஷனரைக் கேட்டால், அவரால் அதற்குத் தகுந்த பதில் சொல்ல முடியவில்லை. அப்படி கையெழுத்துப் போட வேண்டுமென்று மேலிடத்து உத்தரவு என்று மட்டும் சொல்லுகிறார். மேலிடத்து உத்தரவு என்றால் யார் அந்த உத்தரவைப் போட்டது? அக்ரிமெண்ட் போடுவதற்குச் சில நாட்களுக்கு முன்னாலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கத்தின் மாநிலச் செயலாளர் திரு. பெருமாள் என்பவர், "வி. பி. சிந்தன் தலைமையை அகற்றுங்கள், அப்போதுதான் ஃபேக்டரி சீக்கிரம் திறக்கப்படும். அண்ணா தி.மு.க. தலைவரைத் தேர்ந்தெடுங்கள்" என்று ஒரு கூட்டத்திலே பேசுகிறார். அக்ரிமெண்ட் போட்ட காலத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கையெழுத்து போட்டால்தான், அக்ரிமெண்டை முடிக்க முடியுமென்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். கேட்டால், மேலிடத்து உத்தரவு என்கிறார்கள்.





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே கூறப்படுகிற குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்ல முடியாத நிலையில் இருப்பவர்களைப் பற்றிப் பேசக்கூடாது என்பது மரபு. இங்கே அடிக்கடி திரு. பெருமாள் அவர்கள் இப்படிச் சொன்னார், அப்படிச் சொன்னார் என்று சொல்லுவதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அது குறித்து உங்களுடைய ஆணையை எதிர்பார்க்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தவித குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. தொழிற்சங்க நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். தனியாக அவர் இன்னின்ன குற்றங்களைச் செய்தார் என்று சொன்னால், அதற்குப் பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலை வரும். அவர் அப்படி குற்றச்சாட்டுகளைச் சொல்லவில்லை. ஆகவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 25 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் பேச ஆரம்பித்தால், மற்ற உறுப்பினர்களுக்கு நேரம் இருக்காது. இன்னும் 5 மாண்புமிகு உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் 25 நிமிடம் பேசினால் இன்னும் 3 மணி நேரமாகும். ஆகவே சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையைப்பற்றிப் பேச வேண்டுமென்பதற்காகத்தான் நான் மற்ற துறை கொள்கை விளக்கக் குறிப்பில் பேச பெயர் கொடுக்கவில்லை. அடுத்தபடி

(பிற்பகல் 7-10)

யாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு என்று ஒரு போர்டு இருக்கிறது. அதிலே தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மற்றும் முதலாளிகள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் இவர்கள் எல்லாம் கலந்துகொண்டு மாநிலத்தில் உள்ள தொழிலாளர்கள் பிரச்சினை பற்றிப் பேசுவார்கள். அதற்காக என்று அந்த போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வது? சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இங்கே இருக்கிறார்கள். அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த போர்டிலே சட்டசபை உறுப்பினர்களும் பங்கேற்றுப் பேசலாம். இந்த மாநிலத்திலே தொழிலாளர்களைப்பற்றி எழக்கூடிய பிரச்சினைகளைப் பற்றி தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் பேசுவதற்கு வாய்ப்புண்டு. இந்தக் குழு 1978-லே மே மாதத்திலேதான் கூடிற்று. அதற்குப் பிறகு இதுவரையில் ஒரு வருட காலமாகிறது என்பதைத் தெளிவாகச் சொல்கிறேன். 1978-ல் மே மாதத்தில் இராஜாஜி மண்டபத்தில்தான் கூடியது. அதற்குப் பிறகு கூடவே இல்லை. அந்தக் கூட்டத்தை மீண்டும் கூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்வதென்றால், எல்லோரும் கூடிப் பேசுவதற்கு இந்தக் கூட்டத்தைக் கூட்டுவது வாய்ப்பாக இருக்கும். அந்தக் கூட்டம் இதுவரையில் கூட்டப்படவில்லை. தொழிற் சங்கப் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் இவர்களெல்லாம் ஜனநாயக ரீதியில் கலந்துகொண்டு பேசுவதற்கு என்று இந்த போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இவ்வளவு சிக்கல்கள் இருந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்தில்கூட அமைச்சர்கள், எதிர்க் கட்சியினர், தொழிலாளர்கள் பிரதிநிதிகள், உறுப்பினர்கள் எல்லாம் கூடிப் பேசவில்லை. இந்த அமைப்பு கூட்டப்படவில்லை. அதை ஏன் கூட்ட வில்லை என்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி அவையிலே பேசுவதென்றால், மிகவும் சுருக்கமாகப் பேசவேண்டியிருக்கிறது. அங்கே பேசும் போது மணிக்கணக்கில் பேச முடியும். அந்தக் கூட்டத்தை அமைச்சர் அவர்கள் மறுபடியும் ஏன் கூட்டவில்லை என்பதைத்தான் நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைப்பற்றிக் கேட்க விரும்புகிறேன். ஸ்டாடிஸ்டிக்ஸ் இலாகாவிலே ஒரு அம்மையார் இருக்கிறார்கள். டைரக்டர் ஆப் ஸ்டாடிஸ்டிக்ஸ். அவர்கள் டி. ஏ. வாங்குகிறார்கள். இங்கேயும் வாங்குகிறார்கள். ஆந்திரா கவர்ன்மெண்டிலும் வேன் வாங்கி உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே இங்கே பில் போட்டு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் குற்றச்சாட்டு.





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, இப்போது பேசுவது லேபர் மானியம் பற்றியதுதான். ஸ்டாடிஸ்டிக்ஸ் பற்றியது அல்ல. குற்றம் சாட்டப்பட்டவர்கள் இங்கே வந்து பேச முடியாது. அதைப்பற்றி இங்கே பேசுவது ஏற்கக்கூடியது அல்ல.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விஷயம் இதற்குத் தொடர்பு இல்லாதது என்று சொல்கின்றார்கள். இந்த விஷயத்தைப்பற்றிப் பொதுப்படையாக இங்கே பேசுகின்ற போது அதைக் குறிப்பிட்டுக் கேட்கலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அதைப்பற்றி இப்போது பேசக்கூடாது. இருந்தாலும் அதைப்பற்றிய தகவல் தரவேண்டுமென்றால், என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம் என்பது பற்றிச் சொல்லலாம். தொடர்பு இல்லாததைப்பற்றி இப்போது கேட்கிறார்கள் என்பதற்காக யோசிக்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** அமைச்சர் அவர்கள் அதைப்பற்றிச் சொல்வதற்கு ஒப்புக்கொண்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதனாலேயே அமைச்சர் அவர்கள் தகவல் தரவேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அதுபற்றித் தகவல் கேட்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பொதுவாகப் பேசுகின்ற போது, அங்கத்தினர் அவர்கள் அதைப்பற்றிக் கேட்கலாம். அமைச்சர் அவர்களும் அதைப்பற்றித் தகவல் தரலாம். அந்த நேரத்தில் பதில் சொல்லிக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது மேற்கு வங்காள கவர்ன்மென்டை நாம் பின்பற்றுகிறோம் என்று சொல்கிறார்கள். அவர்களைப் போல் தொழிலாளர்கள் நலனுக்கு, அவர்களுக்குச் சாதகமாகச் சட்டங்கள் போடுவதில் அக்கறையுடன் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கேற்ப சட்டங்களை எல்லாம் எப்படித் திருத்தலாம் என்று மறு பரிசீலனை பண்ணுவதற்கு என்று ஒரு கமிட்டிகூட போடுவார்கள். இப்படிச் செய்வதைத்தான் அரசு பெரிய காரியமாகச் சொல்கிறார்கள்

அதையே காரணம் காட்டி வெஸ்ட் பெங்கால் கவர்ன்மென்டோடு போட்டி போடுகிறோம் என்று சொல்கிறார்கள். இந்த அரசு செய்கின்ற காரியங்களைப் பார்த்தால், அப்படி ஒன்றும் தொழிலாளர்களுக்காக இருக்கின்ற புரோகிரசிவ் கவர்ன்மென்டாக இல்லை. நாம் எதைப் பார்க்க முடிகிறது? டௌண்ட் டிராடன், விக்கர் செக்ஷன்ஸ் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக ஸ்ட்ரைக் செய்கின்றார்கள். ஆக்டில் உள்ளபடி செய்கிறார்கள். ஆனால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அரசாகத்தான் இருக்கிறது. இன்னொரு விஷயத்தைப்பற்றிச் சொல்லிக்கொள்கிறேன். வெஸ்ட் பெங்காலில் நடைபெற்ற வேலை நிறுத்தம்பற்றிச் சொல்லிக்கொள்கிறேன். அங்கே தொழிலாளர்கள் பிரச்சினைக்காக தொழிலாளர்கள் போராட்டம் வந்தது. தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் என்று அறிவித்திருந்தார்கள். அவர்கள் அக்ரிமெண்டில் உள்ளபடி சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் என்பதற்காக வேலை நிறுத்தம் செய்தார்கள். சணல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். நாற்பது நாட்கள். வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அங்குள்ள சணல் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்த போது, அதைத் தடுக்க குண்டர்களை அனுப்பியிருந்தார்கள். தலைவர் திரு. ஜோதி பாசு அவர்கள் தொழிலாளர்களுக்கு, 'உங்கள் பக்கம் நியாயம் இருக்கிறது. அது நியாயமான கோரிக்கையாகும். நீங்கள் வேலைநிறுத்தம் செய்யும்போது உங்களுக்கு எதிராக வரமாட்டார்கள்' என்று சொல்லியிருந்தார்கள். அங்கே வேலைநிறுத்தம் தடையில்லாமல் நடைபெற்றது. தொழிலாளர்கள் ரூ. 67 சம்பள உயர்வு பெற்றார்கள்.

ஆனால் நம் தமிழகத்தில் டி.வி.எஸ். தொழிலாளர்கள் சம்பள உயர்வு கேட்டும், மற்ற பிரச்சினைகளுக்காகவும், சி.அய்.டி.யு. கூட்டம் போட்டால், அதற்கு 144 சட்டம் போடுவதாகச் சொல்கிறது அரசு. அங்கு குண்டர்களை வைத்துத் தடுத்திருக்கிறார்கள். அவர்கள் அங்கே கூட்டத்தைக் கலைக்க வருகிறார்கள். அந்த இடத்தில் 144 சட்டம் போட்டு கூட்டம் போடக்கூடாது என்று சொல்கின்றார்கள். இங்கே வெஸ்ட் பெங்கால் பற்றிப் பேசி என்ன பிரயோசனம்? அவர்கள் இடத்தைப் பிடிக்க நம் அரசுக்கு ஏணி வைத்தாலும் எட்டாது என்று சொல்கிறேன். அங்கே 75 ஆயிரம் ஒர்க்கர்ஸ், டெக்ஸ்டைல் ஒர்க்கர்ஸ், பிரஸ் ஊழியர்கள், இன்ஜினியரிங் ஒர்க்கர்ஸ், ஏறத்தாழ 2 லட்சம் பேர்கள் ஸ்ட்ரைக் செய்திருக்கிறார்கள். அங்கே அவர்கள் சமுதாயத்திற்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டதாக அரசு கருதவில்லை. வீக்கர் செக்ஷனாக இருக்கின்றவர்கள் பக்கத்தில் நிற்கவேண்டியதாக இருக்கிறது. இரண்டு பக்கமும் பார்க்கிறோம் என்று சொன்னால் அவர்களுக்கு நம்பிக்கையே இல்லாமல் போய்விடுகிறது.



தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு உரிமை பெற்றிருக்கின்றார்கள். அந்த உரிமையைத் தான் பயன்படுத்துகிறார்கள். அப்படி வேலை நிறுத்தம் செய்யும்போது குண்டர்களை அனுப்புகிறார்கள் முதலாளிகள். அரசாங்கம் முதலாளிகளுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுப்பதாக இருக்கின்றது. ஆனால் வெஸ்ட் பெங்கால் அரசு போலீஸ் பாதுகாப்பை தொழிலாளர்களுக்குக் கொடுக்கிறது. அங்குள்ள அரசு தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கையை உடைக்கவில்லை. அங்கு சம்பள உயர்வு தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூபாய் 67 வரையில் சம்பள உயர்வு பெற்றிருக்கிறார்கள். அங்கே தொழிலாளர்கள் சீர்குலையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிம்கோ மீட்டர்ஸ் தொழிலாளர்கள், 1,700 பேர்கள், போராட்டம் நடத்தினார்கள். ரூபாய் 4-லிருந்து ரூ. 6 வரை சம்பள உயர்வு பெறுவதற்கு போராட்டம் 130 நாட்களுக்கு நடத்தியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் 12 (3) விதிப்படி ஒப்பந்தம் செய்துவிடுகிறார்கள். தொழிலாளர்கள், அமைச்சர் அவர்களை '12 (3) அமைச்சர்' என்று சொல்கின்றார்கள். அவர் தொழிலாளர்களைப் பாதுகாப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த 12 (3) ஒப்பந்தம் மெஜாரிட்டிக்குப் பாதகமாகப் போனாலும் போகலாம், மைனாரிட்டி ஒர்க்கர்சுக்குச் சாதகமாக இருக்கலாம், அவர்கள் ஜெயித்தாலும் ஜெயிக்கலாம். ரகசிய வோட்டெடுப்பின் மூலமாக அந்த ஒர்க்கர்களை ஒத்துக்கொள்ளச் செய்கிறார்கள். ஒப்பந்தத்தைப் போட்டுவிடுகிறார்கள். சுமார் 130 நாட்களுக்கு சிம்கோ ஊழியர்கள் வேலையில்லாமல் இருந்தார்கள். டி.அய். சைக்கிள்ஸ் ஊழியர்கள் ஸ்ட்ரைக்கில் இருந்தார்கள். பட்டினி கிடந்தார்கள். அவர்களுக்கு 12 (3) ஒப்பந்தம் வந்தது. இப்படிப்பட்ட அக்ரிமெண்டைத்தான் அமைச்சர் அவர்கள் போட்டிருக்கின்றார்கள். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பட்டினி இருக்கின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. இந்த வீக்கர் செக்ஷனுக்கு என்ன செய்கிறார்கள்? அதனால்தான் சொல்கிறேன், மேற்கு வங்காள அரசாங்கத்திற்கு ஏணி வைத்தாலும், இந்த அரசு எட்ட முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழகத்திலுள்ள தொழிலாளர்கள் நலனை அரசு கவனிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிலாளர் முன்னேற்றம், வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் அளித்துள்ள தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கைவிளக்கக் குறிப்பின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் பெரும்பான்மையோராக உள்ள தொழிற்சங்க

(திரு. சி. இராமலிங்கம்) [1979 ஏப்ரல் 23

அமைப்பின்கீழ் வராத தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு குறைந்த அளவு ஊதியமும், நல்ல வாழ்க்கைத்தரமும் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, சட்டவழி பெற்ற அறிவிப்பின் மூலமும், சிறப்பு நடவடிக்கைகள் மூலமும் ஏற்பாடுகள் செய்வதில் இந்த அரசு சிறப்பு நாட்டம் செலுத்தியது என்று சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பு ஏற்ற பிறகு தொழிலாளர் நல அமைச்சராகப் பொறுப்பு ஏற்றுள்ள மாண்புமிகு திரு. இராகவானந்தம் அவர்கள் மற்றத் தொழிலாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்ததைப் போல, கைத்தறித் தொழிலாளர்களுக்கும் ஊதிய நிர்ணயம் செய்வதற்குச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்ற பெருமுயற்சியிலே இறங்கியிருக்கிறார்கள். நெசவாளத் தொழிலாளர்களை அந்தச் சட்டத்திற்குள் கொண்டுவர வேண்டுமென்று நீண்ட நாட்களாக முயற்சி செய்து கொண்டு வந்திருப்பதற்காக மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள் சார்பிலே பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 7-20)

அந்தக் குறையை இன்றைக்கு புரட்சித் தலைவரவர்களுடைய அரசு போக்கியிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல விசைத் தறியிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கும் சட்டப் பாதுகாப்பு கொடுத்து, அவர்களுக்கும் கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தங்களை, அவ்வப்போது முன் நின்று, பேச்சுவார்த்தைகளின் மூலம் இந்த அரசு தீர்த்துவருகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அது பற்றிப் பேசினார்கள். தொழிலாளர்களுக்கு விரோத அரசு என்று சொன்னார்கள். ஒரு கைத்தறி நெசவுத் தொழிலாளியாகிய நான், இங்கே ஒரு உறுப்பினராக, எம்.எல்.சி.-யாக வந்திருக்கிறேன். ஏன் இதை நான் பெருமையோடு சொல்கிறேன் என்றால், புரட்சித் தலைவரவர்களுடைய அரசு தொழிலாளர்களின் அரசுதான் என்பதற்காகத்தான் அப்படிச் சொல்கிறேன். மேற்கு வங்கத்திலே சீதோஷ்ண நிலைமை, மக்களின் உணவு நிலைமை போன்றவற்றுக்கும், நமக்கும் வேறுபாடு இருக்கிறது. அவர்களைப் பார்த்து நாம் 'காப்பி' அடிக்கவில்லை. தமிழகத்தில் ஒருவரும் அவர்களைப் பார்த்துக் காப்பி அடிக்கவில்லை. என்னைக் கேட்டால், இங்கேயே எல்லா வசதிகளும் இருக்கின்றன. மேற்கு வங்கத்தில் தொழிலாளர் தகராறுகள், தொழிற் சங்கத்தை அமைக்கும் விதம், தொழிற் சங்க அமைப்புகள் எவ்வாறு



1979 ஏப்ரல் 23] [திரு. சி. இராமலிங்கம்]

இருக்கின்றன என்பதைப் பார்த்து தொழிற் தகராறுகளையும், தொழிற் சங்கங்களையும், தொழிலாளர் அமைப்புகளையும் இந்த அரசு நடத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெசவாளர்களுக்காக, தொழிலாளர்களுக்காக எத்தனையோ சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் தொழில் பாதுகாப்பு என்கின்ற முறையிலே எங்களுக்கும் தொழிலாளர் நலச் சட்டம், தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம், தொழிலாளர் முன்னேற்றச் சட்டம் என்று கொண்டு வந்து, ஓய்வு ஊதியத்தையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு நிறைய தையல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யப்படவில்லை. ஒரு இடத்தில் சட்டை தைக்க மூன்று ரூபாய் வாங்குகிறார்கள், இன்னொரு இடத்தில் 13 ரூபாய் வாங்குகிறார்கள். பேண்ட் தைக்க 25 ரூபாய் வாங்குகிறார்கள். எனவே அந்தத் தொழிலாளர்களுக்கும் கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்ற நிலையில் சலவைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஒரு இடத்தில் ஒரு பேண்ட் சலவை செய்ய 1½ ரூபாய் வாங்குகிறார்கள். இன்னொரு இடத்தில் 2½ ரூபாய் வாங்குகிறார்கள். எனவே அவர்களுக்கும் கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று முடி திருத்துவோருக்கும் கூலி நிர்ணயம் செய்யப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கும் அந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தோல் பதனிடும் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், ஓட்டல் தொழிலாளர்கள் அனைவருக்கும் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் எந்த ஓட்டல் முதலாளியும் சட்டப்படி சம்பளம் கொடுப்பதில்லை. அவர்கள் எல்லாவற்றையும் சுரண்டிக்கொண்டு, பணக்காரர்களாகி விடுகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களையும் இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவந்ததற்காக அரசுக்கும், அமைச்சரவர்களுக்கும் நன்றி கூறி, முடிக்கிறேன்.

* **திரு. ப. மாணிக்கம் :** துணைத் தலைவரவர்களே, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை குறித்த கொள்கைக் குறிப்பிலே, தமிழக அரசு தயாரித்து வைத்திருப்பதிலே, விவரங்கள் கோர்வையாகத் தரப்பட்டிருக்

(திரு. ப. மாணிக்கம்) [1979 ஏப்ரல் 23

இன்றன. விவரங்கள் தருவதைப்பற்றி ஒரு கருத்தோட்டம் உண்டு. கருத்தோட்டத்தில் நிலையான கோட்பாடுகள் உண்டு. விவரங்களைக் குறிப்பிடும்போது, கருத்தோட்டத்திற்கு ஏற்றவாறு, 'பேக்ட்ஸ் ஆர் அர்ரேன்ஜ்டு ஆஸ் பெர் வியூ பாயின்ட்ஸ்'—அந்த முறையிலே அரசு விவரங்களைத் தொகுத்துத் தருகிறது. அதனுடைய கருத்தோட்டம், தொழிலாளர்களுடைய நலன்களுக்காகப் பாடுபடுவதோடு, வேலை வாய்ப்புக் களைக் குறித்து முறையாகக் கவனிப்பதாகவும் கூறுகிறது. இதனுடைய பல்வேறு விவரங்களுக்குச் சென்றால், வாழ்க்கையில் என்ன நடக்கிற தென்றால் எழுதியிருப்பது ஒன்று, வாழ்க்கையிலே நடப்பது மற்றொன்று. அந்த விவரங்களுக்குச் சென்றால், வேறுவிதமாக இருக்கும். அதுபற்றி விரைவாகக் கூறிவிடலாமென்று நினைத்து, சில அம்சங்களை மட்டும் கூற விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பல்வேறு விவரங்களைக் குறிப்பிட்டார்கள். அரசு, வரக்கூடிய ஆண்டில் என்ன செய்யப் போகிறது என்பதற்கு பல்வேறு யோசனைகளைக் கூறியிருக்கிறது. சென்ற ஆண்டு அனுபவத்திலிருந்துதான் அடுத்த ஆண்டு எப்படி நடக்குமென்று யூகிக்க முடியும். தொழிலாளர் நலக் கொள்கை என்பது, முற்றிலும் இந்த ஆண்டு மாறுபட்ட கொள்கையாக வருமென்று கூறவில்லை. ஒரு கொள்கையின் தொடர்ச்சியாகத்தான் இது அமைந்திருக்கிறது. சென்ற ஆண்டு இயற்கையின் சீற்றம் விவசாயிகள்மீது இருந்தது, தமிழக அரசின் சீற்றம் தொழிலாளர்களின்மீது இருந்தது. அதுதான் சென்ற ஆண்டு அனுபவம். இது இல்லை என்று மறுக்கக்கூடிய அளவிற்கு, அரசு சீற்றமே அடையவில்லை, தொழிலாளர்கள் பிரச்சினையை அரசு சீர்படுத்தியது என்று கொள்கைக் குறிப்பு கூறுகிறது. இது உண்மைக்குப் புறம்பானது. உண்மையை மறைக்க வாதங்கள், விவரங்கள் கூறலாம். ஆனால் இறுதியில் உண்மைதான் வெல்லும். அந்த இறுதி எப்போது என்றால், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு என்பதுதான். அப்போது உண்மை வெல்வதை நிச்சயமாகப் பார்க்கலாம். அதுமட்டுமல்ல. இந்த அரசு கையாண்டு வந்த கொள்கையைத்தான் இனியும் கையாளப் போகிறது. அந்தக் கொள்கையை மாற்றாது. மாற்ற நிர்ப்பந்தம் வரும்போதுதான் மாற்றும். புதிய சிந்தனை தோன்றியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கூறினார்கள். அது வெறும் சிந்தனை. செயலில் வந்தால்தான் நம்ப முடியும். நல்லதை நம்புவோம், நல்லதை எதிர்பார்ப்போம் என்று தியரியாகச் சொல்லியிருக்கலாம். வாழ்க்கையில் நடப்பதை வைத்துத்தான் நம்ப முடியும். தொழிலாளர்கள்மீது சீற்றம் மட்டுமல்ல, கடந்த ஓராண்டு பூராவும் இருந்த நிலை, வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து இருக்கும். அரசு என்ன செய்கிறது? பல ஆண்டுகளாக உயிரைக் கொடுத்துக் கட்டிய சங்கங்களைப் பிளக்கிறது.



1979 ஏப்ரல் 23] [திரு. ப. மாணிக்கம்]

அதுமட்டுமல்ல. இரு முனைத் தாக்குதல் நடத்துகிறது. முதலில் பிளப்பதும், பிறகு அவர்களை அழிக்க முற்படுவதும்தான் அது. அரசு அதிகாரத்தை வைத்துக்கொண்டு, தங்களுக்கு வேண்டியவர்களை சங்கம் அமைக்கச் சொல்லி, போட்டிச் சங்கங்களை உருவாக்குகிறது. நான் இது குறித்து விரிவாகப் போகவில்லை. அய்வர் குழு என்பது இதுவரையிலே தொழிற் சங்க வரலாற்றிலேயே கிடையாது. இந்தியாவில் தொழிற் சங்க இயக்கம் துவங்கப் பட்ட இடம் சென்னைதான். அன்னி பெசன்ட் காலத்திலிருந்து பல பேர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். திரு.வி.க., திரு. சர்க்கரைச் செட்டியார், திரு. ஸ்ரீனிவாச ஐயங்கார் போன்றவர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். மறைந்த முன்னாள் முதல்வர் அண்ணா அவர்கள் முதன்முதலில் தொழிற் சங்கத் துறையிலே வேலை செய்தவர்கள்தான். மேயர் வாசுதேவ் அவர்களோடு சேர்ந்து அண்ணா தொழிற் சங்கப் பணிகளில் ஈடுபட்டார். பின்னர்தான், அந்தத் துறையை விட்டுவிட்டு வேறு துறைக்குச் சென்றார். அப்படி வளர்த்த தொழிற் சங்கங்களைப் பிளந்துவிடலாமென்ற கொள்கையைக் கையாண்டு, பிளந்தார்கள். ஆனால் அழிக்க முடியாது. அதற்கு மாறாக வேறு விளைவுகள் தான் அதனால் ஏற்படும். இன்றைக்கு அதை நான் சொல்ல விரும்பவில்லை. அரசியலிலே சொல்லுவார்கள். ஆளுகின்றவர்களுக்கு 'Fatal behaviour' இருக்குமென்று. அதை மாற்றிக்கொள்ள முடியாது. வரலாற்றிலே சொல்லு கிறார்கள், ரோமானிய சாம்ராஜ்யம் எதனால் அழிந்தது என்றால், "த்ரூ லெட் பாய்சனிங்" என்று. அது அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கிறது அமெரிக்க வரலாற்று ஆசிரியர்களும் அப்படிக் கூறுகிறார்கள். ஏதோ ஒரு கோளாறு ஏற்பட்டிருக்கிறது, அதனால்தான் இந்த பிளப்புக் கொள்கை அதுமட்டுமல்ல, கடந்த 30 ஆண்டுகளில், இந்த மாதிரிக் கொடுமைகள் தொழிலாளர்களுக்கு நடந்ததில்லை. இதிலே இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று காவல் துறையின் தாக்குதல். இன்னொன்று, ஏவிவிடப் பட்ட வன்முறையாளர்கள் பகிரங்கமாகத் தாக்குவது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, ஒன்றைச் சொல்ல மறந்து விட்டார்கள். டி.வி.எஸ். பாக்டரி வாசலில் சிவகுமார் என்ற தொழிலாளி வெட்டப்பட்டார். அதை டி.எஸ்.பி. பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர், வெட்டிய குற்றவாளியைப் பார்த்து, நீ போய்விடு, ஆபத்து என்று சொல்லுகிறார். காவல் துறை எந்தக் கோட்பாட்டிற்காக அமைக்கப் பட்டிருக்கிறது? உயிரையும், பொருள்களையும் காப்பாற்ற வேண்டுமென்பதற் காகத்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. வழக்கமாக கம்யூனிஸ்டுகள் வன்முறையாளர்கள் என்கிறார்கள். அந்தப் பட்டத்தைச் சுமந்து கொண்டே இருக்கிறோம். ஏசுநாதர் எப்படி முள் முடி தரித்திருந்தாரோ, அப்படி நாங்கள் இந்தப் பட்டத்தை தரித்திருக்கிறோம். ஏனென்றால் இறுதியில்

உண்மை வெல்லும் என்பதால்தான். சிவகுமார் வெட்டப்பட்டார், காவல் துறை அதிகாரிகளுக்கு முன்னால். ஆனால் காவல் துறையினர் அதைத் தடுக்க முடிந்ததா? எத்தனை ஊர்களில் தொழிலாளர்கள் அடிக்கப்பட்டார்கள், அடித்தது யார்? இப்படிப்பட்ட கொடுமைகள் எங்கும் நடந்ததில்லை. டி.ஐ. சைக்கிள் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் கம்பல்சரி டிபாசிட்டில் பிடித்த பணத்தை மத்திய அரசிடம் வாதாடிப் பெற்றதை, மாநில அரசு அப்பணத்தை பாக்டரி நிர்வாகத்திடம் தந்தது. அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, ஊர்வலம் போனபோது, அந்தத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டார்கள். அவர்களைத் தாக்கிவிட்டு, அதே நேரத்தில் சென்னை நகரத்தில் முக்கியமான இடமான குறளகத்திற்கு முன்னால் தோழர் ஹரிபட் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது, அங்கிருந்தவர்கள் மீது கல் எடுத்து விலாவில் எறிந்தார்கள். அப்படிப்பட்ட கொடுமைகளை வேறு யாரும் செய்யவில்லை. அடித்தது யார்?

(பிற்பகல் 7-30)

எவனோவா? அரசு பல காரணங்களைச் சொல்லிப் பார்க்கலாம். ஆனால் அடித்தவர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள். உண்ணாவிரதக் கொட்டகைக்கு தீவைத்தார்கள். ஒரு அரசு எதற்காக இருக்கிறது? சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் தவறில்லை. உண்ணாவிரதம் இருக்கப்போகிறார்களா, உண்ணாவிரதத்தைத் தடை செய்யலாம் அல்லது உண்ணாவிரதம் இருப்பவர்களைக் கைது செய்யலாம். அப்படிச் செய்வது சட்டம், தொழிலாளர்களை அடிப்பது, கொட்டகைக்குத் தி வைப்பது எல்லாம் முறை தானா? வஞ்சகமாக இதையெல்லாம் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் செய்தார்கள். வாழ்க்கையில் நடக்க வேண்டியது வேறு. நடந்திருப்பது வேறு விவரங்களை ஆட்சியிலிருப்பவர்கள் அவர்களுடைய இஷ்டம்போல் கொடுத்திருக்கிறார்கள். இருமுனைத் தாக்குதல் சரியான முறை அல்ல. இந்தக் கொள்கை ஆட்சியாளர்களை அழித்துத் தின்று விடும். கெட்ட எண்ணத்தில் அரசியல் போட்டியால் இதை நான் சொல்லவில்லை. எந்த வன்முறையாளர்களை இன்றைக்குத் தொழிலாளர்களை அடிக்கவும், அவர்களுடைய கொட்டகைக்குத் தி வைக்கவும் ஆட்சியாளர்கள் உபயோகப்படுத்துகிறார்களோ, அதே வன்முறையாளர்கள் பின்னால் அரசியலில் இருப்பவர்களை மிரட்டுவார்கள். கடந்த காலத்தில் என்ன நடந்திருக்கின்றது என்பதை ஆட்சியாளர்கள் மறந்துவிடக் கூடாது. அந்த அனுபவம் ஆட்சியிலிருப்பவர்களுக்குத் தெரியும். அமைச்சர்களையும் அரசியல் தலைவர்களையும் கூட அவர்கள் மிரட்டுவார்கள். இன்றைக்கு ஆட்சியிலிருப்பவர்கள் வெகு சீக்கிரம் இந்த மாதிரியான அணுகுமுறையை விட்டுவிட வேண்டும். இந்தக்



கொள்கையை ஆளும் கட்சியினர் மாற்றிவிட வேண்டும். அப்படி அவர்கள் மாற்றாவிட்டால், தமிழ் நாட்டிலுள்ள தொழிலாளர்களாகச் சேர்ந்து மாற்ற வைப்பார்கள், மாற்றி விடுவார்கள். இந்த ஆண்டு மாற்றாவிட்டால், அடுத்த ஆண்டு நிச்சயமாகத் தொழிலாளர்கள் ஆளும் கட்சியினரை மாற்றிவிடுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவிற்கு தொழிலாளர் நல அமைச்சர் தலைவராவார். இதில், தொழிலதிபர்கள், தொழிலாளர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள், 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 15 ஆம் நாள், 1978 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4 ஆம் நாள் ஆகிய, நாட்களில் கூடி தொழில் உறவுகள் சம்பந்தமான பல்வேறு பொருட்கள் குறித்து விவாதித்தது" என்று மாநில தொழிலாளர் நல ஆலோசனைக் குழுபற்றி கொள்கைக் குறிப்பு கூறுகிறது. இந்த இந்த நாட்களில் தொழில் உறவு சம்பந்தமாக விவாதித்ததில் அது முற்றுப்பெற்று விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு எங்கும் போக வேண்டாம். இந்த அறிக்கையைப் படித்தாலேயே போதும். எந்த ஆர்கியூமென்டாக இருந்தாலும், நீதிபதிகளைப் பொறுத்தவரை அவர் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டால் எந்த வழக்கும் வெல்லாது. அது போன்றுதான் அரசும் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு என்று பெயரிட்டிருக்கிறார்கள். ஒரு குழு என்றால் மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது கூடுவதுதான் முறை. ஒன்பது மாதங்களாக அது கூடவில்லை. குழு கூடாததற்குக் காரணம் எதுவுமே கிடையாதா? அதுதான் சிதம்பர இரகசியம். ஒரு சிவ வாக்கு உண்டு. இருந்ததனை இருந்தபடி இருந்திக் காட்டினார் சிவ பெருமான் என்பது சிவ வாக்கு இன்றைக்கு ஆட்சியிலிருப்பவர்களுக்கு விளக்கம் தரத் தெரியும். இருந்ததனை இருந்தபடி செய்து காட்டுவதுபோல் ஆட்சியில் இருப்பவர்களால் விளக்கம் தர முடியும். 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் தேதி குழு கூடியது. மறுபடியும் மே மாதம் 25 ஆம் தேதி குழு கூடியது. அதற்குப் பிறகு மறுபடியும் 1978 ஜூலை 4 ஆம் தேதி கூடியது. இரண்டு மாத இடைவெளிக்குள் குழு கூடியிருக்கிறது. இரண்டு மாதம்கூட இல்லை, 1¼ மாத இடைவெளியில் குழு கூடியிருக்கிறது. அதற்குப் பிறகு அந்தக் குழு கூடவேயில்லை. என்ன விவகாரம்? அந்தக் குழுவில் ரொம்ப எதிர்ப்பு இருந்தது. ஜூலை 4 ஆம் தேதி என்ன நடந்தது? ஜூலை 4 ஆம் தேதி நடைபெற்ற குழுக் கூட்டத்தில் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் ஆட்சியிலிருப்பவர்களை மடக்கினார்கள். தட்டிக்கேட்டார்கள். அதனால்தான் அதற்குப் பிறகு அரசு தரப்பில் அந்தக் குழுக் கூட்டத்தைக் கூட்டவில்லை. ஜனநாயக முறைப்படி பார்த்தால் இது

சரியில்லை. எதற்காக, எந்த நோக்கத்திற்காக அந்தக் குழுவை நியமித்தார்கள்? அந்த நோக்கம் நிறைவேறியதா? ஆட்சியிலிருப்பவர்களுக்கு இஷ்டம் இல்லை என்பதால் விட்டு விட்டார்கள். இது 1979 ஆம் ஆண்டில் கையாளப்படக்கூடிய ஒரு அணுகுமுறை அல்ல. அந்தக் குழு கூட்டப்பட்டிருந்தால், குறைகளைச் சொல்லலாம். திருத்தம் செய்யலாம். வள்ளுவர் திருத்திக்கொள்வதுபற்றி பல குறள்களைக் காட்டியிருக்கிறார். வள்ளுவர் கூறியபடி, இன்றைக்கு இருக்கக்கூடிய விவகாரங்களை, தவறுகளைத் திருத்தி விட முடியுமா என்பது பற்றி ஆட்சியிலிருப்பவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல, பேக்டரி ஆக்ட் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பேக்டரி ஆக்டில் குழந்தைகள் சம்பந்தமான சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் சரியாகப் பின்பற்றப்படுகிறதா? சிவகாசி தீப்பெட்டித் தொழிற்சாலையில் நடந்த விபத்திற்குப் பிறகு கூட அந்தக் குழந்தைகள் சம்பந்தமான சட்டங்கள் மீறப்பட்டிருக்கின்றன. பேக்டரி ஆய்வாளர், மாவட்ட ஆட்சியர் கூட இதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட வேதனைப்பட்டார்கள். பிறகு வந்து பார்த்தார்களா? நான் கட்சி உணர்வோடு இதைச் சொல்லவில்லை. பகிரங்கமாக அந்தச் சட்டம் மீறப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இதேமாதிரித்தான் தொழிற் சங்க நல சட்டங்களையும் அமுல் படுத்துகிறார்கள். ரெக்கார்ட்டில்தான் அமுல்படுத்துகிறார்கள். நடைமுறையில் நடைபெறுவது வேறு. ஒருவனை அடித்துக் கொன்று விட்டு விவரங்களைச் சொல்லி ஏதோ சூழ்நிலையில் இறந்து விட்டான் என்று தயாரிக்கிறார்கள். விவரங்களைத் தயாரிப்பதற்கென்றே நிரம்ப அனுபவம் உள்ளவர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். அனுபவமிக்க வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களால் எதையும் தயாரிக்க முடியும். நடக்காததை நடந்து விட்ட மாதிரி செய்ய முடியும். அரசாங்கம் நிறைவேற்றுகின்ற, கையாளுகின்ற கொள்கைத் திட்டங்களைப் பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடவில்லை.

அறிக்கையில் விவரங்களை மறைக்கின்றார்கள். இன்னொரு அம்சத்தை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். பல புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். தொழில் தகராறுகள்பற்றி ஒரு புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். அதில் வரப்பெற்ற புகார்கள், தகராறுகள் ஆகியவற்றின் எண்ணிக்கை, புலனாய்வு செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை, இணக்க முறையில் தீர்க்கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை, நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை, மற்றும் சமரசத்திற்கு





விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை இப்படிப்பட்ட புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. Statistics are dry என்று சொல்லுவார்கள். அதுபோல் விவரங்களைச் சொன்னால் அது வறட்டுத்தனமாக இருக்கும். புள்ளிவிவரங்கள் பேசுகின்றன என்று சொல்லுவார்கள். புள்ளிவிவரங்களுக்குப் பின்னால் உள்ள விவரங்கள்பற்றித் தெரிந்தால்தான் அது சுவையாக இருக்கும்.

இன்னும் இதற்குப் பின்னால் உள்ள சில விவரங்கள்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அது அமைச்சர்களுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் மட்டும் தெரிந்த உண்மை அல்ல. இந்தியா பூராவும், தமிழ் நாடு பூராவும் உள்ளவர்களுக்குத் தெரிந்த உண்மைகள். அதைப்பற்றியும் வேண்டுமானால் வாதம் செய்யலாம். வாதம் செய்வதன் மூலம் அவற்றை மறைத்துவிட முடியாது. பல்லவன் போக்குவரத்துக் கழகம், டி.வி.எஸ். போன்றவற்றில் என்ன நடந்தது? டி.ஐ. சைக்கிள் பாக்டரியில் ஒன்பது மாதத்திற்கு மேல் பட்டினி போட்டார்கள். தொழிலாளர்கள் துன்பப்பட்டார்கள். பட்டினி கிடந்தார்கள். சிம்கோவில் என்ன நடந்தது? அதெல்லாம் மறந்து போய் விட்டது. டால்மியாபுரம் தொழிலாளர்களை பட்டப் பகலில் அடித்த கொடுமைகள் மறந்து போய் விட்டதா? தொழில் தகராறுகள் சட்டத்தைத் திருத்தம் செய்யப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அறிக்கையைப் படித்துப் பார்ப்பவர்களுக்குத் தெரியும். ஆங்காங்கு தொழிலாளர்களுக்கு நடந்த கொடுமைகளை எண்ணிப்பார்க்க வேண்டும். கொடுமைகளை வர்ணிப்பதுபற்றி அரசாங்கக் கொள்கைக் குறிப்பில் வர வேண்டாம். அது பத்திரிகைகளில் வரலாம். அங்கெல்லாம் அரசாங்கத் தலையீடு எப்படி இருந்தது? மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேற்கு வங்கத்தில் அப்படி நடக்கிறது, இப்படி நடக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதுபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. இராமலிங்கம் அவர்கள் மிகுந்த நல்ல எண்ணத்தில் கருத்துக்களைச் சொன்னார்கள். காப்பியடிக்கக் கூடாது என்று சொன்னார்கள். காப்பியடிப்பது என்றைக்கும் கெடுதல். ஆனால் நம் ஒரிஜினாலிட்டி இப்படி இருக்கவே கூடாது. காப்பியடிக்க வேண்டாம், ஆனால் நம்முடைய சுய சிந்தனை இப்படி இருக்கக் கூடாது. சுய சிந்தனை தமிழ் நாட்டிலே இப்படி செயல்பட்டதாக எடுத்துக்காட்ட முடியுமா? முடியாது. நம்முடைய சங்க இலக்கியத்தில், பழைய வரலாற்றில் இப்படி எங்காவது இருக்கிறதா? இல்லை. நம்முடைய சுய சிந்தனை இப்படிப் போகக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 7-40)

கடைசியாக பஞ்சாலைப் பிரச்சினையில் விவரங்களைப் பார்த்தால், தவறான கொள்கையைக் கையாண்டு வந்திருக்கிறார்கள்—பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே கொள்கை சரியில்லை. இதனால், இந்த இலாக்கா திறமையான தல்ல என்ற பொருள் அல்ல. அப்போதைக்கப்போது ஆட்சி மாறும். ஒரு கொள்கையிலே கொஞ்சம் நெளிவு, சுளிவு இருக்க வேண்டும். 1969, 1970-லே இருந்த கொள்கைக்கும், இன்றைக்கு 1979-லே இருக்கும் கொள்கைக்கும் மாற்ற வேண்டும். இன்றைக்கு மாற்றம் இருக்கிறதா? நடைமுறையிலே மாற்ற முடியுமா என்று பார்க்கவேண்டும் மாற்றுவார்களா என்று எனக்குத் தெரியாது

'எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச்' எப்படி வேலை செய்கிறது? அந்த அலுவலகங்களிலே வேலை செய்பவர்களைப்பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. அங்கே பதிவு பண்ணுகிறார்கள். மூன்று, நான்கு, ஐந்து ஆண்டுகள் காத்திருக்கிறார்கள். உண்மையிலேயே வேலை தேடுபவர்கள் மிகவும் திறமையானவர்கள். ஆனால் அங்கே என்ன நடக்கிறது என்று சொன்னால், நம்பரைக் குறித்து யார் சிபாரிசு செய்து அனுப்புகிறார்களோ அவர்களுக்குத் தான் வேலை அளிக்கப்படுகிறது. இந்தியிலே அவர்களை 'சக்திமான்' என்று சொல்வார்கள். அப்படி சக்திமான் என்று சொல்கிறார்களே அந்த வலிவுள்ளவர்கள் எழுதி அனுப்பினால்தான், வேலை கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது. இதற்கு, எவ்வளவோ ரூல்ஸ், சட்டம், விதிகள் எல்லாவற்றையும் சாதாரண மக்களுக்குச் சொல்கிறார்கள். ஆனால், நாம் அங்கே நடக்கின்ற அநீதிகளைப் பார்க்க வேண்டும். வேலை தேடித்தரும் அலுவலகங்களிலே மிகவும் மோசமான கொடுமைகள் நடக்கின்றன, உண்மையிலேயே திறமையுள்ளவர்கள், கெட்டிக்காரர்கள் தவிக்கிறார்கள். ஆகவே, இந்த நிலைகள் உடனடியாகப் போக்கப்பட வேண்டும். சென்ற ஆண்டு, வேறு பல மாநிலங்களில் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்க வழி செய்யப்பட்டிருப்பது போல, தமிழகத்திலே இருக்கும் இளைஞர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கப் போகிறோம், அதற்கான வழிகளைச் செய்யப் போகிறோம் என்று 'ஓவர்சீஸ் எம்ப்ளாய்மென்ட் கார்ப்பரேஷன்' என்று ஏற்படுத்தி நடவடிக்கைகள் எடுப்பதாகச் சொன்னார்கள். அந்த வேலைவாய்ப்பு தேடும் நிறுவனம் 'கம்பெனி ஆக்ட்'-படி ரிஜிஸ்டர் ஆகியிருக்கிறது, துவங்கப்பட்டிருக்கிறது, அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் எப்போது ஆட்களை எடுக்கப்போகிறார்கள், இப்படியே போனால் எப்பொழுது அனுப்பப்போகிறார்கள் என்று தெரியவில்லை. எனக்கு 'மிடில் ஈஸ்ட்' கண்ட்ரிகளில் இருந்து விவரங்கள் கிடைத்திருக்கின்றன.



போகிறவர்களிடம் விசாரித்தேன். டெக்னிஷியன்கள், எஞ்ஜினியர்கள் எல்லாம் போகிறார்கள். அங்கே கூட இப்போது சர்ப்ளஸ் கேண்டிடேட்ஸ் இருக்கிறார்கள். ஒரு நல்ல டெக்னிஷியன், எஞ்ஜினியர் எல்லாம் கூட அங்கே 'வெயிட் லோடர்ஸ்'—ஆக, சுமை தூக்குபவர்களாக வேலை செய்கிறார்கள். அப்படி வேலை செய்தால் கூட, 3,000 ரூபாய், 4,000 ரூபாய் என்று கிடைக்கிறது. ஆனால், நாம் போகும் வேகத்தில் போனால் 'அங்கே இப்போது வாய்ப்பு குறைந்துவிட்டது, இனி அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்' என்றுதான் சொல்லப்போகிறார்கள். செய்தால், சீக்கிரம் செய்யுங்கள். வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைவது என்ற பழமொழி ஒன்று உண்டு. அந்த நிலைமைக்கு உள்ளாகாமல் துரிதமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே அறிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பு என்று வரும்போது, இந்த அரசு தொழிலாளர்கள் நிலைமையில் என்ன கொள்கையைக் கையாள்கிறது, பிரச்சினைகள் எப்படித் தீர்க்கப்படுகின்றன என்பதெல்லாம் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். இப்போது இருக்கும் எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சுகள் எல்லாம் ஒழுங்காக நடக்கவில்லை. அவைகள் ஓரளவுக்காவது நியாயமான முறையில் நடக்க இந்த அரசு முயற்சிக்க வேண்டும். இந்தக் கொள்கையில் இருக்கும் குறைபாடுகளை மாற்றி நல்லது செய்ய வேண்டும். இந்தியாவிலே எல்லாம் 'ஸ்பிலிட் பெர்சனாலிட்டி' என்று சொல்லும் முறையில் இருக்கிறது. அரசியல் வாதிகள் இரட்டை நிலையில் இருப்பதாக தத்துவ ஆசிரியர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அந்த நிலைக்கு அரசு இடம் கொடுக்காமல் நல்லவைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த விளக்கக் குறிப்பிலே 1978-லே இம்மாநிலத்தில் 6,61,245 தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள 10,541 தொழில் பிரிவுகளில் 27—1—1979 தேதி நிலவரப்படி 11 நிறுவனங்களில் மட்டுமே தொழில் தகராறுகள் எழுந்தன. அவற்றின் மூலம் 2,275 தொழிலாளர்கள் மட்டும் பாதிக்கப்பட்டனர் என்று குறிப்பில் இருக்கிறது. தொழில் அமைதி இந்த அளவுக்குக் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்ற முறையிலே தொழிலாளர் அமைச்சர் அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். அவர் புதியவர் அல்ல. முன்னைப் பழமைக்கும் பழமையதாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையதாய் அவருடைய பணிகள் நிறைந்துகொண்டிருக்கின்றன என்று நான் தெரிவித்து, தொழில் அமைதிக்கு இந்த அரசு எடுத்த

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1979 ஏப்ரல் 23

நடவடிக்கைகளில் ஒருசில சொல்ல விழைகிறேன். குறிப்பாகச் சொன்
னால், என்ஃபீல்ட் இந்தியா லிமிடெட் நிறுவனத்திலே ஏற்பட்ட தகராறு
காரணமாக அங்கே இருக்கிற நிதிநிலைமையின் காரணமாக, மூடப்பட்டிருந்த
அந்தத் தொழிற்சாலை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி
யின் காரணமாக மீண்டும் திறக்கப்பட்டு இன்று லாபகரமாக நடக்கின்ற
நிலைமையில் 1,500 தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பங்களும்
வாழ்வு பெற்றிருக்கின்றன. அந்தக் குடும்பங்களிலே எரிந்துகொண்டிருக்
கின்ற விளக்கைப் பார்த்து இந்த ஆட்சியைப் பற்றி அவர்கள் என்ன சொல்
கிறார்கள் என்று கேட்போமேயானால் அதுதான் இந்த ஆட்சிக்கு ஒரு
அத்தாட்சியாக இருக்க முடியுமே தவிர ஏதோ சங்க இலக்கியங்களைப்
பார்த்து அந்த சங்க இலக்கியத்தில், தான் தொழிலாக மதிக்க வேண்டிய
ஒரு தொழிற்சாலையை தன்னுடைய கடவுளாக மதிக்கவேண்டிய ஒரு
இடத்தை, தொழிற்கூடத்தை அடித்து நொறுக்குவதற்கும், அதைக் காப்
பதற்காக சகோதரனாக வருகின்ற காவல் துறையைச் சேர்ந்தவர்களைப்
பார்த்து கல்லெறிவதற்கும் எந்த சங்க இலக்கியத்திலேயும் நாம் ஆதாரம்
தேட முடியாது. அவர்களும் ஆதாரம் தர முடியாது.

**திரு. ப. மாணிக்கம்:** எங்கே அடித்து நொறுக்கப்பட்டது என்று அறிய
விரும்புகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** குறிப்பிட்ட தொழிற்சாலை என்றல்ல.
தொழில் அமைதிக்குக் குந்தகமாக, பங்கமாக நடத்தப்படுகின்ற எடுக்கப்
படுகின்ற நடவடிக்கைகளைத்தான் பொதுவாக நான் சொல்ல விரும்புகிறேன்.
இந்த அரசு ஏதோ தொழிலாளர்கள் நலன் என்கின்றபோது இன்று வேலை
கிடைத்த தொழிலாளர்களோடு இந்தப் பிரச்சினை முடிந்துவிடப்போவ
தில்லை. இன்றைக்கு வேலைக்கு வந்திருக்கின்ற தொழிலாளர்களுக்கு
எவ்வளவு ஊதியம் தேடித் தருகிறோம். அவர்களுக்கு என்ன வசதிகளைத்
தருகிறோம் என்பதோடு தொழில் கொள்கை முடிந்துவிடுகிறது என்பதல்ல.
சாப்பாடு
சாரணம் 1 ரூபாய் சம்பளம் கிடைத்தால் போதும், ஒரு நேரம்
கிடைத்தால் போதும் என்று இந்த நாட்டிலே எத்தனை ஆயிரம் மக்கள்
எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளி தோழர்
களுக்கு, அவர்களின் வீட்டிலே இருக்கிற பிள்ளைகள் வேலை பெறுவதற்கு
இந்த அரசு முனைந்து கொண்டிருக்கிற முயற்சியின் விளைவு தான்
தொழில் கொள்கையிலே இந்த அரசு பெற்றிருக்கிற வெற்றியின் அறிகுறி
தொழில் அதிபர்கள் அண்மையிலே புரட்சித் தலைவர் அவர்களைச் சந்தித்து
'மேலும் தொழில்களைப் பெருக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்' என்ற
வாக்குறுதி தந்திருப்பதை நாம் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்



1979 மார்ச் 23] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

அதனாலேதான் இந்த அரசு இரண்டு அணுகுமுறையை தொழில் பிரச்சினை
யைப் பொறுத்து வைத்திருக்கிறது. ஒன்று, பேச்சு வார்த்தை, அதிலே
முடியவில்லையென்றால், நீதிமன்றம். தொழில் பிரச்சினைக்களைப் புரிந்து
கொண்டு, அந்த இரண்டுக்கும் விட்டுவிட்டு தொழில் அமைதிக்கு ஒத்துழைத்
தால் தமிழ்நாடு ஒரு தொழில் மயமான நாடாகும். அதற்கு ஒத்துழைப்புத்
தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தொழில் அமைதியில் இந்த
அரசு காட்டுகிற அக்கறை இப்படி இருக்க தமிழகத்திலே மத்திய அரசு
நிறுவனங்களிலே என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும்.
இங்கே இருக்கும் பலர் கோடைகாலத்திற்கு ஊட்டிக்குக்கூட செல்லக்கூடும்.
அங்கே அரவங்காட்டிலே 'கார்டைட்' பாக்டரி இருக்கிறது அந்த
பாக்டரியிலே இருக்கிற தொழிலாளர்கள் எல்லாம் மே 1-ம் தேதிமுதல்
உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவிருக்கிறார்கள். அந்தத் தொழிற்
சாலைக்கு உள்ளே மாலை 5 மணிக்கு மேல் தங்களுடைய உரிமை
களையும், எண்ணங்களையும் சொல்லக்கூடாது என்று அதிகாரிகள் அவர்
களை விரட்டுகிறார்கள். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள்
திணிக்கப்படுகின்றன. ஒரு சாதாரண தொழிலாளிக்குக் கிடைக்கின்ற
நியாயம், கிடைக்காத நிலை அங்கே இருக்கிறது. தமிழ்நாடு
அரசு தொழிலாளர் நிலைமை எப்படி இருக்க வேண்டும் என்று
எண்ணுகின்ற நிலைமை கேடுகிறபோது, மத்திய அரசைச் சேர்ந்த
ஒரு நிறுவனம் எப்படி இங்கே தொழில் அமைதியைக் கெடுத்துக்கொண்டு
இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து நம்முடைய தொழிற் சங்கத்
தலைவர்கள் எல்லாம் மத்திய அரசுக்கு அதை எடுத்துக்காட்டி தமிழகம்
வழிகாட்டுகின்ற தொழில் அமைதி நிலையை மத்திய அரசு நிறுவனங்கள்
மேற்கொள்ளவேண்டும் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும் என்று
தெரிவித்துக்கொள்கிறேன். 'பெல்' தொழிற்சாலையைப் பற்றிக் குறிப்
பிடுகிறபோது, அதுபோன்ற பெரிய தொழிற்சாலைகளை மத்திய அரசு
தான் துவக்க முடியும். ஆனால், இந்தப் பெரிய தொழில்களுக்குத்
தொடர்பான சிறிய தொழில்களை மத்திய அரசு அமைக்கவில்லை. ஆனால்,
அதற்கு இணையான பாகங்களைத் தயாரிக்க மத்திய அரசு ஊக்குவிக்கிறது.
அது வரவேற்கத்தக்கது. சிறிய தொழில்கள் வளர வேண்டும் என்ற நிலை
இருக்கிறது. ஆனால் அவர்களிடம் உள்ள பணம், அவர்களிடம் இருக்கும்
மற்ற வாய்ப்பு வசதிகளை வைத்து, தொழிலாளர்களுக்கு, இந்தப்
பெரிய தொழிற்சாலைகளிலே தொழிலாளர்களுக்குத் தரும் சம்பளத்தை,
அவர்களால் தர முடியவில்லை. இவை எல்லாம் மாறுவதற்கு நாம் மத்திய
அரசுக்கு இந்த நிலைமைகளை உணர்த்த வேண்டும். தொழில் அமைதியை

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1979 ஏப்ரல் 23

தமிழகத்திலே நிலை நிறுத்தும் விதத்தில், தமிழகத்திலே இருக்கிற மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த தொழிற்சாலைகளில் தொழில் அமைதி கெடும் நிலைமைகள் இருக்கின்றன என்று சொல்லி, குறிப்பாக கார்டைட் பாக்டரியில் 60 ஆயிரம் தொழிலாளர்களுடைய நிலையிலே—அவர்கள் மே மாதம் 1-ம் தேதி தொடங்கவிருக்கிற உண்ணாவிரதத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் அளவுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பைப் பொறுத்தவரையில் என்னால் ஒன்றை இங்கே காண முடியவில்லை என்ற என்னுடைய ஏமாற்றத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெருக்கடி கால நிலையிலே, மிகுந்த பரிவுணர்வுடன் தொழிலாளர்களுடைய நலத்தைப் பரிவோடு காண்கின்ற நிலையிலும், அவர்களுடைய குறைகளைத் தீர்க்கின்ற நிலையிலும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால், நெருக்கடி கால நிலை நீங்கிய பிறகு, ஆட்சி மாறிய பிறகு இன்றைக்கு அந்தத் துறையிலே கவனம் குறை

(பிற்பகல் 7.50)

வாக இருக்கிறது. இன்றையதினம் மிகப் பெரிய அளவுக்குப் போராட்டம் நடத்தக் கூடியவர்கள் ஆர்கனைஸ்டு லேபர் என்கிற முறையில் தொழிற் சங்கம் வைத்திருக்கிற தொழிலாளர்கள்தான் என்ற நிலைமை இருக்கிறது. இவர்களுக்குக் கொஞ்சமும் குறையாத அளவு மிகப் பெரிய அளவு எண்ணிக்கையில் இருக்கிற அன்-ஆர்கனைஸ்டு லேபர் சங்கம் வைத்துக்கொள்ள இயலாத தொழிலாளர்கள் அவர்கள் பல லட்சக் கணக்கில் இருந்தாலும்கூட குறைந்தபட்சம் அவர்கள் தங்களுடைய சாப்பாட்டுக்குக்கூட ஊதியம் பெற முடியாத நிலையில் இருப்பதையும், அன்றாட சாப்பாட்டிற்கே அவர்களால் சம்பாதிக்க முடியாத நிலையில் இருப்பதையும் நாம் அறிவோம். அவர்கள் ஒரு அன்-ஆர்க்கனைஸ்டு லேபராக இருக்கிற காரணத்தால் அந்தத் தொழிலாளர்களின் உழைப்பு இன்றையதினம் மற்றவர்களால் மொத்திப்பெறப்படுகிற நிலைமை இருக்கிறது.

நெருக்கடி கால நிலையின்போது அன்-ஆர்க்கனைஸ்டு லேபரில் மாபெரும் பகுதியினர் விவசாயத் தொழிலாளர்களுக்கு நாங்கள் குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்தோம். அதேமாதிரி மாநிலம் முழுவதும் அந்தக் குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கப்படுகிற நிலையும் எங்காவது



1979 ஏப்ரல் 23] [திரு. க. இராமமூர்த்தி]

அவர்களுக்கு அவ்வாறு கொடுக்கப்படவில்லையென்றால் அதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கிற நிலையும் உருவாக்கப்பட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக இன்றைக்கு அந்த நிலை நமது மாநிலத்தில் இல்லை என்பது மட்டுமல்ல, அந்த அன்-ஆர்கனைஸ்டு லேபர் இன்றைக்கு மிகப் பெரிய சங்கடத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்காகக் குரல் கொடுக்கிறவர்களும் மிகக் குறைவானவர்களாகவே நாட்டில் இருக்கிறார்கள்.

தொழிலாளர் நலத்துறை அன்-ஆர்கனைஸ்டு லேபரைப் பொறுத்தவரையில் போதிய அளவுக்கு கவனம் செலுத்த வேண்டும். எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் அந்தத் தொழிலாளர்களுக்குத் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டாக வேண்டும். அதில் சில சங்கடங்களும் சிக்கலும் இருக்கலாம். அதனால் பலருடைய வெறுப்புக்கு ஆளாகிற நிலைகூட வரலாம். அதற்காகக் கவலைப்படக்கூடாது. ஒவ்வொரு தொழிலிலும் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு அவர்களுடைய தேவையின் அடிப்படையில் ஒரு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்யாத வரையில் நாம் பெரிய பட்டினிப் பட்டாளத்தைத்தான் இந்த நாட்டிலே உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்றுதான் பொருள்படும். அதற்குத்தான் இந்த அரசு உறுதுணையாக இருக்கிறது என்று பொருள்படும். எனவே அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்று சுட்டிக் காட்ட வேண்டியதை என்னுடைய கடமையாக நினைக்கிறேன். ஏற்கெனவே காங்கிரசின் 20 அம்சத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்ற அடிப்படையில் இதை நிறைவேற்ற வேண்டுமென்றும் இந்த வகையில் மிக வேகமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆர்கனைஸ்டு-லேபரைப் பொறுத்தவரையில் நாட்டில் தொழிலாளர் நலத்துறை அவர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலும் பல இடங்களில் நிலவுகிற சூழ்நிலை எதிர்த்துத் திருப்தியளிக்கக்கூடியதாக இல்லை. பல்வேறு பெரிய தொழிற்சாலைகளை அரசுத் தரப்பில்—பொறுத்துறையின் சார்பில்—ஏற்று நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகளின் நிருவாகப் பொறுப்பை ஏற்றிருக்கிற பெரிய அதிகாரிகள்—அரசாங்க அதிகாரிகள்—தங்களை ஏதோ அந்தத் தொழிற்சாலைகளின் முதலாளிகளைப் போலவே எண்ணிக் கொள்கிறார்கள். அப்படித் தங்களை அந்தத் தொழிற்சாலையின் முதலாளிகளாகக் கருதுவது மட்டுமல்ல; அதன் காரணமாகவே

அப்படிப்பட்ட முதலாளிகள்—தனியார் தொழில்களின் முதலாளிகள் கொண்டிருக்கிற மனப்பான்மையையும் குறைகளையும் இவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது நியதியல்ல. பொதுத் துறை நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் தங்கள் குறைகளைச் சொல்லும்போது அல்லது தங்களின் கோரிக்கைகளுக்காகத் தவிர்க்க முடியாத நிலையில் சில போராட்டங்களில் ஈடுபடுகிறபோது அந்தத் தொழிலாளர்களைத் தண்டிப்பதிலும், அவர்களின் போராட்டங்களை அடக்குவதிலும் அரசாங்க அதிகாரிகளாக இருந்து அந்தத் தொழிற்சாலையின் நிருவாகப் பொறுப்பில் இருக்கும் இவர்கள் தனியார் துறையில் உள்ள தொழில்களின் முதலாளிகளைப்போலவே செயல்படுவதும், பிரச்சினைகளை அணுகுவதும்தான் சரியாகப் படவில்லை. இவர்கள் அரசாங்கத்தின் இன்னொரு பிரிவாக இருப்பதாலேயே, தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளை மதிப்பதற்கு மறுக்கிறார்கள். தொழிற் தகராறு ஏற்பட்டு அரசாங்க அதிகாரிகள் இந்தத் தொழிற்சாலைகளின் நிருவாகப் பொறுப்பில் இருப்பவர்களை அழைத்து பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம் என்றால் இவர்கள் பேச்சுவார்த்தைக்கு வராமலே போய்விடுகிறார்கள். இது பல இடங்களில் இன்றையதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் அரியலூரில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலையில் இதுபோன்ற நிலை ஏற்பட்டது. அந்தத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தகராறைத் தீர்க்க, பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டபோது அந்த நிருவாகப் பொறுப்பில் இருந்த அதிகாரிகள் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்த வரவில்லை. இந்த வகையில் புதியதொரு ஜாதியினரை நாம் உருவாக்குகிறோமோ என்ற சந்தேகம்கூட எனக்கு ஏற்படுகிறது. அரசு நடத்துகிற தொழிற்சாலையில் இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாவதை அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். மாநிலத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளிலேயே நிலைமை இப்படி என்றால் இனி மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளில் என்ன நிலைமை ஏற்படும் என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அமைச்சர் அவர்கள் இதை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். நமது மாநில அரசின் அதிகாரிகளே நமது மாநில அரசின் தொழிற்துறை அதிகாரிகளை மதிக்கத் தயாராக இல்லையென்றால் மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள தொழிற்சாலைகளின் அதிகாரிகள் எவ்வாறு நமது தொழிற்துறை அதிகாரிகளை மதிப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் துறையைப் பொறுத்தவரையில் சரியானதோர் 'கோஆர்டினேஷன்' இல்லையோ என்று நான் ஐயப்படுகிறேன். அல்லது இந்தத் தொழில்கள் எல்லாம் மாநில முதலமைச்சர் அவர்களின் பொறுப்பில்



இருக்கின்றன என்ற நினைப்பில் அந்தத் தொழிற்சாலைகளின் அதிகாரிகள் தங்களுக்குப் பெரிய பாதுகாப்பு இருப்பதாக எண்ணி, தங்கள்மீது யாரும் எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டார்கள் என்றெண்ணி அவ்வாறு செயல்படுகிறார்களோ என்று நம்ப வேண்டியிருக்கிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி ஆராய்ந்து இந்தப் போக்கை உடனடியாகக் களைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தேவைப்பட்டால் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேசி இந்த நிலைமையைப் போக்க வேண்டும், உடனடியாக இதில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்துறைத் தொழிலாளர்களைப் போல் மிகப் பெரிய அளவில் இருக்கிற மற்றொரு பிரிவினர் இன்றையதினம் நெசவுத்துறையில் ஈடுபட்டவர்களாக இருக்கிறார்கள். தமிழகத்தில் அவர்களுடைய பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றுதான் அரசாங்கம் ராஜா சுப்பிரமணியன் கமிட்டியை நியமித்தது. இப்படி நியமிக்கப்பட்ட கமிட்டி தனது அறிக்கையை ஏற்கெனவே அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட்டது. ஆனால் இதுவரை அந்தக் கமிட்டியின் அறிக்கை இந்த அவையின் உறுப்பினர்களுக்குக் கூடத் தரப்படாத நிலைமை இருக்கிறது. அந்த அறிக்கையை ஏன் மூடி மறைக்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. அந்தக் கமிட்டியின் சிபாரிசுகளை அரசு வெளிப்படுத்தி, அவைகளை விரைவில் நிறைவேற்ற அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதில் அரசாங்கத்திற்கு என்ன சங்கடம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதற்காக என்று ஒரு கமிட்டியை அமைத்து, அவர்களுடைய குறைகளைக் களையத் தேவையானவற்றை அந்தக் கமிட்டி விரிவாக விவாதித்து தனது அறிக்கையை அரசாங்கத்திற்குத் தந்தபிறகு அந்த அறிக்கையை வெளியிடுவதிலே அரசாங்கத்திற்கு தாமதம் ஏற்படுவதற்கு எந்த நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே அந்த அறிக்கையை விரைவில் அவையின்முன் வைத்து, அந்தக் கமிட்டியின் சிபாரிசுகளை அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, லட்சக் கணக்கான தொழிலாளர்களின் பிரச்சினையாக இருக்கிற இதனை இன்னமும் காலதாமதப்படுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நாட்டில் தொழிற்சங்கங்களுக்கிடையே ஏற்படுகிற போட்டியின் காரணமாக தமிழகத்தில் சில விரும்பத் தகாத நிலைமைகள் உருவாகியிருப்பதை அரசாங்கம் கவனமாக கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு அதில் நிதானத்தோடு நடந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக திருச்சி சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே 12(3) ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம் புனிதமானதா, இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் சட்டப்படி அப்படி ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டால் அதை மறுபடியும் பிரச்சினையாகக் கிளப்பக் கூடாது என்று இருக்கிறது. அந்த விதிப்படி ஏற்பட்ட ஒப்பந்தத்தை மீறுவது அல்லது உடைப்பது சரியல்ல, அல்லது வேறு ஒரு தொழிற்சங்கம் அதே கோரிக்கைகளின் அடிப்படையில் போராடுவது என்பது சரியல்ல. இதற்குக் காரணம் தொழிற்சங்கங்களுக்கு இடையே இருக்கின்ற போட்டி மனப்பான்மையாகும். இதுபோன்ற நிலைமைகள் நாட்டில் தொழில் அமைதியைக் குலைக்கத்தான் பயன்படுமே தவிர தொழிலாளர்களுக்கோ தொழில் வளர்ச்சிக்கோ உறுதுணையாக இருக்காது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலையில் ரூ. 4-50 கொடுப்பது குறைவானது என்று எந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் வாதாடுகிறார்களோ அந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள்தான் வேறொரு தொழிற்சாலையில் ரூ. 3-50-க்கு ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். அரசியல் காரணமாகவும், தொழிற்சங்கங்களுக்கிடையே இருக்கிற போட்டி மனப்பான்மை காரணமாகவும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உருவாவது நல்லது அல்ல.

சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 12(3) ஒப்பந்தத்தையும் உடைக்காமல் அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கும் கூடுதலாக ஊதியம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து, இது சம்பந்தமான விவகாரம் முற்றிப் போகாத அளவுக்கு அனைத்துத் தரப்பினரையும் அழைத்துப் பேசி நடவடிக்கை எடுத்ததை இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அடுத்து இந்தத் துறைக்கிருக்கிற மிகப் பெரிய பலவீனமே இந்தத் துறையில் போதிய அளவுக்கு அதிகாரிகள் இல்லாமையாகும். நாட்டில் தொழிற்சாலைகள் வேகவேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. தொழிலாளர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் உதவுகிற வகையில் தொழிலாளர் துறையும் போதிய அளவுக்கு வளர்ந்தாக வேண்டும். அந்த அளவுக்குத் தொழிலாளர் நலத்துறையை அரசு விரிவுபடுத்தியாக வேண்டும். தற்போது அந்தத் துறையில் தேவையான அளவுக்கு அதிகாரிகள் இல்லாமல் இருக்கிறார்கள். எனவே அவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் அரசு செய்து தர வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

இறுதியாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சரவையில் இருக்கும் பெரும்பாலான அமைச்சர்களைவிட வயதில் அவர் மூத்தவராக இருந்தும் எப்போதும் வேகவேகமாக, விரைந்து செயல்படுகிற நிலையை நாம் அவரிடம் காண்கிறோம். பிரச்சினை எதுவாக இருந்தாலும் எப்போதும் அவரிடத்திலே மகிழ்ச்சிக் குறைவைக் காண முடியாது. பட்டு வேட்டியும் பட்டு அங்கவஸ்திரமும் அணிந்து வரும் அவர் எப்போதும் உற்சாகமாக இருப்பார். அவர் இந்தத் துறையில் இன்னும் பல நல்ல நடவடிக்கைகளை உற்சாகத்தோடு மேற்கொள்ள வேண்டுமென்று கூறி அமைகிறேன்.

(பிற்பகல் 8-00)

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் அளிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்நலக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது எனது கட்சியின் சார்பில் என்னுடைய கருத்தை எடுத்து வைப்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நமது தமிழ்நாட்டில் தொழில் அமைதி மிகச் சிறப்பாக இருக்கிறதென்ற புகழ் மறைந்து இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன என்று நான் கருதுகிறேன். முன்பெல்லாம், கேரளாவிலே தொழில் அமைதியில்லையென்று சொல்லி முந்திரித் தொழிற்சாலைகளையெல்லாம் தமிழகத்தினுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே அமைத்தார்கள். இன்று அந்தத் தொழிற்சாலைகளை மூடிக் கொண்டு அவர்கள் கேரளாவை நோக்கிப் போய்விட்டார்கள். அதற்குக் காரணம் பல இருந்தாலும், அதிலே ஒன்று முந்திரிப் பருப்பு அதிகமாகக் கிடைக்கவில்லையென்பது; இன்னொன்று இங்கே

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 23

தொழில் அமைதியில்லையென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது. தொழில் அமைதி ஓரிடத்திலே இல்லையென்றால் அதற்குக் காரணம் என்னவென்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கக் கூடிய புள்ளிவிவரங்களிலிருந்து, தமிழ் நாட்டில் 11 இடங்களில் தான் தொழில் அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. 11 இடங்களில் தொழில் அமைதியின்மை ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன வென்று பார்த்தால், இந்த அரசாங்கத்தினுடைய தொழில் கொள்கை, தொழி லாளர் நலக் கொள்கை ஆகியவற்றில் உள்ள கருத்து வேறுபாடுகள்தான் என்று தெரிகிறது. அரசாங்கம் தொழிலாளர் நலனில் சரியாக அக்கறை கொண்டு செயல்படுகிறதா என்றால், இல்லையென்று தெரிகிறது. தொழிலாளர் களுக்கும், தொழிலதிபர்களுக்கும் இடையில் ஏற்படுகிற தகராறில் முதலில் நியாயம் எந்தப் பக்கத்திலேயிருக்கிறது என்பதைக் கண்டறிந்து அந்தப் பக்கத்திலே நின்று பேச்சு வார்த்தையை நடத்த வேண்டுமே தவிர அதை விட்டுவிட்டு, "நீங்களே பேச்சு வார்த்தையை நடத்தி தீர்த்துக்கொள்ளுங்கள், நாங்கள் கலவரம் வாராமல் பார்த்துக்கொள்ளுகிறோம்" என்று சொல்லி அவர் களிடமே விடுவது சரியல்ல. தொழிலாளர்கள் கோரிக்கைகளை வற்புறுத்திக் கூட்டங்களை நடத்தினால், "இந்த இடத்திலே கூட்டத்தை நடத்தக் கூடாது" என்று சொல்லி அவர்களைக் கலைக்கும்போது இந்த அரசாங்கத்தின் மீது தொழிலாளர்களுக்குள்ள பற்றுதல், நியாயமான உணர்வு ஆகியவைகள் குன்றி வருகின்றன என்பது என்னுடைய கருத்து.

அரசாங்கம் ஒரு தெளிவான தொழிற் கொள்கையை ஏற்றிருக்க வேண்டும். ஒரு தொழில் சிறப்பாக நடைபெற, மூலதனம், தொழிலதிபர்களுடைய திறன் ஆகியவை தேவைதான். அவற்றிற்கும் மேலாக தொழிலாளர்களுடைய உழைப்புத்தான் பெரும் மூலதனமாக அமைகிறது. ஆகவே தொழிலில் வருகிற இலாபத்தை தொழிலாளர்களும், தொழில் அதிபர்களும் சேர்ந்து பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்ற உயரிய கொள்கையை அரசாங்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

தொழிலாளர்கள் தொழிலைக் கேட்டு வருகிறபோது ஒரு ரூபாய் கொடுத் தால் பரவாயில்லையென்று வருகிறார்கள். பிறகு ஆறு மாதங்கள், ஒரு வருடம் கழிந்த பிறகு தங்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் போதாது என்று கருதுகிற எண்ணம் அவர்களிடையே வளர்ந்து கொண்டேயிருக்கிறது. அந்த எண்ணம் சரியென்றே நான் நினைக்கிறேன்.



1979 ஏப்ரல் 23] [திரு. ம. சங்கரலிங்கம்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் அவர்கள் பேசுகிறபோது ஒரு தொழிற்சாலையில் இரண்டாயிரம் பெர்மனென்ட் ஒர்க்கர்கள் இருந்தால், இரண்டாயிரம் காண்ட்ராக்ட் ஒர்க்கர்கள் இருக்கிறார்கள் என்று சொன் னார்கள். காண்ட்ராக்ட் ஒர்க்கர்களை எந்த நேரத்திலும் வெளியே தள்ள முடியுமென்ற அமைப்பு முறை இன்றைக்கு இருக்கிறது. ஒரு தொழிற் சாலையில் இரண்டாயிரம் நிரந்தர ஊழியர்கள் இருந்தால், அதற்கேற்ப இரண்டாயிரம் காண்ட்ராக்ட் ஊழியர்கள் இருக்க முடியாது, வேண்டு மானால் 200 பேர் காண்ட்ராக்ட் ஊழியர்களாக இருக்கலாம். வேலைப் பளு குறைகிறபோது அவர்களை வெளியே அனுப்புகிற சூழ்நிலை ஏற்படும். நிரந்தர ஊழியர்களுக்கு பாதுகாப்புச் சட்டங்கள் துணை நிற்கின்றன. ஆனால் நிரந்தரமற்ற ஊழியர்களுக்கு பாதுகாப்புச் சட்டங்கள் இல்லை. நிரந்தரமற்ற ஊழியர்களை வைப்பதன் மூலம் அவர்களுக்குக் குறைந்த சம்பளத்தைக் கொடுத்துவிட்டு, ஆலை அதிபர்கள் பெருமிதமான இலாபத் தைப் பெற்று அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு தொழிலில் நஷ்டம் ஏற்படுகிறதென்றால் அதை உணர்ந்து தொழிலதிபர்களுக்குள்ள அந்த உணர்வோடு பங்கு கொள்ளுகிற சுமுகமான நிலைமை தொழிலாளர்களிடையே இல்லாமல் இல்லை. ஒரு தொழிலதிபர் அந்தத் தொழிலை ஆரம்பிக்கும் முன் எவ்வளவு எளிய சூழ்நிலையில் இருந்தார் என்பதையும், பிறகு அரசாங் கத்தின் உதவியைப் பெற்று, தொழில் முதலீட்டுக் கழகத்தின் நிதியைப் பெற்று, அந்தத் தொழிலில் எவ்வளவு சம்பாதித்தார் என்றும் அதற்குப் பிறகு அவருக்கு இருக்கிற மாளிகைகளையும், அவர் செய்கிற ஆடம்பரச் செலவுகளையும், அவர் வைத்திருக்கிற அன்-அக்கவுண்டெட் பணத்தையும், அந்தப் பணம் விளையாடுகிற நிலையையும், மற்றும் லீலா விநோத முறை களையும் பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய தொழிலாளிகள் தங்களுக்கு மட்டும் 3 ரூபாய் கூலி போதுமென்று எப்படி நினைப்பார்கள்? வேலைக்கு வருவதற்கு முன் எம்.எல்.ஏ.க்களை, எம்.எல்.சிக்களை அரசியல் தலைவர் களை சிபார்சு கேட்டு வந்த பின்னர் அவர்கள் மூன்று ரூபாய், அய்ந்து ரூபாய் கூலி போதாது என்று எப்படி கேட்கலாம் என்று அரசு நினைக்கக் கூடாது. தொழிலாளர்கள் தங்களுடைய நிலையிலிருந்து உயர போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கும்போது, முதலில் சிறிய வீட்டிலிருந்த ஆலை அதிபர் இன்று பல்லியிலிருந்து இங்கு வரை பல மாளிகைகளை வைத்துக் கொண்டு, கணக் கில் சேராத பணத்தையும் வைத்துக் கொண்டு அனுபவிப்பதைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருப்பார்கள் என்று நம்பினால் அது ஏமாற்றத்திற் குரிய நிலைக்குக் கொண்டு போய்விடும்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 23

தொழிலாளர்களுடைய இன்றைய நிலையைப் பார்க்கிற இந்த அரசு தெளிவாக ஒரு கொள்கையை வைத்திருக்க வேண்டும். எந்தெந்தத் தொழில் நிறுவனங்களில், ஆலைகளில் இலாபம் மிகுதியாக இருக்கிறதோ அங்கெல்லாம் நல்ல முறையிலே தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும், போனஸ் கொடுக்க வேண்டுமென்றும், மற்றும் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்றும், வீட்டு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்றும் தொழிலதிபர்களை வற்புறுத்துகிற அளவுக்கு அரசு தொழிலாளர்கள் பிரச்சினையில் அணுக வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல இடங்களில் தொழிலாளர்களுடைய நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட நேரத்தில் அவர்கள் போராட்டமாக நடத்திக் கொண்டிருக்கும்போது, ஆலை அதிபர்கள் பக்கத்திலே இருந்து கொண்டு தொழிலாளர்களின் போராட்டத்தை அரசு நசுக்க முன் வருகிறது என்பதற்கு பல எடுத்துக்காட்டுகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நேரம் மிகுந்துவிட்டதன் காரணமாக மீண்டும் அதை நான் எடுத்து வைக்க விரும்பவில்லை என்பதை மாத்திரம் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அரசு தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை காட்டவில்லையென்பது என்னுடைய குற்றச்சாட்டு. அதுமட்டுமல்ல, தொழிலாளர்களுடைய போராட்டத்திலே இந்த அரசின் அணுகுமுறை மிகத் தவறாக இருக்கிறது என்பதும் என்னுடைய கருத்து. தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுகிறபோது இந்த அரசு தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அதை எதிர்த்து தொழிலாளர்களும், மற்றும் அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து சென்ற ஆண்டு எதிர்ப்புணர்வைக் காட்டும் வகையில் எல்லா இடங்களிலும் கடையடைப்புச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அந்த உணர்வுக்கெதிராக அரசு திட்டமிட்டு எதிர் நடவடிக்கைகளை எப்படியெல்லாம் எடுத்தது என்பதை அறிவோம். தொழிலாளர்கள் தங்களுடைய உணர்வுகளை சட்டரீதியாக, ஜனநாயக ரீதியாக அமைக்கப்பட்ட சில வழிமுறைகளில் கூட காட்டுவதற்குத் தடைவிதிக்கிற இந்த அரசு தொழிலாளர்களுடைய நலனைப் பேணிப் பாதுகாக்கிற அரசு என்று எப்படி உலகம் ஏற்றுக்கொள்ளுமென்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். சென்ற ஆண்டு தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தின் போது அதைத் தடுக்க அரசு கையாண்ட முறை நாடு முழுவதும், உலகம் முழுவதும் வெறுக்கத்தக்க நிலையில் இருந்தது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இவர்கள் தொழிலாளர்களுடைய நலனில் காட்டுகிற கொள்கைக்கு ஒரு காரணம் இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.



1979 ஏப்ரல் 23] [திரு. ம. சங்கரலிங்கம்]

"அன்னாயிசம்" என்றால் என்னவென்று குறிப்பிடும்போது, காப்பிடலிசம், சோஷலிசம், கம்யூனிசம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்குமானால் இவர்கள் காப்பிடலிசத்தையும் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள், சோஷலிசத்தையும் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள், கம்யூனிசத்தையும் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இவர்கள் தெளிவான ஒரு கொள்கையை வைத்துக்கொள்ளவில்லையென்று நாங்கள் சந்தேகப்படுவதற்கு, நம்புவதற்கு, அதை எடுத்துச் சொல்லுவதற்கு வழிவகையிருக்கிறது. காபிடலிஸ்ட் கண்ட்ரியில் இருப்பதால் இப்படிச் சொல்லுகிறார்களோ என்று முதலில் நினைத்தோம். ஆனால் உண்மையிலேயே அவர்களுடைய கொள்கை தெளிவாகத்தான் இருக்கிறது. அவர்கள் அதிபர்களையும் திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள், தொழிலாளர்களையும் திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அதாவது பாலுக்கு காவலாகவும், பூனைக்குத் தோழனாகவும் இருக்க விரும்புகிறார்கள். இந்தக் கொள்கை அதிக நாள் இருக்கக் கூடாது. ஏனென்றால் இந்தக் கொள்கை அதிக நாளைக்கு இருக்க முடியாது. ஒன்று பாலைக் காப்பவர்களாக, அதாவது தொழிலாளர்களைக் காப்பவர்களாக இருக்க வேண்டும். அல்லது பூனைக்குத் தோழனாக, அதாவது ஆலை அதிபர்களுக்குத் தோழனாக இருக்கிறோம் என்று பகிரங்கமாக அறிவித்துவிட வேண்டும். இரண்டு பேர்களுக்கும் நண்பர்களாக அதிகநாள் இருக்க முடியாது என்பதைச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

இந்தச் சமயத்தில் ஒரு சம்பவத்தை நினைவூட்ட விரும்புகிறேன். கோயம்புத்தூரில் பஞ்சாலைத் தொழிலாளர்களின் போராட்டம் நடந்தபோது, முன்பு முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் ஆலை அதிபர்களை அழைத்து, "நீங்கள் போராட்டத்தை நிறுத்துவதற்கேற்ற நிலையில் தொழிலாளர்களோடு சமாதானமாகப் போகப் போகிறீர்களா, அல்லது ஆலைகளை அரசே ஏற்பதற்குரிய சட்டத்தைக் கொண்டுவரட்டுமா ?" என்று கேட்டவுடனே, மறுநாள் என்ன நடந்தது என்பதை இந்த நாடே அறியும். தொழிலதிபர்கள் அவர்களுடைய கோரிக்கையிலிருந்து இறங்கினார்கள். போராட்டம் நின்றது. அமைதி ஏற்பட்டது. அந்தத் தொழில் நடக்க

(பிற்பகல் 8-10)

வழிவகை செய்யப்பட்டது. அரசு மிகத் தெளிவான கொள்கையில் இருந்தது. தொழிலதிபர்களுக்கு நண்பர்களாக இருப்பதை மாற்றிக் கொள்ளவேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போல, இன்றும் நாம் பார்க்கமுடிகிறது. சிறுவர்களை வேலைக்குப் பயன்படுத்துகிறார்கள். சிவகாசியிலே பயன்படுத்துகிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. மாணிக்கம் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள். அவர் இதற்காக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானமும், ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானமும் கொண்டு வந்திருக்கிறார்கள். விவாதித்து இருக்கிறோம். அப்படி இருந்தும் தொழிற்சாலைகளில் இன்றைக்கு இரவு 3 மணிக்கு அழைத்து வரப்பட்டு, மறுநாள் காலை 9 மணிக்கு வீட்டிலே கொண்டுவந்து விடப்படுகிறார்கள். அவர்களுக்கு 1½ ரூபாய், 2 ரூபாய், 3 ரூபாய் என்று சம்பளம் கொடுக்கிறார்கள். வேலை வாங்குவதிலும் நேரம் அதிகமாக இருக்கிறது. சம்பளம் கொடுப்பதும் மிகக் குறைவாக இருக்கிறது. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தை பயன்படுத்திக் கொண்டு இங்கே இருக்கின்றவர்கள் இப்படி வேலை வாங்குகிறார்கள். இங்கே இருக்கின்ற ஒரு என்ஜீனியர் இந்த நாட்டில் வேலை பெறுவதற்கில்லாமல், கடைசியில் ஒரு ஹெட் லோடராக ஒரு சாதாரணத் தொழிலாளியாக வெளியூரில் வேலை பார்க்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலைமைகள் இந்த நாட்டில் உருவாகியிருப்பதை தொழிலதிபர்கள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து இந்த நாட்டு மக்களை, தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசினுடைய கடமை.

மூத்திரித் தொழிற்சாலையைப் பற்றிச் சொல்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கச்சாப் பொருள்கள் கிடைக்கவில்லை என்பதைக் காரணமாகச் சொல்கின்றார்கள். இன்னொன்றைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மூத்திரித் தொழிற்சாலை இயங்குகின்றபோது அங்கே பயன்படுத்தப்படுகின்ற தொழிலாளர்கள், சிறுவர்கள், பெண்கள், அவர்களுக்கு தொழிலாளர் நல சட்டத்தின்படி கொடுக்கப்பட வேண்டிய க்ளவுஸ் (Gloves) கொடுக்கப்படவில்லை. 1974-75-ல் இருக்கும் என்று நினைக்கிறேன், நான் கூட அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்துவிட்டுப் போகின்ற பெண்கள் சிறுவர்களைப் பார்த்தேன். அவர்கள் போகும்போது பார்த்தால், அவர்கள் கைகளிலே மூத்திரிப் பால் பட்டு, குஷ்டரோகி போலக் காட்சி அளிப்பார்கள். இந்த அவையிலே அதைப் பற்றிக் கேட்டு அதற்கு என்று சட்டம்கூட போடப்பட்டது. இப்போதும் அந்தச் சட்டம் இருக்கிறது. கையிலேயும் காலிலேயும் க்ளவுஸ் போட வேண்டும் என்று இருக்கிறது. அதன் விலை ரூ. 100 இருக்கும். ஒரு தொழிலதிபரும் அதை வாங்கி வைப்பதில்லை. இப்போதும் இல்லை. சட்டம் இருக்கிறது; ஆனால் அமுல் நடத்தவில்லை.



தொழிலாளர்கள் இலாகாவில் இருந்து தொழிலாளர் அதிகாரிகள் அங்கே வந்த உடனே ஆலை அதிபர்கள் அவர்களைத் திருப்திப்படுத்திவிடுகிறார்கள். அத்தோடு அவர்கள் போய்விடுகிறார்கள். அவர்கள் வரும்போது ஒரு இரண்டு தொழிலாளர்களை மட்டும் க்ளவுஸ் போட்டுக் காண்பிப்பார்கள். மற்றவர்கள் இருக்கமாட்டார்கள்.

தமிழ் நாட்டிலுள்ள தொழிலாளர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள், சுரண்டப்படுகிறார்கள், ரத்தம் உறிஞ்சப்படுகிறார்கள். இந்த அரசு தொழிலதிபர்களுக்குப் பாதுகாப்பு அளித்துக்கொண்டிருக்கிறது. இதுதான் இந்த அரசினுடைய தொழிலாளர் கொள்கை என்று இருப்பதை மாற்ற வேண்டும் என்று நான் மிகப்பணிவோடும் அன்போடும் கேட்டுக் கொள்கிறேன். எனக்குள்ள நம்பிக்கைக்குக் காரணம் என்னவென்றால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள் சங்கங்களிலே தலைவராக இருந்தவர்கள். பல காலம் போராடியவர்கள், நல்ல அனுபவம் படைத்தவர்கள். அவர்களுடைய காலத்திலேயாவது தொழிலாளர்கள் பக்கத்திலே இருந்து, தானே அவர்களுக்குச் சாதகமாக இருப்பார்கள் என்று நினைத்தேன். அப்படியில்லை என்று தெளிவாக எனக்குத் தெரிகிறது. இந்தக் கொள்கையிலே கேபிடலிஸ்ட்ஸுக்குப் பாதுகாப்பு இருக்கும் என்று சொல்லிவிட்டார்கள். அதற்கு எங்கள் ஆதரவு இல்லை என்று சொல்லி, சொல்லிலே அல்லது பேச்சிலே மாத்திரம் காட்டினால் போதாது என்று சொல்லி, செயலிலே காட்டவேண்டும் என்று சொல்லி அமைகிறேன். வணக்கம்.

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் மாண்புமிகு அங்கத்தினர்கள் திருவாளர்கள் நல்லசிவன், அனந்தபுத்தூர் ராமலிங்கம், மாணிக்கம், சனார்த்தனம், இராமமூர்த்தி, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், நான் மேலவை உறுப்பினராக இருந்த போது என் பக்கத்திலே உட்கார்ந்து இருந்தவர், இப்போது எதிர்க் கட்சியிலே இருப்பது துர்ப்பாக்கியம். அவர்கள் இங்கே வருவார்கள் என்றும் எதிர்பார்க்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** நாங்கள் எல்லாம் அங்கேயும் நீங்கள் எல்லாம் இங்கேயும் வரப்போகிறீர்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** சின்னத்தம்பியாகிய தாங்களும் அண்ணன் கிட்டே வளர்ந்தவர் தானே. இங்கே பேசிய எல்லா உறுப்பினர்களுமே அவரவர்கள் கட்சிக்கு ஏற்ப கொள்கையின் அடிப்படையிலே பேசியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். பல்வேறு கட்சிகள் இருப்பது என்பதே ஒரு 'சார்ம் ஆப் டெமாக்ரஸி' யாகும் ஒரே கட்சி ஆட்சி நடத்துகின்ற நிலை. எதிர்க் கட்சியே இல்லாமல் ஆளக்கூடிய ஆட்சி இப்போது நடக்கவில்லை. எப்போதுமே என்னை மிக வேகமாக எதிர்த்துப் பேசியவர்களில் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. மாணிக்கம் அவர்களும் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்கள். அவர்களும் பேசினார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வது இந்தியா பூராவிலுமே உள்ள 22 மாநிலங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி இருக்குமானால் எதிர்க் கட்சியிருக்குமா என்பதைப் பற்றியும், எதைப்பற்றியும் எதிர்த்துப் பேசுவதற்கு, அமைச்சர்களை எதிர்த்துப் பேசவும் வாய்ப்பு இருக்குமா என்பதையெல்லாம் ஒரு கணம் சிந்திக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. ஆ. நல்லசிவன் அவர்கள் பேச எழுந்தார்கள்)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இப்போது அங்கத்தினர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுவதற்கு நான் இடம் கொடுக்க விரும்பவில்லை. இந்த உலகத்திலே நிரூபிக்கப்பட்ட ஒன்று அது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். சிறையிலே வைத்து பிரியாணி போடுவதைவிட . . .

MR. DEPUTY CHAIRMAN: The Hon. Minister is not yielding. The hon. Member may ask his questions at the end.

THE HON. THIRU S. RAGHAVANANDAM: I will yield to the hon. Member after I finish my speech. He can ask any number of questions and I will wait and answer them.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** சிறைச்சாலையிலே வைத்து பிரியாணி போடுவதைவிட வெளியிலேயிருந்து ஒரு வேளை கஞ்சி குடித்தாலும் போதும் என்பதுதான் ஜனநாயகத்தினுடைய அடிப்படை என்பதை நாம் எல்லாம் அறிந்திருக்கிறோம். ஜனநாயகத்திலே உங்கள் இரண்டுபேர்களுடைய கட்சி இந்தியாவிலே ஆளுகின்ற நிலைமைகள் வந்தால், உங்களுடைய தத்துவம் இருக்கும்.





(திரு. ஆ. நல்லசிவன் எழுந்தார்)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** உட்காருங்கள் இடையிலே குறுக்கிட்டுப் பேச வேண்டாம். கடைசியாகப் பேசுங்கள். விளக்கம் கேளுங்கள்.

THIRU P. MANICKAM: Political philosophy is being discussed and in that case, it will land us in something else.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இந்த அரசு தொழிலாளர்களுக்கு துரோக அரசு என்று சொன்னார்கள். இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. மாணிக்கம் அவர்களும் அவர்கள் கொள்கைகளில் மிகப் பற்றுக்கொண்டிருப்பவர்கள் 'you are functioning as per your political philosophy'.

In his speech at the International meeting of communist workers in 1969, V. I. Breshnev emphasised the sharpening of the class struggle in the capitalist war as an inexorable fact. Suffice it to say that from 1960 to 1968 a total of 300 million persons took part in the strike struggle as compared with 150 million over the preceding 14 years.

முந்தைய 14 ஆண்டுகளில் 150 மில்லியன் பேர்கள் ஸ்ட்ரைக் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். 1960-68 ல் 300 மில்லியன் பேர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். இப்படி 'ஷார்ப்பனிங் ஆப் தி கிளாஸ் ஸ்ட்ரகல்' என்று இருந்ததன் அடிப்படையைக் கொண்ட கட்சியைச் சேர்ந்தவர்களாக நீங்கள் இருவரும் இருக்கிறீர்கள். ஆகவே அப்படிப் பேசுகிறீர்கள்.

இங்கே பேசிய மாண்புமிகு அங்கத்தினர் அருமை சகோதரர் திரு. இராமமூர்த்தி அவர்கள், சோஷலிசத்தில் மிக்க நம்பிக்கை வைத்திருப்பவர்கள். சோஷலிசத்தில் நம்பிக்கை வைத்து பல்வேறு நல்ல சட்டங்களைக் கொண்டு வந்த இந்திரா அம்மையார் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், அவர்கள் கொண்டு வந்த நல்ல பல சட்டங்களிலே ஒன்றைக்கூட இப்போது சுப்ரீம் கோர்ட் செல்லாது என்று சொல்லிவிட்டது. இன்னமும் அவர்கள் காலத்திலும் சரி, எமர்ஜென்சி காலத்திலும் கொண்டுவந்த பேவரபிள் லெஜிஸ்லேஷன், அது தொழிலாளர் வர்க்கத்திற்கு நன்மை செய்யக்கூடிய அளவுக்கு இருந்தது. எனக்கு சரியாக ஞாபகம் இருக்குமானால், அவைகள் எல்லாம் திரு. ரகுநாத ரெட்டி அவர்களால் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் என்று நினைக்கிறேன். அதிலே கிராஜுவிட்டி ஆக்ட், 15 டேஸ் மின்ஸ் 15 டேஸ் என்பது பற்றி எல்லாம் கூடச் சொன்னார்கள். அப்படிப்பட்ட

சட்டங்களை எல்லாம் கொண்டு வந்த சோஷலிசத்தில் நம்பிக்கையுள்ள ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் திரு. இராமமூர்த்தி அவர்கள். அவர்கள்கூட 12 (3) செட்டில்மெண்ட் பண்ணிக் கொண்டதைப் பற்றிப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அவர் பாராட்டுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் பற்றிப் பேசிய மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்கள் என்னை '12(3) அமைச்சர்' என்று சொன்னார்கள். அப்படி என்னை '12(3) அமைச்சர்' என்று சொன்னதைப் பொறுத்து நான் அதைப் பெருமையாகவே கொள்கிறேன். அதற்கும் சான்றாக, இங்கே பல்லாண்டுகளாக ஆண்ட கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினராகவும், பல நல்ல கட்டுரைகளை எழுதி, தமிழகத்திலே பெரும் புகழும் பெற்றவரான திரு. இராமமூர்த்தி அவர்களுடைய நற்சான்றை இந்த அரசுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதே அதற்கு நல்ல எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 8-20)

அதிக காலமாக இந்த நாட்டை ஆண்ட கட்சிக்காரர்கள், அதிக அனுபவம் பெற்றவர்கள் என்பதால், We have to draw lessons from them.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. மாணிக்கம் அவர்களும் ஒரே மாதிரிதான் பேசினார்கள். இங்கே ஒன்றை நான் படிக்க விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கேரளா பற்றிச் சொன்னார்கள். அவர் சொல்லவில்லை என்றால் நானும் சொல்ல மாட்டேன். நான் அவர்களுக்கு மிகவும் மதிப்பு வைத்திருக்கிறேன். The hon. the Leader of the Opposition is a highly educated and intellectual person. எனவே, அவர் சொன்ன காரணத்தால், கேரளாவில் நடந்தது பற்றிக் கூற விரும்புகிறேன். 12—4—1979 மக்கள் குரலில் வந்த செய்தியைப் படிக்கிறேன். திரு. பி. இராமமூர்த்தி, சி.பி.எம். லீடர், எம்.பி. அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தலைவருடைய அனுமதியோடு தான் அமைச்சரவர்கள் படிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : I think I am getting the permission to read this. திரு. மாணிக்கம் அவர்கள் சார்ந்துள்ள கட்சி இரட்டை வேடம் போடுவதாக திரு. இராமமூர்த்தி, எம்.பி. அவர்கள் குற்றம் சாட்டினார். ஏ.ஐ.டி.யு.சி இரட்டை வேடம் போடுவதாகச் சொல்லுகிறார். கேரளாவில் மின்சாரத் தொழிலாளர்கள் கைது செய்யப்





பட்டு, அடக்கு முறைக்கு ஆளானபோது, ஏ.ஐ.டி.யு.சி. கண்டனம் தெரிவிக்காததைச் சுட்டிக்காட்டி, அவர் அப்படிச் சொன்னார். இதிலே இருக்கிற கான்பிளிக்டைப் பார்க்க வேண்டும். அவரவர்கள் என்று வந்த பிறகு சுயநலம் வரத்தான் செய்யும். தன்னுடைய கட்சியை வளர்க்க வேண்டுமென்ற நேரத்தில், அப்படித்தான் ஆகிவிடுகிறது. தொழிலாளர் சங்கத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்த திரு. பி. இராமமூர்த்தி அவர்கள் அப்படிச் சொல்லுகிறார்கள். The Hon. Members can draw their own conclusions. போட்டிச் சங்கம் ஆரம்பித்தது பற்றி திரு. நல்லசிவன் அவர்கள் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன். நாகையில் பல்நெடுங்காலமாக இருந்துவருவது ஏ.ஐ.டி.யு.சி. சங்கம்தான். திரு. கே. எம். சுந்தரம் அதன் தலைவர், திரு. மாணிக்கம் அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர். அங்கே திரு. உமாநாத் அவர்கள் வெற்றிபெற்ற பிறகு, சி.ஐ.டி.யு.சி. சங்கம் என்று ஆரம்பித்து, ஏ.ஐ.டி.யு.சி. சங்கத்திற்குத் தொல்லை கொடுப்பதாக என்னிடம் குறைபட்டுக் கொண்டார்கள். நான், அங்கேயிருப்பது ஏ.ஐ.டி.யு.சி. சங்கம்தான் என்று சொன்னேன். ஆக, போட்டிச் சங்கத்தை யார் ஆரம்பிக்கிறார்கள் என்பது தெரிகிறது. நம்முடைய சங்கம்தான் முற்போக்குப் பாதையில் போகும் சங்கம், மற்றதெல்லாம் பிற்போக்குச் சங்கங்கள் என்பதுதான் ஒவ்வொருவருடைய கருத்தாகவும் இருக்கிறது.

அடுத்து, எந்தப் போராட்டத்தில் அரசுக்கும், அந்தப் போராட்டத்திற்கும் சம்பந்தம் இருக்கிறதென்பதைச் சொல்ல வேண்டும். டி.ஐ. சைக்கிள் தொழிலாளர்கள் போராட்டத்திற்கும் அரசுக்கும் என்ன சம்பந்தம்? 10 மாதம் போராட்டம் நடந்தது. தொழிலாளர்கள் தனியாகப் பிரிந்து சென்று, ஒப்பந்தம் போட்டுக்கொண்டு, சென்று விட்டார்கள். பியர்ட்செல் நிறுவனத்தில் 10 சங்கங்கள் ஒன்றாகச் சேர்ந்து அவர்களாக தொழிலாளர் ஒருவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டு, ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். சிம்கோ போராட்டம் பற்றி நான் வேதனையோடு சொல்கிறேன். உழைக்கும் கரங்களே நாளை உலகை ஆள வேண்டுமென்று சொன்னவர்தான், அதற்காக உழைப்பவர்தான் புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள். இன்றையதினம் ஆட்டோகிராஃப் கேட்கும்போதுகூட, உழைப்பவர்களே உயர்ந்தவர்கள் என்று எழுதி, எம். ஜி. ராமச்சந்திரன் என்று கையெழுத்துப் போடுகிறவர் இன்று நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார். இரவு பகலாக, நானும், முதலமைச்சரவர்களும், அமைச்சரவையில் இருக்கக்கூடிய மற்ற அமைச்சர்களும் தொழிலாளர்கள் பிரச்சினையை அணுகும்போது, அவர்கள் நலன் குறித்துத்தான் ஆராய்கிறோம். என்னுடைய துறையில் மட்டுமா

தொழிலாளர் பிரச்சினை இருக்கிறது? அருமைத் தம்பி இராசா முகமது பொறுப்பேற்றுள்ள இலாகாவில் அந்தப் பிரச்சினை இருக்கிறது; திரு. பொன்னையன் இலாகாவிலும் அந்தப் பிரச்சினை இருக்கிறது; மாண்புமிகு திரு. கே. எ. கே. அவர்கள் இலாகாவில் இருக்கிறது. Majority of the struggles are due to inter-union rivalry.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு அமைச்சர்களை 'தம்பி' என்று சொல்லலாமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** முதலியாரை அடுத்து நான் தான் அமைச்சர்களிலே மூத்தவன். எனவே, அப்படிச் சொல்லும் உரிமையைக் கொடுத்திருக்கிறார்கள்.

MR. DEPUTY CHAIRMAN: The convention in the Legislature is that an hon. Member should refer to another hon. Member as 'my hon. Friend' if he is of his own party or side and as 'the hon. Gentleman' if he is on the opposite side.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** நல்லதாக இருந்தால் கன்வென்ஷனைக்கூட ப்ரேக் பண்ணலாம். எனவே, மாண்புமிகு சகோதரர் என்று சொல்கிறேன்.

எனக்கு இருக்கிற வேதனையெல்லாம் நடக்கக்கூடிய அத்தனை தொழிற் சங்கப் போராட்டங்களுக்கும், அரசைத் தாக்குகிறார்கள். 17—4—1978-ல் சிம்கோ மீட்டர் நிறுவனத்தில் ஒப்பந்தம் போட்டவர்கள் ஐ.என்.டி.யு.சி. சங்கத்தார். ஆனால், அதைப் பிற்போக்கு சங்கமென்று சி.ஐ.டி.யு.சி. சங்கம் கூறுகிறது. எச்.எம்.டபிள்யு.-விலும் அப்படித்தான். 3 சங்கங்கள் கையெழுத்து போடுகின்றன; நான்கு சங்கங்கள் அதை எதிர்க்கின்றன. எல்.ஐ.சி. பற்றியும் சொல்கிறேன். அங்கே கையெழுத்து போடப் போகிறவர்களை, போகக்கூடாதென்று தடுக்கப் போராட்டம். நான் வேதனையோடு சொல்கிறேன், நொந்த உள்ளத்தோடு சொல்கிறேன், 40 ஆண்டு காலம் தொழிற் சங்கங்களில் உழைத்தவன் என்பதால் சொல்கிறேன். சேஷசாயி பேப்பர் போர்ட்ஸ் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றியும் சொல்கிறேன். 55 நாட்கள் போராட்டம் நடந்தது. நானும், திரு. நல்லசிவன் அவர்களும் அதற்கு உழைத்த உழைப்பு எவ்வளவு? போலீஸ்காரர்கள் விரட்டியபோது எங்கே போய் ஒளிந்துகொண்டோம்? அதை நினைக்க வேண்டும். 1974-ல் அதை நடத்தினோம். உங்களுடைய சகோதரர், உங்களோடு உழைத்தவர், இன்றைக்கு தொழிலாளர் நல அமைச்சராக இருக்கிறார். எப்படி நான் முதலாளிகளின் பக்கம் போய்விடுவேன்? கட்டிய பணத்தை எல்லாம் கொடுத்துவிட்டு, இன்றைக்கு என்னைப்போல் பாரியாக முதலமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆனால், எந்தச் சங்கம் பெரியது, யார்



முன்னுக்கு வருவது என்று உங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டு, முதலாளியைத் தப்பிக்க விடுகிறீர்கள். இதில்தான் சங்கடம் இருக்கிறது. தே ஆர் வெரி ஹாப்பி. இரண்டு சங்கங்கள் சண்டை போட்டுக்கொள்கிறார்கள், நம்மிடம் வரவில்லை என்று முதலாளிகள் சந்தோஷப்படுகிறார்கள். இரண்டு ஆடுகள் சண்டை போடுகின்றன என்று அதைப் பார்த்து சந்தோஷப்படுகிறார்கள். இந்த நிலையிலிருந்து தயவுசெய்து தொழிற் சங்கங்களைக் காப்பாற்ற வேண்டும். தொழிற் சங்கங்களுக்காக எவ்வளவு தியாகம் செய்திருக்கிறீர்கள்? திரு. நல்லசிவன் அவர்களும், திரு. மாணிக்கம் அவர்களும் தொழிற் சங்கத்திற்காக முழு நேரமும் ஈடுபட்டவர்கள். நானும் 13 தடவைகள் சிறை சென்றிருந்தாலும், அவர்கள் தியாகத்தோடு என்னுடைய தியாகத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, என்னுடைய தியாகம் நூற்றில் ஒரு பங்கு இருக்காது. அவ்வளவு தியாகம் செய்தவர்கள் அவர்கள். ஆனால் சமீப காலத்தில் கொஞ்சம் பாதை மாறி, தவறான பாதையில், வழியில் செல்கிறார்கள். தொழிற்சங்கத்திற்கு தொழிற்சங்கம் போராடும்போது, அவர்கள் நிலை என்ன ஆகிறதென்றால், இரண்டு சங்கங்களும் செல்வாக்கு இழந்துவிடுகின்றன. மற்ற சங்கங்கள் நன்றாக வளர்ந்து வருகின்றன. இதனால் தான் தமிழகத்தில் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் எந்தப் போராட்டம் நடந்தாலும், அது தொழிற் சங்கப் போராட்டமாகத் தான் இருக்கும். அதில் அரசியல் கட்சிகள் வந்ததில்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு ஞாபகத்திற்காகச் சொல்கிறேன், 1968-ல் நான் உறுப்பினராக இருந்தபோது, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. தங்கப் பாண்டியன் அவர்களும் உறுப்பினராக இருந்தார். எதிர்க் கட்சித் தலைவர்களும் உறுப்பினராக இருந்தார்கள். அப்போது நாங்கள் 'குட் ஓல்ட் ப்ரெண்ட்ஸ்'. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது சர்க்கரை ஆலைப் போராட்டம் நடந்தது. பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம் நடந்தது. பீடித் தொழிலாளர்கள் போராட்டம் நடந்தது. அப்போதெல்லாம் தொழிற் சங்கங்கள் எல்லாம் ஒன்றாக இணைந்து, போராடி, தியாகங்களைச் செய்து, அவரவர்களுக்கு வேண்டிய ஊதிய உயர்வுகளையும், சலுகைகளையும் பெற்றார்கள். எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து கொண்டு வந்து, 'பந்த்' செய்யவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 1972 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்பு நான் தொழிற் சங்கப் பொதுச் செயலாளராக இருந்திருக்கிறேன். பின்னால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொழிற் சங்கப் பிரிவின் செயலாளராக இருந்திருக்கிறேன். அதற்கு முன்னாலே, பேரறிஞர் அண்ணா அவர்கள், என்னைக் கூப்பிட்டபோது, நான் விருப்பாம் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தேன். அண்ணா அவர்களிடமிருந்து அழைப்பு வந்த

போது, வாலண்டரி ரிடைர்மென்ட் எழுதிக்கொடுத்துவிட்டு வந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களுக்குத் தெரியும், போன கூட்டத்திலேகூட சொன்னேன். நான் கடலூர் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தபோது, மாநாட்டிற்காக அவரிடம் 1952-ல் நன்கொடை வாங்கியிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அந்தக் காலத்திலேயே, அண்ணா அவர்கள் அழைத்தவுடன், வாலண்டரி ரிடையர்மென்ட் எழுதிக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன். எத்தனை ஆண்டுகள் போராட்டம் நடத்தியிருக்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், ஆன்ட்டி லேபர் கவர்ன்மென்ட் என்று சொன்னார்கள். உங்கள்பால் வைத்திருக்கும் மதிப்பை வைத்துக் கேட்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொழிற் சங்கப் போராட்டங்கள் ஒரு மாத காலத்திற்கு நடந்தன. சர்க்கரைத் தொழிலாளர்கள் போராட்டம் ஒரு மாதம் நடந்தது. பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம் ஒரு மாதம் நடந்தது. சேஷசாயி பேப்பர் போர்ட்ஸ் போராட்டம் 55 நாட்கள் நடந்தது. அப்போதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர, மற்ற கட்சிகள் அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து, போராட்டம் நடத்த வேண்டுமென்று சொல்லி, ஏதாவது ஒரு போராட்டத்தை ஸ்பான்சர் செய்திருக்கிறோமா? ஏதாவது அப்படி நடந்திருக்கிறதா? இல்லவே இல்லை.

(பிற்பகல் 8-30)

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டதனால் சொல்கிறேன். அப்போது எப்போதாவது தொழிலாளர்கள் போராடக் கூடாது என்று அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டதா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடன் நான் கான்டிரோவர்சியல் சப்ஜெக்டில் இறங்க விரும்பவில்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களையும் என் கூட அழைத்துக் கொண்டு போக வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏனென்றால், வந்து விடுவார்கள் என்ற நம்பிக்கையில் தான் நான் முதலிலேயே சொன்னேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கு நான் மதிப்பு கொடுக்கிறேன். ஆனால் பேசுகிறபோது 'நீ அங்கு வந்து விடு, நீ இங்கு வந்து விடு' என்று பேசுவது அரசியலில் அவ்வளவு நல்ல மரபுக்கு உகந்ததாக இல்லை. யாரும் அவ்வாறு போவதும் இல்லை. அப்படி ஆட்சியில் உள்ளவர்கள் நினைத்துக் கொண்டிருந்தால் ஏமாந்து கொண்டிருப்பீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மீதுள்ள பாசத்தாலும், மரியாதையாலும் அப்படிச் சொன்னேன். We can travel together at least. ஒன்றாகப் பயணம் செய்யலாம் என்று சொன்னேன். மின்சார ஊழியர்களுடைய போராட்டத்தில் டி.ஐ.ஆர்.ஐ. உபயோகப்படுத்தி சட்டம் போடப்பட்டது. அதைப்பற்றி நான் இங்கு சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும் சொல்ல வேண்டியதை இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்த ஒன்று ஹெல்தி கன்வென்ஷன் என்பது பற்றி பேரவையில் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

12 (3) செட்டில்மென்ட் பற்றிச் சொன்னார்கள். சேஷசாயி பேப்பர் போர்ட்ஸ் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்களே அந்தப் போராட்டம் 55 நாட்கள் நடைபெற்றபோது கலைஞர் ஆட்சி இருந்தது. அப்போது நடந்த கன்சிலியேஷன், தொழில் தகராறு சேஷசாயி பேப்பர் போர்ட்ஸ் லிமிடெட், காவேரி ஆ.எஸ்., ஈரோடு, சேலம் வேலை நிறுத்தம் சம்பந்தமாக சமரச தோல்வி அறிக்கை, அதாவது பெயில்யூர் ரிப்போர்ட் ஒன்றைக் கொடுத்தது. ஒப்பந்தம் 12(3)-ல் இருக்கிற காரணத்தால் இந்த கிளாசை மாற்றி எந்த நன்மையையும் செய்ய முடியாது என்று அப்போது சொன்னார்கள். இது சமரச முறிவு அறிக்கை. ஆனாலும் சமரச முறிவு அறிக்கை வந்ததற்குப் பின்னால் கான்பிடன்சியல் ரிப்போர்டை லேபர் ஆபீசர் லேபர் கமிஷனருக்கு எழுதுவார். லேபர் கமிஷனர் அரசு செயலருக்கு எழுதுவார். செயலாளர் அமைச்சருக்கு அனுப்புவார். அமைச்சர் அதைப் பரிசீலனை செய்து தொழில் கோர்ட்டுக்கு அனுப்பலாமா அல்லது வேண்டாமா என்று உத்தரவிடுவார். அப்படி 5—11—1974 அன்று உத்தரவு போட்டார்கள்.

All the above demands are covered by the settlement under section 12 (3) of the Industrial Disputes Act. Clause 14 of the settlement specifically provided that the Unions will not raise any demand which will involve any financial commitment of a general nature and refrain from making such demands during the current year of the settlement. These is, therefore, no case for adjudication on these issues.

ஆக இவைகள் 12(3) ஒப்பந்தங்கள் என்று வருகின்ற காரணத்தால் தொழில் மன்றங்களுக்கு அனுப்ப இயலாது என்று கூறப்பட்டது.

Demand No. 5 : Promotion should be given strictly according to seniority of service in the respective grades.

7 (*b*) apprentices should not be taken to the higher grade above the supervisory grade and vacancies should be filled up only by promotion. The issues are purely marginal functions. The Government do not consider it necessary to refer any of the above demands for adjudication for the reasons stated thereunder.

இது 5—11—1974-ல் நடைபெற்றது. 12(3) ஒப்பந்தத்தை தொழில் மன்றத்திற்கு அனுப்ப முடியாது என்று சொல்லியிருப்பது ஹெல்தி கன்வென்ஷன், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொல்வது போல் திராவிட முன்னேற்றக் கழகம் செய்ததை எல்லாமே தவறு என்று நான் சொல்ல மாட்டேன். அது போல் நீங்களும் நாங்கள் போட்ட சட்டங்கள் எல்லாம் தவறானவை என்று வருங்காலத்தில் சொல்ல மாட்டீர்கள். கலைஞரும் 12 (13) ஒப்பந்தத்தின் ஹெல்தி கன்வென்சனை தான் சொன்னார். இராஜாராமும் 12 (3) ஹெல்தி கன்வென்ஷனைத் தான் சொன்னார். இப்போது அமைச்சராக இருக்கிற நானும் 12(3) பற்றி கன்வென்ஷனைத் தான் சொல்கிறேன். மாண்புமிகு சி.பி.ஐ. நண்பர்களும் சி.பி.எம். நண்பர்களும் அதை உடைக்கின்ற முயற்சியில் ஈடுபட வேண்டாம்.

கான்டிராக்ட் லேபர் கமிட்டி பற்றி சொன்னார்கள். அந்தச் சட்டத்திற்கு கான்டிராக்ட் லேபர் ரெகுலேஷன் மற்றும் அபாலிஷன் ஆக்ட் 1970 என்று தான் பெயர். இதை திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்த போது கொண்டு வந்தார்கள். இது நல்ல சட்டம்; அதை மறுத்து யாரும் பேசுவது நல்லதல்ல. ரெகுலேஷன் அண்ட் அபாலிஷன் என்று அதைச் சொன்னார்கள். கார் வேகமாகப் போகும்போது ரெகுலேட் பண்ணித் தான் பிரேக் போட வேண்டும். திடீரென்று பிரேக் போட்டு விட்டால் ஆபத்து வந்து விடும். அதற்காகத் தான் அந்த ஆக்டிலே கான்டிராக்ட் லேபர் ஆக்ட் 1970 லிக் இன் பிராக்கட் ரெகுலேஷன் அண்ட் அபாலிஷன் என்று சொன்னார்கள். அதற்காகத் தான் இது அமைக்கப்பட்டிருக்கிறது. ரெகுலேட் செய்வதற்காக இந்தக் கமிட்டி. இப்பொழுது மிகவும் கேர்புல் ஆக வேலை செய்ய வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சேஷாயி பேப்பர் போர்ட் பற்றி எடுத்துக்காட்டிச் சொன்னார்கள். சேஷாயி பேப்பர் போர்டை இறுதியில் விசாரிக்க தூது அனுப்பியிருக்கிறார்கள். அவர் எந்தக் காரியம் செய்யவில்லை. நூலின் பரிந்துரை அது ஆயின் பரிசீலனைக்கு வரும். அந்தந்த நிலைமைகளைப் பற்றி அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கும். எனவே தான் அந்தக் கமிட்டி எவ்வளவு சிறப்பாகப் பணி செய்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர்கள் நினைப்பது போல் ஆட்சியிலிருக்கின்ற நாங்கள் வேகமாகப் போவது ஆபத்தானது. பெரிய தொழிற்சாலைகள் நிரம்ப தமிழகம் முழுவதும் வர வேண்டும். பெரிய தொழிற்சாலைகள் தமிழகம் முழுவதும் வர வேண்டுமென்று விரும்புகின்ற, கருதுகின்ற அதே நேரத்தில் தமிழகம் முழுவதும் சிறு தொழில்கள் வர வேண்டும். ஒரு கவளம் சோறு கூட இல்லாமல் இருப்பவர்களுக்கு ஒரு கவளம் சோறாவது கொடுத்துக் காப்பாற்ற வேண்டிய நிலையில் இந்த அரசு இருக்கிறது.

(திரு. நல்லசிவன் எழுந்தார்)

நான் பேசிக்கொண்டிருக்கின்ற டிரெண்ட் போய் விடும். நான் ஓல்ட் மேன். கிவ் மி சம் கன்ஸெஷன். என்னுடைய உரையை நான் முடித்த பிறகு உறுப்பினர் அவர்கள் பேசலாம். இரண்டு பேருக்கும் பொலிட்டிக்கல் பிலாசபி உண்டு. அதற்கேற்றாற்போல் நாங்கள் நடந்துகொண்டிருக்கிறோம். இந்த அரசு தொழிலாளர்களுக்கு நன்மை செய்திருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது அன்-ஆர்கனைஸ்டு லேபர் பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு இந்த அரசு ஊதியத்தை நிர்ணயித்திருக்கிறது. இது முதல் காரியம், அன்-ஆர்கனைஸ்டு லேபருக்கு என்று தனியாக ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. மூன்றாவதாக தனியார் கையெழுத்து வாங்கி தொழிற்சாலையை வாங்குவது, திடீர் வேலை நிறுத்தம் செய்வது, மெஜாரிட்டி இல்லாத இடத்தில் கையெழுத்து வாங்கி ஒப்பந்தத்தைச் செய்வது போன்ற இப்படிப்பட்ட விஷயங்களை எல்லாம் தவிர்ப்பதற்கு தனியாக ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்கள் விரும்புகிறார்கள். ஒரு "காம்பிரிஹென்சிவ் லெஜிஸ்லேஷன்" என்கிற முறையில் அது அநேகமாகத் தயாராகி அவருடைய ஒப்புதலுக்காக அனுப்பக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொல்லியது போல் தொழிலாளர் வர்க்கத்திற்குச் செய்ய வேண்டிய நன்மைகளைச் செய்வதற்காக, சட்டத்தின் மூலம் அவர்களுக்கு நல்வாழ்வு கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். நான் ஏற்கெனவே பேரவையில் என்னென்ன சட்டங்களைக் கொண்டு வரப் போகிறோம் என்று அறிவித்து விட்டேன். அது பத்திரிகைகளில் கூட வந்தது. மாண்புமிகு உறுப்பினர்கள் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அதில் நிறைய விஷயங்களைச் சொல்லியிருக்கிறேன். கேஷுவல் லேபர் என்று சொல்லிக்கொண்டு அவரை வேலையை விட்டு நீக்கக்கூடாது. பெர்மனென்ட் ஆக்க இன்னின்ன வழிவகைகளைச் செய்ய வேண்டும். தனிப்பட்ட முறையில் கையெழுத்து வாங்கி

தொழிற் சங்க அங்கீகாரம் பெற்ற பெரிய தொழிற் சங்கங்களை புறக்கணிக்கக் கூடாது. சிறுபான்மையினர் கையெழுத்திட்டு அதைப் பெரும்பான்மையினர் இருக்கிற தொழிற்சங்கங்களின் மீது திணிக்கக் கூடாது. இப்படிப்பட்ட திட்டங்களைச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் நல்லசிவன், மாணிக்கம் ஆகியோர் சொல்லியதுபோல் தலைவர் தன்னிச்சையாகக் கையெழுத்துப் போடக்கூடாது, இரகசிய வாக்கெடுப்பு எடுத்து அந்த இரகசிய வாக்கெடுப்பின் மூலம் மெஜாரிட்டி தொழிலாளர்கள் அந்தத் தொழிற் சங்கத் தலைவருக்கு ஆதரவு கொடுத்தால்தான் அவர் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட வேண்டும். அந்த வகையில் அவற்றை எல்லாம் மனதில் வைத்து ஒரு சட்டத்தைத் தயாரிக்க வேண்டுமென்று எனக்கு புரட்சித் தலைவரவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவருடைய திட்டங்கள் எப்படிச் சென்றுகொண்டு இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். இதைவிட புரட்சிகரமாக யாரும் செய்ய முடியாது. அதற்காகத்தான் சொல்கிறேன். ரெவலியூஷன் லீடர் என்றால் கையில் துப்பாக்கியைக் கொண்டு போக வேண்டுமென்று அர்த்தமில்லை. புரட்சிகரமான திட்டங்களை முற்போக்கான திட்டங்களைப் போட முடியுமா நிறைவேற்ற முடியுமா என்பது தான் அதற்கு அர்த்தம். இப்பொழுது அதற்கு வேண்டியதைத் தயாராகச் செய்து முடித்து அனுமதிக்காக அனுப்பப்பட இருக்கிறது. விரைவில் அது சட்டமாக வர இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். பியூரோகிரஸி புரசிஜர் இருப்பதால் கொஞ்சம் நாட்கள் ஆகலாம். மாண்புமிகு துணைத் தலைவரவர்களிடம் 15 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்லியிருந்தேன். இறுதியாக ஒன்றைச் சொல்கிறேன். இந்த ஆட்சி சொன்னதை எல்லாவற்றையும் நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய சித்தாந்தங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 15 நிமிடங்களல்ல. 25 நிமிடங்கள் தான் ஆகியிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவரவர்களே, இன்னும் 5 நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.





(பிற்பகல் 8-40)

இந்த ஆட்சியினுடைய ஒரு நம்பிக்கையை நான் சொல்லிவிட்டேன். தொழிலாளர்கள் போராடித்தான் தங்களுடைய நன்மைகளைப் பெறவேண்டுமென்ற நிலையில் இருந்து அவர்களை நீக்கி, தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டியவைகளை, சட்டபூர்வமாக்கி, ஒருவர் வேலை செய்தால் அவர் ஓய்வு பெறும்போது ஒரு ஆண்டிற்கு 15 நாட்கள் விதம் கிராச்சுயூட்டி ஊதியம் அவருக்குத் தரவேண்டும், 'எர்ன்ட் லீவு' தரவேண்டும், 'நேஷனல் ஃபெஸ்ட்டிவல் ஹாலிடேஸ்' அவருக்குத் தரவேண்டும் என்றெல்லாம் சட்டங்கள் இருப்பதுபோல் மேலும் நல்ல பல சட்டங்களைக் கொண்டு வர வேண்டும் என்பது தான் எங்களுடைய நோக்கம். 1982-லே நாங்கள் மக்களைச் சந்திக்கும்போது தெரியும். இவ்வளவு நல்ல சட்டங்களை எவ்வளவு விரைவில் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று மக்கள் அதிசயிக்கும் வகையில் செய்வோம். நான் முன்பு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிற்சங்கத் தலைவராகவும், ஸ்டேஷன் மாஸ்டராகவும் இருந்தவன். ரயில்வே தொழிலாளர்களின் குழந்தைகள் எந்த ஊருக்குப் பள்ளிக்குப் போனாலும், ரயிலில் இனாமாகப் போகலாம். அதைப்போல பஸ்களிலேயும், தொழிலாளர்களின் குழந்தைகள் போகும் நிலை ஏற்பட வேண்டும். நானும் என்னுடைய வாழ்க்கைத் துணைவியாரும், அன்மேரிட் டாட்டர்ஸ், பாய்ஸ் அண்டர் 21 இயர்ஸ், இந்தியாவிலே ஒரு எல்லையில் இருந்து இன்னொரு எல்லைக்குப் போவதற்கு எனக்கு ரயில் பாஸ் இருக்கிறது. நான் ரயில்வேயில் 20 ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்திருப்பதால் இந்த பாஸ் எனக்கு இருக்கிறது. ரயில்வேயில் அப்படி பாஸ் கொடுக்கப்பட்டிருப்பதைப்போல, பஸ் போக்குவரத்திலும் தொழிலாளர்களுக்கு பாஸ் கொடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு கோரிக்கைகளையும் ஒத்துக் கொள்ளவில்லையா ? இது சாதாரண அச்சீவ்மென்டா ? போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்கு ஜாலியாகப் போகிறார்கள். புரட்சித் தலைவர் வாழ்க, புரட்சித் தலைவர் வாழ்க என்று சொல்லிக்கொண்டு போகிறார்கள். ரயில்வேயில் தொழிலாளிகள் பாஸ் எடுத்துக்கொண்டு குடும்பத்துடன் எங்கே வேண்டுமானாலும் போகிறார்கள். ரயில்வே தொழிலாளர்கள் அனுபவிக்கின்ற அந்த உரிமை, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் வேண்டும் என்று நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது 1,500 கி.மீ. தூரம் பஸ் தொழிலாளி குடும்பத்துடன் போகும் சலுகை கொடுக்கப்பட்டுவிட்டது. இப்படியாக, வி ஆர் கிரியேட்டிங் ஹிஸ்ட்டரி இன் இந்தியா. இப்படிப்பட்ட காரியங்களை

[திரு. எஸ். இராகவானந்தம்] [1979 ஏப்ரல் 23

நாங்கள் செய்துகொண்டு வருகிறோம். தொழிலாளர் துறை என்று பார்க்கும்போது, போக்குவரத்துத் துறை என்பது மட்டுமல்ல மற்ற துறைகளிலேயும் எவ்வளவு செய்கிறோம் என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

பீடி சுற்றும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் சட்டங்களைத் திருத்தவேண்டும் என்று செக்ஷன் 2 (ஜி) (பி) 3 அண்ட் 4 திருத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். டிரேட் மார்க் உரிமையாளர் தான் வேலைக்கு தொழிலாளர்களை வைக்கும் முதலாளி என்ற நிலை உருவாகும். அந்த நிலை உருவானால்தான் 'டிரேட் மார்க் ஓனர் இஸ் தி எம்ப்ளாயர்' என்ற நிலை வந்தால்தான் இப்படிப்பட்ட தொழிலாளிகளுக்கு ஒரு பாதுகாப்பு வரும். ஆகவே, செக்ஷன் 2 (ஜி) (பி) 3 அண்ட் 4—மாற்ற வேண்டும் என்று எழுதியிருக்கிறோம். அது கன்கரன்ட் லிஸ்டிலே இருக்கிறது. எனவே மத்திய அரசு இதை மாற்ற வேண்டும். நிலையாணை, 100-ம் அதற்கு மேற்பட்டும் உள்ள தொழிலாளர்களுக்குத்தான் பொருந்தும் என்ற நிலை இருந்தது. அதை இப்போது 50-ம் அதற்கு மேலும் உள்ள தொழிலாளர்களுக்கும் பொருந்தும் என்று சட்டமியற்றியிருக்கிறோம்.

எட்டு நாட்கள் ஒரு தொழிலாளி தொடர்ச்சியாக 'ஆப்செண்ட்' ஆனால் 'ஹி ஹாஸ் செக்கிரிஃபைஸ்டு ஹிஸ் சர்விஸ்' என்று இருக்கிறது. 8 நாட்கள் வேலைக்கு வராமல் இருந்தால் தன்னிச்சையாகவே வேலையைவிட்டுப் போனதாகக் கருத வேண்டுமென்று இருக்கிறது. ஸ்டேண்டிங் ஆர்டர் இருக்கிறது. அதை இப்போது மாற்றிவிட்டோம். 8 நாட்கள் தொடர்ச்சியாக வேலைக்கு வராமல் இருந்தாலும், அதை ஒரு 'மிஸ்-கான்டக்ட்' ஆக பாவித்து மற்ற குற்றங்களுக்கு நடத்துவது போலத்தான் நடத்தவேண்டும், 'செக்கிரிஃபைசிங் ஹிஸ் ஜாப்' என்ற நிலை இருக்கக்கூடாது என்று சட்டங்களையும் விதிகளையும் மாற்றினோம். இனிமேல் ஒவ்வொரு தொழிற்சங்கமும் 15 நாட்கள் நோட்டீஸ் கொடுத்து டி.சி.எல். அவர்களுக்கு எழுதினால், இருக்கும் ஸ்டேண்டிங் ஆர்டர்கள் மாற்றப்பட்டு தொழிலாளிகள் வெற்றிபெறுவார்கள், அவர்கள் லாபமடைவார்கள் என்ற நிலைமைகள் உருவாகியிருக்கின்றன. 20 தொழிலாளர்களும் அதற்கு மேற்பட்டும் இருந்தால் போனஸ் சட்டம் பொருந்தும் என்று விதி இருந்தது. இப்போது 10 பேரும் அதற்கு மேற்பட்டும் இருந்தால்கூட போனஸ் சட்டம் பொருந்தும் என்று சட்டங்களைத் திருத்தியிருக்கிறோம்.



1979 ஏப்ரல் 23] [திரு. எஸ். இராகவானந்தம்]

குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள எல்லாத் தொழில்களிலேயும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தேசிய பண்டிகை விடுமுறை நாள் 9 நாள் லீவு கொடுக்க வேண்டும். எந்தெந்தத் தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்திருக்கிறோமோ அந்தத் தொழில்களில் வேலை செய்யும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் 9 நாள் பண்டிகை விடுமுறை அளிக்க வேண்டும் என்றும் நாங்கள் சட்டத்தைத் திருத்தியிருக்கிறோம். பாக்டரியின்கீழ் வேலை செய்யும் பீடி சுற்றும் தொழிலாளர்கள் போனஸ் பெறும் உரிமை இருப்பதைப் போல, வீட்டில் இருந்துகொண்டு அந்த வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் அந்த போனஸ் சட்டம் பொருந்த வேண்டும் என்று சொல்லி அவர்களும் பெறுவதற்கு 1965-ம் ஆண்டு போனஸ் சட்டத்தைத் திருத்தியமைக்கக் கோரி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம்.

தொழிற்சாலைச் சட்டத்தில் 240 நாட்கள் தொடர்ந்து வேலை செய்தால், அடுத்த ஆண்டுமுதல் 20 நாட்களுக்கு 1 நாள் என்று லீவு கிடைப்பதை 180 நாட்களாகக் குறைக்க வேண்டும் என்றும் மேலும் ஒவ்வொரு ஆண்டும் இந்த 240 நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்ற விதியை மாற்றி ஒரு ஆண்டு இத்தகைய தகுதி நிர்ணயம் இருந்தாலே தொடர்ந்து விடுப்புச் சலுகை அவர்களுக்குத் தரவேண்டும் என்று சட்டத்தைத் திருத்தக்கோரி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம்.

'ரெஃபரன்ஸ்' பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். கோர்ட்டுக்கு அனுப்புவதைப் பற்றி நிறைய இருக்கின்றன. அனைத்தும் படிக்க இயலவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். 1971-ம் ஆண்டு கோர்ட்டுக்கு அனுப்பியது 461, 1972-ம் ஆண்டிலே 415, 1973-ம் ஆண்டிலே 378, 1974-ம் ஆண்டிலே 417, 1975-ம் ஆண்டிலே 451, 1976-ம் ஆண்டிலே 448, 1977-ம் ஆண்டிலே 690, 1978-ம் ஆண்டிலே 722 வழக்குகள் தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அங்கே போய் தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு 'வெல்கம் சேஞ்ஜ்' ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக கம்யூனிஸ்ட் தோழர்களில் இந்தமாதிரியான சேஞ்ஜ் ஏற்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. இது தொடர்ந்து இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். இரண்டு தினங்களுக்கு முன்னால்கூட—1975-76 என்று கருதுகிறேன், 'மதுரா கோட்ஸ்'-ல் உள்ள தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்குவதைப்பற்றி அந்தப் பிரச்சினையைத் தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று ஒரு மறுபரிசீலனை மனுவை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1979 ஏப்ரல் 23

ஆகவே, தொழில் நீதி மன்றத்தில் நம்பிக்கை வைக்கக்கூடிய அளவுக்கு இந்த ஆட்சி நடக்கிறது. இந்த டிரென்டை அவர்கள் தொடர்ந்து பின்பற்றுவார்கள் என்று நான் நம்புகிறேன். தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு டெம்பாரியாக இருந்தால் பல தொல்லை. அவர்கள் முதலில் டெம்பாரியாகவே வைக்கப்படுகிறார்கள். அவர்கள் வேலை செய்யவில்லை, நேற்று வேலைக்கு வரவில்லை. ஒரு 5 நாட்களாக, அல்லது 10 நாட்களாகத் தான் வேலை செய்கிறான், அல்லது இவனை நான் பார்த்ததேயில்லை என்று முதலாளிகள் சொல்லும் நிலைமைகள் இருக்கின்றன. இந்தமாதிரி நிலைமைகளை மாற்ற தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளியும் அவர் வகிப்பது 'கேஷுவல்' பதவியாக இருந்தாலும்கூட அவருடைய பணியைக் குறித்த 'டைம் கார்ட்', ஒரு கால அட்டை அவருக்கு வழங்க வேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எல்லா தொழிலாளிகளுக்கும் சட்டப்படி கிடைக்க வேண்டிய சம்பளத்துடன் கூடிய விடுப்பு வசதிகள், இ.பி.எஃப். இ.எஸ்.ஐ., போன்ற மற்ற சலுகைகளும் கிடைக்கும். அவர்கள் வேலை பற்றிய விவரங்கள் அவர்கள் வசம் இருப்பதால், நிர்வாகத்தோடு தொழில் தகராறு ஏற்படும்போது, அந்தத் தொழிலாளி பற்றிய விவரங்களை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. 'ஹி இஸ் நாட் என் எம்பிளாயி அண்டர் மி' என்று சொல்ல முடியாது. அதற்காகத்தான் கார்ட் சப்ளை பண்ணுகிறோம்.

எல்லாவற்றிலும் ஒரு மாற்றம் வந்திருக்கிறது. நான் சொன்னதுபோல தொழில் கோர்ட்டுக்கு அனுப்புங்கள் என்று கேட்கக்கூடிய அளவுக்கு திரு. சுவர்ணம் அவர்களும், மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்களும் கேட்டார்கள். நாம் இப்போது உடையிலே மாறியிருக்கிறோம், உணர்விலே மாறியிருக்கிறோம், எல்லாவற்றிலும் மாற்றம் வந்திருக்கிறது. ஒரு ஹெல்தி அப்ரோச் என்ற முறையிலே மாற்றம் வந்திருக்கிறது. எல்லாவற்றிலும் ஒரு சேஞ்ச் வந்திருக்கிறது. இப்போது சி.ஐ.டி.யு., எச்.எம்.எஸ்., ஐ என் டி யு சி., எ ஐ டி யு சி., டி என் டி யு சி., போன்ற அமைப்புக்கள் எல்லாம் இருக்கின்றன. நான் அவைகளின் தலைவர்கள் ஆலோசிக்க வேண்டும் என்று ஒன்று சொல்கிறேன். ஒரு பிரச்சினையில் நேரடியான பேச்சு வார்த்தைகளின் மூலமாகவோ 'கன்சிலியேஷன்' மூலமாகவோ முடிவு காண முயற்சிக்கும்போது ஒரு முதலாளி 50 ரூபாய் தருகிறேன் என்று சொல்வார். இல்லை. இல்லை 100 ரூபாய் வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அவர் 50 ரூபாய்தான் தருகிறேன் என்று சொல்வார். அந்தப் பிரச்சினையில் ஒரு முடிவுக்கு வராமல், 4, 5, 6, 10 மாதங்கள் என்று ஸ்டிரைக் நடந்து, கடைசியில் 50 ரூபாய்க்குப் பதிலாக ஒரு 60, 70 ரூபாய் வாங்கிக்



1979 ஏப்ரல் 23] [திரு. எஸ். இராகவானந்தம்]

கொண்டு போவதுண்டு, சில நேரங்களில் அந்த 50 ரூபாய்கூட வாங்குவதுண்டு. ஆனால் ஏற்படும் இழப்பு 2,000 ரூபாய், 3,000 ரூபாய். ஆகவே, ஒரு 'ஃபிப்டி பார் தர்டி' என்ற முறையில், பிரச்சினைகளை அணுகும்போது, அவைகளிலே சிந்தித்து முடிவெடுத்தால் நன்றாக இருக்கும் என்று ஒரு யோசனைச் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 8-50)

தொழிற்சாலையின் முதலாளி ரூ. 50 தருகிறேன் என்றால் அந்த 50 ரூபாயைப் பெற்றுக் கொள்வது. அது குறித்து செக்ஷன் 12(3) படி ஒரு ஒப்பந்தம் போட்டுக்கொள்வது. அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு அதில் ஏதாவது ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுப்பதானால் அதற்கும் ஒப்புக் கொண்டு ஒப்பந்தம் செய்து கொள்வது. அதற்குப் பிறகு செக்ஷன் 10(2) படி—தொழிற் தகராறு சட்டத்தின் பிரிவு 10(2) படி—அட்ஜுடிகேஷனுக்கு ஒரு வாய்ப்பிருக்கிறது. அதாவது தொழிலாளிக்கு இதற்கு மேலும் கிடைக்க வேண்டுமா வேண்டாமா என்பதை ஒரு 'இஷ்யூ'-வாக்கி இந்தப் பிரச்சினையைத் தொழிற் கோர்ட்டுக்கு விடுவது. ஆக இந்தப் பிரிவின் அடிப்படையில் முதலாளி சார்பிலும் தொழிலாளர்கள் சார்பிலும் இன்னொரு செட்டில்மெண்ட் போட்டுக் கொண்டு அதனடிப்படையில் ஒரு இஷ்யூ தயாரித்து அதை தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பினால், தொழிற்கோர்ட்டு கம்பெனியின் லாப நட்டக் கணக்கைப் பார்த்துக் கொடுத்தால் அதையும் வாங்கிக் கொள்ளலாம். செக்ஷன் 12(3) அக்ரிமெண்ட் போடும்போது இது ஃபைனல் அக்ரிமெண்ட் என்று எழுதக்கூடாது. It is a full and final settlement. என்றில்லாமல் இவ்வாறு இரண்டு ஒப்பந்தங்கள் போடலாம் அதனடிப்படையில் தொழிலாளிக்கு நன்மை கிடைக்கும் என்பது என் கருத்து.

The workers agree to get Rs. 50 and arrears. . . . Both the Unions agree to sign a settlement under section 10 (2) of the Industrial Disputes Act. . . . Issue will be whether the workers are entitled for more wages and fringe benefits than one offered under the 12(3) settlement and if not, to what benefits they are entitled . . . . என்று 'issue' frame பண்ணி அதையும் கோர்ட்டுக்கு அனுப்பிவிடலாம்.

இதைச் செய்வதானால் ஒரு நாள் வேலைநிறுத்தம்கூடத் தேவையில்லை. யாருக்கும் மனக் கசப்பு ஏற்படாது. உற்பத்திக் குறைவு ஏற்படாது. கம்பனிக்கும் நஷ்டம் ஏற்படாது. தொழிலாளியும் ரூபாய்க்கு 4 அணா

வட்டி கொடுத்து பணம் வாங்குகிற நிலைமையும் ஏற்படாது. இறுதியாக தொழிற் கோர்ட்டு லாப நஷ்டக் கணக்கைப் பார்த்து அதிகமாகக் கொடுத்தால் அதையும் வாங்கிக் கொள்ளலாம். இந்த நிலையைப் பின்பற்றினால் யாருக்கும் எந்த நஷ்டமும் இல்லை. நமது நாட்டைப் பொறுத்த வரையில் நாம் ஒரு வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிற நாடு. இங்கே எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு உற்பத்தியை அதிகமாகச் செய்தாக வேண்டும் என்ற நிலையில் இருக்கிறோம். அந்த நிலையில் நான் கூறிய முறையை உபயோகப்படுத்தி தொழிற் தகராறுகளைத் தீர்த்தால் நாட்டின் உற்பத்தியும் பாதிக்காது, தொழிலாளர்களின் நலனும் பாதிக்காது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். தொழிலாளியைப் பொறுத்தவரையில் கொடுக்கப்பட்ட ரூ. 50 போதாது என்று கருதினால் அதற்கு இந்தத் தகராறைத் தொழிற் கோர்ட்டுக்கு விட்டுவிடுவோம். அதைப்போலவே முதலாளியைப் பொறுத்தவரை ரூ. 50-க்கு மேல் கொடுப்பது சரியில்லை, கொடுத்ததே போதும் என்று எண்ணினால் நீதிமன்றம் இதை முடிவு செய்யட்டும் என்று விட்டுவிடுவது நல்லது என்று நினைக்கிறேன். இது ஒரு அற்புதமான யோசனை என்பது என்னுடைய அபிப்பிராயம். வரவேற்கத்தக்க யோசனை என்பது என்னுடைய அபிப்பிராயம். எனவே இதை எல்லோரும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலாளிகள் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தலாம். அதைப்போல, தொழிலாளர்கள் சார்பில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும், திரு. நல்லசிவன், திரு. மாணிக்கம் போன்றவர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தலாம். அரசாங்கத்தின் சார்பில் நானும் முதலாளிகளிடம் இதைப்பற்றிப் பேச இருக்கிறேன். இறுதியாக தொழிலாளர் வர்க்கம் முன்னேற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன பல்வேறு கருத்துக்களுக்கும் நன்றி சொல்வதோடு, இங்கே பதில் சொல்லப்படாத கருத்துக்களையும் அரசு பரிசீலித்து, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியவைகளில் நடவடிக்கை மேற்கொள்ளும் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசும்போது தொழில் துறையால் வேகமாகப் போக முடியவில்லை, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால் காண்ட்ராக்ட் லேபர் ஆக்டை உடனே அமுல்படுத்த முடியாது என்று சொன்னார்கள். எனவே காண்ட்ராக்ட் லேபரை அபாலிஷ் செய்யாமல் அதை ரெகுலேட் பண்ணுவதுதான் அரசாங்கத்தின் எண்ணமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நான் பேசும்போது வேகமாகப் போக முடியவில்லை என்று சொல்லவில்லை. வேகமாகப் போவது ஆபத்தானது என்றுதான் சொன்னேன். வேகமாகப் போகிற காரில் உடனே பிரேக் போட்டால் விபத்து ஏற்பட்டுவிடும். எனவே அதை ரெகுலேட் செய்து பிறகு பிரேக் போட வேண்டும் என்றுதான் சொன்னேன். இப்போது காண்ட்ராக்ட் லேபரை ரெகுலேட் செய்வோம். அதற்குப் பிறகு படிப்படியாக காண்ட்ராக்ட் லேபரை அபாலிஷ் செய்வது பற்றி நடவடிக்கை மேற்கொள்வோம் என்றுதான் சொன்னேன். எப்போதும் காண்ட்ராக்ட் லேபரை அபாலிஷ் செய்ய மாட்டோம் என்று சொல்லவில்லை.

## (4) கேள்வி நேரம் கைவிடப்படல்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதி 22-ன் படி, 24—4—1979 அன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 22-ன்படி, 24—4—1979 அன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை (24—4—1979) காலை 9-30 மணிக்குக் கூடும்.

அவை பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 3.55)

8. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

*Nil*

*B. Reports, Notifications and Other Papers.*

* 151. Demand for Buildings Grants, 1979-80. (Tamil and English)

* 152. Review of the Activities of the Public Works Department (Buildings) Branch for the year 1978-79. (Tamil and English).

* 153. Demand No. 43—" Miscellaneous " Relief and Rehabilitation of Indian Overseas and Refugees and Evacuees. (Tamil and English).

* 154. Performance Budget on Rehabilitation Department, 1979-80. (Tamil and English).

* 155. Policy Note on the Working of the Stationery and Printing Department, 1979-80. (Tamil and English).

* 156. Policy Note on Demand No. 14—The Administration of Jails in Tamil Nadu, 1979-80. (Tamil and English).

* 157. Review on the Tamil Nadu Fire Service Department, 1978-79. (Tamil and English).

* 158. Review on Tamil Nadu Police, 1978-79. (Tamil and English).

* 159. Policy Note on Industries, 1979-80. (Tamil and English).

* 160. Performance Budget on Industries, 1979-80. (Tamil and English).

---

* Circulated to all M.L.Cs. on 21st April 1979.



## இணைப்பு I.

[449ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர்கள் தமக்கும் மூன்றாம் ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்கள் அளிக்கப்பட வேண்டும் என்று கோரி கடந்த சில தினங்களாக வற்புறுத்தி வருகின்றனர்.

2. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கல்லூரிகள் இணைக்கப்படாத ஒரு கல்விக் கேந்திரமாகும். சட்ட விதிகளின்படி பல்கலைக் கழக ஊழியர்கள் நியமனம், அன்னாருக்கான ஊதியங்களை நிர்ணயித்தல் ஆகியவை பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பொறுப்பாகும்.

3. மாநில மூன்றாம் ஊதியக் குழு ஊதிய விகிதங்களை தமது பணியாளர்களுக்கு அளிப்பதற்கென அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திரு. கெய்வார் ஐ. சி. எஸ்., கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோர்களைக் கொண்ட ஒரு குழுவினை நியமித்தது. இக்குழு மூன்றாம் ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழக பணியாளர்களுக்கும் அளிப்பதினால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினம் ரூ. 4.28 இலட்சம் என்றும் இதற்கு மாநில அரசு மானியம் கோரப்படலாம் என்றும் கருத்து தெரிவித்துள்ளது.

4. மூன்றாம் ஊதியக் குழுவின் ஊதியங்களை பல்கலைக் கழக பணியாளர்களுக்கு அளிப்பதினால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினமான ரூ. 4.28 இலட்சத்தை மானியமாக வழங்குமாறு 1979 பிப்ரவரி திங்களில் அரசை பல்கலைக் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

5. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அரசு பிரதி ஆண்டும் ரூ. 28.59 இலட்சம் தொகுதி மானியமாக (Block Grant) வழங்கி வருகிறது. இவையல்லாமலும் இப்பல்கலைக் கழகத்தின் கட்டுமானப் பணி போன்றவற்றிற்கும் அரசு மானியம் அளித்து வருகிறது. இப்பல்கலைக் கழகத்தின் நிதிப் பற்றாக்குறையை நிவர்த்திக்க 28—2—1979 அன்று ரூ. 10 இலட்சம் தனி மானியமாக அளித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் பல்கலைக் கழக ஊழியர்களுக்கு மூன்றாம் ஊதியக் குழுவின் சம்பள விகிதம் அளிப்பதால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினமான ரூ. 4.28 இலட்சம் மானியம் வழங்குவது குறித்துக் கல்லூரிக் கல்வி இயக்குநருடன் அரசு கலந்தாலோசித்தது.

6. அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர்களுக்கு மூன்றாம் ஊதியக் குழுவின் சம்பள விகிதம் அளிப்பதற்கான கூடுதல் செலவினமாக ரூ. 4.28 இலட்சத்தில் 50 விழுக்காடு அதாவது ரூ. 2.14 இலட்சம் பிரதியாண்டும் அரசு நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படும் என்று ஒப்புதல் அளித்து அரசாணை நிலை எண். 598 கல்வி நாள் 5—4—1979 ல் ஆணைகள் பிறப்பிக் கப்பட்டுள்ளன. இம்மானியத் தொகை உதவியினைக் கொண்டு அண்ணா மலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களின் கோரிக்கை களை அப்பல்கலைக் கழகம் நிறைவேற்றும் என்று அரசு கருதுகிறது.



180 இணைப்பு II

[453 ஆம் பக்கத்தில் இனம் 7 (1)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

## சமூக நலத் துறை.

## கொள்கை விளக்கக் குறிப்பு.

## 1979–80.

### முன்னுரை.

கோரிக்கை எண் 30-ன் கீழ் 1979-80 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 6,94,55,000 நிதி ஒதுக்கீடு செய்ய அவையின் ஒப்புதலை கோருகின்றேன்.

2. சுதந்திர இந்தியா உருவானபின் மகளிர் நலத் திட்டங்களை வகுக்கவும் அவற்றைச் செயற்படுத்தவும் மகளிர் நலப் பிரிவு ஒன்று தொடங்குவது மக்கள் நல அரசின் நோக்கமாக அமைந்தது. அதன்படி 1947 ஆம் ஆண்டு சமுதாய வளர்ச்சித் துறையின்கீழ் தனியாக மகளிர் நலப் பிரிவு ஒன்று தொடங்கப் பட்டது. இதற்கிடையில் 1954 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சமூக நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் 1955 ஆம் ஆண்டில் மகளிர் நலத் துறை உருவானது. மேற்கண்ட மூன்று அமைப்புகளும் 1961 இல் ஒருங்கிணைக்கப் பட்டு மகளிர் நலத் துறை உருவாக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் இத் துறையின் செயற் திட்டங்களை விரிவுபடுத்தும் வகையில் சமூக நலத் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மகளிர் நலப் பணிகளை கவனிப் பதுடன் இத்துறை முன்னாதாரப் பள்ளிச் சிறார்கள், பாலூட்டும் தாய்மார்கள், கருவுற்றிருக்கும் மகளிர் ஆகியோருக்கு சத்துணவு வழங்குதல், நீதி மன்றங் களால் தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்கென விடுதி நடத்துதல், மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு நலம் பயக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்துதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

### நிர்வாக அமைப்பு.

3. மாநில அளவில் இத்துறையின் தலைவர் சமூக நல இயக்குநரேயாகும். ஒரு இணை இயக்குநர், ஒரு துணை இயக்குநர், ஒரு நிர்வாக நேர்முக உதவி யாளர் மற்றும் ஒரு நேர்முக உதவியாளர், இரு சிறப்பு அலுவலர்கள் (குழந்தைகள் நலப் பிரிவுக்கு ஒருவர், சத்துணவுத் திட்டப் பிரிவுக்கு ஒருவர்), உடல் ஊனமுற்றோருக்கான மறுவாழ்வுத் திட்டங்களை கவனிக்க ஒரு உதவி இயக்குநர், மற்றும் ஒரு முதுநிலைக் கணக்கு அலுவலர் பல்வேறு திட்டங் களை செயற்படுத்துவதில் இயக்குநருக்கு உதவி புரிகின்றனர்.

[1979 ஏப்ரல் 23

4. மாவட்ட அளவில் இத்துறையின் பணிகள் அனைத்திற்கும் மாவட்ட சமூக நல அலுவலரே பொறுப்பாகும். ஊராட்சி ஒன்றியங்களுடன் இணைந்து பணியாற்றும் சமூக நல விரிவாக்க அலுவலர்கள், ஊர் நலப் பணியாளர்கள், குழந்தைகள் காப்பகங்களில் பணியாற்றிவரும் குழந்தைகள் நல அமைப்பாளர்கள் மற்றும் நகர்புறப் பகுதிகளில் பணியாற்றி வரும் சமூக நல அமைப்பாளர்கள் ஆகியோர் இத்துறையின் பல்வேறு திட்டங்களை நேரடியாக கவனிக்கும் களப் பணியாளர்களாவர்.

## I மகளிர் நலம்.

### சேவை இல்லங்கள்.

5. இம்மாநிலத்தில் தாம்பரம், தஞ்சாவூர், கடலூர், திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய ஐந்து இடங்களில் சேவை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் தாம்பரம் சேவை இல்லம் 1948 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டதாகும். தஞ்சாவூர், கடலூர் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் சேவை இல்லங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் இல்லங்கள் 1978-79 ஆம் ஆண்டிலும் தொடங்கப்பட்டவையாகும். சமூகத்தில் ஆதரவற்ற நிலையிலுள்ள 18 முதல் 40 வயது வரையிலான பெண்களுக்கு ஆதரவளிப்பதே இவ்வில்லங்கள் நடத்தப்படுவதன் நோக்கமாகும். பெண்களுக்கு மூன்றாண்டுகள் கல்வி கற்பிக்கவும், ஓராண்டு தொழிற்பயிற்சி அளிக்கவும் இவ்வில்லங்களில் வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வில்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படும் பெண்களின் குழந்தைகள் இங்கேயே தங்கி ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்கவும் வசதியுள்ளது. உடல் ஊனமுற்ற மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான தனிப்பிரிவு ஒன்று இயங்கி வருவது தாம்பரம் சேவை இல்லத்தின் சிறப்பம்சமாகும். இப்பிரிவில் 30 பெண்களும் 20 சிறார்களும் பயில வாய்ப்புள்ளது. மேலும் இவ்வில்லத்தில் விட்டுக் காப்பாளர் பயிற்சி வகுப்பு ஒன்றும் நடைபெற்று வருகிறது. இவ்வகுப்பில் இதுவரை 159 பெண்கள் பயிற்சி பெற்று மறுவாழ்வு பெற்றுள்ளனர். இவ்வில்லங்களில் தங்கும் மகளிர் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூபாய் 50 விதமும், சிறார்களுக்கு மாதம் ரூபாய் 36 விதமும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இது தவிர ஒவ்வொரு மகளிருக்கும் ஆண்டொன்றுக்கு ரூபாய் 60 விதமும், சிறார்களுக்கு ரூபாய் 25 விதமும் உடைகளுக்காக மானியம் வழங்கப்படுகிறது. மேலும் 1979-80-ல் முதுநிலை மற்றும் இளநிலை இல்லத் தலைவிகள் தங்குவதற்காக ரூபாய் 40,000 செலவில் குடியிருப்புகள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.



1979 ஏப்ரல் 23]

6. இரண்டாண்டுகளில் எஸ்.எஸ்.எல்.சி. எழுதத் தக்க வகையில் குறுகிய கால பயிற்சி வகுப்புகள் எல்லா சேவை இல்லங்களிலும் நடைபெற்று வருகின்றன. மேலும் இவ்வில்லங்களில் தையல் பயிற்சி நிலையமும் நடைபெற்று வருகின்றன. இந்நிலையங்களில் பயிற்சியளிக்கப்பட்ட மகளிர் அரசு தொழில் நுட்பத் தேர்வுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தாம்பரம், தஞ்சாவூர், கடலூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் சேவை இல்லங்களிலும், சென்னையிலுள்ள ஸ்திரீ சேவா மந்திர் என்னும் தனியார் நிறுவனத்திலும் சுருக்கெழுத்து, தட்டெழுத்து போன்ற செயலக பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நிலையத்திலும் 20 பெண்கள் பயிற்சி பெற அனுமதிக்கப்படுகின்றனர். இப்பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூபாய் 20 விதம் உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

7. இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு ஒன்று பெண்களுக்காகவே பல்லாவரத்தில் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வகுப்பில் முதுநிலைப் பிரிவில் 40 பேர், இளநிலைப் பிரிவில் 40 பேர் ஆக 80 பெண்கள் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொருவருக்கும் மாதம் ரூபாய் 50 விதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. தாம்பரம் சேவை இல்லத்தில் தயார் நிலை உடைகள் தைக்கும் நிலையம் ஒன்றும் நடைபெற்று வருகிறது. இதில் 15 பெண்கள் பணி புரிந்து வருகின்றனர். ஒவ்வொரு பணியாளருக்கும் நாளொன்றுக்கு ரூபாய் மூன்று விதம் கூலி வழங்கப்பட்டு வருகிறது.

8. ரூபாய் 3,000-க்கும் குறைவான ஆண்டு வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 16 முதல் 30 வயதுள்ள 1,000 ஏழைப் பெண்கள் தட்டச்சு பயிற்சி பெற, உதவித் தொகையாக ஆண்டொன்றுக்கு ரூபாய் 150 வழங்கப்படும் புதிய திட்டமொன்று 1978 ஜனவரி முதல் செயற்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 842 பெண்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டம் இவ்வாண்டும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

### பணிபுரியும் பெண்களுக்குரிய விடுதிகள்.

9. பணிபுரியும் பெண்கள் 25 பேர் தங்கும் அளவில் சென்னை நகரில் ஒரு விடுதி இத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது. உணவுக் கட்டணமாக ரூபாய் 80-ம் வாடகை மற்றும் மின்சாரக் கட்டணமாக ரூபாய் 33-ம் இவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

நாட்டின் பொருளாதார நிலையில் மாற்றம் ஏற்பட்டு வருவதால் வேலை தேடி தங்கள் வீட்டை விட்டு நகரங்களில் குடியேறும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இச்சூழ்நிலையில் அவர்களை, மதிப்புடனும் தேவையான வசதிகளுடனும் பாதுகாப்பாக தங்குவதற்கு வசதி

செய்யப்பட வேண்டியது மிகத் தேவையான ஒன்றாகும். பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் இவ்வசதிகளை அவர்களுக்கு அளிக்கிறது. பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் நடத்துவதில் தனியார் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அந்நிறுவனங்களால் கட்டப்பட்டு வருகின்ற விடுதிக் கட்டிடத்தின் மதிப்பீட்டுச் செலவில் 75 சதவீதம் அந்நிறுவனங்களுக்கு மானியமாக வழங்க மத்திய அரசு முன் வந்துள்ளது. இவ்வாய்ப்பை இதுவரை 17 நிறுவனங்கள் பயன்படுத்தியுள்ளன. மத்திய அரசு மானியம் பெற்று கட்டிடம் கட்டும் நிறுவனங்களுக்கு கூடுதலாக திட்ட மதிப்பீட்டில் 15 விழுக்காடு அல்லது ரூபாய் 35,000 இதில் எது குறைவோ அத்தொகையை மானியமாக மாநில அரசும் வழங்குகிறது. மேற்கண்ட 17 நிறுவனங்களில் 11 நிறுவனங்கள் மாநில அரசின் இம்மானியத்தால் பயன் பெற்றுள்ளன.

பயிற்சி நிலையங்களும் உற்பத்தி நிலையங்களும்.

10. தங்கள் குடும்ப வருவாயைப் பெருக்கிக்கொள்ளும் வகையில் கிராமப்புற மக்களுக்கு தையல், கம்பளி, ஜமுக்காளம் நெய்தல், பனை ஓலை பாய் முடைதல் போன்ற எளிதான குடிசைத் தொழில்களில் தீவிர பயிற்சியளிக்கும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன. இப்பயிற்சியின் காலம் ஓராண்டாகும். பயிற்சி காலத்தில் ஏற்படும் எதிர்பாராச் செலவுகளைச் சமாளிப்பதற்காக இவர்களுக்கு மாதம் ரூ. 30 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ரூ. 2,85,000 செலவில் தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மூன்று சாக்குக் கட்டி தயாரிக்கும் நிலையங்களும், தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 3 மெழுகுவர்த்தி தயாரிக்கும் நிலையங்களும் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ரூ. 80,500 செலவில் 500 பெண்களுக்கு பயிற்சியளிக்கத் தக்க வகையில் திருமங்கலத்தில் தீப்பெட்டி தொழிற்சாலையொன்று தொடங்கும் புதிய ஒரு திட்டத்திற்கு அரசு அங்கிகாரம் அளித்துள்ளது. கோயம்புத்தூரில் ஒரு தையல் நிலையம் தொடங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் நீங்கலாக அரிசன நலத் துறை நிதியின் மூலம் 17 பயிற்சி நிலையங்களும், பிற்பட்டோர் நலத்துறை நிதியின் மூலம் 6 பயிற்சி நிலையங்களும், மறுவாழ்வுத் துறை மூலம் 2 பயிற்சி நிலையங்களும் இம்மாநிலத்தில் நடைபெற்று வருகின்றன. மேலும், பெண்களுக்கு, குறிப்பாக கிராமப்புற பெண்களுக்கு லாபகரமான தொழில் அமைத்துக் கொடுத்து அவர்கள் பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் 20,000 பெண்கள் பயன்பெறத் தக்க வகையில் ரூ. 25.( லட்சம் செலவிலான புதிய திட்டம் ஒன்றிற்கும் அரசு அங்கிகாரம் வழங்கியுள்ளது.



சமூக நலக் கிளைகள்.

11. சமூக நலத் துறையின் திட்டங்களின் முதற் கட்டமே இச் சமூக நலக் கிளைகள் தான். இக்கிளைகளின் வாயிலாக கிராமப்புற பெண்கள் தொடர்பு கொள்ளப்படுகின்றனர். இம்மாநிலத்தில் 50 சமூக நலக் கிளைகள் உள்ளன. இச் சமூக நலக் கிளைகளின் பொறுப்பாளர்களான சமூக நல அமைப்பாளர்கள் காலை வேளையில் முன்னாதார வகுப்புகள் நடத்துகின்றனர். மாலையில் ஒவ்வொரு வீடாகச் சென்று அவ்வீட்டுப் பெண்களுக்கு குடும்பக் கலை, சத்துணவு, குழந்தை வளர்ப்பு முதலியன பற்றி கற்பிக்கின்றனர். பெண்களை ஒரு பொது இடத்தில் கூடச்செய்து அவர்களுக்கு தையல், பாய்முடைதல், இலை தைத்தல் போன்ற பயன்தரத் தக்க கலைகளில் பயிற்சியளிக்கின்றனர். ஐம்பது சமூக நலக் கிளைகளிலும் பாலகார் கூட்டுத் திட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது.

தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியம் அளித்தல்.

12. சமூகத்தில் பின்தங்கிய மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள மகளிர் நலனுக்காகவும், உடல் ஊனமுற்றோரின் நலனுக்காகவும் தொண்டு செய்து வரும் தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு கீழ்க்காணும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன:—

(அ) ஆதரவற்ற பெண்களுக்கான சேவை இல்லங்கள் நடத்த மானியம் வழங்குதல்.

(ஆ) இளம் பிள்ளை வாதம், மூளைவாதம், மனவளர்ச்சிக் குறைவு போன்ற நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும், தொழுநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் ஆரோக்கியமான குழந்தைகளையும், தொழு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும் பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் மானியம் வழங்குதல்.

(இ) மனவளர்ச்சி குன்றிய சிறார்களுக்கு பாடம் கற்பிக்கும் சிறப்பாசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் பாலவிஹார் பயிற்சிப் பள்ளிக்கு மானியம் வழங்குதல்.

13. கிராமப் புறங்களில் மகளிர் நலத்திற்காகவும், ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நலத்திற்காகவும், உடல் ஊனமுற்றோரின் நலத்திற்காகவும் தொண்டு செய்து வரும் தனியார் நிறுவனங்களை ஊக்குவிப்பது அவசியமெனக் கருதப்பட்டு, அந்த வகையில் கிராமப்புறங்களில் தொண்டு செய்து வரும் நிறுவனங்களுக்கு சமூக நல வாரியத்தின் மூலம் மானியம் வழங்க

[1979 ஏப்ரல் 23

அரசு ரூ. 1.00 லட்சம் அனுமதி வழங்கியுள்ளது. கீழ்க்கண்ட பணிகளில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கே இம்மானியம் வழங்கப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது.

(1) குழந்தைகள் காப்பகங்கள்.

(2) பாலர் பள்ளிகள்.

(3) குழந்தைகளுக்கான மனமகிழ் மன்றங்கள்.

(4) குழந்தைகளுக்கான வழிகாட்டி நிலையங்கள்.

(5) தாய்சேய் பராமரிப்பு, சுகாதாரம், சத்துணவு, கலை மற்றும் கைத்தொழில் ஆகியவற்றில் பயிற்சியளித்தல்.

(6) மகப்பேறு மற்றும் நல்வாழ்வுப் பணிகள்.

(7) மகளிருக்கான மனமகிழ் பணிகள்.

(8) முதியோர் மற்றும் தள்ளாத வயதினருக்கான நல்வாழ்வுப் பணிகள்

(3) தொழுநோய் மற்றும் எலும்புருக்கி நோயிலிருந்து குணமடைந்தவர்களுக்கான நல்வாழ்வுப் பணிகள்.

(10) உடல் ஊனமுற்றோருக்கான நல்வாழ்வுப் பணிகள்.

(11) மகளிருக்கான எழுத்தறிவிப்புத் திட்டங்கள்.

## மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டங்கள்.

14. மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தில் மகளிர் மன்றங்கள் மிகப் பெரிய பங்கு வகிக்கின்றன. கிராமப் புறங்களிலுள்ள மக்கள் ஒன்று கூடி பயனுள்ள சில கைத்தொழில்களை கற்பதன் மூலம் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளவும், அதன் மூலம் ஓரளவு கூலி பெற்று தங்கள் குடும்ப வருவாயை பெருக்கிக் கொள்ளவும் இத்திட்டம் வழி வகுக்கின்றது. மாநிலமெங்கும் 11,120 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியம் ஒன்றிற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4,000 விதம் இவ்வகைக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## மகளிர் மன்றம் மூலமாகப் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

15. பல்வேறு வகையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் மகளிர் மன்றங்களை ஊக்குவிப்பதற்காக பொருளாதார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள சிறந்த மகளிர் மன்றங்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மகளிர் மன்றங்கள் மூன்று வகையாக தரம்



1979 ஏப்ரல் 23]

பிரிக்கப்பட்டு ரொக்கப் பரிசாக முறையே ரூ. 1,000, ரூ. 600, ரூ. 400 ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1979-80 இல் 62 ரொக்கப் பரிசுகள் வழங்குவதற்காக ரூ. 34,400 ஒதுக்கப்பட்டுள்ளது.

## சிறந்த ஊர்ப் பணியாளருக்கான பரிசுத் திட்டம்.

16. கிராமப் புறங்களில் மெச்சத் தகுந்த அளவில் பணி புரிந்து வரும் பணியாளர்களிடையே தங்கள் பணியில் போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மத்திய அரசு ஊர்ப்பணியாளர்களிடையே தேசிய அளவில், மாநில அளவில் மற்றும் மாவட்ட அளவில் பரிசுப் போட்டித் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

17. இப்போட்டியில் கலந்து கொள்ள எல்லா ஊர் நலப் பணியாளரும் தகுதியுடையோர் ஆவர். சிறந்த ஊர்நலப் பணியாளர் தேர்வுக்கென வரையறுக்கப்பட்ட காலம் ஒவ்வொரு நிதியாண்டுமாகும். முந்திய ஆண்டு சாதனைகள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும். இப்போட்டியில் கலந்து கொள்ள நுழைவு கட்டணம் எதும் இல்லை.

18. மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான வெவ்வேறு குழுக்கள் சிறந்த ஊர்நலப் பணியாளரை தேர்வு செய்யும். தேசிய அளவில் சிறந்த ஊர்நலப் பணியாளருக்கு முதற் பரிசுத் தொகையாக ரூ. 5,000 வழங்கப்படுகிறது. இத்தொகையில் நல்ல சைக்கிள் ஒன்று வாங்கி வழங்கி விட்டு, மீதித் தொகை தேசிய சேமிப்புப் பத்திரமாக கொடுக்கப்படுகிறது. மாநில அளவில் சிறந்த ஊர் நலப் பணியாளருக்கு முதற் பரிசாக ரூ. 1,500-ம் இரண்டாவது பரிசாக ரூ. 1,000-ம் வழங்கப்படுகிறது. இத்துடன் தகுதிச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

## மகளிர் மன்ற அமைப்பாளர் பயிற்சி.

19. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்தும் தலைமை தாங்கி நடத்தும் தகுதியுள்ள உள்ளூர் மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு டி. கல்லுப்பட்டி (மதுரை), எஸ். வி. நகரம் (வட ஆற்காடு) ஆகிய இடங்களிலுள்ள கிராம விரிவாக்க பயிற்சி நிலையங்களிலும், தாம்பரம் சேவை இல்லத்திலும் ஒரு மாத கால பயிற்சியளிக்கப்படுகிறது. அத்தகைய பயிற்சி பெற்ற அமைப்பாளர்கள் அவரவர் தொடர்புள்ள மகளிர் மன்ற மகளிரைக் கூட்டி குழந்தைகள் நலம், மனைக் கலைகள், மனைப் பொருளாதாரம், வீட்டுத் தோட்டம், சுத்தம், சுகாதாரம், துப்புரவு போன்ற பொருள் பற்றி விவாதிக்கின்றனர். 1978-79 இல் 315 அமைப்பாளருக்கு பயிற்சியளிப்பதற்காக ரூ. 31,500 ஒதுக்கப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 23

## மகளிர் மன்றங்களின் முன்னேற்றமும், வளர்ச்சியும்.

20. 1976-77-இல் மத்திய அரசு, "மகிளா மண்டல்களின் முன்னேற்றமும் வளர்ச்சியும்" என்னும் புதுத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இத் திட்டம் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டை, தருமபுரி மாவட்டம் தளி ஆகிய இடங்களில் அமுல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 6,575 வீதம் மத்திய அரசு வழங்குகிறது. இத்திட்டத்தில் மகிளா மண்டல் நிர்வாகிகளுக்கு பயிற்சியளித்தல், சமையல் கருவிகள் வாங்குதல், சில்லரைச் செலவினங்கள் முதலியன அடங்கும். இத்திட்டம் தற்போது திருநெல்வேலி மாவட்டம் மேலநீலித்தநல்லூர் மற்றும் மதுரை மாவட்டம் நிலக்கோட்டை ஆகிய இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

## II. குழந்தைகள் நலம்.

### பாலர் பள்ளிகள்.

21. பாலர் பள்ளித் திட்டம் 1962 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, இன்றைய தினம் மாநிலமெங்கும் பரவலாக 4,100 பாலர் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. வேலைக்குச் செல்லும் கிராமப்புற பெண்களுக்கு உதவுவதும், பள்ளி செல்லும் குழந்தைகள் மனதில் அப் பழக்கத்தை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பாலர் பள்ளிகளில் விளையாட்டின் மூலமாக கல்வி கற்பிக்கப்படுகிறது. பள்ளிக் குழந்தைகளுக்கு பாடல்கள், கதைகள் முதலியவற்றுடன் நல்ல பழக்க வழக்கங்கள் பயிற்றுவிக்கப்படு கின்றன. மொத்தமுள்ள பாலர் பள்ளிகளில் அரிஜனங்களுக்காக நடத்தப்பட்டு வரும் 250 பள்ளிகள், மலை வாசிகளுக்காக நடத்தப்பட்டுவரும் 79 பள்ளிகள், பழங்குடியினருக்காக நடத்தப்பட்டுவரும் 25 பள்ளிகள், பணியா குழந்தை களுக்காக நடத்தப்பட்டு வரும் 10 பாலர் பள்ளிகள், இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்காக நடத்தப்பட்டு வரும் 5 பள்ளிகள், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காக நடத்தப்பட்டுவரும் 5 பாலர் பள்ளிகள் முதலியன அடங்கும்.

22. இவ்வெல்லா பாலர் பள்ளிகளிலும் கேர் நிறுவனத்தின் உதவியுடன் பாலகார் ஊட்டுத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளி யிலும் சராசரி 70 குழந்தைகளுக்கு 80 கிராம பாலகார் உணவும், 7 கிராம் சாலட் எண்ணெயும் ஆண்டிற்கு 300 தினங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் இப்பாலர் பள்ளிகளில் 3 லட்சம் குழந்தைகள் சத்துணவு பெற்று வருகின்றனர். ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் மூலம் இப் பாலர் பள்ளிகளில் இயன்றவரை மருத்துவ ஆய்வும் மேற்கொள்ளப்படுகின்றது.



1979 ஏப்ரல் 23]

23. இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. 1977-78 இல் 100 பாலர் பள்ளிகளும் 1978-79 இல் 150 பாலர் பள்ளிகளும் தொடங்கப்பட்டன. 1979-80 இல் 200 பள்ளிகள் தொடங்க திட்டமிடப் பட்டுள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் குறைந்தபட்சம் ஒரு பாலர் பள்ளி தொடங்குவதே இத்திட்டத்தின் இறுதி நோக்கமாகும்.

24. எல்லா பஞ்சாயத்துக்களிலும் பாலர் பள்ளிகள் அமையத் தக்க வகையில் சர்வதேச குழந்தைகள் ஆண்டில் தொடங்கி 5 ஆண்டுகளில் 9,000 பாலர் பள்ளிகள் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

25. ஒரு முன்னோடி திட்டமாக மத்திய அரசின் முழு மானியத்தில் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் நல செயல் விளக்கத் திட்டம் பூவிருந்தவல்லியில் தற்போது மாநில அரசால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 50 பாலர் பள்ளிகளும் 10 குழந்தைகள் காப்பகங்களும் நடைபெற்று வருகின்றன. மேலும் முன்னாதாரக் கல்வியும், சத்துணவும் அளிக்கப்படுவதுடன், நல்வாழ்வுப் பணிகளாலும் குழந்தைகள் பயனடைகின்றனர்.

### ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம்.

26. மத்திய அரசின் ஆதாரவால் நடைபெற்றுவரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டத்தின் கீழ் சென்னை நகரம், தருமபுரி மாவட்டம் தளி, மதுரை மாவட்டம் நிலக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் ஒரு இடத்திற்கு 100 வீதம் 300 பாலர் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின்கீழ் பாலர் பள்ளி சிறார்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய் மார்கள் சத்துணவு, மருத்துவ ஆய்வு, நோய்த்தடுப்பு ஆலோசனை கூறுதல் ஆகிய பணிகளின் மூலம் 30,000 பேர் பயனடைகின்றனர். இத்திட்டத்தின்கீழ் தேவையான சத்துணவுப் பொருட்கள் வழங்குவது மாநில அரசின் பொறுப் பாகும்.

27. இத்திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் மையங்களில் உள் நாட்டிலேயே உற்பத்தியாகும் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு 25 பைசாவும், ஒரு பெண்மணிக்கு 40 பைசாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 15 முதல் 44 வயது வரையுள்ள பெண்கள் பயன்பெறத் தக்க வகையில் இம்மூன்று திட்டங்களிலும் செயல்முறைக் கல்வி கற்பிக்கும் திட்டம் ஒன்றும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு முதல் மேலும் நான்கு ஒன்றியங்களுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்தவும் திட்டமிடப் பட்டுள்ளது.

28. பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் பயன்பெறத்தக்க அளவில் 79 பாலர் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1979-80 இல் இதுபோன்று மேலும் 30 பாலர் பள்ளிகள் தொடங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 1978-83-ற்கான இடைக்கால துணைத் திட்டத்தின்கீழ் 250 பாலர் பள்ளிகள் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## பாலர் பள்ளி கட்டிடங்கள்.

29. கிராமப் புறங்களிலுள்ள பாலர் பள்ளிகள் உள்ளூர் மக்களால் வழங்கப்பட்டுள்ள இடங்களில் நடைபெற்று வருகின்றன. பல இடங்களில் இப்பள்ளிகள் சத்திரங்களிலும் சாவடிகளிலும் இயங்கி வருகின்றன. பல போதுமான இடவசதி கொண்டதாக இல்லை. 1974 முதல் 1979 வரையுள்ள ஐந்தாண்டுகளில் படிப்படியாக 1,000 கட்டிடங்கள் கட்ட உதவிட கேர் நிறுவனம் முன்வந்தது. 1974-75 முதல் ஒவ்வொரு ஆண்டும் 200 கட்டிடங்கள் வீதம் கட்ட அனுமதிக்கப்பட்டது. இவற்றில் 50 கட்டிடங்கள் அரிசன காலனிகளிலும், 50 ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டப் பகுதிகளிலும், மீதி 100 ஏற்கெனவே நடைபெற்று வரும் பாலர் பள்ளிகளுக்காகவும் கட்டப்படுகின்றன. 1978-79 இல் 400 கட்டிடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டது. இக்கட்டிடங்களுக்கு அடியிற்கண்ட வண்ணம் நிதி உதவி கிடைக்கப் பெறுகிறது :—

| | |
|---|---|
| கேர் நிறுவனம் | ரூ. 3,000 |
| ஊராட்சி ஒன்றியம் | ரூ. 3,000 |
| மாநில அரசு | ரூ. 3,000 |

30. (அ) உலக வங்கியின் உதவியுடன் இயங்கும் சென்னை நகர மேம்பாட்டுத் திட்டத்தின் ஆதரவுடன் நடைபெறும் மற்றொரு திட்டம் தாய்-சேய் நலத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் வில்லிவாக்கம், அரும்பாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் 200 பாலர் பள்ளிகள் 1979-80-இல் தொடங்கப்படவுள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் 70 குழந்தைகள் (40 பேர் பாலர் பள்ளியிலும், 30 பேர் குழந்தைகள் காப்பகங்களிலும்) பயனடைவர். 1977-78 இல் இது போன்ற 30 நிலையங்கள் தொடங்கப்பட்டன. எல்லா நிலையங்களிலும் துணை சத்துணவு வழங்கப்படுகிறது. நடமாடும் மருந்தகமும் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல் குறித்தும் இத்திட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.



1978-79 ஆம் ஆண்டு தொடங்கப்படவேண்டிய 53 நிலையங்களில் 28 நிலையங்கள் தொடங்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன. மீதி நிலையங்கள் விரைவில் தொடங்கப்பட இருக்கின்றன.

(ஆ) இத்திட்டத்தின் மூலம் அடியிற்கண்ட வகையில் மக்கள் பயனடைவர் :—

(1) துணைத் சத்துணவு.

(2) உடல் நல ஆய்வு மற்றும் அது பற்றிய ஆலோசனை கூறுதல்.

(3) நோய் தடுப்பு.

(4) பாலர் கல்வி.

(5) சத்துணவு மற்றும் உடல் நலக் கல்வி.

(6) செயல் முறைக் கல்வி.

(இ) இத்திட்டம் சமூக நல இயக்குநர் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் எல்லா திட்டங்களுக்கும் இணைப்புப் பாலமாக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இருந்து வருகின்றது.

## சிறப்புச் சத்துணவுத் திட்டம்.

31. பொருளாதாரத்தில் நலிவுற்ற சமூகத்தைச் சேர்ந்த சிறார்களுக்கு சரியான பருவத்தில், அதாவது 6 வயதுக்குள், சத்துணவு வழங்குவதன் மூலம் அவர்களின் மனவளர்ச்சியையும் உடல் வளர்ச்சியையும் ஊக்குவிப்பதே சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின் நோக்கமாகும். சென்னை, மதுரை மாநகராட்சி, 33 நகரசபைகள், 25 ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக 1970-71 முதல் இத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. 6 மாதத்திற்கும் 6 வயதிற்கும் இடைப்பட்ட வயது தொகுதியைச் சேர்ந்த குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் 2,76,530 பேர் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். சென்னை, மதுரை மாநகராட்சிகளும், கோவை, புதுக்கோட்டை நகராட்சிகளும் நீங்கலாக பிற இடங்களில் நாளொன்றுக்கு 80 கிராம் பாலகார், 7 கிராம் சாலட் எண்ணெய் என்ற விகிதத்தில் சமைக்கப்பட்ட பாலகார் உணவு ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது. சென்னை, மதுரை மாநகராட்சிப் பகுதிகளுக்கும், கோயமுத்தூர், புதுக்கோட்டை நகராட்சிப் பகுதிகளுக்கும் இச்சிறப்புச் சத்துணவுத் திட்டம் தேவையான மருத்துவ வசதியுடன் அமுல்படுத்தப்படுகிறது. இப்பகுதிகளிலுள்ளோர் ஒவ்வொருவருக்கும் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் வாரம் 700 கிராம் சமைக்கப்படாத பாலகார் வழங்கப்படுகிறது. தேவையான அளவு நோய்த் தடுப்புப் பணிகளும் மதிப்பீட்டுப் பணிகளும் இப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

## சத்தூட்ட உப்பு.

32. (அ) ஊட்டக் குறைவினை எதிர்த்துப் போராட சாதாரணமாக உபயோகத்தில் இருந்து வரும் உணவு பண்டங்களில் விரிய சத்துள்ளவற்றை மக்களுக்கு அறிமுகப்படுத்த, ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. இவ்வாராய்ச்சிக்கு சூளை மற்றும் புதுப்பேட்டைப் பகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

(ஆ) சாதாரண உப்பில் சத்தூட்டப்படுவதற்குரிய ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் பொருட்டு மத்திய அரசு ஒரு முன்னோடித் திட்டத்தினை தமிழகத்திற்கு அளித்தது. இவ்வாராய்ச்சியின் நோக்கங்களாவன :—

(1) சாதாரண உப்போடு இரும்பு சத்துக்கள் சேர்ந்து விரியப் படுத்தினால் சமூகம் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளும் என தெரிந்து கொள்ளுதல்;

(2) விரியப்படுத்தப்பட்ட உப்பை சேமித்து வைப்பதால் அதில் ஏற்படும் பௌதிக மாற்றங்களைக் கண்டறிதல்;

(3) விரியப்படுத்தப்பட்ட உப்பில் ரத்தக் குறைவை எதிர்த்து போரிடும் சக்தி எந்த அளவுக்கு உள்ளது என தெரிந்து கொள்ளுதல்.

(இ) இவ்வாராய்ச்சிக்காக 4 பகுதிகள் (டெல்லி, கல்கத்தா, ஐதராபாத், சென்னை) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. சென்னை பகுதியில் சூளை சாதாரண ஆய்வுக்கும் மற்றும் வரையறுக்கப்பட்ட ஆய்வுக்கு புதுப்பேட்டை ஆகிய இரு இடங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்விரு இடங்களும் அடர்த்தியான மக்கள் தொகையுள்ள இடமாகும். குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட மக்கள் அதிகமாக வாழ்வதோடு இவ்விரு இடங்களும் இவ்வாராய்ச்சியை மேற்கொள்ளும் சிறார் நல நிலையத்திலிருந்து முறையே ? கிலோ மீட்டர் மற்றும் 1½ கிலோ மீட்டர் தூரத்திலேயே உள்ளன. இவ்வாராய்ச்சி இரண்டாண்டு காலம் நடைபெறும். விரியப்படுத்தப்பட்ட உப்பு விநியோகம் 1—6—1977 அன்று தொடங்கியது.

(ஈ) சூளையிலுள்ள 558 குடும்பங்களிலுள்ள 3,123 பேரில், 526 குடும்பத்தைச் சேர்ந்த 1,677 பேர் விசாரிக்கப்பட்டனர். புதுப்பேட்டையிலுள்ள 542 குடும்பங்களிலுள்ள 3,293 பேர்களில் 509 குடும்பங்களைச் சேர்ந்த 1,496 பேர் இவ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டனர்.



(உ) இவ்வாராய்ச்சியின் முடிவில் சராசரியாக 25 சதவிகிதம் பேர்களுக்கு இரத்தக் குறைவு நோய் உள்ளது என தெரியவந்துள்ளது. 5—10 வயதுத் தொகுதியைச் சேர்ந்த சிறார்களிடையே இரத்தக் குறைவு நோயின் சதவிகிதம் குறைந்த அளவே உள்ளது. இவ்வயதுத் தொகுதி சிறார்களிடையே இந்நோய் சூளையில் 13.6 சதவிகிதம் என்ற விகிதத்திலேயே இருந்தது. இக்கள ஆராய்ச்சிகள் முடிவடைந்த பின்னர், இந்நாட்டிலுள்ள பெருவாரியான மக்கள் பயன் பெறத்தக்க வகையில், விரியப்படுத்தப்பட்ட உப்பு பெருமளவில் வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்யப்படும்.

## III. உடல் ஊனமுற்றோர்.

33. உடல் ஊனமுற்றோர் நலனுக்காக நிறைவேற்றப்பட்டு வரும், நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்கள் பின்வருமாறு :—

### (1) நவீன முறைப் பயிற்சி-உற்பத்தி தொழிற்சாலை, முத்துக்காடு.

இத்தொழிற்சாலை சென்னை-மாமல்லபுரம் சாலையில் உடல் ஊனமுற்றோருக்கு பயிற்சி மற்றும் அதன் மூலம் நிரந்தர மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன் 1975 ஜூன் மாதத்தில் ஏற்படுத்தப்பட்டது. இதுவரை 51 உடல் ஊனமுற்றோர் இரண்டு அணியாக இத்தொழிற்சாலையில் பயிற்சி அளிக்கப்பட்டு இத்தொழிற்சாலையிலேயே வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது மூன்றாவது அணியில் 20 உடல் ஊனமுற்றோர் பயிற்சி பெற்று வருகின்றனர். இத்தொழிற்சாலையில் இலேசான பொறியியல் ரகங்கள், கட்டுமான பணிகள், உதிரி பாகங்கள் செய்தல் போன்ற உற்பத்திப் பணிகள் செய்யப்படுகின்றன. இதை விரிவுபடுத்துவதற்கும் மற்றும் இதுபோன்ற வெளியூர்களில் இன்னும் இரு தொழிற்சாலைகள் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### (2) ஸ்திரி சேவா மந்திர் பயிற்சி நிலையம்.

1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், 29 உடல் ஊனமுற்ற மகளிர் இத்தொழிற் பயிற்சி நிலையத்தில் முதல் பிரிவில் பயிற்சி முடித்துள்ளனர். மிக விரைவில் இரண்டாவது பிரிவு பயிற்சி வகுப்பு தொடங்கவிருக்கிறது. இதில் அளிக்கப்படும் பயிற்சி விவரங்கள் பின்வருமாறு :—

1. பார்வையற்ற மகளிர்க்கு பாய் முடைதல் மற்றும் ஆடை நெய்தல் பயிற்சி.
2. பொம்மை செய்தல், ஆடை தைத்தல் மற்றும் தையல் பூவேலைகளில் வாய் பேச இயலாத—காது கேளாத—மகளிர்க்கு பயிற்சி.
3. உடல் ஊனமுற்ற பெண்களுக்கு தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி.

(3) மூன்று சக்கர வண்டி மற்றும் கேட்பு உதவிச் சாதனம் வழங்குதல்.

இதுவரை 3,729 இரண்டு கால்களையும் இழந்த உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகளும் 1,384 காது கேளாத பள்ளி குழந்தைகளுக்குக் கேட்பு உதவிச் சாதனமும் வழங்கப்பட்டுள்ளது.

1978-79-ல் 300 கேட்பு உதவிச் சாதனங்கள் வழங்கப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் 700 கேட்பு உதவிச் சாதனங்கள் வழங்கப்படவிருக்கிறது.

(4) உடல் ஊனமுற்றோர் நல தனியார் சேவை நிலையங்களுக்கு மானிய உதவி.

(அ) உடல் ஊனமுற்றோர் நலனுக்காக தன்னிச்சையாக இயங்கும் தொண்டு நிறுவனங்களுக்கு அந்நிறுவனங்களை விரிவுபடுத்தவும் பணியின் தரத்தை உயர்த்தவும் மாநில அரசு நிதியுதவி அளித்து வருகிறது. இதுவரை 17 தொண்டு நிறுவனங்களுக்கு கட்டிடம் கட்டவும் உபகரணங்கள் மற்றும் மேஜை, நாற்காலிகள் வாங்கவும் ரூ. 3,07,000 அரசு நிதியுதவி அளித்துள்ளது.

(ஆ) 8 முதல் 16 வயதுக்கு உட்பட்ட இளம்பிள்ளைவாதம், முடக்கு வாதம், வாய் பேச இயலாமை, காது கேளாமை, பார்வை இல்லாமை போன்ற உடல் ஊனமுற்ற குழந்தைகளை பராமரிப்பதற்காக தொண்டு நிறுவனங்களுக்கு ஓர் குழந்தைக்கு ரூபாய் 30 வீதம், ரூபாய் 40,000 மானியத் தொகையாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்று தொழு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளை பராமரிப்பதற்காக ரூபாய் 40,000 மானியத் தொகையாக தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

(இ) மன நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வியளிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக சென்னையிலுள்ள பால விஹார் என்ற நிறுவனத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 45,600 மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்று காது கேட்காத சிறுவர்களுக்கு பயிற்சியளிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக காது கேளாதோர் பள்ளிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 65,000 மானியத் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது.



(5) பார்வையற்ற பெண்டிர்க்கான மறுவாழ்வு இல்லம் மற்றும் தொழிற் பட்டறை.

இப்பயிற்சி நிலையம் பார்வையிழந்த பெண்டிர்க்கு மறுவாழ்வு ஏற்படுத்தும் நோக்குடன் சென்னையிலுள்ள சாந்தோம் நெடுஞ்சாலையில் ஏப்ரல் 1978 முதல் செயல்பட்டு வருகின்றது. இந்நிலையத்தில் 40 பார்வையற்ற பெண்டிர் தங்கும் வசதியுள்ளது. தற்போது 23 பார்வையிழந்த பெண்டிர் இந்நிலையத்தில் தங்கி பயிற்சி பெறுகின்றனர். விரைவில் மேலும் 17 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

(6) மனநோயால் பாதிக்கப்பட்டோர் தொழில் நிலையம்.

சமுதாயத்தில் உடல் ஊனமுற்றோர்கள் பின்தங்கிய நிலையினராக இருக்கின்றார்களென்றால் அதில் மன நோயினால் பாதிக்கப்பட்டோர் அதைவிட பின்தங்கிய நிலையிலுள்ளவர்களாவர். தற்போது மனநோயால் பாதிக்கப்பட்டோர் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அளிக்கும் தனியார் நிலையங்கள் மிகக் குறைவு. அப்படியிருக்கும் நிலையங்களும் நபர் ஒருவருக்கு மாதத்திற்கு ரூ. 200-ம் அதற்கு மேலும் பயிற்சி கட்டணம் மிக அதிகமாக வசூலிக்கின்றன. இதன் காரணமாக இப்பள்ளிகளில் பயிற்சி பெறும் உரிமை சமுதாயத்தின் உயர்மட்டத்தில் உள்ளோருக்கு மட்டுமே கிடைத்து வருகின்றது. ஆனால் மன நோயினால் பாதிக்கப்பட்டுள்ள தாழ்வு நிலையில் உள்ளோர் கவனிப்பாரின்றி ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்து வருகின்றனர். நமது இந்திய அரசியல் அமைப்புப்படி பலவீனமான பகுதியினரான உடல் ஊனமுற்றோருக்கு விசேஷ கவனம் மற்றும் பராமரிப்பு அளிக்கும் நோக்குடன், வரும் 1979-80 இல் 100 மன நோயுற்ற குழந்தைகளுக்கான ஒரு நிலையத்தை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(7) உடல் ஊனமுற்ற மாணவ மாணவிகளுக்கு படிப்பு உதவித் தொகை.

இத்திட்டத்தின்கீழ் 1977-78-ம் ஆண்டு 631 உடல் ஊனமுற்ற மாணவர்கள்/மாணவியர்/பயிற்சியாளர்களுக்கு ரூ. 3.38 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. 1978-79 ஆம் ஆண்டில் உதவித் தொகைக்காக ரூ. 6 இலட்சம் தேவைப்படும் அளவில் மொத்தம் 1,047 மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

### (8) உடல் ஊனமுற்ற மாணவ/மாணவியருக்கு இலவச பஸ் போக்குவரத்து சலுகை.

எல்லா உடல் ஊனமுற்ற மாணவர்/மாணவியர்/பயிற்சியாளர்களுக்கும் அவரவர் இருப்பிடத்திலிருந்து பள்ளி/பயிற்சி நிலையத்திற்கு சென்று திரும்ப **இலவச பஸ் பிரயாண வசதி செய்துதர திட்டமிடப்பட்டுள்ளது.**

### (9) செயற்கை உறுப்புகள்.

முடக்கு வாதத்தின் காரணமாக உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு 1979-80 ஆம் ஆண்டில் 1,000 செயற்கை உறுப்புகள் வழங்க திட்டமிடப் பட்டுள்ளது.

### (10) பெட்டிக் கடைகள்.

உடல ஊனமுற்றோருக்கு சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் மறு வாழ்வு வழங்க சென்னை மற்றும் வெளியூர்களில் **அரசுடைமையாக்கப்பட்ட வங்கியின் மூலம்** சுலப தவணைகளில் குறைந்த வட்டியுள்ள நீண்ட கால கடன் வசதியுடன் 1,000 பெட்டிக்கடைகள் வழங்கதிட்டமிடப்பட்டுள்ளது.

### (11) சாதாரண பள்ளிகளில் உடல் ஊனமுள்ள சிறார்களை ஒருங்கிணைத்தல்.

பார்வைக் குறைவுள்ளவர்கள், சிறிது காது கேளாதவர்கள், உணர்ச்சி வசத்தால் பாதிக்கப்படுபவர்கள், காக்காய் வலிப்பால் அவதியுறுபவர்கள் மற்றும் உடல் ஊனமுற்ற சிறார்கள் சாதாரண பள்ளிகளில் மத்திய அரசு திட்டத்தின்கீழ் கல்வி கற்க வசதி செய்யப்படுகிறது. அவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள், கேட்புச் சாதனங்கள், படிக்க உதவும் கருவிகள் முதலியனவும், பயணச் செலவு, புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியனவும் அளிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற அதிக அளவில் மனுதாரர்கள் முன் வராததால் இதற்கான விதி முறைகளையும் இதர நிபந்தனைகளையும் தளர்த்தி சிறார்களை அதிக அளவில் பயன்பெறுமாறு ஈர்க்க இவ்வாண்டு திட்டமிடப் பட்டுள்ளது.



### உடல் ஊனமுற்றோர்க்கான வாரியம்.

34. 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரின்கீழ் செயல்பட்டு வந்த உடல் ஊனமுற்றோர்க்கான வாரியம், மேலும் சிறப்பாக பணியாற்றி பல்வேறு உடல் ஊனமுற்றோருக்கான நலத் திட்டங்களை செயல்படுத்தும் நோக்குடன் சமுதாய நலத் துறையின் நேரடி நிர்வாகத்திற்கு சமீபத்தில் மாற்றப்பட்டுள்ளது.

இவ்வாரியத்திற்கு அரசு ரூபாய் 50,000 வழங்கியதில் ரூபாய் 15,000-க்கு சுய வேலைவாய்ப்பு திட்டத்திற்காக 25 உடல் ஊனமுற்றவர்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் செயற்கை உறுப்புகளை பெறுவதற்காக 71 உடல் ஊனமுற்றோருக்கு பண உதவி அளித்துள்ளது. திருவாரூரான் சர்க்கரை தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி இரசாயனம் மற்றும் வடிகால் நிறுவனம் ஆகியவை ரூபாய் 10,000 இவ்வாரியத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளன.

### உடல் ஊனமுற்றோருக்கு ஓய்வு ஊதியம்.

35. இத்திட்டத்தின்கீழ் இவ்வாண்டு 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை 6,376 உடல் ஊனமுற்ற அனாதைகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு அடைய வேண்டிய இலக்கு 10,000 பேர்களாகும். இத்திட்டம் வருவாய் துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## IV. அனாதைக் குழந்தைகளுக்கான திட்டம்.

36. ஆதரவற்ற/அனாதைச் சிறார்களை பராமரித்து வரும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அச் சிறார்களை பராமரிப்பதற்காக இத்திட்டத்தின்கீழ் இந்திய அரசு மானியம் வழங்குகிறது. இந்நிறுவனங்களில் 5 முதல் 18 வயது வரையுள்ள ஆதரவற்ற ஏழைச் சிறார்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பராமரிப்பு மற்றும் கட்டிடம் கட்டுவதற்கான செலவுத் தொகையில் 90 சதவீதம் இந்திய அரசு இந்நிறுவனங்களுக்கு மானியமாக வழங்குகிறது. தொடர் செலவு மற்றும் தொடரா செலவுத் தொகையில் 10 சதவீதம் அத்தொண்டு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாய்ப்பை பயன் படுத்தி 49 நிறுவனங்கள் மானியம் பெற்றுள்ளன. இதன் மூலம் 2374 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

### பிச்சைக்காரர்கள் இல்லம்.

37. மேல்பாக்கத்திலுள்ள பாதுகாப்பு முகாம் பிச்சைக்காரர்களுக்கான ஓர் இல்லமாகும். 1947, தமிழ்நாடு பிச்சையெடுத்தல் தடுப்புச் சட்டத்தின்கீழ் தண்டனை விதிக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்காக அரசு இவ்வில்லத்தினை நடத்தி வருகிறது. இம்முகாம் 1973-இல் சமூக நலத் துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இவ்வில்லத்தில் 770 ஆடவரும், 180 பெண்டிரும் தங்கியிருக்க அரசு அனுமதித்த போதிலும், தற்போது 129 ஆடவரும், 31 பெண்டிருமே இம்முகாமில் உள்ளனர். இங்கு நெசவு, தச்சு வேலை, தையல் போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### ஆதரவற்ற பெண்களுக்கு மறுவாழ்வு.

38. முதியோர் ஓய்வூதியம்.—இத்திட்டத்தின்கீழ் 40 வயதுக்கு குறைவில்லாத ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவைகள் மாதம் ரூ. 20 வீதம் முதியோர் உதவித் தொகை பெற தகுதியுடையவராவர். முதியோர் உதவித் தொகை வழங்கப்படுவதற்கு பொருந்தும் விதிகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இத்திட்டத்தினால் இதுநாள்வரை 15,000 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

### தையல் இயந்திரம் வழங்குதல்.

39. இருபது முதல் 40 வயதுவரையுள்ள விதவைகள், ஆதரவற்ற பெண்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள பெண்கள், உடல் ஊனமுற்ற பெண்கள் தையற்கலையில் பயிற்சி பெற்றிருந்தால் அவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதனால் அவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வருவாயினை ஈட்டிக்கொள்ள இயலும். இத்திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு 500 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. 1978-79 இல் 1,000 தையல் இயந்திரங்கள் வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டிலும் 1,000 தையல் இயந்திரங்கள் வழங்கப்படவிருக்கின்றன.



### விதவைகள் மறுமணம்.

40. இளம் விதவைகள் மறுமணம் செய்து கொள்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில் மறுமணம் செய்து கொள்ளும் மணமக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக முதலீடு செய்யப்படுகின்ற வகையில் ரூ. 5,000-க்கான வழங்கு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 233 மணமக்கள் பயனடைந்துள்ளனர். 1978-79-ல் மேலும் 100 பேர் பயனடைவர். 1979-80 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### பள்ளிக்குச் செல்லும் விதவைகள் குழந்தைகளுக்கு உதவியளித்தல்.

41. ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்கும் குறைவாகவுள்ள விதவைகள் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகம், நோட்டுப் புத்தகம் ஆகியவை வழங்கும் திட்டம் 1978-79 கல்வியாண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ஆரம்பப்பள்ளிகளில் பயிலும் சிறார்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 15 விதமும், நடுநிலைப்பள்ளி சிறார்களுக்கு ரூ. 40 விதமும், உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு ரூ. 60 விதமும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் 3,000 சிறார்கள் பயனடைவர். இத்திட்டம் 1979-80 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

### வழிகாட்டி நிலையங்கள்.

42. சென்னை நகரம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் நான்கு வழிகாட்டி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஆயுள் காப்புறுதிப் பயன்களையும், வருங்கால வைப்பு நிதிப் பயன்களையும் பெறுதல், கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பற்றி அறிவுரை வழங்குதல், குழந்தைகளை அனாதை விடுதி மற்றும் கல்வி நிலையங்களில் சேர்த்தல் முதலியவற்றில் விதவைகளுக்கு உதவுவதே இவ்வழிகாட்டி நிலையங்களின் நோக்கமாகும். இவ்வழிகாட்டி நிலையங்களின் மூலமாக இதுவரை 1,352 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன.

### விதவைகளின் குழந்தைகளுக்கு கல்வி வசதி.

43. 1979-80இல் விதவைகளின் 50 குழந்தைகளை விடுதியில் சேர்த்து உணவும், உறைவிடமும் அளித்து கல்வி வசதியளிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இவர்கள் தொண்டு நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இவர்களின் பராமரிப்புச் செலவுக்காக மாதம் ரூ. 36 வீதம் வழங்கப்படும். இத திட்டச் செலவு ரூ. 22,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 23

**சென்னையிலுள்ள விதவைகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக சமையலுக்கு தேவையான பொருட்கள் தயாரித்தல்.**

44. சிறு தொழில்கள் செய்வதற்காக நிதியுதவி கேட்டு ஆதரவற்ற ஏழைப் பெண்கள் மற்றும் விதவைகளிடமிருந்து பெருமளவில் விண்ணப்பங்கள் வரப் பெறுவதை கருத்தில் கொண்டு விதவைகளுக்கு அல்லது அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த 15 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் உற்பத்தி நிலையம் ஒன்று தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. சமையலுக்குத் தேவையான அத்தியாவசிய பண்டங்கள் தயாரிக்கும் இவ்வுற்பத்தி நிலையம் லாப நட்ட நோக்கம் இல்லாமல் செயற்படும். இத்திட்டத்திற்கான செலவு ரூ. 60,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சமூக நல வாரியம்.**

45. 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம் தனியார் நிறுவனங்களை வளர்ச்சியடையச் செய்வதிலும் அவற்றை ஊக்கு விப்பதிலும் முக்கிய பங்கு பெற்று வருகிறது. இவ்வாரியம் மூன்றாண்டுகளுக் கொருமுறை திருத்தியமைக்கப்படுகிறது. அதன் முக்கிய பணிகளாவன :—

(அ) சமூக நல நிறுவனங்களைத் தோற்றுவித்து அவற்றை ஊக்கு வித்தல் ;

(ஆ) தொண்டு நிறுவனங்களின் பணியின் தரத்தையும் தன்மையையும் உயர்த்துதல், பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்பத் துறையில் உதவி பனித்தல் ;

(இ) மானியம் பெறும் நிறுவனங்களின் பணிகளை விரிவாக்குதல் ;

(ஈ) களத்தில் தொண்டாற்றும் நிறுவனங்களுக்கும், மத்திய சமூக நல வாரியத்திற்கும் நடுவாக இருந்து திட்டங்களை செயலாற்றுதல்.

மகளிர், குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கான நலனுக்காக தொண்டு செய்யும் நிறுவனங்களுக்கு உதவ இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது.

1978 பிப்ரவரியில் இவ்வாரியம் 32 அலுவல் சார்பற்ற அங்கத்தினர்களையும் மூன்று அலுவல் சார்புள்ள அங்கத்தினர்களையும் கொண்டு திருத்தியமைக்கப் பட்டது.



1979 ஏப்ரல் 23]

1977-78 இல் 896 நிலையங்களுக்கு பல்வேறு பணிகளுக்காக ரூ. 55.51 இலட்சம் மானியம் அனுமதித்துள்ளது. 1978-79-ம் ஆண்டில் ஜனவரி 1979 முடிய கீழ்க்கண்ட வண்ணம் மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண். | மானியத்தின் வகை. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அனுமதிக்கப் பட்ட மானியம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூ. இலட்சத்தில்.) |
| 1 | வருடாந்திர மானியம் .. | 300 | 3.70 |
| 2 | திட்டகால மானியம் .. | 80 | 4.44 |
| 3 | மகிளா மண்டல் மானியம் .. | 14 | 1.25 |
| 4 | விடுமுறை முகாம் .. | 55 | 1.73 |
| 5 | ஓராண்டு குறுகிய கல்வித் திட்டம். | 10 | 1.30 |
| 6 | மகளிர் தொழிற்பயிற்சித் திட்டம் | 33 | 4.41 |
| 7 | பணிபுரியும் பெண்களுக்கான திட்டம். | 3 | 0.15 |
| 8 | விரிவாக்க நலத் திட்டம் (புற நகர்). | 2 | 0.13 |
| 9 | குழந்தைகளை குடும்பங்களில் பராமரிக்கும் திட்டம். | .. | .. |
| 10 | ஊட்டச் சத்துணவுத் திட்டம் .. | 163 | 4.24 |
| 11 | சமூகப் பொருளாதாரத் திட்டம். | .. | .. |
| 12 | பால் பண்ணைத் திட்டம் .. | 40 | 5.57 |
| 13 | குழந்தைகள் காப்பகத் திட்டம். | 54 | 3.19 |
| | | 754 | 30.11 |

## இணைப்பு III

[496 ஆம் பக்கத்தில் இனம் 7(3) க்கான அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன் பற்றிய குறிப்பு

தமிழ்நாட்டில் 1978 ஆம் ஆண்டில் தொழில் அதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு நிலவியது. தொழிலாளர்களின் நலனுக்கென உள்ள சட்டங்கள் அனைத்தின் விதிமுறைகளை கண்டிப்பாகச் செயல்படுத்தி தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதே அரசின் தலையாய கொள்கையாகும். தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்ய உள்ள உரிமையை அரசு ஏற்றுக்கொள்ளும். அதே சமயத்தில், வேலை நிறுத்தங்கள் நிகழ்வதைத் தடுக்க அல்லது அத்தகைய வேலை நிறுத்தங்கள் நீடித்துக்கொண்டே போகும்போது அவற்றிற்கு முடிவு காண வேண்டி, தொழில் தகராறுகளில் தலையிட்டு செவ்விய முறையில் இணக்கம் செய்வதன் மூலமும், சுமுகமாக அவற்றிற்கு தீர்வு காண்பதன் மூலமும் உரிய காலத்தில் அவற்றைத் தீர்த்து வைப்பதென்னும் நடைமுறையை அரசு மேற்கொண்டது.

1978-ல் இம்மாநிலத்தில் 6,61,245 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி யுள்ள 10,541, தொழிற் பிரிவுகளில், 27—1—79 தேதி நிலவரப்படி 11 நிறுவனங்களில் மட்டுமே தொழில் தகராறுகள் எழுந்தன; அவற்றின் மூலம் 2,775 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டில் பெரும்பான்மையோராக உள்ள, தொழிற்சங்க அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு குறைந்தளவு ஊதியமும், நல்ல வாழ்க்கைத் தரமும் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, சட்ட வழிபெற்ற அறிவிப்பின் மூலமும், சிறப்பு நடவடிக்கைகள் மூலமும் ஏற்பாடுகள் செய்வதில் இந்த அரசு சிறப்பு நாட்டம் செலுத்தியது. அத்தகைய தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும் அவர்களது நலனை மேம்படுத்தவும் வேண்டி அவர்களுக்குக் குறைந்தளவு ஊதிய வீதங்களை அறிவிக்கவும் தொழிலாளர் நல சட்டங்களை செயல்படுத்தவும் அரசு சிறப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. அத்தகைய நடவடிக்கைகளின் விளைவாகவும் தொழிலாளர் நலத் துறை தொழில் தகராறுகளில் தலையிட்டு இணக்க





ஏற்பாடு செய்ததன் விளைவாகவும் தொழிலதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையில் சுமுகமான நல்லுறவு நிலவியதுடன், தொழிலாளர்களில் நலிந்த பிரிவினர்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டன.

மாநிலத்தில் தொழிலாளர் நிர்வாகம் பற்றி இவ்வறிக்கையில் கீழ்க்காணும் வகைபாடுகளின் கீழ் ஆய்வு செய்யப்படுகிறது :—

(i) தொழில் தகராறுகள் சட்டம்.

(ii) நிறுவனங்கள் சட்டம்.

(iii) ஊதியங்கள் சட்டம்.

(iv) சமூகப் பாதுகாப்புச் சட்டம்.

(v) தொழிலாளர் நல நடவடிக்கைகள்.

(vi) எடை-அளவைகள் சட்டம்.

இவற்றோடு, வேலைவாய்ப்புப் பணி, கைவினைஞர் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துதல் பற்றிய பணி குறித்து தனி அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

### 1. தொழில் தகராறுகள் சட்டம்.

#### 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

இவ்வாண்டில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கையும் அவை தீர்த்து வைக்கப்பட்ட விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1977. | 1978. |
|---|---|---|
| (a) வரப்பெற்ற புகார்கள், தகராறுகள் ஆகியவற்றின் எண்ணிக்கை .. | 6,775 | 8,204 |
| (b) புலனாய்வு செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை .. | 7,174 | 8,741 |
| | (முன்னரே முடிவு செய்யப்படாமல் உள்ளவைகள் உட்பட). | |
| (c) இணக்க முறையில் தீர்க்கப்பட்ட தகராறுகளின் எண்க்கை .. | 1,978 | 2,184 |

| | 1977. | 1978. |
|---|---|---|
| (d) நடுவர் தீர்ப்புக்கு விடப் பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. | 690 | 722 |
| (e) சமரசத்திற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 34 | 31 |

மேற்சொன்ன (c), (d), (e) பிரிவுகளின் கீழ் வாராதவை தனிப்பட்ட இணக்க முறையில் அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உரியவாறு, தகுந்த ஆலோசனை வழங்கி தீர்த்து வைக்கப்பட்டவையாகும் அல்லது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியதோ அல்லது வழக்குமன்றத் தீர்ப்புக்கு விட வேண்டியதோ அவசியமில்லை என்று கருதப்பட்டவை யாகும்.

### வேலையை நிறுத்தி விடுதல்.

இவ்வாண்டிலும் முந்திய ஆண்டிலும் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்பீட்டு விவரங்கள் பின்வருமாறு :—

| | 1977. | 1978. |
|---|---|---|
| (a) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை .. | 298 | 378 |
| (b) இழந்த உழைப்பு நாட்கள். | 26,16,963 | 21,55,675 (பணியாற்றிய மொத்த உழைப்பு நாட்களில் [illegible] சதவீதத்திற்கும் குறைவு). |



வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த தொழில் வாரியா விவரங்கள் வருமாறு :—

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை. | ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | இழந்த உழைப்பு நாட்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **1977—** | | | |
| 1. துணி ஆலைகள் .. | 111 | 65,771 | 5,27,657 |
| 2. பொறியியல் .. | 61 | 19,930 | 9,25,835 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள். | 6 | 716 | 20,783 |
| 4. புகையிலை, பீடித் தொழில் .. | 4 | 10,774 | 2,02,293 |
| 5. மலைத் தோட்டத் தொழில்கள் .. | 21 | 7,994 | 1,41,262 |
| 6. ஏனையவை .. | 95 | 76,181 | 7,99,133 |
| மொத்தம் .. | 298 | 1,81,366 | 26,16,963 |
| **1978—** | | | |
| 1. துணி ஆலைகள் .. | 153 | 74,719 | 9,38,367 |
| 2. பொறியியல் .. | 75 | 36,897 | 6,15,968 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள். | 5 | 654 | 11,496 |
| 4. புகையிலை, பீடித் தொழில் .. | 5 | 3,327 | 7,591 |
| 5. மலைத் தோட்டத் தொழில்கள் .. | 19 | 12,871 | 1,13,648 |
| 6. ஏனையவை .. | 121 | 41,197 | 4,68,605 |
| மொத்தம் .. | 378 | 1,69,665 | 21,55,675 |

1978 ஆம் ஆண்டில் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்து தீர்வு காணப்பட்ட வழி முறைகள் வருமாறு :—

| | |
|---|---|
| (a) நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலம் .. | 62 |
| (b) தாமாகவே முன்வந்து வேலை தொடங்கப் பட்டது. .. .. .. .. .. .. | 29 |
| (c) தொழிலாளர் நலத்துறை அரசு அதிகாரிகள் தீர்த்து வைத்தவை .. .. .. | 265 |
| (d) காலவரையறை அற்றவை .. .. .. | .. |
| (e) நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டவை .. .. | .. |
| (f) மூடப்பட்டவை .. .. .. .. | 6 |
| (g) ஆண்டின் இறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை .. .. .. .. | 16 |
| மொத்தம் .. | 378 |

1976 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் திருத்தச் சட்டம்.

இச்சட்டத்தின்படி, சராசரி 300 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள தொழிலதிபர்கள், வேலை முடக்கத்தின் போது ஓரளவு ஆட்களை நிறுத்தி வைக்கவோ, ஆட்குறைப்பு செய்வதற்கோ நிறுவனங்களை மூடுவதற்கோ கீழ்க்கண்ட அதிகாரிகளிடம் முன் அனுமதியை பெற வேண்டும்.

(1) 25-M பிரிவின் கீழ் வேலை முடக்கத்தின்போது ஓரளவு ஆட்களை நிறுத்தி வைக்க அனுமதி பெறுவதற்கு, 60-B விதியின் கீழ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல இணை ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

(2) 1976 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (திருத்தச்) சட்டத்தின் 25-N பிரிவின் கீழ் ஆட்குறைப்பு செய்வதற்கு அனுமதி பெறுவதற்காக, 61-A விதியின் கீழ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

(3) நிறுவனத்தை மூடுவதற்கு அனுமதி பெறுவதற்காக 61-B விதியின் கீழ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள மாநில அரசுக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.



வரப்பெற்று, முடிவு எடுக்கப்பட்ட, முடிவெடுக்கப்படாமலுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | வேலை முடக்கத்தின்போது ஓரளவு ஆட்களை நிறுத்திவைத்தல். | ஆட்குறைப்பு. | நிறுவனத்தை மூடிவிடுதல். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (a) வரப்பெற்ற விண்ணப்பங்கள். | 3 | 1 | 2 |
| (b) முடிவெடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் — | | | |
| (1) அனுமதி மறுக்கப்பட்டவை. | 1 | 1 | 1 |
| (2) விண்ணப்பங்கள் திரும்பப் பெறப்பட்டதாக தள்ளுபடி செய்யப்பட்டவை. | 2 | .. | .. |
| (3) அனுமதி வழங்கப்பட்டவை. | .. | .. | .. |
| (4) குறைபாடுள்ளதாகத் திருப்பி அனுப்பப்பட்டவை. | .. | .. | ** |
| (5) இன்னும் முடிவெடுக்கப்படாமல் உள்ளவை. | .. | .. | .. |

** உச்ச நீதி மன்றத்தினால் தொழில் தகராறுகள் (திருத்தச்) சட்டத்தின் 25 (0) பிரிவு நீக்கிவிடப்பட்டதால் ஒரு விண்ணப்பம் பயனற்றதாகிவிட்டது.

மதுரை, ஸ்ரீ மீனாட்சி மில்ஸ், தங்களுடைய துறையின் ஒரு பகுதியில் ஆட்குறைப்புச் செய்ய அனுமதி கேட்டபொழுது தொழிலாளர் நல ஆணையாளர் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார். சென்னை உயர்நீதி மன்றத்திற்கு இந்த விவகாரம் நிர்வாகத்தினரால் கொண்டுவரப்பட்டது. உயர்நீதி மன்றம், தொழிலாளர் நல ஆணையாளரின் ஆணையை சரியானது என்று நிர்மாணித்து ரிட் மனுவை தள்ளுபடி செய்தது. ஆணைக்கு எதிராக செய்துகொள்ளப்பட்ட ஒரு மேல்முறையீடு உயர்நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளது.

தமிழ்நாடு அரசு, டியூப் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்டின் டி.ஐ. சைக்கிள் பிரிவை மூட அனுமதி தர மறுத்துவிட்டது. இந்த கம்பெனி தொடர்பு கொண்டுள்ளதாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்ட ரிட் மனு ஒன்றின்மீது அத்தகைய அனுமதிகளை மறுக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு அளிக்கும் தொழில் தகராறு சட்டத்தின் 25 (O) பிரிவை, உச்சநீதி மன்றம் நீக்கிவிட்டது.

நடப்பு ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட சில முக்கிய உடன்பாடுகள்.

(1) தமிழ்நாடு குரோமேட் கெமிக்கல்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை.

ஐநூறு தொழிலாளர்களைக் கொண்ட இந்நிறுவனம், தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் இரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்தில், ஊதிய உயர்வு, அகவிலைப்படி முதலியவைகள் அடங்கிய கோரிக்கைப் பட்டியல் குறித்துத் தகராறு ஏற்பட்டதன் விளைவாக, முறையே 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 ஆம் நாள், 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 ஆம் நாள் அன்றும் வேலை நிறுத்தம், கதவடைப்பு ஏற்பட்டன. தொழிலாளர் நல அமைச்சர் எடுத்துக் கொண்ட நன்முயற்சியின் பேரில், சென்னை தொழிலாளர் நல ஆணையாளரால் 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 7 ஆம் நாள் அன்று இந்த தகராறு தீர்த்து வைக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 9 ஆம் நாள் அன்று பணி மறுபடியும் துவங்கப்பட்டது.

(2) நேஷனல் கார்பன் கம்பெனி, சென்னை-19.

எண்ணூறு தொழிலாளர்களைக் கொண்ட மேற்சொன்ன நிறுவனம் உலர்பாட்டரி செல் தயாரிக்கிறது. ஊதிய திருத்தம் முதலியவைகள் அடங்கிய கோரிக்கைப் பட்டியலைக் குறித்து கம்பெனியின் தொழிலாளர்கள் தகராறு ஒன்றை எழுப்பியதன் விளைவாக, 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இரண்டாம் நாள் அன்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் எடுத்துக் கொண்ட நன்முயற்சியின் பேரில், சென்னை, தொழிலாளர் நல ஆணையாளரால் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9 ஆம் நாள் அன்று தகராறு தீர்த்து வைக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10 ஆம் நாள் அன்று பணி மீண்டும் துவங்கப்பட்டது.



(3) என்ஃபீல்டு இந்தியா லிமிடெட், சென்னை.

மோட்டார் சைக்கிள் உதிரி பாகங்களைத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள இந்நிறுவனம், நிதி நெருக்கடியினாலும், தொழில் சம்பந்தப்பட்ட பதட்ட நிலையினாலும் 1977 ஆகஸ்ட்டிலிருந்து மூடப்பட்டது. இந்நிறுவனத்தில் 1,500 தொழிலாளர்கள் உள்ளனர். தொழிலாளர் நல அமைச்சர் எடுத்துக் கொண்ட நன்முயற்சியின் பேரிலும், சென்னை தொழிலாளர் நல தனித் துணை ஆணையாளரின் முன் நடைபெற்ற விவாதத்தின் பேரிலும் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்குமிடையே ஓர் உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது. தொழிற்சாலை 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10 ஆம் நாள் அன்று மீண்டும் திறக்கப்பட்டது.

(4) பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி.

பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட், கொதிகலன் கருவிகளையும், ஏனைய துணைப் பாகங்களையும் தயாரிக்கிறது. நிர்வாகத்தினர், தொழிலாளர்களுக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டி, சுமார் 10,500 எண்ணிக்கையுள்ள இந்நிறுவனத்தின் தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 21 ஆம் நாள் அன்று வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை, தொழிலாளர் நல ஆணையாளர் இரு தரப்பினருடனும் விவாதங்களை நடத்தினார். அதன் விளைவாகவும், தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டதன் விளைவாகவும், தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டதோடு, 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2 ஆம் நாள் அன்று வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

(5) டால்மியா சிமெண்ட் தொழிற்சாலை, டால்மியாபுரம்.

இத்தொழிற்சாலை 1,200 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ளது. சில பணி அனுகூலங்களைக் கேட்டு, இத்தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் இரண்டாவது வாரம் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை, தொழிலாளர் நல ஆணையாளர், தொழிலாளர் நல வட்டார ஆணையாளர் (மத்திய) ஆகியோர் முன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. தொழிலாளர்களிடையே நிலவிய தகராறைத் தீர்த்து வைக்க தொழிலாளர் நல அமைச்சரும் தனது நன் முயற்சியை எடுத்துக் கொண்டார். இதன் விளைவாக உடன்பாடு ஒன்று

1978 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 11 ஆம் நாள் அன்று ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின் நிபந்தனைகளின்படி, நிர்வாகம் அதற்கென தனிப்பட்ட முறையில் மானியமாக தொழிலாளர் அனைவருக்கும் 3.5 இலட்சம் ரூபாயை கொடுக்க ஒப்புக்கொண்டது. இவ்வாறாக, கல் உடைக்கும் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும், தனிப்பட்ட முறையில் ரூ. 300-ம் அவர்களுக்கு நாளொன்றுக்கு கொடுக்கப்படுகின்ற ஊதியத்தில் ரூ. 2 உயர்வும் கொடுக்கப்பட்டது. இந்த வேலை நிறுத்தம், 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 12 ஆம் நாள் அன்று வாபஸ் பெறப்பட்டது.

(6) மெட்டல்பாக்ஸ் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட், சென்னை.

இந்த நிறுவனத்தில் சுமார் 700 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இது கொள்கலன்களைத் தயாரிக்கிறது. பல கோரிக்கைகள் குறித்து, சென்னை 'மெட்டல் பாக்ஸ் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்' நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு எதிராக 'மெட்டல் பாக்ஸ்' பணியாளர் சங்கம் தொழில் தகராறு ஒன்றை எழுப்பியது. தொழிலாளர் நல ஆணையாளர் 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11 ஆம் நாள் அன்று இத்தகராறைத் தீர்த்து வைத்தார். இந்த உடன்பாடு சம்பளம், அகவிலைப் படி மற்றும் ஏனைய சிறிய அளவிலான அனுகூலங்கள் ஆகியவற்றினை திருத்தியமைப்பதற்கு வகை செய்கிறது.

(7) இ. ஐ. டி. பாரி லிமிடெட், இராணிப்பேட்டை.

இராணிப்பேட்டையில் உள்ள இ.ஐ.டி. பாரி லிமிடெட், உரங்கள் முதலியவற்றைத் தயாரித்து வருகிறது. இதில் 1,200 தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். நாட்கூலி பெறும் தொழிலாளர்களை தகுதிகாண் பருவப் பட்டியல் தொழிலாளர்களாக தரம் உயர்த்தி, நிர்வாகம் வெளியிட்ட அறிவிப்பு ஒன்றை எதிர்த்து இந்நிறுவனத் தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 24 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். இந்நிர்வாகம், 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 1 ஆம் நாள் முதல் கதவடைப்பு செய்தது. தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்குமிடையே இணக்கம் ஒன்று உருவாகி உடன்படிக்கையும் ஏற்பட்டது. அதனால் வேலை நிறுத்தமும் கதவடைப்பும் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 26 ஆம் நாள் அன்று முடிவடைந்தது.



(8) இங்கிலீஷ் எலக்டிரிக் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட், சென்னை.

இந்த நிறுவனம், மின்சாரப் பொருட்களைத் தயாரித்து வருகிறது. இதில் 2,000 தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இக்கம்பெனித் தொழிலாளர்கள், பல கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை அனுப்பினர். 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16 ஆம் நாளன்று சென்னையில் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் முன் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. இந்த உடன்பாடு, உற்பத்தித் திறனுக்கேற்ப மாதமொன்றுக்கு ரூ. 160-ஐ ஊதிய உயர்வு கொடுக்கவும் முன்பு கதவடைக்கப் பட்டிருந்த காலத்திற்கான ஊதிய பாக்கிகள், ஊதியங்கள் போன்ற கோரிக்கைகள் முன்னிட்டு ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஒருமொத்தமாக ரூ. 1,600 தொகை வழங்கவும் வகை செய்கிறது.

(9) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்று வாரியம்.

தொழிலாளர்கள் அவர்களுடைய பணியை நிரந்தரமாக்குதல், அவர்களுக்கு ஏனைய சில அனுகூலங்களைக் கொடுத்தல் போன்ற பல கோரிக்கைகள் குறித்து வேலை நிறுத்தத்திற்கான அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தனர். அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி, 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாள் முதல் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். தொழிலாளர்கள் மேற்கொண்ட தொடர் உண்ணாவிரதத்தை விட்டுவிட்டு தொழில் தகராறைத் தீர்த்து வைப்பதில் ஒத்துழைக்குமாறு தொழிலாளர் நல அமைச்சர், அவர்களைக் கேட்டுக் கொண்டார். இதன் பின்னர் சென்னையில் உள்ள தொழிலாளர் நல துணை ஆணையாளர் (குறைந்தளவு ஊதியங்கள்) முன் நடைபெற்ற விவாதங்களின் விளைவாக, 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28 ஆம் நாளன்று நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்குமிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டு தொழிலாளர்கள் மேற்கொண்டிருந்த தொடர் உண்ணாவிரதத்தை அந்நாள் மாலையில் அவர்கள் விட்டு விட்டனர்.

(10) கார்போரண்டம் யூனிவர்சல் லிமிடெட், சென்னை.

இக்கம்பெனி தொழில்களுக்குத் தேவைப்படுகின்ற மெருகூட்டும் அரைக்கும் (Polishing and grinding) பொருட்களைத் தயாரிக்கிறது. தொழிலாளர் ஒருவரை வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்க கொடுக்கப்

பட்ட ஆணை ஒன்றை ரத்து செய்யுமாறு கேட்டுக்கொண்டு இந்நிறுவனத்தைச் சேர்ந்த 900 எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். சென்னையில் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் முன்பாகவும் தொழிலாளர் நல சிறப்பு துணை ஆணையாளர் முன்பாகவும் நடைபெற்ற விவாதங்களின் விளைவாக தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் தொழிலாளர்களுக்கு 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23 ஆம் நாள் அன்று ஆலோசனை நல்க, அவர்கள் அதன்படி 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் நாள் முதல் வேலைக்குத் திரும்பினர்.

(11) சன் பேப்பர் மில்ஸ், திருநெல்வேலி.

தொழிலாளர்களை வேலைக்கமர்த்துதல், நாட்கூலி பெறும் தொழிலாளர்களைப் பணியில் பயன்படுத்துதல் முதலியவைக் குறித்து 'சன்பேப்பர் மில்ஸ் லிமிடெட்' ஆலையின் நிர்வாகத்திற்கும் அதன் தொழிலாளர்களுக்குமிடையே 1978 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 27 ஆம் நாளன்று சென்னை, தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்பாக தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) ஆவது பிரிவின்கீழ் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது.

1976-77 ஆம் ஆண்டிற்கான ஊதியங்களையும் அகவிலைப் படிகளையும் திருத்தியமைத்தல், தற்காலிக நாள் கூலி பெறும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்தல் முதலியவை போன்ற பிற பிரச்சினைகள் தொடர்பாக, மொத்த வருமானத்தில் 12 சதவித ஊதியக் கோடையை முன்பணமாகத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது; அத்துடன் திருப்பி வசூலிக்கத் தக்க தொகை ரூ. 175 சேர்த்துக் கொடுக்கப்பட்டது. இந்த உடன்பாட்டின் மூலம் சுமார் 800 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

(12) கூட்டுறவு சர்க்கரை ஆலை.

ஆம்பூர், மோகனூர், படாளம் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் சுமார் 3,300 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். 1977-ல் ஊதியக்கோடை வழங்கல் சட்டத்தில் திருத்தம் ஒன்று செய்தது தொடர்பாக 1977-78 ஆம் ஆண்டிற்கு ஊதியக்கோடை வழங்குமாறு, இந்த ஆலைகளின் தொழிலாளர்கள், தொழில் தகராறுகளை எழுப்பினர். தொழிலாளர் சங்கங்கள் நிர்வாகத்துடனும் சர்க்கரைத் துறை இயக்குநருடனும் நேரடியாக நடத்திய பேச்சு வார்த்தைகளின் விளைவாகவும் சென்னையில் உள்ள தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன் நடைபெற்ற இணக்க பேச்சுவார்த்தைகளின் விளைவாகவும், 1977-78, 1978-79 ஆகிய கணக்கு ஆண்டுகளுக்காக ஒப்புக்கொள்ளப்பட்ட கோட்பாட்டின் அடிப்படையில் உற்பத்திக்கு ஏற்ப ஊதியக் கோடையை தொழிலாளர்களுக்கு வழங்குவதென ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது.

(13) ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை (லிமிடெட்), ஆம்பூர்.

1976-77 ஆம் ஆண்டுக்கான ஊதியக்கோடையைக் கொடுக்குமாறு இவ்வாலை நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 800 தொழிலாளர்கள் 1978 ஜனவரியில் வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை, தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன் ஏற்பட்ட உடன்படிக்கையின் விளைவாக தொழிலாளர் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் அன்று வேலைக்கு திரும்பினர். 1977-78, 1978-79 ஆகிய இரு கணக்கு ஆண்டுகளுக்கு ஒப்புக் கொண்ட கோட்பாட்டின் அடிப்படையில் உற்பத்திக்கேற்ப ஊதியக் கோடையை தொழிலாளர்களுக்கு வழங்கவும் 1976-77 கணக்கு ஆண்டிற்காக, கிடைத்த மொத்த வருமானத்தில் 12 சதவித ஊதியக்கோடையை முன் பணமாகத் தொழிலாளர்களுக்கு வழங்கவும் இந்த உடன்படிக்கை வகை செய்தது. அத்துடன் திருப்பிச் செலுத்தப்படத்தக்க தொகை ரூ. 175 சேர்த்து வழங்கப்பட்டது. இந்த உடன்பாட்டின் மூலம் தொழிலாளர் அனைவரும் பயனடைந்தனர்.

(14) கோத்தாரி சர்க்கரை ஆலை, காட்டூர்.

இந்த சர்க்கரை ஆலையைச் சேர்ந்த சுமார் 1,100 தொழிலாளர்கள், அவர்களால் எழுப்பப்பட்ட பல கோரிக்கைகள் குறித்து 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பாக நடைபெற்ற விவாதங்களின் விளைவாக உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டு தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் அன்று வேலைக்குத் திரும்பினர். இந்த உடன்பாடு, ஏனையவற்றுடன் முறையான மற்றும் குறிப்பிட்ட பருவங்களில் அமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு ஊதியக் கோடை, பணிக்கொடை வழங்கவும், நாட்கூலி பெறும் தொழிலாளர்களை முறையான வகைகளில் சேர்த்துக் கொள்வதற்கும் வகை செய்கிறது.

(15) கரூர் ஆலை லிமிடெட், கரூர்.

இந்த நெசவாலை 475 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ளது. சில கோரிக்கைகள் குறித்து தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8 ஆம் நாள் அன்று வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள் அன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. உடன்படிக்கை ஏற்பட்ட நாளன்று தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது. இந்த உடன்பாடு நிரந்தரமான காலியிடங்களைப் பூர்த்தி செய்யவும் தொழில் பழகுநர்களுக்கு உயர் ஊதியத்தைக் கொடுக்கவும் வகை செய்தது.

(16) பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் (துணைப் பிரிவுகள்), திருச்சிராப்பள்ளி.

பல கோரிக்கைகள் குறித்து, திருச்சியில் உள்ள பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட்டின் சுமார் 100 துணைப் பிரிவுகளில் பணியாற்றும் சுமார் 4,000 தொழிலாளர்கள், 1978 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாளன்று அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். பிறகு அனைத்துப் பிரிவுகளும் மூடப்பட்டன. சென்னை தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் தலையீட்டின் பேரில் 1978 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5 ஆம் நாளன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டு 1978 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5 ஆம் நாளன்று அனைத்துப் பிரிவுகள் மீண்டும் திறக்கப்பட்டன.

(17) மேட்டூர் பியர்ட் செல் லிமிடெட், மேட்டூர் அணை.

இந்த நெசவாலையில் 2,000 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். புதிய துணி வகைகளை நெய்வதனால், கிடைத்த வருமானத்தில் இழப்பு ஏற்பட்டதன் காரணமாக, இவ்வாலையைச் சேர்ந்த சுமார் 750 தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். இவ்வாலை முழுவதும் இயங்காத காரணத்தால் 2,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாளன்று தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பு ஏற்பட்ட உடன்படிக்கையின் விளைவாக 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2 ஆம் நாளன்று மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது.



(18) மதுரா கோட்ஸ் லிமிடெட், அம்பாசமுத்திரம்.

இந்த நெசவாலையில் சுமார் 5,600 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். சில தொழிலாளர்களின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை வாபஸ் பெறுமாறும், 8 நாட்கள் ஊதியத் தொகையைக் குறைக்க வேண்டி நிர்வாகத்தினர் எடுத்த முடிவை வாபஸ் பெறுமாறும் கேட்டுக் கொண்டு, 'மதுரா கோட்ஸ் லிமிடெட்' ஆலையைச் சேர்ந்த நூற்பாலையில் (நூல் சுற்றும் பிரிவு) பணியாற்றி வருகின்ற சுமார் 1,500 எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள், 1978 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5 ஆம் நாள் அன்று வேலை நிறுத்தம் செய்தனர். சென்னையில் உள்ள தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22 ஆம் நாளன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். இரு தொழிலாளர்களின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை வாபஸ் பெறுவதற்கும், 8 நாட்கள் ஊதியத்தைக் குறைக்க வேண்டி எடுத்த முடிவை வாபஸ் பெறுவதற்கும் நிர்வாகம் ஒப்புக்கொண்டது. சில தொழிலாளர்களின் மீது விதிக்கப்பட்ட தண்டனையை மறு ஆய்வு செய்வது தொடர்பாக தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் எடுத்த முடிவினை இரு கட்சியினரும் அனுசரிக்க ஒப்புக்கொண்டனர். இந்த உடன்பாட்டினையொட்டி நிர்வாகத்தினரால் விதிக்கப்பட்ட தண்டனையை மறு ஆய்வு செய்து, சென்னை தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் ஆலோசனை நல்கினார்.

(19) புல்லிக்கார் ஆலை லிமிடெட், திருச்செங்கோடு.

இந்த ஆலையைச் சேர்ந்த 900 எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள், ஆலைக்குள் நடைபெறும் பணியாற்றும் முறையை ஒழிக்கவும், ஏனைய சில கோரிக்கைகளுக்காகவும் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7 ஆம் நாள் அன்று சென்னையில் உள்ள தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பு ஏற்பட்ட உடன்படிக்கை ஒன்றின் விளைவாக 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாள் அன்று வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டது.

### (20) தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட், திருநெல்வேலி.

இந்த நூற்பாலையில் 3,500 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். பல கோரிக்கைகள் குறித்து, இந்நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23 ஆம் நாள் அன்று வேலை நிறுத்தம் செய்தனர். திருநெல்வேலியில் உள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை லிமிடெட் நிர்வாகத்திற்கும் அதன் தொழிலாளர்களுக்குமிடையில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20 ஆம் நாள் அன்று சென்னையில் உள்ள தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பாக, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) ஆவது பிரிவின்கீழ் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. இந்த உடன்படிக்கைக்கிணங்க, தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23 ஆம் நாள் முதல் வேலைக்குத் திரும்ப ஒப்புக்கொண்டனர்.

### (21) சென்னை திருவல்லிக்கேணி நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள் லிமிடெட், காமதேனு கூட்டுறவு சிறப்பு அங்காடி லிமிடெட்.

திருவல்லிக்கேணி நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 950 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். ஊதிய உயர்வு, சில தொழிலாளர்களை வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்திவைத்தது முதலியவை தொடர்பாக இந்நிறுவனத்தில் தொழில் தகராறு ஒன்று ஏற்பட்டது. தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (குறைந்தளவு ஊதியங்கள்), இத்தகராறு குறித்து இணக்கப் பேச்சு வார்த்தை நடத்தி 1978ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14ஆம் நாளன்று, 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆவது பிரிவின் கீழ் நட்பிணக்க முறையில் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தினார்.

### (22) இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட், சென்னை.

ஊதிய விதங்கள், அகவிலைப்படி, ஏனைய நலன்கள் ஆகியவற்றைத் திருத்தியமைப்பது குறித்து 1978ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14ஆம் நாளன்று சுமார் 2,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தனர். சென்னை தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்-1 இவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி 1978ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதனையடுத்து தொழிலாளர்கள் 1978ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். சென்னை, தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்-1 நடத்திய பேச்சு வார்த்தையின் விளைவாக வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது





### (23) நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், நெய்வேலி.

இந்த நிறுவனத்தில் 18,000 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். ஊதிய விதங்களை மாற்றியமைப்பது உட்பட சில கோரிக்கைகள் குறித்து தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்ட தகராறு குறித்து 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17ஆம் நாளன்று சென்னை தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்-2 முன், 1947ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3)ஆவது பிரிவின் கீழ் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

### (24) சேஷசாயி தொழிற்சாலை லிமிடெட், வடலூர்.

மின்சார தொழில்களுக்குப் பயன்படுத்தப்படும் மட்பாண்ட, பீங்கான் பொருட்களை இந்த நிறுவனம் தயாரிக்கிறது. இதில் 1,000 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். 1977 ஆம் கணக்காண்டிற்கு அதிகப்படியான ஊதியக் கொடை ( Bonus ) கேட்டு, தொழிற்சங்கங்கள் தொழிற் தகராறு ஒன்றை எழுப்பின. நிர்வாகத்திற்கும் சங்கங்களுக்கும் இடையே உடன்பாடு எதும் ஏற்படாததால், 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27 ஆம் நாளிலிருந்து நிர்வாகம் கதவடைப்பு செய்தது. ஆனால், பின்னர் இருதரப்பினர்களுக்கிடையே தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3)ஆவது பிரிவின்கீழ், 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5ஆம் நாளன்று சென்னை தொழிலாளர் நல துணை ஆணையாளர் 2-ன் முன் உடன்பாடு ஏற்பட்டது. நிர்வாகம் 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6ஆம் நாளிலிருந்து கதவடைப்பினை நீக்கியது. ஊதியக்கொடை வழங்குவது, முன்பணத் தொகையை வசூலிக்கும் முறை ஆகியவை குறித்து தீர்ப்பு அளிக்கப்படும் வரையில், இந்த உடன்பாட்டிற்கு இணங்க, குறைந்தளவு ஊதியக்கொடை 8.33 சதவீதத்திற்கு சமமான ஊதியக்கொடை முன்பணமும் அத்துடன் ஒரு முன்பணமும் கொடுப்பதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

### (29) சவுத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், சிறுமுகை.

சவுத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட் செயற்கை பட்டுத் துணிகளைத் தயாரிக்கிறது. இந்த நிறுவனத்தில் 2,200 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இந்த நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் பிரதிநிதியாகவுள்ள சுமார் 10 சங்கங்கள், 1977 கணக்காண்டிற்கு தொழிலாளர்களின் மொத்த வருமானத்தில் 50 சதவீதத்தொகையை ஊதியக் கொடையாகக் கேட்டு, 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20 ஆம் நாளன்று வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றை கொடுத்தனர். கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணை

யாளர், சென்னை தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (ஆய்வு) ஆகிய வர்களின் முன் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் பயனாக 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ஆம் நாளன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. 1977-ம் கணக்காண்டிற்கு ஊதியக் கொடையாக தொழிலாளர்களின் மொத்த வரு மானத்தில் 20 சதவிதம் தொகையை வழங்க உடன்பாடு வகை செய்கிறது. இவற்றோடு 1979ஆம் ஆண்டில் உயர்ந்தளவு உற்பத்தியினையும் தங்கு தடை யற்ற பணியையும் பராமரிப்பதில் நிர்வாகத்துடன் ஒத்துழைப்பு தருவதாக தொழிலாளர்கள் அளித்த உறுதிமொழியினைக் கருத்தில் கொண்டு, கருணை மானியமாக 10 சதவிதம் தொழிலாளர்கள் பெறுவர். தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்த அறிவிப்பை திரும்பப் பெற்றன. மேற்சொன்ன உடன்பாட்டி னால் சுமார் 2,200 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

### தொழிற்சாலை வாரியாக உடன்பாடு.

### துணி ஆலைகள்.

11.33 சதவித ஊதியக்கொடை கொடுக்குமாறு கேட்டுக் கொண்டு, துணி ஆலைகள் நிர்வாகத்தினருக்கு எதிராக, சுமார் 70,000 எண்ணிக்கையுள்ள தொழிலாளர்களின் பல்வேறு தொழிற் சங்கங்கள் தகராறு ஒன்றை எழுப்பின. தொழிலாளர் நல அதிகாரிகள் நடத்திய இணக்கப் பேச்சு வார்த்தையின் பயனாக 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7ஆம் நாள்ன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. ஊதியக்கொடை தொகை வழங்கும் விதிதுறைகளுக்கு இணங்க ஊதியக்கொடை வழங்குவதற்கும் 3 சதவிதத்திலிருந்து 8 சதவிதம் வரை கூடுதல் தொகை வழங்குவதற்கும் இவ்வுடன்பாடு வகை செய்கிறது.

### தேசிய துணி ஆலைக் கழகத்தைச் சேர்ந்த ஆலைகள்.

அதிகப்படியாக ஊதியக்கொடை கேட்டு, தேசிய துணி ஆலைக் கழகத் தின் கட்டுப்பாட்டில் உள்ள 10 துணி ஆலைகளின் சுமார் 10,000 தொழி லாளர்கள் (தமிழ்நாடு, புதுச்சேரி) 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். இணக்கப் பேச்சுக்களின் விளைவாக, 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ஆம் நாளன்று ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அது 8.33 சதவிதம் குறைந்தளவு ஊதியக் கொடையினை வழங்குவதற்கும். 3 சதவிதம் கூடுதல் தொகை வழங்கு வதற்கும் வகை செய்கிறது. 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18ஆம் நாளன்று வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.



### தோல் பதனிடும் தொழிற்சாலை.

ஊதியத் திருத்தம், அகவிலைப் படி, ஊதிய உயர்வு, வீட்டு வாடகைப் படி, சீருடை இவற்றைக் கேட்டு, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணி புரியும் சுமார் 40,000 தொழிலாளர்கள் 1978 மே திங்கள் 17-ம் நாளிலிருந்து தாங்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக கருத்துத் தெரிவித்து வேலைநிறுத்த அறிவிப்பைக் கொடுத்தனர். 1978 மே திங்கள் 16, 17-ந் தேதிகளில் சென்னை தொழிலாளர் நல துணை ஆணையாளர் (ஆய்வு) முன் நடைபெற்ற இணக்க நடவடிக்கைகளின்படி, ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதற்கிணங்க 1978 மே திங்கள் 2-ம் நாளி லிருந்து ரூ. 1.80 ஊதிய உயர்வும் 1979 மே திங்கள் 2-ம் நாளிலிருந்து ரூ. 2 ஊதிய உயர்வும் அளிக்கப்படும்.

### மலைத் தோட்டங்கள்.

தொழிலாளர்களுக்கும், தமிழ்நாடு மலைத் தோட்ட தொழிலதிபர்கள் சங்கம், நீலகிரி மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் சங்கம், நீலகிரி வயநாடு மலைத் தோட்டத் தொழிலதிபர்களின் சங்கம் ஆகிய எஸ்டேட்டு உறுப்பினர் களின் நிர்வாகிகளுக்கும் இடையே ஊதியம், தேசிய பண்டிகை விடுமுறைகள் ஆகியவற்றுடன் ஊதியக் கொடை, பணிக்கொடை, விடுப்பு ஆகியவற்றை சேர்த்துக் கணக்கிடுவதற்காக ஊக்க ஊதியத்தை (Plucking incentives) சேர்ப்பது குறித்த பிரச்சினைகளுக்கு 1947ஆம் ஆண்டு தொழில் தகராறு சட்டத்தின் 18(1) பிரிவின் கீழ் 1978 அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் அன்றும் 1978 அக்டோபர் திங்கள் 9 ஆம் நாளன்றும் தீர்வுகள் காணப்பட்டன.

### தமிழ்நாட்டிலுள்ள தேயிலை-காபி எஸ்டேட்டுகள் (சேர்வராயன் மலைத் தொடர் நீங்கலாக).

ஊதிய உயர்வு, அகவிலைப் படி, விடுமுறை வசதிகள் முதலியவை அடங்கிய கோரிக்கைகள் குறித்த தொழிலாளர்களுக்கும், தமிழ்நாட்டிலுள்ள தேயிலை-காபி எஸ்டேட்டின் நிர்வாகத்தினருக்குமிடையே (சேர்வராயன் மலைத் தொடர்கள் நீங்கலாக) ஏற்பட்ட தகராறு குறித்த தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் கோயம்புத்தூர் தொழிலாளர் நல ஆணை ஆணையாளரின் முன் 1978 சனவரித் திங்கள் 2-ம் நாள் அன்று ஒரு உடன் படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்பாடு தமிழ்நாடு மலைத் தோட்டத் தொழிலதிபர்களுக்கும் அவர்களின் கீழ் வேலை பார்க்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட உடன்பாடாகும்.

## மூடப்பட்டிருந்த ஆலைகளைத் திறத்தல்.

செயலற்றுப்போன கீழ்க்கண்ட நிறுவனங்கள் அரசு எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக மீண்டும் திறக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன.

### 1. தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர்.

சுமார் 101 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த ஆலை 1976 அக்டோபர் திங்கள் 25-ம் நாளிலிருந்து செயல்படவில்லை. ஆலையினைத் திறப்பது தொடர்பாக கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளர், சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். தரப்பினர்களிடையே (அதாவது குத்தகைதாரர்களான ஸ்ரீ சென்கோ நிறுவனங்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே) 1978 பிப்ரவரித் திங்கள் 6-ம் நாள் அன்று ஏற்பட்ட உடன்பாட்டினைத் தொடர்ந்து 1978 பிப்ரவரித் திங்கள் 20-ம் நாளன்று ஆலை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

### 2. இராஜா மில்ஸ், மதுரை.

125 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த ஆலை 1976 நவம்பர் திங்கள் 20-ம் நாளிலிருந்து செயல்படவில்லை. இந்த ஆலை ஏல விற்பனையில் திரு. ஏ. ஆர். பாலகிருஷ்ண முதலியாரால் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆலை 1978 மே திங்கள் 19-ம் நாளிலிருந்து மதுரை ஸ்ரீ அங்கப்பா ஸ்பின்னிங் மில்ஸ் என்ற பெயரால் செயல்பட்டு வருகிறது.

## துணி ஆலைத் தொழிலில் சிக்கனச் சீரமைப்பு.

1978 ஆம் ஆண்டில் தொழிலாளர் துறையின் உதவியுடன் துணி ஆலைகளில் சிக்கனச் சீரமைப்பு தொடர்பாக 52 தொழிற் தகராறுகள் தீர்க்கப்பட்டன. நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் 32 தகராறுகள் தீர்க்கப்பட்டன.

## நடுவர் தீர்ப்பு.

1978 ஆம் ஆண்டில் 31 வழக்குகள் தனிப்பட்ட முறையில் நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டன.





## மாநில நடுவர் மன்ற மேம்பாட்டுக் குழு.

1978 ஆம் ஆண்டில் 1978 அக்டோபர் திங்கள் 23-ம் நாளும், 1978 நவம்பர் திங்கள் 30-ம் நாளும் ஆகிய நாட்களில் இக்குழு இருமுறை கூடியது. உறுப்பினர்கள், தொழில் அதிபர்களின் மத்திய அமைப்புகள், தொழிலாளர்கள் ஆகியவர்களின் கருத்தைக் கேட்ட பிறகு நடுவர்களின் பெயர்ப் பட்டியலை மாற்றியமைக்க குழு தீர்மானித்தது.

## நீதிமன்றத் தீர்ப்பு.

1977-78ஆம் ஆண்டுகளில் சென்னை தொழில் நடுவர் மன்றம், தொழிலாளர் நீதிமன்றங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்ட வழக்குகள், அவை அளித்த தீர்ப்புகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் பின்வருமாறு :—

| | தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | | தீர்ப்பளிக்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | 1977. | 1978. | 1977. | 1978. |
| தொழில் நடுவர் மன்றம், சென்னை. | 73 | 80 | 47 | 77 |
| தொழிலாளர் நீதி மன்றங்கள். | 617 | 642 | 552 | 945 |

மேற்சொன்ன வழக்குகளைத் தவிர தொழிலாளர் நீதிமன்றங்கள் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-C (2) ஆவது பிரிவின் கீழ் தாக்கல் செய்த, 2,112 மனுக்களை விசாரணை செய்து தீர்ப்புக் கூறியுள்ளன.

## வசூல்.

1978 ஆம் ஆண்டில், 103 தகராறுகளில் 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 33-C (1) ஆவது பிரிவின் கீழ் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய (ரூ. 3,92,355.17) தொகையை வசூல் செய்யுமாறு அரசு ஆணையிட்டது.

வழக்குகள்.

1978 ஆம் ஆண்டில் வழக்குகள் தொடர அனுமதி வழங்கப்படவில்லை.

தொழிற் சங்கங்கள்.

1978 சனவரித் திங்கள் 1 ஆம் நாளன்று நிலவரப்படி 2,550 பதிவு பெற்ற தொழிற்சங்கங்கள் இருந்தன. நடப்பு ஆண்டில் 466 தொழிற் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 244 தொழிற்சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டன. மூன்று சங்கங்களின் பதிவு ரத்து நீக்கிவிடப்பட்டது. 5 சங்கங்கள் கலைக்கப்பட்டன. இவ்வாண்டு இறுதி நிலவரப்படி பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 2,770 ஆகும்.

தொழிற்சாலையில் ஒழுங்கு முறை விதி.

தொழிற்சாலையில் ஒழுங்கு முறை விதியைச் செயல்படுத்தும் பணியும், தொழிற்சங்கங்களை அங்கீகாரமளிக்கும் பணியும் மாநில மதிப்பீட்டு செயல்பாட்டுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்குழு 1978 சனவரித் திங்கள் 18 ஆம் நாள், 1978 சூன் திங்கள் 28 ஆம் நாள், 1978 டிசம்பர் திங்கள் 2 ஆம் நாள் ஆகிய நாட்களில் மூன்று முறை கூடியது; தொழிற்சாலையில் ஒழுங்கு முறை மீறிய 10 வழக்குகளை விசாரித்தது 23 தொழிற்சங்கங்களை அங்கிகரிக்க பரிந்துரைத்துள்ளது.

எவ்வித மத்திய அமைப்பையும் சேராத பல்வேறு தொழிலதிபர்கள், தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு தொழிற்சாலை ஒழுங்கு முறை விதிகளைப் பின்பற்ற ஆலோசனைகள் கூறுமாறு தொழிலாளர் நல அதிகாரிகளுக்கும், தொழிற்சாலை ஆய்வாளர்களுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி 2,770 தொழிற்சங்கங்கள், 326 நிர்வாகங்கள், 24 உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவை எழுத்து மூலமாக ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டுள்ளன.



1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்ட

1977-78 கணக்காண்டிற்கான வருமானத்தில் 8.33 சதவீதம் என்ற குறைந்த அளவு ஊதியக் கொடைக்கு வகை செய்து, இந்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட ஒரு அவசரச் சட்டம் ஒன்றின் மூலம் 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

சிறு நிறுவனங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு இச்சட்டத்தை நீட்டித்தல்.

தமிழ்நாட்டில் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பான்மையோர் ஊதியக் கொடைப் பயனைப் பெறும் வண்ணம் ஊதியக் கொடை வழங்குவதை கடைகள், நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் சிறு தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் சட்டப்படி நீட்டிக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தீர்மானித்தது. எனவே தொழிலாளர் நலன்-வேலை வாய்ப்புத் துறையின் 1978 ஆகஸ்டு திங்கள் 2 ஆம் நாளிட்ட 833 ஆம் எண்ணுள்ள அரசாணையின் மூலம் அரசு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டதன் வாயிலாக 20 தொழிலாளர்களுக்குக் குறை வாகவும் ஆனால் 10 தொழிலாளர்களுக்குக் குறையாமலும், அல்லது 1977 ஆம் கணக்காண்டில் எந்த ஒரு நாளிலும் இருபது தொழிலாளர்களுக்குக் குறை வாகவும் ஆனால் 10 தொழிலாளர்களுக்குக் குறையாமலும் வேலைக்கு அமர்த்தியுள்ள பின்வரும் வகுப்புகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின் விதித் துறைகள் பொருந்தச் செய்யப் பட்டுள்ளன.

1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 63/1948) 2-வது பிரிவு (m) பகுதியைச் சேர்ந்த (1) உட்பகுதியின் பொருள் விளக்கத்திற்குள் வரும் தொழிற்சாலைகள்;

2. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்—நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1947) 2-வது பிரிவைச் சேர்ந்த (6) உட்பிரிவின் பொருள் விளக்கத்திற்குள் வரும் நிறுவனங்கள்;

3. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1961) 2-வது பிரிவைச் சேர்ந்த (g) பகுதியில் பொருள் விளக்கத்திற்குள் வரும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள்; மற்றும்

4. மலைத் தோட்டங்கள், அதாவது தேயிலை, காப்பி, இரப்பர் சிங்கோனா அல்லது ஏலக்காய் ஆகியவற்றைப் பயிரிடுவதற்காகப் பயன் படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்பட்டுள்ள எந்த ஒரு நிலம்.

இந்த ஆண்டில், 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின் 2(1) பிரிவின் கீழும்; 1965-ம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் விதிகளின் 3 (b) விதியின் கீழும் வகை செய்யப்பட்டுள்ளவாறு, நிர்வாகத்தினர் தங்களது கணக்கிடு ஆண்டை மாற்றிக்கொள்ள அனுமதித்து இரண்டு நேர்வுகளில் தொழிலாளர் நல ஆணையாளர் ஆணைகள் பிறப்பித்துள்ளார்.

1978-ல் 81 நேர்வுகளில், இச்சட்டத்தின் 19-வது பிரிவின் கீழ் ஊதியக் கொடை வழங்குவதற்கான அவகாசத்தை தொழிலாளர் நல ஆணையாளர் அளித்துள்ளார்.

## தொழிலாளர் நலச் சட்டங்களுக்குத் திருத்தங்களைக் கூறுவதற்காக முத்தரப்புக் குழு.

சட்டத்திலேயே விதித்துறைக்கு வகை செய்து தொழிலாளர்களுக்குப் பயனும் பாதுகாப்பும் அளிக்க உறுதி செய்வதே அரசின் கொள்கையாகும். இதனைக் கருத்திற்கொண்டு, தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களுக்குத் திருத்தங்களை எடுத்துரைக்க தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய முத்தரப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழு இதுவரையில் எட்டு முறை கூடி, தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள் சட்டம் தொடர்பாகவும், தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம் தொடர்பாகவும் தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம் தொடர்பாகவும் திருத்தங்கள் குறித்து இக்குழு விவாதித்து முடித்துள்ளது.

## சிறந்த தொழில் உறவுக்கான பரிசுத் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் நிர்வாகத்தினருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் சிறப்புப் பரிசுகளை வழங்குவதன் மூலம், நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே சிறந்த தொழில் உறவைப் பராமரிக்கவும் அதைத் தொடர்ந்து பாதுகாத்து வரவும் ஊக்குவிப்பதற்காக 1978-ல் தமிழ்நாடு அரசு, சிறந்ததொரு நடவடிக்கையை எடுத்தது. பரிசு பெறுவதற்கு உரியோரைத் தேர்ந்தெடுக்க, 



உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்டு, முறையே தொழிலதிபர்கள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எழுவர் அடங்கிய தேர்வுக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. பரிசு வழங்குவதற்கான இத்திட்டம் 1978 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட உள்ளது. இக்குழு 28—11—1978-ல் கூடி, இத்திட்டத்தின் கீழ்ப் பரிசுகளைப் பெற தொழிலதிபர்கள்/தொழிற் சங்கங்கள் தாக்கல் செய்ய வேண்டிய விண்ணப்பப் படிவத்தை முடிவு செய்ததோடு, விளம்பரம் முதலியவை போன்ற ஏனைய பொருட்களையும் கருதிப் பார்த்தது. திட்டம், விண்ணப்பம் ஆகியவை செய்தித்தாள்களில் வெளியிடப்பட வேண்டுமென குழு முடிவு செய்தது.

## மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு.

மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு முதல் நிலை ஆலோசனை குழுவாகும். தொழிலாளர் சம்பந்தப்பட்ட எல்லாப் பொருட்களும், அவை குறித்து அறிவுரை பெறுவதற்கு அவற்றிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இக்குழு 1978 பிப்ரவரியில் மீண்டும் அமைக்கப்பட்டது. அதற்கு, தொழிலாளர் நல அமைச்சர் தலைவர் ஆவார். இதில், தொழிலதிபர்கள், தொழிலாளர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாநிலச் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாள், 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 25-ம் நாள், 1978 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4 ஆம் நாள் ஆகிய, நாட்களில் கூடி தொழில் உறவுகள் சம்பந்தமான பல்வேறு பொருட்கள் குறித்து விவாதித்தது.

**துறை அதிகாரிகள் கூட்டம்.**—தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் 16-வது ஆண்டுக் கூட்டம் சென்னையில் 1978 டிசம்பரில் கூடியது. இக்கூட்டத்தில் தொழிலாளர் நல அமைச்சர் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில், தொழிலாளர் நல நிர்வாகம் தொடர்பான பல்வேறு பொருட்கள் குறித்தும், தொழிலாளர் நல தொழிற்சாலைச் சட்டங்களைச் செயல்படுத்துவது குறித்தும், எடைகள்-அளவைகள் சட்டத்தை செயல்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டதோடு, நிர்வாகத்தை முடுக்குவதற்கும் அதிகப்படியான தொழிலாளர்களுக்கு நல நடவடிக்கைகளை நீட்டிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அரசுக்குக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 11. நிறுவனங்கள் சட்டம்.

### 1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்.

தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் பாதுகாப்புக்கும், நலத்துக்கும் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தில் அடங்கியுள்ள நல நடவடிக்கைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்கான ஆய்வுகளைத் தொழிலாளர் நலத்துறை அடிக்கடி மேற்கொண்டுள்ளது. இதற்காக, இச்சட்டம், விதிகளின் விதித்துறைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்த நிர்வாகத்தினருக்கு அறிவுரை வழங்குவதன் மூலம் ஆய்வுகள் மிகவும் உன்னிப்பாக மேற்கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்றன. மீண்டும் மீண்டும் நிர்வாகத்தினர் தவறும்போது அவர்கள் மீது வழக்குத் தொடர்வதன் மூலம் அது தடுத்து நிறுத்தப்படுகிறது என்பதோடு, இந்நடவடிக்கை தண்டனை வழங்கி—திருத்துகின்ற நடவடிக்கையாக அமைகிறது.

1978-ன் ஆரம்பத்தில் 8,508 தொழிற்சாலைகள் இருந்தன. இவ்வாண்டு இறுதியில் 8,767 தொழிற்சாலைகள் இருந்தன. கூடுதலாக 699 தொழிற்சாலைகள் ஏற்பட்டுள்ளன. அதே நேரத்தில் 440 தொழிற்சாலைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அவை குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

பதிவேட்டில் காணப்பெறும் தொழிற் சாலைகளின் எண்ணிக்கை.

| | 1977. | 1978. |
|---|---|---|
| பிரிவு 2 m (i) .. .. .. | 7,969 | 8,224 |
| பிரிவு 2 m (ii) .. .. .. | 539 | 542 |
| பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை .. .. .. | 5,23,233 | 5,60,976 |

1978-79 ஆம் ஆண்டில், 1978 டிசம்பர் வரையில் உரிமக் கட்டணமாக ரூ. 47,82,299.55 வசூலிக்கப்பட்டுள்ளது.

ஆய்வாண்டில், தொழிற்சாலை ஆய்வாளர்களால், 3,422 தொழிற்சாலைகள் ஒருமுறை சோதனை இடப்பட்டுள்ளன. 5,227 தொழிற்சாலைகள் இருமுறை சோதனை இடப்பட்டுள்ளன. 368 தொழிற்சாலைகள் மும்முறை சோதனை இடப்பட்டுள்ளன. தொழிற்சாலைக் கண்காணிப்பு ஆய்வாளர்களால் 3,990 சோதனை ஆய்வுகள் நடத்தப்பட்டன. மேற்சொன்னவற்றோடு, 1,035 ஞாயிறு ஆய்வுகளும், 2,123 சிறப்பு ஆய்வுகளும், 461 திடீர் ஆய்வுகளும், 835 இரவு ஆய்வுகளும் நடத்தப்பட்டன.





1978 ஆம் ஆண்டில் தொழிற்சாலைச் சட்ட விதித் துறைகளை மீறியதற்காக தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது 4,109 வழக்குகள் தொடரப்பட்டன. இந்த ஆண்டில் 3,882 வழக்குகள் குறித்து முடிவெடுக்கப்பட்டது. 1,87,437 ரூபாய், அதாவது, வழக்கு ஒன்றுக்கு சராசரி 48 ரூபாய் என்னும் விதத்தில் அபராதம் வசூலிக்கப்பட்டது.

1977, 1978 ஆம் ஆண்டில் நடைபெற்ற விபத்துக்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு | உயிர் இழப்பில் முடியாத விபத்துக்கள். | உயிர் இழப்பில் முடிந்த விபத்துக்கள். |
|---|---|---|
| 1977 .. | 27,965 | 28 |
| 1978 .. | 30,507 | 39 |

தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், அத்தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், முந்திய ஆண்டில் ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது, 1978 ஆம் ஆண்டில் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

விபத்துக்கள் ஏற்படுவதைக் குறைப்பதற்காக 21 நாட்களும், அதற்கு மேலும் தொழிலாளர்கள் பணி புரிய இயலாமல் போகச் செய்யும் கடுமையான விபத்துக்கள் அனைத்தும் குறித்து தொழிற்சாலை ஆய்வாளர்களும், தொழிற்சாலை உதவி ஆய்வாளர்களும் உடனடியாகப் புலனாய்வு செய்து, அது போன்ற விபத்துக்கள் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்குத் தகுந்த பரிகார நடவடிக்கைகளை நிர்வாகத்தினருக்கு எடுத்துரைத்தனர். அவற்றிற்கிணங்க நடந்துள்ளனரா என்பதைக் கண்டறியத் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெரிய தொழிற்சாலைகள், 50 தொழிலாளர்களுக்கும் அதற்கு மேலும் பணி புரியும் தொழிற்சாலைகள், ஆண்டொன்றுக்கு 10 விபத்துக்கள் நடைபெறுவதாகத் தெரிவிக்கும் தொழிற்சாலைகள் ஆகிய அனைத்தும் "பாதுகாப்புக் குழுக்களைத்" தங்களது தொழிற்சாலைகளுக்குள் ஏற்படுத்துமாறு அவற்றிற்கு எடுத்துரைக்கப்பட்டது. 381 தொழிற்சாலைகள் அது போன்ற பாதுகாப்புக் குழுக்களை அமைத்துள்ளன. அவை திறம்பட செயலாற்றி வருகின்றன.

### சிரமவீர் பரிசுகளும் மாநிலப் பாதுகாப்புப் பரிசுகளும்.

மிகுந்த பாதுகாப்பு, அதிக உற்பத்தி, குறைந்த செலவு, இறக்குமதி செய்ய வேண்டிய பொருளுக்கு பதிலாக வேறு பொருளை உற்பத்தி செய்தல் முதலியவற்றிற்கு உறு துணை புரியும் சிறந்த கருத்தை நல்குவதன் மூலம் பொதுவாகத் தொழிற்சாலைத் திறனை மேம்படுத்துவதில் சிறந்த பணிபுரிந்த தொழிலாளர்களை மாநில அளவில் அங்கீகரித்துப் பரிசு வழங்குவதே 'சிரம வீர்' பரிசுத் திட்டத்தின் நோக்கமாகும். விபத்துக்கள் ஏற்படுவதைக் குறைப்பதில் நிர்வாகத்தினரிடையே சுமுகமான போட்டியை உருவாக்கும் நோக்கோடு, விபத்துக்கள் ஏற்படுவதைக் குறைக்கும் பணியில் தன்னிகரற்ற பணிபுரியும் தொழிற்சாலைகளுக்கு மாநில பாதுகாப்புப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

சாதனை ஆண்டுகளான 1976, 1977 ஆம் ஆண்டுகளுக்குரிய பரிசுகள், சென்னை, ராஜாஜி மண்டபத்தில் 1978 சனவரித் திங்கள் 22 ஆம் நாள், 1979 சனவரித் திங்கள் 19 ஆம் தேதிகளில் நடைபெற்ற விழாக்களில் வழங்கப்பட்டுள்ளன.

பரிசுத் திட்டத்தில் போட்டியிடுவதற்காக, 1978 ஆம் ஆண்டிற்கான மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள், சிரம வீர் பரிசுகள் ஆகியவற்றைப் பெறுவதற்குப் போட்டியிடுவதற்கான விண்ணப்பங்கள் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

### பாதுகாப்புப் பாடமுறைகள்.

1978-ல் தொழிற்சாலைப் பாதுகாப்பு குறித்து ஆறு பாட வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இப்பாட வகுப்புகளால் 173 பேர் பயனடைந்துள்ளனர்.

### உற்பத்தித் திறன்.

தமிழ்நாட்டில், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் ஆறு உற்பத்தித் திறன் குழுக்கள் உள்ளன. இக்குழுக்களுக்கு ஆண்டுதோறும் முந்திய ஆண்டில் இக்குழுக்கள் சந்தா தொகையாக வசூலித்த தொகையில் 50 சதவீதத்திற்கு நிகரான தொகை, ஆண்டொன்றுக்கு 3,000 ரூபாய் என்ற உயர் அளவிற்கு உட்பட்டு, பொது மானியத்தின் மூலம் இக்குழுக்களுக்கு நிதி உதவி வழங்கப்



படுகிறது. மேற்சொன்ன மானியத்தோடு, இக் குழுக்களால் நியமிக்கப்படும் தொழிற்சாலைப் பொறியாளர்களுக்குரிய செலவில் 50 சதவீதத் தொகைக்கு நிகரான தொகை, ஒவ்வோராண்டும் இக்குழுக்களுக்குத் தொழிற்சாலைப் பொறியாளர் மானியம் என்ற முறையில் அளிக்கப்படுகிறது.

1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளுக்குரிய பொது மானியமாக, இக்குழுக்களுக்கு 34,090 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இக்குழுக்களால் நியமிக்கப்பட்ட தொழிற்சாலைப் பொறியாளர்களுக்கு ஒரே சீரான சம்பள விதத்தை வரையறுப்பதற்கான செயற் குறிப்பை அரசு ஆய்வு செய்து வருவதால், அறிக்கை ஆண்டில், இக்குழுக்களுக்கு தொழிற்சாலைப் பொறியாளர் மானியம் எதுவும் வழங்கப்படவில்லை.

மேற்சொன்ன நிதி உதவியோடு, உற்பத்தித் திறனை அதிகரித்தல், என்னும் கொள்கையை வளர்ப்பதற்காக, 'தரம் நம்பத் தகுந்த தன்மை என்னும் பொருள் குறித்து 1970 ஆம் ஆண்டு ஆசிய உற்பத்தித் திறன் பற்றி இத் துறையால் செய்தித் திரைப்படம் ஒன்றும் எடுக்கப்பட்டது.

### திரைப் படங்கள்.

உற்பத்தித் திறன் குறித்த திரைப் படங்களைக் கொண்டுள்ள திரைப் பட நூலகம் ஒன்றும் உள்ளது. தொழிலாளர்களின் பயனுக்காகத் திரையிட்டுக் காட்டுவதற்குத் தேவைப்படுகின்ற தொழிற்சாலைகள், உற்பத்தித் திறன் குழுக்கள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றிற்கு இச் செய்தித் திரைப் படங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

### சுகாதாரம்.

மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் தொழிற்சாலைச் சுகாதாரம்-ஆரோக்கிய ஆய்வுக்கூடம் இணைந்த பிரிவை ஏற்படுத்துவதற்காக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது என்பதோடு, தொழிற்சாலைகளில் மருத்துவ ஆய்வாளரையும் நியமித்துள்ளது. தொழிற்சாலை ஆரோக்கியப் பிரிவு தொழிலாளர் நல ஆணையாளர் அலுவலகத்தில் தற்போது செயல்பட்டு வருகிறது. இப் பிரிவில் போதிய அளவிற்குப் பணியாளர்களை நியமித்ததன் மூலமும், ஆய்வுக் கூடத்தை நிறுவியதன் மூலமும், தற்போது இப் பிரிவு நல்ல நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைத் தொழிலாளர்களிடையே காணப்படும் ஈயத்தால் ஏற்படும் தீய விஷ நோய், மண்ணால் ஏற்படும் நோய், சரும நோய், ஏனைய நோய்கள் போன்ற தொழில் சார்ந்த

நோய்கள் ஏற்படுவதைக் கண்டறிவதே தொழிற்சாலை ஆரோக்கியப் பிரிவின் நோக்கமாகும். தகுந்த பாதுகாப்பான பணி நிலைமைகள் குறித்து கருத்து வழங்குவதும் தொழில்-பொதுச் சுகாதாரத்தைப் பாதிக்கும் வகையில் ஏற்படுகின்ற தொழிற்சாலை தூய்மைக்கேடு பற்றி மதிப்பிடுவதும் தொழிற்சாலை ஆரோக்கியப் பிரிவின் முக்கிய நோக்கமாகும்.

உள்ளூரிலேயே கிடைக்கப் பெறுவதும் தொழிற்சாலை ஆரோக்கியப் பிரிவுக்குத் தேவைப்படுவதுமான எல்லாக் கருவிகளும் பெரும்பாலும் வாங்கப்பட்டுள்ளன. அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய கருவிகளுக்காக இசைவு பெற்ற உடனேயே அப்பொருட்களும் விரைவில் வாங்கப்படும்.

தொழிற்சாலைகளில் அபாயகரமான பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் குறித்து தொழிற்சாலை மருத்துவ ஆய்வாளரால் விரிவாக மருத்துவ ஆய்வு செய்யப்பட்டது. தொழில் சார்ந்த பல்வேறு நோய்களுக்கான காரணங்களை அவர் கண்டறிந்துள்ளார். நமது மாநிலத்தில் முந்திரி பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களிடையே ஏற்படும் தொழில் சார்ந்த ஆபத்து குறித்த சிறப்பு ஆய்வுப் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

முந்திரி எண்ணெயில் நச்சுத் தன்மை இருப்பதால், அது வறுத்த முந்திரிக் கொட்டைகளை உடைக்கும் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களிடையே எண்ணெயினால் ஏற்படும் தோல் வியாதியை விளைவிக்கின்ற காரணத்தால் (Chronic oil dermatitis) 'முந்திரி எண்ணெய் பகுப்பாய்வு செய்யப்பட்டது. அந்த எண்ணெயில் 'கார்சினோஜெனிக் (Carcinogenic) தன்மை கலந்திருப்பதாகக் காணப்பட்டது. இது குறித்து ஆழ்ந்த ஆய்வு ஒன்று நிகழ்த்தவும் பரிகார முறைகளை எடுத்துரைக்கவும். திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியிலிருந்து வல்லுநர்கள் குழு ஒன்றை அமைப்பதற்காக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அரசு மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் தற்போது தொழிலாளர்களை மருத்துவப் பரிசோதனை செய்யும் முறையில் திறமைக் குறைவு இருப்பதாகக் காணப்பட்டது. எனவே, தொழிற்சாலைகளில் காணப்படும் தொழில் சார்ந்த நோய்களின் நிலவரம் தெரிந்து கொள்ளப்படவில்லை என்பதோடு அவை பற்றி தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவுமில்லை. ஆகவே, தொழிற்சாலைகளில் குறித்த கால ஆய்வும், மருத்துவப் பரிசோதனையும் திறம்பட நடைபெற உறுதி செய்யும் பொருட்டு, ஆய்வுக்கூட வசதிகளுடன், வட்டாரச் சான்றளிக்கும் மருத்துவர்களை நியமனம் செய்தலும் பரிசீலனையில் இருந்து வருகிறது.



1978 ஆம் ஆண்டில் அச்சகங்களில் விரிவான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தொழிலாளர்களின் இரத்தமும், சிறுநீரும் குறித்து சோதனை செய்ய 453 மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. பயனுள்ள கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், பாதுகாப்பான பணிச் சூழ்நிலையை உறுதி செய்யவும் நிர்வாகங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

தொழில் சார்ந்த நோய்களையும் தொல்லைகளையும் விளக்குவதற்காக பல்வேறு தொழிற்சாலைகளில் நடத்தப்படும் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்களுக்கு அட்டவணைகள்—திரைப்படத் துண்டு விளம்பரங்கள் ஆகியவற்றின் துணை கொண்டு, மருத்துவ ஆய்வாளர்கள் விளக்கவுரைகள் நிகழ்த்துகின்றனர்.

தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம், 1947.

1978 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் வரும் கடைகள், நிறுவனங்கள் இவற்றின் எண்ணிக்கை, அவற்றில் வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை இவைபற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இச்சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்கள் எண்ணிக்கை | 2,21,642 |
| வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை | 3,28,614 |

தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளை செயல்படுத்துவதில் எல்லா நிறுவனங்களுக்கும் சென்று பார்வையிடுவது, தொடக்க அறிவிப்பினைக் கொடுத்து அதன் வாயிலாக தொழிலாளர்களின் உரிமைகளைப் பற்றியும் நிர்வாகத்தின் கடமைகளைப் பற்றியும் கடைச் சொந்தக்காரர்களுக்கு எடுத்துரைத்து அறிவுறுத்துவது என்னும் போக்கினை இத்துறை மேற்கொண்டுள்ளது. தொழிலதிபர் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி தனது குறைபாட்டைத் திருத்துவதற்கு கவனம் செலுத்துவாரானால் அவர்மீது மேல் நடவடிக்கை எடுப்பது கைவிடப்படுகிறது. விதிகளை மீறுகின்ற தொழிலதிபர்களின் நிறுவனங்களின் மீது அடிக்கடி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தொழிலதிபர்கள் தங்கள் குறைகளைத் திருத்திக் கொள்ளும் வரையில் அவர்கள் மீது அடிக்கடி வழக்குகள் தொடரப்படும். இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள் 3,24,365 முறையான சோதனைகள், 6053 திடீர் சோதனைகள், 32,779 விடுமுறைச் சோதனைகள், 3,915 சிறப்புச் சோதனைகள் மற்றும் 6,619 இரவுச் சோதனைகள் நடத்தினர்.

[1979 ஏப்ரல் 23

1978 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 2,590 வழக்குகள் முடிவுறாத நிலையில் இருந்தன. 7,952 வழக்குகள் இவ்வாண்டில் அனுமதி பெற்றன. 10,542 வழக்குகளில் 6,865 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன. 37 வழக்குகளில் விடுதலையில் முடிந்தன. 22 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 1978 ஆம் ஆண்டில் அபராத தொகையாக ரூ. 2,11,006 வசூலிக்கப்பட்டது. அதாவது வழக்கு ஒன்றிற்கு சராசரியாக ரூ. 31 அபராதம் விதிக்கப்பட்டது.

இச்சட்டத்தின் 41-வது பிரிவின்கீழ் மேல் முறையீடுகள் முடிவு செய்யப்பட்டிருப்பதைக் கீழ்காணும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன :—

| | |
|---|---|
| ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறா நிலையில் இருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை | 268 |
| இவ்வாண்டில் வரப் பெற்ற மேல் முறையீடுகளின் எண்ணிக்கை | 198 |
| மேல் முறையீடுகளின் மொத்த எண்ணிக்கை | 466 |
| இவ்வாண்டில் முடிவு பெற்ற மேல்முறையீடுகளின் எண்ணிக்கை | 243 |
| இவ்வாண்டு முடிவில் முடிவுறா நிலையில் உள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை | 223 |

1978 ஆம் ஆண்டில் நிலையான விதிவிலக்கு ஒன்றும் தற்காலிக விதி விலக்குகள் 4-ம் அரசு வழங்கியது. (பொருட்காட்சிகள் திருவிழாக்கள் நீங்கலாக).

(பொருட்காட்சிகள், திருவிழாக்கள் நீங்கலாக) 22 தற்காலிக விலக்குகளையும் ஒரு இனத்தைப் பொறுத்த மட்டில் பொருட்காட்சிகள் திருவிழாக்களுக்குரிய தற்காலிக விலக்கினையும் தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் வழங்கியுள்ளார். துணை ஆணையாளர் 131 இனங்களில் தற்காலிக விலக்குகளை அளித்துள்ளார். 24 இனங்களில் இச்சட்டம் செயல்படுவதைத் தற்காலிகமாக தள்ளி வைக்க அனுமதித்துள்ளார். சட்ட விதித்துறைகள் பொருந்துதலைக் குறித்து அல்லது பணியாளர்கள் அனுபவித்து வந்த கூடுதல் அனுகூலம் உடைய சிறப்புரிமைகளுக்குப் பாதுகாப்புக் கேட்டு—சட்டத்தின் 51 வது பிரிவின் கீழ் தொழிலாளர் நல ஆணையாளரது முடிவைக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பம் 1978 ஆம் ஆண்டு தொடக்கத்தில் முடிக்கப் பெறாமல் இருந்தது. இவ்வாண்டில் இரண்டு விண்ணப்பங்கள் வரப் பெற்றன.



1979 ஏப்ரல் 23]

ஒரு விண்ணப்பம் இவ்வாண்டில் தொழிலாளர் நல ஆணையாளரால் முடிவு செய்யப்பட்டது. ஆண்டு முடிவில் இரண்டு விண்ணப்பங்கள் முடிவுறாமல் இருந்தன.

## தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம்.

1979 சனவரி 1-ஆம் நாளன்றுள்ளபடி 68,922 தொழிலாளர்களைக் கொண்ட 21,730 உணவகங்கள் இச்சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. இவைகளில் 10,326 நிறுவனங்கள் தொழிலாளர்களைக் கொண்டிருந்தன. 11,404 நிறுவனங்கள் தொழிலாளர்கள் இல்லாமல் இருந்தன.

1978 ஆம் ஆண்டில் பதிவுக் கட்டணமாக ரூ. 2,64,559 பெறப்பட்டது. இந்த ஆண்டில் ஆய்வாளர்கள் இச்சட்டத்தின் கீழ் 32,417 முறையான ஆய்வுகளையும், 430 திடீர் ஆய்வுகளையும், 783 விடுமுறை நாள் ஆய்வுகளையும் 282 தனி ஆய்வுகளையும் 209 இரவு நேர ஆய்வுகளையும் செய்தனர்.

1978 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இச்சட்டத்தின் விதித் துறைகளையும் விதிகளையும் மீறியது குறித்து 1,273 குற்ற வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன. 1,493 வழக்குகள் இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டன. அவற்றில் 1,528 வழக்குகளுக்கு தண்டனை அளிக்கப்பட்டது. 16 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 11 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 1978 ஆம் ஆண்டில் 71,215 ரூபாய் அபராதத் தொகையாகப் பெறப்பட்டது. ஆண்டு தொடக்கத்தில், உணவகங்களின் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியது அல்லது அகற்றப்பட்டதை எதிர்த்து இச்சட்டத்தின் 19 ஆவது பிரிவின் கீழ் செய்யப்பட்ட 66 மேல் முறையீடுகள் மேல்முறையீட்டு அதிகாரிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல அதிகாரிகளிடம் முடிவு செய்யப்படாமலிருந்தன. இந்த ஆண்டில் 74 மேல் முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த ஆண்டில் 97 மேல் முறையீடுகள் முடிவு செய்யப்பட்டன. ஆண்டின் இறுதியில் 43 மேல் முறையீடுகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன.

## 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்.

1978 ஆம் ஆண்டு தொடக்கத்தில், 92,141 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திக் கொண்ட 412 மலைத்தோட்டங்கள் இருந்தன. 1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள்வரையில் 1,300 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திய 12 புதிய மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. 28 தொழிலாளர்களை வேலைக்

கமர்த்தியிருந்த ஒரு மலைத் தோட்டம் இந்த ஆண்டில் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் 423 மலைத் தோட்டங்கள் இருந்தன. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாளன்றுள்ளவாறு தோராயமாக 93,413 தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் 38 வழக்குகள் நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படாமல் இருந்தன. இந்த ஆண்டில் 80 வழக்குகள் அனுமதிக்கப்பட்டன. 99 வழக்குகளுக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. ரூ. 10,710 அபராதம் விதிக்கப்பட்டது. அதாவது வழக்கு ஒன்றுக்கு ரூ. 18 சராசரியாக அபராதம் விதிக்கப்பட்டது. இரண்டு குற்ற வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 1978 ஆம் ஆண்டு இறுதியில் 17 குற்ற வழக்குகள் நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படாமல் இருந்தன.

மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரிடம் ஏற்பளிப்பை பெற்ற பின்னர், மலைத் தோட்ட அதிபர்கள், மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டும் விரிப்புக் கம்பளிகளும் கம்பளங்களும் வழங்கினர்.

மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் இலவசமாக மருத்துவ வசதிகளுக்கு வகைசெய்ய வேண்டியது மலைத் தோட்ட அதிபர்களின் கடமைகளில் ஒன்றாக, மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 10 வது பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது.

மலைத் தோட்டங்களிலுள்ள தோட்ட மருத்துவ மனைகளிலும் மருந்தகங்களிலும் சட்டம், விதிகளின் கீழ் சுகாதாரம் குறித்த விதித்துறைகளைச் செயல்படுத்துவதற்கு மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இரண்டு மருத்துவ அதிகாரிகள் உதகமண்டலம், நாகர்கோவிலைத் தலைமையிடங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர்.

1951 ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் அறிக்கை ஆண்டில் இவர்கள் 370 மலைத் தோட்டங்களை ஆய்வு செய்தனர். உதகமண்டலம், குன்னூர், கூடலூர், வால்பாறை, ஏற்காடு, திண்டுக்கல், நாகர்கோவில் ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்ட எழு ஆய்வாளர்களும், மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரிடம் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிகின்றனர். அவர்கள் இச்சட்டத்தையும் அதன்கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளையும் செயல்படுத்தி வருகின்றனர். அவர்கள் 1,357 முறையான ஆய்வுகளையும், 119 தனி ஆய்வுகளையும், 112 திடீர் ஆய்வுகளையும், 101 ஞாயிற்றுக்கிழமை ஆய்வுகளையும் நடத்தினர்.



## மலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு.

மலைத தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு, தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையின் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 21 ஆம் நாளிட்ட அரசாணை எண் 930-ல் புனரமைக்கப்பட்டது. இதற்குத் தொழிலாளர் நல ஆணையாளர் தலைவராக உள்ளார். இக் குழு 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் நாளில் கோயம்புத்தூரில் கூடி, ஏனையவற்றுடன், கீழ்க்கண்ட பொருள் குறித்து விவாதித்தது :—

1. **மருத்துவ உதவி.**—சிறப்புச் சிகிச்சை தேவைப்படுகின்ற வகைப்பட்ட நோயகளால் துன்புறுகின்ற தொழிலாளர்கள் பொதுவாக அத்தகைய சிறப்பு மருத்துவர்களால் சிகிச்சையளிக்கப்படுவதற்கு அனுப்பப்படவில்லை.

2. தொழிலாளர்கள், மருத்துவ மனைகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள்.

3. மலைத் தோட்டத் தொழிலாளர்களைச் சார்ந்தவர்கள் முதலியோரைச சிகிச்சை பெறுவோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுதல்.

## தனி அதிகாரி மலைத் தோட்டங்கள்.

தமிழ்நாட்டில் உள்ள தேயிலை, காப்பி எஸ்டேட்டுகளின் நிர்வாகிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே 1977 ஆம் ஆண்டு மே திங்கள் 18 ஆம் நாளன்று தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் ஏற்பட்ட உடன்பாட்டில் நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட பரிந்துரைகளுக்கு இணங்க, துணைப் பணியாளர்களுடன், தனி அதிகாரி (மலைத் தோட்டங்கள்) பதவி ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. காப்பி-தேயிலை ஆகியவற்றை, பயிரிட பல்வேறு எஸ்டேட்டுகளில் வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்பட வேண்டிய தொழிலாளர்களின் உரிய எண்ணிக்கையை மதிப்பிடும் நோக்கத்துடன் மலைத் தோட்டங்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு கூறுகளை ஆய்வு செய்வதே, அந்த தனி அதிகாரியின் (மலைத் தோட்டங்கள்) பணியாகும், தொழிலாளர் நலத் துறை துணை ஆணையாளர் பதவித் தரத்தில் உள்ள ஒரு அதிகாரி 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாள் முற்பகல் முதற்கொண்டு தனது பணியைத் தொடங்கியுள்ளார்.

## 1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் பணி நிலைமைகள் சட்டம்.

### செயற்படுத்தும் பணியாளரமைப்பு.

பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டத்தின் (பணி நிலைமைகள்)
படி, தொழிலாளர் நல ஆணையாளரின் கீழ், தொழிலாளர் நலத் துறை
துணை ஆணையாளர் (ஆய்வுகள்) தொடர்ந்து முதன்மை ஆய்வாளராகப்
பணியாற்றினர். மாநிலத்தில், 11 தொழிலாளர் நல ஆய்வாளர்கள் 28
தொழிலாளர் துணை ஆய்வாளர்கள், 206 தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள்,
மற்ற அனைத்துத் தொழிலாளர் நலச் சட்டங்களையும் செயற்படுத்தும் பணி
களையும் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு எடை—அளவை (செயற்படுத்தல்)
சட்டத்தினை செயற்படுத்தும் பணியையும் கவனிப்பதோடு இச் சட்டத்தைச்
செயற்படுத்தும் பணியையும் கவனித்து வருகின்றனர்.

தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள், உரிமம் வழங்குதல், உரிமத்தைப்
புதுப்பித்தல், அல்லது ரத்து செய்தல் போன்றவற்றிற்குப் பொருத்தமான
அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள்
(பணி நிலைமைகள்) சட்டத்தின் 5-வது பிரிவில் 7-வது விதியின்படி, அவர்கள்
பிறப்பிக்கும் முடிவுகளை எதிர்த்து, வட்டாரத் தொழிலாளர் நலத்துறை
ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்யலாம். பணியாளர்கள் எவரேனும்
பணியிலிருந்து விடுவிக்கப்பட்டால் அல்லது பணி நீக்கம் செய்யப்பட்டால்
அல்லது பணியிலிருந்து நிறுத்தப்பட்டால் சட்டத்தின் 31-வது பிரிவின்கீழ்
தொழிலாளர் நல அதிகாரிக்கு மேல் முறையீடு செய்யலாம். சில வேலை
களில், தொழில் அதிபர்களால் மூலப் பொருட்கள் வழங்குவது தொடர்பாக
தகராறுகள் எவையேனும் ஏற்பட்டால், இத்தகைய சில வழக்குகளில் தொழி
லாளர் நல ஆய்வாளருக்கு, முடிவெடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது
தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி
நிலைமைகள்) விதிகளில், 32-வது விதியின்கீழ், தொழிலாளர் நல ஆய்வாளரின்
முடிவிற்கு எதிராக, வட்டாரத் தொழிலாளர் நலத் துணை ஆணையாளருக்கு
மேல் முறையீடு செய்யலாம்.

### பதிவு செய்தல்.

தமிழ்நாட்டில் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில்
வளாகங்கள் 1,736 ஆகும்; அவற்றில் 677 வளாகங்கள் வணிகக் குறி உரிமை
யாளர்களுடையதாகும். 1978 ஆம் ஆண்டு, இந்தத் தொழில் வளாகங்களில்



16,157 பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். பீடி அல்லது சுருட்
டுகளைத் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளவர்களில் 2 இலட்சம் பேர் வீடு
களில் இருந்தவாறே பணிபுரிந்து, பயனடைந்து வருகிறார்கள். 1978 ஆம்
ஆண்டு உரிமக் கட்டணமாக ரூபாய் 23,644.50 வசூலிக்கப்பட்டுள்ளது.

### ஆய்வுகள்.

1978 ஆம் ஆண்டு, ஆய்வாளர்களால், 1,783 முறையான ஆய்வுகளும், 11
விடுமுறை ஆய்வுகளும், 171 திடீர் ஆய்வுகளும், 95 தனி ஆய்வுகளும் நடத்தப்
பட்டன.

### வழக்குத் தொடர்தல்.

வழக்குத் தொடர்தல் தொடர்பான புள்ளி விவரங்களுடன் மன நிறைவு
அடைந்துவிடாமல், சட்டத்தின் விதிகளின் அனுகூலங்கள் தொழிலாளர்
களைச் சென்றடையக்கூடிய முறையில் இச்சட்டத்தை செயல்படுத்துவது
இயலும் வகையில், ஆய்வாளரகம் சீரமைக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் அனு
கூலங்கள், தொழிலாளர்களுக்குக் கிடைக்குமாறு நீட்டிக்கப்பட்டிராத இடங்
களில் காணப்படுகின்ற தவறுகளை ஆய்வு ஆணை மூலமாகவும் அல்லது
காரணம் காட்டுமாறு கேட்கும் அறிவிப்புகள் மூலமாகவும் தொழில் அதிபர்
களுக்குச் சுட்டிக்காட்டி ஆணையில் கண்டுள்ளவற்றை நிறைவேற்றுவதற்கு
அத்தொழில் அதிபர்களுக்கு 2 வார கால அவகாசம் தருமாறு ஆய்வாளர்
களுக்கு கட்டளை இடப்பட்டுள்ளது. அப்படியும்கூட தொழில் அதிபர்கள்
சட்டத்திற்கும், விதிகளுக்கும் இணங்கி நடக்க தவறுவார்களானால், அப்போது
தான் அவர்கள்மீது வழக்கு தொடர்வதற்கு, நடவடிக்கை எடுக்கப்பட
வேண்டும். 1978 ஆம் ஆண்டில் பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலை
மைகள்) சட்டம், விதிகளை மீறியதற்காக தொழில் அதிபர்கள்மீது 183 வழக்
குகள் தொடரப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 80 வழக்குகள்
நீதிமன்றத்தில் முடிவுறாத நிலையில் இருந்தன. இந்த 263 வழக்குகளில்,
177 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள், குற்றவாளிகள் எனத் தீர்ப்பு
வழங்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டு இறுதியில், 76
வழக்குகள் முடிவுறா நிலையில் இருந்தன. தண்டனையில் முடிவுற்ற 177
வழக்குகளில் விதிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை ரூபாய் 18,325
ஆகும். அதாவது, ஒவ்வொரு வழக்கிலும் சராசரியாக சுமார் 100 ரூபாய்
அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## இச்சட்டத்தின்கீழ் நகல் முத்திரைத் தாள்களுக்கு தொழிலாளர்கள் கட்டணம் செலுத்த வேண்டும் என்ற பொறுப்பு நீக்கப்பட்டது.

தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகளின் 31 (5) விதிகளின்கீழ், மேல் முறையீடு செய்பவர் என்ற முறையில், தொழிலாளரில் ஒருவர் தேவையான நகல் முத்திரைத் தாள்களுக்குக் கட்டணம் செலுத்துவதின் பேரிலேயே, மேல் முறையீட்டு அதிகாரியின் ஆணைகளைப் பெற இயலும். முத்திரைத் தாள்களை வழங்க வேண்டும் என்னும் நிபந்தனையிலிருந்து, தொழிலாளர்களுக்கு விதி விலக்கு அளிப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கு இருந்த இந்த இடர்ப்பாட்டை அரசு அகற்றியது. இப்போதுள்ள நிலவரத்தின்படி, தொழிலாளர்கள் ஆணை நகலை இலவசமாகப் பெற இயலும்.

## முத்தரப்புக் குழு.

சட்டத்தையும், விதிகளையும் செயற்படுத்தும்பொழுது, தொழில் அதிபர்கள் புறுத்தப்படாத வகையில் அவர்களுக்கு எடுத்துரைத்து வற்புறுத்துகின்ற முறையில் அவற்றைச் செயற்படுத்துவதில் அரசு நம்பிக்கை கொண்டுள்ளது. ஆகவே சட்டத்தையும், விதிகளையும் செயற்படுத்தும்பொழுது எழக்கூடிய பிரச்சினைகளைக் குறித்து விவாதித்து அவற்றை வகைப் படுத்துவதற்காக இவ்வரசு, தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் தொழில் அதிபர்களின் பிரதிநிதிகளும் கொண்ட முத்தரப்புக் குழு ஒன்றை அமைத்துள்ளது. இச்சட்டத்தின்கீழ், தலைமை ஆய்வாளராக உள்ள தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளர் (ஆய்வுகள்) இக்குழுவிற்கு தலைமை வகிக்கிறார். 1978 ஆம் ஆண்டில் அது மூன்று முறை, அதாவது 25—2—1978, 18—10—1978, 20—12—1978 ஆகிய நாட்களில் கூடியது.

## தொழிலாளர்களுக்கு ஊதியங்கள்.

பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் தங்களுக்கு ஊதியங்களை உயர்த்தி வரையறுக்க வேண்டுமென்று கோரிக்கை எழுப்பிக் கொண்டிருந்தனர். எனவே, துறை அதிகாரிகள் அதில் தலையிட்டு உடன்பாடுகள் ஏற்படச் செய்தனர். அதன்மூலம், அவர்களுடைய கூலி, 1,000 சாதா பீடிகள் சுற்றுவதற்கு ரூபாய் 4.50 என்று இருந்த அளவு ரூபாய் 5.25 ஆக உயர்த்தப்பட்டது. ஜாடி பீடிகள் 1,000 சுற்றுவதற்கு ரூ. 4.75 என்று இருந்த கூலி ரூ. 5.50 ஆக உயர்த்தப்பட்டது. சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பணி புரியும் பணியாளர்கள் தொடர்



பாக இந்த உடன்படிக்கைகள் பல்வேறு நாட்களில் செய்து கொள்ளப்பட்டன. ஆனால் சேலம் போன்ற சில பகுதிகளில் உடன்பாடு ஏற்படவில்லை. எனவே, இவ்வாறு உயர்த்தப்பட்ட ஊதிய அளவையே குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ், குறைந்த அளவு ஊதியம் என, அறிவிப்பின்மூலம் அறிவிப்பது பொருத்தமாகும் என அரசு கருதியது. தற்போது, தமிழ்நாட்டிலுள்ள பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மேற்குறித்தவாறு திருத்தப்பட்ட ஊதியம் பொருந்துவதாகும்.

## தேசிய பண்டிகை விடுமுறை நாட்களில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளித்தல்.

ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்கப்பட வேண்டும் என்று சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள போதிலும், பல தொழில் அதிபர்கள் இந்த விதிமுறையைச் செயல்படுத்தாமல் எய்த்து வந்தனர். துறை அதிகாரிகள் இது குறித்து இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தி உடன்பாடுகளைச் செய்துள்ளனர். அதன்படி ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்க தொழிலதிபர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

## இச்சட்டம், விதிகளைச் செயல்படுத்துவதற்குரிய பொறுப்புகள்.

வர்த்தக அடையாளக்குறி சொந்தக்காரர்கள், இச்சட்டம், விதிகளைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டுமென அரசு விரும்புகிறது. இதனைக் கருத்தில்கொண்டு, ஒப்பந்தக்காரர்கள் அல்லது துணை ஒப்பந்தக்காரர்கள் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளும் போதும்கூட, இச்சட்டத்தின்கீழ் வர்த்தக அடையாளக்குறி சொந்தக்காரர்கள் உரிமங்கள் வாங்கச் செய்யும் வகையில் இச்சட்டத்தை திருத்த வேண்டுமென அரசு, மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. கோயம்புத்தூரில் வர்த்தக அடையாளக்குறி சொந்தக்காரர்கள், சென்னை தொழிலாளர்நல துணை ஆணையர் (ஆய்வுகள்) முன் ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்டதன் பேரில் உரிமங்களை வாங்கிக் கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளனர்.

## தொழிலாளர் நலன்.

பீடித் தொழிலாளர்கள் நலச் சட்டத்தின்கீழ் மேல் வரி விதிக்கப்பட்டிருந்தும்கூட, தமிழ்நாட்டில் அந்தத் தொழிலாளர்களுக்கு நடவடிக்கை எதுவும் செய்யப்படவில்லை என்பது இந்தத் தொழிலாளர்களின் குறையாகவும் தொழிலதிபர்களின் குறையாகவும் இருந்து வருகிறது. தமிழ்நாட்டில்

இந்தத் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசுடன் இந்த அரசு 1978-ல் தீவிரமாக பேச்சுவார்த்தை நடத்தியது. பீடித் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட நடவடிக்கைகளுக்கு வகை செய்யும் காரியத்திற்காக பல்வேறு பீடித் தொழிலாளர்கள் நிலையங்களுக்கு தொழிலாளர் நல ஆணையரை பீடி-சுருட்டு தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு நிபந்தனைகள்) சட்டத்தின்படி தலைமை ஆய்வாளர் பெங்களூருக்கு அழைத்துச் சென்றார். தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அதிகாரிகளுடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்; நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக பல்வேறு ஆலோசனைகளையும் அவர் வழங்கினர். அவை படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13 ஆம் நாளன்று, நிலையான இயங்கும் மருந்தகம் ஒன்று மேலப்பாளையத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேல்ப்பாளையத்திலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் பீடித் தொழிலாளர்களின் மருத்துவத் தேவைகளை இந்த மருந்தகம் நிறைவு செய்கிறது.

பெருந்துறை, பெண்ணாத்தூர், தாம்பரம், திருச்சி, ஆசாரி பள்ளம் (கன்னியாகுமரி மாவட்டம்) ஆகிய இடங்களிலுள்ள க்ஷயநோய் மருத்துவமனைகளில் பீடித் தொழிலாளர்களுக்காக படுக்கைகளை ஒதுக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர்களுக்காக பெருந்துறை இராமலிங்கம் காசநோய் மருத்துவமனையில் 10 படுக்கைகளை ஒதுக்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தைச் செயற்படுத்தும் பணியாளர்கள்.**

தமிழ்நாட்டில், தொழிலாளர் நல ஆணையரின்கீழ் தொழிலாளர் நலத் துணை ஆணையர் (ஆய்வுகள்) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின்படித் தொடர்ந்து தலைமை ஆய்வாளராக இருந்து வருகிறார். இம்மாநிலத்தில் இச்சட்டம் 11 தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், 28 தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களாலும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**பத்திரப் பதிவு.**

ஐந்து தொழிலாளர்களுக்கும் மேற்பட்டு வேலை பார்க்கின்ற மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. 1978 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 1,472 பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இருந்தன. 171 மோட்டார் போக்குவரத்து



நிறுவனங்கள் புதியதாகப் பதிவு செய்யப்பட்டன. இதனால் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 1,643 ஆக உயர்ந்தது. இந்த 1,643 நிறுவனங்களில் 104 நிறுவனங்கள் இந்த ஆண்டில் பதிவிலிருந்து நீக்கப்பட்டன. பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 1,539 ஆக இருந்தது. ஆண்டின் இறுதியில் பணியில் அமர்த்தப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 51,170 ஆக இருந்தது.

1978 ஆம் ஆண்டில் உரிமக் கட்டணங்கள் வகையில் ரூ. 82,787 வசூலிக்கப்பட்டது.

**சீருடைகளும் ஏனைய நல வசதிகளும் அளித்தல்.**

அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களில் சீருடைகள் வழங்கப்பட்ட போதிலும், தனியார் நிறுவனங்களில் விதிகளுக்கிணங்க பணியாளர்களுக்குச் சீருடைகள் வழங்கப்படவில்லையென புகார்கள் நிறைய வந்துள்ளன. இன்னும் பல இடங்களில் சலவைப்படியும் வழங்கப்படவில்லை. எனவே சீருடைகள், ஓய்வு அறை முதலியவை போன்ற அடிப்படை வசதிகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றதா என்று கவனிப்பதற்கான இந்த ஆய்வகம் சிறப்பாக முயற்சி எடுத்துக் கொண்டது.

**வழக்குகள்.**

தொழிலதிபர்கள், இச்சட்டம், விதிகளின் பயன்களை முழுமையுடன் தொழிலாளர்களுக்கு வழங்குகின்றனரா என்பதைக் கவனிப்பதில் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. அதனால்தான் ஒருவர் மீது வழக்குத் தொடர்வது கடைசியாக மேற்கொள்ளும் ஏற்பாடாக மட்டுமே வைத்துக் கொள்ளப்படுகிறது. எனினும், இந்தச் சட்டம் விதிகளைப் பின்பற்றி நடக்காததற்காக 1978 ஆம் ஆண்டில் தொழிலதிபர்கள் மீது 284 வழக்குகள் தொடுக்கப்பட்டன. 1978 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 138 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன. 1978 ஆம் ஆண்டு ரூ. 30,245 அபராதத் தொகையுடன் 323 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதாவது ஒவ்வொரு வழக்குக்கும் சராசரியாக ரூ. 93 அபராதம் விதிக்கப்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆறு வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். மூன்று வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 1978 ஆம் ஆண்டின் இறுதியில் 100 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன.

முத்தரப்புக் குழு.

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதிமுறைகளைச் செயல்படுத்தும் ஏற்பாடுகளைப் பரிசீலனை செய்வதற்கான முத்தரப்பு நிலைக்குழு, 1978 செப்டம்பரில் அரசால் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது.

1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர் (பணி நிலைமைகளும் பல்வேறு விதித் துறைகளும்) சட்டம்.

இச்சட்டத்தின்கீழ் 'ஆய்வாளர்கள்' என அறிவிக்கப்பட்ட 11 தொழிலாளர் நல ஆய்வாளர்கள் 28 தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள் 206 தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் இச்சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்தி வருகின்றனர். 1978 ஆம் ஆண்டின் இறுதியில் 3,495 தொழிலாளர்களைப் பணிக்கமர்த்தியுள்ள 47 நிறுவனங்கள் இருந்தன.

1976 ஆம் ஆண்டு விற்பனை மேம்பாடு பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்.

மருந்துத் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ள இச்சட்டம் 1976 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. தொழிலாளர் நல ஆணையர், தொழிலாளர் நலத் துணை ஆணையர் (ஆய்வுகள்) தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையர், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள் தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் இந்தச் சட்டத்தின் 8-வது பிரிவின்கீழ் "ஆய்வாளர்களாக", அறிவிக்கப்பட்டுள்ளனர்.

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும் நீக்கலும்) சட்டம்.

இச்சட்டத்தின்கீழ் தொழிலாளர் நலத் துணை ஆணையர்கள் அலுவலகத்துடன் இணைந்துள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள் பதிவு அதிகாரிகளாகவும், தொழிலாளர் நல ஆய்வாளர்கள் உரிமம் வழங்கும் அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின் 15(1) ஆவது பிரிவின்கீழ் தொழிலாளர் நலத்துறை ஆணையர்கள் மேல் முறையீட்டு அதிகாரிகளாக நியமிக்கப் பெற்றனர். ஆய்வு செய்யும் அதிகாரிகள் யாவரும், அதாவது தொழிற்சாலை ஆய்வாளர்கள், மலைத் தோட்ட ஆய்வாளர்கள், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழி-



லாளர் நல உதவி ஆய்வாளர்கள் அனைவரும் இந்தச் சட்டத்தின்கீழ் ஆய்வாளர்களென அறிவிக்கப்பட்டுள்ளனர். தவிரவும், வட்டாரங்களில் உள்ள தொழிலாளர் நல துணை ஆணையர்களும் தொழிலாளர் நல உதவி ஆணையர்களும், தொழிற்சாலை மேற்பார்வை ஆய்வாளர்களும் தலைமையிடத்தில் தொழிலாளர் நல ஆணையரும் தொழிற்சாலை தலைமை ஆய்வாளர்களும் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களும், தொழிலாளர் நலத் துணை ஆணையரும் (ஆய்வுகள்) இச்சட்டத்தின்கீழ் ஆய்வாளர்களென அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர் நல ஆணையர் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையர் (ஒப்பந்தத் தொழிலாளர்கள்) 1970-ம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும் நீக்கலும்) சட்டம் தொடர்புடைய பணியைக் கவனித்து வருகிறார்.

ஒப்பந்த அடிப்படையில் எந்தத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனரோ அந்தத் தொழிற்சாலைகளில் இச்சட்டத்தைச் செயற்படுத்துமாறு தொழிற்சாலை ஆய்வாளர்களுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ் வராத நிறுவனங்களில் தொழிலாளர் நல ஆய்வாளர்கள் இந்தச் சட்டத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்தி வருகின்றனர். தொழிற்சாலைகள் உட்பட எல்லா வகைப்பட்ட நிறுவனங்களிலும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களைப் பொறுத்தவரையில் தொழிலாளர் நல ஆய்வாளர்கள் உரிமம் வழங்கும் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

1978 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின் 7 (1) பிரிவின்கீழ் 292 தொழிலதிபர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 274 ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. (சார்நிலை அதிகாரிகள் மொத்தம் 1,551 இனங்களில் ஆய்வு செய்தனர்).

இச்சட்டத்தை, நிர்வகிப்பதற்கு அரசுக்கு ஆலோசனை நல்கும் பொருட்டு, அரசு தொழிலாளர் நலன்-வேலை வாய்ப்புத் துறைச் செயலாளர் தலைமையின்கீழ், மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனை வாரியம் ஒன்று இச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் நால்வரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் நால்வரும், அரசின் பிரதிநிதிகள் இருவரும் உறுப்பினர்களாக உள்ளனர். 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி, ஜூலை மாதம் 13-ம் தேதி, டிசம்பர் மாதம் 8-ம் தேதி ஆகிய நாட்களில் அதாவது மொத்தம் மூன்று முறை இந்த வாரியம் கூடியது. மேற்சொன்ன வாரியத்தின் பரிந்துரைகளின்

அடிப்படையில், சிமிண்ட், காகிதம், பொறியியல், துணி ஆலை ஆகிய தொழில்களில் ஒப்பந்த தொழிலாளர் அமைப்பு முறையைக் கொண்டு வருவதற்காகத் துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் நாள் அன்று நடைபெற்ற கூட்டத்தில், திருச்சிராப்பள்ளி பாரத் கனரக மின் இயந்திரத் தொழிற்சாலையில் ( BHEL ) ஒப்பந்தத் தொழிலாளர் பணி நிலைமைகளை முறைப்படுத்தும் பொருட்டு துணைக் குழு ஒன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பந்த தொழிலாளர் அமைப்பு முறையை ஒழிப்பதற்குப் பதிலாக, 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும் நீக்கலும்) சட்டத்தில் விதித் துறைகளை முறையாக முனைப்புடன் செயல்படுத்தும் பொருட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

1946 ஆம் ஆண்டு தொழில் வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம்.

1978 ஆம் ஆண்டில் 30 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகள், சான்றளிக்கும் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டன. 12 இனங்களைப் பொறுத்தமட்டில் இந்த நிலை ஆணைகளில் திருத்தங்களும் இந்த ஆண்டில் சான்றளிக்கப்பட்டன. மேல்முறையீட்டு/அதிகார மன்றங்களாக உள்ள தொழிலாளர் நல நீதி மன்றங்கள் இந்த ஆண்டில் இந்தச் சட்டத்தின்கீழ் 8 மேல் முறையீடுகளை முடிவு செய்துள்ளன.

திருத்தம்.

(1) 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு இச்சட்டத்தை நீட்டித்தல்.

தற்போது 100 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு 1946 ஆம் ஆண்டு தொழில் நிறுவன வேலை (நிலை ஆணைகள்) சட்டத்தின் விதித் துறைகளை 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு நீட்டிக்க அரசு ஆணைகள் பிறப்பித்தது.



(2) 7(2) 7(3) ஆம் எண் மாதிரி நிலையாணைகளை நீக்குதல்.

தொழிலாளர் ஒருவர் தொடர்ச்சியாக 8 நாட்களுக்கு மேல் வேலைக்கு வராதிருந்தால் அவரை வேலையிலிருந்து நீக்கிவிடுவதற்கான மாதிரி நிலையாணைகளில் அல்லது சான்றிட்ட நிலையாணைகளில் உள்ள விதித் துறை நீக்கப்பட வேண்டுமென்றும், அவர் வேலைக்கு வராது இருந்த நாட்கள் தவறான நடத்தை என்று மட்டுமே கருதப்பட்டு, தன்னிலை விளக்கம் அளிக்க அவருக்குப் போதிய வாய்ப்பு அளித்த பிறகு விசாரிக்கப்பட வேண்டும் என்பதே அரசின் கருத்தாகும். இக்கருத்துக்குச் செயல் வடிவம் அளிக்கும் வகையில் அரசு மாதிரி நிலையாணைகளைத் திருத்தி வெளியிட்டுள்ளது. இது, 1979 சனவரித் திங்கள் 27-ம் நாளிட்ட தொழிலாளர் நலன்-வேலை வாய்ப்புத் துறையின் அரசாணை எண் 143-ல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய விழாக்கால விடுமுறை நாட்கள்) சட்டம்.

இந்தச் சட்டம் தொழிற்சாலைகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவைச் சேர்ந்த (m) பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள "தொழிற்சாலைகள்" அனைத்திற்கும் பொருந்துகின்றது; அல்லது அந்தச் சட்டத்தின் 85-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்கீழ் ஒரு தொழிற்சாலையாகக் கருதப்படுகின்ற எந்த இடத்திற்கும் பொருந்துகிறது. மலைத் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (f) பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள மலைத் தோட்டங்களுக்குப் பொருந்துகிறது. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள் சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (6) பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளவாறு கடைகள்-நிறுவனங்கள் அனைத்திற்கும் பொருந்துகிறது. மேலும் 1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் 2 (h)-வது பிரிவின்கீழ் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அனைத்திற்குங்கூட இச்சட்டத்தின் விதித்துறைகளை அரசு நீட்டித்துள்ளது.

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ், மாநில அரசு பொருத்தமான அதிகாரியாகவுள்ள அட்டவணையிடப்பட்ட வேலைகளுக்கும் இச் சட்டத்தின் விதித்துறைகளை அரசு தற்போது நீட்டித்துள்ளது.

இச் சட்டத்தின் விதித் துறைகளை மீறியமைக்காக ஆய்வாண்டில் தொழிற்சாலை நிர்வாகங்களுக்கெதிராக 2,820 வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றில், 2,355 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. 21 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 6 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. இந்த ஆண்டில் ரூ. 66,072 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

இச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள் இந்த ஆண்டில் 1,23,541 ஆய்வுகளை மேற்கொண்டனர்.

III ஊதியங்கள் குறித்து சட்டமியற்றுதல்.

குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம், 1948.

கீழ்க்காணும் வேலைகளுக்காக குறைந்த அளவு ஊதிய விதங்களை 1978 ஆம் ஆண்டில் அரசு வரையறுத்துள்ளது/திருத்தியமைத்துள்ளது.

(1) தோல் பதனிடும் தொழிலிலும், தோல் தயாரிப்புத் தொழிலிலும் வேலை.

(2) அச்சகங்களில் வேலை.

(3) அங்காடிகள், சந்தைகள் இவை போன்ற பிற இடங்களில் சரக்குகளை ஏற்றுதல், இறக்குதல் வேலை.

(4) மோட்டார் வண்டி (ஆட்டோமொபைல்) பணியகங்களில் வேலை.

வேளாண்மை, வேளாண்மைத் துறைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விதங்களைத் திருத்தியமைக்கும் நோக்கத்துடன், அரசு குறைந்த அளவு ஊதியங்கள் ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவிற்கு வருவாய்த் துறை வாரியத்தின் உறுப்பினர் ஒருவர் தலைவராவார். இக் குழுவில் தொழிலதிபர் ஒருவரும், தொழிலாளர் பிரதிநிதிகளும் உள்ளனர்.

கீழ்க்காணும் வேலைகளுக்கான, குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயித்தல்/திருத்தியமைத்தலில் அரசுக்கு ஆலோசனை நல்கும் பொருட்டு குறைந்த அளவு ஊதியங்கள் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது :—

(1) கடைகள், வணிக நிறுவனங்களில் வேலை.

(2) பருத்தியாடை சலவை நிலையங்களிலும், வெளுப்பகங்களிலும் வேலை (கம்பளித் துணிகள் உட்பட).

(3) எண்ணெய் ஆலைகளில் வேலை.



கீழ்க்காணும் வேலைகள் குறித்து குறைந்த அளவு ஊதிய விதங்களை நிர்ணயிக்க அல்லது திருத்தியமைக்கக் குறைந்த அளவு ஊதியங்கள் ஆலோசனைக் குழுக்களை அமைப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(1) திரைப்படத் தொழிலில் தயாரிப்பு விநியோகம், விளம்பரம் உட்பட வேலை.

(2) செயற்கை வைரம் பட்டை தீட்டுதலில் வேலை.

(3) தேயிலை வாங்கி, தேயிலைத் தூள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் வேலை.

(4) வெட்டு மரத்தொழிலில் வேலை.

(5) கைத்தறி துணி நெய்யும் தொழிலில் வேலை.

(6) கைத்தறிப்பட்டு நெசவுத் தொழிலில் வேலை.

பின்வரும் தொழில்களில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயிக்கும் நோக்கத்துடன் அரசு அவற்றை குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்த்துள்ளது :—

(1) அரசு மருத்துவமனைகள், தொழிலாளர் காப்புறுதி மருத்துவமனைகள், மருத்தகங்கள் அல்லாத ஏனைய மருத்துவ மனைகள், தனியார் மருத்துவ மனைகளில் வேலை.

(2) வீட்டிற்கு வேண்டிய தட்டுமுட்டுப் பாத்திரங்கள் செய்தல்.

(3) வெளுத்தல், சாயம் தோய்த்தல் முதலிய பணிகள்.

(4) தையல் தொழில்.

காப்பிக் கொட்டைப் பதப்படுத்துதல் வேலையையும் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு அரசு, மறுப்புரைகள் அல்லது கருத்துரைகளைக் கேட்டு வரைவு அறிவிப்பு ஒன்று வெளியிட்டுள்ளது.

இச்சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட ஆய்வாளர்கள் இந்த ஆண்டில் 32,910 ஆய்வுகளை மேற்கொண்டனர். இச்சட்டத்தையும் விதிகளையும் மீறியதற்கான வழக்குகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| (1) | ஆண்டுத் தொடக்கத்தில் நீதி மன்றத்தின் விசாரணை முடிவாகாமல் இருந்த வழக்குகள் .. .. .. .. | 409 |
| (2) | இந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் .. .. .. .. | 714 |
| (3) | தண்டனை விதிக்கப்பட்டு முடிந்த வழக்குகள் .. .. .. .. | 693 |
| (4) | விடுதலையில் முடிந்த வழக்குகள் .. | 9 |
| (5) | ஆண்டு முடிவில் விசாரணை முடிவாகாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை .. | 421 |
| (6) | வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை .. | ரூ.23,550 |

குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20-வது பிரிவின்கீழ் "அதிகாரிகள்" என்று அறிவிக்கப்பட்ட தொழிலாளர் நீதிமன்றங்களில் தலைமை தாங்கும் அதிகாரிகள், இந்த ஆண்டில் குறைந்த அளவு ஊதியம் கொடுக்கப்படாதது பற்றித் தாக்கல் செய்த 23 கோரிக்கை மனுக்களை தீர்த்து வைத்தனர்.

1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகமும், பிற தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரை தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகமும் இச்சட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றன.

இச்சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக 814 வழக்குகளில் தொழில் அதிபர்கள் மீது வழக்குத் தொடர அனுமதி வழங்கப்பட்டது. 1978ஆம் ஆண்டில் தீர்த்துவைக்கப்பட்ட வழக்குகளில் 893 வழக்குகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. (ஆண்டுத் தொடக்கத்தில் விசாரணை முடிவாகாமல் இருந்த வழக்குகளும் இதில் அடங்கும்). ஒரு வழக்கு விடுதலையில் முடிந்தது. 727 வழக்குகள் விசாரணை முடிவாகாமல் உள்ளன. ரூ. 29,593 அபராதமாக வசூலிக்கப்பட்டது.



ஊதியங்கள் கொடுப்பது குறித்த 351 கோரிக்கைகள் ஆண்டுத் தொடக்கத்தில் விசாரணை முடிவாகாமல் இருந்தன. ஊதியம் வழங்கல் சட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக உதவி ஆணையாளர் முன்பாக 451 உரிமைக் கோரிக்கைகள் இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில், இந்த ஆண்டில் 482 உரிமைக் கோரிக்கைகள் குறித்துத் தீர்ப்பளிக்கப்பட்டன. 1978 ஆம் ஆண்டு இறுதியில், 320 உரிமைக் கோரிக்கைகள் விசாரணை முடிவாகாமல் இருந்தன.

இச்சட்டத்தின்கீழ் வரும் தொழில் நிறுவனங்களில் ஆய்வாளர்கள் 38,827 ஆய்வுகளை மேற்கொண்டனர்.

1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம்.

இச்சட்டம், ஆண், பெண், இருபாலருக்கும் ஒரே விகதத்தில் சம்பளம் வழங்குவதற்கும் வேலை வாய்ப்பில் ஆண், பெண் என்ற அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கவும் வகை செய்கிறது.

அரசு, இச்சட்டத்தின் 9-வது பிரிவின்கீழ் ஆய்வாளர்களையும் மேற்படி சட்டத்தின் 7-வது பிரிவின்கீழ் அதிகார மன்றங்களையும் நியமித்துள்ளது.

இந்த ஆண்டில், இச்சட்டத்தின் 7 (a) பிரிவின் கீழ் தொழிலாளர் நல அதிகாரிகளுக்கு 26 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் ஒரு விண்ணப்பம் விசாரணை முடிவாகாமல் இருந்தது. 3 விண்ணப்பங்கள் தொழிலாளர் நல அதிகாரிகளால் தீர்த்து வைக்கப்பட்டன.

இந்த ஆண்டில், இச்சட்டத்தின் 7(b) பிரிவின்கீழ் 5 முறையீடுகளைத் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் தீர்த்துவைத்தார்.

IV சமூகப் பாதுகாப்பு.

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, பல்வகை விதித் துறைகள் சட்டம்.

தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி வடிவில் ஓய்வுகால நன்மைகளும், அவர்கள் கடமையாற்றும்போது இறந்து விட்டால் அவர்களைச் சார்ந்துள்ள நெருங்கிய உறவினர்களுக்கு நிதியுதவியும், திங்கள்தோறும் குடும்ப ஓய்வூதியத் தொகையும் கிடைக்க 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள்—பல்வகை விதித் துறைகள் சட்டமும் அதன்

மூன்று திட்டங்களும் வகை செய்கின்றன. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், தொழிலாளர் குடும்ப ஓய்வூதிய நிதித் திட்டம், தொழிலாளர் வைப்புத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டம் முதலிய திட்டங்கள் இந் நாட்டிலுள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குப் பெரிதும் தேவைப் படும் சமூகப் பாதுகாப்பை அளிக்கின்றன.

இவற்றுடன், சில நிபந்தனைகளுக்குட்பட்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்கள் பணியில் இருக்கும்போது மரணமடைந்தால், அவர்களது கணக்கில் கடைசி 36 மாதங்களில் இருந்த சராசரித் தொகைக்குச் சமமானதொரு தொகை, அதாவது 10,000 ரூபாய்க்கு மேற்படாமல் வழங்கு வதன் மூலம் அண்மையில் கொண்டுவரப்பட்ட தொழிலாளர் நலக்காப்புறுதித் திட்டம் வைப்பீட்டுத் தொகையுடன் இணைக்கப்படுவது அவர்களுக்குக் காப்புறுதி அளிக்கிறது.

## இச்சட்டத்தை நீட்டித்தல்.

இந்த ஆய்வாண்டில் இச்சட்டம் புதிய தொழில்களுக்கு நீட்டிக்கப்பட வில்லை. இருப்பினும் 'கால்நடைத் தீவனம்' தயாரிக்கும் நிறுவனங்கள்/தொழிற்சாலைகளுக்கும் செங்கல் தொழிற்சாலைகளுக்கும், 'வைரம் வெட்டி யெடுக்கும் சுரங்கங்களுக்கும்' 'வழக்குரைஞர்கள் நூலகம்/மன்றம்/வழக் குரைஞர்கள் சங்கம்' தையல் தொழில், சிறிய சுரங்கங்கள், 'கல்வி நிறுவனங்கள்' ஆகியவற்றுக்கும் இச்சட்டத்தை நீட்டிப்பது பரிசிலனையில் உள்ளது.

1977-78 ஆம் ஆண்டில், 1952 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித் துறைகள் சட்டத்தின்கீழ் வருகின்ற தொழிற் சாலைகள்-தொழில் நிறுவனங்களின் வகைகள் மொத்தம் 154 ஆகும்.

## இச்சட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்ட நிறுவனங்கள்/சந்தாதாரர்கள்

இச்சட்டத்தின்கீழ் தொழில் நிறுவனங்களைச் சேர்ப்பதில் இந்த ஆய் வாண்டு உயர்வு கண்டுள்ளது. கடந்த 6 திங்களில் (1978 ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1978 செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் வரை) மொத்தம் 144 புதிய தொழில் நிறுவனங்கள் இச் சட்டத்தின் செயல் வரம்பிற்குள் கொண்டுவரப் பட்டன. கூடுதல் நிறுவனங்கள் சேர்க்கப்பட்டதன் காரணமாக, இத் திட்டத் தின்கீழ் வரும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அறிக்கை ஆண்டில் 0.55 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1978 செப்டம்பர் 30-ம் நாள் இறுதியில் வருங் கால வைப்பு நிதி சந்தாதாரர்கள் 11-43 இலட்சம் பேர் கொண்ட 10,817 நிறு வனங்கள் இச் சட்டத்தின் செயல் வரம்பின்கீழ் வந்தன.





இச்சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளின்கீழ் கொடுக்கப்பட்ட தொகை களின் கேட்பு/வசூல்/நிலுவைகள் குறித்த் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள் ளன. (அடைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி அமைந்தவை.)

| நிலுவையின் தன்மை<br>(1) | 30.9.78-ம் நாள் நிலவரப்படி நிலுவைகள்.<br>(2) | 1.4.78 முதல் 30.9.78 வரை வசூல்.<br>(3) | 30.9.78 ஆம் நாள் நில வரப்படி<br>(4) |
|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1. சேர்ந்து வந்த பழைய தொகைகள். | 7.59 | 0.18 | 7.41<br>(7.42) |
| 2. தொழிலாளர் வருங் கால வைப்பு நிதிக்கு தொகைகள். | 835.98 | 738.66 | 117.32*<br>(117.52( |
| 3. நிர்வாகச் செலவுகள். | 20.96 | 18.50 | 2.46<br>(2.46) |
| 4. ஆய்வுச் செலவுகள் .. | 3.90 | 3.57 | 0.33<br>(0.82) |
| 5. குடும்ப நல ஓய்வூதிய நிதிக்குத் தொகைகள். | 100.14 | 99.09 | 1.05<br>(1 40) |
| 6. தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை யுடன் கூடிய ஆயுள் ஈட்டுறுதித் தொகைகள். | 41.15 | 33.23 | 7.92<br>(8.53) |
| . தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை யுடன் கூடிய ஆயுள் ஈட்டுறுதி நிர்வாகச் செலவுகள். | 8.60 | 6.96 | 1.64<br>(1.67) |

### வட்டி வீதம்.

1979-79 ஆம் நிதி ஆண்டிற்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில், சந்தாதாரர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்ட வட்டி வீதம் 8.25 சத விதமாகும். கடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்ட வட்டிவிதம் 8 சதவிதமாகும். இந்நிறுவனம், அதன் வெள்ளி விழா ஆண்டின் நினைவாக, வருங்கால வைப்பு நிதியில் பணம் செலுத்துபவர்கள் தொடர்ச்சியாக இரண்டாண்டுகள் வரை அத் தொகையிலிருந்து முன்பணம் பெறாமல் இருந்தால், அவர்களுக்கு கூடுதலாக ஊக்க (போனஸ்) வட்டி 0.5 சதவிதம் கொடுத்து வருகிறது.

### வருங்கால வைப்புநிதிக் கணக்குகளை இறுதியாக முடித்தல்.

1977-78 ஆம் ஆண்டில் 32,359 கோரிக்கைகள் தொடர்பாக வருங்கால வைப்பு நிதி கணக்குகள் இறுதியாக முடிக்கப்பட்டு, அவற்றிற்காக ரூ. 9.63 கோடி வழங்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிலவரப்படி பெறப்பட்ட இறுதியாக முடிக்கப்பட்ட/திருத்தப்பட்ட/எஞ்சியுள்ள கோரிக்கைகள் குறித்த விவரங்களை காட்டும் விவர அட்டவணை பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாள் நிலவரப்படி இறுதியாக முடிக்கப்பெறாமல் இருந்த கோரிக்கைகள். | 4,958 |
| 2. | 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ஆம் நாள் வரையுள்ள காலத்தில் பெறப்பட்ட கோரிக்கைகள். | 23,403 |
| | மொத்தம் .. | 28,361 |



| | | | |
|---|---|---|---|
| 3. | இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 16,331 | |
| 4. | திருப்பப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 7,171 | |
| | | | 23,502 |
| 5. | 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிலவரப்படி தீர்த்து வைக்கப்படாதுள்ள கோரிக்கைகளின் எண்ணிக்கை. | | 4,859 |

இந்த கோரிக்கைகள் அடுத்து வந்த மாதங்களில் முடிக்கப்பட்டன. கோரிக்கைகள் இறுதியாகத் தீர்த்துவைக்கப்பட்டதன் பேரில் வருங்கால வைப்பு நிதியில் பணம் செலுத்தியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகைகளின் விவரம் வருமாறு :—

| இறுதியாக தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின் வகைப்பாடு. | இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | கொடுக்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. இறப்பு .. .. .. | 1,257 | 49.31 |
| 2. வயது முதிர்வு பெற்றமை .. | 2,524 | 212.00 |
| 3. நிரந்தரமாக இயலாமையுற்றமை. .. | 392 | 31.00 |
| 4. பதவி விலகல் .. .. .. | 9,754 | 183.62 |
| 5. இடம் பெயர்தல் .. .. | 11 | 0.77 |
| 6. ஆட்குறைப்பு .. .. | 2,305 | 42.08 |
| 7. பல்வகை .. .. .. | 88 | 1.82 |
| மொத்தம் .. | 16,331 | 520.60 |

### ஆண்டு கணக்குகள் விவர அறிக்கையை வெளியிடுதல்.

1975-76 ஆம் ஆண்டு வரைக்கும் உரிய ஆண்டுக் கணக்குகள் முழுமையாக வெளியிடப்பட்டுள்ளன. 1976-77 ஆம் ஆண்டிற்கு மொத்தம் 9,249 நிறுவனங்கள் தொடர்பாக வெளியிடப்பட வேண்டிய ஆண்டு கணக்குகளின் எண்ணிக்கையின் படி ரூ. 7,25,486 ஆகும். இவற்றில் 8,674 நிறுவனங்கள் தொடர்பாக மொத்தம் 6,93,700 கணக்குக் குறிப்புச் சிட்டுகள் ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டன. இன்னும் எஞ்சியுள்ள கணக்கு விவரங்களை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் 1977—78 ஆம் ஆண்டிற்கு 9,919 நிறுவனங்கள் தொடர்பான 7,84,864 கணக்குகளும் 1978 செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிலவரப்படி நிலுவையாக உள்ளன. நடப்பு ஆண்டில், 1,037 நிறுவனங்கள் தொடர்பான 76,151 கணக்குகள் வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள கணக்குகள் குறித்த விவரங்களுக்கு குறிப்புச் சிட்டுகள் வெளியிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

### வட்டாரக் குழு, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி தமிழ் நாடு வட்டாரம்.

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், மாநில அரசு ஆகிய மூன்று தரப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய வட்டாரக் குழு அமைக்கப்பட்டது. இக் குழுக்கள் அந்தந்த வட்டாரங்களில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, குடும்ப ஓய்வூதிய நிதி, தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைக்கப்பட்ட ஆயுள் ஈட்டுறுதித் திட்டங்கள் ஆகியவற்றை நிர்வகிப்பது தொடர்பாக ஆலோசனை கூறி மத்திய நம்பகர் வாரியத்திற்கு (Central Board of Trustees) உதவி புரிகிறது. அரசு தொழிலாளர் நலன்-வேலை வாய்ப்புத்துறையின் செயலாளர் இந்த வட்டாரக் குழுவின் தலைவராவர். இக் குழு முறையே 1978 ஏப்ரல் திங்கள் 20-ம் நாள் 1978 ஜூலை திங்கள் 10-ம் நாள், 1978 நவம்பர் திங்கள் 17-ம் நாள் ஆகிய நாட்களில் கூடிற்று. இக் குழு 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்காலவைப்பு நிதி-பல்வகை விதித் துறைகள் சட்டம், அதன் திட்டப் பணிகள் இந்த வட்டாரத்தில் செயல்படுவது தொடர்பான பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த அவசரத் தன்மையுடைய பொருட்கள் குறித்து விரிவாக விவாதித்தது. அவ்வாண்டில் அதன் பரிந்துரைகளில் முக்கியமான தொன்று, கோம்புத்தூர் ஆகியஇடங்களில் வட்டாரத் துணை, வட்டார அலுவலகங்களை ஏற்படுத்துவதாகும். கோயம்புத்தூரில் வருங்கால வைப்பீட்டு நிதிக்குப் பணம் செலுத்துபவர்





களின் தேவைகளை நிறைவு செய்ய, மத்திய நம்பகர் வாரியத்தின் (Central Board of Trustees) ஒப்புதல் பெற்ற பின்னர் துணை வட்டார அலுவலகம் 1978 நவம்பர் திங்கள் 15-ம் நாள் முதல் ஏற்கனவே செயல்படத் தொடங்கியது. மதுரையில் துணை வட்டார அலுவலகம் ஏற்படுத்துவது குறித்த பிரச்சினை மத்திய நம்பகர் வாரியத்தின் (Central Board of Trustees) பரிசீலனையிலுள்ளது

### குடும்ப ஓய்வூதியம்—ஆயுள் ஈட்டுறுதித் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுவதற்காக மொத்தம் 16,568 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றில் ரூ. 12.11 இலட்சம் தொகைக்குரிய 7,564 விண்ணப்பங்கள் தீர்க்கப்பட்டுள்ளன. 6,969 விண்ணப்பங்கள் அவற்றிலுள்ள குறைபாடுகளைச் சரி செய்வதற்காக அவை மீண்டும் விண்ணப்பதாரர்களுக்கே அனுப்பப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள, விண்ணப்பங்களை விரைவாகத் தீர்க்க அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைக்கப்பட்ட ஆயுள் ஈட்டுறுதித் திட்டம், 1976.

தொழிலாளர் குடும்பங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கப்பட்ட பயன்கள் ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (இது 1978 ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1978 செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் வரையான கால அளவில் கோரிக்கைகள் தீர்க்கப்பட்டமை குறித்த நிலையை காட்டுகிறது.)

| | |
|---|---|
| (a) 1978 மார்ச் திங்கள் 31-ம் நாளன்று தீர்க்கப்படாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை .. | 232 |
| (b) 1978 ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1978 செப்டம்பர் 30-ம் நாள் வரை பெறப்பட்ட கோரிக்கைகள் .. | 1,029 |
| (c) மொத்தம் .. | 1,261 |

| | | |
|---|---|---|
| (d) பல்வேறு காரணங்களினால் திருப்பி அனுப்பப்பட்ட கோரிக்கைகள் .. .. .. .. | 494 | |
| (e) 1978 ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1978 செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை தீர்க்கப்பட்ட கோரிக்கைகள் .. .. .. | 457 | 951 |
| (f) 1978 செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் இறுதியில் தீர்க்கப்படாமலிருந்த கோரிக்கைகள் .. .. | | 310 |
| (g) தீர்க்கப்பட்டவை தொடர்பாக கொடுக்கப்பட்ட தொகை .. | ரூ. 16.35 இலட்சம். | |

எஞ்சியுள்ள கோரிக்கைகளை விரைவில் தீர்த்து வைக்க அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்.

1948 ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்ட விதித்துறைகளை யொட்டி, தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தற்போது தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்றெல்லா மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டம் மின்விசையைப் பயன்படுத்தி இயங்குவனவற்றில் 10 பேர்களும் அதற்கு மேலும் பணிபுரிகின்றவர்களையும், மின்விசையைப் பயன்படுத்தாதவற்றில் 20 பேர்களும் அதற்கு மேலும் பணிபுரிகின்றவர்களையும் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல் ஊதியம் வழங்குகின்ற தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் உதவிகள் அளிக்கப்படுகின்றன :—

1. மருத்துவ உதவி (மருந்துப் பொருள் வடிவில்).
2. நோய்க்கால உதவி.
3. பேறு கால உதவி (பணமாக).
4. இயலாமையுற்றோருக்கு உதவி.
5. சார்ந்துள்ளவர்கள் நல உதவி.
6. இறுதிச் சடங்குகளுக்கான செலவுத் தொகை.



தற்போது சென்னை நகரில் அயனாவரம், கலைஞர் கருணாநிதி நகர் ஆகிய இடங்களிலும் மதுரையிலும் கோயம்புத்தூரிலும் நான்கு தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகள் உள்ளன. தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் நிலையான மருந்தகங்கள் 104-ம், நடமாடும் மருந்தகங்கள் ஒன்பதும், பயன்பாட்டு மருந்தகங்கள் மூன்றும், பகுதி நேர மருந்தகங்கள் இரண்டும் செயல்பட்டு வருகின்றன.

நான்கு தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை வருமாறு :—

தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, சென்னை—625.

தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, மதுரை—202.

தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, கோயம்புத்தூர்—500.

தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை—206.

கலைஞர் கருணாநிதி நகரிலுள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை 206 லிருந்து 500 ஆக உயர்த்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. கட்டுமானப் பணி நிறைவு பெறும் நிலையிலுள்ளது.

சென்னை வட்டாரத்தில் ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குழந்தைகள் ஒரு இலட்சம் பேருக்கு ஆண்டொன்றுக்கு 1,30,500 ரூபாய் செலவில் முத்தடுப்பு ஊசி குத்தும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சங்கத்தின் நிதி உதவியுடன் எட்டு முதல் வரைப்பு குடும்ப நல அறுவைச் சிகிச்சை நிலையங்கள் 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் முதல் தொடங்கப்பட்டுள்ளன. மூன்று தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகளிலும், சைதாப்பேட்டையிலுள்ள இரண்டாவது தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகத்திலும் 1977-78 ஆம் ஆண்டில் குடும்ப நல அறுவைச் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன.

கோயம்புத்தூரிலும், சென்னையிலும் உள்ள தொழிலாளர் நலக்காப்புறுதி மருத்துவமனைகளில் 6 படுக்கை வசதிகளுடன் சித்த மருத்துவப் பிரிவு 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் முதல் தொடங்கப்பட்டது. 4 தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகள் 104 நிலையான மருந்தகங்கள் ஆகியவற்றில் 4 மருத்துவமனைகளும் 42 மருந்தகங்களும் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் செயல்பட்டுவருகின்றன. எஞ்சியவை தனியார் வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டுவருகின்றன.

தாம்பரம், வேலூர், மணப்பாறைக்கருகிலுள்ள உசிலம்பட்டி, திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள மருந்தகங்கள் தனியார் வாடகைக் கட்டிடங்களில் இப்போது செயல்பட்டு வருகின்றன. இவற்றிற்குக் கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. தாம்பரத்திலும், வேலூரிலும் உள்ள மருந்தகங்களைப் பொறுத்தமட்டில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகின்றது. மணப்பாறைக்கருகிலுள்ள உசிலப்பட்டியிலும் திண்டுக்கல்லிலும் கட்டுமானப் பணி முடிவடைந்து விட்டது. அவ்விரண்டு மருந்தகங்களும் விரைவில் புதிய கட்டிடங்களில் செயல்படத் தொடங்கும். தற்போது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மருத்துவர்களுடன் வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டுவரும் 51 தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்களுக்குச் சொந்தமாக கட்டிடம் கட்டுவதற்கு தொழிலாளர் நலக்காப்புறுதிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது.

தனியார் வாடகைக் கட்டிடங்களில் அமைந்துள்ள மருந்தகங்களுக்குக் கட்டிடம் கட்ட நிலம் கையகப்படுத்தும் பணியை விரைவுப்படுத்த தனி மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் ஒருவரையும் இதர துணைப் பணியாளர்களையும் நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மாநிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பகுதிகளிலெல்லாம் உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள், கடைகள், திரையரங்குகள், பத்திரிகை நிறுவனங்கள் முதலிய புதிய வகை நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

அரக்கோணம், சங்ககிரி, தஞ்சாவூர், குமாரபாளையம், தேவக்குடி, திருவரம்பூர் ஆகிய இடங்களுக்கும் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தை நீட்டிப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. மாநிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பகுதிகளில் காப்புறுதி செய்து கொண்ட குடும்பங்களுக்கு முழு மருத்துவ உதவி அளிப்பது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது.

### 1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்.

1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் கீழ்கண்ட சமயங்களில் இழப்பீட்டுத் தொகை வழங்க வகை செய்கிறது :—

(அ) தொழிற்சாலைகளில் வேலை காரணமாகவும், வேலை செய்யும் போதும் ஏற்படுகின்ற விபத்துக்கள்;





(ஆ) மரணத்தை உண்டாக்குகின்ற அல்லது பணியாற்ற இயலாதவண்ணம் செய்து விடுகிற தொழில் சார்ந்த சில நோய்கள். இது தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மலைத் தோட்டங்கள், போக்குவரத்து, கட்டுமான பணிகள், இரயில்வே, அபாயம் விளைவிக்கின்ற சில குறிப்பிட்ட தொழில்கள் ஆகியவற்றில் பணி புரிகின்ற தொழிலாளர்களுக்கு (தொழிலதிபரின் வாணிபம் அல்லது தொழிலுக்கு அன்றி வேறு விதத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நாட்கூலி பெறும் தொழிலாளர்கள் நீங்கலாக ஏனைய தொழிலாளர்களுக்கு) இது பொருந்தும்.

1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளன்றுள்ளபடி 658 வழக்குகள் முடிவுறாத நிலையிலிருக்கின்றன. இந்த ஆண்டில் 978 வழக்குகள் வரப்பெற்றன. மொத்தம் 1,636 வழக்குகளில் 1,047 வழக்குகள் மீது முடிவெடுக்கப்பட்டன. இவ்வாண்டு இறுதியில் 589 வழக்குகள் முடிவுறா நிலையில் இருக்கின்றன.

### தொழிற்சாலை விபத்துக்கள்—துயர் துடைப்பு நிதி.

ஆண்டொன்றிற்கு 15,000 ரூபாய் தொடர்மானியத்துடன் அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல் உடைத்தல், வெடி வைத்துத் தகர்த்தல், கிணறு தோண்டுதல் அல்லது பிற தொழில்களில் பணிபுரியும்போது காயமேற்பட்டு அதனால் என்றுமே பணியாற்ற இயலாமற்போன தொழிலாளர்களுக்கு அல்லது மரணமடைந்த தொழிலாளரைச் சார்ந்துள்ளவர்களுக்கு இந்நிதியிலிருந்து உதவியளிக்கப்படும். 1923 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் சட்டத்தின்கீழ் இழப்பீடு வழங்குவதற்கு நிதி வசதி இல்லாத தொழிலதிபர்களின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அல்லது வேறு காரணங்களுக்காக இழப்பீடு பெற இயலாத தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோருக்கு இந்நிதியிலிருந்து துயர் தணிப்பு உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப் போதுமான நிதிவசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் இந்நிதியிலிருந்து தொகை பெறுவர். 1978-ம் ஆண்டில் இந்நிதியிலிருந்து ஐந்து பேருக்கு 4,000 ரூபாய் துயர் துடைப்பு நிதி அனுமதிக்கப்பட்டது.

### பணிக்கொடை வழங்கல் சட்டம்.

இச்சட்டத்தின்கீழ், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள் அவரவர் பகுதிகளில் கட்டுப்பாட்டு அதிகாரிகளாக இருப்பர் என்றும், தொழிலாளர் நல துணை ஆணையாளர்கள் அவரவர் பகுதிகளில் மேல் முறையீட்டதிகாரிகளாக இருப்பர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் கட்டுப்பாட்டு அதிகாரிகள் 1,141 வழக்குகளை முடிவு செய்துள்ளனர். மேல் முறையீட்டதிகாரிகள் இவ்வாண்டில் 217 மேல் முறையீடுகளை முடிவு செய்துள்ளனர்.

## V தொழிலாளர் நலத் திட்டங்கள்.

### அரசு உதவிபெறும் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.

(தனியார் தொழிலதிபர் திட்டம்.)

மாநில சமூக நலக் கொள்கையைக் கருத்தில் கொண்டு பெருகிவரும் தொழிலாளர்களுக்குப் பாங்குடைய வசதியான வீடுகள் கட்டிக் கொடுப்பது தவிர்க்க முடியாததாகிறது. ஏனெனில் பெரும்பாலோருக்குச் சொந்தமான வீடுகள் வைத்துக்கொள்ள வசதியிருக்காது அல்லது அவர்கள் பணியிடத்திலிருந்து வெகு தொலைவில் வசிக்கின்றனர். சில தொழிலதிபர்கள் தங்களுடைய பணியாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் குடியிருப்பு வசதி அளித்துள்ளனர். ஆனால் இது பிரச்சினையைச் சிறிது கூட தீர்ப்பதாக இல்லை. எனவே பணியிடங்களுக்கு அருகில் வசதியுள்ள இடங்களில் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க உதவித் தொகை பெறும் வீட்டு வசதித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களின் நன்மைக்காக வீடுகள் கட்ட பொதுத் துறை, கூட்டுறவுத் துறை, தனியார் துறை ஆகியவற்றிற்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகின்றது. இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (இரண்டடுக்கு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 5,350 ரூபாயும், இரு சிறிய அறைகள் கொண்ட வீடு ( இரண்டு அடுக்கு மாடி கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 6,050 ரூபாயும், வழக்கமான இரு அறைகள் கொண்ட வீடு (பல மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 7,600 ரூபாயும், வழக்கமான இரண்டு அறைகள் கொண்ட வீடு (இரண்டு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 8,500 ரூபாயும் நிதியுதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



1978-79 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்குக் கடன் தொகையாக 7.50 இலட்சம் ரூபாயும், உதவித் தொகையாக 2.50 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. கடன் தொகையில் 1,60,500 ரூபாயும் உதவித் தொகையில் 80,250 ரூபாயும் இதுவரை செலவிடப்பட்டுள்ளன.

1977-78 ஆம் ஆண்டில் புதிய வீட்டு வசதித் திட்டம் எதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. எனினும், 1976-77 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, பாலக்கோடு, ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, வட புதுப்பேட்டை ஆகியவற்றின் திட்டங்களுக்குக் கடனாக 1,33,750 ரூபாயும், உதவித் தொகையாக 1,84,750 ரூபாயும் வழங்கப்பட்டன. 1978-79 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் வீட்டு வசதித் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது :—

1. சுந்தரம் நெசவு ஆலை, நம்பிநகர், நாங்குநேரி.
2. மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, படாளம்.
3. சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மோகனூர் (நிலை II ).

1978-79 நிதி ஆண்டு இறுதிக்குள் மேலே கூறப்பட்டுள்ள வீட்டு வசதித் திட்டங்கள் தரை மட்டம் வரை கட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு கட்டப்பட்டால் 1978-79-ல் முதல் கடன் தவணை கொடுக்க இயலும்.

### மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.

இத் திட்டம் மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் தங்களது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதை நோக்கமாகக் கொண்டதாகும். ஓர் அறை கொண்ட குடியிருப்புகள் ஒவ்வொன்றும் ரூ. 4,000 உச்சவரம்புச் செலவில் கட்டப்படுகின்றன. அத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும், 37.5 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படும். இம் மாநிலத்தில் மலைத் தோட்டங்களிலேயே இருந்துகொண்டு பணிபுரியும் தொழிலாளர்களில் சுமார் 94 சதவீதத்தினருக்கு வீட்டு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

1. வீடுகள் தேவைப்படுகின்ற தனித் தொழிலாளர்கள் உட்பட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை—35,997.

2. வழங்கப்பட்ட தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை—34,475.

3. வழங்கப்படவிருக்கும் தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை.—1,522.

4. இருக்கக்கூடிய தரமற்ற வீடுகளின் மொத்த எண்ணிக்கை.—3,496.

1978 நவம்பர் திங்களில், கீழ்க்கண்ட எஸ்டேட்டுகளுக்கு வீடுகள் கட்டுவதற்காகக் கடனும் உதவித் தொகையும் வழங்க அரசு அனுமதித்தது :—

| எஸ்டேட்டின் பெயர். | கடன். | உதவித் தொகை. | கட்டுவதற்கான வீடுகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | |
| 1. பிளென்டிவேலி எஸ்டேட் பிளென்டிவேலி அஞ்சல், கோயம்பத்தூர் மாவட்டம். | 50,000 | 37,500 | 25 |
| 2. கழுகுமலை தேயிலை எஸ்டேட், போடிநாயக்கனூர், மதுரை மாவட்டம். | 24,000 | 18,000 | 12 |

மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதி ஆலோசனைக்குழு.

இக்குழு 1978 மே திங்கள் 20-ம் நாள் அன்று உதகமண்டலத்தில் கூடி கீழ்க்கண்டவைகள் குறித்து முடிவு செய்தது :—

1. தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி அளித்தல்.
2. மலை சாதியினருக்கு வீட்டு வாடகைப் படி அளித்தல்.
3. தொழிலாளர் வீடுகளின் கூரையில் கூடுதல் விதானம் அமைத்தல்.

தமிழ்நாடு தொழிலாளர் சஞ்சிகை.

இது ஒரு மாதாந்திரப் பத்திரிகையாகும். தொழில் தகராறுகள், வேலை முடக்கம், தொழிற்சங்கங்களின் முக்கியமான ஒப்பந்தங்கள், தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னை தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகள், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம், ஆகியவற்றின் தீர்ப்புகள் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் பொருள் விலைக் குறியீட்டெண் முதலியவை பற்றிய பயனுள்ள தகவல்களையும், புள்ளி விவரங்களையும் இது தருகிறது. அத்துடன் தொழிலாளர்கள் பிரச்சினைகள், தொழில் நிர்வாகம் பற்றிய கட்டுரைகளையும் அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவன அறிக்கைகள், முக்கூட்டு அமைப்புகளான இந்தியத் தொழிலாளர் மாநாடு, தொழிலாளர்





நிலைக் குழு மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு முதலியவற்றின் தீர்மானங்கள், பரிவுரைகள் ஆகியவற்றையும் இது வெளியிடுகிறது. இச் சஞ்சிகையின் முக்கியப் பகுதியாகிய புள்ளி விவரப் பகுதி தமிழில் அச்சிடப் பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது. இதில் தொழிலாளர் நல அமைச்சர் தலைவராகவும், அரசு, தொழிலதிபர், தொழிலாளர் சங்கங்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு சார்பற்றவர்கள் ஆகியோர் உறுப்பினராக இருக்கின்றனர். இவ்வாரியத்தை தமிழக அரசு அமைத்தது. தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் நலனுக்காக இந்த வாரியம் அநேக நலத் திட்டங்களை மேற்கொண்டது. தற்போது உள்ள நலத் திட்டங்கள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) தொழிலாளர் நல நிலயங்கள்.

இவ்வாரியம் தற்பொழுது, (1) அம்பத்தூர் (சென்னை), (2) செம்பியம் (சென்னை), (3) கோயம்புத்தூர், (4) மதுரை, (5) திண்டுக்கல், (6) கோவில்பட்டி, (7) திருப்பூர், (8) குடியாத்தம், (9) வாணியம்பாடி, (10) சிவகாசி ஆகிய இடங்களில் 10 தொழிலாளர் நல நிலையங்களை நடத்தி வருகிறது. இவற்றில் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு மழலையர் வகுப்புகளும் பெண் தொழிலாளர்களுக்கும் தொழிலாளர்களின் மனைவியருக்கும் தையல் வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. தையல் வகுப்பில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் குழந்தைகளுக்கு பலகாரமும் சத்துள்ள உணவும் இவ்வாரியம் வழங்குகிறது.

(2) தொழிலாளர்களுக்கு விடுமுறை ஓய்வு இல்லம்.

இவ்வாரியம், மாமல்லபுரம், குற்றாலம், ஊட்டி, ஏற்காடு ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கு விடுமுறை ஓய்வு இல்லம் நடத்தத் தீர்மானித்துள்ளது. தற்போது ஏற்காட்டில் விடுமுறை ஓய்வு இல்லம் நடைபெற்று வருகிறது. இங்கு ஒரே சமயத்தில் 20 நபர்கள் தங்கலாம். நபர் ஒருவருக்கு ரூ. 1.50 வீதம் இயல்பான வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. பிற இடங்களில் விடுமுறை இல்லங்கள் விரைவில் தொடங்கப்படும்.

(3) தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்குக் காசநோய் வார்டுகள்.

இவ்வாரியம், தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர்க்குத் தனியாக 26 படுக்கைகள் கொண்ட காசநோய் வார்டைக் கட்டியது.

(4) படிப்பகங்கள்.

இவ்வாரியம், பெரம்பூர் (சென்னை), தண்டையார்பேட்டை (சென்னை), மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு படிப்பகங்களை நடத்தி வருகிறது. வாசகர்களின் பயனுக்காக செய்தித்தாள்கள், வார மாதத்திர இதழ்கள் வழங்கப்படுகின்றன.

5. பல மாடிக் கட்டிடங்கள்.

இவ்வாரியம், தேனாம்பேட்டையில் ரூ. 33 இலட்சம் செலவில் பல மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டியுள்ளது. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தொழிலாளர் நலத் துறையின் அலுவலகங்கள் இந்தக் கட்டிடத்தில் செயல்படுகின்றன. இதன் மூலம் கிடைக்கும் வாடகை இவ்வாரியத்தின் நிதி வசதிகளைப் பெருக்க உதவும்.

(6) குழந்தைகள் காப்பு நிலையம்.

சென்னையில் திரு. வி. க. நகரிலுள்ள ஒரு மகளிர் மன்றம் குழந்தைகள் காப்பு நிலையம் ஒன்றினை நடத்தி வருகிறது. இங்கு 5 வயதிற்கு உட்பட்ட 50 குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வி கற்பிப்பதோடு பால், ரொட்டி போன்றவையும் இலவசமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு வாரியம் ஆண்டொன்றுக்கு ரூ. 8,000 மானியம் வழங்குகிறது.

பின்வரும் திட்டங்களும் வாரியத்தில் தீவிரப் பரிசிலனையில் உள்ளன :—

1. தொழிலாளர் நலனுக்காக திரைப்படம் காட்டும் கருவி ஒன்று வாங்குதல்.

2. திருமணம், காதணி விழா, இதர சமூக நிகழ்ச்சிகள் இயல்பான கட்டணத்தில் நடத்துவதற்கு சென்னை நகரில் ஒரு சமுதாய நிலையத்தைத் தொடங்குதல்.

3. தேனாம்பேட்டையில் அலுவலகக் கட்டிடத்தில் நூலகம் ஒன்றினைத் தொடங்குதல்.



4. தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகச் சென்னைக்கு வரும் தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் தங்குவதற்குக் குறைந்த செலவில் போதுமான வசதி மிக்க அறைகளைக் கட்டுதல்.

5. பள்ளிகள், கல்லூரிகளில் படிக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பயன்தரும் வகையில் சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புத்தக வங்கிகள் தொடங்குதல்.

6. மாவட்ட, வட்டார, மாநில அளவில் தொழிலாளர்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்.

7. தொழிலாளிகளின் பிள்ளைகள் தட்டெழுத்து, சுருக்கெழுத்து கற்றுத் தேர்வு எழுத மேற்படி வகுப்புகளை நடத்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு படிப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் செலுத்துதல்.

8. திறந்த வெளியிலும், வீட்டினுள்ளும் விளையாடும் விளையாட்டுகளுக்காக வடசென்னையில் விளையாட்டு அரங்கம் கட்டுதல்.

தையல் பயிற்சி நிலையம், கூடலூர்.

கூடலூரில் மலைத் தோட்ட தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்தின் வளாகத்திற்குள் தையற் பயிற்சி நிலையம் ஒன்று இத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது. இத்தொழிலில் பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவர் இந்நிலையத்திற்குப் பொறுப்பு வகிக்கின்றார். மலைத் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உடைகள் தைப்பதில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு உதவித் தொகையாக மாதமொன்றுக்கு ரூ. 30 வழங்கப்படுகிறது. இப் பயிற்சிக் காலம் 18 திங்களாகும்.

சட்ட உதவி.

தொழிற் சங்கங்கள் உயர் நீதிமன்றத்தில் ஒரு ரிட்மனு அல்லது ரிட்முறையீடு தாக்கல் செய்வது தொடர்பாக ஏற்படும் சட்டம் சம்பந்தமான செலவுகளுக்காக குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ரூ. 150 என்ற விதத்தில் நிதியுதவி வழங்கும் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சட்ட உதவிக்கு அனுமதி வழங்க தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இப்படிப்பட்ட நிவாரணம் கோரி பாதிக்கப்பட்ட எந்த நபரிடமிருந்தும் கோரிக்கை எதுவும் வரவில்லை.

தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கோரும் தொழிலாளர்களில் உதவி பெறுவதற்குத் தகுதி வாய்ந்த ஏழை தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக ஓராண்டிற்கு ரூ. 1,000-ஐ அரசு ஒதுக்கியுள்ளது. காயமுற்ற தொழிலாளர் இழப்பீடு கோரி அது குறித்து கூடுதல் ஆணையாளர் பிறப்பித்த ஆணைகளை எதிர்த்து நிர்வாகத்தினர் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும் போது அத் தொழிலாளர்களும் உயர்நீதி மன்றத்தில் தங்கள் தரப்பில் வாதாட சட்ட உதவி பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவராவர். ஆனால், தொழிலாளர் இழப்பீடு குறித்து கூடுதல் ஆணையாளரின் முன் உள்ள நடவடிக்கைகளுக்காக அவர்களுக்கு இந்த சட்ட உதவி அளிக்கப்பட்டிருக்க வேண்டும். நடப்பாண்டில் சட்டஉதவி அளிப்பதற்காக ரூ. 90-க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள்.

தொழிலாளர்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்குவதற்காகச் சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று குழுக்கள் செயலாற்றி வருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஓய்வு பெற்ற நீதித் துறை அதிகாரியாலும் ஓய்வு பெற்ற ஓர் தொழிலாளர் நல அதிகாரியாலும் நிர்வகிக்கப்படுகின்றன. போதிய நிதி வசதியில்லாத மக்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்குவது குறித்துத் திட்டமொன்றினை வகுப்பது பற்றி ஆய்வு செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழுவால் செய்யப்பட்ட பரிவுரைகளை ஒட்டி அரசால் இக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் தொழிலாளர்களின் முறையீடுகளை கனிவோடும் பரிவோடும் கேட்டறிந்து அவர்கள் தம் குறைகளைக் களைவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து கருத்துரை நல்கி தொழிலாளர்களுக்கென்று இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்கள் அவை சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஆகியவற்றின் கீழ் நிவாரணம் பெறுவதற்குரிய முறைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறுகின்றன. 1978 ஆம் ஆண்டில் இந்த மூன்று குழுக்களும் 380 முறையீடுகளை விசாரித்து ஆலோசனை நல்கியுள்ளன.



## தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம்.

இம்மாநிலத்தில் தொழிலாளர்களின் பயனுக்காக 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன், தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் குடும்பங்களிலுள்ள பள்ளிப் பருவம் அடையாத குழந்தைகளும், கருவுற்ற மகளிரும், பாலூட்டும் தாய்மார்களும் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர். இத்திட்டத்திற்குட்பட்ட (தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நல நிலையங்கள் உட்பட) 77 நிலையங்களின் மூலம் தற்போது 27,900 பேர் பயன் அடைகின்றனர். தற்போதுள்ள தொழிலாளர் சத்துணவுத் திட்டத்துடன் ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டியது அவசியம் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி ஏற்கெனவே வழங்கப்படும் சத்துணவுடன் மருத்துவப் பாதுகாப்பும் பெற்று இத் தொழிலாளர்கள் பயனடைவர்.

பள்ளிப் பருவம் அடையாத குழந்தைகளுக்கு சத்துணவு, மருத்துவப் பணிகள், சுகாதாரக் கல்வி இவற்றுடன் தாய்-சேய் நலப் பாதுகாப்பும் அளிப்பதே ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத் திட்டத்தின் நோக்கமாகும். கருவுற்ற மகளிருக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்குங்கூட இத் திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படும். எல்லாத் தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்ள வசதி அளிப்பதே இதன் குறிக்கோளாகும். குடும்பத்தில் மிகவும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய உறுப்பினருக்குத் தாய்-சேய் நலப்பணியை முனைப்பாக அளிப்பதையே நோக்கமாகக் கொண்ட இத்திட்டம் அளவான குடும்பமே மகிழ்வான குடும்பம் என்ற கோட்பாட்டை தொழிற்சாலைத் தொழிலாளர்களிடையே வளர்க்க உதவும்.

ஒருங்கிணைந்த சுகாரப் பணி முனைப்புத் திட்டத்தில் பயன்படுத்தப்படுவதற்குத் தேவையான சுகாதார விளக்கப் படங்கள் அச்சிட்டு பல்வேறு நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சென்னை, தமிழ்நாடு மாநில குழந்தைகள் நல இந்திய அகடமியைச் சேர்ந்த டாக்டர் பி. திருஞானசம்பந்தம் அவர்களின் ஆலோசனையுடன் விளக்கப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில் (1) பள்ளிப் பருவம் அடையாத குழந்தைகளுக்கு ஒரு படமும், (2) கருவுற்ற மகளிருக்கு/பாலூட்டும் தாயார்களுக்கு ஒன்று, (3) குடும்பத்தினருக்கு அடையாள அட்டை ஆகியவை அடங்கும். இத்திட்டத்தின் கீழ் பயனடைபவர்களின் உடல் நலத்தை மதிப்பிட இந்த அட்டைகள் உதவுகின்றன. மேலும் அவர்கள் குடும்பநலம் பற்றிய விவரக் குறிப்பேடாகவும் இது பயன்படும்.

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம்.

பின்வரும் நோக்கங்களுக்காக தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டது.—

1. பொதுத் துறை, தனியார் துறை தொழில் நிறுவனங்களில் பணி யாற்றும் தொழிலாளர்களுக்கு (உடலுழைப்பாளர்கள், எழுத்தர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள்), தொழிலாளர் சட்டம் தொழிலாளர் கொள்கைகள் தொடர்பான எல்லா அம்சங்களும் கற்பிக்கப்படுகின்றன. அவ்வாறு கற்பிக்கை யில், தொழிற்சங்கங்களுக்கு தொழிலாளர்களிடையே இருந்து தலைவர் களைத் தேரிந்தெடுப்பதனால் ஏற்படும் நன்மைகள் வலியுறுத்திக் கூறப்படு கின்றன.

2. பொதுத் துறை, தனியார் துறை, தொழில் நிறுவனங்களிலுள்ள நிர்வாக அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

3. தொழிலாளர் சட்டங்களை நிர்வகித்தல், செயற்படுத்துதல் ஆகிய வற்றுக்குப் பொறுப்பு வகிக்கின்ற தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

4. கூட்டுறவுச் சங்கங்களிலும், உள்ளாட்சி மன்றங்களிலும் தொழிலாளர் களுடனும் பணியாளர்களுடனும் தொடர்புள்ள அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

## உழைப்பவர் உலகம்

தொழிலாளர் நல ஆணையாளரின் பொறுப்பின் கீழ் இயங்கிவந்த இந்த நிறுவனத்தை அரசு, ஒரு தனித் துறையாக அமைத்தது. அவ்வாறு இந்த நிறுவனத்தின் தரத்தை உயர்த்துகையில் இது தற்போது ஆற்றிவரும் பணி களுடன், தொழிலாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் தொழிலாளர் சட்ட நூலை தமிழில் வெளியிடும் பணியையும் மேற்கொள்ள வேண்டும் என்று அத்துடன், பல்வேறு தொழிலாளர் சட்டங்களையும் நீதிமன்ற முடிவுகளின் மீதான குறிப்புரையுடன் தமிழில் வெளியிடும் பொறுப்பையும் இந்த நிறுவன மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டது. தொழிலாளர் சட்ட நூல். 'உழைப்பவர் உலகம்' என்னும் பெயரில் தமிழில் வெளியிடப்படுகிறது இந் நூலை முதலமைச்சர் அவர்கள் அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான 1978 செப்டம்பர் திங்கள் 15-ம் நாளன்று வெளியிட்டார்.



## பயிற்சி வகுப்புகள்.

இந்நிறுவனம், 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது :—

| வரிசை எண்ணும், பயிற்சி வகுப்புகளின்/கருத்தரங்கின் விவரமும். | பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை. | பயிற்சி பெற்றவா்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. தொழிற்சங்கத் தலைமைத் திட்டம், மூன்று மாதப்பயிற்சி | 1 | 34 |
| 2. தொழிலாளர் நலத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், பொதுத் துறை, தனியார் துறை நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்குமான பயிற்சி. | 14 | 286 |
| 3. பாரத் கனரக மின் கருவிகள் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் மலைத் தோட்ட நிர்வாகிகளுக்குமான கருத்தரங்குகள். | 2 | 319 |
| 4. மக்கள் தொகை குடும்ப நலம் குறித்து சென்னை தொழிலாளர் கல்வி நிலையம், குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றின் உடனுழைப்புடன் நடத்தப்பட்ட கருத்தரங்கு. | 1 | 116 |
| 5. கிராமப்புற தொழிலாளர்களுக்கு கோயம்புத்தூர், தொழிலாளர் கல்வித் துறையின் வட்டார இயக்குநர் அலுவலகத்தின் உடனுழைப்புடன் நடத்தப்பட்ட பயிற்சி. | 1 | 40 |

இந்த 1978-79 ஆம் நிதி ஆண்டு முடிவடைவதற்கு முன்னர், தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த 100 அதிகாரிகளுக்கு 5 பயிற்சி வகுப்புகள், கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த 20 அதிகாரிகளுக்கு ஒரு பயிற்சி வகுப்பு, பொது, தனியார் துறை தொழில்

நிறுவனங்களைச் சேர்ந்த 20 தொழிலாளர் நல அதிகாரிகளுக்கு ஒரு பயிற்சி வகுப்பு, பொதுப் பணித் துறையைச் சேர்ந்த சுமார் 40 நிர்வாகப் பொறியாளர்களுக்கு ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம் குறித்து ஒரு பயிற்சி வகுப்பு, தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சேர்ந்த 25 பொறியாளர்களுக்கு ஒரு பயிற்சி வகுப்பு ஆகியவை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1979-80 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்யக் கருதப்பட்டுள்ளது :—

| வரிசை என்னும், பயிற்சி வகுப்பின் பெயரும். | நடத்தப்பட விருக்கும் பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. துறை அதிகாரிகளுக்கான (தொழிலாளர்-நலன், வேலை வாய்ப்புத் துறையைச் சேர்ந்த சார்புச் செயலாளர்கள், பிரிவு அலுவலர்கள், தொழிலாளர் நலத் துறையைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகள், தொழிலாளர் நல அதிகாரிகள், தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர்கள்) நினைவூட்டுப் பயிற்சி. | 4 |
| 2. தொழிலாளர் நலத் துறையைச் சேர்ந்த தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள், கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கான நினைவூட்டுப் பயிற்சி. | 4 |
| 3. கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு மறு பயிற்சி. | 8 |
| 4. தொழிற்சங்கத் தலைமைத் திட்டம் | 2 |
| 5. பொது, தனியார் துறை தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர் நல அதிகாரிகளுக்கான மறு பயிற்சி. | 2 |
| 6. தொழில் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கான பயிற்சி வகுப்புகள். | 2 |
| 7. தொழிலாளர் புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றைத் தொகுப்பதில் துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி வகுப்புகள். | 2 |



## VI. எடைகள்-அளவைகள் சட்டம்.

### தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டம்.

தொழிலாளர் நலத் துறையின் துணை ஆணையாளரே (ஆய்வு) எடைகள் அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். இவருக்கு உதவியாக, தொழில் நுட்பம் சாரா நேர்முக உதவியாளர் ஒருவர், தொழிலாளர் நல துணை ஆய்வாளர் ஒருவர் (தலைமையிடம்), 11 தொழிலாளர் நல ஆய்வாளர்கள், 28 தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள், 206 தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் உள்ளனர். இவர்கள், இச்சட்டத்தையும் ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களையும் செயல்படுத்துகின்றனர்.

### பதிவு.

எடைகள், அளவைகள், உற்பத்தி செய்வோர், விற்பனையாளர்கள், பழுது பார்ப்போர் ஆகியோர் அதற்கான உரிமங்களைப் பெறவேண்டும். 1978 ஆம் ஆண்டில், 71 உற்பத்தியாளர்கள், 646 விற்பனையாளர்கள், 353 பழுதுபார்ப்போர் ஆகியோருக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. அவ்வாண்டில் உரிமக் கட்டண வகையில் ரூ. 35,887.90 வசூலாகியது.

### சரிபார்த்தல், முத்திரையிடுதல்.

தொழிற்சாலைகள், சுரங்கங்கள், ஆபரண உலோகத் தொழில் முதலிய வற்றில் பயன்படுத்தப்படுகின்ற எடைகள், அளவைகள் அல்லது எடை போடும், அளக்கும் கருவிகள் குறைந்தது 12 மாதத்திற்கொருமுறையேனும் சரிபார்க்கப்பட வேண்டும்; வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்படுபவை 2 ஆண்டுகளுக்கொரு முறை சரிபார்க்கப்படவேண்டும். அவ்வாறு சரிபார்ப்பதற்காக ஒரு முத்திரைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 1978 ஆம் ஆண்டில் முத்திரைக் கட்டணமாக ரூ. 25,75,286.83 வசூலிக்கப்பட்டது. தற்போது முத்திரையிடும் பணியை உதவி ஆய்வாளர்கள் கவனிக்கின்றனர். இவர்கள் பல்வேறு நிறுவனங்களைச் சோதனையிடுவதுடன் முத்திரையிடும் பணியையும் கவனிக்கின்றனர். அதன் விளைவு வணிகர்கள் விரும்பும்போது சரிபார்த்தல் பணியைச் செய்ய முடிவதில்லை. கீழ்மட்டத்தில் பணியாளர்களின் எணிக்கையை அதிகரிப்பது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. சரிபார்த்தல் பணி துல்லியமாக இருக்க வேண்டும் என்பதும் முத்திரையிடும் பணி சுமுகமாக நடைபெறவேண்டும் என்பதுமே அரசின் விருப்பமாகும்.

## அளவைக் குறைவையும் எடைக் குறைவையும் ஒழித்தல்.

எந்த ஒரு வணிக நடவடிக்கையிலும் அளவுக் குறைவோ எடைக் குறைவோ இல்லாதவாறு பார்த்துக்கொள்வதும் நுகர்வோருக்கு நியாயமான அளவில் பொருள்கள் விநியோகிக்கப்படவும் அரசு முயற்சி எடுத்து வருகிறது. தரமில்லாத முத்திரையிடப்படாத எடைகள், அளவைகளையும் எடை போடுவதிலும் அளப்பதிலும் நடைபெறும் முறைகேடுகளையும் ஒழிப்பதன் மூலமே இதனைச் செய்து முடிக்க இயலும். இத்துறை 1978 ஆம் ஆண்டில் 1,336 கூட்டுத் திடீர் சோதனைகள் நடத்தியது. இதற்கு அடுத்து நடத்தப்பட்ட சோதனைகளில் 5,931 வணிகர்கள் கைது செய்யப்பட்டனர். 19,872 தரமில்லாத அல்லது முத்திரையிடப்படாத எடைகள், 20,109 தரமில்லாத அல்லது முத்திரையிடப்படாத அளவைகள், 4,676 தரமில்லாத முத்திரையிடப்படாத எடைபோடும் கருவிகள், 1,032 தரமில்லாத முத்திரையிடப்படாத அளவைக் கருவிகள் முதலியன கண்டு பிடிக்கப்பட்டன. ஆய்வாளர் அலுவலகத்தினரால் செய்யப்படும் வாலாயமான ஆய்வுகளுக்கும் மேலாக இந்தத் தனி சோதனைகள் நடத்தப்பட்டன. 1978 ஆம் ஆண்டில் ஆய்வுப் பணியாளர்கள் 9,296 கிராமங்களுக்குச் சென்று 54,675 வணிக நிறுவனங்களில் ஆய்வு செய்தனர்.

பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல் அளவு குறைத்து வினியோகிக்கப்படுகின்றன என்று கூறப்பட்ட புகார்கள் குறித்து விசாரிக்கப்பட்டது. பெட்ரோல் பங்குகளில் அவ்வாறு அளவு குறைத்து வினியோகிக்கப்படுவதைத் தடுக்க ஆய்வாளர் அலுவலகம் சிறப்பு நடவடிக்கை எடுத்தது. மதுரை, கோயம்புத்தூர், சென்னை மாநகர்களில் இந்த நடவடிக்கைகளுக்கு நல்ல பயன் கிட்டியது.

எடை குறிப்பிடப்படாத சிப்பமிடப்பட்ட பொருள்களைக் கைப்பற்றுவதிலும் ஆய்வாளர் அலுவலகம் நாட்டம் செலுத்தியுள்ளது.

சிமிண்டின் அளவு குறைவு பற்றிய புகார்கள் வரும்போதெல்லாம் ஆய்வாளர் அலுவலகம் சிமிண்ட் ஆலைகளிலும் சில்லறை விற்பனை நிலையங்களிலும் பல சோதனைகள் நடத்தியது.



## இணைப்பு.

### தொழிலாளர் சட்டங்களின்கீழ் வரும் நிறுவனங்கள், தொழிலாளர்களின் எண்ணிக்கை.

| ஆண்டு. (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்— | | |
| 1977 .. .. .. | 8,508 | 5,23,233 |
| 1978 .. .. .. | 8,766 | 5,60,976 |
| 2. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டம். | | |
| 1977 .. .. .. | 2,17,685 | 2,21,860 |
| 1978 .. .. .. | 2,21,642 | 3,28,644 |
| 3. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம்— | | |
| 1977 .. .. .. | 21,731 | 68,356 |
| 1978 .. .. .. | 21,730 | 68,922 |
| 4. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் | | |
| 1977 .. .. .. | 412 | 92,141 |
| 1978 .. .. .. | 423 | 93,413 |
| 5. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்— | | |
| 1977 .. .. .. | 1,454 | 45,871 |
| 1978 .. .. .. | 1,359 | 51,170 |
| 6. 1926 ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டம்— | | |
| 1977 .. .. .. | 2,550 | .. |
| 1978 .. .. .. | 2,770 | .. |

## தேசீய வேலை வாய்ப்புப் பணி.

1. வேலை வாய்ப்புகள்.—தமிழ்நாட்டில் திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், அம்பத்தூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, மண்டபம், சங்கராபுரம், ஆலங்காயம், கரூர் ஆகிய பத்து ஊர்களில் உள்ள துணை வேலைவாய்ப்பகங்களும், சென்னையிலுள்ள இரு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்கள், உடல் ஊன

முற்றோர்களுக்கு ஒன்றும், தொழில் நிர்வாகத் தகுதி பெற்றவர்களுக்கு ஒன்றும் ஆக இரண்டு சிறப்பு வேலைவாய்ப்பகங்கள் உள்பட மொத்தம் 32 வேலைவாய்ப்பகங்கள் செயல்படுகின்றன. இவற்றில் சென்னை, மதுரை, அண்ணாமலைநகர் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் வழிகாட்டு நிலையங்களும் இதில் அடங்கும்.

1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் தேதி முதல் 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதியுடன் முடிந்த காலப் பகுதியில் தமிழகத்தில் வேலை வாய்ப்பகங்களின் பணிகள் குறித்து புள்ளி விவரங்கள், ஒப்பு விவரங்கள் (சென்ற ஆண்டில் இதே காலப் பகுதியைச் சார்ந்தவை) கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும், விவரங்களும். | அறிக்கையில் குறிப்பிடப் பட்ட கால அளவில் 1978-ம்ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் தேதி முதல் 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதி வரை. | 1977-78-ல் அதே கால அளவில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள்1-ம் தேதி முதல் 1977-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதி வரை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. வேலைக்காக பதிவு செய்தவர்கள். | 2,98,550 | 3,96,831 |
| 2. வேலையில் அமர்த்தப்பட்டவர்கள். | 22,816 | 16,318 |
| 3. அறிவிக்கப்பட்ட காலியிடங்கள் .. | 34,571 | 26,793 |
| 4. வேலைவாய்ப்பகங்களை உபயோகப் படுத்திய வேலை அளிப்போரின் சராசரி எண்ணிக்கை— | | |
| (அ) அரசுத் துறை .. | 1,030 | 728 |
| (ஆ) தனியார் துறை .. | 323 | 234 |
| 5. 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதி அன்றுள்ளபடி பதிவேட்டில் (செல்திறனுள்ள) உள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை .. .. | 9,70,532 | 9,26,10[illegible] |



2. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம்.

சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் தமிழ்நாட்டிலுள்ள (கோவை, மதுரை, திருச்சி, சேலம் மாவட்டங்கள் தவிர) பார்வையற்றோர், காது கேளாதோர், இதர உறுப்புகள் பாதிக்கப்பட்டோர் ஆகிய உடல் ஊனமுற்றவர்களின் பெயர்களைப் பதிவு செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு உதவியளிக்கிறது. இந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துகொண்ட பல்வேறு வகைப்பட்ட உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களுக்கு ஏற்ற பதவிகள் எங்கு உள்ளன என்பதைக் கண்டறிய தனி முயற்சிகள் எடுக்கிறது. இதற்காக அரசுத்துறை தனியார் துறை நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறது. மதுரை, கோவை, திருச்சி, சேலம் மாவட்டம் வேலை வாய்ப்பகங்களிலுள்ள சிறப்பு வேலை வாய்ப்பகம் ஊனமுற்றோர்களுக்கென இயங்கி வருகின்றது. அவர்களை வேலையில் அமர்த்த முயற்சிகள் எடுத்தல், அவர்களின் மறு வாழ்வினை மேற்கொள்ள உதவுதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றன.

சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலைவாய்ப்பகமும் மாநிலத்திலுள்ள பிற வேலைவாய்ப்பு அலுவலகங்களும் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர் முடிய 999 ஊனமுற்றோர்களை (139 பார்வையற்றோர், 114 காது கேளாதோர், 746 உறுப்பு குறைந்தோர்) பதிவு செய்துள்ளது. அத்துடன் 146 ஊனமுற்றோர்களை (8 பார்வையற்றோர், 6 காது கேளாதோர், 132 உறுப்பு குறைந்தோர்) வேலையில் அமர்த்தியுள்ளது. 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதியன்று உள்ளபடி 4,092 ஊனமுற்றோர் (581 பார்வையற்றோர், 423 காது கேளாதோர், 3,088 உறுப்பு குறைந்தோர்) வேலைக்காக இம்மாநிலத்திலுள்ள இத்தகைய அலுவலகங்கள் அனைத்திலும் உள்ள நடப்புப் பதிவேடுகளில் காத்திருந்தனர்.

3. தொழில் நிர்வாக வேலைவாய்ப்பு அலுவலகம்.

இவ் வேலை வாய்ப்பகம் தமிழ்நாட்டிலுள்ள தொழில் கல்வி, அறிவியல், பொறியியல், நிர்வாகம், மேற்பார்வை போன்றவற்றில் உயர் தகுதி பெற்றவர்களின் வேலைவாய்ப்புத் தேவைகளை நிறைவு செய்கிறது. அவர்களுக்குப்

பொருத்தமான வேலைவாய்ப்புகளைக் கண்டறிய இவலுவலகம் அரசுத் துறையிலும் தனியார் துறையிலும் உள்ள பெரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்கின்றது.

இவ்வேலை வாய்ப்பகத்தில் 5,571 பேர் இவ்வறிக்கைக் காலப் பகுதியில் பதிவு செய்துள்ளார்கள். 778 பேர் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். 1978 ஆம் ஆண்டு நவம்பர் 30-ம் தேதி அன்று உள்ளபடி 14,426 பேர் இவ் வேலை வாய்ப்பகத்தின் நடப்புப் பதிவேட்டில் வேலைக்காகக் காத்திருந்தார்கள்.

**4. பல்கலைக் கழக, வேலைவாய்ப்புத் தகவல் வழிகாட்டும் நிலையங்கள்.**

தமிழ்நாட்டில் அண்ணாமலைநகர், சென்னை, மதுரை ஆகிய இடங்களில் பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் வழிகாட்டும் நிலையங்கள் உள்ளன. பல்கலைக் கழகங்களில் படித்த பட்டதாரிகளுக்கும் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் வேலை விவரங்களின் வழி முறைகளை எடுத்துரைப்பதற்கும் வேலை தேடுபவர்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்கும் இந்த நிலையங்கள் செயல்படுகின்றன. 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதி அன்றுள்ளபடி 3,148 பேர் இவ்வேலை வாய்ப்பக நடப்புப் பதிவேட்டில் வேலைக்காகக் காத்திருந்தார்கள்.

**5. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டியும் வேலைவாய்ப்பு ஆலோசனையும்.**

தொழில் முறை வழிகாட்டும் பிரிவுகள் தமிழ்நாட்டில் நீலகிரி, தருமபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் தவிர மற்ற ஏனைய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. வேலைவாய்ப்பகங்களில் உள்ள இப்பிரிவுகள் தொடர்ந்து தொழில் பற்றிய செய்திகள், வேலைவாய்ப்பு பற்றிய செய்திகள், பயிற்சி பெறுவதற்கான வசதிகள் ஆகிய விவரங்களை வேலை தேடுவோரிடையேயும்/மாணவர்களிடையேயும், விண்ணப்பதாரர்களிடையேயும் பரப்பி வருகின்றன. பதிவு செய்தவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான வழிகாட்டுதல் சம்பந்தமாகக் கூட்டங்கள் நிகழ்த்தப்பட்டன. காலாண்டு தோறும் வாழ்க்கை நெறி செய்தி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பள்ளிகள் மற்றும் நூலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.





பலன் கிட்டியது.

ஏப்ரல் 1978 முதல் நவம்பர் 1978 வரையிலான தொழில் முறை வழிகாட்டும் பிரிவுகளால் பயனடைந்தவர்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| 1 | மேற்கொள்ளப்பட்ட (வழிகாட்டுதல்) கூட்டுக் கூட்டங்கள் எண்ணிக்கை .. | 2,279 |
| 2 | பதிவு செய்யும்போது வழிகாட்டும் தகவலைப் பெற்றவரது எண்ணிக்கை .. | 13,616 |
| 3 | கூட்டு வழிகாட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர் எண்ணிக்கை. | 58,705 |
| 4 | வேலை, பயிற்சி மற்றும் தொழில் பழகுதலில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை .. .. | 420 |
| 5 | பள்ளிகள், கல்லூரிகளில் நிகழ்த்திய வாழ்க்கை நெறி சொற்பொழிவுகளின் எண்ணிக்கை .. .. | 179 |
| 6 | தொழில் பழகுதல், உதவித்தொகை மற்றும் மேற்படிப்பிற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.. | 6,411 |

சென்னை வேலைவாய்ப்பு-பயிற்சி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள மாநிலத் தொழில் (State V.G. Unit) வழிகாட்டிப்பிரிவு, மாவட்டங்களில் உள்ள தொழில் வழிகாட்டிப் பிரிவுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கின்றது ; மேற்பார்வையிடுகின்றது ; சீரமைக்கின்றது ; ஆய்வு செய்கின்றது. 31 தொழிற் பயிற்சி நிலையங்களிலும் கிண்டியில் உள்ள மாதிரிப் பயிற்சி பள்ளியிலும் திறனாய்வுத் தேர்வுகள் நடத்தப்பட்டது. 30,753 விண்ணப்பதாரர்களுக்கு திறனாய்வுத் தேர்வு நடத்தப்பட்டது. ஆவடியில் உள்ள கனரகத் தொழிற்சாலையில் பயிற்சிக்காக மாணவர்கள் தேர்ந்தெடுக்க திறனாய்வுத் தேர்வுகள் நடத்தப்பட்டன. சென்னை-12-ல் உள்ள செயின்ட் ஜோசப் தொழில் பயிற்சி நிலையத்தில் திறனாய்வுத் தேர்வு 251 விண்ணப்பதாரர்களுக்கு நடத்தப்பட்டது. மாநிலத் தொழில் வழிகாட்டிப் பிரிவினால் தொழில் முறை வழிகாட்டிப் பிரிவு அலுவலர்களுக்கான வழிகாட்டிப் பணிக்கு உறுதுணையாக சமூகவியல் பட்டதாரிகளுக்கு உள்ள தொழில், கல்வி, பயிற்சி வசதிகள் குறித்த வாழ்க்கை நெறிப் புத்தகம் ஒன்று தயாரித்து வெளியிடப்பட்டது.

மாநில தொழில் முறை வழிகாட்டிப் பிரிவு அரிசன தாழ்த்தப்பட்ட விண்ணப்பதாரர்களை வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்யுமாறும், அதனால் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களில் அவர்களை வேலையில் அமர்த்துவதற்காகவும் அறிவுரை வழங்கப்பட்ட ஓர் விளம்பர சுவரொட்டி தயாரித்து எல்லா வேலை வாய்ப்பகங்களுக்கும் அனுப்பி வைத்தது. இது தவிர மேலும் நான்கு வாழ்க்கை நெறி விளம்பரச் சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டு எல்லா வேலைவாய்ப்பகங்களுக்கும் விளம்பரப் படுத்தி அனுப்பப்பட்டது.

இராஜா வணிகக் கல்வி பள்ளியினால் நடத்தப்பட்ட கருத்தரங்கு தொடர்பாக சென்னையில் உள்ள "குட் ஷெப்பர்டு" பள்ளியில் 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 26-ம் தேதியன்று வாழ்க்கை நெறி கண்காட்சி நடத்தப்பட்டது.

### 6. வேலை நிலவரத் தகவல் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், மூன்று மாதத்திற்கு ஒருமுறை அரசுத் துறையில் எல்லா நிறுவனங்களிலிருந்தும், தனியார் துறையில் (வேளாண்மைத் துறை தவிர) பத்தும் அதற்கு மேற்பட்ட பேர்களை வேலையில் அமர்த்திக் கொண்டுள்ள நிறுவனங்களில் இருந்தும் வேலை நிலவரத் தகவல் சேகரிக்கப் படுகிறது. இத்தகவல்கள் ( (Organised Sector) ) முறையான அமைப்புகள் உள்ள துறைகளிலிருந்து மட்டுமே சேகரிக்கப்படுகிறது.

இரண்டு காலாண்டுகளுக்கான வேலை நிலவரத் தகவல் திட்ட புள்ளி விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன—

| காலாண்டு. | தகவல் கேட்கப் பட்ட நிறுவனங் களின் எண் ணிக்கை. | தகவல் அளித்த நிறுவனங் களின் எண் ணிக்கை. | விழுக் காடு (%). | வேலையில் இருப்பவர் கள் எண் ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| அரசுத் துறை— | | | | |
| 31 மார்ச் 1978. | 7,449 | 6,787 | 91.1 | 11,19,178 |
| 30 ஜூன் 1978. | 8,896 | 7,042 | 79.1 | 11,30,094 |
| தனியார் துறை— | | | | |
| 31 மார்ச் 1978. | 9,610 | 8,622 | 89.7 | 6,04,428 |
| 30 ஜூன் 1978. | 9,763 | 8,460 | 86.6 | 6,14999 |



### 7. ஆழ்ந்த ஆய்வுக்குழு (Depth study cell)

கீழ்க்காணும் பொருள் பற்றிய ஆய்வுகள் முடிவு பெற்று அறிக்கைகள் மேற்கூறிய காலப் பகுதியில் வெளியிடப்பட்டன.

(1) தமிழகத்திலுள்ள வேலை வாய்ப்பகங்களின் நடப்பு பதிவேட்டில் முதல் வகுப்பு பட்டமேற்படிப்புப் பட்டதாரிகள், தொழில் நுட்பமுள்ளவர்கள் உள்ளார்களா என்று அறிய விரைவான ஆய்வு.

(2) நேரிடையாக வேலையில் அமர்த்தப்பட்டோர்களில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்தோர்களின் விகிதம் அறிவதற்கான ஆய்வு.

(3) வேலை வாய்ப்புகள் பற்றி பத்திரிகையில் வெளியான விளம்பரங்களால் அறியப்பட்ட காலியிடங்களில் நிலவரங்களைப் பற்றிய விரைவான ஆய்வு.

வேலை வாய்ப்புப் பயிற்சி, தலைமை இயக்குநரால் இயந்திரவியல் பொறியாளர்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட தொழில் ஆய்வு குறித்து களப்பணி ஒருங்கிணைக்கப்பட்டது.

### 8. புள்ளி விவரக் கணிப்பு பிரிவு.

ஏப்ரல் 1978 முதல் நவம்பர் 1978 முடிந்த காலப் பகுதியில் புள்ளி விவரக் கணிப்பு பிரிவு 70 அட்டவணைப் பட்டியல்களை (tabulation) தயார் செய்ய மேற்கொண்டு முடிந்தது. அவைகளில் மிகவும் முக்கியமான சில பட்டியல்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

(i) மத்திய அரசு நிறுவனங்கள் மாநில அரசு நிறுவனங்கள், மத்திய அரசைச் சார்ந்த நிறுவனங்கள், மாநில அரசைச் சார்ந்த நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்திலும் மார்ச் 1978 ஜூன் 1978 உடன் முடிந்த காலாண்டுகளில் உள்ள வேலை நிலவரங்களில் உள்ள மாற்று நிலைகள் பற்றிய பட்டியல்கள்.

(ii) தனியார் துறை (பெரிய நிறுவனங்கள்) தனியார் துறை (சிறிய நிறுவனங்கள்) தனியார் துறை நிறுவனங்கள் அனைத்திலும் உள்ள 31 மார்ச் 1978, 30 ஜூன் 1978 ஆகிய காலாண்டுகளுக்கு வேலை நிலவரங்களில் ஏற்பட்டுள்ள மாற்று நிலைகள் பற்றிய பட்டியல்கள்.

(iii) அறிவிக்கப்பட்ட காலியிடங்கள், நிரப்பப்பட்ட காலியிடங்கள் நிலுவையில் உள்ள காலியிடங்கள் ஆகியவைகள் குறித்த வேலை வாய்ப்பகங் காலமுறை அறிக்கைகள்.

(iv) தேசீயத்தொழில் வகைப்பாட்டுப் பட்டியலின்படி (என்.சி.ஓ.) நடப்புப் பதிவேட்டில் உள்ள தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதியினர் குறித்த வேலை வாய்ப்பகங்களின் காலமுறை அறிக்கைகள்.

செப்டம்பர் 1975 முடிந்த காலப் பகுதிக்கான தனியார் துறையில் உள்ள
தொழில் விவரங்கள் பற்றிய அறிக்கையிலிருந்து தொழில் புள்ளி விவரங்கள்
பூர்வாங்கத் தொகுப்பு அட்டவணை பட்டியலை தயாரித்து முடிக்கப்பட்டுள்
ளது. அதனைச் சரியார்க்கும் பணி நடந்தேறி வருகிறது.

**9. வேலை வாய்ப்பகங்களின் பணியினை கணக்குப் பொறி மூலம் செய்வது.**

சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள ஒன்பது வேலை வாய்ப)
கங்களின் பணிகளை கம்ப்யூட்டர் மூலம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்
தது. அதன்படி வேலை வாய்ப்பகங்களின் வேலைகளைத் துரிதப்படுத்தி
செவ்வனே செய்யவும், முக்கியமாக வேலை வாய்ப்பகங்கள் மீது வரும் புகார்
களைக் களைவதற்கும், மேலும் தனியார் துறையில் வேலை அளிப்போரை
ஊக்குவிப்பதற்கும், சரியான விவரங்களை நிலைப் படுத்துவதற்கும் ஏது
வாகிறது. இத்திட்டத்தின்கீழ் மனுதாரர்களின் படிப்பு, வயது ஆகிய
உண்மை விவரங்களை மனுதாரரின் பதிவட்டையிலிருந்து ஏற்கெனவே வகுக்
கப்பட்ட படிவங்களின் பலவித குறியீட்டு எண்களைக் கொண்டு மாற்றப்
பட்டது. இவ்வாறு படிவங்களில் மாற்றப்பட்ட மனுதாரரின் விவரங்களை
அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையத்தில் கம்ப்யூட்டர் நாடாவில் பதிவு
செய்யப்பட்டு அங்கு பாதுகாப்பில் வைக்கப்படும். மனுதாரரின் இப்படி தயா
ரிக்கப்பட்ட நாடாக்கள் பிறகு வேலை வாய்ப்பகங்களில் அறிவிக்கப்பட்ட
காலியிடங்களை பூர்த்தி செய்ய கம்ப்யூட்டர் மூலம் மனுதாரர்களை தேர்ந்தெ
டுக்க உபயோகிக்கப்படும். 31 மார்ச் 1978 அன்றைய நிலவரப்படி நடப்புப்
பதிவேட்டில் கம்ப்யூட்டர் முறையில் உள்ள ஒன்பது வேலை வாய்ப்பகங்களில்
2,50,000 மனுதாரர்களைச் சார்ந்த அடிப்படைத் தகவல் படிவங்கள் (input
forms) தயாரிக்கப் பட்டன. முதலில் சென்னையில் உள்ள
தொழில் நிர்வாக வேலைவாய்ப்பகத்தைச் சார்ந்த அடிப்படை தகவல்படி
வங்கள் கம்ப்யூட்டர் முறையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்படி
2,000 மாதிரி அடிப்படை தகவல் படிவங்கள் வேலை வாய்ப்பகங்களின் பல
பணிகளை கம்ப்யூட்டர் மூலம் பரிசோதிக்கும் பொருட்டு எடுத்துக்கொள்ளப்
பட்டது. தொழில் நிர்வாக வேலை வாய்ப்பகத்தை சார்ந்த 2,000 அடிப்
படைத் தகவல் படிவங்களை சரி செய்த பட்டியல் 'அரசு புள்ளி விவரத்
தொகுப்பு நிலையத்திலிருந்து' கிடைக்கப் பெற்று அதை மீண்டும் சரி
பார்த்து அனுப்பப்பட்டது, தமிழகம் முழுவதும் தற்போது ஏறத்தாழ ஒரு
மில்லியன் மனுதாரர்கள் பதிவு செய்துள்ளனர். அதில் ஏறத்தாழ 2.83
லட்சம் பேர்களுக்கு முதற்கண் கம்ப்யூட்டர் திட்டம் புகுத்தப்படும். இவர்கள்
சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள ஒன்பது வேலை வாய்ப்பகங்
களில் பதிந்துள்ளனர். கம்ப்யூட்டர் திட்டம் தமிழகத்தில் உள்ள எல்லா



வேலைவாய்ப்பகங்களுக்கும் நீட்டிக்கப்படும்போது மனுதாரர்களின் எண்
ணிக்கை ஒரு மில்லியனைக் காட்டிலும் அதிகரிக்கும். இதுபோன்று பெரு
எண்ணிக்கையிலுள்ள மனுதாரர்களின் விவரங்கள் கொண்ட அடிப்படைத்
தகவல் படிவங்களை வேலை வாய்ப்பகங்களில் மிகவும் கவனமாகவும் அறிவியல்
ரீதியாக கம்ப்யூட்டர் முறையில் தயாரிக்கப்படவிருக்கின்றன.

**10. மாநில வாழ்க்கைத் தொழில் தகவல் பிரிவு.**

வாழ்க்கை தொழில் தகவல் பிரிவு தன் பணியான வாழ்க்கை தொழில்
முறை ஆராய்ச்சி பகுப்பாய்வு, வாழ்க்கை தொழில்குறித்த சிற்றேடுகளைத்
தயாரித்தல், திருத்தியமைத்தல், அச்சிடுதல் ஆகிய பணிகள் புதுடில்லியிலுள்ள
வேலைவாய்ப்பு-பயிற்சி தலைமை இயக்குநரிடமிருந்து வரப் பெற்ற
வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிக் கையேடுகளின் வெளியீடுகளைத் திருத்தி
அமைத்தல், வெளியிடப்பட்ட சிற்றேடுகளை சார்நிலை அலுவலர்களுக்கு
அனுப்பி அதன் மூலம் பொது நூலகங்கள், கல்விக்கூடங்கள் போன்றவை
களுக்கு பகிர்ந்தளித்தல், கேட்பவர்களுக்கு விற்பனை செய்தல் போன்ற
பணிகளை தொடர்ந்து மேற்கொண்டது.

தொழில்கள் தொடர்பான சிற்றேடுகள் அச்சிடும் பணி முடிக்கப்பட்டது.
அவை அனைத்தையும் சார்நிலை அலுவலர்களுக்கு விநியோகம் செய்ய
ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த சிற்றேடுகளின் வழங்கல், விற்பனை, கையி
ருப்பு, எதிர்காலத் தேவை முதலியவைகள் குறித்து ஒரு ஆய்வு செய்யப்
பட்டது.

புதுடில்லியிலுள்ள வேலைவாய்ப்பு-பயிற்சி தலைமை இயக்குநர், அவர்
களின் அறிவுரைகளின்படி "பாறை துளையிடுபவர்" "அம்மை குத்துபவர்"
போன்ற தொழில்களுக்கான தகவல்களை திருத்தி அமைக்கும் வேலை முடி
வுற்று அவைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

பேருந்து போக்குவரத்துத் துறையில் தொழில் தகவல் சேகரிக்கும் சிறப்பு
ஆய்வுத் திட்டம் முடிவுறும் நிலையிலிருக்கிறது.

தொழில் தகவல்-கல்வி பயிற்சி வசதிகள் பற்றிய திருத்தப்பட்ட விவரங்
களை மாநில அளவில் சேகரிக்கும் பணி 1979-80-ம் ஆண்டில் மேற்கொள்ளப்
படவிருக்கிறது.

**11. இயக்குநர் அலுவலகத்தில் பணியாளர் பயிற்சிப் பிரிவு.**

வேலை வாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தில் வேலை
வாய்ப்புப் பிரிவில் இயங்கிவரும் பணியாளர் பயிற்சிப் பிரிவு, பணியாளர்
களுக்கு வேலை வாய்ப்பகக் கொள்கைகளில் வேலைப் பணி விதிமுறைகள்

[1979 ஏப்ரல் 23

சம்பந்தப்பட்ட பயிற்சி அளித்தல், பொது அலுவலக நடைமுறைகளில் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளை ஆற்றி வருகிறது. பணியாளர் பயிற்சி வகுப்புகளில் அலுவலர்களால் தேசிய வேலைவாய்ப்பு பணி சம்பந்தப்பட்ட பொருள்கள் பற்றியும், நடைமுறை விதிகள் பற்றியும் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன.

அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கால அளவில் பணியாளர் பயிற்சிப் பிரிவால் 2 பணியாளர் பயிற்சி வகுப்புகள் நிர்வாகப் பணியாளர்களுக்காக நடத்தப்பட்டது. இப்பயிற்சியின் மூலம் 22 நிர்வாகப் பணியாளர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

### 12. துறையின் வேலை வாய்ப்புப் பிரிவில் ஆய்வுப் பிரிவு.

வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தின் வேலை வாய்ப்பு பிரிவில் சார்நிலை அலுவலகங்களை வருடாந்திர ஆய்வு செய்யும் பணியினை கவனிக்க ஒரு தனி ஆய்வுப் பிரிவு இயங்கி 20—6—1969 முதல் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு இயக்குநரின் ஒப்புதலோடு மாநிலத்திலுள்ள சார்நிலை அலுவலகங்கள் அனைத்திலும் ஆண்டு ஆய்வுகள் நடத்த திட்டங்களை வகுக்கின்றது. வகுக்கப்பட்ட திட்டத்திற்கிணங்க துறையின் சார்நிலை அலுவலகங்களான கீழ்க்காணும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இந்த இயக்குநர் அலுவலகத்தின் அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், தஞ்சாவூர், உதகமண்டலம், சேலம், கோவை, மதுரை. | இணை இயக்குநர் (வேலை வாய்ப்பு). |
| 2 | மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், இராமநாதபுரம், நாகர்கோயில் கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை (தொழில் நுட்பப்பணி), சென்னை-35, பல்கலைக்கழக வேலை வாய்ப்பு தகவல் வழிகாட்டும் நிலையம், மதுரை, துணை வேலை வாய்ப்பு அலுவலகம், தூத்துக்குடி, ஈரோடு, திண்டுக்கல், அம்பத்தூர், காஞ்சிபுரம். | துணை இயக்குநர் (வேலை வாய்ப்பு) |
| 3 | துணை வேலை வாய்ப்பு அலுவலகம், நாகப்பட்டிணம். | உதவி இயக்குநர் (வே. தொ. அ.) |



979 ஏப்ரல் 23]

மேற்கண்ட ஆய்வுகளை நிறைவுறச் செய்ய உதவும் பொருட்டு இவ்வலு லக ஆய்வுப் பிரிவைச் சார்ந்த பணியாளர்கள் உரிய சார்நிலை அலுவலகங் ளில் பூர்வாங்க ஆய்வு அறிக்கைக் குறிப்புகளைத் தயார் செய்துள்ளனர். விரவும் ஆய்வு செய்து முடிக்கப்பட்ட அறிக்கைகள் மீது சார்நிலை அலுவலர் ள் சமர்ப்பிக்கும் இணக்க அறிக்கைகளை ஆராய்ந்து மேல் நடவடிக்கைக் ான பணியும் கவனிக்கப்பட்டது.

மேலும், இப்பிரிவு, தொடர்-நடவடிக்கையாக 1979-80-ம் ஆண்டிலும் சார் லை அலுவலகங்களை ஆய்வு செய்யவும், அவ்வாய்வு அறிக்கைகளின் மீதான ணக்க அறிக்கைகளைப் பரிசீலிக்கவும் தொடர்ந்து பணியாற்றும்.

### 13. துறையின் வேலை வாய்ப்புப் பிரிவில் வேலை வாய்ப்பு தொடர்பு அலுவலகத்தின் பணிகள்.

இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த வேலை வாய்ப்பு தொடர்பு அலுவ கப் பிரிவு, பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளின் மறுவாழ்வுக்காக செயல்பட்டு ருகிறது. ஸ்ரீலங்கா அகதிகளின் மறுவாழ்வுக்காக மண்டபத்தில் துணை 'வலைவாய்ப்பகம் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்த அகதிகளின் மறு ாழ்வுக்காக இராமநாதபுரத்தில் மத்திய அரசின் வேலைவாய்ப்பு நிலையம் ன்று செயல்பட்டு வருகிறது.

ஆய்வுக் காலத்தில் வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு தொடர் ாக புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும் விவரமும். | அகதிகள். | |
|---|---|---|
| | பர்மா. | ஸ்ரீலங்கா. |
| (1) | (2) | (3) |
| 1 வேலை வாய்ப்பிற்காகப் பதிவு செய்யப்பட்டவர்கள். | 933 | 3,879 |
| 2 வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டவர்கள். | 180 | 178 |
| 3 வேலை வாய்ப்பிற்காக உயிர் பதிவேட்டில் எஞ்சியுள்ளவர்களின் எண்ணிக்கை (30-11-78 அன்றைய நிலவரப்படி). | 2,534 | 11,828 |

கீழ்க்கண்ட முக்கிய நடவடிக்கைகள் இப்பிரிவால் மேற்கொள்ளப்பட்டன:—

1. 203 அகதிகள் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கைவினைப் பயிற்சி பெற சேர்க்கப்பட்டனர்.

2. 44 அகதிகள் திருச்சியிலும், கும்மிடிபூண்டியிலும் உள்ள முன்மாதிரி கைவினைப் பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டனர். இந்தப் பயிற்சியை முடித்ததும் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டனர்.

3. ஆகஸ்டு 1978 முதல் தொடங்கிய கும்மிடிபூண்டியிலுள்ள கனரக மோட்டார் ஓட்டுநர் பயிற்சியில் 110 ஸ்ரீலங்கா அகதிகளும், 44 பர்மா அகதிகளும் சேர்க்கப்பட்டனர்.

4. இரண்டு பெண் அகதிகள் தையல் பயிற்சிக்கு வேலூரிலுள்ள அரசு உள்ளாடைகள் தயாரிப்பு பயிற்சிப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

5. ஒரு பர்மா அகதி கடல்தொழில் பயிற்சிக்கு 'பத்திரா பயிற்சிக் கப்பலில்' சேர்க்கப்பட்டுள்ளார்.

6. அகதிகளுக்காக ஒதுக்கப்பட்ட 6 இடங்களுக்காக மண்டபம், கடலூர், நாகப்பட்டினம், கொளச்சல் ஆகிய இடங்களிலுள்ள மீனவர் பயிற்சி நிலையங்களில் அகதிகளைச் சேர்க்க ஆவன செய்யப்பட்டது.

7. 1977-ம் ஆண்டு தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளியில் சேர்க்கப்பட்டு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் பயிற்சியில் சேரமுடியாமற்போன ஒரு இலங்கை அகதியின் மனு கும்மிடிப்பூண்டி மாவட்டத் துணை ஆட்சித் தலைவருக்கு (தனி) முன் மாதிரி கைவினைப் பயிற்சியில் சேர்த்துக்கொள்ள அனுப்பப்பட்டது.

8. தகுதியான தினசரிகளில் வெளியான கீழ்க்கண்ட வேலைவாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்தும்படி எல்லா வேலை வாய்ப்பு அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர் :—

(1) இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் லிமிட்டெட், ஹைதராபாத்.

(2) பாரத கனரக மின்சார நிறுவனம், திருச்சி.

(3) மருத்துவ பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்காக இயக்குநர் மறுவாழ்வு இயக்ககம், சென்னை-5.

(4) மூன்று வருட டிப்ளமா பயிற்சிக்காக சென்னை-20, அடையாறிலுள்ள சமையல்கலை செயல் ஊட்டச் சத்துணவுப் பயிற்சி, ஓட்டல் நிர்வா



(5) தமிழ்நாடு தேயிலைத் தோட்ட கார்ப்பரேஷன், குன்னூர், ஓட்டுநர் வேலைக்கான பதினொரு காலியிடங்களுக்காக.

(6) நர்ஸ் பயிற்சிக்காக நர்ஸ் மாணவிகள் தேர்வுக் குழுவிற்கு.

9. மறுவாழ்வுத் துறை இயக்குநரின் ஆணைப்படி தேசிய தொழிற்சாலை திரட்டில் வைத்துள்ள 313 அகதிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்று கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டது :—

(1) சேர்மன், நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷன்.

(2) கூடுதல் செயலர் (நிர்வாகம்), இரயில்வே துறை, புதுடெல்லி.

(3) நிர்வாக இயக்குநர், அகதிகள் கூட்டுறவு நிதி, முன்னேற்ற வங்கி, சென்னை-4.

10. இரண்டு அகதிகள் ஓட்டுநர் பணிக்காகவும், நான்கு அகதிகள் துப்பரவு உதவியாளர்கள், வாசனைப் பொருட்களின் பராமரிப்பு பணிக்காகவும், உதவி நிர்வாக அலுவலர், சென்னை அணுசக்தி நிறுவனம், கல்பாக்கம் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியிலமர்த்தப்பட்டனர்.

11. மூன்று அகதிகள் களைக்காளர் பணிக்காக புனலூர் மறுவாழ்வு தோட்ட நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டனர்.

12. அகதிகளிடமிருந்து வேலை பயிற்சியில் சேருதல் வேண்டி பெறப்பட்ட மனுக்கள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்குத் தேவையான பரிந்துரைகள் செய்யப்பட்டு அனுப்பப்பட்டன.

13. உடல் ஊனமுற்றோர்க்கான மாநில வாரியம்.

(i) புள்ளி விவரங்கள்—

ஏப்ரல் 1978 முதல் நவம்பர் 1978 உடன் முடிவடைந்த காலப்பகுதியில் உள்ள உடல் ஊனமுற்றோர்க்கான வாரியத்தின் முக்கிய பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. வேலையில் அமர்த்தப்பட்ட உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை (பார்வையற்றோர்—4, காது கேளாதோர்—17, மற்றும் உறுப்பு குறைந்தோர் 279)—300.

2. தொழில் பழகும் பயிற்சியில் சேர்க்கப்பட்ட உடல் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை—23.

3. அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சிக்கு அமர்த்தப்பட்ட உடல் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை—141.

4. செயற்கை உறுப்பு மற்றும் இதர கருவிகள் வாங்கும் பொருட்டு நிதி உதவி வழங்கப்பட்ட உடல் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை—33.

5. புத்தகம் கட்டும் பயிற்சிப் பிரிவில் அமர்த்தப்பட்ட உடல் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை—23 .

6. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலையில் ஈடுபடும் பொருட்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனுதவி பெற உதவி செய்யப்பட்ட ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை—82.

7. நிதி உதவி வழங்கும் பொருட்டு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட வேண்டி ஊனமுற்றோர்க்கான நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு மாநில அரசுக்கு அனுப்பிய விண்ணப்பங்கள் எண்ணிக்கை—3.

(ii) ஏனைய இனங்கள்—

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் 1978 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் நாள் அன்று ஊனமுற்றோர் மாநில வாரியத்தின் நான்காவது கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில முக்கியமான தீர்மானங்கள் பின்வருமாறு:—

(a) வாரியத்திற்கு நிதி திரட்டுவது.

(b) ஊனமுற்றோர் மறு வாழ்வுக்காக காலவரையறைக்குட்பட்ட நிபுணர் குழு நிறுவுதல்.

(c) காது கேட்கும் கருவி, சக்கர நாற்காலிகள் மற்றும் இதர கருவிகளை மிகவும் ஏழ்மையான தகுதி வாய்ந்த ஊனமுற்றோருக்கு வழங்கல்.

(d) இந்துஸ்தான் வர்த்தக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட தனியார் நிறுவனங்களை அணுகி அவர்களால் முடிந்த வரையில் எத்தனை அதிகமான ஊனமுற்ற நபர்களை வேலையில் அமர்த்த முடியுமோ அத்தனை ஊனமுற்றோர்களை வேலையில் அமர்த்தத் தூண்டுதல்.

2. வாரியத்தின் துணைக் குழுக் கூட்டம் 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் நாள் மற்றும் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் நாள் ஆகிய இரு நாட்களில் கூட்டப்பட்டு, ஊனமுற்றோர்க்கான நிலையங்கள் மற்றும் ஊனமுற்ற மனுதாரர்களுக்கும் நிதி உதவி வழங்க சிபாரிசு செய்தது.

(a) நிதி உதவி வழங்க சிபாரிசு செய்யப்பட்ட ஊனமுற்றோர்க்கான நிலையங்களின் எண்ணிக்கை—5.

(b) சுய வேலை அல்லது செயற்கைக் கருவிகள் வாங்கும் பொருட்டு நிதி உதவி வழங்க சிபாரிசு செய்யப்பட்ட ஊனமுற்ற மனுதாரர்களின் எண்ணிக்கை—22.





3. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அரிமா சங்கம் சுழற் சங்கம் வட்ட மேஜைப் பிரதிநிதிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி எல்லா மாநில வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் பதிவு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த ஊனமுற்றோர்களின் விபரங்கள் அடங்கிய ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டு ஊனமுற்றோர்கள் தங்கள் நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளும்படி வேண்டுகோளுடன் அரிமா சங்கங்கள் சுழற் சங்கங்கள் வட்ட மேஜை தலைவர்களுக்கு அனுப்பப்பட்டது.

4. பார்வையற்றோர், காது கேளாதோர், ஊனமுற்றோர், மன நோய் வாய்ப்பட்டோர் மற்றும் தொழுநோயிலிருந்து குணமடைந்தோர் ஆகிய பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் மிகச் சிறந்த ஆசிரியருக்கு தனித்தனி விருதுகள் வழங்கும் கருத்து அரசுக்கு அனுப்பட்டது.

5. எல்லா மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் பதிவு செய்திருக்கும் தகுதி வாய்ந்த ஊனமுற்றோர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஒரு விரிவான பட்டியல் தயாரிக்கப்பட்டு, ஊனமுற்ற மனுதாரர்களை தங்கள் நிறுவனங்களில் முடிந்தளவு வேலையில் அமர்த்தும்படி ஒரு வேண்டுகோளுடன் இந்துஸ்தான் தொழில் வர்த்தக நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது.

6. தமிழகத்திலுள்ள எல்லா அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் ஊனமுற்றோர்களுக்காக 3 சதவித இடங்கள் ஒதுக்கப்பட்டன.

7. அரசு அலுவலகங்களிலுள்ள நாற்காலிகளுக்கு பிரம்பு, பிளாஸ்டிக் இழை பின்னும் வேலைகள் அனைத்தும் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவு சங்கத்தினரிடமே ஒப்படைக்கப்பட வேண்டுமென்பதற்காக அரசு ஆணை பெறப்பட்டது.

8. தமிழ் நாட்டிலுள்ள ஊனமுற்றோர்க்கான நிறுவனம் பயிற்சி நிலையங்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஒரு புத்தகமாக 1978-ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

14. வேலை பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தனிக் குழுவும் அதன் வளர்ச்சியும்.—இப்பிரிவு பயிற்சியாளர் சட்டம், 1961-ன் கீழும் விரிவாக்கப்பட்ட பயிற்சியாளர் சட்டம், 1973-ன் கீழும் தொழில் பழகுநர் பயிற்சி தொழில் திட்டத்தை குறித்து முதன்மையாக பங்கு கொள்கிறது. பயிற்சியாளர் காலியிடங்களைப் பயிற்சிப் பிரிவுவகுத்து கிடைக்கப்பெற்ற விவரங்களை எல்லா மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கும், பயிற்சித் தொழிலில் அமர்த்துவதற்காக அனுப்பப்படுகிறது. இதனால் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கும் பழகுநர் பயிற்சி அறிவுரையாளர்களுக்குமிடையே ஒருங்கிணைப்பு உண்டானது. பயிற்சியாளர்கள் தொழிலில் அமர்த்திய புள்ளி விவரங்கள் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதி முடிய கீழே குறிக்கப்பட்டுள்ளது.

1. தொழில் பழகுவோர் சட்டம், 1961.

| காலப் பகுதி. | கண்டறிந்த பயிற்சியிடங்கள். | | |
|---|---|---|---|
| | அரசுத்துறை. | தனியார் துறை. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள். | 2,394 | 7,143 | 9,537 |
| 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் நாள். | 3,131 | 7,359 | 10,490 |

| காலப் பகுதி. | பயன்படுத்தப்பட்ட பயிற்சியிடங்கள், | | | |
|---|---|---|---|---|
| | அரசுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். | சதவீதம். |
| | (5) | (6) | (7) | (8) |
| 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் நாள். | 2,328 | 7,548 | 9,876 | 193·56 |
| 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் நாள். | 2,483 | 7,069 | 9,552 | 91·95 |

**15. மாநில இயக்குநர் அலுவலகத்திலுள்ள பொதுமக்கள் தொடர்பு விளம்பரப் பிரிவு.**—இத்துறையின் விளம்பர-பொதுமக்கள் தொடர்புப் பணிகுறித்த முக்கியக் கூறுகள் பின்வருமாறு :—

(1) மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், தஞ்சை பற்றி அகில இந்திய வானொலி திருச்சியில் 1978 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் நாள் இரவு 8 மணிக்கு தமிழில் ஒலி பரப்பப்பட்டது.

(2) "கிராமத்தில் தன்னிறைவும் வேலை வாய்ப்பும்" என்ற இணை இயக்குநரின் கலந்துரையாடல் 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் நாள் இரவு 9-15 மணிக்கு அகில இந்திய வானொலி நிலையத்தாரால் ஒலி பரப்பப்பட்டது.



(3) 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20-ந் தேதி முதல் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8-ந் தேதி வரை 11 நாட்களுக்கு திருக்கோகர்ணம் ஸ்ரீ கோகர்ணேஸ்வர பிரகதாம்பர் கோவில் ஆடி பூரம் விழாவையொட்டி நடந்த கண்காட்சியில் கலந்து கொள்ள புதுக்கோட்டை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

(4) திரு. ராமையா, உதவி இயக்குநர் (பொறுப்பு) மதுரை அவர்களின் உரை "வேலை இழந்தோருக்கு வேலை வாய்ப்பு ஆலோசனைகள்" என்னும் தலைப்பில் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ந் தேதி இரவு 9-15 மணிக்கு அகில இந்திய வானொலி, திருச்சியில் ஒலி பரப்பட்டது.

(5) தஞ்சாவூரில் வேளாங்கண்ணி மாதாகோவில் விழாவையொட்டி 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ந் தேதி முதல் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ந் தேதி வரை நடைபெற்ற கண்காட்சியில் உதவி இயக்குநர், தஞ்சாவூர், பங்கேற்கவும் கண்காட்சிக்கான செலவினங்களுக்காக ரூ. 400 வரை அனுமதியும் அளிக்கப்பட்டது.

(6) கேளுங்கள் சொல்கிறோம்—வேலைவாய்ப்புப் பிரச்சினைகள்" என்னும் தலைப்பில் இணை இயக்குநர் (வேலை வாய்ப்பு) அவர்களின் உரை அகில இந்திய வானொலி நிலையத்தாரால் சென்னை 'பி' அலையோசையில் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் தேதி அன்று ஒலிபரப்பப்பட்டது.

(7) "The unemployment question towards faller employment" என்றதலைப்பில் இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களில் உரை 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் தேதி இரவு 8-45 மணிக்கு அகில இந்திய வானொலி நிலையத்தாரால் 10 நிமிடம் ஒலிபரப்பப்பட்டது.

(8) பல்வேறு தொழில் அதிபர்களிடமிருந்து பெறப்பெற்ற காலியிடங்கள் பற்றிய அறிவிப்புகள், மாநிலத்திலுள்ள வேலை வாய்ப்பு அதிகாரிகளுக்கு உரியவாறு விளம்பரம் கொடுக்கப்பட்டன.

**16. வேலை காலியாக உள்ள இடங்களைக் கட்டாயமாகத் தெரிவிக்கும் சட்டம், 1959.**—வேலை காலியாக உள்ள இடங்களைக் கட்டாயமாகத் தெரிவிக்க வேண்டுமென்ற 1959 ஆம் ஆண்டு சட்டமும் அதன் கீழ் உள்ள விதிமுறைகளும் 1960 ஆம் ஆண்டில் மத்தியில் அமுலுக்கு வந்தன. 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதியன்று இச்சட்டத்தின் கீழ் மொத்தம் 11,654 நிறுவனங்கள் இருந்தன.

1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நவம்பர் 1978 முடிய தெரிவிக்கப்பட்ட காலியிடங்களும், நிரப்பப்பட்ட காலியிடங்களும் பின்வருமாறு :—

| | தெரிவிக்கப்பட்ட வேலை காலியிடங்கள். | நிரப்பப்பட்ட இடங்கள். |
|---|---|---|
| ஏப்ரல், 1978 முதல் நவம்பர், 1978 முடிய | 32,698. | 21,606 |

இச்சட்டத்தின் ஷரத்துக்களை மீறியதாக இதுவரை எந்த நிறுவனத்தின் மீதும் குற்றச்சாட்டு நடவடிக்கைகள் ஏதும் தொடரப்படவில்லை. சட்டத்தின் பல்வேறு ஷரத்துக்களைத் தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கென்று சட்டத்தை அமுலாக்கும் அமைப்பு ஒன்று தனியே இருப்பின் அது பயனளிக்கும்.

17. அய்ந்தாவது அய்ந்தாண்டுத் திட்டத்தின் வேலை வாய்ப்புப் பணித் திட்டம்.—அய்ந்தாவது அய்ந்தாண்டு திட்ட காலத்தில் (1978-79-ம் ஆண்டு முடிய) கீழ்க்காணும் திட்டங்களுக்கான அரசு அனுமதி வழங்கப்பட்டு அவைகள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

(1) மாவட்டங்கள் 1959-ம் ஆண்டு வேலை வாய்ப்பகங்களின் (கண்டிப்பாக காலியிடங்களை அறிவித்தல்) சட்டத்தை செயற்படுத்துவதற்காக பணியாளர் அமைப்பு.

(2) மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலும், பதிவு பேட்டியாளர்களை நியமித்தலும்

(3) மாவட்டங்களில் துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்.

(4) பெரிய மாவட்டங்களில் ஆறு மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரிகள் பதவிகளை உதவி இயக்குநர்களாக உயர்த்துதல்.

(5) தொழில் நுட்ப வகைகள் தவிர ஏனையவற்றைக் கவனிப்பதற்கு சென்னை நகரத்தில் ஒரு வேலை வாய்ப்பு அலுவலகம் அமைத்தல்.

(6) மாநில இயக்கத்தில் பொது மக்கள் தொடர்பு-விளம்பரப் பிரிவு அமைத்தல்.

(7) வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 32 இளநிலை உதவியாளர்கள் பதவிகளை உதவியாளர்களாக உயர்த்துதல்.



(8) மாவட்டங்களில் இருக்கின்ற வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவுகளை ஆற்றல் படுத்தல்.

(9) சங்கராபுரம், ஆலங்காயம் ஆகிய இடங்களில் துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களும் ஆய்வுப் பிரிவும் அடங்கிய அமைப்பை மலை சாதியினருக்காக நிறுவுதல்.

(10) திருச்சி மாவட்டத்திலுள்ள கரூரில் ஓர் துணை வேலை வாய்ப்பகம் நிறுவுதல்.

(11) வேலைவாய்ப்புத் துணை இயக்குநர் பதவியைக்கூட்டி மாநில இயக்கத்தை ஆற்றல்படுத்துதல்.

(12) திருச்சி, சேலம் மாவட்டங்களில் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலை வாய்ப்பகம் நிறுவுதல்.

18. ஏனைய முக்கிய இனங்கள்.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ( Overseas Manpower Corporation Limited ) (தமிழக அரசைச் சார்ந்தது) 1956-ம் ஆண்டின் வணிக நிறுவனச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ந் தேதி அன்று ஒருங்கிணைக்கப்பட்டது. இந்நிறுவனம் பங்கிற்கு ரூ. 1,000 வீதம் 5,000 சம பங்குடன் கூடிய ரூ. 50 லட்சத்தை அங்கீகரிக்கப்பட்ட மூலதனப் பங்காக கொண்டுள்ளது. தொடக்கத்தில் செலுத்தப்பட்ட மூலதனப்பங்கு ரூ. 5,00,000. முதலில் உருவாக்கப்பட்ட இந்நிறுவன வாரிய இயக்குநர்கள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | திரு. சி. இராமச்சந்திரன். ஐ. ஏ. எஸ்.<br>அரசுச் செயலர்,<br>தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறை | தலைவர். |
| 2 | திரு. ஏ. எம். சுவாமிநாதன், ஐ. ஏ. எஸ்.<br>அரசு இணைச் செயலர்,<br>நிதித் துறை. | இயக்குநர். |
| 3 | திருமதி லத்திகா டி. படால்கர், ஐ.ஏ.எஸ்.<br>இயக்குநர்,<br>வேலை வாய்ப்பு-பயிற்சித் துறை,<br>சென்னை-5. | இயக்குநர். |
| 4 | திரு. அ. உமாமஹேஸ்வரன், பி. காம். (ஹானர்ஸ்).<br>இணை இயக்குநர் (வேலை வாய்ப்பு). | நிர்வாக இயக்குநர். |

அனுபவம் பெற்று, வெளிநாடுகளில் வேலை தேடக்கூடியவர்கள் குறித்த விபரங்களுடன் புள்ளி விவரத் தொகுப்பு ஒன்றை இக்கழகம் அமைத்துள்ளது. மையக் கிழக்கு நாடுகளிலுள்ள தொழிலதிபர்களுடன் இது குறித்து இக்கழகம் தொடர்பு கொண்டுள்ளது.

### 19. இத்துறையின் வருங்காலத் திட்டங்கள்.

1. பார்வையற்றோருக்காகப் பணிப்பட்டறை/கூட்டுறவு நெசவு நிலையம் நிறுவுவதற்கு அரசு ஆணை வழங்க பரிசீலனையில் உள்ளது. இப்பிரிவு துவங்கும் போது 120 பார்வையிழந்தோருக்கு ஆண்டுக்கு 60 பார்வையிழந்தோர்களுடன் நெய்வதற்காக பயிற்சி அளிக்க வகை செய்யப்படும். இப்பயிற்சிக் காலத்திற்கு பின், பயிற்சி பெற்ற 120 பார்வையற்றோர்களை உறுப்பினராகக் கொண்டு ஒரு கூட்டுறவு சங்கம், இயக்குநர், கைத்தறி-ஆடைகள் மேற்பார்வையின்கீழ் அமைக்கப்படும். ஊனமுற்றோரின் மாநில வாரியத்திலுள்ள நிதியிலிருந்து இலவச மானியமாக பார்வையிழந்த 120 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அந்த மொத்தத் தொகையாகிரி ரூ. 12,000-தை மூலதனமாகக் கொண்டு இக்கூட்டுறவு சங்கம் செயல்படும்.

2. கிராமப்புற மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், மாவட்ட வேலைவாய்ப்பகங்களின் பளுவைக் குறைக்கும் பொருட்டும், வேலைவாய்ப்பகங்களின் பணிகளைச் செவ்வனே செய்யும் பொருட்டும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடியிலும் மற்றும் தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓசூரிலும் முறையே ஒவ்வொரு துணை வேலைவாய்ப்பகங்களைத் துவக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

3. ஒதுக்கப்பட்ட பிரிவினர்களால் ஒதுக்கப்பட்ட காலியிடங்களை நிரப்பப்படுவதை கவனிக்கும் பொருட்டும், தாழ்த்தப்பட்டோர்/மலைச் சாதியினர்க்கு பல்வேறு மறுவாழ்வுத் திட்டங்களைச் செயற்படுத்தும் பொருட்டும் மாநில இயக்கத்தில் 1979-80 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர்/மலைச் சாதியினருக்கான சிறப்பு பிரிவு துவக்கப்பட அரசு பரிசீலனையில் உள்ளது.

### கைவினைஞர் பயிற்சித் திட்டம்.

### தொழில் பயிற்சி நிறுவனங்கள்.

விரைவான தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான முன்தேவை பயிற்சி பெற்ற தொழில் நுட்ப பணியாளர்களாகும். தொழில் வளர்ச்சி அடைவதற்கு தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கைவினைஞர்களை உருவாக்குவதற்கு இந்தியாவின் பல பகுதிகளிலும், முதலாம் ஐந்தாண்டுத் திட்டகாலம் முதல் கொண்டு மூன்றாம் ஐந்தாண்டு திட்டகால முடிவு வரை தொழிற்பயிற்சி



நிறுவனங்கள் நிறுவப்பட்டன. பயிற்சியை செம்மையாக அளிப்பதற்கு இந்த தொழிற் பயிற்சி நிலையங்களில் பணிமனை சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன. பயிற்சித் திட்டத்திற்கு இந்த தொழிற் பயிற்சி நிலையங்கள் நாட்டின் முதுகெலும்பாக உள்ளன. ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையமும் முதல்வரின் பொறுப்பில் இயங்குகின்றன. மாநில அளவில் எல்லா தொழிற் பயிற்சி நிலையங்களும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்குகின்றன.

கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன :—

1. தொழிற் பயிற்சி நிலையங்களில் நிறுவனப்பயிற்சி.

2. 1961 ஆம் ஆண்டு வேலைபழகுநர் சட்டத்தின்கீழ் வேலை பழகும் பயிற்சி.

3. தொழிற்சாலை ஊழியர்களுக்காக மாலைநேர வகுப்புகள்.

4. தொழிற் பள்ளிகளுக்கான முறைப்படுத்துதல் விதித் தொகுப்பின்கீழ் மாநில உதவி பெறும் தனியார் தொழிற்பள்ளிகளில் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

5. வேலையிழந்த பொற்கொல்லர்கள், மாதிரி அமைப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் (பகுதிநேரம்) ஆகியோருக்காக குறிப்பிட்ட தொழில்களில் பயிற்சி.

6. உயர்நிலைத் தொழிற் பயிற்சிப் பாடப் பிரிவு.

### தொழிற்பயிற்சி நிலையங்கள்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் ஆண்-பெண் இருபாலரும் பயிலத்தக்க முப்பத்தோரு தொழிற்பயிற்சி நிறுவனங்களும், பெண்களுக்கென ஒன்றும் இயங்கி வருகின்றன. இந்நிலையங்களில் 12,731 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 29 பொறி இயல் பிரிவுகளிலும், 6 பொறி இயல் அல்லாத பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இதில் 16 தொழிற் பயிற்சின்கால அளவு ஓராண்டாகவும், 19 தொழிற் பயிற்சியின் கால அளவு ஈராண்டாகவும் உள்ளது. நிலைய பயிற்சியின் இறுதியில் அகில இந்தியத் தொழில் தேர்வில் மாணவர்கள் கலந்து கொள்ளுகின்றனர். இதில் வெற்றி பெற்றவர்களுக்கு தேசிய தொழில் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டிலும் பயிற்சியாளர்கள் சேர்க்கையில் தகுதி அடிப்படையிலான வகுப்புவாரி ஒதுக்கீடு மிகக் கவனத்துடன் கடைப்பிடிக்கப்பட்டு வரு

கின்றது. வகுப்பு வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய புள்ளி விவரங்களும் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அனுமதிக்கப்பட்ட பயிற்சியாளர்களின் புள்ளி விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன :—

| | ஒதுக்கீடு சதவீதம். | பயிற்சியில் சேர்க்கப் பட்டவர்கள் சதவீதம். |
|---|---|---|
| அரிசன வகுப்பு .. | 18 | 19 |
| பிற்பட்ட வகுப்பினர் .. | 31 | 59 |
| அகதிகள் .. .. | 5 | 2·7 |

உடல் ஊனமுற்றோருக்கென தனியாக ஒதுக்கீடு இல்லையெனினும் பயிற்சிப் பெறத் தகுதியுடைய 141 மாணவர்கள் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இயந்திரக் கம்மியர் (பொது எலக்டிரானிக்) தொழிலில் பயிற்சி அளிப்பதற்காக 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் 16 பயிற்சியாளர்கள் கொண்ட தொழிற் பயிற்சி நிலையப்பகுதி ஒன்று அடையாறு மின் அணுத் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் காலம் ஈராண்டாகும். இப்பயிற்சி நிலையத்தின் மொத்த இடங்கள் 32 ஆகும்.

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியின் திறனைச் செம்மையாக்கவும், திறமையான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரவும் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் திருச்சி, மதுரை, கோயம்புத்தூரில் வட்டாரத் துணை இயக்குநர் அலுவலகங்கள் நிறுவப்பட்டன.

இம்மாநிலத்தில் தொழில் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரம் சிறப்பானதொன்றாகும். ஏற்கெனவே நடைபெற்ற 14 அனைத்திந்திய ஆண்டு திறனாய்வுப் போட்டிகளில் இம்மாநிலம் 7 போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. 1978 அக்டோபர் திங்களில் 15 ஆவது அனைத்திந்திய ஆண்டு திறனாய்வுப் போட்டி நடைபெற்றது. நமது பயிற்சியாளர்கள் 9 பயிற்சிப் பிரிவுகளில் இதில் பங்கேற்றனர். இப்போட்டியின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

1978-79 ஆம் ஆண்டில் தொழில்களைப் பல திறப்படுத்துதல் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூரிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் 32 இடங்களுடன் கம்மியர் (குளிர்ப்பதனம் மற்றும் தட்பவெப்ப நிலையைக் கட்டுப்படுத்துதல்) பயிற்சிப் பிரிவொன்று துவக்கப்பட்டுள்ளது. 1—8—1978 ஆம் ஆண்டு முதல் ஏற்கெனவே குறைக்கப்பட்ட இடங்களில் பொருத்துநர், கம்மியாள், பற்றவைப்போர் ஆகிய பிரிவுகளில் 500 இடங்கள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



விரைவாக மாறிவரும் தொழில் நுணுக்கப் பயிற்சியுடன் தொடர்ந்து செல்ல மத்திய அரசின்கீழ் இயங்குகின்ற பல்வேறு பட்ட பயிற்சி நிறுவனங்களுக்கு நீண்ட, குறுகியகால மறு பயிற்சி பெற பயிற்றுநர்கள் அனுப்பப்படுகின்றனர். இவற்றின் குறிப்பிடத்தக்கன : (1) கிண்டி, பம்பாய், லுதியானா, ஐதராபாத் முதலிய இடங்களில் உள்ள மத்திய பயிற்சி நிலையங்கள்; (2) பெங்களூரிலுள்ள முந்நிலை போதகருக்கான பயிற்சி நிலையம்; (3) கல்கத்தாவிலுள்ள மத்திய பணியாளருக்கான ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கூடம். இவ்வாண்டு பல்வேறு மத்திய பயிற்சி நிலையங்களில் 25 பயிற்றுநர்கள் ஓராண்டு பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் குறுகியகால மறு பயிற்சிக்காக பயிற்றுநர்கள் அனுப்பப்படுகின்றனர்.

## 2. 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டம்.

தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்ய கைவினைத் தொழிலில் போதிய அளவுக்குப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு தேசிய நிலையில் அவரது மொத்தத் திறமையை வளர்ப்பதும், இந்தியா முழுவதும் ஒரே சீரான பயிற்சி வசதியை முறைப் படுத்திச் செயல்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமும், குறிக்கோளும் ஆகும். பயில்வோருக்கு பயிற்சிக்கல்வி அளிப்பதற்காக புதிய நபர்களையோ அல்லது தொழிற் பயிற்சி நிலையங்களில் தேறிய பயிற்சியாளர்களையோ தேர்ந்தெடுக்க தொழில் அதிபர்களுக்கு முழு உரிமை உண்டு. தொழிற் பயிற்சி நிலையங்களில் அடிப்படைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. இதைப் போலவே இத்தகைய வசதிகள் இல்லாத சிறு நிறுவனங்களில் நேரடியாகச் சேர்த்துக் கொள்ளப்படும், தொழில் பழகுவோருக்கு அடிப்படைப் பயிற்சியையும் அரசு அளித்து வருகின்றது. செய்முறைப் பயிற்சியை தொழிற்சாலையே அளித்து வருகின்றது.

தற்சமயம், 216 தொழிற்சாலைகளையும் தொழில் பழகுவோருக்காக 103 தொழில்களையும் இச்சட்டம் கொண்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 9,552 வேலை பழகுவோர் தனியார் மற்றும் மாநில அரசுதுறை நிறுவனங்களில் பயிற்சி பெற்றுவருகின்றனர். எல்லா வேலை பயில்வோருக்கும் வேலை பயிற்சியின் ஆண்டு கணக்கிற்கொப்ப ரூ. 130 முதல் ரூ. 200 வரை மாதப் பயிற்சி உதவித் தொகையாக அந்தந்த நிறுவனங்களே அளித்து வருகின்றன.

3. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள்.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, தொழிற் துறை அறிவு முன்னேற்றத்திற்கு வசதிகளை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளுமாகும். இதனால் அவர்கள் கூடுதல் பதவி உயர்வுகளைப் பெற வாய்ப்புண்டு. ஆகையால் தொழிற்சாலைகள் அதிகமாய் இருக்கக்கூடிய இடங்களில் இத்திட்டம் தொழிற்பயிற்சி நிலையங்களின் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது. அதன்படி கிண்டி, வட சென்னை, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூரில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்கள் 1,050 ஆகும்.

4. உதவிபெறும் தனியார் தொழிற்பள்ளிகள்.

தற்சமயம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையினால் வரையறுக்கப்பட்ட தொழிற்பள்ளிகளின் விதிமுறைக் கொள்கைகளின்கீழ் அங்கீகாரம் அளிக்கப்பட்ட 71 தனியார் தொழிற்பள்ளிகள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்தப் பள்ளிகள் தச்சுத் தொழில், கருமாரத் தொழில், பொருத்துபவர், பற்ற வைப்பவர், பின்னல்வேலை, பூவேலை, துணிவெட்டுதல்--தைத்தல் முதலிய பயிற்சிகளை அளிக்கின்றன. இந்தப் பள்ளிகளில் ஏறக்குறைய 5,000 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். அங்கீகரிக்கப்பட்ட எல்லா தனியார் நிறுவனங்களிலும், பயிற்சியின் தரத்தை முறைப்படுத்த பொதுவான பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டு, எல்லா தொழிற்பள்ளிகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1975 ஆம் ஆண்டு ஜூனிலிருந்து பொதுவான இறுதி ஆண்டுத் தேர்வு நடத்தப்பட்டு வருகின்றது. தொழிற்பள்ளிகளுக்கான விதிமுறைக் - கொள்கைகளின் விதித்துறைகளின்படி மானியம் பெற இப்பள்ளிகள் தகுதி பெறுகின்றன.

5. சிறப்புத் திட்டங்கள்.

வேலை இழந்த பொற்கொல்லர்கள், யாதிரி அமைப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் (பகுதி நேரம்) ஆகியவர்களுக்குப் பொருத்தமான வேலையைப் பெறுவதற்கான சில தொழில் நுட்பப் பயிற்சிகளை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளுமாகும். சேலம், திருச்சி, பேட்டை, மதுரை ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு கருமார் தொழில், பொருத்துபவர், செப்பு மற்றும் தகர வேலைப்பாடு ஆகிய இரட்டைத் தொழில்களில் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூபாய் 10 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை 160 ஆகும்.



6. உயர்நிலை தொழில் பயிற்சிப் பாடப் பிரிவு.

நுண்ணிய கருவிகள் மற்றும் புதிய தளவாடங்கள் உபயோகிப்பதில் அடைந்துவரும் வளர்ச்சி மற்றும் தொழிலியலில் அடைந்துவரும் மாற்றத்தைக் கருத்தில் கொண்டு, ஐக்கிய நாடுகள் முன்னேற்றத் திட்டம்/அகில உலகத் தொழிலாளர் நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் அம்பத்தூரிலுள்ள அரசினர் தொழில் பயிற்சி நிலையத்தில் உயர்நிலைத் தொழிற் பயிற்சிப் பாடப் பிரிவு ஒன்றும் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இந்தியத் தர நிர்ணயம் மற்றும் பொறியியல் வரைப் படங்களைப் படித்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை பல்வேறு நிறுவனங்களிலிருந்து பயிற்சிக்கென அனுப்பப்பட்ட 112 தொழிலாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். கூடிய விரைவில் பற்றவைப்போர், கம்மியர் மற்றும் மின்சாரப் பராமரிப்பு கருவிகள் செய்வோர் அச்சு வார்ப்பவர் போன்ற மூன்று தொழிற் பிரிவுகளில் உயர்நிலைப் பயிற்சி திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளன.

கிராமப் பகுதிகளிலிருந்து சமுதாயத்தில் மிக வறிய நிலையிலுள்ள மக்களின் நலனுக்காக கூடுதல் வேலை வாய்ப்பை அளிக்கும் நோக்கத்துடனும் சுய வேலை வாய்ப்பிற்கு வகை செய்து கொடுக்கும் நோக்கத்துடனும் கிராமப்புற கலைஞர்களுக்கு தாராபுரம், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களின் மூலம், குழாய் வேலை, மின்சார மோட்டார்கள் ரிவைண்டிங் செய்தல், வேளாண் கருவிகளைப் பழுது பார்த்தல் ஆகிய தொழில்களில் குறுகிய காலப் பயிற்சி வகுப்பு (பகுதி நேரம்) தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த கிராமக் கைவினைஞர் பயிற்சித் திட்டம் கொண்டு வரப்பட்டதனால், அவர்களிடம் மறைந்து கிடக்கும் திறன்கள் மேம்படுத்தப்பட்டு கிராமப் பகுதிகளில் உள்ளவர்களுக்குப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராமப் பகுதிகளில் ஆதாயம் தரத்தக்க வகையில் பயன்படுத்த தக்க திறமைகளை அவர்களுக்கு எடுத்து விளக்குவதன் மூலம் கிராம மக்கள் பெருமளவில் பயனடையச் செய்வதற்கு இந்தக் கிராமப் பயிற்சித் திட்டத்தை நீட்டிக்கவும் கருதப்பட்டுள்ளது.

## ஆய்வுரை.

கோரிக்கை 57 : பல்வகை மூலதனச் செலவு—495 A—ஏனைய சமூக சமுதாயப் பணிகள் குறித்த மூலதனச் செலவு—a.b வேலை வாய்ப்பு.

கைவினைஞர் பயிற்சித் திட்டம்—தொடர்பான மூலதனச் செலவு குறித்து மானியக் கோரிக்கை "மானியக் கோரிக்கை 57—பல்வகை—மூலதனச் செலவு" என்ற தலைப்பின்கீழ் காட்டப்பட்டுள்ளது.

கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் கீழ்க்காணும் துணைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 1979-80 ஆம் ஆண்டு மாநில வரவு-செலவுத் திட்டத்தின் பகுதி 1-ல் ரூபாய் 7,97,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இனங்களுக்கான செலவிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

(i) சிறப்பு திட்டத்தின்கீழ் (பகுதி நேரம்) கருவி—தளவாடங்கள் வாங்குதல்.

வேலை இழந்த பொற்கொல்லர்களுக்கும், மாதிரி அமைப்புச் செய்பவர்களுக்கும், கைத்தறி நெசவாளர்களுக்கும் உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், சேலம், திருச்சி, பேட்டை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்குடன், கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்காக இந்நிதியாண்டில் ரூபாய் 1,000 அடையாள நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இச்செலவினம் திட்டத்தில் சேராத பணிகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ii) தொழில் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் விடுதிக் கட்டிடம் கட்டுதல்.

இம்மாநிலத்திலுள்ள 24 தொழிற் பயிற்சி நிலையங்களில் நிலையான மாணவர் விடுதிக் கட்டிடங்கள் உள்ளன. இந்த மாணவர் விடுதிகளில் உள்ள உணவு அறைகளில் பெஞ்சுகள் மற்றும் பல்வகை வசதிகளைப் பெருக்கும் செலவினங்களுக்காக ரூபாய் 13,000 நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(iii) நிலம் வாங்குதல் மற்றும் கட்டுமானம் (சாட்டியச் செலவு)

தொழிற் பயிற்சி நிலையங்கள் கட்டுவதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு உயரிய ஈட்டுத் தொகையை நிலச் சொந்தக்காரர்களுக்கு அளிக்க ரூபாய் 1,000 அடையாள நிதி ஒதுக்கீடு சாட்டியச் செலவு வகையில் வகை செய்யப்பட்டுள்ளது.

(iv) தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்

கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்காக 1979–80 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(v) தொழில்களைப் பல திறப்படுத்துதல்.

இத்திட்டத்தின்கீழ் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களாகக் கருதப்படுகின்ற நடைமுறையிலுள்ள தச்சர், அச்சு வார்ப்போர், கருமார் போன்ற தொழில் பிரிவுகள் முற்றிலுமாக நீக்கப்பட்டும் அல்லது இத்தொழில்



பிரிவுகளிலுள்ள இருக்கைகள் குறைக்கப்பட்டும் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களாகக் கருதப்படும் கம்மியர் (பொது மின் அணுவியல்) இயந்திரப் படவரைவாளர் மற்றும் கம்மியர் (குளிர்ப் பதனம் மற்றும் தட்ப வெட்ப நிலையைக் கட்டுப் படுத்துதல்) போன்ற புதிய தொழில் பிரிவுகள் துவக்கப்பட்டிருக்கின்றன. இதற்கான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்காக 1979-80 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மதிப்பீட்டில் ரூபாய் 2,11,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுமான வேலைக்கென ரூபாய் 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(vi) புதிய சாதனங்கள் வாங்குதல்.

மத்திய அரசினரால் பல்வேறு பட்ட தொழில் பிரிவுகளுக்கான கருவிகள் மற்றும் தளவாடங்கள் தரப் பட்டியலில் செய்யப்பட்டுள்ள திருத்தத்தின் விளைவாக கம்மியர் (மோட்டார் வாகனங்கள்), கம்மியர் (குளிர்ப் பதனம் மற்றும் தட்ப வெப்ப நிலையக் கட்டுப்படுத்துதல்), கம்மியர் (கருவிகள்) போன்ற தொழில்களுக்குக் கூடுதலாகக் கருவிகளும் தளவாடங்களும் வாங்கப்படவிருக்கின்றன. இவ்வகைக்கென 1979–80 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1,56,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(vii) தொழிற் பயிற்சி நிலையங்களை விரிவு படுத்துதல்.

உயர் மின் அழுத்தம், தொழிற்சாலைகளின் கட்டுமானம், பராமரிப்பு, தொழிற்கூட வகுப்பறைகள் கட்டுமானம் மற்றும் இதர பல்வகைப் பராமரிப்புப் பணிக்கென 31 தொழிற் பயிற்சி நிலையங்களின் தேவைகளின் அடிப்படையில் 1979–80 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 2,00,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கருவிகள் தளவாடங்கள் வாங்குவதற்கென ரூபாய் 5,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்கள் கட்டுவதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு உயரிய ஈட்டுத் தொகையை நிலச் சொந்தக்காரர்களுக்களிக்க 1979–80 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1,000 அடையாள நிதி ஒதுக்கம் சாட்டியச் செலவினத்தின்கீழ் செய்யப்பட்டுள்ளது.

(viii) கம்மியர் (பொது மின் அணுவியல்) பிரிவில் தொழிற் பயிற்சியளித்தல்.

அடையாறு தொழிற் பயிற்சிப் பகுதியில் புதிதாக துவக்கப்பட்ட கம்மியர் மற்றும் பொது மின் அணுவியல் பிரிவிற்கென தேவைப்படும் கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்காக 1979–80 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(ix) தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களை காலத்திற்கேற்ப மாற்றி அமைத்தல்:

ஏற்கனவே தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் தேவைக் கேற்ப, மேலும் நுணுக்கமும் புதுமையும் வாய்ந்த தொழிற் கல்வி வகுப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு முதல்படியாக அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத் தில் "இந்தியத் தர நிர்ணயம் மற்றும் பொறி இயல்" ஆய்வு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவ்வகுப்பின் பயிற்சிக் காலம் மூன்று முதல் நான்கு வாரங்களாகும். பல்வேறு தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்பட்ட 112 தொழிலாளர்கள் இதுவரை பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென இயந்திரங்கள் மற்றும் கட்டுமானத்திற்கென 1979—80 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 2,07,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

—

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

செவ்வாய்க்கிழமை, 1979 ஏப்ரல் 24.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்

விவசாயிகள் போராட்டம் சம்பந்தமாக அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் மற்றவர்களும் .. கைது ..செய்யப்பட்டது உடுமலைப்பேட்டையில் துப்பாக்கிச் சூடு; நெல்லை மாவட்டம் பணவடலி சத்திரத்தில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கொலை குறித்து..... .. .. .... .. .. ..

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உப்பினர்கள் திரு. ஆ. நல்லசிவன், திரு. வே. தங்கப்பாண்டியன், திரு. ஆற்காடு நா. வீராசாமி, திரு. க. இராமமூர்த்தி ஆகியோர் விவசாயிகள் போராட்டம் சம்பந்தமாக அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும், மற்றவர்களும் கைது செய்யப்பட்டது குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத் திருக்கிறார்கள்.

அடுத்து, திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள், கோயம்புத்தூர் மாவட்டத்தில், உடுமலைப்பேட்டையில் நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்து, திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள், நெல்லை மாவட்டத்தில் பணவடலிசத்திரம் என்ற இடத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்பட்டது குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக் கிறார்கள். இவை எல்லாவற்றையும் முறையாக ஒரே வழியாக எடுத்துக் கொள்கிறேன். இவை எப்படி ஒத்தி வைப்புத்

தீர்மான விதிகளுக்குட்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாயிகள் போராட்டம் சம்பந்தமாக 23 ஆம் தேதியன்று தமிழக அரசு ஆயிரக்கணக்கானவர்களைக் கைது செய்திருக்கிறது. வாகைக்குளம் துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து அர்த்தால் நடத்துவதென்று திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் கொடுத்த அறிக்கையின் பேரில் ஆயிரக்கணக்கானவர்களைக் கைது செய்திருக்கிறார்களென்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. நேற்று ஐந்தாறு இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து இரண்டு உயிர்கள் பலியாகிவிட்டதாக இன்று செய்திகள் வந்துள்ளன. இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டதற்குக் காரணம், பொதுவாக இந்த அரசாங்கத்தினுடைய அணுகுமுறை சரியில்லாததுதான் என்பது எங்கள் கட்சியின் கருத்து.

குறிப்பாக, ஆயிரக்கணக்கான விவசாயிகள் இந்தச் சம்பவங்களில் பங்குகொண்டதை நேற்று பார்த்தோம். சிறிய விவசாயிகளை திரு. நாராயணசாமி போன்ற பெரிய நிலச்சுவான்தார்கள் பயன்படுத்தி வருகிறார்கள். சிறு விவசாயிகளுடைய பிரச்சினைகளை, திரு. நாராயணசாமி போன்ற பெரிய நிலச்சுவான்கள் பயன்படுத்தி வருகிறார்கள். சிறு விவசாயிகளுடைய பிரச்சினைகளை அரசு உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்று எங்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தியிருக்கிறது. இதைத் தீர்ப்பில் காலதாமதம் ஏற்பட்டதால்தான், இந்தப் பிரச்சினை இன்றைக்குச் சிக்கலாகியிருக்கிறது. வாகைக்குளம் பிரச்சினையிலே கூட, அங்கேயிருந்து தண்ணீரைக் கொண்டு சென்றால், ஆற்றிணற்றைத் தோண்டினால் அதனால் அங்குள்ளவர்களுடைய கிணற்றிலே நீர் குறைந்துவிடுமென்று விவசாயிகளுக்குக் கவலை ஏற்பட்டது. அவர்களை 'கன்வின்ஸ்' பண்ணுவதற்குப் பதிலாக, மேற்கொண்டு நிர்ப்பந்த நடவடிக்கைகளை எடுத்ததால் தான் அங்கே பிரச்சினையே ஏற்பட்டது. இவ்வாறு





பிரச்சினைகளை முன்வைத்து அர்த்தால் நடத்த வந்தால், உடனே ஆயிரக்கணக்கானவர்களைக் கைது செய்வது என்ற போக்கு தமிழக அரசுக்குப் பழக்கமாகிவிட்டது. நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டுமென்று அரசியல் சட்டம் கூறும்போது, பத்தாயிரக்கணக்கான பேரை இரவோடு இரவாகக் கைது செய்வதும், அர்த்தால் என்று கூறினால், அதற்கு முந்தைய நாள் முதலமைச்சர் அவர்கள் ரேடியோவில் உரை நிகழ்த்தி அர்த்தாலைக் கைவிடுங்கள் என்று சொல்லுவதும், பொதுமக்கள் மத்தியிலே பதட்ட நிலையை உண்டாக்குகிறது. நேற்றைய துப்பாக்கிச் சூட்டில் இரண்டு உயிர்கள் பலியாகி இருக்கின்றன. இதை Anti-social elements -இன் காரியமென்று சொல்லி, திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் தப்பிக்க முயற்சி செய்வதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் பேசிய பேச்சுகளும் இதற்குக் காரணமென்று எங்கள் கட்சி கருதுகிறது. அதைவிட பிரதான காரணமாக, அரசினுடைய அணுகுமுறை சரியில்லாததால்தான், இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்று எங்கள் கட்சி கருதுகிறது. ஆகவே பதினையாயிரம் பேர்கள் கைது செய்யப்பட்டதன் காரணமாகவும், துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாகவும் ஏற்பட்டிருக்கக் கூடிய பதட்ட நிலையைக் குறித்து விவாதிக்க இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாயிகள் பிரச்சினையையொட்டி தமிழகத்திலே கடந்த இரண்டு தினங்களாக ஏற்பட்டிருக்கிற பதட்டமான சூழ்நிலையைப்பற்றி இங்கே விவாதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. நாராயணசாமி நாயுடு தலைமையில் இருக்கக்கூடிய விவசாயிகள் சங்கம், அருப்புக்கோட்டை தொகுதியிலே நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து, பொது வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம் என்று அறிவித்தவுடனே,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 ஏப்ரல் 24

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், ஏற்கெனவே துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து 22 ஆம் தேதி தமிழகம் பூராவும் நடத்தவிருந்த கண்டனக் கூட்டங்களை ரத்து செய்துவிட்டோம். ஏனென்றால் திரு. நாராயணசாமி நாயுடு அறிவித்திருக்கிற போராட்டத்தை அரசாங்கம் சந்திக்கிற நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டங்களிலே வேறு விதமாக சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றவேண்டிய சிக்கலான சூழ்நிலை வரக்கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் கண்டனக் கூட்டங்களை ஒத்தி வைத்தோம்.

இதற்கிடையில், அரசாங்கம் அவசர அவசரமாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்களை இரவோடு இரவாகக் கைது செய்திருக்கிறது. திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் அறிவித்திருக்கிற போராட்டத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லையென்று அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்தும்கூட, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தில் செய்ததோ என்று சந்தேகப்படக் கூடிய அளவில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த, மாவட்டச் செயலாளரையும், அதே போல மாண்புமிகு உறுப்பினர் திருமதி தமிழரசி அவர்களின் கணவரை அவர் ஒன்றியச் செயலாளராக இருக்கிறார் என்ற காரணத்தால் அவர்கள் வீட்டிலே இருக்கிற நேரத்திலே வேண்டுமென்றே கைது செய்திருப்பதையும் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. ஆனால் விவசாயிகள் போராட்டத்தையொட்டி நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கவில்லை. குறிப்பாக, நேற்றைய தினம் திருநெல்வேலி மாவட்டத்தில். பணவடலிசத்திரம் என்ற இடத்தில் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் விவசாயிகளால் தாக்கப்பட்டு கொலை



1979 ஏப்ரல் 24] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

செய்யப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டவுடனே, எங்கள் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள், அவசர அவசரமாக வன்முறைச் செயல்களைக் கண்டித்ததோடு மட்டுமல்லாமல், அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் சரியான அணுகுமுறையைக் கையாளாததால், கோவை மாவட்டத்திலே உடுமலைப் பேட்டையில் துப்பாக்கிச் சூடு நடந்து ஒரு விவசாயி இறந்தது குறித்தும் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுவதற்கு அடிப்படைக் காரணங்கள் என்னவென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சில அறிவிப்புகளை இந்த மன்றத்திலும், வேறு சில மன்றங்களிலும் செய்கிறார்கள்.

(முற்பகல் 9-40)

ஆனால் செய்யப்படுகின்ற அறிவிப்புகள் நடைமுறையிலே நாட்டிலே நடப்பதில்லை. விவசாயிகளின் கடன்கள் வசூலிப்பதிலே ஜப்தி நடவடிக்கைகள் இருக்காது என்றிருந்தும் பல இடங்களிலே ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, எதற்காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது என்பதற்கான விளக்கத்தை அளிப்பது போன்று ஆரம்பித்து, அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதித்து, அனுமதி தந்த பிறகு பேச வேண்டியதையெல்லாம் இங்கே உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை, மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அங்கத்தினர் அவர்கள் விவரத்திற்குள்ளே போக வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நான் விவரத்திற்குள்ளே போகவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது பத்திரிகையிலே வந்திருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்ததற்கான அவசியம் மட்டும் என்னவென்று கூறுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: காவல் துறையைச் சேர்ந்த ஒருவர் இன்றையதினம் இறந்துவிட்டிருக்கிறார். அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இந்த அரசாங்கத்திலே 6 இடங்களில் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. துப்பாக்கிச் சூட்டுக்கு பலி ஆகின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் வேண்டுமென்றே கைது செய்யப்படுகின்றனர். அவர்கள் வேண்டுமென்றே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையின் காரணமாக, பொதுமக்கள் மத்தியிலே ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களில் பொதுமக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினைப்பற்றி, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துப் பேச வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடைபெற்ற விவசாயிகளினுடைய வேலைநிறுத்தம் மாநிலம் தழுவி பல இடங்களிலே துப்பாக்கிச் சூடு நடக்கக் காரணமாயிருக்கிறது. காவல் துறையைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கின்ற நிலையும், இந்தத் துப்பாக்கிச் சூட்டின் காரணமாக பொதுமக்களில் ஒருவர் இறந்து பலபேர்கள் காயம்பட்டிருக்கின்றார்கள் என்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றன. பெரிய அரசியல் கட்சிகள் மிகப் பெரிய அளவுக்கு ஏற்பாடுகள் செய்ததற்குப் பிறகு கூட, வேலை நிறுத்தங்கள் வன்முறையில் திரும்பிவிடுகின்றன. இந்த வேலைநிறுத்தம் பல நேரங்களிலே வன்முறையாகவே திரும்பி விடுகிறது. ஆனால் இன்றைக்கு ஏற்பட்டுள்ள இந்த விவசாயப் போராட்டம் எவ்வளவுதான் நியாயமானதாக, நியாயமான காரணத்திற்காக என்றிருந்தாலுங்கூட, போராடுகின்ற முறை



அல்லது அதைக் கட்டிக்காக்கின்ற நிலைகளிலே அது எப்படி மாறிவிடும் என்பதையெல்லாம் எண்ணிப்பார்க்காமல் அழைப்புக்களை விட்டுவிடுவதன் விளைவு, அந்த நிலைமை எப்படித் திரும்பிவிடுகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டைத்தான் இந்தச் சம்பவங்கள் தெரிவிக்கின்றன. இதிலே எழுந்துள்ள பிரச்சினையைப் பார்க்கும்போது விவசாயிகள் இந்தப் போராட்டத்திலே கலந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அதிலே உள்ள நியாயங்களை யாரும் தள்ளிவிட முடியாது. ஆனால் அரசு அதைத் தீர்க்கின்ற அணுகுமுறையிலே இன்னமும் கொஞ்சம் வேகத்தை அதிகப்படுத்தி, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையிலே நியாயம் இருக்கிறதோ இல்லையோ, இதைத் தீர்க்கின்ற நேரத்திலே, சமாதானமாகப் போகவேண்டிய நேரத்திலே, வன்முறை நடந்து விட்டிருக்கிறது. நேற்றையதினம் நடந்த சம்பவம் இந்த நாட்டினுடைய நல்ல பெயரை தாங்குகின்ற அளவிலே அமையவில்லை. காவல் துறையைச் சேர்ந்த ஒருவர் கொலை செய்யப்பட்டிருப்பது பற்றிய செய்தியில் அவரது வாழ்க்கைக் குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இறந்தவர் இளம் வயதினர். அவருக்கு 3 குழந்தைகள் இருப்பதாகவும் அதில் மூத்த பெண் குழந்தைக்கு வயது 13 ஆகின்றது என்றும் சொல்லப்படுகிறது. அந்த அதிகாரி இந்த நிலைக்கு ஆளாகியிருக்கின்றார். இதுபோன்ற போராட்டங்களுக்கு, வேலை நிறுத்தங்களுக்கு குரல் கொடுக்கின்ற போது, ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஏறத்தாழ 7 ஆயிரம், 10 ஆயிரம் பேர்கள் என்ற தகவல் சொல்கிறார்கள். இன்றைக்கு 5 ஆயிரம் பேர்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. அப்படி கைது செய்யப்படுகின்றபோது, யார் வெளியே இருந்தால் கட்டுப்படுத்துவார்களோ, தலைமையேற்றவர்களாக இருக்கின்றார்களோ, அவர்களே கூட கைது செய்யப்பட்டுவிடுகிறார்கள். அப்படி அவர்களைக் கைதுசெய்தால், அவர்களுக்குப் பின்னால் இருக்கிற வழிநடத்தப்படுகின்றவர்களுக்கு தலைமை இல்லாது போகிற காரணத்தினால், இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படு

இன்றனா. இன்றைக்கு விவசாயிகளினுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களுக்கு உரிமையோடு வேண்டுகோள் விடுகிறேன். இந்த ஆட்சி இந்தப் பிரச்சினையில் allergic ஆக இருக்க வேண்டாம். Sensitive ஆக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையில் உள்ள நியாயத்தைப்பற்றி யார் குரல் கொடுத்தாலும், யார் குரல் கொடுக்கிறார்கள் என்பதையோ அவர்கள் நல்லவர்களா, கெட்டவர்களா, வேண்டியவர்களா, வேண்டாதவர்களா என்பதையோ பிரச்சினையாக எடுத்துக் கொள்ளாமல், இந்தப் பிரச்சினையிலே நியாயம் இருக்கிறது என்பதை உணர்ந்திருப்பதால், இதில் அரசு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பிரச்சினையை முழுமையாக விவாதித்து இதில் ஒரு முடிவு காணவேண்டும் என்கின்ற அளவிலே இந்த அவையினுடைய அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக குறிப்பாக 23 ஆம் தேதியன்று நடந்த நிகழ்ச்சிகள் நம் எல்லோருடைய மனதிலும் ஒரு வேதனையை ஏற்படுத்துகின்ற நிலைமையாக இருக்கின்றது என்பதை நான் முதலிலே கூறிக்கொள்வது என் கடமை என்பதாகக் கருதுகிறேன். துப்பாக்கிச் சூடு நடந்தது என்றாலும், அதிலே அதிகாரி, போலீஸ் அதிகாரி கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதைச் செய்தது பொதுமக்களில் ஒருவரா, அல்லது விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்தவரா என்பதுபற்றி முழு விவரம் தெரியாமல் இருக்கிறது. சரியாகத் தெரியாமல் சொல்லக்கூடாது. ஒருவர் சுடப்பட்டிருக்கிறார் என்பதையும் நான் கேள்விப்படுகிறேன்.

இங்கே பேசிய, ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு நண்பர்கள் நல்ல எண்ணத்தோடு ஒரு கருத்தை வெளியிட்டார்கள். இந்த அரசினுடைய அணுகுமுறை சரியில்லை. அணுகுமுறை சரியாக இருக்க வேண்டுமென்று



சான்னார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி வர்கள், பலரை, குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சர்ந்தவர்களை, பழியைத் தீர்த்துக்கொள்கின்ற வழியில் கைது சய்திருக்கிறார்கள், போலீஸ் அதிகாரிகள் கைது செய்திருக்றார்கள் என்ற குற்றச்சாட்டைச் சாட்டினார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அடிப்படைக் காரணம் என்ன என்பதைக் கவனித்து, மிக நுணுக்கமான வகையில் அதைப்பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும், இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

முதலிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களென்று யார் சொல்லியும், கணக்குப் போட்டும் அதிகாரிகள் கைது செய்யவில்லை என்பதையும், ஆட்சிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலரும் இதில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முன்னாலே யார், யார் வன்முறையில் ஈடுபட்டவர்களென்று அவர்கள் குறித்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் விருப்பப்படி செய்யவில்லை. அந்தப் பட்டியலில் இருக்கின்றவர்களைப் பொறுத்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்கள். அதுதான் உண்மை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், பொறுப்பிலே இருக்கின்றவர்கள்கூட அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். அவர்களையும் கைது செய்து உள்ளே வைத்துள்ள நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையிலேதான் இது ஏற்பட்டிருக்கிறதே தவிர, ஒரு கட்சியிலே இருப்பவர்களைக் கைது செய்து மறுநாள் விடுதலை செய்வது என்பதல்ல. அந்த எண்ணம் இந்த அரசுக்குக் கிடையாது. அப்படிக் கைது செய்ய அதிகாரிகள் உத்தரவு போடவில்லை என்பதையும், அவர்கள் அப்படிச் செய்ய விரும்பவில்லை என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 24

அடுத்ததாக, எப்படிப்பட்ட அணுகுமுறை என்பது பற்றி நான் சொல்லவேண்டிய அவசியத்தில் இருப்பதால், ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். அதற்கென ஒரு உச்ச மட்டக் குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு. அதுபற்றி பரிசிலனை செய்து வெகு விரைவில் அறிக்கை ஒன்று தரவேண்டுமென்று வேண்டு கோள் விட்டிருக்கிறோம். பாதுகாப்புக்காக கைது செய்து கொண்டிருக்கிறார்கள். அறிக்கை வருவதற்குள்ளேயே ஆங்காங்கு இருக்கின்ற விவசாயிகள் இப்படி நடவடிக்கையில் ஈடுபட்டிருக் கிறார்கள். இந்தப் பிரச்சினையில் விவசாயிகளைத் தூண்டி விட்டு, என்ன செயல்முறைகளைச் செய்யக்கூடாதென்று சொல்வோமோ அதிலே ஈடுபடுத்தியிருக்கிறார்கள். எந்த அரசும் இதையெல்லாம் ஏற்றுக்கொள்ளாது. இந்தச் செயல்களைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகின்ற தலைவர் அந்த விவசாயிகள் சங்கத்திலே கொஞ்சம் அதிகமான செல்வாக்குள்ள தலைவராக இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் மேடையிலே என்னென்ன சொன்னார்களோ அதில் ஏறத்தாழ 100-க்கு 99 பங்கு நடைமுறையிலே நடந்துவிட்டிருக்கிறது என்பதை தான் வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச்

(முற்பகல் 9-50)

சூழ்நிலையில்தான் அங்கே விபரீதங்கள் நடந்தன. சில தலைவர்கள் வெளியே இருந்தால் மற்றவர்களைக் கட்டுப் படுத்த முடியுமென்பது நியாயமான வாதமாக இருக்குமென்று ஒத்துக்கொண்டாலும், அப்படி நாட்டிலே ஒருவருமே இல்லாமல், அத்தனை பேரையும் கைது செய்து வைத்துவிட்டார்களென்று சொல்ல முடியாது. திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் வெளியிலேதான் இருந்திருக்கிறார், அவரைக் கைது செய்ய வில்லை. விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த பல தலைவர்கள் வெளியே இருக்கிறார்கள், அவர்கள் கைது செய்யப்படவில்லை. என்ன சொன்னார்கள், என்ன நடந்திருக்கிறது என்பதைக் கவனித்துப் பார்த்தால், உண்மையிலேயே இந்த நாட்டு மக்களுக்குச் சொல்லித் தரக்கூடாத ஒரு வழியை, ஜனநாயகத்திலே நம்பிக்கையுள்ள யாரும் ஏற்றுக்கொள்ள



979 ஏப்ரல் 24] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

டியாத ஒரு வழியை, திரு. நாராயணசாமி நாயுடு அவர்களும், ன்னும் சிலரும்—அவர்கள் பெயர் சொல்ல முடியவில்லை— சால்லியதன் விளைவாகத்தான் சில நிகழ்ச்சிகள் நடந்திருக் ின்றன. அந்த முறையில் எனக்குக் கிடைத்த தகவல்களை ங்கே வெளியிட விரும்புகிறேன். அதற்குப் பிறகு தலைவ வர்கள் என்ன முடிவு எடுக்கிறார்களோ, அதை நான் ஏற்றுக் காள்கிறேன்.

திருநெல்வேலி-சங்கரன்கோயில் சாலையில் மெசையாபுரம் ந்தியில் (ஜங்ஷன்) பனவடலி காவல் நிலைய எல்லைக்குத் தற்கே மூன்று கிலோமீட்டர் தொலைவில் மெசய்யாபுரம், தற்கு புத்தம்பட்டி, வடக்குப் புத்தம்பட்டி தெற்கு பனவடலி, ன்னைக் கொனடல் ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் 1000 ராம மக்கள் மூன்று இடங்களில் போக்குவாத்துத் தடை வைத்துள்ளதாகத் தகவல் கிடைத்தது.

பனவடலிக் காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் அய்யாப் பழம் (வயது 42), இரண்டு தலைமைக் காவலர், 11 காவலர், 8 இரண்டாம் நிலைக் காவலருடன், தக்க பாதுகாப்பு முழுமையாக வைத்துக்கொண்டார் என்று சொல்ல முடியாவிட்டாலும், காளவிற்கு தக்க ஆயுதங்களுடன் தலத்துக்கு விரைந்தார். தைபற்றி சங்கரன்கோயில் துணைக் கண்காணிப்பாளருக்கும், இன்ஸ்பெக்டருக்கும் தகவல் தெரிவித்துவிட்டுச் சென்றார். தலத்தில் 5 பேருந்துகளும், 2 லாரிகளும், 1 டிராக்டரும், 2 கார்களும் நிறுத்தப்பட்டு, அவற்றின் டயர்களில் காற்றிறக்கப் பட்டிருந்தன. சேதப்படுத்தப்பட்டிருந்தன. கூட்டத்தினர் கொடிய ஆயுதங்களைத் தாங்கியிருந்தனர். கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். சுமார் 1 மணி நேரம் சப்-இன்ஸ்பெக்டர் கூட்டத்தினரை சமாளித்து, நிலைமை கட்டுக்குள் வைத்திருந் தார். பின்னர் அவரது கட்டுக்கு மீறி கூட்டத்தினர் காவல் துறையினர்மீது கற்களை வீசத் தொடங்கினர். 318, 871 எண்ணுள்ள காவலர்கள் கைனால் காயமடைந்தனர். கூட்டத்தினர் முன்னேறி காவல் துறையினரைத் தாக்கினர். பல்முறை கொடுக்

கப்பட்ட எச்சரிக்கைகளும், தடியடியும் பயனற்றுப் போகவே, தற்காப்புக்காக காவல் துறையினர் 22 ரவுண்டுகள் சுட்டனர். காவல் துறையினரின் கட்டுப்பாட்டுக்கு மீறியவர்களானார்கள் கூட்டத்தினர். துப்பாக்கி பறிக்கப்பட்டு, சப்-இன்ஸ்பெக்டர் வெகு தூரம் கொண்டு செல்லப்பட்டு, துப்பக்கியால் அடிக்கப் பட்டார். கல்லாலும் அடித்து அரிவாளால் அவரை வெட்டினர். சப்-இன்ஸ்பெக்டர் தலத்திலேயே மாண்டார். ஒரு காவலரைத் தவிர ஏனையோர் காயமடைந்தனர். வேறு காவல்படையின ரைக் கண்டதும், கூட்டத்தினர் சிதறினர். பி.சி. 2888-ன் நிலை கவலைக்கிடமாக உள்ளது. அவரிடம் சங்கரன்கோவில் துணைத் தாசில்தார் மரண வாக்குமூலம் பதிவு செய்தார். புத்தம்பட்டி யைச் சேர்ந்த மூத்துப்பாண்டியன், சண்முகய்யா, செந்தூர் பாண்டி (மெருபாலங்குளத்தைச் சேர்ந்தவர்) துப்பாக்கி சூட்டில் காயமுற்றனர். பனவடலிக் காவல்நிலைய குற்ற என். 109/79-ல் இ.பி. கோ. 147, 148, 149, 307, 332, 427, 342, 117 பிரிவுகள் மற்றும் போலீஸ் சட்டம் 30 இ.பி. கோ. 149-ன் கீழும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

கோயில்பட்டி இன்ஸ்பெக்டர் விசாரணை செய்து வருகிறார். இதுவரை இவ்வழக்கு சம்பந்தமாக 32 பேர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

திரு. நாராயணசாமி நாயுடுவும் இவ்வழக்கில் சம்பந்தப்பட் டிருப்பதாக புலன் விசாரணையில் தெரிய வந்ததால், இன்று காலை அவர் கோவையில் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மக்களுக்கு முழு விவரங்களைச் சொல்ல முடியாத இந்தத் தருணத்தில், அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதம் நடத்த வேண்டிய தேவை யில்லை என்றும், அதற்கு அனுமதி கொடுக்கத் தேவையில்லை என்றும் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப் பொருள் குறித்து



விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவை யில்லை என்று கருதி, என் அனுமதியை மறுக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** உடுமலைப்பேட்டை துப்பாக்கி சூடு குறித்து முதலமைச்சரவர்கள் ஒன்றும் சொல்லவில்லை . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விவரங்கள் கிடைக்கவில்லை, அதனால் சொல்ல முடியவில்லை என்று முதலிலேயே சொன் னார்கள் நான் பெயர்களைப் படித்தபோதே, சப் ஜெக்ட்சையும் படித்து, சேர்த்து எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னேன். முதலமைச்சரவர்கள் விவரங்கள் சொல்லவில்லை என்றால் நான் என்ன செய்வது ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமசந்திரன்:** மேலவைத் தலைவ ரவர்களே, விவரங்கள் வந்திருக்கின்றன. அதையும் படித்து விடுகிறேன். இராமநாதபுரம் மாவட்டம், வாகைக்குளம் பகுதி யில் 4-4-1979 ஆம் தேதி நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டினைக் கண்டிக்கும் வகையில் திரு. நாராயணசாமி நாயுடுவின் தலைமையி லான விவசாயிகள் சங்கம் 23-4-1979ஆம் தேதி அன்று தமிழகம் பூராவிலும், அர்த்தால் நடத்தத் தீர்மானித்தது. 22-4-1979ஆம் தேதி அன்றே தேசீய நெடுஞ்சாலைகளிலும், நெடுஞ்சாலைகளிலும் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு, போக்குவரத்துக்குத் தடங் கல்கள் ஏற்படாவண்ணம் சாலைகளை மேற்பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடுமலைப்பேட்டையில் கடந்த 20 ஆம் தேதி இரவிலிருந்தே நகாக் காவல் சட்டம் செக்ஷன் 30(2)ன்கீழ் தடையுத்தரவு போடப்பட்டது. 23-4-1979 ஆம் தேதி காலை உடுமலைப் பேட்டையில் சுமார் 500 விவசாயிகள் சேர்ந்துகொண்டு, ஒரு லாரியை நிறுத்தி, டயரிலிருந்து காற்றை எடுத்துவிட்டு, லாரி ஓட்டுநர் எத்திராஜ் என்பவரை அடித்துள்ளனர். தகவல் கிடைத்ததும் காவல் துறையினர் விரைந்து அந்த இடத்திற்குச் சென்று கூட்டத்தைக் கலைக்க எவ்வளவோ முயற்சித்தும்,

முடியாமற் போகவே, லேசான தடியடிப் பிரயோகம் செய்தனர். கூட்டத்தினர் கலைந்து செல்லாமல், காவல் துறையினரை கற்களால் தாக்கினர். இதனால் காவல் துறையைச் சேர்ந்த பத்து பேர்கள் காயமுற்றனர்.

உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் லாரி ஓட்டுநர் கொடுத்த புகாரின் பேரில் ஒரு வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது. காவல் துறையினரைத் தாக்கினது குறித்து மற்றுமொரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 37 விவசாயிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் உடுமலைப்பேட்டை விவசாயிகள் 23-4-1979 ஆம் தேதி காலை 6 மணியிலிருந்தே சாலைகளில் கற்களையும், மரக் கொம்புகளையும் வைத்து தடை செய்ய ஆரம்பித்தனர். தகவல் அறிந்ததும், காவல் துறையினர் தலத்துக்கு விரைந்து தடைகளை அகற்றினர்.

மறுபடியும் பிற்பகல் 1-15 மணிக்கு நாராயணசாமி நாயுடு அவர்களைச் சேர்ந்த விவசாயிகள் சுமார் 3000 பேர்களும் உடுமலைப்பேட்டை கல்பனா திடலில் கூடி, அங்கிருந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியைச் சேர்ந்த ஒருவரின் பழக் கடையைத் தாக்கினர். மற்றும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவரின் தேனீர் கடையொன்றையும் தாக்கினர். போலீசைப் பழி வாங்குவோம் என்று கூச்சலிட்டனர். காவல் துறையினர் உரிய எச்சரிக்கை கொடுத்தபின் லேசான தடியடிப் பிரயோகம் செய்தனர். இதுவும் கூட்டத்தை அடக்க முடியாமற்போகவே, கண்ணீர் புகைக் குண்டுகள் வெடித்தனர். ரவைக் குண்டுகள் சுட்டனர் (பக் ஷாட்ஸ்). இதனாலும் கூட்டம் கட்டுக்கடங்காமல் போகவே, ஒரு ரவுண்டு குண்டுத் தோட்டாவினால் சுட்டனர். இதில் மகாலிங்கம் என்பவர் இறந்தார். உடுமலைப் பேட்டைக் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது. நான்கு பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலைமைகளையும் கூறி, இதைப் பற்றி விவாதிக்க, அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தை, மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ம. சங்கரலிங்கம்:** முதலமைச்சரவர்களிடம் ஒரு வேண்டு கோள். துப்பாக்கிப் பிரயோகம் உடுமலைப் பேட்டையில் நடந்திருக்கிறது. ஒருவர் அதன் காரணமாக இறந்திருக்கிறார். எனவே அது குறித்து நீதி விசாரணை நடத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஏற்கெனவே கொடுத்த தீர்ப்பின்படி, ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி, அனுமதி மறுக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** நீதி விசாரணை பற்றி முதலமைச்சர வர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மேலவைத் தலைவரவர்களே, விவரங்கள் முழுவதும் கிடைக்காத இந்த நிலையில், நான் அதை உடனடியாகச் சொல்லி, கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது என்றும், எதிர்க் கட்சித் தலைவரவர் களுடைய எண்ணம் எந்த உணர்வோடு வெளிப்படுத்தப்பட் டிருக்கிறதோ அதை நாங்கள் மதிப்போமென்றும், அதைத் தக்க நேரத்திலே மனத்திலே வைத்துக்கொண்டு, எப்படி அதைச் செயல்படுத்துவது என்பது பற்றி சிந்திப்போமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00.)

## 2. அரசின் தீர்மானம்.

## தொழில் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவரவர் களே,

"சட்டமன்ற மேலவை முன் வைக்கப்பட்ட தொழில் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவை முன் வைக்கப்பட்ட தொழில் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக் எடுதத்துக் கொள்ளப்பட வேண்டும்."

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தொழில் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழில் அதிபர்களுடைய ஆலோசனைக் கூட்டம் ஒன்றை சென்னையிலே மார்ச் திங்களில் கூட்டி கிட்டத்தட்ட 4 மணி நேரம் தொழில் அதிபர்கள் பலரோடு பேசி அவர்களுடைய ஆலோசனைகளைப் பற்றி ஆராய்ந்தார்களென்று நான் பத்திரிகையில் படித்தேன். அண்மையிலே சில தொழில் அதிபர்களை நான் நேரிலே பார்த்த நேரத்தில் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுமாதிரி ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தியதைப் பொறுத்த வரை, அவர்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். அந்தக் கூட்டத்தின் காரணமாக அவர்களுடைய பிரச்சினைகள் பலவற்றை முதலமைச்சருக்குச் சொல்லக்கூடிய வாய்ப்பு கிடைத்தது குறித்து மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால் இது போன்ற கூட்டங்களை முதலமைச்சசர் அவர்கள் முன்னாலேயே கூட்டியிருந்தால், தாங்கள் இன்னும் மகிழ்ச்சியடைந்திருப்போம் என்கின்ற கருத்தினை அவர்கள் தெரிவித்தார்கள். கூட்டத்தை ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு தான் கூட்டி, அதற்கு பிறகு தான் முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க நேர்ந்தது என்றும் இடையில் பல முறை சந்திக்க முயன்றும் முதலமைச்சர் அவர்களைப் பார்த்துப் பேச வாய்ப்புக் கிடைக்காத நிலை இருந்தது என்றும் இனிமேலாவது இந்தக் கூட்டத்தை அடிக்கடி, 3 மாதத்திற்கு ஒரு முறையாவது நடத்துவதன் மூலம் தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வழிவகை ஏற்படும் என்கின்ற கருத்தினைச் சொன்னார்கள். இதை நான் இந்த

@ 837-1084 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.



சந்தர்ப்பத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த ஒரு கூட்டத்தைக் கூட்டியதிலேயே அவர்கள் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள். நம் மாநிலத்தில் பல தொழில் அதிபர்கள் புதிதாக தொழில் ஆரம்பிக்க முன் வந்திருப்பதன் மூலம் இன்னும் பல பேர் தொழிற் சாலைகளை ஆரம்பிக்க முன்வருவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே நான் சொல்லியபடி தொழில் அதிபர்களின் கூட்டத்தை 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து, உயர் மட்டக் குழு ஒன்றை ஆலோசனைக் குழு என்ற அடிப்படையில் அமைக்க வேண்டும். தொழில் அதிபர்கள், தொழில் தெரிந்தவர்கள் இப்படிப்பட்டவர்களைக் கொண்டு அந்த உயர் மட்டக் குழுவை அமைக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதன் தலைவராக இருந்து, அந்தக் குழுவை 3 மாதத்திற்கு ஒரு முறை கூட்டுகின்ற வகையில் ஒரு வழிவகையை உருவாக்கினால் தமிழகத்தில் இன்னும் பலர் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முன் வருவார்கள். தமிழ் நாட்டில் தொழில் வளம் கூடும். முன்பு இதுபற்றி நான் பேசிய நேரத்தில் தமிழ் நாட்டில் தொழில் நிலைமை கடந்த 30 ஆண்டு களாக வளர்ச்சி இல்லாத நிலையில் இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னேன்.

தமிழ் நாட்டில் தனி நபர் வருமானம் 1960-61-ல் கிட்டத்தட்ட 336 ரூபாயாக இருந்தது. 1967-68 ஆண்டில் தனி நபர் வருமானம் கிட்டத்தட்ட 329 ரூபாய் என்கிற அளவுக்குக் குறைந்து விட்டது. 1968-69 ஆம் ஆண்டு தனி நபர் வருமானம் எந்த அளவுக்கு ஏறியிருக்கிறது என்று பார்த்தால், குறைந்த பட்சமாக ஓர் ஆண்டுக்கு 2 சதவிகிதம் கூட ஏறவில்லை. 08 சதவிகிதம் அளவுக்குத் தான் தனி நபர் வருமானம் கிராமங்களில் கூடியிருக்கிறது என்பதையும் நான் முன்பு எடுத்துச் சொன்னேன்.

இந்திய நாட்டினுடைய மாநிலங்களை எடுத்துக்கொண்டால், பஞ்சாப் மாநிலம் இன்றைக்கு வளம் பெற்றிருக்கிறது. அங்கிலத்தில் Oasis among the deserts என்று சொல்லுவார்கள்

இந்திய நாட்டினுடைய எல்லா மாநிலங்களிலும் தனி நபர் வருமானம் பெருகாத நிலையில், தமிழ் நாட்டில் வேலைவாய்ப் பின்மை பெருகி விட்ட நிலையில், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுடைய நிலை ஆண்டுக்காண்டு அதிகமாகிக் கொண்டிருக்கிறது இந்திய நாட்டின் மாநிலங்களிலே பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் அவர்களுடைய தனி நபர் வருமானம் கிட்டத்தட்ட 1,820 ரூபாய்க்குப் பெருகியிருக்கிறது. அதே சமயத்தில் தமிழ் நாட்டிலுள்ள தனிநபர் வருமானம் பஞ்சாப் மாநிலத்தில் இருக்கிற தனிநபர் வருமானத்தில் பாதி அளவில் தான் இருக்கிறது. பஞ்சாப் மாநிலத்தில் சிறு தொழில்கள் மூலம், விவசாயம் மூலம் எல்லோருக்கும் வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிற நிலையை மனதிற்கொண்டால், இந்திய நாட்டிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறவர்களின் எண்ணிக்கை மற்ற மாநிலங்களில் அதிகமாக இருக்கின்ற நிலையில் பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. 53 சதவிகித மக்கள் தமிழ் நாட்டிலே இன்றையதினம் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். இந்தக் கருத்துக்களை நான் சென்ற முறை பேசும்போது அவையில் எடுத்துக்காட்டினேன்.

அப்பொழுது நான் இன்னொரு கருத்தையும் சொன்னேன். இந்திய நாட்டினுடைய மாநிலங்களினுடைய பொருளாதார அடிப்படையில் எல்லா மாநிலங்களுக்கும் உட்பட்ட ஒரு மாநிலமாக தமிழ் நாடு இருக்கிறது. மத்திய அரசு மாநிலங்களுக்கு திட்ட அடிப்படையில் நிதி ஒதுக்குகிறது. எல்லா மாநிலங்களுக்கும் ஒரு நியதியை வைத்துக்கொண்டு அதன் அடிப்படையில் ஒரே அளவு தான் நிதி ஒதுக்கப்படுகிறது. அப்படி திட்டங்களுக்காக எல்லா மாநிலங்களும் ஒரே அளவு நிதி பெற்று திட்டங்களைத் தீட்டும்போது, பஞ்சாப் மாநிலம் மட்டும் மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் மிகச் சிறப்பாக கடந்த 30 ஆண்டுகளில் முன்னேறியிருக்கிறது என்று சொன்னால், நம்முடைய மாநிலத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக இதில் கவனம் செலுத்தி நம் மாநிலத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களின் தொகை அதிகமாகிக் கொண்டு போவ





தற்கான காரணத்தை ஆராய வேண்டுமென்றும் சொன்னேன். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, இந்திய நாட்டினுடைய பொருளாதார நிலையை எடுத்துப் பார்க்கும்போது, அந்த ஒரு கட்டுக்கோப்பிற்குள் தான் மாநிலங்கள் இருக்க வேண்டும் என்றும் நிரம்ப அதிகமாக முன்னேற முடியாத நிலையில் இம்மாநிலம் இருக்கிறது என்றும் சொன்னார்கள்.

அதே நிலைமையில் இருக்கிற பஞ்சாப் மாநிலம் செல்வச் செழுமையில், வளர்ச்சிபெற்ற நிலைமையில் இருக்கும்போது, தமிழகமும் ஏன் சிறப்பாக இதைச் செய்ய முடியாது என்பதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆராய வேண்டும். இதற்காக ஒரு எக்ஸ்பெர்ட் கமிட்டி என்ற அடிப்படையில் நம் மாநிலத்திலுள்ள திறமைபடைத்தவர்களைக் கொண்டு அமைத்து பஞ்சாப் மாநிலத்திற்கு அந்தக் குழு சென்று அம்மாநிலம் வளர்ச்சி பெற்றிருப்பதற்குரிய காரணங்களை ஆராய வேண்டும். அவர்கள் தொழில் வளர்ச்சியில் என்ன அணுகுமுறையைக் கையாள்கிறார்கள். எப்படி திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள். என்பதைக் கண்டறிந்து, நம் மாநிலத்திலும் அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு எக்ஸ்பெர்ட் கமிட்டியை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கமிட்டி பஞ்சாப் மாநிலத்திற்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து அங்கு கையாளப்படுகின்ற முறையைக் கண்டறிந்து நம் மாநிலத்திலும் அதை நிறைவேற்றினால், நம் மாநிலம் மிகச் சிறப்பாக வளர வாய்பிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேறு மாநிலங்கள் வளர்ச்சியடைந்திருப்பதற்கு முக்கிய காரணம் மத்திய அரசினுடைய பெரிய தொழில்கள் அம்மாநிலங்களில் அமைந்திருப்பது தான். இதை நான் மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்த 30 ஆண்டுகளில் பெரிய தொழில்களின் எண்ணிக்கையை மற்ற மாநிலங்களில் ஆரம்பிக்கப்பட்ட எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், மிக மிகக் குறைவு என்பதை நான் மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய

மாநிலத்தில் Central sector investment in public sector என்ற அடிப்படையில் பார்க்கும்போது, 3 சதவிகிதப் பணத்தைத் தான் அவர்களுடைய தொழில்களுக்காக நம் மாநிலத்தில் மத்திய அரசு செலவிட்டிருக்கிறது. நம் மாநிலத்தில் உண்மையாக தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தால், இந்திய நாட்டினுடைய மக்கள் தொகையில், நம் மாநில மக்கள் தொகை 8 சதவிகிதம் இருக்கிறது என்ற அடிப்படையில், 8 சதவிகிதத்திற்குக் குறையாமல் நம்முடைய மாநிலத்திற்கு மத்திய அரசு வாய்ப்பளித்திருக்க வேண்டும். பெரிய தொழில்களை ஆரம்பித்திருக்க வேண்டும். நம் மாநில மக்களிடையே இருக்கின்ற வேலையின்மை, வறுமைக் கோட்டுக்குக் கீழே மக்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற நிலைமை இவைகளையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும்போது, கடந்த பல ஆண்டுகளாக 5 சதவிகிதத்திற்குக் குறைவாகத்தான் அவர்கள் தமிழ் நாட்டுக்கு உதவி செய்திருக்கிறார்கள். இம்மாநிலத்திற்குச் செய்ய வேண்டிய, ஒதுக்க வேண்டிய தொகையை சரியான முறையில் ஒதுக்கீடு செய்யவில்லை. இந்தக் குறைகளையெல்லாம் மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்து பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதுபற்றி நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இன்னும் எவ்வளவு தொழில்களை தமிழ் நாட்டில் ஆரம்பிக்க வேண்டும் என்பது பற்றி அரசு ஆராய வேண்டும்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். நம் மாநிலத்தில் தொழில் துறை என்று சொல்லும்போது பல பெரிய தொழில்களை அரசு சார்பில் ஆரம்பித்து நடத்திக் கொண்டிருக்கிறோம். அவைகள் இலாபத்தில் தான் நடக்க வேண்டும். பொதுத் துறையில் இருக்கக்கூடிய தொழில்கள் இலாபத்தில் இயங்க வேண்டிய அவசியமில்லை தேவையில்லை என்று சொல்கிறார்கள். எந்த ஒரு முதலாளித்துவ நாடாக இருந்தாலும் சரி, அல்லது mixed economy நாடாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் நாடாக இருந்தாலும் சரி அல்லது சோஷலிஸ்ட் நாடாக இருந்தாலும் சரி, பொதுத் துறைத் தொழில்கள், அரசாங்கத் தொழில்கள் இலாபத்தில் தான் நடக்க வேண்டும். அவ்வாறு இலாபத்தில் சோவியத் ரஷ்யாவில் தொழில்களை நடத்துவதாகச் சொல்கிறார்கள். Profitablity is main criteria for the public sector undertakings என்பதை நாம் மனதிலே கொள்ள வேண்டும். அதையொட்டி நம் மாநிலத்தில் அரசாங்கத்தால் நடத்தக் கூடிய தொழில்கள் எவ்வளவு. மொத்த முதலீடு எவ்வளவு, இலாபம் எவ்வளவு என்கிற கருத்தினை எல்லாம் நன்றாக ஊன்றிப் பார்க்க வேண்டும். அந்த முறையில் அதை அமைக்க வேண்டும். அரசாங்க அதிகாரிகளால் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மின்சார போர்டில் ஆண்டுக்காண்டு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற இழப்பு நிலைமையைப் போக்க வேண்டும். அரசாங்கம் தொழில்களுக்கு ஏதாவது உதவி செய்தால்தான், தொழில் வளம் பெருகும், அந்த வகையில் மக்களுக்கும் சேவை செய்ய முடியும், தமிழ்நாட்டில் தொழிலில் உற்பத்தி அதிகமாகி வளர்ச்சி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



(முற்பகல் 10-10)

நம்முடைய மாநிலத்தினுடைய தொழில் கொள்கையைப் பற்றி ஒரு முடிவான அபிப்பிராயத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தொழில் துறை என்றால் என்ன? நம்முடைய மாநில அரசின் கொள்கை என்ன? மாநில அரசைப் பொறுத்தவரையில், தொழில் கொள்கையில் ஒரு தெளிவு இல்லாது இருப்பதால், தொழிலதிபர்கள் பலர் தொழில்களில் இறங்குவதற்கு முன்வரவில்லை. அரசாங்கம் 'நேஷனலைசேஷன்' என்று சொல்கிறது. தேசவுடைமையாக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லி, அரசாங்கத்தினுடைய கொகையை அது நேரடியாக இருந்தாலும், மறைமுகமாக இருந்தாலும் மாற்றுவதால் ஒரு குழப்ப நிலை ஏற்பட்டு விடுகிறது. தொழிலுக்கு பணத்தை முதலீடு செய்பவர்களுக்கும், தொழிலை ஆரம்பிப்பவர்களுக்கும், இந்தத் தொழிலை ஆரம்பித்தால், அடுத்த ஐந்தாண்டுக் காலம் நாம் தொடர்ந்து நடத்த முடியும், 10 ஆண்டுக் காலத்தில் தொழிலை வளர்க்க முடியும், அதன் மூலம் குடும்பத்தை முன்னேற்றும் என்று நம்பிக்கை கொள்ள முடியாத அளவுக்கு கொள்கை இருக்கிறது. இந்த மாதிரி

நிலைமைகள் இருக்கக் கூடாது. இன்றைக்குத் தொழிலை ஆரம்பித்தால், நாளயதினம் வருமானம் வருவதாக இருக்க வேண்டும். அடுத்த ஆண்டில் வேறு திட்டங்களைப் பற்றி எண்ணுகிற அளவிலேதான் இருக்க வேண்டும். அப்படித்தான் தொழிலை வளர்க்க வேண்டும். அப்படியில்லாமல், ஒரு 5 ஆண்டு காலமாக, 10 ஆண்டு காலமாகத் தொழிலை வளர்ப்பது என்றால், அது பைத்தியக்காரத்தனம் என்று சொல்லிக்கொள்வேன். இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருந்தால், யார் தொழிலை ஆரம்பிப்பார்கள் ? மாநில அரசைப் பொறுத்தவரையில், தெளிவாக ஒரு கொள்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். இந்த மாநில அரசு பெரிய தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் அளிக்க இருக்கிறதா ? அல்லது மத்தியதரத் தொழில்களுக்கு ஊக்கம் தர இருக்கிறதா ? அல்லது 'மிக்சட் எக்கானமி' என்ற தொழில்களுக்கு ஊக்கம் தர இருக்கிறதா? அல்லது சிறு தொழில்களுக்கு ஊக்கம் அளிக்குமா ? இந்த மாநில அரசினுடைய தொழிலாளர் நலக் கொள்கை என்ன ? இவற்றை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னால், இங்கே இருக்கக்கூடிய தொழிலதிபர்களும், முதலாளிகளும் நிலையான ஒரு முடிவுக்கு வருவார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில அரசின் கொள்கையைத் தெரிவிக்க வேண்டும் என்ற கருத்தினையும் சொல்லிக் கொள்கிறேன்.

மத்திய அரசானாலும், மாநில அரசானாலும் பொதுவாக சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற கொள்கையை இப்போது கடைப்பிடித்து வருகிறீர்கள். அதை நான் பாராட்டுகிறேன். 20, 25 ஆண்டுகளாக இந்த நாட்டிலே பெரிய தொழில்கள்தான் வளர்ச்சியடைந்திருக்கின்றன. அதன் காரணமாக அந்தத் தொழிற்சாலைகளில் தொகை முதலீடு எவ்வளவு, அங்கே பணியாற்றும் தொழிலாளர்களின் 'லேபர்-ரேஷியோ' என்ன என்று பார்த்தால், அந்தப் பெரிய தொழில்களுக்குப் போட்ட அதே அளவு பணத்தை சிறு தொழில்களுக்குப் போட்டிருந்தால், மிக அதிகமான தொழிலாளர்கள் அந்தத் தொழில்களிலே பயன்படுத்தப்பட்டிருப்பார்கள். பெரிய தொழில்களை ஆரம்பித்து, அதிலே கோடிக்கணக்கான பணம் முதலீடு செய்தாலும் கூட 1,500, 2,000, 3,000 தொழிலாளர்கள்தான் வேலை செய்யும் நிலைமைகள் இருக்கின்றன. அங்கே பணியாற்றும் ஒவ்வொருவரையும்



பார்த்தால், கடைசியிலே இருப்பவர்களுக்குக் கூட 800 ரூபாய், 900 ரூபாய் என்று சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் இன்றைக்கு கிராமப்புறங்களிலே இருப்பவர்களுக்கு அடிப்படை வாழ்க்கைப் புள்ளியான 20 ரூபாய் கூட கிடைக்காமல் இருக்கும் நிலைதான் இருக்கிறது. ஆகவே, இப்போது இருக்கும் கொள்கை வெற்றிகரமான கொள்கை அல்ல. நேற்றையதினம் கூட ஒரு பத்திரிகையில் பார்த்தேன். ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலை மூடப்படுகிற நிலைமையில் இருப்பதைப்பற்றி அதில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் இருக்கக்கூடிய கடைசி சிப்பந்திக்கு ஒரு நாளைக்கு 35 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. இந்தத் தொழிற்சாலை கிராமப்புறங்களுக்குப் போய், அங்கே இந்தத் தொழிலை சிறு தொழிலாக மாற்றிவிடுவதனால் அங்கே இருப்பவர்களுக்கு 3½ ரூபாய் தான் கிடைக்கும். இப்படி அரசு செய்யலாமா என்று கேட்டிருக்கிறார்கள். நான் மாநில அரசுக்கு ஒரு கருத்தை என்னுடைய சொந்தக் கொள்கையாகக் கூடச் சொல்கிறேன். ஒரு சில பேர் 35 ரூபாய் ஒரு நாளைக்குப் பெறுவதை விட, ஒருசில ஆயிரக்கணக்கான பேர் 800 ரூபாய், 900 ரூபாய் என்று பெறுவதைவிட பல லட்சம் பேருக்கு ஒரு நாளைக்கு 3½ ரூபாயாவது ஒரு நாளைக்கு கிடைக்கிறது என்ற முறையில் கொள்கை வகுத்தால் நல்லது. அப்படிச் செய்தால், கிராமங்களில் தொழில் வளர்ச்சி பெருகும். ஆகவே, அதிகத் தொழில் மையங்களை கிராமங்களில் உருவாக்க நாம் பாடுபட வேண்டும். அரசினுடைய கொள்கையைப்பற்றி நான் சொல்கிறபோது, ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும். தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில், தொழிற்சாலைகள் எல்லாம் அமைதியாக இயங்க அரசு என்ன உத்தரவாதம் அளிக்கிறது என்பதைத் தொழில் துறையில் இருப்பவர்கள் நிச்சயமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். தொழிலதிபர்கள் தொழில் துறைக்கு வந்து, பணத்தைப் போட்டு ஒரு இரண்டு, மூன்று ஆண்டுகளாகத் தொழிலை வளர்த்து, 4 அல்லது 5 ஆண்டு காலத்துக்குள் அதிலிருந்து வருமானம் பெறலாம் என்று இருக்கும் சமயத்தில் 'ஸ்டிரைக்' வந்து அவர்களுக்கு மனச்சங்கடம், சோர்வு ஏற்பட்டு, 'இந்தத் தொழிலை ஏன் ஆரம்பித்தோம்' என்று சொல்லும் நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள். உதாரணமாகச் சொல்வதானால், தஞ்சாவூரிலே ஒரு டெக்ஸ்டைல் பாக்டரி

இருக்கிறது. அந்த பாக்டரியை நடத்துபவர்கள் மிகவும் வசதியானவர்கள். அதிலிருந்து லாபம் அவர்களுக்குக் கிடைக்கிறது ஆண்டுக்கு ரூ. 40 லட்சம் ரூ. 70 லட்சம் என்று கூடக் கிடைக்கும். இப்போது இருக்கும் ஸ்பிண்டில்களுடன், இன்னும் அதிகமான ஸ்பிண்டில்களைச் சேர்த்து, இன்னும் ஒரு ஆயிரம் தொழிலாளர்களைச் சேர்த்து இந்தத் தொழிலை விஸ்தரிக்கலாமே என்று அவர்களிடம் சொன்னால், இதிலே இருக்கும் லேபர் பிரச்சினைகளே போதும், இன்னும் ஆயிரம் பேர்களைச் சேர்த்து இன்னும் அதிகமான பிரச்சினைகளுக்கும், கஷ்டங்களுக்கும் ஆட்பட விரும்பவில்லை, தொழில் வளர்ச்சியும் வேண்டாம், இந்தப் பிரச்சினைகளும் வேண்டாம் என்று சொல்லும் அளவுக்கு தொழிலதிபர்கள் வந்துவிட்டார்கள். இந்த நாட்டிலே இருக்கும் கொள்கை தொழிலாளர்களுடைய நலனுக்கு ஏற்றதாக இல்லை. இந்த நாட்டிலே எழுந்திருக்கக்கூடிய பிரச்சினைகள், அதுவும் குறிப்பாக இரண்டு, மூன்று ஆண்டுகளில் எழுந்திருக்கும் பிரச்சினைகளைப் பார்த்தால், உண்மையிலே தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் பிரச்சினை இல்லை. இந்தப் பிரச்சினைகள் எல்லாம் ஒரு யூனியனுக்கும், இன்னொரு யூனியனுக்கும் இன்டர்-யூனியன் ரைவல்ரி என்ற அளவிலே, யார் லாபம் அடைவது என்ற முறையிலேதான் பிரச்சினைகள் இருக்கின்றன. இனிமேல் தொழில் துறையைப் பொறுத்தவரையில், அமைதி இருக்க வேண்டும் என்றால், தொழிலாளராக இருக்கக் கூடியவர்கள் ஸ்டிரைக் செய்வதானாலும், செட்டில்மென்டுக்கு வர வேண்டுமானாலும் மெஜாரிட்டி யூனியன் என்ற அடிப்படையிலே 'Ballot' எடுத்து, 50 சதவீதத்திற்கு மேலாக இருப்பவர்கள் சேர்ந்து ஒரு கொள்கையை வகுத்து, அதன் அடிப்படையில்தான் செட்டில்மென்ட் போட வேண்டும் என்று ஒரு சட்டமே கொண்டு வந்தால்கூட, என்னைப் போன்றவர்கள் அதை வரவேற்பார்கள். இந்த நாட்டில் தொழில் துறையில் இருப்பவர்கள் அத்தனை பேர்களும் அதை வரவேற்பார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாவட்டத் தொழில் மையங்களை, மத்திய அரசின் கருத்துப்படி இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. நல்ல முறையில் அவைகள் செயல்படுத்தப்பட வேண்டும். அங்கு





அதிகாரிகள் 'ப்ரொஃபஷனல் பீப்பிள்' என்ற அளவிலே இருக்க வேண்டும். அவர்களுக்கு சரியான aptitude இருக்க வேண்டும். அந்த அளவிலே பார்த்துப்போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மாநிலத்திலே இருக்கும் தொழிலதிபர்களுக்கு பலவிதமான பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்கள் இந்தப் பிரச்சினைகள் சம்பந்தமாக மத்திய அரசோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளைப் பார்க்கும்போது, பல பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அவர்கள் மட்டும் சென்று பேசி முடிக்க முடியாத பிரச்சினைகள், அரசாங்கம் தலையிட்டுச் செய்து முடிக்க வேண்டிய பிரச்சினைகள் இருக்கின்றன. அந்த மாதிரிப் பிரச்சினைகள் வருகிறபோது, அரசாங்கமே அதிகாரிகளை அனுப்பி அந்தப் பிரச்சினைகளை, சிக்கல்களைத் தீர்த்து வைத்தால், இன்னும் நல்ல முறையில் நம்முடைய மாநிலத்திலே அதிக அளவில் தொழில்கள் வளர வாய்ப்பு இருக்கும் என்ற கருத்தைச் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கருத்துக்களை நல்ல முறையில் ஆலோசித்து தீர்வு காண வேண்டும். இதுபற்றி மேலவையிலேயும் விளக்க வேண்டும். அவ்வாறு விளக்குவார்கள் என்று எதிர்பார்த்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Hon. Chairman, Sir, it gives me considerable pleasure to participate in the discussion on the Policy Note on Industries that has been placed on the table of this House I would first like to thank the Industries Department for giving us a document that contains all the information that is necessary in one single booklet, unlike in previous years when we had a number of booklets dealing with different aspects of industrial development.

One of the chief points that we have to consider when we go through the Note is that we have all the infrastructural facilities for the development of industries. We have the financial institutions waiting to give seed-capital loans and other types of loans and we have the District Industries Centres with a very good bureaucracy well-trained and with a heritage of industrial culture. In spite of all these things, in suite of all the progress that has been achieved, we definitely find a slackening in industrial growth and

[Thiru A. R. Damodaran] [1979 ஏப்ரல் 24

a lack of enthusiasm, as was pointed out by my hon. Friend Thiru Swaminathan, among people coming forward to start industries. Much of this is not due to any of the policies of the State Government as such, though, of course, the State Government must accept responsibility for certain factors within their control. But the general atmosphere that prevails in our country today is one of grave uncertainty in view of the many pronouncements that are made by Central Ministers regarding policies for industrial growth. One of the inhibiting factors is the sense of insecurity that has been lured in the minds of the entrepreneurs by very many conflicting speeches and highly temperamental policy statements made by Central Ministers incharge of Industries and other portfolios.

(முற்பகல் 10-20)

We hear today of Ministers saying that they will not allow the growth of certain companies. The next day, they amend it and say that in certain sectors of the economy they will allow a certain amount of vertical expansion. The industrialists are thoroughly confused with these statements. As my hon. Friend Thiru G. Swaminathan said, while we do everything possible to attract industrialists to start industries, when once they have started the industries, nobody seems to bother about them. In fact, they are relentlessly pursued by various Departments of the Government, the Labour Department, the Monopolies and Restrictive Trade Practices Commission and half a dozen other restrictive departments which seek to restrain growth instead of encouraging growth.

I was very surprised to read statements about Members questioning the growth of industrial concerns and comparing the capital that existed ten years ago with the capital that is existing today, taking into account the reserves that have been built up in the companies. No industry can remain stagnant. It is one of the necessities of life that growth is absolutely essential to counter the inflationary tendencies that exist in our economy. Further, as a natural consequence of development, we cannot stop achieving growth. It we take the case of a person who invested, say Rs. 5 lakhs in a Rs. 50 lakhs concern about 20 years back and consider the present stage of his capital, it would have grown to Rs. 20 lakhs and the company would have grown to be a Rs. 2 crores-company. There are people who find fault with such growth and say that the growth should not happen. The only concerns which will display practically no growth



1979 ஏப்ரல் 24] [Thiru A. R. Damodaran]

are Government concerns. We do not want private concerns to copy Government concerns in the lack of growth that is existing in Government institutions.

The other inhibiting factor is the acute and recurring shortage in the field of energy. Today, India is in the grip of an energy crisis. In West Bengal, the factories were closed down for one whole week. We have States where they have imposed power cuts ranging from 20 per cent to 40 per cent for varying periods in the year. We are now facing a grave shortage in the supply of petroleum products and in the supply of furnace oil to industries which have been using it. Even the Neyveli Lignite Corporation is likely to run into difficulties in regard to thermal generation. There is also shortage of coal. There can be no industrial development without planning the energy needs. In this aspect, the State has certainly a responsibility. In certain primary fields like power generation and the supply of certain essential products to industries, the State has to press and see that the Centre gives adequate allocations of primary energy materials like coal, fuel, oil, etc., so that the power generation does not suffer.

There has been a general fall in the efficiency of railway transport and consequently there has been disruption of supplies of raw materials and intermediates and delay in despatch of finished goods. In 1976, the movement of goods by railways was 25 per cent to 30 per cent higher than what it is today. The general lack of efficiency of Railway movement has hit industries very hard. The other inhibiting factor is the lack of a relatively stable State fiscal policy in regard to income and commodity taxation. Income-taxation is in the Central field, but commodity-taxation is part of the State field. This is another factor which inhibits growth of industries in any State. Last but certainly not the least, there is a bewildering plethora of permits, licences, clearances which have to be obtained from a variety of authorities—local authorities, State authorities and Central authorities—for starting any industry and for keeping it going. This has acted as an inhibiting factor in the development of industries in our State. I would plead with the Government that they might analyse these factors, and to the extent possible and wherever it is possible for use to correct within the framework of the State policy. We should endeavour to do our utmost not only to promote new industrial development but, what is equally important, to keep the existing industries going. For example, a very important beginning has been made and I welcome the policy pronouncement

of the Central Government which has been ably followed up by the Governments, particularly by the Tamil Nadu Government, in that we have gone far ahead of other States in setting up the District Industries Centres. These Centres are intended not to start industries by themselves—it is a mistaken notion—but they are promotional and developmental agencies intended to act as catalysts to entrepreneurs to start rural industries and small industries. I have discussed this problem with very many small-scale industrialists and they are all a little unhappy because, as I said, of the multiplicity of authorities like local bodies, health authorities, authorities in-charge of power, etc., to obtain licences—to which they have to run. Now a beginning has been made. I see from the Policy Note that attempts have been made to cut down the number of approvals that are required. But I would suggest, if it is possible for the Government, that they might consider—I think it would give a great fillip to the setting up of industries in our rural and district areas—whether the District Industries Centre could act as the Central authority for clearances and for all approvals that are to be obtained from local authorities, Health authorities, Electricity Board, and other State and Central Government authorities. Industrialists should be asked to give one application, with a number of folders for being sent to the various authorities, and it should be the responsibility of the District Industries Centres to obtain clearance from all these authorities. In this way, we would be eliminating a great deal of unnecessary red-tape and bureaucratic delays which are anathem to industrial development. Since a good beginning has been made, I would request the Government to investigate whether these District Industries Centres could not act as Central clearing houses for all applications that are received from the industrialists in the small-scale sector and in the rural sector.

The other point to which the Government would have to devote some attention is the problem of marketing all these products which would be produced by the small-scale industries. Small-scale industrialists do not have an extensive marketing net-work and they are at the mercy of huge combines which may buy their products at very small prices and sell them at large profits to an all-India market. Marketing is a very sensitive subject and I am not asking for State-marketing complex. But I would like them to investigate in co-operation with the industry, and find out whether suitable arrangements could not be made even at this stage for the sale of the products, because even now some of the Districts have made substantial progress, particularly in places like Salem, Coimbatore, etc.,



where a number of people have come forward to start industries. Unfortunately, South Arcot is still backward in industrial development. I hope that my hon. Friend Thiru Ramamoorthi will support me in this. We have always been saying that South Arcot is teribly backward in the matter of industrial development. There is a lot of money in South Arcot and a number of people have come to me asking for my suggestions. The only trouble is that the project-profiles will have to be drawn up properly and we will have to do very active promotional work. I hope that the District Industrial Centre will do this in South Arcot.

(முற்பகல் 10-30)

I have one more point to make about these District Industrial Centres. We do not want these to be highly departmentalised. It is time the Government of Tamil Nadu thought of building up an industrial cadre, if they are going to invest crores of rupees in the promotion of industries. Therefore, I endorse the plea of the hon. Member Thiru. Swaminathan that we should have an industrial cadre developed in our State so that we have qualified people who are specialists in various aspects of industrial development. I would request the Hon. the Chief Minister to do this. He has already made a good beginning in that advertisements have been made in papers for some executive posts in the District Industrial Centres. I welcome this new philosophy of the Tamil Nadu Government and hope that it will be extended so that, in a period of ten years, we will have highly trained technocrats to take charge of this Department even at the very top.

Sir, I would now refer to the infrastructural facilities in our State. Over the past 12 years, I have been studying Budget documents. I had studied Budget documents even 5 or 6 years before I entered the Legislative Council. One aspect which has struck me is that Tamil Nadu has never stressed in any of its Budget documents the aspect of building up Railway lines in the South. We do not seem to have devoted any attention to this aspect Probably. I am unfair to the Government and it is probable that they may have done it in their notes to the Planning Commission. But, nonetheless, a note to the Planning Commission will not receive attention unless the matter finds a place in the Budget documents and the Members are allowed to express their views on the lack of railway facilities in the South. We have neglected railway-line development phenomenally in Tamil Nadu and it is now costing us dear because it as a very good index of industrial development. Unless a railway communication facility for the transport of goods—not merely of

passengers—is built up well, we cannot have development in the hinterland of our State. I remember the period 40 or 50 years ago when we had only the main railway line running from Madras (via) Panruti, Cuddalore, Thanjavur and Tiruchirappalli. At that time, when a chord line was laid (via) Ulundurpet and Vridhachalam, phenomenal development took place in those areas. Therefore, I would plead with the Hon. the Chief Minister to get a document prepared outlining the details in clear and precise terms. I know that it is not possible of achievement within 3 years or 5 years. Railway line development will cost us crores of rupees and it may require a ten year plan. But at least we must have a perspective plan of what we require in Tamil Nadu for the development of railway lines. A long-pending demand has been the laying of the Tuticorin-Madurai-Dindigul-Karur railway line. Even the Madras-Villupuram-Tiruchirappalli-Madurai line is a meter-gauge line. A metre-gauge line is an anachronism in the present day. One of the reasons why Tamil Nadu has suffered is the existence of this wretched metre-gauge system which we have inherited from the railway company in the past. The metre-gauge railway has held up development in the South. I would plead that, even if it costs us Rs. 400 crores or Rs. 500 crores, we should try to convert all the railway lines in Tamil Nadu into broad-gauge on a phased plan of 10 or 15 years. It is a costly process; but considering the fact that we are now having a Rs. 1,200 crores development in Bokaro Steels, I fail to see why we cannot invest Rs. 500 crores or Rs. 600 crore in railway-line development in the South.

I would now come to certain specific industries that should be promoted in Tamil Nadu. I believe that many industrialists are anxious to start industries in Tamil Nadu. One such industry is the starting of new extile-spinning mills with 25,000 spindles utmost I am not asking for the big people to be given more spindles but I am asking for this for the smaller inudustrialists who would like to start such mills. Now the Government of India have relaxed all controls. All that one has to do is to get the approval of the Textile Commissioner and the approval of the Government of Tamil Nadu. I believe many applications have been made and I hope the Government of Tamil Nadu will consider them. I do not want the handloom sector to suffer. But this is only a spinning mill and yarn can be produced in larger quantities. The hon. Member Thiru Ramalingam used to metion about the high prices of yarn and, therefore, we should try to promote the starting of



such spinning mills. Because this is something ouside the control of the Government of India, the Tamil Nadu Government may consider yarn-spinning factories of up to 25,000 spindles being set up in various parts of the State. We are now developing cotton crop in a big way and we have surplus cotton and there should be no difficulty in raw material supply. I hope the Government of Tamil Nadu will try to encourage these ventures.

Another field where we are signally deficient is the field of textile-processing units, viz., dyeing, designing and printing ; we have to go outside our State to get them done. I would request the Government to see whether these could not be promoted in our State. We are having so many spinning mills, some weaving mills and some composite mills. We should try to develop the designing, dyeing and printing aspect of textile technology and I hope, since we have a large number of trained skilled personnel, we would be able to do this.

The other point is about the coastline. In the United States generally, and particularly in the east coast of the United States, the coast-line is massively developed and there is much industrial development. Right from New York downwards, along the east coast, the entire coast-line is very well developed. But, unfortunately, in Tamil Nadu we have not been able to develop our coastline. I would request that the sea-food industry, particularly the fishing industry, should be developed. We can develop the coastline and start with the development of fishing trawlers, refrigeration, deep-freeze plants and transportation of sea-food to the interior hinterland. Fish is one of the most essential units of food that is available to the poorest families in our villages. Only on festive occasions, they will have occasion to eat meat and at other times fish is the main diet of the poorest family. We should build up a sea-food industry with proper cold storage facilities.

The other thing I wish to mention is that in the Policy Note starting of mini-cement plants has been mentioned. I hope that there will be no sudden change of policy by the Central Government. Only day before yesterday I read that as far as cement projects were concerned, they were not going to allow integrated cement plants. They will have a klinker factory at one place and the crushing factory at another place. I do not understand this concept of industrial policy. Why should they interfere in the starting of factories or industries ? Why should they not allow these people to

grow, then tax them and even tease them in the Labour Department? This is one of the most inhibiting factors for growth. As my hon. friend Thiru Swaminathan said, there are many of us, including myself, who are willing to invest and start industries. Any time the Civil Supplies Minister might push me out of my present trade and I have to think of starting industries also because he is entering the retail trade. Therefore, we will all have to think about industries and this will be a welcome change for us. Any industrilist however, will have to consider the pay-back period for the capital invested. He wants to know whether the capital he has invested will be recovered in six years of five years of whether it will extend to 8 or 9 years. No person who is investing money wants the feed back period to extend beyond seven years. This is something which the Government will have to realise. The Government ask people to start industries to provide employment. I do not accept this philosophy. Nobody will start any industry only to provide employment; there are other reasons for starting factories. I would certainly like to provide employment for people. But there are other factors, realistic, pragmatic factors which the Government will have to take into account.

(முற்பகல் 10-40)

One point about Central Projects. I would not like fully to endorse what my hon. Friend Thiru Swaminathan said. We have had a good share of Central projects in the past. At that time, it was easy because we had good friends in the Industries Department in the State and in the Industries Department at the Centre. I know that many of the private industries were developed in Tamil Nadu because the industries Minister sponsored the cases with good motives. I am not accusing anyone of any bad motives. With good motives, he used to take the files to Delhi and see that sanction was accorded by the Union Minister for Industries. Unfortunately, that was possible when the political complexion of the State Government and the Central Government was the same whereas, now, it is no longer the same. But, nonetheless, we must actively sponsor applications from our State. I belive that in Karnataka and Panjab such a thing in happening the chief Ministers there do ask the Ministers in charge of Industries to do this work. It is no doubt not a very pleasant task but it has to be done if industries have to be generated.

THIRU G. SWAMINATHAN: I referred to two different periods, namely, from 1960-61 to 1967-68 and from 1968-69 to 1978-79.

THIRU A. R. DAMODARAN: I think he has chosen an unfortunate period. The period from 1967 to 1969 has been the most



uncertain period in India's post-Independence history. As you know, in 1967, we bad to forgo the Fourth Five-Year Plan and we had Annual Plans. Nontheless, the State should press for more Central sector projects. One of the biggest developments is happening in Neyveli where Rs. 236 crores are going to be spent on the second mine-cut and the second thermal station. I would still plead, as I have done in the past, that we must try to get a petro-chemical complex in Madras Refineries. Now, a 6 million tonnes refinery is going to come up at Mathura. Koyali has already got its petro-chemical complex. When Thiru Bharooah was Minister, Bongaighaon in Assam got some sort of a petro-chemical complex. I am very much worried because unless we press our claim now, the Mathura refinery may very well walk away with its petro-chemical complex because it is located very near to Delhi and we know that the lobbying group is very strong there. Therefore, if we do not get a petro-chemical complex established in Tamil Nadu now, we may not get it at all. One litre of naphtha, if it is used in the manufacture of petro-chemicals, will give nearly 150 times the value of one unit of crude petroleum product. It will start a chain of industries and we will not be able to catch up with the industrial development. In Koyali, Rs. 600 crores of development has taken place and a lot of medium-scale industries have come up. Therefore, I request the Hon. the Chief Minister to investigate this aspect.

I would also request the Hon. the Chief Minister to press for the expansion of the Integral Coach Factory as one of the Central Sector Projects. In the coming Five-Year Plan periods the demand for Railway wagons, etc. is going to increase to a very large extent. Therefore, I would request him to see that the development progrommes of Central-sector industries are carried out in Tamil Nadu and that they are not taken away to other States. The production of locomotives could also be started in Tamil Nadu.

Tamil Nadu offers a vertiable heaven for defence industries to be started. If viewed strategically, Tamil Nadu is probably the best and the safest place to start a defence industry. Excepting for the old Ordinance Factory at Aravankadu in the Nilgiris which has been in existence from my grandfather's time and the Avadi Tank Factory, we have started no defence factories and the Northern States are walking away with such factories. I would request the

Hon. the Chief Minister to make a special study of this aspect and see that defence industries, factories for the production of telephones, tele communication equipments, etc., are also started in Tamil Nadu.

I would also request that while furnishing details of the industrial licences granted, data should be provided in the Policy Note regarding the licences given to other States and the licences that have been given to Tamil Nadu. One cannot judge, in the absence of such data, the progress of industrial development in Tamil Nadu, especially in the field of medium-scale and large-scale industries. If such data could be provided in the Policy Note on Industrial Development, it will be a basis for watching the progress and to see that medium-scale and large-scale units come up in Tamil Nadu also in adequate numbers because they also have to develop side by side with the small-scale units.

I would like to say a word about the development of industries in the urban limits of Madras, Madurai, etc. The Government of India had banned the expansion of industries in the urban limits. But, sure enough, 1-1|2 months ago, I read a notification that the Government of India were considering a relaxation of the ban on the expansion of industries in urban limits. Tamil Nadu has been always extremely conservative in following the rules and regulations stipulated by the Central Government. I think a time has come for us to shed this conservative approach and to adopt a little bit of the Punjabi aggressiveness and try to persuade the Central Government. I do not want new industries to be located in the urban limits. But where the existing industries have the facilities of land, etc., they should be allowed to expand their factories because it is of great advantage to them to develop in areas where they have all the other facilities required.

One of the inhibiting factors is the high sales tax in our State. I would request the Hon. the Chief Minister to have a quick analysis made by an independent authority of the rates in the southern region and accept the need to lower taxes, if it is an inhibiting factor in industrial development. In view of the great importance that we are attaching to industrial development, I would also request that some funds may be provided for study teams from the Industrial department. I am not referring only to the Secretaries of the Department, Members of the Indian Administrative Service, because I have seen from experience that while we send a Secretary



road for studying sheep-rearing in Australia, on return he will be osted to the Co-operation Department and then transferred to the evenue Department. I would request that industrial cadres, perons in charge of the District Industries Centres, may be sent on udy tours not in western countries, but in the Asian region, to udy the industrial development in Singapore and Malaysia where ee trade zones have come into being and also to study the indusial development in Japan. The Government can send 20 officers om the Industries Department, not high-level ones, but of the iddle cadre so that their whole outlook would change. In fact, am advising the Ministers to go abroad for this reason as their utlook also requires a change and it would be a great benefit to em and to the State. The Hon. the Chief Minister has himself entioned, after he came back from the United States, how various ew ideas have been fostered. Our Ministers who are in charge of velopment works would require this sort of training also. I would ead that they may also be sent.

Regarding the starting of Corporations, I think, this Corporationiania has developed to a very great extent. Of course, we have any useful Corporations. I am not trying to decry the developent work of all Corporations. But it would require a very detailed udy whether we require to multiply our Corporations in this shion. The Hon. the Minister for Transport has announced the roposal for a Road Construction Corporation. Perhaps soon we ill have the Revenue Department forming a Corporation to collect xes. I do not know. The only thing I would like to mention that instead of Government running these Corporations, a time ay come when the Corporations will run the Government. I would erefore request the Government to make a study whether it is solutely necessary to have these Corporations. All the Corporaons that are not required should be wound up and liquidated. here is no harm in doing this. It is possible for the Government argue in any way and say that some Corporations will have this se or that use. It is possible to argue both ways. I hope the lon. the Chief Minister will look into this matter of starting Cororations. I am really afraid that our Corporations will gain control f the Government and we will lose all control over the Governent.

Last but not the least, I commend the Hon. the Chief Minister for having met the industrialists in Madras and it has created a very healthy climate. We should not be afraid of criticism from the extremist leaders, who will say that the Government are helping the industrialists. Labour leaders have also come to realise that without industries, they will have no trade unions to run; they also want industries to be started. The more the industries come up the better for them, because membership will increase, membership fees will increase and they will be in a position to gain strength. I would request the Hon. the Chief Minister that whenever he finds time, he should visit industrial centres in places like Salem and Coimbatore. Even though he may not be able to solve all their problems, at least he can give them an opportunity to bring their problems to his attention, an opportunity which is rarely given to some sectors today. I hope that more contacts, like meeting once in three months the industrialists of various groups, will help the Government to realise the problems and to streamline the procedure, which will help industrial development in Tamil Nadu. Thank you.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1979-80ஆம் ஆண்டுக்கான தொழில் துறை கொள்கைக் குறிப்பின்மீது ஒரு சில கருத்துக்களை இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினமே சட்ட மன்றத்தில் இந்தக் கொள்கைக் குறிப்பின்மீது சரியான முறையிலே பதில் அளிக்க வாய்ப்பில்லாமல், இந்த மன்றத்திலே விளக்கமாக பதில்கள் தருவதாகப் பேசியது பற்றி பத்திரிகைகளிலே வந்ததைப் பார்த்தேன். இந்த அளவிலே நான் இந்த அவையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் துறை ஒரு முக்கியமான துறை. இதில் பேசுவதற்கு எனக்கு நேரம் கொஞ்சமாகக் கொடுத்திருந்தாலும், தலைவர் அவர்கள் ஓரிரு நிமிடங்கள் அதிகமாக நான் எடுத்துக்கொண்டு பேசினால் அதற்குப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.



மாண்புமிகு மேலவைத் தலைவர்: அங்கத்தினர் அவர்களின் கட்சித் தலைவர் அவர்கள்கூட பேச இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நேரம் கொஞ்சம் அதிகமானால் மாண்புமிகு தலைவர் அவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர், தொழில்கள் எந்த அளவுக்குப் பெருகியிருக்கின்றன என்பதை நாம் எண்ணிப்பார்க்கின்றோம். கடந்த ஆண்டில் நம் முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் அளித்த கொள்கை விளக்கக் குறிப்பு மொத்தம் 75 பக்கங்கள் கொண்டதாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு அது 322 பக்கங்கள் கொண்டதாக இருக்கிறது. அது வளர்ந்திருக்கிறது. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புதான் வளர்ந்திருக்கிறதே தவிர, உள்ளபடி தமிழ் நாட்டில் தொழில்கள் வளரவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

அதற்கு முன்னால் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதை முதலமைச்சர் அவர்களே நேற்றையதினம் சட்ட சபையிலே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பதிவி ஏற்றது முதல் ஒரு ஆண்டுக்கு தமிழகத்தில் எந்தவிதமான புதிய தொழிலும் ஏற்படவில்லை என்பதை ஒப்புக்கொண்டதாக பத்திரிகையிலே வந்திருக்கிறது. உண்மையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்மைகளை ஒப்புக்கொண்டதற்காக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் தொழில்கள் ஏன் வளரவில்லை என்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. என்றாலும் அவர்கள் அளித்திருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே பார்க்கும்போது, அதிலே சிலவற்றை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே ஒன்றாக, தொழில் தொடங்க வேண்டுமென்று நினைக்கின்ற முதலாளிகளுக்கு உரிமைகள் வழங்குவதில் அடைகின்ற இடாபாடுகளைத்

தவிர்க்கின்ற வகையில், 5 ஆர்ஸ் பவர் ஆக இருந்தால், அவர்கள் விண்ணப்பம் போட்டுக் காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை என்பது போல அறிவிப்புக்கள் செய்திருக்கிறார்கள். அடுத்து, ஒன்றியங்களில் தொழில்கள் தொடங்கும்போது உரிமங்கள் கொடுப்பதில் சிரமங்கள் இருக்கக்கூடாது என்ற உத்தரவைப் போட்டிருப்பதற்கு நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முதலில் பாராட்டுகிறேன்.

(முற்பகல் 10.50.)

இன்னும் ஒரு கருத்தை நம்முடைய அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய இந்திய நாட்டிலே பஞ்சாப் போன்ற மாநிலங்களில், ஒரு முதலாளி ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று நினைக்கும் நேரத்தில், அரசை அணுகுகிறார். உடனே அந்த அரசாங்கத்திலே இருக்கிற அதிகாரிகள் அவருக்குத் தேவையான எல்லா உதவிகளையும் 15 தினங்களுக்குள்ளாகச் செய்து கொடுக்கிறார்கள். வெளி நாடுகளிலே, டோக்கியோ போன்ற இடங்களிலே, காலையிலே விண்ணப்பம் கொடுத்தால், மாலைக்குள் அந்த முதலாளிக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து கொடுக்கிறார்கள். அந்தக் காலகட்டத்திலே இங்கே செய்ய முடியாவிட்டாலும், தொழில் ஆரம்பிக்க வருகிறவர்களுக்கு ஒரு மாத காலத்திற்குள்ளாக லைசென்ஸ் முதல் தேவையான அடிப்படைப் பொருள்களுக்கான உத்தரவுகளைப் பிறப்பிக்க நம்முடைய அரசும், தொழில் துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி நான் சொல்லுவதற்கு அடிப்படைக் காரணம் இருக்கிறது. புதிதாக ஒருவர் தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்று எண்ணி அரசாங்கத்தை அணுகும் நேரத்தில் அதிகாரிகளைச் சந்திக்க முடியவில்லை, அமைச்சரவர்களைப் பார்க்க முடியவில்லை. குறிப்பாக முதலமைச்சரவர்களிடம் தொழில் துறை இருப்பதால், அவர்களை அணுக முடியவில்லை என்ற குறைபாடுகள் நாட்டிலே வளர்வதால், மூலதனம் போடக்கூடிய முதலாளிகள் இந்த மாநிலத்தில் ஏன் மூலதனத்தைப் போட்டுவிட்டு, இவர்கள் பின்னால் சுற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்று எண்ணி, பக்கத்து மாநிலங்களுக்குப் போகும் துர்பாக்



கியமான நிலைமை இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன. அவர்களைக் குறை சொல்லவில்லை. தொழில் துறை என்பது பெரிய துறை. தொழில் துறையைப்பற்றி அவருக்குப் பல எண்ணங்கள் இருக்கும். அவரேகூட 'நான் ஏன் பிறந்தேன்' என்ற கட்டுரையை எழுதியபோது, ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். "தொழில் துறை லஞ்சம் வாங்க வாய்ப்புள்ள துறை, எனவே அந்தத் துறை நாவலரிடம் இருக்க வேண்டுமென்று சொன்னேன். அண்ணா அவர்களும் அப்படியே செய்தார்கள்" என்று ஆனந்த விகடன் பத்திரிகையில் எழுதினார். எனவே அந்தத் துறையை * * * என்று கருதித்தான் அவர்களே அந்தத் துறையை வைத்திருக்கிறார்களோ, என்னவோ.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சொல்லுகின்ற வாசகம் சரிதானா? * * *

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவருடைய கருத்து என்பதால் தான் சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவருடைய கருத்து என்றால் இன்னும் தப்பு.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தொழில் துறையைப் பற்றி அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மேலவை, உண்மையான மேலவையாகத்தான் இருக்குமென்று நம்பிக்கொண்டிருந்தேன். என்ன காரணமோ தெரியவில்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இப்படிப் பேசத் துணிந்திருக்கிறார்கள். முதன்முதலாக நான் எம்.எல்.சி. ஆக வந்தபோது, கன்னிப் பேச்சில் ஒரு கருத்தைக் குறிப்பிட்டேன். எந்த அளவிற்குப் பந்தை எறிகிறோமோ அந்த வேகத்திலேயே பந்து திரும்பி வரும் என்று சொல்லியிருக்

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

கிறேன். பிறகு பதில் சொல்லும்போது மனம் கசப்படையக் கூடாதென்று சொல்லிக்கொள்கிறேன். இதெல்லாம் தேவை தானா என்பதையும் தலைவரவர்கள் முடிவு செய்ய வேண்டு மென்று கோருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : * * *. என்று சொன்ன பகுதியை குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : அரசாங்கம் மாநிலத் திட்டக் குழு என்று நியமித்து, அந்தக் குழுவும் ஓர் அறிக்கை தந்திருக் கிறது. அந்த அறிக்கையில் 6-வது 5 ஆண்டுத் திட்டத்தில் 25 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான திட்டம், அதில் தொழில் துறை மூலமாக 13 லட்சம் பேர்களுக்கு 5 ஆண்டுகளில் வேலை வாய்ப்பு தருவதற்கான திட்டம் என்று திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். நான் பணிவோடு இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆட்சி வந்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. முதலமைச்சரவர் களே, முதல் ஆண்டில் எந்தவிதமான தொழிலையும் ஆரம்பிக்க வாய்ப்பில்லை என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆண்டுக்கு இரண்டு லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு என்று திட்டம் தீட்டி யிருக்கிறார்களே, அந்தத் திட்டத்தை எப்போது நிறைவேற்றப் போகிறார்கள் என்பதைத்தான் முதலாவதாகத் தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய முதலமைச் சரவர்கள்கூட, டாக்டர் நாயுடம்மா அவர்கள் தலைமையிலான குழு கொடுத்த அறிக்கையின் பேரில், 1 ½ லட்சம் பேர்களுக்கு வேலை தரக்கூடிய ஒரு திட்டத்திற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்கள். பொது மக்கள் மத்தியில் செய்தி வருகிறது. 27 லட்சம் பேர்களுக்கு வேலை, அதிலே தொழில் துறையிலே 13 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு என்று பத்திரிகைகளில் செய்திகளைப் போடுகிறார்கள். என்ன நினைப் பார்கள் பொது மக்கள்? இந்த ஆட்சி வந்த பிறகு லட்சக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு தருகிறது, ஆனால் நம்முடைய வீட்டுப் பிள்ளைக்கு வேலை இல்லை என்று கிராமங் களில் உள்ளவர்கள் நினைக்கும் நிலைமை நிச்சயமாக ஏற்படும்.

---

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



எனவே அரசாங்கம் ஒரு திட்டத்தை அறிவிக்கும்போது, எந்த அளவிற்குச் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த ஆட்சி இருக்கின்றவரையில் ஒரு லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கித் தந்தால், உள்ள படியே பெரிய சாதனை அது என்று நான் நம்புவேன். ஆனால் அதற்கான திட்டங்கள் இல்லை. ஏதோ பத்திரிகைகளில் செய்திகள் வரவேண்டுமென்பதற்காக 1 ½ லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு, 127 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு என்று அறிவிப்பது நியாயமல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கொடுத்திருக்கின்ற புள்ளி விவரங்களைப் பார்க்கும் போது, இந்த இலாக்கா எப்படி இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் திட்டப் பணிகளுக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் எவ்வளவு என்று பார்க்கிற நேரத்தில், பெருந் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் ஆகியவற்றுக்கு 1977-78-ல் 8.51 கோடி ரூபாய் ஒதுக்கியதற்கு மாறாக 1979-80ஆம் ஆண்டில் 8.53 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு தொழில்கள் வளரவில்லை, இந்த ஆண்டு வளரப் போகிறது என்று சொல்லிவிட்டு, கடந்த ஆண்டு ஒதுக்கிய பணத்தைவிடக் குறைத்து ஒதுக்கினால், எங்கே இந்தத் தொழில் கள் வளரப்போகின்றன என்ற சந்தேகம்தான் ஏற்படுகிறது. சுரங்க உலோகத் தொழில்களுக்கு 23 லட்சம் ரூபாய் 1977-78-ல் ஒதுக்கிவிட்டு, இந்த ஆண்டு அந்தத் தொழில்களை வளர்க்கப் போகிறோம், தனி வாரியம் அமைக்கப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு, 12 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்திருப் பதைப் பார்க்கும்போது, சந்தேகங்கள் இயற்கையாக வருகின்றன. அதைப் போலவே குறிப்பின் 62ஆம் பக்கத்தில் உள்ள விவரப்படி திட்டப் பணிகளுக்காக 'டிட்கோ' நிறுவனம் மூலதனமாகவும், கடனாகவும் 421 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதற்கு மாறாக, 'டிக்' நிறுவனம் 50 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறது.

தமிழ்நாட்டில் அனைத்துத் துறைகளிலும் தயார் செய்யும் பொருள்களின் மொத்த மதிப்பீட்டில், இரசாயனத் தொழில்களின்

பங்கினைப் பார்க்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த 1974-75-ல் 8 சதவிகித வளர்ச்சி இருந்தது. 1975-76-லே 8.92 சதவிகித வளர்ச்சி இருந்தது. ஆனால் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, கடந்த இரண்டு ஆண்டுகளில் இரசாயனத் தொழில்களின் வளர்ச்சி எவ்வளவு என்பது கொள்கைக் குறிப்பிலே இடம் பெறவில்லை. முதலமைச்சரவர்கள் இந்த விவரங்களைத் தரும்போது, இதற்கு முந்தைய ஆண்டுகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக, இந்த ஆண்டில் அவர்கள் ஆட்சி வந்ததற்குப் பிறகு எந்த அளவிற்கு தமிழ்நாடு வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதையும் அறிவித்தால், எங்களுக்கு உதவியாக இருக்கும். மருந்துத் தொழில்களைப் பார்க்கும்போது, 30 ஆண்டுகளுக்கு முன்னாலே 30 கோடி ரூபாய் அளவு பெறுமானமுள்ள மருந்துகள் தமிழகத்தில் தயாரிக்கப் பட்டன என்பதற்கு மாறாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்தில், 10 ஆண்டுக் கால வளர்ச்சியையும் சேர்த்து, 1975-76-ல் மருந்துத் தொழிலில் உற்பத்தி 200 கோடி ரூபாயாக உயர்ந்திருந்தது. அதையும் புள்ளி விவரத்தில் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் மருந்து உற்பத்தி எந்த அளவிற்கு அதிகரித்திருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கிறார்களா என்றால் இல்லை. அதைப் போலவே பிளாஸ்டிக் செய்முறைத் தொழிலைப் பொறுத்தவரையில், இந்தியாவில் 6,000 தொழில் நிலையங்கள் உருவாகப் போகின்றன என்பதைப் பார்க்கும்போது, தமிழ்நாடு ஒரு கணிசமான அளவிற்கு அந்தத் தொழிலில் பங்கேற்கும் என்று எண்ணினேன். ஆனால் தமிழ்நாட்டில் 300 தொழில் நிலையங்கள் தான் உருவாக்கப்பட இருக்கின்றன என்பதை எண்ணும்போது, இன்னமும் ஏன் அதிகமாக அக்கறை எடுத்துக்கொள்ளக் கூடாதென்பதை தொழில் துறை எண்ணிப் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11-00)

அதைப் போலவே ரப்பர் ப்ரோசசிங் என்ற துறையில் சிறு தொழில் நிலையங்கள் மொத்தம் நாட்டிலே 3,000 இருக்கின்றன அதில் தமிழ்நாட்டிலே 120 தொழில் நிலையங்கள்தான் இருக்கின்றன என்பதை எண்ணி அதிகமான



மோட்டார் வாகனங்கள் இருக்கின்ற இந்த மாநிலத்தில் ரப்பர் தொழிலை வளர்ப்பதற்கான வாய்ப்பினை இன்னும் அதிகமாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இப்படி அனைத்து விஷயங்களிலும் இந்திய நாட்டினுடைய பிற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய தமிழ்நாடு சில தொழில்களில் மிக மிகப் பின்தங்கியிருக்கிறது.

முந்திரிப் பருப்பைப் பக்குவப்படுத்தக்கூடிய தொழிற்சாலைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமாக ஆரம்பிக்கப்பட்டன. அத்தனை தொழிற்சாலைகளும் அதாவது 115 தொழிற்சாலைகளும் இன்றையதினம் மூடப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் தொழிற்சாலைக்குத் தேவையான முந்திரியை அரசால் உற்பத்தி செய்து கொடுக்க முடியவில்லை. அரசாங்கத் தரப்பில் பதில் தரும்போது கூட முந்திரி உற்பத்தி கூடவில்லை என்பது உண்மை தான் என்று ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இனிமேல் விவசாயத் துறை, காட்டிலாகா போன்றவற்றைக் கேட்டு முந்திரியை நட்டு, அது பூத்து, காயாகி, பழமாகி அதற்குப் பிறகு அந்தப் பழத்தைப் பறித்து பழத்திலிருந்து கொட்டைகளை எடுத்து அதன் பிறகு அந்த மூடப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளுக்குக் கொடுத்து அதன் பிறகு இந்த, 115 தொழிற்சாலைகளையும் திறக்கப் போகிறோம் என்று சொன்னால், எந்தக் காலத்தில்? அது சீக்கிரத்தில் நடைபெறக் கூடிய காரியமா? நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளில் இலட்சக்கணக்கான பணத்தை முதலீடு செய்துள்ள அந்த முதலாளிகள் இன்றையதினம் அவர்கள் முதலீடு செய்த பணத்தை எடுக்க முடியவில்லை. அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். மத்திய அரசோடு இந்த அரசு தொடர்பு கொண்டு முந்திரிப் பற்றாக்குறையால் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு அதிக அளவில் முந்திரிக் கொட்டையை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு மாநில அரசு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செய்தித் தாள் காகித ஆலைத் திட்டம் என்கின்ற ஒரு திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனே தமிழ் நாட்டில் 100 கோடி ரூபாயிலே பெரிய திட்டமாக வரும் என்று சொன்னார்கள். சில சட்டமன்ற உறுப்பினர்களுடைய கனவிலே அண்ணா வந்து பார், யார் தொகுதியில் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னதாகக் கூட பேசப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினருடைய கனவில் வரவில்லையா ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: என்னுடைய கனவில் வரவும் இல்லை. எனக்குக் கனவில் நம்பிக்கையும் இல்லை. இந்தத் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 250 டன் நியூஸ் பிரிண்ட், 50 டன் காகிதம் தயாரிக்கின்ற தொழிற்சாலை என்றும் கரும்புச் சக்கை மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படும் என்றும் சொன்னார்கள். அந்தத் திட்டம் இன்றையதினம் 130 கோடி ரூபாய் திட்டமாக உருவெடுத்திருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அறிவித்தும், 4 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும் என்ற உத்தரவாதம் அறிவிக்கப்பட்டிருந்தும், அந்தத் திட்டம் குறித்து இதுவரை இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கு ஒருங்கிணைந்த திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால் 2 ஆண்டு காலமாக மத்திய அரசிடம்தான் அது இருக்கிறதா, அல்லது இந்த அரசு காலதாமதம் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியதா என்பதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் பேசினார்கள். அவர்கள் பேசியதிலிருந்து மத்திய அரசுக்கு இந்த அரசு அனுப்புகின்ற தேவைகள், உரிமங்கள், அனுமதிகள் பற்றிய கோரிக்கைகளை எல்லாம் ஒருவேளை மத்திய அரசு சரியாகக் கவனிக்கவில்லையோ என்கின்ற எண்ணம் உண்டாகிறது. இந்த அரசு மத்திய அரசுக்கு இதுபோன்று ஏதாவது அனுப்பினால் அனுப்புகின்ற



நேரத்திலிருந்து குறைந்தபட்சம் 3 மாத காலத்திற்குள் அதற்குரிய பதிலைக் கொடுக்காவிட்டால், உரிய முறையில் நமமுடைய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக எந்த விதத்தில் இந்த அரசு நடவடிக்கை எடுத்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, பரவலாக அதிகாரம் இருக்க வேண்டுமென்றும் மாநில சுயாட்சி இருக்க வேண்டுமென்றும் கேட்டோம். ஒரு நாட்டிலே தொழில்கள் வளர வேண்டும், வேலைவாய்ப்புகளை அதிகமாக உண்டாக்க வேண்டும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும் என்கின்ற வகையில், அதற்காகப் பரிகாரம் காண்கின்ற வகையில், உரிய வழிவகைகளைக் காண அந்த நாட்டை ஆளுகின்ற அரசுக்கு உரிமையுண்டு. அப்படிப்பட்ட உரிமைகளை மத்திய அரசு முடக்கி வைத்துக் கொண்டிருக்கிறது என்றால், உரிமங்களை, அனுமதிகளை, தேவைகளை உரிய காலத்தில் மத்திய அரசு அனுப்பவில்லையென்றால், இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிகப் பணிவன்போடு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கூட்டுத் துறையில் செய்த முதலீடு என்ற அடிப்படையில் ஸ்பிக் நிறுவனத்திற்கு 510.5 இலட்சம் ரூபாயும், அதற்கு மேலாக கடனாக 200 இலட்சம் ரூபாயும் கொடுத்திருக்கிறது. இவ்வளவு தொகையை முதலீடு செய்த பிறகு, இந்த ஸ்பிக் நிறுவனம் எப்படி இயங்கிக் கொண்டிருக்கிறது ? அரசு இந்த அளவு பணத்தை ஒதுக்கிய பிறகு, அது எப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அரசு ஆராய்ந்து பார்த்ததா ? அதுமட்டுமல்ல. இலட்சக்கணக்கான ரூபாய்களை அவர்கள் செல்ஸ் டாக்ஸ் என்ற அடிப்படையில் செலுத்தவில்லை. மேலும் மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய இலட்சக்கணக்கான ரூபாய்களை அவர்கள் செலுத்தவில்லை. தனியாக விவசாயி மின் கட்டணத்தைக் கட்டவில்லையென்றால், மின் இணைப்பைத் துண்டித்து விடுகிறோம். அதே போல் சிறு வியாபாரிகள் மின் கட்டணத்தைச் செலுத்தவில்லை

யென்றால், உடனே மின் இணைப்பைத் துண்டித்து விடுகிறோம். ஆனால் அரசாங்கமே பெரும் பகுதிப் பணத்தை மூலதனமாகப் போட்டு, தனியாரிடம் அந்தத் தொழிற்சாலையை பொறுப்பை தந்து விட்ட ஒரே காரணத்திற்காக, சொற்ப முதலீட்டைத் தன் பங்காகப் போட்ட அந்தத் தனிப்பட்டவர் தன்னுடைய சொந்த நிறுவனத்தைப்போல் கருதி செயல் பட்டால், அதைத் தட்டிக் கேட்கின்ற அதிகாரம் இந்த அரசிடம் இருக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நலிந்த நிறுவனம் என்ற அடிப்படையில் "தமிழ்நாடு ரப்பர் லிமிடெட்", "லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட்", டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட்" இவைகளுக்கெல்லாம் இந்த அரசு உதவி செய்திருக்கிறது. நலிந்த தொழில்களுக்கு உதவி என்கிற இந்தத் திட்டம் 1965ஆம் ஆண்டு திரு. பக்தவத்சலம் அவர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்களும் அதை நிறைவேற்றினார்கள். கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்திலும் நிறைவேற்றினார்கள். இப்பொழுது அதைத் தொடர்ந்து இந்த அரசும் உதவி செய்து வருகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இந்த வகையில் ஏதாவது செய்தால், உடனே உள்நோக்கம் கற்பித்து, லஞ்சம் ஊழல் என்று பேசப்பட்டு வந்தாலும், இன்றையதினம் இந்த அரசும் அப்படித்தான் பின்பற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்கின்ற நேரத்தில் இவர்களும் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற அடிப்படையில் உதவிகளைச் செய்கி றார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன். வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று நான் குற்றச்சாட்டைச் சொல்லுகின்ற நேரத்தில் வேண்டுமென்றே ஒருவருக்குச் செய்ய வேண்டியதைச் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்மிடிப்பூண்டியில் இருக்கிற ஒரு தொழிற்சாலைக்கு முதலமைச்சர் அவர்கள் முதலிலே செய்கிறேன் என்று சொல்லி, 193 இலட்சம் ரூபாய் வரை அதற்கு உதவி செய்து, மத்திய அரசு



கைவிரித்து விட்டது என்று சொல்லி அந்த சக்தி பைப்ஸ் தொழிற்சாலை இன்றைக்கு மூடப்பட்டிருக்கிறது. நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் இன்றையதினம் வீட்டிலே இருக்கி றார்கள். அக்ரிமெண்ட் செய்கின்ற நேரத்தில் சப்சிடி இவ்வளவு பட்டினி கிடக்கிறார்கள். கடந்த 10 மாத காலமாக அந்தத் தொழிலாளர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களையும் சந்திக்க முயற்சி செய்திருக்கிறார்கள். சந்திக்க முடியவில்லை. அவர்கள் சென்னைக்கும் கும்மிடிப்பூண்டிக்கும் வந்து போய்க்கொண்டிருக் கிறார்கள். இன்று வரை பிரச்சினைகள் தீரவேயில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நாட்டிலே இருப்பது நல்லதல்ல என்பதை நான் அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நலிந் தவர்களுக்கு உதவி செய்கிறோம் என்று அரசு சொல்லுகின்ற நேரத்தில், எப்படி இந்த அரசு தொழிற்சாலைகளை எடுத்து உதவி செய்திருக்கிறதோ அது போல் சக்தி பைப்ஸ் தொழிலாளர் களுக்கும் உதவி செய்கின்ற வகையில் வழிவகை செய்து நடவடிக்கை எடுத்து நீதி வழங்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சர்க்கரைத் தொழில் இந்த ஆண்டு எந்த அளவுக்கு மந்தமாக இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 50 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் நஷ்டம் அடையக் கூடிய நிலைமையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் வேடிக்கை என்ன வென்றால், விவசாயிகள் சப்ளை செய்த கரும்புக்கு இன்னும் பணம் கொடுக்கவில்லை. வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு விவசாயிகள் ஒப்பந்தப்படி கரும்பை சப்ளை செய்திருக்கி றார்கள். அக்ரிமெண்ட் செய்கின்ற நேரத்தில் சப்சிடி இவ்வளவு கொடுக்கிறோம் என்று எழுத்து மூலமாகக் கொடுத்து அதன் அடிப்படையில் விவசாயிகள் கரும்பை சப்ளை செய்த பிறகும், ஓராண்டு காலண்டு ஆனபிறகும் இதுவரை சப்சிடியை கூட்டுறவு ஆலை கொடுக்கவில்லை. அதுபற்றிக் கேட்டால் பணம் இல்லை, பண நிலைமை நல்ல முறையில் சீர்திருந்திய பிறகு பணம் தரலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கும் கொடுக்க வேண்டிய பணத்தை விவசாயி கொடுக்கவில்லையென்றால்,

அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. அரசாங்கம் கொடுக்க வேண்டிய பணத்தை விவசாயிக்குக் கொடுக்கவில்லை என்றால், என்ன நிலை? எவ்வளவோ கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த கரும்பை கூட்டுறவு ஆலைக்குக் கொடுத்த பிறகு, அதற்கான சப்சிடியை, அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு கூட்டுறவு ஆலை சொல்லியபடி கொடுக்கவில்லை. இவ்வளவு நாட்கள் ஆன பிறகு அந்த விவசாயி எப்படித்தான் பொறுத்துக்கொள்ள முடியும்? எவ்வளவு நாள் தான் பொறுத்துக்கொள்ள முடியும்? இதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(பிற்பகல் 11.10)

அதைப் போலவே இன்றையதினம் தொழில்களை வளர்ப்பதற்குப் பல நிறுவனங்களை நாம் வைத்திருக்கிறோம். இப்போது பல கார்ப்பரேஷன்கள் இருக்கின்றன. அந்தக் கார்ப்பரேஷன்கள் எப்படிச் செயல்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவது மிகவும் நல்லது என்று கருதுகிறேன். குறிப்பாக 'டிக்' எனப்படும் தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் பல ஆண்டு காலமாக இயங்கிக்கொண்டு வருகிறது. இங்கேகூட அது பற்றிய ஒரு வினாவுக்கு கேள்வி நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்குப் பதிலாக மாண்புமிகு முன்னவர் அவர்கள் பதில் சொன்னார்கள். 156 தொழிற்சாலைகள் இந்த டிக் நிறுவனத்திடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. ஆனால் இவ்வாறு திருப்பித் தரவில்லை என்று எத்தனை கம்பெனிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால் 9 கம்பெனிகள் மீதுதான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 8, 10, 12 ஆண்டுகள் என்று வட்டியும், முதலும் திருப்பிச் செலுத்தாத கம்பெனிகள் மீது இந்த அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த அரசாங்கத்திற்கு யார் வேண்டாதவர்கள், யார் விரோதிகள் என்று நினைக்கிறார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். அவர்கள் திருப்பிச் செலுத்துவதில் ஒரு ஆண்டு அதிகமாகிவிட்டால்கூட 'ரெவின்யூ ரெக்கவரி ஆக்டைப் பயன்படுத்தி அவர்கள் மீது



நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கேள்வி கேட்டும் சரியான விளககம் தரவில்லை. முன்பு கூட தான் ஒரு தடவை சொல்லியிருக்கிறேன். அந்த 'டிக்' நிறுவனத்திலே தலைவராக ஒருவரை நியமிக்கும்போது, சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்றும், அந்த நிறுவனத்திடமிருந்து கடன் வாங்கிய ஒருவர் திருப்பிச் செலுத்தாமல், வட்டியும் செலுத்தாமல் இருந்தால், அப்படிப்பட்டவரை தலைவராகப் போடக்கூடாதென்றும் சொன்னேன். திரு. எஸ். எம். சுப்பிரமணியம் என்ற ஒருவரை தலைவராக இந்த அரசாங்கம் கடந்த ஆண்டு நியமித்தது. அது மிகவும் கண்டிக்கத்தக்கது என்று நான் சொன்னேன். உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எப்படி கடன் வாங்கிய ஒருவரை நியமனம் செய்திருந்தால், அவர் ராஜிநாமா செய்துவிடுவார் என்று சொன்னார். அது போலவே அவர் ராஜிநாமா செய்தார். அவருடைய ராஜிநாமா ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மறுபடியும் இப்போது ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் யார்? இந்த விவகாரத்துக்கு உள்ளே நான் அதிகமாகப் போகவில்லை. அவரும் 50 லட்சம் ரூபாய் கடன் வாங்கி அதைத் திருப்பிச் செலுத்தாமல், அந்தத் தொழிற்சாலைகள் சரியாக இயங்காததால், வட்டியும், முதலும் செலுத்த முடியாத நிலையில் இருப்பவர். மத்திய அரசு கொடுத்த கடனைத் திருப்பிச் செலுத்தாததால், அந்தக் கம்பெனியை மத்திய அரசே எடுத்து அதிலே ஒரு ரிசீவரைப் போட்டது. அப்படிப்பட்ட ஒருவர் இந்த 'டிக் நிறுவனத்திற்குத் தலைவராகப் போடப்பட்டிருக்கிறாரென்று சொன்னதால், இந்த நிறுவனம் தொழிலை வளர்க்கப் பயன்படுமா? இந்த அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து இந்த நிறுவனம் கடனாகக் கொடுத்த பணத்தை வசூலிக்க வேண்டும். இப்படி பல ஆண்டுக் காலமாக வாங்கிய பணத்தையும், அதற்கான வட்டியையும் திருப்பிச் செலுத்தாதவரை இந்த 'டிக்' நிறுவனத்துக்குப் போட்டிருப்பது நியாயம் தானா?

தொழில் துறையிலே வளர்ச்சி ஒரு பக்கம் இருந்தாலும், நிர்வாகத்திலே குறைபாடுகள் இருக்கின்றன. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகின்றேன். தொழில் துறையில், புவியியல் பிரிவு நீரேற்றும் பம்பு வாங்கிய ஒரு விவகாரத்தில் சில விஷயங்களைச் சொல்ல

விரும்புகிறேன். முதலில் 'வால்டாக்ஸ்' கம்பெனியிலிருந்து ஒரு பொறியை 33,000 ரூபாய்க்கு வாங்கி அது நல்ல முறையில் இயங்கியது. ஆனால், பிறகு 'கிர்வ்ஸ்-காட்டன்' கம்பெனியிலிருந்து 56,328 ரூபாய்க்கு ஒரு பொறி வாங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தப் பொறி வேலை செய்யவில்லை. ஏற்கெனவே தால்டாக்ஸ்' கம்பெனியிலிருந்து வாங்கிய பொறி நல்லமுறையில் வேலை செய்யும்போது, அதைவிட, இரண்டு மடங்கு விலையுள்ள இன்னொரு பொறி வாங்கியிருக்கிறார்கள். அது தேவையில்லாத ஒன்று. அதற்கான ஆதாரம் ந.க. எண். 13295/சி1/77 நாள் 24-2-1978 உள்ள கோப்பில் பக்கம் எண் 301 முதல் 303 வரையில் இருக்கிறது. அந்தக் கோப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரவழைத்துப் பார்க்க வேண்டும். ஏதோ அமைச்சர்கள் உறுப்பினர்கள்தான் தவறு செய்யக் கூடாது, அதிகாரிகள் தவறு செய்யலாம் என்ற மனப்பான்மை இருக்கக்கூடாது. இந்த மனப்பான்மை மாற்றப்பட வேண்டும்.

தொழில்கள் வர வேண்டும், அவைகள் வளர வேண்டும் என்று சொல்கின்ற அதே நேரத்தில், ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள், தங்களுக்குக் கிடைத்த அதிகாரத்தை, உரிமத்தைத் தவறாகப் பயன்படுத்தாத வகையில் நாம் கண்காணிக்க வேண்டும். உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். 'சோலார் பார்மஸூட்டிக்கல் இன்டஸ்ட்ரீஸ்' என்று ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்கு வழங்கப்படும் 'இன்டஸ்ட்ரியல் ஆல்கஹாலை' அவர்கள் தவறாகப் பயன்படுத்தி, கொள்ளையடிக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. இன்வாய்ஸ் என்னிடத்திலே இருக்கிறது. இப்படி ஒரு தொழிற்சாலையினர், என்ன உற்பத்தி செய்ய வேண்டும் என்று ஒரு பொருள் கொடுக்கப்படுகிறதோ அந்தப் பொருளை உற்பத்தி செய்யாமல் தவறான வழிகளில் ஈடுபட்டு பணத்தைச் சம்பாதிக்கிறார்கள். இவற்றை இந்த அரசாங்கம் அனுமதித்தால், இந்த அரசாங்கம் எந்த அடிப்படையிலே தொழில்கள் வளர வேண்டும் என்று நினைக்கிறதோ அந்த நல்லெண்ணத்திற்குக் களங்கம் கற்பிப்பதாகும்.

தொழில்களை வளர்த்து, பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற வகையில், இந்த அறிக்கையிலே பட்டைப்பற்றியும், பட்டுத் தொழில் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. பட்டுப்பூச்சி வளர்த்து 40 ஆயிரம் பேர்களுக்கு அதிலே வேலைவாய்ப்பு உண்டாக்கி கிராமப்புறங்களிலே வேலைவாய்ப்புத் தரப்போகிறோம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டி



ருக்கிறார்கள். 40 ஆயிரம் பேர்களுக்கு எத்தனை ஆண்டுகளிலே இந்த வேலை வாய்ப்பை அளிக்கப்போகிறார்கள் என்பது வேறு. அது பிரச்சினைக்குரிய விஷயம். ஆனால், இந்த அறிக்கையிலே பக்கத்திற்குப் பக்கம், பட்டு, பட்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு குறிப்பைக் கொண்டு வர விரும்புகிறேன். பட்டுத்தொழிலை அதிகமாக வளர்க்கப்போகிறோம் என்று சொல்லும் இந்த அரசாங்கம் ஏற்கெனவே இருக்கும் பட்டுத் தொழில்கள் எப்படி இருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். பட்டு என்று சொன்னாலே காஞ்சிபுரம்தான் நினைவுக்கு வரும். அந்த அளவுக்குப் பெயர் பெற்ற காஞ்சிபுரத்தில், இந்த அரசு வந்த பிறகு 1978ஆம் ஆண்டு ஒரு உத்தரவு போட்டு, வட ஆற்காடு மாவட்டத்தில் ஆரணி உள்ளிட்ட பகுதிகளையும் சேர்த்து ஒரு 'பெடரேஷன்' அமைக்கப்பட்டு அதிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எப்படி இயங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு ஒரு அரைமணி நேரமாவது வேண்டும். ஆகவே, நேரமில்லாததால் நான் சொல்லவில்லை. அவர்கள் எப்படி தவறு செய்கிறார்கள் என்று ஒவ்வொரு இடத்திலிருந்தும் பொறுப்பானவர்கள் கடிதம் எழுதுகிறார்கள். ஆளும் கட்சியினர் தவறு செய்தால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட வரவேற்க மாட்டார்கள். பல்லாயிரக்கணக்கான ரூபாய் அளவுக்கு அந்தச் சங்கத்திலேயிருந்து பணம் சம்பாதிக்கிறார்கள். இப்படி ஒரு நிலை காஞ்சிபுரத்திலே உருவாகியிருக்கிறது. எதிர்க் கட்சிகள் கூட்டங்கள் போட்டுப் பேசுகின்றார்கள். துண்டுப் பிரசுரங்கள் கூட விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதன் மூலம், ஊழலை ஒழிக்கப் போகிறோம் என்று சொல்லும் இந்த அரசாங்கத்திற்கு இந்தத் துண்டுப் பிரசுரங்கள் பயன்படும் என்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இவைகளைக் கொடுக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வருகிறேன். சில தவறுகள் நிகழும்போது, அவைகளை நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். அவைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குறிப்பாக நான்கைந்து நாட்களுக்கு முன்னால் காவல் துறை மானியத்தின் மீது சட்டமன்றத்திலே உறுப்பினர்கள் பேசும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உதவியாளரான திரு. என். எஸ். ராமதாஸ் அவர்களைப்பற்றிப் புகார்கள் சொன்னார்கள். அவர் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்வதைப்போல, 'அவர் பதவியிலேயிருந்து நீக்கப்பட்டு இரண்டு மூன்று மாதங்கள் ஆகின்றன' என்று சொன்னார்கள்.

பத்திரிகைகளிலே கூட இந்தச் செய்தி வெளிவந்திருக்கிறது. ஆனால் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உதவியாளராக, 'பப்ளிக் ரிலேஷன்ஸ் அண்ட் மாஸ் காண்டாக்ட் ஆபிசர்' ஆக இருக்கும் அவர் ஒரு தவறு செய்தார். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, அவர் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே நீக்கப்பட்டிருக்கிறார் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர் எப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார் என்று, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : எல்லாமே என் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறீர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : அந்த உதவியாளர், சென்னையில் 'உட்லண்ட்ஸ்' ஹோட்டலில் தங்கிக்கொண்டு எப்படிப்பட்ட உத்தரவுகளை, யார் யாருக்குப் போட்டார் என்று பார்க்க வேண்டும். அரசாங்கத்திடம் துப்பறியும் இலாக்கா இருக்கிறது. அது இந்தமாதிரி குற்றங்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா ? எதிர்க் கட்சித் தலைவர்களின் டெலிபோன்களை tap செய்யும் ஒரு நாட்டில், ஒரு அதிகாரி செய்யும் தவறைக் கண்டுபிடிக்கவும் tapping -ஐப் பயன்படுத்தலாம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2, 3, மாதங்களுக்கு முன்னாலே அவர்

(முற்பகல் 11-20)

நீக்கப்பட்டுவிட்டார் என்று சொல்கிறார்கள். இந்த வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 18 ஆம் தேதி சட்டப் பேரவையில் பேசும்போது குறிப்பிட்ட இந்த உதவியாளர் 2, 3 மாதங்களுக்கு முன்பே வேலைநீக்கம் செய்யப்பட்டுவிட்டதாகக் குறிப்பிடுகிறார். ஆனால் இந்த அதிகாரியைப் பற்றி அரசாங்கத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவு 17—4—1979 தேதியிட்டிருக்கிறது. அன்றுதான் அந்த அதிகாரிக்கு உத்தரவு அனுப்பப்படுகிறது. அந்த உத்தரவில் இவ்வாறு சொல்லப்படுகிறது.

"Government of Tamil Nadu .. Public (Establishmert) Dapartment Memo No. 3860213/79-1........17-4-1979

Sub:—Establishment—Public Department—Personal staff of Ministers—Public Relations and Mass Contact Officer to Chief Minister Ramadoss (Thiru) N.S.—Resignation—Accepted.



Ref:— from Thiru N.S. Ramadoss, letter dated 20-2-1978.

Thiru N.S. Ramadoss has tendered his resignation from the post of Public Relations and Mass contract officer to Chief Minister on the ground of his health and family circumstances.

The Government, after careful consideration, accept the resignation of Thiru N.S.Ramadoss, Public Relations and Mass Contact Officer to Chief Minister with effect from 1-3-1979 forenoon"

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற தஸ்தாவேஜுகளை அவையில் படிப்பதற்கு முன்பு என்னுடைய அறைக்கு வந்து என்னிடம் காட்டி அனுமதி பெற்றிருக்க வேண்டும். அதை விடுத்து உறுப்பினர் தன்னிச்சையாக இவைகளை அவையில் படித்துக் காட்டுவது முறையல்ல. எந்த ஒரு தஸ்தாவேஜைப் படிப்பதாக இருந்தாலும், என்னுடைய அறையில் எனக்குக் காட்டியிருக்க வேண்டும், என்னுடைய அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான் முறை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : மன்னிக்க வேண்டும். அரசாங்க உத்தரவு இது என்பதால் இதைப் படித்தேன். எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது உரையில் இந்த அதிகாரி 2, 3 மாதத்திற்கு முன்பே பதவிநீக்கம் செய்யப்பட்டதாகச் சொல்லுகிறார். அதையும் சட்டமன்றப் பேரவையில் 18—4—1979 அன்று சொல்லுகிறார். ஆனால் இந்த அதிகாரியைப் பதவியிலிருந்து ரிலீவ் செய்யும் உத்தரவு 17 ஆம் தேதிதான் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் இன்னொன்றையும் இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல் அந்த அதிகாரி பதவியிலிருந்து நீக்கப்படவில்லை. அதற்கு மாறாக, அந்த அதிகாரி பிப்ரவரி மாதம் 20 ஆம் தேதியன்று அரசாங்கத்திற்கு அனுப்பிய கடிதத்தில் "என்னுடைய உடல்நிலை காரணமாகவும், குடும்ப சூழ்நிலை காரணமாகவும், என்னை இந்தப் பதவியிலிருந்து ரிலீவ் செய்ய வேண்டும்" என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில்தான் அவர் ரிலீவ் செய்யப்பட்டிருக்கிறார். முதலமைச்சர் அவர்களோ இந்த அதிகாரி பதவியிலிருந்து நீக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார். இதில் வேடிக்கை என்னவென்றால் 17—4—1979 அன்று இந்த உத்தரவு போடப்படுகிறது. இந்த உத்தரவில் என்ன சொல்லப்படுகிறது என்றால் மார்ச் 1 ஆம் தேதியிலிருந்து அந்த குறிப்பிட்ட நபர் தமது பணியிலிருந்து ரிலீவ் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் வேண்டுமானால் அந்த அதிகாரியைப் பார்த்து 'இனி

நீ வேலைக்கு வர வேண்டாம்' என்று சொல்லியிருக்கலாம். அதையே ஒரு உத்தரவாக அவர் நினைத்து அதனடிப்படையில் சட்டமன்றப் பேரவையில் சொல்லியிருக்கலாம். ஆனால் அரசாங்கத்தில் இருக்கும் தலைமைச் செயலாளர், முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார் என்பதற்காக, 2, 3 மாதத்திற்கு முன்னால் அந்த அதிகாரியிடமிருந்து எழுதி வாங்கிக் கொண்டு இப்படிப்பட்ட ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறாரோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 18ஆம் தேதி பேசுகிறார். உத்தரவு 17ஆம் தேதியிட்டுப் போடப்படுகிறது என்றால், இந்தச் சந்தேகம்தான் வருகிறது. அதிலும் 1—3—1979 தேதியிலிருந்து ரிலீவ் செய்யப்பட்டதாகச் சொல்வதன் காரணமும் புரியவில்லை. இந்த இடைப்பட்ட காலமாகிய 47 நாட்களில் அந்த ராமதாஸ் என்பவர் எங்கே இருந்தார், என்ன வேலை செய்து கொண்டிருந்தார் என்பதெல்லாம் சந்தேகத்திற்கு இடமாக இருப்பானேன் என்ற கருத்தை இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசாங்கம் ஒரு பக்கம் ஊழலை ஒழிக்கப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு, நிருவாகத்தில் தலையீடே இருக்காது என்று சொல்லிக்கொண்டு, இப்படிப்பட்ட தவறுகள் நடப்பதை அனுமதிக்கக் கூடாது என்றுதான் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் துறை கொள்கை விளக்கக் குறிப்பைப் பொறுத்த வரையில், தொழில்கள் பெருக வேண்டும், வேலை வாய்ப்புகள் பெருக வேண்டும், அதற்கு 1½ லட்சம், 2 லட்சம், 27 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு என்று சொல்வதற்குப் பதில், ஏழை எளியவர்களுக்கு ஆண்டுதோறும் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமானால், நான் உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருப்பேன் என்று கூறி, தொழில் துறை வளர என்னுடைய கருத்துக்கள் உதவியாக இருக்கும் என்று எடுத்துச் சொல்லி இந்த அளவோடு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைப் போல் மீண்டும் தமிழகம் தொழில் துறையில் முன்னேறிய மாநிலமாக மாற வேண்டிய அளவுக்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 15 ஆண்டுக் கால



மாகவே தமிழ் நாட்டின் தொழில் முன்னேற்றம் என்பது படிப்படியாகக் குறைந்து, இன்றைய தினம் இந்தியாவின் பிற மாநிலங்களைவிட பின் தங்கிய நிலையில் இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, இந்த நிலையை அரசாங்கம் விரைவில் மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில்தான் சிறு தொழில்களுக்கு நல்ல ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. அந்த ஊக்கம் கடந்த 20 ஆண்டுக் காலமாகவே அங்கே தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. எனவே தான் சிறு தொழில் துறையில் அதிகமாக முன்னேறியுள்ள பஞ்சாபைப் பார்க்க வேண்டும், ஹரியானாவைப் பார்க்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். கொள்கைக் குறிப்பில்கூட இதுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அந்த மாநிலங்களில் எப்படி முன்னேற்றம் ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து அதற்கேற்றாற்போல் தமிழகத்தில் உரிய சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்களா என்றால், இல்லை.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்த வரையில், தொழிற் துறையில் ஒரு பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற அவாவோடு பணியாற்றுவதாக கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு யோசனையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெரிய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், மாவட்டத்திற்கு ஒன்று அல்லது இரண்டு என்று ஏற்படுத்துகிற நிலைதான் இருக்கிறது. சிறு தொழில்களாவது மாவட்டங்களில் அதிக அளவில் முன்னேற்றகரமாகச் செயல்படுகின்றனவா என்றால், அதற்கும் வாய்ப்புகள் குறைந்துகொண்டே வருகின்ற நிலையைத் தான் காண்கிறோம். மாவட்டங்களில் முன்னேற்றமான மாவட்டங்கள் என்றும் பின்தங்கிய மாவட்டங்கள் என்றும் இருக்கின்றன. தொழில் துறையைப் பொறுத்த வரையில், பின்தங்கிய மாவட்டங்கள் என்று சில மாவட்டங்கள் மட்டுமே இருக்கின்றன. அவைகளுக்கு மட்டுமே சில சலுகைகள் அளிக்கப் படுகின்றன. பின்தங்கிய எல்லா மாவட்டங்களுக்கும் இத்தகைய சலுகைகள் அளிக்கப்படுகின்றனவா என்றால், இல்லை. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தொழில் துறையில் அது பின்தங்கிய மாவட்டமாகக் கருதப்பட்ட போதிலும், அந்த மாவட்டத்திற்குச் சலுகைகள் அளிக்கப்படுவதில்லை. புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தர்மபுரி போன்ற

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1979 ஏப்ரல் 24

மாவட்டங்களுக்கு அளிக்கிற உதவியை தஞ்சை மாவட்டத்திற்கும் அளித்தால் தான், நல்ல முறையில் தொழில் துறையில் அது முன்னேற்றம் காணும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மூலப் பொருள்கள், கனி வளங்கள் ஆகியவை எங்கெங்கே கிடைக்கின்றனவோ அங்கேயே தொழில்களை உருவாக்க வேண்டும். நாடு சுதந்திரம் அடைந்து 32 ஆண்டுகளாகியும்கூட, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், எங்கே என்ன மூலப் பொருள் கிடைக்கிறது, எங்கே என்ன கனிவளம் இருக்கிறது என்ற முழுமையான ஒரு ஆய்வு பரிபூரணமாக எடுக்கப்படவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், பல அரிய பொருள்கள் கிடைக்கின்றன. அவற்றையெல்லாம் உபயோகித்து தொழில் துறையை முன்னேற்றமடையச் செய்யலாம். சேலத்தில் அதிகமான கனி வளம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. என்றாலும் அதைப்பற்றிய சரியான சர்வே எடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மையான நிலைமையாகும். மூலப் பொருள்கள் கிடைக்கிற இடத்திலேயே தொழில்களைத் துவக்கவேண்டுமென்று நான் குறிப்பிட்டேன். அதைவிடுத்து பல நூறு மைல்களுக்கு அப்பால் அந்த மூலப பொருள்களைக் கொண்டுபோய் தொழில்களை வைப்பதன் மூலம் போக்குவரத்துக்காக அதிகமான பணம் செலவழிக்க வேண்டிய நிலை உருவாகிறது. எனவே அரசாங்கம் இதை மனதில் கொண்டு இனி அமைக்கவிருக்கும் தொழிற்சாலைகளை மூலப்பொருள் கிடைக்கிற இடத்திலேயே அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரை, அது மிகவும் நலிவுற்ற தொழிலாக இருக்கிறது. அதில் லாபம் இல்லை. தமிழ் நாட்டில் இன்றையதினம் விவசாயத்தின் நிலைமை எப்படி இருக்கிறது என்றால், விவசாயம் செய்கிறவர்களும் க்ஷீணித்துவிட்டார்கள். அதைப் போலவே விவசாயக் கூலிகளும் க்ஷீணித்து விட்டார்கள். எந்தத் தொழிற்சாலையில் வேலை செய்தாலும், நாள் ஒன்றுக்கு சாதாரணமாக ரூ. 15, 20 என்று தொழிலாளர்கள் ஊதியம் பெறுகிறார்கள். ஆனால் விவசாயத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மட்டுமே தினம் ரூ. 4, 5 கூட பெற முடியாத அவல நிலையில் இருக்கிறார்கள். இதன் காரணமாக ஒரு காலத்தில் வளமுள்ள பகுதியாக இருந்த தஞ்சை மாவட்டம் இன்றைக்கு பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியிருக்கிறது அங்கே தொழில் வளம் இல்லாத காரணத்தாலும், இருந்த விவசாயத் தொழிலும் மிகவும் க்ஷீணித்துவிட்ட காரணத்தாலும் எல்லோருமே அங்கே ஏழைகளாக மாறிவிட்டார்கள். எனவேதான் நான் முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விவசாயத்தை நம்பி வாழ்ந்த ஜில்லாக்கள் பொருளாதாரத்தில் க்ஷீணித்துவிட்ட காரணத்தால், அந்த



1979 ஏப்ரல் 24]

[திரு. என். சுந்தரேசத் தேவர்]

மாவட்டங்களையெல்லாம் பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவித்து அந்த மாவட்டங்களுக்கு எல்லாச் சலுகைகளையும் கொடுத்து அங்கே தொழில்களை வளர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் தொழிற்துறையில் பின்தங்கிய மாவட்டம் என்று சொல்லப்பட்டாலும், அதற்கென்று தனிச் சலுகைகள் ஏதும் அறிவிக்கப்படவில்லை. தஞ்சையைப் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்து. அதற்கு நிறைய சலுகைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாப் மாநிலத்தில் சென்று பார்த்தபோது, பெரிய தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் உறுப்புகளையெல்லாம் சிறிய சிறிய குடிசைகளில் உற்பத்தி செய்வதைக் கண்டோம். சைக்கிள் அல்லது அது போன்ற தொழிற்சாலைக்குத் தேவைப்படும் உப பொருள்கள் அத்தனையையும் சிறு சிறு குடிசைகளிலேயே தயாரிக்கிறார்கள். சாதாரண ஹாண்டில்-பார், பெல், ஃபோக்ஸ் போன்றவைகளை அப்படித்தான் தயாரிக்கிறார்கள். தமிழகத்திலும் மாவட்டத்திற்கு ஒன்றிரண்டு பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, அவற்றிற்குத் தேவைப்படும் எல்லா உதிரி உறுப்புகளையும் குடிசைத் தொழில்கள் மூலம் தயாரித்து, அந்தப் பெரிய தொழிற்சாலைகளில் 'அசெம்பிள்' செய்வதை மட்டுமே மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாடெங்கும் இருக்கிற எல்லோருக்குமே வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

சிறு தொழில் மேம்பாடுகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். முன்பு தமிழகத்திலே மதிப்பிற்குரிய திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள் அமைச்சராய் இருந்தபோது, தமிழகத்திலே என்னென்ன தொழில்களைச் செய்யலாம் என்று ஆய்வை நடத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். சிறு தொழில் மேம்பாட்டிற்காக வட்டாரந்தோறும் தொழில் துறை வல்லுநர்களைப் போட்டு என்னென்ன தொழில்களைச் செய்யலாம் என்று ஆலோசனை வழங்கும் ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள். அந்த வாய்ப்பை இப்போது இழந்தவர்களாக இருக்கிறோம். இப்போது வட்டாரங்களில் இன்டஸ்டிரியல் அட்வைசர் என்ற போஸ்ட் இல்லாமல் போய்விட்டது. சிறு தொழில்களை ஏற்படுத்த ஆலோசனைகளைச் சொல்ல பெரிய அட்வைசர்கள் தேவையில்லை. சாதாரணமான ஒருவரை நியமனம் செய்தாலே போதும். முன்பு ஈ.ஓ.

[1979 ஏப்ரல் 24

[திரு. என். சுந்தரேசத் தேவர்]

(இன்டஸ்டரீஸ்) என்ற பதவியிருந்ததைப் போல ஒரு பதவியை வட்டாரந்
தோறும் ஏற்படுத்தி, அந்த வட்டாரங்களில் என்னென்ன சிறு தொழில்களை
ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை சர்வே செய்ய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.

மூலப் பொருள்களைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய
மாநிலத்தைப் பொறுத்த வரையில், உப்பு அதிகமாகக் கிடைக்கிறது.
தூத்துக்குடியிலும், வேதாரண்யத்திலும் உப்பளங்கள் இருக்கின்றன.
அங்கிருந்து கிடைக்கக்கூடிய உப்பை நம்முடைய மாநிலத்திலிருந்து வெளி
மாநிலங்களுக்கு அனுப்பி அங்கே பல்வேறு விதமான இரசாயனப் பொருள்
களை உற்பத்தி செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் அதிகமாகக்
கிடைக்கக் கூடிய இந்த உப்பைக் கொண்டு இங்கேயே இராசாயனப் பொருள்
களை ஏற்படுத்த இந்தத் துறை முன்வர வேண்டும்.

கடற்கரைப் பகுதிகளில் பெருவாரியான உப்பளங்கள் இருக்கின்றன.
உதாரணமாக வேதாரண்யத்திலிருந்து அதிராம்பட்டினம் வரையில் 50 மைல்
தூரத்திற்கு உப்பு தயாரிக்கும் வாய்ப்பு இருக்கிறது. இராமநாதபுரத்திலும்,
மரக்காணம் பகுதியிலும் 100 மைல் அளவிற்கு உப்பளங்களை ஏற்படுத்த
வாய்ப்பு இருக்கிறது. தூத்துக்குடியிலும், வேதாரண்யத்திலும் மட்டும் உப்
பளங்கள் இப்போது இருக்கின்றன, மற்ற இடங்களில் சிரழிந்து போயிருக்
கின்றன. ஆகவே மற்ற பகுதிகளிலும் உப்பளங்களை ஏற்படுத்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வேதாரண்யத்திலே உப்புத் தொழிற்
சாலையை நிறுவ இருப்பதாகக் குறிப்பிலே பார்த்தேன். அதை விரைவாக
ஏற்படுத்த வேண்டும். வேதாரண்யத்திலிருந்து அதிராம்பட்டிணம் வரை
யிலிருக்கிற 50 மைல் தொலைவிற்கும் இதை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது
என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளு
கிறேன்.

தேங்காய் உற்பத்தியில் நம்முடைய மாநிலம் இரண்டாவது ஸ்தானத்
தைப் பெறுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாமும் தேங்காயை அதிக
மாக உற்பத்தி செய்து, தேங்காய் நாரிலிருந்து கயிறு உற்பத்தி செய்கிறோம்.
கயிறு தொழில் நலிந்திருக்கிறது சேலத்திலே மட்டும்தான் கயிறு விற்கப்
படுகிறது. மற்றப் பகுதிகளில் அதை விற்கக்கூடிய வசதியில்லை. வெளி
நாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு இங்கே பொருள்களை உற்பத்தி



[திரு. என். சுந்தரேசத் தேவர்]

1979 ஏப்ரல் 24]

செய்யக்கூடிய சூழ்நிலை இல்லை. இதற்கு மூல காரணம் உப்புத் தண்ணீர்
கிடைக்காததுதான். கேரளாவிலே கடல் தண்ணீர் கிடைப்பதால், தேங்காய்
மட்டைகளை அதிலே ஊறவைத்து, பிறகு கயிறு திரித்து, மற்றும் பல்வேறு
பொருள்களைத் தயாரித்து வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும்
அனுப்புகிறார்கள். நாம் தேங்காய் உற்பத்தியில் இரண்டாவது ஸ்தானத்தி
லிருந்தும். அப்படிப்பட்ட கயிறுகளை நம்மால் தயாரிக்க முடியவில்லை.
இந்தக் குறையை நாம் போக்க வேண்டும். கடல் நீரும், மணற் பாங்கான
பகுதியும் உள்ள இடங்களில் இதற்கான தொழிற்சாலையை அரசு ஏற்படுத்த
வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே தென்னை மரங்களும் இருக்கின்றன,
கடல் தண்ணீரும் மணற்பாங்கான பகுதியும் இருக்கின்றன. அங்கே கயிறு
செய்து வெளி நாடுகளுக்கு அனுப்பலாம்.

அதைத் தவிர, கேரளாவிலே எங்கே பார்த்தாலும், இரப்பர் மெத்தைகளை
யும், காயர் மெத்தைகளையும் ஏராளமாகச் செய்கிறார்கள். அவற்றை
தமிழ்நாட்டிலே ஏராளமாக வியாபாரம் செய்கிறார்கள். தமிழ்நாட்டில்
அப்படிப்பட்ட தொழிற்சாலை திருநெல்வேலியில் மட்டும் வைத்திருக்கிறார்
கள். மற்ற இடங்களிலும் ஏற்படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து
பார்க்கக்கூடிய நிலை இருக்கிறது. இங்கே கிடைக்கக்கூடிய தேங்காயையும்
நாம் புறக்கணிக்கிறோம். தேங்காய் மட்டைகளையும் புறக்கணிக்கிறோம்.
கேரளாவிலே சாதாரணமாக ஆயிரம் தேங்காய் மட்டைகளின் விலை நாற்பது
ரூபாய், ஐம்பது ரூபாய், என்று விற்கப்படுகிறது. ஆனால் நம்முடைய
மாநிலத்தில் ஆயிரம் தேங்காய் மட்டைகள் ஐந்து ரூபாய், ஆறு ரூபாய்க்குத்
தான் விற்கப்படுகிறது. ஏனென்றால் இவைகளைப் பயன்படுத்த
இங்கே ஆட்கள் இல்லை. ஆகவே நம் மாநிலத்தில் கிடைக்கக்கூடிய இந்த
மூலப் பொருள்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கூறிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

தேங்காய்ப் பாலிலிருந்து பால் பவுடர் செய்ய வேண்டுமென்று கருநாடகா
மாநிலத்தில் முன்பு பரிசீலனை செய்தார்கள். கொழும்புவிலும் அப்படிச்
செய்கிறார்கள். அதைப் போலவே நாமும் தேங்காய்ப் பாலிலிருந்து பால்
பவுடர் செய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், அதிக இலாபம்
வருமென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதை எப்படிச் செய்வது
என்பதை அறிய ஒரு ஆய்வைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

[திரு. என். சுந்தரேசத் தேவர்]

மாவட்டத்தில் என்னென்ன மூலப் பொருள்கள் கிடைக்கின்றன என்பதை எடுத்துக்கூறி, என்னென்ன தொழில்களைச் செய்தால் இலாபம் கிடைக்கும் என்றும் அதற்கு வேண்டிய வாய்ப்புகள் எங்கே இருக்கின்றன என்றும் அந்த சந்திகையில் வெளியிட அரசு முன்வர வேண்டும். உணவுத் துறையில் தன்னிறைவைப் பெறுவதற்காக, விவசாய இலாக்கா போதுமான விளம்பரங்களைச் செய்திருப்பதைப்போல, தொழில் துறையும் பிரச்சாரம் செய்தால் தான் வளர முடியுமென்ற நிலையிருப்பதால், அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிரச்சாரம் செய்வதில் அரசாங்கம் பின்தங்கினால் அதனால் தமிழகமே பின்தங்கும். ஆகவே ஊக்கமான நடவடிக்கைகளை விரைவாக அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு மிகச் சிறப்பான முறையில் அமைந்திருப்பதற்காக முதற்கண் என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலத்திலே எழுதிய குறிப்புகளை தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்கள் என்று மக்கள் நல்வாழ்வுத் துறைக் கொள்கை விளக்கக் குறிப்புகளைப் பற்றிக் குறிப்பிட்டபோது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அப்படித்தான் இருக்கிறதென்று பதில் சொன்னார்கள். ஆனால் தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் முன்னுரையிலேயே நம்முடைய புரட்சித் தலைவரின் வார்த்தைகளெல்லாம் தென்படுவதிலிருந்து, தமிழிலே எழுதப்பட்டு பிறகு ஆங்கிலத்திலே மொழி பெயர்த்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. நம்முடைய அரசின் எண்ணங்களை முதலிலேயே தெளிவாக எடுத்துச் சொல்லி அதற்கேற்ப செயல்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தனை இந்தத் துறையிலே செயல்படுகிறது என்று சொல்லி அதற்காக என் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தொழில் துறை முதலமைச்சரிடத்திலே இருப்பது மிகப் பொருத்தமாகும். திராவிட முன்னேற்றக் கழகம் 1949 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட போதுதான் சமுதாயக் கொள்கை, பொருளாதாரக் கொள்கை உருவாக்கப்பட்டது. நெய்வேலியில் நிலக்கரியை உற்பத்தி செய்கின்ற பெரிய வாய்ப்பும்,

[1979 ஏப்ரல் 24

[திரு. க. அறிவழகன்]

சேலத்திலே இரும்பு உருக்காலை வருகிற நிலையும், திருச்சியிலே 'பெல்' நிறுவனம் உருவாகிற நிலையும், மற்றும் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் மத்திய அரசின் தொழில் நிறுவனங்கள் அமையும் நிலையும் ஏற்படக் காரணமாக இருந்தது என்னவென்றால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே எதிர்க் கட்சியாக அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கி தொழிற் கொள்கைகளை பெரிய முழக்கங்களாக உருவாக்கியது தான்.

(முற்பகல் 11-40)

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-லே முதலமைச்சரான உடனே சட்ட மன்றப் பேரவையிலே ஒன்றைச் சொன்னார்கள். தாங்கள் திராவிட நாடு பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டோம், ஆனால் அந்த பிரிவினைக்கான காரணங்களை விடவில்லை என்று சொன்னார்கள். அந்தக் காரணங்களை விளக்கும்போது தமிழ்நாட்டைத் தொழில் மயமாக்குவதிலே மத்திய அரசு எடுக்கவேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்றார்கள். அதற்கு பல்வேறு விதமான விளக்கங்களை அந்த நேரத்திலே தந்ததை இன்றைக்கு நான் நினைவுகூர்கிறேன். தொழில் வளர்ச்சியில், ஐரோப்பியக்கண்டம் கண்ட பல்வேறு குறைகளை நாம் கண்டறிந்து இந்த சமுயததிலே காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. பத்தாண்டுக் காலமாக நாம் பரிசிலித்து கண்டறிந்த அந்தக் குறைகளை எல்லாம் ஒரு ஆண்டிலேயே நிவர்த்தி செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய அரசு எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். தனியார் துறையில் போதிய திறமைகள் பெற்ற நிறுவனங்கள் இருப்பதாகவும், பொது நிறுவனங்கள் மிக மோசமாக இருப்பது போலவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே ஒருவேளை உண்மையிருக்கலாம். தனியார் நிறுவனங்களிலும் அந்த நிலைமைகள் இருக்கின்றன. சில நேரங்களில் அரசு எடுத்துக்கொள்கின்ற அளவுக்குகூட ஒரு சில நிறுவனங்கள் சிக் இண்டஸ்ட்ரீஸ் ஆகிவிடுகின்றன. சிக் இண்டஸ்ட்ரீஸ் என்று ஆனவுடனே அவர்களேகூட அரசே எடுத்துக் கொள்ளட்டும் என்று



1979 ஏப்ரல் 24]

[திரு. க. அறிவழகன்]

மிகத் தாராளமாக முன்வந்துவிடுகிறார்கள். அது தனியாராக இருந்தாலும், பொது நிறுவனமாக இருந்தாலும், தொழில் வளர்ச்சிக்கான முறையில் தொழில்கள் நடத்தமுடியாத நிலைமைகள் இருந்தால் அவைகளை மாற்றி நன்கு நடக்கின்ற அளவிலே செயல்பட வேண்டும். நம்முடைய அரசின் கீழ் இயங்கிக்கொண்டிருக்கின்ற பல்வேறு கார்ப்பரேஷன்கள் இருக்கின்றன. அந்த பல்வேறு கார்ப்பரேஷன்கள் வேலை செய்கின்ற நிலைமைகளைப் பார்க்கும் போது, ஏதோ கல்யாண நிலையம்போல, திருமண மண்டபம் போல, மகிழ்ச்சி நிலவுகின்ற அளவில் அந்தக் கார்ப்பரேஷன்கள் நடக்கின்றன. பெரிய நிறுவனங்களையெல்லாம் ஒன்று சேர்த்து நடத்துகின்றார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்வேன். அரசின் கீழ் உள்ள இந்த சிட்கோ, டிட்கோ போன்ற நிறுவனங்கள் இப்படி நடந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரக்கோணத்திலே இரும்பு உருக்குத் தொழிற்சாலை இருக்கிறது. தமிழ்நாட்டில் ஓசூரில் Asian என்று இருக்கிறது. மண்டபத்திலே The Great Sea Trawler Building Yard என்று இருக்கின்றது. இப்படி இன்றைக்கு 15 மிகப் பெரிய நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றில் கடந்த 10, 15 ஆண்டுகளாக ஏற்பட்ட நஷ்டம் பற்றி அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்ற ஒரு நல்ல நோக்கத்தோடுதான் அதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றில் ஒன்றான அரக்கோணத்தில் உள்ள இரும்பு உருக்குத் தொழிற்சாலை இரும்பு உருக்கு உற்பத்தி செய்கின்ற தொழில் நிறுவனமாக இருக்கிறது. அதில் எப்படி நஷ்டக் கணக்கு இருந்துகொண்டிருக்கிறது என்ற புள்ளி விவரத்தைப் பார்த்தால் 1972-73-ல் ரூபாய் 76 லட்சம், 1975-76-ல் ரூபாய் 152 லட்சம்,

[திரு. க. அறிவழகன்]

1978-79-ல் ரூபாய் 38 லட்சம் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். இதே போல் வேறு கணக்குகளும் உள்ளன.

அடுத்து, தொழிற்சாலைகளை எப்படி நடத்துவது என்பதற்குப் பல்வேறு யோசனைகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சிலவற்றை அழுத்தமாகக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள்கூட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் பற்றிச் சொன்னார்கள். ராணுவப் பயிற்சி பெற்றவர்கள் ராணுவத்தில் தலைமை ஏற்றால்தான், அவர்கள் சிறப்பாகப் பணியாற்ற முடியும். அந்த அடிப்படையில் பார்த்தால், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை இப்படிப்பட்ட வியாபார நிறுவனங்களில் பயன்படுத்துவோமானால், அவர்களுடைய திறன் குறைந்துவிடும் என்பது என்னுடைய கருத்தாகும் அவர்களிடத்திலே விடப்பட்ட தொழில் நிறுவனங்கள் முழுவதும் லாபம் பெறவில்லை, நஷ்டத்திலே நடக்கின்றன என்று சொல்கிறார்கள். அதன் பிறகு அவர்கள் தங்களுக்கு செக்ரட்டேரியட்டிலேயே வேறு ஒரு வேலை கொடுத்துவிடுமாறு கேட்டால் நாம் அவர்களுக்கு அங்கேயே வேலை கொடுத்துவிடுகிறோம். அதற்குமேல் நாம் அவர்களை ஒன்றும் செய்வதற்கில்லை. தொழில் நிறுவனங்களுடைய கணக்கு வழக்குகள் தெரிந்தவர்கள், கணக்காய்வாளர்கள் (Technical know-how) தெரிந்தவர்கள் என்னைப் போல பொருளாதாரத்திலே முற்றும் படித்திருப்பவர்கள் இப்படிப் பட்டவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவ்வாறு அடிப்படை விஷயத்திலே மிகத் தெளிவாக இருப்பவர்கள் இப்படிப்பட்ட நிறுவனங்களில் இருக்க வேண்டும். இன்றையதினம் உலகெங்கும் (Accountability) உள்ளவர்கள்தான் நிறுவனங்களின் பொறுப்பில் இருக்கிறார்கள். அய். அய். டி. போன்ற நிறுவனங்கள். பல்வேறு நிறுவனங்களின் நிர்வாகப் பற்றித் தெரிந்து கொண்டவர்களையும், உரிய தகுதிபெற்றவர்களையும், ஒரு நிறுவனத்தை நிர்வகிக்கக்கூடிய ஆற்றல் பெற்றவைகளையும்

 [திரு. க. அறிவழகன்]

உருவாக்குகின்றன. அரசு நிறுவனங்களின் பொறுப்பை ஏற்பவர்கள் முதலில் சில ஆண்டுகள் அய்.அய்.டி. போன்றவற்றில் நல்ல பயிற்சி பெற வேண்டும். அதன்பிறகு அவர்களிடம் அந்தப் பொறுப்பை விடவேண்டும். பொறுப்பேற்கும் நிறுவனத்தில் முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்ற ஒரு கட்டாய முறையை நாம் கொண்டுவர வேண்டும். அவர்கள் பொறுப்பேற்கும் நிறுவனம் முன்னேறுவதைக் காட்ட வேண்டுமென்று நாம் சொல்லி அதன்படி அவர்கள் அந்த நிறுவனத்தை முன்னேற்றிக் காட்ட வேண்டும். அப்படிச் செய்தால், நிச்சயமாக இந்த நிறுவனங்கள் முன்னேற்றம் அடைய முடியும். அந்த முறையில்தான் அவைகள் முன்னேறுவதற்கான வழிவகைகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நம்முடைய அரசு மத்திய அரசின் ஒத்துழைப்போடு புதிதாக மாவட்டத் தொழில் மையங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அவற்றில் சில பதவிகளுக்கு பெரிய விளம்பரங்கள்கூட வந்திருக்கின்றன. திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னது போல் அவற்றிலே வளர்ச்சி காணப்படுகின்றது. ஏனென்றால் அவற்றிலே தொழில் துறையிலே அனுபவம் உள்ளவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களை 35 அல்லது 45 வயதிற்குட்பட்டவர்களாக பணிக்கு எடுக்கிறார்கள். 3 ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்களுக்கு பணி கொடுக்கிறார்கள். நம்முடைய பொதுப் பணித் துறையிலே இருக்கின்றவர்கள், என்ஜினியரிங் துறையில் வேலை செய்கின்றவர்கள், 3 ஆண்டுகள் பயிற்சிக்குச் சென்றுவிட்டு மறுபடியும் பொதுப்பணித் துறைக்கே வந்துவிடுவார்கள். ஆகவே, தேவையான நிபுணத்துவம் இல்லாதவர்கள் இப்படிப்பட்ட பணிகளுக்கு வருகின்ற வாய்ப்பு ஏற்படாமலிருக்க வேண்டும் என்ற முழு நோக்கத்தோடு இந்த விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. எந்தெந்தத் துறையிலே நிபுணர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்கு நாம் பணியைக் கொடுக்க வேண்டும். நிபுணர்களாக இருப்பவர்களையும், ஒரு 3 ஆண்டுகள் அந்தத் துறையில் பணியாற்றி இருப்பவர்களையும்

(முற்பகல் 11-50)

போட்டால், அவர்கள் பெருத்த வளர்ச்சியைப் பெற்றுக் கொடுப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் பணியாற்ற வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். இதுபோலவே, நிறுவனங்களைப் பிரிக்க வேண்டும். உதாரணத்திற்கு 'டிட்கோ'வை 4, 5 ஆகப் பிரிக்கலாம். அந்த நிறுவனங்களை வெவ்வேறு நிபுணர்கள் அடங்கிய குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். அதனால் அந்தத் தொழிலில் தயாராகும் பொருள்களை வளர்ந்துள்ள வெளிநாடு சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான தொழிலைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டினுடைய மிகச் சிறந்த தொழில் வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டுவந்து சேர்க்கின்ற தொழில் தோல் தொழிலாகும். அந்தத் தொழில் வளர்வதற்கு வாய்ப்புக்கள் குறைந்து வருகின்றன. மத்திய அரசு இந்தத் தொழிலில் உள்ள குறைபாடுகளை நாம் தடுக்க முடியும் என்று களுக்கு அனுப்புவதில் பல்வேறு சங்கடங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். இந்த 'டிட்கோ' 'சிட்கோ' நிறுவனங்கள் மூலமாக இந்தத் தொழிலின் வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கான முயற்சிகளை நாம் செய்ய வேண்டும். இந்தத் தொழில் துறை வளர்ச்சி நம் நாட்டினுடைய வளர்ச்சிக்கு நல்ல முறையில் பயன்படத்தக்கதாக அமையும் என்று சொல்லி இந்த அளவில் என் உரையை முடித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

THIRU D. V. D'MONTE : Hon. Deputy Chairman, Sir, although Tamil Nadu is Number Four in the ranking of industrialised States in the country, it is only in the field of leather and automobiles that it has reached the leading position, accounting for nearly two-third of the national output of these industries. Between the years 1971 and 1976, there have been an increase in production of nine major industries and also a decline in the fortune of 15 industries. Fertilisers, Special Steel, Automobiles, Paper, Cement, Electrical and other Engineering goods are the sectors in which an upswing in output can be expected in the near future. In Textiles, we have reached a saturation point. There has been no advance planning



of units which would be able to produce high value added items making use, for instance, of alloy steel that will be produced by the Salem Plant.

Tamil Nadu has not been gifted with abundance of raw material resources. Our future industrial development will depend on the creation of fabricating factories using iron and steel and non-ferrous metals, particularly in areas like electrical and electronic engineering, where man-power plays a big part. The industrial climate in the State is at its lowest today. There are many reasons why investors have been shying away. The perplexed and dejected mood bordering on despair all over the country is reflected also in this State where certain special constraints are operating against industrial growth. The prime production factors are investment, labour, skills, natural resources and lastly industrial climate. To activate these, the Government must increase their own revenue, encourage the private sector to increase its savings, persuade the Centre to invest more in the State and to launch more Central projects in the State. As the hon. Member Thiru Damodaran has already emphasised this point, I would only say that more Central projects will have a multiplier effect on the employment potential in Tamil Nadu.

Sir, the private sector has been hesitant to come forward with projects for a variety of reasons. Even so far as the public sector is concerned, they seem to be shy about launching of new industries. I would like to mention that Tamil Nadu has a very significant share in remittances from Indians employed abroad, though it is not of the same scale as that which exists in Kerala. But nobody seems to have made any serious study as to why these remittances have not found their way into productive fields. I would say that investment advisory cells functioning preferably in the gulf area where remittances originate, would be of great help in channelising the money that is received into enterprises that generate employment, besides facilitating rapid industrial development.

Among the other factors which shy away industrialists according to some of our business leaders, is the spread of indiscipline which has become phenomenal in our State. This has scared away many industrialists and has destroyed the means for creating more jobs. I would agree with the Hon. the Labour Minister when he says that industrial peace has reached great heights and success in

our State. But indicipline is another matter altogether. This places a premium more on industrial peace than anything else. Tamil Nadu's main problem is inadequate development in a set of circumstances that are highly favourable for rapid development. The solution is to do everything possible to encourage industry and create employment. In this connection, I would like to welcome the move that has been made by the Hon. the Chief Minister. I wish him all success in bringing about a new climate of industrial growth in our State.

Sir, I would like to say a word about small-scale industries. A memorandum was submitted some time ago by the Tamil Nadu Small-scale Industrialists Association. It was pointed out that small-scale industries at present were at crossroads verging on despair. The crux of the matter is not lack of ability of entrepreneurs but it is solely because the policies of Government are not being implemented by their own bureaucrats. Since new incentives are being offered for industries, a certain amount of corruption is taking place at the lower levels. Many officers are benami partners in some of these industries only because they qualify for import licences for certain raw materials which are sold at exorbitant rates outside. Another recommendation of the Small-scale industrialists is that the burden of labour laws on small-scale industries should be relaxed or reduced. So far, Government have not given any indication as to how this is to be done. Small-scale and other cottage industries cannot pay the same type of wages and perks applicable to large-scale industries. What we need in our Plans, is promoting two parallel sets of labour-markets in the economy. The organised industry has been allowed, over the years, to create wage-islands in the system. The small-scale industries have to be encouraged to thrive in islands of sweated labour. Any inter-action between the two is bound to create problems. Therefore, I plead that there should be a differential application of labour laws for small-scale industries. This is not an altogether novel proposition. This is how things actually are. All that I propose is to sanctify this state of affairs as part of official policy.

Another serious problem for industries is the question of finance. The Government should set up an apex body to finance the small-scale industries. This is a matter that could be taken up on a priority basis. The philosophy of easier credits has not percolated



down to branch level of banks, which still adopt an attitude of Shylocks wanting their pound of flesh. Another matter of immediate concern should be protection by law in favour of small-scale industries as also the demarcation of spheres of operation between large and small-scale industries. The problem of unemployment cannot be solved by large industries. It is the small-scale sector alone that can play an important role in removing poverty thus solving the unemployment problem and reducing income disparity.

I have one more point to make and that is with regard to sick industries. I can well appreciate that certain categories of industries like small-scale industries are given certain concessions to enable them to face the competition of large and major industries. With such assistance, these units are able to provide work to many people in different fields. But, of late, one more type of industries seem to have emerged and they claim some preferential treatment. I refer to what is called 'sick industries'. Once a Unit has recurring losses and is unable to carry on, it depends upon the protection of the financial institutions and banks which pump in more money into the Unit to solve its financial involvements. Under the prolonged regime of bureaucratic delays and controls, the sick units will not at all improve. The probelems of sick industries are mainly due to mismanagement, industrial incompetence, failure in periodical replacement and overhauling of machinery and neglect of research and development. So, it is wasteful to try to revive them by pumping in more money. They should be left to fend for themselves. The few units which are technologically sound will survive without any special assistance. The point which I wish to make is this. All sick units should be black-listed by the Government and they should not be granted new licences in other areas of industrial activity.

(நண்பகல் 12-00)

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தொழில் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது சில கருத்துக்களை நான் சொல்லத் தலைப்படுகிறேன்.

'கைத்தொழில் ஒன்று கற்றுக்கொள், கைவேலைகளை மறந்ததை ஒப்புக்கொள்' என்கிற கவிதை வரிகளின் விளக்கமாக அமைந்தும், 'காகிதம் செய்வோம், நல்ல ஆயுதம் செய்வோம்'

என்ற அளவிலே 100 கோடி ரூபாய் செலவில் காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டங்களை எல்லாம் உருவாக்கியிருக்கிற இந்தத் தொழில் கொள்கைக் குறிப்பைப் பார்க்கிறபோது, இதிலே இருக்கிற 323 பக்கங்கள் 'வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும்' என்கிற அளவுக்கு சென்ற முறை இருந்த பக்கங்களைக் காட்டிலும் அதிகமாக இருப்பதோடு வளர்ந்து வருகிற தொழில் முறையையும் அதற்கு இந்த அரசு செய்கின்ற பணிகளுடைய விளக்கங்களையும் கொண்ட குறிப்பாக இருப்பதை என்னால் நன்றாகப் பார்க்க முடிகிறது.

நான் இந்தக் குறிப்பைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தபோது, பல 'பட்டு'க்களை இதிலே பார்க்க முடிந்தது. அது என்ன 'பட்டு' என்றால், இந்த ஆட்சி தொழில் துறையிலே செயல்பட்டு, மக்கள் வாழ்வு உறுதிப்பட்டு, தமிழ் மக்களுடைய நலம் காக்கப்பட்டு, தொழில் துறையிலே உதவிகள் கொடுக்கப்பட்டு, நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டு, ஆக பல 'பட்டு'க்களையும் பார்க்க முடிந்தது.

தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள இந்த அரசின் கொள்கைக் குறிப்பிலே 5 விதிமுறைகளை நாம் பார்க்க முடிந்தது. சாத்தியக்கூறான திட்டங்கள், உறுதுணை வசதிகள், கடன்-மூலப்பொருள்கள், விற்பனை வசதி, பயிற்சி அறிவுரை ஆகிய அளவிலே 5 கோணங்களிலே அணுகுமுறைக் கொள்கையை இந்த அரசு மேற்கொண்டிருப்பதை என்னால் பார்த்து நன்றாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. கொள்கை என்ன என்று பார்க்கின்றபோது, அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியிலே நடக்கிற இந்த அரசு, அண்ணா அவர்கள் தெரிவித்த கருத்தை நினைவுபடுத்துகிற செயல் அமைப்புகளாக இந்த விளக்கங்களைத் தந்திருப்பதை நான் காண முடிந்தது. அண்ணா அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பொதுவாக இந்த நாட்டிலே தொழில் வளர வேண்டுமென்பது எல்லோரும் ஒப்புக்கொள்கிற ஒரு கொள்கையாகும். ஆனால் கருத்து வேறுபாடுகள் எதிலே வருகிறது என்றால், எந்தவிதமான தொழில் வளர வேண்டும் என்பதில்தான். ஒவ்வொருவருக்கும் ஒரு கருத்து இருக்க முடியும். அது எந்தத் துறையிலே வளரவேண்டுமென்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அந்தத் தொழில் வளர்ச்சியின்



முழுப் பயனை யார் அனுபவிக்கிறார்கள் என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். இந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான் நாம் பல கட்சிகளாக இயங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகையால்தான் தொழில் வளர்ச்சி என்பதிலே யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்காது என்று அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் 'தொழிலைத் தேடி நகரங்களிலிருந்து எல்லோரும் கிராமங்களுக்குப் போக வேண்டும், நகரங்களுக்கு கிராமங்களிலிருந்து வந்து விடுகிறார்களே' என்று சொல்லி வருத்தம் கொண்டு, அதைச் சொல்லிக்கொண்டிருந்தார்களே தவிர, எப்படி கிராமத்தை உருவாக்க வேண்டும் என்பது பற்றியும், மக்கள் எப்படி கிராமங்களில் தங்குவார்கள் என்பது பற்றியும் சிந்தனைகளை பல்லாண்டு காலமாக மறந்து விட்டார்கள். அதை மாற்றி, கிராமத்திலிருப்பவர்களுக்கு அங்கேயே தொழில் தர வேண்டுமென்ற நிலையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையில் தெரிவித்ததுபோல். 'இரண்டு, மூன்று ரூபாய் கிடைத்தால் கூட வாழ்ந்து விடலாமே' என்று இருக்கிற சமுதாய மக்களுக்கு ஏதேனும் ஒரு தொழில் கொடுத்தாக வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு 8 மாவட்டங்களிலே விரைவிலே மாவட்டத் தொழில் மையங்கள் உருவாக்க இருப்பதுடன், விரைவில் மற்ற மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மையங்கள் உருவாக இருப்பது நல்ல அறிகுறி. தமிழகத்தை ஒரு தொழில் மாநிலமாக ஆக்குகின்ற முயற்சி மேற்கொள்ளப் பட்டிருப்பதை நாம் பார்க்க முடிகிறது. தமிழகம் தொழில் வளர்ச்சியிலே இரண்டாவது இடத்திலிருந்து 11-வது இடத்திற்குத் தள்ளப்பட்டிருப்பதாகக் கூறுவதைப் பொறுத்த வரை, நாம் ஒருவேளை பின்தங்கினோமா அல்லது மற்றவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டார்களா என்பதுபற்றி எப்படி கருத்துக்கள் இருந்தாலும், மீண்டும் அந்த நிலையை அடைகின்ற முயற்சியிலே இந்த அரசு பணியாற்றுவது பாராட்டுக்குரிய செயலாகும்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் உடனடியாக நிறுவக் கூடிய சிறு தொழில்களின் பட்டியலைத் தயாரித்து, அதன்படி 423 இலட்சம் ரூபாயில் 6,337 பேருக்கு வேலை

வாய்ப்பு இந்த ஆண்டிலேயே அளிக்க முடியும் என்று தெரிவித்திருப்பது பாராட்டுக்குரிய செயலாகும். அதுபோல மற்ற மாவட்டங்களிலும் இந்த முறைப்படி பார்க்கும்போது, பலர் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள் என்பதற்கு இது அறிகுறி. இது மகிழ்ச்சிக்குரிய செய்தி..

அடுத்து, ஒரு தொழில் தொடங்கினால், உடனே நீர் வசதி, மின்சார வசதி, இட வசதி மற்றும் வதிகள் அனைத்தும் உள்ள இடம் இருக்கிறதா என்று சிறு தொழில் தொடங்குபவர்கள் இடத்தைத் தேடி அலைவதைத் தவிர்ப்பதற்காக சிறு தொழில் கூடங்கள் நிறுவுகின்ற முயற்சியை 'சிட்கோ' நிறுவனம் 1979-80 ஆம் ஆண்டிலேயே ஏற்று ஒவ்வொன்றும் ரூபாய் 7,600 அளவில் 3,000 தொழில் கூடக் கட்டிடங்கள் கட்ட உள்ளது. இது சிறு தொழில் தொடங்குவதற்கு எடுக்கப்பட்ட ஒரு நல்ல முயற்சி. 1,000 தீப்பெட்டித் தொழில் கூடங்கள் அமைப்பதன் மூலம் 20 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பைப் பெறுகிற விஷயம் எண்ணி மகிழக் கூடியதாகும்.

அடுத்து, அரசுத் துறையின் தேவைகளுக்கு இயன்ற அளவு தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களையே வாங்கக் கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருவது சிறந்தது. அரசுப் பள்ளிகளில், கல்லூரிகளில் சோதனைச் சாலைகளுக்குத் தேவையான 1 கோடி ரூபாய் மதிப்புள்ள கருவிகளை 'சிட்கோ' நிறுவனத்தின் மூலம் வாங்குகின்ற முயற்சியை எண்ணிப் பார்க்கிறபோது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இங்கே மேலவையில் முதன் முதலாக உறுப்பினராக வந்தபோது குறிப்பிட்ட ஒரு கருத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். ஊட்டியிலிருக்கிற போட்டா பிலிம் தொழிற்சாலையிலே உற்பத்தியாகிற போட்டோ பிலிமைப் போடுகிற டப்பாக்களை எங்கோ வெளியேயிருந்து வாங்காமல் அவற்றை நம் மாநிலத்திலேயே ஏன் செய்யக் கூடாது என்று அப்போது கேட்டார்கள். அந்த அடிப்படையிலே இந்த மாநிலத்திலேயே, தன்னிறைவோடு, தொழிற்சாலைகளுக்கு வேண்டிய உபகரணங்களாகட்டும்,



அல்லது துணைப் பொருள்களாகட்டும், அத்தனையும் செய்யப்பட வேண்டுமென்கிற கருத்து பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இப்படிப்பட்ட நிலைமையைச் சொல்கிறபோது, இன்று ஊட்டியிலுள்ள அந்தத் தொழிற்சாலை கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது. நேற்றையதினம் கூட இதை நான் குறிப்பிட்டேன். அரவங்காட்டிலிருக்கின்ற மத்திய அரசைச் சார்ந்த வெடி மருந்துத் தொழிற்சாலைக்கும் இதே நிலை தான். தொழில்கள் வளர்வதற்கு தமிழக அரசு கொண்டுள்ள நோக்கத்தை மத்திய அரசும் கொண்டு செயல்பட்டால், அத்தகைய நிலைமைகள் எல்லாம் ஏற்படாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இரண்டு மாடி அளவு வரையுள்ள அரசுக் கட்டிடங்களை, சிமெண்ட்டுக்குப் பதிலாக சுண்ணாம்பைப் பயன்படுத்திக் கட்ட வேண்டுமென்பதன் மூலம் சுண்ணாம்புக் காளவாய்கள் பெருகக் கூடிய வகையில் ஒரு காந்திய நோக்கத்தை இந்த அரசு செயல்படுத்துவது பாராட்டுக்குரியது இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். ரஷ்ய நாட்டுத் தலைவர் திரு. குருஷேவ் அவர்கள் ஒரு முறை சென்னைக்கு வந்தபோது இங்குள்ள இண்டகிரல் கோச் பேக்டரியைப் போய்ப் பார்த்தபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். பெரிய கட்டிடங்களைக் கட்டி வீணாக்கியதை விட சிறிய கட்டிடங்களையும், சிறிய கூடங்களையும் கட்டியிருந்தால் போதும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதனாலே தொழில் கூடங்கள் கட்டுவதில் பணத்தை வீணாக்காமல், தொழிலைப் பெருக்க வேண்டுமென்ற நிலையை எண்ணி, சிமென்டுக்கு வீணாகச் செலவிட்டு ஆடம்பரமாகச் செலவிடுவதைக் காட்டிலும் அந்த நாளிலே தமிழகத்திலே எப்படி சுண்ணாம்புக் காரையைப் பயன்படுத்தி கட்டிய கட்டிடங்கள் இன்றைக்கும் நல்ல நிலையில் இருக்கின்றனவோ அதே போல் சிமெண்டுக்குப் பதிலாக சுண்ணாம்புக் காரையைப் பயன்படுத்த இருப்பது பாராட்டுக்குரியது.

'சிட்கோ' நிறுவனம் தொழில் அதிபர்களை ஊக்குவிக்க, உருக்கு, இரும்புப் பொருட்கள், நிலக்கரி, மெழுகு போன்ற

வற்றை முன்கூட்டியே அதிகமாகச் சேமித்து வைத்து ஓராண்டுக்குத் தேவையான அளவு தொழில் நடத்துவதற்கு முன்னேற்பாடாக தட்டுப்பாடு இல்லாத நிலைமையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

கிராமத் தொழிலாளர் கைத்திறனைச் செம்மைப்படுத்த, தச்சர், கொல்லர் போன்றவர்களுடைய குழுக்களை அமைத்து அவர்களை தொழிற்பணிப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி அவர்கள் பயிற்சி பெற வேண்டுமென்கின்ற முடிவு பாராட்டுக்குரியதாகும். அவர்கள் செய்கிற தொழிலிலேயே அவர்களுக்கு நுணுக்கத்தையும் கற்றுத் தந்து அவர்கள் ஒரு நாள் ஈட்டுகின்ற ஊதியத்தையும் தந்து, அவர்களுடைய உழைப்பை வைத்து அதிகத் திறனை வெளிப்படுத்துகிற நிலையை ஏற்படுத்தியிருப்பது பாராட்டுக்குரிய முயற்சி.

பெரும்பாலும் சிறு தொழில்கள் ஏற்படுத்துபவர்களுக்கு ஏற்படுகிற இடையூறுகளை எல்லாம், இதுவரை இருந்து வந்த அலைச்சலை எல்லாம் தவிர்த்து உரிமங்கள் சிரமமில்லாமல் பெறுகிற நிலையிலே, அதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை எல்லாம் போக்குவதற்காக, ஊராட்சிகளால் தொழில்கூடப் பகுதி என ஒதுக்கப்பட்ட இடங்களில் குறிப்பிட்ட 14 தொழில்களைத் தவிர, மற்ற தொழில்கள் தொடங்க சுகாதாரத் துறையிடமிருந்து முன் கூட்டியே ஒப்புதல் பெறத் தேவையில்லை என்றெல்லாம் ஏற்படுத்தியிருக்கிற வசதி முறைகள் சிறு தொழில்கள் பெருகுவதற்கு உரிய அறிகுறியாகும். 5 பரித்திறனுக்குக் (எச்.பி.) குறைவாகத் தேவைப்படும் தொழிற் கூடங்களைப் பொறுத்தவரை, சுகாதாரத் துறையின் அனுமதியை ஊராட்சிகளில் பெறத் தேவையில்லை என்று சொல்லியிருப்பது. தொழில்கள் வளர்வதற்குரிய ஒரு நல்ல அறிகுறி. அதையொட்டி ஊராட்சிகளில் இன்னும் 6 மாத காலத்திற்குள். தொழிற் பகுதி எது என்பதை வரையறுக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறார்கள். மேலும் மாதத்திற்கு ஒரு முறை மாவட்டத் தொழில்மைய மேலாளர், சுகாதார அதிகாரி, கோட்ட வளர்ச்சி அதிகாரி ஆகியவர்கள் சந்தித்து



யார், யார் மனுச் செய்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் பார்த்து முடிவு செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருப்பது போற்றுவதற்குரியது.

அடுத்த கட்டமான மின் இணைப்புத் தருவதில் தொழிற்சாலைகளை உருவாக்க விட்டு மின் இணைப்புக்காக அலைந்து கொண்டிருப்பதையெல்லாம் மாற்றி, நகராட்சி, கிராமப் பஞ்சாயத்து ஆகியவற்றிடமிருந்து முன்கூட்டியே மின் துறை அனுமதியைப் பெற்றிருக்கத் தேவையில்லை என்றும் 10 பரித்திறனுக்குக் குறைவான தொழில்களுக்கு இணைப்பை இலாபத்தைக் கருதாது தொழில் பெருகுகிற நோக்கத்தோடு தர வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருப்பதோடு 2 இலட்சம் ரூபாய் வரை திட்டங்களை ஆங்காங்கே இருக்கிற அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டுமென்ற உரிமையையும் வழங்கியிருக்கிறார்கள்.

மூலதன மானிய உதவியை விரிவாக்கவும், நலிந்த நிலை தொழில் கூடங்கள் சீரமைப்புக் குழுவை உருவாக்கவும், தற்போது 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, நலிந்த தொழிலை வளர்ப்பதற்கு உதவி செய்திருப்பது பாராட்டத்தக்கது. 1979-80 ஆம் ஆண்டில் 1½ இலட்சம் பேர் இதன் மூலம் வேலைவாய்ப்பைப் பெறுகின்ற நிலையையும் எண்ணிப் பார்க்கின்றபோது, இந்த அரசினுடைய தொழில் கொள்கையின் சிறப்பை உணர முடிகிறது.

'சிட்கோ' விற்பனை வரித் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு கிராமத்திலே, சிறு நகரத்திலே தொழில் துவங்க ஊக்குவிக்கின்ற தன்மையிலே செயல்பட்டிருப்பது போற்றுவதற்குரியது. அத்தோடு இயந்திரமயமாக்கப்பட்ட இந்த நாட்டிலே, மக்கள் சக்தி பெருகியிருக்கிற இந்த நாட்டிலே, மக்கள் சக்தியைப் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் செயல்பட வேண்டும் என்பதால், காகித ஆலைத் திட்டத்திலே கூட கரும்புச் சக்கையைப் பயன்படுத்துகிற முயற்சி மேற்கொள்ளப்பட இருப்பது போற்றுதற்குரியது.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1979 ஏப்ரல் 24

(பிற்பகல் 12-10)

21 சர்க்கரை ஆலைகளின் கழிவுப்பாகையும், எரி சாராயத்தையும் மூலப்பொருட்களாகக் கொண்டு பலர் தொழில்கள் தொடங்கலாம். கடலோரம் உப்பளங்கள் இருக்கின்ற இடங்களைப் பொறுத்து உப்பு உற்பத்தி, உப்பு அடிப்படையான இரசாயனத் தொழில்களை அமைக்கலாம். கறுப்புக் கல்லைப் பொறுத்த வரையில், அதை ஒரு பெரிய வாணிகமாக தனியார் நடத்திக் கொண்டிருந்ததை மாற்றி, அரசு ஏற்றுச் செயல்படுத்த இருப்பதைப் போற்றுகிறேன். இன்னும் சில தனியார்கள் எந்த முறையிலே அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து, இதனை முழுவதும் சேர்த்து தமிழ் நாடு கனிவள நிறுவனம் இயக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1230 ஆம் ஆண்டிலேயே தென் ஆற்காட்டில் பறங்கிப்பேட்டையிலே இரும்புத் தொழிற்சாலை நிறுவ மார்ஷல் ஹீத் என்பவர் ஒரு முயற்சி மேற்கொண்டார் என்று அறிகிறோம். கோவையிலே 'டாடாபாத்' என்ற ஒரு பெரிய பகுதியிலே ஒரு 'ஜாம்ஷெட் பூரையே' நிறுவ இருந்தார்கள் என்றும் ஆனால் இப்போது மிஞ்சியிருப்பது அந்த 'டாடாபாத் என்ற பெயர்தான் என்றும் அறிகிறோம் அதற்குப் பதிலாக இப்போது தமிழ் நாடு கனிவள நிறுவனம் இருக்கிறது. திருவண்ணாமலையிலே கூட நல்ல வாய்ப்பு இருக்கிறது. கனிவளங்களைத் தேடிக் கண்டு, இந்தத் தொழிலை வளர்க்கவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் பெட்ரோ கெமிக்கல் காம்பிளக்ஸ் பற்றிக் குறிப்பிட்டார்கள். நானும் அதையே உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு மத்திய அரசு முயற்சிகளை மேற்கொள்ள நாம் வற்புறுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபோது, மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. பகுகுணா அவர்கள் தன்னுடைய மாநிலத்திற்குத் தேடிக்கொண்டார் என்று பெருமைப்பட்டதைப் போல, நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் நம்முடைய மாநிலத்திற்கென்று நல்ல பெரிய தொழிற் சாலைகளை மத்திய அரசின் சார்பாக பகுகுணா அவர்களின் வழியிலே நின்று, உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்



1979 ஏப்ரல் 24] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

கிறேன். 20 ஆண்டுகளுக்கு முன் மத்திய அரசின் பெரிய தொழிற்சாலைகள் எப்படி இருந்தனவோ அப்படியே தான் இன்றைக்கும் இருக்கின்றன. ஆனால், சமீபத்தில் அப்பேர்ப் பட்ட பெரிய தொழிற்சாலைகள் உருவாகவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நிறைய பேர் பேச இருக்கிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தமிழ் நாட்டிலே நடக்கும் தொழில்களில் தமிழ் மக்களைப் பயன்படுத்த வேண்டும். ஒரு தமிழன் தனியாக இருந்தால் திருக்குறள் படிப்பான், இரண்டு தமிழர்கள் ஒன்று சேர்ந்தால் ஒரு நாட்டினுடைய நல்லதை எண்ணிப்பார்ப்பார்கள், மூன்று தமிழர்கள் ஒன்று சேர்ந்தால் சிறு தொழில்களைத் தொடங்கத் திட்டமிடுவார்கள் என்ற முறையிலே இருக்க வேண்டும். அரசு எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகளைக் கண்டு மகிழ்கிறேன். 320 பக்கங்கள் கொண்ட இந்த நூலை மக்கள் அனைவரும் பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து, தமிழ் மக்களுக்குக் கொள்கை விளக்கம் அளிக்கும் விதத்தில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தெரிவித்து, தமிழக அரசுக்குப் பாராட்டு தெரிவித்து உரையை முடித்துக்கொள் கிறேன்.

THIRU J. M. MIAKHAN : Mr. Deputy Chairman, Sir, at the outset, let me congratulate the Government of Tamil Nadu and our 'Puratchi Thalaivar' Thiru Ramachandran on having formulated a very good policy on industries. Many hon. Members have referred to the different aspects of industrial development but they have not mentioned about a very vital industry, namely, the leather industry.

MR. DEPUTY CHAIRMAN : I think the hon. Member would confine his remarks to the leather industry.

THIRU J. M. MIAKHAN : Yes, Sir, that is what I propose to do. If I refer to the leather industry in great detail, it will take a long time. Therefore, I will try to condense my speech as much as possible. I shall refer only to the vital aspects of the leather industry and I hope it would be useful to the Government. Leather industry is a foreign-exchange earning industry and it is the third largest foreign-exchange earner. Tamil Nadu contributes more than

65 per cent or 70 per cent of the total exports of this commodity. But the leather industry in Tamil Nadu is not receiving the full attention which is due to it. In Tamil Nadu we have got the infrastructure for the manufacture of different varieties of leather. Besides the traditional varieties like upper-leathers used in the manufacture of footwear and other things, we are also manufacturing some sophisticated varieties of leather used in the manufacture of garments and some industrial parts such as pickers used in the textile industry. For example, if pickers are made out of metal, they would break by the impact of the machines. Therefore, only leather is being used for the manufacture of pickers. Nowadays, the plastic industry is trying to take the place of leather but it has not been able to displace leather completely. The importance of the leather industry has not been properly appreciated and the necessary encouragement has not been given. If proper encouragement is given, these articles like pickers can be manufactured in large quantities and sent to Northern India and other places. There are also other items like belts used in industries which are manufactured from leather. In the automobile industry also, some parts have to be made only out of leather or wool. The leather industry has got various by-products also. For instance, even some dust is being processed into manure by Parry and Company. Similarly, products like blood, etc., are converted into nitrogenous manure. Likewise, the sediment of the waste water coming out of the leather factories and stagnating in the fields is a good source of manure.

While the leather industry is not being given proper incentives, there are also some factors which check the growth of that industry. For instance, the Government are now insisting upon pollution-prevention measures in the leather industry. It is true that the waste water coming out of the leather factories is, to some extent, a health hazard. But the solution suggested by Government for this problem cannot be carried out by individual tanners. Some tanners who have invested only Rs. 1 lakh or Rs. 1 1|2 lakhs on the whole have now been asked to spend more than a lakh of rupees on having filter-pipes, etc. Such improvements cannot be undertaken by individual tanners and, therefore, Government have to devise some means to see that they are helped. Somehow, means must be found to remove their difficulties and they should be encouraged to manufacture leather products and also finished goods in leather, like shoes, belts, pouches, etc. If such encouragement is given, the leather industry would be of much help for the economic advancement of



our country. In our State, the raw materials required for leather industry are available in sufficient quantities and, therefore, we should devote our attention to developing the leather industry so that it may provide work for several lakhs of people. The leather industry employs more than 8 lakhs of ordinary labourers, leave alone the technicians and other people. But, still, proper attention has not been given by our Government to this industry. If proper encouragement is given, the leather industry can provide employment for another 2 lakhs of people. The by-products of this industry can be made use of in the manufacture of capsules. Now, a major portion of gelatine, glue, etc. , required for the manufacture of capsules is being imported from other countries like West Germany.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:* 12½ மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச வேண்டும். 1 மணிக்குக் கூட்டம் முடியவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தலைவரே கூட பேசவிருக்கிறார். ஆகவே, சீக்கிரம் முடிக்க வேண்டும்.

THIRU J. M. MIAKHAN : Sir. I will finish in two minutes. We should bestow some attention on starting a gelatine factory in our State. There are very many entrepreneurs who are willing to undertake such projects if Government give proper incentives. The aspect of labour has also to be looked into. For instance, one of the pioneer companies in South India, namely, the Chrome Leather Company is not working now. There is neither a lock-out nor a strike but it is only a closure. But, still, for the past nine months the workers are going to the factory and they are not receiving any salary. I request the Hon. the Labour Minister and the Hon. the Chief Minister to kindly bestow their attention on solving this problem. Unless the labourers are kept satisfied, no work can be turned out and there cannot be industrial peace.

(பிற்பகல் 12·20)

Another thing I wish to mention is the general attitude, not only of this Government but also of the Central Government, towards the businessmen and the entrepreneurs. They are considered to be anti-social elements and they are not given proper respect and consideration. They are considered to be persons who want to enrich

themselves without paying taxes due to the Government. On the other hand, they are enhancing the wealth of the country. They are not only producing finished products but also providing employment to a large number of people. These people are also helping the country, just as the agricultural classes. They must be given proper respect and they should not be treated as anti-social elements. They are citizens as loyal as others. They should be given proper encouragement and respect.

There are very many other industries to which I wish to make a reference.

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member wanted to speak on Leather Industry and I have permitted him, even though the leaders alone could be permitted to speak now. The hon. Member may please conclude, without going into other matters.

THIRU J. M. MIAKHAN : With these things, I wish to conclude because Hon. Deputy Chairman is not inclined to give more time.

MR. DEPUTY CHAIRMAN : The leader of the hon. Member's party is also to speak. The hon. Member may please conclude.

THIRU J. M. MIAKHAN : As rightly pointed out by the Hon. Deputy Chairman, there are other Members to express their views here. There are doctors, engineers and other people in the Government, but there is none connected with the leather industry. The Government must bestow much attention upon the problems of the leather industry. If there was any person connected with leather industry, he would have mentioned these things to the Hon. Chief Minister for inclusion in this policy note. The leather industry has great scope for improvement and it can be carried on both on a big scale and on a small scale. Employing 2 or 3 people, the leather products could be manufactured. There can be a leather factory employing even 3,000 people. From a mini-industry to a major industry, there can be all types of industries in the Leather sector. There is much scope for exports to foreign countries. There are very many by-products which have much scope for sale within the country also. I would request the Government to bestow more attention upon this and give due encouragement. If the Govern-



ment want any concrete proposals, I am prepared to give them. There is also a Leather Export Promotion Council and we can give good schemes as to the manner in which the labour potential could be increased and new factories could be started. Thank you, Sir.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. மியா கான் அவர்கள் பேசும்போது அமைச்சரவையில் டாக்டர்...

MR. DEPUTY CHAIRMAN: What is the point of order A point of order can be raised only on the basis of a particular rula relating to the conduct of the proceedings in the House. If it is a point of clarification, then it will be all right.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், சார், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது. அமைச்சரவையில் டாக்டர் இடம் பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் டாக்டர் யாரும் அமைச்சரவையில் இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி தனது கருத்தைத் தெரிவிப்பார்களா?

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மாண்புமிகு மேலவைத் தலைத் தலைவர் அவர்களே, தொழிற் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல எனக்கு வாய்ப்புக் கொடுத்தமைக்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது, துவக்கத்திலேயே ஒரு கருத்தைச் சொன்னார்கள். முன்பு தமிழகம் தொழிற் துறையில் முன்னணியில் இருந்தது, இப்போது அது தொழிற் துறையில் பின்னாலே தள்ளப் பட்டிருக்கிறது என்று சொல்லி, தனது பேச்சைத் துவங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுமார் 16 ஆண்டுகளுக்கு முன்பு இதே அவையில் ஒரு எம்.எல்.சி. யாக வீற்றிருந்தார்கள் அப்போது தொழிலமைச்சராக இருந்தவர் 'ஆர். வீ.' என்று பிரபலமாக அழைக்கப்பட்ட

திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் ஆவார். அவர் பலமுறை இந்த மன்றத்திலேயே ஒரு கருத்தை பெருமிதத்தோடு சொல்லி வந்திருக்கிறார்கள். இந்திய தேசத்திலேயே பஞ்சாப்தான் தொழிற் துறையில் முன்னணியில் இருக்கிறது, இரண்டாவது இடத்தைத் தமிழகம் வகிக்கிறது என்று ஒருமுறை அல்ல, பலமுறை இந்த அவையிலேயே அவர் சொன்னது ரெக்கார்டாக இருக்கிறதென்பதை நான் நினைவுபடுத்துகிறேன்.

ஆனால் அந்த நிலை மாறி, இன்றையதினம் நம்முடைய தமிழகம் 5-வது அல்லது 6-வது இடத்திற்கு வந்திருப்பதாக நான் அறிகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி' மாண்டி அவர்கள் பேசும்போது தமிழகம் 4-வது இடத்தைப் பிடித்துக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அவ்வாறு தொழிற் துறையில் தமிழகம் 4-வது இடத்தைப் பிடித்திருந்தால், அது மிகவும் வரவேற்கத் தக்கது, மகிழ்ச்சிக்குரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எப்படியும் தமிழகத்தை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தை இந்த அரசு கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இந்த துறையைத் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டிருப்பதன் மூலம் தெளிவாக்கினாலும், அவருடைய ஆர்வத்தை அது காட்டினாலும், என்னைப் பொறுத்தவரையில், ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழிற் துறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இருப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதன் காரணமாக தமிழகத்திற்கு மிக நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. முதல்வர் அவர்கள் பொறுப்பில் பல இலாக்காக்கள் இருக்கின்றன. இவ்வாறு பல இலாக்காக்களைத் தம் பொறுப்பில் வைத்துக்கொண்டு, அவர் அத்தனை இலாக்காக்களுக்கும் நியாயம் வழங்க முடியும் என்ற கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே இரண்டு, மூன்று இலாக்காக்களை மட்டும் வைத்துக்கொண்டு ஏனைய இலாக்காக்களை அவருடைய சக அமைச்சர்களிடம் கொடுத்து விட வேண்டும். தம்மிடம் இருக்கும் 2: 3 இலாக்காக்களின் மீது



அவர் கான்சன்ட்ரேட் செய்து கவனம் செலுத்தினால், அதனால் நன்மை கிடைக்கும். முதலமைச்சர் அவர்களின் ஆற்றலைப் பற்றியோ திறமையைப பற்றியோ யாருககும் எந்தச் சந்தேகமுமில்லை. அவருடைய திறமையும் ஆற்றலும் தமிழகத்திற்கு முறையான வகையில் பயன்பட வேணடும் என்பதைத்தான நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

புதிதுபுதிதாக சிறு தொழில்களைத் தமிழகத்தில் ஆரம்பிக்க விரும்புகிறவர்களுக்கு உதவக்கூடிய வகையிலும், அவர்களை ஊக்குவிக்கக் கூடிய வகையிலும் அரசாங்கத்தின் தொழில் கொளகை இல்லை என்ற கருத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புதிதாக சிறு சிறு தொழில்களைத் துவங்க விரும்புகிறவர்களுக்கு ஆர்வத்தைக் குலைக்கிற நிலைமைகள்தான் இருந்து வருகின்றன. ஒரு தொழிற்சாலையில் இத்தனை அடி ஜன்னல் இருக்க வேண்டும். அங்கே இவ்வளவு ஸ்பேஸ் இருக்க வேண்டும் என்று சட்டம் சொல்கிறது. ஜன்னல் கட்டி விட்ட பிறகு தொழில் தொடங்க அனுமதி கேட்டால், ஜன்னல் 2" நீளமாகவே, குறைவாகவோ இருப்பதால், அனுமதியில்லை என்று சொல்கிறார்கள். தாழ்வாரம் 12 அடி இருக்க வேண்டும் என்றால் அதில் 2" குறைவாக இருக்கிறது என்றால், லைசென்ஸ் இல்லை என்று சொல்வது பாராட்டுக்குரிய போக்கல்ல. நல்லபடியாக நடக்கிற தொழில்களுக்கு இப்படிப்பட்ட சட்டதிட்டம் போட்டால் பரவாயில்லை. புதிதாக வருகிறவர்களுக்கு இப்படிப்பட்ட சட்டதிட்டங்களை நிர்ணயிக்கும்போது, அவர்கள் ஆர்வமிழந்து தங்கள் முயற்சியைக் கைவிடக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. முன்பெல்லாம் 5 ஹச்.பி. மோட்டாரைப் பயன்படுத்தி தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்று அனுமதி கேட்டால், மின் வாரியத்தினர் உடனே மின்னிணைப்புக் கொடுப்பார்கள். இப்போது முனிசிபல் ஏரியாவாக இருந்தால், முனிசிபாலிடியிலிருந்து லைசென்ஸ் வாங்கிக் கொண்டுவந்தால்தான், பவர் கனெக்ஷன் கொடுக்க முடியும் என்ற விதியை இந்த ஆண்டோ, சென்ற ஆண்டோ கொண்டு வந்திருக்கிறார்கள். இது எந்தவகையிலும் அவசியமில்லாத ஒன்றாகும். முனிசிபாலிடியிலிருந்து லைசென்ஸ்

வாங்கி வர வேண்டுமென்றால, அதற்கு 6 மாதம் அல்லது ஒரு வருஷமாகிவிடும். அதற்கு பிளான கொடுக்க வேண்டும், அதற்கு அப்ரூவல் பெற வேணடும என்று பல்வேறு கட்டங்கள் தாண்ட வேணடியிருக்கிறது. இவ்வளவும செய்து முனிசிபல் லைசென்ஸ் வாங்கிய பிறகுதான், மின்னிணைப்பு பெற முடியுமென்றால், இது புதிதாகத் தொழில் தொடங்க விரும்புகிறவர்களுக்கு தடைக் கற்களாக விளங்குகிறது. எனவே இத்தகைய உத்தரவை அரசாங்கம் வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில், இத்தகைய தொழில் துவங்குகிறவர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கத்தின் சார்பில் கடன் கூட கொடுக்கிறார்கள். அப்படி அரசாங்கம் கொடுக்கிற கடன் தொகைக்கு 3 ஆண்டுக் காலத்திற்கு வட்டிகூட வசூலிக்கப்படுவதில்லை. அரசாங்கம் ரூ. 25,000 கடன் கொடுத்து, ஒருவர் புதிதாகத் தொழில் துவங்கினால், மகாராஷ்டிர மாநிலத்தில் 3 வருஷத்திற்கு வட்டியே கட்ட வேண்டாம் என்ற நிலை இருக்கிறது. அதற்குப் பிறகும் இரண்டாண்டுக் காலத்திற்கு தவணைகளைச் செலுத்த வேண்டிய அவசியமில்லை. இப்படிப்பட்ட ஊக்குவிக்கும் நிலைமைகளை அங்கெல்லாம் மேற்கொண்டிருக்கிற காரணத்தால், சிற தொழில்கள் நிறைய வளர்கின்றன. அது வரவேற்கத்தக்க நிலையாகும். அதே நிலைமைகளை தமிழகத்தில் நமது அரசாங்கமும் பின்பற்றினால், நலமாக இருக்கும் என்று கூறிக் கொள்ளுகிறேன்.

தொழில்களில் இரண்டுவகையான பிரிவுகள் இருக்கின்றன ஒன்று அரசாங்கமே நடத்துகிற தொழில்கள். மற்றது தனியார்கள் நடத்துகிற தொழில்கள். சுமார் ரூ. 3 கோடி அளவுக்கு அதிகமான மூலதனம் போட்டு நடத்தப்படும் பெரிய தொழில்கள் அனைத்தையும் அரசாங்கமே எடுத்து நடத் வேண்டும். அப்படிச் செய்வதுதான் நல்லது. ரூ. 3 கோடிக்கு குறைவான மூலதனம் போடப்பட்டுள்ள தொழில்களை மட்டுமே தனியார் நடத்த வேண்டும். பெரிய தொழில்களை அரசாங்கமே நடத்தினால், அவைகளின் மூலம் கிடைக்கிற லாபம் அனைத்தும் அரசாங்கத்திற்கு வரும். அதன் மூலம் பொதுமக்களுக்கு அ உதவும். பொதுமக்கள் மீது வரிக்கு மேல் வரி போடுகிற நிலை



மாறி, குறைவான வரியிருந்தும் நிறைவான பலன் கிடைக்கிற நிலை உருவாகும். என்ற கருத்தை தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், சர்க்கரை, சிமெண்ட், மற்றும் உரம் ஆகிய மூன்றையும் உற்பத்தி செய்யும தொழிற்சாலைகள் அனைத்தும் தேசியமயமாகக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, சில தொழில்களில் கழிவுநீரும் கழிவுப் பொருள் களும் வெளியேறுவதன் மூலம் மக்களின் சுகாதாரம் பாதிக்கப் படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. குறிப்பாக சர்க்கரைத் தொழிலிலும், தோல் பதனிடும் தொழிலிலும் கழிவுநீர் வெளி யேற்றம் அதிகமாக உண்டு. கழிவுநீரைச் சுத்தப்படுத்த ஒவ்வொரு தொழிற்சாலையும் அதற்கென்று இருக்கிற ஒரு 'பிளாண்ட்டை' வைக்க வேண்டும் என்று அரசு ஏற்கனவே கட்டளையிட்டிருக்கிறது. அத்தகைய பிளாண்ட்டுகளை நிறுவா விட்டால், அந்தத் தொழிற்சாலைகளில் லைசென்ஸ் ரத்து செய்யப் படும் என்றும் அதற்கு ஒரு கால அவகாசம் கொடுத்திருப்ப தாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு பிளான்ட்டுக்கும் ஒரு லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் தொழிற்சாலைகளின் சொந்தக் காரர்களால் அதை எப்படி வைக்க முடியும் என்றும் கேட்டார்கள். அந்தத் தொழிலே ஒரு லட்ச ரூபாய் மூலதனத்தில்தான் நடைபெறுகிறது என்ற நிலையில் அதற்கு மேல் அங்கே ஒரு பிளாண்ட் வைக்க ஒரு லட்சம் செலவழிப்பது எப்படி இயலும் என்று கேட்டார்கள். இதற்கு எப்படியாவது அரசாங்கம் தீர்வு காண வேண்டும் என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில், அரசாங்கமே ஒவ்வொரு தொழிற்சாலையிலும் இத்தகைய 'பிளாண்ட்டை' வைக்க வேண்டும். அதற்குரிய தொகையினை 5 அல்லது 10 வருஷ காலத்தில் தவணை முறையில் அந்தத் தொழில் அதிபர்களிடமிருந்து வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற நிலையை அரசாங்கம் உருவாக்க வேண்டும்.

(பிற்பகல் 12-30)

தோல் தொழிலைப் பொறுத்தவரை, மற்ற மாநிலங்களைவிட தமிழகத்திலேதான் அதிகமான தோல் உற்பத்தி செய்யப்படுகிறது.

[திரு. என் சுந்தரேசத் தேவர்] [1979 ஏப்ரல் 24

நம்முடைய நாட்டின் உற்பத்தியில் 75 சதவிதம் தமிழகத்தில்தான உற்பத்தி செய்யப்படுகிறது. அந்தத் தொழிலில் நல்ல ஆதாயம் இருக்கிறது. அரசாங்கமே தோல் உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலைகளை, எட்டு, பத்து இடங்களில் துவக்கினால், அதனால் நல்ல ஆதாயம் அரசுக்குக் கிடைக்மென்று சொல்ல விரும்புகிறேன்.

எனக்குக் கிடைத்திருக்கிற அவகாசம் கொஞ்சமாக இருப்ப தால் கடைசியாக ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். மருந்துகளைத் தயாரிக்கக் கூடிய தொழிற்சாலைகளை நம்முடைய அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தக் கருத்து மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்குப் பிடிக்காத கருத்தாக இருக்கலாம். மருந்துகளை தனியார் உற்பத்தி செய்தால், அவர்கள் தங்கள் இஷ்டம்போல் தரங்களை மாற்றக்கூடும். மருந்துகள் எப்போதும் ஒரே தரமுள்ளவையாக வர வேண்டும்.

THIRU A. R. DAMODARAN : My hon. Friend Thiru Abdul Wahab has suggested nationalisation of all industries except hides and skins. I would like to know his opinion on this also.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலேதான் நான் சொன்னேன். மருந்துகள் உயிரைக் காப்பாற்றக்கூடியவை. ஆகவே மருந்துகள் தரமுள்ளவையாக இருக்க வேண்டும். தனியார் மருந்துகளைத் தயார் செய்யும்போது, சில சமயங்களில் தரமாகச் செய்கிறார்கள். சில சமயங்களில் ஆதாயம் வேண்டுமென்று தரத்தைக் குறைத்துவிடுகிறார்கள். மருந்துகள் எப்போதும் ஸ்டாண்டர்டாக இருக்க வேண்டும். ஆகவே மருந்துகளை அரசாங்கமே தயார் செய்தால், ஆதாயத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் மக்களுடைய நலனைக் குறிக்கோளாக வைத்து, தயார் செய்ய முடியும். ஆகவே மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகளை அரசாங்கமே நடத்த வேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.



1979 ஏப்ரல் 24]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. பா. ரா. தாமஸ், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு, மூன்று நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற வாய்ப்புக் கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தத் துறையிலுள்ள அநேக பிரச்சினைகளைப் பற்றி விளக்கமாகப் பேச வேண்டுமென்று விரும்பினாலும், நேரமில்லாத காரணத்தால், வெகு சீக்கிரமாகவே முடித்துக்கொள்ளுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழில் துறையை ஏற்றுக் கொண்டிருப்பதால், இந்தத் துறை தனியாகப் பெருமையும், சிறப்பையும் பெற்றிருக்கிறது என்பதை அனைவரும் அறிவோம். அந்த வகையிலே தமிழகம் தொழில் துறையிலே மறுமலர்ச்சி அடையுமென்றும், இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு திட்டவட்டமாகக் கிடைக்கும் என்ற நல்ல நம்பிக்கையும் மக்களெல்லாம் ஏற்படுகிறது. அதே சமயத்தில் மாவட்ட வாரியாக தொழில் மையங்களை ஏற்படுத்தி, பல சிக்கல் இல்லாத புதிய தொழில்களைத் துவக்கி, அவைகள் எல்லா வகையிலும் வளர்ச்சி செய்து கொடுக்க, கடனைத் தந்து, ஆலோசனை கூறி நிலைகளை ஏற்படுத்தியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க தாகும்.

பொதுவாக வட இந்தியாவில் சில மாநிலங்கள் தொழில் முன்னேற்றம் சிறப்பாக அடைந்திருக்கின்றனவென்றால், அங்குள்ள முதலமைச்சர்கள் அவர்களுடைய காலத்தில் தொழில்களைத் துவக்க எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் செய்ததால்தான் பெரிய தொழில்கள் வளர்ந்து ஏராளமான பொருள்களை பிற மாநிலங்களுக்கும் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது நம்முடைய மாநிலத்திலும், தொழில் துறையில் வேலை வாய்ப்புத் தருவதோடு மட்டும் நின்றுவிடாமல், இங்கே உற்பத்தியாகின்ற

பொருள்களை பிற நாடுகளுக்குக்கூட அனுப்புகின்ற முறையில் தொழில் துறை வளர வேண்டும். குறிப்பாக மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவைப்படுகிற அறிவியல் சாதனங்களையும், உபகரணங்களையும் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு 'சிட்கோ' நிறுவனம் உற்பத்தி செய்யவிருப்பதும் அதன் தொடர்பாக பள்ளிக் கல்வி இணை இயக்குநர் 'சிட்கோ'வில் இடம் பெறவிருப்பதும் வரவேற்கத்தக்கது. அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், அரசுக் கல்லூரிகளுக்கும் மட்டும் அறிவியல் கருவிகளை வழங்குவது என்று இல்லாமல், தனியார் துறையிலுள்ள எல்லா நிறுவனங்களுக்கும் இத்தகைய அறிவியல் கருவிகளை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படுகிற கருவிகள் மாநிலத்தில் மட்டுமல்லாமல், அகில இந்திய ரீதியிலே, உலக அரங்கிலேகூட தரத்தில் சிறந்ததாக அமைய வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னால் வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட அறிவியல் சாதனங்கள் தரத்தில் மிகச் சிறந்தவையாக இருந்தன. அந்த முறையிலே 'சிட்கோ' தயார் செய்யக்கூடிய கருவிகளும், தரமுடையவையாக, உலகச் சந்தையிலேகூட போட்டியிடக் கூடிய முறையிலே வர வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம்முடைய மாநிலத்திலே விளையாட்டிற்குத் தேவையான கருவிகள் உற்பத்தியாகவில்லை. வட இந்தியாவிலிருந்துதான் பந்துகளையும், மட்டைகளையும் வரவழைக்கிறார்கள். அந்த நிலையிலிருந்து விடுபட தமிழகத்திலே பந்துகள், மட்டைகள் போன்ற விளையாட்டுக் கருவிகளை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கி, வேண்டுமானால் 'சிட்கோ'விடமே அதைக் கொடுத்து அதன் மூலமாக ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமான பொருள்களை விற்பனை செய்யக்கூடிய அளவுக்குச் செய்ய வேண்டுமென்ற கருத்தைக் கூறி, பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலவையில் தரப்பட்டிருக்கிற தொழில்



துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது எனது கட்சியின் சார்பில் சில கருத்துக்களை எடுத்துக் வைப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு நாட்டினுடைய வளம் அந்த நாட்டின் தொழில் துறையினுடைய வெற்றியைப் பொறுத்திருக்கிறதென்று சொல்லுவதிலே தவறில்லை. தமிழகத்தின் எதிர்காலமும், தமிழ் மக்களுடைய நல்வாழ்வும் அவர்களுடைய வருங்கால உயர்வும், தொழில் துறையிலே நாம் காணுகிற வெற்றியைப் பொறுத்தது. எனவே, தொழில் துறை மிக இன்றியமையாதது. அது திட்டமிட்டுச் செயல்படவேண்டிய ஒன்று. ஆகவே தொழில் மனநிலையை மக்களிடையே பரப்புகின்ற நிலையில் நாம் வெற்றி காண வேண்டிய அவசியம் மிகவும் முக்கியம். இந்த உணர்வோடு என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க ஆரம்பிக்கிறேன்.

நம்முடைய நாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில், தமிழ் மக்கள் "போதுமென்ற மனமே பொன் செய்யும்" என்ற எண்ணத்திலே தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள். சிறிது உணவு, உடை, சிறிய குடிசை இருந்தாலே போதுமென்று வாழ்ந்து அமைதியைக் கண்டவர்கள். ஆண்டவன் கூட இங்கே ஆல மரத்தடியிலே அமைதியைக் கண்டு, நமக்கும் அதையே உபதேசித்திருக்கிறார். தொழிலில் அதிக ஊக்கம் செலுத்தி அதிகப் பணம் ஈட்டுகின்ற மன நிலையைவிட அமைதியோடு வாழ வேண்டுமென்ற மனநிலையை அமைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த மனநிலை தொடர்ந்து பல்வேறு நூற்றாண்டுகளாக இருக்கிறது. எனவேதான், தொழில் துறையில் ஊக்கம் செலுத்துவதில் நமக்குக் காலதாமதம் ஆகிறதென்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

தொழில் துறையிலே வருகின்றவர்களில் சிலர் பெரிய தொழிலை ஆரம்பித்து அதிகமான பணத்தைச் சம்பாதிக்கலாம் என்று நம்பி வருகிறார்கள். சிலர், ஒரு தொழிலும் இல்லை, இருந்த தொழிலும் போய்விட்டது. ஆகவே இன்னொரு

தொழிலை ஆரம்பிப்போம், அதிலாவது இலாபம் வருகிறதா என்று பார்ப்போம் என்று ஆரம்பிக்கிறார்கள். அந்தத் தொழிலிலே அதிகமான இலாபம் இல்லையென்றால், உடனே அதை நிறுத்தி விடுகிறார்கள். அல்லது ஒரு தொழிலில் ஈடுபட ஆரம்பித்தால், அதனால் பல தொல்லைகள் வருமென்ற சூழ்நிலை இருந்தால், அந்தத் தொல்லையிலிருந்து விடுபட, அந்தத் தொழிலிலிருந்து ஒதுங்கிவிடுகிறார்கள். ஆகவே நாட்டிலுள்ள இயற்கைச் செல்வத்தைப் பயன்படுத்தி, பல்வேறு பொருள்களைச் செய்து, நாட்டு மக்களை வாழ வைக்க வேண்டும், தாமும் வாழ வேண்டுமென்ற உணர்வோடு தொழில் துறையில் ஈடுபடுகிறவர்கள் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்ற உணர்வை உணர்த்த வேண்டிய பொறுப்பு அரசைச் சார்ந்தது.

தொழில் துறைக்கு, மிக இன்றியமையாத தொழில் நுட்பக் கல்வி பயின்றவர்கள் வருகிறார்கள். அவர்களில் எத்தனை பேர் சொந்தமாகத் தொழிலைச் செய்ய வருகிறார்கள் என்று பார்க்க வேண்டும். தொழில் பேட்டைகளை ஆரம்பிக்கிறோம், தொழில் துறை செயல்படுகிறது, தொழில் செய்பவர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள், பண உதவி செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். வங்கிகளும் மற்றும் பல்வேறு ஸ்தாபனங்களும் பணம் தருகின்றன. இவை எல்லாம் இருந்தாலும்கூட தொழிலைத் தொடங்க வருபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது என்று சொல்லும் போது, அதை மிகைப்படுத்திச் சொல்லுவதாகக் கருதக்கூடாது.

ஒரு தொழிலை ஆரம்பிக்க மூலதனம், தொழிலைச் செய்வதற்குரிய தொழில் நுட்ப அறிவு ஆகிய இரண்டும் உண்மையிலேயே மிக இன்றியமையாதவையாகும். அதற்குப் பிறகு உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்ய சந்தையும், அதற்கடுத்து தொழிலை நடத்த அமைதியான சூழ்நிலையும் தேவை. இந்த நான்கும் இன்றியமையாதனவாக இருக்கின்றன. பணம் கொஞ்சமாக இருந்தாலும்கூட, அரசின் பல்வேறு அமைப்புகளின் மூலமாகப் பணத்தைப் பெறலாம். தேசியமயமாக்கப்பட்ட





வங்கிகளும் பணம் தர, தயாராக இருக்கின்றன. தொழில் நுட்ப அறிவு பெற்றவர்கள் அதிலே முனைய வேண்டும்.

(பிற்பகல் 12.40)

இப்போது தொழில் நுட்ப அறிவைப் பெற்றவர்கள் அதிலே அதிகம் முனைவது இல்லை. என்ஜீனியரிங் படித்துவிட்டு வருகின்றவர்களையும், பாலிடெக்னிக் படித்துவிட்டு வருகின்றவர்களையும் ஒருவர்கூட விடாமல் நாம் தொழில் துறையிலே எடுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை வந்தால்தான், உண்மையிலேயே நம் நாடு தொழில் துறையிலே வெற்றி பெறதாக சொல முடியும். என்ஜீனியரிங், பாலிடெக்னிக், டெக்னாலஜி படித்துவிட்டு வந்தவர்களுக்கு தொழில் ஆரம்பிக்க வழிகாட்ட வேண்டும். அவர்களை தொழில் ஆரம்பிக்க சொன்னால், பதிலுக்கு அவர்கள் 'ஏதோ ஒரு வேலையை வாங்கித் தாருங்கள், மந்திரியிடம் சொல்லி வேலை வாங்கித் தாருங்கள் என்று சொன்னால், எங்களையே தொழில் ஆரம்பியுங்கள் என்று உபதேசம் செய்கிறீர்களே' என்று சொல்கின்ற சூழ்நிலையைத்தான் நாம் பார்க்கிறோம். யாரிடத்திலே தொழில் ஆரம்பிக்க வேண்டிய உணர்வும் மனமும் வரவேண்டுமோ அவர்களிடம் வரவில்லை. யாரிடத்திலே அந்த உணர்வு வந்திருக்கிறது? ஒருவரிடமும் வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். தொழிலைப் பற்றித் தெரிந்துகொள்ள டாக்டர் நாயுடம்மா தலைமையிலே ஒரு கமிஷனைப் போட்டு வைத்திருக்கிறோம். அவர்கள் உலகத்திலே இருக்கக்கூடிய ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு பட்டியல் தயாரிக்கிறார்கள். ஒன்றை உதாரணத்திற்குச் சொல்கிறேன். கல்லூரிகளிலே புரொபசர்களைக் கூப்பிட்டு, புதிதாக ஜாப் ஓரியன்டேஷன் கோர்ஸ் ஒன்று ஆரம்பிக்க புதிய திட்டங்கள் தரும்படி கேட்டால், அவர்களிடம் ஏற்கெனவே தயாரித்து வைத்துள்ள 25, 30 திட்டங்கள் இருக்கும். அவைகளின் 25 காபிகளை வைத்துக்கொண்டு நாங்கள் டிஸ்கஸ் செய்வோம். அவைகள் எல்லாம் நாட்டிற்கு ஒவ்வாததாகத்தான் இருக்கும். அதுபோல கமிஷன்கள் போடுகிறோம். அவர்கள் எல்லாம்

திட்டங்களைக் கூறுகிறார்கள். அந்தத் திட்டங்களை எடுத்துக் கொண்டுபோய் நாம் யாரை அணுகுகிறோம் என்றால், பணம் படைத்தவர்களை அணுகுகிறோம். ஆனால் நல்ல தொழில் நுட்ப அறிவுடையவர்களை நாம் ஊக்குவிப்பதில்லை. மாணவர்களிடையே அந்த உணர்வை அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். இது இந்த அரசினுடைய பொறுப்பு மாத்திரமல்ல. இந்த நாட்டிலுள்ள எல்லோருடைய பொறுப்புமாகும். தொழில் நுட்பக் கல்லூரியிலேயே அந்த உணர்வுக்கு ஆட்படுகின்ற அளவுக்குக் கல்வி அளிக்க வேண்டும். அந்த உணர்வு பெற்றிருப்பவர்களுக்கு முதலிடம் கொடுத்து அவர்களை அங்கே சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரியிலே படிக்கும்போதும் அவர்களுக்கு தொழிலை ஆரம்பிக்கக்கூடிய ஒரு உள்ளுணர்வு, துணிவு இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், முதலில் 1500 ரூபாய் சம்பளத்தில் வேலையில் சேர்ந்து, பிறகு 10 வருடங்களுக்குப்பின் ஆபீசராகி விட்டால், மேல் அதிகாரிகளுக்கு ஏற்றாற்போல் நடப்பார்கள். அவர்கள் எப்படிச் சொல்கின்றார்களோ அப்படியே செய்வார்கள். உண்மையான தகவல் கொடுத்தால் தொல்லைகள் வரும் என்று எண்ணுவார்கள். தொழில் துறை எவ்வாறு இயங்கவேண்டும் என்று அரசாங்கம் கேட்டால், எல்லாவற்றையும் இயந்திரமயமாக்க வேண்டும் என்று திட்டம் தீட்டுவார்கள். பெரிய தொழில்கள் ஆரம்பிக்க மத்திய அரசு திட்டம் வகுத்துக் கொடுத்தது. பிறகு பெரிய தொழில்களில் நாட்டம் செலுத்தாமல் கிராமப்புறத் தொழில்களில், சிற தொழில்களில் நாட்டம் செலுத்த வேண்டும் என்ற சொல்கிறார்கள். ஒரு அரசாங்கம் இருக்கும்போது, ஒர கொள்கை இருக்கிறது. இன்னொரு அரசாங்கம் வரும் போத கொள்கை மாற்றம் ஏற்படுகிறது. கொள்கைளை மாற்ற் அச்சடித்துக் கொடுக்கிறார்கள். புதுக் கொள்கையால் தொழிெ துறையிலே மிகுந்த அளவுக்கு வெற்றிகாண முடியும் என்ற அவர்கள் நம்புகிறார்கள். ஆகவே, தொழில் நுண்ணறிவை பயிற்றுவிக்கின்றபோதே, அய்.டி.அய்.-இல் 18 மாதம் டிப்ளமே கோர்ஸ், பொறியியற் கல்லூரியில் 5 வருடம் டிகிரி கோர்



என்றெல்லாம் வைத்து பயிற்சி கொடுக்கும்போதே, அவர்களுக்கு தொழில்கள் ஆரம்பித்து நடத்தும் உணர்வையூட்டுகின்ற முறையிலே சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு அதிலே மிக்க ஆர்வமுண்டாக்க வேண்டும். அவர்களே தொழில்களை ஆரம்பித்து ஒரு 500 ரூபாய் சம்பாதிக்கும் நிலையில் இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே ஒரு மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது ஒருவர் வெளிநாட்டில் வேலை கிடைக்கிறது என்று நம்பிச் சென்று அங்கு வேலை கிடைக்காமல், கடைசியில் கல் சுமக்கும் வேலைக்குப் போய் சேர்ந்ததாகச் சொன்னார். அவர் என்ஜினியரிங் தொழில் தெரிந்தவராதலால், கல் சுமந்தாலும் அந்த இடத்தில் இரண்டாயிரம் ரூபாய் வரையில் சம்பாதிக்கின்றார். அவர் அங்கே அந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். அதுவே படிக்காத ஒருவராக இருந்து அந்தமாதிரி வேலை வாய்ப்புக் கிடைத்திருந்தாலும், பரவாயில்லை. வேலை வாய்ப்பு வேண்டுமென்பவர்களுக்கு, தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கு, தொழில்களை ஆரம்பித்து நடத்துகின்ற அளவுக்குத் துணிவு வர வேண்டும் அந்தத் துணிவைப் பெறாமல், அச்சப்பட்டுக் கொண்டு, அடிமை நிலையிலேயே வாழ்கின்ற மனநிலையே ஆயிரக்கணக்கான வருடங்களாக இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். அவர்கள் தொழிற் கல்வி பெறும்போதே துணிவையும், ஆர்வத்தையும் அவர்களுக்கு ஊட்ட வேண்டும். அதிலே தொழில் துறையும் கவனிப்பாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தொழிற் பயிற்சி நிலையத்திலோ அல்லது என்ஜினியரிங் கல்லூரியிலோ படிக்கும்போது, இந்த உணர்வை ஊட்ட வேண்டும்.

தொழிற் கல்லூரிகளில் பயின்றுவிட்டு வெளியே வருபவர்கள் அந்தத் துறையில் தொழில் ஆரம்பித்து பொருள்களை உற்பத்தி செய்கின்ற ஆற்றலைப் பெற வேண்டும். அந்த ஆற்றலைப் பெற்று வருபவர்களுக்குப் பணம் இல்லை என்ற பிரச்சினை இப்போது இல்லை. ஒரு தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்றால், 15, 20 ஆண்டுகளுக்கு முன்னால், தொழில் ஆரம்பிப்பவர்கள்

அவர்களுடைய சொந்த சொத்துக்களை விற்றுவிட்டுத் தான் தொழில் ஆரம்பிக்கும் சூழ்நிலைகள் இருந்தன. ஆனால் இப்போது தொழில் ஆரம்பிக்கின்றோம் என்று சொன்னால், நமக்கு வங்கிகள் மூலம் பண உதவி கிடைக்கிறது. தொழில் ஆரம்பிப்பதற்கு வேண்டிய மற்ற உதவிகளும் கிடைக்கின்றன. அரசு சார்பில் உள்ள கார்ப்பரேஷன் மூலமும் பண உதவி கொடுக்கின்றார்கள். இப்படியெல்லாம் உதவிகளைச் செய்தும், தொழில் நடத்துவதில் தோல்வி கண்டிருக்கிறார்கள். தொழில்களை ஆரம்பிப்பவர்களில் இரண்டு வகையினர் இருக்கிறார்கள். உண்மையாகவே தொழில் ஆரம்பித்து அதிலே வெற்றிகாண வேண்டுமென்று இருப்பவர்கள் ஒரு சாரார். ஒரு சிறு தொழிலை ஆரம்பித்து அதிலேயே ஏமாற்றி சம்பாதிக்க வேண்டுமென்று ஆரம்பிப்பவர்கள் இன்னொரு சாரார். அதற்கும் உதாரணங்கள் சொல்ல முடியும். அவைகளை இங்கே சொல்வது மரபல்ல என்று நினைக்கிறேன். எப்படி அந்த உதவித் தொகைகளைப் பெறுவது என்று தெரிந்து வைத்துக்கொண்டு ரூ. 12 லட்சம், ரூ. 6 லட்சம் என்று கடன் பெறுகிறார்கள். அவர்கள் கம்பெனி ஆரம்பிப்பதாகச் சொல்லி ஒரு இடத்தை வாங்குகிறார்கள். கம்பெனியை ரிஜிஸ்டர் பண்ணுகிறார்கள். வாங்குகின்ற இடத்தை உறவினர்கள் பெயரில் வாங்குகிறார்கள். ஊருக்கு வெளியேயுள்ள நிலத்தை எக்கர் ரூ. 200 என்று சுமார் 200 ஏக்கர் வாங்கிவிடுகிறார்கள். கட்டிடம் கட்டுகின்ற நேரத்திலே கொஞ்சம் பணம் வாங்குகிறார்கள். இயந்திரங்கள் பொருத்துகின்ற கட்டத்திலே கொஞ்சம் பணம் வாங்குகின்றார்கள். அந்தத் தொழில் ஆரம்பிக்கப் படுகிறது. அதிலே நஷ்டம் வந்து, 4, 5 வருடங்கள் நடக்கின்றது. அதிலே நஷ்டம் வந்து, அதுவே சிக் இண்டஸ்ட்ரியாக ஆகிவிட்டால், அரசாங்கம் அதிலே தலையிட்டு, அதை எடுத்துக் கொள்கிறது. அதிலே திரும்பவும் பணம் முதலீடு செய்து, அரசாங்கத்தின் சார்பில் ஒரு டைரக்டரைப் போட்டு, அவரை அந்த நிர்வாகத்தை நடத்தச் சொல்கின்றார்கள். கம்பெனியை ஆரம்பித்தவர்களுக்கு சட்டத்தின் வழிமுறைகள் தெரியும். அவர்கள் சொத்துக்களை உறவினர்கள் பெயரிலே வைத்துவிடுகிறார்கள். எப்படி எப்புடியெல்லாமோ வந்து, இந்தத்



திட்டத்திற்குள்ளே நுழைந்துவிடுகிறார்கள். கன்னியாகுமரிக்கும் திருநெல்வேலிக்கும் இடையிலே ஒரு பெரிய தொழிற்சாலை உருவாகிக்கொண்டிருக்கிறது. 60 லட்சம் ரூபாய் வரை பணம் வாங்கி, அவர் அதற்குள் 3 லட்சம் ரூபாய் எடுத்தாகிவிட்டது. அவர் பெயரை இங்கே சொல்வது முறையல்ல. தொழில் ஆரம்பிப்பதற்கு இப்படிப்பட்டவர்கள் தான் வருகிறார்கள்.

THIRU A. R. DAMODARAN : The hon. the Leader of the Opposition is discouraging industrial development by this sort of allegation. If there are specific charges, let him make. To talk as if all industrialists have a discount in this, etc. is, I do not think proper. It may sound very general. It is charge that he has levelled that all persons have a discoun t and it is thoroughly a wrong impression which he is creating in the minds of the Members.

**திரு. ம. சங்கரலிங்கம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் எல்லோரையும் சொல்லவில்லை. சிலர்தான் தொழில் ஆரம்பித்து வெற்றி கான வேண்டுமென்று வருகிறார்கள். சிலர் தொழில் ஆரம்பித்து லாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக வருகிறார்கள். தொழில் ஆரம்பிப்பதிலேயே லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு வருகின்றார்கள். தொழிலை ஆரம்பிக்க வருகின்றவர்களுக்கு அந்தத் தொழிலை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் இருக்க வேண்டும். முதலிலே தொழில் வளர்வதிலே நாட்டம் இருக்க வேண்டும். தொழில் வளர்ந்தால் அதிலே வேலை செய்கின்ற தொழிலாளர்கள் வாழ்கின்றார்கள். அதோடு சுற்றியிருக்கின்ற இடமும் வளர்கின்றது. நான் சொல்வது கொஞ்சம் கசப்பானதாகத்தான் இருக்கும். உண்மை அதுதான். இதுபற்றி தொடர்ந்து இன்னொன்றும் என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன்:** கன்னியாகுமரியில், திருநெல்வேலியில் இரண்டு பேர் அப்படிச் செய்தார்கள் என்பதால் தமிழ் நாடு பூராவும் இப்படிச் செய்கிறார்கள் என்ற தவறான எண்ணத்தை தமிழ் நாட்டு மக்களிடையே உருவாக்குவது தவறு என்று நான் சொல்கிறேன்.

MR. DEPUTY CHAIRMAN : The hon. the Leader of the Opposition is only mentioning that some of the people are doing it, and no: all.

(பிற்பகல் 12-50)

திரு. ம. சங்கரலிங்கம்: ஒருவர், தொழிற்சாலையே ஆரம் பிக்கவில்லை, கட்டிடம் கட்டுவதிலும், இடத்தை வாங்குவதிலும் பணத்தைச் சம்பாதித்தார் என்றுதான் சொன்னேன்.

'சிறு தொழில்கள்' எனப்படும் நல்ல முறையில் நடக்காத தொழிற் சாலைகளில் அரசு தலையிட்டு, காப்பாற்ற வேண்டிய நிலையில், அதற்கான காரணத்தை ஆராய வேண்டும். அப்படி ஆராய்ந்தால், நான் சொல்கிற குற்றச்சாட்டுகள் பகிரங்கமாக வெளிப்படும். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், தொழில் துறையைச் சேர்ந்தவர்கள், தொழில் ஆரம்பிக்கப்பட யாரை அணுக வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். பழைய தொழிலதிபர்கள், பணம் படைத்தவர்கள் ஆகியவர்களை அணுகுவதைவிட, தொழில் நுட்பக் கல்வி பயிலும் இளைஞர்களை, பெரும் தவறுகளைப் பற்றி அதிகம் உணராத வர்களை, அவர்கள் மத்தியில் அப்படிப்பட்ட தவறுகள் செய்வது வளராத நேரத்தில், அழைத்து, ஒரு ஜாயின்ட் செக்டார் தொழிற்சாலையை உருவாக்கி, அதை நடத்திட ஊக்கத்தையும், துணிவையும் அவர்களுக்குக் கொடுத்து, அந்தத் துணிவோடு அவர்களை வெளியே வரச் செய்ய வேண்டும். இப்போது என்ன நடக்கிறது? அரசாங்கத்திடம் தொழிற்சாலையை 'ஹேன்ட் ஓவர்' பண்ணுகிறார்கள். ஆனால், அவரே வேறொரு பெயரில், வேறொரு இன்டஸ்ட்ரி ஆரம்பிக்கிறார். ஆரம்பித்தால் லாபம், நடத்தினால் நஷ்டம் என்பது அவருக்குத் தெரியும். இதையும் ஏற்றுக்கொண்டாக வேண்டிய நிலை இருக்கிறது. இதையெல்லாம் பரிசீலித்து மேலே செல்ல வேண்டிய நிலை இருக்கிறது என்பதால் சொல்கிறேன். யாரையும் புண்படுத்துவதற்கோ, குறிப்பாக தொழிலதிபர்களைப் புண்படுத்துவதற்கோ நான் தயாராக இல்லை. ஆமையின் காலையும், தலையையும் பார்க்க வேண்டும்





மென்று ஒருவன் நினைத்தால், அவன் என்ன செய்ய வேண்டு மென்றால், ஆமையை நகரவிட்டு, நகர்ந்து உட்கார்ந்துகொள்ள வேண்டும். அப்போது அதன் காலையும், தலையையும் பார்க் கலாம். ஆனால், அதன் காலையும், தலையையும் பார்க்க வேண்டு மென்று சொல்லி, அதைத் தலைகீழாக மாட்டி, அதை அடி அடி ான்று அடித்தால், அது காலையும் காட்டாது, தலையையும் காட்டாது. செத்துத்தான் போகும். அதைபோல், செல்வந் தர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர்களை சுதந்திரமாக இயல்பாக விட்டால்தான், பணத்தைக் கொண்டு வந்து, தொழில்களை ஆரம்பிப்பார்கள். அரசு தலையிட தலையிட, நம் போன்றோர் ்தசியமயமாக்க வேண்டுமென்று பேசப் பேச அவர்களுக்கு ந்தேகம் வரத்தான் செய்யும். ஏன் பணத்தைப் போட்டு தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் வங்கியில் பிக்சட் பாசிட்டில் போட்டுவிட்டு, சுகமாக வாழலாமென்று நினைக்கும் னோநிலை தான் ஏற்படும். அதையெல்லாம் கடந்து வர வண்டிய சூழ்நிலையில் இந்த நாடு இருக்கிறது என்பதற்காகத் ான் சொல்கிறேன். இப்படிப்பட்ட எண்ணமில்லாத ணர்வுகளை, தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலும் ாணவர்களிடையே வளர்க்க வேண்டுமென்று தெரிவித்துக் காள்கிறேன்.

தொழில் துறை கொள்கைக் குறிப்பிலே பல தொழில்களைப் ற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் எனக்கு ருந்த சிந்தனைக்குரிய கருத்தாக அமைந்திருப்பது, சிமென்ட் தாழிற்சாலைக்குப் பதிலாக சுண்ணாம்புக் காளவாயை அதிகப் டுத்தும் திட்டமாகும். இன்றையதினம் சிமென்ட் தட்டுப்பாடாகத் ான் கிடைக்கிறது. அதற்குப் பதிலாக சுண்ணாம்புக் காளவாய் தாழிலை அதிகப்படுத்தினால், நிரம்பப் பேருக்கு வேலை டைக்கிறதென்றும், ஆங்காங்கே சுண்ணாம்பை உபயோகித்து, ட்டிடத்தின் அஸ்திவார மட்டம்வரை முடிக்கவும், பூச்சு வலைக்கு சுண்ணாம்பை உபயோகிக்கவும் திட்டமிருக்கிறது ன்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுபற்றி, திரும்பவும் சிந்திக்க ண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், சிமென்ட்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 24

என்பது சுண்ணாம்புக் கல்லிலிருந்து தயாரிக்கப்படும் ஒன்று. குறிப்பிட்ட பிராசஸ்-க்குப் பிறகு சிமெண்ட் வருகிறது. அந்தப் பிராசசால் வலிவு பெற்று, எல்லோருக்கும் கிடைக்கிறது. பல நுண் ஆராய்ச்சிக்குப் பிறகு, பலவிதமான நடைமுறைகளுக்குப் பிறகு வரக்கூடிய பொருள் சிமெண்ட். அதைப் பயன்படுத்தும் போதே, பல கட்டிடங்கள் விழுகின்றன. கடலூர் பக்கத்தில் பாலமொன்று விழுந்துவிட்டதென்பதற்காக அதிகாரி மீது நடவடிக்கை எடுத்து, அவரை சஸ்பென்ட் செய்திருக்கிறார்கள். 1:4 என்ற விகிதத்தில் கலவை தயார் செய்ய வேண்டும். ஆனால் 1 :10 என்ற அளவில் கலவை தயாரிக்கிறார்கள். மேற்பார்வை பண்ணுகிறவர்களுக்கு ஒரு பகுதி கொடுத்தால், அவர்களே பண்ணுகிறார்கள். சுண்ணாம்பு என்று வரும்போது, 1:2 என்ற முறையில்தான் கலக்க முடியும். அதற்குமேலே ஏற்கெனவே மணலை அதிகமாகப் போட்டுப் பழகியவர்கள் அவர்கள். இப்போது சுண்ணாம்பிலிருந்து சிமெண்ட் கண்டு பிடித்திருக்கிறர்ாகள். 1:4 அல்லது 1:6 என்ற அளவிற்கு மணலைக் கலக்கலாம். இதைவிட வலிவான ஒரு பொருளை, ரிபைன்ட் பிராசசில் கண்டுபிடித்து, 1 : 12 என்ற அளவிற்கு மணலைக் கலக்கக்கூடிய அளவிற்கு, வெளியிட வேண்டும். ஆனால் அதைப்பற்றி கான்ட்ராக்டர்களிடம் சொல்லக்கூடாது. அவர்களிடம் மணல் கலக்கின்ற விகிதத்தைக் குறைத்துச் சொல்ல வேண்டும். அப்போது அவர்கள் 1 : 12 என்ற அளவில் மணலைக் கலப்பார்கள். இந்த அவையிலேயே ஒரு முறை சொன்னேன். சட்ட மன்ற உறுப்பினர்கள் இருக்கும் பல மாடிக் கட்டிடத்திற்கு 1965 ஆம் ஆண்டிலே திரு. பக்தவத்சலம் அவர்கள் அடிக்கல் போட்டு, 1968-69-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் திறந்தார்கள். 1965 ல் ஆரம்பித்து, 1968-ஆம் ஆண்டில் முடிந்தது. நான் மூன்றாம் மாடியில் இருக்கிறேன். ஆனால் அந்த அறையில் எப்போதும் தண்ணீர் ஒழுகிக்கொண்டே இருக்கிறது. மழைக் காலத்தில் மட்டுமல்ல. பாத் ரூமில் எப்போதும் ஒழுகிக் கொண் டிருக்கிறது. 426 ஆம் எண் அறையில் போய்ப் பார்த்தேன், அங்கேயும் அப்படிதான் இருக்கிறது. அவர்கள் 526 லிருந்து வருகிறதென்று சொல்லுகிறார்கள். இப்படி பல இடங்களில்



1979 ஏப்ரல் 24]

இருக்கிறது. நவீனக் கட்டிட அமைப்பு முறைகளும், அதைக் கண்காணிக்கும் திறனும் இப்படி இருக்கும்போது, சிமெண்ட் தரத்திற்கும் கீழே போனால், கட்டிடங்கள் மிகவும் பாதிக்கப் பட்டுவிடும் என்று நான் மிக உறுதியாக நம்புகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுண்ணாம்புக் காளவாயில் கிராம மக்களுக்கு வேலை கிடைக்கும் என்பது சொல்ல அழகாக இருக்கும். இப்போது சுண்ணாம்புக் காளவாய்கள் எப்படி இருக்கின்றன? அங்கே தொழில் செய்கிறவன் மனிதனாக வாழ முடிகிறதா? சுண்ணாம்புக் காளவாயில் வேலை என்பதே தண்டனை. அங்கே வேலை செய்கிறவர்கள், குறைந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு, மிகுந்த தொல்லையை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது 200 டன் சிமெண்ட் பேக்டரிகளுக்குப் பதிலாக 25 டன், 50 டன் சிமெண்ட் பிளான்ட்டுகளை ஆரம்பிப்பதுபற்றி யோசிக்கலாம். திரு வெங்கடராமன் அவர்கள் தொழிலமைச்சராக இருந்தபோது, வள்ளியூரில் ஒரு 50 டன் சிமெண்ட் பிளான்ட் ஆரம்பிக்க அனுமதி கொடுத்தார்கள். அப்போதுதான் நான் மேலவை உறுப்பினராக வந்தேன். எனக்கு அவருடன் அவ்வளவு பழக்கம்கூட கிடையாது. என்னை அழைத்து, 'வள்ளியூரில் 50 டன் சிமெண்ட் பிளான்ட் ஆரம்பிக்க அனுமதி கொடுத்திருக்கிறேன், வசதியுள்ள ஆள் இருந்தால், அதை ஏற்று நடத்தச் சொல்லுங்கள்' என்று சொன்னார். அவ்வளவு அக்கறையோடு அவர்கள் இருந்தார்கள். 50 டன் அளவிற்கு இல்லையென்றாலும், 10 டன், 25 டன் சிமெண்ட் பிளான்ட்டுகளைத் துவக்க முடியுமா என்பதுபற்றி தொழில் நுட்ப வல்லுநர்களைக் கலந்தாலோசிக்க வேண்டும். சுண்ணாம்புக் காளவாய்கள் அவ்வளவு பயன் தருமா என்பதையும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு சந்தை பார்ப்பது அரசாங்கத்தின் முழுப் பொறுப்பாக இருக்க வேண்டும். இப்போது அவர்களே சந்தை தேடுகிறார்கள். தொழில் ஆரம்பிப்பதில் அதிகக் கஷ்டமில்லை. சந்தையைக் கண்டுபிடிப் பதில்தான் அதிகக் கஷ்டமிருக்கிறது. அரசாங்கத்திற்கு இருக்கும் வாய்ப்பு, வசதிகள், பிற மாநிலங்களோடும் பிற

நாடுகளோடும் தொடர்பு கொள்ளும் நிலை ஆகியவை மூலம் வாய்ப்புகளை உருவாக கொண்டு, தயாரிக்கப்படும் பொருள்களை ஏற்றுமதி செய்ய வழி இருக்கிறது, வசதிகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசி முடிக்கும்வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது. விரைவாக அவர்கள் முடிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** நான் தொடர்ந்து மாலை பேசிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தொழில் துறை குறித்த விவாதம் தொடர்ந்து இன்று மாலை நடைபெறும். மேலவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-00)

(பிற்பகல் 4-00)

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

2. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி

## தொழில் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டினுடைய தொழில் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு இளம் சமுதாயத்தினருக்கு, கல்வி பயில்கிற கூடங்களிலேயே தொழில் நுட்ப அறிவோடு தொழில் உணர்வையும் கொண்டு வர வேண்டுமென்று முன்பகலில் விவாதத்தைத் தொடங்கிய நான் திட்டமிடுவதற்கும நடைமுறைக்கும் தொடர்பான ஒரு முறையை நாம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன் எப்போதும் நம்முடைய நாட்டிலே திட்டங்கள் தோல்வியு



ஒரே காரணம் திட்டமிடுகிறவர்கள் அந்தத் திட்டத்தை வேறொரு கோணத்திலிருந்து பார்ப்பதுதான். நடைமுறை உலகுக்கு வேறுபட்ட நிலையில், வேறுபட்ட கண்ணோட்டத்தில் அவர்கள் திட்டமிடுகிறார்கள். ஆகவே திட்டமிடுகின்ற குழுவில் நடைமுறையைத் தெரிந்தவர்கள் இடம் பெற வேண்டும். திட்டமிடுகின்ற குழுவில் வெறும் பட்டம் பெற்றவர்கள், உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் மட்டும் இருந்தால் போதாது. திட்டமிடுகின்ற குழுவில் அந்தத் தொழிலின் அடித்தளத்திலிருந்து உழைத்து வரும் அனுபவம் பெற்ற தொழிலாளரும் இடம் பெற வேண்டும். திட்டமிடுவ திலுள்ள நடைமுறையைத் தெரிந்தவர்களும் தொழிலின் அடித்தளத்திலிருந்து உழைத்து வரும் தொழிலாளரும் குழுவில் இடம் பெறுவதன் மூலம், நல்ல திட்டங்களைத் தீட்ட முடியும். பொறியியல் படிப்பு இல்லாதவர்களால், பொறியியல் பட்டம் பெறாதவர்களால் நம் நாட்டிலே 8 ஆம், 10 ஆம், 12 ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட கட்டிடங்கள் இன்றைக்கும் நல்ல முறையில் அமைந்திருக்கின்றன. இதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதுவும் நடைமுறை அறிவு கூட, எட்டு அறிவு கூட இல்லாமல் இருந்த காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள் அவை. ஏட்டறிவு பெற்றவர்களை வைத்து மட்டும் திட்டமிடுவதை விட அனுபவம் பெற்றவர்களை, நடைமுறை தெரிந்தவர்களை வைத்துத் திட்டமிடவேண்டும்.

பல தொழில்களைப் பற்றி, குறிப்பாக என்னென்ன தொழில்கள் மிக விரைவாக உருவாக இருக்கின்றன, என்னென்ன தொழில்கள் வந்திருக்கின்றன, அவைகள் எவ்வாறு வளர்ந்திருக்கின்றன, இப்போது எந்தெந்த நிலையில் இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் குறிப்பிலே மிக விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் வளர வேண்டிய தொழில்களில் ரப்பர் தொழில் ஒன்று. ரப்பரை மூலப்பொருளாகக் கொண்டு பல தொழிற்சாலைகளை நிறுவ முடியும். கேரளத்திற்கு அடுத்தாற் போல் தமிழகத்தில் இயற்கை ரப்பர் அதிகமாக தமிழ் நாட்டில்

கிடைக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்கம் 8,000 ஹெக்டேர் நிலங்களில் ரப்பர் உற்பத்தி செய்கிறது. அதைத் தவிர தனியார் ஏராள்மாக ரப்பர் உற்பத்தி செய்கிறார்கள். ரப்பரை மூலப் பொருளாகக் கொண்ட ஒரு சிறந்த பெரிய தொழிற்சாலையை பொதுத் துறையிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு பொதுத் துறையிலே ஆரம்பிக்கிறபோது, அதையொட்டிய துணைத் தொழில்களை அந்த மாவட்டத்திலுள்ள கிராமங்கள் பெறக் கூடிய வாய்ப்பு ஏற்படும். இன்னொன்று கயிறு செய்கின்ற தொழில். இதைப் பற்றியும் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். தேங்காய் மட்டை என்று இங்கே சொல்லுவார்கள். அந்தப் பகுதியிலே தேங்காய் மட்டையை கொதும்பு என்று சொல்லுவார்கள். அதிலிருந்து 10 சதவிகிதம் தான் நார் எடுக்கிறார்கள். தேங்காய் மட்டையிலிருந்து கிடைக்கிற கயிறை பலவிதமான தொழில்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். மீதியுள்ள சக்கைகளை விறகாகப் பயன்படுத்துகிறார்கள். தேங்காய் மட்டையைப் பயன்படுத்தி அந்தத் தொழிலை ஆரம்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது நாம் 10 சதவிகிதம் கயிறாக எடுத்து தொழில்களுக்குப் பயன்படுத்துவதற்குப் பதிலாக 80 அல்லது 85 சதவிகிதத்திற்காவது தேங்காய் மட்டையை தொழில்களுக்குப் பயன்படுத்துகின்ற முறைகளை, மாற்றுகின்ற முறைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்தத் தொழிலில் கேரளா முன்னணியில் நிற்கிறது. உலகம் முழுவதும் பல்வேறு பகுதிகளுக்கு 'காயிர் மேட்' இன்னும் பல்வேறு பொருள்களையெல்லாம் செய்து அவர்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதை சிறு குடிசைத் தொழிலாக அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பெரிய ஆலைகள் அமைப்பதை விட சிறு சிறு தொழில்களை கிராமங்களில் ஏற்படுத்தி மக்களுக்கு அது பயன்படும் வகையில், மக்கள் மகிழ்ச்சியடையும் வகையில், நம்முடைய அரசின் கொள்கைப்படி அது லாபகரமாக



நடத்தப்படுகிற அளவுக்கு, இயந்திர உதவி, புதிய விஞ்ஞான நுணுக்க உதவி போன்றவைகளை அளிக்க அரசு முன்வர வேண்டும். வெறும் குடிசைத் தொழில் என்று சொல்லி கிராமங்களிலே அவை இருக்கிற நிலையிலேயே விட்டுவிட்டால், அது சிறப்பாக இருக்க முடியாது. விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப உதவி கொடுத்து, இயந்திர உதவி கொடுத்து, அந்தத் தொழிலை நல்ல முறையில் ஒரு பெரிய தொழிலை வளர்ப்பது போல் ஆரம்பிக்க வேண்டும்.

பெரிய தொழில்களை பொதுத் துறையில், பப்ளிக் செக்டாரில், ஆரம்பிப்பதாக இருந்தால், நகரையொட்டி 150 ஏக்கர், 200 ஏக்கர் நிலத்தை வைத்து ஆரம்பிக்கிறோம். பெரிய பெரிய இயந்திரங்களின் உதவியால் உற்பத்தி செய்கிறோம். பெரிய பரப்பளவு கொண்ட இடமாக இல்லாமல் சிறிய பரப்பளவு கொண்ட இடங்களில், சிறிய சிறிய இயந்திரங்களின் மூலம் உற்பத்தி செய்கிற முறை நல்ல முறை. 100 ஏக்கர் அல்லது 200 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரே இடத்தில் பெரிய தொழில்களை நடத்துவதை விட 100 கிராமங்களில் அந்தத் தொழிலைச் செய்து உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை ஒரு மையமான இடத்திற்குக் கொண்டுவந்து, அதன் பிறகு அவற்றை நல்லபடியாக விற்பனை செய்வதற்குரிய ஒரு ஏற்பாட்டினைச் செய்து கொடுத்தால், கிராமப்புற மக்களின் வாழ்க்கை வளம் பெற முடியும். தொழில் பரவலாக கிராமங்களில் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும். அந்த முறையைக் கையாண்டுதான் கேரளாவில் காயர் உற்பத்தி செய்கிறார்கள். அங்கே பெரிய தொழில்களாகச் செய்ய அவர்கள் அனுமதிப்பதில்லை. சிறு சிறு தொழிலாக பரவலாகச் செய்கிறார்கள். எல்லோருக்கும் வாய்ப்புகள் கிடைக்கின்றன.

நிலைமை இப்படி இருக்கும்போது, ஒரு பணக்கார தனி நபர் கேரளாவில் ஒரு பெரிய தொழிற்சாலையை ஆரம்பிக்க முயன்றிருக்கிறார். அதற்கு கேரள அரசு தடை விதித்தது. பிறகு அந்த நபர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 24

ம்மாண்டிவிளையில் அந்த காயர் தொழிற்சாலையை
றுவியிருக்கிறார். பெரிய ஆலைகளில் இயந்திரங்களின் மூலம்
ற்பத்தி செய்வது சிறு தொழில்களைப் பாதிக்கும் என்று
கரளாவில் அனுமதி மறுக்கப்பட்ட பின், அந்த நபர்
ன்னியாகுமரி மாவட்டத்தில் வந்து ஆரம்பித்திருக்கிறார்.
த்திய அரசிடமிருந்து அனுமதி பெற்று அங்கு அந்தப் பெரிய
தாழிற்சாலையை வைத்திருக்கிறார். மத்திய அரசு ஒரு சில
பந்தனைகளுடன் அந்த அனுமதியை அவருக்கு வழங்கி
ருக்கிறது. அந்த நிபந்தனை என்னவென்றால், அவர்கள்
ற்பத்தி செய்கின்ற காயர் பொருள்களை கேரளாவிலோ,
மிழ் நாட்டிலோ விற்பனைக்கு அனுப்பக் கூடாது,
வளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக உற்பத்தி செய்ய
வண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கியிருக்கிறது
த்திய அரசு அரசு. காரில் நாம் போடுகின்ற காயர் மேட்டுக்கு
ன்றைக்கு 185 ரூபாய் விலை. அவர்கள் அதை 100 ரூபாய்க்கு
ற்பத்தி செய்கிறார்கள். கேரளாவில் ஆலப்புழையில் இந்த
காயர் மேட்' 110 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நாகர்கோவிலில்
50 ரூபாய் இருக்கும். சென்னையில் கொஞ்சம் கூட விலை
கொடுக்க வேண்டியிருக்கும். கேரளாவில் 110 ரூபாய்க்குக்
கிடைக்கிற அந்தப் பொருள் வெளி மாநிலங்களுக்கு 200 ரூபாய்க்கு
விற்கப்படுகிறது. அதே நேரத்தில் அந்த 'காயர் மேட்'
வெளி நாடுகளில் 2,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மத்திய அரசு
ஒரே இடத்தில் பெரிய தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு
நிபந்தனையுடன் கூடிய அனுமதியை அளித்ததற்குப் பதிலாக
பரவலாக 100 கிராமங்களில் அந்தத் தொழிலை ஆரம்பிக்க,
அதாவது கேரளாவைப் போல் ஆரம்பிக்க, அனுமதி
கொடுத்திருந்தால், மிக நன்றாக இருந்திருக்கும்.
கிராமங்களுக்கு நாம் நல்ல வாய்ப்பினை அளித்திருக்க முடியும்.
100 கிராமங்களில் உற்பத்தி ஆகின்ற காயரையும் ஒன்றாகச்
சேர்த்து ஒரு கார்ப்பரேஷன் மூலம் வெளி நாடுகளுக்கு
நல்ல முறையில் ஏற்றுமதி செய்திருக்க முடியும்.

(பிற்பகல் 4-10)

இது இந்த அரசோ, இதற்கு முந்திய அரசோ செய்ததல்ல.



[1979 ஏப்ரல் 24
[திரு. ம. சங்கரலிங்கம்]

மத்திய அரசு கொடுத்த அனுமதி இனிமேலாவது தொழில்களை கிராமங்களில் அமைக்க வேண்டும்.

நம் மாநிலத்தில் கனிவளம் மிகுதியாக இருக்கிறது; அதை நாம் பயன் படுத்தவில்லை. ஆந்திராவிலே கிடைக்கக்கூடிய கனிவளத்தைவிட 10 மடங்கு அதிகமாக இங்கே கிடைக்கிறது. ஆந்திராவிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அவர்கள் பயன்படுத்துகின்ற அளவுக்கு நாம் இன்னும் கனிவளத்தைப் பயன்படுத்தவில்லை. அதற்குக் காரணம் நாம் இப்போதுதான் அந்த முறையிலே ஈடுபட்டிருக்கிறோம். அதுவும் பலதடவை தடங்கலாகித்தான் நடந்து கொண்டிருக்கின்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராபிக்ஸ் அதிகமாகக் கிடைக்கிறது. கன்னியாகுமரியில் முட்டம் என்ற பகுதியில் அதிகமாகக் கிடைக்கிறது. மேலும், காவல்கிணறு என்ற நிலைப் பள்ளி இருக்கிறது மகாராணி சேதுபாய் இருந்தபோது, அந்தப் பள்ளிக்கூடத்திலே பளிங்குக் கற்கள் போடப்பட்டன. அவை இன்றைக்கு கூட அங்கே இருக்கின்றன. நான் சொன்ன காவல்கிணறு என்ற பகுதியிலே பிருந்து எடுத்துக் கொண்டு போய் அங்கே போட்டிருக்கிறார்கள். முட்டம் என்ற பகுதியிலேயும் மண்ணுக்கு அடியில் இவைகள் கிடைக்கின்றன. இந்தப் பகுதிகளிலிருந்துதான் இந்தக் கற்களை எடுத்து குண்டறை என்ற இடத்தில் கிராபிக்ஸ் பாக்டரி நடத்துகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே மணல் வாரிக்குறிச்சி என்ற இடத்திலே மோனோசைட் அதிகமாகக் கிடைக்கிறது. அங்குள்ள மணலைப் பார்த்தால் கறுப்பாகவும், சிகப்பாகவும் தெரியும். கன்னியாகுமரிக்குப் போனால், இந்த மணலின் அழகைப் பார்த்து குப்பியிலே எடுத்து வந்து. வீட்டில் கண்ணாடிப் பெட்டியில் நாகரிகமாக வைக்கிறார்களே தவிர, அது தொழிலுக்குத் தேவைப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள வில்லை. 19 ஆம் நூற்றாண்டிலே பிரஞ்சு நாட்டுக்கு கன்னியாகுமரியிலிருந்து கயிறு ஏற்றுமதி செய்தார்கள். வெள்ளைக்காரர்களுக்கு முன்னால் பிரஞ்சுகாரர்கள் வந்திருந்த சமயம், ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் காலத்தில் கன்னியாகுமரி குளச்சல் பகுதியிலிருந்து கயிறு போனது அங்கு விற்பனைக்குப் போனபோது, அங்கிருந்த விற்பனைக் கூட்டத்தில் ஒருவர் இங்கிருந்து சென்ற அந்தக் கயிற்றை எடுத்துத் தட்டி, பிரித்துப் பார்த்தார். அந்த கயிற்றி

[திரு. ம. சங்கரலிங்கம்]

லிருந்து சிறு சிறு மணல்கள் பளபளப்பாக மின்னின. கயிறை வாங்க வந்தது ஒரு வெள்ளைக்காரர். அவர் உடனே இது எங்கிருந்து கிடைத்தது? என்று தடயம் கேட்டடார். அது கன்னியாகுமரி மாவட்டம் மணல்வாரிக்குறிச்சியி லிருந்து வந்தது என்று சொன்னவுடனே, இங்கிலாந்து ராணியின் அனுமதி யைப் பெற்று இங்கு வந்து பார்த்து அவர் ஏற்படுத்திய கம்பெனிதான் மணல்வாரிக்குறிச்சியிலே இருக்கும் மோனோசைட் கம்பெனி. 19 ஆம் நூற்றாண்டிலே மேலைநாட்டிலே இருந்த் சாதாரண ஒருவருக்கு வந்த உணர்வு, 6 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்த ஒருவருக்கு வந்த உணர்வு—அதுவும் 19 ஆம் நூற்றாண்டிலே கப்பலிலே வரும் நபர் திரும்பிச் சென்றால்தான் உண்டு. இன்றையதினம் பிரயாணத்துக்கு இரண்டு மணி நேரம் போதும் நமக்கு வரவில்லை. நம்முடைய இன்றைய நிலையிலே கூட, நம் முடைய மனநிலை அப்படிப் போகாமல் அதனை விட்டில் வைத்து அழகு பார்க்கும் நிலைதான் இருக்கிறதே தவிர, அதை உபயோகப் படுத்தும் நிலை யில்லை. தொழில் வளம் பெருக்க வேண்டும் என்று இந்த இலாக்கா செயல் படுகிறது நாமெல்லாம் படித்துவந்து, தெரிந்ததை நம்முடைய அனுபவங்களை வைத்தும், தெரியாததைக் கேட்டுப் புரிந்துகொண்டும் பேசுகின்றோம். அந்த 19 ஆம் நூற்றாண்டிலே மேலை நாட்டினருக்கு ஏற்பட்ட அந்த உணர்வு இளம் சமுதாயத்தினரிடையேயும், படித்தவர்களிடையேயும் வரவேண்டும்: கன்னியா குமரி மாவட்டத்தில் மலைப் பகுதிகளில் மைக்கா தாராளமாகக் கிடைக்கிறது. அதை நமது கனிவளத்துறையினர் இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கி றார்கள். கிரைசோபெரில் என்று கனிவளம்கூட அங்கே கிடைக்கிறது இவற்றை யெல்லாம் தனியார் வெட்டியெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆபரணங்களுக்கு வைக்கக்கூடிய நல்ல கற்கள் எல்லாம் கிடைக்கின்றன இவற்றை யெல்லாம் நமது அரசு பயன்படுத்தவில்லை. இந்த நாட்டினுடைய மக்கள் பயன்படுத்தவில்லை.

"இலமென்று அசை இ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்."

என்ற குறளுக்கு விளக்கவுரை சொன்ன பரிமேலழகர் "யாம் வறியமென்று சொல்லி வருந்திக்கொண்டு இருப்பவரைக் கண்டால், நிலம் என்று உயர்த்திச்



[திரு. ம. சங்கரலிங்கம்]

சொல்லப்படும் நல்லாள் தன்னுள்ளே நகுவாள்" என்று சொன்னார். அது மட்டுமல்ல, நிலம் என்ற நங்கை "பயிர் மட்டுமல்ல, எத்தனையோ விதமான கனிவளங்களைத் தேக்கி வைத்துள்ளேன், எத்தனையோ உயர்ந்தபொருட் களை, லட்சக்கணக்கான ரூபாய்களைக் கொண்டு சேர்க்கும் பொருட்களை வைத்திருக்கிறேன், அதையெல்லாம் பார்க்கின்ற கண்களை, அறிவைப் பெற வில்லையே" என்று நம்மைப் பார்த்துக் கேட்பதாகக் கூட உரை சொல்ல லாமே.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** புது உரை சொல்லலாம், தப்பு ஒன்றும் இல்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அந்த அளவுக்குக் கனி வளங்கள் இருக்கின்றன. இதற்காகக் கார்ப்பரேஷன் ஒன்றையும் நாம் அடைந்திருக்கிறோம். ஆனால், நாம் சரியான முறையில் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். கனிவளக் கார்ப்பரேஷனில் கறுப்புக்கல் வியாபாரத்தை நாம் ஏற்க இருக்கிறோம். 45,000 டன் அனுப்ப முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 10 ஆண்டு களுக்கு முன்பு, தர்மபுரி, வட ஆற்காடு, சேலம் மாவட்டங்களிலே இருந்து கறுப்புக்கற்கள் லாரிகளிலே ஆந்திராவுக்குப் போகும். முதலில் யாரும் இதைப்பற்றிக் கவலைப்படவில்லை. பிறகு ரொம்ப அதிகமாகப் போக ஆரம் பித்தவுடனே கொண்டுபோகக் கூடாது என்று சொல்லி செக்போஸ்ட்லே அதிகாரிகளுக்கு 10, 15 ரூபாய் கொடுத்துவிட்டுக் கொண்டு போனார்கள். பிறகு பஞ்சாயத்துக்களிலே தீர்மானம் போட்டு 25 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு, இப்போதுதான் நாமே இந்தத் தொழிலை ஆரம்பிக்கலாமா என்று பார்க்கிறோம். ஒரு 50 பேர்கள்தான் இந்தத் தொழிலிலே ஈடுபட்டு அவர்கள் தான் இந்தக் கறுப்புக் கற்களை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்கிறார்கள். அவர்கள் பெருமளவு சம்பாதிக்கிறார்கள். நம் நாட்டிலே ஒரு வழக்கம் என்னவென்றால், யாராவது ஒரு நல்ல தொழிலைக் கண்டு பிடித்துவிட்டால், அதை யாருக்கும் சொல்லமாட்டார்கள். ஒரு மருந்து கண்டுபிடித்துவிட்டால் கூட, வேறு யாரிடமும் சொல்லமாட்டார்கள். சொன்னால் பலிக்காது என்று சொல்வார்

[திரு. ம. சங்காலிங்கம்]

க்ள். கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்களை எடுத்துக்கொண்டால் கூட
பொதுவாக இப்படித்தான் ஷேக்ஸ்பியர் கவிதைக்கு ஒரு நோட்சை ஒரு
மாணவர் வைத்திருப்பார். அது நல்ல தரமான நோட்சாகக் கூட இருக்கும்.
அதை அடுத்த மாணவர் பார்த்து விட்டால், உடனே மறைத்து விடுவார். அந்த
மாதிரி ஒரு மனநிலை நம் நாட்டு மக்களிடையே வளர்ந்திருக்கிறது. அந்த
நிலை வளராமல் தடுக்க வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்
கொள்கிறேன். இன்னொரு பழக்கமும் இருக்கிறது. அதாவது ஒரு
தொழிலை ஒருவர் ஆரம்பித்தார் என்றால், அதையேதான் எல்லோரும் ஆரம்
பிக்கிறார்கள், உதாரணத்திற்குச் சொன்னால், ஓரிடத்தில் ஒரு இரண்டு
வெற்றிலை—பாக்குக்கடைகள் இருக்கும். உடனே அந்த இடத்தில் ஒரு பத்து
கடைகளை ஆரம்பித்து பிறகு எல்லோருமே மூடிவிடும் நிலைதான் இருக்
கிறது. அந்த மாதிரி, ஆரம்பிப்பதையே திரும்பத் திரும்ப ஆரம்பித்துக்
கொண்டிருக்கிறார்கள் புதிதாக அவர்களுடைய மூளையில் எதுவுமே வர
வில்லை.

முன்பெல்லாம் இந்தக் கருப்புக்கல்லை வெட்டியெடுத்து ஜப்பானுக்கு
அனுப்பினார்கள். அங்கே ஜப்பானில் அதை ஒரு இஞ்ச் கனத்திலே பேப்பர்
மாதிரி வெட்டி, பாலிஷ் செய்கிறார்கள். ஒரு சென்டிமீட்டர் என்று கூட
வெட்டி பாலிஷ் பண்ணிக் கொடுக்கிறார்கள். கெமிக்கல் பாக்டரிகளிலே
இதைப் பயன்படுத்தினால் கெமிக்கல் ரீ-ஆக்ஷன் வராது என்று சொல்கிறார்
கள் இப்படி வெட்டுவதற்குப் பயன்படுத்தும் இயந்திரத்தை மேலை நாடுகளில்
எல்லாம் வைத்திருக்கிறார்கள். நம்முடைய கார்ப்பரேஷனும் அந்தமாதிரி
ஒரு இயந்திரத்தை வாங்கி நாமே வெட்டி தகடு மாதிரி செய்து கூட அனுப்ப
லாம். இப்போது ஒரு பெரிய கல்லாக நாம் அனுப்புகிறோம். அப்படி
யில்லாமல் நாமே அதை வெட்டி சிறுசிறு தண்டுகளாக அனுப்பலாம்.
கன்னியாகுமரியிலிருந்து எடுக்கப்படும் மோனோசைட், அங்கேயே ஒரு சிறிய
முறையில் ப்ராசஸ் பண்ணி, குண்டறை, கொல்லம் போன்ற பகுதிகளுக்கு
அனுப்பப்படுகிறது. 5, 6 பேர்கள் தான் அந்தத் தொழிலை நடத்தினார்கள்.
அவர்களுக்குத்தான் லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. முன்பு வியாபாரி
கள் அவர்களிடம் 25 ரூபாய்க்கு வாங்கிக்கொண்டிருந்தார்கள் என்றால்
இப்போது அதற்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். அவர்கள்
முன்பு 25, 30 பேர்களை வேலைக்கு வைத்துக்கொண்டு இந்தத் தொழிலை
நடத்துகிறார்கள். அவர்களுக்குத்தான் லைசென்ஸ் லைசென்ஸ் வழங்கப்பட்





[திரு. ம. சங்காலிங்கம்]

டிருக்கிறது. முன்பு வியாபாரிகள் அவர்களிடம் 25 ரூபாய்க்கு வாங்கிக்
கொண்டிருந்தார்கள் என்றால், இப்போது அதற்கு இரண்டாயிரம் ரூபாய்
கொடுக்கிறார்கள். அவர்கள் முன்பு 25, 30 பேர்களை வேலைக்கு வைத்துக்
கொண்டு இந்தத் தொழிலை நடத்தினார்கள். அவர்களையேதான் இப்
போதும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்! அந்தத் தொழிலின் முக்கியத்
துவம் தெரியாத காலத்தில் குறைந்த அளவுக் கட்டணத்துக்கு அந்தத்
தொழில் நடத்த அவர்களை நாம் அனுமதித்தோம் இனி, உரிய முறையில்
அந்தக் கட்டணத்தை உயர்த்தி அரசுக்கு என்ன நியாயமாக வரவேண்டுமோ

(பிற்பகல் 4-20)

அதைப் பெற வேண்டும் அவர்கள் நல்ல முறையில் செய்தால்தான், அவர்களை
அந்தச் தொழிலைச் செய்ய அனுமதிக்க வேண்டும். எங்கெல்லாம் தேக்கம்
ஏற்படுகிறதோ, அதையெல்லாம் பொதுத்துறை ஏற்க வேண்டும். கனிவளங்
களைப் பொறுத்தவரையில் தோண்டி எடுக்கப்பட வேண்டியவை ஏராளம்
இருக்கின்றன. இவைகளை உரிய முறையில் பயன்படுத்தினால்,
தமிழ் நாடு இந்தியாவிலேயே தொழில் துறையில் முதலிடம்
வகிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் ஒரு
வண்டி உமி ரூபாய் 25-க்கு விற்கிறது. ஒரு வண்டி என்றால், ஒரு லாரியில்
?-ல் ஒரு பகுதி இருக்கும். ஆனால் அதே உமி, தஞ்சை மாவட்டத்தில் எடுத்
துக்கொண்டு போவதற்கு ஆளில்லாமல் ரைஸ் மில்களில் குவிக்கப்பட்டு, அதை
எடுத்துச் செல்வதற்கு ரைஸ்மில்காரர்கள் பணம் கொடுக்கிற நிலை இருக்
கிறது. இதற்குக் காரணம் கன்னியாகுமரி மாவட்டத்தைவிட தஞ்சை
மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மிகுந்த வளத்தோடு இருக்கிறார்கள் அல்லது
போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்றிருக்கிறார்கள் என்று
நான் நினைக்கிறேன். அதைப்போலவே ஒரு வண்டி சாம்பல் ரூபாய்
10-க்கு விற்கிறது. தஞ்சை மாவட்டத்தில் சாம்பலை உபயோகப்படுத்தவே
ஆளில்லை! எதற்குச் சொல்கிறேன் என்றால் இந்த உமியிலிருந்து நாம்
எண்ணெய் எடுக்க முடியும். அதைப்போலவே சாம்பலிலிருந்து நல்ல
ரசாயனப் பொருள்களைத் தயாரிக்க முடியும். தவிட்டிலிருந்து இப்போதே
எண்ணெய எடுக்கிறோம் என்றாலும், அதில் இன்னும் அதிகக் கவனம் செலுத்த
வேண்டியிருக்கிறது சாம்பலிலிருந்து ஆடு, மாடு, கோழி போன்ற பிராணி
களுக்குத் தீவனப் பொருளைத் தயாரிக்கலாம். இப்படி, தனியார் எந்தெந்தத்
துறையில் ஈடுபட்டிருக்கிறார்களோ அந்தத் துறையில் அரசாங்கம் நுழையாமல்

1979 ஏப்ரல் 24]

[திரு. ம. சங்கரலிங்கம்]

அதற்குப் பதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அதிக உற்சாகத்தை ஊட்டி, அவர்
களை அதில் இன்னும் அக்கறையோடு செயல்படச் செய்ய வேண்டும் என்
பதை மாத்திரம் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நான்
முதலில் சொன்னபடி தமிழ் மக்கள் போதுமென்ற மனம் படைத்தவர்களாக
இருந்தாலும். சுதந்திரத்திற்குப் பிறகு, பாரதி எழுதியதைப் போல் 'உழவுக்
கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' ஆலைகள் வைப்போம், நல்ல
சாலைகள் வைப்போம, என்ற உணர்வைப் பெற்றிருக்கிறார்கள். அந்த
உணர்வு பள்ளிகள்தோறும், வீடுகள்தோறும், நாட்டின் ஒவ்வொரு பகுதி
தோறும் உண்டாகி, கல்விக் கூடங்களில் அவைகள் செயல்திறனாக மாறுகிற
நிலை உண்டாக வேண்டும் 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று நம்
அவ்வைப்பாட்டி சொன்னதைபோல், இந்த நாட்டின் வளம் சிறக்க இந்தத்
துறை செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத்
தலைவர் அவர்களே, தமிழக அரசின் தொழிற் கொள்கையைப் பற்றிய
திறனாய்வு மிகச் செம்மையாக இங்கே நடத்தப்பட்டது என்பதற்காக என்
னுடைய மகிழ்ச்சியை முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

தேர்வு எழுதுவதற்கு உட்கார்ந்திருக்கிற மாணவனைப் போல், எனக்கு
முன்னால் நின்று பேசிய பேராசிரியர்கள் முன் நான் உட்கார்ந்து அவர்களின்
கருத்துக்களை கவனித்துக் கொண்டிருந்தேன் என்பதையும் இந்த நேரத்தில்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிற் பிரச்சினை என்பது ஒரு நாட்டினுடைய முதுகெலும்பு போன்றது
என்பதை நாம் அனைவரும் உணருவோம். எனவே அந்த அடிப்படையில்
தொழில் வளர்ச்சியில் அக்கறை காட்டுகிறவர்களை வாழ்த்தி வரவேற்கத்



[1979 ஏப்ரல் 24

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தயாராக இருக்கிறோம் என்ற நிலையிலும் நான் அவர்களின் கருத்துக்களை
யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தேன் என்பதையும் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

இந்த அரசாங்கத்தின் தொழிற் கொள்கை என்ன என்ற கேள்வி இங்கே
எழுப்பப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் தொழிற் கொள்கை என்ன,
பொதுத் துறையா, தனியார் துறையா, கூட்டுத்துறையா, அல்லது கூட்டுறவுத்
துறையா என்றெல்லாம் நேரடியாகக் கேட்காவிட்டாலும். மாண்புமிகு உறுப்
பினர்கள் கேட்ட கேள்வியிலிருந்து எந்தக் கொள்கையை இந்த அரசாங்கம்
பின்பற்றப் போகிறது என்றும், உண்மையில் இந்த அரசாங்கத்தினுடைய
நோக்கம்தான் என்ன என்றும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று கேட்பது
போல் இருந்தது. இந்த நாட்டினுடைய எதிர்கால வாழ்வைப்பற்றி நல்ல
முறையில் அக்கறை கொண்டவர்கள் இத்தகைய கேள்விகளை என்முன்
வைத்து இவைகளுக்கான பதில்களைப் பெற வேண்டுமென்று காத்துக்
கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.

இந்த அரசாங்கத்தின் கொள்கையை நான் தெரிவித்த பிறகும் அவர்களுக்
குச் சந்தேகம் தீரவில்லை என்றால், மீண்டும் சில கருத்துக்களைச் சொல்லி,
என்னிடமிருந்து பதில் பெறுவதற்கும் இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள்
தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் அவர்களுடைய முகபாவத்திலிருந்து
அறிந்துகொள்ள முடிகிறது.

தொழிற் துறையில் இவ்வளவு தூரம் ஏன் அக்கறை ஏற்படுகிறது என்றால்,
ஒரு நாட்டினுடைய வளம் தொழில் வளத்தை யொட்டியே அமைந்திருக்கிறது.
சாதாரண மனிதர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட விரும்புகிற வளம், ஒரு

[திரு. எம். ஜி இராமச்சந்திரன்]

நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தே அமைகிறது என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, ஓராண்டு காலத்திற்கு முன்னால் சொன்னவைகளை அல்லது 1½ ஆண்டுக் காலத்திற்கு முன்னால் சொன்னவைகளை, அல்லது முதல் கூட்டத்திலே சொன்ன கருத்துக்களை, அல்லது அண்மையில் வெளியிடப்பட்டிருக்கிற கருத்துக்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி நம் முன்னாலே வைத்து, "நீங்கள் என்னென்ன சொன்னீர்கள், என்னென்ன நடத்தியிருக்கிறீர்கள், தற்போது தொழிற் கொள்கையில் எந்த இடத்திலே இருக்கிறீர்கள்" என்று தெரிந்துகொள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் உரிமையோடு கேள்விகளை என் முன்னாலே வைத்திருக்கிறார்கள்.

நான் இங்கே சில கசப்பான உண்மைகளைச் சொல்ல வேண்டிய கட்டாயத்திலிருக்கிறேன் என்று சொல்லிக்கொள்வதன்மூலம் மாமன்ற உறுப்பினர்கள் என்னுடைய நிலையை நன்கு புரிந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு இதை நான் குறிப்பிட விரும்புகிறேன். கசப்பான உண்மைகள் என்று சொன்னால், சில நேரங்களில் கசப்பான மருந்து உடலுக்கு நல்லதைத் தருவதாக இருக்கும் என்று பதில் சொல்லலாம் என்றாலும் சாப்பிடும்போது இவ்வளவு கசப்பாக இருக்கிறதே என்று நாம் கஷ்டப்படுவதை போல நான் சொல்ல இருக்கிற கசப்பான அனுபவங்கள், உண்மைகள் ஒரு வேளை ஒரு சிலருக்கு மன வருத்தத்தையும் பெரும்பாலோருக்கு மன மகிழ்ச்சியையும் தரலாம். ஒரு சிலர் என்று நான் சொல்லுகிறபோது, என்னுடைய சந்தேகத்திற்கு உட்படுகிறவர்கள்கூட அதற்கப்பால் நின்று நாங்களும் அதைப்பற்றித் தெரிந்து, ஏற்றுக்கொள்கிறவர்கள்தான் என்ற எண்ணத்தில் இருக்கவும் வாய்ப்புண்டு என்பதையும் நான் அறிவேன்.

 [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தமிழக அரசைப் பொறுத்தவரையில், தொழிற் துறையில் ஒரு கொள்கையைத் திட்டவட்டமாக வைத்துக்கொள்ள விரும்புகிறது. ஒரு கொள்கையைப்பற்றிய முடிவெடுத்து, அதைச் செயலாக்க வேண்டுமென்று ஒரு அரசு விரும்புகிறபோது, அதற்குத் தேவையான அடிப்படையான அஸ்திவாரத்தை அமைத்துக்கொள்ளாமல் மேலெழுந்தவாரியாக ஒரு கொள்கையைக் கொள்ள முடியாது. இப்படி ஒரு முடிவெடுக்கும்போது, பல்வேறு பிரச்சினைகள் எழலாம். ஏனெனில் யாருக்காவது நாம் எதாவது ஒரு உதவி செய்கிறோம் என்று செயல்படும்போது, அது வேறு யாருக்காவது பாதகமாகவும் அமையலாம். நல்லது என்று நாம் கருதிச் செய்கிற சில காரியங்களின் விளைவாக சிலருடைய வருத்தத்திற்கும் கோபத்திற்கும் ஆளாகிற நிலைமை கூட உண்டாகலாம். சில நன்மைகளைச் செய்யும்போது, அதுவே வேறு ஒரு பக்கத்தில் தீமையை உருவாக்கிவிடலாம், அல்லது தீமைகள் உருவாவதற்குக் காரணமாக அமையலாம் என்ற வாய்ப்பும் இருக்கிறது.

தமிழக அரசு, அமரர் அண்ணா அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் செயல்பட வேண்டுமென்று விரும்புகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். "ஒருவரை அழித்துவிட்டு, இன்னொருவரை வாழ வைக்கும் கொள்கை என்னுடைய கொள்கையல்ல" என்று திட்டவட்டமாக நமக்குச் சொல்லித் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கனார் அவர்கள் பேசும்போது, சில உண்மைகளைச் சொன்னார்கள். அதைப்போலவே நாம் யாருக்கு நன்மை போய்ச் சேர வேண்டுமென்று நினைத்து சில காரியங்களைச் செய்கிறோமோ அந்த நன்மைகள் அவர்களைப் போய்ச் சேருகிறதா என்ற கேள்வியையும் நாம் மனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

(பிற்பகல் 4-30)

வாழ்க்கைக்குத் தேவையான வளமிக்க சூழ்நிலை இருந்தாக வேண்டுமென்று சொன்னால், ஒரு மனிதனுக்குத் தேவையான

உணவு, உடை, உறையுள் என்று எப்போதும் சொல்லுவோமே அந்தப் போன்ற மூன்று வார்த்தைகள் நம்மை சுற்றிச் சுற்றி வட்டமிடுவதை நாம் உணர முடியும். பொதுவுடைமைக் கொள்கை, அபேதவாதக் கொள்கை, தீவிர அபேதவாதம் அல்லது நடுநிலை என்ற சொல், இந்தப் பக்கமும் இல்லாமல் அந்தப் பக்கமும் இல்லாமல் இருக்கின்ற சில நேரங்கள் அங்கத்தினர்களுக்கு வருகிறதே, அது போன்று எந்தப் பக்கத்திலும் பேச முடியாமல் மனதிலே இருக்கிற கருத்தை வெளியிட முடியாமல் மிதமாக இருக்கிறார்களே, அப்படிப்பட்ட நிலைமை, இவைகளெல்லாம் கொள்கை என்ற பெயரில் நடமாடுவதற்கு நாட்டிலே வாய்ப்புண்டு.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தொழில் கொள்கையில், தொழில்கள் வளர வேண்டும், புதிய தொழில்கள் உருவாக வேண்டும், அந்த உருவாகின்ற தொழில்கள் மேலும் மேலும் வசதி படைத்தவர்களை அதிக வசதி படைத்தவர்களாகவும், கஷ்டப்படுகிற ஏழைகளை மிக ஏழை மக்களாகவும் ஆக்குகிற திட்டமாக அமைந்துவிடக்கூடாது என்பதில் மிக அக்கறையோடு செயல்பட்டு வருகிறோம். இதை அண்ணா அவர்கள் பன்முறை சொல்லியிருக்கிறார்கள். பல ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்ட பிறகு, மிகப் பெரிய அறிஞர் பெருமக்களெல்லாம், நான் முதலிலே சொன்னது போல,

'ஏழை மேலும் ஏழையாகிவிட்டான், பணக்காரன் மேலும் பணக்காரன் ஆகிவிட்டான், இதுதான் இந்தத் திட்டங்களின் விளைவு' என்று சொல்லியிருப்பதைப் போல தமிழகத்திலே எங்களால் அந்த நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில் நாங்கள் செயல்படுகிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

எங்களது கொள்கை, புதிய தொழில்கள் ஏற்பட்டாக வேண்டும். அப்படி புதிய தொழில்கள் என்ற முறையில்



உருவாக்கப்படுகிற தொழில்கள் ஒரு சிலருடைய கையில் போய்ச் சேர்ந்துவிடக்கூடாது. அதே சமயத்தில் இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்லியது போல, 'கறுப்புக் கல்லை வெட்டியெடுக்கிறார்கள், அவர்களுக்கு வேண்டுமென்றால் பத்து ரூபாய் என்பதை இரண்டாயிரமாகப் போடுங்கள், அவர்கள் அந்தத் தொழிலைச் செய்யட்டும், பத்துப் பேர்களுக்கு வேலை கிடைக்கும்' என்று சொன்னார்களே, அதுபோன்ற கருத்தில் நாங்கள் விட்டு வைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இல்லையென்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், விரும்பியோ, விரும்பாமலோ சிலபல ஆண்டுகளுக்கு முன் ஒரு சிலருடைய ஏகபோக உரிமையாக ஆக்கப்பட்டதன் காரணமாக, ஒருசிலருக்கு மகோன்னத வாழ்வு வந்துவிட்டது. அந்த அனுமதியைப் பெற்றவர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட எல்லைக்குள் அந்தப் பணியைச் செய்யாமல் அதையும் மீறி, பத்து ஏக்கர்கள் இருந்தால் 15 ஏக்கர் அளவுக்குத் தோண்டி யெடுக்கின்ற முறையில் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள், அதிலும் தமிழகத்திற்கு வர வேண்டிய கோடிக்கணக்கான வெளி நாட்டுச் செலாவணி வர முடியாமல் யாரோ தனிப்பட்டவர்களுக்குப் போய்ச் சேர்ந்திருந்தது என்பதை அறிந்த நேரத்தில் நாங்கள் எடுத்த முடிவு இதுதான். இனி எந்தக் காரணத்தை முன்னிட்டும், தமிழகத்திலே இருக்கிற கனிவளங்கள் தமிழக மக்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டுமே தவிர, தனிப்பட்ட யாரும் அதை எடுத்துக்கொள்ள அனுமதிக்கக் கூடாது என்ற ஒரு கொள்கையை நாங்கள் வகுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன்.

அதுபோல, கன ரகத் தொழில்கள் என்று சொல்லி மிகமிகப் பெரிய அளவுக்கு, 50 கோடி ரூபாய், 90 கோடி ரூபாய், 120 கோடி ரூபாய், என்ற அளவிற்கு பெரிய பெரிய தொழிற்சாலைகளையும், நிறுவனங்களையும் உருவாக்கப் போகும்போது, அதை தேசியவுடைமையாக்கிவிட வேண்டுமென்று,

சொல்லுகின்ற ஒரு கொள்கையை அப்படியே முழுமையாக நாங்கள் எங்களுடைய இறுதிக் கொள்கையாக ஏற்றுக் கொண்டிருந்தாலும், இன்றைய சூழ்நிலையில் அப்படிப்பட்ட முடிவுக்கு வர நாங்கள் தயாராக இல்லையென்பதை இங்கே தெள்ளத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் காரணம், பெரிய பெரிய தொழில்கள் அரசுடைமையாகும்போது அதனால் எத்தனை பேர்களுக்கு வேலை கிடைக்கிறது, அந்தத் தொழில்களின் மூலமாக எவ்வளவு இலாபம் அவர்களுக்குக் கிடைக்கிறது, என்பதையும் கணக்கிட்டுப் பார்த்து, அதற்கேற்ப தேசியவுடைமையாக்கப்படுவதை அவர்களுக்கே விட்டு வைத்து, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கனார் சொன்னதைப் போல, வரி மூலமாக அல்லது வேறு வகையிலே பணத்தைப் பெற வழிவகைகளைக் கண்டு, எந்த வகையிலே அவர்களுடைய இலாபத்தைக் குறைத்து அரசு அதிகமான பணத்தைச் சேர்த்துக்கொள்ளுவது என்பதிலே நாங்கள் நிச்சயமாகச் சிந்திக்க முடியும் என்றாலும், உடனடியாக மிகப் பெரிய தொழில்களையெல்லாம் தேசியவுடைமையாக்க வேண்டுமென்ற நிலைமையில் இப்போது தமிழக அரசு செயல்படத் தயாராக இல்லையென்பதை இங்கே தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் எங்களுடைய கொள்கை, நான் ஒத்துக் கொள்ளுகிறேன், இறுதியான கொள்கை பெரிய கன ரகத் தொழில் போன்றவைகளெல்லாம் தேசியவுடைமையாக்கப்பட வேண்டுமென்பதுதான். ஆனால் இன்றைய தினம் எங்கள் முன்னால் இருக்கிற கேள்வி வேலை இல்லாதவர்களுக்கு எப்படி வேலை கொடுப்பது ? வேலை செய்கின்ற வாய்ப்பைப் பெறுகின்றவர்களுக்கு ஓரளவுக்கு தேவையான வருமானம் கிடைக்கும்படி எவ்வாறு செய்வது? இதை எந்த வகையில் செய்வது, இவைகளை எங்கிருந்து ஆரம்பிப்பது ? இவைகளை நாங்கள் கேள்விகளாக வைத்துப் பதில் பெற வேண்டிய நிலைமை இருப்பதால்தான் இந்த முடிவுக்கு நாங்கள் வர வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டோம்.



"ஓராண்டிற்கு முன்னாலே ஏதோ பெரிய காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொன்னீர்களே, 100 கோடி ரூபாய் என்று சொன்னீர்களே, இப்போது 132 கோடி ரூபாய் என்று சொல்லுகிறீர்களே, ஆனால் எங்கேயிருக்கிறது என்று தெரியவில்லையே, தேடித் தேடிப் பார்த்தும் காணோமே" என்றெல்லாம் மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் இங்கே தெளிவாகக் கேட்டார்கள். ஏன் தெளிவாகக் கேட்டார்கள் என்று சொல்லுகிறேன் என்றால், எனக்குப் புரிகிறதோ இல்லையோ என்று அழுத்தந் திருத்தமாக, ஆணித்தரமாகச் சொன்னார்கள், அவர் நம்பியிருக்கிற அடிப்படையிலே அவர் அவ்வளவு உறுதியாகக் கேட்டார். ஆனால் ஏனோ நாங்கள் சொல்லுகின்ற சில கருத்துக்கள் மட்டும் யார் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் பத்திரிகை வாயிலாகப் போய்ச் சேரவில்லை என்று எண்ணும்போது எங்களுக்குக் குழப்பம் கூட ஏற்படுகிறது.

நான் வெளிநாட்டு சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டுத் திரும்பிய பிறகு, பல முறை மேடைகளில் பேசியிருக்கிறேன். சட்ட மன்றத்திலும் பேசியிருக்கிறேன். மேலவையிலும் குறிப்பிட்டிருக்கிறேன். காகிதத் தொழிற்சாலையைப் பார்வையிடுவதற்காக மெக்சிகோ சென்றேன் என்பதையும் அங்கே போய்ப் பார்த்த பிறகு, ஜனவரி மாதத்தில் உற்பத்தி தொடங்கிவிடும் என்ற நிலைமை இருப்பதை, அவர்கள் சொன்ன உறுதிமொழியைத் தெரிந்து கொண்டு, "நீங்கள் உற்பத்தி செய்கின்ற காகிதத்தை அனுப்பி வையுங்கள், அதைப் பார்த்த பிறகு நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சியை நாங்கள் பின்பற்றுவதா, உங்களைப் போல நாங்கள் அந்தப் பணியை மேற்கொள்ளுவதா என்று முடிவு செய்கிறோம்" என்று சொன்னேன் என்பதை மேலவையிலேகூட ஒரு முறை சொன்னதாக நினைக்கிறேன். இல்லையானால் இப்போது சொல்லுவதாக வைத்துக் கொள்ளுங்கள். என்னைப் பொறுத்த

வரையில், சாதாரணமாகப் பார்த்துக் கேள்விகளைக் கேட்கும் போதெல்லாம் சொல்லியிருக்கிறேன். 100 கோடி ரூபாய் என்பது 130 கோடி ரூபாயாக ஏன் ஆயிற்று என்று கேட்டால், சாதாரணமாக பத்திரிகைகளுக்கான ஏடுகளாக காகிதத்தைத் தயாரிக்கிற தொழிற்சாலை என்று மட்டும் வைத்துக் கொண்டு செயல்படத் துவங்கினால், ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்குள் அதை அமைத்துவிடலாம் என்ற நிலைமை இருக்கிறது.

(பிற்பகல் 4-40)

ஆனால் சில வரிகளிலிருந்து தமிழகத்திற்கு விடுதலை கொடுக்கவும், அதே சமயத்தில் புத்தகங்கள் போன்றவைகள் எல்லாம் அச்சிடுவதற்கு வேண்டிய தாள்களை அளிப்பதன் விளைவாக மிகப் பெரிய நன்மைகள் அதன் மூலமாக உண்டு என்று கணக்குப் போட்டு, பிறகு நஷ்டத்தை அடையாமல் பணத்தைச் செலவழித்து, பிறகு அதில் மாற்றம் ஏதும் செய்யாமல், தொடக்கத்திலேயே நன்றாகச் சிந்தித்து, அது நன்மையா அல்லது தீமையா, இது வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதுபற்றி முதலிலேயே முடிவு செய்துவிட்டு, வேலையைத் தொடங்குவது தான் முறை என்ற முறையில் இந்த அரசு அந்தப் பணியை மேற்கொண்டது. அந்த நிலையிலிருந்து காகிதத் தொழிற்சாலை ரூபாய் நூற்றுச் சொச்சம் கோடி என்று சொன்னது ரூபாய் நூற்று முப்பது கோடி என்ற அளவிலே வந்திருக்கிறது. அதிலே உற்பத்தி செய்த காகிதங்கள் கிடைத்த பிறகு, நாம் ஒப்பந்தம் செய்து கொள்ள முடிவு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டெக்னிகல் அஸிஸ்டன்ஸ் என்பார்களே, தொழில் நுணுக்க உதவி தருவதற்கும், இயந்திரங்களை இங்கே கொண்டு வந்து அது செயல்படுகின்ற நிலைமையை உருவாக்கித் தருவதற்கும் அவர்களுக்குக் கொடுக்கின்ற தொகையும்



ரூ. 3 கோடியிலிருந்து, ரூ. 5 கோடி வரை ஆகும் என்ற நிலைமை இருப்பதை நான் கண்டறிந்தேன். நமக்கு முன் அனுபவம் இல்லாத காரணத்தால், நான் சாதாரணமாக நண்பர்களிடம் கேட்டேன். இயந்திரங்களை நாம் தான் வாங்குகிறோம், தமிழக அரசிலே இருப்பவர்கள் வேலை செய்கிறார்கள். நம்முடைய நுணுக்கத் திறமையாளர்கள் வேலை செய்யப் போகிறார்கள், ஏதோ அவர்கள் வருகிறார்கள், இதற்குப் போய் ரூ. 3 கோடியிலிருந்து 5 கோடி வரை கேட்கிறார்கள் என்று நினைத்தேன். அதிலேயும் அவர்கள் ஒரு நிபந்தனை போட ஆரம்பித்தார்கள். இந்தத் தொழிலைச் சொல்லிக் கொடுத்தால், இன்னொருவருக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாது என்ற நிபந்தனையைப் போட வந்தபோது, அது எனக்குப் புதிய அனுபவமாக இருந்தது. இருந்தாலும் நான் அங்கே இருந்த நண்பர்களைக் கேட்ட பிறகு, இது முறையான பழக்கம், இப்படித்தான் பலர் செய்கிறார்கள், இப்படி ஒத்துக் கொண்டால்தான் அவர்கள் அவர்களுடைய திறமையைச் சொல்லிக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்கின்ற வாய்ப்பைப் பெற்றேன்.

அதற்குப் பிறகு, ஜப்பானுக்கு வந்த பிறகு, தூத்துக்குடியிலே ஆல்காலிக் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் அமைப்பதற்காக இங்கேயிருந்து சென்ற அதிகாரிகள் அங்கு ஒரு ஆண்டுக்கு முன் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதில் மத்திய அரசு ஒரு கட்டளையைக் கண்டிப்பாகப் போட்டது. நான் அதைப் பற்றிப் பரிசீலித்து மெக்சிகோவிலே பெற்ற அனுபவத்தை வைத்துக் கொண்டு, நான் ஜப்பானுக்குச் சென்றபோது, இந்தியத் தனைக் கண்டத்திலுடைய அதிகாரிகளும், தூதுவர் அவர்களும் அங்கே கையெழுத்துப் போட்ட நேரத்தில், முன்னாலே இருந்த ஒப்பந்தத்தை என் நிறுத்தி மறுபடியும் போடுகிறார்கள் என்று கேட்டேன். "அந்த ஜப்பான் நாட்டு அமைப்பைச் சேர்ந்தவர்கள். இந்த நுணுக்கத் திறன்களை யாருக்கும் நீங்கள் சொல்லிக் கொடுக்கக் கூடாது என்ற நிபந்தனை போட்டார்கள்: அப்படி முடியாது, அது

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 24

எங்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டுமென்று இந்தியப் பேரரசு வற்புறுத்தியது, விரும்பியது; இதற்காக ஒரு ஆண்டு 10 மாதங்கள் பேச்சு வார்த்தை நடத்தி, முன்னாலே போட்ட ஒப்பந்தத்தை மாற்றி, அதிலே சிறுசிறு மாற்றங்களைச் செய்து, மீண்டும் புதிதாக ஆக்கி அதிகாரிகள் கையெழுத்துப் போட்டு ஒப்பந்தம் செய்தார்கள்" என்று அறிந்தேன். இப்போது தேவையான அளவுக்கு மற்ற வேலைகள் எல்லாம் நடந்து அந்தத் தொழிற்சாலை தொடங்கப்படக்கூடிய அளவுக்கு நாங்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி சில அனுபவங்களைப் பெறும்போது தான், நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

இங்கே மேல்வையிலே துணைத் தலைவராக இருக்கின்ற நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சில நல்ல யோசனைகளை இங்கே குறிப்பிட்டார்கள். தொழிலதிபர்கள் கூட்டத்தை அடிக்கடி கூட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அத்தோடு ஒரு மகிழ்ச்சிகரமான விஷயத்தையும் அவர்கள் சொன்னார்கள். ஒரு நாள் சிந்தித்துப் பேசியதன் விளைவாக, தொழிலதிபர்கள் எவ்வளவு மகிழ்ச்சியோடும், நிம்மதியோடும் இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் புதிய ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் இருக்கிறார்கள் என்பதையும் சொன்னார்கள். அத்தகைய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வாய்ப்புக்கள் இருந்ததால் தான், அந்தத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு மூலதனம் போடுவதற்கும், அவைகளைச் செய்வதற்கும் அவர்கள் தயாராக ஆகியிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லக்கூடிய நிலைமைகள் அங்கே ஏற்பட்டுள்ளன. அதற்கிடையே ஏற்பட்ட நிலைமைகளைப்பற்றி மிகக் குறைந்த நேரத்தில் விளக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன் என்று கருதுகிறேன்.

நாங்கள் பொறுப்பேற்ற பிறகு, வேலை நிறுத்தம் நடக்காத நாட்கள் இல்லை என்ற நிலைமை ஓராண்டுக் காலமாக இருந்தது என்று சொல்லலாம். எங்காவது வேலை நிறுத்தம் என்கின்ற ஒரு வார்த்தையாவது பத்திரிகையில் இல்லாவிட்டால், அந்த வேலை நிறுத்தம் செய்யக் காரணமாக இருப்பவர்களுக்கு



1979 ஏப்ரல் 24]

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

நிம்மதியில்லை என்ற அளவில் செய்திகள் வந்துகொண்டிருக்கும். அது நாட்டு மக்களுக்குத் தெரியும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மூலதனத்தைக் கொண்டு வந்து இங்கே செலுத்துகின்ற அளவில் இப்போது அந்த ஆலைகள் திறக்கப்படும் அளவில் இருக்கிறது. எத்தனை நாட்கள் வரைக்கும் இந்த வேலை நிறுத்தம் நீடிக்கும். இந்த வேலை நிறுத்தம் எப்போது முடிவுக்கு வரும் என்ற அச்சத்திலேயே தொழிலதிபர்கள் இருந்தால், அவர்கள் எப்படித் தொழில்கள் தொடங்க முன்வருவார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கக்கூடிய மாண்புமிகு அங்கத்தினர்கள் சிந்திக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த ஓராண்டுக் காலம் மிகப் பெரிய ஒரு போராட்டக் காலமாக இருந்தது என்பதோடு, எங்கு பார்த்தாலும் சிக்கல்களும், தொல்லைகளும் சில நேரங்களில் வன்முறைகளும் இருந்தன. சில தொழிற்சாலைகள் தவிடுபொடி ஆகிவிடுமோ என்ற நிலைமைகள் கூட ஏற்பட்டன. யார் செய்தது, என்ன செய்தார்கள். அதனால் அவர்களுக்குக் கிடைத்த லாபம் என்ன என்று கணக்குப் போட்டுப் பார்த்தால், ஆட்சிக்கு வந்தவர்கள் எதுவும் செய்துவிடக் கூடாது என்பதுதான் அவர்கள் கருத்து அவர்கள் நாங்கள் அதிகமாகச் செய்யக் கூடாது என்ற கருத்தில் செய்தார்கள் என்ற முடிவுக்குத்தான் நாங்கள் வரமுடியுமே தவிர, உண்மையிலே இந்த வேலை நிறுத்தம், போராட்டங்கள் குறைவதற்கு ஒத்துழைப்புத் தராவிட்டாலும் கூட, நாங்கள் செய்கின்ற காரியங்களை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். அதையாவது தடுக்காமல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடிய நிலை இருந்தது. அந்த நிலைமையில்தான் அவைகள் நடந்துகொண்டிருந்தன என்பதை இங்கே நான் நினைவூட்ட விரும்புகிறேன். இன்றையதினம் அப்படிப்பட்ட அச்சுறுத்தக்கூடிய நிலைமைகள் நாட்டிலே இல்லை என்ற அளவுக்கு அதிபர்கள் கொஞ்சம் நம்பிக்கை பெற்றிருக்கிறார்கள். அதுவுமன்றியில், வேறு பல மாநிலங்களில் இருப்பதைவிட தமிழகத்தில் கொஞ்சம் அமைதியும், பாதுகாப்பும் இருக்கிறது என்கின்ற நம்பிக்கை அவர்களுக்கு உறுதிசெய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே இங்கே உள்ள அரசு நித்திய கண்டம் பூரண ஆயுசு என்ற அளவுக்கு இல்லாமல்—அமைச்சரவை,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

பல மாநிலங்களில் இருக்கின்றன—அப்படிப்பட்ட நிலை நமது மாநிலம் இல்லை என்ற நம்பிக்கையோடு அவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் உள்ள பணத்தை முதலீடு செய்ய, முன்வரத் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் முதலிலேயே குறிப்பிட்டேன், தொழில் வளம் பெருகியாக வேண்டும் என்பதைச் சொல்லி அதிலேதான் நம் மக்களுடைய வாழ்க்கை வளம் இருக்கிறது என்பதைக் குறிப்பிடுகிறேன் இந்த அனுபவத்திலிருந்துதான் அந்த வார்த்தைகள் வந்தன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எப்படியோ அனைத்துக் கட்சி நண்பர்களும், பொது மக்களும் சேர்ந்து அப்படிப்பட்ட தொழிலதிபர்களுக்கு உத்தரவாதம் தருவது போன்ற நிலையைக் கொஞ்சம் கொஞ்சமாக உருவாக்கிக் கொண்டு வந்து, உறுதியான நிலைக்கு நாம் வந்து சேர்ந்திருக்கிறோம் என்பதை எண்ணி, இதற்கு ஒத்துழைக்கின்ற வகையில் அனைத்து எதிர்க் கட்சிகளும், மற்ற கட்சிகளும் உபத்திரவம் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தின் சார்பாக அந்த அளவுக்கு ஒத்துழைப்புக் கொடுத்ததற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்

(பிற்பகல் 4-50)

கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் விளைவாக, நான் அதற்குப் பிறகு குறிப்பிட்ட ஒரு சில தொழிலதிபர்களைப் பார்த்துப் பேசிய பிறகு, அவர்கள் சொன்ன வார்த்தைகளை அப்படியே சொல்ல விரும்புகிறேன். "இங்கே என்னென்ன தொழில்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, எங்கே எந்த மூலப் பொருள்கள், எப்படிப்பட்ட மூலப் பொருள்கள் இருக்கின்றன என்பதை வைத்துக் கொண்டு எந்தெந்தத் தொழில்களை ஆரம்பிக்க முடியுமென்று கருதுகிறீர்களோ அதைச் சொல்லுங்கள் நாங்கள் நம்பிக்கையோடும், உறுதியோடும் அந்தப் பணியை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறோம்" என்ற உறுதியை தமிழக அரசுக்கு தொழிலதிபர்கள் தந்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே நான் மன நிம்மதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பதில் மேலவையின் துணைத் தலைவர்



[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

திரு. சுவாமிநாதன் அவர்களுக்கும். மற்ற உறுப்பினர்களுக்கும் மிகப் பெரிய மனத் திருப்தியைத் தருமென்று எதிர்பார்க்கிறேன்.

தொழிலதிபர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கிறார்கள். ஆனால் நான் அவர்களுடன் பேசிப் பார்த்த பிறகு தமிழகத்திலே இருக்கிற தொழிலதிபர்களிலே பெரும்பாலானோர், எண்ணத்திலே குறுகிய மனம் உள்ளவர்களாக இல்லை என்றும், அவர்கள் தமிழகம் நிச்சயமாக மேம்பாடு அடைய வேண்டுமென்ற நோக்கத்திற்கு மாறாக இல்லை என்றும், எப்படியாவது தமிழகம் முன்னேற வேண்டும், தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும், நிறைய தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும், மக்களுக்கு வருமானம் வர வேண்டுமென்ற ஆசையில்—பேராசை என்று கூடச் சொல்வேன்—இருக்கிறார்கள் என்பதை அறிந்தேன். இத்தனை நாட்கள், ஆண்டுகள் இப்படிப்பட்டவர்களைப்பயன்படுத்த முடியாமல் போனதன் காரணமென்ன என்பதைச் சிந்திக்க வேண்டிய நிலை எனக்கு இருந்தது. அப்போதுதான் நான் ஒரு உண்மையைப் புரிந்துகொண்டேன். அரசியல் கட்சிகளை வளர்ப்பதற்காகவும், தங்கள் தங்கள் சங்கங்களை வளர்ப்பதற்காகவும் போட்டி ஏற்பட்டதன் விளைவாக தமிழகம் இவ்வளவு பின்னுக்கு தொழில் துறையில் தள்ளப்பட்டு விட்டதென்பதைச் சொல்வதிலே தவறில்லை என்று கருதுகிறேன். அப்படியானால் அந்த அரசியல் கட்சிகளுக்கோ, சங்கங்களைச் சார்ந்தவர்களுக்கோ தொழிலாளர்கள் அல்லது தமிழக மக்கள் வாழக்கூடாதென்று எண்ணம் இருக்கிறதா என்றால், அதை நான் சொல்வதற்கு உரிமை பெற்றவனல்ல. அது உண்மையல்ல என்பதையும், கட்சிகளை வளர்க்க வேண்டுமென்று சொல்லும் போது, அது அவர்களுக்குள்ள உண்மையான உரிமையாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் சங்கங்களை வளர்க்க வேண்டுமென்று நினைக்கும் போது, ஒருவர் பத்து சதவீதம் போனஸ் வாங்கித் தருவேன் என்றால், இன்னொருவர் 13 சதவீதம் வாங்கித் தருகிறேன் என்று சொல்லி, அதன்மூலம் தொழிலாளர்களைத் தங்கள் யூனியனுக்கு இழுக்க முடியுமா என்ற நிலைமையிலே போராட்டங்கள் உருவாகின்றன என்பதை எண்ணிப் பார்த்து, அப்ப

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

டிப்பட்ட நிலைகளிலிருந்து மிகப் பெரிய மாற்றத்தை உண்டாக்கித் தர வேண்டுமென்ற கட்டாயம், யாராக இருந்தாலும், அரசோச்சுபவர்களுக்கு வருகிறதென்பதையும் தெளிவாக உணர்ந்த நிலைமையில், மனம் விட்டுப் பேச விரும்பினேன். தொழிலாளர்களுக்காக, அவர்களுடைய பாதுகாப்பிற் காகச் சட்டம் கொண்டுவர எண்ணி, என் விருப்பத்தை தொழிலாளர் நல் அமைச்சரவர்களிடம் சொல்லி, இந்தக் கூட்டத் தொடரிலேயே அது வர வேண்டுமென்று சொல்லி, அதைத் தயார்செய்து வைக்கக்கூடிய நிலை இருக் கிறது. அதற்காக ஓரிரு தொழிற் சங்கத் தலைவர்களைச் சந்தித்தபோது, அதைப்பற்றி அவர்களிடம் எடுத்துக்கூறி, இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் இருந்தால்தான் நிறைவேற்ற முடியுமென்றாலும், எப்படியாவது முயற்சி செய்து அவர்களிடம் அனுமதியைப் பெற்றுவிடலாம் என்றும், முதலிலே தமிழகத்தில் இதை நிறைவேற்றிவிடுவோம். அதற்குப் பிறகு துணிந்து மற்ற மாநிலங்களும், மைய அரசும் அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவர முயற் சிக்கட்டும் என்றும் எங்கள் எண்ணங்களை வெளியே சொல்லி, அதைப்பற்றி அவர்களைக் கேட்டோம். ஒருவர் அதை முழுமையாக ஒத்துக் கொண்டார். ஒருவர் பாதியை ஒத்துக்கொண்டார், இன்னொருவர் முக்கால்வாசியை ஒத்துக் கொண்டார், கால்வாசியை மறுத்து விட்டார். அப்படி என்ன சட்டம் அது என்று கேட்பதற்கு நீங்கள் தயாராக இருப்பீர்கள். இல்லையென்றாலும் அதைப் பற்றிச் சொல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. எனவே நான் சொல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது, எனவே நான் சொல்வதைக் கேட்பீர்களென்று நம்புகிறேன். மைய அரசிலே ஒரு சட்டத் தைக் கொண்டு வந்து, அதை நிறைவேற்ற முடியுமா என்பதிலே அவர்கள் மிக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்பதற்காகவும், அவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டு மென்பதற்காகவும், தொழிலதிபர்களுக்கு நிம்மதியும் பாதுகாப்பும் இருக்க வேண்டுமென்பதற்காகவும், எந்தப் பொருள்களுக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டுமென்பதற்காகவும் தொழிலாளர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படா



[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

மல் காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காகவும ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோமென்பதையும், எனக்குத் தோன்றிய எண்ணத்தில். நாம் பல வர்களுக்குச் சென்று வந்தவுடன் அதைப்பற்றிப் பேசி, அது குறித்து என்னுடைய கருத்துக்களை வெளியிட்டேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மைய தொழிலாளர் நல அமைச்சரவர்களிடமும் அதுபற்றிப் பேசிவிட்டு வந்திருக்கிறேன். நான் சொன்ன கருத்துக்களைக் கூறுகிறேன். ஒரு தொழிற்சாலையில் எத்தனையோ கட்சிகளைச் சேர்ந்த சங்கங்கள் இருக் கலாம். கட்சிகளைச் சாராத சங்கங்களும் இருக்கலாம். அப்படிப்பட்ட சங்கங்களிலே இருக்கிற அத்தனை தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து பெரும்பான்மையான தொழிலாளர்கள் வாக்களித்தால்தான், அது ஆலையாக இருந்தாலும் அல்லது வேறு தொழில் நிறுவனமாக இருந்தாலும் அதோடு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள முடியுமென்று விதி வகுக்க வேண்டு மென்று விரும்பினேன். சில தொழிற் சங்கங்களில் 500 பேர்கள் இருக்கலாம். இன்னொரு தொழிற் சங்கத்தில் 600 அல்லது 700 அல்லது 20 பேர்கள் இருக் கலாம். யாராவது ஒரு தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போய், கையெ ழுத்துப் போட்டுவிட்டு, அதற்கென்று ஒரு விதியை வைத்துக்கொண்டு, அதை மாற்ற முடியாது என்று சொல்லுகிறார்கள். ஏதோ மாற்ற முடியாத, யாராலோ எழுதப்பட்ட எழுத்து என்று சொல்வது போல, அதை மாற்ற முடியாதென்ற நிலைமைகள் ஏற்படும்போது, ஆலை அதிபர்களுக்கும் தொல்லை, தொழிலாளர்களுக்கும் தொல்லை, அமைச்சர்களுக்கும் தொல்லை, ஆட்சிக்கும் தொல்லை, மக்களுக்கும் தொல்லை ஏற்படுகிறது. இவ்வளவு நிலைமைகள் வந்து சேருகின்றன. அதைத் தடுப்பதற்காக எத்தனை சங்கங்கள் இருந்தாலும், அத்தனை சங்கங்களுடைய தொழிலாளர்களும் ஒன்றுகூடி, ரகசிய வாக்கெடுப்பு நடத்தி, வேலை நிறுத்தம் செய்யவேண்டுமா வேண்டாமா என்பதை பெரும்பான்மையான வாக்காளர்கள் ஒத்துக்கொண் டால், வேலை நிறுத்தம் செய்யலாம் அல்லது ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள லாமென்ற நிலை ஏற்படவேண்டும். அத்தகைய தொழிற் சங்கத்தைச் சேர்ந்த வர்கள் ஒன்றுகூடி ரகசிய வாக்கெடுப்பில், எந்தெந்த விதிகளின்படி ஒப்பந்தம்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

செய்து கொள்ளலாம் என்ற நிலைமையை முடிவு செய்ய வேண்டுமென்றும்,
அதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும் முக்கிய கருத்தாக
வைக்க விரும்பினேன். ஆலை அதிபர்களானாலும் சரி, தொழில் அதிபர்களா
னாலும் சரி, தொழிலாளர்கள் ஒப்பந்தம் செய்துகொள்ளும்போது, யூனியன்
மூலமாகத்தான் ஒப்பந்தம் செய்துகாள்ள வேண்டுமே தவிர, தனிப்பட்டவர்
கள் மூலமாக ஒப்பந்தம் செய்துகொள்வதைத் தடுப்பது அதிலே இருக்க வேண்
டுமென்று விரும்பினேன். எனவே அதையும் சட்டமாகக் கொண்டுவருவது
பற்றி, விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அதுபோல பல்வேறு வகைகளில்,
லாக் அவுட் போன்றவைகளால் சச்சரவுகள், சந்தேகங்கள், போட்டிகள்
நுழைய முடியாமல், நியாயமான முறையில் தொழிலதிபர்களுக்கும் அந்தத்
தொழிலுக்கும், தொழிலாளர்களுக்கும் எந்தவித ஏமாற்றமும் பாதகமும்
நஷ்டமும் வராமல் இருக்க ஒன்றுபட்டதொரு சூழ்நிலையை உருவாக்க அந்தச்
சட்டம் பயன்பட வேண்டுமென்ற நிலைமையில் அந்த முயற்சியை எடுத்துக்
கொண்டிருக்கிறேன் அது தயாராக இருக்கிறது. எப்போது வாய்ப்பு
கிடைக்கும், டெல்லி மாநகரத்திற்குச் செல்ல என்று நானல்ல—இன்னொரு
வரைத் தயாராக வைத்திருக்கிறேன். அவரை அனுப்பி, அங்கே அனுமதி
பெற்றாக வேண்டும். அதற்குப் பிறகு சட்டமன்றத்திலே நிறைவேற்றியாக
வேண்டும். அப்படி முடியவில்லை என்றால், பிறகு என்ன வழி இருக்கிறது
என்பது இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். எப்படி
யாவது தொழில் அமைதி, தொழிலாளர்களுக்கு நிம்மதி, தொழிலதிபர்களுக்குப்
பாதுகாப்பு ஆகியவற்றை ஏற்படுத்தித் தந்தேயாக வேண்டும். எந்தத் தொழிற்
சாலைக்கும், எந்தப் பொருள்களுக்கும் அழிவு ஏற்படாமல், தீமை பயக்கக்
கூடிய எந்தக் காரியமும் நடைபெறாமல் இருக்கும் சூழ்நிலை ஏற்பட
வேண்டும். அப்போதுதான் தொழிலிலே இருக்கும் அதிபர்களுக்குத் துணிவு
ஏற்படுமென்பது மட்டுமல்ல, மகிழ்ச்சியும் ஏற்படும். நஷ்டம் வந்தாலும்
அதைத் தாங்கிக் கொள்ளக்கூடிய மனம் இருக்கும். அதிகமாக வந்தாலும்
வாரிக் கொடுக்கக்கூடிய வளமான இதயம் உண்டாகுமென்பதையும் நான்



[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

(பிற்பகல் 3.00)

நம்பிக்கையோடு கூற விரும்புகிறேன். இந்தத் தொழில் கொள்கையைத்தான்
தமிழக அரசு இப்பொழுது தன்னுடைய கொள்கையாக வைத்துக்கொண்டிருக்
கிறது. தொழில் அதிபர்களுக்கு ஒரு மாதிரியான பாதுகாப்பு, தொழிலாளர்
களுக்கு வேறொரு விதமான பாதுகாப்பு என்கின்ற வகையில் ஒருவரைத்
தாழ்த்தி அதே நேரத்தில் இன்னொருவரை உயர்த்துவது என்கின்ற நிலைமை
யில் நாங்கள் தவறான எண்ணம் கொண்டு பார்க்கத் தயாராக இல்லை என்
பதை நான் இங்கே உறுதியோடு கூற விரும்புகிறேன். இப்பொழுது ஓரளவுக்
காவது இந்தத் தமிழக அரசினுடைய தொழில் கொள்கை என்ன என்று புரிந்
திருக்கும் என நான் நம்புகின்றேன் அல்லது புரியும்படியாக எனக்குச்
சொல்ல முடியும் என்று புரிந்திருப்பார்கள் என்று கருதுகின்றேன். இதுவும்
புரியவில்லை யென்றால், கேள்வி கேட்டால், இதிலே புரியும்படியாகச் சொல்
வதற்குத் தயாராக நான் இருக்கிறேன். தொழில்கள் பெருக வேண்டும் என்று
சொல்லும்போது, நமக்கு இருக்கிற மிகப் பெரிய குறை, கிராமங்களில் இப்
பொழுது படிக்கின்ற இளைஞர்களைத் தவிர, திறமையும் தகுதியும் படைத்த
இளைஞர்களை வாலிபர்களைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் நல்லமுறை
யில் விஞ்ஞான ரீதியில் கல்வி பயின்று படித்துப் புரிந்துகொண்டவர்கள் அல்ல
என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அது ஒரு மிகப் பெரிய
பிரச்சினையாக நம் கண் முன் நிற்கிறது. ஏதாவது கொஞ்சம் முற்போக்கான
வகையில் தொழில்களை ஆரம்பிக்க முடியுமா, அறிவியல் துறையிலே அவர்
களைப் பயன் படுத்தி அதன் மூலம் நவீன முறையில் புதிய கொள்கைகளைப்
புகுத்தி புதிய கண்டுபிடிப்புகளை அங்கே உருவாக்கி அதன் மூலம் மக்களுக்கு
நன்மை செய்ய முடியுமா என்று நினைக்கின்ற நிலைமையில் அது நகரோடு
அல்லது இன்னும் நகரை ஒட்டிய ஓரிரு பகுதிகளோடு நின்று விடுகிறது.
கிராமப்புறங்களுக்குச் சென்று அப்படிப்பட்ட தொழிலை வகுத்துக் கொடுத்
தாலும், எத்தனை கோடி பணத்தில் அவற்றை உருவாக்கினாலும், அவர்கள்
தெரிந்து பணியாற்ற எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதைப்பற்றிக் கற்பனை
செய்தால், நமக்கே அச்சமாக இருக்கும். நமது தமிழகத்தில்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

ஒரு நிலைமையைக் காண முடியுமா என்ற நிலைமைதான். அச்சம்தான் இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்படி யானால் மேல் நாடுகள், அண்டை நாடுகள் அங்கே இருப்பவர்கள் விஞ்ஞான ரீதியாக, வெகு வேகமாக விரைவாக மேலே வளர்ந்துகொண்டு சென்றிருக்கும் பொழுது, இங்கே நாம் கைராட்டையை வைத்துக்கொண்டு தக்ளியில் நூல் நூற்று அவர்களுக்குப் போட்டியாக வாழ முடியுமா என்கிற பிரச்சினை எழு கிறது. அப்போது அங்கே ஒரு பக்கத்தில் விஞ்ஞானத்தின் மூலம் வளர்ந்தாக வேண்டும். புதிய புதிய யுத்திகளைப் பயன்படுத்தி மிகப் பெரிய தொழிற் சாலைகளை நிறுவி வெளி நாடுகளுக்கு அனுப்புகின்ற அளவுக்கு நாமும் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். அதே சமயத்தில் அவைகளைக் கண்டுபிடிப்பதால் உபயோகப்படுத்தக்கூடத் தெரியாத சாதாரண படிக்காத ஏழை எளிய மக்களுக்கு, கிராம மக்களுக்கு நாம் எந்த வகையில் வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொடுக்கப் போகிறோம் என்ற கேள்வி நம் முன் எழுகிறது. ஒரு பக்கம் விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட வேண்டும் இன்னொரு பக்கம் நம்முடைய நாட்டின் சமுதாய அறிவு முறைக்கு ஏற்ப, சமுதாய பழக்க வழக்கங்களுக்கேற்ப நமக்கு இருக்கின்ற மூலப் பொருள்கள் எந்த அளவுக்குப் பயன்படுமோ அந்த அளவுக்கு தொழில்களை உருவாக்க வேண்டிய வர்களாக இருக்கிறோம்.

தொழில் மையங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தொழில் கள் செயல்படவில்லை என்று சொல்லும்போது, எனக்கு இங்கே குறிப்பு தந்திருக்கிறார்கள். ஏறத்தாழ அனைத்து மையங்களுக்கும் ஆட்களை நியமித்து அங்கே மையங்கள் செயல் பட்டுக்கொண்டிருக்கின்றன என்கின்ற புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறார்கள். ஊன்றிக் கவனித்துப் பார்க்கின்ற போது, இவர்களுக்குப் போய்ச் செய்வதா என்று அச்சம் இருந்தாலும், தமிழகத்தைப் பொறுத்தவரை, நான் ஒன்றைத் திட்டவட்டமாகச் சொல்கிறேன். பல நாடுகளுக்கு நான் சென்று பார்த்ததில் தமிழர்கள் எங்கெங்கு போயிருக்கிறார்களோ அங்கெல்லாம் ஒரு பகுதியை அவர்கள் ஏற்றுக்கொண்டு செயல்படுகிறார்கள்



அங்கெல்லாம் அவர்கள் மற்றவர்களை விட ஒரு அடியாவது முன்னேறி நிற்கிறார்கள், தலை நிமிர்ந்து நிற்கிறார்கள் என்று நான் பெருமைப்படத் தக்க அளவுக்கு அவர்களுடைய அறிவு அந்நாடுகளுக்குப் பயன்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கின்ற இளைஞர்களை, படித்துக் கொண்டிருக்கின்ற இளைஞர்களை, படித்துவிட்டு வெளியே வருகின்ற இளைஞர்களை, மேலும் அப்படிப்பட்டவர்களை எல்லாம் எந்த அளவுக்கு அவர்களுடைய அறிவு அத்தனையையும், பயன்படுத்தி தொழில் மையங்களில் உபயோகப்படுத்த முடியுமோ அத்தனையும் செய்து கொடுக்கின்ற எண்ணத்தை அவர்கள் பெற்றால் இந்த மாநிலத்தில் ஒரு பெரிய அறிவு சார்ந்த, மற்றவர்கள் கண்டு பொறாமைப் படத்தக்க அளவில் இளைஞர்கள் கொண்ட நல்ல அமைப்புகளை தொழில் துறையிலே உருவாக்கிக் கணக்குக் காட்ட முடியும் என்பதை நான் இங்கே நம்பிக்கையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். இலட்சக்கணக்கானவர்களுக்கு நீங்கள் 3 ரூபாய், 4 ரூபாய் என்று சம்பளம் கொடுத்து அவர்களை வேலை வாங்கப் போகிறீர்களா என்று சிலர் கேட்கின்ற அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு சுவாமிநாதன் போன்ற வர்கள் இன்னொரு பக்கத்தில் எங்களுக்குப் பாதுகாப்பு தருவது போல் எவ்வளவு தொகை ஆனாலும் பரவாயில்லை, 20 ஆயிரம், 30 ஆயிரம் பேர்கள் வாழட்டும் என்று சொல்லுகின்றபோது, எங்களுக்குக் கொஞ்சம் நம்பிக்கையும் துணிச்சலும் ஏற்படுகிறது. செய்து பார்த்தால் தான் என்ன என்று தோன்றுகிறது. உதாரணமாக வெகு விரைவில் தொடங்கப்பட்ட நிலைமையில், தொடங்கியிருக்கின்ற நிலைமையில் சென்னையைச் சுற்றி 100 அமைப்புகள் உடனடியாகத் தொடங்க இருக்கின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிவதற்கு வாய்ப்பு அளிப்பதன் மூலம் எத்தனை ஆயிரம் பேர்கள் வேலைக்கு சொந்தக்காரர்கள் ஆகிறார்கள் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இலட்சத்து ஐம்பதாயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்க முடியாது எங்கே வேலை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கேட்டார்கள். என்னுடன் வந்தால் எங்கெங்கு வேலை

நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் அவருக்கு நேரிலே காண்பிக்க முடியும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்தால் தான், அவர்களுக்கு நம்பிக்கை வரும். நான் பல முறை சொல்லியிருக்கிறேன். இலட்சம் பேர்களுக்குக்காகத் திட்டம் போட்டோம். ஆனால் இலட்சத்து 30 ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்த புள்ளிவிவரத்தை நான் இந்த அவையில் படித்ததாக ஞாபகம். சட்டமன்றப் பேரவையில் கூட இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். ஒரு திட்டம் போடுகிறோம் என்றால், எங்களுக்குத் தருகிற உற்சாகம் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்வது மாதிரி உற்சாகத்தை இழக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. நாங்கள் திட்டங்களைக் கொண்டுவருவதற்கு அச்சப்படும் அளவிற்கு எங்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. "நீங்கள் துணிந்து செய்யுங்கள். 20 ஆயிரம் பேருக்கு என்று சொல்லியிருக்கிறீர்கள். ஒரு 50 ஆயிரம் பேருக்காவது செய்யுங்கள்" என்று சொன்னால் நான் புரிந்துகொள்ள முடியும். அடி எடுத்து வைப்பதற்கு முன்னாலேயே, "நீ முன்னால் வரவும் முடியாது, பின்னால் செல்லவும் முடியாது, நின்ற இடத்தில் தான் நிற்க வேண்டும்" என்று சொல்வது மாதிரி சொல்கிறார்கள். ஒருவேளை அப்படி இருக்குமோ என்கின்ற அச்சத்தை உண்டாக்கக்கூடிய நிலை இருக்கக்கூடாது. நீங்கள் அனுபவம் மிக்கவர்கள், பல ஆண்டுகள் ஆட்சியில் இருந்த அனுபவம் உங்களுக்கு இருக்கிறது. மிக மிகத் தெளிவாய் எந்தெந்த இடங்களில் தவறுகள் இருக்கும் என்பதைப்பற்றி நன்றாகப் புரிந்துகொண்டவர்கள். எப்படிச் செய்தால் தவறு நடக்கும், எப்படிச் செய்தால் தவறு நடக்காது என்பதைப்பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் என்னை விட அதிகமாகப் புரிந்துகொண்டவர்கள் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-10)

பினாமி என்றார்கள். அதனுடைய முழுப் பொருள் என்ன வென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்





களுக்குத் தெரிந்ததைப் போல எனக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஏனெனில், எத்தனையோ பேர்களை, கண்டித்து, யோசனை சொல்லி அப்படிச் செய்யக்கூடாது என்று அவர் சொல்லியிருக்க நியாயம் உண்டு. அப்படிப்பட்ட நிலையில், அவர்கள் இருக்கின்ற சூழ்நிலையில் தான், பினாமி பற்றி, ஊழல் பற்றி, லஞ்சத்தைப்பற்றியெல்லாம் தெளிவாக அவர்கள் கூற முடியும். எப்படி கூடவே இருந்தபோது கேள்வி கேட்டு வெளியேற்றப்பட்டேனோ, அப்படி அவர்களும் கேட்டிருப்பார்கள். அவர் என்னோடு நண்பராக இருந்த நேரத்தில் நாங்கள் அது பற்றிப் பேசியிருக்கிறோம் என்பதையும் மறந்திருக்க மாட்டார்கள். குறிப்பிட்டுப் பேசியிருக்க மாட்டோம். ஆனால் பொதுவாக நாட்டிலே இருக்கிறது என்று பேசாமல் இருந்திருக்க முடியாது. ஊழல், லஞ்சம் இவைகள் எல்லாம் சில நேரங்களில், நாம் எதையெதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று எண்ணுகிறோமோ, அதனாலேகூட ஏற்பட்டு விடுகிறது. ஒரு வகையில் இந்த ஊழல், லஞ்சம் என்பதெல்லாம் அந்தந்த மனிதனுடைய மனப்பான்மையையும், சூழ்நிலையையும் பொறுத்திருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். சில வெளிநாடுகளில், ஏன் நம் தமிழ் நாட்டிலே கூட வண்டிகளிலே, டாக்சிகளிலே வந்துவிட்டுப் போனவர்களுக்கு அவர்கள் விட்டுவிட்டுப் போய்விட்ட பொருட்கள் வீடு தேடி வந்திருக்கின்றன. அதற்கு மாறாக சில இடங்களிலே பறித்துக்கொண்டு போவதையும் கூட நாம் பார்க்கிறோம். 'துப்பாக்கி முனையிலே கொள்ளை' என்றெல்லாம் நடக்கிறது சிலர் வீடு தேடி வந்து கொடுக்கிறார்கள், ஒரு பையில் ஒரு ரூபாய்கூட குறையாமல் கொடுக்கிறார்கள். அதையும் பார்க்கிறோம். ஆகவே, இவைகளெல்லாம் மனிதனுடைய மனப்பான்மையைப் பொறுத்திருக்கிறது. 'இது செய்வது கடமை என்று உணருபவர் யாரும் இல்லாமலும் இல்லை, அப்படி முழுவதுமாக இருக்கவும் இல்லை'. ஊழல் என்று சொல்லும்போது, ஒரு தொழிற்சாலையைப் பற்றிச் சொன்னால், அந்தத் தொழிற்சாலையிலே வேலைக்குச் சேர்க்கவில்லை என்று யாராவது வந்தால், அதைக் கேட்டு, 'அவருக்கு வேலையில்லை, இவருக்கு வேலையில்லை, கொடுங்கள்' என்று சொல்லும்போது, "அவரை அழைத்துவந்து

வேலை வாங்கிக்கொடுத்தேனே, எனக்கு ஒன்றும் இல்லையா? கமிஷன் கேட்டுப் பெற்றுக்கொண்டால் என்ன?" என்று கேட்கின்ற அளவுக்குக் கூட லஞ்சம் வாங்கும் உரிமை வந்துவிடுகிறது. இவைகள் எல்லாம் மனத்தைப் பொறுத்தது. அந்த எண்ணம் மாறியாக வேண்டும். அந்த எண்ணம் மாறுவதற்கு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் போன்றவர்கள் மிகப் பெரிய உதவியாக இருக்க முடியும். அதுபோன்று மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கிறார்கள், அவர்களும் மிகப்பெரிய கடமையாற்றக்கூடியவர்களாக இருக்க முடியும் என்பதை தான் நம்பிக்கையோடு சொல்கிறேன். நான் யாருடைய முகமனையும் பார்த்துச் சொல்லவில்லை, உள்ளதைச் சொல்கிறேன். இதே பேச்சை சட்டமன்றப் பேரவையிலே நான் பேசியிருந்தால் நல்ல வேடிக்கையாக இருந்திருக்கும். இங்கே, அதாவது இடம், பொருள், ஏவல் என்று சொல்வார்களே அது போல அங்கே இருப்பவர்கள் எப்பேர்ப்பட்ட கேள்வி கேட்கிறார்களோ, அவர்களுக்கு அதற்கேற்ற பதில், இங்கே இருப்பவர்கள் எப்பேர்ப்பட்ட கேள்வி கேட்கிறார்களோ, இவர்களுக்கு அந்தக் கேள்விக்கேற்ற பதில், அதுபோல்தான் நிலைமைகள் மாற்றிக்கொண்டிருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சில குறிப்புகளைச் சொன்னார்கள். முதலில் இங்கே தொழிலைப் பற்றிக்கொடுக்கப்பட்டிருக்கின்ற புத்தகத்தில் உள்ள விவரங்களைப் படித்துவிட்டு அவர்கள், "பல ஆதாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் இப்படிக் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இந்த இலாக்காவை நான் பாராட்டுகிறேன்" என்று சொன்னார்கள். நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இலாக்கா அவ்வளவு அக்கறையோடு இந்த முறை செயல்பட்டிருக்கிறது. கோப்புகளையெல்லாம் எடுத்து வைக்க — இன்னும் எத்தனையோ கோப்புகள் இருந்தா[illegible] அவர்களால் முடியவில்லை என்றாலும் — முடிந்த அளவில் வெளியிட்டிருக்கிறார்கள் என்று சொல்லும்போது, உத்தரவுகள் போடப்படுகின்றன என்பதும், எப்படிப்பட்ட யோசனைகள் தரப்படுகின்றன என்பதும், எப்படிப்பட்ட முடிவுகள் எடுக்கப்



இருக்கின்ற குறிப்புகளிலே இருந்து எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஆகவே, முழுமையாகப் படித்துவிட்டு, இப்படிப்பட்ட ஒரு நற்சான்றிதழ் வழங்குவது போல, அதுவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் போன்றவர்கள் மேலவையிலே இருந்து பாராட்டும்போது, இந்த இலாக்காவுக்கு ஏற்படுகின்ற பெருமையிலே நானும் கொஞ்சம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். காரணம், செய்தவர்கள் இலாக்காவினர். ஆனால் கெட்ட பெயர் வந்தால் எனக்கு வருவது போல, கொஞ்சம் நல்ல பெயர் வரட்டும், ஏதாவது தவறு வந்துவிட்டால் நான் பதில் சொல்லியாக வேண்டும். ஆகவே, இப்படி புகழ் வரும்போது நூற்றிலே ஒரு சதவீதம் நானும் பெற்றுக்கொள்ளும் விதத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தரவேண்டும் என்று கேட்டு வாங்க விழைகின்றேன். சில சமயம் கேட்டுக்கூட வாங்க வேண்டும். கொடுப்பார்கள் என்று கூட எண்ணாமல், இது கடமையாகி விடுகிறது. கடமையைச் செய்தாக வேண்டும். இந்த அவையில், மைய அரசினுடைய தொழிற்துறை அமைச்சர் பல்வேறு கொள்கைகளைச் சொல்கிறார்கள், ஒவ்வொருவர் இங்கே வந்து சொல்கிறார்கள். அப்படிச் செய்வது தான் கடமை என்று சொல்லிக் காட்டினார்கள் அந்தப் பேச்சை நான் பேரவையிலே கூடச் சொல்லி ½ மணி நேரம் அதற்கு செலவாயிற்று என்பதைச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். காரணம் ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு கொள்கை இருக்கிறது. ஒரு லட்சியம் இருக்கிறது. ஒருவேளை ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் தீவிரவாதியாக இருந்திருக்கலாம். மிதவாதியாக இருந்திருக்கலாம். இன்னொருவர் அபேதவாதியாக இருந்திருக்கலாம், மற்றொருவர் மதவாதியாக இருந்திருக்கலாம் அல்லது வேறொருவர் பொதுவுடைமைக்காரராக இருந்திருக்கலாம். இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து காரியம் ஆற்றும்போது, தீவிரவாதிகள் தீவிரமாகச் செயல்பட வேண்டும் என்று சொல்லுவார்கள். மற்ற இலாக்காக்களிலோ மற்ற சூழ்நிலைகளிலோ இருக்கின்றவர்கள் அதோடு ஒத்துப்போக முடியாமல் இருக்கும். அப்போது கொஞ்சம் தான் ஒத்துப் போக முடியும், அதற்குப் பிறகு ஆத்திரம் தான் வரும். இப்படி,

விளைவுகள் ஆங்காங்கே ஏற்படுகின்றன. அப்படித்தான் தமிழகத்தின் நிலைமையும், ஒவ்வொரு மாநிலத்தின் நிலையும் இருக்கிறது. அவர்களுக்கு எடுத்துச் சொல்லி நம்முடைய தேவைகளைப் பெறுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் உற்சாகமாகத் தந்திருக்கின்ற யோசனைகள் தமிழக அரசுக்குப் பெரும் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இன்னொன்றை நான் குறிப்பிட்டாக வேண்டும். தொழிலதிபர்களை ஈர்க்கக்கூடிய வகையில் அவர்களுக்கு உத்தரவாதம் வேண்டும் என்ற வகையில் கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. நான் முதலிலேயே சொன்னேன். அவர்களுக்கு நம்பிக்கை பிறந்திருக்கின்றது. அதைக் காப்பாற்ற வேண்டியது இந்த அரசினுடைய கடமை. அதை மறைக்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் போன்றவர்கள் பஞ்சாபையும் தமிழகத்தையும் ஒப்பிட்டுக்கூறி, பஞ்சாப் எவ்வளவு வளர்ந்திருக்கிறது. நாம் எவ்வளவு பின்னோக்கிப் போயிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டி புள்ளிவிவரங்களைச் சொன்னார்கள். நாம் புரட்டி, புரட்டிப் பார்த்தேன். 1974-75-ம் ஆண்டு வரை புள்ளிவிவரங்கள் வந்திருக்கின்றனவே தவிர, அதற்குப் பிறகு புள்ளிவிவரங்கள் இன்னும் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்று சொல்வது பற்றி மகிழ்ச்சி.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** 1978 வரையில் 'ஆனுவல் இயர்' புக்கிலே, லைப்ரரியிலே இருக்கிறது. 'இந்தியா டுடே' என்ற புத்தகத்திலே 1979 ஆம் ஆண்டுக்கும் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** முன்கூட்டியே வைத்திருக்கிறார்கள். மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஒவ்வொரு மாநிலத்திலும் செகான் நிலை என்று சொல்வதற்கு முழுமையான விளக்கங்கள், புள்ளிவிவரங்கள் இருக்கின்றனவா என்றால் இருக்க முடியாது என்பதை நான் துணிந்து கூற விரும்புகிறேன்.





ஏனெனில் இலாக்காவில் இருப்பவர்களுக்கே தங்களுடைய மாநிலத்தின் நிலை என்னவென்று சொல்ல முடியாத நிலைமையில் நாடு இருக்கிறது. இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்கு மிக முக்கியமான காரணம் எனக்கு எவ்வளவு வருவாய் இருக்கிறது என்று தெரிந்தால்தான், எவ்வளவு செலவு செய்ய முடியும் என்று சொல்ல முடியும். அதைப் போல இந்த நாட்டு மக்களில், எத்தனை பேர் ஏழைகள் இருக்கிறார்கள் என்று கேட்டால், சராசரி என்று போடுகிறார்களே தவிர, அதை வைத்துக் கொண்டு விகிதாச்சாரத்தைப் பார்த்து ஒரு திட்டம் போட முடியாது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். சராசரி என்பதுதான் இந்த நாட்டின் மிகப் பெரிய தத்துவமாக இன்றைக்கு இருக்கிறது என்பது மட்டுமல்ல, அதுதான் பலவற்றிற்கும் இடையூறாகவும் தடையாகவும் இருக்கிறது என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 5-20)

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தமிழகத்தில் தமிழக அரசு தயாரித்திருக்கிற தொலை நோக்குத் திட்டம் என்ற புத்தகத்திலும் நம்முடைய பிளானிங் கமிஷன் 'Five-Year Plan—1978' என்று போட்டிருக்கிற புத்தகத்திலும் இந்தப் புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** அவர்கள் இன்னமும் குறிப்புகளைத் தேடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். திட்டக் குழுவிற்கு முழுமையான குறிப்புகள் இன்னமும் கிடைக்கவில்லை இருப்பதை வைத்துக் கொண்டுதான் பேசுகிறார்களே தவிர, முழுமையாக அவர்களிடம் விவரம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியப் பேரரசு, இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் ...க்கில் கொண்டு அதைச் சொல்லியிருக்க வேண்டும். அப்போது ...ான் மற்ற மாநிலங்களில் உள்ள நிலைமையை நாம் ...முழுமையாக தெரிந்து கொள்ள முடியும்.

இன்னமும் சொல்வேன். நாட்டில் 'குத்து மதிப்பு' என்று
சொல்வார்களே அதைப்போல் 'சராசரி' என்கிற வருமானத்தை
வைத்துக்கொண்டு, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள்
இத்தனை பேர் என்று எப்படிக் கணக்கெடுக்க முடியும்? இது
தான் இப்போதைக்கிருக்கிற மிகப் பெரிய பிரச்சினை.

ஒரு மாதத்திற்கு ரூ. 10,000 வருமானம் உள்ளவர்கள், ஒரு
மாதத்திற்கு 100 ரூபாய் வருமானம் உள்ளவர்கள், ஒரு மாதத்
திற்கு வருமானம் உண்டா இல்லையா என்கிற கேள்விக்குறியாக
திருப்பவர்கள் ஆகிய அனைவரையும் ஒருங்கிணைத்து அவர்களுக்
கிடையே ஒரு சராசரி கணக்குப்போட்டு, ஆளுக்கு ரூ. 7,000
அல்லது ரூ. 3,000 மாத வருமானம் என்று போட்டால், எப்படித்
தவறானதோ அதைப்போல்தான் நாட்டின் சராசரி வருமானத்
தைக் கணக்குப் போடுகிறோம். வறுமையின் எல்லைக்
கோட்டிற்குக் கீழே இவ்வளவு பேர் இருக்கிறோம் என்ற புள்ளி
விவரத்தைத் தருகிறோம். உண்மையிலேயே வேலை இல்லாதவர்கள்
நாட்டில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், வருமானம் அற்றவர்கள்
எவ்வளவு பேர் இருக்கிறார்கள், வருமானம் பெற்றவர்கள்
எவ்வளவு பேர் இருக்கிறார்கள், என்ற புள்ளிவிவரத்தைச் சொல்ல
முடியாத நிலையில்தான் தமிழக அரசு இப்போது இருக்கிறது
என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்படிச் சொல்லும்போது, நான் உண்மையை ஒப்புக்
கொண்டாக வேண்டும். இதில் யாருக்கும் அவமானமில்லை.
யாருக்கும் தலைக்குனிவு இருக்க முடியாது மக்கள்
தொகையை முழுமையாகக் கணக்கிட்டு, அதற்கென்று முறை
யான அமைப்புகளை உருவாக்கி, எங்கெங்கே மூலப் பொருள்கள்
கிடைக்கின்றன என்ற புள்ளிவிவரத்தையும் நாம் எடுத்தாக
வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
சொன்னதைப்போல், 'ஏதோ கறுப்புக் கரங்கள் எல்லாம் இருக்
கின்றன, அதை யார் யாரோ எடுத்துக்கொண்டு போகிறார்கள்'
என்ற நிலையில் இருந்துவிட முடியாது. நாடு முழுவதும்
உண்மையில் எத்தனை பேருக்கு வேலையில்லை எத்தனை





பேர் நாடு முழுவதுமாக ஏழைகளாக இருக்கிறார்கள், எவ்வளவு
பேர் அதிக வருமானம் பெறுகிறார்கள், அப்படி அதிகமான
வருமானம் பெற்றாலும், அதைக் கணக்கில் கொண்டு வருகிற
வர்கள் எத்தனை பேர், கணக்கில் கொண்டு வராமல்
வருமானத்தை மட்டும் பெற்றுக் கொண்டிருக்கிறவர்கள்
எத்தனை பேர் என்று கணக்கிட்டுப் பார்த்துச் செயல்பட்டால்
தான் எதுவும் சரியாக இருக்க முடியும். ஆனால் அதற்கு மாறாக
இன்றையதினம் நாம் என்ன செய்கிறோம் என்றால், 'ஏதோ
திட்டம் தீட்டிவிட்டோம், மக்களுக்கு நன்மை செய்கிறோம்'
என்று சொல்லி, நம்மை நாமே சமாதானப் படுத்திக் கொண்டி
ருக்கிறோமே தவிர, உண்மையைச் சொல்லப் போனால் இருக்கிற
நிலைமையே வேறு. கண்ணுக்குத் தெரிகிறது. கண்ணுக்கு
முன்னால் அடையாளம் தெரிகிறது. யார் என்று கேட்டால்
மனிதன் என்று சொல்ல முடிகிறது. அதற்கு மேல் ஒன்றும்
சொல்ல முடியவில்லை. அதைப் பிரித்துக் காட்ட,
கண்ணுக்குப் பழக்கமான முறை, நிச்சயமாக இல்லை. அந்த
முறையை நாம் கொண்டு வந்தாக வேண்டும் என்ற காரணத்தால்
தான், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுகிறபோது திட்ட
வட்டமாக ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "வீணாக நேரம்
போகிறது, காலம் கடத்துகிறார்கள். மக்களில் பெரும்பாலோர்
வேலையற்ற நிலையில் இருக்கிறார்கள். கஷ்டப்படுகிறார்கள்
என்று ஏதாவது ஒரு தொழிலை ஆரம்பிக்கலாம் என்று போனால்
அதிகாரிகளிடம் நடந்து நடந்து, நமக்கு இது போதும்
என்றாகிவிடுகிறது. நமக்கே இந்த கதி என்றால், இந்த
அளவுக்குக் காரியங்கள் செய்வதில் காலதாமதம் ஆகிறது
என்றால், பார்ட்டத்தில் போய் இதை எடுத்துச் சொல்வது என்ற
எண்ணம் உருவாகிறது" என்று எடுத்துக் காட்டினார்கள்.
இவைகளெல்லாம் எதனால் ஏற்படுகிறதென்றால் புள்ளி
விவரங்கள் உண்மையில் சரியில்லாமல் இருப்பதால்தான்.

எல்லோரும் சொல்லுகிறோம், நாட்டில் ஏழ்மையை
நீக்கிவிட்டோம், நிலத்தையெல்லாம் பங்கிட்டுவிட்டோம் என்று,
இவ்வளவு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயித்துப் பிரித்துக்
கொடுத்துவிட்டோம் என்று எல்லோரும் சொல்லுகிறோம்.

ஆனால் அதற்குப்பிறகு வேறொன்றையும் சொல்லுகிறோம். நாட்டில் நிறைய பினாமி நிலங்கள் இருக்கின்றன. அதைத் திரும்ப எடுத்தாக வேண்டும். யார் யார் பெயரில் அந்த பினாமி நிலங்கள் இருக்கின்றனவோ, அவைகளையெல்லாம் அவர்கள் பெயருக்கே உறுதி செய்ய வேண்டும் என்று சொல்லுகிறோம். ஒரு பக்கம் நாம் நம் கடமையைச் செய்துவிட்டோம் என்று சொல்லி பக்கம் பெருமைப்பட்டுக்கொள்ள விரும்புகிறோம். அதே நேரத்தில் அங்கே தவறு நடந்திருக்கிறது, அதற்கான சட்டம் கொண்டுவர வேண்டும் என்றும் கேட்கிறோம்.

நமது நோக்கத்தில் மாற்றமில்லை எல்லோருக்கும் ஒரே நோக்கம்தான் இருக்கிறது. தவறுகள் நடக்கக்கூடாது. நல்லது நடக்க வேண்டும் என்பதில் யாருக்கும் கட்சி வேறுபாடில்லை.

நடைமுறையில் இவ்வளவு காலதாமதம் ஏற்படுகிறது என்று தொழிலதிபர்கள் நினைக்கிறார்கள். இதையே எங்களுக்கு வருகிற கடிதங்களும் கோப்புகளும் சொல்லுகின்றன. எனவே இப்படிப்பட்ட நிலைமை ஏற்படக்கூடாது என்றுதான் தற்போது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்திருக்கிறோம். தாமதமாகிற கோப்பு முறையை மாற்றியமைக்கவும் யாருக்குத் திட்டம் தீட்டுகிறோமோ அவர்களுக்கு அது போய்ச் சேரத் தக்க வகையில் வழிமுறைகளைக் காண இருக்கிறோம். அவருடைய அனுபவத்தின் அடிப்படையிலும், ஆற்றலின் அடிப்படையிலும், அறிவினடிப்படையிலும் இதற்கு வழிமுறைகளைக் கண்டறிந்து சொல்லக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்தப் பணி விரைவில் நடந்து முடியும் என்று நான் நம்புகிறேன்.

சில காரியங்களைச் செய்கிறபோது, எங்களைப் போன்றவர்களுக்கு இருக்கிற சங்கடங்களையும், சிக்கல்களையும் சொல்லியாக வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களும் மக்களும் கேட்கிறபோது, நாங்கள் பதில் சொல்லியாக வேண்டும். ஏறத்தாழ இரண்டாண்டுகளாகப் பதவியிலிருக்கிறீர்கள். இதுவரை நீங்கள் என்ன செய்தீர்கள் என்று [illegible]





கேட்டால், 'என்ன செய்ய முடியுமோ அதைச் செய்தோம்' என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. நாங்கள் எந்த வகையில், எவ்வளவு எச்சரிக்கையோடு செயல்பட வேண்டியிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பிட்ட கறுப்புக் கற்களைப் பற்றிய செய்தி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர் பேசும்போது, கறுப்புக் கற்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவருடைய மகன் ஒருவர். அவர் ஒருமுறை என்னிடம் வந்து, "கறுப்புக் கற்களை எடுத்து ஏற்றுமதி செய்யும் லைசென்ஸ் பல பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கும் அந்தத் தொழிலில் ஈடுபட விருப்பமாக இருக்கிறது. இந்தத் தொழில் செய்வதற்கு அனுமதி கோரி நியாயமான வகையில், சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நான் அனுப்பி வைத்திருக்கிற மனுவைப் பரிசீலித்துப் பாருங்கள். என்னுடைய மனு சட்டதிட்டங்களுக்கு உட்பட்டிருந்தால், நியாயமானது என்று உங்களுக்குப் பட்டால் எனக்கு லைசென்ஸ் கொடுக்க வேண்டும்" என்று என்னிடம் வந்து கேட்டார். அப்போது நான் அவரைப் பார்த்து சாதாரணமாகக் கேட்டேன். "கறுப்புக் கற்களை வைத்துக் கொண்டு தொழில் நடத்தப் போகிறேன் என்கிறாயே, அந்தத் தொழிலில் உனக்கு என்ன கிடைக்கும்?" என்றேன். நான் பதவிக்கு வந்த நேரத்தில் இது நடந்தது. அந்தப் பையன் சொன்ன வார்த்தை என்னை பிரமிக்கும்படி செய்துவிட்டது. "நான் வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டிருப்பேன். மாதாமாதம் இலட்சக் கணக்கில் எனக்குப் பணம் இந்தத் தொழிலிலிருந்து கிடைக்கும்" என்று சொன்னான். எனக்கு ஒரே திகைப்பாக இருந்தது. தரையிலிருந்து வெட்டியெடுக்கப்படும் கறுப்புக் கற்கள் வியாபாரத்தில் வீட்டிலிருந்து கொண்டே மாதாமாதம் லட்ச ரூபாய் சம்பாதிக்க முடியும் என்றால், என்ன நினைப்பது? இந்த லைசென்ஸை எத்தனையோ பேர் வைத்துக் கொண்டிருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதற்குப் பிறகுதான் அவர்களுடைய கணக்கு என்ன என்று அது

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 24

சம்பந்தப்பட்ட கோப்புகளை வரவழைத்துப் பார்த்தேன். யார் யாருக்கு இந்த உரிமம் கொடுக்கப்பட்டிருக்கிறது? யார் யார் இந்தத் தொழிலைச் செய்கிறார்கள், யாருக்கு எவ்வளவு கிடைக்கிறது என்ற விவரத்தையெல்லாம் பார்த்தேன். நேற்று வரை ஏழையாக இருந்தவர்கள் இன்றைக்குக் கோடீசுவரர்களாக மாறியிருப்பதை அறிய முடிந்தது. இவ்வளவு பணமும் அரசுக்கு வர வேண்டியது இன்றையதினம் தனியாருக்குப் போய்க் கொண்டிருக்கிறதே என்று எண்ணித்தான் உடனே நான் ஒரு உத்தரவைப் போட்டேன். இனிமேல் எந்தத் தனிப்பட்டவருக்கும் இத்தகைய உரிமம் கொடுக்கக்கூடாது. அரசே இந்தப் பணியை ஏற்று நடத்த வேண்டுமென்ற முடிவுக்கு வந்தேன். என்னுடைய நண்பரின் மகன் தந்த செய்தியால்தான் இதை என்னால் அறிய முடிந்தது.

இதைப் போலவே அண்மையில் இன்னொரு முக்கியமான குறிப்பையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

அரவக்குரிச்சி அருகில் வெங்கைக் கற்கள் என்று ஒருவகைக் கற்கள் கிடைக்கின்றன. அந்தக் கற்களைத் தமிழகத்திலிருந்து ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். உடனே டாக்டர் சரவணன் அவர்களை அழைத்து இதைப் பற்றி விவரமாகச் சொல்லுங்கள் என்று கேட்டபோது, அவர் சொன்ன கருத்து கொஞ்சம் வயிற்றெரிச்சலாகக்கூட இருந்தது என்று சொல்ல வேண்டும். அவர் சொன்னார், "தற்போது வெங்கைக் கற்களை பொதுவாகக் கண்ணாடித் தொழிற்சாலையில்தான் உபயோகிக்கிறோம். ஆனால் அதில் சில கெமிக்கல்ஸ் இருக்கின்றன. அதற்காகத்தான் இந்தக் கற்களை வெளிநாட்டார் வாங்குகிறார்கள், சாதாரண கல்லுக்காக அல்ல" என்றார். இதுவரை நமக்குக் கிடைத்த தகவல் எல்லாம் இந்தக் கற்களை ஏதோ வெளி நாட்டவர் வாங்கிச் செல்கிறார்கள் என்பது மட்டும்தான். அதில் மிக உயர்ந்த ரகமான கெமிக்கல்ஸ் இருப்பதாக நமக்கு இதுவரை யாரும் சொன்னதில்லை. இதைப் பார்க்கும்போதுதான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்



1979 ஏப்ரல் 24] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

போல், நம்முடைய கனி வளம் எப்படியெல்லாம் வீணாகிறது என்று எண்ண வேண்டியிருக்கிறது. நமது நாட்டுக் கனி வளம் நாட்டுக்குப் பயன்படாமல் யாருக்கெல்லாம் பயன்படுகிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. இதன் காரணமாகத்தான் சில நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட முயற்சிகள் தமிழக அரசுக்கு மட்டுமல்ல, தமிழக மக்களுக்கும் பயன்படும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 5.30)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் டி.அய்.அய்.சி. பற்றிச் சொன்னார்கள். திரு. அனந்த கிருஷ்ணன் அவர்களை அதற்குத் தலைவராகப் போட்டது தவறு என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் அந்த நிறுவனத்திலிருந்து கடன் வாங்கியிருக்கிறாரென்றும், அந்தக் கடனை கட்டாததால் அந்த நிறுவனத்திற்கு அவர் தலைவராக இருப்பது நியாயம் அல்ல என்றும் சொன்னார்கள். உண்மையிலேயே அப்படித்தான் நடந்திருக்குமென்றால், தலைவராக இருக்க அவருக்குத் தகுதியில்லை என்பதை ஒத்துக் கொள்ளுகிறேன். உண்மைகள் வேறுவிதமாக இருந்தால், நாம் அதைப்பற்றிச் சிந்தித்துப் பேசுவது நல்லது என்பது என்னுடைய கருத்தாகும். எனக்குக் கிடைத்திருக்கிற தகவலை இங்கே சொல்லுவது முறையென்று கருதுகிறேன்.

1964 ஆம் ஆண்டில் மைக்ரோ டூல்ஸ் என்ற நிறுவனம் 400 டன் ஃபோர்ஜ்ட் ஹாண்ட் டூல்ஸ் மற்றும் 1800 டன்கள் போர்ஜிங்ஸ் தயாரிப்பதற்காக செக்கோஸ்லோவாகிய நாட்டின் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் காலஞ் சென்ற திரு. இராமசாமி முதலியார் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் முதல் இயக்குநர் குழுவில் 7 உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களில் திரு. அனந்தகிருஷ்ணனும், திரு. ஓபுல் ரெட்டியும் நிர்வாக இயக்குநர்களாக இருந்தனர். முதலில் தொழிற்சாலை ரூபாய் 64.90 இலட்சத்தில்

முடிவடையுமென்று எதிர்பார்க்கப்பட்டது. 1966 இல் இந்திய தாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டதால் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களின் மதிப்பு மற்றும் தொழில் நுட்ப அறிவுக் கட்டணம் ஆகியவைகள் உயர்ந்த காரணத்தால் மொத்தச் செல்வு ரூபாய் 96.97 இலட்சத்தை அடைந்துவிட்டது. மேலும் இந்த நிறுவனம் உற்பத்தி செய்த பொருள்களை சந்தையில் விற்க அதிகச் சிரமங்கள் ஏற்பட்டன. ஆகவே ஆண்டுக்காண்டு இழப்பு அதிகமாகி 1971 ஆம் ஆண்டு நவம்பர் முதல் 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தொழிற்சாலை மூடப்பட்டது. டபிள்யூ.ஜி. போர்ஜ் அண்டு அலைட் இண்டஸ்ட்ரீஸ், பாம்பே, என்ற நிறுவனத்திடம் இந்தத் தொழிற்சாலை 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒப்படைக்கப்பட்டது. அப்போது நிர்வாகத்திலிருந்து திரு. அனந்தகிருஷ்ணன் விலகிக் கொண்டார். அந்த நிறுவனமும், தொழிலாளர் போராட்டம், மின்வெட்டு போன்ற காரணங்களால் தொழிற்சாலையை நடத்த முடியாமல் 1977 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தைவிட்டு விலகி விட்டது. ஆகவே திரு. அனந்த கிருஷ்ணன் அவர்கள் 1973 ஆம் ஆண்டே அதிலிருந்து விலகிச் சென்றுவிட்டார்கள். ஆகவே அந்தக் கம்பெனிக்கும் அவருக்கும் சம்பந்தமில்லை.

31—8—1973-ல் ஃபோர்ஜ் நிறுவனம் எடுத்துக்கொண்ட பிறகு ரூபாய் 66.80 இலட்சமாக இருந்த இழப்புத் தொகை 31—3—1979ல் 144.38 இலட்சமாக உயர்ந்துவிட்டது. தொழிற்சாலையை நடத்தத் தேவையான் நடைமுறை மூலதனம் கிடைக்கும்படி செய்ய முடியாததாலும், அதிகப்படியான இழப்புகள் ஏற்பட்டதாலும் தொழிற்சாலை மூடும்படியாகிவிட்டது. இந்த நிறுவனம் டி. அய். அய். சி. யிடமிருந்தும், மற்றும் அய்.எஃப்.சி.அய்., அய் சி அய் சி அய் ஆகிய நிறுவனங்களிட மிருந்தும் மொத்தம் ரூபாய் 89.28 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளது. மேற்படி நிறுவனங்களுக்கு மைக்ரோ டூல்ஸ் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை ரூபாய் 104-80 இலட்சமாகும்.



மைக்ரோ டூல்ஸ் நிறுவனத்தை மற்ற நல்ல நிறுவனங்களோடு சேர்த்து செயல்பட நிதி நிறுவனங்கள் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. இந்திய தொழில் நிதி நிறுவனம், பொறுப்பாளராக நியமிப்பதற்கு உயர்நீதி மன்றத்தில் விண்ணப்பம் தாக்கல் செய்தது. அதன் பேரில் உயர்நீதி மன்றம் பொறுப்பாளராக ஒருவரை 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நியமனம் செய்துள்ளது. இந்த நிறுவனத்தைக் கலைப்பதற்காக கடன்காரர்கள் தாக்கல் செய்த மனுவின் மேல் உயர்நீதி மன்றம் 3—11—1977-ல் நிறுவனத்தின் சொத்துக்களை எடுத்துக் கொள்ள கலைப்புப் பதிவாளரை நியமனம் செய்துள்ளது. நிதி நிறுவனங்கள் தாங்கள் கொடுத்துள்ள நிதிகளை முடித்துக் கொண்டுள்ளன.

தொழிலாளர்களிடமிருந்து அமைதியின்மை, மின்வெட்டு, தேவையான நடைமுறை மூலதனம் போன்ற தவிர்க்க முடியாத காரணங்களால், தொழிற்சாலை மூடப்பட்டதாகத் தெரிகிறது. வேறு எந்தவித முறைகேடுகளாலும் மூடப்பட்டதாகத் தகவல் இல்லை.

திரு. அனந்தகிருஷ்ணன் அவர்கள் தனிப்பட்ட முறையில் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி பெறவில்லை. மைக்ரோ டூல்ஸ் நிறுவனத்திற்காகத்தான் பெற்றுள்ளார். தங்களுக்குச் சேர வேண்டிய தொகையைத் திருப்பிப் பெறுவதற்காக நிதி நிறுவனங்கள் உயர்நீதி மன்றத்தில் விண்ணப்பம் செய்ததின் பேரில் கலைப்புப் பதிவாளர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

டி. அய். அய். சி. சங்க விதிகளின்படி ஒருவர் நிறுவனத்திற்காகப் பெற்றுள்ள கடன் நிலுவையில் இருந்தால், அவரை இயக்குநராக நியமிக்க தடையேதுமில்லை என்ற விதிமுறை இருக்கிறது. இந்த அளவிலே அரசு இங்கே சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் சொன்னேன். ஒரு தொழிலதிபர், பரம்பரையாக மக்களால் போற்றப்படுகிற குடும்பத்தைச் சேர்ந்தவர், ஏதோ தவறு செய்துவிட்டார் என்ற வகையில் செய்தி தரப்பட்டிருக்கிறது என்பதற்கு நான் இங்கே வெளியிடும் குறிப்பு அடையாளம் காட்டுகிறதே தவிர,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 24

ஏதோ மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் மீது தப்பான எண்ணம் மற்றவர்களுக்கு வரட்டும் என்ற முறையில் புள்ளிவிவரத்தைப் படித்ததாக மற்றவர்கள் கருதக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்கே இன்னுமொரு பிரச்சினை இருக்கிறது. பொதுவாக சேலம் மேக்னசைட் லிமிட்டெட் என்ற நிறுவனத்தில் வேலை நிறுத்தம் செய்தபோது கீழ்க்கண்ட தொழிலாளர்கள் பணியில் அங்கே இருந்தனர் :—

சுரங்கத்தில் வேலை செய்தவர்கள்—2,213 பேர்.

தொழிற்சாலையில் வேலை செய்தவர்கள்—201 பேர்.

ஆக மொத்தம்—2,414 பேர்.

மொத்தத் தொழிலாளர்கள் 2,414 பேர்களில் சுரங்க வேலை சம்பந்தப்பட்ட 2,207 தொழிலாளர்கள் தமிழ் நாடு மேக்னசைட் நிறுவனம் சுரங்கப் பணியை ஆரம்பித்தவுடனே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு சொல்ல விரும்புகிறேன்.

தொழிற்சாலை சம்பந்தப்பட்ட தொழிலாளர்களில் 50 பேர் தமிழ் நாடு மேக்னசைட் புரொடெக்ட்ஸ் என்ற கூட்டு நிறுவனத்தின் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இதற்கு எரிபொருள் கிடைக்காமையும், தொழிற்சாலைக்காக கூட்டு நிறுவனம் நிறுவப்பட தேவையான ஆரம்ப கால அவகாச காலமும் முக்கிய காரணங்களாகும். இவர்களும் சிறிது காலத்திலே பணியில் அமர்த்தப்படுவார்கள்.

அந்தக் கனிவளம் மிகுந்த நிறுவனத்தை அரசே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பியபோது, நஷ்டம்தான் வருமென்று சொன்னவர்களும் இருந்தார்கள். அரசால் ஏற்று நடத்த முடியாது, தனியார்தான் நடத்த முடியும் என்றும்



1979 ஏப்ரல் 24] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

சொன்னார்கள். நான் மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளுகிறேன், நாம் எடுத்துக்கொண்ட அந்த ஐந்தாறு மாதங்களுக்குள்ளே, எல்லாச் செலவுகளும் போக ஏறத்தாழ 40 இலட்சத்திலிருந்து 45 இலட்சம் ரூபாய் வரையில் வரவிருக்கிறது என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நமக்கு குத்தகைத் தொகையாக அவர்கள் கொடுத்த தொகை மிகக் குறைந்தது என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்த வரையில், தொழில் வளர்ச்சி என்பதில் பல்வேறு நிலைமைகளை நாங்கள் சொல்ல முயன்றாலும், சந்தன மரத்திலிருந்து எண்ணெய் எடுக்கக் கூடிய தொழிற்சாலையை இங்கே ஏன் உருவாக்கக் கூடாது என்று கேட்டார்கள். அதற்காகவேதான் நாங்கள் ஆட்சிக்கு

(பிற்பகல் 5.40)

வந்தவுடன் சந்தன மரங்கள் தனியாரிடம் இருந்தால்கூட, அவைகளைக்கூட அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த நிலங்களை, தோட்டங்களையெல்லாம் அரசுக்குச் சொந்தமாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்ற நிலையிலே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றோம்; எடுத்துக்கொள்ள முயன்று கொண்டிருக்கிறோம். சில இடங்களில் எடுக்க முடிகிறது. சில இடங்களில் எடுக்க முடியவில்லை. அந்த இடங்களில் கோர்ட்டுக்குப் போனால்தான், முடியும்போல் இருக்கிறது. அப்படியிருந்தாலும்கூட சந்தன மரங்களையெல்லாம் நாமே நிச்சயமாக எடுத்துக் கொண்டு, பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை இந்த அரசு முடிவாகக் கொண்டிருக்கிறது. அதை எடுத்துக்காட்டும் வகையில்தான் நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதிகமாக நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று கருதி அவசியமானவைகளை மட்டும் படிக்கலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். இங்கே ஒரு கருத்தை வெளியிடும்போது,

மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசுகின்றபோது, குறிப்பாக திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், "மத்திய அரசு நமக்குத் தேவையானவைகளைச் செய்வதற்குரிய உரிமைகளைத் தந்தாக வேண்டும், அதை நாம் பெற்றாக வேண்டும், அதற்காகத்தான் மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்டோம்" என்று குறிப்பிட்டார்கள். ஒரு வகையில் இப்போது சொன்னதுபோல, இந்த அதிகாரங்களைப் பெறுவதற்காகத்தான் மாநில சுயாட்சி என்று பெயர் இருக்குமானால், அதை இந்தத் தமிழக அரசு வேண்டாம் என்று சொல்லப் போவதில்லை. தமிழ் நாடு இந்தப் பிரச்சினை வந்தால் வேறுவிதமாக மாறுமோ என்பதற்கு மாறாக, நாம் கடமைகளைச் செய்வதற்கு உரிமைகளை நமக்குத் தந்தாக வேண்டுமென்று கேட்பதிலே நாம் ஒருமித்த கருத்துடையவர்களாக இருக்கிறோம் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அப்படிப்பட்ட நிலைமையில் தமிழக அரசு இந்தியப் பேரரசை வற்புறுத்தி, நமக்குத் தேவையானவைகளை அவர்கள் செய்துதர வேண்டும் என்று கேட்கின்ற வகையில் முயலும். அந்த முயற்சியிலே எப்படிப்பட்ட விபரீதங்கள் ஏற்பட்டாலும்கூட, தமிழக மக்கள் நன்மைகள் பெறுவதற்கு இந்த அரசு எந்தவிதமான தயக்கமும் காட்டாமல் அதைச் செய்யும் என்பதை இந்த அரசின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நார் எடுப்பது பற்றிய பிரச்சினை வந்தது. திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து தென்னை மட்டையிலிருந்து நார் எடுப்பதற்கு கேரளத்திற்குப் போகிறது என்று வெளியிட்டார்கள். தென்னை மட்டைகளை இங்கேயிருந்து வாங்கிக்கொண்டு செல்கிறார்கள். இந்த நார் எடுக்கும் தொழிற்சாலைகள் அங்கே இருக்கின்றன. மாவட்ட தொழில்துறை அலுவலர்கள் கூறியதன் பேரில், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து மற்ற மாவட்டங்களுக்குத் தென்னை மட்டைகளைக் கொண்டு செல்வதற்கு அரசு அனுமதியில்லை என்ற நிலைமையைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியும் வேண்டுமென்றால் மாவட்ட ஆட்சியாளரின் அனுமதி தேவை என்று ஆணையிட்டுள்ளது. இதற்குக் காரணம் கன்னியாகுமரிக்குக்





கொண்டுபோகிறார்கள் என்று சொல்கிறார்கள். அங்கிருந்து வேறு வழியில் கேரளத்திற்கு அது கடத்தப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதன் காரணமாக இங்கே பயன்பெறவேண்டிய நிலைமை மாறி, அந்த மூலப் பொருள் கேரளத்திற்குச் சென்று அங்கே அவர்கள் நல்ல பயன் அடைகின்றார்கள், இங்கேயிருப்பவர்கள் ஏமாந்துகொண்டிருக்கிறார்கள். இரால் மீன்களை வாங்கி விற்று எப்படி பணம் பெறுகின்றார்களோ அதுபோல, தமிழகத்திலேயே அந்தத் தொழிலைச் செய்வதற்கு வழி செய்ய வேண்டும். நம்முடைய தமிழகத்திற்குள்ளேயே அந்தத் தொழிலைத் தொடங்க வேண்டுமென்ற நிலையிருக்கிறது. அதற்கு இந்த அரசு பணியாற்றிக் கொண்டிருக்கிறது. இரால் போன்றவைகளைப்பற்றி விளக்கம் தந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கிறது. முன்பெல்லாம் இங்கே இருக்கின்ற மீனவர்கள் கஷ்டப்பட்டு அதைப் பிடிப்பதும், இல்லையானால் அங்கேயிருந்து இயந்திரப் படகுகளை இங்கே கொண்டுவந்து இங்கேயிருந்து பிடித்துக்கொண்டு போய் அவர்களுடைய ஊரிலே வைத்துப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பி பணமாக்கிவந்தார்கள்; வெளிநாட்டுச் செலாவணி பெற்று கோடீஸ்வரர்களாக விளங்கி வருகின்றார்கள். நம் மீனவர்கள் இங்கே ஏழைகளாக இருக்க வேண்டுமென்ற நிலை இருக்கின்றது. அதைத் தடுக்க வேண்டும் என்ற அளவில் மிகப் பெரிய அளவில் அது வெளியே போவதைத் தடை செய்வது மட்டுமல்லாமல், இந்த அரசே இரால் மீன்களைப் பிடிக்க உதவும் படகுகளைக் கொடுத்து குப்பத்திலே இருக்கின்ற மீனவர்கள், அந்த இரால் மீன்களை சொந்தமாகவே பிடித்து, அதை இறக்கி எடுத்து அதிலே வருகின்ற லாபத்தை அவர்கள் அடையவும், எந்தெந்த வகையிலே அவைகளைப் பிடித்து பதப்படுத்தி வேறிடங்களுக்கு அனுப்பி பணம் பெற முடியுமோ அந்த அளவுக்குப் பணம் பெறுவதற்கு வழிசெய்து, அதிலிருந்து கிடைக்கின்ற மிகப் பெரிய லாபத்தில், ஒரு விழுக்காடு ஒதுக்கி, அந்தப் பகுதி லாபத்திலிருந்து மீனவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்வதற்கு எண்ணியிருக்கிறோம் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 24

காகிதம் வைக்கோலிலிருந்தும் தயாரிக்கலாம் என்பது பெரியவர்களுக்குத் தெரியும். அதைச் சிறு தொழிலில் பயன் படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன். எத்தனை லட்சம் பேர் களுக்கு வேலை கொடுக்க முடியும்? 3 ரூபாய் அரிசியும் கொடுப் போம் என்று சொல்லியிருக்கிறார்களே, அதை எப்படிச் செய்யப் போகிறார்கள் என்ற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமானால், எனக்குத் தெரிந்த அளவில் சொன்னால் புள்ளிவிவரம் தெரிந்த வர்கள் ஒத்துக்கொள்வார்கள் அல்லது தவறு இருந்தால் திருத்துவதன் மூலம் நான் அதை நல்ல செயல் முறைக்குக் கொண்டு வரமுடியும். நான் விமரிசனங்களுக்கு உள்ளாகி நல்ல யோசனைகள் கிடைக்கும் என்பதால் சொல்கிறேன். நாம் சாதாரண மனிதனாக நின்று கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

விவசாயிகள் போன்றவர்களைப் பற்றி நமக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு இந்த விளம்பரம் வந்திருக்கிறது. விவசாயத் தொழிலாளர்கள் ஒரு ஆண்டிலே எத்தனை நாட்கள், மாதங்கள் வேலை செய்கிறார்கள் என்று பார்த்தால், அவர்கள் இரண்டு மாதங்கள்தான் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு 8, 9 மாதங்களுக்கு வேலை இருப்பதில்லை. அப்படி இருப்பவர்கள் எப்படிப் பிழைக் கிறார்கள்? பதில் சொல்ல முடியாது என்றாலும், அவர்கள் வேலை ஏதாவது செய்து பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக என்று சிறு சிறு தொழில்களை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்து அவர்களை யெல்லாம் அந்தப் பணிகளிலே ஈடுபடுத்தி அவர்களுக்கு நல்ல வாழ்வைக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தோமானால், அதனால் அவர்களுக்குக் கிடைக்கின்ற தொகை குறைவாக இருந்தாலும்கூட ஓரளவுக்காவது அவர்களுக்கு நிச்சயமாக வருமானம் வரும் என்று நம்பிக்கை ஏற்படும். அந்தத் தன்மையை உருவாக்க முடிந்தால் அதுவும் நல்லது அல்லவா என்பதை இங்கே இந்த நோக்கில் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1979 ஏப்ரல் 24] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

எல்லோருக்கும் வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்று விரும்பு கிறோம். அதைப்பற்றிப் பேசும்போது, திரு. சங்கரலிங்கம் அவர்கள் நல்ல உள்ளத்தோடு சொன்னார்கள். அடித்தளத்திலே உள்ளவர்களுக்கு சுண்ணாம்புக் கல்லில் விடா என்று சொன் னார்கள். முனபெல்லாம் குற்றம் செய்தவர்களைச் சுண்ணாம்புக் காளவாயில் தள்ளுவது என்ற கொடுமையான தண்டனை கொடுப் பார்களே, அதுபோல அந்தக காளவாயை உற்பத்திச் செய்யாதீர் கள் என்று சொல்லி, அவர்களுக்கும் சிமெண்டிலேயே கட்டிக் கொடுங்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன். கி.பி. 18, 19 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட திருமலை நாயக்கர் மஹாலைப் பார்த்தால், அது சிமென்டால் கட்டப்பட்டதல்ல என்பது தெரிகிறது. என்னைவிட அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். மண்ணைக்கொண்டு, காரையைக் கொண்டுதான் அந்தக் கட்டிடத்தைக் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கட்டிடத்தைப் பற்றி எண்ணிப் பார்த்தால், இவ்வளவு பெரிய கட்டிடங்களை யெல்லாம் கட்டியிருக்கும்போது, சுண்ணாம்பில் இரண்டு மாடிக் கட்டிடங்கள் நம்மால் கட்டிக்கொடுக்க முடியாதா, அது அந்த அளவுக்கு உறுதியாக இருக்காதா என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு பிரச்சினையைப்பற்றி நாம் எப்போதுமே சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதைப்பற்றி நான் என் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அரிஜன நலத் துறை என்ற பெயரால் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னால், அந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு தொழில்கள் அங்கு உருவாகின்றன. அப்படி வீடுகள் கட்டுவதும் ஒரு தொழிலாக அங்கே ஆகிவிடுகின்றது. அந்த வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய செங்கற்கள் உருவாக்கும் தொழில் ஏற்படுகிறது. அந்த முறையில் தொழில்கள் தோன்றுகின்றன. தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கின்றது. இதைப் போன்று மற்ற தொழில்களையும் நாம் கணித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். வேறுபாடற்ற நிலையில் நாம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க முடியும் என்று நாம் சில திட்டங்களை ஏற்றுக்கொண்டால், அது நாட்டு

நல்லதாக இருக்கும். 25 ஆண்டுகளுக்குப் பின்னால் பெரிய பிரச்சினையாக வர இருப்பதை நாம் இப்போதே தடுத்தவர்கள் ஆவோம் என்பதை நான் பணிவுடன் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

(பிற்பகல் 5-50)

5,000, 6,000, 7,000 ரூபாய் செலவில், அரிசன நலத்துறை மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. ஆனால் பக்கத்திலுள்ள விவசாயிகளுக்கு, அதே நிலையிலுள்ள மக்களுக்கு எந்தவிதமான வீடுகளும் இல்லை. நாம் அதையும் செய்வதில்லை. ஆனால் அந்த நிலையில் பெரும்பான்மையான மக்கள் அந்தப் பகுதியில் இருக்கிறார்கள். வன்னியர் என்றாலும் சரி, நாயுடு என்றாலும் சரி, நாயக்கர் என்றாலும் சரி, முதலியார் என்றாலும் சரி, ரெட்டியார் என்றாலும் சரி, யாராக இருந்தாலும், தாழ்த்தப் பட்டவர்கள் அல்லாதவர்கள் என்று பார்த்தீர்களானால், அவர்கள் மெஜாரிட்டி என்ற அளவிற்கு வந்துவிடுவார்கள். அந்தக் குடியானவ மக்கள், இளைஞர்கள், 10 ஆண்டுகளுக்குப் பிறகு, தங்களுக்குப் பக்கத்திலேயே, 6,000, 7,000 ரூபாய் மதிப்புள்ள வீடுகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் இருப்பதைப் பார்த்துவிட்டு, எங்களுக்கு மட்டும் வீடுகள் இல்லையே, நாங்கள் ஏன் வரி கட்ட வேண்டுமென்று கேட்டால், நாடு என்னவாகும் என்பதைப்பற்றி, நான் பதவி ஏற்றவுடன், முதல் கூட்டத்திலேயே பேரவையில் பேசினேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் யாருக்காகக் காரியங்களைச் செய்கிறோமோ, அவர் களுக்குத் தீங்கு ஏற்படுத்தும் நிலைமையை ஏற்படுத்தாமல் அவர்களைக் காப்பாற்றியாக வேண்டும். அவர்களுக்கு வீடு கிடைத்தாக வேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள், சமூகத்தால் தூக்கி எறியப்பட்டவர்கள், சமூகத்தில் உயர்ந்தவர்கள் என்பவர் களால் அழுத்தி, மிதிக்கப்பட்டவர்கள் சமுதாயத்தில் உயர்ந்தாக வேண்டும், அவர்களுக்கு நல்வாழ்க்கை கொடுத்தாக வேண்டும். அதே நேரத்தில் பொருளாதாரத்திலே அதே நிலையில் இருக்கிற மற்றவர்களுக்கும் நாம் அந்தக் காரியங்களைச் செய்து கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோமென்பதையும் தெரிவித்துக்கொள்ள





விரும்புகிறேன். இந்த முறையில் நாம் காரியங்களைச் செய்யாமலிருந்தால், நமக்குப் பின்னால் பெரிய பிரச்சினைகள் ஏற்படுமென்பதையும் சொல்லிக்கொள்கிறேன். நாங்கள் ஐந்து ஆண்டுகள் இருந்துவிட்டு, சென்றுவிட்டால், இன்னொரு கட்சி ஆட்சிக்கு வரும். அது 5 ஆண்டுகள் இருந்த பிறகு, இன்னொரு கட்சி ஆட்சிக்கு வரும். 10 அல்லது 20 ஆண்டுகளுக்குப் பிறகு நாம் நல்ல நோக்கம் என்று நினைத்துச் செய்கின்ற தவறுகளால் பாதகம் விளைந்தால், நிலைமை என்னவாகுமென்பதைச் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும். ஆகவே எல்லோருக்கும் வீடு கொடுப்போம், எல்லோருக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுப் போம் என்று சொல்லும்போது, அதிலே பொதுத்தன்மை மட்டு மல்லாமல், பொறாமை காரணமாக ஒருவர்மீது மற்றொரு வருக்கு ஆத்திரம் வராத வகையில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். லட்சம் வீடுகள் வீடுகளைக் கட்டினால் போதாதா என்பார்கள். 10,000 வீடுகளைக் என்று சொல்லுகிறோம். நம்முடைய ஆசை அது மட்டுமல்ல. 10 கட்டினால் போதுமென்று சொல்லலாம். நம்முடைய நோக்கம், எவ்வளவு விரைவில் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க நாம் முயற்சிக்கிறோமோ அந்த அளவிற்கு அதனால் தமிழகத்திற்கு நன்மை பயப்பதாக இருக்குமென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். நாம் செய்யும் தவறுகள் நம்முடைய சந்ததியினருக்குத் தலைவலி யாக வரக்கூடாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன். ஆகவே தமிழக அரசு அப்படிப்பட்டவைகளை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, கட்ட வேண்டிய நிலையில் இருப்பவைகளை முடித்துவிட்டு. இனிமேல் செய்யப் போகிறவைகளையெல்லாம் வேறுபாடு இன்றி, விருப்பு வெறுப்பு தோன்றாத அளவிற்கு, எல்லோரும் இணைந்து வாழக்கூடிய முறையில், வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று விரும்புகிறது.

பனை மரத்தை எடுத்துக்கொள்வோம். "பனைமரத்தில் ஏறுகிறவர்களுக்கு ஏதாவது பாதுகாப்பு வேண்டாமா? மது வேண்டாமென்று சொல்லுகிறார்கள், எனவே தென்னை மரத்தை வைத்துக்கொண்டு பிழைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு என்ன வழி?" என்றெல்லாம் கேட்டார்கள். தென்னை மரத்தை,

பனைமரத்தைப் பயன்படுத்தி, எத்தனையோ தொழில்களை உருவாக்கலாம். முன்பே ஒரு முறை சொல்லியிருக்கிறேன் என்று நினைக்கிறேன். நுங்கைப் பதப்படுத்தி, அதைத் தேனிலே ஊறவைத்து, டின்களிலே பக்குவமாக அடைத்து, வெளி நாடுகளுக்கு அனுப்பினால், அதற்குரிய வரவேற்பு வேறு எதற்கும் இருக்காதென்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி விளம்பரம் செய்தாக வேண்டும். இங்கே எதைப் பற்றியும் விளம்பரம் சரியாகச் செய்வதில்லை என்று உறுப்பினர்கள் சொன்னார்கள். விளம்பரம் போதாது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்வேன், விளம்பரம் தேவைதான். ஆனால் முடிவு பெறாத ஒன்றைப் பற்றி விளம்பரம் செய்துவிட்டு, அது முடிவு பெறாமலேயே போய்விட்டால், அது எவ்வளவு பெரிய வேதனையைத் தருமென்பதை மறந்துவிடக்கூடாது. இப்போது நிறைய புகார்கள் வருகின்றன. இங்கேகூடச் சொன்னார்கள். மூன்றாவது மாடியிலே இருக்கின்ற அறையிலே எப்போதும் ஒழுகிக் கொண்டே இருக்கிறது, தண்ணீர் விழுந்துகொண்டே இருக்கிறதென்று சொன்னார்கள். கட்டியவர்கள்மேல் குற்றமா, பொறியியல் நிபுணர் செய்த குற்றமா அல்லது சிமெண்ட் பூசினாரே, அவர் சரியாகப் பூசவில்லையா அல்லது சிமெண்ட்டில் என்ன கலந்தார்கள், எவ்வளவு கலந்தார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. நமக்குத் தெரிந்த நிலையில் கட்டப்பட்ட வீடுகளே இந்தச் சூழ்நிலையில் இருக்குமானால், நாம் கட்டி முடித்துவிட்டு, நமக்குப் பிறகு வருகின்றவர்கள் வாழ முடியாமல் போனால் என்னவாகுமென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே இப்படிப்பட்ட தொழில்களில் நிச்சயத் தன்மை பெற்றவர்களைக் கொண்டு, அந்தப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். அரசு மேற்பார்வையில் செய்தால் ஊழல் வந்துவிடுகிறது. அது தெரியாததல்ல. பொதுப் பணித் துறை என்று சொன்னாலே ஊழல் என்ற அதற்கு மறு பெயர் இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது கொஞ்சம் கொஞ்சமாக அங்கே ஊழல் குறைந்திருக்கிறது. பொதுப் பணித் துறையிலுள்ள பெரிய கட்டடங்கள் என்று சொல்லப்படுகின்ற [illegible] அமைச்சரவர்களின் பொறுப்பிலே இருக்கிறது. எனவே கிராமப்



புற வீடுகள் குறித்த கெட்ட பெயர்களெல்லாம் அவரைப் பாதிக்காது. அது திரு இராசா முகமது அவர்களுக்குப் போய்ச் சேரும். கிராமப்புறங்களில் கட்டியிருக்கின்ற கட்டிடங்களுக்கு அவர்தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் கிராம மறுமலர்ச்சி அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஒரு தொழிலைச் செய்வதற்கு முன்வரும்போது, எந்தெந்த நிலைமைகளில் நாம் நன்மை செய்ய முடியுமென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு 4 லட்சம் பனை மரங்கள் இருக்கின்றன என்றால், அதற்கு ஒன்றுமே செய்வதில்லை. ஆனால் அதைப் பயன்படுத்திக்கொள்ள எந்தெந்த வகையில் முயற்சி செய்திருக்கிறோம் என்று பார்க்கும்போது, அவற்றைச் சரிவரப் பயன் படுத்திக்கொள்ளவில்லை என்ற நிலைதான் இருக்கிறது. அவற்றைப் பயன்படுத்தி, எத்தனையோ லட்சக் கணக்கான நண்பர்களுக்கு தினமும் தொழில் கொடுக்க முடியுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைச் செய்ய முடியும். அந்த வகையில் திட்டமிட்டிருக்கிறோமென்பதையும், அதைச் சரிவரச் செய்ய முடிந்தால் பனைமரம் என்று சொல்லுகிறார்களே, எதற்கும் உதாவது என்பதைக் குறிக்க அதைக்கூட, தங்கமாக, வைரமாக, பிளாட்டினமாக மாற்ற முடியும் என்பதையும், அந்த அளவிற்கு அந்த மதிப்பை உயர்த்த முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இந்த நேரத்தில் சொல்வேன், வெளி நாடுகளில் சில இடங்களில் இரால் என்ற உணவுப்பொருளை விருந்துகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட விருந்துகளுக்கு மிக உயர்ந்த பெயர். இரால் வைத்துத் தருகிற உணவு என்று அந்த விருந்தைப் பாராட்டிப் பேசுகிறார்கள். ஆனால் இங்கே அதைப்பற்றிக் கேள்வி கேட்பார் இல்லை, 1 ரூபாய், 2 ரூபாய் என்ற அளவிற்குத்தான் அது விற்கப்படுகிறது. அங்கே அது கிடைப்பதில்லை. அங்கே அதற்கு விலை, நான் கேட்டது உண்மையாக இருக்குமென்றால், குவைத்தில் ஒரு பெரிய இரால் 600 ரூபாய் விலை என்று சொன்னார்கள். இவ்வளவு பணமும் எங்கு போகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இதுவும் தொழில்தான். நம்மைப் பொறுத்தவரையில்,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 24

நாம் நடக்கின்ற நடை பேசுகின்ற பேச்சு இவைகளிலேகூட தொழில் இருக்கிறதென்று நான் நம்புகிறேன். நாம் நடக்கின்ற பாதையை ஒழுங்காக வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், அதைச் செப்பனிடுபவர்கள் ஒரு தொழிலைச் செய்கிறார்கள் என்று பொருள். ஆனால் அந்தத் தொழிலைச் செய்ய விஞ்ஞான ரீதியிலான கருவிகள் இல்லை. கையால் இருக்கும் உருளையைப் பயன்படுத்துவதை நாம் பார்க்கிறோம். தொழிலாளர்கள், பெண்கள், தாய்மார்கள் அதை இழுக்கிறார்கள். அப்படி இழுக்கும்போது, தவறி அதன்கீழ் விழுந்து, நசுங்கியதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலைகளிலே மேல் நாடுகளைப் பார்க்கும்போது, நம்மிடம் உள்ள கனி வளம் தேவையான அளவிற்கு மேலேயே இருக்கிறது என்பதையும், அதை அரசுக்குச் சொந்தமாக்கி, அதை மற்றவர்கள் எடுத்துக் கொண்டு போக விடாமல், தமிழ் நாட்டிற்குச் சொந்தமாக்கி, தமிழர்கள் அதைப் பயன்படுத்தும் வாய்ப்புகளை உண்டாக்கினால், நிச்சயமாக இந்த நாட்டில் பல கோடிக் கணக்கான மக்களுக்குத் தொழில் கொடுக்க முடியுமென்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-00)

இன்று பேசி விட்டு நாளையதினம் உங்களைப் பார்க்க முடியாத நிலையில் நான் இல்லை. நீங்களும் கேட்க முடியாத நிலையில் இல்லை. சொல்லியதை 2 ஆண்டுகளுக்குப் பிறகும் நீங்கள் திருப்பிக் கேட்க முடியும். 2 நாட்களுக்குப் பிறகு கூட கேட்க முடியும். 3 ஆண்டுகள் முடிந்த பிறகு மக்களே கேட்க முடியும். நிலைமைகளை எல்லாம் நாம் சிந்தித்து கிராமப்புனருத்தாரணம் என்று சொல்லுவார்கள், அந்த அடிப்படையில் கிராம மறுமலர்ச்சியை ஏற்படுத்தினால், நகரங்களில் இருக்கக்கூடிய வசதிகளை கிராமங்களுக்கும் கொண்டு வருவதில் ஈடுபட்டால் தான், நம்முடைய பொறுப்பு அதிகமாகும்.

முதலிலே சென்னையிலே ஓடுகின்ற கழிவு நீரை ஒழுங்குபடுத்தி குளத்திலே கலக்காமல் கடலில் கலக்கச் செய்கின்ற ஒரு பெரிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. ஒரு தொழிலைப் போல் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கிறது. குறைந்தது 40 அல்லது 50 கோடி ரூபாய் செலவிட்டால்தான்,



[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

1979 ஏப்ரல் 24]

அதைச் செய்ய முடியும். அப்படிச் செய்யாவிட்டால் நல்ல தண்ணீர் குழாயுடன் அது சேர்ந்து விடும். 50 அல்லது 60 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டது. அந்தக் கழிவு நீர் குடி நீருடன் கலத்தால் அதன் காரணமாக நோய் ஏற்பட்டு, அது தொற்று நோயாக மாறினால், இந்த நாட்டிலுள்ள எத்தனை பேர்களுடைய அழிவுக்கு அது காரணமாக அமைந்து விடும் என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

வீடு கட்டித் தரும் திட்டம், குடி நீர்த் திட்டம் இவைகள் எல்லாம் தொழில்கள்தான். சிலருடைய உள்ளத்தில் தொழில், தொழில் என்று நினைக்கின்றபோது நூற்பாலை தெரிகிறது. சிலருக்கு வேறு சில தொழில்கள் தெரிகின்றன. ஒரு சாரார் தொழில்கள் என்று எதைக் கருதுகிறார்களோ அதை மற்றவர்கள் தொழில் என்று கருதுவதில்லை. மூக்குக் கண்ணாடி தயாரிப்பதும் ஒரு தொழில்தான், அதைப் பெரிய தொழிலாகச் செய்கிறார்கள். அதுமாதிரி உள்ள தொழில்களை பெரிய தொழில்களாகச் செய்வதுபோல் நாம் சிறிய சிறிய தொழில்களாகவும் செய்ய முடியும். அதுமாதிரி மாற்ற வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பஞ்சாப் மாநிலம் சிறு தொழில்கள் மூலம் வளர்ச்சியடைந்திருக்கிறது, அது போல் நாமும் செய்தால் என்ன என்று கேட்டார்கள். குஜராத்தில் கூட சிறு சிறு தொழில்களை ஆரம்பித்து விட்டார்கள் நாம் இன்னும் பின்னால்தான் இருக்கிறோம். நம்முடைய கிராமங்களுக்கும் சிறு தொழில்கள் போக வேண்டுமென்று நாம் சொன்னால் சிலர் போவதாவது, வளர்வதாவது என்று கேட்டால், நம்பிக்கை போய்விடுகிறது. யார் என்ன சொன்னாலும், நாங்கள் செய்வது என்ற துணிவில் இருக்கிறோம். அந்த வகையில் எங்களுடைய எண்ணத்தை வெகு விரைவில் சாதாரண அளவில் இன்றையதினம் சாப்பாட்டுக்குக்கூட வழியில்லை என்று சொல்லாமல், இந்த அளவாவது சாப்பிடுகிறோம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு வருமானம் வரக்கூடிய அளவுக்கு தொழிலைக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஏதாவது கேள்வி வரும் என்று எண்ணுகின்றேன். அப்படி வந்தால், இங்கு

என்னென்ன விவரங்கள் இருக்கின்றனவோ அவற்றைப் படித்துக் காட்டி விடுகிறேன் என்று சொல்லி, அவை முன் வைக்கப் பட்டுள்ள தொழில் துறை குறித்த கொள்கைக் குறிப்பை அவை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு அமைகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கம் தந்து பேசியிருக்கிறார்கள். சில விவரங்களை மட்டும் நான் அவருடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். காகித ஆலைத் திட்டம் எங்கே என்று நான் கேட்டதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருடைய பதிலில் குறிப்பிட்டார்கள். நான் கேட்டது அதுவல்ல. காகித ஆலைத் திட்டத்திற்கு தேவையான பொருள்கள் இறக்குமதி செய்வதற்கு ஒருங்கிணைந்த விண்ணப்பம் ஒன்றை மத்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். 3 ஆண்டு காலத்தில் திட்டம் முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். 3 ஆண்டுக்குள்ளேயாவது அது முடிவடையுமா என்ற அடிப்படையில்தான் கேட்டேன்.

இரண்டாவதாக தொழில் அதிபர் குடும்பத்தில் பிறந்த ஒருவரைக் குறை கூறுவதாகச் சொல்லவில்லை. கடந்த ஆண்டு இப்படி ஒரு குற்றச்சாட்டு வந்தபோது, அவரைப் பதவியிலிருந்து விலக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சித்தார்கள். 1965ஆம் ஆண்டிலே அவர் கடன் வாங்கியிருக்கிறார் என்று நான் சொன்னதைத்தான் அவர்களும் சொன்னார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மீண்டும் சொல்கிறேன் நிறுவனம் வாங்கியிருக்கிறது. அவர் வாங்க வில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பொதுவாக 'லிமிட்டெட் கன்சர்ன்' என்று சொல்லக் கூடிய பப்ளிக் பிரைவேட் செக்டர் அன்டர்டேக்கிங்குகளுக்கு அரசு கடன் கொடுக்கிறது. அவர் எம். டி. என்றால் அவர் தான் நிர்வாகத்தில் பொறுப்பேற்று



அதை நடத்திக்கொண்டிருக்க முடியும். அவர் அப்படித்தான் பொறுப்பேற்றுக்கொண்டு நடத்தியிருக்கிறார். நஷ்டத்தினால் அது மூடப்பட்டிருக்கிறது. பிறகு வேலையிலிருந்து விலக்கப் பட்டார். விலக்கப்பட்ட ஒருவரை நியமித்திருக்கிறார்கள். எனக்கு அதில் ஆட்சேபணை இல்லை. ஆகவே தான் இப்படி நடந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

மூன்றாவதாக ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கொடுப்போம் என்று சொன்னார்கள். அரசு 1,30,000 பேருக்கு வேலை கொடுத்திருக்கிறது. வேண்டுமானால் அழைத்துச் சென்று காட்டுகிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதலமைச்சருக்கு நிறைய வேலை இருக்கும். தவிரவும் நான் அவ்வாறு வருவதாக இல்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புள்ளி விவரத்தைச் சொன்னார்கள். அதிகாரிகள் கொடுக்கின்ற புள்ளிவிவரத்தைப் பற்றி அவர்களுக்குப் போகப் போகத்தான் தெரியும். நான் கேட்டபடி, இந்த ஆண்டும் 1 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு எந்தெந்த இடத்தில் வேலை கொடுத்திருக்கிறது என்கிற விவரத்தைக் குறித்து இந்த அவையில் முதலமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுத்தால், முதலமைச்சர் சொல்லுகின்ற எந்த நிபந்தனையையும் நான் ஏற்று கட்டுப்படத் தயாராக இருக் கின்றேன். அப்படி இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு தரக்கூடிய ஒரு வாய்ப்பு தமிழகத்தில் கடந்த காலத்தில் தரப்படவில்லை.

நான்காவதாக திராவிட முன்னேற்றக் கழகம் கேட்பது, நான் குறிப்பிட்டது போல், இந்த மாநிலம் மத்திய அரசிடமிருந்து இன்னும் அதிக அதிகாரம் பெற வேண்டுமென்கிற கருத்தினைத் தான். தனி மாநிலமாகப் பிரிகிற உரிமையை திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** ஒரு சிறிய குறிப்பினை மட்டும் தருகிறேன். பிறகு வாய்ப்புகள் கிடைக்கின்றபோது முழு விவரத்தையும் தருகின்றேன். பட்டுத் தொழிலின் மூலம் 30 ஆயிரம் பேர், திப்பெட்டித் தொழிலின் மூலம் 5 ஆயிரம் பேர், மாவட்டத் தொழில் மையங்களின் மூலம் 18,400 பேர், மாவட்ட சிறு தொழில் பதிவுகள் மூலம் 1,800 பேர், கதர் மற்றும் கிராமத் தொழில் மூலம் 23,165 பேர், சிட்கோ நிறுவனத்தின் மூலம் 20,942 பேர், ஆக மொத்தம் 1,15,507 பேர் வேலை வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள்.

இவை தவிர தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் 5,400 பேர், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மூலம் 1,480 பேர், தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் மூலம் 1,000 பேர், தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தின் மூலம் 310 பேர். ஆக மொத்தம் 8,190 பேர் வேலை வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். இவை சென்ற ஆண்டுக் கணக்கு. இதுபற்றி இன்னும் விரிவாக விவரம் தர வேண்டுமென்றால், நான் பிறகு பெற்று தருகிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** தலைவரவர்களே, வேண்டுமென்றே குற்றம் சொல்வது ஒரு சமாச்சாரம். உண்மையிலே நடைபெறவில்லையா என்று கேட்பது வேறு சமாச்சாரம். நான் உண்மையிலேயே நடைபெற்ற ஒரு சம்பவத்தைப்பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன். நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 130 வீதம் வாங்குவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று மத்திய அரசை தமிழக அரசு கேட்டிருக்கிறது. அவர்கள் அனுமதி கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். இவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டு நெல் உற்பத்தி செய்கிறார்கள். தங்களுக்கு விலை கட்டுப்படி ஆகவில்லை என்று விலையை உயர்த்தும்படி கேட்கிறார்கள். கோதுமைக்கு நல்ல விலையை வடக்கே கொடுக்கிறார்கள். நெல்லுக்கு அப்படிக் கொடுக்கவில்லை. சர்க்கார் கட்டளையிடுகிறார்கள். அந்தக் கட்டளை நல்ல யோசனை தான். அவர்கள் கேட்கிற கோரிக்கையை அரசு நிறைவேற்ற முன்வர வேண்டும்.





**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினருடைய எண்ணத்தைச் சுருக்கமாகச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** பனை மரம் முளைக்க வேண்டுமென்றால், ஓலையைக் கட்ட வேண்டும் அல்லவா ? பனை மரத்தை உண்டாக்க வேண்டும் என்று சொன்னார்கள். நம் முடைய நாடு முழுவதும் முளைக்க வைத்து அதிலிருந்து வருகின்ற வருமானத்தைப்பற்றிப் பிரசங்கம் பண்ணச் சொல்கிறோம். அது மத்திய அரசின் திட்டம். எங்காவது போட்டால், காவல் காக்காமல், தண்ணீர் ஊற்றாமல் தன்னாலே வருமா ? 10 லட்சம் கொட்டையை மண்ணிலே போட்டு, அது மரமாகி, நுங்கு வெட்டி, ஓலை வெட்டி பிஸினஸ் செய்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** இப்போதே 4 லட்சம் மரங்கள் இருக்கின்றன என்று கணக்கு இருக்கிறது.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஏற்கனவே இருப்பதைப் பற்றியல்ல. ஏராளமாக உண்டாக்கினால் காப்பாற்ற முடியாமல் போகிறதே என்றுதான் சொல்கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி:** இன்றைக்குப் பெரிய தொழிற்சாலைகள் சில நகரங்களில் இருக்கின்றன. பின்தங்கிய பகுதிகளை, கிராமங்களை, 'அடாப்ட்' செய்துகொண்டு அங்கே புதிய தொழிற்சாலைகளை உருவாக்குகின்றபோது, அதற்கான வரிச் சலுகைகளை -- மத்திய அரசு, அவர்கள் ஆரம்பிக்கும் தொழில்களுக்கு இன்கம்டாக்ஸ் விலக்குக் கொடுக்கிறார்கள் --- மத்திய அரசு வழங்குவதுபோல் சலுகை வழங்கிய பின்தங்கிய பகுதிகள் முன்னேற்றம் அடைய நம்முடைய அரசு வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** கிராம வருமானத் திட்டத்தின்கீழ் எந்தெந்தத் தொழிலதிபர் இங்கே வந்து இது போன்ற தொழிலை ஆரம்பிக்கிறார்களோ அவர்களுக்கு

அது போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதையும், வரி விலக்கு அளிக்கப்படும் என்பதையும் அது 3 ஆண்டுகளா அல்லது 5 ஆண்டுகளா என்பதையும் விரைவிலே அறிவிக்கின்றன. அது மட்டுமல்ல, இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்கிறேன். புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பவர்களுக்கு மூலப் பொருட்கள் கிடைப்பதற்கு இந்த அரசு உதவிகரமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 1972-73 மற்றும் 1973-74 ஆம் ஆண்டுகளுக்கான கூடுதல் செலவிற்கான அறிக்கைகளின் மீதான விவாதம் எதும் இல்லை. 1979ஆம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா பேரவையிலிருந்து இன்னும் வரவில்லை. வந்தபிறகு நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

**பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.**

(பிற்பகல் 0.10)



## இணைப்பு.

(....ஆம் பக்கத்தில் இனம் 2 க்கான அடிக்குறிப்பைக் காண்க).

கிராமப் புறங்களிலும் பிற்பட்ட பகுதிகளிலும் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற அரசுக் கொள்கையின் அடிப்படையில், மற்ற துறைகளில் போலவே தொழில் துறையிலும் இப்பகுதிகளில் வேலை வாய்ப்புகளை அதிக அளவில் உருவாக்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டு வருகிறது. குறுகிய காலத்தில் அதிக அளவில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் போது இரண்டு கருத்துக்களை கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. முதற்கண் எல் லோருக்கும் தொழில் நுட்பத் திறனை அளிக்க வேண்டுமானால் ஏராளமான பயிற்சித் திட்டங்களுக்காக பெருஞ் செலவு ஆவ துடன் காலமும் அதிகம் தேவைப்படும். எனவே; நிறுவப் படும் தொழில்கள் பெரும்பாலும், நுணுக்கமான இயந்திரங்கள் இல்லாமலும், தொழிற் பயிற்சி அதிகம் இல்லாதவர்கள் வேலை செய்யக்கூடிய வகையிலும் அமைவது அவசியம். இரண்டாவதாக, ஏராளமான பேருக்கு வேலை வாய்ப்புக்கள் அளிக்க வேண்டியிருப்பதால், வேலை தேடுவோர் எங்கெங்கு வசிக்கிறார்களோ, அந்த இடங்களிலேயே அவர்களுக்கு இந்த வேலை வாய்ப்புக்கள் கிட்டும்படி தொழிற்சாலைகளை உரு வாக்க வேண்டும். இல்லை என்றால், இதன் காரணமாக ஏற்படும் போக்குவரத்துப் பிரச்சினைகளைத் தவிர்க்க முடி யாது. இந்த இரண்டு கருத்துக்களையும் கிராமத் தொழில் களின் மூலமே ஈடேற்றலாம். இவற்றைக் குடிசைத் தொழில்கள் என்றும், கிராமத் தொழில்கள் என்றும், சிறு தொழில்கக என்றும் கூடச் சொல்லலாம். இவ்வாறாக, கிராமத் தொழில் களை மேம்படுத்துவதுதான் தொழில் துறையின் முக்கிய நோக்ள் மாக உள்ளது.

2. கிராமப் புற தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதால் நடுத்தர அல்லது பெரிய தொழில்கள் புறக்கணிக்கப்படு கின்றன என்று பொருளாகாது. உண்மையில் நடுத்தர, பெரும் தொழில்கள் சிறப்பாக வளர்ந்தால் தான் அதன் பய னாக சிறு தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட் களும், சிறு தொழில் உற்பத்திகளுக்கு விற்பனை வாய்ப்புகளும் அதிகரிக்கும். ஒரு பெரிய தொழிற்சாலையை பின்தங்கிய பகுதிகளில் நிறுவுவதால், அந்தப் பகுதிகளில் பல சிறு தொழில் கள் உருவாவதற்கும் துணைத் தொழில்கள் வளரவும் வாய்ப்பு கள் உண்டாகும். எனவே, சிறு தொழில் வளர்ச்சியின் நல னுக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் ஒன்றுக் கொன்று உறுதுணையாக அமையும் வகையில் வளர்வது அவசியமாகிறது.

3. இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் தான் தொழில் துறையின் பல்வேறு பிரிவுகள், அவை பெரும் தொழில்களை வளர்ப்பதாக இருந்தாலும் சிறு தொழில் வளர்ப்பதாக இருந் தாலும், செயல் பட்டு வருகின்றன.

4. கிராமப் புறத் தொழில் செம்மையாகவும், விரைவாக வும் வளர வேண்டுமானால் கீழ்க்கண்ட ஐந்து அம்சங்கள் இன்றியமையாதவை. அவையாவன :

1. சாத்தியக் கூறான திட்டங்கள் எவையென கணித்து அவைகளை உருவாக்குதல்.

2. அடிப்படை உறுதுணை வசதிகளை அமைத்தல்.

3. தொழிலுக்குத் தேவையான கடன் உள்ளிட்ட மூலப் பொருட்களை அளித்தல்.

4. சிறு தொழில் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான ஆதரவு அளித்தல்.

5. சிறு தொழில் முனைவோருக்கு, பயிற்சியும், தொழில் நடத்துவதற்கு தகுந்த அறிவுரைகளும் வழங்குதல். மேற் கூறிய ஐந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் ஒரு விரிவாக்க அமைப்பு தேவைப்படுகிறது. இந்த அமைப்பு ஒரு தொழில் முனைவதைத் தேடி அவருடைய பிரச்சினைகள் எவை என்று தெரிந்து கொண்டு, அவருடைய குறைகள் யாவையும் கண்டு அவருக்கு வேண்டிய ஆதரவு அளிக்கவேண்டும். கூட்டுறவு வளர்ச்சி, விவசாயம் போன்ற துறைகளில் இது போன்ற துணை புரியும் அமைப்புகள் கடந்த இருபது ஆண்டு களுக்கு மேலாக நிலை பெற்று விட்டன. எனினும் தொழில் வளர்ச்சியைப் பொறுத்த வரையில் சமீப காலத்தில்தான் நிறுவப்பட்ட மாவட்டத் தொழில் மையங்களே இது போன்ற துணை புரியும் அமைப்புகளாக செயல் பட்டு வருகின்றன. இந்த மையங்கள் தற்சமயம் எட்டு மாவட்டங்களில் இயங்கி வரு கின்றன. மற்ற மாவட்டங்களிலும் ஒரு சில மாதங்களில் இவ்வாறான மையங்கள் துவக்கப்பட இருக்கின்றன. இந்த மாவட்டத் தொழில் மையங்களுக்குத் தேவைப்படும் அலு வலர்கள் பதவிகளுக்கு கிராமப்புறத் தொழில் வளர்ச்சியில் ஈடுபாடும், நுண் அறிவும் கொண்ட தகுதியுள்ளவர்களை வெளிச் சந்தையில் தேர்ந்தெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறாக வரும் அக்டோபர் மாதத்திற்குள் எல்லா அலுவலர்களும் நியமிக்கப்பட்டு மாநிலம் முழுவதிலும் கிராமப் புறத் தொழில் முன்னேற்றத்தையே முழு முதற் குறிக் கோளாகக் கொண்டு மாவட்டத் தொழில் மையங்கள் முழு மூச்சுடன் இயங்கத் தொடங்கும். சிறு தொழில் துவங்க



முனைவோர் தமக்குத் தேவைப்படும் உதவிகளையும் அறி வுரைகளையும் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் ஒரே இடத்தில் பெற இயலும். தொழில் துறை ஆய்வாளர்களும் ஊரக வளர்ச்சித் துறையின் தொழில் விரிவாக்க அலுவலர் களும், மாவட்ட தொழில் மையங்களில் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் கிராமத் தொழில் வளர்ச்சி விரி வாக்கத்திற்கும் வழி வகுத்தலுக்கும் களப்பணி அலுவலர் களாய் அடித்தளமாக அமைவார்கள். மாவட்ட ரீதியில் அவர்கள் மாவட்டத் தொழில் மையங்களில் உள்ள பகுதி மேலாளர்களின் மேற்பார்வையின் கீழ் பணியாற்றுவார்கள். கிராமப் புறங்களில் ஆங்காங்கே கிடைக்கும் மூலப் பொருள் களையும் சுற்றுப் புற அங்காடி நிலவரங்களையும் கருத்தில் கொண்டு சாத்தியக் கூறான திட்டங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அந்த மாவட்டத் தொழில் மையங்களைச் சார்ந்தது.

5. தற்சமயம் இந்த மையங்கள் இயங்கிவரும் எட்டு மாவட்டங்களிலும் இதற்கான முதற் சுற்று ஆய்வு முடிவடைந்து விட்டது. மேற் கொண்டு இந்த ஆய்வின் முடிவுகளின் பேரில் மேலும் நுண்ணிய ஆய்வு செய்து எந்தெந்த இடத்தில் எந் தெந்தத் திட்டங்கள் நிறுவுதல் நலம் என முடிவு செய்யும் நடவடிக்கையில் இவை ஈடுபட்டு உள்ளன. எடுத்துக் காட்டாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இது போன்ற ஆய்வு செய்து உடனடியாக நிறுவக் கூடிய சிறு தொழில்கள் கொண்ட ஒரு பட்டியல் தயார் செய்யப் பட்டுள்ளது. இவற்றை நிறுவ ரூபாய் 423 இலட்சம் மூலதனம் தேவைப்படும். 6,337 பேருக்கு வேலை வாய்ப்பு உள்ளது. இந்த திட்டங்கள் நடை முறை சாத்தியமானது மட்டுமின்றி இரண்டு ஆண்டுகளுக்குள் செயல் படக் கூடியதும் ஆகும். இது போன்ற திட்டங்கள் மற்ற மாவட்டங்களிலும் தயாராக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட தொழில் மையங்களும், மற்றும் தமிழ்நாட்டு தொழில் மூலதன நிறுவனமும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபோன்று சாத்தியக் கூறுகள் திட்டங்களை தயாரிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட திட் டங்கள் சிறு தொழிலில் சிரமமின்றித் தொழில் ஈடுபட முனை வோர் தொடங்கப் பயனப்படும்.

6. டாக்டர் நாயுடம்மா அவர்கள் தலைமையில் கடந்த ஆண்டு நிறுவப்பட்ட கிராம—கைத்தொழில் வல்லுநர் ஆய்வுக் குழு தனது அறிக்கையை அரசுக்கு சமீபத்தில் பணிந்தனுப்பி யுள்ளது. கிராமப்புறத்தில் விவசாயத்துறை, கால்நடை, வனத் துறைகளில் எளிதில் கிடைக்கும் விளை பொருட்களையும் கழிவுப் பொருட்களையும் பயன்படுத்தி பெருவாரியாக வேலைவாய்ப்புத் திறன் கொண்ட 300-க்கும் மேற்பட்ட திட்டங்களை அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது. இந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றையும் செயல்படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து தனித் தனியாக உருவாக்கி அவைகளை பொதுமக்களிடையே பரவலாக

விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்திட்டங்களை சிறு தொழில் முனைவோர்கள் அந்தந்தப் பகுதியின் சூழ்நிலைக்கேற்ப தேர்ந்தெடுத்துச் செயலாக்க இயலும். பெரும்பாலான திட்டங்கள் அரசு துறையாலும் அரசு நிறுவனங்களாலும் நேரடியாகவே எடுத்துக் கொள்ளப்படும். இந்தத் திட்டங்களை செயல்படுத்துவதை கண்காணிப்பதற்கு இந்தக் குழு, '' கிராம தொழிற் வளர்ச்சி கண்காணிப்புக் குழு '' என்ற பெயரில், அரசுக்கு தொடர்ந்து உதவி அளித்து வரும்.

7. அடுத்து தேவைப்படுவது சிறு தொழில் கூடங்கள் நிறுவுவதற்கான அடிப்படை உறுதுணை வசதிகளாகும். சாதாரணமாக, ஒரு சிறு தொழில் முனைவோர் தானாகவே தன்பொருள் கொண்டு ஒரு தொழிற்கூட கட்டிடத்தை அமைத்து தேவையான நீர், மின்சாரம், மற்ற வசதிகளை அமைப்பதை விட இந்த வசதிகளெல்லாம் அமைந்துள்ள ஆயத்தமான ஒரு கட்டிடத்தையே தேடி நாடுவார். தற்சமயம் இதுபோன்ற அடிப்படை உறுதுணை வசதிகள் கொண்ட பெரிய தொழிற் கூடங்களுக்குத்தான் அதுவும் நகர்ப்புறங்களின் அருகாமையில்தான் நிறுவப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் கிராமப்புறங்களிலும் இந்த அடிப்படை வசதிகள் கொண்ட சிறிய தொழிற்கூடங்களை நிறுவுவதற்கான ஒரு பெரும் திட்டத்தை '' சிட்கோ '' நிறுவனத்தார் மேற்கொண்டுள்ளார்கள். 1978–80 ஆண்டுகளில் ரூபாய் 7,600 பெறுமான அளவில் சற்று ஏறக்குறைய 240 சதுர அடி பரப்பளவு கொண்ட 3,000 தொழிற்கூடக் கட்டிடங்கள் கட்டப்பட உள்ளன. இந்தத் தொழிற்கூட கட்டிடங்கள் தண்ணீர் வசதியும், மின்சார வசதியும் கொண்டு உடனடியாகப் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருக்கும். இந்த சிறுகட்டிடங்களை வாங்க விரும்பும் தொழில்களை நிறுவ முனைவோர்களுக்கு சுலபமான தவணை முறையில் கடன்கள் கொடுப்பதற்கும், வங்கிகளில் கடன்கள் பெறுவதற்கும், ' சிட்கோ ' நிறுவனம் ஏற்பாடு செய்து தருகிறது. இதுபோன்றே குடிசைத் தொழிற் துறையில் பெருவாரியாக தீப்பெட்டி தொழிற் கூடங்கள் நிறுவ தொழிற்கூடக் கட்டிடங்களைக் கட்டுவதில் ' சிட்கோ ' பெரும் பங்கு கொண்டுள்ளது. ஏறத்தாழ 20,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய 1,000–க்கும் மேற்பட்ட தீப்பெட்டி தொழிற் கூடங்களை உடனடியாக நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. முன்னமே நிறுவப்பட்டுள்ள தொழில் கூட்டுறவுப்பணி நிறுவனங்களை விரிவுபடுத்துவதால் மேலும் 20,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வகை உள்ளது.

8. இந்த சிறு தொழில் கூடங்களுக்கு அவசியமான மற்றுமொரு தேவை கடன் உள்ளிட்ட பல்வேறு மூலப் பொருட்கள் தவறாமலும் ஒழுங்காகவும் கிடைக்க வகை செய்வதாகும். எடுத்துக்காட்டாக உருக்கு இரும்புப் பொருட்கள் சரிவர கிடைக்காத காரணத்தால், பெரும் தொழில் அதிபர்களைவிட சிறு தொழில் அதிபர்களே, போதிய பொருள் வசதி இல்லாததால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். கடந்த ஆண்டு போக்கு வரத்துத் தாமதத்தினாலும், மத்திய அரசின் குறைவான ஒதுக்கீட்டினாலும் இம் மாநில சிறு தொழில் அதிபர்கள் பெரும் இடர்ப்பாடுகளுக்கு ஆளானார்கள். எனவே, இந்த ஆண்டு ' சிட்கோ ' நிறுவனத்தார் முன்னேற்பாடாக தேவைப்படும் அளவிற்கு உருக்கு இரும்புப் பொருட்கள், நிலக்கரி, மெழுகு போன்றவைகளை வாங்கி அவைகளை நேர்மையாகவும் சீரிய முறையிலும் சிறு தொழிற்கூடங்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. கடன் உதவியை பொறுத்த மட்டில், மாவட்ட மையங்களுக்கும் வர்த்தக வங்கிகளுக்குமிடையே ஒரு சுமுகமான உறவு நிலையை வளர்த்து அதன் பயனாக அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வழி வகுக்கப்பட்டுள்ளது. இதுவன்றி, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தாரும், மாவட்டங்கள் தோறும் மாவட்டத் தொழில் மையங்களைக் கலந்தாலோசித்து பல கிளைகளைத் துவக்கி உதவ முன்வந்துள்ளார்கள்.



9. எல்லாவற்றிற்கும் மேலாக மிக முக்கியமானது யாதெனில், சிறு தொழில் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனைச் சந்தையை உருவாக்குவதாகும். தற்சமயம் ஆண்டுதோறும் அரசு அலுவலகங்களிலும், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களிலும், அரசுடன் இணைந்த நிறுவனங்களிலும் பெரும் அளவிற்கு நுகர் பொருட்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு சமீபத்தில், அரசாங்க அலுவலகங்களிலும், அரசு நிறுவனங்களிலும் ஊராட்சி அலுவலகங்களிலும் கூட்டுறவுத்துறை நிறுவனங்களிலும் அவைகளுக்குத் தேவையான பல்வேறு நுகர் பொருட்களையும் குடிசைத் தொழில் கூடங்களிலோ கதர் வாரியத்திலோ அல்லது மாவட்டத் தொழில் மையங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழிற் கூடங்களிலோ, வாங்க வேண்டுமென்றும், மேலும் அவ்வாறு வாங்குவதற்கு வழக்கமான டெண்டர் முறை தேவையில்லை என்றும் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது (அரசு ஆணை நகல் இணைப்பு I ஆக உள்ளது). மேலும் டி.ஜி.எஸ்.டி. (D.G.S.D.) விலைப்பட்டியலுக்கு ஏற்ற அளவிற்கு ஏற்படுத்தப்பட்ட விலை முன்னுரிமைத் திட்டத்தை சிறு தொழில் துறைக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. (அரசு ஆணை இணைப்பு II ஆக உள்ளது.) அரசுத் துறைகளில் தேவைப்படும் பொருட்களை, கூடுமானவரையில் தமிழ் நாட்டிலேயே உற்பத்தியாக்கக்கூடிய பொருள்களை வாங்குவதற்கான சாத்தியக் கூறுகளை அரசு ஆராய்ந்து வருகிறது. இந்த ஆய்வின் பயனாக தமிழ் நாட்டிலுள்ள அரசினர் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள சோதனைக் கூடங்களுக்குத் தேவையான ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கருவிகளை ' சிட்கோ ' நிறுவனத்தார் வாயிலாகப் பெறுவதற்கு கல்வித் துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (அரசு ஆணை இணைப்பு III ஆக உள்ளது). இது போன்று ஏனைய இலாக்காக்களும் நடவடிக்கை எடுப்பார்களாயின் நம் மாநிலத்தில் சிறு தொழில் உற்பத்திப் பொருட்களுக்கு உறுதியான விற்பனை வாய்ப்புகள் பெருகும்.

10. அடுத்து புதிய தொழிற் கூடங்கள் பெரும் எண்ணிக்கையில் வளருவதற்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய மற்றொரு துறை தற்போது பயன்படுத்தப்படும் சிமிட்டிக்குப் பதிலாக சுண்ணாம்பு காரையைப் பயன்படுத்தும் முறையாகும். அரசு அலுவலகங்களிலும், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களிலும் கட்டப்படும் இரண்டடுக்குகள் வரையிலான கட்டிடங்களில் அடித்தள கான்கிரீட்டு, கட்டிடத் தரை பூசுவதற்கான கான்கிரீட்டு சுவர் பூச்சு வேலைகள் ஆகியவற்றிற்கு, சிமெண்டிற்குப் பதிலாக சுண்ணாம்புக் காரையைப் பயன்படுத்த வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட உள்ளது. இதன் வாயிலாக, சுண்ணாம்புக் காளவாய்கள் பெருவாரியாகத் துவங்கவும் அதன் மூலம் வேலை வாய்ப்பு பெருகவும் வகை உள்ளது.

11. முன்பே கூறியது போல, புதிதாகப் பணி துவங்கும் தொழிலாளர்களுக்கும் சிறு தொழில் முனைவோருக்கும் சிறப்புப் பயிற்சி அளிப்பது பெரும் பொருட் செலவு ஏற்படுவதோடல்லாது அதற்கு அதிக அவகாசமும் தேவைப்படும். எனினும் நாம் மேற்கொண்டிருக்கும் புதிய திட்டத்தின் வெற்றி பெருமளவுக்கு தொழில் துறையில் முன்பே ஈடுபட்டுள்ள கிராமத் தொழிலாளிகளின் கைத்திறனைச் செம்மைப்படுத்துவதைத்தான் சார்ந்துள்ளது. எடுத்துக்காட்டாக கிராமாந்தரங்களில் முன்பே தொழிலில் ஈடுபட்டுள்ள தச்சர், கொல்லர், போன்றோரைச் சிறு குழுக்களாக அமைத்து, அவர்களுக்கு சிறு தொழிலில் பணிப்பயிற்சி பள்ளி மூலமாக தனிப் பயிற்சி அளிக்க ஏற்பாடாகியுள்ளது. மற்றும், தீப்பெட்டித் தொழிலைப் போன்று உற்பத்திப் பெருக்கத்தை கிராமங்களில் பரவலாக விரிவாக்கி உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஒன்றிய அமைப்பு முறையில் செயல் படுத்தல் நலம். இதுபோன்ற தொழில்களில் தொழிலாளர்களுக்கும் தொழில் முனைவோருக்கும், பயிற்சியளிப்பது எளிது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் துணை கொண்டு, தீப்பெட்டித் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்க தொழில் நுட்ப வளர்ச்சி நிதியின் கீழ் ஒரு சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது எனினும் வளம் பெற்ற நடுத்தர மற்றும் பெருந் தொழில் அதிபர்களும், இயன்ற அளவு இப் புதிய சிறு தொழில் முனைவோருக்கு பயிற்சி கொடுக்கவும் தொழில் நடத்துவதற்கு தகுந்த அறிவுரைகள் வழங்கவும் சிறு தொழில் உற்பத்திப் பொருட்களுக்குத் தேவையான விற்பனை வாய்ப்பு அளிக்கவும் உதவ முன் வந்தால் தான் இந்தப் பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்திலேயே முடிவு காண இயலும்.

12. அடுத்து சிறு தொழில்கள் வேகமாக வளருவதற்கு தற்சமயம் உள்ள உரிமம் வழங்கும் நடைமுறைகள் எளிதாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. ஒரு சிறு தொழில் முனைவோர் முதல் ஆண்டில் பெரும் பகுதியை பல்வேறு துறைகளிடமிருந்து உரிமங்கள் பெறுவதிலே காலம் விரயமாகிறதென புகார்கள்



அடிக்கடி எழுப்பப்படுகின்றன. இது பற்றி தமிழக அரசின் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட, மாவட்ட தொழில் மையங்களின் திட்டக்குழு ஆராய்ந்தது. இதன் விளைவாக ஊராட்சிகளால் தொழிற்கூடப் பகுதி என ஒதுக்கப்பட்ட இடங்களில் நிர்ணயிக்கப்பட்ட 14 குறிப்பிட்ட தொழில்களைத் தவிர மற்ற தொழில்களைத் தொடங்குவதற்கு சுகாதாரத் துறையிடமிருந்து முன்கூட்டியே ஒப்புதல் பெற வேண்டிய தேவையில்லையென மக்கள் நல்வாழ்வுமற்றும் குடும்ப நலத்துறை ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் 5 பரித்திறனுக்குக் (H.P.) குறைவாகத் தேவைப்படும் தொழிற் கூடங்கள் எங்கே நிறுவினாலும் அதற்கு சுகாதாரத் துறையினரின் அனுமதியை ஊராட்சிகள் பெறவேண்டிய தேவையில்லை. (அரசு ஆணை இணைப்பு IV ஆக உள்ளது.) இது போன்றே தொழிற்கூடப் பகுதியென பஞ்சாயத்துக்களாலும், நகராட்சிகளாலும் ஒதுக்கப் பெற்ற பகுதிகளில் 25 பரித்திறன்களுக்கு மேற்படாத அளவு சக்தி பயன்படுத்தும் தொழிற் கூடங்களை நிறுவுவதற்கான விண்ணப்பங்களை நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறத் திட்ட இயக்குனரின் ஆய்வுக்கு அனுப்பத் தேவையில்லையென ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இனிமேல் அது போன்ற எல்லா விண்ணப்பங்களையும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களோ, பஞ்சாயத்து ஒன்றியமோ, நகராட்சியோ மட்டும் பரிசீலித்து முடிவான ஆணை பிறப்பிக்கும். (அரசு ஆணை இணைப்பு V ஆக உள்ளது.) எல்லாவித ஊராட்சிகளும் 6 மாதத்திற்குள்ளாக தங்கள் எல்லையில் தொழிற் கூடங்களுக்கான பகுதியை வரையறுத்து அறிவிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.(அரசு ஆணை இணைப்பு VI ஆக உள்ளது).ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டத்தொழில் மையத்தின்மேலாளரையும், தொழிற்சாலை ஆய்வாளரையும், மாவட்ட சுகாதார அதிகாரியையும், கோட்ட வளர்ச்சி அதிகாரியையும் கொண்ட ஒரு குழு நிர்மாணிக்கப்பட்டு அந்தக் குழு மாதம் ஒரு முறை கூடி நிலுவையில் உள்ள எல்லா விண்ணப்பங்களையும் பரிசீலித்து தேவையான உரிமங்களை வழங்குவதற்கு வழி வகை செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. கண்காணிப்புப் பொறியாளரையும், தொழிற்சாலைக் கண்காணிப்புப் பொறியாளரையும், துணைத் தலைமைத் தொழிற்சாலை ஆய்வாளரெனபெயரை மாற்றி அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இதன் பயனாக, கண்காணிப்புப் பொறியாளரே, தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் புதிய தொழிற் கூடங்களுக்கு உரிமம் வழங்கும் வகை ஏற்படும். இதற்கான அரசு ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும். தற்சமயம் தொழில் மற்றும் வணிக இயக்குனர் வசம் உள்ள தொழில் நுட்ப மற்றும் நிதி சம்பந்தமான அதிகாரங்கள் மாவட்டத் தொழில் மையப் பொதுமேலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக துவங்க இருக்கும் சிறு தொழில் கூடங்களுக்கு தேவையான உரிமங்கள் வழங்க பரிந்துரைகள் ஏதும் சென்னை தலைமை அலுவலகத்திற்கு வரத் தேவையில்லை

13. புதிதாகத் துவங்க இருக்கும் தொழிற் கூடங்களுக்கு ஏற்படும் ஒரு இடர்ப்பாடு மின் இணைப்பு பெறுவதாகும். மின் இணைப்பு பெறுவதற்கு சம்பந்தப்பட்ட நகராட்சியிலிருந்தோ கிராமப் பஞ்சாயத்திலிருந்தோ முன்னதாகவே உரிமம் பெற்று அதனை மின் துறைக்குக் காட்டுதல் வேண்டுமென்ற விதிமுறையை மின்வாரியம் தற்சமயம் விலக்குவதற்கு ஆணை பிறப்பித்துள்ளது. இதுபேர்ன்றே 10 பரித்திறனுக்குக் குறைவாகப் பயன்படுத்த இருக்கும் சிறு தொழிற் கூடங்களுக்கு மின் இணைப்பு விண்ணப்பங்கள், இணைப்பு இலாபகரமான அடிப்படையில் உள்ளதா என்று கருதாமலேயே மின் இணைப்பு வழங்க வேண்டுமெனவும் மின் வாரியம் உத்தரவிட்டுள்ளது. மின்சக்தி அளிப்பதற்கான நிர்மாணிப்பு வேலைகள் 2 இலட்சம் மதிப்பீட்டு அளவு வரை அந்தந்த உள்ளூர் அதிகாரிகள் ஒப்புதல் அளிக்க அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பல உத்தரவுகளினால் எதிர்காலத்தில் மின் இணைப்பு பெறுதல் எளிதாக அமையும்.

14. அதிகாரங்களைப் பரவலாக்குவதும், பொறுப்புக்களைப் பகிர்ந்தளிப்பதும், நடைமுறைகளை எளிதாக்குவதும் என்றுமே தொடர்ந்து பரிசீலனைக்குரியவை யாகும். எனினும், இதுகாறும் எடுத்த நடவடிக்கைகளினால் புதிய சிறு தொழிற்கூட அமைப்புக்கான விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து அதற்கான உரிமங்களை வழங்குவதில் வெகுவாகக் காலதாமதம் தவிர்க்கப்படும்.

15. பொருள்களின் விலை வாசி ஏற்றம் காரணமாக, திட்டச் செலவு அதிகரித்து, போட்ட திட்டங்களில் தொழில் முன் முனைவோர் அளிக்க வேண்டிய பங்கு மூலதனத் தொகை அதிகமாகிறது. இதன் தொடர்பாகத் தொழில் முனைவோருக்கு குறைந்த வட்டிக்கு பொருளுதவும் திட்டங்களை பல வணிக வங்கிகள் செயலாற்றி வருகின்றன. எனினும் இதன் விளைவாக வட்டிப் பளு அதிகரித்து, தொழிற் கூடத் திட்டத்தின் பொருளாதார சீர்நிலையே பாதிக்கப்படுகிறது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கத்தில், மாநில அரசு தற்சமயம் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்படும் பெருந் தொழில்களுக்கு அளிக்கப்பட்டு வரும் மூலதன் மானியத் திட்டத்தைப போன்று, மேலும் உள்ள பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்படும் சிறு தொழிற் கூடங்களுக்கு மூலதன மானிய உதவி முறையை விரிவாக்க முடிவு செய்துள்ளது. இதற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்க உள்ளது. இது போன்ற கிராமப்புற ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமக் கைவினைத்தொழிலாளிகளுக்கும் குடிசைத்தொழிலுக்கும் அளித்துவரும் மானிய முறை, மற்ற சிறு தொழிற் கூடங்களுக்கும் விரிவாக்கப்பட உள்ளது. இந்த மானியத் திட்டத்தை குடிசைத் தொழிலைப் பொறுத்தவரை 33 விழுக்காடுக்கு மேற்படாமலும், சிறிய தொழிலைப் பொறுத்த வரையில் 25 விழுக்காடுக்கு மேற்படாமலும் எவ்வாறாயினும், ஒரு தொழிலுக்கு



ரூ. 1,500 க்கு உட்பட்டு மானியம் அளிக்க உள்ளது. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் இத்திட்டத்தின் மூலம் 100 பேருக்குக் குறைவின்றிப் பயன்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சம்பந்தமான அரசு வெளியிட்ட அரசு ஆணை நகல் இணைப்பு VII ஆக இணைக்கப்பட்டுள்ளது.

16. புதிய தொழிற்கூடங்கள் அமைவதற்கு ஊக்கமளிக்கப்படும் அதே நேரத்தில் முன்பே இயங்கிவரும் தொழிற்கூடங்களில் ஏதோ ஒரு காரணத்திற்காக நலிந்த நிலையில் உள்ளவைகளுக்குக் கைகொடுத்து உதவி அவை மீண்டும் உற்பத்தியைத் தொடங்க அரசு ஒரு திட்டம் வகுத்துள்ளது. தற்சமயம் பெரிய தொழிற் கூடங்களே இவ்வாறான பயன்பெற்று வருகின்றனவேயல்லாது சிறிய தொழிற் கூடங்கள் பயன் அடைவதில்லை. இது சம்பந்தமாக இந்த நலிந்த நிலையில் உள்ள தொழிற்கூடங்களை மீண்டும் நிலைப்படுத்தும் பொறுப்பினை ஏற்றுள்ள, " நலிந்த நிலை தொழிற்கூடச் சீரமைக்கும் குழு " பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. அவைகளில் ஒன்று நலிந்த நிலையில் உள்ள சிறு தொழிற் கூடங்கள் வணிக வங்கிகளில்அதிகமாக நிதிக் கடன் பெறுவதற்கு உரிய நிதி ஈட்டுப் பெறுமானத்தை பெருக்கிக் கொள்ள வகை இருப்பதில்லை இந்த இடரை நீக்குவதற்கு "சிட்கோ" நிறுவனத்தின் மூலமாக நலிந்த நிலையில் உள்ள சிறு தொழிற் கூடங்கள் தங்கள் ஈட்டுப் பெறுமானத்தை பெருக்கிக் கொள்ள குறைந்த வட்டியில் கடன் உதவி அளிக்க அரசுமுடிவு செய்துள்ளது. இதற்காக நடப்பு ஆண்டில் சிட்கோ நிறுவனத்தார் ரூபாய் 25 இலட்சத்தை ஒதுக்கியுள்ளனர்.

17. மேற்கூறியபடி உரிமங்கள் வழங்கும் நடைமுறைகளைச் சீர்படுத்தியதாலும் பல்வேறு வகையான ஆதரவும் உதவியும் முந்திய பத்திகளில் கூறியபடி அளிக்க இருப்பதாலும், இம் மாநிலத்தில் சிறு தொழிற் கூடங்கள் செம்மையாகவும், விரைவாகவும் வளர வாய்ப்புள்ளது. 1979–80 ல் இதன் பயனாகக் குறைந்தது 1,50,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வேலை வாய்ப்பின் பெரும் பகுதி பட்டு உற்பத்தித் துறையில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுறது. ஏறத்தாழ 40,000 பேருக்கு தீப்பெட்டித் துறையில் வேலை பெற வாய்ப்பு உள்ளது.

18. பெருந்தொழில், மற்றும் நடுத்தரத் தொழில்களைப் பொறுத்தவரையில் அவைகளுடைய பெருக்கமும் வளர்ச்சியும் தற்சமயம் உள்ளதைப் போல் அல்லாது, இம்மாநிலத்தில் பரவலாகவும் பெரும்பாலான மக்கள் பயனடையுமாறும் அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு பெருந்தொழில் கூடங்களும் நடுத்தரத் தொழிற் கூடங்களும் பெரிய நகர்ப்புறங்களைச் சுற்றி அமைவதைக் கட்டுப்படுத்த வேண்டும் எனும் ஆணை பிறப்பித்துள்ளது. இதை அனுசரித்து 'சிப்காட்' நிறுவனத்தார் அளிக்கும் விற்பனைவரிக் கடன் திட்டம் தகுந்த முறையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது;

மேலும் ஓசூரிலும், ராணிப்பேட்டையிலும் அமைந்துள்ள தொழிற் பேட்டைகளைப் போல் இனி மேற் கொண்டு பெரும் தொழிற் கூடங்களைப்போலில்லாமல் சிறு தொழிற்கூடங்களை அமைப்பதற்கான தொழிற் பேட்டைகளை இம்மாநிலத்தின் ஏனைய பின்தங்கிய பகுதிகளில் துவக்க 'சிப்காட் நிறுவனம்' முற்படும்.

19. மின்வளமும் நீர்வளமும், அதிகமில்லாத சூழ்நிலையில் பயிற்சிபெற்ற திறமைவாய்ந்த மனித சக்தியினை அடிப்படை யாகக் கொண்டு மின்சாரவியல் மின் அணுவியல் பொறியியல் துறைகளில் பெரிய தொழிற்சாலைகளை தமிழ் நாட்டில்அதிக அளவில் நிறுவ வாய்ப்பு உண்டு. மேலும் சிறு தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை உற்பத்தி செய்வதாலோ அல்லது சிறு தொழிற்கூடங்களின் உற்பத்திப் பொருட்களை பயன்படுத்துவதிலோ, உதவும் புது முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும். இயன்ற அளவு இயந்திரங்களைப் பயன்படுத்துவதைவிட தொழிலாளர்களை அதிக அளவில் பயன்படுத்தும் முயற்சிகளுக்கு அரசு ஆதரவு தரும் அதற்கு ஊக்கமளிக்கப்படும். இயன்ற அளவு இயந்திரங்களைப் பயன்படுத்துவதைவிட, இவ்வாறான முயற்சிகளினால் ஆங்காங்கே உள்ள தொழிலாளர்களைக் கொண்டே செயல்படுத்தி வேலைவாய்ப்பைப் பெருக்க அரசு எண்ணியுள்ளது. இதைப் போலவே உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருள்களை பெரிதும் பயன்படுத்தும் தொழில்களுக்கு முழு அளவில் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்படும். அரசு துவங்க இருக்கும் செய்தித் தாள் மற்றும் காகித உற்பத்திக்கு சாதாரணமாகப் பயன்படுத்தும் மரக்கூழிற்கு பதிலாக நம்முடைய மாநிலத்தில் அதிக அளவு கிடைக்கும் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தத் திட்டமுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 21 சர்க்கரை ஆலைகளின் கழிவுப் பாகையும் எரிசாராயத்தையும் மூலப் பொருளாகக் கொண்டு பல தொழில்களைத் தொடங்க வாய்ப்புள்ளது. இது போன்றே, நீண்டதொரு கடலோரத்தைக் கொண்ட தமிழ் நாட்டில், உப்பு உற்பத்தி தொழிற்சாலைகளை பெருமளவில் பெருக்கவும், உப்பின் அடிப்படையால் ஏற்படும் ரசாயனத் தொழில் இணையங்கள் செய்வதால் பெருவாய்ப்புள்ளது. இவ்வாறு அமையின், கடலோரப் பகுதிகளில் சிறு சிறு உப்பளங்கள் தோன்றவும் வழி உண்டாகும். தமிழ் நாட்டில் ஓரிரு இடங்கள் தவிர மற்ற இடங்களில் கனிவளம்அவ்வளவாக இல்லை. கிடைக்கும் இந்தச் சிறுஅளவு கனிவளத்தையும் அவ்வளத்தையும் பொதுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் இயன்றளவு பயன்படுத்தி வேலை வாய்ப்புகள் பெருக்கப்படும். தோல் தொழிலைப் பொறுத்தவரை, உற்பத்தியிலும், வெளி நாட்டு ஏற்றுமதியிலும், இந்தியாவிலேயே தமிழ் நாடு முன்னணியில் உள்ளது. இந்தத் தொழிலில், உற்பத்தியைப் பரவலாக்கி, விற்பனையை ஒருங்கிணைந்த முறையில் சீரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறிய கருத்துக்கள் பெருந் தொழில்களைப் பொறுத்த வரை அரசின் அணுகுமுறையை விளக்குவதாக அமையும்.



நகல்.

## இணைப்பு-1.

## தமிழ் நாடு அரசு.

### சுருக்கம்.

தொழில்கள்—பண்டங்கள்—அரசுத் துறைகள், அரசு வாரியங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான பண்டங்களை வாங்குதல்—குடிசை மற்றும் கிராமத் தொழில்களுக்கு ஊக்கமளித்தல்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறது.

### தொழில் துறை.

அரசு நிலை ஆணை எண் 923. நாள் 29-8-1978.

**ஆணை :**

பல்வேறு பொருள் வழங்கும் முகவரமைப்புகளிடமிருந்து அரசுத் துறைகள் இருப்புச் சரக்குகளையும் பண்டங்களையும் வாங்குவது குறித்து, அவ்வப்போது அரசு பல்வேறு ஆணைகளை வழங்கியுள்ளது. சிறைத் துறை, கூட்டுறவு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் தொழில் நிலையங்கள், போன்ற துறைகளின் தயாரிப்புப் பொருள்களுக்கு, நியாயமான விற்பனை வாய்ப்பு கிடைப்பதற்காக இந்த ஆணைகள். பிறப்பிக்கப்பட்டன. வேலையின்மை பெருகி வருகின்ற இந்நிலையிலும், நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள கட்டுக் கடங்காத வளர்ச்சியினை கட்டுப்படுத்தவும், கிராமப் பகுதிகளில் குடிசை மற்றும் கிராமத் தொழில்களை அபிவிருத்தியடைவதற்கு ஊக்கமளிக்க வேண்டுமென அரசு எண்ணியுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு கிராம மற்றும் குடிசைத் தொழில்களுக்கு பெருமளவில் ஊக்கமளிக்கும் வகையில் பண்டங்கள் வாங்குவது குறித்து கொள்கையினை திருத்தி அமைக்க அரசு முடிவெடுத்தது. அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு எதிர்காலத்தில் தேவைப்படும்பொருள்களை, முக்கியமாக கிராம மற்றும் குடிசைத் தொழில் மூலம் பெற வேண்டுமென சட்ட மன்றத்தில் கடந்த வரவு செலவுத் திட்டத்தின் போது அறிவிக்கப்பட்டது.

2. திருத்தப்பட்ட கொள்கையினைச் செயலாக்குவதன் பொருட்டு, இப்பொருள் பற்றிய முந்தைய ஆணைகளை நீக்கிவிட்டு அவற்றிற்கு பதிலாக, பின் வருகின்ற ஆணைகளை அரசு வழங்குகிறது.

(i) அரசு துறைகள், அரசு பொதுத்துறை நிறுவனங்கள், சட்ட ரீதியான வாரியங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவைகளின் தேவைக்கான பொருள்களை வாங்குவதில் மேற்படி ஆணைகள் பொருந்தும்.

(ii) இந்த ஆணையினது இணைப்பில் கண்டுள்ள பொருட்களை தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்திற்குச் சொந்தமான அல்லது அதனால் உதவி பெற்ற தொழில் பிரிவுகளிடமிருந்து மட்டுமே மேற்படி முகவரமைப்புக்கள்

பொருள்களை வாங்க வேண்டும். பொருள்களை வாங்கும் முகவரமைப்புகள் சம்பந்தப்பட்ட கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் உதவி இயக்குநரிடம் வழங்கல் ஆணை தர வேண்டும். இந்தப் பொருள்களை வாங்குவதற்காக ஒப்பந்தப் புள்ளி கோரத் தேவையில்லை. கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், இந்தப் பொருள்களை வழங்க இயலாதபோது, வாரியத்தின் உதவி பெற்ற சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களிடமிருந்து கூட்டுறவு நிறுவனங்கள் உட்பட பொருள்களை வாங்க உள்ளூரிலுள்ள கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநர் ஏற்பாடு செய்யலாம். மாநில கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்துடன் கலந்து, மாவட்ட தொழில் மையமானது மேற்படி உதவி பெற்ற தொழில் பிரிவுகளிடமிருந்து வாங்கப்படுகின்ற பொருள்களின் விலைகளை நிர்ணயிக்கும்.

(iii) இந்த ஆணையின் இணைப்பின் பட்டியலில் அடங்காத பொருள்களை வாங்குவதற்கும், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தாலோ அல்லது அதன் உதவி பெற்ற தொழில் பிரிவுகளாலோ வழங்க இயலாதபோது, முன்னுரிமை அடிப்படையில் கீழ்க்கண்ட நிலையங்களிடம் பொருள் வாங்கும் முகவரமைப்புக்கள் வழங்கல் ஆணை தரவேண்டும்.

(அ) சிறைகள், சிறைத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சீர் திருத்தப் பள்ளிகள் மற்றும் இதர நிலையங்கள்,

(ஆ) முட்டுக்காட்டிலுள்ள நவீன பயிற்சி உற்பத்தித் தொழிற் கூடம்.

(இ) டான்சி நிறுவனம் உட்பட்ட அரசின் கட்டுப்பாட்டிலுள்ள அல்லது அரசுக்குச் சொந்தமான உற்பத்தி நிலையங்கள்.

(ஈ) அனைத்து கூட்டுறவு நிறுவனங்கள்.

(iv) மேற்கண்ட நிலையங்களிடமிருந்து பொருள்களை வாங்குகின்ற பொழுது ஒப்பந்தப் புள்ளிகள் கோரத் தேவையில்லை. எனினும், பொருள்களின் தரத்தைக் கருத்தில் கொண்டு குறிக்கப்படும் விலைகள் நியாயமானவையா என்பதை பொருள் வாங்கும் துறைகள் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(v) மேற்கண்ட எந்தப் பிரிவுகளிடமிருந்தும் பொருள்களை வாங்க இயலாமல் போனால் சிறு தொழில் பிரிவுகளிடம் வழங்கல் ஆணை தரலாம். இதுவும் முடியவில்லை என்றால் பெருரகத் தொழிற்சாலைகளிடமிருந்து வாங்கலாம். இவ்வாறு தனியார் பிரிவுகளிடமிருந்து பொருள்களை வாங்கும்போது பொதுவாகக் கடைப்பிடிக்கப்படுகின்ற ஒப்பந்தப் புள்ளி முறைகளைக் கடைப் பிடித்தல் வேண்டும். இந்த ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்கையில் அரசு ஆணை எண் 110, தொழில்கள் நாள் 3-11-1977-ல் வழங்கப்பட்ட விலைச் சலுகைக் கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டும்.



(vi) துணிகளை வாங்குவதைப் பொறுத்தவரை கைத்தறி மற்றும் கதர்ப் பிரிவுகளிடமிருந்து 50:50 (மதிப்பீட்டில்) என்ற விகிதத்தில் வழங்கல் ஆணை தருவதென்ற ஏற்கனவே உள்ள முறை தொடரவேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது. இதே போல, காவல் துறையும் அதற்குத் தேவையான சிறப்புப்பொருள்களை வாங்குவதில் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகளில் உள்ளவர்களால் கையால் தயாரிக்கப்படுகின்ற பொருள்களை நேரடியாக தொடர்ந்து வாங்கலாம்.

3. மேலே குறிப்பிட்ட விதிமுறைகளை முதற்கட்டமாக ஓராண்டுக்கு பின்பற்ற வேண்டும் என அரசு ஆணையிடுகிறது. மேற்கண்ட அரசு ஆணை செயற்படுத்தப்படுவது குறித்து கவனித்து வருமாறும், திருத்தங்கள் ஏதேனும் இருந்தால் அது குறித்து அரசுக்கு பரிந்துரைகளோடு கூடிய ஒரு ஆய்வை சமர்ப்பிக்க வேண்டும் என்று தொழில் வணிக, இயக்குநரும், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத் தலைமை நிர்வாக அலுவலரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பிற்குரிய தேவையான திருத்தங்கள், தனியாக நிதித்துறையால் வெளியிடப்படும்.

5. இந்த ஆணையானது நிதித்துறையின் ஒப்புதல் பெற்றது. அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 1638-ஜேஎஸ். (எப்)-78.1, நாள் 28—8—1978 என்பதன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. பா. கீதாகிருஷ்ணன்,

ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்

## பின் இணைப்பு.

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் உதவி பெற்ற தொழில் பிரிவுகளிலிருந்து வாங்கப்பட வேண்டிய பொருள்கள்.

1. எண்ணெய் வகைகள்.—நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய்.

2. கையால் செய்த காகிதங்கள், (அதிகப் படியெடுக்கப் பயன்படும் காகிதம், நேர்முகக் கடித காகிதங்கள், வரைவு குறிப்புத் தாள்கள், எழுதப் பயன்படும் தாள்கள்; முத்திரைத் தாள்கள் பத்திரத் தாள்கள், கோப்பு அட்டைகள், காகித அட்டைகள், கோப்பு உறைகள், கடிதம் அனுப்புகை உறைகள், இ.எஸ்.ஐ. உறைகள், மேலுறைகள், உறைகள், மை உறிஞ்சும் தாள்கள். கோப்பு அட்டைகள் மற்றும் எழுதப் பயன்படும் அட்டைகள் உட்பட கடித உறைகள், முட்டைகள் வைக்க உதவும் அட்டைகள், வடிகட்ட உதவும் தாள்கள், தீப்பெட்டிக் காகிதம்.)

3. மட்பாண்டங்கள்.—பூந்தொட்டிகள், செங்கற்கள், களிமண் குழாய்கள், தரை ஓடுகள், நீர்த் தொட்டிகள்

4. கைத்குத்தல் அரிசி (தீட்டியது, தீட்டப்படாதது).—

(i) துவரை,

(ii) உளுந்து,

(iii) பச்சைப்பயறு,

(iv) கடலைப் பருப்பு,

(v) ரொட்டிகள், அப்பளங்கள்.

5. சோப்பு.—சலவை மற்றும் குளியல் சோப்புகள் முதலியன.

6. தோல்.—காலணிகள், நடத்துனர் பைகள், பேருந்துகளின் தோல் பட்டைகள், அஞ்சல் பைகள், சிறு பைகள், கோப்பு பைகள், உறைப்பைகள், தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் கையுறைகள் போன்றவை.

7. தச்சு, கொல்லு பட்டறை.—எல்லா நாற்காலி வகைகள், சிலேட்டுகள், வேளாண்மைக் கருவிகள், மண் வேலை, சாலை வேலை கருவிகள்.

8. பனை.—குப்பைக் கூடைகள், தூரிகைகள், ஒட்டுநர் இருக்கைகள், அமில நீர்.



9. பிரம்பு, மூங்கில் :—காவலர் கேடயம், அனைத்து மரச் சாமான்கள்.

10. நார்வகைகள் :—கதவு பாய்கள், கயிறுகள், கோரைப் பாய்கள்.

11. தேன்.

12. சுண்ணாம்பு :—நீரகற்றப்பட்ட சுண்ணாம்பு, தொழிற்சாலைகளில் பயன்படும் சுண்ணாம்பு.

13. பழப்பாகு :—பழரசம், ஊறுகாய், நக்காளிப்பாகு.

கா. பா. கீதாகிருஷ்ணன்,
ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்.

நகல் :

## இணைப்பு—II.

## தொழில்துறை.

அரசு நிலை ஆணை எண். 110, நாள் 31—1—1977.

தொழில்—பண்டங்கள்—அரசு துறைகள், அரசு நிறுவனங்கள், வாரியங்கள் முதலியவைகளுக்கு தேவையான பண்டங்களை வாங்குதல்—ஆணை—வெளியிடப்படுகிறது.

பார்வை :—

1. தொழில், தொழிலாளர் கூட்டுறவு (சிறப்பு) துறை அரசு நிலை எண் 633, நாள் 31—3—1959.

2. தொழில், தொழிலாளர், வீட்டு வசதி (சிறப்பு) துறை அரசு நிலை ஆணை எண் 831, நாள் 1—3—1968.

மீண்டும் பார்வை :—

தொழில் வணிக இயக்குநர் கடிதம் எண் 211161/1/74, நாள் 9—8—1975.

அரசு நிலை ஆணை எண் 831, தொழில் தொழிலாளர் வீட்டு வசதி (சிறப்பு), நாள் 1—3—1968-ல் பல்வேறு அரசுத் துறைகளுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைப் பற்றி ஆணை வெளியிடப்பட்டது. அவ்வாணையின்படி அரசுத் துறைக்குச் சொந்தமான சிறு மற்றும் குடிசைத் தொழில் அலகுகளிடமிருந்து பொருட்கள் கிடைக்குமானால் அவைகளை அரசு நிலை ஆணை எண் 633, தொழில், தொழிலாளர் கூட்டுறவு (சிறப்பு)-ல் கூறியபடி வாங்க வேண்டும். அரசுத் துறையைச் சார்ந்த சிறு மற்றும் குடிசைத் தொழில் அலகுகளிடம் பொருட்கள் கிடைக்காவிடில், வெளிப்படையாக ஒப்பந்தப் புள்ளிகள் கோரி, தனியார் துறையிலுள்ள குடிசை மற்றும் சிறு தொழில்களுக்குச் சலுகை அளித்து அதாவது பெருந்தொழில்கள் குறிப்பிட்டுள்ள விலைக்கும் மேலாக 15 சதவிகிதம் வரை விலைச் சலுகை அளித்து பொருட்களை வாங்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. தரம் சீராக இருந்தால், தமிழ்நாட்டிலுள்ள குடிசை சிறு மற்றும் பெருந் தொழிற்களின் பொருட்களுக்கு இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைக் காட்டிலும் மேற்கொண்டு 10 சதவிகிதம் வரை விலைச் சலுகை வழங்கப்



பட்டது. விலைச் சலுகைக் கொள்கையின் சுருக்கம் கீழ்க்கண்ட பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது. (அடிப்படை விலை ரூ. 100 என்று கணக்கிட்டால்).—

| | பெருந் தொழில் கள். | சிறு தொழில் கள். | குடிசைத் தொழில் கள். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| வெளி மாநிலங்களில் தயாராகும் பொருட்களுக்கு .. .. | 100 | 115 | 115 |
| தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு .. .. | 110 | 125 | 125 |

சிறு தொழில்கள், பெருந்தொழில்களோடு ஒப்பிடும்போது அமைப்பு முறை, தொழில் நுட்ப முன்னேற்றம், உற்பத்தித்திறன், நிதி நிலைமை ஆகியவற்றில் எப்பொழுதுமே இக்கட்டான நிலையில் உள்ளது. எனவே சிறு தொழில்களின் நலனை காத்திடும் பொருட்டு விலைச் சலுகை கொள்கையை நிரந்தர பரிகாரமாக ஏற்று ஆணையிடப்பட்டது.

2. மேற்கண்ட ஆணைகளை வெளியிட்டபின், அநேக பொது நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டன. அதற்கு முன் தொழில் அலகுகள் அரசுத் துறைகளால் நடத்தப்பட்டு வந்தன. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம், தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனம், தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம், முதலிய நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டபின், அந்த அலகுகள் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டன.

3. விலைச்சலுகை கொள்கையை சில அரசுத் துறைகளும் அரசு நிறுவனங்களும் அமுல் நடத்தவில்லை என்று அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளன. விலைச்சலுகை கொள்கை 1956-ம் ஆண்டு மத்திய அரசால், பெருந்தொழில்களுக்கு எதிராக சிறு தொழிலுக்கு ஆதரவாகவும், சிறு தொழில்களை வளர்த்து விருத்தி செய்வதற்காக பலமுனைகளில் உதவி அளிக்க வேண்டும் என்ற கொள்கையை தொடர்ந்து எடுக்கப்பட்ட ஒரு முடிவாகும். சிறு தொழில்களுக்கு உதவி அளித்து அவை அரசு கொள்முதலில் பெருமளவில் பங்கேற்கவேண்டும் என்ற அரசின் இலட்சியத்தை அடையும்பொருட்டும், ஏற்கனவே இருக்கும் மற்றும் இனி அமைய இருக்கும் சிறு தொழில்களில் உற்பத்தித் திறனை முழு அளவில் உபயோகப்படுத்தி ஊக்கப்படுத்துவதற்காகவும், அவைகளுக்கு உரிய சலுகை

பொருட்களின் தரத்திற்கு ஏற்பவும் குறிப்பிட்ட நாளில் பொருட்களை விநியோகம் செய்யும் திறமைக்கும் ஏற்றாற் போல் இருக்கவேண்டும் என்றும் மத்திய அரசு குறிப்பாக ஆணை வெளியிட்டுள்ளது. எனவே சிறுதொழில்களுக்கு, நியாயமான விலைச் சலுகை 15 சதவீதம் வரை அளிக்கலாம் என்று மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. இதைத் தொடர்ந்து 15 சதவீதம் வரை சிறுதொழில்களுக்கு விலைச் சலுகை அளித்ததுமட்டுமல்லாமல், மேலும் 10 சதவீதம் வரை விலைச்சலுகை இம்மாநிலத்தின் உள்ளூர் தொழில்களுக்கும் அளித்து, மாநில அரசு ஆணையிட்டுள்ளது. சமீபத்தில் அதாவது 1976-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் கூட மத்திய அரசு பெருந்தொழில்களுக்கு எதிராக சிறுதொழிலுக்கு விலைச் சலுகை அளிக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. மாநிலத் துறைகளுக்கு தேவையான பண்டங்களை வாங்கு வதில் சிறு தொழில்களுக்குத் தனிச்சலுகை எதுவும் அளிக்கப்பட வில்லை என்று மத்திய அரசு சுட்டிக்காட்டி இருக்கிறது. தேசிய ரீதியில் சிறுதொழில்களுக்கு உரிய முக்கியத்துவத்தை கருத்தில்கொண்டு அவை உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்வதில் உதவிடவேண்டும் என்றும் அவைகளின் பல்வேறு பொருட்களை பெருமளவில் வாங்கும்படி மின் வாரியம் முதலிய பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஆணை யிடுமாறும் நாம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறோம்.

4. உள்ளூர் தொழிலுக்கும், சிறுதொழிலுக்கும் அளிக்கும் விலைச்சலுகை கொள்கையை அரசு மீண்டும் கவனமாக ஆராய்ந்து, ஏற்கனவே வெளியிட்ட ஆணைகளுக்குத் திருத்த மாக, அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிடுகிறது:—

(i) அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் தன்னாட்சி வாரியங்கள், நகராட்சிகள், உள்ளாட்சிக் கழகங்கள் முதலியன தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களுக்கு (15 சதவீகிதம் வரை) விலைச் சலுகை அளிக்க வேண்டும்.

(ii) தமிழ்நாட்டிலுள்ள சிறுதொழில் அல்லாத தொழி லாளர்களுக்கு விலைச்சலுகை எதுவும் கிடையாது. எனினும் அவைகளின் பொருட்களுக்கு அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், தன்னாட்சி வாரியங்கள், நகராட்சிகள் உள்ளாட்சிக் கழகங்கள் முதலியன சலுகை காட்டவேண்டும்.

(iii) கூடியவரை சாதனங்கள் வாங்குவதில்—நில அடமான வங்கிகளால் அல்லது அவைகளின் மூலமாக கருவிகள் வாங்குதல் போன்றவைகளில் (எடுத்துக்காட்டாக மின்குழாய் இணைப்புகள்) மேற்கண்ட ஆணைக்கேற்ப ஒப்பந்த விகிதத்தின் அடிப்படையில் வாங்கலாம்.



(iv) பொதுத்துறை நிறுவனங்களின் பொருட்களுக்கு, தனியார் துறையின் பொருட்களை விட மேற்கொண்டு 10 சதவிகிதம் விலைச்சலுகை அளிக்க வேண்டும்.

(v) பொருட்களை வாங்கும் போதெல்லாம், ஒப்பந்தப் புள்ளிகள் கோரவேண்டும். பொதுத்துறை நிறுவனங்களை பொறுத்தவரை, மேற்படி விலைச்சலுகை கலந்துரை மூலமாக ஒப்புக்கொள்ளப்பட்ட விலையின் அடிப்படையில் அமைய வேண்டும்.

(vi) இனிமேல் செயல்படும் பொதுத்துறை நிறுவனங் களுக்கு அவை உற்பத்தியைத் துவங்கிய காலத்திலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை விலைச்சலுகை அளிக்கப்படும். தற்போது செயல்படும் நிறுவனங்களுக்கு இன்றிலிருந்து மூன்றாண்டு காலம் தான் விலைச்சலுகை அளிக்கப்படும். அதன்பின் தற்போதுள்ள ஏற்பாடுகள் மறுபரிசீலனை செய்யப்படும்.

(vii) விலைச் சலுகையானது கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

(1) பொருட்கள் தேவையான தரம் உள்ளதாக இருக்கவேண்டும் ;

(2) விநியோகக்கெடு ஒப்புக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

5. மேற்கண்ட அரசு ஆணைகள் அரசுத் துறைகளுக்கு மட்டுமல்லாமல் அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது என்ற முறையில் நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாநக ராட்சிகள், பொதுத்துறை நிறுவனங்கள், சுயமாக இயங்கும் வாரியங்கள் முதலியவைகளுக்கும் பொருந்தும் என்பதை அரசு வலியுறுத்த விரும்புகிறது.

6. மேற்கண்ட அரசு ஆணையை கடைப்பிடிக்கும்படி பார்த்துக்கொள்வதும், கடைப்பிடிக்காவிட்டால் தவறுதல்களை அரசின் கவனத்திற்குக்கொண்டு வருவதும், வாரியங்களிலும், மேலாண்மைகளிலும் பணியாற்றும் அரசு இயக்குநர் நியமன உறுப்பினர்கள் ஆகியோர்களின் பொறுப்பு ஆகும்.

7. மேற்கண்ட அரசு ஆணையை கடைப்பிடிக்காமல் போனது பற்றி சிறு, மற்றும் குடிசை தொழில்களிடமிருந்து முறையீடுகள் எதுவும் உள்ளனவா என்பதை தொழில் வணிக இயக்குநர் கண்டறியவேண்டும். முடிந்தால் தொழில் வணிக இயக்குநர் அதன்மேல் பரிகார நடவடிக்கை எடுக்கவேண்டும். தேவையானால் மேற்படி தவறுதல்களை அரசின் கனவத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

8. இந்த ஆணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப் படுகின்றது (காண்க. அத்துறை அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 59/77, நிதி. நாள் 1977-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ம் தேதி.)

(ஆளுநரின் ஆணைப்படி)

தி. ந. சேஷன்,
ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர்.

(தமிழாக்கம்).



குறிப்பாணை எண். 16191 (ஏ) சி. தொ. பி1 77—1, நாள் 1977-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 16-ம் நாள்.

தொழில் —பண்டங்கள், அரசுத்துறைகள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான பொருட்களை வாங்குதல் — அரசு ஆணைக்கு —திருத்தம் —வெளியிடப் படுகிறது.

பார்வை : அரசு நிலை ஆணை எண். 110, தொழில்துறை, நாள் 31—1—1977.

அரசு நிலை ஆணை 110, தொழில், நாள் 31—1—1977, பத்தி 4 (iv)-ல் பொதுத்துறை நிறுவனங்களின் பொருட்களுக்குத் தனியார் துறையின் பொருட்களைவிட மேற்கொண்டு 10 சத வீதம் விலைச்சலுகை அளிக்கவேண்டும் என்று ஆணை யிட்டுள்ளது.

2. பொதுத்துறை நிறுவனங்கள் என்பதற்கு விளக்கம் என்ன என்ற வினா தற்போது எழுந்துள்ளது. 50 சதவீதத் துக்கும் குறைவாக அரசு மூலதனம் உள்ள தொழில் அலகுகளா, அல்லது ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம், யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா முதலிய நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் மூலதனப் பங்குகள் எடுத்துள்ளள தொழில் அலகுகளா அல்லது மாநில அரசும் மத்திய அரசும் மூலதனப் பங்குகள் எடுத்தும் மாநில அரசுக்கு பற்று எதுவும் இல்லாத தொழில் அலகுகளை குறிக்குமா என்பது கேள்வி.

ஆழ்ந்த பரிசிலனைக்குப் பிறகு கீழ்க்கண்ட விளக்கத்தை அரசு அளிக்கிறது. ''மொத்த மூலதனத்தில் தமிழ்நாடு அரசு 50 சதவீதத்திற்கும் மேலாக பங்குகள் எடுத்திருக்கும் நிறுவனங்கள்தான் பொதுத்துறை நிறுவனங்கள் எனக் கருதப் படும்.''

தி. ந. சேஷன்,
ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர்.

(தமிழாக்கம்).

நகல்

தொழில் துறை.

குறிப்பாணை எண். 11606 (ஏ) / எஸ்.ஐ.பி.1/78-4, நாள் 11-7-1978.

பொருள் : தொழில்கள் — பொருள்கள் — அரசுத்துறைகள் மற்றும் அரசு வாரியங்களுக்குத் தேவையான பண்டங்கள். வாங்குதல் — திருத்தம் — ஆணைகள் — வெளியிடப்படுகிறது.

பார்வை : அரசு ஆணை எண். 110, தொழில்கள், நாள்: 31—1—1977.

பார்வையில் கண்டுள்ள அரசாணையில், சிறு தொழில்களுக்கு விலைச் சலுகையளித்து, அரசு ஆணை வெளியிட்டுள்ளது. சிறு தொழிற்சாலைகளால் தயாரிக்கப்படுகின்ற பொருள்களை பொது இயக்குநர், வழங்கல் மற்றும் விற்பனைத்துறை அவர்களால் ஏற்கப்பட்ட ஒப்பந்த வீதத்தின் கீழ் வருகின்ற பொருள்களை அரசுத் துறைகளிடமிருந்து அப்பண்டங்களை வாங்குவதற்கு கோரிக்கைகள் பெறப்படுவதில்லையென மாநிலத்திலுள்ள சிறு தொழிற்சாலைகளிடமிருந்து முறையீடுகள் வந்துள்ளன. ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு, சிறு தொழிற்சாலைகளின் வேண்டுகோளை அரசு ஏற்றுக் கொண்டது. எனவே பார்வையில் கண்டுள்ள அரசாணையை கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்யப்படுகிறது.

திருத்தம்.

பார்வையில் கண்டுள்ள அரசாணை பத்தி 4-ல் துணைப் பத்தி (vii) க்குப் பிறகு, பின் வருகின்ற துணைப் பத்தியை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

(viii) "தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழிற்சாலைகளுக்குரிய விலைச் சலுகையானது, வழங்கல் மற்றும் விற்பனைத் துறை பொது இயக்குநர் அவர்களது ஒப்பந்த வீதத்தைச் சார்ந்த பொருள்களை வாங்குவதற்கும் பொருந்தும்."

2. இக்குறிப்பாணையானது நிதித்துறையின் ஒப்புதலான அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 461/ஜே.எஸ்./நிதி/78, நாள். 15-3-1978 என்பதன்படி வெளியிடப்படுகிறது.

க. பா. கீதாகிருஷ்ணன்.
அரசு ஆணையாளர் மற்றும் செயலாளர்.
தமிழாக்கம்.



நகல்

தொழில் துறை

குறிப்பாணை எண். 11806(ஏ)/எஸ்.ஐ.பி.1/785, நாள்: 9-11-1978.

தொழில்கள் — பண்டங்கள் அரசுத் துறைகள் மற்றும் அரசு வாரியங்களுக்குத் தேவையான பண்டங்கள் வாங்குதல்— வழங்கல் மற்றும் விற்பனை பொது இயக்குநரின் ஒப்பந்த வீதத்தில்— கீழ் வருகின்ற பொருள்கள் —விளக்கம்— வழங்கப்படுகிறது.

பார்வை : 1. அரசு ஆணை எண். 110, தொழில்கள், நாள்: 31-1-1977.

2. அரசு குறிப்பாணை எண். 11806/ஏ/எஸ்.ஐ.பி.1/'78- , நாள் : 11-7-1978.

3. குறிப்பாணை எண். 11806(ஏ)/எஸ்.ஐ.பி.1/78-5, தொழில் துறை, நாள் . 9-11-1978.

சிறு தொழிற்சாலைகளால் தயாரிக்கப்படுகின்றதும் வழங்கல் மற்றும் விற்பனைத் துறை பொது இயக்குநரின் ஒப்பந்த வீதத்தின் கீழ் வருகின்ற பொருள்களை வாங்குவதற்கு அரசுத் துறையிடமிருந்து கோரிக்கைகள் பெறப்படுவதில்லையென மாநிலத்திலுள்ள சிறு தொழிற்சாலைகளிடமிருந்து முறையீடுகள் வந்ததைத் தொடர்ந்து, அரசாணை எண். 110, தொழில்கள் நாள். 31-1-1977—ல் சிறு தொழிற்சாலைகளுக்கு வழங்கிய விலைச் சலுகையானது, வழங்கல் மற்றும் விற்பனைத் துறை பொது இயக்குநர் அவர்களது ஒப்பந்த வீதத்தின் கீழ் வருகின்ற பொருள்களுக்கும் பொருந்துமென, பார்வையில் கண்டுள்ள குறிப்பாணையில் ஆணையிட்டுள்ளது.

2. அரசுத் துறைகளில் ஒன்று மேற்கண்ட அரசாணைகளின் படி பொருள்களை வாழ்கப்படுகின்ற பொழுதுதான் சிறு தொழில்களுக்கு விலைச் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்றும் வழங்கல் மற்றும் விற்பனைப் பொது இயக்குனரின் ஒப்பந்த வீதத்தின் படி திறந்த ஒப்பந்தப் புள்ளிகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் கேட்காமலேயே பொருள்களை வாங்குவதற்கு இன்னும் ஒப்புதல் உள்ளது என்று இத்துறையானது தெரிவிப்பதாக அரசுக்கு முறையிடப்பட்டுள்ளது. பார்வை 2 ல் கண்டுள்ள அரசு குறிப்பாணையிலுள்ள நோக்கம் யாதெனில், வழங்கல் மற்றும் விற்பனைத்துறை பொது இயக்குநரின் ஒப்பந்தத்தின் கீழ் வருகின்ற பொருள்களை விரசு துறைகள், பொதுத்துறை நிறுவ

னங்கள் போன்றவைகளிடமிருந்து கோரிக்கை ஆணைகள் பெற்று தமிழ்நாட்டிலுள்ள பதிவுசெய்யப்பட் சிறு தொழிற்சாலைக்கு உதவியளிக்க வேண்டுமென்பதேயாகும். அதாவது வாங்கும் துறையினால், வழங்கல் மற்றும் விற்பனைத்துறை பொது இயக்குநரின் ஒப்பந்த வீதத்தில் வருகின்ற பொருள்களை வாங்குவதில், சிறு தொழிற்சாலைகளுக்கு வழங்கல் மற்றும் விற்பனைத் துறை பொது இயக்குனரின் ஒப்பந்த வீதத்திற்கு மேல் 15 சத வீதம் விலைச் சலுகை காட்ட வேண்டும். இந்த சிறு தொழிற்சாலைகள் அப்பொருள்களை வழங்குவதற்கும், மதிப்பீடுகள் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் கேட்காமல் தரக் குறியீட்டினை எதிர்பார்த்தும் வழங்குவதற்குத் தயாராக வேண்டும். வழங்கல் மற்றும் விற்பனை பொது இயக்குநரின் ஒப்பந்த வீதத்தின்கீழ் வருகின்ற பொருள்களை தற்பொழுது தயாரிக்கின்ற சிறு தொழிற்சாலைகளை, விவரங்களை பொருள்களை வாங்குகின்ற துறையானது தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் அத் தொழில் நிறுவனங்களுக்கு நேரடியாகவோ அல்லது தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் மூலமாகவோ ஆணைகள் வழங்க முடியும்.

3. அரசுத் துறைகளின் தலைவர்கள், பொதுத்துறை நிறுவனங்களின் தலைவர்கள் இந்த அறிவுரைகளைத்தங்களது கட்டுப்பாட்டின் கீழுள்ள பொருள்களை வாங்கும் அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

க. பா. கீதாகிருஷ்ணன்,

அரசுச் ஆணையாளர் மற்றும் செயலாளர்.

தமிழாக்கம்.



நகல்

## இணைப்பு III.

### தமிழ்நாடு அரசு.

சுருக்கம்.

[மேல்நிலைக் கல்வி—மேல்நிலைப் பள்ளிகளுக்குரிய அறிவியல் சாதனங்கள் வழங்குவது—சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் மையக் கொள்முதல் செய்கின்ற திருத்தப்பட்ட முறைகள் ஒப்புதலளிக்கப்பட்டது.]

கல்வித் துறை.

அரசு நிலை ஆணை எண். 468. நாள் : 21—3—1979.

பார்வை :

1. அரசு நிலை ஆணை எண் 156, கல்வி, நாள் 27—1—1978.

2. அரசு நிலை ஆணை எண் 441, கல்வி, நாள் 9—3—1978.

3. அரசு நிலை ஆணை எண் 366, கல்வி, நாள், 7—3—1979.

4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் எண். 8301/டபுள்யூ/9/78, நாள் 9-1-1979.

5. சிட்கோ நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரின் நே.மு. கடித எண் 7308/இ. 2/79, நாள் 1—3—1979.

ஆணை—

அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சோதனைக் கூடச் சாதனங்கள் வாங்குவதில் அரசு ஆணை எண் 156, கல்வி, நாள் 27—1—1978 என்பதில் வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் கூறப்பட்ட முறையானது திருப்திகரமாகச் செயல்படவில்லை என்றும் பொருள்கள் வழங்குவதில் குறிப்பிடத்தக்க தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு முன்னால், அந்த சோதனைக் கூடங்களுக்குத் தேவையான அனைத்து அறிவியல் சாதனங்களை வழங்கப்படுவது அவசியமெனக் கருதியதாலும் மாநிலத்திலுள்ள சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற அரசின் கொள்கை

என்பதாலும் சிறுதொழில்களுக்கு ஊக்கமளித்து வருவதில் ஈடு பட்டுள்ள மாநில அரசுக்குச் சொந்தமான 'சிட்கோ' நிறுவனம் மூலம் இச்சாதனங்களை வாங்க வேண்டுமென அரசு முடிவெடுத் துள்ளது.

2. இதன்படி, அரசு ஆணை எண் 156, கல்வி, நாள் 27-1-1978 என்பதில் வழங்கப்பட்டுள்ள ஆணையினை மாற்றம் செய்து அரசினர் மேல்நிலைப் பள்ளிகளில் முதல் மற்றும் இரண்டாவது ஆண்டுகளுக்குரிய சோதனைக் கூடக் கருவிகளை வாங்குவதற்கு அரசு ஆணை எண் 366, கல்வி, நாள் 7-3-1979 என்பதில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளபடி, கீழ்க்கண்டுள்ள பத்தி 3-ல் கூறி யுள்ள திருத்தப்பட்ட முறைகளை, நடைமுறைப்படுத்த வேண்டு மென அரசு கட்டளையிட்டுள்ளது.

3. முந்தைய பத்தியில் சொல்லப்பட்டுள்ள திருத்தப்பட்ட முறையானது பின்வருமாறு :—

(I) வாங்கப்படவிருக்கின்ற பல்வேறு சாதனங்களின் விலை யினை நிர்ணயம் செய்வதற்கு, 'சிட்கோ' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பள்ளிக் கல்வி இயக்குநரால் நியமனம் செய்யப்பட்ட ஒரு இணை இயக்குநர், ஒரு தொழில் வணிக இணை இயக்குநர், உறுப்பினர்—செயலராக 'சிட்கோ' நிறுவனத்தின் ஒரு அலுவலர் ஆகியோரைக் கொண்ட ஒரு சிறப்பு கொள்முதல் குழு அமைக்கப் படும். 'சிட்கோ' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் இக் குழுவின் தலைவராகவும் இருப்பார். பல்வேறுபட்ட தொழில் முனைவர்களோடு கலந்து பேசி, ஒப்பந்த விகித நிபந்தனைகளை வரையறை செய்வார். அரசுக்கு இவற்றை ஒப்புதல் பெறுவதற்கு பரிந்துரை செய்யப்படும்.

(II) பொருள்களை வாங்குவதற்குரிய ஆணைகளையிடுதல், குறித்த விலைகளைக் கேட்டல், ஒப்பந்தம் செய்தல் போன்ற வற்றில் இந்தச் சிறப்பு கொள்முதல் குழுவின் தலைவராக உள்ள 'சிட்கோ' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரே முழுப் பொறுப் பேற்றிருப்பார். பல்வேறுபட்ட சிறு தொழில் பிரிவுகளின் தயா ரிக்கப்பட்ட பொருள்களை, அத்தொழில் பிரிவுகள் குறிப்பிட்ட நேரத்தில் குறிக்கப்பட்ட தரத்தில் வழங்குகின்றனவா என்பதை கவனிப்பதும் இவரது பொறுப்பாகும். அரசின் நலனைக் காப் பாற்றுவதற்கு தொழில் நிறுவனங்களுடன் தேவையான ஒப்பந் தங்களை இவர் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

(III) குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த விகித நிபந்தனைகளின்படி, குறிப்பிட்ட தரத்தில், உரிய நேரத்தில் சாதனங்களை 'சிட்கோ' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரால் வழங்கப்படும்.



(IV) தனி உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட வகைப் பாருள்களை பொறுத்தமட்டில் இதே முறையினை 'சிட்கோ' றுவனத்தின் நிர்வாக இயக்குநர் கடைப்பிடித்து, ஒப்பந்த விகித பந்தனைகளின்படி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண் ம். தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில் பிரிவுகள் இவ்வகைப் பாருள்களை தீவிரமாக தயாரிப்பதற்கு முயற்சிகள் எடுக்க வண்டும்.

(V) பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள், தேவையான குறிப் ட்ட தரம், வழங்கப்பட வேண்டிய காலம் ஆகியவை அடங்கிய ியான பட்டியல்களை 'சிட்கோ' நிறுவனத்தின் நிர்வாக யக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

(VI) பள்ளிக் கல்வி இயக்குநருக்கும், 'சிட்கோ' நிறுவனத் ன் நிர்வாக இயக்குநருக்கும், பொருள்கள் அனுப்பப்படுவதற்கு ன்பு, தயாரிப்பாளர்களின் இடங்களில் சென்று தரமுடைய பாருட்களா என ஆய்வு செய்வதற்குரிய சிறு நிபுணர் குழுவை மைக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் டிவை சிறப்பு கொள்முதல் குழுவின் கவனத்திற்கு கொண்டு ர வேண்டும்.

(VII) 'சிட்கோ' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், ழங்கப்பட்ட பொருட்களின் மொத்த தொகைக்குரிய பட்டியல் ளை பட்டுவாடாச் செய்வதற்கு, பள்ளிக் கல்வி இயக்குநருக்கு னுப்பி வைக்க வேண்டும். நியமிக்கப்பட்ட நிபுணர் குழுக்கள் பாருட்களின் தரத்திற்கு சான்றளிக்கப்பட்ட பிறகு தயாரிப்பு லையங்களால் சாதனங்களை நேரடியாக பள்ளிகளுக்கு னுப்பி வைக்கப்படும். 'சிட்கோ'வின் நிர்வாக இயக்குநர், யாரிப்பு நிலையங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளுகின்ற பாழுது, இவை பற்றி வரையறை செய்யவேண்டும்.

(VIII) 'சிட்கோ'வின் நிர்வாக இயக்குநர் வழங்கப்பட்ட பாருட்களுக்கு ஒரே பட்டியலை, வெவ்வேறு பள்ளிகளிடமிருந்து பறப்பட்ட ஒப்புகைகளுடன் சேர்த்து பள்ளிக் கல்வி இயக்கு நக்கு பட்டுவாடா செய்வதற்கு அனுப்பி வைக்கவேண்டும். ள்ளிக் கல்வி இயக்குநரும் ஒரே பட்டியலுக்குரிய தொகையை ட்கோ' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி, அவரால் த்தொகையினை பல்வேறு தொழில் நிலையங்களுக்கு பட்டு டாச் செய்யப்படும். பள்ளிக் கல்வி இயக்குநருக்கும் 'சிட்கோ' ன் நிர்வாக இயக்குநருக்கும் இடையே முன்பணம் வழங்கு தற்கு ஒப்பந்தம் ஏதேனும் மேற்கொண்டிருந்தால் விரைவான யாரிப்பிற்கும், உரிய காலத்தில் பொருள்களை வழங்குவதற்கும் ன்பணங்கள் வழங்கப்படும்.

[1979 ஏப்ரல் 24

(IX) தேவைப்படுகின்ற நேரத்தில் சிறப்பு கொள்முதல்குழுவானது, பள்ளிக் கல்வி இயக்குநருடன் ஆலோசனை மேற்கொள்ளும். 'சிட்கோவின்' நிர்வாக இயக்குநர், அனைத்து அறிவியல் சாதனங்களையும் பள்ளிகளுக்கு உரிய காலத்தில் வழங்குவதைக் கவனித்துக் கொள்வார்.

4. இந்த ஆணையானது நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண் 179/டி.எஸ். (ஏ)/79-1, நாள் 19-3-1979 என்பதன் ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி.)

இ. சி. பி. பிரபாகர்,

ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர்.

(தமிழாக்கம்.)

நகல்:

## இணைப்பு IV.

தமிழ்நாடு அரசு.

சுருக்கம்.

பொது சுகாதாரம்—சிறு தொழில்கள்— சுகாதார ஒப்புதல் வழங்கல்—மாவட்டச் சுகாதார அலுவலர்களுக்கு அதிகாரங்கள் அளித்தல்—அறிவுரைகள் பிறப்பித்தல்.

சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை.

அரசு ஆணை நிலை எண் 291, நாள் பிப்ரவரித் திங்கள் 20, 1979.

பார்வை :—

1. தொழில் வணிக இயக்குநருக்கு, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் அனுப்பிய கடித எண் 285035/எச்2/78—1, நாள் 9—11—1978.

2. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து உதவி இயக்குநர் கடித எண் 28503/எச்2/78—2, நாள் 29—11—1978.



1979 ஏப்ரல் 24]

3. தொழில் வணிக இயக்குநருக்கு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் அனுப்பிய கடித எண் 285032/எச்2/78—4, நாள் 28—12—1978.

ஆணை:—

உடல் நலனுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய கழிவுப் பொருட்களை வெளியேற்றாத, சுற்றுப் புறத் தூய்மையைப் பாதிக்காத புதிய சிறு தொழில்களின் விண்ணப்பங்களையும் உள்ளாட்சி மன்றங்கள் சுகாதாரத் துறையின் ஒப்புதலுக்காக அனுப்புகின்றன என்று பல சமயங்களில் முறையிடப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் நாளன்று நடந்த மாவட்டத் தொழில் மையங்களின் திட்டக்குழுவின் கூட்டத்தில் இப்பொருள் பற்றிக் கலந்தாலோசிக்கப்பட்டது. எவ்வகையான உற்பத்திப் பொருட்களுக்குச் சுகாதாரத் துறையின் முன்ஒப்புதல் மாவட்ட அல்லது'' மாநில அளவில் தேவையென்பதைத் தெளிவாகப் பொது சுகாதார மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் தெரிவிக்க வேண்டுமென இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

2. பொது சுகாதார மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் தொழில் வணிக இயக்குநரைக் கலந்தாலோசித்து சிறு தொழில் துறையில் புதிதாக அமைக்கப்படுகின்ற தொழில்களுக்குச் சுகாதாரத் துறையின் முன்ஒப்புதல் இவ்வாணையின் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ள 14 தொழில்களுக்கு மட்டும்தான் தேவையெனத் தெரிவித்திருக்கிறார். சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களால் ''தொழிற் பகுதிகள்'' என அறிவிக்கப்பட்ட பகுதிகளில் சிறு தொழில் துறையில் அமைக்கப்படும் மற்ற எல்லாத் தொழில்களுக்கும் சுகாதாரத் துறையின் முன் ஒப்புதல் தேவையில்லை. ஆகையால், உள்ளாட்சி மன்றங்கள் உரிமங்கள் வழங்குவதற்குமுன் அம்மாதிரியானவிண்ணப்பங்களைச் சுகாதாரத் துறைக்கு அனுப்பத் தேவையில்லை.

3. உடல் நலனுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்களையும் மற்றும் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதிக்கக் கூடிய சாத்தியக் கூறுகளையும் அடிப்படையாகக் கொண்டு பின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள 14 வகையான உற்பத்திகளைக் கொண்ட தொழில் பட்டியல் தயாரிக்கப்பட்டது. இவ்வகையான தொழில்களிலும் திட, திரவ, வாயு, கழிவுப் பொருட்களை வெளியேற்றும், தண்ணீர், அமிலங்கள், உப்புக்கள், இரசாயனப் பொருட்கள், உலையில் காய்ச்சுதல் ஆகிய பொருட்களை உபயோகிக்காத தயாரிப்பு முறைகளைக் கொண்ட, தொழிற் பகுதிகளில் நிறுவப்படும் சிறு தொழில்களின் விண்ணப்பங்களை உள்ளாட்சி மன்றங்கள், தன் துறையின் முன் ஒப்புதலுக்காக அனுப்பத் தேவையில்லையென பொது சுகாதார மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர், தெரிவித்துள்ளார். பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ள 14 வகையான தொழில்கள்,

சாதாரணமாகக் கழிவுப் பொருட்களை வெளியேற்றக் கூடியவையாகும். இம்மாதிரியான தொழில் வகைகளும், தயாரிப்பு முறைகளால் அல்லது வேறு காரணங்களினால், அம்மாதிரியான கழிவுப் பொருட்களை வெளியேற்றக்கூடியதன்று என ஒரு விண்ணப்பதாரர் கருதினால், விண்ணப்பத்துடன் அதற்கான உறுதி மொழியைத் தயாரிப்பு முறை பற்றிய வரைபடத்துடன் உள்ளாட்சி மன்றங்களுக்கு அனுப்பலாம். இம்மாதிரியாள இனங்களில் விண்ணப்பதாரரின் கோரிக்கையைச் சம்பந்தப்பட்ட, மாவட்டத் தொழில் மையங்கள் உறுதிப்படுத்திய பிறகு, சுகாதாரத்துறைக்கு அனுப்பாமல் உள்ளாட்சி மன்றங்களே அக்கோரிக்கைகளுக்கு ஒப்புதல்கள் வழங்கலாம். ஐயந்திற்குரிய இனங்களில், மாவட்டச் சுகாதார அலுவலரின் கருத்தைமாவட்டத் தொழில் மையங்கள் பெற முடியும்.

4. மாவட்ட அளவில் மேலும் அதிகார ஒப்படைப்புகள் அளிப்பதைப்பற்றி பொதுசுகாதார மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்குநர் தனியாக ஆராய்வார். இதனால் தவிர்க்க முடியாத இனங்களில் மட்டும், முன் ஒப்புதலுக்காக அவற்றைத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படும்.

5. சுகாதாரத்துறையின் ஒப்புதல் பெற வேண்டிய வாய்ப்புள்ள எல்லா வகையான உற்பத்திகளையும் கருத்திற் கொண்டு பின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள தொழில்களின் பட்டியலைப்பொது சுகாதார மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் தயாரித்திருந்தாலும், புதிய செய்முறைகளையும் அல்லது சுகாதார நோக்கில் ஆய்வு செய்ய வேண்டிய சோதனைப் பணிகளைக் கொண்ட சில இனங்களும் இருக்கலாம். அம்மாதிரியான இனங்கள் சாதாரணமாக சிறிய அளவிலான எண்ணிக்கையுள்ளதாகும். ஐயத்திற்குரிய அம்மாதிரியான இனங்களை சுகாதாரத் துறையின் முன்ஒப்புதலுக்காக உள்ளாட்சி மன்றங்கள், அனுப்பலாம்.

6. ஐந்து குதிரைத் திறனுக்குக் குறைவான மின் சக்தியால் இயங்கும் குடிசைத் தொழில்கள் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்திருந்தாலும், அவைகளை சுகாதாரத் துறையின் முன் ஒப்புதலுக்காக உள்ளாட்சி மன்றங்கள் அனுப்பத் தேவையில்லையென தெளிவுபடுத்தப்படுகிறது.

7. மாவட்டத் தொழில் மையத்தின் ஆலோசனைக் குழுவின் கூட்டங்களுக்கு மாவட்டச் சுகாதார அலுவலர்களே கலந்து கொள்ள வேண்டுமென்றும்; தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் அவர்களின் சார்பாக மாவட்ட உதவி சுகாதார அலுவலர்கள் கலந்து கொள்ளலாம் என்றும் அறிவுரைகள் வழங்க வேண்டுமென்று பொது சுகாதார மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி.)

பி. முராரி,
அரசு ஆணையர் மற்றும் செயலாளர்.



## பின் இணைப்பு.

### உடல் நலனுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய தொழில் வகைகளின் பட்டியல்.

1. அ. உந்து வண்டிகளின் உதிரி பாகங்கள் மற்றும் துணைப் பாகங்கள் தயாரித்தல்—கீழ்க்கண்ட உதாரணங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது:—

(i) தலைப்பு விளக்குகள்

(ii) ' பம்பர் '

(iii) ' ரேடியேட்டர் '

(iv) ' பிஸ்டன்ஸ் '

(v) வளையங்கள் (' ரிங்க்ஸ் ')

(vi) ' பிரேக் ' அமைப்புகள்

(vii) சக்கரங்கள்

(viii) அதுமாதிரியான உதிரி பாகங்கள்

ஆ. மின் கலங்கள் ( பாட்டரீஸ்) மின் கலங்கள் தயாரித்தல்.

இ. துவிச்சக்கர வண்டியின் ' டயர் ' ட்யூப்புகள் உட்பட பலவகை—பாகங்களைத் தயாரித்தல்.

ஈ. மின் விளக்குகள்—

குழல் விளக்குகள், பாதரச ' பல்புகள் ' பிரதிபலிப்பு (ரிப்லக்டர்), மறைப்புகள் (ஷேடுகள்) போன்ற உலோகத் துணை பாகங்கள்.

உ. மின் துணை பாகங்கள்—

மின்சார தேய்ப்புப் பெட்டிகளுக்கு உறை, வெப்பமான தட்டுக்கள் மின் விசிறி, ' கீசர்ஸ் ' (விரைவில் தண்ணீர் சூடேற்றும் சாதனம்) போன்றவை.

} தூய்மைக் கேட்டினை விளைவிக்கக் கூடிய திட, திரவ, வாயுக் கழிவுகளை வெளியேற்றும் தண்ணீர் அமிலங்கள், உப்புகள், இரசாயனங்கள் ஆகியவற்றை பயன்படுத்தி பொருள்களைத் தயாரிக்கும் தொழில், வகைகளைப் பொத்நவரை இத்துறையிடமிருந்து ஒப்புதல் பெறவேண்டும்.

ஊ. உலோகங்களை வெட்டுவதற்குரிய எண்ணெய் இடுதல் மற்றும் உலையில் காய்ச்சி எடுத்தல், ''குரோமியம்' முலாமிடுதல், மின் முலாமிடுதல் ஆகியவற்றை உள்ளிட்ட கை கருவிகள், இயந்திரக் கருவிகள், தொழிலியல் மற்றும் விஞ்ஞான கருவிகள் தயாரித்தல்.

எ. இரும்பு மற்றும் எஃகு :—

துருப்பிடிக்காத இரும்புப் பொருட்கள்.

ஏ. ''ரேடியோ ரிசீவர்கள்'' ''டேப் ரெக்கார்டர்கள்'' ''டிரான்சிஸ்டர்கள்''.

அமிலம் பூசுவது, மின் முலாமிடுதல், கரைப்பானின் பக்குவப்படுத்துவது ஆகிய முறைகளைக் கொண்டு ''பிரின்டட் சர்க்யூட்ஸ்'' மற்றும் வால்வுகளைத் தயாரித்தல்.

ஐ. குளிர்ப்பதனச் சாதனங்கள்—

குளிர்ப்பதனக் குழாய்கள் மற்றும் காற்று அழுத்தச் சாதனங்களின் பாகங்கள்.

ஒ. மின் முலாம் பூசுதல், காய்ச்சி பக்குவப்படுத்தல், உள்ளிட்ட தொலைபேசி, தந்தி, நீள்தொலை தகவல் அச்சடிக்கும் சாதனங்களைத் தயாரித்தல், எழுத்து வடிவங்களைத் தயாரித்தல் முதலியன.

ஓ. முலாம் பூசுதலோடு கூடிய மேசை கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள் தயாரித்தல், ஒளி பொருந்திய கடிகார முகப்புக்களையும் இதர பாகங்களையும் தயாரிப்பது.



3. சாயப் பொருள்கள்
4. உணவுப் பொருள்கள்

5. தோல் பக்குவப்படுத்துதல்

6. இயந்திர எண்ணெய், உலோகங்களை வெட்டப் பயன்படும் எண்ணெய்,— மின் மாற்றிகளில் பயன்படும் எண்ணெய் போன்ற தாது எண்ணெய்களைப் பக்குவப்படுத்துதல்.

7. வர்ணங்கள், வண்ணச் சாயங்கள்

8. வர்ண காகிதங்கள் உட்பட பலவித காகிதங்கள்.

9. மருந்துப் பொருள்கள்

10. 'டீசல்' இயந்திரங்கள், 'ரேடியேட்டர்கள்'.

11. அச்சுத் தொழில்—எழுத்து வடிவங்கள் தயாரித்தல், உருவ அச்சமைப்பு, புகைப்பட உருவ அச்சமைப்பு முதலியன தயாரித்தல்.

12. 'சோப்பு'—அழுக்ககற்றும் சோப்பு, குளியல் சோப்பு.

13. துணிகளில் அச்சிடுதல், சாயமிடுதல், மென்மையாக்குதல், வெண்மையாக்குதல் முதலியன.

14. தாவர எண்ணெய் தூய்மையாக்குவது, வெண்மையாக்குவது, கரைப்பான் பிரித்தெடுப்பது ஆகியவற்றில் பயன்படுத்தப்படுவது. கடலை எண்ணெய், தவிடு எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், பருத்திக்கொட்டை எண்ணெய் போன்றவை.

நகல் :

## இணைப்பு— V.

### தமிழ்நாடு அரசு.

#### சுருக்கம்.

உரிமங்கள்—நகராட்சிகளும், ஊராட்சிகளும்—25 குதிரைத் திறன் கொண்ட தொழிற்சாலைகள் அமைத்தல்—நகர அமைப்பு மற்றும் கிராம அமைப்புத் திட்ட இயக்குநரின் பார்வைக்கு அனுப்புதல் தேவையில்லை—அறிவுரைகள்—பிறப்பிக்கப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை.

அரசு நிலை ஆணை எண் 515. நாள் 24—3—79.

பார்வை :—

நகர மற்றும் கிராம அமைப்புத் திட்ட இயக்குநரின் நேர்முகக் கடித எண் 37320-78, எஸ். டி. நாள் 8—3—79.

---

ஆணை :—

சிறு தொழில்களின் விண்ணப்பங்களின் மீது விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கேற்ப, 25 குதிரைத் திறனுக்கு மேற்படாத தொழிற்சாலைகளின் விண்ணப்பங்களை, நகர மற்றும் கிராம அமைப்புத் திட்ட இயக்குநரின் கூர்ந்தாய்வுக்கு அனுப்பத் தேவையில்லையென நகர மற்றும் கிராம அமைப்புத் திட்ட இயக்குநர் பரிந்துரைத்திருந்தார். நகர மற்றும் கிராம அமைப்புத் திட்ட இயக்குநரின் பரிந்துரையை அரசு ஏற்றுக் கொள்கிறது.

2. ஊராட்சி மற்றும் நகராட்சிகளினால் தொழிற் பகுதிகள் என அறிவிக்கப்பட்ட பகுதிகளில் 25 குதிரைத் திறனுக்கு மேற்படாத மின் இணைப்புக் கொண்ட தொழிற்சாலைகள் அமைப்பதற்கான விண்ணப்பங்களை நகர மற்றும் கிராம அமைப்புத் திட்ட இயக்குநரின் கூர்ந்தாய்வுக்கு அனுப்பத்தேவை இல்லை என அரசு ஆணையிடுகிறது. அம்மாதிரியான விண்ணப்பங்கள் அனைத்தையும் நகர மற்றும் கிராம அமைப்புத் திட்ட இயக்குநருக்கு அனுப்பாமல் சம்பந்தப்பட்ட ஊராட்சி/ஊராட்சி ஒன்றிய மன்றம்/நகராட்சி மன்றங்களே முடிவு செய்யலாம்.

3. இவ்வாணையின் நகல்களை மாவட்ட ஆட்சியாளர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

திரு. வே. வாசுதேவன்,
அரசு செயலாளர்.

(தமிழாக்கம்)

நகல் :

## இணைப்பு—VI.

### தமிழ்நாடு அரசு.

#### சுருக்கம்.

---

உரிமங்கள்—ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், கிராமங்கள், நகரங்கள்—குறிப்பிட்ட பகுதிகளை தொழில் நோக்கத்திற்காக ஒதுக்குதல்—அறிவுரைகள் பிறப்பித்தல்.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை.

அரசு நிலை ஆணை எண் 516. நாள் 24—3—1979.

ஆணை.—

புதிய தொழில்களைத் துவக்குவதற்குமுன், சிறு தொழில் முனைவோர்கள் ஒப்புதல்களைப் பெறுவதற்குப் பல துறைகளை அணுக வேண்டியதில் உள்ள சிரமங்களைக் களைவதற்கு, சில வகையான தொழில்களைப் பொறுத்தவரை இத்துறைகளின்

முன் அனுமதி தேவையில்லையென அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது. அதன் குறிக்கோள் யாதெனில் தொழிற் சாலைத் துறை, நகரமைப்புத் துறை, சுகாதாரத் துறை ஆகியவற்றின் முன் ஒப்புதல் இல்லாமலேயே உள்ளாட்சி நிறுவனங்கள் ஒப்புதல்களை வழங்கலாம் என்பதேயாகும்.

2. சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையினது அரசு நிலை ஆணை எண் 291 நாள் 20—2—79 என்பதில் குறிப்பிடப்பட்டுள்ள 14 வகைத் தொழில்களைத் தவிர அதுவும் உடல் நலனுக்கு ஊறுவிளைவிக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படும் தொழில்களைத் தவிர, சிறு தொழில் துறையிலுள்ள மற்றவகையான தொழில்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களால் தொழிற்பகுதிகள் என அறிவிக்கப்பட்ட பகுதிகளில் அமைக்க சுகாதாரத் துறையின் முன் ஒப்புதல் தேவையில்லை. 24—3—79 நாளிட்ட ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறையினது அரசு நிலை ஆணை எண் 515 இல், 25 குதிரைத் திறனுக்கு மேற்படாத மின் இணைப்பு கொண்ட தொழிற்சாலைகளை தொழிற்பகுதியில் அமைப்பதற்குரிய விண்ணப்பங்களை நகர மற்றும் கிராம அமைப்புத் திட்ட இயக்குநரின் ஆய்வுக்கு அனுப்பத் தேவையில்லையென ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. உரிமங்கள் மற்றும் அனுமதிகள் வழங்குதலை ஒழுங்குபடுத்தும் விதிகளில், விதி6(1) ஐ நீக்கி அரசு நிலைஆணை எண் 1959 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் 18—9—73-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி தொழிற்சாலைச் சட்டம் அல்லது தொழிற்சாலை விதிகளின் கீழ் முன் ஒப்புதல் பெறத் தேவையற்ற தொழில்களுக்கு தொழிற் சாலை ஆய்வாளர்களின் ஒப்புதல் தேவையில்லை. எனவே, மேற் குறிப்பிடப்பட்ட வகைகளைச் சேர்ந்ததும் உள்ளாட்சி மன்றங்களின் ஆளுகைக்குட்பட்ட தொழிற் பகுதிகளில் அமைக்கப்படுவதுமான தொழில்களுக்கு சுகாதார, நகர அமைப்பு மற்றும் தொழிற்சாலைகள் துறைகளின் ஒப்புதல் தேவையில்லை.

3. உள்ளாட்சி மன்றங்கள் அவைகளின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில், குறிப்பிட்ட பகுதிகளைத் தொழிற் பகுதிகள் என நிர்ணயித்து அறிவித்தல் தற்பொழுது அவசியமாகும். இல்லையெனில், இச்சலுகைகள் பயனற்றதாகிவிடும். தொழிற் சாலைகளை அமைப்பதற்கும், இயந்திரங்களை நிறுவுவதற்கும் அனுமதி வழங்குவதற்குரிய விண்ணப்பங்களைப் பற்றிய விதிகளில், விதி 12 இன்படி, ஒவ்வொரு நகர ஊராட்சியும், மற்றும் ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களும், சம்பந்தப்பட்ட கோட்ட வளர்ச்சி அலுவலர் விரும்பினால், மாவட்டச் சுகாதார அலுவலர் மற்றும் நகர மற்றும் கிராம அமைப்புத் திட்ட இயக்குநரின் ஒப்புதலோடு நகர அல்லது ஊராட்சிகளின் ஆளுகைக்குட்



ட்ட பகுதிகளில் உள்ள சிறு நகரங்களிலும், கிராமங்களிலும் தொழில் நோக்கத்திற்காகக் குறிப்பிட்ட பகுதிகளை ஒதுக்க வேண்டும்.

4. குறிப்பிட்ட பகுதிகளைத் தொழிற்பகுதிகள் எனக்கூறி துவரையிலும் அறிவிக்காத கிராமங்கள், நகரங்கள் பல ள்ளன. ஒவ்வொரு கிராம மற்றும் நகர ஊராட்சிகளில் றிப்பிட்ட பகுதிகளைத் தொழில் நோக்கத்திற்காக ஒதுக் ப்படல் வேண்டுமென அரசு கருதுகிறது. அதன்படி, இவ் ாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாத காலத் ிற்குள் எல்லா கிராமங்களிலும், நகரங்களிலும் "தொழில் குதிகளை" நிர்ணயித்து அவற்றை அறிவிக்கும் செயல்கள் முடிக்கப்படல் வேண்டுமென்று ஆணையிடப்படுகிறது. சிறிய ிராமங்களில் இவ்வாறு வரையறுத்தல் தேவையில்லையெனக் ருதினால், குடியிருப்பு, கல்வி, மதம் அல்லது மற்ற கட்டடங் ள் அமைந்துள்ள காரணத்தால் தொழில்களுக்கு பொறுத்த ற்றது எனக் கருதப்படும் பகுதிகளைத்தவிர மற்றபகுதி ளைத் தொழிற் பகுதிகளாகக் கொள்ள வேண்டும்.

5. மேற்கண்ட அரசு ஆணைகளின் பயன்கள், வாய்ப்புள்ள தொழில் பிரிவுகளுக்குக் கிடைப்பதற்காக, மேற் கூறியபடி தொழிற் பகுதிகளை வரையறுத்தலுக்குத் தேவையான டவடிக்கைகளை மேற்கொள்ளும்படி, கோட்ட வளர்ச்சி அலுவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாத காலத்திற்குள் ப்பணியை அவர்கள் முடித்திடல் வேண்டுமெனத் தெரிவிக்கப் படுகிறது.

6. இது பற்றி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முடிவு பெறும் தன்மை குறித்து அறிக்கையை, ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பும்படி ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநர் ஆணைப்படி)

தி. வே. வாசுதேவன்,
அரசுச் செயலர்.

(தமிழாக்கம்.)

நகல் :

## இணைப்பு VII.

### தமிழ்நாடு அரசு.

### சுருக்கம்.

வேளாண்மை—ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்—தமிழ்நாட்டில் செயலாக்குதல்—15–11–1978 அன்று நடைபெற்ற மாநில அளவிலான ஒருங்கிணைப்புக்குழுவின் கூட்டம்—ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மிகச்சிறு மற்றும் கிராமத் தொழில்களுக்கு உதவி வழங்குதல்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறது.

### வேளாண்மைத்துறை.

அரசு நிலையாள ஆணை எண் 657, நாள் 30–3–1979.

பார்வை : —

1. அரசு கடிதம் எண் 126904/ஆர்டி–III–78–1 வேளாண்மை, நாள் 25–11–1978.

2. இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நேர்முகக் கடிதம் எண் 11012/46/7—அய்.ஆர்.டி., நாள் 18–12–1978.

ஆணை :

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சலுகை உதவியுடன்கூடிய பின்வருகின்ற இரண்டு திட்டங்களை நிறைவேற்ற திட்டமிடப்பட்டது :—

(i) மக்கள் தொகை 50,000–க்கும் குறைவாக உள்ள பகுதிகளில் அமைந்துள்ள மிகச்சிறு தொழிற்சாலைகளுக்குரிய நிதிவழங்குவதற்கு சலுகை உதவி ஒப்புதலளித்தல் (மூலதனம் ரூ. 1.00 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள தொழில்கள்).

(ii) கிராமக் கைவினைஞர்கள், கைத்திற வல்லுநர்கள், சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் கட்டப்பட்டிருக்கிற சிறு தொழிற்கூடங்களைப் பெறவிருக்கிறவர்கள் உள்ளிட்ட மிகச்சிறு தொழிலதிபர்கள் ஆகியவர்களுக்கு சலுகை உதவி ஒப்புதலளித்தல்.

சிறுதொழில் நிலையங்களின் இயந்திரம் மற்றும் தளவாடங்களின் மூலதன முதலீடு ரூ. 1 இலட்சத்திற்கு மேற்படாதிருந்தால், அவற்றை மிகச்சிறு தொழில்கள் எனலாம்.



2. தொழில் துறையினது மேற்கண்ட கருத்துக்களின் அடிப்படையில், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் மிகச்சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு உதவியளிப்பதற்குரிய கருத்துக்களை, 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15-ந் தேதி அன்று நடைபெற்ற மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவினது கூட்டத்தில் எடுத்து வைக்கப்பட்டது. இக் கூட்டத்தின்போது, இந்திய அரசின் சார்பில் கலந்து கொண்டுள்ள பிரதிநிதி, இப்பொருளானது ஏற்கனவே இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளதென்றும், அவற்றின் முடிவு விரைவில் அனுப்பப்படுமெனத் தெரிவித்தார். இதன்பிறகு, ஒருங்கிணைந்த கிராமத் தொழில் திட்டத்தின்கீழ், கிராம மற்றும் மிகச்சிறு தொழில்களுக்கு சலுகை உதவி வழங்குவதற்கு அனுமதி பெறுவதற்கு இந்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. கேட்கப்பட்டுள்ள அனுமதி, இந்திய அரசிடமிருந்து வரவேண்டியுள்ளது.

3. இந்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்ட சலுகை உதவியினை அளித்து கிராம, குடிசை மற்றும் மிகச்சிறுதொழில்களைச் சேர்த்து செயலாக்குவது பற்றிய திட்டம் அரசினால் பரிசீலனை செய்யப்பட்டது. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் இந்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி, இத்திட்டங்களையும் உடனடியாகச் சேர்ப்பதற்கு தற்பொழுது அரசு முடிவெடுத்துள்ளது.

4. இதன்படி, அரசானது கிராம மற்றும் குடிசைத் தொழில்கள், மிகச்சிறு தொழில்களுக்குரிய திட்டங்களை 1979–80 ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்படுகின்ற வட்டாரத் திட்டங்களில் சேர்க்க வேண்டுமென கட்டளையிட்டுள்ளது. இவற்றை கூடிய விரைவில் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதல் பெறுவதற்கு அரசுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

5. கிராமப் பகுதிகளில் குடிசை, சிறுதொழில்கள் மற்றும் மிகச்சிறு தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி, முன்னேற்றம் மற்றும் பணிகள், மாவட்டத் தொழில் மையங்களின் முக்கியமான பொறுப்பாகும். ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியின்கீழ், மிகச்சிறு மற்றும் குடிசைத்தொழில்களை வட்டாரத் திட்டங்களில் சேர்ப்பதற்கு, மாவட்டத் தொழில் மையங்கள் நிறுவப்பட்டுள்ள பகுதிகளில், மாவட்டத் தொழில் மையங்களுடனும், அவை நிறுவப்படாத பகுதிகளில் சம்பந்தப்பட்ட தொழில் வணிக உதவி இயக்குநருடனும் மிகச்சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்குரிய திட்டங்களை நிர்ணயிப்பதற்கு

கலந்து பேசி அவர்களது அனுமதி பெறவேண்டும். இத்திட்டங்களுக்கு மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவினது சிறப்பு ஒப்புதல் பெறப்பட்டவுடன், மிகச்சிறு மற்றும் குடிசைத் தொழில் திட்ட நடவடிக்கைகளை, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் செயல்படுத்தப்படும்.

6. கிராம மற்றும் மிகச்சிறு தொழில்கள் திட்டத்தின்படி, ஒவ்வொரு குடும்பத்திற்கும் கைவினைஞர்களுக்குரிய சலுகை உதவி 33⅓ சதவீதமும்; மிகச் சிறுதொழில்களுக்கு 25 சதவீதமுமாகும். மேற்கூறிய இரண்டு இனங்களிலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் உச்ச அளவு ரூ. 1,500 ஆகும்.

7. இந்த ஆணையானது நிதித்துறையின் ஒப்புதலான அலுவல் சார்பற்ற எண். 936/எப்.எஸ்./பி./79, நாள்: 29-3-1979 என்பதன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

என். அரிபாஸ்கஸ்,
அரசுச்செயலாளர்.

(தமிழாக்கம்)

## 2. திட்ட முதலீடு.

வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில் இத்திட்டப் பணிகளுக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களாவன:—

| | 1977-78 செலவு. | 1978-79 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | திருத்த மதிப்பீடு. | 1979-80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் கோடியில்.) | | | |
| பெருந்தொழில்கள் நடுத்தரத் தொழில்கள். | 8·51 | 7·81 | 10·43 | 7·52 |
| கிராமத்தொழில்கள் சிறுதொழில்கள். | 6·41 | 5·28 | 7·26 | 9·81 |
| சுரங்க-உலோகத் தொழில்கள். | 0·23 | 0·43 | 0·46 | 0·12 |
| மொத்தம் .. | 15·15 | 13·52 | 18·15 | 17·45 |



மேலும் இவ்வாண்டு செய்தித்தாள்-காகித ஆலைத் திட்டத்திற்கு அரசு பங்கு மூலதனமாக 5 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டி வரும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் உரிய நேரத்தில் பெறப்படும். இதையும் சேர்த்துக் கொண்டால் 1979-80 ஆம் ஆண்டிற்கான திட்ட தொழிற் துறை திட்ட மதிப்பீடு 22·4.6 கோடி ரூபாயாக உயரும். மேலே கொடுக்கப்பட்ட விபரங்களிலிருந்து கிராமத் தொழில்கள் சிறு தொழில்களின் முன்னேற்றத்திற்கு அரசு செலுத்திய அதிக முக்கியத்துவமே 1979-80ஆம் ஆண்டிற்குரிய நிதி ஒதுக்கம் அதிகரித்ததற்கான காரணம் என்பது தெளிவாகும். இதனால் கிராமத் தொழிலுக்கான நிதி ஒதுக்கீடு இரண்டாண்டுக் கால அளவில் 53 சதவீதம் அதிகரித்துள்ளது.

நடப்பு ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் தொழில் துறையின் பல்வேறு பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 30.58 கோடியாகும். பகுதி II திட்டத்தில் உள்ள 29 திட்டங்களுக்காக 319·02 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும் அடங்கும். முடிவாக இத்திட்டங்களுக்கு ஆண்டொன்றுக்கு 50·16 இலட்சம் ரூபாய் தொடர் இனச் செலவும், 339·24 இலட்சம் ரூபாய் தொடரா இனச் செலவும் ஏற்படும். இத்திட்டங்களின் பட்டியல் ஒன்று இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. கதர், கைத்தறித் துணித் தொழில் சம்பந்தப்பட்ட பல்வேறு திட்டங்கள் பற்றிய விவரங்கள் முன்பே அந்தந்த மானியக் கோரிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ளன. தொழில் துறையின் மற்ற திட்டங்கள் குறித்த விவரங்கள் பின்வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

...புதிய திட்டங்களின் விரிவான பட்டியல்.

| தொடர் எண். | திட்டத்தின் விவரம். | 1979–80-ம் ஆண்டுக்கான இறுதிச் செலவு. தொடர் செலவு. | தொடராச் செலவு. | 1979–80-ல் செலவு. வருவாய்க் கணக்கில் செலவு. | மூலதனக் கணக்கில் செலவு. | கடன் கணக்கில் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
| | **தொழில் துறை.** | | | | | | |
| | **பட்டுப்புழு வளர்ப்பு.** | | | | | | |
| | **(அ) அய்ந்தாண்டுத் திட்டப் பணிகள்.** | | | | | | |
| 1 | முசுக்கட்டைச் செடி பயிரிடப்படும் பரப்பளவைப் பெருக்குவதற்கான திட்டம் | .. | 30,97 | 27,68 | .. | .. | 27,68 |
| 2 | உழவர்களுக்குப் பயிற்சி அளித்தல். | .. | 25,00 | 25,00 | .. | .. | 25,00 |
| 3 | பட்டுப்புழு வளர்ப்புச் சாதனங்களை குறைந்த விலையில் வழங்குதலும் பட்டுப்புழு வளர்ப்புக் கொட்டகைகளைக் குறைந்த செலவில் கட்டுதலும் .. | 31,88 | 30,00 | 45,00 | .. | .. | 45,00 |
| 4 | சட்டங்களில் பட்டு நூலிழை சுற்றுவதற்கான குடிசைத் தொழில் பிரிவுகளை நிறுவுதல். | 3,30 | | 3,30 | .. | .. | 3,30 |
| 5 | அரசு பட்டுப் பண்ணைகளை மேம்படுத்தல் .. .. | 1,80 | 3,3 | 1,68 | 2,50 | .. | 4,18 |
| 6 | உழவர்களுக்கான செய்முறை விளக்க பயிற்சி நிலையங்கள் .. | .. | 30,9 | 1,28 | 10,80 | .. | 12,08 |
| 7 | பட்டுப்புழுக் கூடு விற்பனைச் சந்தைகளை அமைத்தல் | 1,10 | 2,5 | 3,39 | .. | .. | 3,39 |
| 8 | நிர்வாகப் பிரிவை வலுப்படுத்தல். | .. | 16,9 | 2,46 | | | 2,46 |
| | மொத்தம்—(அ) .. | 38,08 | 1,39,6 | 1,69,79 | 13,30 | | 1,23,09 |

| தொடர் எண். | திட்டத்தின் விவரம். | இறுதிச் செலவு. தொடர் செலவு. | இறுதிச் செலவு. தொடராச் செலவு. | 1979-80-ல் செலவு. வருவாய்க் கணக்கில் செலவு. | மூலதனக் கணக்கில் செலவு. | கடன் கணக்கில் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
| | தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.—தொடர்ச்சி. | | | | | | |
| | (அ) அய்ந்தாண்டுத் திட்டப் பணிகள்.—தொடர்ச்சி. | | | | | | |
| 9 | தேயிலைத் தோட்டங்கள் வளர்த்தலும் தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை ஒன்றைப் புதிதாக அமைத்தலும். | 34 | 6,00 | 34 | 6,00 | .. | 6,34 |
| 10 | கோயம்புத்தூரில் நிலக்கரி—கல் கரி தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்தல் .. | 32 | .. | 8 | .. | .. | 8 |
| 11 | தீப்பெட்டி தொழிலாளர் பணித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்றினை அமைத்தல் .. | .. | 1,02 | 27 | .. | .. | 27 |
| 12 | தீப்பெட்டித் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 20 அமைத்தல் .. .. .. | .. | 1,61 | 16 | .. | .. | 16 |
| 13 | தமிழ்நாடு மாநிலத் தீப்பெட்டித் தொழில் கூட்டுறவு சங்கத்தில் பங்கு மூலதனத்தில் அரசு முதலீடு செய்தல் .. .. | .. | 1,50 | .. | 1 | .. | 1 |
| 14 | தென்னை நார் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டிற்குப் புத்துயிர் அளித்தல் .. | 2,20 | . | 14 | 75 | .. | 89 |
| 15 | தோல் பொருள் மெருகூட்டும் பணித்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டினை அமைத்தல் | 64 | 6·00 | 53 | 6,00 | .. | 6,53 |
| | மொத்தம்—(அ) .. | 3,50 | 16,1 | 1,52 | 12,01 | 75 | 14,28 |

| தொடர் எண். | திட்டத்தின் விவரம். | இறுதிச்செலவு. | | 1979-80-ல் செலவு. | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவு. | தொடராச் செலவு. | வருவாய்க் கணக்கில் செலவு. | மூலதனக் கணக்கில் செலவு. | கடன் கணக்கில் செலவு. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
| | | **(ஆ) திட்டத்தில்** | | **சேராத பணிகள்** | | | |
| 16 | தோல் பொருள் மெருகூட்டும்—பணித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டினை அமைத்தல் .. .. .. | .. | 4·00 | 4,00 | .. | .. | 4,00 |
| | மொத்தம் (ஆ) .. | .. | 4,00 | 4,00 | .. | .. | 4,00 |
| | மொத்தம் (அ), (ஆ) .. | 3,50 | 20,13 | 5,52 | 12,01 | 75 | 18,88 |
| | **இரசாயனப் பொருள்கள்.** | | | | | | |
| | **(அ) அய்ந்தாண்டுத் திட்டப் பணிகள்.** | | | | | | |
| 17 | இரசாயனத் தொழில்களுக்கான ஆலோசனைப் பணியும் புள்ளி விவரச் சேகரிப்பு நிலையமும். | 1,37 | 2,00 | 90 | | | 90 |
| | மொத்தம் (அ) .. | 1,37 | 2,00 | 90 | .. | .. | 90 |
| | **1. கைத்தறியும் நெசவுத் தொழிலும்.** | | | | | | |
| | **(அ) அய்ந்தாண்டுத் திட்டப் பணிகள்.** | | | | | | |
| 18 | வடிவமைப்பு—பணி நிலையங்கள். | 2,20 | 1,30 | 3,50 | .. | .. | 3,50 |
| 19 | நவீனச் சாயப் பட்டறைகளை அமைத்தல் (தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகக் கடன்) .. | .. | 4,20 | .. | .. | 4,20 | 4,20 |
| 20 | ஈரோட்டில் உள்ள தமிழ் நாடு கூட்டுறவு துணி செய்முறை ஆலையில் செய்முறைகளை நவீனப்படுத்துதல்—மதுரையில் சிறு ஆலையை நிறுவுவதற்கான திட்டம் .. .. .. | .. | 23 | .. | .. | 20,00 | 20,00 |

| தொடர் எண். | திட்டத்தின் விவரம். | இறுதிச் செலவு. தொடர் செலவு. | இறுதிச் செலவு. தொடராச் செலவு. | 1979-80-ல் செலவு. வருவாய்க் கணக்கில் செலவு. | 1979-80-ல் செலவு. மூலதனக் கணக்கில் செலவு. | 1979-80-ல் செலவு. கடன் கணக்கில் செலவு. | 1979-80-ல் செலவு. மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| 21 | நெசவாளர் வீட்டு வசதி—வீட்டு வசதி நகர்ப்புற மேம்பாட்டுக் கழகக் கடனுக்கான வட்டி உதவித் தொகை .. .. | .. | 3,50 | 3,50 | .. | .. | 3,50 |
| 22 | கைத்தறிகளை நவீனப்படுத்தல். | .. | 15,50 | .. | .. | 15,50 | 15,50 |
| | மொத்தம் (அ) .. | 2,20 | 47,50 | 7,00 | .. | 39,70 | 46,70 |
| | **சிறு தொழில்கள்.** | | | | | | |
| | **(அ) அய்ந்தாண்டுத் திட்டப் பணிகள்.** | | | | | | |
| 23 | தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் சிறு தொழிலுக்கான உதவித் தொகை. | 1 | .. | 1 | .. | .. | 1 |
| 24 | பின் தங்கிய பகுதிகளில் தொழிற் சாலைகளை நிறுவ உதவித் தொகை .. .. .. | .. | 1,00,00 | 1,00,00 | .. | .. | 1,00,00 |
| | மொத்தம் (அ) .. | 1 | 1,00,00 | 1,00,01 | .. | .. | 1,00,01 |
| | **சர்க்கரை.** | | | | | | |
| | **(அ) அய்ந்தாண்டுத் திட்டப் பணிகள்.** | | | | | | |
| 25 | சிறிய சர்க்கரை ஆலைகள் இரண்டை அமைத்தல் .. .. | .. | 30,00 | .. | 30,00 | .. | 30,00 |
| | மொத்தம்(அ) .. | .. | 30,00 | .. | 30,00 | .. | 30,00 |

127/23—27.

| தொடர் எண். (1) | திட்டத்தின் விவரம். (2) | இறுதிச் செலவு. தொடர் செலவு. (3) | இறுதிச் செலவு. தொடராச் செலவு. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | |
| | கதர். | | |
| | (அ) அய்ந்தாண்டுத் திட்டப் பணிகள். | | |
| 26 | பட்டு/கதர் துணி வடிவமைப்பு—ஆராய்ச்சி நிலையம். | 3,64 | .. |
| 27 | விற்பனை வசதி .. .. | 1,06 | .. |
| 28 | நுங்கு கெடாமல் பாதுகாத்தல் .. | 15 | .. |
| 29 | விசைச் செக்கு மேம்பாடு .. | 15 | .. |
| | மொத்தம் (அ) .. | 5,00 | .. |
| மொத்தம் | திட்டத்தில் சேர்ந்தவை. | 50,16 | 3,35,2 |
| | திட்டத்தில் சேராதவை. | .. | 4,0 |
| | பெருமொத்தம்—தொழில் துறை. | 50,16 | 3,39,2 |



| 1979–80–ல் செலவு. வருவாய்க் கணக்கில் செலவு. (5) | மூலதனக் கணக்கில் செலவு. (6) | கடன் கணக்கில் செலவு. (7) | மொத்தம். (8) |
|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | |
| 1 | .. | .. | 1 |
| 1 | .. | .. | 1 |
| 1 | .. | .. | 1 |
| 1 | .. | .. | 1 |
| 2,19,26 | 55,31 | 40,45 | 3,15,02 |
| 4 | .. | .. | 4 |
| 4,00 | .. | .. | 4,00 |
| 2,23,26 | 55,31 | 40,45 | 3,19,02 |

பல்வேறு வளர்ச்சித் தலைப்புகளின்கீழ் திட்டப் பணிகள் குறித்த விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை.

| திட்டங்கள். (1) | வரவு செலவு திட்ட மதிப்பீடு 1979–80. ரெவின்யூ. (2) | மூலதனம். (3) | கடன். (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| அரசு நிறுவனங்களில் முதலீடு. | | | | |
| 1. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) .. .. .. .. | .. | 1,50·00 | 2,71·00* | 4,21·00 |
| 2. தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்) .. .. .. .. | .. | 25·00 | 1,75·00 | 2,00·00 |
| 3. தமிழ்நாடு உப்புத் தொழில் நிறுவனம் .. | .. | 5·00 | 0·01 | 0·01 |
| 4. தமிழ்நாடு கரும்புப் பண்ணைகள் நிறுவனம். | .. | .. | 0·01 | 0·01 |
| 5. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டி.அய்.அய்.சி.) .. .. .. | .. | 50·00 | .. | 50·00 |
| 6. மின்சார, மின்னை வியல் நிறுவனம் .. | .. | 30·00 | 0·01 | 20·00 |
| 7. தமிழ்நாட்டில் தோல் உற்பத்தி மேம்பாட்டு நிறுவனத்தை ஏற்படுத்துதல் .. | .. | 0·01 | .. | 0·01 |
| 8. அரசுத் துறையில் சர்க்கரை ஆலைகள் அமைக்க தமிழ்நாடு சர்க்கரைத் தொழில் நிறுவனத்திற்கு நிதி உதவி .. | .. | 0·01 | .. | 0·01 |

* தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பொது மக்களிடமிருந்தும் வங்கியிடமிருந்தும் திரட்டும் கடன் 121 இலட்சம் ரூபாய் இதிலடங்கும்.



| | | | | |
|---|---|---|---|---|
| சிறு தொழில்கள். | | | | |
| 9. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (சிட்கோ) நிதி உதவி .. | 0·01 | 50·00 | 20·01 | 70·01 |
| 10. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்திற்கு (டான்சி) நிதி உதவி .. .. .. | .. | 40·00 | 0·01 | 40·01 |
| 11. உலக வங்கித் திட்டத்தின்கீழ் சிறுதொழில் வளர்ச்சித் திட்டத்திற்காக சிட்கோவிற்கு நிதி உதவி .. .. .. | .. | .. | 75·00 | 75·00 |
| கைத்திறப்பொருள் தொழில்கள். | | | | |
| 12. தமிழ்நாடு கைத்திறப்பொருள் வளர்ச்சி நிறுவனத்திற்கு நிதி உதவி .. .. | 5·00 | 15·00 | .. | 20·00 |
| கைத்தறித் தொழில்கள். | | | | |
| 3. தமிழ்நாடு கைத்தறி நிதி வாணிபக் கழகத்திற்கு உதவித் தொகை .. .. | .. | .. | 30·00 | 30·00 |
| பிற கிராமத் தொழில்கள். | | | | |
| 4. நெசவாளர்களுக்குத் துணைக்கருவிகளை வழங்குவதற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு நிதி உதவி .. .. .. .. | 1·00 | .. | 1·00 | 2.00 |
| 5. வெள்ள நிவாரணப்பணிக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு நிதி உதவி .. .. .. | .. | .. | .. | .. |

வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1979–80.

| திட்டங்கள். (1) | ரெவின்யூ. (2) | மூலதனம். (3) | கடன். (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| பிற கிராமத் தொழில்கள்—தொடர்ச்சி. | | | | |
| 16. கதர் துணி விற்பனைக்குத் தள்ளுபடி. | 60·00 | .. | .. | 60·00 |
| 17. கதர் துறைக்கான புதிய திட்டங்கள் .. | 0·04 | .. | .. | 0·04 |
| பஞ்சாலைகள். | | | | |
| 18. தமிழ்நாடு சரிகை நிறுவனத்திற்கு நிதி உதவி .. .. .. .. | .. | 2·00 | 2·00 | 4·00 |
| மட்பாண்டத் தொழில். | | | | |
| 19. தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனத்திற்கு நிதி உதவி .. .. | .. | 15·00 | 0·02 | 15·02 |
| கனிவளங்களைக் கண்டுபிடித்தல். | | | | |
| 20. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட உதவியுடன் தமிழ்நாட்டில் கனிவள மேம்பாட்டுத் திட்டம் .. | 0·02 | .. | .. | 0·02 |
| 21. தமிழ்நாடு கனிவள மேம்பாட்டுக் கழகத்திற்கு நிதி உதவி .. .. | .. | 10·00 | .. | 10·00 |



### 3. தொழில் வணிக இயக்குநரகம்.

சிறு தொழில் மற்றும் கிராமத் தொழில் வளர்ச்சி தான் பெருமளவில் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கான ஒரு வழியாகும் என மத்திய அரசும், மாநில அரசும் வலியுறுத்தி வருவதற்கிணங்க, இத்துறையின் மேம்பாட்டிற்காக தொழில், வணிக இயக்குநரகம் முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்த இயக்குநரகத்தில், சில குறிப்பிட்ட பிரிவுகளின் சாதனைகள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன:—

**1. சிறு தொழில்கள் பதிவு :**

2. சிறு தொழிற்சாலைகளுக்கு நிரந்தரமானவை தற்காலிகமானவை என இருவித பதிவுச் சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே செயல்பட்டு வரும் சிறு தொழில்களுக்கு நிரந்தரச் சான்றிதழ்களும், புதிய தொழிற்சாலைகளைத் துவக்க முன்வருபவர்களுக்குத் தற்காலிகச் சான்றிதழ்களும் அளிக்கப்படுகின்றன. முன்னேற்றத்தினைக் காட்டுவதற்காக அளிக்கப்பட்ட தற்காலிகச் சான்றிதழ்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதில் மிக அதிக முக்கியத்துவம் செலுத்தப்பட்டு வந்தது. எனினும், தற்காலிகச் சான்றிதழ் பெற்றவர்கள் பெரும்பாலானோர் தொழிற்சாலையினைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் ஏதும் செய்யவில்லை யென்றும், தற்காலிகச் சான்றிதழ்கள் அளிப்பதை அடிப்படையாகக் கொண்டு தொழில் வளர்ச்சியினை ஆய்வுசெய்வது பொருளற்றது என களப்பணி ஆய்வுகளிலிருந்து தெரிய வந்தது. தற்காலிகச் சான்றிதழ்களைத் தொழில் முனைவர்கள் கேட்ட மாத்திரத்தில் உடனுக்குடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்த போதிலும் தொழில் முனைவர்களுடன் கலந்து பேசி அவர்களுக்குத் தேவையான தொழில் சம்பந்தமான வழிமுறைகளையும் களப்பணியாளர்கள் எடுத்துக்கூறுகிறார்கள். தொழிற்சாலையை சிறப்பாக நிறுவுவதற்கான உதவியினை சான்றிதழ் பெற்றவர்களுக்கு அளிப்பதற்காக தற்காலிகச் சான்றிதழ் பெற்றவர்கள் பற்றிய நிலையை, முறையாகப் பின் தொடர்ந்து கவனிக்கப்படு

1979 ஏப்ரல் 24]

கின்றது. கிடைப்பதற்கரியதாய் உள்ள மூலப்பொருள்களைத் தவறான வழியில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காகவும் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்காகவும் தொழிற்சாலைகளின் செயற்பணி குறித்த விவரங்களைத் தொடர்ச்சியான முறையில் வைக்குமாறு வற்புறுத்தப்பட்டுள்ளது.

3. இயக்குநரகத்தின் தீவிர தொடர் நடவடிக்கைகளின் காரணமாக 31-3-1978-ல் 18,789 என்றிருந்த நிரந்தரத் தொழில் நிலையங்களின் எண்ணிக்கையானது, 31-12-1978-ல் 21,273 ஆக உயர்ந்துள்ளது இந்த எண்ணிக்கை 1-3-1979-ல், 21,779 ஆக உயர்ந்துள்ளது. கூடுதலாக வேலைவாய்ப்பினைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 30,000-க்கு மேலாகும். 31-12-1978-ல் மாவட்ட வாரியாக உள்ள நிரந்தர தொழில் நிலையங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் அட்டவணை II-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 31-12-1978-ல் மாவட்டத் தொழில் மையங்களில் உள்ள நிரந்தர தொழில் நிலையங்களின், தொழில்வாரியான விவரங்கள் அட்டவணை III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

4. ஆய்வுசெய்தல் மற்றும் கிடைப்பதற்கரியதாய் உள்ள மூலப்பொருட்களை ஒதுக்குதல் பற்றிய நடைமுறைகள் சீரமைக்கப்பட்டு தகுந்த கண்காணிப்போடு உரிய காலத்தில் வசதிகள் கிட்டுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. மற்றொரு புதிய அம்சம் யாதெனில், குறிப்பாக, மாவட்டத் தொழில் மையங்களுடைய பொது மேலாளர்களுக்குத் தக்க அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதேயாகும். குறிப்பாக, தொழிற்சாலைகளைப் பதிவு செய்வது, இறக்குமதிக்கான உரிமங்கள் வழங்குதல் போன்ற அலுவல்களில் தலைமை அலுவலகத்தை நாடுவதைக் குறைப்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### மின்சாரம் மற்றும் மின்னணுவியல் தொழில்கள்.

5. தற்பொழுது, தமிழ்நாட்டில், சிறுதொழில் துறையில் மட்டும் 450-க்கும் அதிகமான மின்சாரம் மற்றும் மின்னணுவியல் தொழில்கள் உள்ளன.



1979 ஏப்ரல் 24]

இவை "சுவிட்ச் கியர்" பாகங்கள், மின்சார பாகங்கள், மின்சாரம் விநியோகிக்கும் மின் அழுத்த மாற்றிகள் (Distribution Transformers); மின் அழுத்த மாற்றிகளின் பாகங்கள், மோட்டார் சுவிட்ச் கியர், வீடுகளில் பயன்படுத்தப்படும் சாதனங்கள், மின்சாரத் துணைக் கருவிகள், மின் கம்பிகள், முதலான மின்சாரப் பயன் பொருட்கள் மற்றும் மருத்துவ மின்னணுச் சாதனங்கள், மின் சக்தித் தடுப்புக் கருவிகள் வானொலிப் பெட்டிகள், தொலைக் காட்சிக் கருவிகள், கார் வானொலிகள், ஒலிபெருக்கி சாதனங்கள், வானவியல் ஆராய்ச்சிக்குரிய சிறப்பு சாதனங்கள், "ஆன்டென்னா", "புராசஸ்" கட்டுப்பாட்டுக் கருவிகள் தனித் தொழிலில் பயன்படுத்தப்படும் கட்டு உறுப்புகள், மற்றும் கருவிகள் போன்ற மின்னணுச் சாதனங்கள் ஆகிய பலவிதமான பொருள்களை, மின்சார மின்னணுவியல் தொழிற்சாலைகள் தயாரிக்கின்றன. இவற்றில் 80 சதவீதத்திற்கும் மேல், குறிப்பாக மின்னணுவியல் துறையில், கடந்த பத்தாண்டுகளுக்குள் தோன்றியவை ஆகும். இவை தவிர, "இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்", இந்திய தொலைபேசி தொழிற்சாலை, மற்றும் வானவியல் ஆராய்ச்சி நிலையம் போன்ற பொதுத் துறையைச் சார்ந்த பெருந்தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான துணை அமைப்புச் சாதனங்களையும், கருவி வகைகளையும், தேர்ச்சி மிக்க தொழில் முனைவர்களால் நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகள் தயாரித்தளிக்கின்றன.

### மின்சாரத் தொழில்கள்

6. தமிழ்நாட்டில் மின்சாரத் தொழில்கள் நிறுவன அமைப்புடைய மற்றும் சிறுதொழில் துறையில் மிக நல்ல வளர்ச்சியடைந்துள்ளன. நாட்டில், மின்சக்தி மின் அழுத்த மாற்றிகள் தயாரிப்பதில் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்கியது. தற்பொழுது தமிழ்நாட்டில், நான்கு "மின் அழுத்த மாற்றிகள்" உற்பத்தி நிலையங்களும் (Power Transformers), இரண்டு "சுவிட்ச்

கியர்'' தயாரிக்கும் நிலையங்களும், மோட்டார்கள் தயாரிக்கின்ற பல நிலையங்களும் உள்ளன. மின்சக்தி வழங்கும் மின் அழுத்தமாற்றிகள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட சாதனங்கள், மின்சார 'மோட்டார்கள்' மின்சாரத் துணைக் கருவிகள், மின் சாதனங்கள், ''கண்டக்டர்கள்'' மற்றும்; புவிடுக் கம்பிகள் (Cables) போன்ற பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

7. சிறுதொழில் துறையில் உள்ள 235 மின்சாரத் தொழிற்சாலைகள் 3,500 பேருக்கு வேலை அளிக்கின்றன. இவர்களுள் 1,600 பேர் மகளிராவர். இத்தொழில் நிலையங்களில் 40 சதவீதத்திற்கும் மேற்பட்டவை நகர்ப் பகுதிகளில் அமைந்துள்ளன. 1976 ஆம் ஆண்டில் 2,500 பேர் வேலை பெற்றனர். தற்பொழுது 3,525 பேர் வேலை பெற்றுள்ளனர். அடுத்த இரண்டு ஆண்டுகளில் இது இன்னும் இரண்டு மடங்காக அதிகரிக்கும். இந்த வேலைவாய்ப்பு அதிகரித்து வருவதற்குக் காரணம் யாதெனில், தனித் தொழிற்பேட்டைகள், சோதனைக் கூடங்கள், சோதனை மற்றும் தொழில் அபிவிருத்தி நிலையங்கள், தொழில் முனைவர்களுக்குத் தேவைப்படும் உதவிகள் போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்குவதில் அரசு மேற்கொண்ட தனி முயற்சிகளே ஆகும். மின்சார மின்னணுவியல் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களை நிறுவுவதில் விருப்பமுள்ள தொழில் முனைவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்து கடைப்பிடிக்கப்படும் பொருட்டு மேற்படி பொருள்களைத் தயாரிப்பதற்குரிய 125 திட்டக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**மின்னணுத் தொழில்கள்.**

8. ஐதராபாத், பெங்களூர் ஆகிய இடங்களில் உள்ள பொதுத் துறையைச் சார்ந்த பெருந்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டிருப்பதுபோல, தமிழ்நாட்டில் மின்னணுத் தொழில் துறையில் போதுமான அளவுக்கு முதலீடு இல்லை. இம்மாநிலத்தில் மின்னணுத் தொழில்களின் வளர்ச்சி சிறு தொழில் துறையில் அமைந்துள்ள பாங்கினைக் காணலாம். மேம்பட்ட தொழில் நுட்ப அறிவு பெற்றவர்களும், திறமை மிக்க தொழில் முனைவர்களும் இந்த அபிவிருத்திக்கு முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.



தனித் தொழிற்பேட்டைகள், சோதனை மற்றும் பொருள் அபிவிருத்தி வசதிகள், தொழில்முனைவர்களுக்கு உதவி, தொழில் நுட்ப ஆலோசனை போன்ற அடிப்படை வசதிகளும், டிஐஐசி-சிட்கோ (தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்-சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்) மற்றும் வங்கிகள் மூலமாக அளிக்கப்படும் தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் நிதியுதவிகள் ஆகியவையுமே இத் தொழில்களின் முறையான அபிவிருத்திக்கு முக்கிய காரணங்களாகும்.

9. சிறு தொழில் துறையில் 185 மின்னணுத் தொழில் நிலையங்களும், பெருந் தொழில் துறையில் 7 நிலையங்களும் உள்ளன. பொழுது போக்கு மின்னணுச் சாதனங்கள், தனித் தொழிலில் பயன்படும் கருவிப் பாகங்கள், மின்னணு அளவை மற்றும் சோதனைக் கருவிகள், கணக்கிடும் கருவிகள், மின் மருத்துவ சாதனங்கள் போன்ற பொருள்களைச் சிறு தொழில் துறையில் தயாரிக்கப்படுவது குறிப்பிடத் தக்கதாகும். இம்மாநிலத்தில் தயாரிக்கப்படுகின்ற ''புராசஸ் கண்ட்ரோல்'' மின்னணுச் சாதனங்களை, உருக்கு ஆலைகளிலும், உரத் தொழிற் சாலைகளிலும் துணி ஆலைகளிலும், உலைகளிலும், அணுத் தொழிற்சாலைகளிலும் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் 80 சத வீதத்திற்கும் அதிகமான தொழில் நிலையங்களை, நன்கு தேர்ச்சி பெற்ற பொறியாளர்களும், அறிவியலாளர்களும் நடத்தி வருகின்றனர். தமிழ்நாட்டிலுள்ள சிறு ரக மின்னணுத் தொழில் துறையில், தனி ''ஆண்டென்னா சிஸ்டம்'' அணுத் தொழிற்சாலைகளுக்குரிய உயர் விசைக் கருவிகள், மின் சக்தி வழங்குவதற்குரிய ''பிரிக்குவன்சி கண்ட்ரோல்'' கருவிகள், சாதனங்கள், ''கம்ப்யூடர்ட்ரெய்னர்கள்'', அழுத்த மற்றும் வெப்ப மாற்றிகள், ''பெரைட்'' மின் சக்தி ''சோர்சுகள்'' போன்ற சிறப்பு பொருந்திய கருவிகளைத் தயாரிக்கப்படுகிறது. சுரங்கங்களில் பயன்படும் மின்னணு கருவிகளையும் ''மைக்ரோ'' ''ப்ராசசர்ஸ்''களையும் வேளாண்மைத் துறைக்குப் பயன்படும் மின்னணுப் பொருள்களையும் தயாரிக்கும் தொழில்கள் அடுத்து இரண்டாண்டுகளில் நிறுவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

10. தமிழ் நாட்டின் மின்னணுத் தொழில்களின் வளர்ச்சியின் ஒரு சிறப்பான அம்சம் யாதெனில், அடிப்படை மின்னணுத் தொழில்களோடு சேர்ந்து ''பிளாஸ்டிக்'', ''பிளேட்டிங்'', ''ஸ்கிரீன் பிரிண்டிங்'' உலோகத் தகடுகள், ''ப்ரெசிசன்'' இணைப்பான்கள், சிறப்பான ரப்பர் பாகங்கள் மற்றும் கட்டும் பணிகளுக்குரிய பொருள்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் துணைத் தொழில்கள் அடையார், ஓசூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களிலுள்ள மின்னணுத் தொழில் வளர்ச்சி மையங்களில் முறையாக வளரவும் ஊக்கமளிக்கப்படுகிறது.

11. தற்பொழுதுள்ள மின்னணுத் தொழில்களின் நிலை பின்வருமாறு:—

| | எண்ணிக்கை. | வேலைவாய்ப்பு.* 1976 | 1977 | 1978 | 1979 | 1980 |
|---|---|---|---|---|---|---|
| I. பெருந்தொழில்துறை .. | 7 | 160 | 300 | 450 | 600 | 1,200 |
| II. சிறு தொழில்துறை— | | | | | | |
| 1 பொழுதுபோக்கு மின்னணுத் தொழில். | 33 | 200 | 300 | 400 | 600 | 800 |
| 2 'புராஸஸ்' கட்டுப்பாட்டுச் சாதனங்கள். | 10 | 30 | 60 | 180 | 350 | 500 |
| 3 கருவிகள் .. .. | 8 | 35 | 75 | 150 | 350 | 500 |
| 4 மின் மருத்துவச் சாதனங்கள் | 3 | 25 | 60 | 200 | 350 | 500 |
| 5 மின்சக்தி வளங்கள் மற்றும் வழங்குதல். | 8 | 80 | 150 | 300 | 400 | 600 |
| 6 கணக்கிடும் கருவிகள் .. | 2 | 15 | 60 | 70 | 100 | 150 |
| 7 கணக்கிடும் பொறிகள் .. | 1 | 5 | 10 | 20 | 25 | 40 |
| 8 மின்பாகங்கள் .. .. | 31 | 300 | 500 | 1,800 | 2,000 | 3,000 |
| 9 இதர வகைகள் .. .. | 5 | 60 | 985 | 1,280 | 1,825 | 2,910 |
| 10 துணை மற்றும் அதன் சார்புத் தொழில்கள். | 84 | 900 | 1,800 | 2,000 | 2,500 | 3,000 |
| மொத்தம் .. | 185 | 1,650 | 4,000 | 6,400 | 8,500 | 12,000 |



* செயலிலுள்ள தொழில் நிலையங்கள் புதிய பொருள்களைத் தயாரிப்பதை மேற்கொள்ளுவதன் பயனாகவும் புதிய தொழில் நிலையங்கள் தோன்றுவதன் பயனாகவும் இந்த அளவுக்கு வேலை வாய்ப்பு கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பலவிதமான மின்லணுப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. என்பது இந்த அட்டவணையிலிருந்து அறியலாம். பொழுது போக்குக்குப் பயன்படும் மின்னணுப்பொருள்கள் நீங்கலாக உள்ள பிற பொருள்களும் தனித் தொழிலியல் மின்னணுப் பொருள் களும் குறிப்பிடத்தக்க அளவில் தயாராகின்றன என்பதும் தெரிய வருகிறது. தமிழ்நாட்டில் சிறு மின்னணுத் தொழில்கள் ஏற்றுமதி யிலும் ஈடுபட்டு ''கார்'' வா.னொலிப் பெட்டிகள் ''அனலைசர்கள்'' ஒலிபெருக்கி சாதனங்கள் ''உலோக கட்டு ஆக்சைடு பிலிம்'' தடைகள் மற்றும் ''ப்ராசஸ் கட்டுப்பாட்டுக் கருவிகள்'' முதலிய பொருள்களை ஏற்றுமதி செய்கின்றன.

12. சிறு தொழில் துறையில் தயாராகும் மின்னணுப் பொருள் களின் அளவு படிப்படியாக உயர்ந்து கொண்டே வருகிறது. 1970–71ல் 10 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் தயாரிக்கப்பட்டன. இப்பொழுது அது 900 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாகும். வேலைவாய்ப்பும் கணிசமான அளவுக்கு தோற்று விக்கப்பட்டுளளது. கடந்த 3 ஆண்டுகளில் வேலைவாய்ப்புக்கள் ஒரே சீராக அதிகரித்துள்ளன. நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் பயிற்சி பெறாதோர் ஆகிய எல்லா நிலைகளிலும் உள்ள ஆடவர் மகளிர் பலருக்கு இத் தொழில்கள் வேலையளிக்கின்றன. சிறு மின்னணுத் தொழில்கள் தற்பொழுது. 6,400 பேருக்கு நேரடி யாக வேலை வாய்ப்பளிக்கின்றன. அடுத்த ஒரு ஆண்டில் இன்னும் 2,000 க்கும் அதிகமானோருக்கும், அதற்கடுத்த ஆண்டில் மேலும் 3,500 பேருக்கும் வேலை வாய்ப்பு கிட்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

13. நாட்டில் தயாரிக்கப்படும் மின்னணுப் பொருள்களின் அளவில் 8 சதவீதம் தான் தமிழ்நாட்டில் மொத்த வியாபார அளவு என்றாலும் சில முக்கிய பொருள்களை தமிழ்நாடு தயாரிக்கிறது. சுரங்கங்களில் பயன்படும் மின்னணுப் பொருள்கள் அணுசக்தி நிலையங்களுக்கு வேண்டிய சாதனங்கள், ''புராசஸ்'' கட்டுப்பாட்டுக் கருவிகள், ''மைக்ரோ பிராசஸ் யூனிட்டுகள்'' முதலியன குறிப்பிடத்தக்கவையாகும். மற்றொரு முக்கிய அம்சம் யாதெனில் தேர்ச்சிபெற்றவர்கள் மட்டுமின்றி பயிற்சி பெறாதவர் களும் மகளிரும் வேலை வாய்ப்பினைப் பெற்றிருத்தலே ஆகும்.

14. தொழில் முன்னவர்களை ஊக்குவித்து வருவதன் பயனாக அடுத்த இரண்டாண்டுகளில் மின்னணுத் தொழில்கள் பெருக்கம் மேலும் அதிகமாகும் என்பதல்லாமல். வேலை வாய்ப்பும் பெருகும்.

15. தமிழ்நாட்டில் மின்னணு மற்றும் அதனைச்சார்ந்த தொழில் களை மேம்படச் செய்ய தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் என்ற ஒரு தனி அமைப்பை அரசு நிறுவியுள்ளது. பொதுத் துறையில் அல்லது கூட்டுத் துறையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து தொழில் நுட்பம் வாய்ந்த தயாரிப்புகளை மேற் கொள்ளுவ தற்கென்று கண்டறியப்பட்டுள்ளது.



அ. ''பேஷன்ட் மானிடரிங் சிஸ்ட்டம்ஸ்'' ''எலெக்ட்ரோ கார்டியோ கிராம்ஸ்'' மற்றும் ''யோனோ கார்டியோ கிராம்ஸ்''

ஆ. கணக்கிடு சாதனங்களுக்கு வேண்டிய ''டைரக்ட் என்ட்ரி'' சாதனங்கள்.

இ. மின்னணு கணக்கிடும் கருவிகளுக்கு வேண்டிய நிகச்சிறு ''பிரிண்ட்டர்ஸ்''

ஈ. நெடுந்தொலைவு செய்திச் சாதனங்களுக்கு வேண்டிய கையுறைத் தொகுதிகள் (Hand sets) தலைப் பிணைப்புத் தொகுதி கள் (Head sets) மற்றும் ''ஹட்கியர் அசெம்பிளி''

ஊ. சுற்றுப் புறத் தூய்மைக் கேடு சுகாரம் குறித்த கண் காணிப்புச் சாதனங்கள் (Environmental Pollution and Health Moni-tonnes Instruments)

சாத்தியக் கூறு அறிக்கைகளும், தொழில் திட்டக் குறிப்பு களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்தொழில் நிலையங்கள் உருவாகும் பொழுது தமிழ்நாட்டின் மின்னணுத் தொழிலின் அடிப்படை அமைப்பை அவை பலப்படுத்தும்.

## III. இராசயனத் தொழில்கள்.

16. இரசாயனத் தொழில்கள் பல்வேறு இரசாயனப் பொருள் களைத் தயாரிக்கும் தொழில்களும், சார்புத் தொழில்களும், அடங்கியுள்ளன. கடின இரசாயனப் பொருள் தயாரிப்பு தொழில் கள் மற்றும் உரத் தொழிற்சாலைகள். போன்ற மாபெரும் தொழில்கள் முதல், மருந்துப் பொருள்கள், வர்ணங்கள், வண்ணப் பூச்சுகள் முதலியவற்றைத் தயாரிக்கும் சிறு தொழில்கள் வரை, பல இரசாயனத் தொழில்கள் உள்ளன. நாட்டிலுள்ள பெருந்தொழில் வரிசையில் பஞ்சாலை, இரும்பு, பொறியியல் தொழில்களுக்கு அடுத்தபடியாக நான்காம் இடத்தை வகிப்பது இரசாயனத் தொழில்களேயாகும். இந்தியாவில் இத்தொழிலில் அமைந்துள்ள மூலதனம், 1961–ல் 3,040 மில்லியன் ரூபாயிலிரு ருந்து 1977–ல் 25,000 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக உயர்ந்தது. உற்பத்தியளவு 1975–ல் 1,200 மில்லியன் ரூபாயி லிருந்து 1977–ல் 30,000 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக உயர்ந்தது.

17. இரசாயனத் தொழில்களின் அபிவிருத்திக்குத் தேவை யான இயற்கை வளங்கள் குன்றியுள்ள தமிழ்நாடு வேளாண்மை சார்ந்த மாநிலம் என்றிருப்பினும் அனைத்து இந்தியாவில் இத்தொழிலில் வளர்ச்சி எப்படியுள்ளதோ அதே போன்ற

நிலையில்தான் இரசாயனத் தொழில்கள் தமிழ்நாட்டில் அபிவிருத்தியடைந்துள்ளன என்பது மகிழ்ச்சிக்குரியதாயுள்ளது. கிடைத்துள்ள தகவல்களின்படி இந்திய அரசினுடைய தொழில் நுட்ப அபிவிருத்தி தலைமை இயக்குனர் அலுவலகத்தில் பதிந்துள்ளஇராசயனப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில் நிலையங்களின்(உரங்களை உற்பத்தி செய்யும் நிலையங்கள் நீங்கலாக) எண்ணிக்கை 477 ஆகும். இவற்றுள் 168 நிலையங்கள் மகாராட்டிரத்திலும், 49 குஜராத்திலும், 45 தமிழ்நாட்டிலும் உள்ளன. நாட்டின் அனைத்துத் தொழில் துறைகளிலும் தயாராகும் பொருள்களின் மொத்த மதிப்பில் 7.4 சதவீதம் இரசாயனத் தொழில்களைச் சார்ந்ததாகும். தமிழ்நாட்டில் அனைத்துத் துறைகளிலும் தயாராகும் பொருட்களின் மொத்த மதிப்பில் இரசாயனத் தொழில்களின் பங்கு 1974–75-ல் 8 சதவீதமும், 1975–76-ல் 8.92 சதவீதமும் ஆகும். ''ஆல்கஹால்'' அடிப்படைத் தொழில்கன் கனிவள அடிப்படைத் தொழில்கள் மற்றும் அடிப்படை மருந்துப் பொருள்கள் வண்ணப் பொருள்கள், பூச்சிக் கொல்லிகள், புழுக் கொல்லிகள், களை கொல்லிகள் போன்ற இரசாயனப் பொருள்களைத் தமிழ்நாட்டில் பெருந்தொழில் துறையில் தயாரிப்பதை மேலும் அபிவிருத்தியடையச் செய்யப் போதுமான வாய்ப்புகள் அமைந்துள்ளன.

18. பெருந்தொழில் மத்தியதரத் தொழில் துறைகளில் எந்த நிலையில் இரசாயனத் தொழில்கள் வளர்ந்துள்ளனவோ அதே நிலையில்தான் சிறு தொழில் துறையிலுள்ள இரசாயனத் தொழில்களும் தமிழ்நாட்டில் வளர்ச்சியடைந்துள்ளன. 1972-ல் நடத்திய சிறு தொழில் கணக்காய்வு அடிப்படையில் அமைந்த அனைத்திந்திய அறிக்கை ஒன்றின்படி, நாட்டிலிருந்த 1,39,577 பதிவு பெற்ற சிறு தொழில் நிலையங்களுள் 11,837 இரசாயனத் தொழில்களாகும். பதிவு பெற்ற மொத்த சிறு தொழில் நிலையங்களில் இது 8.5 சதவீதமாகும். தமிழ்நாட்டிலிருந்த 16,002 பதிவு பெற்ற நிலையங்களுள் 1,608 இரசாயனத் தொழில்களாகும். பதிவு பெற்ற மொத்த நிலையங்களில் இது 10 சதவீதம். இந்தியாவில் தமிழ்நாட்டில்யதான் சிறு இராசாயனத் தொழில்கள் அதிகமாயிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து மகாராட்டிர மாநிலத்தில் 1,542 சிறு இராசாயனத் தொழில்கள் இருந்தன. உணவுப் பொருள்கள், ஊட்டச் சத்துப் பொருள்கள் ''இரப்பர்'' மற்றும் ''பிளாஸ்டிக்கு'' முதலிய இரசாயனம் சார்ந்த பொருள்களைத் தயாரிக்கும் சிறு தொழில்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் பதிவான 16,002 சிறு தொழிலில் நிலையங்களில் 5,473 நிலையங்கள் இரசாயனம் சார்ந்த தொழில்களாகும். பதிவான 16,002 நிலையங்களில் இது 34 சதவீதமாகும். கடந்த ஆண்டுகளில் நிகழ்ந்துள்ள முன்னேற்றத்தை ஆராயுங்கால், தமிழ்நாட்டின் சிறு தொழில் துறையில் இரசாயனம் மற்றும் அதுசார்ந்ததொழில்கள், சீராக வளர்ச்சியடைந்திருப்பது தெரிய வருகிறது.



19. கையால் தீக்குச்சி செய்தலும், பட்டாசுகள் செய்தலும் முக்கிய சிறு இரசாயனத் தொழில்களாகும். இவற்றிற்குத் தேவையான சிகப்பு ''பாஸ்பரஸ்'' ''பொட்டாசியம் டைக்ரோமேட்டு'', ''பசை'' ''நீல நிற தீப்பெட்டி காகிதம்'', ''பேரியம் நைட்ரேட்'', ''ஸ்ட்ரோன்டியம் நைட்ரேட்'' முதலிய இரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் துணைத்தொழில்களுக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன. இந்த பொருள்களைத் தயாரிக்க முன்வருவோரை இந்த இயக்குநரகம் ஊக்குவித்து வருகிறது. போதுமான அளவுக்கு தீக்குச்சி மெழுகு கிடைக்காமலிருந்ததால், மாநிலத்தில் தீப்பெட்டித் தொழிலின் துரிதமான வளர்ச்சிக்கு அது இடையூராயிருந்தது. இக்காரணத்தால் 5 ''சிலேக்'' மெழுகு சுத்திகரிப்பு தொழில் நிலையங்களை நிறுவ இய்க்குநரகம் ஊக்கமளித்தது. இதனால் தீக்குச்சி மெழுகு பற்றாக்குறை பெருமளவு குறைந்துள்ளது.

20. தமிழ்நாட்டில், சிறு தொழில் துறையில் 250 தொழில் நிலையங்கள் சலவை சோப்பு தயாரிக்கின்றன. சலவைசோப்பு தயாரிப்பதில், தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகித்தது. உண்ணத் தக்க எண்ணெய்ப் பொருள் பற்றாக்குறை காரணமாக துப்புரவு கலவைப் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்கள் மிக மிக முக்கியமாக கருதப்படுகிறது. மேலுப் சிறு தொழில் துறையில் இவ்வகைத் தொழில்களை அபிவிருத்தியடையச் செய்ய இயலும். ஆதலால் தற்பொழுது சோப்பு தயாரிக்கும் தொழில் நிலையங்கள் துப்புரவு கலவைப் பொருள்களையும் தயாரிப்பதற்கு ஊக்கமளிப்பதன் வாயிலாக சிறு தொழில் துறையில் இவ்வகைத் தொழில்களை அபிவிருத்தி செய்ய, 1975-ல் இத்துறையானது முயற்சிகளை மேற்கொண்டு ஆண்டொன்றுக்கு 10,000 டன் துப்புரவு கலவைப் பொருள்களைத் தயாரிப்பது என்ற இலக்கினையும் நிர்ணயித்தது. இதன் காரணமாக, மாநிலத்தில் இப்பொழுது துப்புரவு கலவைப் பொருள்களைத் தயாரிக்கும் நிலையங்கள் 300 உள்ளன. இவை ஆண்டொன்றுக்கு 8,000 டன் துப்புரவு கலவைப் பொருள்களைத் தயாரிக்கும் திறன் பெற்று விளங்குகின்றன. இவை சோப்புத் தொழில்கள் நலிந்து மூடும் நிலைக்குப் போகாமல் இருக்க உதவியுள்ளன. துப்புரவு கலவைப் பொருள்கள் பிரபலமாகி வருகின்றன. இவைகளின் தேவையும் சீராக அதிகரித்து வருகின்றது. எனவே, மாநிலத்தில், இவ்வகைத் தொழில்கள் மேலும் வளர்ச்சியுற வாய்ப்புகள் உள்ளன.

21. சிறு தொழில்கள் பெருமளவில் வாய்ப்புப் பெறும் மற்றொரு துறை மருந்துப் பொருள்களைத் தயாரிப்பதை சார்ந்ததாகும். சுமார் 30 ஆண்டுகளுக்குமுன் ஏறக்குறைய 30 கோடி ரூபாய் பெறுமானமுள்ள மருந்துப் பொருள்கள் நம் நாட்டில் தயாரிக்கப்பட்டன. 1976–77-ல் இவைகளின் உற்பத்தி சுமார் 800 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்தது. 1980–81-ல் சுமார் 800 கோடி ரூபாய் பெறுமானமுள்ள மருந்துப் பொருள்கள் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆதலால், மருந்துப் பொருள்களைத் தயாரிப்பதற்குத் தொழில்

முனைவர்கள், இயக்குநரகம் ஊக்குவித்து வருகிறது. நாட்டில் சிறுதொழில் நிலையங்கள் 2,500 உள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 300 நிலையங்கள் உள்ளன. இத் தொழிலில் தமிழ்நாடு மூன்றாவதாகத் திகழ்கிறது.

22. அடிப்படை மருந்துப் பொருள்களைத் தயாரிக்கும் சிறு தொழில் நிலையங்கள் தமிழ் நாட்டில் இல்லை. சாதாரணமாக மத்திய பெரு ரகத்தொழில் துறைகளால்தான் இவை தயாரிக்கப்படுகின்றன.

23. மிகப்பெரிய அளவில் வளர்ச்சி பெற வாய்ப்புகளைக் கொண்டு விளங்கும் மற்றொரு தொழில் ஊதுவத்தித் தொழிலாகும் (அகர்பத்தி). ஏனெனில், இப்பொருளைப் பரந்த அளவில், குறிப்பாக ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்புகள் உள்ளன. ஊதுவத்தி தயாரிப்பதிலும், ஏற்றுமதி செய்வதிலும் முன்னணியில் உள்ள கர்நாடக மாநிலத்தில், இத் தொழில் நன்கு அபிவிருத்தி அடைந்துள்ளது. ஆதலால், இத்தொழிலை அபிவிருத்தி செய்ய, தொழில் வணிகத்துறை இயக்குநரகம், தனி முயற்சிகளை எடுத்துக்கொண்டது. இம்முயற்சியின் காரணமாக இப்பொழுது மாநிலத்தில் 20 ஊதுவத்தி தொழில் நிலையங்கள் உள்ளன. மேலும், பல தொழில் நிலையங்கள் தோன்ற வாய்ப்புள்ளன.

24. சிறு தொழில் துறையில் தயாரிப்பதற்குத் தகுதியான மற்றுமொன்று பிளாஸ்டிக் செய்முறைத் தொழில் ஆகும். இந்தியாவிலுள்ள 6,000 தொழில் நிலையங்களில் தமிழ்நாட்டில் சுமார் 300 உள்ளன. ஆதலால், ''எல்டிபிஇ'' (L.D.P.E.) மற்றும் ''பாலிபுரோபிலின்'' அடிப்படையில் அமையும் தொழில்களுக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன.

25. இரப்பர் செய்முறைத் தொழிலும் சிறு தொழில் துறைக்கு உகந்ததாகும். மோட்டார் வண்டிகள், ''டீசல்'' எண்ணெயில் ஓடும் வண்டிகள் ஆகியவற்றுக்குத் தேவையானவை தவிர, மற்ற இரப்பர் பாகங்களனைத்தும், சிறு தொழில் துறையிலேயே தயாரிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் 120 இரப்பர் 'புராசசிங்' சிறு தொழில் நிலையங்கள்



உள்ளன. நாட்டிலுள்ள நிலையங்களின் எண்ணிக்கை 3,000 ஆகும். இம்மாநிலத்தில் இத்துறையில் புதிய தொழில் நிலையங்கள் உருவாகி வருகின்றன.

26. வர்ணங்களைத் தயாரிக்கும் தொழில், சிறு தொழில் துறைக்கு உகந்த மற்றொரு தொழிலாகும். தமிழ்நாட்டில், சிறு தொழில் துறையில் 75 வர்ணத் தயாரிப்பு தொழில் நிலையங்கள் உள்ளன. நாட்டிலுள்ள நிலையங்களின் எண்ணிக்கை 900 ஆகும். படிப்படியாக வர்ணங்களும் அதிகமாகத் தேவைப்படுகின்றன. எனவே, இவ்வகைத் தொழில் நிலையங்கள் மேலும் தோன்றுவதற்கு வாய்ப்புள்ளது.

27. முந்திரிப் பருப்பைப் பக்குவப் படுத்தும் தொழிலானது முக்கியமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. இங்கு சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இத்தொழில் நிலையங்கள் உள்ளன. தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பண்ருட்டியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் 15 தொழிற்சாலைகள் உள்ளன. இத் தொழிலின் வளர்ச்சிக்கு பெரும் தடையாய் இருப்பது முந்திரிக் கொட்டைகளின் பற்றாக்குறையாகும். இறக்குமதி செய்யப்படும் கொட்டைகளையே இத் தொழில் நம்பியிருக்க வேண்டியுள்ளது. இறக்குமதி செய்யப்படும் கொட்டைகள் கிடைப்பதிலும் கஷ்டங்கள் உள்ளன. ஆகையால் நாட்டில் முந்திரி சாகுபடியினை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் முந்திரிச் சாகுபடிக்கு மிகவும் சாதகமான சூழ்நிலை இருக்கிறது. வேளாண்மைத் துறையும், வனத்துறையும் சேர்ந்து முந்திரி சாகுபடியினை அதிகரிப்பதற்கான திட்டங்களை வகுத்துள்ளன.

28. சிறு தொழில் துறையில் அபிவிருத்தி செய்வதற்கு நல்ல வாய்ப்பினைப் பெற்றிருக்கும் மற்றுமொரு தொழில் வாசனைப் பொருள் தயாரிக்கும் தொழிலாகும்.

29. கைத்தறித் துணிகளை தயாரிப்பதில் முன்னணியில் உள்ள மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். எனவே, சாயப் பொருள்களைப் பயன்படுத்தும் ஒரு முக்கிய மாநிலமுமாகும். இங்கு

தேவைப்படும் சாயப் பொருள்களை, வட இந்தியாவிலுள்ள தொழில் நிலையங்களிடமிருந்து பெற வேண்டியுள்ளது. தமிழ்நாட்டில் சாயப் பொருள்களைத் தயாரிப்பதற்கு நல்ல வாய்ப்பிருப்பதால் தொழில் வணிக இயக்குநரகமும், தொழில் முனைவர்களை ஊக்குவித்துள்ளது. இதுவரை சுமார் 15 தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. கடந்த இரண்டாண்டுகளில் சாயப் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்கள் அதிகரித்துக்கொண்டே வந்துள்ளன.

30. பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரிப்பது.

பெரும்பாலும் சிறு தொழில் துறையில்தான் நடைபெற்று வருகிறது. இந்திய தொழில் நுட்ப அபிவிருத்தி தலைமை இயக்குநரது பட்டியலில் சுமார் 50 தொழில் நிலையங்களும், சிறு தொழில் துறையில் 200 நிலையங்களும் நம் நாட்டிலுள்ளன. தமிழ்நாட்டில் சுமார் 40 சிறு தொழில் நிலையங்கள் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. 1974-லிருந்து இத்தொழிலுக்கு மூலப் பொருட்கள் பற்றாக்குறை காரணமாக பதிவுத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் மாநிலத்தில் இத்தொழில் மேலும் வளர்ச்சியுறவில்லை.

31. புள்ளி விவரங்களைச் சேகரித்து வைப்பது, தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பது ஆகிய செயல்களைப் பலப்படுத்தும் பொருட்டு, அடிப்படை புள்ளி விவரங்களை சேகரிப்பதற்கும், திட்டக் குறிப்புகளைத் தயாரிப்பதற்கும், இரசாயனப் பிரிவில் ஒரு தகவல் களஞ்சியத்தை நிறுவப்பட்டுள்ளது.

32. தொழில் முனைவர்களுக்குத் தேவைப்படும் திட்டத் தொகுப்புகளைத் தயாரித்தளிப்பதன் மூலம் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதற்காக அடுத்த ஆண்டில் தகவல் களஞ்சியத்தை பலப்படுத்துவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

33. நாட்டின் உப்பு உற்பத்தியில், தமிழ்நாடு இரண்டாவதாக விளங்குவதால், பல நகரிலுள்ள மத்திய உப்பு மற்றும் கடல் படு இரசாயன ஆராய்ச்சி நிலையத்தின் கூட்டுறவோடு, குறிப்பாக, பெரிய உப்புத் தொழில்கள் சேதமாக்கிவரும் கடல் பாசியிலிருந்து கடல் இரசாயனப் பொருள்களைத் தயாரிப்பதற்காக தூத்துக்குடியிலுள்ள மாநில உப்பு மற்றும் கடல்படு இரசாயன ஆராய்ச்சி நிலையத்தை ஏற்று நடத்தும் கோரிக்கையினை, அரசு அங்கீகரித்துள்ளது. முன்னணியில் உள்ள இந்த தேசீய ஆராய்ச்சி நிலையத்தின் கூட்டுறவால், சேதமாக்கப்பட்டு வரும் கடல் பாசியை உபயோகத்திற்குச் சிறந்த பொருளாகப் பயன்படுத்திக் கொள்ள இயலும் என்று எதிர் பார்க்கப்படுவதால், கடல் படுபொருள் சார்ந்த தொழில் நிலையங்கள் பல தோன்றலாம்.



34. நாட்டிலேயே சவ்வரிசி ''ஸ்டார்ச்சு'' மாவு தயாரிக்கும் பெருமை பெரும்பாலும் சேலம் மாவட்டத்திற்கே உரியதாகும். தரக்கட்டுப் பாட்டோடு கூடிய நல்ல பொருள்களைத் தயாரிக்க வசதிகள் அளிப்பதற்காக, சேலத்தில் சவ்வரிசி ஆராய்ச்சி ஆய்வுக்கூடத்தை தொழில் துறை நிறுவியுள்ளது. இம் மாவட்டத்தில் இத் தொழிலின் அபிவிருத்திக்கு இந்த பகுப்பாய்வுக்கூடம் உறுதுணையாயிருந்து வருகிறது. புரதச் சத்துடன் சவ்வரிசி தயாரிக்கும் திட்டம் ஒன்றை, இந்திய அரசின் உணவு, சத்துணவுத் துறையின் உதவியுடன் இந்த ஆய்வுக்கூடம் நிறைவேற்றி வருகிறது.

35. பொருளபிவிருத்தி, தயாரிப்பு, விற்பனை ஆகியவற்றில் தரக்கட்டுப்பாடு ஒரு மிக முக்கியமான அம்சமாதலால் கிண்டி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மூன்று ஆய்வுக் கூடங்களை தொழில் வணிகத்துறை நடத்தி வருகிறது. மாநிலத்தில் சிறு தொழில்களின் அபிவிருத்திக்கு இவை துணை புரிந்து வருகின்றன.

## IV. பட்டுத் தொழில்

36. பட்டு உற்பத்தியில் இந்தியா, உலகத்திலேயே ஐந்தாவது இடத்தை வகிக்கிறது. உலகத்தின் பட்டு உற்பத்தியான 47,800 மெட்ரிக் டன்னில், இந்தியாவின் பங்கு சுமார் 2,800 மெட்ரிக் டன்களாகும். இது உலகத்தின் மொத்த உற்பத்தியில்

5 சதவீதத்திற்கு அதிகமாகும். தற்பொழுது இத் தொழில், நாட்டின் கிராமப் பகுதிகளில் உள்ள மக்களில் 40 இலட்சம் பேருக்கு மேல் முழுநேர மற்றும் பகுதி நேர வேலை வாய்ப்பை அளிக்கிறது. இதில் 30 சதவீதத்திற்கு மேற்பட்டோர் பின் தங்கிய மற்றும் மலைவாழ் சமுதாயத்தைச் சார்ந்தவர்களாவார்கள். மொத்தமாக மதிப்பிடப்பட்டுள்ள ரூ. 100 கோடிக்கும் அதிகமான பட்டுத் தொழில் உற்பத்திப் பொருட்களில், 25 சதவீதப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

37. தமிழ்நாட்டில் பட்டுத் தொழிலானது, சமீப காலம் வரை கர்நாடக மாநிலத்தை ஒட்டியுள்ள தர்மபுரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மேட்டுப்பாங்கான பகுதிகளில் மட்டுமே நடைபெற்று வந்தது. முசுக்கொட்டைச் சாகுபடி மழைக்காலப் பயிர் என நினைக்கப்பட்டது. விஞ்ஞான ரீதியில் பட்டுப் புழு வளர்க்கும் தொழில் நுட்ப முறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், பட்டுப் புழுக் கூடுகளுக்கு நல்ல விலை, தமிழ் நாட்டின் சமதளப் பகுதிகளிலுள்ள விவசாயிகளின் ஆர்வம், ஆகிய சாதகமான சூழ்நிலைகள் காரணமாக தமிழ்நாட்டின் சமதளப் பகுதிகளிலுங்கூட முசுக்கொட்டை பயிரிட்டு, பட்டுப்புழு வளர்ப்பு தொழிலினை மேற்கொள்ள முடியும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மாநிலத்தின், அனைத்துப் பகுதிகளிலும், இத் தொழில் நடைபெற்று வருகிறது. 1956-ஆம் ஆண்டில் மாநிலங்கள் சீரமைப்பு நடந்த பொழுது, தமிழ் நாட்டில் 1,000 ஏக்கர் நிலத்தில் மட்டுமே முசுக்கொட்டை பயிரிடப்பட்டது. இன்று 20,000 ஏக்கர் நிலத்தில் (10,000 ஏக்கர் மழை காலப் பயிர். 10,000 ஏக்கர் நீர் பாசனத்தில்) முசுக்கொட்டை பயிரிடப்பட்டு வருகிறது.

38. தமிழ் நாட்டில் 18 இலட்சம் கிலோ பட்டுப் புழுக்கூடுகள் உற்பத்தியாகிறதென மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் மூன்றில் ஒரு பகுதியை இங்



கேயே நூலாக்கி ஆண்டொன்றுக்கு 50 ஆயிரம் கிலோ பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. இத் தொழிலானது, தமிழ் நாட்டிலுள்ள கிராமப் பகுதிகளில் சுமார் 1,00,000 பேருக்கு வேலை அளிக்கிறது.

39. இயக்குநரகத்தின் வளர்ச்சித் திட்டங்களில், இத்தொழிலானது மிக முக்கியமானதாக விளங்குகிறது. 1977-ஆம் ஆண்டு டிசம்பரில், 52·63 இலட்சம் ரூபாய் மதிப்பில் தீவிர பட்டுத் தொழில் வளர்ச்சித் திட்டமொன்று ஒப்புதலளிக்கப்பட்டு, தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் முசுக்கொட்டை சாகுபடியாளர்களுக்கும், சிறிய பட்டு நூல் நிலையங்களுக்கும் பல விதமான சலுகைகள் அளிக்கப்படுகின்றன. பட்டுப் புழு முட்டைகளின் உற்பத்தியை அதிகரிக்க மேலும் மூன்று பட்டுப்புழு முட்டை உற்பத்தி நிலையங்கள் 1977–78 மற்றும் 1978–79ல் ஆரம்பிக்கப்பட்டன. எட்டுப் பட்டு புழுக்கூடுச் சந்தைகளும் கூடுதலாக திறக்கப்பட்டன.

40. தமிழ் நாட்டிலுள்ள பட்டுப் புழுக்கூடு தயாரிப்பவர்கள் பட்டு நூல் எடுப்பவர்கள், கைத்தறி நெசவாளர் ஆகியவர்களுக்கு உதவியளிக்கும் வகையில் சுலபமான விற்பனை வசதிகளை அமைத்துத் தரவும் இடையில் இலாபமடையும் இடைத்தரகர்களை அறவே நீக்கி விடவும் தொழில் கூட்டுறவு பட்டு நூல் விற்பனைக் கூட்டமைப்பு ஒன்று அண்மையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது இந்த கூட்டமைப்பில் 164 உறுப்பினர்கள் உள்ளனர். இது வரையில் ரூ. 25·5 இலட்சம் மதிப்புள்ள 9,158 கிலோ கிராம் பட்டு நூல் கையாளப்பட்டுள்ளது.

41. தமிழ் நாட்டிற்கு ரூ. 15 கோடி மதிப்புள்ள 6 லட்சம் கிலோ பட்டு நூல் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பட்டு நூல் உள் நாட்டிலேயே மிக அதிக அளவில் தேவைப்படும் ஒரு பொருளாகும். பட்டு உற்பத்தியில் சுய தேவையை அடையவும் கிராமப் பகுதிகளில் பெரு

மளவில் வேலை வாய்ப்பினைத் தோற்றுவிக்கவும் இத் தொழில் உகந்ததாகையால், மாநிலத்தில் பட்டுத் தொழிலை அபிவிருத்தியடையச் செய்ய மாபெரும் வாய்ப்புகள் உள்ளன.

42. ஆறாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் ரூ. 6 கோடி செலவிற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசால் அமைக்கப்பட்ட பணிக்குழு (working group) இம்மாநிலம் அளித்த திட்டங்களுக்கு முழுமையாக ஒப்புதல் தந்துள்ளது.

1979—80 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது :—

1. பட்டுப் புழு வளர்ப்பு. கொட்டகைளுக்கு உதவித்தொகை அளிக்கும் திட்டம்.

2. உதவித் தொகை அளித்து பட்டுப்புழு வளர்ச்சிக்கான கருவிகளை அளித்தல்.

3. முசுக்கொட்டை பயிரிடும் நிலப்பரப்பை விரிவாக்குதல்.

4. விவசாயிகளுக்கான செயல்முறை விளக்கப் பயிற்சி முறைநிலையங்களை அமைத்தல்.

5. கூடுதலான பட்டுப்புழு கூடுக்கான விற்பனை சந்தைகளை நிறுவுதல்.

6. உத்தான பள்ளி மேலும் ஓசூரிலுள்ள அரசு பட்டுப்பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்.

7. விவசாயிகளுக்கான பயிற்சியளித்தல்.

8. தனியார் துறையில் 'காட்டேஜ் பேசின்' அடிப் படையில் பட்டு சுற்றும் பகுதிகளை நிறுவுதல்.

9. தஞ்சாவூர், தென்ஆற்காடு பகுதிகளில் பட்டுத் தொழில் சார்ந்த பணிகளை விரிவு செய்தல்.



43. மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாநில அரசுத் திட்டங் ளைத் தவிர, மத்திய அரசு உதவியோடு கூடிய ஒரு திட்டமாக, விர பட்டுத்தொழில் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், . 156 இலட்சம் செலவினத்தில், திட்டங்கள் வகுக்கப் ட்டுள்ளன.

44. இத்திட்டங்கள் மூலம் இம்மாநிலத்தில் பட்டு உற் ந்தியை பெருக்குவதோடல்லாமல், கிராமப் பகுதிகளில் ,000 பேருக்கு கூடுதல் வேலை வாய்ப்பு ஏற்படும் என்று திர்பார்க்கப்படுகிறது.

45. இத் திட்டத்தின் மூலம் கூடுதலான வேலை வாய்ப்பினை ருவாக்குவதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அரசு தற்காகவே ஒரு தனி இயக்குநரகத்தினை ஏற்படுத்தி ஆணை ட்டுள்ளது.

பட்டுத்தொழில் சார்ந்த பல்வேறு பணிகளைக் காட்டும் ம் இணைக்கப்பட்டுள்ளது.

## V. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்.

46. தொழிலாளர்கள், கைவினைஞர்கள் ஆகியவர்களின் பாருளாதார நிலையினை உயர்த்துவதற்கு இயக்குநரகம் யலாக்கி வரும் பல்வேறு நடவடிக்கைகளுள் தொழில் கூட் றவுச் சங்கங்கள் நடத்துவதற்கு தொழில் நுட்பம், நிர்வாகம் ற்றும் நிதியுதவி அளித்து வருவது குறிப்பிடத்தக்கது. 1978ஆம் ண்டு செப்டம்பர் இறுதியில், மாநிலத்தில் 302 கூட்டுறவுச் கங்கள் இருந்தன. இவை சுமார் 25,000 பேருக்கு வேலை ாய்ப்பினை அளித்து வந்தன.

47. இலாபகரமாக இயங்கி வந்த தொழிற் கூட்டுறவுச் கங்கள் 1976—77ஆம் ஆண்டில் 39 சதவீதத்திலிருந்து 1978 ம் ஆண்டு செப்டம்பர் இறுதியில் 50 சதவீதமாக உயர்ந் ள்ளது. இவற்றின் வியாபார நடவடிக்கைகளும் நிலையாக ன்னேறி வருகின்றன. 1977ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத் ாடு முடிவுற்ற அரையாண்டில், இவற்றின் உற்பத்தி மற்றும் ற்பனை முறையே ரூ. 778.54 இலட்சம், ரூ. 937.93 இலட்சமே கும். ஆனால் இவை 1978ஆம் ஆண்டு செப்டம்பர் திங்க ாடு முடிவுற்ற அரையாண்டில் முறையே ரூ. 898.66 இலட்சம், 978.47 இலட்சமென உயர்ந்தது.

48. நலிந்துபோன மக்களை இரக்கமற்ற இடைநிலை வியா ரக் கூட்டத்தினரிடமிருந்து பாதுகாக்கும் பொருட்டு, வர்களைக் கூட்டுறவுத் துறையில் கொண்டு வருவதைத் ாழில் துறையானது தொடர்ந்து கவனித்து வருகிறது.

49. சில முக்கிய தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

## தேயிலைத் தொழில்

50. இம் மாநிலத்தில் தொழிற் கூட்டுறவுத் துறையில் 11 தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. இவை 11,588 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலையைப் பயிரிடுகின்றன. இது மாநிலத்தின் தேயிலை பயிரிடும் நிலப்பரப்பில் 7.59 சதவீதமாகும். இவற்றின் தேயிலை உற்பத்தி மாநில உற்பத்தியில் 9.85 சதவீதமாகும். இத்தேயிலைத் தொழிற்சாலைகள் 945 பேருக்கு நேரடியாகவும், தேயிலைத் தொட்டங்களில் 35,730 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளிக்கின்றன.

51. நீலகிரியில் ஏற்கனவே இயங்கிவரும் 11 தேயிலைத் தொழிற்சாலைகளில் குந்தா, கீழ்கோத்தகிரி, மஞ்ரிசூர், மகாலிங்கா, கோத்தகிரி மற்றும் கூடலூர் ஆகிய இடங்களிலுள்ள 6 தேயிலைத் தொழிற்சாலைகள் மட்டும் ரூ. 50.36 இலட்ச மதிப்புள்ள உற்பத்தி விரிவாக்கத் திட்டங்களை மேற்கொண்டுள்ளன. இந்த விரிவாக்கத் திட்டங்களை முழுவதும் நிறைவேறுகின்றபொழுது 750 சிறு தேயிலைப் பயிரிடுபவர்கள், கூட்டுறவுத் துறைக்கு கொண்டுவரப்படுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மேலும் 2,500 ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிடப்படும். இது மேலும் 180 தொழிற்சாலை பணியாளர்களுக்கு நேரடியாகவும் 7,500 விவசாயத் தொழிலாளர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினை அளிக்கும்.

52. நலிந்துபோன மலைவாசிகள் சுமார் 5,500 பேருக்கு தேயிலைத் தோட்டங்களிலும், தேயிலை தொழிற்சாலைகளிலும் வேலை வாய்ப்பளிக்கும் பொருட்டு கூடலூர் பகுதியிலுள்ள ஜன்மப் நிலப் பகுதிகளில் 5,000 ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிடுவதற்காக, சுமார் ரூ. 10 கோடி செலவில் ஐந்து தேயிலைத் தொழிற் கூட்டுறவுத் தொழிற் சாலைகளை அமைக்கும் திட்டமொன்று அரசு மேற்கொள்ளும். இவற்றில் ஒரு தொழிற்சாலை 1979–80ஆம் ஆண்டில் நிறுவப்படும். அகதிகள், மலைவாசிகள் உள்ளிட்ட சுமார் 1,000 பேருக்கு இத்தொழிற்சாலை வேலை அளிக்கும்.

## தீப்பெட்டித் தொழில்

53. தமிழ்நாட்டில் 31–12–1978-ல் மூன்று இலட்சம் பேருக்கு மேல் வேலையளிக்கின்ற 2,663 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருந்தன. 1977–78 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில்



யால் தயாரிக்கப்பட்ட தீப்பெட்டிகளின் எண்ணிக்கை இலட்சம் ''குரோஸாகும்''. ''விம்கோ''வில் தயாரிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை 60 இலட்சம் ''குரோஸாகும்''.

54. பத்தி 56 இனம் 3-ல் குறிப்பிட்டுள்ள 900 தொழிற்சாலைகளை அங்கத்தினர்களாகக் கொண்ட 17 தீக்குச்சி உற்பத்தியாளர்கள் பணிக் கூட்டுறவு சங்கம் சுமார் 18,000 பேருக்கு வேலை அளித்துள்ளது.

55. தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பல்வேறு துறைகளில் தயாரிக்கப்படுகின்ற தீக்குச்சிகளுக்கு வசூலிக்கப்படுகின்ற சுங்க வரி விவரம் பின்வருமாறு : —

| | |
|---|---|
| 1. ''விம்கோ'' .. .. .. | ''குரோஸ்'' ஒன்றுக்கு ரூ. 4.60 5 சத வீதம் மிகை வரி. |
| 2. அளவு நிர்ணயிக்கப்படாமல் கையால் தயாரிக்கப்படுவது. | ''குரோஸ்'' ஒன்றுக்கு ரூ. 4.30. 5 சத வீதம் மிகை வரி. |
| 3. அளவு நிர்ணயிக்கப்பட்டு கையால் தயார் செய்த தீக்குச்சிகள் ஆண்டொன்றுக்கு 75 மில்லியன் (10,415 குரோஸ்) கதர் வாரியம் மற்றும் கூட்டுறவு பணியாளர் சங்கங்கள் ஆகியவற்றால் சான்றிதழ் அளிக்கப்பட்ட தீக்குச்சி உற்பத்தியாளர்கள், கூட்டுறவுப் பணி சங்கங்கள் உட்பட. | ''குரோஸ்'' ஒன்றுக்கு ரூ. 3.20 5 சத விகித மிகை வரி. |

56. கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தீக்குச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் போற்றத்தக்க முன்னேற்றத்தினைக் காணலாம்.

| | 1976–77 | 1977–78 |
|---|---|---|
| விற்பனை செய்யப்பட்ட தீப்பெட்டி (''குரோஸ்'' இலட்சத்தில்) .. .. | 27.00 | 44.80 |
| மதிப்பு (ரூ. இலட்சத்தில்) .. .. | 354.58 | 602.59 |
| இலாபத்தில் நடைபெறுகின்ற தீக்குச்சி கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை .. | 3 | 9 |

| | அரையாண்டு இறுதி 30–9–1977 | 30–9–1978 |
|---|---|---|
| விற்பனை செய்யப்பட்ட தீப்பெட்டி (''குரோஸ்'' இலட்சத்தில்). .. .. | 20.25 | 27.95 |
| (மதிப்பு ரூ. இலட்சத்தில்) .. .. | 196.86 | 307.66 |
| இலாபத்தில் நடைபெறுகின்ற தீக்குச்சி கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை .. | 9 | 3 |

**1978–79** ஆம் ஆண்டில் ஆறு மாதங்களுக்குள்ளான விற்பனை அளவு 1976–77 ல் ஓராண்டில் விற்பனை செய்யப்பட்ட விற்பனை அளவினைத் தாண்டியுள்ளது.

56. குடிசைத் தொழில்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு இந்திய அரசு தீக்குச்சிகளின் மீதான ஆயத் திர்வையை திருத்தியமைத்துள்ளது. முன்னால் இருந்த தீர்வையும் இப்பொழுது திருத்தியமைக்கப்பட்ட தீர்வையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| துறை. | ஆயத் தீர்வை. முன்பு இருந்த தீர்வை. | 28–2–79 லிருந்து |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் குரோசுக்கு) | |
| 1 இயந்திர மூலம் தயாரிப்பு .. | 4.83 | 7.20 |
| 2 அளவு நிர்ணயிக்கப்படாமல் கையால் தயாரிக்கப்படுவது .. .. .. | 4.52 | 4.50 |
| 3 அளவு நிர்ணயிக்கப்பட்டு கையால் தயார் செய்த தீக்குச்சிகள் ஆண்டொன்றுக்கு 10,415 குரோஸ் கதர் ஆணையத்தால் சான்றிதழ் அளிக்கப்பட்ட தீக்குச்சி உற்பத்தியாளர் அல்லது கூட்டுறவுப் பணியாளர் சங்கங்கள் ஆகியோரால் தயாரிக்கப்பட்டவை .. | 3.36 | 1.60 |

57. திருத்தியமைக்கப்பட்ட தீர்வை மட்டும் தீக்குச்சி பெட்டி ஒன்றுக்கு நான்கு காசு வீதம் வரை குடிசைத் தொழில்கள் மூலம் தயாராகும் தீக்குச்சித் தொழிலுக்குப் பயன் அளிக்கும்



இதைக் கருத்தில் கொண்டு தொழில் வணிக இயக்குநரகம் இந்
ஆண்டு 2,000 தொழிற்சாலைகளை குடிசைத் தொழிலாக
துவங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. ஒவ்வொ
தொழிற்சாலைகளுக்கான செலவினம், நிலம், கட்டிடம் யேலு
இயந்திரங்கள் உட்பட சுமார் 20,000 ரூபாய் என்றும் இவை
20 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் என்றும் கணக்கிடப்ப
டுள்ளது. இவ்வாறான 100 தொழில் நிலையங்களை சேர்த்
ஒரு தொகுதியாக அமைக்கப்படும். ஒரு தொழில் பணிக் கூ
டுறவு சங்கத்தின் மூலம் தொழில் நடத்துவதற்கு நடைமுை
மூலதனம் மூலம் பொருட்கள் மற்றும் விற்பனை வசதிக
போன்றவை வழங்க ஏற்பாடு செய்யப்படும். ''டி.ஐ.ஐ.சி'' நி
வனம் தேவையான கடன் வசதிகளை சலுகை வட்டி வீதத்தி
தருவதற்கும் ''சிட்கோ'' நிறுவனம் சம்பந்தப்பட்ட பகுதிகள்
தொழிற்கூடங்களை நிறுவுவதற்கும் உதவி செய்யும். இந்த
திட்டம் மட்டுமே சுமார் 40,000 வேலை வாய்ப்பினை குடிசை
தொழில் துறை மூலமாக இந்த ஆண்டில் உருவாக்குவதற்கா
சூழ்நிலையினை ஏற்படுத்தும்.

<u>தென்னை நார்த் தொழில்.</u>

58. நாட்டில் தென்னை பயிரிடுவதில் தமிழ்நாடு மூன்றாவ
இடத்தையும், தேங்காய் உற்பத்தியில் இரண்டாவது இடத்தை
யும் வகிக்கிறது. இங்கு 83,000 ஹெக்டேர் நிலப்பரப்பி
தென்னை மரங்கள் உள்ளன. ஆண்டொன்றுக்கு 867 மில்லிய
தேங்காய் உற்பத்தியாகிறதென்று மதிப்பிடப்பட்டுள்ள
மாநிலத்தில் தற்பொழுது 10 தென்னை நார் தொழிற் கூட்டு
வுச் சங்கங்கள் உள்ளன. இவை நேரடியாக 1,600 கயிறு தொழ
பணியாளர்களுக்கும் மறைமுகமாக 1,500-லிருந்து 2,000 ப
யாளர்களுக்கும் வேலை அளிக்கின்றன.

59. கன்னியாகுமரி மாவட்டத்திலும், தென்னாற்கா
மாவட்டத்தின் சில பகுதிகளிலும் மட்டுமே தென்னை நாரை
பதப்படுத்தும் வசதிகள் உள்ளன. எனவே, கிடைக்கக்கூடி
தென்னை மட்டைகளில் 10 சதவீதம் மட்டுமே, கயிறு த
ரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. நவீன இயந்தி
முறைகளைக் கையாண்டு, பதப்படுத்தப்படாத தென்னை
மட்டைகளில் இருந்து கயிறு எடுப்பதற்காக, மாநிலத்தில் இய
திர ரீதியில் கயிறு தயாரிக்கும் 112 நிலையங்களுக்கு நிதியுத
மற்றும் இதர உதவிகள் அளித்து ஊக்கமளிக்கப்படுகிறது. இவ
றின் மொத்த மூலதன முதலீடு ரூ. 220 இலட்சமாகும். இவை
ஆண்டொன்றுக்கு 18,000 மெட்ரிக் டன் கயிறைத் தயாரி
கின்றன. இவை, ஆண்டு முழுவதற்கும், தமிழ்நாட்டின் கிராம
பகுதிகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களில் சுமார் 3,0
பேருக்கு வேலையளிக்கின்றன. முன்பு, கிராமப் பகுதியி
பெரிய வியாபாரிகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரா
சுரண்டப்பட்டு வந்த சுமார் 30,000 பேருக்கு, இப்பொழு

குடிசைத் தொழில் துறையில் தென்னை நார் எடுத்தல் மற்றும் கயிறு தயாரிப்பது ஆகிய நிலைகளில் சுய வேலை வாய்ப்பினை அளித்திருப்பது என்பது அவர்களுக்கு கிடைத்த ஒரு பேறாகும்.

தென்னை நாரை விற்பனை செய்வதில் ஏற்பட்டுள்ள விற்பனைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, தமிழ்நாடு மாநில கயிறு விற்பனை மத்திய தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டது. இந்த அமைப்பின் காரணமாக, தமிழ்நாட்டில் தென்னங்கயிற்றினை அதிகமாகப் பயன்படுத்தும் சேலம் மாவட்டப் பகுதியில் (தென்னை நாரினை ஓரளவுக்கு விற்க முடிகிறது.

60. நாகர்கோவிலிலுள்ள கன்னியாகுமரி மாவட்ட நார் விற்பனை மத்திய தொழிற் கூட்டுறவுச் சங்கமானது, நார் விரிப்புகள், தூசு மிதியடிகள், தேயிலை, கோணிகள் முதலியவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்கின்றன. இச்சங்கம், மேலும், 100 தென்னை நார்ப் பணியாளர்களுக்கு நேரடியாக வேலையளிக்கிறது.

61. கன்னியாகுமரியிலுள்ள கொல்லங்கோடு தென்னை நார்ப் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில், இயந்திர முறையில் பெருமளவில் நார் எடுக்கும் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது மேலும் 200 தென்னை நார்ப் பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும்.

62. கயிறு தயாரித்துவரும் ஏற்கனவே உள்ள தொழில் நிலையங்களை ஊக்குவிக்கவும், தென்னை நார்ப் பொருள்களுக்கு அதிகத் தேவையினை ஏற்படுத்தவும், தென்னை நார்ப் பொருளை மிகுதியாக இயந்திர முறையில் கயிறு பின்னும் நிலையங்கள், இரப்பர் கலந்த தென்னங்கயிறு தயாரிக்கும் நிலையங்கள் பாய்கள் மற்றும் தூசு மிதியடிகள் போன்றவற்றைத் தயாரிக்கும் நிலையங்களைத் தோற்றுவிக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டங்களை சுமார் 1,000 த்திலிருந்து 2,000 கயிறு பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

## தமிழ் நாட்டில் தென்னை நார் தொழில் வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

63. கிடைக்கின்ற தென்னை மட்டைகளில் 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையில்தான் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே பயன்படுத்தாத மட்டைகளை உபயோகப்படுத்தி தென்னைநார்த் தொழிலை வளர்ச்சியடையச் செய்ய தமிழ்நாட்டில் நிறைய வாய்ப்புள்ளது.

64. கிராமப் பகுதிகளிலுள்ள வறிய நிலையிலுள்ள கயிறு பணியாளர்களுக்கு வேலையளிப்பதற்காக, புதிய கயிறுப் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



65. தஞ்சாவூரில் இரப்பர் கலந்த கயிறுகளைத் தயாரிக்கும் தொழில் நிலையம் ஒன்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 50 இலட்சம் மதிப்புள்ள இத்திட்டமானது தமிழ் நாட்டில், தென்னங் கயிறு தொழில் துறையில் ஒரு புதிய திட்டமாகும்.

66. ஏற்கனவே உள்ள இரு தென்னங்கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிர் ஊட்டவும், மாநிலத்தில் கயிறு தொழில் வளர்ச்சியடைவதற்கும் ரூ. 2.2 இலட்ச மதிப்புள்ள திட்டமொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இது செயல் படுத்தப்பட்டால், ஒவ்வொரு சங்கத்திலும் சுமார் 100-லிருந்து 125 பணியாளர்களுக்கு வேலை கிடைக்கும்.

## VI தோல் தொழில்.

67. தோல் தொழிலானது இந்தியாவின் மிகப் பழமையான தொழில் மட்டுமல்ல, மிகவும் முக்கியமான தொழில் களில் ஒன்றாகும். இத்தொழில் பெருமளவில் வேலை வாய்ப் பளிக்கவல்லது. ஏற்றுமதி வர்த்தகத்திற்கும் வாய்ப்புள்ளது. 1976–77 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 313 கோடி மதிப்புள்ள தோல் மற்றும் தோல் பொருள்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகி யுள்ளன. இதில் தமிழ்நாட்டின் பங்கு 175 கோடி ரூபாயாகும். நாட்டின் தோல் மற்றும் தோல் பொருள் உற்பத்தியில் தமிழ் நாடு முதலாவதாக திகழ்கிறது. தமிழ் நாடானது, அதன ழமையான பதனிடப்பட்ட கிழக்கிந்திய தோல் உரிவை ளுக்கும் (traditional e-l-tanned hides and skins) தோல் ளுக்கும் பெயர் போனது. தமிழ் நாட்டில் தோல் தொழிலானது பரம்பரை பரம்பரையாக நடை பெற்று வரு றது, சமுதாயத்தில் நலிந்து பின் தங்கியுள்ள மக்களுக்கு இத்தொழில் வேலையளிக்கிறது.

68. இந்தியாவிலுள்ள 800 தோல் பதனிடும் தொழிற்சாலை ளில் 400 தொழிற்சாலைகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. நாட்டின் தோல் மற்றும் தோல் பொருள்கள் வர்த்தகத்தில், தமிழ் நாட்டிலுள்ள இந்நிலையங்களே பெரும் பங்கு வகிக் ன்றன. இவை பெரும்பாலும் சென்னை, வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, இராணிப்பேட்டை, ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பெரு க மற்றும் சிறு தொழில் துறைகளில் அமைந்துள்ளன. ஒவ் வொரு ஆண்டும், சென்னை துறைமுகத்தில் இருந்து சுமார் ரூ. 200 கோடி மதிப்புள்ள பதனிடப்பட்ட கிழக்கிந்திய தோல் னப்படும் (e-l-tanned hides and skins) தோல்கள் ஏற்று தியாகின்றன. இவை நாட்டில் மொத்த தோல் ஏற்று தியில் 60 சதவீதமாகும்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் தோல்கள் தரத்தில் மிகச் சிறந்தவையாதலால், அவை ஐரோப்பியச் சந்தையில் மிகவும் தேவைப்படுகிறது.

69. சிறு அளவில் தோல் பதனிடுபவர்கள் (பரம்பரையான பதனிடும் நடவடிக்கைகளிலிருந்து) பதனிடுதலில் நிறைவு செய்யப்பட்ட தோல்களைத் தயாரித்தலை மேற் கொள்ளும் பொருட்டு, கூட்டுறவுத் துறையில் நிறைவு செய்யப்பட்ட தோல் பணி நிலையங்கள் அமைக்கவும், நிறைவு செய்யப்பட்ட தோல்களைத் தயாரிப்பதற்கு ஏற்ற வசதிகளை வழங்கவும், இயக்குநரகத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

70. நிறைவு செய்யப்பட்ட தோல்களைத் தயாரிக்கும் இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கு, இந்திய அரசானது ரூ. 25 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த இயந்திரங்களை, வாணியம்பாடி நிறைவு செய்யப்பட்ட தோல்களைத் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் நிறுவப்பட்டு, 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் முறையான பணி நடவடிக்கைகளை மேற் கொள்ளப்பட்டுள்ளது. இதைப் போன்ற இரு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், வட ஆற்காடு மாவட்டம், இராணிப்பேட்டையில் ஒன்றும், மதுரை மாவட்டம், திண்டுக்கல்லில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் இரண்டு சங்கங்கள் செங்கற்பட்டு மாவட்டம்; பல்லாவரத்தில் ஒன்றும், வட ஆற்காடு மாவட்டம் பேரணாம்பட்டில் ஒன்றும் விரைவில் அமைக்கப்பட இருக்கின்றன. இச்சங்கங்கள் சிறு அளவு தோல் பதனிடுபவர்களிடமிருந்து மூலதனப் பங்கு தொகையைப் பெற்றும், மாநில நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றும், அவற்றின் அதிகாரத்தின் கீழுள்ள பகுதிகளில் பணி நிலையங்களை அமைக்கும் இந்திய அரசிடமிருந்து பெற்ற உதவித் தொகையை ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 5 இலட்சமாக வழங்கப்படும். இதில் ரூ. 3 இலட்சம் அரசு மூலதனப் பங்காகவும் ரூ. 2 இலட்சம் கட்டிட மானியமாகவும் இருக்கும். மாநிலத்தில் இத்தொழிலை நன்கு வளர்ச்சி பெறச் செய்வதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

## VII மாவட்ட தொழில் மையங்கள்.

71. செங்கற்பட்டு, தர்மபுரி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தென்னாற்காடு மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில மாதங்களுக்குள் மாநிலம் முழுவதிலும் இத்திட்டம் விரிவாக்கப்படும். மாவட்டங்களிலுள்ள குடிசைத் தொழில், கிராமத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்குத் தேவைப்படுகின்ற அனைத்து உதவிகளையும்; ஒருங்கிணைத்து ஒரே அமைப்பின் கீழ் அளிப்பதுதான் இந்த



மாவட்ட தொழில் மையங்களின் தலையாய நோக்கமாகும் இது வரையில் முழு அளவில் வரையப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் தான் அவைகளை நிறைவேற்றும் நடவடிக்கைகள் அமைந்தன. ஆனால், தற்பொழுது தொழில் வளத்திற்கு மாவட்ட அளவில் கிடைக்கின்ற வசதிகளின் அடிப்படையில் திட்டங்களைத் தீட்டுவதற்கான நடவடிக்கை துவக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. புதிய தொழிற்சாலைகளைப் பதிவுசெய்வது மட்டும் முக்கியமானது என்ற நிலை மாறி வளத்தோடும் வலிமையோடும் நின்று நிலைக்கக் கூடிய தொழில் நிலையங்களை அமைப்பது வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதற்காக, மாவட்டத்தில் உள்ள பகுதிகளை ஆய்வு செய்வது மற்றும் தொழில் முனைவர்களுக்கான வளர்ச்சி திட்டங்கள் வகுப்பது நடைபெற்று வருகின்றன. நலிந்து போன தொழில்களுக்கு முறையாக உதவியளித்து அவற்றை மீண்டும் செயல்படச் செயவதிலும் மிக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நிதி நிறுவனங்களோடு நெருங்கிய தொடர் உருவாக்கிக் கொண்டிருப்பது, இப் பினை மையங்கள் ஈடுபட்டுள்ள புதிய துறையாகும். தொழில்களுக்குத் தேவைப்படும் நிதி பற்றி பரிசிலனை செய்வது அறிக்கைகள் வழங்குவது மற்றும் தொழில் நிலையங்களுக்குத் தக்க காலத்தில் போதுமான அளவுக்கு நிதி உதவி கிடைக்குமாறு செய்வது ஆகியவற்றை மாவட்ட தொழில் மையங்கள் செய்து வருகின்றன.

72. உரிய காலத்தில் நிதி மற்றும் விற்பனை வசதி செய்வதன் வாயிலாக இடைத்தரகர் பிடியில் சிக்கியுள்ள கைவினைஞர்களை விடுவித்து, அவர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைக்க வகை செய்து, கலைகள்—நுண்கலைத் தொழில்கள் நலிவதை மீட்டு, புத்துயிரூட்டுவதை, மாவட்டத் தொழில் மையங்கள் ஒரு பெரும் பணியாக ஏற்றுக் கொண்டு உள்ளன. இந்த கைவினைஞர்களுக்கு ஊதியமளிக்கக் கூடிய வகையில், சுய வேலை வாய்ப்பு வசதிகளைத் தோற்றுவிக்க அந்தந்தப் பகுதிகளுக்கும் சார்புடைய தொழில்களுக்கும் ஏற்றவாறு தகுதியளவில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

73. சிறு தொழில்கள் மற்றும் கிராமத் தொழில்களுக்காக விற்பனை வசதியினை ஏற்படுத்தித் தருவதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. சிறு தொழில் நிலையங்களின் உற்பத்திப் பொருள்களை அரசுத் துறைகள் அதிக அளவில் வாங்குவதற்கு வகை செய்யும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

74. குறிப்பாக கிராமப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவில் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துவதே மாவட்டத் தொழில் மையங்கள் மேற்கொண்டுவரும் அனைத்துத் திட்டங்களின்

முடிவான நோக்கமாக இருக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட யாவருக்கும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மாவட்டத் தொழில் மையங்கள் துவங்கப்பட்ட ஐந்து மாதங்களில், சிறு தொழில் துறையில் சுமார் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பினைத் தோற்றுவித்ததும், 2,500 கைவினைஞர்களுக்கு நிலையான ஊதியம் தரத்தக்க வேலை வாய்ப்புக்களை அமைத்துக் கொடுத்ததும் திருப்திப்படக்கூடியதாகும். மாவட்டத் தொழில் மையங்கள் ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆறு மாதகாலத்தில் (கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தென்னாற்காடு ஆகியவற்றில் நான்கு மாத காலத்தில்) நிகழ்ந்த முன்னேற்றம்பற்றி அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் இறுதிக்குள், மாநிலம் முழுவதையும், மாவட்டத் தொழில் மையங்களின் அமைப்பு திட்டத்தின்கீழ் சில மாதங்களில் கொண்டு வரப்படும்.

75. திட்டமிட்ட வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படச் செய்யும் முயற்சிகளின் ஒரு கூராக இரண்டு மாவட்டங்களில் தொழில் நுட்ப பொருளாதார ஆய்வுகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டன ; மற்ற மாவட்டங்களில், துரித ஆய்வுகளும் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் தற்போதைய நிலவரப்படி திருத்தி அமைக்கும் பணிகளும் முன்னேறி வருகின்றன. அனைத்து மாவட்டத் தொழில் மையங்களும் 1979–80 ஆம் ஆண்டிற்கான விரிவான கால அறுதியிட்ட நடவடிக்கைத் திட்டங்களை மேற்கொள்ளும். 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதிக்குள் குறைந்தது 25,000 பேருக்கு (பெரும்பாலும் கிராமப் பகுதிகளில்) வேலை வாய்ப்பை அமைத்துத் தருவதே அடிப்படை நோக்கமாகும்.

76. மாவட்ட தொழில் மையங்கள் மற்ற மாவட்டங்களிலும் அந்த ஆறு மாதங்களில் படிப்படியாக தோற்றுவிக்கப்படும்.



## அட்டவணை I.

31–12–1978 முடிய தமிழ் நாட்டிலுள்ள

| விவரங்கள். | மாவட்டங்கள். | | |
|---|---|---|---|
| | செங்கற்பட்டு. | தர்மபுரி. | கன்னியாகுமரி. |
| (1) | (2) | (3) | (4) |
| தொழில் முனைவர்களை ஊக்குவிப்பதற்கு வழங்கப்பட்ட தற்காலிகச் சிறு தொழில் சான்றிதழ்கள் .. .. | 459 | 237 | 98 |
| உற்பத்தியைத் துவங்கிய சிறு தொழில் நிலையங்கள் .. .. | 276 | 50 | 28 |
| துவங்கிய சிறு தொழில் நிலையங்களின் மூலம் வேலை வாய்ப்பு .. .. | 3,312 | 600 | 336 |
| வங்கி மூலம் நிதியுதவி— | | | |
| அ. தொழில் நிலையங்கள் .. .. | 27 | 382 | 26 |
| ஆ. தொகை (இலட்சத்தில்) .. | 15·00 | 10·30 | 3·84 |

—தொடர்ச்சி.

மாவட்டத் தொழில் மையங்களின் முன்னேற்றம்.

| மாவட்டங்கள். | | | | | |
|---|---|---|---|---|---|
| புதுக் கோட்டை. | சேலம். | தென் னாற்காடு. | இராம நாபுரம். | திருநெல் வேலி. | மொத் தம். |
| (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 219 | 241 | 67 | 540 | 715 | 2,57[illegible] |
| 61 | 244 | 19 | 132 | 101 | 911 |
| 732 | 2,928 | 228 | 1,584 | 1,212 | 10,932 |
| 27 | 66 | 6 | 53 | 19 | 606 |
| 2·77 | 1·03 | 1·21 | 53·46 | 4·27 | 91·88 |



அட்டவணை I.

31–12–1978 முடிய தமிழ் நாட்டிலுள்ள

| விபரங்கள். | மாவட்டங்கள். | | |
|---|---|---|---|
| | செங்கற் பட்டு. | தர்மபுரி. | கன்னியா குமரி. |
| (1) | (2) | (3) | (4) |
| 5. கிராமத் தொழில் திட்டக் கடன்— | | | |
| அ. தொழில் நிலையங்கள் (சிறு தொழில்) .. | .. | 5 | .. |
| ஆ. தொகை .. | .. | 27,000 | .. |
| . கிராமப் புறங்களில் உள்ள கைவினைஞர்களுக்கு நிதியுதவி— | | | |
| அ. கைவினைஞர்களின் எண்ணிக்கை .. | 215 | 124 | 55 |
| ஆ. தொகை .. | 8,600 | 91,000 | 10,000 |

—தொடர்ச்சி.

மாவட்ட தொழில் மையங்களில் முன்னேற்றம்.

| மாவட்டங்கள். | | | | | |
|---|---|---|---|---|---|
| புதுக் கோட்டை. | சேலம். | தென் னாற்காடு. | இராமநாத புரம். | திருநெல் வேலி. | மொத் தம். |
| (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| .. | 7 | .. | 9 | 2 | 23 |
| .. | 47,000 | .. | 67,500 | 14,000 | 1,55,600 |
| 97 | 159 | 145 | 61 | 1,686 | 2,542 |
| 19,400 | 15,000 | 63,400 | 16,060 | 6,34,000 | 8,57,460 |



## அட்டவணை II.

**1978ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளில் நிரந்தரமான பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழில்களின் விவரங்கள்.**

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | சிறுதொழில் வளர்ச்சி அமைப்பில் அடங்கியவை. | சிறுதொழில் வளர்ச்சி அமைப்பில் அடங்காதவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 வட ஆற்காடு .. | 1,048 | 131 | 1,179 |
| 2 தென்னாற்காடு .. | 455 | 93 | 548 |
| 3 செங்கற்பட்டு .. | 1,843 | 113 | 1,956 |
| 4 கோயம்புத்தூர் .. | 2,621 | 435 | 3,056 |
| 5 தர்மபுரி .. | 404 | 110 | 514 |
| 6 கன்னியாகுமரி .. | 485 | 24 | 509 |
| 7 சென்னை நகரம்— | | | |
| (அ) வட சென்னை .. | 1,544 | .. | 1,541 |
| (ஆ) தென் சென்னை | 1,595 | 3 | 1,598 |
| (இ) மத்திய சென்னை | 1,163 | 23 | 1,186 |
| 8 மதுரை .. .. | 1,615 | 245 | 1,860 |
| 9 நீலகிரி .. .. | 87 | .. | 87 |
| 10 புதுக்கோட்டை .. | 313 | 15 | 328 |
| 11 இராமநாதபுரம்— | | | |
| (அ) இராமநாதபுரம் .. | 1,466 | 93 | 1,559 |
| (ஆ) சிவகெங்கை .. | 239 | 27 | 266 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | சேலம் .. .. | 1,424 | 451 | 1,875 |
| 13 | தஞ்சாவூர் .. | 735 | 48 | 783 |
| 14 | திருச்சிராப்பள்ளி .. | 895 | 37 | 932 |
| 15 | திருநெல்வேலி .. | 1,322 | 174 | 1,496 |
| | | 19,251 | 2,022 | 21,273 |



## அட்டவணை III

31—12—1978-ல் தமிழ் நாட்டிலுள்ள மாவட்டத் தொழில் செய்யப்பட்ட சிறுதொழில்களின் விவரங்கள் (நிரந்தரமானவை

| வரிசை எண். (1) | பெருவகை. (2) | வகைகளின் விவரங்கள். (3) | தென்னாற்காடு. (4) | செங்கற்பட்டு. (5) | தருமபுரி. (2) |
|---|---|---|---|---|---|
| 1 | 20—21 | உணவுப் பொருள்கள். | 118 | 121 | 105 |
| 2 | 22 | பானங்கள் மற்றும் புகையிலைப் பொருட்கள். | 5 | 2 | 10 |
| 3 | 23 | பருத்தி நெசவு | 2 | 54 | 20 |
| 4 | 24 | கம்பளி, பட்டு மற்றும் செயற்கையான நார்ப் பொருள்கள். | .. | 3 | 20 |
| 5 | 25 | சணல் .. நார்ப் .. பொருள்கள். | .. | 1 | ... |
| 6 | 26 | நெசவுப் பொருள், கள். | 2 | 34 | 12 |
| 7 | 27 | மரச் சாமான்கள் | 18 | 52 | 64 |
| 8 | 28 | காகிதப் பொருள் கள். | 27 | 92 | 40 |
| 9 | 29 | தோல் பொருள்கள் | ... | 76 | 41 |
| 10 | 30 | இரப்பர், மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள். | 16 | 221 | 9 |
| 11 | 31 | இரசாயனப் பொருள்கள். | 22 | 209 | 42 |

மையங்களில் மாவட்டம் மற்றும் தொழில்வாரியாக பதிவு மற்றும் இறுதியானவை.)

| கன்னியாகுமரி. (7) | இராமநாதபுரம். (8) | சேலம். (9) | திருநெல்வேலி. (10) | புதுக்கோட்டை. (11) | மொத்தம். (12) |
|---|---|---|---|---|---|
| 57 | 101 | 162 | 180 | 14 | 858 |
| .. | 7 | 19 | 22 | 6 | 71 |
| 1 | 45 | 195 | 37 | 3 | 357 |
| .. | 11 | 100 | 1 | .. | 135 |
| .. | .. | — | — | .. | 1 |
| 26 | 9 | 84 | 24 | 7 | 198 |
| 87 | 26 | 79 | 70 | 38 | 434 |
| 66 | 290 | 221 | 103 | 19 | 858 |
| 23 | 2 | 18 | 16 | .. | 139 |
| 41 | 58 | 43 | 54 | 20 | 462 |
| 46 | 812 | 90 | 485 | 51 | 1,737 |



| வரிசை எண். (1) | பெருவகை. (2) | வகைகளின் விபரங்கள். (3) | தென்னார்காடு. (4) | செங்கற்பட்டு. (5) | தர்மபுரி. (6) |
|---|---|---|---|---|---|
| 12 | 32 | உலோகமற்ற கனிப் பொருள்கள். | 62 | 180 | 40 |
| 13 | 33 | அடிப்படை உலோகம், மற்றும் உலோக கலவைப் பொருள்கள். | 9 | 197 | 6 |
| 14 | 34 | உலோகப் பொருள்கள். | 55 | 305 | 72 |
| 15 | 35 | இயந்திரக் கருவிகள். | 82 | 143 | 36 |
| 16 | 36 | மின்சார இயந்திரங்கள், மற்றும் துணைச் சாதனங்கள். | 6 | 94 | 17 |
| 17 | 37 | போக்குவரத்து சாதனங்கள். | 63 | 169 | 16 |
| 18 | 38 | இதர தொழில்கள் | 88 | 3 | 1 |
| | | | 548 | 1,956 | 514 |

| கன்னியாகுமரி. | இராமநாதபுரம். | சேலம். | திருநெல்வேலி. | புதுக்கோட்டை. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| 17 | 40 | 152 | 57 | 20 | 568 |
| 4 | 7 | 35 | 57 | 7 | 322 |
| 77 | 209 | 240 | 187 | 90 | 1,235 |
| 2 | 13 | 176 | 55 | 13 | 520 |
| 4 | 1 | 22 | 18 | 5 | 167 |
| 39 | 36 | 79 | 31 | 14 | 420 |
| 19 | 158 | 160 | 99 | 21 | 546 |
| 509 | 1,825 | 1,875 | 1,496 | 328 | 9,051 |



## தமிழ்நாட்டில் கனிம மேம்பாடு.

தொழில் வணிகத் துறை இயக்குநரகத்தின் கீழ் 1957-ம் ஆண்டு இறுதியில் ஏற்படுத்தப்பட்ட மாநிலப்புவியியல் பிரிவுபெருமளவில் வளர்ச்சியடைந்துள்ளது. இப்பிரிவில் உள்ள தொழில் நுட்ப அலுவலர்களில் பெரும்பாலோர் ஐக்கிய நாடுகள் கனிப் பொருள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புவியியலின் பல்வேறு பிரிவுகளில் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றுள்ளனர்.

பல்வேறு வகையான தொழிற்சாலைகளை அமைப்பதற்கு கனிப்பொருட்கள் அடிப்படையாக இருப்பதால் மிகத் திறமை வாய்ந்த நவீன முறைகளைக் கையாண்டு புதிய கனிம படிவங்களைக் கண்டறியும் ஆய்வுப் பணிகளில் தமிழ்நாடு அரசு முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. மேலும், புதிய கனிமப் பொருள் அடிப்படையிலான தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கும் தற்போதுள்ள தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்வதற்கும் உரிம இடங்களைக் கண்டறிந்து வருகின்றது.

### மாநிலப் புவியியல் பிரிவின் 1978-79-ம் ஆண்டுச் சாதனைகள்.

### I. நவீன கனிப்பொருள் ஆய்வுமுறைகள்.

இவ்வாண்டுக்கான கனிப்பொருள் ஆய்வு, பெருமளவில் நவீன முறைகளான நில பெளதீகம், நில இரசாயனம், விமான புகைப்பட புவியியல் ஆய்வு (தொலை உணர்வு நுட்ப முறைகள்) போன்ற ஒருங்கிணைந்த முறைகளால் செய்யப்பட்டது. சென்ற ஆண்டில் பூர்த்தி செய்யாமல் விடப்பட்ட ஆய்வுகளும் தொடர்ந்து செய்யப்பட்டன.

#### (அ) நில பெளதிக ஆய்வு:

கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் சில பகுதிகளில் விமான மின்காந்த முறைகள் வாயிலாக பரிந்துரை செய்யப்பட்ட 35 முரண்பாடுகள் உள்ளதாக அறியப்பட்ட இடங்களில் மின் பகுப்பு, காந்த சக்தி, மற்றும் கதிரியக்க செயல் முறைகளைக் கொண்டு நில பெளதிக ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வின் விளைவாக திருச்சி மாவட்டம் கரூர் பரமத்திக் கருகில் அனுகூலமான 5 முரண்பாடுகள் கொண்ட பகுதிகள் கண்டறியப் பட்டுள்ளன. இவ்விடங்களில் மின் பகுப்பு முறை கொண்டு கனிம ஊட்டத்தின் தன்மையைக் கண்டறிவதற்கு விரிவான ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) <u>நில இரசாயன ஆய்வு:</u>

பேரைட் கனிம ஊட்டப் பகுதிகளிலிருந்து 1,800 மண் மாதிரிகள் முறையான பகுப்பு வழிகளில் ஆய்வுக்காக சேகரிக்கப் பட்டுள்ளன. ''சல்பைடு'' கனிம ஊட்டங்கள் பேரைட் கிடைக்கும் பகுதிகளில் சேர்ந்து கிடைக்கும் சாத்தியக் கூறுகளை கண்டறிவதற்காக மேற்கண்ட மண் மாதிரிகள் எடுக்கப்பட் டுள்ளன. செம்பு, துத்தநாகம், ஈயம், வெள்ளி, கோபால்டு, நிக்கல், மாலிப்டினம், யுரேனியம், ஆர்சனிக் மற்றும் நியோபியம் போன்ற கனிமப் பொருள்கள் இருக்கும் சாத்தியக் கூறுகளை அறிய மண் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

நுட்பம் வாய்ந்த முறைகளை எல்லா ஆய்வுகளிலும் கையா ளுவதே மேற்கண்ட ஆய்வின் நோக்கமாகும். கனிம ஆய்வுகளில் நவீன முறைகள் எந்த அளவிற்கு பயனளிக்கக்கூடியவையாக இருக்கின்றன என்பதை அறிய வெவ்வேறு ஆய்வுக்குழுக்கள் விரிவான நில ஆய்வுகளை மேற்கொண்டன.

பின்தங்கிய மாவட்டமாகிய தர்மபுரிக்கு சிறப்பு முக்கியத் துவம் கொடுக்கப்பட்டு, ஒருங்கிணைந்த கதிரியக்கம் மற்றும் காந்தசக்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு போக்கம்பட்டிக் கருகில் நில பௌதீக முரண்பாடுகள் இருப்பதாகக் கண்டறியப் பட்டது. இவ்விடத்தில் சுமார் 100 மீட்டர் ஆழத்திற்கு துளை யிடும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இதுவரை 60 மீட்டர் ஆழத்திற்குத் துளையிடப்பட்டு 35 மீட்டருக்கும் 40 மீட்ட ருக்கும் இடையிலுள்ள பகுதியில் சல்பைடு வகையைச் சார்ந்த செம்பு கனிம ஊட்டங்கள் இருப்பதாகக் கண்டறியப் பட்டுள்ளது.

<u>நுண்ணியல் பகுப்பாய்வுக் கூடம்,</u>

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட காலத்தில் நிறுவப் பட்ட நுண்பகுப்பாய்வுக்கூடம் 1,100 நில இரசாயன மாதிரி களுக்கு, 6,000-க்கும் அதிகமான மதிப்பீடுகளைச் செய்தது. இந்த ஆய்வுக்கூடத்தை விரிவு படுத்தும் செயலில் ஒரு பகுதியாக ஜெர்மன் குடியரசிலிருந்து தருவிக்கப்பட்ட பெருமைமிக்க ''எமிசன் கிரேடிங் ஸ்பெக்ட்ரோகிராப்'' என்னும் கருவி நிறுவப்பட்டு வருகிறது. இந்த நுட்பமிக்க கருவியைக் கொண்டு பெருமளவில் நில இரசாயன மாதிரிகளை பகுப்பாய்வு செய் வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

<u>கனிம மேம்பாட்டு ஆய்வுக்கூடம்.</u>

சேலத்தில் செயல்படாமலிருந்த வெங்கக்கல் (குவார்ட்ஸ்) தொழிற்சாலையை 1972-ம் ஆண்டு தமிழ்நாடு அரசுக்கும் [illegible] (டான்சி) மாநில புவியியல்



பிரிவு ஏற்றுக்கொண்டது. அத்திட்டத்திற்கென மொத்தமாக ஒதுக்கப்பட்ட ரூ. 15 இலட்சத்தில் நிலம் மற்றும் கட்டிடங் களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 2.5 இலட்சத்திலிருந்து ரூ. 91,000 த்தை அந்த தொழிற்சாலையின் நிலம் மற்றும் கட்டிடங்களை மேற்கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டது. செயல்படாமலிருந்த அத்தொழிற்சாலையின் இயந்திரங்களை பெற்றுக்கொண்டதற்காக ''டான்சி'' நிறுவனத்திற்கு ரூ. 1.65 இலட்சம் கொடுக்கப் பட்டது.

1977-78-ம் ஆண்டில் ரூ. 2.41 இலட்சம் பெருமானமுள்ள கனிம மேம்பாட்டு இயந்திரங்கள் வாங்கப்பட்டன. ரூ. 57,000 செலவில் ஆய்வுக் கூடமும் அலுவலகமும் இணைந்த ஒரு கட்டிட மும் கட்டப்பட்டது.

கனிம மேம்பாட்டு இயந்திர சாதனங்களை வாங்குவதற்காக 1978-79-ம் ஆண்டில் ரூ. 9 இலட்சம் அளவிற்கு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதே ஆண்டில் கனிமங்களை மேம்பாடு செய்யும் ஆய்வுக்கூடத்தைச் சேர்ந்த இரசாயன ஆய்வு கூடத் திற்குத் தேவையான இரசாயன சாதனங்களும் இரசாயன ஊக்கி களும் வாங்கப்பட்டன. எல்லா வகையான இரசாயன சாதனங் களும் நிறுவப்பட்டு, உபயோகத்திற்குத் தயாராக உள்ளன. தாதுப் பொருட்களையும் கனிமங்களையும் பொடியாக்கி இரசாயன பகுப்பாய்வுகளை மேற்கொள்ளும் பணியை இவ் வாய்வுக்கூடம் மேற்கொள்ளும். மேலும் சேலம் மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சுரங்கச் சொந்தக்காரர்கள் கனிம வர்த்தகர்கள் தரும் தொழில் சார் கனிமங்களை ஆய்வு செய்து சான்றிதழ்களையும் இந்த ஆய்வுக்கூடம் அளிக்கும்.

இவ்வாண்டில் இந்த ஆய்வுக்கூடத்திற்குரிய மின்சார இணைப்பு மீண்டும் பெறப்பட்டது. ஏற்கனவேயுள்ள இயந் திரங்கள் பழுது பார்க்கப்பட்டு அவை இயங்கும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டன.

<u>தொலை உணர்வு நுட்ப புவியியல் ஆய்வு முறைகள் :</u>

செயற்கைக் கோளின வாயிலாக பூமியின் படங்கள் கிடைக்கப் பெற்றதிலிருந்து தொலை உணர்வு புவியியல் ஆய்வில் தீவிரமாக பயன்படுத்தப்படுகின்றன. செயற்கைக் கோளிலிருந்து கிடைக்கும் நிழற் படங்கள் பூமியின் மேற்பரப்புத் தன்மைகளை அப்படியே தருகின்றன. இதிலிருந்து பூமியின் பரந்த மேலமைப்புகளையும், புவியியல் வல்லுநர்களால் பெற முடிகின்றது. மாநிலப் புவியியல் பிரிவு 1974 ஆம் ஆண்டிலிருந்தே இந்த தொலை உணர்வு நுட்ப முறைகளைப் பயன்படுத்தி வருகின்றது. இப்பிரிவு இந்திய செயற்கைக்கோள் ஆராய்ச்சி (ஐ.எஸ்.ஆர்.ஓ.) நிறுவனத்துடன் கூட்டாகச் சேர்ந்து கனிமப் படிவங்கள் மற்றும் நில நீர் வளம் ஆகியவற்றைக் கண்டறிவதற்குரிய வழிகளை ஆராய்ந்து வருகிறது.

## II: பொதுத்தன்மை வாய்ந்த கனிப்பொருள் ஆய்வுகள் :

ஒருங்கிணைக்கப்பட்ட கனிப்பொருள் ஆய்வுகளோடு திட்
டத்தில் சேர்க்கப்படாத பகுதிகளிலும், வழக்கமான ஒருங்
கிணைந்த முறைகளோடு பொதுவான வகையிலும் கனிப்
பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கொள்கைகளைத்
திட்டமிட்ட முறையில் அமலாக்கி நிர்வகிக்கும் தன்மையுடைய
தாயும் பின்னர் மாநில புவியியல் திட்டக்குழு ஆமோதித்தவாறும்
கீழ்கண்ட ஆய்வுகள் இவ்வாண்டில் செய்யப்பட்டன.

### 1. மாக்னசைட் ஆய்வு :—

சேலம் மாவட்டம் செட்டிச்சாவடி ஜாகிர் கிராமங்களில் மேற்
கொண்ட விரிவான ஆய்வின்பயனாக 46 சதவிகிதம் மக்னீசியா
கொண்ட அதிக வெப்பந்தாங்கும் தன்மையுடைய மாக்னசைட்
படிவங்கள் இருப்பதாகத் தெரிய வந்திருக்கின்றது. இந்த மாக்ன
சைட் படிவங்கள் அரசுத்துறை நிறுவனம் வெட்டி எடுக்கவிருக்
கும் பகுதிகளில் உள்ள இருப்பினை மேலும் அதிகரிக்கக்கூடிய
தாய் உள்ளது. இந்தப் பகுதியில் 10 ஹெக்டேர் நிலப்பரப்பில்
சுமார் 2 இலட்சம் டன் மைக்னசைட் படிவங்கள் இருப்பதாக
மதிப்பிடப்பட்டுள்ளது.

### 2. பேரைட் கனிவள ஆய்வு : —

பூவந்தி-சிவகங்கை பகுதியிலுள்ள கிராபைட் கனிவள
அமைப்பிற்கு ஒத்தாற்போல் அதற்கு இணையான போக்கில்
எட்டு கிலோ மீட்டர் அளவிற்கு நீளமுள்ள குறிப்பிடத்தக்க
பேரைட் கனிவளப் பகுதி ஒன்று உள்ளது. இந்த பேரைட்
படிவங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்புகள் மிக்க
சுரங்கச்சொந்தக்காரர்கள் உள்ளனர். இப்படிவத்தின் ஒரு
பகுதி முன்பே குத்தகைக்கு விடப்பட்டு, சுரங்க வேலையும்
நடைபெற்று வருகிறது. குத்தகைக்கு விடப்படாத இடங்களில்
உள்ள பேரைட் கனிவளத்தின் அளவு, தன்மைகளை மதிப்பிடும்
பொருட்டு விரிவான ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 3. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சீனாக் களிமண் ஆய்வு :—

கேரள மாநிலத்தின் குந்தரா பகுதியில் கிடைப்பதும் பலரா
அறியப்பட்டதுமான சீனாக் களிமண்ணை போன்ற களிமண்
படிவங்கள் தமிழ்நாட்டிலும், கன்னியாகுமரி மாவட்டத்தி
உள்ளன. அவை லேடி ரைட் மற்றும் காற்றின் செயல்பாட்
னால் உருவான மணற்குன்றுகள் ஆகியவற்றால் மூடப்பெற்று
கீழே அமைந்து காணப்படுகின்றன. இக்களிமண் படிவ



களின் பொருளீட்டும் திறனை அறிய இவை பற்றிய ஆய்வுகள்
நடைபெற்று வருகின்றன. ஆய்வுக்கூடச் சோதனைகளிலிருந்து
இக்களிமண் படிவங்கள் நல்ல சீனாக் களிமண்ணின் தன்மைகளைப்
பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது. தற்போதைய ஆய்வுகள்
கன்னியாகுமரி மாவட்டத்தின் முட்டம் மற்றும் அதன் சுற்று
வட்டாரங்களில் மட்டுமே நடைபெறுகின்றன.

### 4. கிரைசோபெரில் கனிவள ஆய்வு :—

ஆபரணங்களில் பயன்படுத்தப்படும் வண்ணக் கற்களின்
தன்மையுடைய கிரைசோபெரில் கனிமம் முதன் முதலாக
மாநிலப் புவியியல் பிரிவினரால் தாடிக்காரக் கோணம் ஒதுக்கப்
பட்ட காட்டுப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இக்
கனிமம் வேறு இடங்களில் கிடைக்கும் சாத்தியக் கூறுகளை
அறியவும், முன்பே அறியப்பட்டுள்ள இக்கனிமப் படிவங்களின்
தன்மைகளை அறியவும் தோதாக அரிதான மூலகங்கள் கிடைப்
பது பற்றிய விரிவான ஆய்வுகளும் இப்பகுதியில் மேற்கொள்ளப்
பட்டுள்ளன.

## கனிவள மேம்பாட்டு நிர்வாகம்.

கனிமப் பொருள்களைத் தோண்டி எடுத்துப் பயன்படுத்து
வதற்காகப் பல்வேறு சலுகைகளை வழங்குவதில் மாநிலப் புவி
யியல் பிரிவினர் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளனர். கனிமப்
பொருட்களின் முறையான மேம்பாட்டினையும் பயன்படுத்து
தலையும் உறுதி செய்யும் வகையில் கனிவள மேம்பாட்டு நிர்
வாகத்தில் இப்பிரிவு கவனம் செலுத்தி வருகிறது.

கனிமப் பொருட்களின் வாயிலாகக் கிடைக்கக்கூடிய நிதி
ஆதாரத்தை உறுதி செய்யும் பொருட்டும் வருவாய் ஏய்ப்பினைத்
தடுக்கும் பொருட்டும் அனுமதிச் சீட்டுப் பகுப்புமுறை ஒன்று
அரசினரால் ஏற்பாடு செய்யப்பட்டது. திட்டத்தினை திற
மையோடு செயல்படுத்தும் பொருட்டும், மாவட்ட ஆட்சித்
தலைவர்கட்குத் தொழில் நுட்பங்களில் உதவும் பொருட்டும்
1976 ஆம் ஆண்டில் சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி
ஆகிய சுரங்கங்கள் அதிகம் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட சில
மாவட்டங்களில் பிராந்திய சுரங்க அமைப்புகள் ஏற்படுத்தப்
பட்டன. 1978 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், தென்னாற்காடு,
மதுரை ஆகிய மாவட்டங்களில் மேலும் மூன்று பிராந்திய
சுரங்க அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

1978 ஆம் ஆண்டின் இறுதிவரை மொத்தம் 266 கனிம
மேம்பாட்டு உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 116
கனிம உரிமச் சலுகைகள் வேண்டி வந்த மனுக்களும் பரிசீலிக்கப்
பட்டு முடிவு செய்யப்பட்டன.

சுரங்கப் பிரிவிலிருந்து கிடைக்கும் மாநில ஆண்டு வருவாய் நிலையான விதத்தில் அதிகரித்துள்ளதென்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்:

| ஆண்டு. | மொத்த வருவாய் ரூபாயில். |
|---|---|
| (1) 1974-75 .. .. .. .. .. | 26,54,000 |
| (2) 1975-76 .. .. .. .. .. | 43,32,000 |
| (3) 1976-77 .. .. .. .. .. | 1,11,07,000 |

கனிவள மேம்பாட்டில் அதிகரித்துவரும் ஈடுபாடு உள்ள தென்பதை இதிலிருந்து நிச்சயம் தெரிந்து கொள்ளலாம்.

பல்வேறு நிறுவனங்களுக்கும் மாநிலப் புவியியல் பிரிவின் உதவி.

1. 'டான்செம்' :—

'டான்செம்' எனப்படும் தமிழ்நாடு சிமெண்ட் தொழில் நிறுவனம் கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழ் நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் ஒரு பிரிவாகிய திருச்சி மாவட்டத்தில் உள்ள அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்குத் தேவையான சுண்ணாம்புக்கற்கள் அரியலூருக்கு அருகே எந்த அளவில் கிடைக்கின்றது என்பதை அறிய விரிவான ஆய்வுகள் மாநிலப் புவியியல் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டன. அப்பகுதியில் உள்ள பெரியநாகலூருக்குத் தெற்கே 3.5 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள நிலப்பகுதியில் துரப்பண வேலைகள் மேற்கொள்ளப் பட்டு மொத்தம் 24 துளைகளிடப்பட்டன. இதன் பயனாக இப்பகுதியில் 3.5 சதுர கிலோ மீட்டர் அளவிலான பரப்பில் சுண்ணாம்புக் கற்கள் இருப்பது கண்டறியப்பட்டது. அப்பகுதியில் சுமார் 150 மெட்ரிக் டன்கள் அளவிற்குச் சுண்ணாம்புக் கற்கள் இருப்பதாகவும் அதில் 75-லிருந்து 95 சதவிகிதம் வரை சுண்ணாம்புச் சத்து உள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

2. 'டாமின்' :—

ஜப்பான், இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி போன்ற வெளி நாடுகளுக்கு இம்மாநிலத்திலிருந்து கருப்பு கிரானைட் கற்களை ஏற்றுமதி செய்வதில் 1970 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒருவித புது வேகம் உள்ளது. ''டோலி ரைட்'' எனப்படும் கருப்பு கிரானைட் கற்களைப் பற்றிய ஆய்வுகள் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, தர்மபுரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன. கருப்பு கிரானைட் கற்களை ஏற்றுமதி செய்வதில் உள்ள இலாபம் கருதி தொழில் அதிபர்கள் பலர் அதிக அளவில் இத்தொழிலுக்கு மாறினார்கள். அதனால் முடிவில் அதிக அளவில் கள்ளத்தனமாக இக்கற்களை வெட்டியெடுக்கும் நிலையும் ஏற்பட்டது. இதனால் கருப்பு கிரானைட் கற்களை வெட்டியெடுக்கத் தேவையான உரிமங்களை வழங்குவதை அரசே மேற்கொண்டது. எனினும் மேற்கண்ட நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. இதன் காரணமாக இத் தொழிலை மேற்கொள்ள அரசுக்குச் சொந்தமான ''டாமின்'' எனப்படும் தமிழ்நாடு கனிப்பொருள் நிறுவனத்தை ஒரு கோடி ரூபாய் வரையறை செய்யப்பட்ட மூலதனத்துடன் 1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாடு அரசு துவக்கி வைத்துள்ளது. ''டாமின்'' எனப்படும் இந்த நிறுவனம் கருப்பு கிரானைட் கற்கள் மட்டுமல்லாமல் சுண்ணாம்புக்கற்கள், குவார்ட்ஸ், பெல்ஸ்பார், களிமண், கண்ணாடி மணல், கிராபைட், வெர்மிகுலைட் எனப்படும் அப்ரகாம் ஆகியக் கனிப் பொருட்கள் வர்த்தகத்திலும் ஈடுபட்டுள்ளது. கருப்பு கிரானைட் மற்றும் மேலே சொல்லப்பட்ட ஏனைய கனிப் பொருட்களையும் தோண்டியெடுத்து வர்த்தகம் செய்வதில் ''டாமின்'' என்ற இந்நிறுவனம் ஈடுபட்டுள்ள போதிலும் இக்கனிப் பொருட்கள் இம்மாநிலத்தில் இருக்கும் இடங்கள், அவற்றின் தன்மைகள், அளவுகள் ஆகியவற்றைக் கண்டறியும் ஆய்வுகள் முழுவதும் மாநிலப் புவியியல் பிரிவினராலேயே நடத்தப்பட்டன.



3. ''டாசெல்'' :—

செராமிக் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருட்களான பெல்ஸ்பார், குவார்ட்ஸ் மற்றும் களிமண் ஆகியவை பற்றிய விரிவான ஆய்வுகளையும் மாநிலப் புவியியல் பிரிவு நடத்தியுள்ளது.

இந்தியப் புவியியல் ஆய்வுத்துறை, இந்திய எண்ணை மற்றும் நில வாயு கமிஷன், இந்திய சுரங்கங்கள் கூட்டுமையம், இந்தியக் கனிப் பொருள் மற்றும் உலோக வர்த்தகக் கழகம், மத்திய நில நீர் கழகம் ஆகிய மத்திய அரசு நிறுவனங்களுடனும், மத்திய திட்டக் குழு, மாநிலத் திட்டக் குழு ஆகியவற்றுடனும் இம்மாநிலப் புவியியல் பிரிவு நெருங்கிய தொடர்பு கொண்டு இம்மாநிலத்திலுள்ள கனிவள ஆய்வு, மேம்பாடு மற்றும் இதர புவியியல் தொடர்பான பிரச்சினைகளில் திறம்பட பணியாற்றி வருகிறது.

மாநிலப் புவியியல் பிரிவு மேலே கூறப்பட்ட நிறுவனங்களுடன் சேர்ந்து இணக்கமாகப் பணிபுரிவது பற்றி இம்மாநில தொழில் வர்த்தகத் துறை இயக்குநரைத் தலைவராகக் கொண்டுள்ள மாநிலப் புவியியல் திட்டக் குழுவால் ஆறுமாதங்களுக்கொரு முறை திறனாய்வு செய்யப்படுகிறது.

மாநிலப் புவியியல் பரிவானது கனிவள ஆய்வுகள் மற்றும் கனிவள மேம்பாட்டு நிர்வாகத்துடன் மட்டுமல்லாமல் இம் மாநிலத்திலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்கள். கல்லூரி களைச் சேர்ந்த பல துறைகளிலும் பயிலும் மாணவர்களுக்கு முன்னோக்கு புவியியல், புவி அமைப்பினை தொலை உணர்வு நுட்ப முறைகளால் அறிதல் ஆகிய பல பிரிவுகளிலும் இலவச மாகவே பயிற்சிகளும் அளித்து வருகின்றது.

மாநிலப் புவியியல் பிரிவின் 1979-80-ம் ஆண்டிற்கான நில ஆய்வுத் திட்டங்கள்.—

1. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிரைசோபெரில், சீனாக் களிமண். கிளிஞ்சல்கள், மற்றும் கிராபைட் ஆகியவை கிடைப் பது பற்றிய விரிவான ஆய்வுகளை மேற் கொள்ளுதல்.

2. தர்மபுரி மாவட்டத்தில் மோட்டு சூளக்கரைப் பகுதியில் பூமியினடியில் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் சல்பைடு படி வங்களைப் பற்றிய ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்துதல்.

3. கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாவட்டங்களின் பகுதி களில் விமான மின் காந்த ஆய்வு முறைகள் வாயிலாக அறிவிக்கப் பட்ட முரண்பாடுகள் உள்ள இடங்களில் தரை ஆய்வுப் பணி களைத் தொடர்தல். இம் மாநிலத்தின் தென் பகுதிகளில் புவி யியல் பௌதீக ஆய்வுகளை நடத்தி புவியியல் பௌதீக தன்மை களில் ஏற்படும் மாறுபாடுகளைக் கண்டறிந்து அவை மூலமாக பொருளீட்டித் தரக்கூடிய பேரைட், கிராபைட் மற்றும் அடிப் படை உலோக சல்பைடுகளின் ஊட்டங்கள் இருக்கும் இடங்களைக் கண்டறிதல்.

4. மோகனூருக்கு அருகே கிடைக்கும் சல்பைடு படிவங்கள், கரூர் வட்டத்தில் மாலிப்டினம், செம்பு படிவங்கள் கிடைக்கும் சாத்தியக் கூறுகள், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் வருவாய் நோக்குடைய கனிமங்கள் இருக்கும் இடங்களைக் கண்டறிதல், கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய அடிப்படை உலோ கங்கள் மற்றும் ஆபரணக் கற்கள் ஆகியவை பற்றி ஆய்ந்தறியும் பொருட்டு ஆற்றுப் படுகைகளில் உள்ள படிவங்களின் மாதிரிகள் மற்றும் மண் மாதிரிகள் சேகரித்தல்.

5. சிறிய சிமெண்ட் தொழிற்சாலைகள், மற்றும் சுண்ணாம்புச் சூளைகளின் தேவைகளை நிறைவேற்ற சேலம், கோயம்புத்தூர், இராமநாதபுரம், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட் டங்களில் உள்ள சிறு அளவிலான சுண்ணாம்புக்கல் படிவங்களை மறு ஆய்வு செய்தல்.



6. சேலம் மாவட்டம் செட்டிச் சாவடி பகுதியில் உள்ள மாக்னசைட் பற்றிய ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்துதல்.

7. இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கைக்கு அருகில் உள்ள பூவந்திப் பகுதியில் கிடைக்கும் பேரைட் பற்றிய ஆய்வு களைத் தொடர்ந்து நடத்துதல்.

8. தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யத்திற்கு அருகில் உள்ள கண்ணாடி மணல் பற்றிய ஆய்வுகளை மேற் கொள்ளுதல்.

மேற் சொன்ன கனிப் பொருள் ஆய்வுகளுடன் நில்லாது 1979 ஆம் ஆண்டின் முடிவு வாக்கில் செயல்படத் துவங்க உள்ள கனிப் பொருள் மேம்பாட்டு ஆய்வுக் கூடத்தில் மேற் கொள்ள விருக்கும் கனிப் பொருள் அரவை மற்றும் குறைந்த தரமுடைய தொழில்சார் கனிப் பொருள்களை வர்த்தக நோக்கில் தரமுயர்வு செய்தல் ஆகியவையும் இவ்வாண்டு திட்டப் பணிகளில் அடங்கும்.

4. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி).

தொழில் வணிகத்துறையின் கீழிருந்த சிறு தொழிற் பிரிவு களை எடுத்து வணிக அடிப்படையில் நடத்தும் பொருட்டு 1965-ல் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் அமைக்கப்பட்டது. இம்மாநிலம் முழுவதும் பரந்து கிடக்கின்ற இந்நிறுவனத்தின் தொழிலகங்கள் அவைகளைச் சூழ்ந்திருக்கின்ற சிறு தொழில் அமைப்புகளின் அடிப்படைத் தேவைகளான சிறு கருவிகள் துணை அமைப்புகள், இணைப்புகள், உதிரி உறுப்புகள் போன்ற வைகளை வழங்குவதன் மூலமாக அவைகளின் வளர்ச்சி மையங் களாக இலங்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டன. ரூ. 989 இலட்சம் மதிப்புள்ள இருப்புக்களுடன் 65 தொழிற் பிரிவுகள் இந் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. மாற்றப்பட்ட இருப்புக் களின் மதிப்பில் ரூ. 400 இலட்சம் அரசால் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகவும் எஞ்சிய தொகை அரசிடமிருந்து பெறப் பட்ட கடனாகவும் கருதப்பட்டது.

2. தற்போதுள்ள சில தொழிற் பிரிவுகளின் விரிவு படுத்தும் திட்டங்கள் உட்பட நிறுவனம் மேற்கொள்ளும் புதிய திட்டப் பணிகளின் நிலையான மூலதனச் செலவை ஏற்கும் பொருட்டு அரசு இந் நிறுவனத்திற்கு மேற்கொண்டு கடன் மற்றும் பங்கு மூலதனம் அளித்து வருகிறது. ரூ. 150 இலட்சம் கடன் தொகை யைப் பங்கு மூலதனமாக மாற்றுவதன் மூலம் நிறுவனத்தின் கடன்

—பங்கு தொகை விகிதம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. 31—3—1978-ல் இந் நிறுவனத்தின் முதலீடு மற்றும் கடன் அமைப்பின் விவரம் பின்வருமாறு:—

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் .. .. .. | 10·00 |
| செலுத்தப்பட்ட மூலதனம் .. .. .. | 5·90 |
| அரசிடமிருந்து கடன் .. .. .. .. | 9·48 |

3. சில மாற்றி அமைக்கப்பட்ட ஒழுங்கு செயல்களுக்குப் பின் இந்த நிறுவனத்தில் தற்போது 57 உற்பத்திப் பிரிவுகள் உள்ளன. கீழே குறிப்பிட்டவாறு அவைகளை ஒன்பது தொகுதிகளாகப் பிரிக்கலாம் ;—

1. கட்டுமானப் பட்டறைகள்.
2. கருவி அறைகள்.
3. வார்ப்படச் சாலைகள்.
4. பொறியியல் பட்டறைகள்.
5. 'பேப்ரிகேஷன்' தொழிற் பிரிவுகள்.
6. தச்சுப் பிரிவுகள்;
7. தோல் தொழில்கள்.
8. கண்ணாடித் தொழிற் பிரிவு.
9. பல்வகை/சிறப்பு வகைப் பிரிவுகள்.

இந்தத் தொழிற்சாலைகள் வர்த்தக நோக்குடன் இயங்கும் தொழிலகங்களாகத் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்பும் அவைகள் ஆரம்ப கால குறிக் கோளிற் கிணங்க சிறு தொழில் அமைப்புகளுக்குத் தேவையான பொருள்களைத் தயாரித்து உதவுவது போன்ற பணிகளை அவ்வப்போது தேவையான அளவில் தொடர்ந்து செய்து வருகின்றன. பெரும்பாலான தொழிற்சாலைகள் இன்னும் அரசு அலுவலகங்கள் மற்றும் இரயில்வே, மின்சாரவாரியம், தபால் தந்தி இலாகா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ் (பாரத் கனரக மின்கருவித் தொழிற்சாலை). இந்திய விண்வெளித் துறை ஆராய்ச்சி நிறுவனம் போன்ற பொதுத்



துறை நிறுவனங்களின்றும் பெறும் வேலைகளுக்கான உத்திரவுகளை நிறைவேற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளன. மாநிலம் முழுவதும் பெரும்பாலும் கிராமப்புறங்களில் பரந்திருக்கின்ற டான்சியின் தொழிலகங்கள் அவைகளைச் சூழ்ந்துள்ள சிறு தொழில் அமைப்புகளின் வளர்ச்சிக்கு உதவுகின்றன.

இந்நிறுவனமும் அதைச் சார்ந்த வெவ்வேறு தொழிலகங்களும் சுமார் 6,000-க்கும் அதிகமான நபர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றன. உற்பத்தியைச் சார்ந்துள்ள போக்குவரத்து, நிதி உதவி, விற்பனை போன்ற இணைத் தொழில் துறைகளில் ஏற்பட்டுள்ள மறைமுகமான வேலை வாய்ப்புகள் இவ்வெண்ணிக்கையில் அடங்கா. இவ்வாறாக வேலைவாய்ப்பு அளிப்பதோடல்லாமல் பொதுத் துறைகளில் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான திட்டங்களுக்கு உதவுவதன் மூலமும், மாநிலத் தொழில் உற்பத்தி வளர்ச்சியில் கணிசமான அளவில் பங்கு பெறுவதன் மூலமும் இந் நிறுவனம் ஒரு அத்தியாவசியமான தேவையைப் பூர்த்தி செய்கிறது.

இந்த நிறுவனத்தின் பிரிவுகளில் உற்பத்தி மதிப்பு 1965–66-ல் ரூ. 389 இலட்சமாக இருந்தது. 1977–78-ல் ரூ. 1,187 இலட்சமாக நிலையாக அதிகரித்துள்ளது. 1977–78-ல் விற்பனை ரூ. 1,121 இலட்சமாக இருந்தது. 1978–79-ல் உற்பத்தி விற்பனை ரூ. 1,500 இலட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிக அளவில் உற்பத்தி விற்பனையில் வளர்ச்சியிருப்பதால், பணியாளர், தொழிலாளர்களுக்கு சம்பளம் மாற்றியமைப்பதின் மூலம் அதிகமாக ரூ. 53 இலட்சம் செலவு இருந்தபோதிலும், இந்த ஆண்டு நிகர நட்டம், 1977–78-ல் ரூ. 101 இலட்ச அளவிலான நட்டத்துடன் ஒப்பிடும்போது ரூ. 78 இலட்சம் அளவில்தான் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1979–80-ல் ரூ. 18 கோடியளவில் உற்பத்தி/விற்பனை எட்டும்போது இந்நிறுவனம் நட்டமில்லாமல் இயங்கும் நிலைமையினை அடையும்.

4. சமீப ஆண்டுகளில் பல புதிய திட்டங்களை மேற்கொள்வது மூலம் டான்சி தனது நடவடிக்கைகளைப் பல திறப்படுத்திக் கொண்டுள்ளது. இந்தத் திட்டங்களின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:—

(i) இயந்திரக் கருவிகள் உருவாக்கும் தொழிற்சாலை.

ரூ. 72 இலட்சம் செலவில் இராணிப்பேட்டையில் அமைக்கப்படும் இந்தத் திட்டத்தின்கீழ் பெங்களூரிலுள்ள இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 'ஹேக்சா', 'பெஞ்ச்டிரில்', 'பில்லர் டிரில்' மற்றும் 'கேங்க் டிரில்' எனப்பட்ட நான்கு வகைப்பட்ட இயந்திரக் கருவிகள் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டத்தின் உற்பத்தித்திறன் ஆண்டுக்கு 355

இயந்திர கருவிகளாகும். ஆண்டொன்றுக்கு எதிர்பார்க்கப்படும் விற்பனை மதிப்பு ரூ. 88·16 இலட்சமாகும். இத்திட்டத்தினால் மொத்தம் 144 நபர்கள் வேலைவாய்ப்புப் பெறுவர். 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இங்கு முறையான உற்பத்தி தொடங்கப்பட்டு உள்ளது. தற்போது இந்தியாவில் விற்பனையாகும் இந்த இயந்திரங்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பும் உள்ளது.

(ii) கிரேனைட் கற்கள் தொழிற்சாலை :

டான்சி நிறுவனத்திற்கு வாணிக ரீதியில் பயன் கொள்ள, தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள குன்னம் என்னும் சிற்றூரிலுள்ள குன்றிலிருந்து '' கிரேனைட் '' என்னும் கற்களை வெட்டி எடுக்கும் உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூபாய் 2·26 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் ஒரு ஆண்டுக்கான உற்பத்தித்திறன், நடப்பிலுள்ள விற்பனை மதிப்பு ரூ. 45 இலட்சம் அளவிலுள்ள 1,000 கன மீட்டர் கிரேனைட் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 136 நபர்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். 1977–78 ஆம் ஆண்டில் ரூ. 25·52 இலட்சம் மதிப்புடைய கையினால் செதுக்கி எடுக்கப்பட்ட கிரேனைட் கற்கள் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. மேலும் ரூபாய் 45 இலட்சம் மதிப்புடைய 1,000 கன மீட்டர் அளவுள்ள கிரேனைட் கற்கள் டிசம்பர் 1978 முதல் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. கல் வெட்டி எடுப்பதற்கும் கையாள்வதற்கும் தகுந்த இயந்திரங்களைப் பொருத்தி ஆண்டுக்கு 1,800 கன மீட்டர் என்ற உயரிய உற்பத்தித்திறனை படிப்படியாக அடைவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) கைக்கடிகார இணைப்புத் தொழிற்சாலை :

பெங்களூரிலுள்ள இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் நிறுவனத்தார் தயாரித்து அளிக்கும் கைக்கடிகாரத்தின் உதிரி உறுப்புக்களைக் கொண்டு கைக்கடிகாரத்தை உருவாக்கும் தொழிற்சாலை ரூ. 26·68 இலட்சம் செலவில் உதகமண்டலத்தில் டான்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு 2·5 இலட்சம் கைக்கடிகாரங்கள் உருவாக்கும் பணியின் முழுத் திறனை இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாண்டு காலங்களில் அடையும், முழுத்திறனை அடையும்போது மொத்த விற்பனை மதிப்பு ரூ. 14 இலட்சமாகும். இத்திட்டம் 104 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடியதாகும். உதிரி உறுப்புக்களைக் கொண்டு கைக்கடிகாரங்களை உருவாக்கும் பணி, முதல் கட்டமாக 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் எடுக்கப்பட்டது. இத்திட்டம், அதன் முழு உற்பத்தித் திறனான இரண்டரை இலட்ச கைக்கடிகாரங்களை உருவாக்கும் பணியினை 1978–79-ல் அடைந்துள்ளது. திட்டமிடப்பட்ட காலவரையறைக்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக கைக்கடிகாரத்தின் உதிரி உறுப்புக்களைத் தயாரிக்கும் இரண்டாவது கட்டம் 1978 ஆம் ஆண்டு அக்டோபர்



மாதத்திலேயே தொடங்கப்பட்டுவிட்டது. இத் தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்ட கைக்கடிகாரங்கள் எச். எம். டி. நிறுவனத்ினரால் தற்போது விற்பனை செய்யப்படுகின்றன. இத் தொழிற்சாலை, இதுவரை 2,50,000 கைக்கடிகாரங்களை உருவாக்கியுள்ளது.

(iv) வார்னிஷ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை :

அம்பத்தூரில் வார்னிஷ் உற்பத்தி செய்வதற்கென ஒரு தொழிற்சாலை ரூ 11·26 இலட்சம் செலவில் டான்சியால் நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நிர்மாண உற்பத்தித் திறனான ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் வார்னிஷ் உற்பத்தியை மூன்றாண்டுகளில் அடையவிருக்கிறது. இத்திட்டத்தின் முழு விற்பனை அளவு மதிப்பு ரூ. 65·00 இலட்சமாகும். இத்திட்டம் 50 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடியது.

' காஸ்கெட் ஷெல்லாக் ', படவார்னிஷ் குறைப்புத்திரவம், போன்றவைகளின் உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

5. (i) ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் டான்சியால் எடுத்துக் கொள்ளப்படும் புதிய திட்டங்களில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) ஆடைக்குரிய தோல் உற்பத்தித் தொழிற்சாலை.

(2) பிளாஸ்டிக் வார்ப்பு அச்சுத் தொழிற்சாலை.

(3) கேமல் பேக் தயாரிப்புத் திட்டம்.

(4) கடிகார உறை உறுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலை,

(5) கிரேனைட் கல் மெருகேற்றும் தொழிற்சாலை.

(6) சந்தன எண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலைகள்.

இந்தத் திட்டங்கள் மூலம் மேலும் சுமார் 500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஏதுவாகும்.

(ii) கீழ்க்கண்ட தொழிற்சாலைகளில் புதிய இயந்திரங்கள் சேர்ப்பதின் மூலமோ, அல்லது பழைய இயந்திரங்களை புதுமைப்படுத்துவதன் மூலமோ இத் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தி உற்பத்தியை அதிகரிக்கும் திட்டங்களை டான்சி மேற்கொள்ள தீர்மானித்துள்ளது :—

(1) டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம்.

(2) டான்சி தச்சுத் தொழிற்சாலை, கிண்டி.

(3) டான்சி கட்டுமானத் தொழிற்சாலை, திருச்சி.

(4) டான்சி வார்ப்படத் தொழிற்சாலைகள்.

(5) டான்சி கிரேனைட் தொழிற்சாலை, குன்னம்.

(6) டான்சி இயந்திரக் கருவி தொழிற்சாலை, கிண்டி.

(7) டான்சி கட்டுமானத் தொழிற்சாலை, அம்பத்தூர்.

(8) டான்சி காப்பீட்டு மின்கம்பி தொழிற்சாலை, கிண்டி.

6. புதிய திட்டங்களின்மேல் பலவித செலவினங்களில் ஒரு பகுதியை ஏற்கும் பொருட்டு பங்கு மூலதனமாக ரூ. 30 இலட்சமும் கடனாக ரூ. 3·74 இலட்சமும் 1978–79-ல் அரசு அளித்துள்ளது. டான்சி அதன் நடைமுதல் தேவைகளை அடைந்து அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவதற்காக வழிவகைகள் முன் பணமாக ரூ. 50 இலட்சமும் அரசு இந்நிறுவனத்திற்கு அளித்துள்ளது. 1979–80-ல் பல புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பங்கு மூலதனமாக ரூ. 40 இலட்சம் இந்த அரசு அளிக்கும்.

## இணைப்பு I.

டான்சி தொழிற் பிரிவு, மற்றும் விற்பனை நிலையங்களின் பெயர் பட்டியல்.

1. டான்சி இயந்திரக் கருவி மற்றும் பொறியியல் தொழிற்சாலை, திருச்சி.

2. டான்சி தகடு அழுத்த இயந்திரத் தொழிற்சாலை, கிண்டி.

3. டான்சி கொல்லுலை, கிண்டி.

4. டான்சி அழுத்த அச்சு வார்ப்படத் தொழிற்சாலை கிண்டி.

5. டான்சி கருவி அறைக்கூடம், கிண்டி.



6. டான்சி இயந்திரக் கருவி தொழிற்சாலை (தொழிற்பேட்டை), அம்பத்தூர்.

7. டான்சி வார்ப்படத் தொழிற்சாலை, கிண்டி.

8. டான்சி வார்ப்படத் தொழிற்சாலை, காட்பாடி.

9. டான்சி வார்ப்பட மற்றும் கனரக இயந்திரத் தொழிற்சாலை, ஈரோடு.

10. டான்சி வார்ப்பட மற்றும் பொறியியல் தொழிற்சாலை, தஞ்சாவூர்.

11. டான்சி வார்ப்பட மற்றும் பொறியியல் தொழிற்சாலை, பேட்டை.

12. டான்சி இயந்திரக் கருவி தொழிற்சாலை, ராணிப்பேட்டை.

13. டான்சி கருவி அறைக்கூடம் மற்றும் கொல்லுலை, கோயம்புத்தூர்.

14. டான்சி கட்டுமான மற்றும் முலாம் பூசும் தொழிற்சாலை, மேட்டூர் அணை.

15. டான்சி கட்டுமானத் தொழிற்சாலை, அம்பத்தூர்.

16. டான்சி கட்டுமானத் தொழிற்சாலை, திருச்சி.

17. டான்சி பொறியியல் தொழிற்சாலை, நாமக்கல்.

18. டான்சி பொறியியல் தொழிற்சாலை, விழுப்புரம்.

19. டான்சி பொறியியல் தொழிற்சாலை, திருவண்ணாமலை.

20. டான்சி பொறியியல் தொழிற்சாலை, கிருஷ்ணகிரி.

21. டான்சி பொறியியல் மற்றும் தச்சுவேலை தொழிற்சாலை, சேலம்.

22. டான்சி விவசாயக் கருவிகள் தொழிற்சாலை, திருச்சி.

23. டான்சி மரப்பொருள் தொழிற்சாலை, கிண்டி.

24. டான்சி மரப்பொருள் தொழிற்சாலை, கிருஷ்ணகிரி.

25. டான்சி மரப்பொருள் தொழிற்சாலை, மதுரை.

26. டான்சி மரப்பொருள் தொழிற்சாலை, புதுக்கோட்டை.

27. டான்சி மரப்பொருள் மற்றும் மரம் அறுக்கும் தொழிற்சாலை, பொள்ளாச்சி.

28. டான்சி மரப்பொருள் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, கடலூர்.

29. டான்சி மரப்பொருள் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, மன்னார்குடி.

30. டான்சி மரப்பொருள் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, பேட்டை.

31. டான்சி பொறியியல் மற்றும் பூட்டுத் தொழிற்சாலை, திண்டுக்கல்.

32. டான்சி எஃகு நாற்காலி, மேசை முதலியன உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, வேலூர்.

33. டான்சி எஃகு நாற்காலி, மேசை முதலியன உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, ராஜபாளையம்.

34. டான்சி எஃகு நாற்காலி, மேசை முதலியன உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, பழனி.

35. டான்சி எஃகு மற்றும் பித்தளை வேலைகள் தொழிற்சாலை, கும்பகோணம்.

36. டான்சி பொறியியல் தொழிற்சாலை, திருப்பாச்சூர்.



37. டான்சி பொறியியல் தொழிற்சாலை, செம்பரபாக்கம்.

38. டான்சி பொறியியல் தொழிற்சாலை, மாயூரம்.

39. டான்சி பொறியியல் தொழிற்சாலை, கரூர்.

40. டான்சி பொறியியல்தொழிற்சாலை, திருப்பூர்.

41. டான்சி பொறியியல் தொழிற்சாலை, வள்ளியூர்.

42. டான்சி பொறியியல் தொழிற்சாலை, மதுரை.

43. டான்சி பொறியியல் தொழிற்சாலை, தூத்துக்குடி.

44. டான்சி கருவி அறைக்கூடம் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, விருதுநகர்.

45. டான்சி கருவி அறைக்கூடம் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, மதுரை.

46. டான்சி தோல் பொருள் தொழிற்சாலை, பெரம்பூர்.

47. டான்சி தோல் பொருள் தொழிற்சாலை, (திருவல்லிக்கேணி), பெரம்பூர்.

48. டான்சி தோல் பொருள் தொழிற்சாலை, பல்லாவரம்.

49. டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம், வட ஆற்காடு.

50. டான்சி உரோமம் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம், வட ஆற்காடு.

51. டான்சி கிரேனைட் கற்கள் தொழிற்சாலை, குன்னம், தென் ஆற்காடு.

52. டான்சி வார்னிஷ் உற்பத்தி தொழிற்சாலை அம்பத்தூர்.

53. டான்சி அச்சகம், கிண்டி.

54. டான்சி கண்ணாடித் தொழிற்சாலை, கிண்டி.

55. டான்சி மின் கருவிகள் பழுது பார்க்கும் தொழிற்சாலை, கிண்டி.

56. டான்சி மின் கருவிகள் முலாம் பூசும் தொழிற்சாலை, கிண்டி.

57. டான்சி கைக்கடிகாரத் தொழிற்சாலை, உதகமண்டலம்.

விற்பனை நிலையங்கள்.

58. டான்சி விற்பனைக்கூடம், சென்னை-14.

59 டான்சி விற்பனைக்கூடம், சென்னை-1.

60. டான்சி விற்பனைக்கூடம், சென்னை-6.

61. டான்சி விற்பனைக்கூடம், மதுரை-2.

62. டான்சி விற்பனைக்கூடம், கோயம்புத்தூர்-12.

63. டான்சி விற்பனைக்கூடம், திருச்சி-2.



## இணைப்பு 2.

டான்சியின் உற்பத்தி/மற்றும் விற்பனையில் வளர்ச்சி.

| ஆண்டு. | | உற்பத்தி. | விற்பனை. |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1965–66 | .. | 389 | 342 |
| 1966–67 | .. | 479 | 417 |
| 1967–68 | .. | 493 | 419 |
| 1968–69 | .. | 562 | 483 |
| 1969–70 | .. | 662 | 661 |
| 1970–71 | .. | 757 | 746 |
| 1971–72 | .. | 818 | 828 |
| 1972–73 | .. | 814 | 833 |
| 1973–74 | .. | 919 | 904 |
| 1974–75 | .. | 1,022 | 969 |
| 1975–76 | .. | 1,027 | 947 |
| 1976–77 | .. | 1,062 | 1,022 |
| 1977–78 | .. | 1,187 | 1,121 |
| 1978–79 | .. | 1,500 (தற்காலிகமான.) | 1,500 (தற்காலிகமான.) |
| 1979–80 | .. | 1,800 (இலக்கு). | 1,800 (இலக்கு). |

5 தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) தொடக்கத்தில் ஒரு தனியார் நிறுவனமாக 1970 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23ஆம் நாள் நிறுவப்பட்டு பின்னர் 1971 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 21ஆம் நாள் அன்று ஒரு பொது நிறுவனமாக மாற்றி அமைக்கப்பட்டது.

2. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் மூன்று கோடியாகும். அரசிடமிருந்து பெறப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 2.57 கோடிகளும், தவிர, இந்நிறுவனம். தேவையான நிதி வசதியை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடம் இருந்தும், மற்ற நிதி நிறுவனங்களிடமிருந்தும், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதிவழங்கும் திட்டத்தின்கீழும் (IDBI Refinance Scheme) பொது மக்களிடம் இருந்து பெறப்படும் சேமிப்பு நிதி மூலமும், சரிக்கட்டப்படுகிறது.

3. இந்நிறுவனம் சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு கீழ்க்கண்ட ஒருமித்த உதவிகளை அளித்து வருகிறது:—

(i) கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் சிறிய தொழிற்கூடங்களைக் கட்டி வழங்குதல்.

(ii) சுலபமான நீண்ட கால தவணைத் திட்டத்தின் கீழ் தொழிற்கூடங்களை கட்டி வழங்குதல்.

(iii) சிட்கோ, டி.ஐ.ஐ.சி. கூட்டு திட்டத்தின் கீழ் சிறு தொழில் பிரிவுகளுக்கு தேவைப்படும் இயந்திரங்களை வழங்குதல்.

(iv) சிறுதொழில் நிறுவனங்கள் செலுத்தும் விற்பனை வரியை ஈடு செய்ய வட்டி இல்லா கடன் உதவி அளித்தல்.





(v) தமிழ்நாட்டில் உள்ள 33 பிற்பட்ட பகுதிகளுக்கு 15 சதவீதம் மத்திய மூலதன மானியம் வழங்குதல்.

(vi) தமிழ் நாட்டில் முன்னேற்றம் அடைந்து வரும் மையங்களில் சீரமைக்கப்பட்ட தொழிற் பேட்டை மனைகளை சிறுதொழில் பிரிவுகளுக்கு ஒதுக்கீடுசெய்தல்.

(vii) சிறுதொழில் அமைப்புகட்கு விற்பனை வசதி செய்து தருதல்.

(viii) சிறுதொழில் பிரிவுகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி உதவி.

(ix) சிறுதொழில் பிரிவுகளுக்கு தேவையான இன்றியமையாத மூலப்பொருட்களை கொள்முதல் செய்து வினியோகித்தல்.

(x) அகதிகள் கூட்டுறவு நிதி-வளர்ச்சி வங்கியின் ஒத்துழைப்புடன் சிறு தொழில்களுக்கு கடன்கள் வழங்குதல்.

(xi) தமிழ்நாட்டில் உள்ள தொழிற் பேட்டைகள், சீர் அமைக்கப்பட்ட மனைகள் அனைத்தையும் தமிழ் நாடு அரசின் சார்பில் நிர்வகித்து பராமரித்தல்.

4. கிராமப்புறம் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் சிறிய தொழில் கூடங்களை கட்டி வழங்குதல்.

இத்திட்டம், பொருளாதாரத்தில் பின்தங்கிய கிராமப்புற சிறு தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் திட்டமாகும். இவர்களுக்காக, தனிப்பட்ட சிறு தொழிற்கூடங்களை தமிழ் நாட்டில் குறிப்பாக கிராமப்புறம், மற்றும் பின்தங்கிய பகுதிகளில். கட்டி, கீழ்க்கண்ட சீரிய நோக்கங்களின் அடிப்படையில் வழங்கப்படுகிறது :—

(1) மாறுபட்ட வட்டி விகித திட்டத்தின் (DIR Scheme) கீழ் பாரத ஸ்டேட் வங்கி ஒத்துழைப்புடன் மிகக் குறைந்த வட்டியில் கடன் உதவி வழங்கிடல்.

(2) பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்கு மூலதன உதவியைக் கடனாக வழங்குதல்.

(3) திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களை எளிய தவணை முறையில் அமைத்திடல்.

(4) மின்சாரம் மற்றும் யந்திரம் வாங்குபவர் கள் கடன் உதவி பற்றிய ஆலோசனை மற்றும் தேவைப்படும் உதவி அளித்தல்.

2,700 பேர்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற் காக 1978–79-ம் ஆண்டில் சுமார் 900 சிறு தொழிற் கூடங்கள் கட்ட தீர்மானிக்கப்பட்டு இவற்றில் 31–3–1979 வரை 505 சிறு தொழிற் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன. மீதமுள்ள சிறுதொழிற் கூடங்கள் முடிக்கப்படும், பல்வேறு நிலைகளில் உள்ளது.

5. நீண்டகாலத் தவணையில் தொழில் முனைவோருக்கு தொழிற்கூடங்கள் கட்டி வழங்கிடல்: —

சிட்கோவின் தொடக்கம் முதல் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய ரூபாய் 373·26 இலட்சங்கள் செல வில் சுமார் 397 தொழிற்கூடங்களை அம்பத்தூர், குறிச்சி, இராணிப்பேட்டை, ஓசூர், திருச்சிராப்பள்ளி, மாத்தூர், கிருஷ்ண கிரி, நாமக்கல், கும்பகோணம், பிள்ளையார்பட்டி முதலிய இடங்களில் கட்டி வழங்கப்பட்டு சுமார் 4,000 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1979–80 ஆம் ஆண்டு சுமார் 320 தொழிற்கூடங்களை ரூபாய் 310 இலட்சம் செலவில் கட்டப்படவும் திட்டமிடப்பட்டு மாநிலத்தில் 3,100 பேர்களுக்கு வேலை வாய்ப்பு தோற்றுவிக்கப் படவும் இருக்கிறது.

மேலும், சிட்கோ உலக நிதி வங்கி உதவியுடன் செயல்படுத்தப் பட்டு வரும் சென்னை நகர் புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் 48 தொழிற்கூடங்கள் வில்லிவாக்கத்தில் 1979–80 ஆம் ஆண்டு கட்டப்பட்டு இதன் மூலம் சுமார் 1,600 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

6. சிட்கோ டி.ஐ.ஐ.சி. கூட்டுத் திட்டத்தின் கீழ் சிறு தொழில் பிரிவுகளுக்கு தேவைப்படும் இயந்திரங்களைத் தவணை முறையில் வழங்கிடல்.



சிட்கோ டி.ஐ.ஐ.சி. கூட்டுத் திட்டம் சிறு தொழில் முனை வோர்க்கு குறைந்த வட்டி விகிதத்தில் பயனடைய அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து செயல் படுத்தப்பட்டு 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிய சிட்கோ, சுமார் 1072 தொழில் முனைவோர்க்கு ரூபாய் 1703·50 இலட்சம் மதிப்பிற்கு இயந்திரங்கள் வாங்குவதற்காக உதவி, இதன் மூலம் 11,045 பேருக்கு வேலை வாய்ப்பும் தோற்றுவித்து உள்ளது. மேலும் 1979–80-ம் ஆண்டிற்கான இலக்கு ரூபாய் 50 இலட்சங்கள் என மதிப்பிடப்பட்டு சுமார் 50 சிறு தொழில் முனைபவர்களுக்கு உதவி அளித்திடவும் இதன் மூலம் 500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படவும் திட்டமிடப்பட்டுள்ளன.

7. சிறு தொழில் நிறுவனங்கள் செலுத்தும் விற்பனை வரியை ஈடு செய்ய வட்டி இல்லாக் கடன் உதவி அளித்தல்.

சிறு தொழில் பிரிவுகளும், சின்னஞ்சிறு தொழில்களும் பெரு மளவில் வளர்ச்சியடைய துரிதப்படுத்தும் பொருட்டு மேற்படித் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1978-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16-ம் நாள் முதல் கிராமப்புறப் பகுதி களில் புதிதாகத் துவங்கப்படும் தொழில் முனைவோர் வருடத் திற்கு ரூபாய் 10 ஆயிரத்திற்கு குறையாமல் விற்பனை வரி செலுத்துபவராயிருந்தால் விற்பனை வரியை ஈடு செய்ய வட்டி இல்லாக் கடன் உதவி அளிக்கப்படும். கடன் உதவியின் அதிக பட்ச அளவு ரூபாய் 1.25 இலட்சங்களோ அல்லது சிறு தொழில் முனைவோரின் நிலையான ஆஸ்தியின் மதிப்பில் 8 சதவீத அளவோ என்னும் வரையரைக்கு உட்படுத்தப்பட்டு கடன் உதவி அளிக்கப்படும். இக்கடன் வழங்கப்பட்டு 6 ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பிச் செலுத்தும் தவணை நிர்ணயிக்கப்படும்.

மேலும் 1979–80-ம் ஆண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 20 இலட்சங்கள் தேவைப்படும். இதன் மூலம் சுமார் 1,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு தோற்றுவிக்கப்படும்.

8. பின்தங்கிய பகுதிகளில் உள்ள சிறு தொழில் பிரிவு களுக்கு 15 சதவீதத்திய மூலதன உதவித் தொகையை வழங்குதல்.

1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் மத்திய மூலதன உதவித் தொகையை சிறு தொழில்கள் சம்பந்தப்பட்டமட்டிற்கு வழங்கும் பொறுப்பை சிட்கோ நிர்வகித்து வருகிறது.

தமிழ்நாடு 1977–78-ல் 15 சதவீதம் மத்திய மூலதன உதவித் தொகை அளிப்பதில் முதன்மையாக நின்றது. 252 சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 61.27 இலட்சங்கள் வழங்கப்பட்டது. 1978–79-ல் 181 சிறு தொழில்களுக்கு ரூ. 62.84 இலட்சங்கள் வழங்கப்பட்டது. இதன் ஆரம்ப காலத்திலிருந்து 31–3–1979 வரை 838 நிறுவனங்களுக்கு ரூ. 214.98 இலட்சங்கள் உதவி அளிக்கப்பட்டு 8,400 பேர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

மேலும், 1979–80-ம் ஆண்டு சுமார் 30 இலட்சங்கள் வரை வழங்கிடவும் இதன் மூலம் 1,200 பேர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

9. தமிழ்நாட்டில் முன்னேற்றம் அடைந்துவரும் மையங்களில் சீரமைக்கப்பட்ட தொழிற்பேட்டை மனைகளை சிறு தொழிற் பிரிவுகளுக்கு ஒதுக்கீடு செய்தல்.

தமிழ்நாட்டில் பிற்பட்ட பகுதிகள் உட்பட முன்னேற்றம் அடைந்து வரும் மையங்களில் சீரமைக்கப்பட்ட தொழிற்பேட்டை மனைகளை தண்ணீர், மின்சார வசதி, கழிவிடம் முதலிய அத்தியாவசிய இன்றியமையா அமைப்புக்களுடன் சிறு தொழில்முனைவோர்களுக்கு கிடைக்க வழி செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட சீரமைக்கப்பட்ட மனைகள் நியாயமான விலையிலும் குறைந்த வட்டியில் நீடித்தத் தவணையில் செலுத்தும் அடிப்படையிலும், சுமார் 140 மனைகள் ஒதுக்கீடு செய்யும் நிலையிலுள்ளது. இத் திட்டத்தினால் சுமார் 1,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டாகும்.

10. சிறு தொழில் அமைப்புகட்கு விற்பனை வசதி செய்து தருதல்.

மத்திய அரசு, சிறு தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருட்களில் குறிப்பாக 807 வகையான பொருட்களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் 241 வகையான, பொருட்களை சிறு தொழில் பிரிவுகளிடமிருந்து வாங்கிட மத்திய அரசின் சார்பில் வழங்கும் நிறுவனங்கள் மூலம், வகை செய்துள்ளது. மேலும், மாவட்டத் தொழில் மையங்கள் நிறுவப்பட்டதன் மூலம் குறிப்பாக வளர்ச்சியடையாத நகர்ப்புறம், மற்றும் கிராமப் புற பகுதிகளில் சிறு தொழிற்கான விற்பனை வசதியை ஊக்குவிக்கும் பெரிய நோக்கமும் ஒன்றாகும். சிட்கோ தற்போது ஒருமித்து வளர்ச்சியடையாத நகர்ப்புற கிராமப்புற சிறு தொழில் பிரிவுகளுக்கு வழங்கி வரும் உதவிகளான தொழிற்கூடங்கள்கட்டும்பணி, டி.ஐ.ஐ.சி., சிட்கோ ஒத்துழைப்புடன் இயந்திரங்கள் வழங்குதல் இன்றியமையா அத்தியாவசிய மூலப் பொருள்களை வழங்குதல் முதலியவற்றுடன் சிறு தொழில்களுக்கு விற்பனை வசதியைப் பெற்றுத் தரும் பணியை சிட்கோ மேற்கொள்ளுதல் பொருத்தமானதும் சாலச் சிறந்ததும் ஆகும். இதன் மூலம் சிறு தொழில்



களில் உற்பத்திப் பொருள்களை தேர்ந்தெடுக்கவும் அவற்றை புழக்கத்தில் உள்ள சிறு தொழில் உற்பத்திப் பொருட்களுடன் இணைத்து, விற்பனை வசதி ஏற்படுத்தவும் சிட்கோ முயற்சியை மேற்கொண்டு இத்திட்டத்தைத் துவக்கியுள்ளது. 1978–79-ம் ஆண்டில் 21 சிறுதொழில் கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட ரூபாய் 25.17 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை 31 அரசுத் துறை மற்றும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய வகை செய்யப்பட்டது. 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் கல்வித் துறையை சார்ந்த மேல் நிலை கல்விக் கூடங்களுக்கு தேவைப்படும் ஆய்வு கூட கருவிகளை வினியோகம் செய்ய வகை செய்யும் படியாக சிட்கோ நிறுவனத்தை கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. 1979–80-ம் ஆண்டில் ரூபாய் 2 கோடி மதிப்புள்ள பொருட்களை 'சிட்கோ' நிறுவனம் விற்பனை செய்ய இயலும் எனக் கணக்கிடப்படுகிறது.

11. ஏற்றுமதி, இறக்குமதி வசதியை அதிக அளவில் சிறு தொழில் பிரிவுகளுக்கு பெற்றுத் தரல்.

சிறு தொழில்களின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யவும், இவைகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களை இறக்குமதிக்கு வகை செய்யும் திட்டத்தை "சிட்கோ" மேற்கொண்டுள்ளது. மேலும், இந்நிறுவனம், சிறு தொழில் பிரிவுகளில் உற்பத்தி செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடி பிரேம்கள், பட்டுக் குஞ்சலங்கள் முதலியவைகளை நேரடியாக ஏற்றுமதி செய்துள்ளது. 1979–80-ம் ஆண்டில், இத்திட்டத்தின் மூலம் ரூ. 25 இலட்சங்கள் வரை விற்பனை செய்யும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் சுமார் 80 பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

12. சிறு தொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும் இன்றியமையா, அத்தியாவசியமான மூலப் பொருட்களை கொள்முதல் செய்து விநியோகித்தல்.—

தமிழ்நாடு முழுமைக்கும் தேவைப்படும் இரும்பு, எஃகு, பாரபின் மெழுகு, தீப்பெட்டி மெழுகு, சுட்ட நிலக்கரி முதலிய மூலப் பொருட்களை கொள்முதல் செய்து விநியோகிக்கும் அரசு சார்பு நிறுவனமாக "சிட்கோ" இயங்கி வருகிறது. உள்நாட்டு வெளி நாட்டு மூலப் பொருட்களையும் சிட்கோ சிறு தொழில்களுக்கு வாங்கி விநியோகித்து வருகிறது. மத்திய அரசின் குறைவான ஒதுக்கீட்டால் தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும் முழுமையான அளவு மூலப் பொருட்களை "சிட்கோ" வாங்கி விநியோகிக்க முடியாத நிலையில் உள்ளது.

இவ்வாண்டு சுமார் 12,330 மெட்ரிக் டன் இரும்பு எஃகை மத்திய அரசு "சிட்கோ" விற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இவ் ஒதுக்கீடு தேவைக்குக் குறைவாக இருந்தமையால் கூடுதலான

ஒதுக்கீட்டிற்கு மத்திய அரசை சிட்கோ நிறுவனம் அணுகியது.
இதன் பயனாய் ஒதுக்கீட்டு அளவு 21,571 மெட்ரிக் டன்னாக
உயர்த்தப்பட்டது. 1979-80 ம் ஆண்டுக்கான குறைந்த பட்ச
ஒதுக்கீடாக43,000 மெட்ரிக் டன் நிர்ணயிப்பதற்கு சிட்கோ நிறு
வனம் மத்திய அரசிடம் வலியுறுத்தியிருக்கிறது.

மேலும் புயல் வெள்ளம் முதலிய இயற்கைச் சீற்றத்தின்
காரணங்களால் மேற்கு வங்காளத்திலிருந்து பெறப்படும் நிலக்
கரி வேகன்கள் கணிசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரண
மாக சிறு தொழில் பிரிவுகளில் முழுமையான நிலக்கரி தேவை
களை ''சிட்கோ'' பூர்த்தி செய்ய முடியவில்லை, இதனுடன்
இரயில்வே நிர்வாகத்தினரால் வேகன்கள் ஒதுக்கீடு முற்றிலும்
செய்யப்படாத காரணங்களால் நிலக்கரி வருகை பெருமளவில்
தாமதப்பட்டது. எனினும் ''சிட்கோ'' தகுந்த நடவடிக்கை
களை மேற்கொண்டு இரயில்வே வேகன்கள் நிர்வாக அதிகாரி
களை அணுகி கணிசமான அளவில் வேகன்களை ஒதுக்கீடு செய்யக்
கோரியுள்ளது.

கிராமப்புற சிறு தொழில் முனைவோர்களுக்கு வேலை
வழங்கும் மூலப் பொருளான பாரபின் வத்தி, மெழுகும்,
குறைந்த ஒதுக்கீட்டில் அடங்கும் ஒரு அத்தியாவசிய மூலப்
பொருளாகும்.

1978-79-ம் ஆண்டு ரூபாய் 915.00 இலட்சம் வரை மூலப்
பொருட்களை சுமார் 3,790 சிறு தொழில் பிரிவுகளுக்கு வினி
யோகித்துள்ளது. மேலும் 1979-80-ம் ஆண்டு ரூ. 1,000 இலட்
சம் மூலப் பொருட்களை வினியோகிக்கவும் இதன் மூலம் சுமார்
16,000 பேர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட
வும் ''சிட்கோ'' திட்டமிட்டுள்ளது.

13. அகதிகள் கூட்டுறவு நிதி வளர்ச்சி வங்கியின் ஒத்
துழைப்புடன் சிறு தொழில்களுக்கு கடன் வழங்கிடல்.

இத் திட்டம் நிரந்தரமாக வேலைக்கு அமர்த்தப்படும் அகதி
ஒருவருக்கு ரூபாய் 10,000 என்ற விகிதத்தில் ''சிட்கோ''
கடன் வழங்க வகை செய்கிறது. அகதிகள் கூட்டுறவு நிதி
வளர்ச்சி வங்கியால் பரிந்துரைக்கப்படும் அகதிகளை சிறு
தொழில் பிரிவுகள் வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டும்.
இதற்கான நிதி வசதியை மேற்படி வங்கி கடனாக அளித்து
உதவுகிறது. இத்திட்டம் சிறு தொழில் பிரிவுகளின் சங்கத்
தின் மூலமாக விரிவாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இதன்
மூலம் நல்ல அபிவிருத்தி கிடைக்கும் என எதிர் பார்க்கப்படு
கிறது. 1979-80-ல் இத் திட்டத்தின் கீழ் கடன் பட்டுவாடா
ரூ. 10 இலட்சமாக உயர்ந்து சுமார் 100 பேர்களுக்கு வேலை
வாய்ப்பை ஏற்படுத்தும்.

1978-79-ல் ஏழு நிறுவனங்களுக்கு ரூ. 6·40 இலட்சம்
வழங்கப்பட்டுள்ளது.



14. தமிழ்நாட்டிலுள்ள தொழிற் பேட்டைகள் சீர் செய்த
மனைகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசின் சார்பில் நிர்
வகித்து பாராமரித்தல்.

தமிழ்நாட்டிலுள்ள 783 தொழிற்கூடங்கள் அடங்கிய 33
தொழிற்பேட்டைகளையும், 1,117 தொழிலாளர்கள் குடியிருப்
புக்களையும், 6 சீரமைக்கப்பட்ட மனைப்பேட்டைகளையும்
''சிட்கோ'' தமிழக அரசின் சார்பில் ஏற்று, நிர்வகித்து
வருகிறது.

15. தொழிற்கூடங்கள், சின்னஞ்சிறு தொழிற் கூடங்கள்
கட்டுதல், விற்பனை வரியை ஈடு செய்ய வட்டியில்லாக் கடன்,
மின்சார வசதிக்கான கடன் திட்டம் முதலியவைகள், 1979-80
ஆண்டிற்கான சிட்கோவின் திட்டங்களில் அடங்கும். இத் திட்
டங்களை நிறைவேற்றுவதற்காக நிதியுதவியாக 1978-79-ம்
ஆண்டு ரூ. 35 இலட்சம் பங்கு மூலதன உதவி அளிக்கப்பட்டது.
சிறு தொழில் முன்னேற்றம் கருதி நிறுவனம் மேற்கொண்ட
பெருமளவிலான நடவடிக்கைகளின் காரணமாக இவ்வாண்டு நிதி
அளவு ரூ. 529·60 இலட்சமாக மதிப்பீடு செய்யப்பட்டு அரசு
மூலதன உதவியாக ரூ. 50 இலட்சமும், கடன் வசதியாக ரூ. 20
இலட்சமும் 1979-80 வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

மேற் சொன்ன திட்டங்களுக்கான முதலீட்டு இனங்கள்
கொண்ட விவரம் கீழேயுள்ள பட்டியலில்.

முதலீடு.

| | (ரூபாய் இலட்சங்களில்). |
|---|---|
| 320 தொழிற்கூடங்கள் கட்டுவதற்கான செலவு | 310.00 |
| 2,100 சின்ன சிறு தொழிற் கூடங்கள் கட்ட செலவு (ரூ. 7,600 ஒரு தொழிற்கூட செலவு). | 159.60 |
| விற்பனை வரியை ஈடு செய்ய கடன் வசதி .. | 20.00 |
| அகதிகள் கூட்டுறவு நிதிவளர்ச்சி வங்கி உதவியுடன் கொண்ட திட்டத்திற்கான செலவு. | 10.00 |
| 15 சதவீத மத்திய மூலதன மானியக் கடன் உதவித் திட்டத்தின் செலவு. | 30.00 |
| மொத்தம் .. | 529·60 |

மதிப்பும் அதற்கு தேவைப்படும் நிதியுதவியைப் பெறும் விவரிக்கப்பட்டுள்ளது:—

| நிதியின் மூலாதாரங்கள். | (ரூபாய் இலட்சங்களில்.) |
|---|---|
| 1. தமிழ்நாடு அரசின் பங்கு மூலதனம் | 50.00 |
| 2. தமிழ்நாடு அரசிடம் இருந்து கடன் மூலம். | 20.00 |
| 3. மத்திய அரசின் நிதி உதவி .. | 30.00 |
| 4. அகதிகள் கூட்டு நிதி வளர்ச்சி வங்கியின் மூலம். | 10.00 |
| 5. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாக. | 300.00 |
| 6. சிட்கோவின் செலவு ... ... | 81.60 |
| 7. சிறு தொழில் முனைவோரிடமிருந்து முன்வரம்புத் தொகையாக. | 38.00 |
| | 529.60 |

16. மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்துவதோடல்லாமல் நலிந்த சிறு தொழில்களுக்கு முன் வரம்புத் தொகை ( Margin Money ) உதவி அளிக்கும் திட்டத்தை "சிட்கோ" நிறுவனம் இந்த நடப்பு ஆண்டில் செயல்படுத்த தீர்மானித்துள்ளது. நலிந்த சிறு தொழில்கள் மறுவாழ்வுக் குழுவின் முன், பல சிறு தொழில்கள் நிதி நெருக்கடியிலுள்ளதாகவும் கூடுதல் கடன் வசதியை நிதி நிறுவனங்களிலிருந்தும் வணிக வங்கிகளிடமிருந்தும் பெற முடியாத நிலையிவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையை சமாளிப்பதற்காக தகுந்த திட்டம் ஒன்றை மறுவாழ்வுக் குழு தயாரித்து தருமானால் அரசு மிகக்



றைந்த வட்டி வீதத்தில் "சிட்கோ" மூலமாக நலி ற்ற சிறு தொழில் முனைவோர்களுக்கு வேண்டிய ன் வரம்புத் தொகையை அளித்து உதவி செய்யும். த் திட்டத்தைப் பற்றிய முழு விபரங்கள் கொண்ட றிக்கை மிக விரைவில் வெளியிடப்படவிருக்கிறது. வரங்கள் வெளி வராத நிலையில் நெருக்கடியின் க்கியத்துவம் கருதி இந்த நிதி ஆண்டுக்கு ரூ. 25 லட்சம் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

. தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்

அரசுக்குச் சொந்தமான பொது நிறுவனமாக் மிழ்நாடு கைத்திறப்பொருள் வளர்ச்சி நிறுவன் —7—1973 அன்று நிறுவப்பட்டது. முன்பு அர ன் தொழில் துறையின்கீழ் இயங்கி வந்த விற்பனைக் டங்களின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் ற்றும் மாநில கைத்திறத்தொழில் வளர்ச்சி கூட்டுறவு ங்கத்தின் வாணிக விற்பனைப் பொருட்களையும் ற்றுக்கொண்டு 1—8—1973 முதல் இந்நிறுவனம் யங்கி வருகிறது. இதற்கு அடுத்த ஆண்டில் அதா து 1—11—1974 முதல், தொழில் வணிகத்துறையின் ழ் இயங்கி வந்த உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங் ளையும் இந்நிறுவனம் மேற்கொண்டது.

2. கைத்திறத்தொழில்களுக்கும் கைவினைஞர்களுக் ம் தொழில் நுட்ப உதவி, நிதியுதவி, அத்தொழில் ளர்ச்சிக்கான உதவிகள் அளித்தும், உற்பத்தி செய் ம் பொருட்களை விற்பனை நிலையங்களின் மூலமும் ற்பனை செய்வதன்மூலமும் மேலும் நாட்டின் பல் வறு பகுதிகளில் பொருட்காட்சிகள் அமைத்து, ற்பனை வசதி ஏற்படுத்துவதுமூலமும், இம்மா லத்தில் கைநுட்பத் தொழில்வளர்ச்சியில் தனி ானதோர் எழுச்சியையும், புதிய போக்கினையும் ருவாக்கிட கைநுட்ப கலைத்தொழில் மேம்பட்டு ளர்ச்சியடைவதை முக்கிய நோக்கமாக கொண்டு னியானதோர் நிறுவனம் அமைக்கப்பட்டது.

3. 1976–77, 1977–78, 1978–79 ஆகிய மூன்று
ஆண்டுகளிலும் இந்நிறுவனத்தின் மொத்த வாணிகத்
தொகை சுமார் ஆண்டுக்கு ரூ. 150 இலட்சமாக
இருந்தது. முன் ஆண்டுகளில் அடைந்த நட்டத்தின்
காரணமாக தேவையான நிர்வாக மூலதன வசதி
களைப் இந்நிறுவனம் பெறமுடியாமல் இருந்தது,
வாணிபத்தை அதிகரிக்க முடியாதவாறு தடை
யாக அமைந்தது. 1977–78-ம் ஆண்டு முடிய, இந்
நிறுவனம், ஒட்டுமொத்தமாக ரூ. 35 இலட்சம்
நட்டம் அடைந்தது என்பது இவண் குறிப்பிடத்தக்
கது. ஆயினும் அரசு அளித்த ரூ. 27.50 இலட்ச
வழிவகைக் கடன்களைக்கொண்டு, இந்நிறுவனம் தனது
வியாபாரத்தினைப்பெருக்கி தனது வாணிகத் தொகை
யினை, 1978–79-ல், ரூ. 182 இலட்சமாக உயர்த்த
முடிந்தது. வாணிகத் தொகை உயர்ந்ததிற்கேற்ப,
1978–79-ல் நட்டம் குறைந்தது, ரூ. 7 இலட்சம் அள
வில் இருக்கும் எனவும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.
1979–80-ம் ஆண்டு, வாணிபக் குறியிலக்கு ரூ. 200
இலட்சமாக குறிக்கப்பட்டுள்ளது. எனினும் வாணிபத்
தொகை ரூ. 220 இலட்சமாக உயர்த்தத் தேவையான
வழிகளைக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு
கிறது. வாணிபம் இவ்வாறு அதிகரிக்கும் நிலையில்,
இந்நிறுவனம் நட்டமில்லாமல் இலாபத்தை ஈட்ட
லாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

4. இந்நிறுவனம் அளித்த விற்பனை உதவிகளால்
தொழில் கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த 1,000
குடும்பங்கள் உட்பட சுமார் 1,300 கைவினஞர்களது
குடும்பங்கள் பயனடைந்துள்ளன. தற்சமயம் சென்னை,
மகாபலிபுரம், நெய்வேலி, கடலூர், சேலம், ஈரோடு,
கோயம்புத்தூர், உதகை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர்
மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஆக
மொத்தம் 13 விற்பனை நிலையங்கள் உள்ளன.
புதுடெல்லி, பம்பாய், பெங்களூர் ஆகிய இடங்களிலும்
இந்நிறுவனத்திற்கு, ஒவ்வொரு விற்பனை நிலைய
முள்ளது.

5. இந்நிறுவனம் 16 பயிற்சி மற்றும் உற்பத்தி
நிலையங்களையும் நடத்தி வருகிறது. சுமார் 150
கைவினைஞர்கள் இங்கு பயிற்சியளிக்கப்படுகின்றனர்





1979–80-ல் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையினை 250 ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்களில் உற்பத்தித் தொகையளவு 1976–77-ல் ரூ. 21 இலட்சமாகயிருந்து 1977–78-ல் 23·26 இலட்சமாக மாறி 1977–78-ல் ரூ. 30 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1979–80-ல், மேற்படி பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களின் உற்பத்திக் குறியிலக்கு ரூ. 36 இலட்சமாகும்.

6. இந்நிறுவனத்திற்கு அரசு இதுகாறும் ரூ. 45.507 இலட்சம் பங்கு மூலதனமும், ரூ. 35 இலட்சம் கடனும் வழிவகை கடன் 27.50 இலட்சம் உள்பட கொடுத்துள்ளது. மேலும் நடைமுறை மூலதனத்திற்காக இந்நிறுவனம் வணிக வங்கிகளிடமிருந்து ரூ. 30 இலட்சம் கடன் வாங்கியுள்ளது. இத் தொகைகள், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள், விற்பனைக் கூடங்கள் ஆகியவற்றில் மூலதன முதலீடாகவும் மற்றும் நடைமுறை மூலதனத் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் பயன் படுத்தப்பட்டுள்ளன.

7. 1979–80-ல் அரசு இந்நிறுவனத்திற்கு மேலும் ரூ. 15 இலட்சம் பங்குமூலதனமாக வழங்கும். இது கீழ்க்கண்ட குறிப்பிட்ட ஆறு திட்டங்களுக்காகும்:—

(1) <u>விற்பனை நிலையங்களைப் புதுப்பித்தல்.</u>— அதிக அளவு வாடிக்கையாளர்களைக் கவரவும், இங்குவரும் அந்நியநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் மதிப்பினைக் கவரவும் திருச்சி, திருநெல்வேலி. கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்களை, 1979–80-ம் ஆண்டில் புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(2) <u>கைவினஞர்களிடமிருந்து பொருட்களை நேரடியாகப் பெறுதல்.</u>—கைவினஞர்களுக்கு உதவி புரியவும், நடுத்தரகர்களை தவிர்ப்பதன் மூலம், இந்நிறுவனத்தின் செயற்பணிகளை அதிக இலாபமுடையதாகச் செய்யவும், நேரடி பொருட் கொள்முதல் திட்டத்தினைத் தீவிரப் படுத்தத் திட்ட

மிடப்பட்டுள்ளது. சுமார் 300 கைவினஞர்களின் குடும்பங்கள் பயன்பெறுவதற்கு இத்திட்டம் உதவி புரியும்.

(3) பொருட்காட்சிகள் அமைத்தல்.—வாடிக்கையாளர்களுக்கு கைத்திறன் தொழிலாளர்களால் செய்யப்பட்ட பொருட்கள் மீது விருப்பத்தினை உண்டாக்க ஒரு சிறந்த வழி, வாங்கும் திறன்மிக்க மக்கள் உள்ள நகரங்களில் பொருட்காட்சிகள் அமைத்தல் ஆகும். இந்நிறுவனம் ஏற்கெனவே இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பல பொருட்காட்சிகளை நடத்தியுள்ளது. 1979–80-ல் இப் பொருட்காட்சிகளை மூன்று இடங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது

(4) உற்பத்தி செய்வதில் புதிய முறைகளைத் தெரிந்து கொள்ளுதல்.—நாட்டின் பல்வேறு பகுதிகளில் கைத்திறன் தொழிலாளர்கள் ஒவ்வொரு தொழிலுக்கும் கையாளும் பலவகை அனுபவங்கள், நுட்பங்கள் உற்பத்தி வகை முதலியவற்றினை அறிவது அவசியம் எனக் கருதப்படுவதால், இந்நிறுவனம் 12 கைவினைத் தொழில் உதவியாளர்களையும் 12 கைவினைஞர்களையும் 1979–80-ல் அனைத்திந்திய கைத்திறன் தொழில் வளர்ச்சி வாரியம் பெங்களூர், பம்பாய், கல்கத்தாவில் நடத்தும் மண்டல வடிவ மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கும், மற்றும் பிற மாநிலங்களில் பொதுத்துறை மற்றும் தனியார் துறைகள் கைத்திறப் பொருட்களை உற்பத்திச்செய்து வரும் சில குறிப்பிட்ட இடங்களுக்கும் அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

(5) பயிற்சி நிலையங்கள்.—அனைத்திந்திய கைத்திறன் தொழில் வளர்ச்சி வாரியம், ஏற்றுமதி செய்யப்படும் தரைவிரிப்புக் கம்பள நெசவிற்கான தீவிர பயிற்சித் திட்டமொன்றினைக் கொணர்ந்துள்ளது. 1978–79-ம் ஆண்டு பிற்பகுதியில் இத்திட்டத்தின்கீழ் வாலாஜாபேட்டையில் இரு நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளது. 1979–80-ல் இந்நிலையங்கள் தொடர்ந்து நடத்தப்படும்.



சந்தன மரம் வேலைப்பாடுகளுக்கான பயிற்சி நிலையம் ஒன்று கள்ளக்குறிச்சியில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 15 பேர்களை ஒரு அணியாகத் தேர்ந்தெடுத்து, பயிற்சியளிக்கப்படும். இப்பயிற்சி மூன்றாண்டு காலத்திற்காகும்.

வேலைப்பாடுகள் மிக்க உட்பதிப்பு வேலை பயிற்சி நிலையமொன்றையும் இந்நிறுவனம் மதுரையில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 10 நபர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக, மைசூரிலுள்ள உட்பதிப்பு வேலை தெரிந்த தொழில் வல்லுநர் ஒருவர் வரவழைக்கப் படுவார்.

சென்னையிலுள்ள வடிவமைப்பு நிலையத்தை விரிவுபடுத்துதல்.

பொதுவாக, கைவினைப் பொருட்கள், பாரம்பரியமான வடிவமைப்புகளிலும், செயல்முறைகளிலும், தயாரிக்கப்பட்டு வருகின்றன. உள்ளூர் மக்களின் விருப்பத்திற்கும் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கும் ஏற்றவகையில், வடிவமைப்புகளை மாற்றியமைக்கப்படுவது அவசியமாகிறது. தற்சமயம், சென்னையில் ஒரு வடிவமைப்பு நிலையம் உள்ளது. புதிய வடிவமைப்புகளுக்கான, பெருகிவரும் தேவைகளைச் சமாளிப்பதற்காக, மேற்படி சிறு நிலையத்தை விரிவுபடுத்த வேண்டியுள்ளது.

புதிய வடிவமைப்புகளையும், புதிய செயல்முறைகளையும் உருவாக்கிக்கொள்வதன் மூலமும், பொருள் உற்பத்தியில் முன்னேறியுள்ள முறைகளில் கைவினைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதன் மூலமும் இதனைச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் விரைவாக விற்பனையாகும் கீழ்க்காணும் கைவினைப் பொருட்களில் புதிய வடிவமைப்புக்களை அறிமுகப் படுத்திப் பெருக்கிட திட்டமிடப்பட்டுள்ளது:—

(1) பித்தளை வெண்கலப்பொருட்கள்.

(2) கடைசல் பொருட்கள்.

(3) கலம்காரி, பாட்டிக் (துணியில் சாய வேலைப்பாடு).

(4). பிரம்புப் பொருட்கள்.

உத்தேசிக்கப்பட்டி க்கும் திட்டங்களின் மூலம் கைவினைப் பொருட்கள் பிரபல்யமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிறுவனத்தினுடைய வாணிகமும் அதிகரிக்கும். இதன்மூலம், பெருவாரியான கைவினைஞர்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்பும் ஏற்படும்

### 7. தமிழ்நாடு பீங்கான் நிறுவனம். (டாசல்).

தமிழ்நாட்டில் அரசினரால் நடத்தப்பட்ட பல்வேறு மட்பாண்ட பொருள் உற்பத்திப் பிரிவுகளை ஒருங்கிணைத்து அவற்றின் அலுவலர்களை வணிக அடிப்படையிலேயே அமைக்க தமிழ்நாடு '' செராமிக்ஸ் லிமிடெட்'' என்ற நிறுவனத்தை அரசு 1973 டிசம்பர் திங்கள் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 2·00 கோடியாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 108·54 இலட்சமாகும். மேலும், அரசு இந்த நிறுவனத்திற்கு ரூ. 118·45 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது.

2. இந்நிறுவனம் தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்திடமிருந்தும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திடமிருந்தும் (டான்சி) 8 தொழில் பிரிவுகளை எடுத்துக்கொண்டு 1974-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது. இவற்றில் 3 பிரிவுகள் வணிக அடிப்படையிலானவை. ஏனையவை வளர்ச்சி நோக்கமானவை.

3. இந்த 8 பிரிவுகளின் பணிகள் ஒருங்கிணைந்தவை. தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட்டின் இரண்டு வணிகப் பிரிவுகளான மற்றும் விருத்தாசலத்திலுள்ள



'டாசல்' பீங்கான் தொழிற்சாலை, டாசல் கற்குழாய் தொழிற்சாலை, வரும் ஆண்டுகளில் தங்களுடைய செயல் திறனை மேம்படுத்தும் என எதிர் பார்க்கப்படுகிறது.

4. விருத்தாசலத்திலுள்ள 'டாசல்' பீங்கான் தொழிற்சாலை துப்பரவு கருவிகள், பீங்கான் பொருட்கள் மற்றும் மின் காப்புகளைச் சிறப்பாக உற்பத்தி செய்கிறது. ஒரு மாதத்திற்கு 110 டன் அளவு உற்பத்தி செய்யும் திறனுடையது. 350 பேருக்கு வேலை வாய்ப்பும் அளித்து வருகிறது. 1978–79-ல் இப்பிரிவு சுமார் ரூ. 36 இலட்சத்திற்கு உற்பத்தியை பெருக்கியுள்ளது. 1979–80-ல் இந்த உற்பத்தியின் அளவு ரூ. 41·75 இலட்சமாக அமையும் என எதிர் பார்க்கப்படுகிறது. தரம் மற்றும் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவது மூலம் இத்தொழிற்சாலையின் செயற்பணியில் கனிசமான முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற் சாலையின் உற்பத்திப்பொருட்களுக்கு நல்லமுறையில் விற்பனையாகக் கூடிய நிலை இருக்கிறது.

5. விருத்தாசலத்திலுள்ள கற்குழாய் தொழிலகம் 4 அங்குலம் முதல் 15 அங்குலம் விட்டங்களுள்ள உப்பு மெருகிட்ட கற்குழாய்களை உற்பத்தி செய்கின்றது. இத்தொழிலகத்தில் உற்பத்தியாகும், ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்ற, இப்பொருட்களுக்கு சந்தையில் நல்ல வரவேற்பு இருக்கிறது. இங்கு உற்பத்தியாகும் கற்குழாய்களின் வருடாந்திர தயாரிப்பு அளவு 7,000 டன் ஆகும். இத்தொழிற் சாலையின் உற்பத்தித்திறன் முழு அளவில் பயன் படுத்த முடியும். ஆனால் இதற்குத் தேவையான நிலக்கரி கிடைப்பதில் ஏற்பட்டுள்ள நிலையற்றதொரு சூழ்நிலை தடையாக உள்ளது. இதன் காரணமாக இந்நிறுவனம் உற்பத்தியைக் குறைத்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டது. வெகு விரைவில் நிலக்கரி கிடைப்பதில் முன்னேற்றம் ஏற்படலாம். இங்கு உற்பத்தியாகும் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகள் நன்றாக உள்ளது.

6. யூகோஸ்லாவாகியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட இயந்திரத் தளவாடங்களுடன் திருமழிசையில் அமைக்கப்பட்ட இயந்திரச் செங்கல் தொழிற்சாலை இத் தேசத்திலேயே மிகப்பழமையான ஒன்றாகும். நாள் ஒன்றுக்கு 60,000 செங்கற்கள் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருந்த போதிலும், வடிவமைப்பு குறைபாடுகள் மற்றும் விலையுயர்ந்த எண்ணெயை எரிபொருளாக்குவதற்கு பதில் நிலக்கரியை பயன்படுத்தப்படுவதன் காரணத்தால், சராசரி (உற்பத்தி அளவு) 20,000 செங்கற்களை மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. அதிக முதலீடு காரணமாக மற்றும் குறைந்த உற்பத்தி இருப்பதால் வாணிக அளவில் இந்நிறுவனம் செயல்பட்டு வருவது திருப்திகரமாக இல்லை. இருந்த போதிலும் வெப்பநிலைக்கு ஏற்ற உலர்ந்த ஓடுகள் (Weather course tiles) மறைப்பு ஓடுகள் (Ceiling blocks) மற்றும் தடுப்பு ஓடுகள் (Partition blocks) ஆகிய கூடுதல் பொருட்களின் அதிக விலையை, மொத்த விற்பனை அமைப்பில் சேர்த்து அதன் மூலம் இழப்பை குறைந்தபட்சமாக ஆக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7. விருத்தாசலத்திலுள்ள பீங்கான் பொருட்களுக்காக குறிப்பிட்ட தொழில் பேட்டை பொது வசதி பணி நிலையம் ஒன்று உள்ளது. விருத்தாசலத்தில் உள்ள இத்தொழில் பேட்டையில் 39 தொழிற் கொட்டகைகள் உள்ளன. ரூ. 3,000-லிருந்து ரூ. 5,000 வரை உள்ள முதலீட்டுடன் கைவினையர்களுக்கும், சிறிய தொழில் முனைவருக்கும் 14 தொழில் கொட்டகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ரூ. 25,000-லிருந்து ரூ. 50,000 வரையிலான ஆதாரத்துடன் ஏனைய கொட்டகைகளை சிறு தொழில் அதிபர்கள் எடுத்துக் கொண்டுள்ளனர். தொழிற்பேட்டையில் உள்ள அடிப்படை இன்றியமையாத வசதிகளில், பதப்படுத்தப்பட்ட பொருள்கள் வழங்குதல், பொது உலையில் சுட்டுத்தருதல், மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை ஆகியவை அடங்கும். இத்தொழிற்பேட்டையகத்தால் ஆண்டில் 70,000 மனித நாட்கள் என்ற அளவில் வேலை நடக்கின்றது. முக்கியமாக சமூகத்தின் [illegible] மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்





கின்றது. அவர்களுடைய உற்பத்தி மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20.00 இலட்சம் ஆகும். சிறிய தொழில் முனைவோர்களுக்கு பெரிய அளவில் உதவும் தனது முயற்சியின் ஒரு பகுதியாக இந்த நிறுவனம், பணி நிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு 1,450 டன் எரிக்கும் திறனுள்ள இயந்திர சூளை ஒன்றை நிறுவி வருகிறது. தொழில் முனைவோர்கள் தங்களிடம் உள்ள வேலை வாய்ப்பு வசதியை இரட்டிப்பாக்க உதவுவதுடன் ஆண்டு ஒன்றில் உற்பத்தி மதிப்பை ரூ. 50 இலட்சம் ஆக அதிகரிக்கவும் இம்முயற்சி உதவும். 1978–79-ல் இந்த பொதுப்பணி வசதி நிலையம் சுமார் ரூ. 10.25 இலட்சம் அளவுக்கு பணி வசதி செய்துள்ளது. நடப்பு நிதியாண்டில் இது ரூ.15.00 இலட்சத்திற்கும் மேல் கூடுதலாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

8. விருத்தாசலத்திலுள்ள கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையமும் பெரம்பூரிலுள்ள கலைப் பொருட்கள் நிலையமும் பயிற்சி உற்பத்தி இரண்டும் இணைந்த நிலையங்களாகும். இவற்றில் ஆண்டு தோறும் சில பேருக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியாளர்களுக்கு மாத பயிற்சி உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின் பயிற்சியாளர்கள் டாசல் நிறுவன பிரிவுகளிலே அல்லது தனியார் மட்பாண்ட தொழிலகங்களிலே எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். பழைய பண்பாடு நவீன பண்பாடுகளுக்கு உகந்த வகையில் பீங்கான் கலைப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இந்த இரு பிரிவுகளும் தனிக் கவனம் செலுத்துகின்றன. சென்னை, பம்பாய், டில்லி முதலிய ஊர்களில் இரு நிலையங்கள் உருவாக்கிய பொருட்கள் நன்கு பிரபலமாயுள்ளன. இப்பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்காக சென்னை, பெங்களூர், கொச்சி முதலிய இடங்களில் இந்த நிறுவனம் விற்பனைக் காட்சிக் கடைகளை ஏற்படுத்தியுள்ளது.

9. கிராமப் பகுதிகளில் சாதாரணமாக தேவைப்படும் எளிய பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்தும் தனது முயற்சியில் சேலம் மாவட்டம்,

ஓமலூரில் சிறிய பீங்கான் தொழிற்பிரிவு ஒன்றை 'டாசெல்' நடத்தி வருகிறது. அதனால் அருகில் உள்ள கிராமப் பகுதிகளைச் சேர்ந்த ஓரளவு படித்த இளைஞர்கள் சுமார் 50 பேருக்கு இப்பிரிவு வேலை வாய்ப்பு அளிக்கின்றது.

10. தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 1979–80 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 15 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. விருத்தாசலத்திலுள்ள டாசல் பீங்கான் தொழிற்சாலையை நவீனப்படுத்தும் திட்டம் .. .. .. .. | 8·00 |
| 2. விருத்தாசலத்திலுள்ள டாசல் கற்குழாய் தொழிற்சாலையின் திறனை முழுவதுமாக பயன்படுத்துதல் .. .. | 5·00 |
| 3. டாசல் பொதுவசதி பணி நிலையத்தினை விரிவு படுத்துதல் .. .. | 5.00 |
| 4. திருமழிசையிலுள்ள டாசல் இயந்திர செங்கல் தொழிற்சாலையை மேம்படுத்துதல் .. .. .. | 1.00 |
| மொத்தம் .. | 19·00 |

11. 1978–79 ஆம் ஆண்டில் திருமழிசையிலுள்ள சுரங்க சூளையை கட்டுவதற்கு பங்கு மூலதனமாக ரூ. 10 இலட்சமும், வழிவகை முறையில் நடைமுறை மூலதன தேவைகளுக்காக ரூ. 10 இலட்சமும் அரசு இந்நிறுவனத்திற்கு அளித்துள்ளது.

12. 1979–80 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் உற்பத்திக் குறைந்த பட்சம் ரூ. 120 இலட்சத்தை அடைந்து தற்போதைய இழப்பு கணிசமான அளவு குறைக்கப்படலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.



## 8. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

**பொது :**

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ஆலங்குளத்தில் சிமிண்டு தொழிற்சாலையை அமைப்பதற்காகவும், அரக்கோணத்தில் ஒரு தொடர் வார்ப்பட உருக்காலையை (இப்பொழுது தமிழ்நாடு உருக்காலை என்றழைக்கப்படுகிறது) அமைப்பதற்காகவும் 1965 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பின்னர் தனியார் தொழில் முனைவர்களின் ஒத்துழைப்புடன் கூட்டுத் துறையில் தொழில் நிறுவனங்களை அமைக்கும் வகையில் அதனுடைய செயல் வரம்பு விரிவுபடுத்தப்பட்டது. பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ள 47 திட்டங்களை 805 கோடி ரூபாய் மொத்த மூலதனத்துடனும், சுமார் 40,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்குடனும் அமைப்பதற்கு டிட்கோ திட்டமிட்டுள்ளது. இவ்வாறாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மாநிலத்தில் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களை வளர்ச்சி பெறச் செய்வதில் பெரியதொரு கருவியாக விளங்குவதுடன், நாட்டிலுள்ள மாநிலத் தொழில் வளர்ச்சி நிறுவனங்களிடையே சிறப்பு வாய்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை முக்கிய அடிப்படையாகக்கொண்ட தொழில்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற மைய அரசின் கொள்கைக்கு ஏற்ப, அதிக அளவில் வேலை வாய்ப்பு அளிக்கும் தொழில்களையும், அதே நேரத்தில் சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு பெரிய அளவில் உதவக்கூடிய தொழில்களை ஊக்குவிப்பதற்கான திட்டங்களாக மாற்றியமைக்க டிட்கோ முயற்சி செய்து வருகிறது.

**நிதி நிலைமை:**

2. 31—3—1979 ஆம் நாளன்று இந்நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பங்கு மூலதனம் ரூ. 25 கோடியும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 21·33 கோடியும் ஆகும். இந்நிறுவனம் தனது முதலீட்டுச் செலவுகளுக்காக ஆண்டு தோறும் அரசிடமிருந்து கடன் பெற்றி

வருகிறது. இதன்படி 31—3—1979 ஆம் நாளன்று டிட்கோவிடம் நிலுவையில் உள்ள கடன் தொகை (வழி வகை முன் பணம் உள்பட) ரூ. 6·37 கோடி ஆகும். தமிழ்நாடு அரசின் பங்கு மூலதனம், கடன் முதலிய தொகைகளைத் தவிர, இந்நிறுவனம் கடனீட்டுறுதி ஆவணங்களை வெளியிடுவதன் மூலமும், பொது மக்களிடம் வைப்புத் தொகைகளை பெற்றுக் கொள்வது மூலமும், தன்னுடைய நிதிவாயில்களைப் பெருக்கியுள்ளது.

1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாளன்றும் பிற மூலதன வாயில்கள் மூலமாக பெறப்பட்ட தொகை ரூ. 13·46 கோடி. இது தவிர டிட்கோவிற்கு சொந்தமான துணை நிறுவனமான தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் அரியலூர் சிமிண்டு ஆலைத் திட்டத்திற்காக நிதி நிறுவனங்களிடமிருந்து அரசு மற்றும் டிட்கோவின் உத்திரவாதத்தின் பேரில் ரூ.17·10 கோடி கடனாகப் பெற்றுள்ளது.

முதலீடுகள் :

3. 1978ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதி மற்றும் 1979ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதிகளின்படி பல்வேறு பொதுத்துறை, கூட்டுத் துறை நிறுவனங்களில் டிட்கோவினால் செய்யப் பட்ட பண முதலீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—



| விபரங்கள். | 1978 மார்ச்சு 31ஆம் தேதிபடி முதலீடுகள். | 1979 மார்ச்சு 31ஆம் தேதிபடி முதலீடுகள். |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் .. | 16·44 | 15·69* |
| தமிழ்நாடு ஸ்டீல் உருக்கு பாளங்கள் திட்டம், அரக்கோணம். .. | 9·32 | 8·39** |
| ஏனைய பொதுத்துறைத் திட்டங்கள். | 0·09 | 0·09 |
| கூட்டுத்துறை நிறுவனங்கள், நலிந்த தொழிற்சாலைகளுக்கான முதலீடும், கடனும். | 9·72 | 13·51 |
| | 35·57 | 37·68 |
| இதுவரை சேர்ந்து வந்துள்ள இழப்பும் நடைமுறை மூலதனமும். | 3.37 | 3·49 † |
| | 38·94 | 41·17 |

*(1) இத்தொகையில் பின்வரும் இனங்கள் அடங்கும் :—

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| பங்கு மூலதனம் | 10·12 |
| நெடுங்காலக் கடன் | 2·29 |
| குறுகிய காலக் கடன் | 3.28 |
| | 15·69 |

(2) 1978ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதிப்படி ஒப்பிட்டுப் பார்க்கையில் இத்தொகையில் ஏற்பட்டுள்ள குறைவு நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்களைக்கொண்டு குறுகிய காலக் கடன்களில் ஒரு பகுதியை திருப்பிச் செலுத்தியதால் ஏற்பட்டதாகும்.

** தமிழ்நாடு எஃகுத் தொழிற்சாலை கடன் தொகையில் ஒரு பகுதியை திருப்பிச் செலுத்தியதால் குறைவு ஏற்பட்டுள்ளது.

† இது ஆலங்குளம் சிமிண்டு ஆலைக்குரிய ரூ. 1·69 கோடி இழப்பை (டிட்கோவின் கணக்கில் வருவது)யும் சேர்த்து ஆகும்.

கூட்டுத்துறை நிறுவனங்கள், நலிந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதிபடி முதலீடு விபரங்கள் பிற்சேர்க்கை I-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இந் நிறுவனத்தின் தோற்றம் முதல் 1978ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதிவரையிலான காலத்தில் நிதி வாயில்கள், செலவுகள் ஆகியவற்றைக் காட்டும் அறிக்கை இணைப்பு II-ல் உள்ளது.

4. 1979–80-ன் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி டிட்கோ மற்றும் அதற்கு முழுவதும் சொந்தமான துணை நிறுவனமான தமிழ்நாடு சிமிண்டு நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மூலதன வெளியீடு விவரம் பின் வருமாறு :—

| விபரங்கள். | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| அரியலூர் சிமிண்டு தொழிற்சாலை, ஆலங்குளம் சிமிண்டு தொழிற்சாலை, ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு தகடுகள் தயாரிப்பு தொழிற்சாலை. | 4·82 |
| தமிழ்நாடு ஸ்டீல்ஸ் ரோலிங் மில்ஸ் தொழிற்சாலை, அரக்கோணம். | 1·15 |
| தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் லிமிடெட். | 3·00 |
| மற்ற பொதுத்துறை நிறுவனங்கள் ... | 0·91 |
| கூட்டுத்துறை நிறுவனங்கள் .. | 1·15 |
| | 11·03 |

மேற்கண்ட மூலதனச் செலவினங்களுக்காக 1979–80–ல் டிட்கோவிற்கு ரூபாய் 150 இலட்சம் பங்கு மூலதனமாகவும், ரூ. 150 இலட்சம் கடனாகவும் அரசு உதவி அளிக்கும். 1978–79 ஆம் ஆண்டில் டிட்கோவிற்கு அரசு அளித்த மொத்த நிதி உதவி (வழிவகை முன்பணம் சேர்த்து) ரூபாய் 500 இலட்சம் ஆகும்.



5. இது வரை டிட்கோ ஊக்குவித்துள்ள 47 திட்டங்கள் உற்பத்தி, செயலாக்கம் மற்றும் பரிசீலனை என்ற பல்வேறு கட்டங்களில் உள்ளன. இவ்வாறு ஊக்குவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் பற்றிய விபரங்கள் பிற்சேர்க்கை III-ல் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் 12 திட்டங்கள் பொதுத் துறையிலும், 35 திட்டங்கள் கூட்டுத் துறையிலும் உள்ளன. பொதுத் துறையில் இரண்டு திட்டங்கள் ஏற்கனவே உற்பத்தியைத் துவங்கி விட்டன. மற்றும் ஒரு திட்டமான அரியலூர் சிமிண்டு ஆலை விரைவில் உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சிய ஒன்பது திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன.

**உற்பத்தியில் உள்ள திட்டங்கள் (பொதுத்துறை).**

தமிழ் நாடு உருக்குத் தொழிற்சாலை, அரக்கோணம்.—

6. வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த தொழிற்சாலை தொடர் வார்ப்பட தொழில் முறையைப் பயன்படுத்தி, உருக்கு பாளங்களைத் தயாரிப்பதற்கு கழிவு இரும்புத் துகள்களை பயன்படுத்தி வருகிறது. இந்தியாவில் பொதுத் துறையில் முதன் முறையாக நிறுவப்பட்டுள்ள சிறு உருக்குத் தொழிற்சாலை இதுவேயாகும். நாட்டில் எஃகுப் பொருட்களுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்ட காலத்தில், மாற்று மூலப் பொருளை அடிப்படையாகக் கொண்டு எஃகு பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஒரு தொழிற்சாலையை தமிழகத்தில் நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் டன் உருக்குப் பாளங்கள் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு நிறுவனமாக ஆரம்பத்தில் இது உருவாக்கப்பட்ட போதிலும், இந்த ஆலையில் உள்ள சில தளவாடங்கள் சம சீரற்றதாக இருப்பதால், தற்போது அதிக பட்சம் ஆண்டுக்கு 40,000 டன் உருக்குப் பாளங்கள் மற்றும் வார்ப்படங்களை உற்பத்தி செய்யும் அளவைத்தான் எய்தியிருக்கிறது. இந்த ஆலை சுமார் 600 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. இந்தத் தொழிற்சாலை 1972-ம்

ஆண்டு ஜுலைத் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. உற்பத்தி துவங்கிய நாளிலிருந்து, உற்பத்தி பற்றிய விபரங்கள் மற்றும் ஆலையில் ஏற்பட்டுள்ள இலாபம் மற்றும் நட்டம் குறித்த விபரங்கள் பின்வருமாறு:—

| ஆண்டு. (1) | | உற்பத்தி (2) (டன்களில்.) | விற்பனை (3) (டன்களில்.) | நிகரலாபம் (+) இழப்பு (—) (4) (ரூபாய் இலட்சங்களில்.) | |
|---|---|---|---|---|---|
| 1972-73 | | 8,237 | 5,993 | (—) | 76.96 |
| 1973-74 | | 17,798 | 18.000 | (+) | 12.34 |
| 1974-75 | .. | 20,195 | 9,369 | (—) | 70.63 |
| 1975-76 | .. | 12,272 | 10,115 | (—) | 152.54 |
| 1976-77 | .. | 28,948 | 33,654 | (—) | 7.28 |
| 1977-78 | .. | 23,527 | 27,615 | (—) | 80.91 |
| 1978-79 (தற்காலிகமாக.) | | 26,309 | 27,486 | (—) | 38.90 |

7. கழிவு இரும்பு துகள்களுக்கு கடுமையான பற்றாக்குறை இருந்திருக்காவிட்டால், 1978—79-ம் ஆண்டில் தமிழ்நாடு எஃகு ஆலையின் உற்பத்தி 30,000 டன்னை எட்டியிருக்கும். சுமார் 8,000 டன் இரும்பு துகள்கள் வெளி நாட்டிலிருந்து இறக்குமதிச் செய்ய டிட்கோ எடுத்துள்ள நடவடிக்கைகளின் விளைவாகவே, தற்போது 26,309 டன் உற்பத்தி செய்ய முடிந்தது. 1979—80-ம் ஆண்டில் 36,000 டன் உருக்குப் பாளங்கள் மற்றும் வார்ப்படங்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் அங்காடிகளில் இரும்புத் துகள்கள் கிடைப்பது தொடர்ந்து கஷ்டமாக இருப்பதால், இந்த ஆண்டும் 10,000 முதல் 15,000 டன் வரை இரும்புத் துகள்கள் இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது.



**சிமிண்டு திட்டங்கள் :**

8. இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் 1970-ம் ஆண்டு நிறுவப்பட்டு உள்ள ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் உற்பத்தித் திறன்கொண்ட சிமிண்டு ஆலையையும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூரில் நிறுவப்பட்டு வரும் ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் உற்பத்தித் திறன் கொண்ட உலர்ந்த முறை அடிப்படையிலான சிமிண்டு ஆலையையும் நிர்வகிப்பதற்காக தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் (டிட்கோவிற்கு முழுவதும் சொந்தமான துணை நிறுவனம்) 1976-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தோற்றுவிக்கப்பட்டது. மேற்கண்ட இரண்டு சிமிண்டு ஆலைகள் பற்றிய விபரங்கள் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் சம்பந்தப்பட்ட அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

**செயலாக்கத்திலும் பரிசீலனையிலும் உள்ள பிற திட்டங்கள் :**

9. கீழ்க்கண்ட பொதுத் துறை திட்டங்கள் செயலாக்கத்திலும்/பரிசீலனையிலும் இருக்கின்றன :—

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) | வேலை வாய்ப்பு. (3) |
|---|---|---|
| ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு தகடு திட்டம் (சிமிண்டு நிறுவனத்தால் செயலாக்கயிருப்பது) .. | 165.65 | 300 |
| மெக்னீசியம் உலோகத் திட்டம் | 350.00 | 200 |
| ரேயான் கிரேடு பல்ப் மற்றும் ஸ்டேபிள் பைபர் திட்டம் .. | 4,000.00 | 2,500 |
| உருக்கு உருளை ஆலைத்திட்டம். | 800.00 | 300 |
| வேதாரண்யம் உப்புத் திட்டம். | 1,100.00 | 2,700 |
| சின்தட்டிக் ரூட்டைல் திட்டம். | 1,500.00 | 300 |

| | | | |
|---|---|---|---|
| 7 | திருவண்ணாமலை இரும்புத்தாது மேம்படுத்துதல் திட்டம் .. | 20,000.00 | 6,000 |
| 8 | ஸ்பாஞ்ச் இரும்புத் திட்டம் .. | 600.00 | 1.000 |
| | மொத்தம் .. | 28,515.65 | 13,300 |

### செய்தித்தாள் காகித ஆலைத் திட்டம்:

10. கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாகப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 250 டன் செய்தித்தாள் மற்றும் 50 டன் காகிதம் உற்பத்தி செய்யும் செய்தித்தாள் காகித ஆலை ஒன்றை நிறுவ அரசு முடிவெடுத்துள்ளது. இந்த திட்டத்தின் திட்டமுதலீடு ரூ.132 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆலை மூலம் சுமார் 4,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும் இத் திட்டத்தில் உள்ள முக்கிய அனுகூலம் என்ன வென்றால் தமிழ்நாட்டில் ஏராளமாகக் கிடைக்கக்கூடிய மூலப் பொருளான கரும்புச் சக்கையைப் பயன்படுத்துதல் தான். சாதாரணமாக இது போன்ற திட்டங்களுக்கு மூலப் பொருளாகப் பயன்படும் மரத்துண்டுகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இரண்டாவதாக செய்தித்தாள் விநியோகம் மற்றும் தேவைக்கு இடையிலே உள்ள இடைவெளியை நிரப்புவதற்கு இத் திட்டம் உதவுகிறது. இதன் மூலம் செய்தித்தாள் இறக்குமதி செய்வதற்கான அன்னியச் செலாவணி மிச்சமாகிறது. இத் திட்டத்தை செயலாக்குவதற்காக ரூ. 50 கோடி அங்கீகாரம் பெற்ற மூலதனத்தில் "தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்" என்ற பெயரில் தனியாக ஒரு நிறுவனத்தை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுவரை இத்திட்டத்திற்கான ஆரம்பக் கட்ட வேலைகளை டிட்கோ செய்து வருகிறது. இத் திட்டத்திற்குத் தேவையான தொழில் உரிமம், அன்னியநாட்டு முதலீடு வாரிய அனுமதி மற்றும் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படுவதற்கான ஒருங்கிணைந்த விண்ணப்பங்கள்



மைய அரசுக்கு அனுப்பட்டுள்ளன. இதுதவிர இத்திட்டத்திற்கு தேவையான கரும்புச் சக்கை நிலக்கரி ஆகியவைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் மற்றும் அந்நிய நாட்டு ஒத்துழைப்பு ஏற்பாடுகளையும் இறுதியாக்குவதற்கான நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மூன்று ஆண்டு காலத்திற்குள் முடிவுறும். இத்திட்டத்தில் அரசு போட வேண்டிய மொத்த பங்கு மூலதனம் ரூ. 11 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு அரசு ரூ. 5 கோடி அளவிற்கு பங்கு மூலதனம் அளிக்க வேண்டியதிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் சேஷசாயி பேப்பர் நிறுவனத்தார் அளித்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செயலாக்கத்திற்கு மேற்படி சேஷசாயி நிறுவனத்தார் தொடர்ந்து தேவையான உதவியை அளித்து வருவர்.

### கூட்டுத்துறை திட்டங்கள் :

11. நிதி வசதிகளும் தேவையான தொழில் நுட்ப அறிவும் கொண்டுள்ள தொழில் முனைவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து கூட்டுத்துறையில் திட்டங்களை நிறுவுவதிலும் டிட்கோ நிறுவனம் முனைப்பாக பங்கேற்றுள்ளது. இதுவரை பங்கு மூலதனத்தில் டிட்கோ நிறுவனம் 26 சதவீதமும், தனிப்பட்ட தொழில் முனைவர்கள் 25 சதவீதமும், எஞ்சிய 49 சதவீதம் பொது மக்களிடமிருந்தும் பெற்று கூட்டுத் துறை நிறுவனங்களை டிட்கோ அமைத்து வந்துள்ளது. கூட்டுத்துறைத் திட்டங்களை ஊக்குவிப்பதற்கு அரசு வெளியிட்டுள்ள நெறிமுறைகளின்படி ரூபாய் ஒரு கோடிக்கு மேல் திட்டச் செலவு உள்ள திட்டங்கள் மட்டுமே டிட்கோவினால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனங்களில் நிர்வாகக் குழுவின் தலைவரை நியமிப்பதன் மூலமும், இயக்குநர்களை நியமிப்பதில் தொழில் முனைவோரோடு சமபங்கு பெறுவதன் மூலமும், டிட்கோ நிர்வாகப் பொறுப்பில் ஒரு முக்கிய பங்கேற்கிறது.

12. டிட்கோவினால் கூட்டுத்துறையில் செயலாக்கத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட 35 திட்டங்களில், 12 திட்டங்கள் ஏற்கனவே உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. இத் திட்டங்கள் சுமார் 4,800 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன. உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இந்நிறுவனங்களின் மொத்த விற்பனை 1977–78 ஆம் ஆண்டில் ரூ. 88 கோடி ஆகும். 1978–79 ஆம் ஆண்டில் இந்நிறுவனங்களின் மொத்த விற்பனை ரூ. 100 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

13. உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 12 திட்டங்களில் கீழ்க்கண்ட நான்கு திட்டங்கள் வியத்தகு முறையில் செயலாற்றிக்கொண்டிருக்கின்றன:—

(1) டைனாவிசன் நிறுவனம்.

(2) பாண்டியன் கெமிக்கல் நிறுவனம்.

(3) தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம்.

(4) தமிழ்நாடு தாதா பார்மசூட்டிகல்ஸ் நிறுவனம்.

டைனாவிசன் நிறுவனம் உற்பத்தி செய்து வரும் டைனோரா என்ற பெயருள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு அங்காடியில் நல்ல மதிப்பு உள்ளது. இந்நிறுவனம் விரிவாக்கப்பட்டுள்ள உற்பத்தித் திறனான ஆண்டொன்றுக்கு 20,000 தொலைக்காட்சிப் பெட்டிகள் உற்பத்தி அளவை ஏற்கனவே எய்திவிட்டது குறிப்பிடத்தக்கதொன்றாகும். மிகக் குறைந்த அளவிலான பங்கு மூலதன அடிப்படையை அதாவது ரூ. 20 இலட்சத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனத்தில் 1978 ஆம் ஆண்டில் விற்பனை அளவு ரூ. 4.84 கோடி ஆகும்.

சிறிய அளவிலான குடிசைத் தொழிலாக உள்ள தீப்பெட்டித் தொழிலுக்கு ஆதாரமாக தேவைப்படும் மூலப்பொருளான பொட்டாசியம் குளோரேட் என்ற மூலப்



பொருளை பாண்டியன் கெமிக்கல்ஸ் நிறுவனம் மேற்படி தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் வழங்கி வருகிறது. இத்தொழிற்சாலை உற்பத்தியைத் துவங்குவதற்கு முன்பாக இதற்கு மிகுந்த கிராக்கி இருந்தது.

தென்னகத்தில் உள்ள சிறு தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் பேசிக் குரோமியம் சல்பேட் என்ற பொருளை தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் உற்பத்திசெய்து மேற்படி தொழிற்சாலைகளின் தேவையை நிறைவுசெய்து வருகிறது. நாட்டில் உயிர்காக்கத் தேவைப்படும் மிக முக்கியமான மருந்துகளை தமிழ்நாடு தாதா மருந்து நிறுவனம் உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.

14. இது தவிர கூட்டுத்துறையில் மேலும் உருவாக்கப்பட்டு வருகின்ற 10 திட்டங்கள் 1979–80 மற்றும் 1980–81 ஆம் ஆண்டில் உற்பத்தியை துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டங்கள் மூலம் சுமார் 4,300 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். எஞ்சிய பதின்மூன்று திட்டங்கள் டிட்கோவின் சீரிய பரிசீலனைக்கும்/செயலாக்கத்திற்கும் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன. இத்திட்டங்களின் மொத்தத் திட்ட முதலீடு ரூபாய் 124 கோடி. இதனால் வேலை வாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை சுமார் 6,200 ஆகும். இந்த 35 திட்டங்கள் குறித்த முழு விவரங்களைப் பிற்சேர்க்கை IV-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் திட்டம்:

15. சோடா ஆஷ் மற்றும் அமோனியம் குளோரைடு உற்பத்தி செய்வதற்காக உள்ள இத்திட்டத்தை ரூபாய் 35 கோடிக்கு மேல் போகாத திட்டச் செலவில் தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் என்ற நிறுவனம் மூலமாக டிட்கோவே செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கான அன்னிய நாட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தம் இறுதி

யாக்கப்பட்டு விட்டது. தொழில் நுட்ப உதவிக்கான இறுதித் தவணைக் கட்டணத் தொகையும் செலுத்தப் பட்டு விட்டது. இத்திட்டத்திற்கான வெளி நாட்டு ஒத்துழைப்பாளர்களான ஜப்பான் நாட்டில் உள்ள ஹிட்டாச்சி நிறுவனத்தாருடன் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் ஜப்பானில் ஒரு துணை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க முன் வந்துள்ள நிதி நிறுவனங்கள் ஆலை நிறுவ இருக்கும் இடத்தைப் பார்வையிட்டு விட்டன. கூடிய சீக்கிரம் தவணைக் கடன்கள் வழங்க நிதி நிறுவனங்கள். ஒப்புதல் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 1981 மத்தியில் நிறைவேறும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 500 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், 3,000 பேர்களுக்கு சார்பு வேலை வாய்ப்பும் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

16. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளிலும், தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு டிட்கோ கவனம் செலுத்தி வருகிறது. பொது மற்றும் கூட்டுத் துறையில் டிட்கோவினால் பரவலாக நிறுவப்பட்டுள்ள பல்வேறு பெரிய தொழிற்சாலைகள் பற்றிய விவரங்கள் இத்துடன் சேர்க்கப்பட்டுள்ள படத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள, நிறுவப்பட்டு வரும் தொழிற்சாலைகள் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை V-ல் கொடுக்கப்பட்டுள்ளன. டிட்கோவின் கீழ் உற்பத்தியிலுள்ள செயலாக்கப்பட்டு வருகின்ற பல தரப்பட்ட தொழில்களின் திட்டமுதலீடு இணைக்கப்பட்டுள்ள வரைப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

17. இவ்வாறாக டிட்கோ பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் செயல்படுத்தி வரும் 47 திட்டங்கள் வாயிலாக சுமார் 40,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டுவதோடு மற்றும் ஆயிரக்கணக்கான நபர்களுக்கு சார்பு வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. எனவே தமிழகத்தின் தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதில், டிட்கோ முன்னணியில் நிற்பதோடு மட்டுமின்றி வேலையில்லாதோர் பிரச்சனைகளையும் ஓரளவுக்கு தீர்த்து வைப்பதிலும் சீரிய பங்கு ஏற்று வருகிறது.



## இணைப்பு—I.

தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கூட்டுத்துறை நிறுவனங்களில் செய்த முதலீடுகள் (31-12-1978 அன்றைய நிலை).

| கூட்டுத்துறை நிறுவனங்களின் பெயர்கள். | டிட்கோவின் மூலதனப் பங்கு. | 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள்வரை பங்கு அளிப்பு. மூலதனப் பங்குத் தொகை. | கடன். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| (அ) உற்பத்தி தொடங்கிய நிறுவனங்கள்— | | | |
| 1. ஸ்பிக் (சதர்ன் பெட்ரோ கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்). | 610.50 | 500.00 | 200.00 |
| 2. தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட் .. | 10.40 | 10.40 | 10.00 |
| 3. பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் .. | 6.24 | 6.24 | .. |
| 4. தமிழ்நாடு தாதா பார்மசூடிக்கல்ஸ் லிமிடெட் .. | 23.40 | 23.40 | .. |
| 5. சதர்ன் போரக்ஸ் லிமிடெட் .. | 10.40 | 10.40 | 34.00 |
| 6. டைனுவிசன் லிமிடெட் .. | 6.50 | 6.26 | .. |
| 7. ஆசியா புகையிலை கம்பெனி லிமிடெட் .. | 20.80 | 15.85 | 14.95 |
| 8. தமிழ்நாடு ஆல்கலின் பாட்டரிஸ் லிமிடெட் .. | 10.00 | 10.00 | 15.00 |
| 9. கடல் பெரிய இழுபடகுகள் கட்டும் தளங்கள், மண்டபம் .. | 3.05 | 1.83 | 0.30 |

| | | | |
|---|---|---|---|
| 10. மாருதி கிரிஸ்டல் சால்ட் கம்பெனி லிமிடெட் .. .. | 6.50 | 6.50 | 5,08 |
| 11. அரக்கோணம் காஸ்டிங்ஸ் மற்றும் போர்ஜிங் லிமிடெட் | 17.50 | 17,50 | 4,50 |
| 12. தமிழ்நாடு கெமிக்கல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் | 51.30 | 51.30 | 66.00 |
| (ஆ) உருவாகிவரும் நிறுவனங்கள்— | | | |
| 1. அஸிலிடிலின் மற்றும் தொழிற்சாலை வாயு சிலிண்டர்ஸ் லிமிடெட் | 6.50 | 3.12 | .. |
| 2. தமிழ்நாடு ப்ளோரின் மற்றும் அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட் .. .. | 52.00 | 20.30 | .. |
| 3. இண்டர் காண்டினெண்டல் லெதர்ஸ் லிமிடெட் .. .. .. | 10.40 | 8,83 | .. |
| 4. மோட்டார் காஸ்டிங்ஸ் லிமிடெட் .. .. | 52.0 | 1.85 | .. |
| 5. ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட் .. | 83.20 | 20.65 | .. |
| 6. வானவில் டைஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் .. .. .. | 33.28 | 8.33 | .. |
| 7. சதர்ன் ஹைட்ரோ கார்பன் லிமிடெட். | 15,60 | 13.48 | 45.00 |
| 8. ஆசியா கார்பன் லிமிடெட் .. | 56.00 | 10.68 | .. |
| 9. கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட் .. | 19.80 | 15.06 | .. |
| 10. தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் லிமிடெட் | 990.00 | 22.11 | .. |
| (இ) பரிசீலனையில் உள்ள திட்டங்கள்— | | | |
| 1. ரெய்ஃப்ராக்டரீஸ் திட்டம் .. | 104.00 | 1.24 | .. |
| 2. ஏ. பி.எஸ். ரெசின்ஸ் திட்டம் | 43.00 | 0.98 | .. |



| பொதுத்துறை நிறுவனங்களின் பெயர்கள். (1) | டிக்கோவின் மூலதனப் பங்கு. (2) | 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள்வரை பங்கு அளிப்பு, மூலதனப் பங்குத்தொகை. (3) | கடன். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| (இ) பரிசீலனையில் உள்ள திட்டங்கள்—தொடர்ச்சி. | | | |
| 3. உலோகக்கலவைத் திட்டம் .. .. | 11.09 | .. | .. |
| 4. காலணித் திட்டம் .. .. .. | 13.00 | 0.09 | .. |
| 5. பஃர்பரால் திட்டம் .. .. .. | 43.00 | 0.07 | .. |
| 6. புவி அறிவியல் கருவிகள் திட்டம் .. .. | 30.30 | 0.53 | .. |
| 7. கைக்கடிகாரம் திட்டம் .. .. .. | 81.00 | 0.24 | .. |
| 8. ஆட்டுத் தோல் திட்டம் .. .. .. | 59.80 | 0.11 | .. |
| 9. கண்ணாடிச் சாதனங்கள் திட்டம் .. .. | 40.00 | 0.25 | .. |
| 10. ஆல்கஹால் சார்ந்த ரசாயன கலவைத் திட்டம் .. .. .. .. | 100.00 | 0.21 | .. |
| 11. பாலிஏஸ்டர் நெட்டிழைத் திட்டம் .. .. | 216.00 | .. | |
| 12. டிடர்ஜன்ட் ஆல்கலைட் திட்டம் .. .. | 312.00 | .. | .. |
| 13. ரசாயன சாதனத் திட்டம் .. .. | 40.00 | .. | . |
| (ஈ) நலிந்த நிறுவனங்களிலும் பிறதொழில்களிலும் முதலீடுகள்— | | | |
| 1. பிளாஸ்டிக் ரெசின் அண்டு கெமிக்கல்ஸ் .. | .. | 14.73 | .. |
| 2. டபிள்யூ எஸ். இன்சுலேட்டர் ஆப் இந்தியா லிமிடெட் .. .. .. .. .. | .. | 10.00 | .. |

| | | | |
|---|---|---|---|
| 3. மதராஸ் ஆக்ஸிஜன் அண்டு அசிடிலின் கம்பெனி லிமிடெட் .. .. .. | ... | 3.39 | .. |
| 4. லாஸ்கோ ஸ்டீல் லிமிடெட் .. .. .. | ... | .. | 28.50 |
| 5. டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் .. | ... | 1.00 | 2.50 |
| 6. தமிழ்நாடு ரப்பர் லிமிடெட் .. .. | ... | 6.50 | 30.01 |
| மொத்தம் | 3,188.56 | 823.43 | 455.84 |



## இணைப்பு II.

### தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், சென்னை.

நிறுவனத் தொடக்கத்திலிருந்து 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ம் நாளோடு முடிவடைந்த ஆண்டு வரை அதன் நிதி வாயில்களையும் நிதிகளைப் பயன்படுத்தியதையும் காட்டும் விவர அறிக்கை.

(ரூபாய் இலட்சத்தில்.)

| விபரங்கள். (1) | 1966. (2) | 1967 (3) | 1968. (4) | 1969. (5) | 1970. (6) | 1971. (7) | 1972. (8) |
|---|---|---|---|---|---|---|---|
| நிதி வாயில்கள்— | | | | | | | |
| தொகை செலுத்தப்பட்ட மூலதனத்தில் உயர்வு .. | 75.00 | 75.00 | 275.00 | 11.74 | 100.00 | 100.00 | 230.00 |
| சேர்ந்து வரும் வட்டி உட்பட தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்ற கடன்களின் உயர்வு .. .. | | | | | | | |
| வங்கிகளிடமிருந்து பெற்ற கடன் உயர்வு .. | .. | .. | 24.49 | 190.78 | 115.68 | 113.39 | 79.20 |
| கடனீட்டுறுதி ஆவண வெளியீட்டில் உயர்வு .. | .. | .. | .. | .. | 59.10 | 17.65 | .. |
| நிலை வைப்புத் தொகைகளில் உயர்வு .. .. | .. | .. | .. | 75.00 | .. | .. | .. |
| பிற கடன்களில் உயர்வு .. .. .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| கட்டப்பட்டு வரும் வேலைகளில் இறக்கமும் கட்டுமானக்கால அளவில் செலவும் .. .. .. | .. | .. | .. | .. | .. | 5.46<br>4.35 | 11.04<br>144.40 |
| நிகர நடப்புச் சொத்துக்களில் குறைவு (நடப்புச் சொத்துக்கள் கடன்கள் முன் பணத் தொகைகளுக்கும் நடப்புப் பொறுப்புகள் நிதி ஒதுக்கங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு) | .. | .. | .. | .. | 65.87 | .. | .. |
| பிற திட்டங்களின் மீதான செலவில் குறைவு .. | .. | .. | .. | .. | 251.89 | 133.91 | 1.09 |
| ஒத்திப் போடப்பட்ட வருவாய் செலவில் குறைவு. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| (நிகர) நிலைச் சொத்துக்களில் குறைவு .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| ஆதாயம் .. .. .. .. .. .. | .. | .. | .. | .. | .. | .. | 6.54 |
| மொத்தம் .. | 75.00 | 75.00 | 299.49 | 277.52 | 592.54 | 374.76 | 472.27 |

இணைப்பு II—தொடர்ச்சி.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், சென்னை—தொடர்ச்சி.

நிறுவனத் தொடக்கத்திலிருந்து 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளோடு முடிவடைந்த ஆண்டு வரை அதன் நிதி வாயில்களையும் நிதிகளைப் பயன்படுத்தியதையும் காட்டும் விவர அறிக்கை—தொடர்ச்சி.

| விபரங்கள். | 1973. (9) | 1974. (10) | 1975. (11) | 1976. (12) | 1977. (13) | 1978. (14) | மொத்தம் (15) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| நிதி வாயில்கள்— | | | | | | | |
| தொகை செலுத்தப்பட்ட மூலதனத்தில் உயர்வு .. | 100.00 | 150.00 | 75.00 | 160.00 | 300.00 | 325.45 | 1,977.19 |
| சேர்ந்து வரும் வட்டி உட்பட தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்ற கடன்களின் உயர்வு .. .. | 31.45 | 232.16 | .. | 64.62 | .. | 155.76 | 1,007.53 |
| வங்கிகளிடமிருந்து பெற்ற கடன் உயர்வு .. .. | .. | 23.95 | 76.37 | .. | .. | .. | 177.07 |
| கடனீட்டுறுதி ஆவண வெளியீட்டில் உயர்வு .. | 110.00 | 110.00 | 110.00 | 110.00 | 182.00 | 170.00 | 867.00 |
| நிலை வைப்புத் தொகைகளில் உயர்வு .. .. | .. | 0.25 | .. | 40.00 | .. | 108.37 | 165.12 |
| பிற கடன்களில் உயர்வு .. .. .. .. | 15.40 | .. | 0.53 | 25.05 | 37.68 | .. | 227.41 |
| கட்டப்பட்டு வரும் வேலைகளில் இறக்கமும் கட்டுமானக் கால அளவில் செலவும் .. .. | 152.85 | 15.29 | .. | 9.16 | 8.75 | .. | 251.92 |
| நிகர நடப்புச் சொத்துக்களில் குறைவு (நடப்புச் சொத்துக்கள் கடன்கள் முன் பணத் தொகைகளுக்கும் நடப்புப் பொறுப்புகள் நிதி ஒதுக்கங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு) .. .. | .. | .. | .. | .. | .. | .. | 386.89 |
| பிற திட்டங்களின் மீதான செலவில் குறைவு .. | 2.71 | 0.26 | .. | 1.35 | 1.68 | .. | 6.00 |
| ஒத்திப் போடப்பட்ட வருவாய் செலவில் குறைவு. | .. | .. | .. | .. | 38.51* | .. | 38.51 |
| (நிகர) நிலைச் சொத்துக்களில் குறைவு .. .. | .. | 47.65 | 33.68 | .. | 559.55* | 17.54 | 658.42 |
| ஆதாயம் ... .. .. | .. | .. | | .. | 9.90 | | 16.44 |
| மொத்தம் .. | 412.41 | 579.56 | 295.58 | 410.18 | 1,138.07 | 777.12 | 5,779.50 |



இணைப்பு II—தொடர்ச்சி.

| (1) | 1966. (2) | 1967. (3) | 1968. (4) | 1969. (5) | 1970 (6) | 1971. (7) | 1972. (8) |
|---|---|---|---|---|---|---|---|
| நிதிகளைப் பயன்படுத்துதல்— | | | | | | | |
| (நிகர) நிலைச் சொத்துக்களில் உயர்வு .. .. | 0.28 | 1.90 | 27.57 | 10.80 | 530.91 | 187.92 | 155.20 |
| கட்டப்பட்டு வரும் வேலைகளில் ஏற்றமும் கட்டுமானக் கால அளவில் செலவும் .. .. .. | 0.20 | 0.37 | 33.34 | 124.16 | .. | 65.69 | 15.24 |
| முதலீடுகளை வாங்குவதில் உயர்வு .. .. | .. | .. | .. | 2.41 | 9.28 | 39.06 | 242.50 |
| நிகர நடப்புச் சொத்துக்களில் உயர்வு (நடப்புச் சொத்துக்கள் கடன்கள் முன் பணத்தொகைகளுக்கும் நடப்புப் பொறுப்புகள் நிதி ஒதுக்கீடுகளுக்கும் உள்ள வேறுபாடு) .. .. .. .. | 74.53 | 72.22 | 238.58 | 136.87 | .. | .. | .. |
| பிற திட்டங்களின் மீதான செலவு .. .. .... | .. | 0.51 | .. | 3.28 | 7.07 | 3.79 | 3.52 |
| பிற கடன்களில் இறக்கம் .. .. .. .... | .. | .. | .. | .. | .. | .. | .. |
| ஒத்திப்போடப்பட்ட வருவாய் செலவில் உயர்வு .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| வங்கிகளிலிருந்து பெற்ற கடன்களில் இறக்கம் .. | .. | .. | .. | .. | .. | .. | 55.81 |
| நிலை வைப்புத் தொகைகளில் இறக்கம் .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்ற கடன் குறைவு .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| இழப்பு .. .. .. .. .. .. | .. | .. | .. | .. | 45.28 | 78.30 | .. |
| மொத்தம் .. | 75.00 | 75.00 | 299.49 | 277.52 | 592.54 | 374.76 | 472.27 |

| (1) | 1973. (9) | 1974. (10) | 1975. (11) | 1976. (12) | 1977. (13) | 1978. (14) | மொத்தம். (15) |
|---|---|---|---|---|---|---|---|
| நிதிகளைப் பயன்படுத்துதல்— | | | | | | | |
| (நிகர) நிலைச் சொத்துக்களில் உயர்வு | 139.37 | .. | .. | 29.59 | .. | .. | 1,083.54 |
| கட்டப்பட்டு வரும் வேலைகளில் ஏற்றமும் கட்டுமானக் கால அளவில் செலவும் | .. | .. | 13.18 | .. | .. | 0.12 | 252·30 |
| முதலீடுகளை வாங்குவதில் உயர்வு | 97.45 | 203.89 | 62.74 | 33.88 | 652.89* | 438.55 | 1,782·65 |
| நிகர நடப்புச் சொத்துக்களில் உயர்வு (நடப்புச் சொத்துக்கள் கடன்கள் முன் பணத்தொகைகளுக்கும் நடப்புப் பொறுப்புகள் நிதி ஒதுக்கீடுகளுக்கும் உள்ள வேறுபாடு) .. .. .. .. | 62.39 | 296.06 | 103.51 | 69.79 | 314.67* | 249.70 | 1,618.31 |
| பிற திட்டங்களின் மீதான செலவு .. .. | .. | .. | 2.03 | .. | .. | 1.28 | 21.48 |
| பிற கடன்களில் இறக்கம் .. .. .. .. | 7.13 | .. | 8.51 | .. | 40.00 | .. | 55.64 |
| ஒத்திப்போடப்பட்ட வருவாய் செலவில் உயர்வு .. | 4.22 | 1.03 | 7.18 | 26.22 | .. | .. | 38.65 |
| வங்கிகளிலிருந்து பெற்ற கடன்களில் இறக்கம் .. | 20.44 | .. | .. | 60.38 | 24.22 | 16.22 | 177.07 |
| நிலை வைப்புத் தொகைகளில் இறக்கம் .. .. | .. | 77.25 | .. | .. | .. | .. | 77.25 |
| தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்ற கடன் குறைவு .. | .. | .. | 18.15 | .. | 106.29 | .. | 124.44 |
| இழப்பு .. .. .. .. .. .. .. | 81.41 | 1.33 | 80.28 | 190.32 | .. | 71.25 | 548.17 |
| மொத்தம் .. | 412.41 | 579.56 | 295.58 | 410.18 | 1,138.07 | 777.12 | 5,779.50 |

*இந்த ஏற்றம்/இறக்கம் பெரும்பாலும் சிமெண்ட்ஸ் தொழில் திட்டங்கள் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டமையால் ஏற்பட்டதாகும்.



## இணைப்பு III-A.

### திட்டங்களின் விவரங்கள்.

| திட்டத்தின் பெயர். (1) | திட்டச் செலவு. (2) | வேலை வாய்ப்பு (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (அ) பொதுத்துறை— | | |
| I. உற்பத்தியில் உள்ளது— | | |
| 1. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், ஆலங்குளம் பிரிவு. | 666 | 1,450 |
| 2. தமிழ்நாடு உருக்குத் தொழிற்சாலை, அரக்கோணம். | 677 | 600 |
| II. செயலாக்கத்தில் உள்ளது— | | |
| தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், அரியலூர். | 2,877 | 1,100 |
| III. பரிசீலனையில் உள்ளது— | | |
| 1. ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டு தகடு திட்டம். | 166 | 300 |
| 2. மெக்னீசியம் உலோகத் திட்டம். | 350 | 200 |
| 3. ரேயான் கிரேடு பல்ப் மற்றும் ஸ்டேபிள் பைபர் திட்டம். | 4,000 | 2,500 |
| 4. உருக்கு உருளை ஆலைத் திட்டம். | 800 | 300 |
| 5. வேதாரண்யம் உப்புத் திட்டம் | 1,100 | 2.700 |
| 6. சின்தட்டிக் ரூட்டைல் திட்டம் | 1,500 | 300 |
| 7. திருவண்ணாமலை இரும்புத் தாது மேம்படுத்துதல் திட்டம். | 20,000 | 6,000 |
| 8. ஸ்பாஞ்ச் இரும்புத் திட்டம். | 600 | 1,000 |
| 9. செய்தித்தாள் காகித ஆலைத்திட்டம். | 10,500* | 4,000 |
| | 43,236 | 20,450 |

* தற்போது ரூ. 13,200 லட்சமாக திருத்தப்பட்டுள்ளது.

| திட்டத்தின் பெயர். (1) | திட்டச் செலவு. (2) | வேலை வாய்ப்பு. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| **(ஆ) கூட்டுத்துறை—** | | |
| **I. உற்பத்தியில் உள்ளவை—** | | |
| 1. சதர்ன் பெட்ரோ-கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட். | 10,508 | 1,370 |
| 2. தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட். | 191 | 550 |
| **(ஆ) கூட்டுத்துறை—தொடர்ச்சி.** | | |
| **I. உற்பத்தியில் உள்ளவை—தொடர்ச்சி.** | | |
| 3. பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் | 86 | 150 |
| 4. தமிழ்நாடு தாதா பார்மசூடிக்கலஸ் லிமிடெட். | 203 | 500 |
| 5. சதர்ன் போரக்ஸ் லிமிடெட் .. | 139 | 150 |
| 6. டைனாவிசன் லிமிடெட் .. | 51 | 240 |
| 7. ஆசியா புகையிலை கம்பெனி லிமிடெட். | 178 | 1,000 |
| 8. தமிழ்நாடு ஆல்கலின் பாட்டரீஸ் லிமிடெட். | 38 | 150 |
| 9. கடல் பெரிய இழுபடகுகள் கட்டும் தளங்கள், மண்டபம். | 19 | 40 |
| 10. மாருதி கிரிஸ்டல் சால்ட் கம்பெனி லிமிடெட். | 65 | 270 |
| 11. அரக்கோணம் காஸ்டிங்ஸ் மற்றும் போர்ஜிங் லிமிடெட். | 85 | 100 |
| 12. தமிழ்நாடு கெமிக்கல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட். | 756 | 250 |
| | 12,319 | 4,770 |



| திட்டத்தின் பெயர். (1) | திட்டச் செலவு. (2) | வேலை வாய்ப்பு. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| **II. செயலாக்கத்தில் உள்ளவை—** | | |
| 1. அஸிலிடிலின் மற்றும் தொழிற்சாலை சிலிண்டர்ஸ் லிமிடெட். | 63 | 50 |
| 2. தமிழ்நாடு ஃப்ளோரின் மற்றும் அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட். | 550 | 300 |
| 3. இன்டர்-கான்டினெண்டல் லெதர்ஸ் லிமிடெட். | 120 | 300 |
| 4. மோட்டார் காஸ்டிங்ஸ் லிமிடெட். | 780 | 970 |
| 5. ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட் .. | 1,195 | 1,020 |
| 6. வானவில் டைஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட். | 309 | 400 |
| 7. சதர்ன் ஹைட்ரோ கார்பன் லிமிடெட். | 220 | 540 |
| 8. ஆசியா கார்பன் லிமிடெட் .. | 741 | 300 |
| 9. கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட். | 350 | 300 |
| 10. தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் லிமிடெட். | 3,400 | 500 |
| | 7,728 | 4,680 |
| **(இ) பரிசீலனையில் உள்ளவை—** | | |
| 1. ரெப்ஃராக்டரீஸ் திட்டம் .. | 1,400 | 900 |
| 2. ஏ. பி. எஸ். ரெசின்ஸ் திட்டம் .. | 500 | 130 |
| 3. உலோகக் கலவைத் திட்டம் .. | 120 | 320 |
| 4. காலனித் திட்டம் .. .. | 150 | 150 |
| 5. பர்பரால் திட்டம் .. .. | 676 | 150 |

| திட்டத்தின் பெயர். (1) | திட்டச் செலவு. (2) | வேலை வாய்ப்பு. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (இ) பரிசிலனையில் உள்ளவை—தொடர்ச்சி. | | |
| 6. புவி அறிவியல் கருவிகள் திட்டம் | 350 | 575 |
| 7. கைக்கடிகாரம் திட்டம் .. | 780 | 1,200 |
| 8. ஆட்டுத் தோல் திட்டம் .. | 575 | 600 |
| 9. கண்ணாடிச் சாதனங்கள் திட்டம் | 400 | 250 |
| 10. ஆல்கஹால் சார்ந்த ரசாயன கலவைத் திட்டம். | 1,000 | 400 |
| 11. பாலிஸ்டர் நெட்டிழைத் திட்டம் | 2,500 | 500 |
| 12. டிடர்ஜென்ட் ஆல்கலைட் திட்டம் | 3,500 | 500 |
| 13. ரசாயன சாதனத் திட்டம் .. | 400 | 500 |
| | 12,351 | 6,175 |



## இணைப்பு—IV.

உற்பத்தி செய்யும், செயல்படுத்தப்பட்டுவரும், பரிசிலனையிலுள்ள கூட்டுத்துறை நிறுவனங்கள் பற்றிய விவரங்கள்.

(அ) உற்பத்தி நிலையிலுள்ள கூட்டுத்துறை நிறுவனங்கள்.

| தொடர் எண்ணும், நிறுவனத்தின் பெயரும். (1) | இருப்பிடம். (2) | உற்பத்திப் பொருள். (3) | உற்பத்தித் திறன். (4) | மொத்த ஆண்டு விற்பனை 1977–78. (5) | வேலை வாய்ப்பு எண்ணிக்கை. (6) |
|---|---|---|---|---|---|
| | | | ஆண்டுக்கு. | (ரூபாய் இலட்சங்களில்). | |
| 1 சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரிஸ் நிறுவனம் லிமிடெட். | தூத்துக்குடி (திருநெல்வேலி மாவட்டம்). | அமோனியா | *1,100 டன். | 7,433 | 1,370 |
| | | யூரியா | *1,600 டன். | | |
| | | டி.ஏ.பி. / என். பி. கே. | *600 டன். | | |
| | | சல்பியூரிக் அமிலம் | *470 டன். | | |
| | | பாஸ் பாரிக் அமிலம் | *165 டன். | | |
| 2 தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட். | இராணிப்பேட்டை (வட ஆற்காடு மாவட்டம்). | அடிப்படை குரோமியம் சாயத் தூள். | 3,300 டன். | 176 | 550 |
| | | சோடியம் டைகுரோமேட். | 4,315 டன். | | |
| | | சோடியம் சல்பேட். | 3,400 டன். | | |
| 3 பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட். | நரசிங்கம்பட்டி கிராமம். (மதுரை மாவட்டம்). | பொட்டாசியம் குளோரேட். | 1,825 டன். | 129 | 150 |

* இது நாள் ஒன்றுக்கு செய்யும் உற்பத்தித் திறன்.

| தொடர் எண்ணும், நிறுவனத்தின் பெயரும். | இருப்பிடம். | உற்பத்திப் பொருள். | உற்பத்தித் திறன் ஆண்டுக்கு. | மொத்த ஆண்டு விற்பனை 1977-78. (ரூ. இலட்சங்களில்) | வேலை வாய்ப்பு எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 4 தமிழ்நாடு தாதா பார்மசூடிக்கல்ஸ், லிமிடெட். | பல்லாவரம் (சென்னை). | மருந்துகள் | | 244 | 500 |
| 5 சதர்ன் போரக்ஸ் லிமிடெட் .. | தாட்டூர் (செங்கற்பட்டு மாவட்டம்). | போரக்ஸ் .. போரிக் அமிலம் .. | 15,000 டன். 3,000 டன். | 113 | 150 |
| 6 டைனாவிஷன் லிமிடெட் .. | அடையாறு (சென்னை). | தொலைக்காட்சி பெட்டிகள். | 20,000 | 341 | 240 |
| 7 ஆசியா புகையிலை கம்பெனி, லிமிடெட். | மூக்கந்தபள்ளி சிகரெட்டுகள் (தருமபுரி மாவட்டம்). | சிகரெட்டுகள் | 4,500 மில்லியன். | 311 | 1,000 |
| 8 தமிழ்நாடு ஆல்கலின் பாட்டரிஸ் லிமிடெட். | அம்பத்தூர் (சென்னை). | நிக்கல் காட்மியம் செல்ஸ். | 50 இலட்சம் ஆம்பியர் மணி. | 1 | 150 |
| 9 கடல் பெரும் இழுபடகுகள் கட்டும் தளங்கள் மண்டபம் லிமிடெட். | மண்டபம் (இராம நாதபுரம் மாவட்டம்). | எக்கு மீன் பிடிக்கும் இழுபடகுகள். | 16 எண்ணிக்கை. | செப்பனிடுதல் பராமரித்தல் வேலைகள் மட்டும் (ரூபாய் 3 இலட்சம்). | 40 |
| 10 மாருதி கிரிஸ்டல் சால்ட் கம்பெனி லிமிடெட். | திருப்போரூர் (செங்கற்பட்டு மாவட்டம்). | உப்பு .. | 1.2 இலட்சம் டன். | .. | |
| | | ஜிப்சம் .. | 4,000 டன். | 1 | 270 |
| | | புரோமைன் .. | 180 டன். | | |
| | | மங்னீசியம் .. | 360 டன். | | |
| | | கார்பொனேட் – பிட்டெர்ன்ஸ் .. | 1 இலட்சம் டன். | | |



| (1) | (2) | (3) | (4) (ஆண்டுக்கு) | (5) (ரூபாய் இலட்சங்களில்.) | (6) |
|---|---|---|---|---|---|
| 11 அரக்கோணம் காஸ்டிங் மற்றும் போர்ஜிங் லிமிடெட். | அரக்கோணம் (வட ஆர்க்காடு மாவட்டம்). | கனரக வார்ப்படம் | 1,000 டன். | 14 | 100 |
| 12 தமிழ்நாடு கெமிக்கல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட். | கழினிவாசல் (இராமநாதபுரம் மாவட்டம்). | சோடியம் ஹைட்ரோ சல்பைட். | 3,300 டன். | டிசம்பர் 1977-ல் வர்த்தக உற்பத்தி தொடங்கியது (ரூபாய் 34 இலட்சம்). | 250 |
| | | | | 8,802 | 4,770 |

| தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயரும். | இருப்பிடம். | உற்பத்திப் பொருள் | உற்பத்தித்திறன் ஆண்டுக்கு. | உற்பத்தி தொடங்கும். தேதி. | வேலைவாய்ப்பு எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| (ஆ) செயலாக்க நிலையிலுள்ள நிறுவனங்கள். | | | | | |
| 1 அஸிட்டிலின் மற்றும் தொழிற்சாலை வாயு சிலிண்டர்ஸ் லிமிடெட். | அம்பத்தூர் (சென்னை). | அஸிட்டிலின் வாயு கலன்கள். | 25,000 | 1979 மத்தியில் | 50 |
| 2 தமிழ்நாடு ப்ளோரின் மற்றும் அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட். | மணஊர் (இராம நாதபுரம் மாவட்டம்). | அலுமினியம் ப்ளோரைடு. | 6,000 டன். | 1980 செப்டம்பரில். | 300 |
| 3 இண்டர்காண்டினென்டல் லெதர்ஸ் லிமிடெட். | இராணிப்பேட்டை (வட ஆர்க்காடு மாவட்டம்). | பதனிடப்பட்ட தோல்கள். | 9 இலட்சம் எண்ணிக்கை. | 1979 ஏப்ரல். | 300 |
| 4 மோட்டார் காஸ்ட்டிங்ஸ் லிமிடெட். | அரக்கோணம் (வட ஆர்க்காடு மாவட்டம்). | தேனிரும்பு வார்ப்படம். | 15,000 டன். | காலவரையீடு செய்யப்படவில்லை. | 790 |
| | | இரும்பு உருண்டை வார்ப்படம். | 5,000 டன். | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட் .. | பாகலூர் (தருமபுரி மாவட்டம்). | பேரிங்குகள் | 5 மில்லியன் எண்ணிக்கை. | 1980 ஆரம்பத்தில். | 1,020 |
| 6 வானவில் டைஸ் அண்டு கெமிக் கல்ஸ் லிமிடெட். | குடிக்காடு (தென் ஆர்க்காடு மாவட்டம்). | சாயப் பொருளும் நாப்தாலும். | 700 டன். | 1980 மத்தியில். | 400 |
| 7 சதர்ன் ஹைட்ரோ கார்பன் லிமிடெட். | கொளத்தூர் வட்டம் (புதுக்கோட்டை மாவட்டம்). | ஆல்கஹால் அடிப் படையிலான இரசாயனப் பொருட்கள். | 8,300 டன். | 1979 செப்டம்பரில். | 540 |
| 8 ஆசியா கார்பன் லிமிடெட். .. | இராணிப்பேட்டை (வட ஆர்க்காடு மாவட்டம்). | கார்பன் பிளாக்குகள் | 10,400 டன். | 1980 2-வது காலாண்டு. | |
| 9 கங்கப்பா பேப்பர்ஸ் லிமிடெட். | வடக்குத்து (தென் ஆர்க்காடு மாவட்டம்). | பலவித காகிதங்கள் | 10,000 டன். | அக்டோபர் 1979. | 800 |
| 10 தூத்துக்குடி ஆல்கலி கெமிக் கல்ஸ் லிமிடெட். | தூத்துக்குடி .. | சோடா ஆஷ் மற்றும் அமோனியம் குளோரைடு. | 66,000 டன். ஒவ்வொன்றும் | 1981 | 480 |
| | | | | மொத்தம் .. | 4,660 |

(இ) பரிசீலனையில் உள்ள திட்டங்கள்.

1 உயர் வெப்பம் தாங்கும் பொருள்கள் தயாரிப்புத் திட்டம்.

2 ஏ. பி. எஸ். ரெசின்ஸ் திட்டம்.

3 உலோகக் கலவைத் திட்டம்.

4 காலனித் திட்டம்.

5 பர்புரால் திட்டம்.

6 புவி அறிவியல் கருட்கள் திட்டம்.

7 கைக்கடிகாரத் திட்டம்.

8 ஆட்டுத் தோல் திட்டம்.

9 கண் கண்ணாடிப் பொருட்கள் திட்டம்.

10 ஆல்கஹால் சார்ந்த ரசாயன கலவைத் திட்டம்.

11 பாலிஸோசிக் நெட்டிழைத் திட்டம்.

12 டிடர்ஜன்ட் ஆல்கலைட் திட்டம்.

13 ரசாயன சாதனத் திட்டம்.

## இணைப்பு V

### பின்தங்கிய பகுதிகளில் டிட்கோவினால் ஊக்குவிக்கப்பட்ட திட்டங்கள்.

| (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்). | வேலை வாய்ப்பு. (3) |
|---|---|---|
| 1 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், ஆலங்குளம் பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம். | 666·00 | 1,450 |
| 2 தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட், இராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம். | 191·00 | 550 |
| 3 பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட், நரசிங்கம்பட்டி கிராமம், மேலூர், மதுரை மாவட்டம். | 86·00 | 150 |
| 4 ஆசியா புகையிலை கம்பெனி லிமிடெட், ஓசூர், தருமபுரி மாவட்டம். | 178·00 | 1,000 |
| 5 கடல் பெரும் இழுபடகுகள் கட்டும் தளங்கள் மண்டபம் லிமிடெட், இராமநாதபுரம் மாவட்டம். | 19·00 | 40 |
| 6 தமிழ்நாடு கெமிக்கல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட், காரைக்குடி, இராமநாதபுரம் மாவட்டம். | 756·00 | 250 |
| 7 தமிழ்நாடு ப்ளோரின் மற்றும் அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட், மணலூர், இராமநாதபுரம் மாவட்டம். | 550·00 | 300 |
| 8 இண்டர்காண்டினெண்டல் லெதர்ஸ் லிமிடெட், இராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம். | 120.00 | 300 |



| (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்) | வேலை வாய்ப்பு. (3) |
|---|---|---|
| 9 ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட், பாகலூர், தருமபுரி மாவட்டம். | 1,195·00 | 1,020 |
| 10 சதர்ன் ஹைட்ரோ கார்பன் லிமிடெட், கொளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம். | 220.00 | 540 |
| 11 ஆசியா கார்பன் லிமிடெட், இராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம். | 741·00 | 300 |
| | 4,722·00 | 5,900 |

### 9. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம்.

தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் (டான்செம்) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு முழுவதும் சொந்தமான ஒரு துணை நிறுவனமாக 11—2—1976 ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது. இந் நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டம், ஆலங்குளத்திலுள்ள ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமெண்டு ஆலையை நிர்வகிப்பதற்கும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூரில் நிறுவப்பட்டுவரும் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் உற்பத்தித்திறன் கொண்ட மற்றொரு சிமெண்டு ஆலையை நிறுவுவதற்கும் தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் 1—4—1976 ஆம் நாள் முதல் தனது பணியை துவங்கியுள்ளது. இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட போது இருந்த அங்கீகாரம் பெற்ற மூலதனம் ரூ. 10 கோடி. பின்பு இந்த அங்கீகாரம் பெற்ற மூலதனம் ரூ. 11 கோடியாக 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அதிகரிக்கப்பட்டது. இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 10·12 கோடி ஆகும்.

### ஆலங்குளம் சிமெண்டு ஆலை.

ஈரத் தயாரிப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு சிமெண்டு உற்பத்தி செய்ய இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் ஒரு ஆலையை நிறுவுவதற்கு 1964 ஆம் ஆண்டிலேயே தொழில் இலாக்கா நடவடிக்கை மேற்கொண்டது. பின்னர் இத்திட்டத்தின் செயலாக்கத்தை 1965-ம் ஆண்டில் டிட்கோ மேற்கொண்டு 1966 ஆம் ஆண்டில்

கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1970 ஆம் ஆண்டு ஆலங்குளம் சிமெண்டு ஆலை உற்பத்தியை துவங்கி கடந்த 8 ஆண்டுகளாக சிமெண்டு உற்பத்திச் செய்து வருகிறது. பின்தங்கிய மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த ஆலை சுமார் 1,450 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

உற்பத்தியைத் துவங்கிய நாளிலிருந்து இதுவரை பல தரப்பட்ட காரணங்களுக்காக ஆலை நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தித்திறன் இலக்கை எய்த முடியவில்லை. இதன் விளைவாக ஆரம்பத்தில் இரண்டு ஆண்டு காலத்திற்கு இந்த ஆலை ஓரளவு இலாபம் ஈட்டியதைத் தவிர தொடர்ந்து இந்த ஆலை நட்டத்தில் இயங்கி வருகிறது. ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் உற்பத்தித் திறன் கொண்ட இந்த சிமெண்டு ஆலையின் சிமெண்டு உற்பத்தி, விற்பனை, ஆலையின் இலாபம் மற்றும் நஷ்ட விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வருடம். | | இந்த ஆண்டில் உற்பத்தி. | இந்த ஆண்டில் விற்பனை. | நிகர இலாபம்(+) நஷ்டம்(—)* |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | மெட்ரிக் டன். | மெட்ரிக் டன். | (ரூபாய் இலட்சங்களில்). |
| 1970–71 | .. | 89,621 | 80,837 | (—) 70·29 |
| 1971–72 | .. | 3,06,093 | 3,08,068 | (+) 12·90 |
| 1972–73 | .. | 2,93,525 | 2,98,581 | (+) 5·30 |
| 1973–74 | .. | 2,80,382 | 2,78,980 | (—) 4·80 |
| 1974–75 | .. | 2,00,070 | 2,02,264 | (—) 31·40 |
| 1975–76 | .. | 2,62,729 | 2,58,052 | (—) 42·50 |
| 1976–77 | .. | 3,38,445 | 3,33,294 | (+) 1·99 |
| 1977–78 | .. | 3,09,105 | 3,01,067 | (—) 64·1 |

1978–79 ஆம் ஆண்டில் திறம்பட எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக, ஆலையின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது அந்த கால கட்டத்தில், மைய அரசு 1978-ம் ஆண்டு ஆகஸ்ட்

* தணிக்கையாளர்களின் கண்ணோட்டத்தின்படி முக லாபம் ரூ. 2·40 இலட்சம் ஆகும்.



ங்களிலிருந்து போதிய அளவு நிலக்கரி வழங்கியபோது ஆலையின் நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தித்திறன் அளவைவிட உற்பத்தி அதிகமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக 1977–78 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிகர நட்டமான ரூ. 64·11 இலட்சத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 1978–79 ஆம் ஆண்டின் நிகர நட்டம் ரூபாய் 30 இலட்சம் அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிலக்கரி கிடைக்காத காரணத்தால் ஆலங்குளம் சிமெண்டு ஆலையில் உள்ள சூளைகள் இந்த ஆண்டில் சுமார் 2,060 மணி நேரங்களுக்கு (அதாவது 103 சூளை இயங்கும் நாட்களுக்கு) நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது ஆலையின் உற்பத்தி விகித அளவிற்கு ஏற்ப, போதிய அளவு நிலக்கரி வழங்கப்பட்டிருந்தால், அந்த விகிதாச்சாரப்படி கூடுதலாகக் கிடைக்கக்கூடிய உற்பத்தி மூலம் (அதாவது சூளை 103 நாட்களுக்கு இயங்குவதன் மூலம்) நடப்பு நிதி ஆண்டில் குறிப்பிடத்தக்க இலாபத்தைப் பெற்றிருக்க முடியும். போதிய அளவு நிலக்கரி கிடைப்பதற்கு உட்பட்டு 1979–80 ஆம் ஆண்டில் இந்த ஆலை 3·60 இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தி செய்யத் திட்டமிட்டு வருகிறது.

ரூபாய் 3·88 கோடி திட்டச் செலவில் ஆலங்குளம் சிமெண்டு ஆலையை நவீனப்படுத்துவதற்காகவும், மேலும் சீர்திருத்தப் பணிகள் செய்வதற்கும் ஆன பணிகளை, தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படும் மேற்கண்ட பணிகள், ஆலையின் உற்பத்தித்திறனை 5 இலட்சம் டன்னாக அதிகரிப்பதோடு சிமெண்டு தூசிப் படிவுப் பிரச்சினையை முடியோடு நீக்கி சுற்றுப்புற சுகாதார சூழ்நிலைக்கு வழி வகுக்கும்.

அரியலூர் சிமெண்டு ஆலைத் திட்டம்.—

உலர்ந்த முறை தயாரிப்பு அடிப்படையில் ரூபாய் 28.76 கோடி திட்டச் செலவில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் சிமெண்டு உற்பத்தி செய்வதற்காக திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூரில் ஒரு சிமெண்டு ஆலையை தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் தற்போது நிறுவி வருகிறது. இந்த ஆலையின் கட்டுமானவேலைகளும் மற்றும் இயந்திர தளவாடங்கள் நிறுவும் வேலைகளும் முடிவடைந்த நிலையில் ஆலையின் செயலாக்கப் பணிகள் முடிவுறும் நிலையில் இருக்கின்றன. முதல் சூளை 9—3—1979 ஆம் நாள் இயக்கி வைக்கப்பட்டது. இரண்டாவது சூளையும் மற்றும் சிமெண்டு மில்லும் 1979 ஜூன் திங்களில் இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இந்த ஆலை வர்த்தக ரீதியான சிமெண்டு உற்பத்தியை 1979 சூன் திங்களில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆலையின் திட்டப் பணிகள் முடிவுறும் நிலையில் சுமார் 800 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டும். இதுவரை இத் திட்டத்திற்காக ரூபாய் 25 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டு தகடு திட்டம்.

ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு தகடுகள் வினியோகம் மற்றும் தேவைக்கு இடையே உள்ள இடைவெளியை கருத்தில் கொண்டு, ஆண்டொன்றுக்கு 36,000 டன் சிமெண்டு தகடுகள் உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத் தின் திட்ட முதலீடு ரூபாய் 166 இலட்சம் ஆகும். இத் தொழிற் சாலை ஆலங்குளம் சிமிண்டு ஆலைக்கு அருகில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது, 1980 ஆம் ஆண்டு இறுதியில் திட்டப் பணிகள் முடியலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை சுமார் 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

நம் நாட்டிலேயே மாநில அளவில் நிதி உதவியளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாகத் தமிழ்நாடு தொழில் முத லீட்டு நிறுவனம் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 1949 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் விரைவுபடுத்துதல் என்கிற முக்கிய நோக்கத்துடன் நிறு வப்பட்டது.

பின்பு இந்த நிறுவனத்தின் அதிகார வரம்புகள் (Jurisdiction) பாண்டிச்சேரியூனியன் பிரதேசத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது இந்திய ரிசர்வ் வங்கியும், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியும் (அய். டி. பி. அய்.) அவ்வப்போது வெளியிடும் அறிவிப்புப்படி, 1951 நிதி நிறுவனச் சட்டத்தின் சில முக்கியமான விதித் துறைகள் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்குப் பொருந்தும்படியாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

2. இந்நிறுவனத்தின் நோக்கங்களும், அலுவல்களும் பின்வரு மாறு :—

அலுவல்களும் நோக்கங்களும்—

(அ) முக்கியமாக நிலம், கட்டிடம் ஆகிய வடிவில் நிலைச் சொத்துக்களை வாங்குவதற்காக தொழில் நிறுவனங்களுக்கு நீண்ட கால, நடுத்தரக் காலக் கடன்கள் வழங்குதல்.

(ஆ) இயந்திரங்கள் வாங்குவதற்காக தொழில் நிறுவனம் செய்துகொள்ளும் காலம் தாழ்த்தித் தொகை செலுத்துவதற் காக ஒப்பந்தங்களுக்கு நிபந்தனைகள் பேரில் உத்திரவாதம்/எதிர் உத்திரவாதம் அளித்தல்.

(இ) பொதுச் சந்தையில் வெளியிடப்படும் கடன்கள்/வங்கி கள்/ஈட்டுறுதி நிறுவனங்கள் முதலியவற்றிலிருந்து தொழில் நிறுவனங்கள் எழுப்புகிற கடன்களுக்கு உத்திரவாதம் அளித்தல்.



(ஈ) தொழில் நிறுவனங்கள், பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் வெளியீட்டுத் தொகை வழங்குவதற்குக் காப்புறுதி அளித்தல்.

(எ) மத்திய அரசின் முதலீட்டு உதவித் தொகைக்கும் வழங்கப்பட்ட உதவித் தொகைக்கும் இடையே துண்டு விழும் தொகையைக் கடனாக வழங்க அனுமதித்தல்.

(உ) பின்வருவனவற்றிற்கு நிதியுதவி வழங்க அனுமதி அளித்தல்:—

(1) தொழில்பேட்டைகள் அல்லது தொழில் பகுதிகளின் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள தொழில் நிறுவனங்களுக்கு.

(2) தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக சிறப்பறிவு அல்லது தொழில் நுட்ப அறிவு அல்லது ஏனைய பணிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள தொழில் நிறுவனங்களுக்கு.

(3) மீன் பிடிப்பதில் ஈடுபட்டுள்ள அல்லது மீன் பிடிப் பதற்குக் கரையக வசதிகளைச் (Shore facilities) செய்து தருகிற அல்லது அவற்றிற்குப் பேணுதல் வசதி அளிப்பதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு.

டி.அய்.அய்.சி. வழங்கும் உதவியின் அளவு கீழே தரப்பட் டுள்ளது :—

| | |
|---|---|
| அ. கடன்கள்—குறைந்த அளவு | ரூபாய் 5,000. |
| உயரளவு .. | ரூபாய் 30 இலட்சம். (தனி நபர் உடைமை பங்குதாரர் உடைமை நிறுவனங்களுக்கு அளிக்கும் கடனின் உய ரளவு ரூபாய் 15 இலட்சம்.) |
| ஆ. காலம் தாழ்த்தித் தொகை செலுத்தும் உத்திரவாதம். | ரூபாய் 30 இலட்சம். |
| இ. பொதுக் கடன் வெளியீட்டு பங்கில் நேரடியாக கலந்து கொள்ளுதல், உத்திரவாத மளித்தல். | ரூபாய் 25 இலட்சம். (பொதுக் கடன் வெளியீட்டில் 25 சத வீதம் அல்லது தொழிலதிபர் முதலீடு செய்யும் தொகைக்கு மேற்படாத ஒரு தொகை இவற்றில் எது குறைவோ அது.) |

இந்நிறுவனம் தற்போது புதுத் தொழில்கள் தொடங்கவும் ஏற்கெனவே உள்ள தொழில்களை விரிவு படுத்தவும், நவீனப் படுத்தவும், நடுத்தர, சிறு தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கின்றது. சிறு தொழில் பிரிவிலும், மற்றும் சின்னஞ்சிறு பிரிவிலும், Tiny Sector தொழில்கள் நிறுவ ஊக்கப்படுத்தவும், அதிக அளவில் வேலைவாப்புகளைப் பெருக்குவதற்கும் சலுகை வீதங்களில் அதாவது குறைந்த வட்டி வீதம் கடன்களை திருப்பித் தர நீண்ட கால அளவு, போன்ற வடிவில் உதவி அளிக்கின்றது. அதிக அளவில் வேலைவாய்ப்புகள் அளிப்பதற்காகவும், பிற்பட்ட பகுதிகளில் அதாவது கிராமப்பகுதிகளில் தொழில் தொடங்குபவர்களுக்கு நிதி உதவி அளிப்பதில் முதல் இடம் அளிக்கிறது. இந்நிறுவனம் பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்கு, கடனைத் திருப்பித் தருவதற்கு நீண்ட காலம் குறைந்த வட்டி போன்ற சலுகைகளுடன் உதவி அளிக்கின்றது. நடுத்தர மற்றும் சிறிய தொழிற்பிரிவுகள் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழிற் பிரிவுகள் ஆகியவற்றிற்கும் (அய்.டி.பி. அய். மறுநிதி அளிக்கப்படும்போது) டி.அய்அ.ய்.சி. விதிக்கும் வட்டி விகிதம் கீழே தரப்பட்டுள்ளது:—

| விவரம். | வட்டி விகிதம். (சத வீதத்தில்.) |
|---|---|
| சிறு தொழில் பிரிவு— | |
| (அ) பிற்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்ட பிரிவுகளுக்காக ஆண்டொன்றிற்கு .. | 9.5 |
| (ஆ) பிற்பட்ட பகுதி நீங்கலாக ஏனைய பகுதிகளில் நிறுவப்பட்ட பிரிவுகளுக்காக ஆண்டொன்றிற்கு .. .. .. | 11·00 |
| நடுத்தரப்பிரிவு— | |
| (அ) பிற்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்ட பிரிவுகளுக்காக ஆண்டொன்றிற்கு .. .. | 9.5 |
| (இ) பிற்பட்ட பகுதி நீங்கலாக ஏனைய பகுதிகளில் நிறுவப்பட்ட பிரிவுகளுக்காக ஆண்டொன்றிற்கு .. .. .. .. | 12.5 |



## நிதி வாயில்கள்.

31—3—1979 நிலவரப்படி நிறுவனத்தின் நிதிவாயில்கள் பின்வருமாறு உள்ளன :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (அ) பங்கு மூலதனம் .. .. .. .. | 1,050 |
| (ஆ) பத்திரங்கள் .. .. .. .. | 1,463 |
| (இ) அய்.டி.பி.அய். இடமிருந்து மறு நிதி .. | 2,800 |
| (ஈ) பொதுமக்களிடமிருந்து வைப்பீடுகள் .. | 1,725 |
| (உ) அக உற்பத்தி (ஆதாயம் மதிப்பீடுகள்) .. | 600 |
| மொத்தம் .. | 7,638 |

1978–79 ஆம் ஆண்டில் தமிழக அரசு மேலும் ரூபாய் 100 இலட்சம் பங்கு மூலதனமாக அளித்திருக்கிறது. இதற்கு இணையான பங்கு தொகை அய்.டி.பி.அய். இடமிருந்து பெற்றபின் பங்குகள் வழங்கப்படும்.

## பங்கு மூலதனம்.

நிறுவனத்திற்கு தேவைப்படும் நிதி பற்றாக்குறையைக் குறைப்பதற்கும், அய்.டி.பி.அய். இடமிருந்து மறு நிதி வசதி, அதிக அளவில் பெறுவதற்கும் மாநில அரசு நிறுவனத்தில் அதனுடைய பங்கு மூலதனத்தை கணிசமான அளவுக்கு உயர்த்தி இருக்கிறது. 1977–78 ஆம் ஆண்டில் ரூபாய் 100 இலட்சமும், 1978–79 ஆம் ஆண்டில் ரூபாய் 200 இலட்சமும், வழங்கியதன் மூலம், நிறுவனத்தில் மாநில அரசின் பங்கு மூலதனம் 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை ரூபாய் 652.28 இலட்சத்துக்கு உயர்ந்திருக்கிறது. அய்.டி.பி.அய். தற்போது இணையாக பங்கு மூலதனத்துக்கு தொகை அளிப்பதால், அதன் பங்கு மூலதனம் ரூபாய் 450 இலட்சத்தை எட்டியுள்ளது. பாக்கியுள்ள பங்கு மூலதனத்தை பாண்டிச்சேரி அரசும், ஈட்டுறுதி நிறுவனங்களும், மற்றவர்களும் செலுத்தியுள்ளனர். 1978–79 ஆம் ஆண்டில் 6½ சதவீதம் சிட்டு வீதத்தில் (Ccupen Rate) ரூபாய் 302.50 இலட்சத்துக்குக் கடன் பத்திரங்கள் வெளியிடப்பட்டிருக்கிறது.

## அய். டி. பி. அய். இடமிருந்து மறு நிதி :

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி குறைந்த வட்டி வீதத்தில் தாராளமாக மறுநிதி டி. அய். அய். சி.-க்கு அளிக்கிறது. டி. அய். அய். சி. யின் செலுத்தப்பட்ட மூலதனமும் இலவச ஒதுக்கீடுகளும் (Free Reserves) சேர்ந்து அதைப்போல் மூன்று மடங்குவரை, அய். டி. பி. அய். மறு நிதி அளிக்கின்றது. அய். டி. பி. அய். இடமிருந்து பெற்ற மறுநிதி, மற்றும் திருப்பி செலுத்தப்பட்ட மறுநிதி, நிலுவையில் உள்ள தொகைபற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் கோடியில்.)

| | மறுநிதி பெற்றது. | மறுநிதி (வட்டி நீங்கலாக) திருப்பிச் செலுத்ியது | பாக்கியாயுள்ள மறுநிதி. |
|---|---|---|---|
| 1977-78 .. | 6·12 | 3·32 | 22.65 |
| 1978-79 (மதிப்பீடு). .. | 9·00 | 4·37 | 27·28 |

அய். டி. பி. அய். இடமிருந்து மறுநிதி பெற்றதில், அசலையும் வட்டியையும் உடனுக்குடன் டி. அய். அய். சி. திருப்பி செலுத்தி விடுகிறது.

### வைப்பீடுகள் :

டி. அய். அய். சி.-க்கு பொது மக்களின் வைப்பீடுகள் மூலமாக பெருமளவில் நிதி கிடைக்கிறது. 1976ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 தேதி நிலவரப்படி பாக்கி



யுள்ள வைப்பீடுகள் ரூபாய் 2,431 இலட்சமாக இருந்தது. இந்த வைப்பீடுகளின் வட்டி விகிதம் (10 சதவீதம்) அதிகமாக இருப்பதாலும், நிறுவனத்தின் இலாபத்தை பாதிப்பதாக இருப்பதாலும் வைப்பீடுகள் எதிர்காலத்தில் பெறுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பங்கு மூலதனம் மற்றும் பத்திரங்கள் வெளியிடுதல் போன்றவைகள் மூலமாக நிதி வாயில்களை பெருக்க அதிகரிக்க முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக 31–3–1979-ல் நிலுவையில் உள்ள வைப்பீடுகள் ரூபாய் 1,709 இலட்சத்திற்கு வந்துள்ளன.

### பணியாற்றியதினால் விளைந்த நலன்கள் :

இந் நிறுவனத்தின் செயல் திறனில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டதாலும், முக்கியமாக நிதி உதவி அளித்த தொகைகளை திரும்பப் பெற்றதாலும், வரிவிதிப்புக்கு முன்னால் கணிசமான அளவுக்கு இந்த நிறுவனம் ஈட்டிய ஆதாயம் கீழே குறிப்பிட்டுள்ளவாறு அதிகமாகி இருக்கிறது:—

| ஆண்டு முடிவு. | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 31–3–1977 .. .. ... | 1,45·15 |
| 31–3–1978 .. .. .. ... | 1,72·78 |
| 31–3–1979 (மதிப்பீடு) .. .. | 2,00·00 |

தற்போது டி. அய். அய். சி. அதன் பங்குதாரர்களுக்கு உத்தரவாதமுள்ள குறைந்தபட்ச 3 சதவீதம் ஊதியம் பங்குத்தொகை ஆதாயமாக அறிவித்து வருகின்றது.

### 5. சாதனை பற்றிய ஆய்வு :

இந்நிறுவனத்தின் பணிகள் பற்றிய (அதாவது வழங்கிய கடன்கள், அனுமதிகள், சிறு தொழிற் பிரிவிற்கும், பின்தங்கிய பகுதிகளுக்கும் வழங்கிய கடன்கள், மீட்புப் பணிகள், வரி விதிப்புக்கு முன் ஈட்டிய ஆதாயம், உருவாக்கிய வேலைவாய்ப்புத் திறன் போன்ற பணிகள்) புள்ளி விவரச் சுருக்கம்

இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்களாவன :—

(அ) உதவியளித்த தொழிற் பிரிவுகள்

கீழே குறிப்பிட்டுள்ளதைப் போல முந்தைய ஆண்டைவிட 1978–79 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் உதவியளித்த தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. இது வழங்கியுள்ள அனுமதிகளின் எண்ணிக்கை சற்றே குறைந்துள்ளது. நாட்டில் தொழில் வளர்ச்சியில் காணும் பொதுவான மந்த நிலையும் உறுதியற்ற அங்காடி நிலவரங்கள் முதலியவையும் இதற்கு முக்கிய காரணங்களாகும். பற்பல பிற மாநிலங்களிலும் இப்போக்கு காணப்படுகிறது. தமிழ்நாடு அரசின் தொழிற் கொள்கைக்கும், மத்திய அரசின் தொழிற் கொள்கைக்கும் இணங்க சிறுதொழில் துறையிலும் சின்ன சிறு தொழில் துறையிலும் ஏராளமான தொழிற் பிரிவுகளுக்கு, டி.அய்.அய்.சி. 1978–79-ல் கடனுதவி வழங்கியுள்ளது. நலிவுற்ற பிரிவில் உள்ள சமூகத்தினர் அதிக அளவில் டி. அய். அய். சி. இடமிருந்து உதவி பெற்று பலன் அடைந்துள்ளார்கள். எண்ணிக்கையும் ஒப்புதளிக்கப்பட்ட தொகை விபரம் கீழே தரப்பட்டுள்ளன.—

| ஆண்டு. | எண்ணிக்கை | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1977-78 .. .. .. | 384 | 12,27.08 |
| 1978-79 (மதிப்பீடு) .. | 800 | 12,06.00 |

இந்நிறுவனத்தின் மொத்த ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை (Cumulative sanction) வழங்கப்பட்ட தொகை (Disbursements) நிலுவையில் உள்ள தொகை பற்றிய விபரம் வருமாறு :—

| | ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| 31–3–1978 வரை | 2,687 | 1,21,28·71 |
| 31–3–1979 வரை (மதிப்பீடுகள்.) | 3,487 | 1,33,34·71 |



| | வழங்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| 31–3–1978 வரை | 2,274 | 98,89·63 |
| 31–3–1979 வரை (மதிப்பீடுகள்) | 2,729 | 1,07,92·63 |

| | நிலுவையில் உள்ள தொகை. |
|---|---|
| 31–3–1978 வரை | 66,08·31 |
| 31–3–1979 வரை (மதிப்பீடுகள்) | 69,00·00 |

இந்த விவரங்கள் வரைபடங்கள் மூலமாகவும் இணைப்பு இரண்டு (A) & (B)-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) சிறுதொழில் பிரிவுகளுக்கும் சின்னஞ்சிறு தொழில் நிறுவனங்களுக்கான உதவிகள்.

சென்ற ஆண்டில் அளித்த உதவியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 1978-79-ம் ஆண்டில் சிறு தொழில் பிரிவுகளும் மற்றும் சின்னஞ்சிறு தொழில் நிறுவனங்களும் அதிகப்படியான நிதி உதவியைப் பெற்றிருக்கின்றன. அதிகப்படியான நிதி உதவியை நலிவுற்ற தொழில் பிரிவினரும் பெற்றிருக்கின்றனர்.

மேற்கூறிய பிரிவுகளுக்கு அளித்த நிதி உதவியின் விவரங்கள் பின் வருமாறு :—

| | எண். | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1977-78 .. .. | 329 | 5,78.70 |
| 1978-79 (மதிப்பீடுகள்). | 750 | 6,50.00 |

(இ) பிற்பட்ட பகுதிகளுக்கு உதவியளித்தல்.

பிற்பட்ட பகுதிகளுக்கு சென்ற ஆண்டில் கொடுத்த உதவியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1978-79ம் ஆண்டில் பிற்பட்ட பகுதிகளுக்கு டி.அய்.

அய். ஸி. அளித்த நிதி உதவி கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது. பின்தங்கிய பகுதிகளில் உதவிபெற்ற தொழிற் பிரிவின் எண்ணிக்கைகளும் அதிகமான அளவில் உள்ளன. மேலும் கிராமங்களில் நலிந்த பிரிவில் உள்ளவர்கள் அதிகம் பயனடைந்துள்ளார்கள். அது பற்றிய விவரம் வருமாறு:—

| | எண். | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1977-78 .. .. | 209 | 6,88.84 |
| 1978-79 (மதிப்பீடுகள்). | 460 | 7,20.00 |

## (ஈ) வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துதல்.

1978-79-ம் ஆண்டில் முக்கியமாக சிறு தொழில்களுக்கும் சின்னஞ் சிறு தொழில் நிறுவனங்களுக்கும் அதிக அளவில் உதவி அளித்ததால், வேலை வாய்ப்புகளும் அதிகரித்திருக்கின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:—

| | எண்ணிக்கை |
|---|---|
| 1977-78 .. .. .. .. | 6,070 |
| 1978-79 (மதிப்பீடுகள்) | 13,400 |

இவ்வதிகப்படியான வேலை வாய்ப்புகள் பெரும்பாலும் கிராமப்புறங்களிலும் பின் தங்கிய பகுதிகளிலும்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

<u>சிறப்புத் திட்டங்களின் கீழ் நிதி உதவி:</u>

டி. அய். அய். சி. நிதி உதவி அளிக்க சிறப்புத் திட்டங்களை வகுத்துள்ளது. இவற்றின் விவரம் வருமாறு:—

### 1. எளிய நிபந்தனைகளில் கடன் வசதி திட்டம் மற்றும் ஆரம்ப முதலீட்டு உதவித் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் சிறு தொழில்களுக்கு நிதி வழங்க தனி மூலதனம் (Special Capital) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த தனி மூலதனத்துக்கு



தமிழ் நாடு அரசு ரூபாய் 25 இலட்சமும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ரூபாய் 25 இலட்சமும் கொடுத்துள்ளன. இத்தொகைக்கு டி.அய்.அய்.ஸி. ஊதியப் பங்கு (Dividend) கொடுக்க வேண்டியதில்லை. இத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட அடிப்படையில் திட்டத்துக்கு தேவையான மூலதனத்தில் தொழில் முனைவோர் செலுத்தும் மூலதனப் பங்கு போக பாக்கி தேவைப்படும் மூலதனத்தை நிரப்பும் பொருட்டு நிதி உதவி அளிக்கப்படுகிறது. மேற்சொன்ன திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியும் முறையே ரூ. 25 இலட்சம் வீதம் இணையாக வழங்கும் அடிப்படையில் வழங்கப்பட்ட சிறப்பு மூலதனம் ரூபாய் 50 இலட்சத்தைக் கொண்டு சிறு தொழில் பிரிவுகளுக்கு நிதி உதவி வழங்கக் கருதப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் தொழில் நிறுவனத்திற்குத் தேவைப்படுகின்ற மூலதனத் தொகைக்கும், அத்தொழில் நிறுவனத்தைத் தொடங்குவோர் மூலதனத்தை ஏற்பாடு செய்வதற்கும் பெற்றுள்ள திறனுக்கும் இடையிலான வேறுபாட்டுத் தொகையை வழங்குவதற்காக தகுதி வாய்ந்தவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. தனி நபர் உடைமையிலும் பங்குதாரர் உடைமையிலும் உள்ள தொழில் பிரிவுகளைப் பொறுத்த வரையில் நேர்வில் ஆண்டொன்றுக்கு 1 சதவீதம் என்ற வீதத்தில் குறைந்த வட்டிக்கு அளிக்கப்படும் கடன் வடிவில் இவ்வுதவி வழங்கப்படும். பங்குதாரர்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ள நிறுவனங்களைப் பொறுத்தவரையில் இந்த நிதி உதவியானது சேர்ந்துவரும் முன்னுரிமைப் பங்குகள் வடிவில் (Cumulative preference shares) வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உயரளவு உதவியாக, திட்டச் செலவில் 20 சதவீதம் அல்லது ரூ. 2 இலட்சம் இவற்றில் எது குறைவாக உள்ளதோ அத்தொகை வழங்கப்படும்.

எந்தெந்த திட்டங்களில் தொழில் முனைவர்களுக்கு அவர்களிடமிருந்து நிறுவனம் எதிர் பார்க்கிற இயல்பான அளவு தொகையை நிறைவு செய்யப் போதுமான நிதி வாயில்கள் இல்லையோ அந்தந்த திட்டங்கள்

மட்டும் நிதியுதவி பெறத் தகுதி உடையனவாகும். இத்திட்டம் 1978-79-ம் ஆண்டில் ஊக்கமும் ஆக்கமும் (Fillip) பெற்றது. இத்திட்டத்தின் கீழ் அளித்துள்ள உதவி பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | எண்ணிக்கை. | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1977-78 .. .. | .. | .. |
| 1978-79(மதிப்பீடுகள்). | 220 | 8.40 |

இத்திட்டத்தின்கீழ் பலனடைபவர்கள் சமூகத்தில் நலிவுற்ற பிரிவைச் சார்ந்தவர்களே ஆவார்கள். இத்திட்டத்தின்கீழ் அளித்த உதவியால் கிராமப் பகுதியில் உள்ளவர்களும் பிற்பட்ட பகுதியில் உள்ளவர்களும் அதிக அளவில் வேலை பெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

(2) மிக சிறிய மற்றும் சிறிய கடன்கள் (ரூ. 25,000-க்கு கீழ்) :

சமூகத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கிய பிரிவினர் பலனடைவதற்காக டி.அய்.அய்.சி. மிகச் சிறிய கடன்கள் வழங்கும் திட்டத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 5,000 முதல் ரூ. 10,000 வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டம் முக்கியமாக கிராமப் புறங்களில் தொழில்களை மேம்படுத்தி அதிகமான வேலை வாய்ப்புகளை உண்டாக்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன;

(அ) தற்போது அளிக்கும் குறைந்த பட்சத் தொகை ரூபாய் 5,000 (முன்பு இருந்த குறைந்த பட்சத் தொகை ரூபாய் 10,000) வட்டி வீதம் ஆண்டு ஒன்றுக்கு 9 சதவீதம்.

(இ) ரூபாய் 5,000-த்திலிருந்து ரூபாய் 10,000 வரை கடன் வசதி அளிக்கப்படும்.



(உ) இந்த கடனுதவி இயந்திரங்கள் வாங்குவதற்காக மட்டுமே கொடுக்கப்படும்.

(எ) மாவட்டத் தொழில் மையங்களுக்குள் அடங்கும் நிறுவனங்களுக்கே இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்படும்.

நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக இந்நிறுவனம் மிகச்சிறிய நிறுவனங்களுக்கு ரூபாய் 25,000 வரை கடனுதவி வழங்கியிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட உதவி பற்றிய விவரம் கீழ்வருமாறு:—

| | எண்ணிக்கை. | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1977–78 .. .. .. | 66 | 8.97 |
| 1978–79 .. .. .. | 300 | 45.00 |

மத்திய மாநில அரசின் தொழிற்கொள்கைகளுக்கிணங்க இந்நிறுவனம் சின்னஞ்சிறு நிறுவனங்களுக்கு கடன்கொடுப்பதற்காக அதிக அளவில் முக்கியத்துவம் கொடுக்கிறது. இத்திட்டத்தால் பலனடைகிறவர்கள் பெரும்பாலும் கிராமத்தில் உள்ளவர்களும் பிற்பட்ட வகுப்புகளைச் சார்ந்தவர்களும் ஆவார்கள். இந்த சின்னஞ்சிறு நிறுவனங்கள் குறிப்பாக கிராமப் பகுதிகளில் அதிகமான வேலை வாய்ப்பை உருவாக்கி வருகின்றன.

2. ஆட்டோ ரிக்ஷாக்கள்:—

டி. அய். அய். ஸி, வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வாங்கி தாங்களே சிறந்த வருமானத்துடன் சுகமாக தொழில் நடத்துவதற்கு தாராளமான நிதி உதவி அளிப்பதற்கு திட்டம் தயாரித்திருக்கின்றது. இந்நிறுவனம் புது ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்கு அதன் விலையில் 85 சதவீதம் வரை சலுகை வீத வட்டியுடன் கடனுதவி அளிக்கிறது.

உதவியின் முக்கிய நிபந்தனைகள் பின்வருமாறு:—

கடனுதவி.—வண்டி மற்றும் உபகரணங்களின் விலையில் 85 சதவீதம்.

திருப்பிக் கொடுக்க வேண்டிய காலம்.—மூன்றுமாத கடன் முடக்க காலம் உட்பட 48 மாதங்கள்.

வட்டிவீதம்.—ஆண்டொன்றுக்கு 9·5 சதவீதம்.

1978–79-ம் வருடத்தில் இந்த திட்டத்தின் கீழ் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் முதலிய இடங்களில் பெரும்பாலோர் இந்த தாராளமான உதவியைப் பெற்றிருக்கிறார்கள். இந்த உதவி பற்றிய முக்கிய விவரங்கள் பின்வருமாறு :—

| | | | எண்ணிக்கை. | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1977–78 | .. | .. | 6 | 0·64 |
| 1978–79 | .. | .. | 215 | 24·00 |

இத்திட்டத்தின் கீழ் அதிகமாகப் பலனடைந்தவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பகுதியினராவார்கள்.

போக்குவரத்து உரிமையாளர்கள் :

டி.அய்.அய்.சி. சரக்குப் பேருந்துகள், டிரக்குகள், டெம்போக்கள் ஆகியவைகள் வாங்குபவர்களுக்கு நிதியுதவி அளிக்க ஒரு சிறப்புத் திட்டம் வரைந்துள்ளது. ஒற்றை டிரக் வண்டி உரிமையாளர்களுக்கு நிதி உதவி அளிப்பதில் சிறப்பு சலுகை கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஒற்றை டிரக் வண்டி உரிமையாளர்கள் (தேசிய உரிமம் கொண்டவர்கள் உட்பட) :

கடனுதவி—புது வண்டியின் விலையில் 85 சதவிதம்.

வட்டி வீதம்—11·5 சதவீதம்.





மற்றவர்களுக்கு கடனுதவி புதுவண்டியின் விலையில் 75 சதவீதம்.

வட்டி வீதம்—12·5 சதவீதம்.

இத்திட்டத்தின் மூலம் கொடுத்த நிதி உதவியின் விவரங்கள் பின் வருமாறு :—

| | | | எண்ணிக்கை. | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1977–78 | .. | .. | 3 | 2·53 |
| 1978–79 | .. | .. | 25 | 26·00 |

மேற்கூறிய விபரங்களிலிருந்து இத்திட்டத்தின் கீழ் அளித்த நிதி உதவி உயர்ந்துள்ளது என்பதைக் காணலாம். பிற்பட்ட பகுதியில் உள்ள ஒற்றை டிரக் வண்டி உரிமையாளர்கள்தான் முக்கியமாகப் பயனடைந்திருக்கிறார்கள்.

மின்சக்தி உற்பத்தி இயந்திரங்கள்:

மின்சார வெட்டு காலங்களில் தொழில் பிரிவுகள் முழு உற்பத்தியை நிலை நிறுத்தும் பொருட்டு மின் சக்தி உற்பத்தி இயந்திரங்கள் வாங்கவும், டீசல் இயந்திரம் வாங்கவும் இத்திட்டத்தின்கீழ் கடனுதவியும் காலம் தாழ்த்தி தொகை கொடுப்பதற்காக உத்திரவாதமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தரும் நிதியுதவிகள் பற்றிய நிபந்தனைகள் பின்வருமாறு :—

கடனுதவி—ரூபாய் 5 இலட்சம் வரை-தகுதியின் பேரில் இது உயர்த்தப்படும்.

திருப்பிச் செலுத்தும் காலம்—மூன்றுவருடங்களிலிருந்து ஐந்து வருடம் வரை (கடன் முடக்க காலம் 6 மாதம்).

வட்டி விகிதம்.—9·5 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதம் (இது தொழில் மற்றும் தொழிற்சாலை இருக்கும் இடத்தையும் பொறுத்தது).

[1979 ஏப்ரல் 24

கடனுதவி வாங்குபவர் கொண்டு வரவேண்டிய நிதி.—சிறு தொழில்களுக்கு 15 சதவீதமும், நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு 25 சதவீதமும்.

இத்திட்டத்தின்கீழ் கொடுத்த கடனுதவிகள் பற்றிய விபரங்கள் பின் வருமாறு :—

| | எண்ணிக்கை. | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1977-78 .. .. | 20 | 35·25 |
| 1978-79 .. .. | 3 | 1·80 |

ஏப்ரல் 1978-லிருந்து பிப்ரவரி 1979 வரை தமிழ் நாட்டில் மின் வெட்டு இல்லாத காரணத்தால் இந்த கடனுதவி 1978-79ம் ஆண்டில் குறைந்துள்ளது.

## தொழில் நுட்ப வல்லுநர்கள்.

தகுதி வாய்ந்த தொழில் நுட்ப வல்லுநர்கள் தொழில் முனைவராகவும் போதிய அளவு அனுபவம் உடையவராகவும் குறிப்பிட்ட ஒரு துறையில் நிபுணத்துவம் உடையவராக இருந்தால் அவர்களுக்கு தாங்களே சிறந்த வருமானத்துடன் சுகமாக தொழில் நடத்த இத்திட்டத்தின்கீழ் கடனுதவி அளிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி பற்றிய விபரங்கள் பின்வருமாறு :—

(அ) கடனுதவி—ரூபாய் 3 இலட்சம் வரை.

(இ) வட்டிவீதம்—பிற்பட்ட பகுதிகளில் தொடங்கப் பெறும் தொழிற் பிரிவுகளுக்கு 8 சதவீதம்-மற்ற பகுதிகளில் தொடங்கப் பெறும் தொழில் பிரிவுகளுக்கு 9.5 சதவீதம்.



1979 ஏப்ரல் 24]

(உ) பாதுகாப்புத் தொகையாக கடன் வாங்குவோர் கொண்டு வரவேண்டிய நிதி.—ரூ. 2 இலட்சம் வரை ஒன்றும் இல்லை. ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மேல் 10 சதவீதம்.

(எ) திருப்பிக் கொடுக்கும் காலம்.—விண்ணப்பதாரரின் தகுதியின் பேரில் இரண்டு வருட முடக்க காலமுடன் 10 வருடங்கள் வரை.

இத்திட்டத்தில் வழங்கிய கடனுதவிகள் பற்றிய விபரம் பின்வருமாறு :—

| | எண்ணிக்கை. | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1977-78 .. ... | 35 | 39.82 |
| 1978-79 (மதிப்பீடு) | 30 | 35.00 |

## அந்நிய செலாவணி கடன்:—

தொழில் நுட்ப உத்திகள், இயந்திரங்கள், சாதனங்கள் முதலியவற்றை வெளிநாடுகளிடமிருந்து இறக்குமதி செய்ய டி.அய்.அய்.ஸி. உலக வங்கியின் மூலம் அந்நிய செலாவணி கடன் உதவி வழங்கும் நிறுவனமாக இம்மாநிலத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்தின் கீழ் உள்ள முக்கிய நிபந்தனைகள் பின் வருமாறு :—

(அ) கடனுதவி.—ரூபாய் 30.00 இலட்சங்கள்.

(ஆ) வட்டி வீதம்.—சிறு தொழில்கள் நுட்ப முனைவோர்கள் மற்றும் பின்தங்கிய பகுதியில் தொடங்கப் பெறும் தொழிற் பிரிவுகள் 11.5 சதவீதம். பிற்பகுதிகளில் நடுத்தர, தொழில் பிரிவுகளுக்கு 12 சதவீதம்.

## திருப்பிக் கொடுக்கும் காலம் :—

தகுதியின்பேரில் 10 வருடங்கள் வரை 2 வருடங்கள் முதல் 4 வருடங்கள் முடக்க காலத்துடன் இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளித்த விவரங்கள் பின்வருமாறு :—

| | எண்ணிக்கை. | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1977-78 .. .. | 19 | 234.85 |
| 1978-79 (மதிப்பீடுகள்). | 25 | 200.00 |

1978-79ல் கடன் கோரி வந்த விண்ணப்பங்கள் அதிகமாய் இருப்பினும், அளிக்கப்பட்ட கடன் தொகை குறைவாக உள்ளன. அதற்கு முக்கிய காரணம் பெரும்பாலான தொழில் முனைவோர்கள் பிற்பட்ட பகுதிகளில் குறைந்த வட்டியுடன் கிடைக்கும் ரூபாய் கடன்களை சுலபமாக பெற்றுக் கொண்டதும் மற்றும் வெளிப்படையான பொது உரிமத்தின் கீழ் (Open General licence) அந்நிய செலாவணி கிடைத்ததும் ஆகும்.

## இயந்திரம் பொருத்தப்பட்ட மீன் பிடிக்கும் படகுகள் வாங்க நிதி உதவி :—

இந்நிறுவனம் அண்மையில் மீன் பிடிக்கும் படகுகள், விசை படகுகள் வாங்க நிதி உதவி அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குறைந்த வட்டி வீதம், கடனை செலுத்த அவகாசம், ஈட்டுப் பொறுப்பு தொகையில் குறைந்த பங்குத் தொகை போன்ற சலுகைகளைக் கீழ்க் கண்டவாறு அளிக்கின்றது.

கடனுதவி ரூபாய் 5 இலட்சம் வரையில் தகுதியிருந்தால் மேலும் உயர்த்தப்படும். விசை படகுகள் வாங்கும் விலையில் 75 சதவீதம் நிதி உதவி அளித்தல், பிற்பட்ட பகுதிகளுக்கும் சிறு தொழில்களுக்கும் வட்டி வீதம் 9.5 சதவீதம், மற்ற பகுதிகளுக்கு 11 சதவீதம்.



1979-80 ஆம் ஆண்டில் இந்த கடனுதவி பலருக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1977-78, 1978-79 ஆம் ஆண்டில் தொழில்களுக்குக் கொடுக்கப்பட்ட பல சலுகைகளும் ஊக்கங்களும் பின்வருமாறு :—

## (அ) ஆட்டோ ரிக்ஷாவிற்கு வட்டி வீதம் :—

பொருளாதாரத்தில் பின் தங்கிய பகுதியினரால் வாங்கப்படும் ஆட்டோரிக்ஷா நிதி உதவிக்கு வசூலிக்கப்படும் வட்டி வீதத்தை 1978-79 ஆம் ஆண்டில் வருட வட்டி 11.5 சதவீதத்திலிருந்து 9.5 சதவீதமாக இந்நிறுவனம் குறைத்துள்ளது.

## (ஆ) தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆட்டோரிக்ஷா வாங்கும் போது கொடுக்க வேண்டிய குறைந்த நிதி :—

பொருளாதாரத்தில் பின் தங்கிய தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் ஆட்டோரிக்ஷா வாங்கும்போது அவர்கள் கொண்டு வரவேண்டிய நிதி 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## (இ) பின் தங்கிய பகுதிகளில் தொழில் ஆரம்பிக்கும் தொழில் வல்லுநர்களுக்கு வட்டி வீதத்தில் தள்ளுபடி:—

அறிவிக்கப்பட்ட பின்தங்கிய மாவட்டங்களில் சிறு தொழில் தொடங்குபவர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் தொழில் நுட்ப வல்லுநர்கள் தொழில் துவங்க ஊக்கமளிப்பதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் கடனின் வட்டி வீதம் 9.5 சதவீதத்திலிருந்து 8 சதவீதம் ஆக குறைக்கப்பட்டுள்ளது.

பொது வட்டி வீதம் :—

இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி உதவி பெறாமல் தொழில்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மீதான வட்டிவீதம் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 30 ஆம் நாள் முதல் பின்வருமாறு குறைக்கப்பட்டுள்ளது :—

| | 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 30 ஆம் நாளுக்கு முன்னால் விதிக்கப்பட்ட வட்டி விகிதம். முந்தைய விகிதம். | | 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 30 ஆம் நாளுக்கு பின் விதிக்கப்படும் வட்டி விகிதம். தற்போதைய விகிதம். | |
|---|---|---|---|---|
| | மறுநிதி உதவி பெறும் போது. | மறுநிதி உதவி பெறாத போது. | மறுநிதி உதவி பெறும் போது. | மறுநிதி உதவி பெறாத போது. |
| | (எண்ணிக்கை சதவீதத்தில்.) | | | |
| சிறுதொழில்கள்— | | | | |
| சின்னஞ் சிறு தொழில்கள். | | | | |
| (அ) பின்தங்கிய பகுதி .. .. .. | 9.5 | 11.5 | 9.5 | 9.5 |
| (ஆ) மற்ற பகுதிகள் .. .. .. | 11.0 | 13.0 | 11.0 | 11.0 |
| (இ) பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள். .. .. .. | 9.5 | 11.5 | 9.5 | 9.5 |
| (உ) மற்ற பகுதிகளில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள். .. .. .. .. | 9.5 | 11.5 | 8.0 | 8.0 |
| நடுத்தர தொழில்கள். | | | | |
| (அ) பின் தங்கிய பகுதி .. .. .. | 9.5 | 14.5 | 9.5 | 10.5 |
| (ஆ) மற்ற பகுதி .. .. .. .. | 12.5 | 14.5 | 12.5 | 13.5 |



மேற்கூறிய விவரங்களிலிருந்து இந்திய தொழில், வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி உதவி பெற்றாலும் பெறாவிட்டாலும் சிறு தொழில் நிறுவனங்களுக்கும் சின்னஞ் சிறு நிறுவனங்களுக்கும் வட்டி வீதம் ஒன்றாகவே உள்ளதைக் காணலாம்.

மாவட்ட வாரியாக உதவி பற்றிய ஆய்வு :—

1977–78, 1978–79 (மதிப்பீடுகள்) மாவட்டங்கள் வாரியாக அளித்த நிதி உதவி விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| பின்தங்கிய மாவட்டங்கள். | 1977–78 (மதிப்பீடு) எண்ணிக்கை | தொகை. | 1978–79 (மதிப்பீடு) எண்ணிக்கை. | தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1. தருமபுரி | 43 | 143.26 | 160 | 280.36 |
| 2. வட ஆற்காடு | 51 | 222.87 | 33 | 100.13 |
| 3. மதுரை .. | 16 | 29.16 | 120 | 103.26 |
| 4 இராமநாதபுரம் | 41 | 149.63 | 90 | 150.52 |
| 5. தென்னாற்காடு | 12 | 13.09 | 10 | 34.45 |
| 6. திருச்சிராப்பள்ளி | 10 | 39.46 | 6 | 9.55 |
| 7. கன்னியாகுமரி | 3 | 7.15 | 13 | 18.48 |
| 8. புதுக்கோட்டை | 12 | 38.27 | 14 | 7.16 |
| 9. தஞ்சாவூர் | 12 | 18.08 | 14 | 16.09 |
| | 200 | 660.97 | 460 | 720.00 |
| பாண்டிச்சேரி | 9 | 27.87 | .. | .. |
| | 209 | 688.84 | 460 | 720.00 |
| மற்ற மாவட்டங்கள்.— | | | | |
| 1. செங்கல்பட்டு .. | 62 | 217.56 | 27 | 123.64 |
| 2. கோயம்புத்தூர் .. | 25 | 127.65 | 35 | 132.68 |
| 3. சென்னை .. | 63 | 101.55 | 233 | 138.96 |
| 4. சேலம் .. .. | 13 | 45.99 | 26 | 26.35 |
| 5. நீலகிரி .. .. | 2 | 9.45 | 3 | 1.88 |
| 6. திருநெல்வேலி .. | 10 | 36.04 | 16 | 62.49 |
| | 175 | 538.24 | 340 | 486.00 |

பொருளாதாரத்தில் தாழ்ந்தவர்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டிருக்

கிறது என்பதை 1978–79ம் ஆண்டில் முந்தைய ஆண்டைவிட அதிகமான கடன் உதவி பின் தங்கிய பகுதிகளுக்கு அளிக்கப்பட்டிருப்பதிலிருந்து காணலாம். பின்தங்கிய மாவட்டங்களில் தருமபுரி, மதுரை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உதவிபெற்ற தொழிற்சாலை எண்ணிக்கைகளிலும் ஒப்பளிப்பு பெற்ற தொகைகளிலும் புள்ளிவிவரம் அதிகமாக இருக்கின்றது. பின் தங்கிய பகுதிகளில் 8 மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் பின்தங்கிய மாவட்டங்களுக்கு அளிக்கப்படும் கடனுதவி எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. நிதிஉதவிபெற்ற தொழில் பிரிவு எண்ணிக்கை மொத்தக் கடனுதவி வழங்கியது சிறு தொழில் மற்றும் சின்னஞ் சிறு தொழில் நிறுவனங்கள் ஒவ்வொரு பின் தங்கிய மற்றும் இதர மாவட்டங்களிலும் பெற்ற நிகர நிதி உதவிபற்றிய வரைபடம் இணைப்பு III-ல் கொடுக்கப் பட்டிருக்கிறது,

<u>கடன் வசூலித்தல்.</u>—இந்நிறுவனம் கொடுத்த கடன்களை வசூல் செய்வதில் நல்ல சாதனை புரிந்துள்ளது. அது பற்றிய விவரம் பின்வருமாறு:—

| | தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1977–78 .. .. .. | 692·32 |
| 1978–79 .. .. .. .. (மதிப்பீடுகள்). | 10,05·00 |

இந்நிறுவனம் வழக்கமாக தவணைக்கட்ட தவறியவர்கள் மீது விடாமுயற்சியுடன் நடவடிக்கைகள் எடுத்ததால் உதவி அளித்த தொழில் பிரிவுகளிடமிருந்து அதிக அளவு கடன் தொகைகளைத் திரும்ப வசூலித்துபெரும் சாதனை ஏற்படுத்தியுள்ளது. நிலுவைகள் அதிகமாவதைத் தடுக்கவும் கட்டுப் படுத்தி வைக்கவும் தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை சார்புப் பணியாளர்களைக் கொண்டு ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வழக்கமாக தவணை கட்டத் தவறியவர்களை தேர்ந்தெடுத்து அவர்கள் வரி தண்டல் சட்டப் (Revenue Recovery Act) படி திரும்பப் பெற



வேண்டிய தொகைகளைப் பெற நடவடிக்கை எடுத்து வருகிறது. அசலையும், வட்டியையும் திரும்ப வசூலிப்பதற்காக தவணை கட்டத் தவறிய நிறுவனங்களை தனிப் பிரிவைச் சார்ந்த பணியாளர்கள் அடிக்கடி சென்று ஆய்வு செய்கின்றனர்.

இந்நிறுவனத்தால் உதவி பெற்ற தொழிற் பிரிவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தாராளமான மனத்துடன் டி.அய்.அய்.ஸி. அணுகி திருப்பி செலுத்தும் காலத்திற்கு இடைவெளி கொடுத்தும், திருப்பிச் செலுத்தும் கால அட்டவணையைத் திருத்தம் செய்தும் கூடுதலான நிதி உதவி அளித்தும் இது போன்ற பல வழிகளில் பல தொழிற்பிரிவுகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வருகிறது. நடை முதல் மூலதனம் பற்றாக் குறை, விற்பனைச் சிக்கல், போதுமான அளவு மின் சக்தி, மூலப் பொருட்கள் கிடைக்காததால் ஏற்படும சிக்கல், மற்றும் நடைமுறைச் சிக்கல் போன்றவைகளால் பாதிக்கப்பட்ட பல தொழிற் பிரிவுகளுக்கு மேற்கூறிய சலுகைகளை அளித்து வருகிறது. வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட தொழிற்பிரிவுகளிடமிருந்து பணம் வசூல் செய்வதில் பல சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்நிறுவனம் சதர்ன் சுட்ச்கீர் லிமிடெட், மதுரை ஆயில் மற்றும் பர்டிலைசர் லிமிடெட்., இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சவுத் இந்தியா ஸ்டீல் ரோலிங் மில்ஸ், புஷ்பாஞ்சலி இண்டஸ்ரீஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் ஆல்கொஹால் மற்றும் கெமிக்கல் பிரைவேட் லிமிடெட் போன்ற நலிந்த மற்றும் மூடப்பட்ட தொழிற் பிரிவுகளுக்கு உதவி செய்து அவைகளைச் செயல்படும்படி செய்து இருக்கின்றது. மேலும் இந்நிறுவனம் தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய தொழில் நிதி உதவி நிறுவனம், இந்தியத் தொழில் கடன் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் போன்ற நிதி உதவி நிறுவனங்களுடன் மற்றும் வர்த்தக வங்கிகளுடனும் கூட்டாகச் சேர்ந்தோ அல்லது தனியாகவோ நலிந்த தொழிற் பிரிவுகள் திரும்பச் செயல்படுவிக்க வேண்டிய உதவிச் சலுகைகளைக் கொடுத்து வருகிறது. தொழில் பிரிவுகள் நீண்ட காலத்திற்கு நிலைத்து நின்று முன்னேற்றம் அடையும்

பொருட்டு வட்டி வீதத்தைக் குறைத்தல், தண்ட வட்டியைத் தள்ளுபடி செய்தல், நிலுவையில் உள்ள வட்டிகளுக்கு முடக்ககாலம் கொடுத்தல், முதல் செலுத்தும் கால அட்டவணையை திருத்தி அமைத்தல் போன்ற சலுகைகள் கொடுக்கப்படுகின்றன.

நிறுவனம் அமைப்பு:—மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள கிளை அலுவலகங்களை மண்டல அலுவலகங்களாக இந்நிறுவனம் மாற்றியுள்ளது. கடலூர், தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் கிளை அலுவலகங்களை அமைத்துள்ளது. தலைமை அலுவலகம் தவிர இந்நிறுவனம் கீழே கூறப்பட்டுள்ள ஏழு கிளை அலுவலகங்களையும், 2 மண்டல அலுவலகங்களையும் வைத்திருக்கின்றது.

தலைமை அலுவலகம் — சென்னை.

மண்டல அலுவலகம் — கோயம்புத்தூர், மதுரை.

கிளை அலுவலகங்கள் — கடலூர், தர்மபுரி, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர்.

டி.அய்.அய்.ஸி. எட்டு மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட தொழில் மையங்கள் செயல்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக புதிய மூன்று கிளை அலுவலகங்களைத் திறந்திருக்கிறது. புதிய தொழில்களை குறிப்பாக, பின்தங்கிய பகுதிகளில் தொடங்க டி.அய்.அய்.ஸி. தொழில் வணிகத் துறை, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு முன்னேற்ற நிறுவனம் ஆகியவைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. தேவை ஏற்படும்போது டி. அய். அய். ஸி. மேலும் பல அலுவலகங்களை மற்ற மாவட்ட தலைநகரில் தொடங்குவது பற்றி பரிசீலிக்கும்.



## இணைப்பு I.

1977–78, 1978–79–ம் ஆண்டில் டி.அய்.அய்.ஸி. யின் செயல்திறனின் பற்றிய புள்ளி விவர சுருக்கம்.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1977–78. | | 1978–79.* | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| மொத்த நிலைமை ( over all position )— | | | | |
| ஒப்பளிப்பு .. .. .. | 384 | 1,227·08 | 800 | 1,206·00 |
| வழங்கியது .. .. .. | 334 | 867·02 | 450 | 903·00 |
| நிலுவை .. .. .. | .. | 6,608·31 | .. | 6,900·00 |
| சிறு தொழில்களுக்கு நிதி உதவி— | | | | |
| ஒப்பளிப்பு .. .. .. | 329 | 578·70 | 750 | 650.00 |
| பின்தங்கிய பகுதிகளுக்கு நிதி உதவி— | | | | |
| ஒப்பளிப்பு .. .. .. | 209 | 688·84 | 460 | 720·00 |

| திறப்புத் திட்டங்கள்— (1) | 1977-78. எண்ணிக்கை. (2) | 1977-78. தொகை. (3) | 1978-79. எண்ணிக்கை. (4) | 1978-79. தொகை. (5) |
|---|---|---|---|---|
| சுலபக் கடன் .. .. | .. | .. | (ரூபாய் இலட்சத்தில்) 220 | 9·18 |
| மிகச் சிறிய கடன் (ரூ. 25,000–க்கு கீழே) .. .. | 66 | 8·91 | 300 | 45·00 |
| ஆட்டோ ரிக்ஷா .. .. | 6 | 0·64 | 215 | 24·00 |
| போக்குவரத்து உரிமையாளர்கள். | 3 | 2·53 | 25 | 26·00 |
| மின்சக்தி உற்பத்தி இயந்திரங்கள். | 20 | 35·25 | 3 | 1·80 |
| தொழில் நுட்ப வல்லுநர்கள் .. | 35 | 39·82 | 30 | 35·00 |
| அந்நிய செலாவணிக் கடன் .. .. | 19 | 234·85 | 25 | 200·00 |
| வசூல் நடவடிக்கைகள் .. .. | .. | 692·32 | .. | 1,005·00 |
| வரி விதிப்புக்கு முன்னால் ஆதாயம் .. .. | .. | 172·78 | .. | 200·00 |
| வேலைவாய்ப்பு உருவாக்கியது .. | 6,070 | .. | 13,400 | .. |

ஆட்டோரிக்ஷாவிற்கு கொடுத்த கடன் உதவி இதில் அடங்காது.

* மதிப்பீடுகள்.



## தொழில்களுக்கு நிதிவுதவி.

கடந்த இருபதாண்டுகளாக மத்திய அரசிலும் மாநில அரசிலும் தொழில்களுக்கு தேவையான நிதி உதவி அளிக்க அதிக அளவில் நிதி நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இந்நிறுவனங்களின் ஆய்வுரை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI):

மத்திய நிறுவனமான இவ்வங்கி பங்குத் தொகைகளுக்கு உத்திரவாதமளித்தல், தொழில் பிரிவுகளுக்கு காலக்கடன்களை வழங்குதல் ஆகியவற்றை மேற்கொண்டுள்ளது. எனினும் இவ் வங்கியின் முக்கிய நோக்கம் மாநில நிதி உதவி நிறுவனங்களின் அலுவல்களை ஒருங்கிணைத்து அவை கடன் வழங்க மறு நிதி உதவி செய்வதே ஆகும்.

இவ்வங்கி தொடங்கியது முதல் 1978 ஜூன் வரை தமிழ்நாட்டிலுள்ள தொழில் பிரிவுகளுக்கு நேரிடையாக ரூபாய் 32,648 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள தொழில்களுக்கு 1977–78-ம் ஆண்டு ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை ரூபாய் 6,002 இலட்சமாகும்.

### இந்தியத் தொழில் கடன் முதலீட்டு நிறுவனம் (ICICI):

இந்நிறுவனம் தனியார் துறையில் அமைக்கப்பட்ட மற்றுமொரு வளர்ச்சி வங்கியாகும். தொழில்களுக்கு வெளி நாடுகளிலிருந்து கடன்களைப் பெற்றுத் தருவது இதன் நோக்கமாகும். தவிர, பங்குத் தொகைகளுக்கும் கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கும் உத்திரவாதமளித்தல் போன்ற பிற உதவிகளையும் அளிக்கிறது. இந்நிறுவனம், இந்தியா முழுவதிலுமுள்ள தொழில்களுக்கு 1978-ல் அளித்த நிதி உதவி ரூபாய் 13,863 இலட்சமாகும். தமிழ்நாட்டிலுள்ள தொழில்களுக்கு அளித்த நிதி உதவி ரூபாய் 969 இலட்சமாகும் (தற்காலிகம்).

## இந்திய தொழில் நிதி உதவி (IFCI) :

நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் 1948-ம் ஆண்டு நிறுவப்பட்ட இந்நிறுவனம் பொதுவாகத் தொழில் பிரிவுகளுக்கும் குறிப்பாக நெசவாலைத் தொழிலுக்கும் சர்க்கரைத் தொழிலுக்கும் நீண்ட கால, நடுத்தரக் காலக் கடன்களை வழங்குகிறது. வட்டியில்லாப் பங்குகளுக்கும் முன்னுரிமைப் பங்குகளுக்கும் உத்திர வாதம் அளிக்கிறது. வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்குக் காலம் தாழ்த்தி தொகை செலுத்துவதற்கு உத்திரவாதமளிக்கிறது இந்நிறுவனம்.

இந்நிறுவனம் தமிழ்நாட்டில் 13 திட்டங்களுக்கு 1-7-78 முதல் 31-12-78 வரை மொத்தம் ரூபாய் 682·04 இலட்சம் நிதியுதவி (நிகரம்) அளித்தது.

## வங்கிகளின் பங்கு :

தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பதில் வங்கிகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. வர்த்தக வங்கிகளில் 1973 ஆம் ஆண்டில் டிசம்பரில் வைப்பீடாக (Deposits) இருந்த ரூபாய் 715·89 இலட்சம் தொகை. 1977 டிசம்பரில் 1,426·30 இலட்சமாக உயர்ந்துள்ளது. தமிழ் நாட்டிலுள்ள கூட்டுப் பங்கு நிறுவனங்களின் கடனீட்டுறுதிப் பத்திரங்களில் அட்டவணையில் கண்ட வணிக வங்கிகள் பங்குத் தொகையாகச் செய்துள்ள முதலீடு 1974 மார்ச்சில் ரூ. 264 லட்சமாயிருக்க 1978 மார்ச்சில் அது 367 லட்சமாயிருந்தது (தற்காலிகம்).

## தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி அளிக்கும் உதவி :

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி கூட்டுறவுத் துறையில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கும், குறிப்பாகத் தொழில் துறையில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும் கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் நிதி உதவி அளித்து வருகிறது,





கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கும் இவ்வங்கி வழங்கிய காலக் கடன்களையும், திருப்பிச் செலுத்தப்பட்ட தொகை குறித்த விவரங்களையும் இணைப்பு ஒன்றில் உள்ள அட்டவணையில் காணலாம். மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கும் கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி வழங்கிய நடைமுறை மூலதனக் கடன்கள் பற்றிய விவரங்களை இணைப்பு 2-ல் உள்ள அட்டவணையில் காணலாம்.

## இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் (LIC) :

தொழில் வளர்ச்சியில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்தின் பணி குறிப்பிடத்தக்கதாகும். மக்கள் பெரும்பான்மையோரின நீண்டகால சேமிப்புகளை ஒருங்கு திரட்டுவதோடு, கவனமாகவும் திட்டமிட்டும் முதலீடு செய்வதன் மூலம் இந்த நிதி வாயில்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி புரிகிறது.

1977-78-ம் ஆண்டில் தென் மாநிலங்களில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் பிரிமியமாக வசூலித்த வகையில் (மாநில வாரியாக) கிடைத்துள்ள வருவாய் விவரங்கள் கிழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| மாநிலம். | தொகை (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| தமிழ்நாடு .. .. .. .. | 56·09 |
| கருநாடகம் .. .. .. | 47·18 |
| கேரளா .. .. .. .. | 27·87 |
| ஆந்திரப் பிரதேசம் .. .. | 46·66 |

இந்நிறுவனம் 1977-78-ல் தமிழ்நாட்டில் தொழில்களில் செய்த மொத்த முதலீடும் நிகர முதலீடும் முறையே ரூபாய் 259·33 கோடியும், ரூபாய் 163.70 கோடியும் ஆகும்.

# இணைப்பு 1

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி, சென்னை,
செய்முறைச் சங்கங்களுக்கு தவணைக் கடன்.

| வரிசை எண்ணும் ஆலையின் பெயரும். | 31—12—1976 அன்று நிலுவைகள். | 1977-ல் கொடுக்கப் பட்ட தொகை. | 1977-ல் திருப்பிக் கொடுத்த தொகை. | 31—12—1977 அன்று நிலுவைகள். | 1978ல் கொடுக்கப் பட்ட தொகை. | 1978-ல் திருப்பிக் கொடுத்த தொகை. | 31—12—77 அன்று நிலுவைகள். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | | (ருபாய் இலட்சத்தில்.) | | | |
| கூட்டுறவு நூற்பாலைகள். | | | | | | | |
| 1. கன்னியாகுமரி .. .. | 11·00 | .. | 4·75 | 6·25 | 5·00 | 2·25 | 9·00 |
| 2. மதுரை .. .. .. | 26·00 | 5·00 | 2·50 | 28·50 | .. | 6·50 | 22·00 |
| 3. திருச்சிராப்பள்ளி .. .. | 7·00 | .. | .. | 7·00 | .. | 3·50 | 3·50 |
| 4. கோயம்புத்தூர் .. .. | 7·00 | .. | .. | 7·00 | 7·50 | 7·50 | 7·00 |
| 5. தஞ்சாவூர் .. .. .. | 28·50 | .. | .. | 28·50 | .. | 7·00 | 28·50 |
| 6. வட ஆற்காடு .. .. | 23·00 | .. | .. | 23·00 | .. | 5·00 | 18·00 |
| 7. தென் ஆற்காடு .. .. | 13·45 | .. | .. | 13·45 | .. | .. | 13·45 |
| 8. காஞ்சீபுரம் .. .. | 11·70 | .. | .. | 11,70 | .. | 0·50 | 11·20 |
| 9. தென் இந்தியா .. .. | 6·80 | .. | 1·20 | 5·60 | .. | 5·60 | .. |
| . சேலம் .. .. | 31·50 | 5·00 | 10·50 | 26·00 | .. | 0·50 | 25·50 |
| . திருச்செந்தூர் .. .. | 77·25 | .. | .. | 7·25 | .. | 1·00 | 6·25 |
| . திருவில்லிபுத்தூர் .. .. | 2·00 | .. | 1·00 | 1·00 | .. | 1·00 | .. |
| கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள். | | | | | | | |
| 1. சேலம் .. .. | 25·00 | .. | .. | 25·00 | .. | 25·00 | .. |
| 2. கள்ளக்குறிச்சி .. .. | .. | 50·00 | 40·00 | 10·00 | .. | .. | 10·00 |
| 3. ஆம்பூர் .. .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 4. அமராவதி .. .. .. | 30·00 | .. | .. | 30·00 | .. | .. | 30·00 |
| 5. மதுராந்தகம் .. .. | 50·00 | 50·00 | 10·00 | 90·00 | .. | 10·00 | 80·00 |
| 6. திருப்பத்தூர் (வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி). | .. | 25·00 | .. | 25·00 | .. | .. | 25·00 |
| 7. கள்ளக்குறிச்சி (தென்னாற்காடு மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக). | .. | 39·56 | .. | 39·50 | .. | .. | 39·50 |
| 8. மதுராந்தகம் (காஞ்சீபுரம் மத்திய கூட்டுறவு வங்கி). | .. | 4·50 | 4·50 | 10·00 | .. | 14·50 | .. |
| | 2,80·20 | 1,79·00 | 69·95 | 389·25 | 22·50 | 82·85 | 3,28·90 |

## இணைப்பு 2.

### தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, சென்னை.

### நடைமுறை மூலதன வசதி.

| வரிசை எண்ணும், மத்திய கூட்டுறவு வங்கிகளின் பெயர்களும். | ஆலைகளின் பெயர். | வரையறை 1977. | 31-12-77 அன்று நிலுவை. | வரையறை 1977. | 31-12-7' அன்று நிலுவை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| **நூற்பாலைகள் (மத்திய வங்கிகள் மூலமாக நிதி உதவி.)** | | | | | |
| 1. வேலூர் .. .. .. | வட ஆற்காடு .. .. .. | 65·00 | 50·25 | 75·00 | 21·70 |
| 2. சேலம் .. .. .. | சேலம் .. .. .. | 40·00 | .. | 50·00 | .. |
| 3. கோயம்புத்தூர் .. .. | கோயம்புத்தூர் .. .. .. | 10·00 | .. | .. | .. |
| 4. காஞ்சிபுரம் .. .. .. | காஞ்சிபுரம் .. .. .. | 60·00 | 49·71 | 60·00 | 42·65 |
| 5. தென்னாற்காடு .. .. | தென் ஆற்காடு .. .. .. | 35·00 | 33·28 | 40·00 | .. |
| 6. கும்பகோணம் .. .. | தஞ்சாவூர் .. .. .. | 35·00 | 32·09 | 35·00 | 2·00 |
| 7. திருச்சிராப்பள்ளி .. .. | திருச்சிராப்பள்ளி .. .. .. | 45·00 | 30·00 | 35·00 | 10·75 |
| 8. மதுரை .. .. .. | மதுரை .. .. .. | 50·00 | .. | 65·00 | 25·00 |
| 9. இராமநாதபுரம் .. .. | அருவல்லிபுத்தூர் .. .. | 40·00 | 32·00 | 60·00 | .. |
| 10. திருநெல்வேலி.. .. .. | தென் இந்தியா அண்டு திருச்செந்தூர். | 175·00 | 1,45·00 | 1,90·00 | 1,17·60 |
| 11. கன்னியாகுமரி .. .. | கன்னியாகுமரி .. .. .. | 55·00 | 26·89 | 45·00 | 31·00 |
| | | 6,10·00 | 4,00·12 | 6,55·00 | 2,50·70 |
| **சர்க்கரை ஆலைகள்.** | | | | | |
| 1. வேலூர் .. .. .. | ஆம்பூர், திருப்பத்தூர், வேலூர் .. | 3,60·00 | 1,29·19 | 9,60·00 | 4,48·51 |
| 2. சேலம் .. .. .. | சேலம் .. .. .. .. | 1,25·00 | .. | 3,50·00 | .. |
| 3. தர்மபுரி .. .. .. | தர்மபுரி .. .. .. | 80·00 | 60·75 | 1,50·00 | 42·00 |
| 4. காஞ்சிபுரம் .. .. .. | மதுராந்தகம் .. .. .. | 1,45·00 | 69·94 | 3,85·00 | 1,53·00 |
| 5. தென் ஆற்காடு .. .. | கள்ளக்குறிச்சி .. .. .. | 2,40·00 | 90·40 | 3,35·00 | 1,16·03 |
| 6. மதுரை .. .. .. | நேஷனல் .. .. .. .. | 95·00 | 42·00 | 2,00·00 | 1,47·55 |
| 7. கோயம்புத்தூர் .. .. | அமராவதி .. .. .. | .. | .. | 2,00·00 | .. |
| | | 10,45·00 | 3,92·19 | 25,80·00 | 890·8 |

## தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்:

## (சிப்காட்)

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (Sipcot) 1971 ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமான வரையறுக்கப்பட்ட தொருபொதுநிறுவனமாக, ரூபாய் ஐந்துகோடி ஒப்பிய மூலதனத்துடன் தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறுவதற்கும் விரிவடைவதற்கும், இதுவரை இம்மாநிலத்தில் பின் தங்கியுள்ள பகுதிகளை விரைந்து தொழில் மயமாக்குவதற்குமான முக்கியச் குறிக்கோள்களுக்காக அமைக்கப் பட்டதாகும், இந்நிறுவனம் 1972-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில், ஒருங்கமைந்த முன்னேற்றத் திட்டத்துடன் தனது பணிகளை தொடங்கியது. அதிலிருந்து ''சிப்காட்'' நிறுவனம் கடந்த ஏழு ஆண்டுகளாக நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறவும், விரிவடையவும் ஆன பணிகளைச் சிறந்த முறையில் செய்து வருகிறது. 1978 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரை இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின்கீழ் மொத்தம் ரூபாய் 2,784·21 இலட்சம் உதவி வழங்க ஒப்புதலளித்துள்ளதுடன்இதன் மூலம் ரூபாய் 185 கோடி மொத்த முதலீட்டை ஊக்குவித்து 33,000 பேருக்கு மேல் நேரடி வேலை வாய்ப்பை நல்கியுள்ளது இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமாகக் கருதக் கூடியது, ஊக்குவிக்கப்பட்ட முதலீட்டில் பெரும்பகுதி இம் மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளிலேயே பயன்படுத்தப்பட்டது என்பதாகும். இதுவரையில் அளிக்கப்பட்ட மொத்த உதவித் தொகையில் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 2,631·59 இலட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இம்மாநிலத்தின் பின் தங்கிய ஒன்பது மாவட்டங்களில் ஏதாவது ஒன்றிலோ, மற்ற வற்றிலோ ரூபாய் 167 கோடிக்கு மேலாக முதலீடு செய்வதை ஊக்குவிக்கும்.

2. சிப்காட்டின் முக்கிய நோக்கம், நடுத்தர, பெரிய தொழில்களுக்குத் திட்டமிடுதலும், முன்னேற செய்வதும், விரிவாக்குதலும் ஆகும். இந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பணிகள் பின்வருமாறு :—

(1) புதிய தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ;

(2) இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நியாய விலையிலும், சுலப தவணை முறையில் செலுத்தும் வகையிலும் மேம் படுத்தப்பட்ட நிலங்களை வழங்குவது ;





(3) இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது ;

(4) தொழில்களுக்கான ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்த, தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு துணையுதவிப் பணிகள் செய்தல்.

சிப்காட் செயல்படுத்தி வரும் பல்வேறு உதவித் திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### I. ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டம்.

### (i) தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித் தொகை.

ஆதாயமளிக்கும் தொழில் திட்டங்களைக் கண்டறிவதற்கான வாய்ப்புக் கூறுகள் பற்றிய ஆய்வுகளை 'சிப்காட்' தொழில் முனைவோர்க்கு சலுகை விலையில் அளிக்கிறது.

31–12–1978 வரையில், 35 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றில் 27 அறிக்கைகள் தொழில் முனைவோருக்கு வழங்கப் பட்டன. 1979-80 ஆண்டில் திருத்த உதவித் திட்டத்தின் கீழ் மேலும் ஆறு ஆய்வறிக்கைகள் தயார் செய்து வழங்க ரூபாய் 1.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ii) வட்டியில்லா விற்பனை வரிக்கடன்.

ஊக்கச் சலுகை தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமாய் வட்டியில்லா விற்பனை வரிக் கடனை மாநில அரசின் சார்பில், சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம்மாநிலத்தின் பின் தங்கிய 9 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர் தொழில் இணையத்திலும், மற்றும் குன்னத்தூர் வட்டாரத்திலும் (ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள நகரங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, நகர்ப் பகுதிகளை சுற்றிலும் 8 கிலோ மீட்டர் வரை உள்ள பகுதிகளைத் தவிர) தொடங்க இருக்கும் நடுத்தர அல்லது பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படும். இத்திட்டம் இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதி திட்டத்தின் கீழ், தற்போது செயல்படும் தொழில் நிறுவனம் கணிசமான அளவுக்கு தொழிலை விரிவுபடுத்தும் போதோ, வேறு பிரிவுகளாகப் பெருக்கும்போதோ இச்சலுகை கிடைக்கும்; அத் தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்துகொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவுக்கோ, விரிவுபடுத்தப்படும், அல்லது பல பிரிவுகளாகப் பெருக்கப் படும் திட்டத்தில் நிலையான இருப்புகளில் 25 சதவீதத்துக்கோ அல்லது ரூபாய் 15 இலட்சத்துக்கோ (எந்தத் தொகை

குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை அளிக்கப்படுகிறது. கடன் தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள் முடிந்த பிறகு 3 ஆண்டுத் தவணைகளில் சம தொகைகளாக வட்டி இன்றி, இந்தக் கடன் தொகைகளைத் திருப்பியடைக்க வேண்டும்.

2. மேலே கூறப்பட்ட பின் தங்கிய பகுதிகளில் நிறுவப்படும் புதிய தொழில்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் வரும். இத்திட்டத்தின்கீழ் நிறுவப்படவுள்ள புதிய தொழிற் சாலைகளுக்கு அவை உற்பத்திப் பணிகளை மேற்கொள்ளும் முதல் ஆறு ஆண்டு காலத்திற்கு ஆண்டு தோறும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன், முந்தைய ஆண்டில் செலுத்திய விற்பனை வரித் தொகைக்கு சமமானதாகவும், ஆனால் 16–9–78 முதல் புதிதாக நிறுவப்பட்ட தொழில் நிறுவனத்தின் நிலையான இருப்புகளில் 8 சதவிகித அளவுக்கோ அல்லது ரூபாய் 8 இலட்சத்திற்கோ எந்த தொகை குறைவோ அந்த தொகைக்கு அதிகப்படாமல் அளிக்கப்படும். இந்தக் கடன் கால் ஆண்டுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் வழங்கப்படும்; கடன் வழங்கப்பட்ட 9 ஆண்டுகளுக்குப் பிறகு ஆறு சம ஆண்டுத் தவணைகளில் வட்டி எதுவுமின்றி திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

3. இத்திட்டம் 16–9–1978 முதல் சிறு தொழில் பிரிவுகள் நடுத்தரத் தொழில் பிரிவுகளாக விரிவடைவதற்கு நீடிக்கப் பட்டிருக்கிறது. இப்பிரிவுகள் விரிவடைவதற்கும் முன்பாக சிறு தொழில் பிரிவுகளாக இருக்கும்பொழுது மூன்று ஆண்டுக் காலத்திற்குச் செலுத்திய விற்பனைவரித் தொகையை நிலையான இருப்புகளின் மதிப்பில் உயரளவு 25 சதவிதம் அல்லது ரூ. 7.5 இலட்சம் இவ்விரண்டில் எது குறைவோ அதைப் பெறுவதற்குத் தகுதி உடையவை. விற்பனை வரிக் கடன் ஆறு ஆண்டுகள் கழித்து, மூன்று சம ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். இத் திட்டம் 16–9–1978 முதல் சிறு தொழில்களுக்கும் நீடிக்கப்பட்டிருக்கிறது. சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டத்தை 'சிட்கோ' செயல்படுத்தி வருகின்றது.

4. வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் ஊக்கச் சலுகைத் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து 31–3–1979 தேதி வரை 66 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 5,54.52 இலட்சத்துக்கு ஒப்புதல் அளித்து அதில் ரூபாய் 5,16.51 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1978–79 ஆம் ஆண்டின் திட்டமிட்ட தொகை ரூபாய் 150 இலட்சத்தில் ரூபாய் 1,53.15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஒதுக்கீடு ஆண்டு 1979–80-ல் ரூபாய் 150 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



கடந்த ஏழு ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட தொகையும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.

| ஆண்டு. | முதல் பிரிவு. | இரண்டாம் பிரிவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 972–73 .. | 79.19 | .. | 79.19 |
| 973–74 .. | 57.72 | .. | 57.72 |
| 974–75 .. | 73.63 | .. | 73.63 |
| 975–76 .. | 2.10 | 0.72 | 2.82 |
| 976–77 .. | 49.13 | 29.72 | 78.85 |
| 977–78 .. | 52.60 | 58.88 | 111.48 |
| 978–79 .. | 59.29 | 91.54 | 150.83 |
| | 3,73.66 | 1,80.86 | 5,54.52 |

வழங்கப்பட்ட தொகை.

| ஆண்டு. | முதல் பிரிவு. | இரண்டாம் பிரிவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1972–73 .. | 12.91 | .. | 12.91 |
| 1973–74 .. | 31.56 | .. | 31.56 |
| 1974–75 .. | 91.48 | .. | 91.48 |
| 1975–76 .. | 57.60 | .. | 57·60 |
| 1976–77 .. | 48.32 | 30.26 | 78.58 |
| 1977–78 .. | 35.19 | 56.04 | 91.23 |
| 1978–79 .. | 56.80 | 96.35 | 153.15 |
| | 3,33.86 | 1,82.65 | 5,16.51 |

### (iii) நிலையான இருப்புக்கள் மீது உதவித் தொகை.

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் 'சிப்காட்டிடம்' ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 33 பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் எந்த ஒரு தொழிற் பிரிவு அதன் நிலையான முதலீட்டில் (நிலம், கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்) 15 சதவிதத்தை நேரடி மானியமாக அல்லது மானியமாகப் பெற தகுதியுள்ளதாகும். தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத முன்பு கூறப்பட்ட பகுதிகளுக்கு கருவிகள், தளவாடங்கள் மாற்றப்பட்ட போதிலும் அந்தத் தொழில் பிரிவுகள் கூட 15 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுடையனவாகும். ஒவ்வொரு தொழிற் பிரிவும் பெறத்தக்க மானியத்தின் உச்ச வரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக மானியத்தின் 85 சதவீதத் தொகையும், உற்பத்தி துவங்கிய பின்பு மீதித் தொகையும் வழங்கப்படும். இந் நிறுவனம் துவக்கத்திலிருந்து 31–12–1978 வரையில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 209,97 இலட்சம் 853 சிறு தொழில் நிறுவனங்களுக்கும் ரூபாய் 10,96.68 இட்சம் 176 நடுத்தர பெரிய தொழில் நிறுவனங்களுக்கும் உதவித் தொகையாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1978–79 ஆம் ஆண்டில் (20–3–79 வரை) முறையே ரூபாய் 1,95.53 இலட்சம் வழங்கப்பட்டது. ரூபாய் 2,29.64 இலட்சம் ஈட்டுத் தொகையாகத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. 31–12–1978 ஆம் நாள் நிலவரப்படி ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெற்ற ஈட்டுத் தொகை பற்றிய விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக மொத்தத் தொகையிலும், ஒவ்வொரு ஆண்டும் பெறும் ஈட்டுத் தொகையிலும் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடுதான் தொடர்ந்து முதல் இடம் வகித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் மொத்தத் தொகையில், தமிழ்நாட்டின் சதவீதப் பங்கும் கூடுதலாகி உள்ளது. 31–3–1976-ல் 14·6 சதவீதத்திலிருந்து, 31–3–1978-ல் 16.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. இறுதியாக 31–1–1979 அன்று நிலவரப்படி மத்திய அரசிடமிருந்து இத்திட்டத்தின்கீழ் பெற்ற மொத்த ஈட்டுத்தொகையைப் பார்க்கும் போது, தமிழ்நாடுதான் முதல் இடம் வகிக்கிறது.

1978–79-ல் ரூபாய் 229·64 இலட்சம் ஈட்டுத்தொகையாக கேட்புரிமை செய்து பெறப்பட்டது. மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் மூலதன உதவித் தொகை தற்போது 33



தாலுகாக்களில் அளிக்கப்பட்டுவருகின்றது. இத்துடன் மேலும் பல பின் தங்கிய தாலுகாக்களில் மாநில அரசு தனது பொறுப்பிலிருந்து சிறு தொழில் நடத்த முனைவோர்களுக்கு மூலதன மானியம் அளிக்க முடிவு செய்துள்ளது.

## II. நேரடி நிதி உதவி:

### 1. தவணைக்கடன்:

(அ) கடந்த ஏழு ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக் கடன் மற்றும் வழங்கிய தவணைக் கடன் உதவி அடியிற் கண்ட அட்டவணைகளில் காணலாம்:—

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப்பட்டது. | ரத்து செய்யப்பட்டது. | நிகர செல்லுபடியாகத்தக்கது. | வழங்கப்பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1972–73 | 1,08.50 | | 1,08.50 | 26.11 |
| 1973–74 .. | 1,97.89 | 7.55 | 1,90.34 | 33.90 |
| 1974–75 .. | 1,91.28 | 7.99 | 1,83.29 | 1,17.61 |
| 1975–76 .. | 27.08 | 7:25 | 19.83 | 1,62.87 |
| 1976–77 .. | 1,40.75 | 47.25 | 93.50 | 82.15 |
| 1977–78 .. | 3,40.55 | 69.48 | 2,71.07 | 1,23.82 |
| 1978–79 .. | 2,33.96 | 10.08 | 2,23.88 | 1,41.95 |
| | 12,40.01 | 1,40.60 | 10,90.41 | 6,88.41 |

(ஆ) 1975–76 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 1976–77 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்பட்ட நிகர ஒப்புதல் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது என மேலே உள்ள அட்டவணையிலிருந்து வெளிப்படையாகத் தெரிய வருகிறது. இவ்வகையில், மறுநிதி உதவி அளித்த இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (ID/BI) உதவி, பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். ஏழாண்டுக் காலத்தில் தவணைக் கடன் வழங்கப்பட்ட 76 தொழில் நிறுவனங்களில், 45 தொழில் நிறுவனங்கள் 31-12-1978-க்கு முன்பே தங்களின் உற்பத்தியைத் துவங்கிவிட்டன. நிதியுதவியைப் பெற்ற ஏனைய தொழில் நிறுவனங்கள், பல்வேறு செயல் நிலைகளில் உள்ளன. அவை அடுத்த ஆண்டில் உற்பத்தியைத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) 1978–79 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில், அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட தவணைக் கடன்கள் முறையே ரூ. 98.75 இலட்சமும், ரூ. 21.17 இலட்சமும் ஆகும். எனினும், 1978–79-இன் இரண்டாவது அரையாண்டில் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட தவணைக் கடன்கள் முறையே ரூ. 135.21 இலட்சமும், ரூ. 120.78 இலட்சமும் என்ற கணிசமான அளவுக்கு உயர்ந்து செயல் முறையில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. மேலும் 1979 ஆம் ஆங்கில ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மாதம் நான்கு விண்ணப்பங்கள் தவணைக் கடன் கோரிவந்திருக்க, 1978 ஆம் ஆண்டில் மாதம் சராசரியாக இரண்டு விண்ணப்பங்கள் தான் தவணைக் கடன் கோரி வந்துள்ளன. முடிவுறாமலுள்ள இனங்களுக்கு சாத்தியமாக இருக்கக்கூடிய அனுமதி சுமார் ரூ. 2 கோடி அளவுக்கு இருக்கும்.

(ஈ) 1977–78-ல் ரூபாய் 123.82 இலட்சம் தவணைக் கடன் வழங்கப்பட்டிருக்க, 1978–79-ல் வழங்கப்படும் தவணைக் கடனின் அளவு ரூபாய் 141·95 இலட்சமாகும், 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் 230 இலட்சம் அளவுக்கு தவணைக் கடன் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தவணைக் கடன் கோரி வரும் அதிகமான விண்ணப்பங்களையும், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவித் திட்டத்தின் கீழ், 'சிப்காட்' நிறுவனம் அனுமதி வழங்கும் அளவினை ரூபாய் 30 இலட்சத்திலிருந்து ரூபாய் 60 இலட்சம் ஆக அதிகரிக்கப்பட்டதையும் கருத்தில் கொண்டு பார்த்து 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் 350 இலட்சம் வரையிலான தவணைக் கடன்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் 20–2–1979 ஆம் நாளிட்ட அறிவிப்பையொட்டி 'சிப்காட்' நிறுவனம் முன்பு ரூ. 150.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டுத் தொகையைக் கொண்ட விண்ணப்பங்களை பரிசீலனை செய்யலாமென்ற கட்டுப்பாடு ஒன்றிருக்க, தற்போது



. 200.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டுத் தொகையைக் கொண்ட (வி)ண்ணப்பங்களை பரிசீலனை செய்து, அத்தகைய ஒவ்வொரு (இ)னத்திலும் ரூ. 60.00 இலட்சம் வரையிலான தவணைக் கடன் (க)ளுக்கு அனுமதி வழங்கலாம்.

## (ii) உத்திரவாதமளித்தல்/நேரடி சந்தா :

பொறுப்புகளுக்கு உத்திரவாதம் அளித்ததன் விளைவாக (அ)ல்லது நேரடி சந்தா வாயிலாக கடந்த ஏழாண்டுகளில் அனுமதிக்(க)ப்பட்ட உத்திரவாத வசதிகள், பொது மக்களுக்கு வழங்கப்(ப)ட்டவை, எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகள் குறித்த (வி)வரங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | பொது மக்களுக்கு வழங்கப்பட்டவை. | நேரடி சந்தாவுக்கு கோரிக்கை பங்குகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1972–73 .. | 23.20 | .. | .. | ... |
| 1973–74 .. | 24.30 | .. | 33.20 | .. |
| 1974–75 .. | 5.00 | .. | 2.50 | 0.55 |
| 1975–76 .. | 16.50 | .. | 3.00 | 1.29 |
| 1976–77 .. | 11.00 | 18.50 | 2.00 | 2.00 |
| 1977–78 .. | 16.00 | 13.30 | 1.50 | 1.13 |
| 1978–79 .. | 5.00 | .. | 2.00 | 2.38 |
| மொத்தம் | 101.00 | 31.80 | 44.20 | 7.35 |

1978–79–ன் கடைசி காலாண்டில், மேற்கொண்டும் ரூபாய் 10 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்படலாம். 1979–80–ல், ரூபாய் 25 இலட்சம் அளவுக்கு உத்திரவாதம் அளிக்க, நேரடிச் சந்தா அனுமதிக்கக் கருதப்படுகிறது.

(iii) இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டம்.

ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டத்தின் கீழ், தங்களது முதல், நடுத்தர தொழிலை நிறுவும் தொழில் நுட்ப தொழில் அனுபவ தொழில் முனைவர்களுக்கு, இந்திய தொழில் வளர்ச்சி களின் முதல் நடுத்தர தொழில் திட்டத்திற்கு வங்கியானது, திட்டச் செலவில் 10 சதவீதம் வரையில் நிதியுதவி அளிக்கிறது.

சிப்காட் நிறுவனம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஏஜெண்ட் என்ற முறையில் 31–3–1979 அன்று ரூபாய் 13.05 இலட்சம் அளவுள்ள தொகையை நான்கு தொழில் நிறுவனங் களுக்கு வழங்க ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1979–80–ல் மேற்கொண்டும் ஐந்து தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 15 இலட்சம் அளவுக்கு நிதியுதவி சிப்காட் நிறுவனத்திடமிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



## III. வளர்ச்சி மையங்கள்.

| தொடர் எண்ணும், வளர்ச்சி மையங்களின் அமைப்பிடமும். | 31–12–1978 வரை முன்னேற்றம். | | ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம். | |
|---|---|---|---|---|
| | மேம்படுத்தப் பட்ட பரப்பு. | மூலதனச் செலவு. | மேம்படுத்தப் பட்ட பரப்பு. | மூலதனச் செலவு. |
| | ஏக்கரில். | ரூ. இலட்சத் தில். | ஏக்கரில். | ரூ. இலட் சத்தில். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. இராணிப்பேட்டை .. .. | 716.50 | 114.00<br>20.00(வீ) | 20.00 | .. |
| 2. ஒசூர் .. .. .. | 872.00 | 117.50<br>7.58(வீ) | 160.00 | 19.00 |
| 3. தூத்துக்குடி .. .. .. | .. | .. | 600.00 | 140.00 |
| 4. புதுக்கோட்டை மாவட்டம் .. | .. | .. | 600.00 | 190.00 |
| 5. இராமநாதபுரம் மாவட்டம் .. | .. | .. | 600.00 | 190.00 |

குறிப்பு—(வீ)—வீட்டு வசதி.

## 1. இராணிப்பேட்டை

அரசு 716.5 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி அதை சிப்காட் நிறுவனத்திற்கு கொடுத்து ஒதுக்கப்படுவதற்காகவிருந்த நிலப்பகுதி 551.23 ஏக்கர் ஆகும். அதில் 85 மனைகள் இருந்தன. அதில் 404.039 ஏக்கர் பரப்பளவு கொண்ட 47 மனைகள் தொழில் முனைவர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்டதில் 27 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தியை துவங்கி விட்டன. மிஞ்சிய 16 தொழில் நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன. ஏற்கனவே மேம்படுத்தப்பட்ட எஞ்சிய 147.171 ஏக்கர் நிலப் பகுதி விரைவில் ஒதுக்கப்படுமெனத் தோன்றுகிறது.

## 2. ஓசூர்.

1,112 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் அரசினால் கைப்பற்றப்பட்டு சிப்காட்டுக்குக் கொடுக்கப்பட்டது. 920.04 ஏக்கரில் அமைந்துள்ள 151 மனைகள் ஒதுக்கீடு செய்வதற்காக கிடைத்துள்ளன. அதில் 457 ஏக்கர் பரப்புள்ள 75 மனைகள் தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 6 பிரிவுகள் உற்பத்தியைத் துவங்கிவிட்டன. 11 பிரிவுகள் கட்டுமான வேலைகளில் உள்ளன. மீதமுள்ள 514 ஏக்கர் பரப்புள்ள விற்பனை நிலத்தில் 328 ஏக்கர் நிலத்திற்கு தொழில் மனைகள் ஒதுக்கக் கோரி 22 விண்ணப்பங்கள் தற்போது சிப்காட்டின் பரிசீலனையில் உள்ளன. இதனால் மீதமுள்ள நிலத்தை ஒதுக்கீடு செய்ய சிப்காட்டுக்கு வருங்காலத்தில் எந்தவிதத் தடங்கலும் இருக்காது.

## ஏனைய வளர்ச்சி நிலையங்கள்.

புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 1979–80 ஆம் ஆண்டில் புதிய வளர்ச்சி நிலையங்களைத் தொடங்க சிப்காட் உத்தேசித்துள்ளது. புள்ளி விவரங்களைச் சேகரித்தல், இட அமைப்பை உறுதி செய்தல், வளர்ச்சியடைய வேண்டிய திட்டத்தின் வகை குறித்து முடிவு செய்தல் முதலியவற்றிற்கு தேவையான பணிகள் ஏற்கனவே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## மாநில அரசின் நிதி உதவி

1978–79 ஆம் ஆண்டில் பங்கு மூலதனமாக ரூபாய் 115 இலட்சமும், வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டத்திற்கு கடனாக ரூபாய் 150 இலட்சமும் மாநில அரசு சிப்காட்டிற்கு வழங்கியது. 1979–80 ஆம் ஆண்டில் பங்கு மூலதனத்திற்கு ரூபாய் 25 இலட்சமும், தவணைக் கடனாக ரூபாய் 50 இலட்சமும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டத்திற்கு ரூபாய் 125 இலட்சமும் மாநில அரசு சிப்காட்டுக்கு வழங்கும்.



## தாய விரயக் கணக்குகள்.

31–3–1977 வரை சிப்காட் ரூபாய் 4.88 இலட்சம் (மொத்தம்) ழப்பு அடைந்தது. 1977–78-ல் இந் நிறுவனம் ரூபாய் 5.87 லட்சம் நிகர இலாபத்தை ஈட்டியது. இவ்வாறு மொத்த ழப்பையும் சரிக்கட்டியதை விட அதிகமாக ஈட்டப்பட்டது. 978–79 ஆம் நிதியாண்டில் அனைத்து செலவினங்கள் நேய்மானம் ஆகியவைகளுக்கு வழங்கியபின் மதிப்பிடப்பட்ட நிகர ஆதாயம் ரூபாய் 7.5 இலட்சம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திறமையான நிதி நிர்வாகம், கட்டுப்பாடு ஆகியவைகளினால் இந்நிறுவனத்தின் நிதி நிலைமைகளில் இந்த மேம்பாடு ஏற்பட்டது. 31–3–1978 வரை அரசிடமிருந்து கடனாகப் பெறப்பட்ட தொகை ரூபாய் 336 இலட்சத்தில், 1978–79 ஆம் ஆண்டில் ரூபாய் 177 இலட்சம் அரசுக்கு திருப்பிச் செலுத்தப்பட்டது என்பதை முக்கியமாக இங்கு குறிப்பிடலாம்.

இணைப்பு 2-ல் கீழ்க்காணும் விவரங்கள் ஒவ்வொரு திட்டத்தின் கீழ் கொண்டுள்ள நிதி உதவியைக் குறிப்பிடுகின்றன:—

(1) 1978–79-ல் ஏற்பட்ட வளர்ச்சி (ஒப்புதல் அளிக்கப்பட்டு வழங்கப்பட்டது).

(2) 1979–80 ஆம் ஆண்டுக்கான திட்ட இலக்கும் (ஒப்புதல் ளிக்கப்பட்டது—வழங்கப்பட்டது).

இணைப்பு 3–ல் கீழ்க்கண்ட விவரங்கள் வரைபடங்கள் காட்டுக்கப்பட்டுள்ளன :—

அ. தவணைக் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டவை—வழங்கப் பட்டவை—நிலுவைகள்.

ஆ. நிதி உதவி வழங்கும் அளவும் முறையும்.

இ. நிதி உதவி வழங்கப்படும் பலவகை தொழில்கள்.

உ. நிதி உதவி செய்யப்பட்ட மூலதனம் வேலை வாய்ப்புத் திறன்.

## இணைப்பு I.

### மத்திய மூலதன உதவித் தொகை.
### திட்டம் 1971.

A. ஒப்புதல் அளிக்கப்பட்டவை :

(ரூபாய் இலட்சத்தில்).

| ஆண்டு. | நடுத்தர பெரிய தொழில்கள். | | சிறு தொழில்கள். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|
| | எண். | தொகை. | எண். | தொகை. | எண். | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 31–3–76 வரை .. | 66 | 419.79 | 359 | 79.63 | 425 | 499.42 |
| 1976–77 — | | | | | | |
| 1–4–76 முதல் 31–3–77. .. | 44 | 281.76 | 156 | 38.83 | 200 | 320.59 |
| 1977–78 — | | | | | | |
| 1–4–77 முதல் 31–3–78 | 44 | 274.93 | 233 | 57.34 | 277 | 332.27 |
| 1978–79 — | | | | | | |
| 1–4–78 முதல் 31–12–78 | 22 | 120.20 | 105 | 34.17 | 1·27 | 154.37 |
| துவக்கத்திலிருந்து 31–12–78 வரை ஆக மொத்தம். | 176 | 1,096.68 | 853 | 209.97 | 1,029 | 1,306.65 |

B. வழங்கப்பட்டவை—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 31–3–78 வரை .. | .. | 620.60 | .. | 112.48 | .. | 733.08 |
| 1978–79 — | | | | | | |
| (1–4–78 —31–12–78) | .. | 108.64 | .. | 11.19 | .. | 126.88 |
| துவக்கத்திலிருந்து 31–12–78 வரை ஆக மொத்தம். | .. | 729.24 | .. | 130.67 | .. | 859.91 |

C. மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டவை:—

| ஆண்டு. | சிப்காட். | மொத்தம். |
|---|---|---|
| 31–3–76 வரை .. .. .. .. .. .. | 116.06 | 136.08 |
| 1976–77 — | | |
| (1–4–76—31–3–77) .. .. .. .. .. | 211.44 | 229.72 |
| 1977–78 — (1–4–77 —31–3–78) .. .. .. .. .. | 176.50 | 247.79 |
| 1978–79 — (1–4–78—31—12–78) .. .. .. .. .. | 97.61 | 162.32 |
| | 601.61 | 775.91 |

## இணைப்பு II

**1978–79 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வளர்ச்சியின் சுருக்கமும் 1979–80 ஆம் ஆண்டின் திட்ட இலக்கும்.**

| தொடர் எண்ணும், திட்டமும். (1) | 1978–79 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வளர்ச்சி. (2) | 1979-80 ஆம் ஆண்டின் திட்ட இலக்கு. (3) |
|---|---|---|
| | (ரூபாய் | இலட்சத்தில்) |
| 1. தவணைக் கடன்— | | |
| 1.1. ஒப்புதல் அளிக்கப்பட்டவை | 233.96 | 350.00 |
| 1.2. வழங்கப்பட்டவை | 141.95 | 230.00 |
| 2. பங்குகளுக்கு சந்தா/நேரடி சந்தா | 5.00 | 25.00 |
| 3. வட்டியில்லா விற்பனைவரி கடன்— | | |
| 3.1. ஒப்புதல் அளிக்கப்பட்டவை | 150.83 | 150.00 |
| 3.2. வழங்கப்பட்டவை | 153.15 | 150.00 |
| 4. மத்திய உதவித் தொகை— | | |
| 4.1. ஒப்புதல் அளிக்கப்பட்டவை | 346.91 | 250.00 |
| 4.2. மொத்தம் திருப்பித்தரப்பட்டவை | 229.64 | 250.00 |
| 5. ஆரம்ப மூலதனம்— | | |
| 5.1. ஒப்புதல் அளிக்கப்பட்டவை | 13.05 | .. |
| 5.2. வழங்கப்பட்டவை | 4.00 | .. |



### சர்க்கரைத்தொழில்.

சர்க்கரைத் தொழில் வேளாண்மையை மையமாகக் கொண்ட ஒரு தொழிலாக இருப்பதால் உழவர்களின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ் நாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த இத்தொழில் வளர்ச்சி கடந்த இருபதாண்டுகளில் சிறந்ததாகவே இருந்து வந்துள்ளது. 1950 முதல் 1960 வரையிலான பத்தாண்டுக் காலத்தில் சர்க்கரை உற்பத்தித் துறையில் கூட்டுறவியக்கம் அடியெடுத்து வைத்தது. அடுத்த பத்தாண்டுக் காலத்தில் இது தொடர்ந்து வளர்ச்சி பெறலாயிற்று. சர்க்கரை உற்பத்தித் தொழில் குறிப்பாகக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உரிய முறையில் வளர்ந்து செயல்படுவதைத் தொடர்ந்து கவனித்து வரும் பொருட்டு தமிழ் நாடு அரசு, சர்க்கரைத் தொழில் இயக்குநர் அலுவலகத்தை 1969 அக்டோபரில் தோற்றுவித்தது. சர்க்கரைத் தொழில் தொடர்பான அனைத்துப் பணிகளையும் கவனிப்பது இந்த இயக்குநர் அலுவலகத்தின் பணியாகும். இந்த இயக்குநர் அலுவலகம், குறிப்பாகக் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகள் ஒருங்கிணைந்து செயல்படச் செய்வது மேற்பார்வையிடுவது ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது. இதற்காக, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அனைத்தின் தொடர்பாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருடைய அதிகாரங்கள் அனைத்தும் சர்க்கரைத் தொழில் இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளன.

2. இந்த ஆய்வில், 1977–78 ஆம் சர்க்கரைத் தொழில் ஆண்டின் (1977 அக்டோபர் முதல் 1978 செப்டம்பர் வரை) சாதனைகள் முந்திய ஆண்டான 1976–77-ல் நிகழ்த்தப்பெற்ற சாதனைகளுடன் ஒப்பிட்டு விளக்கப்படுகின்றன. மேலும், 1978–79 ஆம் சர்க்கரைத் தொழில் ஆண்டின் திட்டங்கள் பற்றிய சுருக்கக் குறிப்பும் தரப்படுகின்றது. ஆய்வுக்குரிய ஆண்டில் தமிழ்நாட்டில் 21 சர்க்கரை ஆலைகள் இருந்தன; அவற்றுள் 10 ஆலைகள் கூட்டு வாணிப ஆலைகளைச் சேர்ந்தவை ; 9 ஆலைகள் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஆகும். எஞ்சிய இரண்டும் பொதுத் துறையைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகள் ஆகும். இம்மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறன், நிறுவிய நிலை உற்பத்தித் திறன், ஆகியவை குறித்த விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**கரும்பு பயிரிடல் :**

3. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாடு சர்க்கரைத் தொழில், தொழில் துறையில் புதிதுதான் என்றாலும் இத்துறையில் இம்மாநிலம் படிப்படியாக முன்னேறி வருகின்றது. இந்தியாவில் பெருமளவில் சர்க்கரை உற்பத்தி செய்கிற

மாநிலங்களுடன் ஒப்பிட, தமிழ்நாட்டின் சாதனை ஊக்க மளிப்பதாக உள்ளது தமிழ்நாட்டில் கரும்பு பயிரிடப்படும் பரப்பளவைப் பொறுத்தவரை, ஆண்டு தோறும் அதே அள விற்குக் குறையாமல் பார்த்துக் கொள்வது மட்டுமின்றி, சில ஆண்டுகளில் பரப்பளவில் அதிகமாகவும் பயிரிப்படுகிறது. தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் சிறந்த சாதனையைப் புரிந்திட உதவிய அம்சங்கள் வருமாறு : இந்திய அரசு வரை யறுத்த சட்டபூர்வமான விலைக்குச் சற்றுக் கூடுதலாகவே அமைந்த விலை கரும்பு பயிரிடுவோருக்கு உடனுக்குடன் வழங்கப்படுகிறது ; சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு பயிரிடு வோருக்குமிடையே பொதுவாக நல்லுறவு நிலவுகிறது; கரும்பு பயிரிடுவதற்காக, ஆலைகள், கணிசமான ஊக்க உதவித் தொகைகள் வழங்குகின்றன.



தமிழ்நாட்டில் கரும்பு பயிரிட்ட பரப்பு, கரும்பு உற்பத்தி, சர்க்கரை ஆலைகள் பிழிந்த கரும்பு அளவு ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | கரும்பு பயிரிட்ட பரப்பு. (1,000 ஹெக்டேரில்). | விளைவித்த கரும்பின் அளவு. | பிழிந்த கரும்பின் அளவு. | மொத்த உற்பத்தியில் ஆலைகள் பிழிந்த அளவு சதவீதம். | ஹெக்டருக்கு சராசரி விளைச்சல் (டன்களில்.) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (1,000 டன்களில்.) | | | |
| 1968—69 .. | 172 | 14,024 | 4,169 | 30 | 81.53 |
| 1969—70 .. | 139 | 10,916 | 3,656 | 34 | 78.53 |
| 1970—71 .. | 114 | 9,391 | 3,326 | 35 | 82.38 |
| 1971—72 .. | 117 | 10,357 | 3,236 | 31 | 88.52 |
| 1972—73 .. | 144 | 12,113 | 4,008 | 33 | 84.12 |
| 1973—74 .. | 186 | 18,183 | 5,287 | 29 | 97.76 |
| 1974—75 .. | 160 | 14,593 | 4,556 | 31 | 91.21 |
| 1975—76 .. | 128 | 11,936 | 1,969 | 17 | 93.25 |
| 1976—77 .. | 155 | 14,245 | 3,791 | 27 | 92.21 |
| 1977—78* .. | 164 | 17,160 | 5,466 | 32 | 104.57 |

*அனுமானப் புள்ளி விவரம்.

**சாதனை :**

4. தமிழ்நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முழுவதும், குறிப்பாக 1973–74-ம் ஆண்டில் சர்க்கரைத் தொழில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்தது. ஆனால், மாநிலம் முழுவதும் முன்னொரு போதும் கண்டிராத அளவு வறட்சி நிலவிய காரணத்தினால் 1975-76, 1976-77-ம் ஆண்டுகளில் இத் தொழில் பின்னடைவு கண்டது. 1974-75-ம் ஆண்டில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பிழிந்த கரும்பளவு 88·15 சதவீதமாகும். இந்த சதவீதம், 1975-76-ல் 44·02 சதவீதமாகக் குறைந்தது. 1976-77-ல் கரும்பு வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து எடுக்கப்பட்ட ஒருமித்த முயற்சி காரணமாக அரவைத்திறன் கணிசமான அளவு (70·83 சதவீதம்) முன்னேற்றமடைந்தது. ஆய்விலுள்ள ஆண்டுக் காலத்தில் கரும்பு ஆலைகள் பிழிந்த கரும்பளவு சதவீதம் உயரளவான 89 சதவீதத்தை எட்டியது. 1975-76 முதல் 1977-78 வரையிலான ஆண்டுக் காலத்தில் சர்க்கரை ஆலைகள் புரிந்த சாதனைகளை விளக்கும் விவரங்களை இணைப்பு II-ல் காணலாம்.

**கரும்பு விலை :**

5. இந்திய அரசு சர்க்கரைச் சத்து 8·5 சதவீதம் உள்ள அல்லது அதற்குக் குறைவான சர்க்கரைச் சத்துள்ள கரும்பின் குறைந்த அளவு விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 8·50 என்று நிர்ணயித்தது. 1977-78-ம் ஆண்டிற்கான கரும்புப் பயிர் விளையும் காலத்திற்கு, 8·5 சதவீத சர்க்கரைச் சத்திற்கு அதிகமாகக் கிடைக்கும் 0'1 சதவீதம் ஒவ்வொன்றிற்கும் குவிண்டால் ஒன்றுக்கு 10 பைசா வீதம் கிடைக்கும் தொகையையும் சேர்த்து இந்திய அரசு கரும்பு விலையை நிர்ணயித்தது. 1978-79-ம் ஆண்டிற்கு, இந்திய அரசு, சர்க்கரைச் சத்து 8·5 சதவீதம் உள்ள அல்லது அதற்குக் குறைவான சர்க்கரைச் சத்துள்ள கரும்பின் அடிப்படைக் குறைந்த அளவு விலையைக் குவிண்டால், ஒன்றுக்கு ரூ. 10·00 என்று நிர்ணயித்து, 8.5 சதவீத சர்க்கரைச் சத்திற்கு அதிகமாகக் கிடைக்கும் 0.1 சதவீதம் ஒவ்வொன்றிற்கும் குவிண்டால் ஒன்றுக்கு 11.7647 பைசா வீதம் கிடைக்கும் தொகையையும் சேர்த்து இந்திய அரசு கரும்பு விலையை நிர்ணயித்தது. இந்திய அரசு நிர்ணயிக்கும் விலை ஆலைகள் செலுத்தும் தொகை பற்றிய விபரங்களை இணைப்பு III-ல் காணலாம்.

கூட்டுறவு அமைப்பிலுள்ள 9 சர்க்கரை ஆலைகள் மற்றும் பொதுத்துறை அமைப்பிலுள்ள 2 சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றுள் 10 ஆலைகள் ஒரு டன் கரும்பிற்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள கரும்பு விலைக்குமேல் கூடுதலாக 20 ரூபாய் கொடுத்துள்ளன. ஆனால் கூட்டு வாணிப அமைப்பிலுள்ள 9 ஆலைகளில் 4 ஆலைகள் மட்டும்தான் ஒரு டன் கரும்பிற்கு



மத்திய அரசு அறிவித்துள்ள கரும்பு விலைக்குமேல் கூடுதலாக 20 ரூபாய் கொடுத்துள்ளன. இதிலிருந்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகள், கூட்டு வாணிப ஆலைகளை விட கரும்பு சாகுபடியாளர்களிடம் அதிக சிரத்தை கொண்டுள்ளன என்பது தெளிவாகிறது.

**சர்க்கரை விலை :**

6. இந்திய அரசு ஆண்டுதோறும் சர்க்கரைக்குரிய விலையை நிர்ணயிக்கிறது. இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் 3 (3-C) பிரிவில் விதித்துள்ள விதிகளுக்கு ஏற்ற வகையில் சர்க்கரை விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். அவ்வாறு வரையறுக்கையில் கீழ்க்காணும் கருத்துக்களைக் கருதிப் பார்த்து வரையறுக்க வேண்டும்.—

(அ) கரும்புக்கு வரையறுக்கப்பட்டுள்ள குறைந்த அளவு விலை ;

(இ) சர்க்கரை உற்பத்திச் செலவு :

(உ) அதற்குச் செலுத்தப்பட்ட, செலுத்தப்படத்தக்க தீர்வை அல்லது வரி இருப்பின் அது :

(எ) சர்க்கரை உற்பத்தித் தொழிலில் முதலீடு செய்யப்பட்ட முதலுக்கு நியாயமான ஆதாயத்தைப் பெறுதல் இவை தவிர கரும்பு பயிரிடும் காலம், கிடைக்கும் சர்க்கரை அளவு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு விலைகள் நிர்ணயிக்கக் குழு தயாரித்த செலவு விவர அட்டவணையும் கருத்தில், கொள்ளப்பட வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாட்டிற்கு குறைந்த லெவிக் கொள் முதல் விலையே கிடைத்து வருகிறது. ஊதியம், வரி, எரி பொருள், உதிரிப்பாகங்கள், சாக்கு இவற்றின் விலை, வட்டி வீதம், கரும்பின் விலை ஆகிய ஒவ்வோர் இனமும் உயர்ந்துள்ளதன் காரணமாக சர்க்கரை உற்பத்திச் செலவு உயர்ந்துள்ளது. எடுத்துக் காட்டாக, 1975-76-ம் ஆண்டுக்கு இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 178.13 ஆகும். 1976-77, 1977-78-ம் ஆண்டுகளுக்கும் கூட அதே விலைதான் நிர்ணயிக்கப்பட்டது. விலை நிர்ணயம் செய்வது குறித்து மத்திய அரசு பின் பற்றுகிற முறைகளுக்கிணங்க, நிர்ணயித்தாலும்கூட, 1977-78-ம் ஆண்டிற்குரிய விலை குவிண்டால் ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 214·91 ஆக இருந்திருக்க வேண்டும். 1978-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 16-ம் நாள் முதல் சர்க்கரை மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டதை அடுத்து, சர்க்கரையின் விலை வெகுவாக வீழ்ச்சி அடைந்தது. வெள்ளைச் சர்க்கரையின்

சராசரி உற்பத்திச் செலவு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 225-ம் அதற்கு மேலாகவும் இருக்கிறது. ஆனால் அதன் விற்பனை விலை உற்பத்திச் செலவைவிடக் குறைவாக உள்ளது. இத்தகைய நிலை தொடர்ந்திருக்குமாயின், அதிக அளவு ஊக்கத் தொகையும், ஆயத்தீர்வை முதலியன குறித்து மத்திய அரசின் சலுகைகளும் இல்லாமல் சர்க்கரைத் தொழில் தழைக்க இயலாது.

சர்க்கரைத் தொழிலைப் பற்றிய பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காணுவதென்பது ஊக்கமளிப்பதாக இல்லாததால் இத்தொழிலுக்கு புத்துயிர் அளிக்கும் பொருட்டு சில குறுகிய கால சலுகைகளை அரசு அறிவித்துள்ளது. அவை யாவன :—

1978–79 நடப்புச் சர்க்கரைப் பருவத்திற்கான கரும்பு கொள் முதல் வரி மற்றும் கரும்பு செஸ் வரி பாக்கிகளை ஆலைகளிடமிருந்து வசூலிப்பது அவ்வரிகள் வசூல் செய்வதற்குரிய தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம்

7. நம் நாட்டில் இரண்டு சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனங்கள் உள்ளன. ஆகையால, சர்க்கரைத் தொழில் சார்பான பிரச்சினைகளில் ஒவ்வொரு பகுயிலும் அது தொடர்பான ஆராய்ச்சிகளை நடத்தவும், தென்னகத்திலுள்ள சர்க்கரை தொழில்களுக்கு வழிமுறைகளை நல்கும் அமைப்பாக அமையவும், இம்மாநிலத்தில் அதுபோன்றதொரு நிறுவனத்தை அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இந்நிறுவனம் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கடலூரில அமைக்கப்படும். கல்வியும் பயிற்சியும், அளிப்பதுடன் இந்நிறுவனம் ஆராய்ச்சி அறிவுரை, சேவையை விரிவுபடுத்தல், ஆய்வு மற்றும் சர்க்கரைத் தொழில நுணுக்கங்களைப் பரப்புதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும். சர்க்கரைத் தொழிலின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய்ந்து அவைகளுக்குத் தீர்வு காண்பது, மற்றும் பயிற்சியளிப்பதுமே இந்நிறுவனம் தற்பொழுது உடனடியாக ஏற்கும் பணிகளாகும். சர்க்கரைத் துறை பொறுப்பிலுள்ள அமைச்சரைத் தலைவராகக் கொண்டு இந்நிறுவனத்தை நிர்வகிக்க ஒரு ஆளுகைக் குழு அமைக்கப்படும். இந்நிறுவனத்தின் இயக்குநருக்கு அறிவுரை கூறவும், நிறுவனத்தைத் திறம்பட நடத்தவும் தொழில் துறை செயலாளரைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்படும். ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு வழிகாட்டவும், அறிவுரை வழங்கவும் சர்க்கரைத் தொழில் நிபுணர்களைக் கொண்ட நிபுணர்கள் குழு ஒன்றும் அமைக்கப்படும்.



## கரும்பு பிழிதலும், சர்க்கரை உற்பத்தியும் :—

8. 1975–76, 1976–77–ம் ஆண்டுகளில் தமிழ் நாட்டில் வறட்சி நிலவியதன் காரணமாக சர்க்கரைத் தொழிலின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவ்வாண்டுகளுக்குப் பிறகு இத்தொழில் முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆனால், மறுபடியும் தமிழ்நாட்டில் 1977–ம் ஆண்டு நவம்பர் திங்கள் இதுவரை கண்டிராத அளவில் புயல், வெள்ளம் ஏற்பட்டு பெருத்த பாதிப்பை ஏற்படுத்தியது. 1977–78–ம் ஆண்டில் கரும்பு பிழியப்பட்ட அளவு சர்க்கரை உற்பத்தியின் அளவு, 1978–79–ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இவற்றின் அளவு ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | 1977–78–ம் ஆண்டில் பிழியப்பட்ட கரும்பின் அளவு. | 1978–79-ம் ஆண்டில் பிழியப்படுமென்று எதிர்பார்க்கப்படும் கரும்பின் அளவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (இலட்சம் டன்களில்.) | |
| கூட்டுறவுத்துறை ஆலைகள் .. | 23.35 | 25.41 |
| கூட்டு வாணிப ஆலைகள் .. | 27.71 | 28.90 |
| பொதுத்துறை ஆலைகள் .. | 3.60 | 4.25 |
| மொத்தம் .. | 54.66 | 58.56 |

| (1) | 1977–78ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு. (2) | 1978–79ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படும் சர்க்கரையின் அளவு. (3) |
|---|---|---|
| | (இலட்சம் டன்களில்.) | |
| கூட்டுறவுத்துறை ஆலைகள் .. .. | 2·09 | 2.26 |
| கூட்டு வாணிப ஆலைகள் .. | 2·27 | 2·51 |
| பொதுத் துறை ஆலைகள் .. | 0·32 | 0·38 |
| மொத்தம் | 4.68 | 5·15 |

விரிவுபடுத்தும் திட்டமும், புதிய ஆலைகளைத் தொடங்குவதும் :—

9. தற்போதுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 5 ஆலைகள், சாறு பிழியும் திறனளவை அதிகப்படுத்திக் கொண்டுள்ளன. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| தொடர் எண்ணும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் பெயரும். (1) | ஆரம்பத் திறன். (2) | விரிவு படுத்தப் பட்ட திறன். (3) | தோராய செலவு. (4) |
|---|---|---|---|
| | (நாள் ஒன்றுக்கு டன் களில்). | | (ரூபாய் இலட்சத் தில்.) |
| 1 அமராவதி .. .. | 1,250 | 2,000 | 325 |
| 2 மதுராந்தகம் .. | 1,000 | 1,750 | 250 |
| 3 கள்ளக்குறிச்சி .. | 1,250 | 2,000 | 287 |
| 4 சேலம் .. .. | 1,750 | 2,500 | 185 |
| 5 நேஷனல் .. .. | 1,000 | 1500 | 25 |



நேஷனல் சர்க்கரை ஆலையைத் தவிர மற்ற எல்லாக் கூட்டு வுச் சர்க்கரை ஆலைகளும் 1977–78 ஆம் ஆண்டிலிருந்து விரிவு த்தப்பட்ட திறனளவில் சாறு பிழியத் தொடங்கியுள்ளன. ஷனல் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1978–79 ஆம் ஆண்டில் ருந்து விரிவுபடுத்தப்பட்ட திறனளவில் சர்க்கரை உற்பத்தி சய்யத் தொடங்கியுள்ளது.

மிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனம் (TASCO): —

10. சர்க்கரை ஆலைகள் பொதுத்துறையில் நிறுவப்பட வண்டுமென்று அரசு 1974-ஆம் ஆண்டில் எடுத்த முடிவின்படி, மிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனம் 1974 ஆம் ஆண்டில் மைக்கப்பட்டது. தஞ்சாவூர், பெரம்பலூர், ங்கரன்கோயில், ருக்கோயிலூர், சிவகங்கை ஆகிய பகுதிகளில் 5 சர்க்கரை ஆலை ள் அமைப்பதற்கான உரிமங்களைத் தமிழ்நாடு சர்க்கரை உற் த்தி நிறுவனம் பெற்றது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு ட்டுறவுச் சர்க்கரை ஆலையை நிறுவுவதற்கான உரிமமும் தமிழ் ாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனத்திற்கு மாற்றப்பட்டது. இந்த றுவனம் தஞ்சாவூர் அருகில் நிறுவியுள்ள சர்க்கரை ஆலை 976–77 ஆம் ஆண்டில் சோதனை முறையில் சாறு பிழியும் ணியைத் தொடங்கியது. திருச்சி மாவட்டம், பெரம்பலூர் ருகே அமைக்கப்பட்ட இரண்டாவது ஆலை 1978 ஆம் ஆண்டு ப்ரவரித் திங்கள் 2 ஆம் நாளிலிருந்து சாறு பிழியும் பணியைத் தாடங்கியுள்ளது. ஆண்டு முழுவதும் தேவையான தண்ணீர் டைக்காது என்ற சாதகமற்ற சூழ்நிலையும், சர்க்கரை மீது ந்த கட்டுப்பாட்டை நீக்கியதால் ஏற்பட்டுள்ள நிரந்தரமற்ற திர்காலமும், மேற்குறிப்பிட்டுள்ள மற்ற இடங்களில் எல்லாம் ர்க்கரை ஆலைகளை நிறுவும்பணியில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு டைகளாயுள்ளன. எனினும் திருக்கோயிலூர் வட்டத்தில் கூட்டு வு அமைப்பில் சர்க்கரை ஆலை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. ங்கரன்கோயில், கோயம்புத்தூர், சிவகங்கை பகுதிகளில் ர்க்கரை ஆலைகள் அமைப்பதற்காக வழங்கப்பட்ட உரிமங்கள் ந்திய அரசால் ரத்து செய்யப்பட்டன. சர்க்கரை இயக்குநர் அலுவலகமும் தமிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனமும் ஒருங் ணைந்து செயலாற்றுவதற்காக சர்க்கரை இயக்குநர் அலுவல் றையில் தமிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகச் செயல்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள் ளது. இந்நிறுவனம் கூட்டுத்துறை, பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் பற்றிய திட்டங்களை ஒருங்கிணைத்து அவற்றின் பணி களை மேம்படுத்துமென்று எதிர்பார்க்கப்படுகிறது:

1. புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவுதல் :—

1977–ஆம் ஆண்டில் பொதுத்துறையில் புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவும் முடிவினை அரசு மறுபரிசீலனை செய்து, இனிப்புதிதாக நிறுவவிருக்கும் சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவுத் துறையில் மட்டுமே நிறுவவேண்டுமென்று முடிவு செய்தது.

அதன்படி, தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் பெரிய செவலை கிராமத்தில் புதிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலையொன்று நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இரண்டு சர்க்கரை ஆலைகளை தமிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனம் நிறுவிய அனுபவத்தைக் கருத்தில்கொண்டு இப்புதிய சர்க்கரை ஆலை நிர்மாணப் பணியும் அந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலை 1979–80 ஆம் சர்க்கரைப் பருவத்தின் இறுதியில் உற்பத்தி செய்யத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1977–78ல் அரசு இந்த ஆலையில் தனது பங்குத்தொகையாக 145 இலட்ச ரூபாய் முதலீடு செய்தது. நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி கிடைக்கத் தாமதமாவதால் ஆலையை நிறுவ தாமதமேற்படுமென அஞ்சப்பட்டது. எனினும், ஆலையின் நிர்மாணப்பணிகளில் இனிமேலும் கால தாமதம் ஏற்படக்கூடாது என அரசு கருதியது. எனவே, வழிவகை முன்பணமாக 1978–79 ஆம் ஆண்டில் ஆலையின் நிர்மாணப்பணிகளுக்கு 150 இலட்ச ரூபாயை தமிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனத்திற்கு வழங்க அரசு முடிவெடுத்தது. அதன்படி இத் தொகையை 1978–79 நிதி ஆண்டிலேயே இந்நிறுவனம் பெறுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

*சர்க்கரை ஏற்றுமதி :—*

12. 1977–78 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தியில் 1·52 இலட்சம் டன் 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாளில் அன்றுள்ளவாறு மாநில வர்த்தகக் கழகத்தின் மூலம் ஏற்றுமதி செய்ய ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. 1978–79 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தியில் சிறிதளவு ஏற்றுமதி செய்யப்படக் கூடும்.

*1978–79 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் :—(1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை).*

13. 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16 ஆம் நாளிலிருந்து சர்க்கரைத் தொழில்மீது இருந்த எல்லா கட்டுப்பாடுகளையும் மத்திய அரசு நீக்கிவிட்டது. நுகர்வோரின் கருத்துப்படி இது வரவேற்கத்தக்கதாக இருப்பினும், தொழிலையும் அதன் விளைவாகக் கரும்பு பயிரிடுபவர்களையும் இது கடுமையாகப் பாதித்து உள்ளது. சர்க்கரை மீதிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதற்கு முன்னர் புதிய ஆலைகளும், உற்பத்தித் திறன் விரிவாக்கம் செய்யப்பட்ட சர்க்கரை ஆலைகளும் சம்பத் குழுவின் பரிந்துரைகளின்படி சலுகைகளைப் பெறத் தகுதியுடையவைகளாக இருந்தன. இவ்வாலைகளுக்கு மற்ற ஆலைகளைவிட வெளிச்சந்தையில் விற்பதற்கு அதிக அளவு சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட்டதால் கணிசமான அளவு சலுகை கிடைத்தது. சர்க்கரைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் விளைவாக இச்சலுகைகளின் பயனடைய



இயலவில்லை. இதனால், ஆலைகள் சலுகைகள் மூலமாகக் கிடைக்கும் பண ஆதாயங்களை பெற முடியவில்லை. புதிய சர்க்கரை ஆலைகளுக்கும், உற்பத்தித் திறன் விரிவாக்கம் செய்யப்பட்ட ஆலைகளுக்கும் சலுகைகள் வழங்குவது பற்றிய திட்டம் முழுவதும் அமைச்சர்களடங்கிய குழுவின் பரிசீலனையில் உள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே, புதிய சர்க்கரை ஆலைகள் எதையும் துவங்குவது மத்திய அரசு அறிவிக்கவிருக்கும் சலுகைகள் பற்றிய புதிய திட்டத்தைச் சார்ந்தே இருக்கும். சர்க்கரைத் தொழில் மற்றும் நுகர்வோரின் நலனைக்கருதி சர்க்கரையின் விலை நிலையாக இருக்கும் பொருட்டு கீழ்க்காணும் சில கருத்துக்களை இவ்வரசு மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளது.

(அ) துயர்மிகு போட்டி விற்பனையைத் தவிர்க்கும் பொருட்டு சர்க்கரையை முறையுறு திட்டத்தின் விற்பனைக்கு வெளியிட வேண்டும்.

(ஆ) சர்க்கரை முடை இருப்புவைப்பது தேவையாயுள்ளது.

(இ) சர்க்கரை ஆலைகளுக்குஅரவைப்பருவத்தில் நிதி உதவி அளவுகள் அறிவிக்கும்போது தாராளமான அணுகு முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வங்கிகளுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

சர்க்கரை மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டதன் விளைவாக சர்க்கரை ஆலைகளின் நிதி நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. சர்க்கரையின் விலை சரிந்தது. சாறு பிழியப்படும் கரும்பின் அளவு ஏறக்குறைய 1977–78 இருந்தது போலவே இருந்தாலும் தற்போது சர்க்கரை ஆதாயமற்ற விலையில் விற்கப்படுவதால் ஆலைகளுக்கு பேரிழப்பு ஏற்படும். சர்க்கரை ஆலைகள் யாவும் சர்க்கரை உற்பத்தி செய்வதற்காகும் செலவைக்கூட விற்பனையின் மூலம் ஈடுசெய்ய முடியாது. இந்த ஆண்டில் ஒவ்வொரு ஆலைக்கும் 50 இலட்ச ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படக்கூடும். வங்கியிலிருந்து பெறும் பணத்தின் மதிப்பிற்காகச் சர்க்கரையின் விலை குறைக்கப்பட்டதால் சர்க்கரை ஆலைகளின் கணக்குகள் ஒழுங்கற்றதாகி விட்டன. பெரும்பாலான ஆலைகள் பொறுப்புகளையும், கட்டுப்பாடுகளையும் தீர்க்க முடியாமற் போகும். பல ஆலைகள் கரும்பின் விலையை கூடத் தவறாது கொடுக்க முடியாமல் சிரமப்படக்கூடும். சுருங்கக் கூறின் 1978–79 ஆம் ஆண்டில் ஆலைகளின் எதிர்காலம் ஒளிமயமாக இல்லை. இடர்களைக் களையும் பொருட்டு வழிவகை முன் பணமாக 324.33 இலட்ச ரூபாயை கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளுக்கு அரசு வழங்கியுள்ளது.

1977-78 சர்க்கரை பருவத்தில் 10 சதவீதத்திற்கு மேல் கரும்பு நிலுவையை வைத்திருக்கும் சர்க்கரை ஆலைகளின் நிர்வாகத்தையும், 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 15-ம் நாளுக்குள் நடப்பு சர்க்கரை பருவத்திற்குரிய அரவையைத் தொடங்காத சர்க்கரை ஆலைகளின் நிர்வாகத்தையும் தன் பொறுப்பில் ஏற்கும்பொருட்டு ஒரு அவசரச் சட்டத்தை மத்திய அரசு அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது. இதன்படி நம் மாநிலத்திலுள்ள 21 சர்க்கரை ஆலைகளில் காவேரி சர்க்கரை ஆலையை மட்டும்தான் மத்திய அரசு 1979-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7-ம் தேதியிலிருந்து தன்பொறுப்பில் ஏற்றுக்கொண்டுள்ளது.

## சர்க்கரைக் கழிவுப்பாகு.

1977-78 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் சர்க்கரை கழிவுப்பாகு உற்பத்தி அபரிமிதமாக இருந்தது. குறிப்பாக நமது மாநிலத்திலும் எரிசாராயம் விற்பனை குறைந்ததால், வடிப்பகங்களில் உபயோகப்படும் கரும்புக் கழிவுப்பாகின் தேவையும் மிகக் குறைந்து கரும்பு கழிவுப்பாகு உபரியாகவே இருந்தது. கரும்பு கழிவுப்பாகினை இருப்பு வைப்பதற்கு போதுமான இடவசதியில்லாமல் சர்க்கரை ஆலைகளுக்கு சிரமங்கள் ஏற்பட்டன. மத்திய அரசு நவம்பர் 29, 1978 முதல் எரிசாராயம், மற்றும் கரும்பு கழிவுப்பாகை ஒருமுக ஏற்றுமதி முறையிலிருந்து விடுவித்து இவற்றை திறந்த பொது உரிமத்தின் கீழ் கொண்டு வந்துவிட்டமையால் இவற்றை மத்திய அரசு வணிக நிறுவனத்தின் மூலமாகத்தான் ஏற்றுமதி செய்யவேண்டும் என்ற அவசியமில்லை. இவ்விரு பொருள்களையும் யார் வேண்டுமானாலும் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுவர். இந்த உத்தரவு 31-3-1979 வரை செயல் முறையில் இருக்க வழங்கப்பட்டது. மத்திய அரசு இந்த திறந்த பொது உரிமத்தின மூலம் ஏற்றுமதி செய்ய வழங்கிய அனுமதியினை 31-3-1979-க்கு பிறகும் நீடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. கரும்பு கழிவுப்பாகு ஒருமுக ஏற்றுமதி முறையின் கீழ் மறுபடியும் கொண்டுவரப்பட்டுள்ளது. சர்க்கரை திறந்த பொது உரிமத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

2. இம் மாநிலத்தில் 1977–78-ம் சர்க்கரை ஆண்டில் வருடத்தில் உள்நாட்டு தேவை போக, 92,000 டன்கள் கரும்பு கழிவுப்பாகு, உபரியாக இருந்தது. மத்திய அரசு வணிக நிறுவனத்தின் மூலமாக 45,000 டன்கள் கரும்பு கழிவுப்பாகை ஏற்றுமதி செய்ய இவ்வரசு அனுமதித்துள்ளது. அரசு 1978–79 சர்க்கரை ஆண்டில் ஒரு இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு கழிவுப்பாகை (ஏற்கனவே 1977-78 ஆம் சர்க்கரை ஆண்டில் 45,000 டன்கள் மத்திய அரசு வணிக நிறுவனத்தின் மூலமாக ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டதைத் தவிர) திறந்த பொது உரிமத்தின்கீழ் நேரடியாகவோ அல்லது அரசு வணிக நிறுவனத்தின் மூலமாகவோ அல்லது தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் மற்றும் மாநில கூட்டுறவு இணைப்பகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூலமாகவோ ஏற்றுமதி செய்ய ஒதுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.



## தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம்.

தமிழ்நாடு 1971–ம் ஆண்டு 41–வது சட்டத்தால் திருத்தப்பட்ட, தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டத்தை செயல்படுத்தியதன் விளைவாக அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலங்களில் பயிரிடும் நோக்கத்துடன், 1974-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22-ம் தேதி அன்று, 2 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் நிறுவப்பட்டது. அதன்படி, திரு. ஆரூரான் சர்க்கரை லிமிடெட் முன்பு சொந்தமாக வைத்திருந்த 3,404.78 ஏக்கர் நிலமும் குத்தகைக்கு எடுத்திருந்த 3,082.32 ஏக்கர் நிலமும் சேர்த்து மொத்தம் 6,487.10 ஏக்கர் நிலம் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 1974-75 இல் இக்கழகத்தில் பங்கு மூலதனமாக ரூ. 25 இலட்சம் முதலீடு செய்யப்பட்டது. 1977-78 இல் மேலும் ரூ. 2.5 இலட்சம் பங்கு மூலதனமாக முதலீடு செய்யப்பட்டது. கழகம் ஆதாயம் தரவல்ல விதத்தில் செயல்படாத காரணத்தினால் இக்கழகத்தைத் தொடர்ந்து வைத்துக்கொள்வதா இல்லையா என்பது பற்றி அரசு தற்போது பரிசீலனை செய்துவருகிறது.

## இணைப்பு I.

தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம், வழங்கப்பட்ட உற்பத்தித் திறன், நிறுவனத் திறன் ஆகியவற்றைக் காட்டுகின்ற விவரங்கள் :

| தொடர் எண்ணும், சர்க்கரை ஆலைகளின் பெயரும். | நாளது நாள் வரையிலான உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறன். | நாளது நாள் வரையிலான நிறுவனத் திறன். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (நாளொன்றுக்கு டன்களில்.) | |
| **கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்—** | | |
| 1. ஆம்பூர் .. .. .. | 2,200 | 2,200 |
| 2. மதுராந்தகம் .. .. | 1,750 | 1,750 |
| 3. அமராவதி .. .. | 2,000 | 2,000 |
| 4. சேலம் .. .. .. | 2,500 | 2,500 |
| 5. கள்ளக்குறிச்சி .. .. | 2,000 | 2,000 |
| 6. நேஷனல் .. .. | 1,500 | 1,500 |
| 7. தர்மபுரி .. .. | 1,250 | 1,250 |
| 8. வேலூர் .. .. .. | 1,250 | 1,250 |
| 9. திருப்பத்தூர் .. .. | 1,250 | 1,250 |
| மொத்தம் .. | 15,700 | 15,700 |
| **பொதுத் துறை.** | | |
| 10. தஞ்சாவூர் .. .. | 1,250 | 1,250 |
| 11. பெரம்பலூர் .. .. | 1,250 | 1,250 |
| 12. திருக்கோவிலூர் .. .. | 1,250 | .. |
| 13. கோயம்புத்தூர் .. .. | 1,250 | .. |
| மொத்தம் .. | 5,000 | 2,500 |
| **தனியார் துறை.** | | |
| 14. ஈ.ஐ.டி. பாரி நிறுவனம். | 4,000 | 4,000 |
| 15. காவேரி .. .. | 1,000 | 1,250 |
| 16. டெக்கான் .. .. | 2,000 | 1,850 |
| 17. தென்னிந்தியா .. .. | 1,500 | 2,700 |
| 18. சக்தி .. .. .. | 4,000 | 4,000 |
| 19. அருணா .. .. | 4,000 | 4,000 |
| 20. மதுரை .. .. | 1,100 | 600 |
| 21. கோத்தாரி .. .. | 4,000 | 1,500 |
| 22. திருஆரூரான் .. .. | 2,000 | 2,000 |
| 23. பாலாறு .. .. | 400 | 400 |
| மொத்தம் .. | 24,000 | 22,300 |
| **சுருக்கம்.** | | |
| கூட்டுறவு ஆலைகள் .. .. | 15,700 | 15,700 |
| கூட்டுப்பங்கு நிறுவனம் .. | 24,000 | 22,300 |
| பொதுத்துறை .. .. .. | 5,000 | 2,500 |
| மொத்தம் .. | 44,700 | 40,500 |

## இணைப்பு II.

### சர்க்கரை ஆலைகளின் உற்பத்தி சாதனை.

தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை, சராசரி சர்க்கரையின் சதவீதம் பற்றிய விவரங்கள்.

| சர்க்கரை ஆலைகளின் பெயர்கள். | | 1975-76 பிழியப்பட்ட கரும்பின் அளவு. | உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை. | கிடைத்த சர்க்கரையின் சதவீதம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | (டன்களில்.) | | |
| கூட்டுறவுத் துறை— | | | | |
| ஆம்பூர் | | 1,58,728 | 15,860 | 9.[illegible] |
| மதுராந்தகம் | .. | 1,64,731 | 15,246 | 9.26 |
| அமராவதி .. | .. | 98,371 | 8,337 | 8.48 |
| சேலம் .. | .. | 48,302 | 4,560 | 9.44 |
| கள்ளக்குறிச்சி | .. | 1,38,019 | 12,595 | 9.13 |
| நேஷனல் .. | .. | 51,920 | 5,222 | 10.06 |
| தருமபுரி .. | .. | 74,441 | 7,442 | 10.00 |
| வேலூர் .. | | .. | .. | .. |
| திருப்பத்தூர் | .. | .. | .. | .. |
| மொத்தம் | .. | 7,34,512 | 69,262 | 9.4[illegible] |



| சர்க்கரை ஆலைகளின் பெயர்கள். | | 1975-76 பிழியப்பட்ட கரும்பின் அளவு. | உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை. | கிடைத்த சர்க்கரையின் சதவீதம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | (டன்களில்.) | |
| தனியார் துறை— | | | | |
| ஈ. ஐ. டி. பாரி | .. | 5,07,917 | 25,043 | 8.13 |
| காவேரி .. | .. | 40,754 | 3,582 | 8·79 |
| டெக்கான் .. | .. | 45,143 | 4,241 | 9.40 |
| தென்னிந்தியா | .. | 1,00,992 | 9,328 | 9.24 |
| அருணா .. | .. | 2,22,679 | 20,835 | 9.36 |
| சக்தி .. | .. | 2,53,127 | 22,662 | 8.95 |
| மதுரை .. | .. | 21,943 | 1,942 | 8.85 |
| கோத்தாரி .. | .. | 77,716 | 7,664 | 9.86 |
| திரு ஆரூரான் | .. | 1,64,703 | 15,399 | 9.35 |
| பாலாறு .. | .. | .. | .. | .. |
| மொத்தம் | .. | 12,34,974 | 1,10,696 | 8.96 |
| பொதுத்துறை— | | | | |
| தஞ்சாவூர் .. | .. | .. | .. | .. |
| பெரம்பலூர் | .. | .. | .. | .. |
| மொத்தம் | .. | .. | .. | .. |
| பெரு மொத்தம் | .. | 19,69,486 | 1,79,958 | 9.14 |

[1979 ஏப்ரல் 24

| சர்க்கரை ஆலைகளின் பெயர்கள். | | 1976-77 பிழியப் பட்ட கரும்பின் அளவு. | உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. | கிடைத்த சர்க்கரையின் சதவீதம். |
|---|---|---|---|---|
| | | (5) | (6) | (7) |
| | | | (டன்களில்.) | |
| **கூட்டுறவுத் துறை—** | | | | |
| ஆம்பூர் .. | .. | 2,59,204 | 25,270 | 9.75 |
| மதுராந்தகம் | .. | 1,21,616 | 11,289 | 9.28 |
| அமராவதி .. | .. | 1,64,945 | 13,743 | 8.33 |
| சேலம் .. | .. | 2,74,670 | 24,062 | 8.76 |
| கள்ளக்குறிச்சி | .. | 2,05,205 | 18,364 | 8,95 |
| நேஷனல் .. | .. | 1,86,050 | 15,604 | 8.39 |
| தருமபுரி .. | .. | 2,18,006 | 20,360 | 9.34 |
| வேலூர் .. | .. | 15,118 | 1,098 | 7.26 |
| திருப்பத்தூர் | .. | 41,405 | 3,260 | 7.87 |
| மொத்தம் | .. | 14,86,219 | 1,33,050 | 8.95 |
| **தனியார் துறை—** | | | | |
| ஈ.ஐ.டி. பாரி | .. | 5,27,219 | 40,704 | 7.72 |
| காவேரி .. | .. | 1,42,910 | 10,420 | 7.29 |



979 ஏப்ரல் 24]

| ர்க்கரை ஆலையின் பெயர்கள் | | பிழியப்பட்ட கரும்பின் அளவு (5) | 1976–77 உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை (6) டன்களில் | கிடைத்த சர்க்கரையின் சதவீதம் (7) |
|---|---|---|---|---|
| டெக்கான் .. | .. | 3,29,043 | 27,126 | 8.24 |
| தென்னிந்தியா | .. | 2,34,153 | 20,587 | 8.79 |
| அருணா .. | .. | 4,10,615 | 34,068 | 8.30 |
| சக்தி .. | .. | 2,57,560 | 20,311 | 7.89 |
| மதுரை .. | .. | 44,420 | 3,436 | 7.73 |
| கோத்தாரி .. | .. | 1,62,369 | 14,081 | 8.67 |
| திரு. ஆரூரான் | .. | 1,56,412 | 14,199 | 9.08 |
| பாலாறு .. | .. | .. | .. | .. |
| மொத்தம் | .. | 22,64,701 | 1,84,932 | 8.17 |
| ாதுத் துறை— | | | | |
| தஞ்சாவூர் .. | .. | 40,492 | 3,564 | 8.80 |
| பெரம்பலூர் | .. | .. | .. | .. |
| மொத்தம் | .. | 40,492 | 3,564 | 8.80 |
| பெரு மொத்தம் | .. | 37,91,412 | 3,21,546 | 8.48 |

[1979 ஏப்ரல் 24

| சர்க்கரை ஆலைகளின் பெயர்கள். | 1977–78. பிழியப் பட்ட கரும்பின் அளவு. (8) | உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. (9) | கிடைத்த சர்க்கரையின் சத வீதம். (10) |
|---|---|---|---|
| | (டன்களில்.) | | |
| **கூட்டுறவுத் துறை—** | | | |
| ஆம்பூர் .. .. | 2,84,217 | 26,108 | 9.19 |
| மதுராந்தகம் .. | 2,80,308 | 25,060 | 8.94 |
| அமராவதி .. .. | 3,10,385 | 26,843 | 8.65 |
| சேலம் .. .. | 3,62,273 | 32,503 | 8.97 |
| கள்ளக்குறிச்சி .. | 2,57,854 | 20,765 | 8.05 |
| நேஷனல் .. .. | 2,17,234 | 19,533 | 8.99 |
| தருமபுரி .. .. | 2,30,087 | 22,239 | 9.67 |
| வேலூர் .. .. | 2,05,454 | 17,055 | 8.30 |
| திருப்பத்தூர் .. | 1,87,298 | 18,741 | 10.01 |
| மொத்தம் .. | 23,35,110 | 2,08,847 | 8.94 |
| **தனியார் துறை—** | | | |
| ஈ.அய்.டி. பாரி .. | 5,68,999 | 36,949 | 6.49 |
| காவேரி .. .. | 1,47,186 | 12,864 | 8.74 |
| டெக்கான் .. .. | 3,60,526 | 30,323 | 8.41 |
| தென்னிந்தியா .. | 3,18,517 | 27,600 | 8.67 |
| அருணா .. .. | 4,34,549 | 35,962 | 8.28 |



1979 ஏப்ரல் 24]

| சர்க்கரை ஆலைகளின் பெயர்கள் | பிழியப்பட்ட கரும்பின் அளவு (8) | உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை (9) | கிடைத்த சர்க்கரையின் சதவீதம் (10) |
|---|---|---|---|
| | (டன்களில்) | | |
| சக்தி .. .. | 3,66,487 | 33,883 | 9.24 |
| மதுரை .. .. | 83,282 | 7,360 | 8.84 |
| கோத்தாரி .. .. | 2,67,382 | 22,664 | 8.48 |
| திரு. ஆரூரான் .. | 2,23,742 | 19,621 | 8.77 |
| பாலாறு .. .. | .. | .. | .. |
| மொத்தம் | 27,70,670 | 2,27,220 | 8.20 |
| **பொதுத் துறை—** | | | |
| தஞ்சாவூர் .. .. | 2,18,674 | 19,410 | 8.88 |
| பெரம்பலூர் .. | 1,41,383 | 13,000 | 9.20 |
| மொத்தம் .. | 3,60,057 | 32,410 | 9.00 |
| பெரு மொத்தம் .. | 54,65,837 | 4,68,483 | 8.57 |

# இணைப்பு III

தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் 1975-76 முதல் 1977-78 வரையில் கரும்பு விலை குறித்த அறிக்கை.

## 1975-76

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆலையின் பெயரும். | இந்திய அரசு வரையறுத்த சட்டப்படிக் கான குறைந்த அளவு கரும்பு விலை. | தமிழ்நாடு அரசு வரையறுத்த தொடக்க விலை. | இந்திய அரசு வரையறுத்த சட்டப்படிக் கான இறுதி விலை. | இந்திய அரசு வரையறுத்த சட்டப்படிக் கான குறைந்த அளவு கரும்பு விலை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. ஆம்பூர் .. .. .. | 99.00 | 114.00 | 105.43 | 102.00 |
| 2. மதுராந்தகம் .. .. .. | 99.00 | 114.00 | 106.16 | 100.00 |
| 3. அமராவதி .. .. .. | 85.00 | 100.00 | 94.25 | 90.00 |
| 4. சேலம் .. .. .. | 93.00 | 108.00 | 101.32 | 95.00 |
| 5. கள்ளக்குறிச்சி .. .. | 92.00 | 107.00 | 100.60 | 94.00 |
| 6. நேஷனல் .. .. .. | 92.00 | 107.00 | 106.90 | 101.00 |
| 7. தருமபுரி .. .. .. | 104.00 | 119.00 | 112.81 | 100.00 |
| 8. வேலூர் .. .. .. | .. | .. | .. | 85.00 |
| 9. திருப்பத்தூர் .. .. .. | .. | .. | .. | 85.00 |
| 10. ஈ. அய். டி. பாரி .. .. | 88.00 | 103.00 | 94.41 | 85.00 |
| 11. காவேரி .. .. .. | 85.00 | 100.00 | 88.37 | 91.00 |
| 12. டெக்கான் .. .. .. | 92.00 | 107.00 | 94.92 | 94.00 |
| 13. தென்னிந்தியா .. .. | 90.00 | 101.62 | 101.62 | 93.00 |
| 14. அருணா .. .. .. | 94.00 | 110.00 | 103.66 | 95.00 |
| 15. சக்தி .. .. .. .. | 92.00 | 107.00 | 99.73 | 96.00 |
| 16. மதுரை .. .. .. | 85.00 | 100.00 | 86.63 | 89.00 |
| 17. கோத்தாரி .. .. .. | 94.00 | 105.00 | 103.98 | 99.00 |
| 18. திரு. ஆரூரான் .. .. | 87.00 | 97.81 | 97.81 | 94.00 |
| 19. பாலாறு .. .. .. | 85.00 | .. | .. | .. |
| 20. தஞ்சாவூர் .. .. .. | .. | .. | .. | 94.00 |
| 21. பெரம்பலூர் .. .. .. | .. | .. | .. | .. |

## இணைப்பு III—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும், சர்க்கரை ஆலையின் பெயரும். | 1976-77 ஆலைகள் ஒப்புக் கொண்ட தொடக்க விலை. | இந்திய அரசு வரையறுத்த சட்டப்படிக் கான இறுதி விலை. | இந்திய அரசு வரையறுத்த சட்டப்படிக் கான குறைந்த அளவு-கரும்பு விலை. | 1977-78 ஆலைகள் அறிவித்துக் கொடுத்த விலை. |
|---|---|---|---|---|
| (1)—தொடர்ச்சி. | (6) | (7) | (8) | (9) |
| 1. ஆம்பூர் .. .. .. | 117.00 | 107.71 | 100.00 | 127.00 |
| 2. மதுராந்தகம் .. .. .. | 115.00 | 103.70 | 99.00 | 115.00 |
| 3. அமராவதி .. .. .. | 110.00 | 94.80 | 85.00 | 125.00 |
| 4. சேலம் .. .. .. | 110.00 | 101.69 | 92.00 | 125.00 |
| 5. கள்ளக்குறிச்சி .. .. | 109.00 | 100.23 | 92.00 | 114.00 |
| 6. நேஷனல் .. .. .. | 116.00 | 107.12 | 87·00 | 116.00 |
| 7. தருமபுரி .. .. .. | 119.00 | 106.33 | 99.00 | 120.00 |
| 8. வேலூர் .. .. .. | 117.00 | 89.30 | 85.00 | 127.50 |
| 9. திருப்பத்தூர் .. .. | 117.00 | 89.40 | 91.00 | 127.50 |
| 10. ஈ. அய். டி. பாரி .. .. | 100.00 | 90.57 | 85.00 | 100.00 |
| 11. காவேரி .. .. .. | 150.00 | 95.95 | 85.00 | 105.00 |
| 12. டெக்கான் .. .. .. | 110.00 | 99.43 | 90.00 | 115.00 |
| 13. தென்னிந்தியா .. .. | 100.00 | 99.13 | 87.00 | 100.00 |
| 14. அருணா .. .. .. | 113.00 | 100.30 | 87.00 | 100.00* |
| 15. சக்தி .. .. .. .. | 111.00 | 101.84 | 85.00 | 115.00 |
| 16. மதுரை .. .. .. | 100.00 | 94.15 | 85.00 | 100.00 |
| 17. கோத்தாரி .. .. .. | 105.00 | 103.70 | 90.00 | 106.00 |
| 18. திரு. ஆரூரான் .. .. | 100.00 | 98.67 | 92.00 | 100.00 |
| 19. பாலாறு .. .. .. | .. | .. | .. | .. |
| 20. தஞ்சாவூர் (அறிஞர் அண்ணா) | 110.00 | 99.93 | 89.00 | 115.00 |
| 21. பெரம்பலூர் (ஜவஹர்லால்) .. | .. | .. | .. | 115.00 |

*இடைக்கால அறிவிப்பு விலை.

[1979 ஏப்ரல் 24

### 13. தமிழ்நாடு உப்பு நிறுவனம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 5,566 ஏக்கர் சதுப்பு நில பரப்பில் மாரியூர்வாலி நோக்கம் உப்புத் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு ரூ. 50 இலட்சம் அதிகாரமளிக்கப்பட்ட முதலீட்டுடன் தமிழ் நாடு உப்பு நிறுவனம் 1974-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டது. இத் திட்டத்திற்கு கீழ்க் கண்டவாறு ரூ. 145 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| (1) | (2) |
|---|---|
| உப்பள வேலைகள் .. .. .. .. | 46·84 |
| நிலம் மற்றும் கட்டடங்கள் .. .. .. | 36·71 |
| இயந்திர சாதனங்கள் மற்றும் வாகனங்கள் .. | 41.05 |
| கட்டுமான கால முன் செலவீடுகள் .. .. | 10·60 |
| எதிர்பாராச் செலவுகள் .. .. .. | 3·80 |
| நடைமுறை மூலதனம் .. .. .. | 6·00 |
| மொத்தம் .. | 145·00 |

இத்திட்டத்திற்குச் செலவாகும் நிதியில் சுமார் 40 இலட்சம் அளவிற்கு, இத்திட்டத்தை நிறைவேற்றும் பொழுது கிடைக்கும் பணத்திலிருந்தே முதலீடு செய்யப்படும் என்பது இங்குகுறிப்பிடத் தக்க அம்சமாகும். பரப்பளவின் அபிவிருத்தி ஒவ்வொரு கட்டங்களாக எடுத்துக் கொள்ளப்படுவதாலும் ஒவ்வொரு பரப்பளவிலும் அபிவிருத்தி செய்யப்பட்டவுடன் உப்பு தயாரிக்க ஆரம்பிக்கப் படுவதிலும் இது சாத்தியமாகிறது. அரசு இந்நிறுவனத்திற்கு பங்கு மூலதனமாக ரூ. 50 இலட்சம் அளிக்கும். ரூ. 40 இலட்சம் நிதி நிறுவனங்களிடமிருந்தும் வணிக வங்கிகளிடமிருந்தும் கடனாகப் பெறப்படும். இத் திட்டம் மத்திய அரசிடமிருந்து ரூ. 15 இலட்சம் மூலதன மானியம் பெறுவதற்கும் தகுதியுள்ளதாகும்.

2. 1978-79-ஆம் ஆண்டு இறுதி வரை இத் திட்டத்திற்காக சுமார் ரூ. 70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. அரசு இது வரை இந் நிறுவனத்திற்கு பங்கு மூலதனமாக ரூ. 45 இலட்சம் வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள பங்குத் தொகையான ரூ. 5 இலட்சம் 1979-80-ஆம் ஆண்டில் வழங்கப்படும்.



1979 ஏப்ரல் 24]

3. முதல் வேலையாக உப்பளப் பகுதி முழுவதையும் மழையினால் ஏற்படும் வெள்ளத்திலிருந்து பாதுகாக்கும் வகையில் அப்பகுதியைச் சுற்றி 24 கிலோ மீட்டர் நீளத்திற்கு வரப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. இது வரை அமைக்கப்பட்டுள்ள 100 உப்பளங்களில் 63 உப்பளங்களில் ஏற்கனவே உப்பு உற்பத்தி தொடங்கப்பட்டு விட்டது. சுமார் 370 ஏக்கர் பரப்பு சமன்படுத்தப்பட்டு உப்புப் பாத்திகள் அமைக்கப்பட்டுள்ளது. உப்பு நீரைத் தேக்கி வைப்பதற்காக 846 ஏக்கர் பரப்பில் நான்கு உப்பு நீர்த் தேக்கங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன.

4. தேவையான உப்பு நீரைத் தங்கு தடையின்றி பெறும் பொருட்டு நிமிடத்திற்கு 30,000 காலன் நீரிறைக்கும் சக்தியுள்ள நீரேற்றும் சாதனங்களை நிலையாக அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இது வரை நிமிடத்திற்கு 20,000 காலன் நீரிறைக்கும் சக்தியுள்ள ஆறு நீரேற்று சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

5. 1978ஆம் ஆண்டு இறுதி வரை 1,650 ஏக்கர் நிலப்பரப்பு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்றபடி 1978 ஆம் ஆண்டில் உப்பு உற்பத்தி 6,500 டன்களாகும். அதற்கு முந்தைய ஆண்டின் உற்பத்தி 3,400 டன்கள் ஆகும்.

6. 1979-80ஆம் ஆண்டுக்கான திட்டப்படி மேலும் 800 ஏக்கர் நிலப்பரப்பை சமன்படுத்தும் வேலை மேற்கொள்ளப்படும். மேலும் 100 உப்பளங்களும் ஒரு நீர்த்தேக்கமும் அமைக்கப்படும். 1979ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் மதிப்புள்ள 30,000 டன்கள் உப்பு உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7. இத் திட்டம் மிகுந்த வேலை வாய்ப்பளிக்கக் கூடியதாகும். உப்பு உற்பத்திப் பணிகளிலும், அபிவிருத்தி வேலைகளிலும் சுமார் 1,500 பேருக்குமேல் வேலை அளிக்கப்பட்டுள்ளது.

8. இத்திட்டம் இன்னும் செயற்படுத்தும் கட்டங்களிலேயே இருப்பதாலும், மொத்த உற்பத்தி அளவில் ஒரு சிறிய அளவே உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாலும் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதி வரை இத்திட்டத்தின் செயல் முடிவுகள் ரூ. 19 இலட்சம் நஷ்டத்தைக் காண்பிக்கின்றது. 1981 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் செயல் முறை இலாபத்தில் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

9. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இந்த உப்பளத்தில் உற்பத்தியாகும் உப்பு மற்றும் உப்புத்துகள்களை பயன்படுத்தி அங்கு கடல் இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் இணைத் தொழிற்சாலை ஒன்றினை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கான நடவடிக்கைகளை சமீபத்தில் எடுத்துள்ளது. இந்த சாத்தியக் கூறு அறிக்கைகள் இன்னும் ஆறு மாத காலத்தில் தயாராகும் எனறு எதிர்பார்க்கப்படுகிறது.

10. உப்பு நிறுவனம் அண்மையில் வேறு இருபெரிய பணிகளையும் மேற்கொண்டுள்ளது. முதலாவது, தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுகாவில் உள்ள மரவக்காடு மற்றும் வடக்காடு கிராமங்களில் உள்ள 5,400 ஏக்கர் சதுப்பு நிலப் பரப்பில் மேலும் ஒரு உப்புத் தொழிற்சாலையை நிறுவுவதாகும். 60,000 ஏக்கர் பரப்பளவுள்ள வேதாரண்யம் சதுப்பு நிலத்தில் இது ஒரு பகுதியாகும். டிட்கோ தயாரித்த விரிவான சாத்தியக் கூறு அறிக்கை இப்பகுதியில் ஆண்டுக்கு 10 இலட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யக்கூடிய மிகப் பெரிய உப்புத் தொழிற்சாலையையும் ஒரு கடல் சார்புள்ள இரசாயனப் பொருட்கள் தொழிற்சாலையையும் அமைக்க இயலும் என தெரிவித்துள்ளது. ஆனால் காட்டிலாகா அங்கு அத்தகைய ஒருபெரிய உப்புத் தொழிற்சாலையை நிறுவுவது சில வகை அபூர்வ மரங்களை கொண்டுள்ளதோடு பல்வேறு நாடுகளிலிருந்து இடம் பெயர்ந்து விடும் பறவையினங்களையும் கவர்ந்திழுக்கும் அப்பகுதியின் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படும் என்ற கருத்தைத் தெரிவித்தது, இயற்கைச் சமநிலைப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும் வரை அரசு 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இச்சதுப்பு நிலப் பகுதியின் மேற்கு கோடியில் வடக்காடு மரவக்காடு ஆகிய கிராமங்களில் உள்ள 5,400 ஏக்கர் பரப்பில் ஒரு உப்புத் தொழிற்சாலையை அமைக்குமாறு தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு உத்திரவிட்டுள்ளது. இப்பகுதியில் நிறுவப்படும் தொழிற்சாலையால் இயற்கைச் சமநிலை எவ்வகையிலும் பாதிக்கபடாது. சில கடல் சார்புள்ள இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உட்பட இத்திட்டத்திற்கு சுமார் ரூ. 2 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. திட்டம் நிறைவேற்றப்பட்டதும் இதன் மூலம் 1,000 பேருக்கு மேல் வேலை வாய்ப்பு கிடைக்கும். உப்பு நிறுவனம் இந்த பகுதியில் நில அளவையை மேற்கொண்டுள்ளது. நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கான முறையான வேலைகள் 1979 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வேலைகள் மூன்றாண்டு காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என அரசு உத்திரவிட்டுள்ளது.

11. உப்பு நிறுவனம் மேற்கொண்டுள்ள மற்றொரு பணி பக்கிங்காம் கால்வாயை சர்வே செய்து கல்பாக்கம் அணு மின் நிலையத்திலிருந்து வெளியிடப்படும் உப்பு நீரைப் பயன்படுத்தி அடையாறு வாயிலிலிருந்து சூணாம்பேடு வரை கால்வாயின் இரு மருங்கிலும் உப்பு உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியதாகும். டிட்கோவின் கீழ் கூட்டுத்துறையில் இயங்கி வரும் உப்புத் தொழிற்சாலையும் மற்றும் கோவளத்தை சுற்றியுள்ள சிறிய உற்பத்தியாளர்களும் பயனடையும் வகையில் அணு சக்தி நிலையத்திலிருந்து 50 கியூசெக் நீரை பக்கிங்காம் கால்வாயில் திருப்பிவிடுவதற்கு ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்கெனவே ஒரு சிறிய திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.



## கனிவள நிறுவனங்கள்.

### தமிழ்நாடு கனிவள நிறுவனம்.

தமிழ்நாடு கனிப்பொருள் வளர்ச்சி நிறுவனம், 1978 ஆம் ஆண்டுடின் கீழ் குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களுக்காக நிறுவப்பட்டது.—

1. திட்டமிட்டு, முறையாக விஞ்ஞான ரீதியில் விற்பனை செய்யக்கூடிய அளவில், தொழிற்சாலைகளுக்குத் தேவையான முக்கிய கனிப் பொருட்களை வெட்டியெடுத்தல் ;

2. முன்னேற்றம் அடையாத பின்தங்கிய பகுதிகளில் சுரங்க வேலையில் வேலை வாய்ப்பைத் தோற்றுவித்தல் ;

3. கருப்புக்கல் வியாபாரம் ஒரு சில தனிப்பட்டவர்களின் கையிலிருப்பதைத் தடுத்து கருப்புக்கல் தோண்டி எடுப்பதை தாமே எடுத்துக் கொள்ளுதல் ;

4. கனிப் பொருளை வீணாக்காது காக்கவேண்டும் என்ற கொள்கையை திறம்பட நிறைவேற்றுதல்.

இந்த நிறுவனம் அக்டோபர் திங்கள் 1978 ஆம் ஆண்டு முதல் சுரங்க வேலை செய்யும் பணியை மேற்கொண்டது. இந்நாள்வரை, வியாபாரத்திற்காக சேலம், கோவை, மாவட்டங்களில் ஒவ்வொரு இடத்திலும், செங்கை, தென் ஆற்காடு மாவட்டங்களில் தலா இரண்டு இடங்களிலும், தர்மபுரி மாவட்டத்தில் மூன்று இடங்களிலும், ஆக மொத்தம் 9 இடங்களில் குவாரி வேலை தொடங்கி உள்ளது. இந்நிறுவனம் 1979–80-ம் ஆண்டுக்கு கீழ்க்கண்டவாறு வெறும் பாளங்களாக 3,000 க.மீ. அளவுக்கு உற்பத்தி செய்வதை தனது குறியீடாக கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (1) | புலிக்குன்றம் .. .. .. | 300 க.மீ. |
| (2) | ஒரக்கடம் ஒதுக்கக்காடு .. .. | 180 ,, |
| (3) | குன்னம் .. .. .. .. | 180 ,, |
| (4) | வி. பரங்கனி .. .. .. | 180 ,, |
| (5) | டொனகுட்டஹள்ளி .. .. | 400 ,, |
| (6) | அஞ்சனஹள்ளி .. .. .. | 300 ,, |
| (7) | பெவானூர் ஒதுக்கக்காடு .. .. | 300 ,, |
| (8) | பலமலை ஒதுக்கக்காடு .. .. | 500 ,, |
| (9) | எல்லிக்கரடு .. .. .. | 500 ,, |
| | | 2,040 க.மீ. |
| | | (12,400) டன்கள். |

தமிழ்நாடு கனிவள நிறுவனத்தின் கீழ் உள்ள குவாரிகளிலிருந்து கிடைக்கும் கறுப்புக் கற்களுக்கான ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் விரைவில் முடிவு செய்யப்படும். இதற்கான விலை 300-லிருந்து 600 அமெரிக்க டாலர் வரை உள்ளது. இந்த கருப்புக் கற்கள் உற்பத்தி குறியீடு விற்று முதலாக ரூபாய் 1.05 கோடியும், நிகர இலாபமாக ரூபாய் 15 இலட்சமும் இடைநிகழ் செலவுகள், செயலமைப்புச் செலவுகள், உற்பத்திச் செலவுகள் மற்றும் வருமானவரி பொறுப்புகள் எல்லாவற்றையும் மேற்கொண்டபின், மார்ச் 1980-ல் எதிர்பார்க்கப்படுகிறது. நீதிமன்றங்களில் வழக்கில் உள்ள இடங்களிலும், தமிழ்நாடு கனிவள நிறுவனம் குவாரி செய்ய முற்படும்பொழுது கருப்புக் கற்கள் உற்பத்தியைப் பெருக்கி நிகர இலாபத்தை, மேலும் ரூபாய் 20 இலட்சத்திலிருந்து 25 இலட்சங்கள் வரை அதிகரிக்க முடியும்.

தமிழ்நாடு கனிவள நிறுவனம் தொழில் வணிக இயக்குநரின் மாநில புவியியல் துறையிடமிருந்து வெர்மிகுலைட் சுரங்கத்தினை, அதனுடைய இருப்புகள், பொறுப்புக்களுடன் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எடுத்துக் கொண்டுள்ளது. சுரங்கவேலை ஒழுங்குபடுத்தப்பட்டு தொழிலாளர்களின் எண்ணிக்கை 11 லிருந்து 40 ஆகவும், உற்பத்தியை மாதத்திற்கு 25 டன்னிலிருந்து ஏறக் குறைய 40 டன்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. வெர்மிகுலைட்டுக்கான வெளிநாட்டு சந்தையினைப் பற்றி ஆராயும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கனிவள நிறுவனம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரியநாகலூர் கிராமத்தில் சுண்ணாம்புக் கல்லை வெட்டியெடுக்கத் துவங்கி, சுமார் 4,000 டன்கள் சுண்ணாம்புக்கல் வெட்டியெடுத்து, ஏற்கெனவே சுமார் 1,000 டன்களை விற்பனை செய்துள்ளது. காகித ஆலைகள், சர்க்கரை ஆலைகள், எஃகு ஆலை போன்ற நிறுவனங்களிலிருந்து, நீண்டகால அடிப்படையில் சுண்ணாம்புக்கல்லை வழங்கக் கோரி சாதகமாக இந்த நிறுவனத்திற்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. திருச்சிராப்பள்ளி மாவட்டம் நகம்பள்ளிக்கருகில் கிடைக்கும் குவார்ட்ஸ் மற்றும் பெல்ஸ்பர் கனிப் பொருட்களை 1978-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து இந்நிறுவனம் வெட்டியெடுத்து வருகிறது. கடந்த நான்கு மாதங்களில் 750 டன்கள் குவார்ட்ஸ், 350 டன்கள் பெல்ஸ்பர் கனிப் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. சுமார் 80 தொழிலாளர்கள் இந்த சுரங்கத்தில் வேலை செய்கின்றனர்.

மேலூர் வட்டத்தில், நத்தத்திற்கு அருகில் உள்ள பெருமலை ஒதுக்கக்காடுகளில் இளஞ்சிவப்பு குவார்ட்ஸ் (Rose Quartz) கனிப்பொருளையும் தமிழ்நாடு கனிவள நிறுவனம் வெட்டியெடுக்கத் துவங்கியுள்ளது. மிகவும் சுத்தமான இந்தக் கனிப்பொருள், மணிகள், உருவங்கள் செய்யவும், குறைமணிகளாகவும் பயன்படுகின்றன. இளஞ்சிவப்பு கனிப்பொருள் சுரங்கம், பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி பெறாத சுமார் 25 பேர்களுக்கு வேலை வாய்ப்பு நல்கும்.



தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம் மரக்காணத்திற்கு அருகில், அகரம் ஒதுக்கக் காடுகளில் சிலிகா மணல் பகுதிகளைத் தன் வசம் மேற்கொண்டு, சுரங்க வேலையை விரைவில் இந்நிறுவனம் துவக்க உள்ளது. இந்த சுரங்கத்தில் பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி பெறாத சுமார் 25 பேர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவர்.

கிராபைட் உலைக்கலன்களும், உராய்வு எண்ணெய், கிரீஸ், நான்கள், முதலியவை தயாரிக்கத் தகுந்த நல்ல கிராபைட் கனிப்பொருள் இந்த நாட்டிலேயே சிவகங்கை வட்டத்தில் கிடைக்கிறது. இதனை வெட்டி யெடுக்க தமிழ்நாடு கனிவள நிறுவனம் உத்தேசித்துள்ளது. கனிப்பொருள் வெட்டியெடுத்தல், சுத்தியாக்கம் செய்தல், உலைக்கலன்கள் போன்ற பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுதல் போன்ற மூன்று அடுக்கு திட்டங்களைக் கொண்டுள்ளது இத்திட்டம். இதன் மூலம் இந்நிறுவனம் நாட்டில் கிராபைட் தேவையைப் பூர்த்தி செய்வதோடு இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய பகுதியில் ஏராளமான பேர்களுக்கு வேலைவாய்ப்பும் நல்கும். தமிழ்நாடு கனிவள நிறுவனம் இத்திட்டத்தை விரைவில் துவக்க உள்ளது. இதன்பொருட்டு, சிறிய மாதிரி சுரங்கத்தைத் தோண்டி, சுரங்க வேலை செய்ய ஆகும் செலவு பற்றி கணக்கிடல் மாதிரிகளைச் சேகரித்தல் முதலியவற்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதன் தொடர்பாக முதல் நடவடிக்கையாக சுரங்கக் குத்தகைக்கு விண்ணப்பம் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

1978 ஆம் ஆண்டு மே மாதம் தனது பணியைத் துவக்கிய தமிழ்நாடு கனிவள நிறுவனம் குறுகிய காலத்திற்குள்ளாகவே பல்வேறு கனிப்பொருள்களை தோண்டியெடுக்கத் துவங்கிவிட்டது. 1979-80-ல் வட ஆற்காடு, திருச்சி, மதுரை மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களில் ஒன்பது கருப்புக்கல் சுரங்கங்களை வெட்டியெடுக்க இது திட்டமிட்டுள்ளது. இது விற்பனை செய்யும் 122.92 இலட்சம் ரூபாயில் ரூபாய் 20 இலட்சம் இலாபம் கிட்டும் என்று இது எதிர்பார்க்கிறது. 1979 ஆம் ஆண்டில் மத்தியில் ரூபாய் 100 இலட்சத்திற்கும் கூடுதலான இலாபத்துடன், தன் நிதித் தேவையைத்தானே பூர்த்தி செய்து கொள்ளும் அளவில் இந்நிறுவனம் இயங்கும். இந்நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனமான ரூபாய் 100 இலட்சத்தில் 1979-80 ஆம் ஆண்டின் இறுதியில் இதற்கு அளிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 37.50 இலட்சமாக இருக்கும். சுமார் ரூபாய் 42 இலட்சம் சம்பளம் கொடுத்து, பொருளாதார ரீதியில் பின்னடைந்துள்ள பகுதிகளில் சுமார் 1,000 பேர்களுக்கு 1979-80-ஆம் ஆண்டில் இந்நிறுவனம் வேலை வாய்ப்பு நல்கும்.

## தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்

அரசுத் துறையில் மேன்மேலும் கனிப்பொருள் வெட்டியெடுக்க வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கு இணங்க, சேலம் மாவட்டத்தில் சில பகுதிகளில், மாக்னசைட் கனிப்பொருளை வெட்டியெடுக்க, தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட் என்ற நிறுவனத்தை அரசு அண்மையில் துவக்கியுள்ளது. ''ரெய்ஸிங் காண்டிராக்டர்'' என்ற ரீதியில், அரசின் சார்பாக, முன்னர் சேலம் மாக்னசைட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் வசமிருந்த பகுதிகளில் இந்நிறுவனம் சுரங்கவேலை செய்யும். இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 200 இலட்சங்கள் ஆகும். இந்நிறுவனம் தனது மொத்த மற்றும் தொடர் செலவுகளை சமாளிக்க மற்றும் சுரங்க வேலைகளைத் தொடர அரசு ரூபாய் 25 இலட்சம் மூலதன உதவியாகவும், ரூபாய் 25.00 இலட்சம் வழிவகை முன்பணமாகவும் அளித்துள்ளது.

தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட் நிறுவனம் சேலத்தில் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல்வாரத்தில் இருந்து செயல்படத் துவங்கியுள்ளது. நாளுக்குச் சுமார் 330 டன்கள் மாக்னசைட் கனிப் பொருளை இது உற்பத்தி செய்கிறது. 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5 ஆம் நாள் வரை சுமார் 27.38 இலட்சம் மதிப்புள்ள 13,500 டன்கள் மாக்னசைட் கனிப் பொருளை இது உற்பத்தி செய்துள்ளது. தற்போது 2,200 பேர்களுக்கும் மேலாக இந்நிறுவனத்தில் வேலை செய்து வருகின்றனர்.

தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட் மற்றும் சேலம் மாக்னசைட் பிரைவேட் லிமிடெட் நிறுவனமும் இணைந்து, தமிழ்நாடு மாக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட் என்ற ஒரு கூட்டுத் துறை நிறுவனம் சமீபத்தில் நிறுவப்பட்டுள்ளது திருவாளர்கள் சேலம் மாக்னசைட் லிமிடெட் நிறுவனத்தாரின் தொழிற்சாலைகளை இந்நிறுவனம் நடத்தி சுட்ட மாக்னசைட் உற்பத்தி செய்யும் திருவாளர்களில் சேலம் மாக்னசைட் நிறுவனத்தால் நியமிக்கப்பட்டு, வன்முறைச் செயலில் ஈடுபடாத தொழிலாளர்கள் இப்புதிய நிறுவனத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

## 15 நலிவுற்ற தொழிற் பிரிவுகள்.

நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்குவதற்கு உதவும் வகையில் அரசு 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகிற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்( சட்டத்தின் விதிகளின்கீழ் அந்நிறுவனங்களுக்கு உதவிகளை அளித்து வருகிறது.



2 மீண்டும் தனித்தியங்கும் அளவிற்கு புத்துயிர் பெறுவதற்கான திட்டங்களை வைத்துள்ள நலிவுற்ற தொழில் நிறுவனங்களை அவற்றிற்கு கடன் கொடுத்தவர்கள் அவைகளை கலைப்பதற்கான (Liquiedation) நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர்க்கும்பொருட்டு, அரசு 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் கீழ் தகுந்த பாதுகாப்பு அளிக்கிறது. இத்தகைய பாதுகாப்பை தற்போது பின்வரும் நிறுவனங்கள் அனுபவித்து வருகின்றன:—

(1) டிராக் இன்டஸ்டிரீஸ் அண்ட் காம்பொனன்ட் லிமிடெட், சென்னை.

(2) லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட், தொட்டம்பட்டி, தருமபுரி ;

(3) இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை ;

(4) சதர்ன் ஸ்விட்ச்கியர் லிமிடெட், சென்னை;

(5) ஒமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை ;

(6) காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், புதுக்கோட்டை ;

(7) ஜனார்தனா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் ;

(8) மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் ;

(9) ஸ்ரீ மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை,

(10) கோயம்புத்தூர் கமலா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(11) சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், முத்தனேந்தல், இராமநாதபுரம் மற்றும்

(12) லோட்டஸ் மில்ஸ், கோயம்புத்தூர்.

3. அரசு பின்வரும் நிறுவனங்களுக்கு இயந்திரங்கள் வாங்கவும் நடைமுறை மூலதனத்திற்காகவும் கடன்கள், வழிவகை முன் பணங்கள் அளித்துள்ளது:

(1) சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட், சென்னை:

(2) சக்தி பைப்ஸ் லிமிடெட், சென்னை.

(3) டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூர் ;

(4) லோட்டஸ் மில்ஸ், கோயம்புத்தூர்.

4. பின்வரும் நிறுவனங்களுக்கு, அவற்றின் நடை முறை மூலதனத்திற்காக, வங்கிகள் வழங்கியகடன்களுக்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது: —

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (1) மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 34·3 |
| (2) ரவீந்திரா மில்ஸ், கோயம்புத்தூர் .. .. | 15·00 |
| (3) ஜனார்தனா மில்ஸ், கோயம்புத்தூர் .. | 50·00 |
| (4) ஸ்ரீ சக்தி டெக்ஸ்டைல்ஸ் .. .. | 30·00 |
| (5) கோயம்புத்தூர் கமலா மில்ஸ், கோயம்புத்தூர் | 30·00 |
| (6) பின்னி லிமிடெட் (பி அண்டு சி மில்ஸ்) | 100·00 |
| (7) லோட்டஸ் மில்ஸ் கோயம்புத்தூர் .. | 75·00 |
| (8) காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை. | 57·71 |
| (9) இந்தியா மீட்டர்ஸ் .. .. | 47·00 |

5. நலிந்த தொழிற் பிரிவுகள், விற்பனை வரி பாக்கிகளையும், பயன்படுத்திய மின்சாரத்திற்கான கட்டணங்களையும் சுலபத் தவணைகளில் கட்டவும் அரசு அனுமதி வழங்குகிறது. இத் தொழிற் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருள்களை மத்திய அரசு, மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு எழுதி கேட்டு விற்பனை செய்யவும் அரசு உதவி செய்கிறது.

6. பலவனகப்பட்ட மின்சார மீட்டர்களை தயாரித்து வந்த திருவாளர்கள் இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட் நவம்பர் 1974 முதல் மூடப்பட்டிருந்தது. இந்நிறுவனத்தை மீண்டும் செயல் படச் செய்ய புனரமைப்புத் திட்டம் வகுப்பதில் தமிழக அரசு முக்கியப் பங்கேற்றது. இந்த புனரமைப்புத் திட்டத்தின்படி சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா இந்நிறுவனத்திற்கு நான்கு ஆண்டுகளில் கொடுத்துதவும் கூடுதல் நடைமுதலான ரூபாய் 47 இலட்சங்களுக்கு தமிழக அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. மேலும் தமிழ்நாடு மின்வாரியம் இந்நிறுவனத்திடமிருந்து முதல் ஆண்டில் 50,000 மீட்டர்களும் அடுத்த நான்கு ஆண்டுகளில் 1,00,000 மீட்டர்களும் வாங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளது. இந்நிறுவனம் 8—12—1977 முதல் மீண்டும்



சயல்படத் துவங்கியது. மீண்டும் 476 தொழிலாளர்கள். வலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். பாரத்ஹெவி லக்ட்ரிகல்ஸ் லிமிடெட் (Bharat Heavy Electrical Limited) இந் றுவனத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. இந்நிறுவனம் மீண்டும் திறக்கப்பட்டு உற்பத்தி தொடங்கிய தலாண்டிலேயே குறிப்பிடத்தக்க அளவிற்கு முன்னேற்றம் ாட்டியது. இந்நிறுவனம் தனது உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள வகை செய்யும் வகையில் இதற்கு கூடுதல் நடைமுதல் தவி அளிக்கும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அரசு ஏற்கனவே அளித்துள்ள மொத்த உத்திரவாத பணத்தையும் இரண்டாவது ஆண்டிலேயே பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அரசு அந்த உத்திரவாதத்தை மாற்றி அமைத்துள்ளது. இந் நிறுவனத்தை நலிவுற்ற தொழில் நிறுவனமாக அறிவித்ததின் காலவரம்பு 21—9—1978 முதல் மேலும் ஓர் ஆண்டிற்கு நீடிக்கப் பட்டுள்ளது.

7. திருவாளர்கள் சதர்ன் சுவிட்ச்கியர் லிமிடெட் என்ற நிறுவனம் 1965 முதல் இங்கிலாந்து நாட்டின் பிரஸ் எலெக்டிரிக்கல்ஸ் என்ஜினியரிங் கம்பெனி லிமிடெட் (Messrs Bruse Electrical Engineering Company Limited) என்ற நிறுவனத்தின் ஒத்துழைப்போடு அம்பத்தூரில் உள்ள தொழிற் பேட்டையில் உயர் அழுத்த குறைந்த அழுத்தமுள்ள சுவிட்ச்கியர்களைத் தயாரித்து வருகிறது. இந்நிறுவனம் அதிக நட்டத்தில் இயங்கி வந்ததால் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா இந் நிறுவனத்திற்கு நடைமுதல் தேவைக்கு அளித்து வந்துள்ள நிதி உதவியை நிறுத்திக் கொண்டது. இந் நிறுவனம் 14—3—1978 முதல் மூடப்பட்டிருந்தது. இந் நிறுவனத்தை 9—11—1977 முதல் ஓர் ஆண்டுக்கு ஒரு நலிவுற்ற நிறுவனமாக அறிவிக்கப்பட்டது. இதன் கால வரம்பு 9—11—1978 முதல் மேலும் ஓர் ஆண்டிற்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப் பட்டவர்களுடன் எல்லாம் தொடர்ந்து நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாக ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கூடுதல் நடை முதலுக்கு தேவைப்படும் நிதி உதவியை அளித்தது. இதனால் இந் நிறுவனம் மீண்டும் 10—3—1979 முதல் செயல்படச் செய்ய ஏதுவாகியது. இந்நிறுவனம் நீண்ட காலத்திற்கு கட்டுப் படியாகக் கூடிய வகையில் இயங்க, ஒரு புனரமைப்புத் திட்டத்தை செயல்படச் செய்யக் கூடிய வகையில் அரசு ஆறு மாதங்களுக்குள் வகுக்கும்.

8. சக்தி பைப்ஸ் லிமிடெட் நிறுவனத்தைப் பொறுத்த மட்டில் அதனை மாற்றி அமைத்து அதற்குப் புத்துயிர் அளிப்பது பற்றிய பல செயற்குறிப்புகள் யாவும் பயனளிக்காததால் இது வரை நிறுவனத்தை நிர்வாகம் செய்து வந்த அரசுக்கு நிர்வாகத்தை 30—9—1978-ந் தேதி முதல் முந்திய இயக்குநர்கள் குழுவிடமே திரும்ப ஒப்படைப்பதைத் தவிர வேறு மாற்று வழி இல்லாமல் இருந்தது. ஹைதராபாத் மாநில வங்கி, நிறுவனத்திற்கு வழங்கிய பிணைப்பில்லா கடன் தொகையான ரூபாய்

66 இலட்சத்திற்கு நிறுவனத்தின் சார்பில் வங்கிக்கு அரசு உத்திரவாதம் அளித்தது. மேற்கண்ட உத்திரவாத தொகை, வட்டி வகையில் மொத்தம் ரூபாய் 112 இலட்சம் அரசு ஹைதராபாத் மாநில வங்கிக்கு திருப்பிக் கொடுத்து உள்ளது. மூலப் பொருள்கள் வாங்குவதற்கும், நடை முதல் மூலதனத்திற்கும், தொழிலாளர்கள் பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள் போன்றவற்றிற்கு அரசு நிறுவனத்திற்கு மொத்தம் ரூபாய் 195.81 இலட்சம் கடனாகவும், வழிவகை முன்பணமாகவும் வழங்கியுள்ளது. நிதி நிறுவனங்களின் வேண்டுகோளின்படி இந்நிறுவனம் தற்போது ஒரு ரிசீவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 16. மத்திய அரசு நிறுவனங்கள்.

பெருந் தொழில்கள் பிரிவில் தற்போது நிறுவப்பட்டுவரும் மத்திய அரசு நிறுவனங்களைப் பற்றியும் அல்லது ஏற்கனவேயுள்ள நிறுவனங்களின் விஸ்தரிப்புத் திட்டங்களைப் பற்றிய விவரங்கள் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன :—

### (1) சேலம் உருக்காலை :

சேலம் உருக்காலைக்காக தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையில் உருக்குதல், வெப்பமூட்டியும், குளிர்ச்சியூட்டியும் உருட்டு அடித்தும் ஆகிய செய்முறை வசதிகளுடன் துருப்பிடிக்காத உருக்கு மற்றும் சிலிகான் உருக்கு தயாரிக்கும் திட்டத்திற்கு ரூ. 500 கோடி மூலதனம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் மத்திய அரசு முதல் கட்டமாக ரூ. 127 கோடி மதிப்பீட்டில் 32,000 டன்கள் குளிர்ச்சியூட்டி உருட்டி அடித்து தயாரிக்கும் திறன் கொண்ட ஆலைக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. இந்த ஆலை 1981-ல் நிறுவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசு இந்தத் திட்டத்திற்காக 1979-80-ல் ரூ.40 கோடி ஒதுக்கியுள்ளது.

உருக்குதல், வெப்பமூட்டி உருட்டி அடித்தல் ஆகிய செய்முறை வசதிகளை மற்ற இடங்களில் நிறுவினால் ஒருங்கிணைந்த எல்லா செய்முறை வசதிகளும் கூடிய உருக்காலையை நிறுவுவதற்கான அசல் திட்டம் வெகுவாக பாதிக்கப்படும் என்பதால், மத்திய அரசை ரூ. 500 கோடி முதலீடு கொண்ட உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்ற உடனடியாக அங்கீகாரம் அளிக்கும்படி வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இத் திட்டத்தின் முதல் கட்டம் செயலாக்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கிய பிறகு, அந்த அனுபவங்களை கருத்தில் கொண்டு இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தைப் பற்றி பரிசீலனை செய்யும் என்று மத்திய அரசு தற்போது தெரிவித்திருக்கிறது.



### (2) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் :

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் கீழ்க்கண்ட விஸ்தரிப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(அ) தற்போதுள்ள பழுப்பு நிலக்கரி சுரங்கத்தின் திறனை 3.6 மில்லியன் டன்னிலிருந்து 6.5 மில்லியன் டன்னாக ரூ. 128.92 கோடி செலவில் உயர்த்துவது ;

(இ) ரூ. 17·5 கோடி செலவில் உரத் தொழிற்சாலையில் பழுப்பு நிலக்கரிக்குப் பதிலாக எரியெண்ணெயை பயன்படுத்துதல் ;

(உ) ரூ. 144·47 கோடி செலவில் ஆண்டொன்றுக்கு 4·7 மில்லியன் டன்கள் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்க இரண்டாவது நிலக்கரி சுரங்கம் அமைத்தல்; மற்றும்

(எ) ரூ. 213·45 கோடி மதிப்பில் 630 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டாவது அனல் மின் நிலையம் அமைத்தல்.

மேற்குறிப்பிட்ட திட்டங்கள் 1983-84-க்குள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### (3) சென்னையிலுள்ள எண்ணெய் பிரித்தெடுத்தல் தொழிற்சாலை :

2·5 மில்லியன் டன்கள் கச்சா எண்ணையை பிரித்தெடுக்கும் திறன் கொண்ட இந்தத் தொழிற் சாலை இப்போது முழு உற்பத்தித் திறனில் இயங்கிவருகிறது.

1978 ஆம் ஆண்டில் ரூ. 265·62 கோடி மதிப்புள்ள 2·79 மில்லியன் டன் கச்சா எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்டது. 1977 ஆம் ஆண்டின் இந்நிறுவனத்தின் கீழ் குறிப்பிட்ட இனங்களின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 1978ஆம் ஆண்டின் உற்பத்தியின் அளவு அதிகமாயிருக்கிறது.

| உற்பத்தி. | 1978 | 1977 |
|---|---|---|
| | (000 டன்களில்) | |
| இண்டேன் வாயு (L.P.G.) .. | 45 | 39 |
| விமான எரியெண்ணெய் (A.T.F.) | 246 | 142 |
| எல். டி. ஒ. (L.D.O.) .. | 86 | 66 |
| தார் (Bitumen) .. | 207 | 189 |
| மசகெண்ணெய் அடிப்படை (Lube) | 174 | 161 |

ஆண்டொன்றுக்கு 20,000 டன் பராபின் மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலையை ரூ. 4·54 கோடி செலவில் அமைப்பது பற்றியும், 30,000 டன் லினியர் அல்கையல் பென்சின் (Linear Alkyl Benzene) தயாரிக்கும் தொழிற்சாலையை ரூ. 31·6 கோடி செலவில் அமைப்பது பற்றிய திட்டக்குறிப்புகள் பரிசீலனையில் இருந்து வருகிறது. இந்தத் தொழிற்சாலையில் தற்போது 615 [illegible]கள் பணியாற்றுகின்றனர்.

(4) இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட்:

இந்துஸ்தான் டெலிபிரின்டர்ஸ் லிமிடெட்டின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு ஒருமுறைப்பணியில் 5,400 அல்லது இருமுறைப் பணியில் 8,000 டெலிபிரிண்டர்களும் மற்றும் துளைக் கருவிகளும் தயாரிக்கும் திறன் கொண்டது. 1978-ம் ஆண்டில் இந்த நிறுவனம் ரூ. 305·04 இலட்சம் விற்பனை மதிப்புள்ள 5,107 டெலிபிரிண்டர்களும் மற்றும் துளைக் கருவிகளும் தயாரித்தது. 1978–83-ம் திட்ட காலத்தில் இந் நிறுவனம் கம்ப்யூடர் பெரிபெரல்ஸ் (Computor peripherals) எலக்ட்ரானிக் டெலிபிரிண்டர்ஸ், எலக்டிரிக் தட்டச்சை அந்நிய நாட்டு ஒத்துழைப்புடனும் மற்றும் பலவகையான பொருட்களையும் புதித்தாக உற்பத்தி செய்ய திட்டமிட்டிருக்கிறது. இந்நிறுவனத்தில் தற்போது 1,974 பேர்கள் பணிபுரிகின்றனர்.

(5) இந்துஸ்தான் நிழற்படச் சுருள் தொழிற்சாலை :

இத் தொழிற்சாலை திரைப்படச் சுருள்கள், திரைப்படக் காகிதங்கள், ஊடுகதிர் படச் சுருள்கள், நிழற்படச் சுருள்கள் முதலியன உற்பத்தி செய்து வருகிறது. 1978-ம் ஆண்டில் இந் நிறுவனத்தின் உற்பத்தி ரூ. 38·97 கோடி மதிப்புள்ள 9·298 மிலியன் சதுர மீட்டர்களாக இருந்தது.

இந்நிறுவனத்தின் நீண்டகால விஸ்தரிப்புத் திட்டங்களில் திரைப்படச் சுருள் பாசிடிப் (கலர்), பாலிஸ்டார் ஊடுகதிர் தாள்கள், கிராபிக் ஆர்ட்ஸ், தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் ஊடுகதிர் தாள்கள், மாக்னெடிக் டேப் முதலியவைகள் அடங்கும். கிராபிக் ஆர்ட்ஸ், தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் ஊடுகதிர் தாள்கள் ஆகியவற்றிற்கு மாற்று வசதிக்காக சென்னை அம்பத்தூரில் அமையவிருக்கும் பிரிவிற்கான கட்டிட வேலைகளும், இயந்திரங்களும் நிறுவும் பணிகளும் நடந்து வருகின்றன. இத்திட்டம் 1979-ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 2·1 கோடியாகும். இத்திட்டம் 150 பேர்களுக்கு வேலை வாய்ப்பினையும் அளிக்கும்.

(6) மருத்துவ சிகிச்சைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை :

நடப்பாண்டில் ஆண்டொன்றுக்கு ரூ. 2·5 மிலியன் மருத்துவ சிகிச்சைக் கருவிகள் தயாரிக்கும் திறன் கொண்ட இத் தொழிற்சாலை ரூ. 39·14 இலட்சம் மதிப்புள்ள மருத்துவ சிகிச்சைக் கருவிகளை தயாரித்தது. ரூ. 1 கோடி முதலீட்டில் மருந்துகள் கலந்து உற்பத்தி செய்யும் தொழிற்சாலை (Formulation Plant) ஒன்று நிறுவ மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இத்திட்டம் இந்த ஆண்டிலேயே முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# INDEX TO

## TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

---

### FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

---

*19th to 21st, 23rd and 24th April 1979.*

VOLUME CLXI (Nos. 1 to 5)


PAGES

A

ABDUL WAHAB, THIRU K. S.—

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 352—354

355—357

Policy Note on Industries, discussion on ... ... 757—762

Policy Note on Nationalised Road Transport and Shipping, discussion on ... ... ... ... 8—11

ABSENCE FROM THE HOUSE—

Information re Motion for Leave of—given notice of by Thiru G. Vasantha Pai ... .. ... ... 124

ADJOURNMENT MOTION re—

Arrest of 200 persons around Vagaikulam village after Police firing ... ... ... ... 124—127

Farmers' agitation and arrest of political party members ... ... ... ... ... 677—691

Murder of Sub-Insector of Police at Panavadali Chatram in Tirunelveli district ... ... ... 677—691

Police firing at Udumalpet ... ... ... ... 677—691

Teachers of Thiruthuraipoondi Panchayat Union, agitation against transfer order in front of Revenue Divisional Officer's Office .. ... ... 1—4

Violent incidents at Peraiyur near Kamuthi ... 310—31

A—*cont.*

PAGE

ANIMAL HUSBANDRY—
Booklet on special programme of—Department, laid on the table ... ... ... ... ... 239

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—
Annamalai University, statement *re* strike by employees of— due to non-implementation of recommendations of Third Pay Commission by management. 449—450

Higher Secondary Schools in Madras City, statement *re* hardship caused by non-filling up of vacancies when 20 per cent of teachers go on medical leave to appear for M. A. Examination ... ... 7—8

ARIVAZHAGAN, THIRU K.—
Policy Note on Co-operation, discussion on ... ... 141—144
Policy Note on Industries, discussion on ... ... 737—742
Policy Note on Nationalised Road Transport and Shipping, discussion on ... .. ... ... 22—25, 37
Policy Note on Social Welfare, discussion on ... 463—466, 469, 494.

ARUMUGAM, THIRU S.—
Policy Note on Co-operation, discussion on ... 153—161, 184, 192.
Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... ... 323

B

BACKWARD CLASSES—
Question *re* increase in percentage of reservation of posts in Government services for ... ... ... 427—430

BALASUBRAMANIAM, THIRU A.—
Policy Note on Co-operation, discussion on ... 144—152



B—*cont.*

PAGES

LASUBRAMANIAM, THIRU A.—*cont.*
Youth Service Corps Graduates, calling Minister's attention to non-provision of regular employment after passing of Special Test conducted by Tamil Nadu Public Service Commission ... ... 128, 129

NDED LABOURERS—
Question *re* assignment of cultivable lands to—from 1st July 1977 to 18th October 1978 ... .. 300—305

CKINGHAM CANAL—
Question *re* silt clearance in—and operation of ferry service ... ... ... ... ... ... 438—440

SINESS OF THE HOUSE—
Change in the order of ... ... ... ... 131—448

C

PITAL OUTLAY ON PUBLIC HEALTH, SANITATION AND WATER-SUPPLY, 1979-80—
Laid on the table ... ... ... ... ... 392

AIRMAN, MR.—
Adjournment motion *re*—
Farmers' agitation and arrest of political party-members ... ... ... ... ... 677—678, 681, 682, 688—689, 691
Murder of Sub-Inspector of Policy at Panavadali Chatram in Tirunelveli district ... ... 677—678, 681, 682, 688—689, 691
Violent incidents at Peraiyur near Kamuthi ... 310—313
Business of the House, change in the order of ... 448
House Committee, election of Members to ... 447—448
Information *re* adjournment motion, taking up of ... 448

CHAIRMAN, MR:—*cont.*

PAGES

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 317
Policy Note on Industries, discussion on ... 692, 713, 716, 720, 728, 729, 783, 835
Policy Note on Social Welfare, discussion on ... 317
Policy Note on Industries, discussion on ... 692, 713, 716, 720, 728, 729, 783, 835.
Policy Note on Social Welfare, discussion on ... 454
Privilege issue *re* publication of expunged proceedings of Council in 'Needhiyin Kural', a Tamil daily, dated 18th April 1979 ... ... ... 310

CHIT FUNDS ACT, 1961—
Inclusion of branches of Pandyan Grama Bank as approved Banks, notification laid on the table ... 105

CHOLERA—
Question *re* number of—cases reported during 1977 and 1978 ... ... ... ... ... 305—307

CINEMAS (REGULATION) RULES, 1957—
Amendments to—, notifications laid on the table ... 392

CIVIL SUPPLIES CORPORATION, TAMIL NADU—
Tamil Nadu—, Madras, Third Annual Report for the year 1974-75, laid on the table ... ... 239

COMMITTEES—
House Committee, election of members to ... ... 447—448



PAGES

CO-OPERATION—
Policy Note on—
Discussion on .. ... ... ... ... 131—132
Laid on the table ... ... ... ... 106

CO-OPERATIVE MOVEMENT IN TAMIL NADU—
Compendium on—, laid on the table ... ... 106

CO-OPERATIVE SOCIETIES—
Tuticorin Harbour Co-operative Society, Minister's attention called to violent activities on persons instrumental for supersession of Board of—by ex-President of ... ... ... ... 313—314

D.

DAMODARAN, THIRU A. R.—
Policy Note on Nationalised Road Transport and Shipping, discussion on ... ... ... ... 12—21
Policy Note on Social Welfare, discussion on ... 494
Petroleum Products like cooking gas, kerosene and high speed diesel oil, calling Minister's attention to restricted supply of—in March 1979 ... 315, 316
Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... 317—333, 379, 380, 383—384
Policy Note on Industries, discussion on ... ... 701—712, 762, 771

DEMAND FOR BUILDING GRANTS 1979-80—
Laid on the table ... ... ... ... ... 554

DEPUTY CHAIRMAN, MR.—
Adjournment motion *re* teachers of Thiruthuraipoondi Panchayat Union, agitation against transfer order in front of Revenue Divisional Officer's office ... 1, 2, 3, 4

PAGES

DEPUTY CHAIRMAN, MR.—*cont.*

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... ... 323, 330, 372, 383, 384, 387, 391

Policy Note on Industries, discussion on ... ... 752, 755, 756, 757, 763, 772

Policy Note on Labour, discussion on ... ... ... 495—496, 507, 508, 509, 536, 538, 540, 546

Policy Note on Nationalised Transport and Shipping, discussion on ... ... ... ... ... 11, 12, 19, 37, 64, 77, 78, 97, 103, 104

Policy Note on Social Welfare, discussion on ... 460, 462, 471, 477, 478, 479 494

D'MONTE, THIRU D. V.—

Policy Note on Industries, discussion on ... ... 742—745

Youth Service Corps Graduates, calling Minister's attention to non-provision of regular employment after passing of Special Test conducted by Tamil Nadu Public Service Commission ... ... ... 127—129

DRAVIDAMANI, THIRU A.—

Policy Note on Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959, discussion on 199—202

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... .. 372

PAGES

EDMUND, THE HON. THIRU G. R.—

Petroleum Products like cooking gas, kerosene, and high speed diesel oil, statement *re* restricted supply of—in March 1979 ... ... ... ... 316—317

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... ... 317, 330 —331, 343, 344—345, 346, 347, 349—350, 352, 355, 369—391

EGGS—

Question *re* subsidising of poultry eggs produced in Tamil Nadu to withstand competition from—flowing from Kerala and Andhra Pradesh ... 441—444

ELECTRICITY BOARD, TAMIL NADU—

Annual Financial Statement for 1979-80 and Supplementary Financial Statement for 1978-79, laid on the table ... ... ... ... ... 239

ESTATE—

Devagiri—in Kanyakumari district, Minister's attention called to fast undertaken by C.I.T.U. State Secretary against closure of ... ... ... 450—451

F

FARMERS' AGITATION—

Adjournment motion *re* arrest of political party members ... ... ... ... ... 677—691

FIRE SERVICE DEPARTMENT—

Review on—for 1978-79, laid on the table ... 554

F—*cont.*

PAGES

FISHERIES—
Performance Budget, 1979-80, laid on the table ... 239
Policy Note on—, 1979-80, laid on the table ... ... 239

FLOODS—
Question *re* protection from—, number of persons removed from Saidapet and Kotturpuram areas in Madras during December 1978 ... ... ... 114—118

FOOD SITUATION IN TAMIL NADU—
Policy Note on—
Discussion on ... ... ... ... ... 317—391
Laid on the table ... ... ... .. 239

G

GOVERNMENT SERVANTS—
Family Planning Week Celebrations at Dharmapuri, statement *re* suspension of—for not bringing people for sterilisation by Collector of Dharmapuri ... 129—130
Question *re* part-time employees in Government offices, recommendations of Third Pay Commission for re-fixation of pay for ... ... ... ... 425—427

H

HARIJAN WELFARE—
*See* Teachers

HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS ACT, 1959—
Policy Note on Administration of—, discussion on. 192—238
Policy Note on Administration of—, laid on the table. 106

HOUSE COMMITTEE—
*See* Committees

HOUSING—
Question *re* houses for Ministers and Judges in Adayaru area, Madras, construction of ... ... 289—290

I

PAGES

INCIDENTS AT PERAIYUR—
Adjournment motion *re* violent—near Kamudhi ... 310—313

INDUSTRIES—
Performance Budget on—1979-80, laid on the table 554

Policy Note on—
Discussion on ... ... ... .. ... 691—836
Laid on the table ... ... ... ... ... 554

INFORMATION *re*—
Leave of Absence from the House to Thiru G. Vasantha Pai, notice of motion *re* ... ... 124

J

JAILS—
Administration of— in Tamil Nadu, 1979-80, Policy Note laid on the table ... ... ... 554

JANARTHANAM, DR. T. R—
Policy Note on Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959, discussion on ... ... ... ... ... 238
Policy Note on Co-operation, discussion on ... 169
Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 369, 391
Policy Note on Industries, discussion on ... ... 745—753
Policy Note on Labour, discussion on ... ... ... 521—522, 524

K

KALIMUTHU, THE HON. THIRU K.—
Adjournment motion *re* teachers of Tiruthuraipoondi Panchayat Union, agitation against transfer order in front of Revenue Divisional Officer's Office 4—6

KHADI AND VILLAGE INDUSTRIES BOARD (ACCOUNTS AND AUDIT) RULES, 1968—
Amendments to—, notification laid on the table ... 105

K—*cont.*

M.—*cont.*


PAGES

KRISHNASAMY, THE HON. THIRU K. A.—
Policy Note on Co-operation, discussion on .. 149, 159, 160, 177 —192
Tuticorin Harbour Co-operative Society, statement *re* violent activities on persons instrumental for supersession of Board of—by ex-President of. 314

L

LABOUR—
Policy Note on—, discussion on ... ... ... 554

LAKSHMIKANDHAN, THIRU C. R.—
Policy Note on—
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959, discussion on ... 204—208
Industries, discussion on ... ... ... 757
Nationalised Road Transport and Shipping, discussion on ... ... ... ... 21—22

LOANS—
Question *re* agricultural—given to agriculturists in Tiruthuraipoondi—Nagapattinam Taluk, affected by drought during 1970 by cyclone during 1977 and by floods during 1978, waiver of ... ... ... 118—123

M

MALARIA—
Question *re* number of cases of—registered in Madras City in 1978 and percentage in comparison with other parts of the State ... ... ... ... 307—310

MANDAKINI KRISHNAMURTHI, THIRUMATHI —
Policy Note on—
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959, discussion on ... 202—203
Co-operation, discussion on ... ... ... ... 161
Social Welfare, discussion on ... ... ... 472—474

Pages

MANI, THIRU KO. SI.—
Policy Note on—
Co-operation, discussion on ... ... 162—176, 179, 180, 181, 183
Nationalised Road Transport and Shipping, discussion on ... ... ... ... ... ... 76

MANICKAM, THIRU P.—
Policy Note on Labour, discussion on ... ... 513—521, 522, 537

MANOHARAN, THE HON. THIRU K.—
Statement of Demands for Grants for Excess Expenditure for 1972-73, presentation of ... ... 451—452
Statement of Demands for Grants for Excess Expenditure for 1973-74, presentation of ... ... 452—453

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—
Annamalai University, calling attention to strike by employees of—due to non-implementation of recommendations of Third Pay Commission by management ... ... ... ... ... 449—450
Devagiri Estate, Kanyakumari district, calling attention to fast undertaken by C.I.T.U. State Secretary against closure of ... .. ... ... 450—451
Family Planning Week Celebrations at Dharmapuri, calling attention to suspension of Government servants for not bringing people for sterilisation by Collector of Dharmapuri ... ... 129—130
Higher Secondary Schools in Madras City, calling attention to hardship caused by non-filling up of vacancies when 20 per cent of teachers go on medical leave to appear for M.A. Examination ... 7—8
Petroleum Products like cooking gas, kerosene and high speed diesel oil, calling attention to restricted supply in March 1979 ... ... ... ... 315—317

PAGES

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—*cont.*

Tuticorin Harbour Co-operative Society, calling attention to violent activities on persons instrumental for supersession of Board of—by ex-President of ... 313

Youth Service Corps Graduates, calling attention to non-provision of regular employment after passing of Special Test conducted by Tamil Nadu Public Service Commission ... ... ... 127—129

MEENAKSHISUNDARAM, THIRU K.—

Adjournment motion *re* tachers of Tiruthuraipoondi Panchayat Union, agitation against transfer order in front of Revenue Divisional Officer's Office ... ... ... ... .. ... 2—4

Family Planning Week Celebrations at Dharmapuri, calling Minister's attention to suspension of Government servants for not bringing people for sterilization by Collector of Dharmapuri ... ... 129, 130

Higher Secondary Schools in Madras City, calling Minister's attention to hardship caused by non-filling up of vacancies when 20 per cent of teachers go on medical leave to appear for M.A. Examination ...

Policy Note on Social Welfare, discussion on ... 466—469 471—472

MIAKHAN, THIRU J. M.—

Policy Note on Industries, discussion on ... 753—757

MINISTERS AND JUDGES—

Question re construction of houses for—in Adyar area, Madras ... ... ... ... ... 288—290

MOTOR VEHICLES—

Question *re* view of Tamil Nadu Government on display of Hindi Codes and numbers in number-plates in ... ... ... ... ... ... 444—447

MOTOR VEHICLES ACTS—

Policy Note on—Administration. 1979-80. laid on the table .. ... ... ... ... 106



PAGES

MUNICIPAL COUNCILS (CONDUCT OF ELECTION OF CHAIRMAN AND COUNCILLORS) RULES, 1978—

Amendments to—, notification laid on the table ... 239

N

NALLASIVAN, THIRU A.—

Adjournment motion *re* Farmers' agitation and arrest of political party members ... ... ... 678—679

Police firing at Udumalpet ... ... ... 678—679

Devagiri Estate in Kanyakumari district, calling Minister's attention to fast undertaken by C.I.T.U. State Secretary against closure of ... ... ... 450—451

Policy Note on Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959, discussion on ... ... .. ... ... ... 193—197

Policy Note on Labour, discussion on ... ... 496—511, 552

Policy Note on Nationalised Road Transport and Shipping, discussion on ... ... ... 25—32, 100

P

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Animal Husbandry Department, booklet on special Programme ... ... ... ... ... 239

Capital Outlay on Public Health, Sanitation and Water-Supply, 1979-80 ... ... ... ... 392

Chit Funds Act, 1961—

Inclusion of branches of Pandyan Grama Bank as approved Banks (G.O. Ms. No. 199, Commercial Taxes and Religious Endowments, 23rd February 1979) ... ... ... ... ... 105

Cinemas (Regulation) Rules. 1957—

Amendment to—(G.O. Ms. No. 1180), Home (Cinemas), dated 27th May 1978, ... ... No. 2134, dated 31st August 1978, and No. 120, dated 11th January 1979 ... ... ... 392

P—cont.

PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Co-operative Movement in Tamil Nadu-Compendium on ... ... ... ... ... 106

Demand for Building Grants, 1979-80 ... ... 554

Electricity Board, Tamil Nadu-Annual Financial Statement for 1979-80 and Supplementary Financial Statement for 1978-79 ... ... ... 239

Fire Service Department, 1978-79, review on ... 554

Fisheries, Performance Budget, 1979-80 ... ... 239

Industries, Performance Budget, 1979-80 ... ... 554

Khadi and Village Industries Board (Accounts and Audit) Rules, 1968, amendments to—(G.O. Ms. No. 19, Industries, dated 4th January 1979) ... 105

Motor Vehicles Acts—Policy Note on—Administration, 1979-80 ... ... ... ... 106

Municipal Councils (Conduct of Election of Chairmen and Councillors) Rules, 1978, amendment to—(G.O. Ms. No. 165, Rural Development and Local Administration, dated 31st January 1979) ... 239

Police, 1978-79, Review on ... ... ... ... 554

Policy Note on—

Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... ... 106

Administration of Jails in Tamil Nadu, 1979-80 554

Co-operation Department, 1979-80 ... ... ... 106

Fisheries, 1979-80 ... ... ... ... 239

Food situation in Tamil Nadu ... ... ... 239

Industries, 1979-80 ... ... ... ... 554

P—cont.

PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Labour in Tamil Nadu ... ... ... ... 392

Social Welfare, 1979-80 ... ... ... 239

Stationery and Printing Department, 1979-80, working of ... ... ... ... 554

Public Works Department (Buildings) Branch, review on activities of—for 1978-79 ... ... ... 554

Rehabilitation Department, Performance Budget, 1979-80 ... ... ... ... ... 554

Relief and Rehabilitation of Indians Overseas and Refugees and Evacuees, Demand No. 43—Miscellaneous ... ... ... ... ... 554

Road Transport in Tamil Nadu, Review on—1978-79 106

Social Welfare, Performance Budget, 1979-80 ... 239

Tamil Nadu Civil Supplies Corporation Limited, Madras, Third Annual Report for the year 1974-75 239

PERIANNAN, THIRU V. R.—

Adjournment motion in teachers of Thiruthuraipoondi Panchayat Union, agitation against transfer order in front of Revenue Divisional Officer's Office 4

PETROLEUM PRODUCTS—

Restricted supply of—like cooking gas, kerosene and high speed diesel oil in March 1979, Minister's attention called to ... ... ... ... 315—317

POLICE—

Adjournment motion *re* murder of Sub-Inspector of—at Panavadeli Chatram in Tirunelveli district ... 677, 691

Review on—, 1978-79, laid on the table ... ... 554

POLICE FIRING—

Adjournment motion *re*—

Arrest of 200 persons around Vagaikulam village after ... ... ... ... 124—127

Resort to—at Udumalpet ... ... ... 617—691

P—*cont.*

PAGES

POLICY NOTE ON—
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959, discussion on ... ... 192—238
Co-operation, discussion on ... ... ... ... 131—192
Fisheries, laid on the table ... ... ... 239

FOOD SITUATION IN TAMIL NADU—
Discussion on ... ... ... ... 317—391
Laid on the table ... .. ... 239

SOCIAL WELFARE, 1979—80—
Discussion on ... ... ... 453—494
Laid on the table ... ... ... 239

POLICY NOTE ON FOOD SITUATION IN TAMIL NADU—
Discussion on ... ... ... ... ... 317—391

POLICY NOTE ON INDUSTRIES—
Discussion on ... ... ... .. 691—836

POLICY NOTE ON LABOUR IN TAMIL NADU—
Discussion on ... ... ... ... ... 494—553
Laid on the table ... ... ... ... 392

POLICY NOTE ON NATIONALISED ROAD TRANSPORT AND SHIPPING—
Discussion on ... ... ... ... ... 8—104

POLICY NOTE ON SOCIAL WELFARE—
Discussion on ... ... ... ... ... 453—494

PONNAIYAN, THE HON. THIRU C.—
Policy Note on Nationalised Road Transport and Shipping, discussion on ... ... ... ... 41,46, 58, 60, 65, 66—104

PROCEEDINGS OF COUNCIL—
Privilege motion *re* publication of expunged—in 'Needhiyin Kural', a Tamil daily, dated 18th April 1979 ... ... ... ... ... 310



P.—*cont.*

PAGES

PRIVILEGE ISSUE *re*—
Publication of expunged proceedings of Council in 'Needhiyin Kural', a Tamil Daily, dated 18th April 1979 ... ... ... ... ... 310

PUBLIC WORKS DEPARTMENT (BUILDINGS) BRANCH, 1978-79—
Review on activities of—, laid on the table ... ... 554

PULAMAI PITHAN, PULAVAR—
Policy Note on Food situation in Tamil Nadu, discussion on .. ... ... ... ... 336

Q.

QUESTION HOUR—
Dispensation with ... ... ... ... 1,553

QUESTIONS AND ANSWERS—
Arivazhagan, THIRU K.—
Question *re*—
Part-time employees in Government Offices, recommendations of Third Pay Commission for fixation of pay for ... ... ... 425—427
Swimming Pools constructed by Government, number of—for children and salary paid to trainers ... ... ... ... 436—438

D'Monte, Thiru D. V.—
Question *re* Backward Classes, increase in percentage of reservation of posts in Government services for 427—430

Lakshmikandhan, Thiru C. R.—
Question *re*—
Bus routes and buses operated by each Transport Corporation of Tamil Nadu, number of—as on 1st September 1978 ... ... ... 432—434
Free Education to children of teachers at all levels, representation *re* ... ... ... 293—295

PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*

Meenakshisundaram, Thiru K.—

Question *re*—

Agricultural loans given to agriculturists in Tiruthuraipoondi-Nagapattinam taluk, affected by drought along 1970 by cyclone during 1973 by floods during 1978, waiver of ... ... 118—123

Teachers and Headmasters of B Wing school transferred from one district to another on introduction of Higher Secondary Education System-number and re-transfer of ... ... 291—292

Muthuswamy, Thiru S.—

Question *re* Selection Grade scale of pay for posts with no promotional opportunities and not covered by G.O. Ms. No. 1050, Finance (Pay Commission), dated 5th October 1978, grant of ... 423—425

Ramamoorthy, Thiru K.—

Question *re*—

Bonded labourers released from 1st July 1977 to 18th October 1978, assignment of cultivable land to ... ... ... ... 300—305

Cholera, number of cases reported during 1977 and 1978 ... ... ... ... 305—307

Floods in Madras during December 1978, number of persons removed from Saidapet and Kotturpuram areas for protection ... ... 114—118

Malaria, number of cases registered in Madras City in 1978 and percentage in comparison with other parts of the State ... ... 307—310

Poultry Eggs produced in Tamil Nadu, subsidising of—to withstand compet ition-flowing from Kerala and Andhra Pradesh ... ... .. 441—444

Slum Clearance Board tenements in Madras City, eviction of families from—for unauthorised occupation and non-payment of rent between 1st July 1977 and 10th October 1978 ... 109—110

Slums, number and population of—at the time of constitution of Slum Clearance Board, assumption of office by present Government and as on 31st December 1978 ... ... 111—114

PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*

Sankaralingam, Thiru M.—

Question *re*—

Motor Vehicles in New Delhi, views of Tamil Nadu Government on display of Hindi codes and numbers in number-plates in ... ... 444—447

Riots at Villupuram during July, 1978, number and reconstruction of houses and huts burnt down 281—283

Riots in Villupuram in July 1978, number of persons who lost their lives, were injured and maimed during—and nature of Government assistance extended to their families ... ... 283—287

Teachers engaged in collection of statistics for issue of Ration Cards in Kanyakumari district non-payment of remuneration to ... ... 431—432

Teachers of Harijan Welfare Schools in North Arcot district, crediting of excess contribution to Family Benefit Fund Scheme to Teachers Provident Fund Accounts ... ... ... 298—300

Thamizharasi, Thirumathi C.—

Question *re* Treasury at Devakottai, Ramanathapuram district, purchase of site for construction of building for new ... ... ... ... 287—288

Thangapandian, Thiru V.—

Question re—

Houses for Ministers and Judges in Adyar area, Madras, construction of ... ... ... 288—290

Repatriates from Ceylon employed in Ayyanar Mills in Aruppukkottai taluk in Ramanathapuram district, construction of permanent quarters for ... 440—441

Taxis and Auto-rickshaues, ban on strike by ... 434—436

Thomas, Thiru P. R.—

Question *re*—

Schoolarship to children of teachers with income exceeding Rs. 6000, deprivation of merit ... 296—298

Scholarship to talended children selected from rural areas, extension up to plus two stage 295

PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*

Venkatesan, Thiru E. S.—

Question *re* Buckinghan Canal, silt clearance and operation of ferry service in ... ... ... 438—440

*R*

Raghava nandam, THE HON. THIRU S.—

Devagiri Estate in Kanyakumari district, statement *re* fast undertaken by C.I.T.U State Secretary against closure of ... ... ... ... ... 450—451

Policy Note on Co-operation, discussion on ... ... 165

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 330 495,499, 504, 507,

Policy note on Labour, discussion *on* .. 509, 507, —553

Raja Mohamed, The Hon. Thiru K.—

Adjournment motion *re*—

Arrest of 200 persons around Vagaikulam village after Police firing .. ... ... ... 126—127

Violent incidents of Peraiyur near Kamuthi ... 312—313

Business of the House, change in the order of ... 131

Question Hour, dispensation with ... ... ... 1, 553

Youth Service Corps Graduates, statement *re* non-provision of regular employment after passing of Special Test conducted by Tamil Nadu Public Service Commission ... ... ... ... 128—129

Ramachandran, THE HON. THIRU M. G.—

Adjournment motion *re*—

Farmers' agitation and arrest of political party members ... ... ... ... 681, 684 —688, 689 —691

Murdur of Sub-Inspector of Police at Panavadeli Chatram in Tirunelveli district ... ... 681, 684 —688, 689 —691



PAGES

RAMACHANDRAN, THE HON. THIRU M. G.—*cont*

Adjournment motion *re*—cont.

Police firing at Udumalpet ... ... ... ... 681, 684 —688, 689 691

Policy Note on Industries, discussion on ... 691, 786 832, 834 835—836

RAMAKRISHNA THEVAR, THIRU S—

Policy Note on Industries, discussion on ... 834, 835

RAMALINGAM, THIRU C.—

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 333—338

Policy Note on Labour, discussion on ... ... 511—513

RAMAMOORTHY, THIRU K.—

Adjournment motion *re* farmers' agitation and arrest of political party members ... .. ... 682—684

Policy Note on Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959, discussion on ... ... ... ... ... 208—212

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 331—352, 382, 389, 390

Policy Note on Industries, discussion on ... ... 835

Policy Note on Labour, discussion on ... ... 524—529

Policy Note on Nationalised Road Transport and Shipping, discussion on ... ... ... ... 33—47

Policy Note on Social Welfare, discussion on ... 480—483

RATHINA BALAGURUSWAMY, THIRU

Policy Note on Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959, discussion on ... ... ... ... ... 197—199

REHABILITATION DEPARTMENT—

Performance Budget for 1979-80, laid on the table 554

PAGES.

RELIEF AND REHABILITATION OF INDIANS OVERSEAS AND REFUGEES AND EVACUEES—

Demand No. 43—" Miscellaneous ", laid on the table ... ... ... ... ... 554

REPATRIATES—

Question *re* construction of permanent quarters for —from Ceylon employed in Ayyanar Mills in Aruppukottai Taluk in Ramanathapuram district. 440—441

RIOTS—

Question *re*—

Houses and huts burnt down during—at Villupuram in July 1978, number and reconstruction of ... ... ... ... ... 283—287

Number of person who lost their lives, were injured and maimed during—in Villupuram in July 1978 and nature of Government assistance extended to their families ... ... ... 283—287

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

Adjournment Motion *re*—

Agitation by teachers of Thiruthuraipoondi Panchayat Union against transfer order in front of office of the Revenue Divisional Officer—Consent to raising of the mater withheld after the statement of the Minister for Local Administration ... ... ... ... ... 1—2, 6

Arrest of 200 persons around Vagaikulam village after police firing—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House ... ... ... ... ... 125, **127**

Farmers' agitation, arrest of political party numbers, police firing at Udumalpettai and murder of Sub-Inspector of Police at Panavadalichatram—Consent to raising of the matter withheld after the statement of the Chief Minister ... ... ... **677, 688—689**

RULING AND OBSERVATIONS OF THE CHAIR—*cont.*

Violent incidents at Peraiyur near Kamuthi—Consent to raising of the matter withheld after the statement of the Leader of the House ... **310, 313**

Debate—

A Member should refer to another Member as " my honourable friend" if he is of his own party or side and as " the honourable Gentleman " if he is on the opposite side ... ... ... ... 540

Members who desire to seek clarification may do so after the Minister replies to the debate ... 572

Reading of documents—

When a Member read out a Government Memorandum, the Chairman observed: 729

"உறுப்பினர் அவர்கள் இது போன்ற தாஸ்தாவேஜுகளை அவையில் படிப்பதந்கு முன்பு என்னுடைய அறைக்கு வந்து என்னிடம் காட்டி அனுமதி பெற்றிருக்க வேண்டும் அதை விடுத்து உறுப்பினர் தன்னிச்சையாக இவைகளை அவையில் படித்துக் காட்டுவது முறையல்ல. எந்த ஒரு தஸ்தாவேஜைப் படிப்பதாக இருந்தாலும் என்னுடைய அறையில் எனக்கு காட்டியிருக்க வேண்டும் என்னுடைய அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான் முறை."

Decorum—

Members should not sleep in the House but there is nothing wrong in the Members listening to the Proceedings with closed eyes ... ... ... 323

Privilege issue *re*—

Publication of expunged proceedings of the Council in 'Needhiyin Kural', a Tamil daily, dated 18th April 1979—Ruling deferred till after ascertaining the position from the Editor of the paper concerned 310

R—*cont.*


PAGES

RULINGS AND OBESERVATIONS OF THE CHAIR—*cont.*

Unparliamentary Expression—

அழிச்சாட்டியம் (adament) ... 3

Held Parliamentary

SANKARALINGAM, THIRU M.—

Policy Note on Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 discussion on ... 212—220, 237

Policy Note on Co-operation, discussion on ... 182

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... 352, 357—368, 385, 386—387, 388

Policy Note on Industries, discussion on ... 764—776 776—786

Policy Note on Labour, discussion on 507, 529—535, 542

Policy Note on Nationalised Road Transport and Shipping, discussion on ... 47—66 100—101, 102—103

Tuticorin Harbour Co-operative Society, calling Minister's attention to violent activities on persons instrumental for supersession of Board of—by ex-President of ... 313, 314

SARASWATHI, THE HON. SELVI P. T.—

Policy Note on Social Welfare discussion on ... 453, 460, 462, 476, 483, 494

SCHOLARSHIPS—

Question re—

Extension of—to talented children selected from rural areas up to plus-two stage ... 295

Merit—to children of teachers with income exceeding Rs. 6,000, deputation of ... 296—298

S—*cont.*

PAGES

SCHOOLS—

Higher Secondary—in Madras City, Minister's attention called to hardship caused by non-filling up of vacancies when 20 per cent of teachers go on Medical leave to appear for M.A. Examination ... 7—8

SELECTION GRADE SCALE OF PAY—

opportunities and not covered by G.O. opportiunities and not covered by G.O. Ms. No. 1050, Finance (Pay Commission), dated 5th October 1978 ... 423—425

SHIPPING—

Policy Note on Nationalised Road Transport and—, discussion on ... 8—104

SOCIAL WELFARE—

Performance Budget, 1979-80, laid on the table ... 239

Policy Note on—,

Laid on the table ... 239

Discussion on ... 453—494

SLUM CLEARANCE BOARD, TAMIL NADU—

Question re—

Eviction of families from—tenements in Madras City for unauthorised occupation and non-payment of rent between 1st July 1977 and 10th October 1978 ... 109—110

Number and population of slums at the time of consitution of—, assumption of office by present Government and as on 31st December 1978 ... 111—114

SOMASUNDARAM, THE HON. THIRU S. D.—

Policy Note on Co-operation, discussion on ... 175

PAGES

Somasundaram, The Hon. Thiru S. D.—*cont.*

Family Planning Week Celebrations at Dharmapuri, statement *re* suspension of Government servants for not bringing people for sterilisation by Collector of Dharmapuri ... ... ... 129, 130

STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1973-74—

Presentation of ... ... ... ... 452—453

STATIONERY AND PRINTING DEPARTMENT—

Policy Note on working of—for 1979-80, laid on the table ... ... ... ... 554

SUNDARESA THEVAR Thiru N.—

Policy Note on Industries, discussion on ... ... 730—737

SWAMINATHAN, THIRU G.—

Policy Note on Industries, discussion on ... ... 692—701, 708, 810 811

SWIMMING POOLS—

Question *re* number of—constructed by Government for children and salary paid to trainers ... 436—438

T

TEACHERS—

Adjournment motion re agitation by—of Thiruthuraipoondi Panchayat Union against transfer order in front of Revenue Divisional Officer's office ... ... ... ... ... 1—6

Question *re*—

Excess contribution to Family Benefit Fund Scheme by—of Harijan Welfare Schools of North Arcot District, crediting of—to Teachers Provident Fund Accounts ... ... ... ... ... 298—300

Free education to children of—at all levels, representation *re* ... ... ... ... 293



PAGES.

TEACHERS—*cont.*

Question *re*—cont.

Non-payment of remuneration to—engaged in collection of statistics for issue of Ration Cards in Kanyakumari district ... ... ... ... 431—432

Number of 'B' Wing Schools transferred from one district to another on introduction of Higher Secondary Education System and retransfer of. 291—292

Scholarship to children of—with income exceeding Rs. 6,000, deprivation of merit ... ... ... 296—298

THANGAPANDIAN, THIRU V.—

Adjournment motion *re*—

Arrest of 200 persons around Vaigaikulam Village, after Police firing ... ... ... ... 125—126

Violent incidents at Peraiyur near Kamudhi ... 311—312

Policy Note on Co-operation, discussion on ... 131—141, 152, 179

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 352—355

Policy Note on Labour, discussion on ... .. 535, 542

Policy Note on Social Welfare discussion on ... 454—463 493—494

THOMAS, THIRU P. R.—

Annamalai University, calling Minister's attention to strike by employees of—due to non-implementation of recommendations of Third Pay Commission by management of ... ... ... ... 449—450

Policy Note on Industries, discussion on ... ... 763—764

TRANSPORT—

Policy Note on Nationalised Road—and Shipping, discussion on ... ... ... ... ... 8—104

PAGES

TRANSPORT—*cont.*

Question *re*—

Bus-routes and buses operated by each Corporation of Tamil Nadu, number of—as on 1st September 1978 ... ... ... ... 432—434

Taxis and Auto-Rickshaws, ban on strike by ... 434—436

Road Transport in Tamil Nadu, Review on—, 1978-79, laid on the table ... ... ... 106

TREASURY—

Question *re* purchase of site for construction of building for new—at Devakottai, Ramanathapuram district ... ... ... ... ... 287—288

U

UNIVERSITIES—

Annamlai University, Minister's attention called to strike by employees due to non-implementation of recommendations of Third Pay Commission by management ... ... ... ... ... 449—450

V

VASANTHA PAI, THIRU G.—

Information *re* Motion for Leave of Absence from the House given notice of by ... ... ... 124

VEERAPPAN, THE HON. THIRU R. M.—

Policy Note on Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959, discussion on 192, 220—237

VEERASAMI, THIRU Arcot N.—

Adjournment motion *re*—

Farmers' agitation and arrest of political party members ... ... ... ... 679—681, 682, 689



PAGES

VEERASWAMY, THIRU ARCOT N.—*cont.*

Adjournment motion *re*—*cont.*

Murder of Sub-Inspector of Police at Panavadeli Chatram in Tirunelveli district ... ... 679—681, 682, 689

Police Firing at Udumalpet ... ... ... ... 679—681, 682, 689

Information *re* adjournment motion, taking up of Policy Note on Industries, discussion on ... ... 712—730, 832—833

Privilege Issue *re*—

Publication of expunged proceedings of Council in "Needhiyin Kural", a Tamil Daily, dated 18th April 1979 ... ... ... ... 310

VENKATESAN, THIRU E. S.—

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... ... 350, 356

VICE-CHAIRMAN (THIRU K. Ramamoorthy)—

Policy Note on Administration of Hindu Religious and Charitable Endowments Act 1959, discussion on ... ... ... ... ... 192, 236, 237, 238

Policy Note on Co-operation, discussion on ... 150, 152, 185

VICE-CHAIRMAN (Thirumathi Mandakini Krishnamurthi)—

Policy Note on Labour, discussion on ... ... 503

Y

YELLAMANDA, THIRU P.—

Policy Note on Social Welfare, discussion on ... 474—480